Koviloor Digital Library

உ

சிவமயம்

சிவதருமோத்தரம்

மறைஞானசம்பந்தர்

ACC No! 11939
E 23

சைவ சித்தாந்த நிலையம்
குவாலாலும்பூர்
மலேசியா

Koviloor Digital Library

Koviloor Digital Library

LIBRARY, KOVILOOR
A. No. 11939
2/5

உ
சிவமயம்

சிவதருமோத்தரம்

(மூலமும் உரையும்)

ஆசிரியர்:
தவத்திரு மறைஞான சம்பந்தர்

பதிப்பாசிரியர்கள்:
பண்டிதர் மு. கந்தையா பி.ஏ.,
மகாவித்துவான் வே. சிவசுப்பிரமணியன்

உரை ஆசிரியர்:
திரு. அ. இராமநாதன்

சைவ சித்தாந்த நிலையம்
குவாலாலும்பூர்
மலேசியா.

Koviloor Digital Library

தி.பி. 2029 ஐப்பசி - கி.பி. 1998.
உரிமை: சைவசித்தாந்த நிலையம், குவாலாலும்பூர், மலேசியா.
தலைவர்: பொறியியலாளர் க. குமாரசிவம்
உபதலைவர்: சைவ சித்தாந்தக் கலாநிதி டான்ஸ்ரீ மு. சோமசுந்தரம்
டாக்டர். சி. பரராஜசிங்கம்
டாக்டர். ஆ. இரத்தினசபாபதி
செயலாளர்: திரு. அ. ஆறுமுகம்
பொருளாளர்: திரு. ஐ. குலவீரசிங்கம்

Chairman: Ir. K. Kumarasivam B.E.M.Eng., Sep. Eng., F.I.E.M., M.I.E. (AUST), M.I.E.S., M.A.C.E.M.
Vice Chairman: Saiva Sidthantha Kalanithi Tansri M. Somasundaram
Trustees: Dr. S. Pararajasingham M.B.B.S. (S'pore)
Dr. A. Retnasabapathy G.Vsc., M.Vsc. (Toronto) Dip. Bact. (Toronto)
A. Arumugam, F.C.C.A., P.A.(M).
A. Kulaveerasingham, Senior Medical Laboratory Technologist.

Centre for Saiva Sidthantham,
No. 16, Lorong Kasah Dalam,
Medan Damansara,
50490 KualaLumpur,
Malaysia.

விலை: மலேசிய ரிங்கிட் 40/-

பதிப்பு ஆலோசனை: நா. சந்திரசேகரன் , சென்னை.
அச்சுக்கோப்பு: சி. சரஸ்வதி, த. ருக்மணி பி.ஏ., தனலட்சுமி பி.காம்., ஜெ. இராஜலட்சுமி பி.காம்., சொ. இரமேஷ் பி.காம்., *காந்தளகம்,* சென்னை.
எதிர்மறை: சக்தி வண்ண ஆய்வகம், சிந்தாதிரிப்பேட்டை.
அச்சு: பாலாஜி மறுதோன்றி அச்சகம், மந்தைவெளி.
கட்டாளர்: ஸ்ரீ பாலாஜி கட்டாளரகம், இராயப்பேட்டை
ஒருங்கிணைப்பு, தயாரிப்பு: க. சச்சிதானந்தன், மறவன்புலவு, சாவகச்சேரி.

அச்சுக்கோப்பு, அச்சிடல்: *காந்தளகம்,*
4, முதல்மாடி,
ரகிசா கட்டடம், 834, அண்ணாசாலை,
சென்னை - 600 002. தொலைபேசி: 853 45 05.
E.Mail : sachi @ giasmd01.vsnl.net.in

Koviloor Digital Library

2/5

உ

திருச்சிற்றம்பலம்



கோலாலம்பூர் சித்தாந்தப் புரவலர்,
சித்தாந்த கலாநிதி, சைவ பூஷணம்,

திரு. R. V. கந்தையா

அவர்கள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

சைவ சித்தாந்தப் புரவலர், சைவ சித்தாந்தக் கலாநிதி, சைவ பூஷணம் அமரர் திரு. இ.வே. கந்தையா அவர்கள்.

மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரைச் சேர்ந்த இச்சைவப் பெரியாரின் நோக்கத்தை நிறைவு செய்திடும் வகையில் சிவதரு மோத்தரம் நூல் மறுபதிப்புச் செய்யப்பெறுகின்றது.



Koviloor Digital Library



உரையாசிரியர் அ. இராமநாதன் வாழ்க்கைக் குறிப்பு

தமிழ்நாடு, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருப்புத்தூரில் திரு. நா. அண்ணாமலைப் பிள்ளை, வீர. உண்ணாமுலை அம்மாள் என்ற பெற்றோருக்கு முதல் மகவாக 27.8.1917 ஆம் நாளிற் பிறந்தவர்; திருப்புத்தூரிலேயே கல்வி பயின்றவர்; இரண்டாம் உலகப் போருக்கு முன் தம் தந்தையால் மலாயாவுக்கு அழைத்து வரப்பட்டார்.

தைப்பிங்கில் இருந்த யாழ்ப்பாணத்து நண்பர்களால் 1949 ஆம் ஆண்டில் தமிழாசிரியர் பணியில் சேர்ந்தார்.

1951 ஆம் ஆண்டில் தமிழ்நேசன் மூலம் நடைபெற்ற எழுத்தாளர் தேர்வில், கட்டுரைப் பிரிவில் 'மேதை எழுத்தாள'ராகத் தேர்ச்சி பெற்றார்.

ஈப்போவில் தமிழாசிரியர்களுக்காக நடைபெற்ற போதனாமுறை வகுப்பில் 1956 ஆம் ஆண்டு முதல் எட்டு ஆண்டுகள் வரை மாணவ ஆசிரியர்களுக்குத் தமிழ் கற்பித்தார். இக்காலத்தில் ஆசிரியர் எழுதிய 'ஆட்சிமுறை', 'மலாயா தேசிய வாசக வரிசை', 'செந்தமிழ்ப் பயிற்சி நூல்', வரிசை ஆகிய பாடநூல்கள் வெளிவந்தன.

திருநீறு, அன்புநெறி, அருள்நெறி ஆகியவை ஆசிரியரின் சைவ சமய விளக்க நூல்களாக வெளிவந்துள்ளன.

1. சிவநெறி. 2. உருவ வழிபாடு. 3. இந்து மதம் - ஓர் ஆய்வு என்ற மூன்று நூல்களும் வெளிவர வேண்டிய நிலையில் உள்ளன.

சிறந்த நூல்களை வாங்கிப் பயில்வதும், ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவதும் ஆசிரியரின் வழக்கம்.

1940 ஆம் ஆண்டு முதல் இன்று வரை ஆசிரியர் வாங்கிப் பயின்ற பலதுறை நூல்கள் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆகும். இவை அனைத்தும் ஆசிரியரின் இல்லத்தில் பாதுகாப்பாக உள்ளன.

Koviloor Digital Library

உ

சிவமயம்

பதிப்புரை

சிவபெருமான் தமது திருவாயால் ஓதும் வேதங்களுக்கு ஒப்பாகப் போற்றப்படுபவை சைவ ஆகமங்கள். வேதங்களைப் போன்றே சமஸ்கிருத மொழியில் உள்ள சைவாகமங்களின் எண்ணிக்கை இருபத்தெட்டு ஆகும். இவற்றுள் இருபத்துநான்காவதாகக் கருதப்படும் **சந்தான சர்வோத்தமம்** என்னும் ஆகமத்தின் ஒரு பகுதியாக அமைந்தது **சிவதருமோத்தரம்** என்னும் நூல். **இது சிவ + தரும + உத்தரம் என்ற மூன்று** பதங்களால் ஆன பெயர். 'சிவ தருமம் என்பது யாது?' என்று அகத்தியர் முருகனிடம் விளக்கம் வேண்ட, முருகனும் உயிர்கள் நன்னெறிப் படுமாறு அளித்த உத்தரம் அல்லது விடையாக இந்த நூல் அமைந்துள்ளதால் **சிவ தருமோத்தரம்** என்னும் பெயரைப் பெற்றது.

ஓர் உப ஆகமமாகப் போற்றப்படும் இந்நூல் 1) பரம தருமாதியியல் 2) சிவஞான தானவியல் 3) ஐவகை யாகவியல் 4) பல விசிட்ட காரணவியல் 5) சிவ தருமவியல் 6) பாவவியல் 7) சுவர்க்க நரகவியல் 8) ஜனன மரணவியல் 9) சுவர்க்க நரக சேடவியல் 10) சிவஞான யோகவியல் 11) பரிகாரவியல் 12) கோபுரவியல் என்னும் பன்னிரு இயல்களாக அமைந்துள்ளது. இதில் அறங்கள் பல விளக்கப்பட்டாலும் ''அறத்திற்கு அடிப்படை இறைவனிடத்து அன்பு செலுத்து தலே'' என்பது வற்புறுத்தப்பட்டுள்ளது.

சைவர்களுக்கு உரிய அறவாழ்வினை வலியுறுத்தும் இச்சீரிய நூலினை மறுபதிப்புச் செய்து சைவர்கள் யாவரும் கற்றுணர வேண்டும் என அமரர் சைவ பூஷணம் இ. வே. கந்தையா அவர்கள் 1990 ஆம் ஆண்டிலேயே பெரிதும் விரும்பினார்கள். அதற்கடுத்த ஆண்டில் சென்னை, சைவ சித்தாந்தப் பெரு மன்றத்துடன் இணைந்து செயலாற்ற அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளை ஏனோ திருவருள் கூட்டி வைக்கவில்லை.

பின்னர், 8.2.1994 இல் சிவபதமடைந்த அன்னாரின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆவல் எழவே, சென்னையில் உள்ள ''*காந்தளகம்*'' உரிமையாளர் **திரு. க. சச்சிதானந்தன்** அவர்களுடன் தொடர்பு கொண்டு, ஏற்கனவே பதிப்பாகி இருக்கும் சிவதருமோத்தரத்தின் நகல் ஒன்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டோம். அவரும் அதனை அனுப்பி உதவியதுடன் இந்த நூலை அச்சிடவும் இசைந்தார்.

இந்த நூலில் உள்ள வெண்பாக்களைப் பொது மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் பதம் பிரித்து, அருஞ்சொற்களுக்குப் பொருளும் எழுதிப்

Koviloor Digital Library

பெரும் உதவி புரிந்துள்ளார் ஈப்போவைச் சேர்ந்த சைவப் பிரியரும் தமிழ் எழுத்தாளருமான திரு. அ. இராமநாதன் அவர்கள். அவற்றை யாழ்ப்பாணம் ஏழாலையைச் சேர்ந்த பெருமதிப்பிற்குரிய பண்டிதர் மு. கந்தையா, பி.ஏ. (ஹானர்ஸ்) அவர்கள் மேற்பார்வையிட்டுத் திருத்தங்கள் செய்து உதவியுள்ளார். பண்டிதர் கந்தையா அவர்கள் பெரியபுராணத்திற்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதி முடிவு பெறாது இருந்த சூசனத்தைப் பூர்த்தி செய்த சிறப்பிற்குரியவர் என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். இன்னும் சில சைவ அன்பர்கள் தத்தமக்கு இயன்ற அளவில் சேவையாற்றி உள்ளனர். இவர்கள் யாவருடைய ஒத்துழைப்புடனும் உறுதுணையுடனும் சைவ சித்தாந்த நிலையத்தின் பொருளுதவியுடனும் சிவதருமோத்தரம் எனும் இச்சைவ நூலின் மறுபதிப்பு வெளியாகிறது.

சிவசொரூபனும் தமிழ்க்கடவுளும் ஆகிய திருமுருகன் விளக்கிய சிவதருமத்தை அவன் அருளால் மறுபதிப்புச் செய்வித்து வெளியிடுவதில் சைவ சித்தாந்த நிலையம் பெரிதும் மகிழ்வடைகிறது. அதன் அங்கத்தினர்கள் யாவரும் இப்பேற்றினைப் பெற்றதற்கு அவன் திருவருளை வாழ்த்தி வணங்குகிறோம்.

அறங்காவலர்கள்,
சைவ சித்தாந்த மையம்,
31-08-96. குவாலாலும்பூர்.

Koviloor Digital Library

மறைஞான சம்பந்தர்

(வரலாறு)

இந்நூல் - **சிவதருமோத்தரம்** - யாத்த தகவினனார் மறைஞான சம்பந்தர் எனும் மாமனிதர்; சைவ சமயத்திற்கு என எண்ணில நூல்கள் ஆக்கித் தந்த அருளாளர். அந்நூல்களுள் பெயர் தெரியாது கரந்து போயின சில. காண்டற்கென நம் கையகப்படுவன சிலவே.

அவற்றுள் சாத்திரப் பெருநூல்கள் - **சிவதருமோத்தரம், சைவ சமய நெறி, பதி பசு பாசப் பனுவல்** என்பன.

இவையேயன்றி, சங்கற்ப நிராகரணம் உருத்திராக்க விசிட்டம் (மேன்மை), முத்திநிலை, பரமோபதேசம், வருத்தம் அற உய்யும் வழி, ஐக்கிய இயல் முதலியனவும் இவர் யாத்தனவே.

பெறலரிதாக உள்ளன சில. பரமத திமிர (இருள்) பானு (அகற்று அலரோன்), இறைவன் நூற்பயன், வடமொழியில் ஆன்மார்த்த பூஜா பத்ததி (பெருநூல்), மகா சிவராத்திரி கற்பம், சோமவார கற்பம், திருக்கோயில் குற்றம் என்பனவும் இவர் ஆக்கியனவே.

காலம்:-

இன்ன காலத்தர் இவர் என்று அறிவிக்கும் அகச் சான்று கொண்ட இவர்தம் இரு புராண நூல்கள்:

கமலாலய புராணம் - திருவாரூர் குறித்தது

அருணகிரிப் புராணம் - திருவண்ணாமலை பற்றியது

என்பன. இந்நூல்கள் வழி இவற்றை இவர் யாத்த யாண்டுகள் கி.பி. 1546ம், கி.பி. 1553ம் **ஆம்.**

ஆக, இவர் **16 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி**யில் வாழ்ந்தவர் என்பது தெளிவு.

''ஆர்வலர் வேண்ட ஆரியத் திருந்த
புற்றிடங் கொண்டார் புகழ்நன் னூலினைத்
தமிழில் தந்த தகவா ளர்இவர்''

என்று அறிகிறோம்.

வளம் மிகு களந்தை இவர் பிறந்த ஊர். களந்தைப் பதியில் அதுபோழ்து இருந்த ஞானப்பிரகாசப் பண்டாரத்தின் அடியுறை ஆகி, சமயக் கல்வி பெற்றார். ஆசிரியர் முக்தி பெற்றார். ஆக ஆங்கு நின்று அகன்று காளத்தி சேர்ந்தார். அங்கிருந்த கண்ணப்பப் பண்டாரத்திடம் உபதேசம் பெற்றார் என்ப இவை குறித்த செய்திகள் தெளிவுபட இல.

Koviloor Digital Library

பேருபதேசம் பெற்று மீண்ட இவர் பெரும்பற்றப்புலியூரில் (தில்லை) நிலையாகத் தங்கினார்.

சிவப்பதியில், சிவயோகத்தில் திளைத்த இவர் பக்குவ் முதிர்ச்சி பெற்று, 'ஆசலம் புரி ஐம்பொறி வாளிகள் நெறியின் புறஞ்செலாமை' வேண்டித் தம் கண்களைக் கட்டிக் கொண்டார் என்ப. அகக் காட்சி அணுகுறப் பெற்றார்க்குப் புறக்காட்சி தாம் என்ன பயத்தவோ?

கண்கட்டிப் பண்டாரம் என, கண்டாரால் காரண இடுகுறிப் பெயர் பெற்ற இவர் இருந்த கண்கட்டி மடம், அண்மையில் இடிக்கப் பெற்றது என்பார் வரலாற்று இலக்கியம் படைத்த சோமசுந்தர தேசிகர் அவர்கள்.

மேற்சுட்டிய வரலாறுகள் வெள்ளி அம்பலவாண தேசிகர் தம் 'முத்தி நிச்சயப் பேருரை'யால் விளங்குவன.

மறைஞான சம்பந்தர் இயற்றிய சிறு, குறுநூல் 'முத்தி நிலை' என்பது. இந்நூல் கூறுகின்ற முத்தியின் இயல்பு, ஆன்ம ஆனந்த வாதம் என்பது.

இக்கருத்தொடு முரணிய தருமை குருஞானசம்பந்தர் 'முத்தி நிச்சயம்' என்ற சிறுநூல் அமைத்தார். அச்சிறு நூற்குப் பெரு விளக்கம் அளித்தவர் வெள்ளி அம்பலவாணத் தம்பிரான் ஆவார்.

அந்நூலில் மறைஞான சம்பந்தர் நூற்கருத்தொடு முரணிக் கூறியதோடு நில்லாமல், நூலாசிரியர் (மறைஞான சம்பந்தர்) தனி வாழ்க்கையைப் பழித்தும், இழித்தும் பலபடப் பேசி உள்ளார்.

முத்தி நிச்சயப் பேருரை தருமைப் பதிப்பு 1946,

''வெள்ளியே ஆதலின் இவ்வாறு
விளம்பினர் போலும்''

என்று அமைவாம்.

மேலும் மறைஞானசம்பந்தர் வரலாறு அறிய அவர் பாடிய பதி பசு பாசப் பனுவல் நூலின் சிறப்புப் பாயிரம் துணை செய்கின்றது.

தில்லைப் பதியில் மடம் கண்டது, நூல் பல அமைத்தது போல் பல செய்திகள் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளன.

இவர் நூல்களில் காணப்பெறும் பொது இயல்புகள்:

புராணத் தன்மைகள் பொதுளிய சிவதருமோத்தரம், அருணகிரிபுராணம், கமலாலய மான்மியம் ஆகியன விருத்தப்பாவால் அமைந்தன.

மற்றுளவற்றில் பல குறட்பாவால் செய்யப் பெற்றன.

பலவாய சிறுநூல்கள் படைத்தளித்தாரேனும் சிறந்த சைவப் பேராசிரியர் ஆய இவர், கம்பர், சேக்கிழார் போன்ற பெரும்புலவர்களோடு ஒருங்கு எண்ணத்தக்க உயர்வினரே.

Koviloor Digital Library

காலச் சூழல் இவரைக் காவியம் படைப்பதில் கருத்துச் செலுத்திலது எனலாம். 16 ஆம் நூற்றாண்டின் பொது நிலை இது. சாத்திர நூல்கள், புராண நூல்கள் பல்கிப் பெருகிய நூற்றாண்டு. சைவ சமய ஆசாரிய பீடங்கள் கால்கொண்டு நிலை பெற்ற காலம். பலர் புராண நூல்கள் யாக்க, சாத்திர நூல்கள் சமைத்தவர் சிலரே. இவ்விரண்டினும் அளவில் மிகுதியான நூல்களைச் செய்த பெரும் புகழாளர் மறைஞான சம்பந்தரே. இவரளவு நூல் செய்தார் விரல் எண்ணிக்கையில் அடங்கும் தகையரே.

இவர் நூல்களில் மிகவும் புதிய மரபு ஒன்றனைக் காணலாம். மாதேவனிடம் மாங்கனி பெற்ற மாதரசியார்க்கும், மாளிகைத் தேவர்க்கும் தவறாது வணக்கம் சொல்வதே அது. தம் குருநாதர் இன்னார் என்று எங்குமே குறிப்பிட்டுக் கூறகில்லார்.

பிற நூலாசிரியர்கள் தம் நூல்களில் குரு வணக்கம், நால்வர் வணக்கம் நவிலக் காண்கிறோம் அல்லமோ?

நூல் நுவல்தக்கவர் இயல்புகளையும், செவி கொளற்குரியார் இயல்பு களையும் விளங்கக் கூறும் இவர்,

''படிறன் இன்னோர்க்குப் பகரார் நூலே''

எனப் பவணந்தியார் விதித்தாங்கு, 'ஆர்வம் இலிகட்கும், இன்மையே (நாத்திகம்) இயம்பும் இயல்பினோர்க்கும் இந்நூலைச் சொல்லற்க, சொலினோ வரையா நிரையத்து ஆழும் நிலைதான் அடைவீர் உறுதி' எனக் குறிப்பிடுகிறார்.

மேலும் ''ஏட்டிலும் எழுதற்க. ஒரோ வழி எழுதினும் விரும்பாதவர் தம் விழிபடக் காட்டற்க'' என்பார்.

'ஒலியே சார்பாய், செவிவழி வந்த செல்வம் போல, எழுதாக் கிளவி எழில்மறை போலத் தமிழினும் சாத்திர நூல்கள் செவி வாயாக, நெஞ்சு களனாகக் கோடற்கு உரியன. அபக்குவிகட்கு அவற்றைக் கற்பித்தலும் ஏதம்' என்பது இவர்தம் வன்மை சான்ற கருத்து.

(சான்று: ''போதகனும்'' - பாடல்)

தில்லைக் குகை மடத்திருந்த, திருந்து மெய்ஞ்ஞானியாம் மறைஞான சம்பந்தர், மெய்கண்ட தேவர் மீட்டு வந்ததற்கு ஒப்பாவார் என்ப.

இவர் பற்றிக் குறிக்கும் 'தொல்காப்பியம் சிவமதம் செய்தார்' என்ற தொடர் குறித்துப் பலர் பலவாறாகக் கூறுப.

தொல்காப்பியங்களை - பழமையான நூல்களை, **சிவமதம் செய்தார்** - சைவமே உயர்வு என்னும்படியாகச் செய்தார் என்பதே நேர்ப்பொருள் என்பார் திரு. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள்.

சிவதருமோத்தரம் போல்வன **சைவப்பெருமை** சாற்றுவன. இந்நூலில் அமைந்துள்ள யாப்பு, சந்தம், மடக்கு போன்ற சொல்லணிகள், பொருளமைதி ஆகியன இவர் பெருங்காப்பியம் செய்யும் திறலர் என்றே விளக்கும்.

Koviloor Digital Library

அவ்வாறாக காப்பியம் இவர் சமைக்காமைக்குக் காலக்கோளே காரணம் போலும்.

தனித்த ஆற்றலர்:-

தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பான இடம் இவர்க்கு உண்டு. குறட்பாவால் பல நூல்கள் யாத்தார் இவர் ஒருவரே ஆகலின் என்க.

கதிர் வானில் கங்கை எனும்
அணங்கு இழியப் பொலிவு இழந்த
ஆறு ஒத்தார் வேறு உற்றார்

(கம்பன். 683)

என்பது போல் பெருந் தத்துவ நூலாசிரியர் வள்ளுவர் தம் நூலைக் குறட்பாவில் அமைத்ததன் பின்னர் அக் குறட்பாவில் நூல் செய்ய அஞ்சினர் பின் வந்தோர்.

வெயிலிடைத் தந்த விளக்கு ஆம்
தம் முயல்வு என அஞ்சினர்; அகன்றார்.

குறட்பாவில் நூல் செய்தாரும் உளரே எனின் அன்னார் இலக்கணம், தர்க்கம், சமய நூல்கள் ஆக்கினரே அன்றி வாழ்வியல் நூலினை வகுத்தனர் அலரே.

கல்லாடர் பாட்டியல், அருங்கலச் செப்பு
திரு அருட் பயன், ஔவைக் குறள்
போல்வன குறட்பா யாப்பில் அமைந்தனவே.

ஆனால் மறைஞான சம்பந்தரோ 2000க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் குறட்பாக்கள் யாத்துள்ளார்.

இந்நூற் சிறப்பு:-

முத்தி அவாவுவாற்கு உரிய நெறிகள் நான்கு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன.

இவற்றுள் சரியை நெறியை விளக்குவன,

சிவதருமோத்தரம், சைவசமய நெறி, வாயுசங்கிதை, மச்ச புராணம், பிரமோத்தர காண்டம், உபதேச காண்டம் என்பன.

தத்துவப் பிரகாசமோ - கிரியைப் பகுதியைக் கிளத்தல் உறுவது.

சிவநெறிப் பிரகாசம், தத்துவ ரத்தினாகரம் - ஞான நன்னெறியை நவிலல் உறுவது.

இந்நூல் (சிவதருமோத்தரம்) வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப் பெற்றது. உப ஆகமங்களுள் ஒன்றாய் அமைவது.

மூவா முதல்வன் (சிவன்) மொழிந்தன, மூல ஆகமங்கள். 'ஈரேழ் இரண்டு' (28) என்ப. அவற்றுள் இருபத்தைந்தாம் எண்ணுமுறையது சர்வோக்தம்.

Koviloor Digital Library

ஈறிலான்தன் ஈசான முகத்துத் தோன்றிய சிறப்பினது சர்வோக்தம். இதற்கு ஆறோடைந்து என உப ஆகமங்கள் உள.

அப்பதின் ஒன்றில் முன் நிற்பது, ஒப்பது இல் எனும் இச் சிவதருமோத்தர நூலே.

சிவ தருமங்கள் எவை எவை என தழற்கடவுள் தந்த தமிழ் தந்த குறியன் (அகத்தியன்), நெடியோனை (முருகன்) வினவ, அதற்கு உத்தரமாக, அச் செவ்வேள் கிளத்திய தருமங்களை உள் அடக்கியதே இச் சிவ தரும(ம்) உத்தரம்.

ஆற்றும் அறங்கள் பலவும், அவற்றால் ஆம் புண்ணியங்களும் இவை இவை என நன்கெடுத்து இயம்புவது இது.

அன்றியும் - பதி, பசு, பாசம் (மும்மை), சரியை, கிரியை, யோகம், ஞானம் (நான்கு பாதம்), சாலேக, சாமீப, சாருப, சாயுச்சியம் ஆய நால்நல் நிலைகள் - இவற்றின் இலக்கணங்கள் இவ் இவை என்னச் செவ்விதின் செப்புவது.

சதம், சந்தம், நான்கு, நாலைம்பதும் சாற்றினான் என்பதனால் இந்நூலின் மொத்த செய்யுள் தொகை 1224 ஆம்.

சிந்தைக்கு இன்பூட்டும் சந்தக் கவிகளும், காண்டற்கரிய சித்திரக் கவிகளும் சிறந்த நடையில் பொருந்த அமைவது.

பாயிரப் பகுதியில் காரைக்கால் அம்மை, காழிப்பிள்ளை, கல்தோணி மிதந்தவர், கல் பொன்னாக் கண்டவர், கல் உருகச் செய் கவி நலத்தர் ஆய ஐவர்க்கும் வணக்கம் சொல்கிறார்.

இவ்வாறு அமைக்கும் மரபு அரு வழக்கினதே.

பழைய மரபினை வழாது போற்றி, அவ்வணம் அமைத்த ஆற்றலர். முக்கண் பரமற்கு வணக்கப் பாடல் இரண்டும், அம்மைக்கு ஒரு பாடலும் அமைத்துளார்.

இயல்தொறும், இயல்தோறும் (12 இயல்களிலும்) அகத்தியன் வாய் மொழியாக முருகனைத் துதிக்கின்றமையால் பாயிர முகப்பில் பதித்திலர் போலும்.

ஆகம நூல் அறிவிக்கும் முறை:-

கூறுநூல், கொளத்தக்கான் தன்மை, கூறும் பாடல்நூலின் ஈற்றில் அமைந்து உள்ளது.

ஒவ்வோர் இயலின் இறுதி நான்கு பாடல்கள் துதிப்பாடல்கள். அவற்றுள் இரண்டு ஈறிலானுக்கு என அமைந்தன. (கடை மடக்கு அமைந்த கழி சிறப்பின) பிறிது ஒன்று உபதேசித்த முருகன் துதி. மற்றது கோளாளன் ஆம் அகத்தியன் துதி.

கடை மடக்காக அமைந்த பாடல் ஒன்று. (சான்றுக்கு)

''வானிடை மும்மலம் மாற்றினனே
வார்சடை மேல்வரும் ஆற்றினனே''

முருகன் துதி அமையும் சில பாடல்களில் சிவபெருமான் பெயர்களைத்

Koviloor Digital Library

தொகுத்துக் கூறி ஈற்றில் இத்தகு பெருமான் இணையிலி மகனே என்று அமைப்பார்.

திருப்புகழ் ஆசிரியர் முருகன் துதிப்பாடல் ஒன்றில் மாலவன் சிறப்புகள் அனைத்தையும் தொகுத்துச் சுட்டி ஈற்றில் ''இத்தகு மாலின் திருத்தகு மருக!'' என முடிப்பார்.

நூல் இறுதியில் சிவபிரான் துதி என நான்கு பாடல்கள் உள. அவற்றுள் ஒன்று மாலை மாற்று.

சுவர்க்க, நரக இயல் எனும் பகுதியில் 'பூரியர்கள் ஆழும் அளற்றின்' கொடுமைகளைச் சித்தரிக்கிறார்.

இருவிழி சிவந்து, கனற்பொறி தெறிப்ப எடுத்த கைக் கதையினால் உருக்கி, நரக வாயில் நண்ணிய அறிகரி பொய்த்தாரை, அல்லன செய்தாரை, கீழ்மை உரைத்தாரை, மன்றோரம் சொன்னாரை, கொலையிற் கொடியாரை நோக்கி, ''இன்ன இன்ன துன்னருந் தீவினை முன்னிச் செய்தவர் அல்லிரோ நீர்'' என்று சொல்லிச் சொல்லி சொல்லொணாக் கொடுமைகள் புரிவராம், எம படர்கள்.

அக்காலத்து நரக வேதனை, யம தண்டனை குறித்த அச்சமே மக்களிடை ஒழுக்க உணர்வு நிலவச் செய்தது.

''அச்சமே கீழ்களது ஆசாரம்'' அன்றோ? நீதி வழுவா நெறிமுறை நின்று ஒழுக இவ் அச்ச உணர்வே ஆதாரமாய் நின்றது.

ஆகவேதான் புராண நூல்களில் இவ்வகைச் செய்திகள் புகுந்தன போலும்; போற்றி உரைக்கப்பட்டன போலும்.

தான் தோன்றிய காலத்தேயே பிற ஆசிரியர்களால் மேற்கோளாகக் கொள்ளப் பெற்ற, கூறப் பெற்ற சிறப்பு இந்நூற்கு உண்டு.

நெடுங்காலமாக அச்சில் வாரா இந்நூல் இது காலை வெளிப்போதருவது விரும்பற்கு ஒன்று.

'மக்கட்கு என்றும் கிடைக்கும் நிலை அமைக' என அவாவுவார் திரு. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள்.

சைவச் சார்பினர் பெருவிழைவும் இதுவே.

இந்நூல் சைவர்க்கே உரியது எனினும், சிவ புண்ணியங்களைச் செப்புவது எனினும், யாவர்க்கும் ஒப்பக் கூறியதாகவே கொள்க. அரிதாய மானிடப் பிறவி எய்திய யாவரும் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய பொது நெறிகளை, நீதிகளை நன்கு பாகுபடுத்திப் பகர்வது இப்பனுவல்.

நரகத் துன்பம் போல்வன இக்காலக் கொள்கைக்கு ஏற்புடையனவோ? அல்லவே! என்பார்க்கு இதில் உள்ள பிற பொதுக் கருத்துகள் என்றும் நின்று நிலவத்தக்கன அல்லவோ? என்று நாம் கூறி அமையலாம்.

இந்நூல் சென்ற நூற்றாண்டு வரை சோழ நன்னாட்டில் வாழ்ந்த மக்கள்

Koviloor Digital Library

யாவராலும் விரும்பிப் பயிலப் பெற்றது.

இந்நூல் இராத வைதிகச் சைவர் வீடுகளே இல எனலாம்.

பல்லாற்றானும் பழிக்கும் பணியே பணியாய்க் கொண்டு அமைந்த 'வெள்ளி'யாரும் இவரது இந்நூலை விதந்து கூறுவார்; உயர்வாகவே போற்றுவார்.

பதிப்பு:-

மூலமும் உரையுடனும் முதலில் வெளிவந்தது கி.பி. 1867ல் டிசம்பரில்.

அச்சிட்டோர்: முத்தமிழ் ஆகர அச்சுக் கூடத்தார்.

மிகவும் அழகிய பதிப்பு இது என திரு. மு. அருணாசலம் பிள்ளை கூறுவார்.

பின், கி.பி. 1888ல் மீனாட்சி அம்மை கலாநிதி அச்சுக் கூடத்தில், பதிப்பிக்கப் பெற்றது.

மேற்பார்வை: திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை அவர்கள்.

மிக்க பொறுப்புடன் அச்சிடப் பெற்றது. இதுவும் திருந்திய பதிப்பே.

ஏட்டில் கிடந்து அச்சில் வாராப் பாடல்களும் சில உள என்பார் திரு. மு. அருணாசலனார். [1]

இப்பதிப்பு 1998 செவ்விதின் அமைந்தது; சீரியோர் பதிப்பித்தது.

[1] திருச்சிற்றம்பலப் பேராசிரியர் திரு. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் எழுதிய நூலிலிருந்து தொகுக்கப் பெற்ற செய்திகளே இவை.

Koviloor Digital Library

மறைஞான சம்பந்தரின் பிற நூல்கள்

1. அட்டாங்க யோகம்

சரியை, கிரியை சார்ந்த நல் ஞானம் ஆய மூன்றனுக்கும் ஆன்றமை நூல் பல யாத்த மறைஞான சம்பந்தர் எஞ்சிய யோகத்திற்கு என எழுதி உபகரித்த நூலே அட்டாங்க யோகம் (குறட்பா) என்பது.

இயமம், நியமம், இருப்புறு ஆசனம், பிராணா யாமம், பிரத்தியா காரம், தாரணை, தியானம், தகவுறு சமாதி எனும் எட்டு யோக உறுப்புகளைப் பற்றி நுவல்வது.

அறுபதினோடு அமை ஐந்து ஆம் குறட்பாக்களால் ஆயது. பாயிரப் பகுதியும் உண்டு.

இந்நூலகத்து உள,

''நின்றும், இருந்தும், கிடந்தும் நடந்து(ம்) நினை
என்றும் சிவன்தாள் இணை.''

எனும் குறட்பா பிறிது ஆய 'வருத்தம் அற உய்யும் வழி'யிலும் வந்துளது.

முதற்பதிப்பு: மதுரைத் தமிழ்ச் சங்கம்
பதிப்பாசிரியர்: சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர்

2. ஆன்மார்த்த பூஜா பத்ததி

இவர் வடமொழியில் செய்த நூல் இது என வெள்ளி விளம்புவார்.

''த்ரவ்விய அவஸ்யம் கார்யா''

எனும் பகுதியை எடுத்துக்காட்டும் வெள்ளி 'அகோர பத்ததி' தழுவி 'ஆன்மார்த்த பூஜா பத்ததி' ஆக்கப் பெற்றது என்பார். இந்நூல் இக்காலை பெறல் அரிது ஆயது.

3. இறைவன் நூற்பயன்

குறள் வெண்பா யாப்பில் அமைந்தது. உரைநூல்களில் மட்டுமே இதன் பெயரும், சில பாடல்களும் பயிலப் பெறுகின்றன. இதுவும் காண்பரிதே.

4. உருத்திராக்க விசிட்டம்

இயல்பின் மாறாக பெரும்பாலும் வெண்பா யாப்பில் ஆக்கப்பெற்று அமைந்தது. ஜெபமாலை மணிகள், 108 ஆம் எனக்கொண்டே, காப்புச் செய்யுள் உட்பட 108 பாக்களில் அமைத்தார் போலும்.

அம்பலத்தான், அந்தமிலான், அந்தணற் காத்த அருளாளன் அருள்மேவி ஆய்ந்து இனிது அமைத்தார். பாயிரப் பகுதி 15 பாடல்கள் கொண்டது.

இந்நூற் கருத்துக்களைக் காந்தத்தும் ஆகமத்தும் கண்டு கொண்டதாகக் கூறுவார்.

Koviloor Digital Library

கோடற்குரியார் இவர்தாம் என விதிக்கும் பாடலும் உண்டு.

''நாத்திகர் கேட்க நவிலற்க; நன்றிமிகு
ஆத்திகத்து ஆர்வத்தார்க்கு அறிவிக்க.''

என்பார்.

மேலும், உருத்திராக்கம் தோன்றிடம் (நேபாளம்) நிறம், இவர் இவர்க்கு இவ் இவை உரிய எனல், முகங்கள், அவ்வம் முகங்கட்கு உரிய தெய்வதங்கள், உடலில் பூண் தகு இடம், பூண்முறை, பூண்பார் விலக்கத்தக்க உணவுகள், உருத்திராக்க மணிகளை இணைக்கும் முறை, செபமாலை அளவு, மணி எண்ணிக்கை, மாலையின்றிச் செபித்தல் ஆகாது எனல், மாலைக்கு இழை, உச்சரிக்கும் முறை, செபிக்கும் காலத்து இருக்கத்தக்க முறை, செபிக்க வேண்டிய எண், ஆதனம், கழற்றிய மாலையைப் பெட்டியினுள் வைக்கும் முறை என்பன பற்றிப் பலபடக் கூறுவார்.

மெய்கண்டார், மாளிகைத் தேவர், காரைக்கால் அம்மை ஆகியோருக்கு வணக்கம் கூறும் மரபும் உளது.

5. ஐக்கிய இயல்

ஐம்மூன்று வெண்பாக்களில் 'ஐக்கியம்' என்ற பொருளைத் தெளிவுபடுத்தும் நூல் இது. 'தீட்டேல்' எனத் தொடங்கும் வெண்பா உளம் கொளற்கு உரியது.

6. சங்கற்ப நிராகரணம்

சந்தானக் குரவர் உமாபதி சிவாசாரியார் அகச்சமய வாதங்களைக் கூறி அவற்றின் மறுதலையையும் எழுதுவார். நூற்பாவால் அமைந்தது.

சிவஞான சித்தியார் பரபக்கம் - புறச் சமயங்கள் பலவற்றை மறுத்துரைப்பது; விருத்தப்பா வகைத்து.

இந்நூலோ 424 குறள் வெண்பாக்கள் கொண்டது. அகச் சமய வாதிகள் எண்மர் கூற்றை மறுப்பது.

சிறப்புப் பாயிரம் மற்றும் இரு வெண்பாக்கள் நூல் கொளற்கு உரியார் இவர் எனக் கூறா நிற்கும். பாயிரப்பகுதி 50 குறட்பாக்களால் ஆனது.

மாளிகைத்தேவர்க்கும், மாதரசியார்க்கும் தன் மரபுப்படி வணக்கம் கூறுவார்.

ஆதுலர்சாலை அமைத்ததன்பால் மருந்து அளித்தல்
ஆரியமும் செந்தமிழும் ஆராய்தல் - தேருநலத்
தேவகுலப் பணிசெய்தல் தேடுபொருள் பிறர்க்கீதல்

ஆம் அறங்கள் பல குறிப்பிடுகிறார்.

கற்றற்கு உரிய நூலுக்கு எம்முறையில் பொருள் செய வேண்டும் என்றும் விளக்குகிறார்.

எங்கும் சிவாகமத்தை ஏத்திப் போற்றும் இவர் ஐக்கியவாதி, பாடாணவாதி,

Koviloor Digital Library

பேதவாதி, சிவசமயவாதி, சங்கிராந்தவாதி, ஈசுவர அவிகாரவாதி, நிமித்தகாரண பரிணாமவாதி, சைவர் ஆகியோர் சங்கற்பங்களை முதலில் கூறி, அடுத்து நிரலே ஒவ்வொன்றையும் நிராகரிக்கிறார் (மறுத்து விலக்கல்), காரண காரியங்கள் மொழிவதன் வாயிலாய்.

தாம் **முத்திநிலை** மொழிந்ததனை மூன்று இடங்களில் குறிப்பார்.

சீன தர்ப்பணம் என்னும் ஒருவகை ஆடி பற்றிக் கூறுகிறார். பொன் மலைச் சார்வு எய்திய பொல்லாக் கருங்காக்கை பொன் உருப்பெற்றுப் பொலிந்தது எனப் புகல்வார். (யாப்பருங்கலக் காரிகை - பாயிரப் பகுதி 3 ஆம் பாடல்)

கல்லால் எறிந்து வழிபட்டே, காலனைக் கல்லால் கடிந்தாற் கழல் கூடிய சாக்கியர் பற்றிக் குறிப்பார்.

காசி விசுவேசன் கழல் பணிக! காசினியில்
தேசிகற்கு, அந்தணர்க்கு தீங்குதரு - மாசுடைய
பொல்லாரை வெல்லப் பொருந்துவன தாம் செய்க
நல்லா றதுவே நவில்.

என்ற கருத்தமையப் பாடுகிறார்.

7. சைவ சமய நெறி

சைவ சமய சாத்திரப் பெருநூல், எழுநூற்றின் மிக்க (727) குறட்பாக்கள் கொண்டது. நல்லூர்ப் பொல்லாப் பிள்ளையார்க்குக் காப்புச் செய்யுள் அமைக்கப் பெற்றது. பாயிரத்துடன், ஆசாரியர் இலக்கணம், மாணாக்கர் இலக்கணம், பொது இலக்கணம் என முப்பிரிவுகள் உள.

பேயார்க்கு, பெருமாளிகைத் தேவர்க்கு வணக்கம் கூறி நிற்பது. 'உயிர்க்குயிர் ஆயவன் அவ் ஒரு தனி முதல்வன் என்று உணர்ந்தார்க்கு என் வணக்கம்' என்பார்.

பெரியோர்க்கு, விருந்தினர்க்கு, ஆதுலர்க்கு, அன்னம் அளிப்பார்க்கு ஊருணி அன்ன செல்வர்க்கு, அவரிடத்து உதவி பெற்றுத் திருப்பணி செய்வார்க்கு வாழ்த்துரைப்பார்.

ஆகமம் ஆய்ந்து இந்நூல் ஆக்கியதாகக் குறிப்பிடுகிறார்.

ஆசாரியர் இலக்கணம்: 117 குறட்பாக்கள் கொண்டது. நல்ல நதிக்கரைப் பிறப்பும், நற்குலத்தோற்றமும் உடையவர், உடற்குறை, உளக் குறை இல்லவர், இவ்விவை குறை என இயம்புவார். குற்றம் வீந்த குணத்தின் அக்கோதிலார் தீக்கை பெற்றவர்; ஆகமத்தோடு வேதாந்தம் அரில்தபக் கற்றவர்; மூவகையர், ஐயம், திரிபு, விபரீதம் என்பன முற்றும் அற்றவர். பதி, பசு, பாச இயல் நன்கு உணர்ந்து சிவஞானம் கைவரப் பெற்ற பெருமையர். ஆசார்யத் தகுதிக்கு ஏற்ப முத்திரை, நித்தியம், நைமித்திகம், காமியம் போல்வன இயற்றுபவர்.

Koviloor Digital Library

தேசிகர்: மாணியாகவோ, மாண்புடை இல்லறத்தாராகவோ இருப்பர். மகளிர்க்கும் தீக்கை உண்டு. தீக்கை அளிப்பதற்கு ஏற்ற காலம், மாணாக்கன் உவந்து தரு பொருளில் மூன்றில் ஒரு கூறே கொள்ளத் தகுவது என்ற செய்திகள் சொல்லப் பெறும்.

மாணாக்கர் இலக்கணம்: நன்னதிக் கரைச் சார்பில் தோன்றியவர். சமயி, புத்திரிகன், சாதகன் எனும் மூவகையர். பூசனைக்குரிய பூக்கொய் முறை, குருவை வழிபடு முறை இவை பற்றிக் கூறுவார். ஆசாரியன் சிவன் எனக் கோடற்குரியான். ஆனால் சிவனை ஆசாரியன் எனக் கருதற்க என்பார்.

குணத்தொடு பழகி, குறிப்பிற் சார்ந்து குருவை வழிபடுக என்பார்.

பொதுவாக இப்பகுதியில் இவர் கூறுவ சமயக் கல்விக்கு மட்டும் அன்றி கற்கும் மாணவர் எத்துறையரேனும் கைக் கொளத் தகுவ.

பொது இலக்கணம்: ஆசாரியனின் அன்றாடக் கருமங்கள், குளிர் நீராடலின் சிறப்பு, ஆன்மார்த்த பூசை, பரார்த்த பூசை, சைவச் சின்னங்கள், வணங்குமுறை, போசன விதி, பிட்சை வகை, சைவ ஆகமங்கள், இட்ட லிங்க பூசை எனப் பலபடியாக விரித்து உரைப்பார்.

விரிந்த இப்பகுதி ஐந்நூற்றோடு எண் ஒன்பது (572) குறட்பாக்கள் கொண்டது.

சிவ பூசனையாளர் சிறப்பாக அறிதக்க எல்லாப் பொருளும் இதன்பால் உள.

பதிப்புகள்: நாவலர் பதிப்பித்தன.

ஆசிரியர் தன் பெயர் சூட்டி அமைக்கும் குறட்பாவும் நூலின் ஈற்றில் உளது.

சைவ சமய நெறி சாற்றினன்சம் பந்தன்உயிர்
மையல்அற வாய்க்க வரம்.

8. சோமவார கற்பம் (216)

சோதியான் அருள்பெற அவாவி சோமவார விரதம் நோற்ககிற்பார் உளம் கொளத் தக்கன, இவ் இவை என ஈரெட்டுடன் இயை இருநூறு குறட்பாக்களில் உணர்த்து நூல்.

சிவற்குப் பூசனை செய்ம்முறை நுவல்வது, அர்ச்சனை, நிவேதனம், அமை நாகேசுவர பூசை முதலன செய்தக்கன என்பார். நோற்றல் ஆற்றுவார் சிவபரம் உறுவார்.

இவ்விரதம் அனுட்டித்தற்குச் சிறப்பாய் ஓதுறு தலங்கள் காளத்தி, காசி, கவின்நகர் மதுரை, விழவறா ஆரூர் என்பன ஆம் (145ல்) எனக் குறிப்பார்.

Koviloor Digital Library

9. சோமவார சிவராத்திரி கற்பம்

பதின்ஏழ் குறட்பாக்களால் ஆன நூல். விரதம் அனுட்டிக்கத் தகு நாள் எவை? பூசனை செய்ம்முறை யாது? நோற்பார் எய்து பலன் எவை? என்று விளங்கக் கூறுவது.

10. திருக்கோயிற் குற்றம்

இறைவன் உறைதரு கோயிலில் செய்யத்தகாதன - குற்றங்கள் - முப்பதின் இரண்டனை எண் சீர் விருத்தப் பாக்கள் இரண்டில் விளக்குகிறார்.

11. பஞ்சாக்கர தரிசனம்

'இப் பெயரிட்டுச் செப்பமுறு நூல் ஒன்று செய்தார் எம் குரவர்' என மறைஞான சம்பந்தர் மாணாக்கரான மறைஞான தேசிகர் நவில்வார்.

எடுத்துக்காட்டாக இரு வெண்பாக்கள் தருவார். வெண்பா யாப்பில் அமைந்த நூல் போலும். இன்று காண்கிலமே!

12. பதிபசு பாசத் தொகை

ஆசிரியர் பெயர் இன்றியே உரையுடன் இந்நூல் பலமுறை அச்சிடப் பெற்றுளது. எனினும் இது மறைஞான சம்பந்தர் செய்தது என்பர்; மறுத்து அவர் மாணாக்கரான மறைஞான தேசிகர் செய்தது என்பர். ஆக இருவேறு கருத்துகள் ஆன்றோர் இடை வழங்குகின்றன.

காப்பு, சிவசக்தி, நந்தி முதலானோர் வணக்கத்தோடு தொடங்குவது. பதி, பசு, பாசம், அனுக்கிரகம், பலன் என்ற இயல்கள் கொண்டது. பாடல்கள் மிகவும் எளியன.

குறட்பா வகைத்து; எண்ணிக்கை 25.

பதிப்பு: 1. 1903ல் பால்வண்ண முதலியார்
2. தருமை ஆதீனப் பதிப்பு 1940ல்

13. பதிபசு பாசப் பனுவல்

ஏட்டுச் சிதைவால் சில பாடல்கள் இல ஆக எஞ்சியவற்றுடன் பதிக்கப் பெற்றது.

இந்நூலில் கூறப் பெறும் - ''காரூர் பொழில்'' - பாடலே நூலாசிரியர் வரலாறு, ஆக்கிய நூல்கள் பற்றிய செய்திகளை அறிவிக்கின்றது.

பாயிரம் (1), பிரமாணம், பதி சாதனம், பசு சாதனம், பாச சாதனம், பொது, போதகம் என ஏழு இயல்களில் இயன்றது. நூலின் தொகை காட்டும் பாடல் தொடர் வருமாறு:

ஆய்ந்து உரைத்த செய்யுள் வகை
- முந்நூறும் ஆறாறும் (300+6 x 6)
ஏய்ந்த துணை பக்குவர்க்கு எண்.

Koviloor Digital Library

நூலாசிரியர் தன் பெயர் இன்னது எனக் குறிக்கும் தொடர்,

பிரமபுரத் தீசன்பால் பேதைமுலைப் பாலைப்

பருகியபா லன்பேர் பரிந்தோன்.

என்பதாம்.

பாயிர இயலில் ஆகமம் செய்தவர், ஆலவனத்து அம்மை, ஞானசம்பந்தன், நாவுக்கரசன், ஆரூரன், திருவாதவூராளி, கஞ்சனூர் அரதத்தர், மதுரகவி, மாளிகைத் தேவர், மெய்கண்ட தேவர், உரைவிளக்கும் வித்தகர் அருள் நந்தி, தனக்கு உபதேசம் செய்த குருதேசிகர் ஆகியோருக்கு வணக்கம் சொல்கிறார்.

அக்காலத்து, அளவை அறிவு சமயத் தத்துவ உணர்ச்சிக்கு இன்றி அமையாதது என ஆன்றோர் கருதினர். ஆக இவரும் பிரமாண இயலில் 68 குறட் பாக்கள் இது குறித்து அமைத்துள்ளார்.

அடுத்துவரும் மூவியல்களில் சித்தாந்த சமயத்து முப்பொருள் உணர்த்துவார்.

சைவ சமய தத்துவ அறிவு பெற அவாவுவார் மெய்கண்டார் நூல்கண்டு, பயில முயல்வரே அன்றிப் பிற நூல்களைக் காணகில்லார்.

பதி, பசு, பாசப் பனுவலும் ஆய்தற்கு உரியது. அருநலம் பயப்பது. இந் நூலின் பொதுவியல் 8 பாக்கள் உடையது. சிவப்பேறு சித்திக்கும் நெறி செப்புவது.

போதக இயலில், 'குரு வடிவாகி குவலயம் தன்னில்' இறைவனே போதருவான் என்றும், அம் மூவா முதல்வனே மும்மலத்தொடக்கு அறுப்பான் என்றும் இயம்புவார். மேலும் சீவன்முத்தர் இயல்பு, உட்பூசை, அஞ்செழுத்து ஆகிய பொருளைக் கூறுகிறது.

ஒவ்வோர் இயலின் இறுதியிலும் 'இவ்வியலின் பொருளை நன்கு உணர்வார் சிவச் சார்பு எய்துவர். இது ஒருதலை' என்று பயன் பகர்வார்.

நூற்பாடல்கள் மிகு தெளிவின. அவற்றுள் சில காண்பதும் நலம்.

ஆகம் சடம் காண் அணு அறியாது; இவ்விரண்டின்
யோகம் சிவனால் - என்று ஓர்

வேண்டுவார் இல்லை விலங்கு; ஒருவன் காலில் அது
பூண்டு உறில் பூண்பித்தான் உண்டு.

பூட்டுவித்தான் தாள்பணியப் போம் விலங்கு; புன்குரம்பை
கூட்டுவித்தான் தாள்பணி; போம் கூடு.

14. பரமத திமிர பானு

''இருளே உலகத்து இயற்கை இருள் அகற்றும்
கை விளக்கே கற்ற அறிவுடைமை.''

என்பர் ஆன்றோர்.

உலகியலோடு ஒட்டிய சமயம் - சைவத்தின் மேற் சமயம் - வேறில்லை.

Koviloor Digital Library

ஆக அப்பரமதங்களின் திமிரம் (இருள்) அகற்றும் பானு (கதிரவன்) போல்வது இன்னூல், இந்நூல்.

குறள் வெண்பாக்களால் இயன்ற இந்நூல் இன்று காண்பரிதாயது.

மறைஞான சம்பந்தரின் மற்றொரு மாணவர் திருவொற்றியூர்த் தேசிகர் ஞானப் பிரகாசர். இப்பிரகாசர் தமது சித்தியார் பரபக்க உரையில் தம் குருநாதர் நூலில் இருந்து (பரமத திமிர பானு) 180க்கும் மேற்பட்ட பாடல்களை மேற் கோளாகக் காட்டுகிறார். இன்றோ இந்நூலில் நாம் காண்பன சில; இழந்தனவோ தவப்பல. என் நம் தீஊழ் இருந்தவாறு?

15. பரமோபதேசம்

நாற்பதின் மிக்க நல் வெண்பாக்களால் இயன்றநூல். இறுதிப்பாவில் இவர் பெயர் காண்கிறோம்.

செறியுமா செறியும் பரமோபதேசம்
மறைஞான சம்பந்தன் வாக்கு.

இச்சிறு நூலிலும் விநாயகர் முதலியோர் வணக்கம் கூறுகிறார். தாம் சொலப் புக்க நூல்களின் முடிந்த முடிபுகளை - கருத்துக்களைத் - தொகுத்துக் கூறுகின்றார்.

பிற இடங்களில் பாடிய பாடல் அடிகளை அப்படியே இங்கும் அமைத்து உள்ளார்.

சிவாகம நூல் சிவையைச் சாத்துவி (சத்துவ குணத்தி) எனும் சிவஞான போத சுலோகம் - (பத்து) சிவ அநுபூதியைச் செப்பும்.

பிரமகீதை, திருமந்திரம், சம்பந்தர், அப்பர், சுந்தரர், அருள் மணிவாசகர், திருவெம்பாவை, திருவிசைப்பா, நக்கீரர், அருள்நந்தி பாடல்கள் முதற்குறிப்பில் கூறப் பெறுகின்றன. வசையிலா வடமீன் (அருந்ததி), வசிட்டன் போல்வாரையும் குறித்துள்ளார்.

16. மகா சிவராத்திரி கற்பம் (39)

ஆறாறொடு மூன்று அருங் குறட்பாக்களால் அமைந்த நூல். மாசித் திங்களில் கொண்டாடப் பெறும் நல்நோன்பு நாள் மகா சிவராத்திரி.

இன்ன நாளில் இது அனுட்டிக்க, விரத நியமங்கள் இன்ன இன்ன, அருச்சித்துப் பேறு பெற்றோர் இன்னர், பெற்ற பலன் இன்னது என்பார்.

17. மாத சிவராத்திரி கற்பம் (14)

ஏழிரண்டாய குறட்பாக்களால் இயல்வது. திங்கள்தோறும் அத்திங்கள் வேணியனைக் குறித்து இருக்கத்தக்க விரதம்.

மாத சிவராத்திரியில் செய்தக்க - பாரணை, பூசனை பற்றிக் கூறுவது.

Koviloor Digital Library

18. முத்தி நிலை

தருமை குருஞானசம்பந்தர், மறைஞான சம்பந்தரின் கருத்தை மறுத்து 'முத்தி நிச்சயம்' என்று ஒரு சிறு நூல் செய்தார்.

அவர் மறுத்த இவர் கருத்து: ''ஆன்மா - இயல்பாகவே ஆனந்தம் உடையது. மலக்கட்டால் அது தடைப்படுவது உண்டு. சித்தமலம் அறுவித்து சிவமாக்கி ஆட்கொளின், மலம் நீங்கும் ஆகலின் ஆனந்தம் சுடர்விடும். ஆன்மா ஆனந்தம் அநுபவிக்கும் என்பதாம்.''

இக்கருத்தை உள்ளடக்கியதே முத்தி நிலை. 'அகம் பிரம்மாஸ்மி' என்பாரைக் கண்டிப்பது. பிரமகீதைக் கருத்தைப் பெயரிட்டு மறுப்பது.

இச்சிறு நூல் இருபதின் குறைந்த எண்ணிக்கை கொண்ட வெண்பாக்களால் அமைவது. பரமதக் கண்டனம் கூறுவது ஆகலின் இது பெருநூலாக இருந்து இருக்குமோ? என்ற ஐயம் மிகுகின்றது.

தாம் முத்தி நிலை பாடியதனைத் தம் பிற நூல்களிலும் குறிப்பிட்டுள்ளார். இயல்பின் மாறாய் ஈற்றில் அமைந்தது சிறப்புப் பாயிரம். அதனுள் தன் பெயர் அமைத்துப் பாடி உள்ளார்.

முத்திநிலை அணுக்கள் சேரமொழிந் திட்டான்
சத்தியமெய்ஞ் ஞானசம்பந் தன்.

என்பது அது.

19. வருத்தம் அற உய்யும் வழி (17)

ஆசிரியர் பெயர் இன்றி மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் பதிப்பிக்கப் பெற்றது. நன்னான்குடன் நவில் ஒரு குறட்பாவால் அமைவது.

அகமுகப் பூசையர், அஞ்செழுத்தை நெஞ்சில் அழுத்துநர், தவாஅ நோன்பினர், சிவபுரத்து இன்புறுவர் என்பர்.

அருள் நிறை நெஞ்சத்து ஆசாரியன் தன்னை வழிபடுநர்க்கு, மாணாக்கர்க்கு, அவர்கள் 'வருத்தம் அற்று உய்ய' வழிகாட்டுவது போல் இந்நூல் மொழிக என்கிறார்.

பலரும் நன்கறி பாடல் இது. அட்டாங்க யோகக் குறளிலும் காணலாம்.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்து(ம்) நினை
என்றும் சிவன்தாள் இணை.

இவர் ஆக்கிய புராண நூல்கள்

20. அருணகிரிப் புராணம்

21. கமலாலய மான்மியம்

விரிவஞ்சி இவ்விரண்டும் ஈண்டு குறித்திலம்.[1]

[1] இவ்விடை தந்துள குறிப்புகள் யாவும், கூட்டொருவரையும் கொள்ளாது

Koviloor Digital Library

ஒரு தனி நின்று, தமிழ் இலக்கிய வரலாறு - பல தொகுதிகள் - வரைந்து உலகிற்கு அளித்த உபகாரி: திருச்சிற்றம்பலப் பேராசிரியர் திருமிகு. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் நூல்களிலிருந்து கொண்டவை.

மன்னா உலகத்து மன்னுதல் குறித்து
தன்புகழ் நிறீஇத் தான் மாய்ந்த
அத்தகவாளர்க்கு எம் சென்னி தாழ்ந்த வணக்கங்கள்.

Koviloor Digital Library



பண்டிதர் மு. கந்தையா அவர்கள் வரலாறு

சைவர்கள் கைக்கொண்டு ஒழுகத் தக்க அறங்களை நுவல்வது இச் சிவ தருமோத்தர நூல்.

இந்நூற்குத் திரு. ஏ. இராமநாதன் அவர்கள் சொற்பிரித்து, காலத்திற்கேற்ப உரைநடைத் தமிழில் விளக்கம் தந்துள்ளார்.

இவ்விளக்கங்களைப் படித்து, திருத்தி, செவ்விதின் அச்சியற்றப் பேருதவி புரிந்தவரே திரு. மு. கந்தையா அவர்கள்.

ஈழம் தந்த அறிஞர்களுள், இன்றிருக்கும் விறலாளர் தம்மை எண்ணில் விரற்கு முன் நிற்பவர். இவர் வரலாறு அறிவது நமை நன்னெறிப்படுத்தும் அன்றோ?

யாழ்ப்பாணத்து வலிகாமத் தென்பிரிவைச் சார்ந்த சிற்றூர் ஏழாலை. இச்சிற்றூரில் வாழ்ந்த பெருநலத்த சைவத் தமிழ்ச் சான்றோர் மரபில் வந்தவரே நம் மு. கந்தையா அவர்கள்.

பிறந்த நாள் தொட்டே. சிறந்த பிறப்பியல் சார்வால், சூழ்நிலைக் கவர்வால் தமிழொடு, வடமொழி தகவுறப் பயின்றார் தொடர்ந்து பயின்று முன்னேறி மேனிலை எய்தினார். ஆங்கில மொழி பெயர்ப்புகள் வாயிலாகவே வடமொழித் தேர்ச்சியும் பெற்றார். மேலும் பயில் அவாவினால் ஆசிரியப் பணி உவந்து ஏற்றார்.

பணிபுரியும் காலத்திலேயே நனி பெரிது முயன்று ஆங்கிலமும் கற்றார். இலண்டன் பல்கலைக் கழக, சமஸ்கிருத கலைமாமணிச் சிறப்புப் பட்டமும் பெற்றார்.

சமகாலத்து யாழ்ப்பாணத்துப் பேரறிஞர் பலருடன் பயின்றவர். தவல் அருந் தொல்கேள்வித் தன்மை உடையாரொடு குழீஇய தகவினர். கரவெனல் அறியா மாண்புறு மக்களொடு பழகினவர்.

பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்களை அபிமானக் குரவராக ஏற்றவர். சைவத் தமிழ்ச் சான்றோர் திரு. சு. நடேசப் பிள்ளை, சைவ சித்தாந்தப் பேரறிஞர் அருளானந்த சிவம், திரு. மு. ஞானப்பிரகாசம் போல்வாரின் தனித்த அன்பிற்குப் பாத்திரர் ஆனார்.

அறிஞர் தம் அன்பும் ஆசியும் அமைவுறப் பெற்ற இவர் யாழ். பல்கலைக் கழகத்தோடும் தொடர்புள்ளவர்.

தமிழகத்துச் சான்றோர், சைவ சித்தாந்த மேதையர் க. வச்சிரவேலு

Koviloor Digital Library

முதலியார், முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் போல்வாரோடு பழகி உள்ளவர். உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரியும் உரவோர்.

''மீட்டும் மனித்தப் பிறவியும் வேண்டுவதே! வாழ்நாள் எல்லாம் பிறர்க்குப் பயன்படும் வகையில் தன் அறிவினை, ஆற்றலைச் செயல்படுத்தும் சால்பினர்க்கு. பிறந்தான் என்பான் சைவ சாதனைகளை நிகழ்த்த வேண்டும். வாழ்வாங்கு வாழ்தல் வேண்டும். வாழ்வின் பயனாக மற்று ஈண்டு வாரா நெறி எய்தல் வேண்டும் - இது தான் உண்மை வாழ்வியல் நோக்கு.

'மெல்லப் பழங்கதைகள் பேசி, தேடிச் சோறு நிதம் தின்று, பயனில பாராட்டி, வாழ்நாளை வறிதாக்கி மாயாமல் மாயும் மாந்த வாழ்க்கை எய்தற்க எம்பால்'

- இவர்பூட்கை இதுவே. 'சித்தாந்தச் செழும் புதையல்' என்ற நூலில் இவர் குறிப்பிட்டுள்ள கருதுகோள் இதுவே.

எழுத்திற்கும், வாழ்விற்கும் வேறுபாடு இவர் மாட்டுக் காண்டல் அரிது. (அருமை - இன்மைப் பொருட்டு)

மும்மொழித் தேர்வு முயன்று பெரிது எய்திய இவர் அம்மொழி ஆற்றலை, சைவ சித்தாந்த நூல் கல்வி கேள்விகட்கும் வெளியீடுகட்குமாகவே பயன் கொண்டார்.

எண்ணிரண்டைந்து ஆண்டுகள் அகவை எய்தும் இவ் அறிஞர் அயல் ஆங்கிலத்தொடு, வடமொழியும் கற்றும் கற்பித்தும் வருகிறார்.

எனினும், தமிழினிடத்தும், தகவு அமை சைவ சித்தாந்தத்தினிடத்தும் தணியாக் காதலர்.

யாழ்ப்பாணத்து, பெருநகர் யாவற்றிலும் இவரது சைவ சித்தாந்த வகுப்புகள் பல்யாண்டுகளாக நிகழ்ந்து வருகின்றன.

கிளிநொச்சிக் குருகுலத்தில் ஈரிரண்டாண்டுகளாக இயன்ற சைவ போதகர் பயிற்சியில் இவர் பங்கு முன் நிற்பது, முதன்மையானதும் கூட.

இவர் எழுதி வெளியிட்ட நூல்கள் பல. இவர் குறித்தும் இவர்தம் நூல்கள் குறித்தும் தன் முனைவர் பட்டத் தேர்வுக்கு என (சிறப்புத் தமிழ் மாமணி) யாழ்.பல்கலைக் கழக மாணாக்கி செல்வி. சுபோதினி இராஜசிங்கம் என்பார் நூல் ஒன்றனை ஆக்கி, சமர்ப்பித்து உள்ளார்.

அந்நூல், ''பண்டிதர் மு. கந்தையா - ஓர் ஆய்வு'' என்பதாம். அந்நூலில், பண்டிதர் ஆக்கி வெளியிட்ட நூல்கள் பட்டியல் காணப்பெறுகிறது.

நூல்கள்

1. குழந்தைவேல் சுவாமிகளும், குரு பரம்பரையும்
 - குழந்தைவேல் சுவாமிகள் சமாதித் தர்ம பரிபாலன
 சபை கீரி மலை 1965

Koviloor Digital Library

2. மாவைப் பிள்ளைத் தமிழ் (உரையுடன்)
முத்தமிழ்க் கலை மன்றம், மாவிட்ட புரம் 1967

3. சித்தாந்தச் செழும் புதையல்கள்
- ஈழத்துச் சித்தாந்த சைவ வித்தியாபீடம்,
யாழ்ப்பாணம் 1978

4. சித்தாந்த விளக்கில் சைவக் கிரியைகள்
இந்து சமய விருத்தி சங்கம், மானிப்பாய் 1978

5. நாவலர் பிள்ளைத் தமிழ் - உரையுடன்
- தமிழ் வளர்ச்சிக் கழகம், காரை நகர் 1979

6. பூ உலக வாழ்வின் முடிவில் அபரக்கிரியைகள் ஏன்? எப்படி?
- நாகரத்தினம் நினைவு மலர், மல்லாகம் 1983

7. அரியவும் பெரியவும்
பெரிய புராணச் சிந்தனைகள் - பாகம் ஒன்று
- துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை 1984

8. பெரிய புராணச் சிந்தனைகள் - பாகம் இரண்டு
- துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை 1986

9. சிவாலய சேவை - ஏன்? எப்படி?
- சைவ சமய அபிவிருத்தி சங்கம், ஏழாலை 1986

10. சுது மலைப் புவனேஸ்வரி அம்மை பிள்ளைத் தமிழ்
- உரையுடன், சுதுமலை 1987

11. வைரவ வழிபாடு
- ஞான வைரவர் தேவஸ்தானம், மயிலங்கடல் 1987

12. வல்லிபுர மாயவன் பிள்ளைத் தமிழ்
- ஆழ்கடலான் சஹ்ருதயா சித்ராபதி, ஊரெழு 1989

13. திருக் கேதீச்சர மான்மியம் புராதன காண்டம்
- உரைக்குறிப்புடன்
- திருக்கேதீச்சர திருப்பணிச் சபை 1989

14. சைவ சித்தாந்த மாயை உண்மை
- மலேசியா சைவ சித்தாந்த சபை, மலேசியா 1989

15. சிவஞான சித்தித் திறவுகோல்
- குமரன் பதிப்பகம், சென்னை 1991

16. திருக்கேதீச்சர மான்மியம்
பொற்கொளிர் காண்டம் (உரைக் குறிப்புடன்)
- திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபை 1992

Koviloor Digital Library

17. சைவாலய பூசையில் தமிழ் வேதம்
 - சைவ சமய அபிவிருத்தி சங்கம், ஏழாலை

மேற்குறித்த பட்டியலில் குறிப்பிடப் பெறாதன சிலவும் உள. அவை வருமாறு:-

1. Sri Durga Devi Temple of Tellippalai
 - Sri Satguru Publications DELHI
2. கேதார கௌரி விரத வரலாறும் அதன் உள்ளுறையும்
 - காந்தளகம், யாழ்ப்பாணம் 1980
3. க்ஷேத்திரத் திருவெண்பா - உரை விளக்கம்
 - தமிழ் வளர்ச்சிக் கழகம், காரை நகர் 1984
4. சைவ சித்தாந்த நோக்கில் -
 கைலாசபதி ஸ்மிருதி[1] - ஆய்வுக்கட்டுரை
 - யாழ். பல்கலைக் கழகம் 1994
5. சைவ சித்தாந்த அறிவியல் பரப்பில், யாழ் மேதையின் சுவடுகள்
 - ஆய்வுக் கட்டுரை
 - யாழ். பல்கலைக்கழகம் 1994
6. திருஊஞ்சல், திருப்பள்ளி எழுச்சி
 - இவ்வகையில் அமைந்த சிற்றிலக்கியங்கள்
7. பெரிய புராண சூசனம்
 (அப்பூதி அடிகள் முதல் நூல் முடிய)
 - மலேசிய சைவ சித்தாந்த சங்கம்
 அச்சு, அமைப்பு: காந்தளகம், சென்னை 1993

நூல்வடிவில் வரத் தகுவ:-

1. அரியவும் பெரியவும்
 பெரிய புராணச் சிந்தனைகள் - பாகம் மூன்று
2. திருக்கேதீச்சர மான்மியம்
 கரந்துறை காண்டம் - உரையுடன்
3. மாவைப் பள்ளு
4. சேக்கிழார் பிள்ளைத் தமிழ் - உரை
5. நீர்வேலிக் கந்தசுவாமி பிள்ளைத் தமிழ்

இவர்தம் நூல்களின் நலம் பாராட்டி மகிழ்ந்தார், பலர். மகிழ்ந்த அமைப்புகள் பல.

[1] இது பின் பெருநூலாக விரித்து எழுதப்பட்டுள்ளது. இனி அச்சியற்ற வேண்டும்.

Koviloor Digital Library

1. யாழ்ப்பாணம் நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனம்
2. துர்க்கா தேவஸ்தானம்
3. பண்டிதமணி கணபதிப் பிள்ளை நினைவு நிதியம்
4. கொழும்பு - தமிழ்ச் சங்கம்
5. வடக்குக் கிழக்கு மாகாண சாகித்திய மண்டலம்
6. இலங்கைச் சாகித்திய மண்டலம்

பல அமைப்புகள் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்துள்ளன.

இலங்கைச் 'சாகித்திய மண்டலம்' 1991ல் சாகித்திய உயர் விருது வழங்கி, கௌரவித்த நால்வர் தமிழரில் இவர் ஒருவர்.

இவரது ஆக்கங்கள் குறித்து அறிஞர்கள் சிலர் கருத்தை அறிவதும் நன்றன்றோ?

1. ''மாவைப் பிள்ளைத் தமிழ் என்னும் இந்நூல் பிள்ளைத் தமிழ் இலக்கணத்துக்கு இயைந்ததாய்க் குமரகுருபரர் முதலிய சான்றோர்கள் காட்டிய மரபைப் பின்பற்றியுள்ளது. சிறந்த சொல் நயங்களும் கற்பனைகளும் இதில் ஆங்காங்குக் காணப்படுகின்றன. சைவ சித்தாந்தக் கருத்துகள் இதிற் செறிந்து உள்ளன. இதிற் பல பாக்கள் பக்திச் சுவை சொட்டும் பெற்றியன ஆகும். விஞ்ஞான சாதனைகள் மிகுந்த இக்காலத்தில் தோன்றியமைக்கேற்ப அணுக்குண்டு, செயற்கைச் சந்திரன், விண்வெளியிற் செல்லும் ''ஸ்பூட்னிக்'' என்பவற்றைச் சம்பந்தப்படுத்தி இந்நூலிற் காணப்படும் கற்பனைகள் புதுமையைப் பழமையோடு புணர்த்துகின்றன''

சு. நடேசபிள்ளை,
மருதனார் மடம், யாழ்ப்பாணம்.

2. 'சித்தாந்தச் செழும் புதையல்கள்' என்னும் இந்நூலில் முதற் கட்டுரையில் ''பொருள் அல்லவற்றைப் பொருள் என்றுணரும் மருளானாம் மாணாப்பிறப்பு'' என்னும் திருக்குறட்பாவுக்குப் பரிமேலழகர் கூறும் கருத்தும் சதசத்துக்குச் சைவ சித்தாந்தம் கூறும் கருத்தும் ஒரு தன்மையானவே என ஒப்புவமை காணும் நூலாசிரியரின் கருத்து ஒப்புக் கொள்ளற்பாலதேயாம். மேல், இரண்டாவது கட்டுரையில் சத்து, அசத்து, சதசத்து எனப் பொருள்கள் மூன்றாகக் கூறப்படினும் உண்மையில் ஒரு பொருளாகவே விளங்கும் தன்மை விளக்கப்பட்டுள்ளது. மூன்றாவதான ஆணவ விசாரணை மிகவும் பாராட்டத்தக்க முறையில் எழுதப்பட்டுள்ளது.

சோ. சுப்பிரமணியக் குருக்கள்,
சித்தாந்த பானு, வடகோவை,
யாழ்ப்பாணம்.

3. 'சித்தாந்தச் செழும் புதையல்கள்' என்ற இந்நூல் சத்து, சித்து, ஆணவம், மாயை, திரோதானம் ஆகிய வகைகளை ஆகம உபநிடத வாக்கியங்களை மேற்கோள் காட்டி விளக்கிக் கூறுகிறது. சிவாகம உபநிடதப் பயிற்சி சித்தாந்த

Koviloor Digital Library

நூல்களைக் கற்பதற்கும், தெளிவு பெறுவதற்கும் துணை செய்யும் என்பதை இதனைப் படிப்போர் உணர்வர்.

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,
தருமபுரம், மாயூரம்,
தமிழ்நாடு.

4. உபநிடதங்களில் இருந்தும் வேதங்களின் இதர பகுதிகளில் இருந்தும் பொருத்தமான மேற்கோள்களைப் பெரும் அளவில் எடுத்தாண்டிருப்பதன் மூலம் வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம் என்ற உண்மையை ஆசிரியர் கந்தையா நிருபிக்கும் அழகே ஒரு தனி அழகு.

க. கைலாசநாதக் குருக்கள்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம்,
திருநெல்வேலி.

5. ஆசிரியரின் பன்மொழி உணர்ச்சி பெரிது. அனுபவ ஞானம் அதிலும் பெரிது. குருலிங்க சங்கம பத்தியும் நிரம்ப. அறிவாராய்ச்சி அனுபவங்கள் எவ்வளவு தான் இருப்பினும் அவற்றைக் கவிஓவியமாக அழகொழுக உள் எழுதி இன்புற்றுப் பிறர்க்குச் சமர்ப்பணம் பண்ணுதல் பெரிதும் அரிது. இந்த அருமையிற் பெருமளவு சித்தி பெற்றுவிட்ட பெருமை நண்பர் கந்தையாவுக்குரியதாகும்.

வாழ்க நாவலர் பிள்ளைத் தமிழ்.

ஏ. பெரியதம்பிப் பிள்ளை,
குருக்கள் மடம்,
மட்டக்களப்பு.

6. நூலுள் நுழைபவர் பிரபந்தத்தின் நிறைவிலே ஒரு கலைக் கோயிலைக் காண்பர். அக்கோயிலின் கரு - தொல்காப்பியம்; சுவர் - திருக்குறள்; சுற்றாலயம் - எட்டுத்தொகை; சுதை - ஒழுக்கம்; மெருகு - நீதி; சுவரோவியம் - பஞ்ச காவியம்; தூபி - சித்தியார் முதலாம் சித்தாந்த சாத்திரங்கள் பதின்மூன்று; முடி - சிவஞான போதம்; தீபம் - பெரியபுராணம்; மூலமூர்த்தி - திருமுறைகள். கலைக்கோயில் அமைந்துவிட்டது. மீண்டும் படிக்கின்றேன்! படிக்கின்றேன்! உடல் புல்லரிக்கின்றது! கண்ணீர் ததும்புகின்றது! உண்மை! உண்மை! செந்தமிழ்க் கலாச்சாரத்தின் முழுமை இத்தகையதென்று உற்றுணரும் வண்ணம் நூலின் முடிமணியாக அமைந்த பாடல் இது. நாவலர் பெருமானே இப்பெருங் கலைக் கோயிலாக உருத்தெழுப்பியவர். அவர் மீண்டும் அவதரித்தார் என்ற ஆசையை எழுப்பும் பாடல் இது. பிரபந்தத்தின் நிறைவுப் பாடல் தரும் நிறைவு இது. இத்தகைய நாவலர் பிள்ளைத்தமிழ் நூல் வடிவில் வந்ததும் தமிழ் பேசும் நல் உலகம் இதனை ''நாவலர் மெய்க்கீர்த்தி'' என்றே கொண்டாடும். வேறு செப்பேடும் கல்வெட்டும் செய்ய வேண்டுமோ!

சி. ஆறுமுகம்,
தமிழ் வித்துவான், ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுண்ணாகம்.

Koviloor Digital Library

7. புலவன் நிகழ்த்திக் காட்டும் புலக்காட்சியில் இருவகைக் காட்சிகள் முதன்மை ஆனவை. அவை கட்புலக் காட்சியும், செவிப்புலக் காட்சியும் ஆகும். மெய், வாய், மூக்கு ஆகியவற்றுடன் தொடர்புபட்ட புலக்காட்சிகளும் சில வேளைகளிற் புலவர்களால் நிகழ்த்திக் காட்டப்படும். ஆயினும், பாட்டாகிய சொற்சுவையைப் பொறுத்தவரை கண்ணும், காதும்தான் முதலிடம் பெறுகின்றன. கட்புலக்காட்சி சொல்சுட்டும் பொருள்களின் நினைப்பு மூலமும் அவற்றின் வழியே தோன்றும் உணர்வு மூலமும் நிகழும். செவிப்புலக் காட்சி சொல்லோசை மூலமும் சொற்பொருள் மூட்டிவிடும் நினைவோசை மூலமும் நிகழும். இவ்விருவகைப் புலக்காட்சிகளையும் மூட்டி விடுவதில் சுது மலைப் புவனேஸ்வரி அம்மை பிள்ளைத்தமிழைப் பாடிய பண்டிதர் அவர்கள் சமர்த்தராகக் காணப்படுகிறார். நீராடற் பருவத்தில் எட்டாஞ் செய்யுளை நோக்குவோமாக.

கவிஞர். இ. முருகையன்,
துணைப் பதிவாளர்,
பல்கலைக்.கழகம், யாழ்ப்பாணம்.

The remarkable feature of this lucid literature on the glories of Thiruketheeswaram is the ingenious scanning of the several stories relating to the history of this shrine leading to the unearthing of events that had long been lying shrouded in mystery. Our author, in the manner of the mathematician has correctly reasoned without contravening the laws of thought but maintaining consistency in deduction and apriori reasoning. He has arrived at conclusions that remove all misconceptions and reservations of mind in the matter of the supremacy of this ancient shrine. It looks as if the teacher - author has applied the reductio - ad - absurdum and has finally enunciated a credible account of the emergence of the factual beginning of Thiruketheeswaram.

R.N. Sivaprakasam,
(Editor, Hindu Organ Jaffna.)


ஆசிரியராய்ப் பணியாற்றிய இடங்கள்:

1. ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை	1938 - 1951
2. நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி	1952 - 1959
3. மானிப்பாய் இந்துக் கல்லூரி	1959 - 1972

விளம்பரம் வேண்டா, புகழு முன்னர் நாணும் இயலர் இவர். அமைதியாக ஆன்மிகத் துறையில் அரும்பணி ஆற்றுபவர். இவர் பணியால், ''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்'' என்று நன்றி கூறி அமைவாம்

சைவ சித்தாந்த நிலையம்,
குவாலாலும்பூர், மலேசியா.

Koviloor Digital Library



தவத்திரு மறைஞானசம்பந்தர்

Koviloor Digital Library

பொருளடக்கம்

1. பதிப்புரை................. 5

2. மறைஞான சம்பந்தர் (வரலாறு)...................7

3. பண்டிதர் மு. கந்தையா (வரலாறு)............. 23

4. பரம தருமாதி இயல்.................................. 33

5. சிவஞான தான இயல்................................ 78

6. ஐவகை யாக இயல்................................. 148

7. விசிட்ட காரண இயல்............................. 186

8. சிவ தரும இயல்.......................................241

9. பாவ இயல்.. 275

10. சுவர்க்க நரக இயல்................................ 356

11. சனன மரண இயல்.................................. 504

12. சுவர்க்க நரக சேட இயல்........................ 582

13. சிவஞான யோக இயல்.............................. 620

14. பரிகார இயல்... 730

15. கோபுர இயல்.. 827

16. பாடல்முதற்குறிப்பு அகராதி.......................973

17. பொருள் அட்டவணை...............................987

Koviloor Digital Library

உ

சிவமயம்

சிவதருமோத்தர உரை

சிறப்புப் பாயிரம்

கடவுள் வாழ்த்து

கணபதி வணக்கம்

மலைக்குமகள் பெற்றமக னைக்கய
முகத்தனை மனத் தெழுதியா
னலற்பிணி பிறப்பற வணுக்களை
யகத்திய முனிக் கருளினா
னுலப்பில்கரு ணைக்கட லுருத்திர
னுருத்தனி லுதித்த குமர
னிலக்குமிய லைக்கலி யிளைக்கவு
முரைப்பலுல கிட்ட முறவே.

மலைக்கு மகள் பெற்ற மகனைக்
கயமுகத்தனை மனத்து எழுதியான்
அ(ல்)லற் பிணி பிறப்புஅற அணுக்களை
அகத்திய முனிக்கு அருளினான்
உலப்பு இல் கருணைக் கடல் உருத்திரன்
உருத்தனில் உதித்த குமரன்
இலக்கும் இயலைக் கலிஇளைக்கவும் உரைப்பல்
உலகில் இட்டம் உறவே.

உரை:

யான் இமயமலை அரசன் மகள் பெற்ற மைந்தனாகிய யானை முகத்தையுடைய விநாயகனை மனத்திலே எண்ணி, வற்றாத அருட் கடலாகிய உருத்திரனுடைய திருமேனியில் தோன்றிய குமரக் கடவுளின் அருளினால், ஆன்மாக்களுக்கு ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மலங்களால் உண்டான பிறவி

Koviloor Digital Library

நோயை அகற்றும் பொருட்டு, அகத்திய முனிவருக்கு உரைத்த சிவதருமோத்தரத்தைக் கலி வலி கெடவும், உலகினர் நலம் பெறவும் உரைக்கின்றேன்.

விளக்கம்:

ஒரு நூலுக்கு அதன் ஆசிரியரால் எழுதப்படும் முகவுரை அல்லது முன்னுரையைப் பாயிரம் என்பர்.

ஒரு நூலின் பெயர், அப்பெயருக்கு உரிய காரணம், நூலின் உட்பிரிவுகள் ஆகிய அளவு, நூற்பயன் ஆகியவற்றை விளக்குவது சிறப்புப் பாயிரம் ஆகும்.

சிவதருமோத்தரம் - சிவதரும + உத்தரம்

சிவதருமம் - சிவபுண்ணியம்

உத்தரம் - மறுமொழி

சிவதருமம் பற்றிய அகத்தியரின் கேள்விகளுக்குக் குமரக் கடவுள் உரைத்தருளிய பதில்.

மலைக்கு மகள் - பார்வதி

உலப்பு இல - அழிவு இல்லாத

கலி - இன்றைய உலகியல் துன்பங்கள்

இலக்கும் - விளக்கும்

உருத்திரன் - சிவனிலிருந்து படிமுறையாக அயன் ஈறாக வரும் நவந்தரு பேதங்களில் ஏழாவது இறப்பு இல்லாத பரம்பொருள். 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்பது இளங்கோவடிகளின் வாக்கு. வேதத்திலும் உண்டு. சிவாகமத்திலும் உருத்திரன் உண்டு. இரண்டுங் கூறுவது ஒரே உருத்திரனையே. அவர் சிருட்டியின்போது சிவனால் தோற்றப்படுவதும் சங்காரத்தின் போது சிவனால் ஒடுக்கப்படுவதும் உண்டு.

முருகப் பெருமானும் பிறப்பு இறப்பு அற்ற பரம்பொருள் ஆவர். 'பெம்மான் முருகன் பிறவான் இறவான்' என்கிறார் அருணகிரிநாதர். *(கந்தர் அனுபூதி)*

குமரனை உருத்திரன் மகன் என்பது, சதாசிவ மூர்த்தியின் மகன் என்பதால்; சதாசிவ மூர்த்திக்கும் மஹாருத்திரன் எனும் பெயருண்மையால்.

படைக்கப்பட்டவர்கள்

ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்திராஸ் ஸம்ப்ரசூயந்தே நகாரணம்;
காரணந்து சர்வைச்வர்யஸ் சம்பந்த
ஸர்வேஸ்வரஃ சம்பு ராகா சம்த்யே த்யேயஃ

(அதர்வ சிகை உபநிடதம்)

Koviloor Digital Library

பொருள்:

பிரம்மா, விஷ்ணு, ருத்திரேந்திரர்கள் படைக்கப்பட்டவர்கள் எனவும், ஆதலின் பரம காரணர்கள் ஆகமாட்டார்கள் எனவும், பரம காரணர் ஆவார் சர்வ ஐஸ்வரிய சம்பந்தரும் சர்வேசுவரரும், சம்புவாயும் உள்ளார் எனவும், அவரே தகாராகாச மத்தியில் தியானிக்கத் தக்கவர்.

(திருமுருக கிருபானந்த வாரியார், *திருப்புகழ் விரிவுரை*, ஒன்பதாம் தொகுதி - பக்கம் - 193)

சிவபெருமான் வணக்கம்

1. திருமாலும் போதினனுந் தேவருமா
முனிவருமே செறிந்து போற்ற
மருவாரும் பொழினிலவுந் தில்லைமணி
மன்றாடன் மகிழ்வான்றன்னை
யுருவாகித் தானுயிர்கட் குருவாக்கி
யளித்தடக்கி யுய்யச் செய்யும்
பெருமானை நிருமலனைச் சிவனையடி
பணிந்துளத்திற் பேணுவாமே.

திருமாலும் போதினனும் தேவரும்
மாமுனிவருமே செறிந்து போற்ற
மருஆரும் பொழில் நிலவும் தில்லைமணி
மன்று ஆடல் மகிழ்வான்தன்னை
உரு ஆகித்தான் உயிர்கட்கு உரு ஆக்கி
அளித்து அடக்கி உய்யச் செய்யும்
பெருமானை நிருமலனைச் சிவனை
அடிபணிந்து உளத்தில் பேணுவாமே.

உரை:

நாராயணனும், பிரமனும், தேவரும், முனிவரும் நெருங்கி நின்று தோத்திரம் செய்ய, மணம் நிரம்பிய சோலைகள் சூழ்ந்து உள்ள தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் நின்று நடனம் ஆடுவதில் மகிழ்பவனாய், தானே தனக்கு ஒரு திருமேனியைத் தரித்து, உயிர்களைப் படைத்து, காத்து, மறைத்து அருள் செய்பவனாய், இயல்பாகவே மலங்களில் இருந்து நீங்கியவனாய் உள்ள சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, அத்திருவடிகளை உள்ளத்தில் வைத்துத் தியானிப்போம்.

Koviloor Digital Library

விளக்கம்:

போது என்பது இங்குத் தாமரைப் பூவைக் குறிக்கும். நாராயணனின் கொப்பூழிலிருந்து தோன்றிய தாமரை மலரில் பிரமன் தோன்றினான் என்பது கொள்கை. ஆகவே, பிரமனுக்கு நாராயணன் தந்தை என்க.

நாராயணன் - நாரம் என்பது நீர். நீரில் பாம்புப் படுக்கையில் யோக நித்திரை செய்பவன் நாராயணன் என்பர்.

பேணுவாம் - போற்றுவோம்.

தேவர் - ஒளி உடம்பு உடையவர். (1)

2. சின்மயனைச் சிவனைமல வலிதொலைய
விஞ்ஞான கலர்க்குஞ் செப்புஞ்
சொன்மயனைத் துகளிலியைத் துலையிலியைப்
புலிஅரவுஞ் சுரர்க் கொப்பாரும்
பொன்மயனும் புகழவருள் புரிவானை
யனைத்துயிரும் பொருந்திப் பேத
மின்மயனைப் பதம்பணிவா ரெணியவர
மெணியபடி யெய்துவாரே.

சின்மயனைச் சிவனை மலம்வலி
தொலைய விஞ்ஞானகலர்க்கும் செப்பும்
சொல்மயனைத் துகள் இலியைத் துலைஇலியைப்
புலி அரவும் சுரர்க்கு ஒப்பாரும்
பொன்மயனும் புகழ அருள் புரிவானை
அனைத்து உயிரும் பொருந்திப் பேதம்
இல்மயனைப் பதம்பணிவார் எ(ண்)ணியவரம்
எ(ண்)ணியபடி எய்துவாரே.

உரை:

அறிவு வடிவானவனும், மாயை கன்ம மலங்களின் ஆற்றல் கெட, விஞ்ஞான கலருக்கும் அருளிச் செய்யப்பட்ட ஆகம வடிவாக விளங்குபவனும், குற்றம் இல்லாதவனும், தனக்கு யாரும் ஒப்பு இல்லாதவனும், புலிக்கால் முனிவர், பதஞ்சலி முனிவர், தேவர்களை ஒத்த தில்லை அந்தணர்கள், தங்க நிறம் உள்ள இரணிய வருமர் என்ற சிவனடியார் ஆகிய எல்லாரும் போற்றித் துதி செய்ய அருள் செய்பவனும், எல்லா உயிர்களிலும் வேற்றுமை இல்லாமல் உயிருக்கு உயிராகக் கலந்திருப்பவனும் ஆகிய பெருமானுடைய திருவடிகளை வணங்குகின்ற அடியவர்கள், தாங்கள் விரும்பிய அனைத்தையும் விரும்பியபடியே பெறுவார்கள்.

Koviloor Digital Library

விளக்கம்:

விஞ்ஞானகலர் - ஆணவமலம் மட்டும் உள்ள உயிர்வர்க்கத்தார். **சொல் மயன்** - இங்கு ஆகமவடிவாக விளங்கும் இறைவனைக் குறிக்கும். **பொன்மயன்** - தங்க நிற மேனியுடைய இரணிய வர்மர் என்ற அரசர். **பேதம் இல்மயன்** - வேற்றுமை யில்லாமல் வியாபித்துள்ள இறைவன். **புலி** - புலிக் கால்களையுடைமையால் வியாக்கிரபாதர் என்கிற முனிவர். **அரவு** - ஆதிசேடன் என்ற பாம்பின் மறுவடிவான பதஞ்சலி முனிவர். (2)

சத்தி வணக்கம்

3. அப்பாலைக் கப்பாலைக் கப்பாலா
யறிவரிய வமலை தன்னை
யெப்பாலுந் தானாகித் தொழிலைந்து
மியற்றாதே யியற்றுவாளை
முப்போது மலர் தூவி முடிசாய்த்து
மனத்தகத்து முன்னுவாரைத்
தப்பாதே பிறப்பறுக்குஞ் சிவகாம
சவுந்தரியைப் பணிவாந்தாண்முன்.

அப்பாலைக்கு அப்பாலைக்கு அப்பால் ஆய்
அறிவு அரிய அமலை தன்னை
எப்பாலும் தான் ஆகித் தொழில்
ஐந்தும் இயற்றாதே இயற்றுவாளை
முப்போதும் மலர் தூவி முடிசாய்த்து
மனத்து அகத்து முன்னுவாரைத்
தப்பாதே பிறப்பு அறுக்கும் சிவகாம
சவுந்தரியைப் பணிவாம் தாள் முன்.

உரை:

இவ்வுலகிற்கு அப்பாற்பட்ட பொருளுக்கும் அப்பாற்பட்ட பொருளாக இருப்பவளும், அறிவதற்கு அரியவளும், மலம் இல்லாத சிவசத்தியும், எங்கும் பரவியிருப்பவளும், ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து செயல்களையும் இயற்றாது இயற்றுகின்றவளும், தனது திருவடிகளில் காலை, நண்பகல், அந்தி என்ற மூன்று வேளைகளிலும் பூக்களைச் சொரிந்து, தலையால் வணங்கி, உள்ளத்திலே தன்னைக் கருதுபவராய் உள்ள அடியவர்களின் பிறவியைத் தவறாமல் அடியோடு ஒழிப்பவளுமான சிவகாம சவுந்தரியின் திருவடிகளின் முன் நாம் தாழ்ந்து வணங்குவோம்.

Koviloor Digital Library

விளக்கம்:

'அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதுங்காண்' என்பது *திருவாசகம்*. **அப்பாலைக்கு அப்பாலைக்கு** - அப்பால் உலகாய்த் தோன்றும் அசுத்த மாயா பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்ட சுத்தமாயா பிரபஞ்சத்துக்கும் அப்பால். **சிவகாம சவுந்தரி** - தில்லைக் கூத்தப் பெருமானின் தேவி. சுந்தரி என்பது சவுந்தரி என வந்தது. சிவகாம சுந்தரியைச் சிவகாமவல்லி என அழைப்பது சைவ மரபு. **அகத்து** - நெஞ்சின் உள்ளே. **இயற்றாதியற்றல்** - கருவிகரணங்களாற் செய்வதின்றித் தான் முன்னிலையாயிருக்குமளவானே இயற்றுதல். இதனைச் சந்நிதி மாத்திரையாற் செய்தல் என்பர். (3)

சிவநெறி முதல்வர்களுக்கு வணக்கம்

4. ஆலவனத் தமலனடங் கண்டுவந்த
காரைக்கா லம்மைதன்னைப்
பாலருந்தி யுமைமுலையிற் பதிகவிதம்
பலபகர்ந்த பாலன்றன்னைச்
சூலையினைச் சிவனருளாற் றுடைத்தானைத்
தடுத்தாண்டான் றோழன் தன்னை
மாலைமணி வாசகனை மற்றையடி
யரையுமடி வணங்குவோமே.

ஆலவனத்து அமலன் நடம்கண்டு உவந்த
காரைக்கால் அம்மை தன்னைப்
பால் அருந்தி உமை முலையில் பதிகவிதம்
பல பகர்ந்த பாலன் தன்னை
சூலையினைச் சிவன்அருளால் துடைத்தானைத் தடுத்து
ஆண்டான் தோழன் தன்னை
மாலைமணிவாசகனை மற்றை அடியரையும்
அடி வணங்குவாமே.

உரை:

திரு ஆலங்காடு என்னும் பதியில் சிவபிரான் ஆடிய திருத்தாண்டவத்தைக் கண்டு மகிழ்ந்த காரைக்காலம்மையார்; சீகாழியில் பெரிய நாயகி அம்மை அருளிய திருமுலைப் பாலைப் பருகி, திருஞானசம்பந்தராகிப் பலவகைத் திருநெறித் தமிழை அருளிய பால் அறா வாயர்; தமக்கு இருந்த கொடிய சூலை நோயைத் திருவீரட் டானத்து இறைவர் அருளால் போக்கிக் கொண்ட திருநாவுக்கரசர்; திருநாவலூரில் திருமணவேளையில் திருமணத்தைத் தடுத்துத் தம் தொண்டராகச் சிவபிரானால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தம்பிரான் தோழரான சுந்தரர்; மாணிக்கமணி போன்ற

Koviloor Digital Library

உயர்ந்த திருவாசகப் பாமாலைகளை அருளிய திருவாதவூரர்.

இன்னும் திருமூலர் போன்ற ஏனைய சைவ நாயன்மார் ஆகிய அனைவருடைய திருவடிகளையும் பணிந்து வணங்குவோம்.

விளக்கம்:

காரைக்கால் அம்மையார் - காரைக்கால் என்ற பட்டினத்தில் வாழ்ந்த புனிதவதியார். ஆலவனம் - ஆலமரங்கள் அடர்ந்த தோப்பு; திருவாலங்காடு. (4)

வாழ்த்துரை

5. வானவரும் பூசுரருமாதவருங் கோதனமு
மன்னி வாழ்க!
கானமதினடமாடி யடியார்க்கும்
பதமருத்துங் கருணையாரு
மூனமற வோங்கிடுக வுலகிதனை
மனுமுறையா லோம்பு மன்னர்
தானவினையொடு தழைக திங்கடொறு
மும்மாரி பொழிக தானே.

வானவரும் பூசுரரும் மாதவரும்
கோதனமும் மன்னி வாழ்க!
கானம் அதில் நடம் ஆடி அடியார்க்கும்
பதம் அருத்தும் கருணை ஆரும்
ஊனம் அற ஓங்கிடுக உலகு
இதனை மனுமுறையால் ஒம்பும் மன்னர்
தானம் வினையொடு தழைக திங்கள்
தொறும் மும்மாரி பொழிக தானே.

உரை:

விண்ணவர்கள், வேதியர்கள், பெரிய தவத்தினர் ஆகியோர் வாழ்க. பசுக்கள் பெருகுக. சுடலையில் திருக்கூத்து ஆடியின் அடியவர்க்கு உணவு தந்து புரக்கும் அருளாளர் தீங்கு இல்லாமல் வளர்க. இந்த உலகை நீதி தவறாமல் ஆளுகின்ற மன்னர்கள் (வாழ்க). அம்மன்னர்களின் கொடை முதலியன செழித்திடுக. மாதந்தோறும் மூன்று முறை மழை பொழிக.

விளக்கம்:

கோதனம் - பசுமந்தை. கானம் - காடு. இது இங்கு மயானத்தைக் குறிக்கும்.

Koviloor Digital Library

சிவனுக்கு உரிய பெயர்களுள் சுடலையாடி என்பதும் ஒன்று. **மும்மாரி** - மூன்று முறை பெய்யும் மழை. **மனு முறை** - நீதிநெறி என்பது பரந்த நோக்கில் இதன் விளக்கம் ஆரிய மொழியில் எழுதப்பட்டுள்ள மநுமிருதி. இந்தியாவில் நடை முறையில் உள்ள *'இந்து லோ'* என்ற சட்டத்திற்கு இந்த நூல்தான் அடிப்படை என்பது பிராந்திய விளக்கம். (5)

அவை அடக்கம்

6. சீரியருஞ் சீரியரையல்லாரைத் தனச்
சிறுமை செப்புவாரே
யாரியரு மாரியரை யல்லாரைக்
குலப்பழுது மறைவரேயோ
வீரியரும் வீரியரை யல்லாரை
வலியின்மை விளம்புவாரே
கூரியருங் கூரியரை யல்லாரைச்
சொற்றவறுங் கூறுவாரே.

சீரியரும் சீரியரை அல்லாரைத்
தனச் சிறுமை செப்புவாரே?
ஆரியரும் ஆரியரை அல்லாரைக்
குலம் பழுதும் அறைவரேயோ?
வீரியரும் வீரியரை அல்லாரை
வலி இன்மை விளம்புவாரே?
கூரியரும் கூரியரை அல்லாரைச்
சொல் தவறும் கூறுவாரே?

உரை:

செல்வ வளம் உடையவர்கள் அஃது இல்லாத ஏழையரின் வறிய நிலையைக் குறித்துக் குறை பேசுவார்களோ? மதிக்கப்படுந் தன்மையுள்ளவர் என்ற இலக்கணமுள்ளவர்களான ஆரியர் குல வேற்றுமை கருதி அஃதில்லாதாரைத் தாழ்த்திப் பேசுவார்களோ? ஆண்மையாளர்கள் அஃது இல்லாதவர்களின் பலவீனத்தைக் குறை சொல்வார்களோ? நுண்ணறிவுடைய அறிவாளிகள் அஃது இல்லாத சாதாரண மக்களின் சொல்பிழையைப் பெரிதாக எண்ணிக் குற்றம் சொல்லுவார்களோ? (சொல்ல மாட்டார்கள். இவ்வாறே அறிஞர்கள் அடியேனுடைய 'சிவதருமோத்தரம்' என்னும் நூலிற் காணப்படும் பிழையினைப் பொருட்படுத்த மாட்டார்கள் என்பது குறிப்பு.)

Koviloor Digital Library

விளக்கம்:

ஆரியர் - ஆரியர் என்ற தனி இனத்தினர் இன்றைய இந்தியாவில் யாரும் இலர். அன்றும் உண்மையில் இருந்ததில்லை. ஆனால், ஆரியக் கலப்பு இனத்தவரான சங்கர மத வைதிகப் பிராமணர்; இராமாநுச மத வடகலை வைணவப் பிராமணர்; மாத்துவ மதக் கன்னடப் பிராமணர் என மூன்று வகைப் பிராமணர்கள் என்று சொல்வதுண்டு. அது சரித்திரப் புரளியென்பர். ஆரியர் என்றது ஒரு இனத்தின் பெயரல்ல. உயர்ந்தவர், நல்லவர் என்ற பொருளில் உள்ள ஒரு பெயர் என்பது இன்றைக்கும் உண்மையாய்வியலாளர் கருத்து. சென்னைப் பல்கலைக் கழக மெய்யியல் துறைத் தலைவர் மகாதேவனின் அபிப்பிராயம் இதுவே. (6)

நூலின் வரலாறு

7. ஆதிநடு வந்தமிலா னமலனுயிர்க்
கழுக்கறுக்க வறைந்தவாய்மை
வேதமுத லுணர்ந்த குகன் விரை மலர்த்தா
ளகத்தியன்றான் வியந்து போற்றிப்
போதகனே வனைத்துயிர்க்கும் புலமாக்கும்
நெறிபுகலா யென்னக்கந்த
னோதியருள் சிவதருமோத் தரநூலைத் தொகை
செய்து முரைப்பா மோர்ந்தே.

ஆதிநடு அந்தம் இலான் அமலன் உயிர்க்கு
அழுக்கு அறுக்க அறைந்த வாய்மை
வேதம் முதல் உணர்ந்த குகன் விரைமலர்த்தாள்
அகத்தியன் தான் வியந்து போற்றிப்
போதகனே அனைத்து உயிர்க்கும் புலமாக்கும்
நெறிபுகலாய் என்ன கந்தன்
ஓதி அருள் சிவதருமோத்தரம் நூலைத்
தொகை செய்தும் உரைப்பாம் ஓர்ந்தே.

உரை:

முதல் நடு ஈறு அற்ற மலம் இல்லாத சிவபிரான், உயிர்களைச் சார்ந்து இருக்கும் ஆணவ முதலான பாசங்களை நீக்கும் பொருட்டு அருளிச் செய்த உபநிடதம், ஆகமம் முதலிய உண்மை ஞானத்தை உணர்ந்த, மக்களின் உள்ளம் என்னும் குகையில் வாழும் குகப்பெருமானுடைய மணம் நிரம்பிய தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்கி, சற்குருவே! மக்கள் அனைவரும் அறிவதற்கு உரிய கொள்கையை உரைத்து அருள்க என்று அகத்தியன் வேண்ட, அவன் வேண்டியபடியே குமரப் பெருமான் திருவாய் மலர்ந்து அருளிய சிவதருமோத்தரம்

Koviloor Digital Library

என்னும் துணை ஆகமத்தை, உற்று நோக்கித் தொகுத்துத் தமிழில் சொன்னோம்.

விளக்கம்:

குகன் - இது ஒரு காரணப் பெயர். மக்களின் நெஞ்சமாகிய குகையில் வாழ்பவன் என்பது கருத்து. (7)

அகத்தியன் ஆறுமுகனை வினவுதல்

8. மாதவ னகத்தியன் மலைக்கு மகள் பெற்ற
போதகனை வெள்ள மயமாகிய பொருப்பின்
வேதமுணர் சண்முகனை வித்தகனை யுற்றே
பாதமலர் முன்றுதி விதத்தொடு பணிந்தே.

மாதவன் அகத்தியன் மலைக்கு மகள் பெற்ற
போதகனை வெள்ளி மயம் ஆகிய பொருப்பின்
வேதம் உணர்சண்முகனை வித்தகனை உற்றே
பாதம் மலர் முன்துதி விதத்தொடு பணிந்தே.

உரை:

பெரிய தவத்தினையுடைய அகத்தியர் வெள்ளிமயமான திருக்கயிலை மலைக்குச் சென்று, பார்வதி தேவி ஈன்ற உபதேச குருவாயிருக்கும் மறையினை அறிந்த ஆறுமுகப் பெருமானாகிய ஞானமூர்த்தியை அணுகிப் பலவகையாகப் போற்றி வணங்கினார்.

விளக்கம்:

வேதம் - ரிக், யஜுர், சாம, அதர்வண வேதம். வெள்ளி மயமாகிய பொருப்பு - பனிமலையாகிய இமயம். (8)

9. நின்னதடி கண்டிடினு நீசர்வினை நீங்கிப்
பொன்னுலக மெய்தியத னன்பொருள் புணர்ந்தே
யின்னிசை யிருக்கு மொழி யந்தணர்க ளென்னப்
பின்னணைவ ரென்னறைவன் மற்றையவர் பேறே.

நின்னது அடி கண்டிடினும் நீசர் வினை நீங்கிப்
பொன் உலகம் எய்தி அதன் நன் பொருள் புணர்ந்தே
இன்னிசை இருக்கு மொழி அந்தணர்கள் என்னப்
பின் அணைவர் என் அறைவன் மற்றை அவர் பேறே.

Koviloor Digital Library

உரை:

தாழ்ந்த சாதியில் பிறந்த இழிந்தவர் ஆயினும் தேவரீருடைய திருவடிகளைக் காண்பாரானால், தீவினை அகன்று சுவர்க்க உலக இன்பங்களைப் பெறுவர். பின்னர், இனிய இசையுடன் இருக்கு வேத மந்திர மொழிகளை ஓதும் பிராமணராகப் பிறப்பர். அவ்வாறாக, நல்ல குலத்தில் பிறந்து உனது திருவடிகளை வணங்குகிறவர்கள் பெறும் பயனை இன்னதென்று நான் சொல்லுமாறென்?

விளக்கம்:

அந்தணர் - அந்தண்மை; சிறந்த தண்ணளி உடையோர் எனவும், அந்ததை அணவுவோர் - ஞானத்தின் முடிவை நெருங்கி நிற்போர் எனவும் பொருள்படும். (9)

10. என்றினிய வாய்மைக ளியம்பி யிறை கூற
வன்றுமை தனக்ககில நீதியு மறிந்தா
யின்றுயிர் தனக்குறுதி நீயரு ளெனக்கே
ஒன்றியரு ணின்றமையி னுன்னொ டுரவோனே.

என்று இனிய வாய்மைகள் இயம்பி இறை கூற
அன்று உமை தனக்கு அகில நீதியும் அறிந்தாய்
இன்று உயிர் தனக்கு உறுதி நீ அருள் எனக்கே
ஒன்றி அருள் நின்றமையின் உன்னொடு உரவோனே.

உரை:

வலிமை வாய்ந்தவரே! முன்பு பார்வதிக்குப் பரமசிவன் மேலான ஆகமங்களை உரைத்தபோது அவை அனைத்தையும் கேட்டு அறிந்தீர். அதன்மூலம் தேவரீர் சிவபெருமானுடைய அருள் பொருந்தி விளங்குவதால், இப்பொழுது உயிர்களுக்கு நலம் தரும் அந்நூலை எனக்கு உரைத்து அருள் செய்வீராக. (10)

11. என்று முனி சண்முகனை யேசறவு பேசி
நின்றுபினு மாதரவு நீட நிறை கூட
வன்று வினவுந்திற மனைத்தையு மதித்தே
யின்றறைவல் பாசவிரு ளீடற விளைத்தே.

என்று முனி சண்முகனை ஏசறவு பேசி
நின்றுபி(ன்)னும் ஆதரவு நீட நிறைகூட
அன்று வினவும் திறம் அனைத்தையும் மதித்தே
இன்று அறைவல் பாச இருள் ஈடுஅற இளைத்தே.

Koviloor Digital Library

உரை:

அகத்திய முனிவர் இவ்வாறு எண்ணிக் கந்தப் பெருமானைத் தன் வசமிழந்து நின்று துதித்து, பின் ஆதரவு பெருகுதலினாலே சிரத்தை மிகுந்து அறிவுநிலை பெற்று, வணக்கத்துடன் அன்று வினவிய எல்லாவற்றையும் ஆராய்ந்து உயிர்களின் ஆணவம் முதலான அறியாமை இருள் மெலிந்து கெடும்படி இப்பொழுது சொல்லா நின்றேன்.

விளக்கம்:

ஏசறவு - தன்வசமிழந்த நிலை. பின் நிறை கூட என்றதனால் முன் நிறை தளர்ந்தமையை - அதாவது தன்வசமிழந்தமையைக் குறித்ததே 'ஏசறவு' என்றாகும். *திருவாசகத்தில்* 'திருவேசறவு' இப்பொருளிலேயே வருதல் காண்க. **அறைவல்** - சொல்வேன். **நிறை** - சிரத்தை. (11)

12. **உத்தம சுரர்க்கதிப வூன வினை யோட்டும்**
வித்தக விசாக மயில்வாகன விண் மேவும்
புத்தியொடு முத்திதரு போதக புலாலுண்
சத்திதர யான்வினவல் கேட்டு விடை சாற்றாய்.

உத்தம சுரர்க்கு அதிப ஊனம் வினை ஓட்டும்
வித்தக விசாக மயில் வாகன விண் மேவும்
புத்தியொடு முத்தி தரும் போதக புலால் உண்
சத்திதர யான் வினவல் கேட்டு விடை சாற்றாய்.

உரை:

உயர்ந்தவனே! விண்ணவர் தலைவனே! தீய வினைகளை அகற்றுகிற மேலான அறிஞனே! விசாக நாளிற் பிறந்த கந்தப்பெருமானே! மயிலை ஊர்தியாக உடையவனே! சுவர்க்கத்தை அடையும் அறிவோடு பேரின்பத்தையும் அளிக்கும் ஞான குருவே! பகைவரின் தசையை ஊடுருவி அதன் சுவை அறியும் வேற்படையை உடையவனே! யான் வினவுவதைக் கேட்டு மறுமொழி உரைப்பாயாக.

விளக்கம்:

இப்பாடல் கந்தன் புகழ்மாலையாக உள்ளது. (12)

13. **தக்கசிவ தன்ம நெறி தன்னு ளரிதாய**
மிக்க சிவ தன்ம நெறியாது விபரீத
முக்குணர் வுதித்திட வுரைக்கு முரை யாதோ?
நக்கனடி யர்ச்சனையும் யாதிவை நவிற்றாய்.

Koviloor Digital Library

தக்கசிவ தன்மநெறி தன்னுள் அரிது ஆய
மிக்கசிவ தன்மநெறி யாது விபரீத
முக்கு உணர்வு உதித்திட உரைக்கும் உரையாதோ?
நக்கன் அடி அர்ச்சனையும் யாது இவை நவிற்றாய்.

உரை:

தகுதியுள்ள சிவபுண்ணியங்களுள் சிறந்த சிவதருமத்தின் முறைமை எப்படிப்பட்டது? சந்தேகம், ஒன்றை இன்னொன்றாக எண்ணுதல் போன்ற குறைகள் இல்லாமல் உண்மை உணர்வு உண்டாகும்படி செய்யும் உரை எது? சிவபிரான் திருவடிகளில் மலர்தூவி வணங்கும் பூசனை எத்தகையது? இவற்றைத் தெளிவாக உரைப்பாயாக.

விளக்கம்:

தன்மம் - தருமம்; விபரீதம் - மாறுபாடு; நக்கன் - சிவன்; அர்ச்சனை - மலர் வழிபாடு. (13)

14. நாடரிய ஞானதர தானமு நவிற்றாய்
பீடுபெறு பேதமு மெனக்கு முறைபேசா
யீடுபெற வீயுமுறை யீபவ ரிரப்பார்
கூடுபயனாதிய வனைத்து முறை கூறாய்.

நாடு அரிய ஞானதர தானமும் நவிற்றாய்
பீடு பெறு பேதமும் எனக்கு முறை பேசாய்
ஈடு பெற ஈயும் முறை ஈபவர் இரப்பார்
கூடுபயன் ஆதிய அனைத்தும் முறை கூறாய்.

உரை:

ஆராய்ந்து உணருவதற்கு அருமையான சிறந்த சிவ ஞானத்தைத் தக்கவர்க்கு உணர்த்தும் முறைமையையும், பெருமையுடைய ஞான தானம் செய்வதற்கு உரிய வெவ்வேறு வகையான விதிகளையும், பெருமை அடையத் தக்கவர்க்கு ஒன்றை அளித்தல். அளிக்கும் முறை; அளிப்பவர் பெறும்பயன்; பெறுபவர் அடையும் பயன் ஆகிய எல்லாவற்றையும் பற்றி எனக்கு விளக்குவாயாக.

விளக்கம்:

ஞானதரம் - விசேட ஞானம். தீவிரதரம் என்றாற்போல. ஞான தர தானம் - விசேட ஞான தானம் என்றாகி சிவஞான தானத்தைக் குறித்தது. விசேட ஞானம் சிவஞானமே ஆதல் வெளிப்படை. கூடு - பெறுகிற; பயன் - பலன்; கூறாய் - கூறுவாயாக; பீடு - பெருமை; ஈடுபெறவீதல் - ஈயவேண்டும் முறைக்கு இசைவாக ஈதல். (14)

Koviloor Digital Library

வேறு

15. என்றுமுனி வினவுதலு மிரக்க மெய்தி
யெழிலுடைய குமரன்றா னிணையி லீசன்
றுன்றுகழ லடி நினைந்து துயக்க நீங்கச்
சொல்லுவங் கேண்முனிவரனே துகளிலீச
னன்றருள் செய் சிவதருமோத் தரமெனூலி னறமதனை
யறிந்துசில ரதனை யாக்கிச்
சென்றணையச் சிவபுரியைத் தெருண்டு தம்மைச்
சிவனடியைச் சிலரடைய மலமுந் தேய்த்தே.

என்றுமுனி வினவுதலும் இரக்கம் எய்தி
எழில் உடைய குமரன்தான் இணைஇல் ஈசன்
துன்று கழல் அடிநினைந்து துயக்கம் நீங்கச்
சொல்லுவம் கேள் முனிவரனே துகள் இல் ஈசன்
அன்று அருள்செய் சிவதருமோத்தரம் எ(ன்)னும் நூலின்
அறம் அதனை அறிந்து சிலர் அதனை ஆக்கிச்
சென்று அணையச் சிவபுரியைத் தெருண்டு தம்மைச்
சிவன் அடியைச் சிலர் அடைய மலமும் தேய்த்தே.

உரை:

அகத்தியர் இவ்வாறு வினவிய அளவில், அழகிய குமரப் பெருமான் மனம் இரங்கி, ஒப்பு இல்லாத சிவனது வீரக்கழல் அணிந்த திருவடிகளை எண்ணி, முனிவனே, பக்குவான்மாக்களிற் சில சிவதருமங்களை அறிந்து அநுட்டிப்பதன் மூலம் சிவலோகத்தை அடையச் செய்யும் பொருட்டாகவும் அதிபக்குவமுற்ற ஆன்மாக்கள் சிவஞானம் பெறுதல் மூலம் ஆணவம் முதலிய மலக் குற்றங்களைப் போக்கிச் சிவனை அறிந்து சிவன் திருவடிகளை அடையச்செய்யும் பொருட்டாகவும் சிவதருமோத்தர ஆகமத்தைச் சொல்லுவம் கேள். (என்று கூறியருளினார்) (15)

Koviloor Digital Library

சிவ தருமோத்தரத்தின் முதலாம் இயல்

பரம தருமாதியியல் (பரம தரும ஆதி இயல்)

பரம தரும ஆதி இயல் என்றால் மேலான அறமாகிய சிரத்தை முதலியவற்றைக் கூறும் பகுதி என்பது பொருள். சிரத்தை என்பது அன்பு செயற்பாட்டின்கண் அமையும் உயர்தர ஈடுபாட்டுப் பண்பு. பக்தியும் அதிற்பரிமளிக்கும்.

16. ஆதரவே பரமான வறமதாகு மாதிநடு
வந்த மிவற் றனைத்து மாகு
மாதரவற் றவரீகை யறமேயாகா
தாதலினா லாதரவே மூலமாகு
மாதரவே பிரகிருதி யான்மாவீச னெனும்
பொருளு மறிவிக்கு மமலன்றாளு
மாதரவே யடைவிக்கு மாதலாலே
யனைத்தினுக்கு மாதரவே மூலமாமே.

ஆதரவே பரமான அறமது ஆகும் ஆதி நடுவு அந்தம்
இவற்று அனைத்தும் ஆகும்
ஆதரவு அற்றவர் ஈகை அறமே ஆகாது
ஆதலினால் ஆதரவே மூலமாகும்
ஆதரவே பிரகிருதி ஆன்மா ஈசன் எ(ன்)னும்
பொருளும் அறிவிக்கும் அமலன் தாளும்
ஆதரவே அடைவிக்கும் ஆதலாலே அனைத்தினுக்கும்
ஆதரவே மூலம் ஆமே.

உரை:

சிரத்தையே மேன்மையான கடமை ஆகும். அன்பே ஒரு செயலுக்குத் தொடக்கம், நடு, முடிவு இவை அனைத்தும் ஆகும். அன்பு இல்லாதவர் வழங்கும் கொடை பயனற்றது. ஆதலால், எல்லாவற்றிற்கும் அன்பே அடிப்படை ஆகும். அன்பே இயற்கை, உயிர், இறைவன் என்பனவற்றின் இயல்புகளை உணர்த்தும். அன்பே இறைவன் திருவருள் கிடைக்கும்படி செய்யும். ஆகவே, அன்பு தான் எல்லாச் செயல்களுக்கும் மூல காரணமாக விளங்குகின்றது.

Koviloor Digital Library

விளக்கம்:

ஆதரவு - சிரத்தை, உதவி. அறம் - கடமை. பரமான - மேன்மையான. அமலன் - தூயவன், இறைவன். பிரகிருதி - இயற்கை. **ஆன்மா** - உயிர். **தாள்** - திருவடி. **மூலம்** - அடிப்படைக் காரணம்.

குறிப்பு:

ஆதரவு என்பதன் கருத்தைச் சரியாக உணர்த்த அன்பு மட்டும் போதாது. அதில் அன்பு அதற்கு அநுசரணையாயிருக்கும். 'அன்பாதரவாக' என்ற வழக்கும் உண்டு. அன்பை முன்னிட்ட ஆதரவு என்பது அதன் பொருள். (16)

17. மகவினையா லாகத்தின் வருத்தந் தன்னான்
மாநிதியான் மற்றுமுள பொருள்களாலுந்
தகைபெறுவா னவராலுங் காதலின்றேற்
சாதிக்கப் படுவதலத் தருமந் தானே
உவகையுற வாதரவாற் சிறிதேதேனு
முதவியிடு மறமதனாற் பெரிதுண்டாகு
மகநெகலு மாதரவே யரிய பேறென்
றறியாதா ரென்பெறுவ ரன்னோ வன்னோ!

மகவினையால் ஆகத்தின் வருத்தம் தன்னால்
மாநிதியால் மற்றும்உள பொருள்களாலும்
தகைபெறுவா னவராலும் காதல் இன்றேல்
சாதிக்கப் படுவதுஅலது அத் தருமம் தானே
உவகை உற ஆதரவால் சிறிது ஏதேனும்
உதவி இடும் அறம் அதனால் பெரிது உண்டாகும்
அகம் நெகலும் ஆதரவே அரிய பேறு என்று
அறியாதார் என் பெறுவர் அன்னோ! அன்னோ!

உரை:

யாகம் செய்வதாலோ, செய்த பாவத்திற்குக் கழுவாயாக (பிராயச்சித்தமாக) மேற்கொள்ளப்படும் விரதம் முதலியவற்றால் உடம்பை மெலியச் செய்வதாலோ, மிகுந்த செல்வம், அணிகலன்கள், வீடு, நிலம், வாகனம் போன்ற பிற வசதிகளாலோ, பெருமையுடைய விண்ணவராலும் சிரத்தை இல்லாமல் புண்ணியம் பெறுதல் இயலாது. மகிழ்ச்சியோடு சிரத்தையுடன் ஏதேனும் ஒன்றைச் சிறிய அளவிலாவது இல்லாதவருக்கு உதவுகிற ஈகையினால் பெரும் பயன் உண்டாகும். ஆதலால், உள்ளத்தை நெகிழச் செய்யும் சிரத்தையே பெருஞ் செல்வம் என்று அறிந்து கொள்ள முடியாதவர்கள் என்ன நன்மையை அடையப் போகிறார்கள்? ஐயோ! ஐயோ!!

Koviloor Digital Library

விளக்கம்:

மகம் - பிராமணர்கள் தீ வளர்த்துச் செய்கின்ற யாகம்; **காதல்** - அன்பு; **ஆகம்** - உடம்பு; **வருத்தம்** - மெலிவு; **உள** - உள்ள; **தகை** - பெருமை; **அலது** - இல்லாமல்; **உவகை** - மகிழ்ச்சி; **நெகல்** - நெகிழ்தல், குழைதல்; **பேறு** - செல்வம்; **அன்னோ** - ஐயோ என்ற இரக்கக் குறிப்பு. (17)

சிவ வாக்கியத்தின் சிறப்பு

18. **முனிவரனே! சிவதரும மூலஞ் சொன்னோ**
மொழிந்திடுவம் வாக்கியங் கேண் மோகம் போகப்
புனிதமுற மனமொருமைப் புந்திதானும்
பொய்யகல மெய்விரவப் பொள்ளலாக்கைத்
துனி தொலையத் தனையிணையில் சோதிபாதஞ்
சூடியிடச் சிரம்படர்ந்து தொடர்ந்து நின்ற
வினைவிளிய விழைவுறவே கேட்பார் தங்கள்
விளக்கென மெய்ப் பொருளையது விளக்கவுள்ளே.

முனிவரனே! சிவதரும மூலம் சொன்னோம்
மொழிந்திடுவம் வாக்கியம் கேள் மோகம் போகப்
புனிதம் உற மனம் ஒருமைப் புந்திதானும்
பொய் அகல மெய் விரவ பொள்ளல் ஆக்கைத்
துனிதொலையத் தனைஇணைஇல் சோதிபாதம்
சூடியிடச் சிரம்படர்ந்து தொடர்ந்து நின்ற
வினைவிளிய விழைவு உறவே கேட்பார்தங்கள்
விளக்கு என மெய்ப்பொருளை அது விளக்கஉள்ளே.

உரை:

முனிவர்களில் சிறந்தவனே! சிவபுண்ணியத்திற்குச் சிரத்தையே அன்பே அடிப்படை. சிவன் அருளிச் செய்த அருள் உரையைப் பிரியமுடன் கேட்பவருடைய அறியாமை அகலவும், மனம் ஒருமைப்பட்டுத் தூய்மை பெறவும், பொய்யரை விட்டு விலகவும், உண்மை பேசுவாரோடு பொருந்தவும், ஒன்பது துளைகளை உடைய உடலை எடுக்கின்ற பிறவித் துன்பம் ஒழியவும், தனக்கு ஒப்பு ஒருவர் இல்லாத சிவபிரானுடைய திருவடிகளைத் தலையில் தரிக்கவும், பிறவிகள் தோறும் தொடர்ந்து வருகின்ற பிறவிக்குக் காரணமான வினைகள் ஒழியவும், விளக்கு, தன்னைச் சூழவுள்ள பொருள்களைத் தெளிவாகக் காட்டுவது போல, உண்மைப் பொருளை உரைத்தோம்; உணர்வாயாக.

விளக்கம்:

மொழிந்திடுவம் - சொல்வோம்; **மோகம்** - அறியாமையாகிய மயக்கம்;

Koviloor Digital Library

புனிதம் - தூய்மை; துனி - துன்பம், அச்சம்; இணை - ஒப்பு; புந்தி - புத்தி; விளிய - ஒழிய; விழைவு - விருப்பம்; விரவ - பொருந்த. (18)

19. அமலவர னருளிய சொல் வாக்கியமே யதுதா
னருத்தத்தா லக்கரத்தா லதிக மற்பஞ்
சமலருரை யதுபோல விபரீதஞ் சிறிதுஞ்
சாற்றாதே யுள்ளபடி சாற்றுஞ் சாற்று
மமலனையு மணுக்களையு மண்ட பேத
மனைத்தினையு மறிவிக்கு மாதலாலே
பவமொருவு நெறிதன்னைப் பயக்கும் போகம்
பாலிக்கும் தானமுதற் பகர்தலாலே.

அமலன் அரன் அருளிய சொல்வாக்கியமே அதுதான்
அருத்தத்தால் அக்கரத்தால் அதிகம் அற்பம்
சமலர் உரை அதுபோல விபரீதம் சிறிதும்
சாற்றாதே உள்ளபடி சாற்றும் சாற்றும்
அமலனையும் அணுக்களையும் அண்ட பேதம்
அனைத்தினையும் அறிவிக்கும் ஆதலாலே
பவம் ஒருவும் நெறி தன்னைப் பயக்கும் போகம்
பாலிக்கும் தானம்முதல் பகர்தலாலே.

உரை:

மலம் இல்லாத சிவன் அருளிச் செய்த திருவாக்கே சிறப்பான வாக்கு ஆகும். அந்த வாக்கு எழுத்தினால் சுருக்கமும், பொருளால் விரிவும் உடையது. ஆணவம் முதலான மலங்களையுடைய மக்களின் உரையைப் போல மாறுபாடு சிறிதும் இல்லாமல் உள்ளதை உள்ளபடியே சொல்லும். ஈகை முதலிய அறங்களைக் கூறுவதால், இறைவனையும் உயிர்களையும் உலக வேறுபாடுகள் அனைத்தையும் தெரிவிக்கும். பிறப்பை ஒழிக்கும் வழியை அருளும்; இன்பமும் தரும்.

விளக்கம்:

அமலன் - மலம் இல்லாத இறைவன்; **அருத்தம்** - பொருள்; **பவம்** - பிறப்பு; **அரன்** - பாவங்களை அறுக்கும் இறைவன்; **அக்கரம்** - எழுத்து; **சமலர்** - மலங்களை யுடைய மக்கள்; **சாற்றும்** - சொல்லும்; **அண்டம்** - உலகம்; **ஒருவும்** - நீக்கும்; **பயக்கும்** - தரும்; **பாலிக்கும்** - அருளும். (19)

20. ஆதிதனி லோமென்னும் பதமதாக வந்தமதிற்
சிவாய வொலி யணைந்து நிற்க
வோதியவா றெழுத்தினையு முடைத்தேயிந்த
வோமென்னும் பதப்பொருடா னுயிர்கட் கெல்லாம்

Koviloor Digital Library

போதகனாய்ப் பொருவிலியாய் நிற்குமீசன்
புனிதனவன் சத்திவித மைந்து மற்றை
யேதமிலா வஞ்செழுத்தின் பொருளே யெண்ணி
லிருபயனு முயிரடையு மிவற்றா லென்றும்.

ஆதிதனில் ஓம் என்னும் பதம் அது ஆக அந்தம் அதில்
சிவாயஒலி அணைந்து நிற்க
ஓதிய ஆறு எழுத்தினையும் உடைத்தே இந்த
ஓம் என்னும் பதம்பொருள்தான் உயிர்கட்கு எல்லாம்
போதகனாய் பொரு இலியாய் நிற்கும் ஈசன் புனிதனவன்
சத்திவிதம் ஐந்து மற்றை
ஏதம் இலா அஞ்சு எழுத்தின் பொருளே எண்ணில்
இருபயனும் உயிர் அடையும் இவற்றால் என்றும்.

உரை:

சிவ வாக்கியத்துள் கூறிய திருவைந்தெழுத்து, முதலில் ஓம் என்னும் சொல்லும், முடிவில் சிவாய என்னும் சொல்லும், நடுவில் நம என்பதும் நிற்க, உரு ஏற்றுகின்ற 'ஓம் நமசிவாய' என்னும் ஆறெழுத்தாகும். ஓம் என்ற சொல்லின் பொருள், எல்லா உயிர்களுக்கும் அறிவு விளக்கம் அளிப்பவனாய், தனக்கு யாரும் இணை இல்லாதவனாக விளங்கும் சிவனே ஆகும். குற்றம் இல்லாத ஐந்தெழுத்தின் பொருள் அந்தச் சிவனுடைய பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்ற ஐந்து வகை ஆற்றல்களாகும். இந்த மந்திர மொழிகளால் சிவபிரானையும் அப்பிரானுடைய ஆற்றல்களையும் கருதி உரு ஏற்றுகிறவர்கள், இவ்வுலக இன்பங்களைப் பெறுவதோடு முத்தியும் பெறுவர்.

விளக்கம்:

அணைந்து - பொருந்தி; **போதகன்** - உபதேசிக்கும் குரு; **பொரு** - இணை, ஒப்பு; **ஏதம்** - குற்றம்; **ஆதி** - தொடக்கம். (20)

ஓங்காரத்தின் சிறப்பு

21. ஓமெனும் பதமதனில் வேதமாதி யுற்பவிக்கு
மால வித்தி னுதிக்குமா போ
லோமென்னும் பதமதனை யுரைத்தார் தாமே
யோதினர்கள் வேதாதி யுரைகளெல்லா
மோமென்னும் பதப் பொருளை யுணர்ந்தார்
தாமே யுணர்ந்தாரும் வேதாதியொருமை கூர
வோமென்னும் பதமொழித் தஞ்செழுத்து மாதர்க்
கொழுங்குடைய சூத்திரர்க்கு முரைக்கலாமே.

Koviloor Digital Library

ஓம்எ(ன்)னும் பதம் அதனில் வேதம்ஆதி உற்பவிக்கும்
ஆலம் வித்தில் உதிக்குமா போல்
ஓம்என்னும் பதம் அதனை உரைத்தார் தாமே
ஓதினர்கள் வேத ஆதி உரைகள் எல்லாம்
ஓம் என்னும் பதப்பொருளை உணர்ந்தார் தாமே
உணர்ந்தாரும் வேதஆதி ஒருமைகூர
ஓம் என்னும் பதம் ஒழித்து அஞ்செழுத்து மாதர்க்கு(ம்)
ஒழுங்கு உடைய சூத்திரர்க்கும் உரைக்கலாமே.

உரை:

ஆலம் விதையில் இருந்து தளிர், இலை, கிளை, விழுது, அடிமரம் முதலியன தோன்றுவது போல, ஓம் என்னும் மந்திர மொழியில் இருந்தே வேதம் முதலான நூல்கள் எல்லாம் தோன்றும். ஆகையால், ஓம் என்னும் மந்திர மொழியை முறைப்படி உரு ஏற்றியவர்களே வேதம் முதலான நூல்களை அறிந்தவர்கள் ஆவர். ஓம் என்னும் பொருளுக்கு உரியவர் சிவபிரான். அச்சிவபிரானைக் கண்டு உணர்ந்தவர்களே வேதம் முதலான நூல்களின் பொருளை உணர்ந்தவர்கள் ஆவர். ஆதலால், நாற் குலத்தாரிற் பெண்களும், சூத்திரரும் ஓம் என்ற மந்திர மொழியைத் தவிர்த்து மற்ற ஐந்தெழுத்தை மட்டும் உரு ஏற்றலாம்.

விளக்கம்:

சூத்திரன் - மிருதி நூல்களின்படி பிராமணன், அரசன், வணிகன் என்ற மூன்று பிரிவுகளைத் தவிர்த்து உழவுத் தொழில் செய்வோர் சூத்திரர் என நான்காவது பிரிவைச் சேர்ந்தவர். ஆலம் - ஆலமரம்; பதம் - சொல்; உற்பவிக்கும் - தோன்றும்.

குறிப்பு:

'ஓம்' வெறுஞ்சொல் அல்ல. தரமற்றவர்கள் அதை ஓதினால் உரிய பலன் இன்மை மட்டுமல்ல; விபரீத விளைவு நேர்தலும் தவிர்க்க முடியாது. அதனால் தான் பெண்களுஞ் சூத்திரரும் அதை உச்சரித்தலாகாதென்றது. இது ஞானாசாரம். (21)

22. இருளுலகி லறவுலவு மிரவியின்றே லிசையாது
பொருளொடு கண்ணொளியுண் டேனும்
பொருவரிய வோங்காரப் பொருளொன்றின்றேற்
பொறியிலங்கா தனைத்துயிர்க்கும் பொறியுண்டேனு
மருளதனை யணுக்களுக்கு மாற்றியென்று மதியருளும்
பரமசிவன் வாக்கைக் கூறுங்
குருபரனு மோங்காரப் பொருளே யென்று
கொண்டாரேன் மும்மலமும் விண்டார் தாமே.

Koviloor Digital Library

இருள் உலகில் அறஉலவும் இரவிஇன்றேல் இசையாது
பொருளொடுகண் ஒளி உண்டேனும்
பொரு அரிய ஓங்காரப் பொருள் ஒன்று இன்றேல்பொறி
இலங்காது அனைத்து உயிர்க்கும் பொறி உண்டேனும்
அருள்அதனை அணுக்களுக்கு மாற்றி என்றும்மதி அருளும்
பரமசிவன் வாக்கைக் கூறும்
குருபரனும் ஓங்காரப் பொருளே என்று கொண்டாரேல்
மும்மலமும் விண்டார் தாமே.

உரை:

கண்களில் ஒளி இருந்தாலும் கதிரவன் தோன்றாவிட்டால் நம்மைச் சூழ உள்ள பொருள்களைத் தெளிவாகக் காணுதல் இயலாது. எல்லா உயிர்களுக்கும் அறிவு இருந்தாலும் தனக்கு ஒப்பு ஒருவர் இல்லாத சிவபிரானுடைய அருள் இல்லாமல் உயிர்களின் அறிவு செயலாற்றாது. உயிர்களுக்குச் சிவபெருமானுடைய திருவாக்காகிய சிவாகமப் பொருளை உணர்த்தி, அப் பெருமானுடைய அருள் பெற உதவும் சிவ ஞானியாகிய குருபிரானை, ஓங்காரப் பொருளாகிய சிவபெருமான் ஆகவே கருதல் வேண்டும். அவ்வாறு கருதுகின்ற அடியவருடைய ஆணவம், மாயை, கன்மம் என்ற மூன்று மலங்களும் அவரைவிட்டு அகலும்.

விளக்கம்:

இரவி - ஞாயிறு. இசையாது - பொருந்தாது. பொரு - ஒப்பு. ஓங்காரப் பொருள் - சிவபெருமான். அணு - உயிர். பொறி - அறிவு. பரமசிவன் வாக்கு - சிவாகமம். குருபரன் - மேலான உபதேச குரு. இலங்காது - விளங்காது. (22)

23. ஐயமற விபரீத மதுவுமீச னருண் மொழியை
யாராய்ந்த வனகனாசான்
வையகமு முய்யவுனிச் சைவதன்ம மன்னவனுக்
களிக்கவவன் மருவுநீதி
யெய்தியிடு முலகச்ச மெய்தலாலு மெல்லோரு
மிருபயனு மெய்தலாலே
சைவநெறி தனையரையற் களித்தவாசான் சகத்தினுக்குந்
தேசிகனே சாற்றுங்காலே.

ஐயம்அற விபரீதம் அதுவும் ஈசன் அருள் மொழியை
ஆராய்ந்த அனகன் ஆசான்
வையகமும் உய்யஉ(ன்)னிச் சைவதன்மம் மன்னவனுக்கு
அளிக்க அவன் மருவும்நீதி

Koviloor Digital Library

எய்தி இடும் உலக அச்சம் எய்தலாலும் எல்லோரும்
இருபயனும் எய்தலாலே
சைவநெறி தனை அரையற்கு அளித்த ஆசான்
சகத்தினுக்கும் தேசிகனே சாற்றுங்காலே.

உரை:

சிவபிரான் அருளிச் செய்த ஆகம உண்மைகளைக் கசடு அறக் கற்றுத் தேர்ந்தவர், குற்றமில்லாத ஞான ஆசிரியர். அவர் சிவதருமத்தை நன்கு ஆராய்ந்து மன்னருக்குக் கற்பிக்க வேண்டும். அதனால், மன்னர் நீதிமுறை தவறாது ஆட்சி செய்வார். மக்களும் அரச தண்டனைக்கு அஞ்சி, ஒழுக்கம் தவறாமல் வாழ வேண்டிய முறைப்படி வாழ்வார்கள். இதனால், மன்னரும் அவருடைய குடி மக்களும் இறைவனுடைய அருளைப் பெறுவதற்கு உரிய பக்குவ நிலையை அடைவார்கள்.

ஆகவே, முதலில் நாட்டை ஆளும் வேந்தருக்கு சிவ ஆகம உண்மைகளை உபதேசித்து நல்வழிப்படுத்துகின்ற ஞான ஆசிரியர், உலகினர் அனைவருக்கும் ஞான ஆசிரியராக விளங்கும் பெருமைக்கு உரியவர் ஆவார்.

விளக்கம்:

ஐயம் - சந்தேகம்; **அனகன்** - குற்றமற்றவன்; **ஆசான்** - ஆசிரியன்; **வையகம்** - உலகம்; **உய்ய** - ஈடேற; **உன்னி** - கருதி; **எய்தி** - அடைந்து; **மருவும்** - பொருந்தும்; **அரையன்** - அரசன்; **சகம்** - உலகம். இது ஆகுபெயராக உலக மக்களைக் குறிக்கிறது. **இருபயன்** - இம்மை மறுமை இன்பங்கள். **தேசிகன்** - ஞான ஆசிரியன்; உபதேசிக்கும் குருபிரான்.

தேசிகன் என்பது பொதுவாகச் சைவ ஆதீனங்களின் தலைவர்களைக் குறிக்கும் பெயர். ஆதீனம் என்பது சைவமடம். சைவ ஆதீனத் தலைவர்கள் சைவத் துறவிகள் ஆவர். குன்றக்குடி மட அதிபதியான குன்றக்குடி அடிகளார் கையொப்பம் இடும்போது 'அருணாசல தேசிகர்' என்று கையெழுத்து இடுவார்.

முருகப் பெருமானைத் தமிழ்ப் புலவர்கள், 'ஞான தேசிகன்' என்று குறிப்பிடுவர். சுவாமி அருணகிரிநாதர், தாம் அருளிய கந்தர் அலங்காரப் பாடல் ஒன்றில் முருகப் பிரானை 'நம்குரு தேசிகன்' என்று மிக உரிமையுடன் குறிப்பிடுகிறார்.

சிவலிங்க வழிபாடு செய்து வருகிற வீர சைவமதப் பெரியார்கள் தத்தம் பெயரோடு 'தேசிகர்' என்பதைச் சேர்த்துச் சொல்லுகிறார்கள். பிற மத குருமாரைத் தேசிகன் என்று அழைப்பது தவறு.

தேசிகன் - தேசிகன் என்ற பெயரின் பகுதி தேசு. தேசு என்பது ஒளி. ஆகவே, தேசிகன் என்பது 'அருள் ஒளி'யினை அறிந்து, அதனோடு ஒன்றியவர் என்பது பொருள் என்பர். ஆனால் இது மொழியியல்புக்கு ஒவ்வாது.

Koviloor Digital Library

ஒளியென்ற பொருள்தரும் தேசு இகவிகுதி பெற விதியில்லை. ஆதலால் உபதேசி, திஷ்+இக = தேசிக; இக சமஸ்கிருத விகுதி, பொருள் உபதேசிப்பவன் அல்லது (மெய்ப் பொருளைக்) காட்டுபவன் என்று கொள்வதே சரியாகும். தேசு - தேஷஸ் என்றதிலிருந்து தமிழுக்கு வந்த சொல். அதற்கு இக விகுதி பெற உரிமையில்லை. (23)

24. பூபதியு நூன் முறையிற் புவியுளோரைப்
புரிவிக்க வழுவாது புரிந்தார் தாமும்
பூபதியைச் சிவனெனவே புந்தி செய்வர்
பொருந்திடுவர் தன்மார்த்தகாமம் பூமேற்
பூபதியு மித்தகையே புரிவார் தம்பாற்
பொருள்கொள்க வொருகூறு புவிக்கைந் தாக்கிப்
பூபதியை நிரையத்திற் பொருத்துந் தீயார்
பொருளவரை முறைநிறுவிற் பொருந்தானாங்கே.

பூபதியும் நூல்முறையில் புவி உ(ள்)ளோரைப்
புரிவிக்க வழுவாது புரிந்தார் தாமும்
பூபதியைச் சிவன்எனவே புந்தி செய்வர்
பொருந்திடுவர் தன்ம அர்த்த காமம் பூமேல்
பூபதியும் இத்தகையே புரிவார் தம்பால்
பொருள் கொள்க ஒருகூறு புவிக்கு ஐந்து ஆக்கிப்
பூபதியை நிரையத்தில் பொருத்துந் தீயார்
பொருள் அவரைமுறைநிறுவில் பொருந்தான் ஆங்கே.

உரை:

(இன்று பெரும்பாலான உலக நாடுகளில் மன்னர்களின் ஆட்சி மறைந்து மக்களாட்சி நடைபெறுகின்றது. அதற்கும் ஏற்ப இப்பாடலுக்கு விளக்கம் தரப் படுகிறது.)

மன்னர்களும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்களும் மறை கூறும் நீதிநெறி தவறாமல் ஆட்சி புரிவதோடு, மக்கள் நல்லொழுக்கம் தவறாது வாழ்க்கை நடத்த ஆவன செய்து உதவல் வேண்டும். அவ்வாறு செய்கிற மன்னர்கள் அல்லது ஆட்சியாளர்களை மக்கள் தெய்வங்கள் எனக் கொள்ள வேண்டும். மன்னர்கள் அல்லது ஆட்சியாளர்கள் மக்களிடம் இருந்து பெறும் வரித் தொகையை ஆறு கூறுகளாகப் பிரித்து, அதில் ஐந்து கூறுகளை நாட்டு வளப்பத்திற்கும் மக்கள் நலன்களுக்கும் செலவு செய்ய வேண்டும். எஞ்சியுள்ள ஒரு கூறை அரசு நிருவாகத் துறைக்காகப் பயன்படுத்த வேண்டும். மன்னர்கள் அல்லது ஆட்சியாளர்கள் கள்ளக் கடத்தல், போதைப் பொருள்களை விற்றல் முதலிய தொழில்களைப் புரிகிற தீயவர்களிடமிருந்து கள்ளத்தனமாகப் பொருள் பெறுதல் ஆகாது. தீயவர்களைச் சிறை செய்து, அவர்கள் தீய வழியில் தேடிய பொருள்களைப் பறிமுதல் செய்து,

Koviloor Digital Library

அப் பொருள்களை அறவழிகளில் பயன்படுத்த வேண்டும். தீயவர்களை ஒடுக்க வேண்டும். இவ்வாறு செய்யாத மன்னர்கள் அல்லது ஆட்சியாளர்கள் நரகத் துன்பங்களை அடைவார்கள்.

விளக்கம்:

பூபதி - பூ+பதி. பூ - பூமி. பதி - தலைவன். பூபதி - நாட்டை ஆளும் மன்னர். இங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்களையும் குறிக்கும். **நூன் முறை** - அற நூல்கள் காட்டும் நீதிமுறைமை. **புவி** - உலகம். இது இங்கு நாட்டைக் குறிக்கிறது. **புரிவிக்க** - செய்விக்க. **வழுவாது** - தவறாமல். **தன்ம அர்த்த காமம்** - அறம் பொருள் இன்பம். **நிரையம்** - நரகம். (24)

25. பார்த்திபனுங் காமத்திற் பொருளிற் சாலப்
பற்றுடைய னெனிற் குரவன் பரிவு கூர்ந்து
தீர்த்திடுக மந்திரத்தா லவுட தாதித்
திறத்தினுமே யறத்தினவன் சிந்தை செல்லப்
பார்த்திடுக பரயோகம் பின்பு நல்கப்
பரயோக மளித்து வினைப் பகை சாராமற்
காத்தகுர வனுக்கிவன்செய் கைம்மாறுண்டோ
காசினியும் பொருளனைத்தும் கைம்மாறன்றே.

பார்த்திபனும் காமத்தில் பொருளில் சாலப்
பற்று உடையன் எனில் குரவன் பரிவு கூர்ந்து
தீர்த்திடுக மந்திரத்தால் அவுடத(ம்) ஆதித்
திறத்திலுமே அறத்தில் அவன் சிந்தை செல்லப்
பார்த்திடுக பரன்யோகம் பின்பு நல்கப்
பரன்யோகம் அளித்துவினைப் பகைசாராமல்
காத்தகுர வனுக்கு இவன்செய் கைம்மாறுண்டோ
காசினியும் பொருள் அனைத்தும் கைம்மாறு அன்றே.

உரை:

ஒரு நாட்டின் தலைவன் பெரும் இன்பப் பிரியனாய்ப் பொருளைத் தேடிக் குவிப்பதில் ஆசை உள்ளவனாக இருந்தால் அந்த நாட்டில் நல்ல ஆட்சி நடை பெறாது. அத்தகைய குணங்கள் உடைய ஆட்சித் தலைவனுடைய ஆசிரியன், அந்தத் தலைவனுடைய செயலைக் கண்டு மனம் இரங்கித் தக்க மந்திரங்களாலும் நல்ல மருந்துகளாலும் அவனுடைய மன நிலையை மாற்றி, அவனை அறவழியில் செலுத்த வேண்டும். அவ்வாறு அவனைப் பக்குவப்படுத்திய பிறகு, அவனுக்குச் சிவயோக முறையைக் கற்பித்து, அவன் பிறவிக்குக் காரணமான வினைகளிலிருந்து விடுபடுமாறு ஆசிரியர் உதவ வேண்டும். அவ்வாறு தனக்கு உதவிய ஆசிரியனுக்கு

Koviloor Digital Library

அந்த ஆட்சித் தலைவன் தன் ஆட்சியின் கீழ் உள்ள நாட்டையும் செல்வத்தையும் பதில் உபகாரமாகத் தந்தாலும் ஆசிரியன் தந்த அறிவுக் கொடைக்கு அவை நிகர் ஆகா.

விளக்கம்:

பார்த்திபன் - அரசன், மன்னன்; இது தற்கால உலக இயலின்படி நாட்டை ஆளும் முதலமைச்சனையும் அல்லது சன அதிபதியையும் குறிக்கும். **காமம்** - சிற்றின்ப ஆசை. **குரவன்** - ஆசான். **கைம்மாறு** - பதிலுதவி. **பரயோகம்** - பரன் + யோகம். **பரன்** - சிவன். **பரயோகம்** - சிவயோகம். சிவயோகம் என்பது திருமூலர் உணர்த்திய யோக முறை. இது சண்முகி முதலான ஐந்து முத்திரைகளையும், நமசிவய மந்திரத்தையும் ஆதாரங்களாகக் கொண்டது. ஒவ்வொரு முத்திரைக்கும் ஏற்றபடி நமசிவய என்ற ஐந்து எழுத்துகளும் மாறி மாறி வரும். இந்த யோக முறையைச் சிவஞானிகளாகிய திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் போன்ற சைவமடங்களின் தலைவர்கள் அறிவார்கள். இதனை, அவர்களை வணங்கி, உபதேச முறையில் பெற்றுக் கொள்ள வேண்டும். (25)

பயன் பெறாதவர்

26. அற்பாயு நரர்க்கென்றே யமலன்வேத
மாதிதனைத் தொகுத்தறைந்தா னயாதுமிவற்றை
நிற்பாருஞ் சிலர்நில்லாக் குரம்பைதன்னை
நிலையெனவே கருதியவப் பசு நூறன்னைக்
கற்பாருஞ் சிலரமலன் கழறும்வாக்கைக்
கருதாதே யவனதடிக் கமலந்தன்னைப்
பொற்பாருங் கருணையினான் மற்றை நூலாற்
பொருந்துதலு மரிதுமலம் போக்கறானும்.

அற்ப ஆயு நரர்க்கு என்றே அமலன்வேதம்
ஆதிதனைத் தொகுத்துஅறைந்தான் ஆயாதும்இவற்றை
நிற்பாரும் சிலர் நில்லாக் குரம்பை தன்னை
நிலை எனவே கருதிய அப் பசுநூல் தன்னைக்
கற்பாரும் சிலர் அமலன் கழறும் வாக்கைக்
கருதாதே அவனது அடிக் கமலம் தன்னைப்
பொற்பு ஆரும் கருணையினால் மற்றைநூலால்
பொருந்துதலும் அரிதுமலம் போக்கல் தானும்.

உரை:

மலம் இல்லாத இறைவன், மக்களுக்கு வாழ்நாள் குறைவு என்று கருதி, விரிவாக இருந்த உபநிடதங்களையும் ஆகமங்களையும் சுருக்கிக் காமிகம் முதலான

Koviloor Digital Library

ஆகமங்களை அருளிச் செய்தார். இவ்வாறு சுருங்கச் சொல்லிய ஆகமங்களின் பொருளை அறியாதார் பலர் உள்ளனர். சிலர் உடலை நிலையானது என எண்ணிச் சாதாரண மக்கள் எழுதிய உலகியல் சார்ந்த நூல்களைப் படிக்கின்றனர். ஆனால், உபநிடதமும் ஆகமமும் திருவருளினால் அழகு பெற்றிருப்பதை ஆராய்ந்து அறிந்து அவற்றைக் கற்காமல், வீணாகப் பொழுது போக்க நூல்களைப் படிப்பவர்கள், எவ்வாறு மலங்களில் இருந்து விடுபட்டு இறைவன் அருளைப் பெறுவார்கள்? (பெற மாட்டார்கள் என்பது கருத்து.)

விளக்கம்:

ஆயு - ஆயுள்; நரர் - மனிதர்; கழறும் - சொல்லும்; பொறப்பு - அழகு; குரம்பை - உடல்; அடிக்கமலம் - திருவடித்தாமரை; பசுநூல் - ஆகமங்களைத் தவிர்த்த உலகியல் நூல். முதல் அடியின் இறுதிச்சீர் 'னாயாதுமிவற்றை' என்பதில் ஓசை தட்டுகிறது. 'னாமிவற்றை' என்றிருந்தால் சரியாகும். இரண்டெழுத்து மிகுதி. சுவடிப் பாடபேதம் பார்க்க வேண்டும். (26)

பதி முதலியவற்றின் இயல்பு

27. ஆதியல செம்பினுக்குக் களிம்பு தானு
மாராயி லதற்கதுவு மனாதியாகு
மாதியல மூலமல மணுக்கட் கெல்லா
மாணவமு மாருயிர்கட் கனாதியாகு
மாதியலப் பசுபாச மரிக்கவல்ல
வமலனுமா ருயிர்களுமே யனாதியாகு
மாதியல வுலகத்தை யடைக்கித்தன்பா
லாக்குவதும் வினையுமுயிர்க் கனாதியாமே.

ஆதிஅலஅச் செம்பினுக்குக் களிம்பு தானும்
ஆராயில் அதற்கு அதுவும் அனாதியாகும்
ஆதிஅல மூலமலம் அணுக்கட்கு எல்லாம்
ஆணவமும் ஆருயிர்கட்கு அனாதியாகும்
ஆதிஅலஅப் பசுபாசம் அரிக்கவல்ல
அமலனும் ஆருயிர்களுமே அனாதியாகும்
ஆதிஅலஉலகத்தை அடைக்கித் தன்பால்
ஆக்குவதும் வினையும் உயிர்க்கு அனாதியாமே.

உரை:

செம்பிலே களிம்பும், உயிர்களிடத்தில் ஆணவ மலமும், மாயையும் என்றும் உள்ளவை. பக்குவப்பட்ட அடியவர்களுடைய மாயை, கன்மங்களை

Koviloor Digital Library

அறுத்து அகற்றவல்ல சிவபெருமானும் என்றும் உள்ளவன். தன்னிடத்திலிருந்தே உலகை உண்டாக்கி, மீளவும் தன்னிடத்தில் ஒடுக்கிக் கொள்ளும் படைப்புக்கு ஆதாரமான மாயையும் என்றும் உள்ளது. பிறவிகள்தோறும் தொடர்ந்து வரும் கன்மம் அல்லது வினையும் உயிர்களிடம் என்றும் உள்ளது ஆகும்.

விளக்கம்:

ஆதிஅல - ஒரு தொடக்கம் இல்லாதது; **மூலமலம்** - ஆணவ அழுக்கு; **களிம்பு** - செம்பிலே தோன்றும் அழுக்கு; **அரிக்க** - அறுக்க; **வினை** - அனுபவித்துத் தீர்க்க வேண்டிய முன்பிறவிச் செயல்களின் விளைவு. (27)

28. போதகனு மும்மலமும் போக்கித் தன்னுட்
பொருவரிய பரம் பொருளைப் புணர வெண்ணு
மாதவனுக்கறைக விறை யமலன் வாக்கை
மற்றையவர்க் கறையற்க மனத்துக் கெட்டா
வாதியருள் வாக்கியத்தை யருத்தந் தன்னை
யருநிதியாற் புகழ்முதலா லயர்த்துங் கூறிற்
பாதகனே போதகனு மவர்களோடும்
பற்றிடுவ னெரிநிரைய மங்கார்பற்றே.

போதகனும் மும்மலமும் போக்கித் தன்உள்
பொரு அரிய பரம்பொருளைப் புணரஎண்ணும்
மாதவனுக்கு அறைக இறை அமலன் வாக்கை
மற்றையவர்க்கு அறையற்க மனத்துக்கு எட்டா(து)
ஆதி அருள் வாக்கியத்தை அருத்தம் தன்னை
அருள்நிதியால் புகழ்முதலால் அயர்த்தும் கூறில்
பாதகனே போதகனும் அவர்களோடும்
பற்றிடுவன் எரிநிரையம் அங்கு ஆர்பற்றே?

உரை:

ஆசிரியன், ஆணவம் முதலான மலங்களிலிருந்து மங்கி, தன் நெஞ்சினுள் கலந்து பரவியிருக்கும் ஒப்பு இல்லாத சிவபிரானுடைய திருஅருளைப் பெற விரும்புகிற பக்குவப்பட்ட மாணவர்க்குச் சிவ ஆகம உண்மைகளைக் கற்பிக்கலாம். பெரும் பொருளைப் பெற எண்ணியோ, புகழை விரும்பியோ, எண்ணத்துக்கும் பேச்சுக்கும் எட்டாத சிவபிரான் அருளிய ஆகமப் பொருளை, அதனைப் புரிந்து கொள்ளும் தகுதியில்லாத மாணவருக்கு ஆசிரியன் உரைத்தல் ஆகாது. உரைத்தால், உரைத்த ஆசிரியனும், ஆசிரியனின் உரையைக் கேட்ட மாணவர்களும் நரகை

Koviloor Digital Library

அடைவார்கள். அந்த நரகத்திலிருந்து அவர்களை விடுவிப்பவர் யார்? (யாரும் இலர் என்பது குறிப்பு.)

விளக்கம்:

பரம்பொருள் - சிவபிரான். ஆதி - இறைவன். அருத்தம் - பொருள். அருள் வாக்கியம் - ஆகமம். பாதகன் - பாவஞ் செய்தவன். (28)

சிவ பூசைக்கு வேண்டுவன

29. **அறைந்தன மமலன் வாக்கை**
யானிடை யாறுஞ் சொல்வாஞ்
சிறந்தறி சிவபூசைக்குத்
தேடரும் பொருள்களென்றே
யிறந்தவ ரென்போடாமை
யீண்டெழின் மார்பிற்பூண்டு
புறம்புனத் தாடி பொற்றாள்
புரிந்துமாதவ போதத்தில்.

அறைந்தனம் அமலன் வாக்கை ஆன்
இடை ஆறும் சொல்வாம்
சிறந்து அறி சிவபூசைக்குத் தேடஅரும்
பொருள்கள் என்றே
இறந்தவர் என்போடு ஆமை
ஈண்டு எழில் மார்பில்பூண்டு
புறம்புனத்து ஆடிபொன்தாள்
புரிந்துமா தவபோதத்தில்.

உரை:

சிவன் அருளிய ஆகமத்தின் பெருமையைக் கூறினோம். ஊழி முடிவில் இறந்து போன விஷ்ணு, பிரமன் முதலானவர்களின் எலும்புகளையும், ஒரு பிறவியில் ஆமையாகப் பிறந்து இறந்த விஷ்ணுவின் ஆமை ஓட்டினையும் அழகு பெற மார்பில் அணிந்து, சுடலையில் கூத்தாடும் சிவனுடைய திருவடிகளில் பசுவின்மூலம் கிடைக்கும் ஆறு பொருள்களால் பூசை செய்யும் முறையை இப்பொழுது சொல்வோம்.

விளக்கம்:

அறைந்தனம் - சொன்னேன்; ஆன் - பசு; என்பு - எலும்பு; புறம்புனம் - ஊரின் ஒரு புறத்தில் பிணங்களை எரிக்கும் சுடுகாடு. (29)

Koviloor Digital Library

பசுவின் மூலம் பெறும் பொருள்கள்

30. அமரரு மசுரர்தாமு மமிர்துணக்
கருதி வெற்பைத்
தமதுயர் பலத்தாற் றாங்கிக்
கடைந்தபாற் கடலிற்றங்கிப்
பவமுறு மரியதேனுப்
பஞ்சகம் பரமனாலே
யவன்முடிக் கருகமான
வாறுமவ் வைந்தினாமே.

அமரரும் அசுரர்தாமும் அமிர்து
உ(ண்)ணக்கருதி வெற்பைத்
தமதுஉயர் பலத்தால் தாங்கிக்
கடைந்தபால் கடலில் தங்கிப்
பவம்உறும் அரிய தேனுப்
பஞ்சகம் பரமனாலே
அவன்முடிக்கு அருகமான ஆறும்
அவ் ஐந்தில் ஆம்(ஏ).

உரை:

தேவர்களும், அசுரர்களும் அமிர்தமுண்ண வேண்டி மந்தர மலையை மத்தாகவும், வாசுகியை நாணாகவுங் கொண்டு கடையப்பட்ட பாற்கடலிலிருந்து சிவனருளாலே, ஐந்து வகைப் பசுக்கள் தோன்றின. அவற்றின் வழிவந்த பூவுலகப் பசுக்களிலிருந்து பெறப்படும் கோரோசனை, பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்ற ஆறு திரவியமும் சிவன் முடியில் அபிஷேகஞ் செய்தற்குத் தகுந்த பொருள்கள் ஆயின.

விளக்கம்:

பாற்கடல் கடையப்பட்டபோது அதிலிருந்து தோன்றிய சந்திரன், இலக்குமி, வெள்ளானை, காமதேனு, சிந்தாமணி ஆகியவற்றுடன் ஐவகைப் பசுக்களுந் தோன்றின எனப் புராணங்கள் கூறும். பசு ஐவகையாவன: நந்தை, பத்திரை, சுரபி, சுமனை, கபிலை என்பனவாம். அமிர்தம் - இறவாதிருக்க உதவும் உணவு. (30)

31. உத்தம ரோசனாந்த
முரைத்திடு மாறுமோரின்
வித்தகப்பொருள்கள் வேண்டும்
பலத்தினை விளைக்குமென்று

Koviloor Digital Library

மத்தனை யமலன்றன்னை
யாதரிப் பாருமார
இத்திறத்திசை யத்தோன்றும்
பொருள்களு மியம்புவாமே.

உத்தம ரோசன அந்தம்
உரைத்திடும் ஆறும் ஒரில்
வித்தகப் பொருள்கள் வேண்டும்
பலத்தினை விளைக்கும் என்று
அத்தனை அமலன் தன்னை
ஆதரிப்பாரும் ஆர
இத்திறத்து இசையத் தோன்றும்
பொருள்களும் இயம்புவாமே.

உரை:

ஆராய்ந்து பார்க்கும்போது பால், கோரோசனை முதலான ஆறு பொருள்களும், மலம் இல்லாதவனும், கடவுளுமான சிவனுக்கு உகந்த பொருள்களே; இவை நல்ல பலனைத் தரும். இவ்வாறே, அடியவர்கள் பூசனை செய்வதற்குப் பொருத்தமாக இவற்றிலிருந்து தோன்றும் வேறுபொருள்களுமுள. அவற்றைக் கூறுவோம்.

விளக்கம்:

ரோசன + அந்தம் - ரோசனாந்தம். கோரோசனை முதல் நெய் ஈறாக உள்ள ஆறு பொருள்கள்; ஓரில் - ஆராய்ந்து பார்த்தால்; வித்தகம் - சிறந்த; இசைய - பொருந்த. (31)

32. கோமயமதனில் வில்வங் குறுமுறி கூடத்தோன்றும்
பூமகளந்த வில்வம் புரிந்ததிற் பொருந்து மாற்றாற்
றாமமார் வில்வந்தானுஞ் சீபல மென்றே சாற்று
நாமமும் புணருமீசர் திருமுடிக் கணியெந்நாளும்.

கோமயம் அதனில் வில்வம் குறுமுறி கூடத்தோன்றும்
பூமகள் அந்த வில்வம் புரிந்து அதில் பொருந்தும்ஆற்றால்
தாமம் ஆர் வில்வம்தானும் சீபலம் என்றே சாற்றும்
நாமமும் புணரும் ஈசர் திருமுடிக்கு அணி எந்நாளும்.

உரை:

பசுவின் சாணத்தில் முளைத்த வில்வமரத்தின் தளிருடன் தோன்றும் வில்வ

Koviloor Digital Library

இலையில் திருமகள் விருப்பத்தோடு தங்குவாள். ஆகையால், அந்த வில்வ இலைகளால் தொடுக்கப்பட்ட வில்வமாலை சிவபிரான் திருமுடியில் சூட்டுவற்குரிய சிறப்பை உடையது. அந்த மாலையைச் சீபலம் என்று அழைப்பார்கள்.

விளக்கம்:

கோமயம் - பசுவின் சாணம்; **குறுமுறி** - சிறிய தளிர்; **தாமம்** - மாலை; **பூமகள்** - திருமகள்; **புரிந்து** - விரும்பி; **பொருந்தும்** - தங்கும்; **நாமம்** - பெயர். (32)

33. உற்பல கமலமூலம் பின்பதிலுதிக்கு நீரிற்
பொற்புறு குங்குலீயம் பொலிந்தெழும்புரிய யாரு
மற்புதன் றனக்கு மற்றை யனைவர்க்கு முணவதாகக்
கற்புறு செந்நெல் பாலிற் கதிரொடு கலந்து தோன்றும்.

உற்பல கமலம் மூலம் பின்பு அதில் உதிக்கும் நீரில்
பொற்பு உறு குங்குலீயம் பொலிந்து எழும் புரியயாரும்
அற்புதன் தனக்கும் மற்றை அனைவர்க்கும் உணவு அதுஆகக்
கற்பு உறு செந்நெல்பாலில் கதிரொடு கலந்து தோன்றும்.

உரை:

வில்வம் தோன்றிய பிறகு அந்தப் பசுவின் சாணத்திலிருந்து நீலோற்பலக் கிழங்கும் தாமரைக் கிழங்கும் தோன்றும். பசுவின் மூத்திரத்தில் இருந்து குங்கிலியம் எல்லாரும் விரும்பும்படி விளங்கித் தோன்றும். பாலில் இருந்து சிவபிரானுக்கும், மக்களுக்கும், பறவை முதலான பிற உயிர்களுக்கும் உணவாகப் பயன்படுகின்ற செந்நெல் முதலிய நெல் வகைகள் பொருத்தமாகத் தோன்றும்.

விளக்கம்:

உற்பலம் - நீலோற்பல மலர்; **கமலம்** - தாமரை; **மூலம்** - கிழங்கு; **குங்குலீயம்** - குங்கிலியம். இது ஒருவகை மணப் பொருள். **பொலிந்து** - விளங்கி; **அற்புதன்** - இறைவன்; **கற்புஉறு** - ஒழுங்காக; **நீர்** - நீரில் என்பது இங்குப் பசுவின் மூத்திரத்தில் என்று ஆகும். (33)

34. சந்தன முதலாயுள்ள மங்கலந் ததியினாகு
மந்தரத் தமரருண்ணு மமிர்தமு நவநீதத் தாஞ்
சிந்தையார் சித்திபேதஞ் சிறக்க ரோசனையுஞ் செய்யு
மந்திவான் வண்ணன் மேனிக் கருகமிவ் வாறுமாமே.

Koviloor Digital Library

சந்தனம் முதலாய் உள்ள மங்கலம் ததியில் ஆகும்
அந்தரத்து அமரர் உண்ணும் அமிர்தமும் நவநீதத்து ஆம்
சிந்தை ஆர் சித்திபேதம் சிறக்க ரோசனையும் செய்யும்
அந்திவான் வண்ணன்மேனிக்கு அருகம் இவ்ஆறும்ஆம்(ஏ).

உரை:

தயிரில் இருந்து சந்தனம் முதலான மங்கலப் பொருள்கள் தோன்றும். வெண்ணெயில் வானவர் பருகும் அமிர்தம் உண்டாகும். கோரோசனை யாவரும் விரும்பும் சித்திகளைத் தரும். மாலைவேளையில் தோன்றும் சிவந்த வானம் போன்ற நிறம் உள்ள சிவபிரானுடைய திருமேனிக்குத் திருமுழுக்குச் செய்ய இவை தகுதியான பொருள்கள் ஆகும்.

விளக்கம்:

இவற்றோடு அகில், குங்குமம் முதலிய பொருள்களையும் சேர்த்துக் கொள்வர். ததி - தயிர்; நவநீதம் - வெண்ணெய்; அந்தரம் - வானவர் உலகம்; ரோசனை - கோரோசனை. இது ஒரு நறுமணப் பொருள்; அந்தி - மாலை; வண்ணன் - செக்கர் வான நிறம் உடையவன்; மேனி - உடம்பு; அருகம் - தக்கது. (34)

35. ஆதலா னெய்யாற் பாலா லாமில மற்று மற்றுங்
கோதறு ததியினாலுங் குழகனன் முடிமே லாட்டிச்
சீதமதகன்ற நீராற் றிளைப்புற வாட்டிச் சேர்ந்த
வாதரவத னாலாட்டி யாமலகாதி யாவும்.

ஆதலால் நெய்யால் பாலால் ஆமிலம் அற்று மற்றும்
கோது அறு ததியினாலும் குழகன்நல் முடிமேல் ஆட்டிச்
சீதம்அது அகன்ற நீரால் திளைப்பு உற ஆட்டிச் சேர்ந்த
ஆதரவு அதனால் ஆட்டி ஆமலகம் ஆதி யாவும்.

உரை:

ஆதலால், நல்ல நெய், நல்ல பால், புளிப்பு, தீயமணம் முதலிய குற்றங்கள் இல்லாத நல்ல தயிர், இளநீர், பஞ்சாமிர்தம் ஆகிய பொருள்களால் சிவ பெருமானுடைய தூய திருமுடியின்மீது நிறையத் திருமுழுக்குச் செய்து, இளஞ்சூடு உள்ள நீரால் நீராட்டுக.

விளக்கம்:

அமிலம் அற்று - புளிப்பு இல்லாமல்; கோது அறு - குற்றம் இல்லாமல்; குழகன் - சிவன்; ஆட்டி - திருமுழுக்குச் செய்து; சீதம் - குளிர்ச்சி; பஞ்சாமிர்தம் -

Koviloor Digital Library

பஞ்ச + அமிர்தம் - வாழைப்பழம், தேன், சர்க்கரை, நெய், திராட்சை, என்ற ஐந்து இனிய பொருள்களால் ஆக்கியதும், திருமுழுக்கிற்கு உதவுவதுமான பொருள்.

ஆமலகம் - நெல்லிக்காய்; திளைப்பு உற - நிறைய. (35)

வெந்நீரால் நீராட்டிய பின்னர் செய்ய வேண்டியவை

36. சீதளநீரு மாட்டித் திகழ் திருமேனி யீரம்
பேதமதாக வாடை பிணைத்தரி தாகப் பெற்ற
கோதில் கோரோசனாதி குங்குமக் குழம்புங் கூட்டிக்
காதலால் வில்வந் தன்னைக் கசடறக் கண்ணாற் கண்டே.

சீதள நீரும் ஆட்டித் திகழ் திருமேனி ஈரம்
பேதம் அதாக ஆடை பிணைத்து அரிதாகப் பெற்ற
கோதுஇல் கோரோசன ஆதி குங்குமக் குழம்பும் கூட்டிக்
காதலால் வில்வம் தன்னைக் கசடு அறக் கண்ணால் கண்டே.

உரை:

குளிர்ந்த நீரால் நீராட்டி, திருமேனியில் படிந்திருந்த ஈரத்தை அகற்றி, பொருத்தமாக ஆடை புனைந்து, கோரோசனை முதலான பொருள்கள் கலந்த குங்குமக் கலவையைச் சேர்த்து, அன்போடு புழுக்கடி இல்லாத நல்ல வில்வ இலைகளோடு,

விளக்கம்:

சீதளநீர் - குளிர்ந்த நீர்; பிணைத்து - கட்டி; குழம்பு - கலவை. (36)

37. உற்பல கமலத்தோடு முவகையாற்
சாத்தி நெய்யாற்
குற்குலு வதனாற் றூபங்
கொடுத்தொளி கொடுத்தா னெய்யாற்
பொற்புறு பாயதானம் புளிப்பறு
ததியின் போனஞ்
சற்கரை தேனெய் கூட்டிச்
சமைத்த வோதனமும் தாமே.

உற்பலம் கமலத்தோடும் உவகையால்
சாத்தி நெய்யால்
குற்குலு அதனால் தூபம் கொடுத்து
ஒளிகொடுத்து ஆன் நெய்யால்

Koviloor Digital Library

பொற்பு உறு பாயதானம் புளிப்பு
அறு ததியின் போனம்
சற்கரை தேன் நெய் கூட்டிச்
சமைத்த ஓதனமும் தாமே.

உரை:

செங்கழுநீர்ப் பூவையும் தாமரைப் பூவையும் மகிழ்வோடு இறைவன் திருவடிகளில் இட்டு, நெய்யினால் நனைந்த குங்கிலியத்தின் நறும்புகை காட்டி, கர்ப்பூர ஒளிகாட்டி, மிகுதியாகப் பசுவின் நெய்கலந்த பாற் சோற்றையும், புளிப்பு இல்லாத தயிர்ச் சோற்றையும், சர்க்கரை, தேன், நெய் கலந்து ஆக்கிய சோற்றையும்,

விளக்கம்:

உற்பலம் - செங்கழுநீர்ப்பூ; உவகை - மகிழ்ச்சி; குற்குலு - குங்கிலியம்; தூபம் - புகை; ஓதனம் - சோறு; பாய தானம் - பாற்சோறு; போனகம் என்பது போனம் என வந்தது. இது உணவைக் குறிக்கும். சர்க்கரை என்பது எதுகை நோக்கிச் சற்கரை என வந்தது. (37)

38. நிறைந்துறை நேயத்தோடு நிவேதனம் செய்க மற்றுஞ்
சிறந்துள வுபசாரங்கள் செய்து செய்முறைக டம்மிற்
குறைந்துள வவையுமீச பொறுத்தரு ளென்று கூறித்
திறம்பல வலமுஞ் செய்து தெண்டெனப் பணிந்து சேர்ந்தே.

நிறைந்து உறை நேயத்தோடு நிவேதனம் செய்க மற்றும்
சிறந்து உள உபசாரங்கள் செய்து செய்முறைகள் தன்னில்
குறைந்து உள அவையும் ஈச பொறுத்து அருள் என்றுகூறித்
திறம்பல வலமும் செய்து தெண்டு எனப் பணிந்து சேர்ந்தே.

உரை:

செறிந்து பொருந்தும் அன்போடு அமுது படைத்து, வேறு பல உபசாரங்கள் செய்து, வழிபாடு செய்த முறைகளில் குறைகள் இருந்தால், எம்பெருமானே! யான் செய்த பிழைகளை மன்னித்து அருள் செய்க என்று இரந்து வேண்டிக்கொண்டு, செவ்வையாக வலம் வந்து தடியைத் தரையில் கிடத்தியது போல வணங்கி நெருங்கி,

விளக்கம்:

நிவேதனம் - கடவுளுக்கு அமுது படைத்தல். உபசாரங்கள் - பூசை வேளையில் கடவுளுக்குச் செய்யும் பலவகைச் சிறப்புகள், சாமரை வீசுதல்,

Koviloor Digital Library

குடைபிடித்தல் முதலியன. செய்முறை - வழிபாடு செய்த முறைகள். தெண்டு - தடி, கோல். குறைந்து உள அளவை - பிழைகள். பொறுத்து - மன்னித்து. (38)

39. அண்டங்க ளனைத்துமாக்கு மலர்மிசை
யயனே போற்றி
யண்டங்க ளனைத்துங் காக்கு மரியெனு
மகிப போற்றி
யண்டங்க ளனைத்து மாற்றுமதிபெல
வரனே போற்றி
யண்டத்தின் பேதத்தப்பா லனாதியே
யமல போற்றி.

அண்டங்கள் அனைத்தும் ஆக்கும்
அலர்மிசை அயனே போற்றி
அண்டங்கள் அனைத்தும் காக்கும்
அரிஎனும் மகிப போற்றி
அண்டங்கள் அனைத்தும் மாற்றும்
அதிபெல அரனே போற்றி
அண்டத்தின் பேதத்து அப்பால்
அனாதியே அமல போற்றி.

உரை:

மலர்மீது அமர்ந்து உலகங்கள் யாவையும் படைக்கின்ற பிரமனே வணக்கம். உலகங்கள் யாவையும் காப்பவனாகிய திருமாலே வணக்கம். உலகங்கள் யாவையும் அழிக்கின்ற மிகுந்த ஆற்றல் வாய்ந்த உருத்திரனே வணக்கம். உலக வேறுபாடுகளைக் கடந்து என்றும் விளங்குகின்ற மலம் இல்லாத பரம்பொருளே வணக்கம்.

விளக்கம்:

சைவ மரபுப்படி சிவபிரானே அயனை அதிட்டித்து நின்று ஆக்கல், மாலை அதிட்டித்து நின்று காத்தல், உருத்திரனை அதிட்டித்து நின்று அழித்தல்களைச் செய்வர். அத்தொடர்புபற்றி அயனே போற்றி அரியெனும் மகிப போற்றி எனப்பட்டது. (39)

40. ஆருயிர் அனைத்து மீன்ற அன்னையே அத்தா போற்றி
யாருயிரனைத்து நீங்கா வரும்பெரும் பொருளே போற்றி
யாருயிர்ப் பந்தபாச மறுத்தரு ளதுல போற்றி
யாருயிர்க் கமிர்தமான வன்பனே போற்றி போற்றி.

Koviloor Digital Library

ஆர்உயிர் அனைத்தும் ஈன்ற அன்னையே அத்தா போற்றி
ஆர்உயிர் அனைத்தும் நீங்கா அரும் பெரும் பொருளே போற்றி
ஆர்உயிர் பந்தம் பாசம் அறுத்து அருள் அதுல போற்றி
ஆர்உயிர்க்கு அமிர்தம் ஆன அன்பனே போற்றி போற்றி.

உரை:

தாயும் தந்தையுமாக விளங்கி உயிர் வகைகள் அனைத்தையும் அளித்தவனே வணக்கம். எல்லா உயிர்களிலும் கலந்துள்ள அரிய பெரிய பொருளாக விளங்கு பவனே வணக்கம். உயிர்களின் பிறவிக்குக் காரணமான பற்றுகளை அகற்றி அருள் செய்யும் ஒப்பற்றவனே வணக்கம். உயிர்களுக்கு அமிர்தம் போல இன்பம் தருபவனே வணக்கம் வணக்கம்.

விளக்கம்:

அத்தன் - தந்தை; பந்தபாசம் - உற்றார் உறவினர் மீது வைத்துள்ள பற்று; அதுலன் - ஒப்பு இல்லாதவன்; அமிர்தம் - உயிரை வளர்க்கும் மருந்து. (40)

41. எனத்துதி யியம்பும்பத்தர்க் கிட்ட
மிம்மையினுஞ் செய்வன்
றனக்குயர்ந்தா ரொத்தாரை யிலன்
சிவன் சகளத்துற்றா
னினைத் தருச்சனை செய்துய்ய
நேசர்க ளாதலாலே
வினைப்பகை வெல்வார் செய்க
வருச்சனை விதியினாலே.

எனத்துதி இயம்பும் பத்தர்க்கு இட்டம்
இம்மையிலும் செய்வான்
தனக்கு உயர்ந்தார் ஒத்தாரை இலன்
சிவன் சகளத்து உற்றான்
நினைத்து அருச்சனை செய்து
உய்ய நேசர்கள் ஆதலாலே
வினைப்பகை வெல்வார் செய்க
அருச்சனை விதியினாலே.

உரை:

என்றும் போற்றி வணங்குகின்ற அடியவர்க்கு அவர் விரும்பிய உலக இன்பங்களை வழங்குவான். சிவனுக்கு ஒப்பானவர் யாரும் இலர்; அவனை விட

Koviloor Digital Library

உயர்ந்தவரும் இலர். அப்பெருமான் தனக்கு என ஒரு வடிவம் இல்லாதவன். எனினும், அன்பர்கள் அவனைக் கண்டு வணங்கி அருள் பெறுவதற்கு ஏதுவாக உருவத் திருமேனியோடு எழுந்தருளியுள்ளான். அப்பிரானை எண்ணி, அவன் திரு வடிகளில் பூக்கொண்டு பூசனை புரிகின்றவர்கள், அப்பிரானுக்கு அன்பர்கள் ஆவர். ஆதலால், பிறவிக்குக் காரணமான வினைகளை வெல்ல எண்ணுகின்றவர்கள், மலர் கொண்டு சிவபிரானைப் பூசிப்பாராக.

விளக்கம்:

சகளம் - உருவத் திருமேனி; **நேசர்** - அன்பர்; **விதி** - முறை; **அருச்சனை** - பூவும் நீருங் கொண்டு செய்யப்படுகிற வழிபாடு. (41)

சிவபூசையின் பயன்

42. முற்றவத்தாலே பூசை முற்றிய பத்தர் மூவேழ்
சுற்றமுஞ் சுவர்க்க மெய்தத் துன்னுதற் கரிதேயாய
வற்புத னுலகந்தன்னைத் தாமடைந் திருப்பரன்பாற்
சொற்பணி செய்தார் தாமுந்துரிசறு நெறியினாலே.

முன்தவத்தாலே பூசை முற்றிய பத்தர் மூஏழ்
சுற்றமும் சுவர்க்கம் எய்தத் துன்னுதற்கு அரிதே ஆய
அற்புதன் உலகம் தன்னைத் தாம் அடைந்து இருப்பர் அன்பால்
சொல்பணி செய்தார் தாமும் துரிசுஅறு நெறியினாலே.

உரை:

முன்பிறவிகளிற் செய்த புண்ணிய நிறைவால் அன்போடு சிவபூசை செய்த அடியவர்களின் பரம்பரையினரும், தந்தை வழி உறவினர்களும், தாய் வழி உறவினர்களும் சுவர்க்க இன்பம் பெறுவர். பூசை செய்த அடியவர்கள். சாதாரணமானவர்கள் நெருங்கமுடியாத சிவ உலகத்தை அடைவர். பூசை செய்த அடியவர்களின் ஏவலின்படி பூசைக்குத் தேவையான மலர் முதலான பொருள்களைக் கொண்டு வந்து கொடுத்தவர்களும் பிறவித்துன்பம் நீங்குதற்கு உரிய நல்லறிவு பெற்றுச் சிவகதி அடைவர்.

விளக்கம்:

மூ - மூன்று; **ஏழ்** - ஏழு; **மூ ஏழ்** - இருபத்து ஒன்று; **சுற்றம்** - உறவு; **துன்னுதற்கு** - அணுகுவதற்கு; **அற்புதன்** - சிவன்; **பணி** - வேலை. (42)

Koviloor Digital Library

பார்த்தவர் பெறும் பலன்

43. அற்சனைக் குபயோகங்க ளாகிய தருக்களாதி
கற்புறு சிவலோகத்தைக் கலப்பதே திண்ணங் கண்டோ
ரற்புதன் பூசை தன்னை யருவினை யறுவரன்பாற்
றற்பரன் பூசை கண்டோர் சிவபுரமதனைச் சார்வார்.

அர்ச்சனைக்கு உபயோகங்கள் ஆகிய தருக்கள் ஆதி
கற்புஉறு சிவலோகத்தைக் கலப்பதே திண்ணம் கண்டோர்
அற்புதன் பூசை தன்னை அருவினை அறுவர் அன்பால்
தற்பரன் பூசை கண்டோர் சிவபுரம் அதனைச் சார்வார்.

உரை:

சிவபூசைக்குப் பயன்படும் பொருள்கள், அப்பூசைக்கு மலர்கள் தரும் செடிகள், இலை தரும் வில்வ மரம் போன்றனவும் சிவலோகப் பேறு பெறும். அடியவர்கள் சிவபூசை செய்யும் முறைகளையும் நேரில் பார்ப்பவர்களுக்கு வினைநீக்கம் நிகழும். அவற்றை அன்போடு தரிசிப்பவரும் சிவபுரத்தைச் சேர்வர்.

விளக்கம்:

தரு - மரம்; கலப்பது - பொருந்துவது; திண்ணம் - உறுதி; அறுவர் - நீங்குவர்; சார்வார் - அடைவார்; அற்புதன், தற்பரன் - இவை கடவுளைக் குறிக்கும். (43)

கேட்டவர் பெறும் பலன்

44. கேட்டுளார் மகிழச் சொல்வார்
கிடைக்குமோ வெமக்குமென்று
வேட்டுளா ருபகாரங்கள்
விளைத்துளா ரிவருமைய
னாட்டுளார் பிறக்கி
லிம்மண்ணாயக ராவராகித்
தேட்டுளார் சிவதன்மங்கள்
வாதனை திகழ்தலாலே.

கேட்டு உ(ள்)ளார் மகிழச் சொல்வார்
கிடைக்குமோ எமக்கும் என்று
வேட்டு உ(ள்)ளார் உபகாரங்கள் விளைத்து
உ(ள்)ளார் இவரும் ஐயன்

Koviloor Digital Library

நாட்டு உ(ள்)ளார் பிறக்கில் இம்
மண்நாயகர் ஆவர் ஆகித்
தேட்டு உ(ள்)ளார் சிவதன்மங்கள்
வாதனை திகழ்தலாலே.

உரை:

சிவபூசையின் பெருமையைக் கேட்டு அறிந்தவர்கள், கேட்பவர் உள்ளம் விரும்பச் சிவபூசையின் சிறப்பை விளக்கமாக உரைப்பவர்கள், நமக்கும் இவ்வாறு சிவபூசை செய்யும் பேறு கிடைக்குமா என்று ஆசைப்படுகிறவர்கள், சிவபூசைக்குத் தேவையான பொருள்களைத் தந்து உதவியவர்கள் எல்லாரும் சிவபுரத்தில் தோன்றுவர். அவ்வாறு தோன்றியவர்கள் அங்குள்ள இன்பங்களை நுகர்ந்த பிறகு, மீண்டும் மண்ணுலகில் நீதி தவறாத மன்னர்களாகப் பிறப்பார்கள். அந்நிலையிலும் பூர்விகத் தேட்டம் உள்ளவர்களாதலின் அதன் வாசனையினாலே மீண்டும் சிவ தன்மங்களையே தேடிச் செய்வர்.

விளக்கம்:

வேட்டு - விரும்பி; விளைத்து - செய்து; ஐயன் - கடவுள்; நாயகர் - தலைவர், அரசர்;

தன்மம் - தருமம், நெறி; வாதனை - வருத்தம்; தேட்டுளார் - (1) தேட்டம் உளார் (2) தேடுதல் உளார். (44)

மேலான அறம்

45. தமக்கபராத பேதஞ்
சதமுறச் சாதித்தார்க்கு
மிமைப்பொழு தெனினுந்துன்ப
மியற்றிடா வினிமைதன்னை
யமைத்துநூ லிதமிதென்றே
யறைந்திடு மதனையாதி
சமைப்பதே தலைமையான தருமமென்
றறிக தக்கார்.

தமக்கு அபராதம் பேதம்
சதம் உறச் சாதித்தார்க்கும்
இமைப்பொழுது எனினும் துன்பம் இயற்றிடாது
இனிமை தன்னை

Koviloor Digital Library

அமைத்து நூல் இதம் இது என்றே
அறைந்திடும் அதனை ஆதி
சமைப்பதே தலைமைஆன தருமம்
என்று அறிக தக்கார்.

உரை:

தமக்குப் பிறர் பலவகைத் துன்பங்களை எப்போதும் தொடர்ந்து செய்து கொண்டேயிருந்தாலும், துன்பத்துக்கு ஆளானவர் பொறுமை இழந்து, துன்பம் செய்தவருக்கு ஓர் இமைப்பொழுது கூடத் தீங்கு செய்யாது அவருக்கு நன்மையே செய்துவர வேண்டும். இதுவே மேலான அறம் என்று அறிஞர்கள் உணர வேண்டும்.

விளக்கம்:

அபராதம் - குற்றம்; சதம்உற - எப்போதும்; சாதித்தார் - செய்தவர்; இனிமை - நல்லது செய்தல்; இதம் - நலம், நன்மை; சமைப்பது - செய்வது; தக்கார் - அறிஞர், மேலோர்; நூல் - இங்கு ஆகம நூல்களைக் குறிக்கும். (45)

சிவதருமத்தின் சிறப்பு

46. செப்பிய வொப்பிலாத சிவதருமங்க டன்னைத்
தப்பற நினைப்போம் யாமுஞ் சந்திகடோறும் யாரு
மிப்படி யெண்ணுவார் முன்னிட்டிய வினைகளோட்டி
யொப்பிலா வுமையாள்பாகன் புரத்தினி துறைவரன்றே.

செப்பிய ஒப்புஇலாத சிவதருமங்கள் தன்னைத்
தப்பு அற நினைப்போம் யாமும் சந்திகள் தோறும் யாரும்
இப்படி எண்ணுவார் முன்ஈட்டிய வினைகள் ஓட்டி
ஒப்புஇலா உமையாள்பாகன் புரத்து இனிது உறைவர் அன்றே.

உரை:

ஒப்பு இல்லாத சிவ தரும உண்மைகளை நாம் காலை, நடுப்பகல், மாலை என்னும் மூன்று வேளைகளிலும் சிந்தனை செய்வோம். இவ்வாறு நம்மைப் போலச் சிவ தரும உண்மைகளைச் சிந்திப்பவர்கள், தங்களுடைய முன்பிறவிகளில் தேடிக் கொண்ட பிறவிக்கு ஏதுவான வினைகள் நீங்கப் பெற்று, உமையம்மையைத் தன் திருமேனியின் இடப் பாகத்திற் கொண்ட சிவபெருமானுடைய சிவ உலகத்தை அடைந்து, அங்குள்ள இன்பங்களை அனுபவித்து இருப்பார்கள்.

விளக்கம்:

செப்பிய - சொன்ன; தப்பு அற - தவறாமல்; அன்றே - இது பாடலைச் சார்ந்து வரும் ஓர் இடைச்சொல். இதனை அசைச்சொல் என்பார்கள். இதற்குப் பொருள் கிடையாது. (46)

Koviloor Digital Library

சிவ ஆகமங்களே சிறந்தவை

47. ஒப்பிலி யனாதிமுத்த னோதிய வேதத் துள்ளுஞ்
செப்பிய சிவதன்மங்கள் சிறந்த நேரியவே தேறுந்
தப்பிலாப் பலத்தினாலே தடவரை நிகர சான்றோர்
வைப்பென விவற்றைக் கொள்வர் மகற்பலவாஞ்சையாலே.

ஒப்புஇலி அனாதி முத்தன் ஓதிய வேதத்து உள்ளும்
செப்பிய சிவதன்மங்கள் சிறந்த நேரியவே தேறும்
தப்பு இலாப் பலத்தினாலே தடம்வரை நிகர சான்றோர்
வைப்பு என இவற்றைக் கொள்வர் மகற்பல வாஞ்சையாலே.

உரை:

தனக்கு யாரும் நிகர் இல்லாத - இயல்பாகவே பாசங்கள் இல்லாத - இறைவன் அருளிய வேதங்களினுஞ் சிவ தன்மங்களே சிறந்தவை. சிவ ஆகமங்களே தலை சிறந்தவை. அவை நேரான பாதையைக் காட்டுபவை. தவறு ஏதும் இல்லாத அவற்றின் உண்மைப் பொருள் வலிமையால் அவை அகன்ற மலைக்கு நிகராக விளங்குகின்றன. சைவ சமய ஆன்றோர் சிவ தருமங்களைத் தங்களுக்குக் கிடைத்த வைப்பு நிதியாகக் கருதிப் பிரியமாகப் போற்றுவர்.

விளக்கம்:

மகற்பலம் - பெரும்பலன்; அநாதிமுத்தன் - இறைவன். (47)

48. என்று பரமான தருமாதிக ளிசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்றுபுல னைந்தினையும் வெய்ய வினை நைய
நின்றமுனி யன்றுணர நிற்குண னினைந்தே.

என்று பரமான தருமஆதிகள் இசைத்தான்
குன்றவர் மடம் கொடி தனக்கு அருள் கொடுத்தான்
வென்று புலன் ஐந்தினையும் வெய்ய வினை நைய
நின்றமுனி அன்று உணர நிற்குணன் நினைந்தே.

உரை:

வேடுவர் மகளாகிய வள்ளியம்மைக்கு அருள்செய்த குமரக் கடவுள், கொடிய வினைகள் ஒடுங்கும்படி ஐந்து புலன்களையும் அடக்கித் தவநிலையில் நின்ற அகத்தியன் அறியும் வண்ணம் மேலான அறங்களை உணர்த்தினான்.

Koviloor Digital Library

விளக்கம்:

பரமான - மேலான; **தருமாதிகள்** - அறங்கள்; **குன்றவர்** - வேடர்; **மடக்கொடி** - மடம் + கொடி = இளமையும் அழகும் உள்ள வள்ளி; **ஐந்து புலன்** - இங்கு மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளையும் குறிக்கிறது. **நிற்குணன்** - நிர்க்குணன் என்பது, நிற்குணன் என வந்தது. இது குமரக் கடவுளைக் குறிக்கும். (48)

49. ஆனிடை யைந்தினை யாடினனே
யம்பர மன்றினு மாடினனே
கானிடை வேடனு மானவனே
காசியென் மாநகரானவனே
வானிடை முப்புர மாற்றினனே
வார்சடை மேல்வரு மாற்றினனே
யானெனுமாசு மிலாதவனே
யேனையமாசு மிலாதவனே.

ஆன்இடை ஐந்தினை ஆடினனே
அம்பர மன்றினும் ஆடினனே
கான்இடை வேடனும் ஆனவனே
காசிஎன் மாநகர் ஆனவனே
வான்இடை முப்புரம் மாற்றினனே
வார்சடைமேல் வரும் ஆற்றினனே
யான்எனும் ஆசும் இ(ல்)லாதவனே
ஏனைய மாசும் இ(ல்)லாதவனே.

உரை:

பசுவின் மூலம் கிடைக்கும் பால், தயிர், நெய, சிறுநீர், சாணம் என்று ஐந்தையும் திருமுழுக்காகக் கொண்டவனே! சிதம்பர மன்றத்தில் திருக்கூத்து ஆடியவனே! காட்டில் அருச்சுனனுக்கு அருள்புரிய வேடுவ வடிவம் கொண்டவனே! வட இந்தியாவில் கங்கையாற்றின் கரையில் உள்ள காசி என்னும் நகரை இருப்பிடமாகக் கொண்டவனே! வான வெளியில் திரிந்த பொன், வெள்ளி, இரும்பு மதில்களை எரித்து அழித்தவனே! நீண்ட சடையில் கங்கையை உடையவனே! ஆணவ அழுக்கு இல்லாதவனே! மற்ற மாயை, கன்மம் என்ற அழுக்குகளும் இல்லாதவனே!

விளக்கம்:

ஆன் - பசு; **அம்பரம்** - சிதம்பர வெளி; **கான்** - காடு; **வான்** - வானம்; **முப்புரம்** - மூன்று மதில்கள்; **வார்** - நீண்ட; **ஆசு** - குற்றம். (49)

Koviloor Digital Library

50. அலைகட னஞ்ச மருந்தினனே
யாணவ நோய்க்கு மருந்தினனே
தலைகல னாகத் தரித்தவனே
சார்ந்தவர் பாசந் தறித்தவனே
சிலைசிலை யாக்கிய தெள்ளியனே
தீம்பரைக் காய்ந்துள தெள்ளியனே
விலையிலி யானவெண் ணீற்றினனே
விபரித மற்றவெண் ணீற்றினனே.

அலைகடல் நஞ்சம் அருந்தினனே
ஆணவ நோய்க்கு மருந்தினனே
தலை கலன் ஆகத் தரித்தவனே
சார்ந்தவர் பாசம் தறித்தவனே
சிலை சிலை ஆக்கிய தெள்ளியனே
தீம்பரைக் காய்ந்து(ள்)ள தெள்ளியனே
விலைஇலி ஆன வெண் நீற்றினனே
விபரிதம் அற்ற வெண் நீற்றினனே.

உரை:

தேவர்களும் அசுரர்களும் கடைந்த கடலில் எழுந்த நஞ்சை உண்டவனே! ஆணவம் முதலான பிணிகளுக்கு மருந்தாக இருப்பவனே! பிரமனுடைய தலையை அணிகலனாகப் பூண்டவனே! அடியவர்களுடைய பற்றுகளை அறுத்தவனே! மேரு மலையை வில்லாக ஆக்கிய வலிமை உடையவனே! தீயவர்களான முப்புர அசுரர்களை எரித்தவனே! விலை மதிப்பு இல்லாத வெள்ளை நிறம் உள்ள திருநீற்றை அணிந்தவனே! ஐயந்திரிபற்ற உரையளவையாகிய வேதாந்தத்தில் உள்ளவனே.

விளக்கம்:

கலன் – அணிகலன்; **தறித்தல்** – அறுத்தல்; **பாசம்** – தளை, பற்று; **சிலை** – சிலை என்பது மலையையும் வில்லையும் குறிக்கும்; **தெள்ளியன்** – அறிவுடையோன்; **தீம்பர்** – தீங்கு செய்பவர்; **எண்** – உரையளவை; **ஈறு** – வேதாந்தம். (50)

குமர குருபரன் வாக்கின் பெருமை

51. மலத்தை வல்வினை தனைமன வலியை
வதைக்க வல்லநன் மதியினை யுதவந்
துலக்க வெண்பிறை யணிசடை முடியன்
துணைப்ப தந்தொழு மடியவர் துணைவன்

Koviloor Digital Library

மலைக்கு நன்மகண் மதிநுதல் கணவன்
மலர்ப் பதம்பெறு முறவினு நிறுவு
மலக்க ணண்டர்க ளறவொறு கரமுன்
னமைத்த சண்முக னருளிய மொழியே.

மலத்தை வல்வினை தனை மனம் வலியை
வதைக்க வல்ல நல்மதியினை உதவும்
துலக்க வெண்பிறை அணி சடைமுடியன்
துணைப்பதம் தொழும் அடியவர் துணைவன்
மலைக்கு நல்மகள் மதிநுதல் கணவன்
மலர்ப் பதம் பெறும் உறவினும் நிறுவும்
அலக்கண் அண்டர்கள் அற ஒருகரம் முன்
அமைத்த சண்முகன் அருளிய மொழியே.

உரை:

தேவர்களின் துன்பங்கள் தீரும்படி அவர்கள் எதிரே தோன்றி, ஒரு திருக்கையை அமைத்து அருளிய ஆறுமுகன் அருளிச் செய்த திருமொழி, ஆணவம் முதலான மலங்களையும் முன்பிறவிகளிற் செய்த வினைகளையும், மனத்தின் வேகத்தையும் ஒடுக்கும் அறிவைத் தரும் வெண்மையான பிறை நிலவைத் திரு முடியில் அணிபவனும், தன் பூப் போன்ற திருவடிகளை வணங்கும் அடியவர்க்குத் துணையாக இருப்பவனும், பிறை போலும் நெற்றியை உடைய இமயமலை அரசன் மகளுடைய கணவனும் ஆகிய சிவபிரானின் மலர் போன்ற திருவடிகளைப் பெறவும் உதவும்.

விளக்கம்:

ஒருகரம் - இது அபயம் அளிக்கும் கையைக் குறிக்கும்; **அலக்கண்** - துன்பம்; **அண்டர்கள்** - தேவர்கள். (51)

மனத்துக்கு அறிவுரை

52. நினைத்த நன்பல மெளியதின் முடியு
நெருக்கி யண்டர்கள் முனிவர்கள் பணியத்
தனத்த னந்தன தனதன தனவென்
சதிக்கி சைந்திட நடமிடு சதுரன்
முனைத்தெ ழுந்தவர் புரமொரு நொடியின்
முருக்கி வென்றவ னருளிய மொழிக
ளனைத்தை யுந்தரு மருமுனி யனக
னகத்தி யன்திரு வடிநினை மனமே.

Koviloor Digital Library

நினைத்த நல்பலம் எளியதில் முடியும்
நெருக்கி அண்டர்கள் முனிவர்கள் பணியத்
தனத்தனந்தன தனதனதன என்(று)
சதிக்கு இசைந்திட நடம்இடு சதுரன்
முனைத்து எழுந்தவர் புரம்ஒரு நொடியில்
முருக்கி வென்றவன் அருளிய மொழிகள்
அனைத்தையும் தரும் அருமுனி அனகன்
அகத்தியன் திருவடி நினை மனமே.

உரை:

நெஞ்சமே! நீ, எண்ணிய நல்லவை அனைத்தும் நிறைவேறும். தேவர்கள், முனிவர்கள் வணங்கத் தனத்தனந்தன தன என்று இராக தாளங்களுக்கு ஏற்பத் திருக்கூத்தை ஆடும் சமர்த்தனும், பகைத்து எழுந்த திரிபுரத்தவரை ஒரு கணப் பொழுதில் நெற்றி விழியால் எரித்து அழித்த வெற்றியை உடையவனும் ஆகிய சிவபிரான் அருளிய ஆகமங்களை நமக்கு உணர்த்திய தூயவனான அகத்தியன் திருவடிகளை எண்ணுவாயாக.

விளக்கம்:

சதி - தாளம்; சதுரன் - சமர்த்தன்; முனைத்து - பகைத்து; முருக்கி - அழித்து; அனகன் - தூயவன், இறை. (52)

Koviloor Digital Library

சிவதருமோத்தர ஆகம நூலின் இரண்டாவது இயல்

சிவஞான தான இயல்

சிவஞான தானம் என்றால் சிவ ஆகமம் உணர்த்தும் உண்மைகளைப் பக்குவப்பட்ட மாணாக்கர்க்கு வழங்குதல் என்று பொருள். சிவ ஞானம் பரஞானம், அபரஞானம் என இரு வகைப்படும்.

பரஞானம் என்பது, பரன்ஞானம் ஆகும். பரன் என்றால் கடவுள். ஞானம் என்றால் அறிவு. ஆகவே, பரஞானம் என்றால் கடவுளோடு அத்துவித இயைபில் நின்று பெறும் தெளிந்த அனுபவ அறிவைக் குறிக்கும்.

அபர ஞானம் என்பது, சிவ ஆகமம், சிவஞானபோதம் போன்ற சாத்திர நூல்களைத் தக்க குருமாரை அணுகிக் கற்று உணர்ந்து தெளியும் நூலறிவு ஆகும்.

53. **அரிய ஞானத்தை யையமு மையலும்**
பிரிய வேரொளி யாகிய பெற்றியைப்
பருவ முற்றவர் பாலுப தேசிக
னுருகி யோர வுரைப்பது மோதுவாம்.

அரிய ஞானத்தை ஐயமும் மையலும்
பிரிய ஏர்ஒளி ஆகிய பெற்றியைப்
பருவம் உற்றவர்பால் உபதேசிகன்
உருகிஓர உரைப்பதும் ஓதுவாம்.

உரை:

அருமையான சிவ ஆகமநூல் கூறும் உண்மைகளைச் சந்தேகம், ஒன்றை இன்னொன்றாக எண்ணுகின்ற மயக்க உணர்வு ஆகிய இருளை அகற்றும் அழகிய ஒளிவிளக்காக விளங்குபவர் உபதேச குரு ஆவார். அவர் பக்குவப்பட்ட தம் மாணாக்கர்களுக்கு, மாணாக்கரின் புரிந்து கொள்ளும் நிலையை ஆராய்ந்து, மனம் கனியக் கற்பிப்பதையிட்டு இங்கு உரைப்போம்.

விளக்கம்:

பக்குவம் – ஒரு குருவினிடம் உபதேசம் பெறுவதற்கு உரிய தகுதியான

Koviloor Digital Library

விநயப் பண்புடைமை. அது பெறாத மாணவனுக்கு ஆசிரியர் உயர்ந்த சமய உண்மைகளை உரைத்தால் அந்த உபதேசம் மாணவனுக்குப் பயன்படாது. சொன்ன ஆசிரியரும் நரகத்தை அடைவார்.

''சொல் ஆரணமாம் சுருதிமுடிந்த இடம்
எல்லார்க்கும் சொன்னால் எழுநரகம் - நன்றாய்
ஆளாக்கிச் சொன்னால் அவனே இவன் ஆகும்
பாழ் ஆக்கிப் போட்ட குரு பாழ்''

என்பது ஆன்றோர் வாக்கு.

உபதேசிகன் - உபதேசஞ் செய்பவன். தேசிகன் என்பது, இங்கு சைவக் குருவை மட்டுமே குறிக்கிறது. (1)

சிவஞானச் சிறப்பு

54. சிந்தை செய்க வகத்திய தீவினைப்
பந்தமும் பசு பாசமு மாயையு
மந்தமாயை பினாக்கிய வாக்கையு
நைந்து போக நல்லார்க்கு நரர்க்கரோ.

சிந்தை செய்க அகத்திய தீவினைப்
பந்தமும் பசுபாசமும் மாயையும்
அந்தமாயை பின்ஆக்கிய ஆக்கையும்
நைந்து போக நல்லார்க்கு நரர்க்கு அரோ.

உரை:

அகத்தியனே! உயிர்களுக்கு அனுபவித்தது போக எஞ்சியுள்ள கருமமும், இப்பிறப்பில் செய்யும் புண்ணிய பாவங்களின் வேறுபாடும், பசுத்துவம் என்னும் பெயரினையுடைய ஆணவம் என்கிற பற்றும், மாயை என்கிற பற்றும், அந்த மாயையால் உண்டாகிய உடம்பு முதலான பற்றும் கெடும்படி சிந்தனை செய்வாயாக.

விளக்கம்:

பசு - உயிர்; பாசம் - தளை, கட்டு; பந்தம் - பற்று; மாயை - இது இரு நிலையில் வழங்கும். ஒன்று உலகப் படைப்புக்கு ஆதாரமான மூலப் பிரகிருதி அல்லது மூல இயற்கை. இன்னொன்று மூன்று மலங்களுள் ஒன்றாகிய மாயை என்கிற மலம்.

ஆக்கை - யாக்கை, உடம்பு; நைந்து போக - கெட; நரர் - மனிதர்; அரோ - பாடலின் ஓசையை நிரப்ப வருகிற அசைச் சொல். இது இடைச் சொல் வகையினது. இதற்குப் பொருள் கிடையாது. (2)

Koviloor Digital Library

55. விதவெ னப்படுந் தாதுவின் வித்தையி
னுதய முமுயிர் கட்குயி ராகிய
பதித னக்குரு வம்மது பக்குவர்
மதித னக்கு விளக்கென வாய்த்ததே.

வித எனப்படும் தாதுவின் வித்தையின்
உதயமும் உயிர்கட்கு உயிர் ஆகிய
பதி தனக்கு உருவம் அது பக்குவர்
மதி தனக்கு விளக்குஎன வாய்த்தது ஏ.

உரை:

'விதக்ஞானே' - 'வித்' என்ற தாது ஞானம் என்ற பொருளிலுள்ளது என்பதற்கிணங்க 'வித்' என்னும் வடசொற்பொருளாக அமைந்தது ஞானஒளி. அந்த ஞானமே உயிர்களுக்கு உயிராக இருக்கும் சிவனுக்குத் திருமேனி. இதுவே பக்குவம் உடைய உயிர்களின் புத்திக்கு விளக்குப் போல ஒளிரும் தன்மையுடையது. ஆதலால், அதனை அறிவாயாக.

விளக்கம்:

வித – இது 'வித்' என்ற வடமொழித் தாதுவைக் (வினையடி) குறித்தது. இத் தாதுவையும் அதன் பொருளையுங் குறிக்கும் வடமொழி வசனம் 'விதக் ஞானே', 'வித்' என்பதை 'விதக்' என்றது வினையடிகளை அவற்றின் சுயரூபத்திற் சாத்தியப்படாமையின் ஏதாவது சாரியை சேர்த்துக் கூறும் இலக்கண விதிப்படியாம். தாது – வினையடி; பதி – கடவுள்; பக்குவர் – தகுதியுள்ளவர்; மதி – புத்தி. (3)

கற்பிக்கும் முறை

56. பருவ முற்றிய பாவக மோர்ந்து பின்
னுருகி யோதுக வோதரு முண்மையை
மருவி வாய்வரு பாடையின் வல்லவர்க்
கரிய வாரியத் தானு மறைகவே.

பருவம் முற்றிய பாவகம் ஓர்ந்துபின்
உருகி ஓதுக ஓத அரும் உண்மையை
மருவி வாய்வரு பாடையின் வல்லவர்க்கு
அரிய ஆரியத்தானும் அறைக ஏ.

உரை:

ஆசிரியர், மாணவர்களின் கல்வி கற்கும் பருவ முதிர்ச்சியில் உண்டாகும்

Koviloor Digital Library

கல்வித் தேர்ச்சியை அறிந்துகொண்ட பின்னர், தமிழில் தேர்ச்சியுடைய தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழ் மொழியின் மூலமாகவும், ஆரிய மொழியில் தேர்ச்சி பெற்றிருக்கும் சிவாசாரியர்களின் குடும்பங்களிலிருந்து வந்துள்ள பிள்ளைகளுக்கு ஆரிய மொழியிலும் கற்பிப்பாராக.

விளக்கம்:

சிவ ஆகமம் தமிழிலும் உண்டு; ஆரியத்திலும் உண்டு. தமிழிலே பயின்றவன் திருமந்திரம், ஞானாமிர்தம் போன்ற நூல்களைக் கற்று தன் ஆகம அறிவை வளர்த்துக் கொள்ளலாம்.

ஆரிய மொழியிற் பயின்றவன், ஆரிய மொழியில் உள்ள ஆகமங்களைப் பயின்று தன் ஆகம அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம். இது அவனுக்குத் தொழில் முறையில் திருக்கோயில் கிரியைகளைச் செய்வதற்கு உதவும்.

கிரியை நெறிக்கு சமஸ்கிருத மொழி ஆகமங்கள் அவசியம். தற்போது அவை தமிழ் மொழிபெயர்ப்பாகவும் வரத் தொடங்கியுள்ளன.

பாவகம் - இது இங்கு மாணவரின் இயல்பைக் குறிக்கும். **ஓதுக** - ஓதுதல் வேறு; படிப்பது வேறு; ஓதுதல் என்றால் அருள்நூல்களை ஓசையும் பொருளும் வழுவா முறை தெரிந்து உள்ளுருக உணர்ந்து இசைப்பது. திருஞான சம்பந்தரின் அறிவுரையாக, ''காதல் ஆகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்'' என்கிறது திருநெறித் தமிழ்.

பாடை - இது பாஷை என்பதன் தமிழாக்கம். இது மொழியைக் குறிக்கும். **ஆரியம்** - இன்றைய சமஸ்கிருத மொழி. **அறைக** - சொல்லுக. (4)

ஆசிரியர் இறைவனுக்கு நிகர்

57. **ஒப்பி லாவொரு வன்சிவ னோதிய**
வொப்பி லாவுரை தன்னையு ரைத்தகத்
தொப்பி லாவுணர் வாக்கிடு முத்தம
னொப்பி லாவர னேயென வோர்கவே.

ஒப்பு இ(ல்)லா(த) ஒருவன் சிவன் ஓதிய
ஒப்பு இ(ல்)லா(த) உரை தன்னை உரைத்து அகத்து
ஒப்பு இ(ல்)லா(த) உணர்வு ஆக்கிடும் உத்தமன்
ஒப்பு இ(ல்)லா(த) அரனே என ஓர்க ஏ.

உரை:

தனக்கு யாரும் இணையில்லாதவன் சிவபிரான். அவன் அருளியவை சிவ ஆகமங்கள். அவற்றிற்கு நிகரான நூல் கிடையாது. அத்தகைய சிவாகமங்களின் உட்பொருளை, மாணவர்கள் தெளிவாக உணர்ந்து தங்களின் நெஞ்சங்களில் பதிய

Koviloor Digital Library

வைத்துக் கொள்ள உதவுகிறவர் அவர்களுடைய ஞானாசிரியர். அவர் தோற்றத்தில் மனிதராக இருப்பினும், உபதேசிக்கும் சிறப்புக் காரணமாக, அவரை மாணாக்கர்கள் சிவபெருமானாகவே கருதுதல் வேண்டும்.

விளக்கம்:

சிவன் ஓதிய உரை - இது சிவபிரான் அருளிய சிவாகமங்களைக் குறிக்கும்.

''மன்னும் மாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்'' (9-10)

என்று மணிவாசகர் அருளிய *கீர்த்தித் திருஅகவல்* கூறுகின்றது. இஃது ஆகமம் சிவபிரானால் அருளப்பட்டது என்பதை உணர்த்துகின்றது.

உத்தமன் அரன் என ஓர்க - இங்கு உத்தமன் என்பது உபதேச குருவைக் குறிக்கிறது. பழங்காலத்தில் பெற்றோர்கள் விஜயதசமி நாளில் தங்கள் பிள்ளைகளுக்கு முதலில் கல்வியைத் தொடங்கி வைப்பார்கள். கல்வியைத் தொடங்கி வைக்கும் ஆசிரியர், ''அரி ஓம் நம நன்றாக'' என்று கூறிக் கல்வியைத் தொடக்கம் செய்வார். மாணவன், ''குரு வாழ்க, குருவே துணை'' என்று சொல்லி ஆசிரியரை வணங்குவான்.

''எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்'' **எழுத்து** - எழுச்சி. எழுத்து அறிவித்தவனின் தத்துவம் ஆன்ம எழுச்சியைத் தூண்டி விடுதல் என்று அதிவீரராம பாண்டியரின் *நறுந்தொகை* கூறுகின்றது.

''குருவாய் வருவாய் அருள்வாய் குகனே'' என்று அருணகிரிநாதர் தாம் அருளிய *கந்தர் அனுபூதியின்* வாயிலாக முருகப்பெருமானை அழைக்கிறார்.

''அருபரத்து ஒருவன் அவனியில் வந்து குருபரன் ஆகி அருளிய பெருமையை''ப் *போற்றித் திருஅகவல்* வாயிலாகத் திருவாதவூரர் விளக்குகிறார்.

''குருவே சிவம் எனக் கூறினன் நந்தி'' (*திருமந்திரம்* - 1556) என்கிறார் திருமூலர்.

தமிழில் உபநிடதம் அருளிய தாயுமானவர், தம் குருபிரானை,

''மந்த்ர குருவே! யோக தந்த்ர குருவே! மூலன்
மரபில்வரு மவுன குருவே!''

என்று போற்றுகிறார். அருள் நூல்களை அருளிய அருளாசிரியர்கள் அனைவரும் குரு வணக்கம் பாடிய பிறகே நூலைத் தொடங்கி முடித்திருக்கிறார்கள். (5)

58. **பருவ முற்றவர் பாலுப தேசிகன்
பரம னுக்குள வெண்குணம் பற்றுவன்
பருவ மற்றவர் பாலுப தேசிகன்
நரகி டைப்படி வானொடு நாளரோ.**

Koviloor Digital Library

பருவம் உற்றவர்பால் உபதேசிகன்
பரமனுக்கு உ(ள்)ள எண்குணம் பற்றுவன்
பருவம் அற்றவர்பால் உபதேசிகன்
நரகு இடைப் படிவான் நெடுநாள் - அரோ.

உரை:

தான் கூறும் உபதேச மொழியை உணரக்கூடிய பக்குவத் தகுதி வாய்ந்த மாணவனுக்கு உயர்ந்த ஆகம உண்மைகளை உரைக்கும் ஆசானிடம் சிவபிரானுடைய எட்டுக் குணங்களும் பொருந்தியிருக்கும். தன்னுடைய உபதேச மொழியை உணரக்கூடிய பக்குவம் இல்லாதவனுக்கு, உயர்ந்த உண்மைகளை உரைக்கும் ஆசான், தான் ஓர் உபதேச குரு என்ற தகுதியை இழந்து, நீண்ட காலம் நரகத்தில் கிடந்து வருந்துவான்.

விளக்கம்:

பரமன் - சிவன்; அரோ - அசைச் சொல்.

பரமனுக்கு உள்ள எண்குணம் - இது சிவபிரானுக்கு உள்ள எட்டுக் குணங்களைக் குறிக்கும். அவை வருமாறு:-

1. முதன்மை 2. தூய அறிவுடைமை 3. உயிர்களில் கலந்து இருத்தல் 4. வேண்டுதல் வேண்டாமை இல்லாது இருத்தல் 5. இருவினை இல்லாமை 6. பொறி வாயில் மனம் செல்லாமை 7. தனக்கு ஒப்பு இன்மை 8. அறமும் அந்தண்மையும் உடைமை.

திருவள்ளுவர் அருளிய *திருக்குற*ளில் கடவுள் வாழ்த்தில் இறைவன் ''எண்குணத்தான்'' எனக் குறிக்கப்பட்டுள்ளது.

''கோளில் பொறியில் குணம் இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை''

என்பது *குறள்*. (6)

தகுதியில்லாத மாணவர் இயல்பு

59. ஓது வார்க்கிடை யூறுரைப் பாரவர்
வாத பாடணர் வாக்கைம றப்பவர்
வேத மாதிய வோதி விடுப்பவர்
சாதி யாற்றணி யாரெனச் சாற்றுவார்.

ஓதுவார்க்கு இடையூறு உரைப்பார் அவர்
வாத பாடணர் வாக்கை மறப்பவர்
வேதம் ஆதிய ஓதி விடுப்பவர்
சாதியால் தணியார் எனச் சாற்றுவார்.

Koviloor Digital Library

உரை:

கல்வி கற்பவர் ஒழுங்காகக் கல்வி பயிலாதபடி தடுப்பதற்கு ஏற்ற இடைஞ்சல்களைச் செய்பவர், பிறர் சொல்லாத பழிச் சொற்களைச் சொன்னதாகக் கூறுவோர், வேதம் முதலிய ஞான நூல்களைக் கேட்டதை மறந்து விடுவோர், தொடர்ந்து முழுவதும் கற்றுத் தேர்ச்சி பெறாமல் இடையிலே கல்விப் பயிற்சியை விட்டவர் ஆகிய இவர்கள் இழிந்த குலத்தினர் எனச் சொல்லப்படுவர்.

விளக்கம்:

வாத பாடணர் - பிறர் சொல்லாத பழிச் சொற்களை அவர்கள் சொன்னதாக உரைப்பவர். தணியார் - இழிந்தவர். (7)

60. **தன்னின் மிக்கநற் சாதியிற் றோன்றினர்**
இன்ன தன்மைய ரென்றறி யப்படார்
பன்னு நூலின் பயன்முறைப் பற்றிலார்
சொன்ன சொற்பினுஞ் சோர்வுறச் சொல்லுவார்.

தன்னில் மிக்க நல்சாதியில் தோன்றினர்
இன்ன தன்மையர் என்று அறியப்படார்
பன்னும் நூலின் பயன்முறைப் பற்றுஇ(ல்)லார்
சொன்ன சொல் பி(ன்)னும் சோர்வு உறச் சொல்லுவார்.

உரை:

தன்னைவிட உயர்ந்த சாதியில் பிறந்தவர்; இன்ன குணம் உடையவர் என்று அறிந்து கொள்ள முடியாதவர்; ஒரு நூல் கூறும் கருத்துகளை அறிந்து பயன்பெற முடியாதவர்; ஒருவரிடம் கேட்டு அறிந்த ஒன்றை, கேட்டதைக் கேட்டபடியே சொல்லாமல் சொற்குற்றம் உண்டாகும்படி சொல்லுகிறவர். (8)

61. **சந்த பேதமும் தானறி யாரென**
விந்த வாறிசைத் தாரெழு வாயினர்
நிந்தை செய்துடன் நீக்கப் படுமவர்
மந்த ராமவர் தம்மை மதித்துமே.

சந்த பேதமும் தான் அறியார் என
இந்தவாறு இசைத்தார் எழுவாயினர்
நிந்தை செய்து உடன் நீக்கப்படும் அவர்
மந்தராம் அவர் தம்மை மதித்தும் ஏ.

Koviloor Digital Library

உரை:

செய்யுள்களின் வேறுபாடுகளை அறியர்தவரும் தம்மைத் தாமே பெருமையாக எண்ணுகிறவரும் நுண்ணறிவு இல்லாதவர்களும் ஆகிய இவர்கள், ஆகம உண்மைகளைக் கற்பதற்கு உரிய தகுதியில்லாதவர் ஆவர். ஆகவே, இவர்களை இகழ்ந்து ஒதுக்கித் தள்ள வேண்டும்.

விளக்கம்:

சந்தபேதம் - செய்யுள் வேறுபாடு; **நிந்தை** - இகழ்ச்சி;

எழுவாயினர் - எழுந்த மானத்துக்குப் பேசுவோர். அதாவது சிந்தனையின்றி வாய்க்கு வந்தபடி மொழிவோர். (9)

தரம் அறிந்து போதனை செய்க

62. **ஓது விப்பவ னொப்பிலி கற்புரை**
பூத லப்பொரு ளைப்பொரு ளென்றெணி
யாத னைப்படு வன்னர கத்திழிந்
தாத னுக்கவண் மிக்குற வாரன்னோ.

ஓதுவிப்பவன் ஒப்புஇலி கற்புஉரை
பூதலப் பொருளைப் பொருள் என்று எ(ண்)ணி
யாதனைப் படுவன் நரகத்து இழிந்து
ஆதனுக்கு அவண் மிக்க உறவார் அன்னோ.

உரை:

ஆகமம் என்பது தனக்கொப்பற்றவனான சிவனது வாக்கு எனும் மகிமைக்குரியது. ஆகவே, பொருளாசையின் காரண்மாகத் தகுதியில்லாதவனுக்கு ஆகமப் பொருளைப் போதிக்கிற ஆசிரியன், அறிவு இல்லாதவனாக நரகத்தில் விழுந்து துன்பம் அடைவான். அவ்வாறு அவன் துன்புறும்போது, அந்த நரகில் அவனுக்கு உதவுவார் யார்? ஐயோ!

விளக்கம்:

ஒப்பிலி - ஒப்பற்றவனானசிவன். **கற்புரை** - வாக்கு. அதர்வது பதி வாக்கு. **கற்புரை** - சிவன் பண்பைத் தரும் உரை.

கற்பு - பண்பு. சிவன் பண்பு ஆகமம் ஆதலின் அது ஒழுக்க பண்பிலார்க்குச் சொல்லும் பொருளன்று என்பது அர்த்தம்.

பூதலம் - பூமி. **யாதனை** - கொடிய நரகத் துன்பம். **ஆதன்** - அறிவு இல்லாதவன். **அவண்** - அங்கு நரகத்தில். (10)

Koviloor Digital Library

தக்கவருக்கு உபதேசம் செய்க

63. ஆக்கை நோயென வஞ்சினர்க் கற்புதன்
வாக்கை யோது மதிதிகழ் மாதவ
னோக்க மூன்றுடை நோன்மையன் வான்பிணி
போக்கு வானவ னன்றிப் புவியுளார்.

ஆக்கை நோய்என அஞ்சினர்க்கு அற்புதன்
வாக்கை ஓதும் மதிதிகழ் மாதவன்
நோக்கம் மூன்று உடை நோன்மையன் வான்பிணி
போக்குவான் அவன் அன்று இப்புவி உ(ள்)ளார்.

உரை:

உடலின் மீது உள்ள வெறுப்பினால் அதனை ஒரு நோய் எனப் பயந்த மாணாக்கனுக்குச் சிவன் அருளிய ஆகமப் பொருளை உபதேசித்தவன், அறிவினால் சிறந்து விளங்குகின்ற, மூன்று கண்களையுடைய, தவத்தினன் ஆன தட்சணாமூர்த்தி. அவன் அல்லாமல் இந்த உலகில் பிறவியாகிய பெரிய நோயைப் போக்குகிறவர் யார்?

விளக்கம்:

ஆக்கை நோயென அஞ்சினர் என்றது உடல் அபிமானம் அற்றவர் என்றபடி.

மதிதிகழ் மாதவன் - இது சிவபெருமானுடைய குருவடிவமான தட்சணா மூர்த்தியைக் குறிக்கும். தட்சணாமூர்த்தியைத் தென்முகக்கடவுள் என்பது சைவ மரபு.

உயிரானது ஆணவம், மாயை, கன்மம் என்ற மூன்று மலங்களிலிருந்து நீங்கி இறைவனோடு ஒன்ற வேண்டும் என்ற குறிப்பை உணர்த்துவது சின்முத்திரை. இதனை ஞானமுத்திரை, மோன முத்திரை என்றும் ஆன்றோர் கூறுவர்.

கல் ஆலமரத்தின் கீழ் குருபிரானாக அமர்ந்து சனகர், சனந்தனர், சநாதனர், சனத்குமாரர் என்ற நால்வருக்கும் மோன முத்திரையாகிய சின்முத்திரையின் நுட்பத்தை உணர்த்தியவர் தட்சணாமூர்த்தி.

''கல் ஆலின் நீழற் கதிகாண நால்வர்க்கும்
சொல்லாமல் சொன்ன துரை''

என்பது ஆன்றோர் மொழி.

''அன்றால நீழற் கீழ் அருமறைகள் தான் அருளி'' *(பூவல்லி - 13)*

என்கிறார் மாணிக்கவாசகர்.

ஆக்கை நோய் என அஞ்சினர் - தமிழில் ஆகமம் அருளிய திருமூலர் உடலை வெறுத்துப் பாடவில்லை.

Koviloor Digital Library

''உடம்பினைமுன்னம் இழுக்கு என்று இருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே''

என்று திருமூலர் கூறுவது கவனிக்கத்தக்கது. ஆதலால், ஆக்கை நோயென அஞ்சினர் என்பதற்கு உடலபிமானம் விட்டவர். உடலில் இருப்பதோ உடலைப் பேணுவதோ பிழையல்ல. மானாபிமானம் மிக்கு உரிய மட்டுக்கு மேல் உடலைப் போற்றுவது தான் பிழை. ஞான நூல் கேட்பவரில் அத்தவறு கண்டிப்பாக இல்லாதொழிய வேண்டும் என்பது. (11)

64. ஈசன்றானு மிவனிடத் தேய்ந்துயிர்ப்
பாசந்தன்னைப் பறிப்பன் பழுதகல்
வாசகஞ் சொல்வன் மற்றிவன் றன்புகழ்
பேசுவா ரெவர் பேசரும் பெற்றியால்.

ஈசன் தானும் இவனிடத்து ஏய்ந்து உயிர்ப்
பாசம் தன்னைப் பறிப்பன் பழுது அகல்
வாசகம் சொல்வன் மற்று இவன் தன்புகழ்
பேசுவார் எவர் பேச அரும் பெற்றியால்.

உரை:

சிவபெருமானும் இந்த ஞான ஆசானைச் சார்ந்து நின்று உயிர்களின் தளைகளைத் தீட்சையால் அகற்றி, பின்னர், குற்றம் இல்லாத ஞானத்தையும் உபதேசிப்பான். இந்த ஞான ஆசானுடைய புகழை யார் அளவிட்டு உரைக்க முடியும்? யாராலும் முடியாது என்பது குறிப்பு.

விளக்கம்:

ஏய்ந்து - பொருந்தி; பாசம் - தளை; பழுது - குற்றம்; பெற்றி - பெருமை; பழுது அகல் வாசகம் - குற்றம் இல்லாத உபதேச மொழி; பேச அரும் பெற்றி - குருவின் புகழ் பேசுதற்கு அரிய பெருமையுடையது.

''அறிவாக நின்ற நிலையில் சிந்தை அற நில்'' என்று தம் குருவாகிய மவுனகுரு தமக்கு அருள் செய்ததைத் தாயுமான அடிகள் குறிப்பிட்டு,

''... சமரச சிவானுபூதி
மன்ன ஒரு சொற்கொண்டு எனைத் தடுத்து ஆண்டு அன்பில்
வாழ்வித்த ஞான குருவே!''

என்று தம் குருபிரானைப் போற்றுவது கவனிக்கத்தக்கது. (12)

Koviloor Digital Library

65. தடுத்த தண்ணியன்பாற் கொள்க சாத்திரங்
கொடுக்குந் தேசிகன் தங்குலத் தில்லையே
லடுத்த வன்னியனே யருகன் றொழிற்
கொடுக் கொணா பரமார்த்தங் கொடுப்பதே.

தடுத்த தண்ணியன்பால் கொள்க சாத்திரம்
கொடுக்கும் தேசிகன் தம்குலத்து இல்லையேல்
அடுத்த அன்னியனே அருகன் தொழில்
கொடுக்க ஒ(ண்)ணா பரமார்த்தம் கொடுப்பதே.

உரை:

ஞான சாத்திர நூல்கள் கூறும் உண்மைகளை எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தும் அருளாளர்களிடம் உபதேச முறையில் கேட்டுப் பெறுதல் வேண்டும். ஞான சாத்திர உண்மைகளை விளக்கும் தகுதியான ஆசிரியன் தன் குலத்தில் இல்லா விட்டால், வேறு குலத்தைச் சேர்ந்த தகுதி வாய்ந்த ஆசிரியரைக் குருவாக அடைந்து பெற்றுக் கொள்ளலாம்.

விளக்கம்:

தடுத்த - புலன்களைத் தடுத்த, புலனடக்கமுள்ள; **தண்ணியன்** - செந் தண்மையுள்ளவன் புலனடக்கமுள்ளவனே குருவாதல் தகும்; **சாத்திரம்** - ஞான சாத்திரமாகிய ஆகம நூல்; **அருகன்** - தகுதி வாய்ந்தவன்; **பரமார்த்தம்** - மேலான உண்மைப் பொருள்; **கொடுக்க ஒண்ணா** - தகுதியில்லாதவருக்குச் சொல்லத் தகாத; **கொடுக்கும் தேசிகன் தம் குலத்து** - இது ஒருவர் தம் குலத்தைச் சேர்ந்தவரைச் சாத்திர ஆசிரியராகக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. (13)

சிவஞானம் உபதேசிக்கும் முறைமை

66. ஒப்பரிய வரனமல னுரைத்தவுரை யுதவுமுறை
செப்பின மெய்த்தவ சிறந்த சிவஞான கோசத்தை
யப்பரிசே யருந்தவர்க்கு மடைவிக்கு மடைவினையுஞ்
செப்புவங்கே ளீந்தார்க்கு மிரந்தார்க்குஞ் சிறப்புறவே.

ஒப்பு அரிய அரன் அமலன் உரைத்த உரை உதவும்முறை
செப்பினம் மெய்த்தவ சிறந்த'சிவஞான கோசத்தை
அப்பரிசே அருந்தவர்க்கும் அடைவிக்கும் அடைவினையும்
செப்புவம் கேள் ஈந்தார்க்கும் இரந்தார்க்கும் சிறப்புறவே.

Koviloor Digital Library

உரை:

உண்மையான தவத்தினையுடையவனே! தனக்கு ஒப்பாவார் யாரும் இல்லாத சிவபெருமான் அருளிய மேலான ஆகமத்தை ஆசிரியன் மாணாக்கர்க்கு உபதேசிக்கும் முறையைச் சொன்னோம். இனி, அச்சிவாகமத்தைத் தகுந்த பக்குவம் வாய்ந்தவர்களுக்கு வழங்கும் முறைமையையும், வழங்குபவரும் பெறுபவரும் உணருமாறு சிறப்பாகச் சொல்லுவோம்; கேட்பாயாக.

விளக்கம்:

அமலன் அரன் - மலங்கள் இல்லாத சிவன்; **உரை** - இங்கு ஆகமம்; **செப்பினம்** - சொன்னோம்; **செப்புவம்** - சொல்வோம்; **கோசம்** - நூல்; **பரிசு** - தன்மை; **ஈந்தார்** - கொடுத்தவர்; **இரந்தார்** - வேண்டியவர். (14)

ஆசானின் பூசனை

67. பராபரனை முதற்பூசை பண்ணிடுக வதன்பின்பு
பராபரனுக் கொத்தபர ஞானத்தைப் பரிவுறவே
பராபரனைப் போதிக்கும் பரஞானம் பாலிக்கும்
பராபரனைத் தேசிகனை யதன்பின்பு பகர்விதியால்.

பராபரனை முதல்பூசை பண்ணிடுக அதன் பின்பு
பராபரனுக்கு ஒத்த பரஞானத்தைப் பரிவு உறவே
பராபரனைப் போதிக்கும் பரஞானம் பாலிக்கும்
பராபரனைத் தேசிகனை அதன்பின்பு பகர்விதியால்.

உரை:

விதிப்படி சிவஞான நூலின் பொருளைத் தக்கவர்க்கு அளிப்பவன், முதலில் மேலான சிவபூசையின் மூலம் சிவபிரானை வணங்குக. பின்னர் அச் சிவனுக்கு நிகராக முத்தியை அளிக்கும் திருமுறைகளை விதிப்படி வழிபாடு செய்க. அதன் பிறகு சிவபிரானை அறிவிக்கும் மேலான சிவஞானத்தை உபதேசிக்கும் சிறந்தவனாக உள்ள ஆசிரியனைக் குருவை வழிபாடு செய்யும் முறைப்படி வழிபாடு செய்க.

விளக்கம்:

பராபரன் - மேலானவன்; **பரஞானம்** - கடவுளை உணர்த்தும் ஞானம்; **பரிவுஉற** - அன்பு பொருந்த; **பாலிக்கும்** - அளிக்கும்; **பகர்** - சொல்லப்பட்ட; **பூசை** - பூவைக் கொண்டு செய்யும் கடவுள் வழிபாடு பூசை ஆகும். இங்குப் பூசையென்பது, சிவ பிரானை மலரால் வழிபாடு செய்யும் சிவபூசையைக் குறிக்கிறது.

Koviloor Digital Library

பட்டினத்து அடிகள், தாயுமான அடிகள், குமர குருபர அடிகள், ஆறுமுக நாவலர் பெருமான் ஆகியோர் முறையாகச் சிவபூசை செய்த சான்றோர்கள் ஆவர். தமிழகத்தில் பதினெட்டுச் சைவ மடங்கள் உள்ளன. இம்மடங்களைச் சேர்ந்த சைவக் குருமார் அனைவரும் நாள்தோறும் விதிப்படி சிவபூசை செய்யும் வழக்கம் உடையவர்கள்.

வட இலங்கை அச்சுவேலி சிவத்திரு. ச. குமாரசாமிக் குருக்கள் '*சிவபூசை விளக்கம்*' என்று ஒரு நூலையும், சிதம்பரம் பெரிய மடம் சா. முத்துவேல் தேசிகர் '*சிவபூஜாவிதி*' என்று ஒரு நூலையும் இயற்றியுள்ளனர். இவை சிறந்தவை. (15)

கல்விக் கொடைக்கு ஏற்ற இடம்

68. **பூதலத்து ளவலங்கள் பொருந்தாது குணம்பொருந்து**
மாதலத்து ளெண்முழத்தால் வகுக்கமுறை மண்டபத்தை
யீதியற்ற வரிதெனினான் முழத்தாலு மியற்றிடுக
கோதொழித்த நாற்கோணம் வட்டமுமாங் கூறியதே.

பூதலத்துள் அவலங்கள் பொருந்தாது குணம் பொருந்தும்
மாதலத்துள் எண் முழத்தால் வகுக்கமுறை மண்டபத்தை
ஈது இயற்ற அரிதுஎனில் நால்முழத்தாலும் இயற்றிடுக
கோது ஒழித்த நாற்கோணம் வட்டமும்ஆம் கூறியது ஏ.

உரை:

நிலத்தில் கேடுகளை உண்டாக்கும் கந்தகசாரம் உள்ள நிலம் போன்றவற்றை ஒதுக்கித் தள்ளி, தூய்மையான நிலத்தில் கல்வியை வழங்குதற்கு ஏற்ற அழகுப் பந்தலை விதிப்படி எட்டு முழங்களால் அமைத்திடுக. அவ்வாறு அமைக்க முடியாத போது நான்கு முழங்களால் சதுரமாகவோ வட்டமாகவோ அமைத்திடுக.

விளக்கம்:

பூதலம் - பூமி; **அவலம்** - கேடு; **தலம்** - நிலம்; **இயற்ற** - செய்ய; **கோது** - குற்றம்; **ஒழித்த** - நீக்கிய; **மண்டபம்** - பந்தல், சிறுகல் கட்டடம்; **நாற்கோணம்** - நான்கு கோணங்கள் உள்ள அமைப்பு. **முழம்** - இருசாண் கொண்ட முழங்கை நீள அளவு. (16)

69. **அதனடுவே யம்புயத்தை வண்சுதையா லமைத்திடுக**
விதனயலே மற்றுமுள வலங்கார மியற்றிடுக
விதமுறவே யிதன்மீது விரித்திடுக விரைமலருஞ்
சிதநிறத்த நவவறுவை யதன்மீது சேர்த்துகவே.

Koviloor Digital Library

அதன் நடுவே அம்புயத்தை வண்சுதையால் அமைத்திடுக
இதன் அயலே மற்றும் உ(ள்)ள அலங்காரம் இயற்றிடுக
விதம் உறவே இதன்மீது விரித்திடுக விரைமலரும்
சிதம் நிறத்த நவ அறுவை அதன்மீது சேர்த்துக ஏ.

உரை:

அந்தப் பந்தலின் நடுவே சுண்ணச் சாந்தினால் எட்டு இதழ்த் தாமரைப்பூ வடிவை அமைத்திடுக; அதன் பக்கங்களிலே கொடி முதலிய அலங்காரங்களைச் செய்க; இவ்வாறு அழகு செய்த பின் அத்தாமரைப் பூவின் மீது பலவகை நறுமணப் பூக்களைத் தூவுக. அவ்வாறு தூவிய பின் அதன் மேலே வெண்மை நிறமுடைய கோடித் துணியை விரித்திடுக.

விளக்கம்:

அம்புயம் - தாமரை; சுதை - சாந்து; அயலே - அருகில், பக்கத்தில்; விரை - மணம்; சிதம் - வெண்மை; நவ - புதிய; அறுவை - துணி; நிறத்த - நிறம் உள்ள. (17)

70. தண்டரள நிரைவிரவு தம்பங்க ளொருநான்கு
கொண்டதனு ணாற்றிசையுங் குறிபெறவே நிறுவிடுக
வெண்டரள விதானத்தை விரித்திடுக மீதுறவே
யொண்டரள மாலைகளுங் கந்துகமு மொழுக்குகவே.

தண்தரள நிரை விரவும் தம்பங்கள் ஒரு நான்கு
கொண்டு அதனுள் நாற்றிசையும் குறிபெறவே நிறுவிடுக
வெண்தரள விதானத்தை விரித்திடுக மீது உறவே
ஒண் தரள மாலைகளும் கந்துகமும் ஒழுக்குக ஏ.

உரை:

குளிர்ந்த முத்துகளை ஒழுங்கு பெறப் பதித்துச் செய்த நான்கு தூண்களைப் பந்தலின் நான்கு பக்கங்களிலும் அழகு பெற நாட்டுக; பந்தலின் மேலே பொருந்தும் படி முத்து மேற்கட்டியை விரித்து, அதில் முத்து மாலைகளையும், முத்துப் பந்தினையும் கொடுங்கையிற் கட்டித் தொங்க விடுக.

விளக்கம்:

தண் - தண்மை, குளிர்ச்சி; தரளம் - முத்து; விரவும் - பதித்த; தம்பங்கள் - தூண்கள்; குறிபெற - குறித்த இடத்தில்; விதானம் - மேற்கட்டி; ஒண் - ஒளி; கந்துகம் - பந்து; ஒழுக்கு - வரிசை. (18)

Koviloor Digital Library

71. கண்டையுடன் சாமரையுங் கட்டிடுக பட்டினையுந்
துண்டமதி புற்புதம் பொற்றர்ப்பணங்க டுலக்கிடுக
திண்டிகழ் கும்போதகத்தைத் திசை நான்குஞ் செறித்திடுக
புண்டரிக வலரதன்வாய்ப் பொருத்துக வங்குரம் புரிந்தே.

கண்டையுடன் சாமரையும் கட்டிடுக பட்டினையும்
துண்டமதி புற்புதம் பொன் தர்ப்பணங்கள் துலக்கிடுக
திண் திகழ் கும்ப உதகத்தைத் திசை நான்கும் செறித்திடுக
புண்டரிக அலர் அதன்வாய்ப் பொருத்துக அங்குரம் புரிந்து ஏ.

உரை:

மணியையும் சாமரையையும் பலவகைப் பட்டாடைகளையும், நிலவையும் நீர்க்குமிழியையும் போன்ற நிறமுள்ள தட்டையையும், அழகுள்ள கண்ணாடிகளை யும் கவர்ச்சியாகக் கட்டுக. நீர் நிரம்பிய திண்மையான நிறை குடங்களை நான்கு பக்கங்களிலும் வைத்திடுக. முளைப் பாலிகை தெளித்த பின்னர், குடங்களின் மீது தாமரைப் பூக்களைச் சாத்துக.

விளக்கம்:

கண்டை - மணி; சாமரை - கவரி; துண்டமதி - பிறை நிலவு; புற்புதம் - நீர்க்குமிழி; பொன் - அழகு; தர்ப்பணம் - கண்ணாடி; கும்பம் - குடம்; உதகம் - நீர்; கும்ப நிகழுதகம் - உதகம் நிகழ்கும்பம், நிறைகுடம்; புண்டரிகம் - தாமரை; அலர் - பூ; அங்குரம் - முளை, முளைப் பாலிகை. (19)

சிவஞான நூலுக்குரிய இடமும் பீடமும்

72. அணியுறவே யரிபரிக்கு மாதனத்தை யாக்கிடுக
மணியுறவே மதகரியின் கோட்டாலு மற்றிதுதான்
பணவரிதேற் சந்தனத்தும் பண்ணிடுக வியந்திரத்தைத்
திணமருவு மதகரியின் கோட்டாலுஞ் சிறப்புறவே.

அணி உறவே அரிபரிக்கும் ஆதனத்தை ஆக்கிடுக
மணி உறவே மதகரியின் கோட்டாலும் மற்று இது தான்
ப(ண்)ண அரிதேல் சந்தனத்தும் பண்ணிடுக இயந்திரத்தை
தி(ண்)ணம் மருவு மதகரியின் கோட்டாலும் சிறப்புற ஏ.

உரை:

சிங்க உரு அழகு பெறத் தாங்கும் இருக்கையாகச் சிங்காசனத்தை வைரம், நீலம், மரகதம் போன்ற மணிகள் பதித்து, மதம் பொருந்திய யானையின் தந்தத்தினால் செய்க. இவ்வாறு செய்யமுடியாவிடில் சந்தன மரத்தினாலும் செய்யலாம். உறுதியான யானைத் தந்தத்தினால் யந்திர பீடம் செய்க.

Koviloor Digital Library

விளக்கம்:

அணி - அழகு; **அரி** - சிங்கம்; **பரிக்கும்** - தாங்கும்; **உற** - பொருந்த; **ஆதனம்** - ஆசனம், இருக்கை; **மணி** - ஆபரணக்கல்; **கரி** - யானை; **கோடு** - யானைத் தந்தத்தைக் குறிக்கும். தந்தம் என்பது பல். **அரிதேல்** - செய்ய முடியாவிட்டால்; **பண்ணிடுக** - செய்க; **இயந்திரம்** - இது மந்திரச் சக்கரம் ஆகும். தங்கத் தகடு அல்லது செம்புத் தகட்டில் பல கோடுகளையும் சிறு சிறு அறைகளையும் அமைத்து, அந்த அறைகளின் உள்ளே மந்திர எழுத்துகளை எழுதி, குறித்த காலம் வரை முறைப்படி உரு ஏற்றிச் சித்தி பெறுவது. இறைவன் எழுத்து வடிவமாகச் சக்கரத்தில் எழுந்தருளி இருப்பதாக எண்ணி, அதனை வணங்குவது நம் வழிபாட்டு முறைகளில் ஒரு வகை.

சக்கர வழிபாட்டில் திருவம்பலச் சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், புவனாபதி சக்க்ரம், நவாக்கரி சக்கரம் முதலியவற்றைத் திருமூல நாயனார் மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார். திருமந்திரம் ஒன்பது தந்திரங்களையுடையது. அதில் நான்காம் தந்திரத்தில் இந்தச் சக்கரங்களைப் பற்றிய தந்திர விளக்கம் உள்ளது. தந்திரம் என்றால் ஆகமம் என்றும் பொருள்.

திருவாவடுதுறை ஆதீனமும், தருமபுர ஆதீனமும், மாயூரம் தெய்வத் தமிழ் மன்றத்தினரும் வெளியிட்டுள்ள திருமந்திர உரை விளக்க நூல்களில், இந்தச் சக்கரங்களுக்குத் தக்க படங்களோடு விளக்கங்கள் உள்ளன.

சைவ சமய மக்கள் எங்கு வாழ்ந்தாலும் இந்த உண்மைகளைச் சைவ ஆதீனக் குருமாரை வணங்கிப் பெற்றுக் கொள்ளும் உரிமை உடையவர்கள் ஆவர். (20)

ஆதனமும் திருமுறையும்

73. இத்தகைய வாதனத்தை யிலங்குமணிப் பந்தரிடை
வைத்தறுவை கந்தமல ரதன்மீதே மலிவிக்க
வித்தகன்வே தகனாதி விளம்பியவாய் மொழியெழுதும்
புத்தகமு மதன்மீது வைத்திடுக புணர்வுறவே.

இத்தகைய ஆதனத்தை இலங்குமணிப் பந்தர்இடை
வைத்து அறுவை கந்தமலர் அதன்மீதே மலிவிக்க
வித்தகன் வேதகன் ஆதி விளம்பிய வாய்மொழி எழுதும்
புத்தகமும் அதன்மீது வைத்திடுக புணர்வு உற ஏ.

உரை:

இவ்வாறு அமைக்கப்பட்ட சிங்காசனத்தை அல்லது யந்திர பீடத்தை அழகிய அப்பந்தலின் நடுவே வைத்து, அதன்மீது துணி விரித்து, நறுமணம் உள்ள பூக்களை நிரம்பத் தூவி, அதன்மேலே மேலான மறை முதல்வனான சிவபிரான் உரைத்த ஆகமம் எழுதப் பெற்ற நூலைப் பொருந்தும் முறையில் வைத்திடுக.

Koviloor Digital Library

விளக்கம்:

இலங்கு - ஒளிவிடுகின்ற; **அறுவை** - துணி; **கந்தம்** - மணம்; **மலிவிக்க** - பெருக; **வித்தகன்** - மேலோன்; **விளம்பிய** - சொல்லிய; **வேதகம் ஆதி** - ஆதி வேதகன், மறை முதல்வனான சிவபெருமான்; **வாய்மொழி** - சிவாகம நூல்; **புணர்வு உற** - பொருந்த. (21)

பூசிக்கும் முறை

74. எழுதாத புத்தகத்தி னிருத்திய சொற் புத்தகத்தைப்
பழுதாகா ரோசனையைக் குங்குமத்தைப் பாளிதத்தை
யழகாகப் பூசிடுக வலர்மாலை தனையணிக
வழுவாத மகிழ் வுறவே சாத்திடுக வத்திரமும்.

எழுதாத புத்தகத்தின் இருத்திய சொல் புத்தகத்தைப்
பழுது ஆகா ரோசனையைக் குங்குமத்தைப் பாளிதத்தை
அழகாகப் பூசிடுக அலர்மாலை தனை அணிக
வழுவாத மகிழ்வு உறவே சாத்திடுக வத்திரமும்.

உரை:

எழுதாத வெற்றேடுகளின் மீது வைக்கப்பட்டுள்ள சிவ ஆகமத் திருநூலிலே குற்றமற்ற கோரோசனையையும் குங்குமத்தையும் பச்சைக் கற்பூரத்தையும் அழகாகத் தடவுக; பூமாலையைச் சூட்டுக; தவறாத அன்பினால் பரிவட்டமாக உடையைச் சாத்துக.

விளக்கம்:

இருத்திய - வைக்கப்பட்ட; பழுதுஆகா - கெட்டுப் போகாத; **பாளிதம்** - பச்சைக் கற்பூரம்; **அணிக** - சூடுக; **வழுவாத** - தவறாத; **வத்திரம்** - ஆடை, உடை. (22)

75. எத்தொகைய கறியமிர்தின் விதமுளநல் லினிமையுற
வத்தொகைய விதத்துடனே நிவே திக்க வமிர்தினையும்
பத்தி பெறு தீபமுடன் பஞ்சவித தூபத்தை
உய்த்திடுக மற்றுமுள வுபசார முறையுறவே.

எத்தொகைய கறி அமிர்தின் விதம் உள நல்இனிமைஉற
அத் தொகைய விதத்துடனே நிவேதிக்க அமிர்தினையும்
பத்தி பெறு தீபமுடன் பஞ்சவித தூபத்தை
உய்த்திடுக மற்றும் உ(ள்)ள உபசாரம் முறைஉற ஏ.

Koviloor Digital Library

உரை:

இனிமையான எத்தனை வகைக் கறி வகைகள், உணவு வகைகளைப் படைக்க முடியுமோ, அத்தனை உணவு வகைகளையும் படைத்திடுக. அன்போடு விளக்கு ஒளியும் ஐந்துவகை நறுமணப் புகையும் காட்டுக; வேறுபல மரியாதைகளும் முறையோடு செலுத்துக.

விளக்கம்:

கறியமுது - கறியாகிற அமுது; **நிவேதித்தல்** - படைத்தல்; **அமிர்து** - பால், அமுது, சோறு; **பஞ்ச வித** - ஐந்து வகை; **தூபம்** - நறும்புகை; **உய்த்திடுக** - செலுத்துக; **ஐந்து வகைத் தூபம்** - நறுமணத் தூபத்துக்கு உரிய ஐந்து வகைப் பொருள்கள்: 1. வெள்ளைக் குங்கிலியம் 2. கற்பூரம் 3. காரகில் 4. வெண்மை பொருந்திய சந்தனம் 5. சாம்பிராணி. (23)

ஐந்து வகைத் தூபப் பொருள்கள்

76. ஐவகைய தூபங்களாவனதான் குந்துருக்கந்
துய்யபசுங் கற்பூரந் துன்னிய காரகில் வெண்மை
யெய்தியசந்தன மினிய குற்குலுவு மெனவறிக
நெய்ய தனாற் றிருவிளக்கைக் காபிலத்தா னிகழ்த்துகவே.

ஐவகைய தூபங்கள் ஆவனதான் குந்துருக்கம்
துய்ய பசும் கற்பூரம் துன்னிய காரகில் வெண்மை
எய்திய சந்தனம் இனிய குற்குலுவும் என அறிக
நெய் அதனால் திருவிளக்கைக் காபிலத்தால் நிகழ்த்துக ஏ.

உரை:

ஐந்து வகையான நறுமணப் புகைகள் ஆவன, குந்துருக்கமும், சூடன் கற்பூரமும், வயிரமாக முற்றிய காரகிலும், வெண்மை பொருந்திய சந்தனமும், இனிமை செய்யும் குற்குலுவும் என அறிக. சன்னிதியில் இடும் திரு விளக்கைக் கபிலைப் பசுவின் நெய்யினால் இடுக.

விளக்கம்:

ஐவகை - ஐந்து விதம்; **துய்ய** - சுத்தமான; **துன்னிய** - முற்றிய; **எய்திய** - பொருந்திய;

காபிலம் - கபிலம், கருமை கலந்த மஞ்சள் நிறப் பசு; **குந்துருக்கம்** - வெள்ளைக் குங்கிலியம்;

காரகில் - வயிரமாக் முற்றிய ஒரு மணப் பொருள்; **குற்குலு** - சாம்பிராணி. (24)

Koviloor Digital Library

வணங்கும் முறை

77. வலஞ் செய்து தண்டதனை மானவிதி வழிதழுவத்
தலந் தன்னிற் பணிந்தெழுக தலைகரமற் றிருகன்னநந்
துலங்குமுக வாய்புயங்க ளெனுமெட்டுந் தோயமயி
ரிலங்குசிரங் கரமுழந்தா ளெனுமைந்து மிசைந்திடவே.

வலம் செய்து தண்டு அதனைமான விதிவழி தழுவத்
தலம் தன்னில்பணிந்து எழுக தலைகரம் மற்று இருகன்னம்
துலங்கு முகம் வாய் புயங்கள் எ(ன்)னும் எட்டும் தோய மயிர்
இலங்கு சிரம் கரம் முழந்தாள் எ(ன்)னும் ஐந்தும் இசைந்திட ஏ.

உரை:

அதனை வலம் வந்து, தடியைத் தரையில் கிடத்தியது போல விதிப்படி தலை, கை, இரு கன்னங்கள், முகம், வாய், தோள்கள் என்னும் எட்டு உறுப்புகளும் நிலத்தில் படிய வணங்கி எழுக. பின்னர், மயிர் விளங்கும் தலை, கைகள், முழந்தாள்கள் என்னும் ஐந்து உறுப்புகளும் பொருந்த,

விளக்கம்:

மான - ஒப்ப, போல; தண்டு - தடி; தலம் - தரை; தோய - படிய; துலங்கு - ஒளிரும்; இலங்கு - விளங்கும். (25)

குரு பூசை - பந்தர் வேறமைத்து குருவை அருச்சித்தல்

78. இந்தவகை சிவஞான பூசையினை யியற்றியுடன்
கந்தமலர்ப் புங்கோயி லதற்கயலே கடிதமைக்க
வந்தமலர்ப் பந்தரிடைத் தேசிகனை யருச்சிக்க
பந்தமறுத் தருள்வானைப் பரமனெனப் பாவித்தே.

இந்தவகை சிவஞான பூசையினை யியற்றியுடன்
கந்தமலர்ப் பூங்கோயில் அதற்கு அயலே கடிது அமைக்க
அந்த மலர்ப் பந்தரிடைத் தேசிகனை அருச்சிக்க
பந்தம் அறுத்து அருள்வானைப் பரமன் எனப்பாவித்து ஏ.

உரை:

இவ்வாறு சிவ ஆகம நூலை முறைப்படி வணங்கிய பிறகு, அதற்கு அருகில் ஒரு மலர்ப் பந்தலை அமைத்து, பற்றுகளை நீக்கி முத்தியைத் தரவல்ல ஞான ஆசிரியரை அங்கு எழுந்தருளச் செய்து அவரைச் சிவபெருமானாகவே கருதி, அவரை மலரால் வழிபாடு செய்க.

Koviloor Digital Library

விளக்கம்:

கடிது - விரைவில்; அயலே - அருகே; கந்தம் - மணம்; பந்தம் - பற்று; அருள்வானை - குருவை; தேசிகன் - குரு; பரமன் எனப் பாவித்து - குருவைக் கடவுளாகக் கருதி.

தனக்கு மெய்யறிவைப் புகட்டி அருள் செய்யும் குருவைச் சிவபிரானாகவே கருதுதல் சைவ மரபு.

''குருவே சிவம் எனக் கூறினன் நந்தி
குருவே சிவம் என்பது குறித்து ஓரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரை உணர்வு அற்றதோர் கோவே.''

- திருமந்திரம். 581

என்று திருமூல நாயனார் கூறுவது கவனிக்கத்தக்கது. (26)

ஆசிரியன் அனுமதி பெறல்

79. பூசித்துப் பரமசிவன் பூசனையைப் போலுளத்து
ளேசற்று வலஞ்செய்து பணிந்து குவித் திருகரமும்
தேசுற்ற தேசிகனே சிவஞான தானவினை
யாசற்று நிறைவேற வனுமதஞ்செய் கெனவறைந்தே.

பூசித்துப் பரமசிவன் பூசனையைப் போல் உளத்துள்
ஏசற்று வலம்செய்து பணிந்து குவித்து இருகரமும்
தேசுஉற்ற தேசிகனே சிவஞான தானவினை
ஆசு அற்று நிறைவேற அனுமதம் செய்க என அறைந்து ஏ.

உரை:

பரமசிவனைப் பூசனை செய்து வணங்குவது போலக் குருவையும் உள்ளத் தூய்மையோடு பூசித்து, இரு கைகளையும் கூப்பியபடி அவரை வலம் வந்து வணங்கி, அருள் ஒளி பொருந்திய குருவே! பக்குவப்பட்டவர்களுக்குச் சிவ ஆகம நூற் பொருளை வழங்கும் செயல், குற்றங் குறைகள் இல்லாமல் முடிவு பெறச் சம்மதம் அருள்க என்று வேண்டி,

விளக்கம்:

பூசித்து - அடியவர்கள் இறைவன் திருவடிகளில் மலர்களால் வழிபாடு செய்து வணங்குவதுபோலக் குருவுக்கு மாணாக்கன் செய்யும் வழிபாடு குருபூசை எனப்படும். பூசித்து என்றால், பூசை செய்து என்று பொருள்.

Koviloor Digital Library

ஏசற்று - மனவேறுபாடு இல்லாமல்; **தேசு** - அருளாகிய ஒளி; **தானம்** - கொடை; இங்கு ஆகம நூலைப் பிறருக்குக் கற்பித்தலைக் குறிக்கும். **ஆசு** - குற்றம்; **நிறைவேற** - முடிவு பெற; **அறைந்து** - சொல்லி; **அனுமதம்** - சம்மதம்; **செய்க** - அருள்க. (27)

80. அற்புதனா மாரியன்ற
னுமதிபெற் றறன்மூழ்கிப்
பொற்புடைய வெண்கலிங்கம்
புனைந்தணிந்து வெண்ணீறுந்
தற்பரனை யுண்ணினைந்து
தரணிமிசைப் பணிந்தெழுந்து
சொற்பத வாசக முறையைத்
துயக்கறவே விரித்துடனே.

அற்புதனாம் ஆரியன்தன்
அனுமதி பெற்று அறல்மூழ்கிப்
பொற்பு உடைய வெண்கலிங்கம்
புனைந்து அணிந்து வெண்ணீறும்
தற்பரனை உள்நினைந்து
தரணிமிசைப் பணிந்து எழுந்து
சொற்பத வாசகமுறையைத் துயக்கு
அறவே விரித்து உடனே.

உரை:

வியக்கத்தக்க ஆசானுடைய சம்மதம் பெற்று நீரில் முழுகிக் குளித்து, அழகிய வெண்ணிற ஆடை உடுத்தி, நெற்றியில் திருநீறு பூசி, சிவபிரானை நெஞ்சிலே எண்ணி நிலத்தின் மீது வணங்கி எழுந்து, சோர்வு அகலும்படி ஆகம நூலை உடனே பிரித்து,

விளக்கம்:

அற்புதம் - அதிசயன்; **அறல்** - நீர்; **பொற்பு** - அழகு; **புனைந்து** - உடுத்தி; **அணிந்து** - தரித்து, பூசி; **தரணி** - தரை; **சொற்பதம்** - சொற்களால் விளக்கப்படுகிற; **தற்பரன்** - கடவுள்; **வாசக முறை** - இங்கு ஆகம நூலைக் குறிக்கும். **முறை** - திருமுறை. **ஆரியன்** - இங்கு ஞான உபதேசம் செய்த ஆசானைக் குறிக்கும்.

''பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே''

(*திருவாசகம் - சிவபுராணம்* - 64)

என்று திருவாதவூரர், குரு வடிவில் தமக்கு அருள்புரிந்த சிவபிரானைக் குறிப்பிடுவது கருதத்தக்கது. **கலிங்கம்** - இது முதலில் வட இந்தியக் கலிங்க நாட்டைக்

Koviloor Digital Library

குறித்தது. பிறகு, கலிங்க நாட்டில் நெய்யப்பட்ட ஆடையைக் குறித்தது. பின்னர், ஆடை அல்லது துணியைக் குறிக்கும் பெயராக இலக்கியங்களில் இடம் பெற்றுவிட்டது. (28)

81. மற்றைமுறை யதுதன்னில் வரைககவி யொருநான்கென்
றுற்றமுறை தனையொடுக்க வுவகையுற வொருமையுட
னற்புதனைத் தேசிகனை யருத்திடுக வன்னாதி
கற்புடைய விரதியர்க்கும் வேதியர்க்குங் களிப்புறவே.

மற்றைமுறை அதுதன்னில் வரைக கவி ஒருநான்கு என்று
உற்ற முறை தனை ஒடுக்க உவகை உற ஒருமையுடன்
அற்புதனைத் தேசிகனை அருத்திடுக அன்னாதி
கற்புடைய விரதியர்க்கும் வேதியர்க்கும் களிப்புற ஏ.

உரை:

நான்கு பாடல்கள் எழுத வேண்டும் என்ற ஒருமுறையும் இருக்கிறது. அதனை அடக்குக. மற்றொரு பாட்டுடன் மகிழ்வோடு வியக்கத் தக்கவனான ஆசானுக்கும், கல்வியறிவுடைய நோன்பாளர்களுக்கும், வேதம் ஓதுகிற வேதியனுக்கும் அவர்கள் மகிழுமாறு பலவகைக் கறி வகைகளோடு உணவு வழங்கி அவர்களை உண்ணச் செய்க:

விளக்கம்:

அன்னாதி - அன்ன ஆதி என்பது அன்னாதி என வந்தது. சோறு, கறி வகைகள் முதலான உணவைக் குறிக்கும். **அருத்திடுக** - உண்பித்தல் செய்க; **கற்புடைய** - கல்வியறிவுள்ள; **விரதியர்** - விரதமிருப்பவர், நோன்பு நோற்பவர்; **வேதியர்** - வேதம் ஓதுகிற பிராமணனை வேதியன் என்பர். தம்மைத் தாம் வேதித்துக் கொள்பவர்தான் வேதியர் என்றாற் சிறப்புப் பொருளாகும். வேதித்தலாவது மனிதப் பொதுவாகிய பிராகிருத நிலையிலிருந்து ஞான சாதனைக்குரிய சமஸ்கார நிலைக்குத் தம்மை திருத்திக் கொள்ளல் என்க. **கவிஒரு நான்கு** - இது எந்தப் பாடல் வகையைக் குறிக்கிறது என்பது விளங்கவில்லை. உரையாசிரியரான ஒதுவா மூர்த்திகள் இந்தப் பாடலுக்கு விளக்கம் எழுதவில்லை. (29)

எல்லார்க்கும் உணவிடுதல்

82. விருத்தர் கிருபணர் பாலர் மிடியாடு பிணியாள
ரொருத்தரையு மற்றார்க ளூனத்தா ரெனுமிவர்க்கு
மருத்திடுக வுறவினுட னதன்பின்றா னருந்திடுக
பிருத்தியரை யதன்பின்பு பேணிடுக பிறரையுமே.

Koviloor Digital Library

விருத்தர் கிருபணர் பாலர் மிடியாடும் பிணியாளர்
ஒருத்தரையும் அற்றார்கள் ஊனத்தார் எ(ன்)னும் இவர்க்கும்
அருத்திடுக உறவினுடன் அதன்பின்தான் அருந்திடுக
பிருத்தியரை அதன்பின்பு பேணிடுக பிறரையும் ஏ.

உரை:

வயது முதிர்ந்தோர், உலோபியர், சிறுபிள்ளைகள், வறுமையாளர்கள், நோயரளிகள், ஆதரவு இல்லாதோர், முடவர், குருடர் போன்ற உடற்குறை உள்ளவர்கள் அனைவருக்கும் உணவிடுக. அதன்பிறகு உற்றார் உறவினரோடு சேர்ந்து உணவு அருந்துக. பின்னர் பணியாள்கள், அறிமுகம் இல்லாத புதியவர்கள் ஆகியோரையும் உணவு உண்ணும்படி செய்க.

விளக்கம்:

விருத்தர் - முதியோர்; கிருபணர் - உலோபி; பாலர் - சிறுபிள்ளைகள்; ஒருத்தரையும் அற்றார் - யாரும் ஆதரவு இல்லாதவர்;

ஊனத்தார் - உடலில் குறையுடையவர்; குருடர், முடவர் போன்றவர். பிருத்தியர் - அடிமை, பணியாள். (30)

பலி தரும் முறை

83. அற்றைநிசிக் கணபலியை யமைத்திடுக துயிலினையும்
பற்றிடுக பிரமசரி யல்லாதார் பற்றொழிக
மற்றைய நாண் முதல்யாம மண்டபத்தை யிருமுழத்திற்
கற்புறவே யமைத்திடுக காண்பார் கண் களித்திடவே.

அற்றைநிசிக் கணபலியை அமைத்திடுக துயிலினையும்
பற்றிடுக பிரமசரி இல்லாதார் பற்று ஒழிக
மற்றைய நாள் முதல்யாமம் மண்டபத்தை இருமுழத்தில்
கற்பு உறவே அமைத்திடுக காண்பார் கண் களித்திடவே.

உரை:

அன்று இரவு உருத்திர கணம் முதல் ஊரைக் காவல் புரியும் வயிரவன் வரையுள்ள சிவகணங்களுக்குப் பலிச் சோறு இடுக. பின்னர், மணமாகாதவர் இரா உறக்கம் கொள்ளலாம். மணமானவர் உறங்குதல் ஆகாது. அடுத்த நாள் அந்தி நேரத்திற்குப் பின்னர் அதாவது கதிரவன் மறைந்த மூன்று மணி நேரத்தில் முறையோடு, பார்ப்பவர்கள் பாராட்டும்படி, இரண்டு முழ நீளமும், இரண்டு முழ அகலமும் உள்ள சிறு பந்தல் ஒன்றை அமைத்திடுக.

Koviloor Digital Library

விளக்கம்:

நிசி - இரவு; **துயில்** - உறக்கம்; **பிரமசரி** - குருகுல மாணவ நிலையில் உள்ளோன்; **யாமம்** - மூன்று மணி நேரம் கொண்ட கால அளவு. **முழம்** - இரு சாண் கொண்ட முழங்கையின் நீள அளவு. **பலி** - சைவ மரபில் பலி என்பது தெய்வத்துக் காகப் படைக்கப்படும் உணவு 'பலிச்சோறு' எனப்படும். காகத்திற்காகப் படைக்கப்படும் சோறு, 'காகபலி' எனப்படும். அருச்சனைக்கு உரிய பூவும் 'பலி' என்று அழைக்கப்படும். (31)

கலைமகளின் இருக்கை

84. அழகுறவே சரத்தாலு மமைத்த வியந்திரபீடத்
தெழிலுடைய புத்தகத்தை யிருத்தி யருச்சனை யியற்றி
பழு தறு நாகர நந்தி முதலிபியைப் பயின்று வலா
னெழுதிடுக படித்திடினு மருச்சன்னைதா னித்தகைத்தே.

அழகு உறவே சரத்தாலும் அமைத்த இயந்திர பீடத்து
எழில் உடைய புத்தகத்தை இருத்தி அருச்சனை இயற்றி
பழுது அறு நாகரம் நந்திமுதல் லிபியைப் பயின்று வ(ல்)லான்
எழுதிடுக படித்திடினும் அருச்சனைதான் இத்தகைத்து ஏ.

உரை:

முன் சொன்ன பந்தலில் பூமாலை முதலியவற்றால் அழகு செய்யப் பெற்ற சரசுவதி பீடத்தில் சிவ ஆகமத் திருநூலை வைத்து முறைப்படி அதனை மலரால் பூசனை செய்க. பின்னர், தேவநாகரி என்னும் சமஸ்கிருத மொழியைப் பயின்று தேறியவன், சமஸ்கிருத மொழியில் ஆகம நூலைப் புதிய தட்டில் எழுதுவானாக. மீண்டும் படிப்பதற்கும், வழிபாட்டிற்கும் இந்த மொழியையே பயன்படுத்துக.

விளக்கம்:

பீடம் - இது ஆகம நூலை வைப்பதற்கு உரிய சிக்குப் பலகையைக் குறிக்கிறது. இதனைச் சரசுவதி பீடம் என்பார்கள். சரசுவதி பீடம் என்றால் கலைமகளின் இருக்கை என்று பொருள்.

நந்தி நாகரம் - நந்தி நாகரம் என வரவேண்டியது நாகரம் நந்தி என வந்தது. இது ஒரு வகை நாகர எழுத்து. இது இக்காலத்தில் தேவ நாகரி எனப்படுகிறது.

தேவ நாகரி - வட இந்தியாவில் வழங்கும் ஆரிய மொழியின் வடிவெழுத்து. சுழிகளின்றிக் கோடுகள் மட்டுங் கொண்டது. (32)

Koviloor Digital Library

85. அந்தமுறி னுபவசியா யமலனடி யருச்சிக்க
செந்தழலை யோம்பிடுக திருமுறையை யருச்சிக்க
பந்தனையை யறுத்தருளைப் பாலிக்குங் குருபரனைச்
சிந்தை மகிழ்ந் தருச்சனையைச் செய்திடுக சிறப்புறவே.

அந்தம்உறின் உபவசியாய் அமலன்அடி அருச்சிக்க
செந்தழலை ஓம்பிடுக திருமுறையை அருச்சிக்க
பந்தனையை அறுத்து அருளைப் பாலிக்கும் குருபரனைச்
சிந்தை மகிழ்ந்து அருச்சனையைச் செய்திடுக சிறப்புற ஏ.

உரை:

ஆகமம் எழுதுகிற பணிமுற்றுப் பெற்றால் விரதமாக இருந்து இறைவன் திருவடியை வழிபாடு செய்க; தீயைப் போற்றுக; சிவாகம நூலை வணங்குக; பற்றுகளை ஒழித்து அருளைத் தரும் குருவாகிய கடவுளை உள்ளம் மகிழ்ந்து சிறப்பாக வழிபாடு செய்க.

விளக்கம்:

அந்தம் உறின் - முடிவு பெற்றால்; **அமலன்** - இறைவன்; **அடி** - திருவடி; **உபவசியாய்** - உபவாசியாய் என்பது, உபவசியாய் என வந்தது. விரதமிருந்து என்பது பொருள். **தழல்** - தீ; **ஓம்பிடுக** - போற்றுக; **திருமுறை** - திருநூல், இங்குச் சிவாகமத்தைக் குறிக்கும். முறை என்றால் நூல் என்பது பொருள். **பந்தனை** - பற்று; **பரன்** - கடவுள்; **குருபரன்** - குருவாகிய கடவுள்.

''அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையை''

(திருவாசகம் - போற்றித் திருஅகவல்)

என்று திருவாதவூரர் கூறியிருப்பது காண்க.

அருச்சனை - பூக்கள் தூவி இறைவனைப் பூசித்தல். (33)

86. அற்றைநிசி யவ்விடத்து வேதாதி யரவத்தான்
மற்றுமுள பாடலினா னாடகத்தின் வசியாலுஞ்
செற்றிடுக துயிலதனைத் தினகரனைத் தரிசித்தே
சிற்பமுறத் தேரதனைச் சிறப்பிக்க விதி தெருண்டே.

அற்றைநிசி அவ்விடத்து வேதஆதி அரவத்தால்
மற்றும் உள பாடலினால் நாடகத்தின் வசியாலும்
செற்றிடுக துயில் அதனைத் தினகரனைத் தரிசித்தே
சிற்பம்உறத் தேர் அதனைச் சிறப்பிக்க விதி தெருண்டு ஏ.

Koviloor Digital Library

உரை:

அன்று இரவு அந்த ஆகமநூல் வைக்கப்பட்டுள்ள அழகிய பந்தலில் அமர்ந்து ஆரிய மொழியில் உள்ள உபநிடதங்களையும், ஆகமங்களையும், தேவார திரு வாசகங்களையும் ஓதுக; சிவ நடனங்களை நிகழ்த்துக. இரவு முழுவதும் விழித் திருந்து, அடுத்த நாள் காலைப் பொழுதில் கதிரவனைப் பார்த்து வணங்குக. சிற்ப நூல் முறைப்படி செய்யப்பட்ட தேரை அழகுபடுத்துக.

விளக்கம்:

அற்றை - அன்று; **வேத ஆதி** - வேதம் முதலானவை. **அரவம்** - முழக்கம்; **நாடகம்** - இங்கு நடனம் அல்லது கூத்து ஆகும். **செற்றிடுக** - வென்றிடுக; **தினகரன்** - ஞாயிறு; **தெருண்டு** - தெளிந்து;

தேர் - இரதம்; தேர் இரண்டு வகை. ஒன்று போருக்கு உதவுவது. மற்றொன்று கோவில் திருவிழாவில் வீதிவலம் வருவது. போருக்கு உதவுகிற தேர் இரண்டு அல்லது நான்கு சக்கரங்களை உடையது; குதிரைகளால் இழுக்கப்படுவது. கோவில் தேர் நான்கு சக்கரங்கள் உள்ளது; மக்களால் வடங்களைப் பற்றி இழுக்கப்படுவது; கோவில் தேர் பெரியது; சிறு கோபுரம் போன்ற அமைப்பு உடையது; போருக்கு உரிய தேர் சிறியது; இருவர் மட்டும் அமரக் கூடியது (34)

87. **இத்தகைய விமானத்து ளிறையறையு மொழியெழுதும்**
புத்தகத்தைப் புணர்வித்துப் பூசனையைப் புரிந்திடுக
பத்தியுட னரராலே பரிப்பிக்கப் பலர்பரவ
வத்தனம ராலயத்து ணகர்வலஞ்செய் தாக்குகவே.

இத்தகைய விமானத்துள் இறை அறையும் மொழி எழுதும்
புத்தகத்தைப் புணர்வித்துப் பூசனையைப் புரிந்திடுக
பத்தியுடன் நாராலே பரிப்பிக்கப் பலர் பரவ
அத்தன் அமர் ஆலயத்துள் நகர்வலம் செய்து ஆக்குக ஏ.

உரை:

இவ்வாறு அழகு செய்யப்பட்ட தேரில் சிவபிரான் அருளிய மேலான ஆகமத்தைப் பொருத்தமாக வைத்துப் பூசனை செய்க. பின்னர் ஆகமத் திருநூலை நகர்வலம் வருமாறு செய்து, அன்புடன் திருவடி தாங்குபவரால் ஆகம நூலைத் தாங்கும்படி செய்து, கூடியிருக்கின்ற அடியவர்கள் பலரும் ஆகம நூலை வணங்கி நிற்க, இறைவன் எழுந்தருளியுள்ள திருக்கோயிலின் உள்ளே தேருடன் ஆகமத்தையும் கொண்டு சென்று, பின்னர் ஆகம நூலை எங்கு எழுந்தருளுவிக்க வேண்டுமோ அங்கு எழுந்தருள்விக்க.

Koviloor Digital Library

விளக்கம்:

புணர்வித்து - பொருந்த வைத்து; பரிப்பிக்க - தாங்கும்படி செய்க; **அறையும் மொழி** - உரைத்த ஆகமநூல்; **பூசனை** - வழிபாடு; **நரர்** - மனிதர்; இங்கு ஆகம நூலைத் தாங்குபவரைக் குறிக்கிறது. பரவ - தொழ; **அத்தன்** - இறைவன்; **அமர்** - எழுந்தருளும்; **ஆக்குக** - செய்க; நூலை உரிய இடத்தில் வைக்கும்படி செய்க.

தமிழகத்தில் ஒவ்வொரு பெரிய திருக்கோயிலிலும் அருள் நூலைத் திரட்டி வைத்துப் பாதுகாப்பார்கள். நித்தியப் பூசையும் நிகழ்த்துவார்கள். இவ்வாறு நூல்களைத் தொகுத்துப் பாதுகாக்கும் இடத்தைச் 'சரசுவதி பண்டாரம்' என்பது மரபு. சரசுவதி பண்டாரம் என்றால், நூல்களின் களஞ்சியம் என்று பொருள். (35)

சிறப்பிக்கும் முறை

88. **அல்லதுபுத் தகமதனை யானைமுடி மிசை யமைத்து**
நல்லநகர் வலம் வருக நகரத்தார் நாட்டாரும்
வெல்லையறு வையும் வீக்கி விழைவுடனே புடையடைய
மல்கமிகு மங்கலங்கள் வணங்கிமுனே செலமன்னன்.

அல்லது புத்தகம் அதனை யானைமுடி மிசை அமைத்து
நல்லநகர் வலம் வருக நகரத்தார் நாட்டாரும்
வெல்லை அறுவையும் வீக்கி விழைவுடனே புடை அடைய
மல்கமிகு மங்கலங்கள் வணங்கி மு(ன்)னே செ(ல்)ல மன்னன்.

உரை:

அல்லது கோயில் யானையின் மீது தவிசு அமைத்து, அந்தத் தவிசின் மீது சிவாகம நூலை வைத்து அரச நகரில் வலம் வருக. வலம் வரும் வழியில் நடை விரிப்பை விரித்திடுக. நகர் வலத்தின் முன்னே மன்னரும், மன்னரைத் தொடர்ந்து ஊரில் உள்ள பெருமக்களும், அவர்களின் இரு பக்கங்களிலும் கவரி, நிறை குடம், கண்ணாடி, தோட்டி, முரசு, பதாகை, விளக்கு, இணைக் கயல் முதலிய மங்கலப் பொருள்களை ஏந்தியவர்களும் வர நகர்வலம் அமைதல் வேண்டும்.

விளக்கம்:

யானைமுடிமிசை அமைத்து - யானையின் மீது தவிசு (அம்பாரி) அமைத்து; **நாட்டார்** - நாட்டிலுள்ள பெருமக்கள்; வெள்ளை என்பது, செய்யுளின் எதுகை நோக்கி 'வெல்லை' என வந்தது.

அறுவை - துணி; **வீக்கி** - நிறைத்து; **புடை** - பக்கம்; **விழைவு** - விருப்பம்; **மல்கமிகு** - மிகுதியாகப் பெருக; **மங்கலங்கள்** - மங்கலப் பொருள்கள்.

Koviloor Digital Library

திருத்தொண்டர் புராணம்

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தமிழகம் முழுவதையும் ஆட்சி செய்த இரண்டாம் குலோத்துங்கன் என்ற அநபாயச் சோழர், தம் முதல் அமைச்சரான அருள்மொழித் தேவர் என்ற சேக்கிழாரைக் கொண்டு திருத்தொண்டர் புராணத்தை இயற்றுவித்தார்.

சேக்கிழார் பெருமான் தாம் அருளிய திருத்தொண்டர் புராணத்தைத் தில்லை அம்பலவாணர் சந்நிதியில் அரங்கேற்றினார். அநபாய சோழரும், சைவ மடங்களின் தலைவர்களும், தில்லை வாழ் அந்தணர்களும், ஏனைய கற்றறிந்த சான்றோர்களும் சேக்கிழாரைப் பாராட்டிப் புகழ்ந்தார்கள்.

மன்னர் அநபாய சோழர் சேக்கிழார் பெருமானாருக்கு ஞானமுடி சூட்டி, 'தொண்டர் சீர் பரவுவார்' என்ற பட்டத்தையும் சூட்டினார். பின்னர், புராணத் திருமுறையை முறைப்படி பூசித்து, யானையின்மீது தவிசில் (அம்பாரியில்) சேக்கிழார் பெருமானையும் புராணச் சுவடிகளையும் எழுந்தருளச் செய்தார்.

பிறகு, அநபாய சோழர், சேக்கிழார் பெருமானுக்குப் பின்னால் அமர்ந்து தம் இரு கைகளாலும் இரட்டைச் சாமரை வீசி நகர்விழாச் செய்வித்தார் என்பது வரலாறு.

இந்த வரலாற்றை நினைவிற் கொண்டே ஆசிரியர் இந்த 36 ஆம் பாடலை இயற்றியுள்ளார். (36)

89. பலியதனைத் திசை தோறும் பண்ணிடுக பார்த்திபனு
நிலவணியுஞ் சடைமுடியார் மாபூசை நிகழ்த்திடுக
கொலைமுதலு மொழித்திடுக நிகளாதி குறைத்திடுக
மலைவிலிக்கு மாபூசை மனைதோறும் வகுக்கவரோ.

பலி அதனைத் திசைதோறும் பண்ணிடுக பார்த்திபனும்
நிலவு அணியும் சடைமுடியார் மாபூசை நிகழ்த்திடுக
கொலை முதலும் ஒழித்திடுக நிகளம் ஆதி குறைத்திடுக
மலைவி(ல்)லிக்கு மாபூசை மனைதோறும் வகுக்க அரோ.

உரை:

திசைகளைக் காவல்புரியும் காவல் தெய்வங்களுக்கு ஆசாரியர் மூலம் பலியாக உணவு படைத்திடுக. நாடாளும் மன்னன் தன் செலவில், தலை முடியில் பிறை நிலவைச் சூடிய சிவபிரானுக்குச் சிறப்பாக வழிபாடுகளைச் செய்வானாக. சிறு தெய்வங்களுக்கு உயிர்ப்பலி இடுதலையும், களவு, கள் அருந்துதல் போன்ற செயல்களையும் கைவிடுமாறு தன் குடிமக்களை மன்னன் கண்காணிப்பானாக. தவறுகள் செய்து, கைகளில் விலங்குகள் பூட்டப் பெற்றிருக்கும் குற்றவாளிகளை

Koviloor Digital Library

மன்னன் மன்னித்து விடுவிப்பானாக. மேரு மலையை வில்லாகக் கொண்ட பரமனுக்கு இல்லங்கள் தோறும் மிகச் சிறப்பாக வழிபாடுகள் செய்யுமாறு மன்னன் ஆணை பிறப்பிப்பானாக.

விளக்கம்:

பலி - திசைத் தெய்வங்களுக்குப் படைக்கப்படும் உணவு; **பார்த்திபன்** - மன்னன்; **மாபூசை** - சிறப்பு வழிபாடு; **நிகளம்** - கையில் பூட்டப்படும் விலங்கு. **நிகள ஆதி** - கைகளில் விலங்கு முதலியன பூட்டித் தண்டித்தொறுக்குஞ் செயல். சிவ பிரானுக்கு நடைபெறும் பூசையில் எல்லாரும் கலந்து கொள்ள வேண்டும். அதனால், குற்றவாளிகள் விடுதலை பெற வேண்டும் என்பது குறிப்பு. **மலைவில்லி** - திரிபுர அசுரர்களை அழிக்கச் சிவபிரான் மேரு மலையை வில்லாகக் கொண்டார் என்பது புராண கதை. இதனால், சிவனை மலை வில்லி என்று சொல்வர். மலை வில்லி என்றால், மலையை வில்லாகக் கொண்டவன் என்று பொருள். **அரோ** - இது செய்யுளை நிரப்ப வந்த அசைச் சொல். இதனை இடைச்சொல் என்றும் கூறுவர். இதற்குப் பொருள் கிடையாது. இவ்வாறே செய்யுளின் முடிவில் வரும் 'ஏ' என்னும் எழுத்தை அசை எழுத்து என்பர். இதற்கும் பொருள் இல்லை. **மனை** - இல்லம்; **வகுக்க** - அரசன் ஏற்பாடு செய்யக் கட்டளை இடுக. (37)

90. **பருவ மறுங் காலத்தின் முதமதனைப் பரமனுக்கு**
மருவுவிக்க விதிமுறையே வரதனமர் திருவெல்லை
விரைவுடனே விரவியமர் விமானத்துட் புத்தகத்தைப்
பரிவுறவே யருச்சிக்க சயவொலியும் பரந்தெழவே.

பருவம் அறும் காலத்தில் முதம் அதனைப் பரமனுக்கு
மருவுவிக்க விதிமுறையே வரதன் அமர் திருஎல்லை
விரைவுடனே விரவி அமர் விமானத்துள் புத்தகத்தைப்
பரிவு உறவே அருச்சிக்க சயஒலியும் பரந்துஎழ ஏ.

உரை:

திருவிழா நடைபெறும் காலம் அல்லாத நாளில் சிவாகம நூலைப் போற்றும் பட்சமாக, சிவபிரான் திரு உள்ளம் மகிழ அவரை எழுந்தருளச் செய்க. வேண்டுவோர் வேண்டுவதை வழங்கும் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிற் சுற்றாகிய திருவீதியை விரைந்து வலம் வந்து, சந்நிதியில் உள்ள தேரில் இருக்கும் சிவ ஆகமத் திருநூலை, சயசய என்ற வெற்றி முழக்கம் எல்லாப் பக்கங்களிலும் பரவ, உள்ளத்தில் அன்புடன் பூசித்து வணங்குக.

விளக்கம்:

பருவம் அறும்காலம் - விழாப் பருவம் முடிந்தபின் ஒருபோது; **முதம்** -

Koviloor Digital Library

மகிழ்வு; **மருவுமிக்க** - பொருந்தச் செய்க; **விரவி** - சேர்ந்து; **பரிவு** - பிரியம்; **விமானம்** - இங்குப் புத்தகம் உள்ள தேரைக் குறிக்கும்; **சயஒலி** - வெற்றியைக் குறிக்கும் முழக்கம்.

''போற்றியோ நமச்சிவாய சயசய போற்றி போற்றி''

(திருவாசகம் - திருச்சதகம் - 66)

என்று திருவாதவூரர் கூறுவது காண்க. (38)

91. **பரமசிவன் றிருமுன்னே தேசிகனைப் பணிந்தெழுந்து
திருமுறையை நிவேதிக்க திறல் வேந்தன் முதலோர்க்கும்
வரமுறவே யோரியலை யதுதன்னுண் மதித்தறைக
வுரைவிதியுங் காமரமும் வழுவுறவே யுணர்ந்தோனே.**

**பரமசிவன் திருமுன்னே தேசிகனைப் பணிந்து எழுந்து
திருமுறையை நிவேதிக்க திறல் வேந்தன் முதலோர்க்கும்
வரம் உறவே ஓர்இயலை அது தன்னுள் மதித்து அறைக
உரை விதியும் காமரமும் வழு அறவே உணர்ந்தோனே.**

உரை:

சிவஞான தானத்தைச் செய்யுங் கர்த்தா ஆனவன், முதலில் சிவபிரான் சந்நிதியில் தன்னுடைய ஆசானை வணங்கி எழுந்து அவரிடம் ஏற்கனவே பூசிக்கப் பட்ட ஆகம நூலைத் தருக. பின்னர், ஆசானுடைய உத்தரவு பெற்று, கூடியிருக்கின்ற வெற்றியையுடைய அரசர், பெருமக்கள், மாணாக்கர்கள் முதலியவர்களுக்கு, ஒப்பற்ற ஆகமத்தின் பகுதியைச் சொற்பிரிவு, சொற்பொருள், பொழிப்புரை, சந்தேகம், சந்தேகத்தைத் தீர்க்கும் விடை, பண்வேறுபாடுகள் ஆகியவை தெளிவாக விளங்கும்படி விளக்கிக் கூறுக.

விளக்கம்:

திருமுறை - திருமுறை என்பது இங்குச் சிவ ஆகம நூலைக் குறிக்கும். **நிவேதிக்க** - தருக; **திறல்** - வெற்றி; **வரம்** - அருள்; **அறைக** - கூறுக; **இயல்** - நூலின் பகுதி; **உரைவிகுதி** - நூலுக்கு விளக்கம் கூறும் முறை; **காமரம்** - பண்; **வழுஅற** - சொற்குற்றம் பொருட்குற்றம் நேராமல். (39)

சிறப்பு விதி

92. **இத்தகையே யருந்தவர்க்கு மீபொழுதி லியற்றிடுக
புத்தகத்தின் பூசனையைப் புரவலர்மற் றனைவருந்தம்
வித்தமது கொண்டிருந்த விதிய தனை விளைவிக்கப்
பத்தியினாற் பயில்விக்க தேசிகனாற் பாவையரும்.**

Koviloor Digital Library

இத்தகையே அருந்தவர்க்கும் ஈபொழுதில் இயற்றிடுக
புத்தகத்தின் பூசனையைப் புரவலர் மற்று(ம்) அனைவரும் தம்
வித்தம் அது கொண்டு இந்த விதி அதனை விளைவிக்கப்
பத்தியினால் பயில்விக்க தேசிகனால் பாவையரும்.

உரை:

சைவ ஒழுக்கமுடைய நோன்பினருக்கும், பக்குவம் உடையவர்க்கும் ஆகம நூலை அளிப்பதற்கு முன், அதனை வணங்கி பத்தியோடு அளிப்பாராக. அரசரும் பிற பெருமக்களும் தாங்கள் நேரிய வழியில் தேடிய செல்வப் பொருளைக் கொண்டு ஆகம நூலைப் பெற்று, அதனைப் பூசனை செய்து அதனைக் கற்பாராக. மகளிர் தக்க ஆசானிடம் ஆகமப் பொருளைக் கற்றுக் கொள்க.

விளக்கம்:

அருந்தவர் - சைவசமய நெறி உணர்ந்த ஒழுக்க சீலர்கள்; புரவலர் - அரசரும் மற்ற ஆதரவாளர்களும்; ஈபொழுதில் - கொடுக்கின்றபோது; வித்தம் - செல்வம்; பயில்விக்க - கற்பிக்க; பாவையர் - மகளிர். (40)

தூயநீர் தெளித்தல்

93. சாந்திபெறு தோயத்தைச் சமைத்தகுரு பரன்றானும்
வேந்தனது முடிவிரவத் தெளித்திடுக விழைவுறவே
சேர்ந்தவர்க ளனைவர்க்குந் தெளித்திடுக தெளித்ததனாற்
றேய்ந்தழியு மவரவர்தந் தீயவினைத் திறலழிந்தே.

சாந்திபெறு தோயத்தைச் சமைத்தகுரு பரன்தானும்
வேந்தனது முடிவிரவத் தெளித்திடுக விழைவு உறவே
சேர்ந்தவர்கள் அனைவருக்குந் தெளித்திடுக தெளித்ததனால்
தேய்ந்து அழியும் அவரவர்தம் தீயவினைத் திறல் அழிந்து ஏ.

உரை:

ஆசாரியன், ஆகமநூல் வழிபாட்டுக்காக அமைத்த பந்தரில் மந்திரித்து வைத்திருந்த சாந்தி கும்ப நீரை அரசன் தலைமீதும், வணங்க வந்திருந்த அடியவர் களின் தலைகள் மீதும் விருப்பத்துடன் தெளித்திடுக. அவ்வாறு தெளித்தால், தெளிக்கப்பட்டவர்கள் எல்லாரும் அவர்கள் செய்த பாவங்களிலிருந்து விடுபட்டு நலம் பெறுவர்.

விளக்கம்:

சாந்தி - சாந்திகும்பம்; தோயம் - நீர்; சமைத்த - மந்திரித்தமைத்த; குருபரன்

Koviloor Digital Library

- மேலான ஆசான்; விரவ - பொருந்த; தேய்ந்து - கெட்டு; சேர்ந்தவர்கள் - வணங்க வந்த அடியவர்கள்; திறல் - வலிமை.

திருக்கோயில்களில் குடமுழுக்கு நிகழும்போது, வணங்கவரும் அடியவர்களின் பாவங்கள் அழிய வேண்டும் என்பதற்காகவே கும்பத்திலுள்ள மந்திரித்த நீரை மேலேயிருந்து மக்களின் மீது தெளிக்கிறார்கள். அந்தக் கும்பத்துக்கு பெயர் சாந்தி கும்பம். அந்தத் தூய நீர் தங்கள் மீது விழவேண்டும் என்று மக்கள் திரளாகக் குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்டு வணங்குகிறார்கள். (41)

குருவுக்குச் செய்யும் மரியாதை

94. ஆசானுக் கருநிதிய முதலளிக்க வடல்ரசன்
றூசாதி மற்றையருந் தமக்கியன்ற தொகைசெய்க
நேசாரப் பூசையினைப் பூசுரர்க்கு நிகழ்த்திடுக
வீசானன் னடியார்க்கு மாதுலர்க்கு மிரக்கத்தால்.

ஆசானுக்கு அருநிதியம் முதல் அளிக்க அடல் அரசன்
தூசாதி மற்றையரும் தமக்கு இயன்ற தொகை செய்க
நேசாரப் பூசையினைப் பூசுரர்க்கு நிகழ்த்திடுக
ஈசானன் அடியார்க்கும் ஆதுலர்க்கும் இரக்கத்தால்.

உரை:

வெற்றியினையுடைய மன்னன் ஆகம நூலைக் கற்பிக்கும் ஆசானுக்குப் பொருளும், அணிகலன்களும், நல்ல ஆடைகளும் நிரம்பத் தருக. பிறர், தம்மால் இயன்ற பலவகைப் பொருள்களையும் அளித்திடுக. கற்றலையும், கற்பித்தலையும் தவிர வேறு தொழில் செய்யாத வேதியனை வணங்குக. மனம் இரங்கிச் சிவனடியார்க்கும் இரப்பவர்க்கும் உதவுக.

விளக்கம்:

அருநிதியம் - உயர்ந்த இரத்தினங்கள், அணிகலன்கள், நிலம், வீடு முதலியன; **தூசு** - ஆடை, **தொகை** - அதிக அளவு; **ஈசானன்** - சிவன்; **ஆதுலர்** - இரப்பவர்; **இரக்கம்** - அருள், மனம் இரங்குதல்;

பூசுரர் - பூ என்பது நிலம், சுரர் என்றால் தேவர், பூசுரர் என்றால் மண்ணுலகத் தேவர் என்பது பொருள். வேதியர்களைப் பூசுரர் என்று சொல்வர். ''பூசுரன் ஞான சம்பந்தன்'' என்று திருஞான சம்பந்தர் தம்மைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கற்றலையும் கற்பித்தலையுமே தொழிலாகக் கொண்டிருந்த பழங்கால வேதியர்களை அன்றைய தமிழ்ச் சமுதாயம் பூலோகத் தேவர் என்னும் பொருளில் 'பூசுரர்' என்று போற்றியது. (42)

Koviloor Digital Library

ஆகமக் கல்விக் கொடையால் பெறும் பயன்

95. இத்தகையே புரிந்திடிலோ
ரிடையூறும் புவிக்கில்லை
அத்தனையே யுளநன்மை
வகையனைத்தும் புகழ்மல்குங்
குத்திரருங் குலைந்தகல்வர்
கொடுவினையு மடுபிணியு
நைத்தழியு மழை பொழியுந்
திங்கடொறு நலமுறவே.

இத்தகையே புரிந்திடில் ஓர்
இடையூறும் புவிக்கு இல்லை
அத்தனையே உ(ள்)ள நன்மை வகை
அனைத்தும் புகழ் மல்கும்
குத்திரரும் குலைந்து அகல்வர்
கொடுவினையும் அடுபிணியும்
நைத்துஅழியும் மழை பொழியும்
திங்கள் தொறும் நலம்உற ஏ.

உரை:

இவ்வாறு தக்கவர்களுக்கு ஆகமக் கல்வி அளிப்பதை முறையாகத் தொடர்ந்து செய்து வந்தால் நாட்டு மக்களுக்கு எந்த துன்பமும் உண்டாகாது. எல்லா வகை நலங்களும் உண்டாகும். புகழ் பெருகும். வஞ்சகர் சீர் குலைந்து அழிவர். கொடிய பாவங்களும் உடலை வருத்துகின்ற நோயும் நீங்கும். நாடு செழிப்படைய மாதந் தோறும் மழை பொழியும்.

விளக்கம்:

இத்தகையே - இவ்வாறு; **அத்தனையே உள்ள** - உள்ள அத்தனை வகையும்; புவி - இங்கு நாட்டை அல்லது ஊரைக் குறிக்கும்; **அத்தனையே உள்ள நன்மை** - எல்லா நலங்களும்; **மல்கும்** - பெருகும்; **குத்திரர்** - வஞ்சகர்; **குலைந்து** - கெட்டு; **கொடுவினை** - பாவச் செயல்;

அடுபிணி - உடலை வருத்துகின்ற நோய்; **நைத்து** - நசித்து; **திங்கள்தொறும்** - மாதந்தோறும்; 'மாதம் மும்மாரி' என்பது வழக்கம். ஒவ்வொரு மாதமும் மூன்று முறை மழை பொழிய வேண்டும் என்பது கருத்து. (43)

Koviloor Digital Library

ஆகம நூல் கொடையின் பலன்

96. இத்தகையே புத்தகத்தை யீந்தாரு மெழுத்தொன்றற்
கத்தனமர் புரத்துறைவ ராயிரமார் கற்ப முற
முத்தனைய முறுவனகை முளைத்தபிறை வளைத்தநுதற்
றத்தையன மொழிமடவார் தங்கிய தேர்த் தானத்தே.

இத்தகையே புத்தகத்தை ஈந்தாரும் எழுத்து ஒன்றற்கு
அத்தன் அமர் புரத்து உறைவர் ஆயிரம் ஆர் கற்பம்உற
முத்து அனைய முறுவல் நகை முளைத்தபிறை வளைத்த நுதல்
தத்தை அ(ன்)ன மொழிமடவார் தங்கிய தேர்த் தானத்து ஏ.

உரை:

இவ்வாறு சிவ ஆகமத் திருநூலைப் பக்குவப்பட்ட ஒருவருக்குக் கொடையாக அளித்தவர், முத்துப் போன்ற பற்களும், புன்சிரிப்பும், பிறை நிலவைப் போல வளைந்த நெற்றியும், கிளியைப் போலக் கொஞ்சிப் பேசும் சொற்களும் உடைய மகளிர்கள் சூழ்ந்திருக்கும் விமானத்தில் ஏறிச் சிவபிரான் அமர்ந்திருக்கும் சிவபுரத்தை அடைந்து கணக்கற்ற காலம் மகிழ்ந்து இருப்பார்.

விளக்கம்:

ஈந்தாரும் - கொடுத்தவரும்; **அத்தன்அமர்** - சிவபிரான் தங்குகின்ற; **புரம்** - சிவபுரம், சிவ உலகம். சிவபிரான் உறையும் இடம் சிவ உலகம் அல்லது சிவபுரம் என்பது சைவ மரபு.

''சீரொடு பொலிவாய் சிவபுரத்து அரசே''

(திருவாசகம் - வாழாப்பத்து)

என்று திருவாதவூரர் கூறுவது காண்க.

அனைய - அன்ன - போன்ற; **நகை** - சிரிப்பு; **நுதல்** - நெற்றி; **எழுத்து ஒன்றற்கு** - ஓர் எழுத்துக்கு; **தத்தை** - கிளி; **தேர்** - விமானம்; **கற்பம்** - ஆரியர்களின் புராணம் கூறும் கால அளவு; **ஆயிரம் ஆர் கற்பம்** - ஆயிரம் கற்பம்; கோடிக் கணக்கான ஆண்டுகளைக் கொண்ட கால அளவு. (44)

சிவ ஆகமத்தைப் பாதுகாப்பவர் பெறும் பயன்

97. புத்தகத்தைப் புரந்தாருந் தாய்தந்தை புத்திரருஞ்
சித்தமகிழ் வுறவேவற் செய்தார்க ளெனுமிவரு
மத்தனமர் சிவலோக மடைவார்க ளமருலக
முத்தகைய சுற்றத்தார் முற்றினர் முன்னற்றவமே.

Koviloor Digital Library

புத்தகத்தைப் புரந்தாரும் தாய் தந்தை புத்திரரும்
சித்தம் மகிழ் உறவு ஏவல் செய்தார்கள் எ(ன்)னும்இவரும்
அத்தன் அமர் சிவலோகம் அடைவார்கள் அமருலகம்
முத்தகைய சுற்றத்தார் முற்றினர் முன் நல்தவம்(ஏ).

உரை:

சிவ ஆகமத் திருநூல்களை வாங்கிப் பாதுகாத்து, அவற்றைப் பக்குவப் பட்டவர்களுக்குக் கொடையாக அளிக்கிற அன்பரும், அவருடைய பெற்றோர், மக்கள், அவர் ஏவியதைச் செய்யும் பணியாளர்கள் ஆகியோரும், சிவபெரு மானுக்கு உறைவிடமான சிவபுரத்தை அடைந்து மகிழ்வர். சிவ ஆகம நூலைக் கொடையாக வழங்கியவர், முன் பிறவிகளிற் செய்த சிவபுண்ணியங்களின் பயனாக, அவருடைய மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த உறவினர்கள் சுவர்க்க உலகை அடைவார்கள்.

விளக்கம்:

புரந்தார் - பாதுகாத்து வழங்கியவர்; சித்தம் - உள்ளம்; உறவு - சொந்தம்; ஏவல் - ஏவியதைச் செய்யும் பணியாள்; அத்தன் - கடவுள்; இங்கு சிவபிரானைக் குறிக்கும்.

''அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே''

(திருவாசகம் - அச்சோப்பதிகம் - 1)

என்று திருவாதவூரர் அருளியிருப்பது காண்க.

முத்தகைய - மூன்று மடியான தலை முறையினர்; முற்றினர் - செய்தனர்; நல்தவம் - நல்லதவம்; இது சிவபுண்ணியங்களைக் குறிக்கிறது.

அமருலகம் - அமரர் உலகம் என்பது அமருலகம் என வந்தது; சுவர்க்க உலகம். (45)

சிறப்பு விதி

98. பொருந்துவர் முற்பகர்ந்த பலம்புகழாடிப் பூரணையிற்
புரிந்தவருஞ் சிவஞான புத்தகத்தைப் பூசனையைத்
திருந்துமலர்ப் பந்தரிடைச் சிறப்புறவே வைசகியிற்
புரிந்தவரும் பூசனையிற் சிவஞான பூசனையே.

பொருந்துவர் முன்பகர்ந்த பலம் புகழ் ஆடிப் பூரணையில்
புரிந்தவரும் சிவஞான புத்தகத்தைப் பூசனையைத்
திருந்தும் மலர்ப் பந்தரிடைச் சிறப்புறவே வைசகியில்
புரிந்தவரும் பூசனையில் சிவஞான பூசனை ஏ.

Koviloor Digital Library

உரை:

சிவ ஆகமத்தை வழிபாடு செய்வதற்காக அமைந்துள்ள மலர்ப் பந்தலில் முறைப்படி சரசுவதி பீடத்தில் சிவாகம நூலை வைத்து, வைகாசி மாதத்து முழுமதி நாளிலும், ஆடி மாதத்து முழுமதி நாளிலும் அதனை விதிப்படி வழிபாடு செய்கிறவர், முன் சொன்னபடி சிவ உலகை அடைந்து சிவ பதம் பெறுவார்.

விளக்கம்:

வைசகி - தமிழ் ஆண்டின் இரண்டாவது மாதமான வைகாசி; **பூரணை** - பௌர்ணமி; **முழுமதிநாள்** - இது விழாவுக்கு உரிய நாள். ஒவ்வொரு முழுமதி நாளிலும் சைவக் கோயில்களில் ஒவ்வொரு வகையான விழா நடைபெறும்.

ஒருவர் புதிதாக ஒரு குருவினிடம் ஞான உபதேசம் அல்லது மந்திர உபதேசம் பெறுவதற்கு முழுமதி நாளே ஏற்றது. (46)

ஆகமம் எழுத உதவுவோர் பெறும்பயன்

99. **இறைவனிணையில் வாய்மொழியை யெழுத**
விதழா லிசை முறையைப்
பெறுவமென்னு மாதரவு பெற்றார்
தமக்குப் பெறுவித்தா
ரறையுங் கழலா னமலனமர் புரத்தி
னதனி னிதழொன்றற்
குறைவருகமோ ராயிரமு
முறவேயுவகை யதுபெறவே.

இறைவன் இணைஇல் வாய் மொழியை எழுத
இதழால் இசை முறையைப்
பெறுவம் என்னும் ஆதரவு பெற்றார்
தமக்குப் பெறுவித்தார்
அறையும் கழலான் அமலன் அமர்
புரத்தில் அதனில் இதழ் ஒன்றற்கு
உறைவர் உகம் ஓர் ஆயிரமும்
உறவே உவகை அது பெற ஏ.

உரை:

தனக்கு யாரும் நிகர் இல்லாத இறைவனாகிய சிவபிரான் திருவாய் மொழியாகத் திகழ்வது சிவ ஆகமம். அந்த ஆகம நூலைப் பக்குவம் வாய்ந்த பிறரும் பெற்றுப் படிப்பதற்கு ஏதுவாக, அதனை பனை ஓலையில் எழுத, எழுதாத வெற்று

Koviloor Digital Library

ஏடுகள் செய்து கொடுத்தவர், அந்த ஆகம நூலை ஒருவர் பெறுவதற்குத் துணை செய்தவர், பெறும்படி செய்தவர் ஆகிய அனைவரும் வீரக்கழல் அணிந்த திரு வடிகளையுடைய சிவபிரான் உறையும் சிவபுரத்தில், சுவடியிலுள்ள ஏடொன்றுக்கு ஆயிரம் யுகங்கள் அளவான நெடுங்காலம் வரை மகிழ்வொடு தங்கியிருப்பர்.

விளக்கம்:

இணைஇல் - ஒப்பு இல்லாத; **இசை முறை** - ஆகம நூல்; **பெறுவம்** - பெறுவோம்; **ஆதரவு** - துணை; **உகம்** - யுகம்; **அறையும்** - ஒலிக்கும்; **அமலன்** - இறைவன்; **உறைவர்** - தங்குவர்; **இதழ்** - பனையோலையிலிருந்து தயாரிக்கப்படும் ஏடு. இதில் எழுத்தாணி கொண்டு எழுதுவர். எழுதி முடிக்கப்பட்ட நூல் 'சுவடி' எனப்படும். (47)

எழுதுங் கருவி முதலியன

100. கம்பை கவினா ரெழுத்தாணி கயிறுங்
கொடுப்போர் மையினையு
நம்பிக் கொடுப்போர் முன்னவின்ற
பலத்திற்பாதி நலம் பெறுவர்
கொம்பினாலு மதகரியின்
கோணாச்சரத்தின் கோலாலுந்
தம்பாலுவகை யுறப்பீடஞ் சமைத்தே
யளிப்பா ரவர்தாமும்.

கம்பை கவினார் எழுத்தாணி கயிறும்
கொடுப்போர் மையினையும்
நம்பிக் கொடுப்போர் முன் நவின்ற
பலத்தில் பாதி நலம் பெறுவர்
கொம்பினாலும் மதகரியின்
கோணாச்சரத்தின் கோலாலும்
தம்பால் உவகை உறப்பீடம் சமைத்தே
அளிப்பார் அவர்தாமும்.

உரை:

ஏட்டுச் சுவடிகளில் மேலுங் கீழும் அனைத்துக் கட்டும் மரச் சட்டங்கள், பனை ஓலையினால் ஆன ஏடுகளில் எழுதுவதற்கு ஏற்ற அழகிய எழுத்தாணி, எழுதிய ஏடுகளில் உள்ள எழுத்துகள் தெளிவாகப் புரிய அவற்றின் மீது தடவப் படுகிற மை, எழுதிய ஏடுகளைக் கட்டி வைப்பதற்கு ஏற்ற கயிறுகள், மந்திர எழுத்துக்கள் உள்ள உலோகத் தகடுகளை வைப்பதற்காக யானைத் தந்தத்தாலும்

Koviloor Digital Library

நாணற் கழிகளாலும் செய்யப்பட்ட பீடம் ஆகியவற்றை அளித்தவர்கள், ஆகமத்தை அளித்தவர் பெறும் பயனில் பாதி அளவு பெறுவர்.

விளக்கம்:

எழுத்தாணி, ஏடு - இவற்றை ஐம்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பெரியோர்கள் அறிவர். இன்றைய மக்களுக்கு இவை தெரியா.

குறிப்பு:

இக்காலத்தாருக்கு விளங்காததொன்றும் முன்னை நூல்களில் இருக்கக் கூடாதென்பது சரியன்று. சிலவேளை வருங்காலத்தார்க்கு அவை விளங்கலாம். (48)

திருநூலுக்கு வேண்டுவன

101. புத்தகாங்க மேதேனும் புரிவோ
ஈவார் புரையோர்பா
லத்தனமருஞ் சிவலோகத்
தமர்வர்போக மனைத்தினொடும்
வத்திராதி விதானாந்த
மகிழ்ந்தேயீவா ரிழையொன்றற்
குய்த்தே யுகமோ ராயிரமு
முறவேயுறைவ ருகப்புடனே.

புத்தக அங்கம் ஏதேனும் புரிவோடு
ஈவார் புரையோர்பால்
அத்தன் அமரும் சிவலோகத்து
அமர்வர் போகம் அனைத்தினொடும்
வத்திர ஆதி விதஆனந்தம் மகிழ்ந்தே
ஈவார் இழை ஒன்றற்கு
உய்த்தே யுகம்ஓர் ஆயிரமும்
உறவே உறைவர் உகப்புடன் ஏ.

உரை:

சிவஞானத் திருமுறையைச் சேர்த்தற்கு அங்கமாக உதவும் சலாகை, தமருசி, சீவுளி என்பவற்றில் ஏதேனும் மேலோருக்குக் கொடுப்பவரும், திருமுறைக்குப் பரிவட்டமாகச் சுற்றப்படும் துணி, பந்தலின் உள்புறத்தின் மேலே கட்டப்படும் மேற் கட்டி ஆகியவற்றைத் தருபவரும் இறைவன் இருக்கும் சிவ உலகில் நூலொன்றுக்கு ஆயிரம் யுகங்கள் அளவான நெடுங்காலம் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.

Koviloor Digital Library

விளக்கம்:

புத்தக அங்கம் - சிவஞானத் திருமுறைக்கு அங்கம்; **போகம்** - பலவகை அநுபவங்கள்; **வத்திராதி** - ஆடை முதலிய பொருள்கள்; **இழை ஒன்றற்கு** - ஆடையில் உள்ள ஒரு நூலுக்கு; **உய்த்தே** - சிவலோகத்துக்குச் செலுத்தப்பட்டு. (49)

அடியவர் யார்?

102. பரமன் றிருவாய் மொழியதனைப்
பயிற்றும் பரமயோகிதனக்
குருகியாடை யுகப்புறவே
யுதவுமவர்தா முள்ளளவும்
பொருவில் பரம சிவஞான கோசம்
பரிவோ டீந்த பல
மருவுவார்க ளவரன்றோ
பத்தராவார் வரதனுக்கே.

பரமன் திருவாய் மொழி அதனைப்
பயிற்றும் பரமயோகி தனக்கு
உருகி ஆடை உகப்புஉறவே உதவும்
அவர்தாம் உள்ளளவும்
பொருவுஇல் பரம சிவஞான கோசம்
பரிவோடு ஈந்த பலம்
மருவுவார்கள் அவர் அன்றோ
பத்தர் ஆவார் வரதனுக்கு ஏ.

உரை:

பரமசிவன் திருவாய் மலர்ந்து அருளிய சிவ ஆகமத்தைப் பக்குவம் வாய்ந்தவர்களுக்குக் கற்பிக்கும் மேலான சிவஞானிக்கு, உள்ளம் உருகி, மகிழ்வோடு ஆடை முதலியன உதவுகிறவர் உயர்ந்த சிவபுண்ணியம் செய்தவர் ஆவார். அந்த உபகாரி, ஒப்பு இல்லாத சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பிரிவுகளைக் கொண்ட சிவ ஆகமத் திருநூலைப் பிறருக்கு அளித்ததற்காகப் பெறும் சிவ புண்ணியத்தைப் போன்று பயன் பெறுவார். அந்த உபகாரியே அடியவர்கள் வேண்டியதை எல்லாம் அளிக்கும் சிவபிரானுக்கு உகந்த பக்தர் ஆவார்.

விளக்கம்:

பரமன் - பரமசிவன்; **பரமயோகி** - சிவஞானி; **உவப்பு** - மகிழ்வு; **பொருஇல்** - ஒப்பு இல்லாத; **சிவஞான கோசம்** - சிவ ஆகம நூல்; **பலம்** - பயன்;

Koviloor Digital Library

பரிவோடு - அன்போடு; ஈந்த - அளித்த; மருவுவார்கள் - பெறுபவர்கள்; பத்தர் - அன்பாளர்; வரதன் - சிவன். (50)

உணவு அளித்தவர் பெறும் பயன்

103. பரமர் திருவாய் மொழியதனைப்
பயிற்றும் பரமயோகிகளுக்
குருகியவர்கட் கன்னாதி
யைந்துவருட முதவிடுவார்
பொருவில்பரம சிவஞான கோசம்
பரிவோ டீந்தபல
மருவுவார்க ளவரன்றோ
பத்தராவார் வரதனுக்கே.

பரமர் திருவாய் மொழியதனைப்
பயிற்றும் பரம யோகிகளுக்கு
உருகி அவர்கட்கு அன்(ன)ம் ஆதி
ஐந்து வருடம் உதவிடுவார்
பொருஇல் பரம சிவஞான கோசம்
பரிவோடு ஈந்த பலம்
மருவுவார்கள் அவர் அன்றோ
பத்தர் ஆவார் வரதனுக்கு ஏ.

உரை:

ஒப்பு இல்லாத சிவ ஆகமத் திருநூலைத் தக்கவர்க்கு அன்போடு கொடையாக அளித்தவர் என்ன புண்ணியப் பலனைப் பெறுவாரோ அதே புண்ணியப் பலனை, சிவபிரான் அருளிய சிவ ஆகம நூலைத் தக்க மாணாக்கர்களுக்குக் கற்பிக்கின்ற, மேலான சிவஞானிகளுக்கு ஐந்து ஆண்டுகள் வரை, உணவு வழங்கி உபசரிக்கின்ற உபகாரி பெறுவார். அந்த உபகாரியே உண்மையான சிவபத்தர் ஆவார்.

விளக்கம்:

பரமர் - பரம்பொருளான சிவபெருமான்; **உருகி** - மனம் கனிந்து; பயிற்றும் - போதிக்கின்ற; **அன்ன ஆதி** - அன்னம் ஆதி என்பது அன்னாதி என வந்தது.

இது உணவு, நீர், பால், பழம் ஆகிய அனைத்தையும் குறிக்கும்.

பரம - மேலான; **கோசம்** - நூல்; **சிவஞான கோசம்** - சிவஞானத்தை உணர்த்தும் ஆகம நூல். (51)

Koviloor Digital Library

ஆராய்வாருக்கு உதவுதலின் பயன்

104. மையலறுக்கும் வாக்கியத்தை வாக்காற்
பயிற்றி மனத்தாலு
மையமறவே யாராய்ந்தார்க் கன்ன
மாடை யளிப்பாருஞ்
செய்ய சடையார் சிவபுரத்தைச்
செறிவார் சிறுவரிறுதியரும்
வையமுண்டான் வைகுண்ட மூவேழ்
சுற்ற மருவிடவே.

மையல் அறுக்கும் வாக்கியத்தை வாக்கால்
பயிற்றி மனத்தாலும்
ஐயம் அறவே ஆராய்ந்தார்க்கு அன்னம்
ஆடை அளிப்பாரும்
செய்ய சடையார் சிவபுரத்தைச் செறிவார்
சிறுவர் இறுதியரும்
வையம் உண்டான் வைகுண்டம்
மூஏழ் சுற்றம் மருவிட ஏ.

உரை:

அறியாமையை அகற்றும் சிவ ஆகம நூற் பொருளை மாணாக்கர்களுக்குக் கற்பிப்பதோடு, சிவ ஆகம உண்மைகளைக் கசடு அற ஆராய்ந்து தெளிந்த ஆசானுக்கு உணவு, உடை முதலியவற்றை உதவுகின்ற உபகாரி, சிவந்த சடையினையுடைய சிவபிரான் உறையும் சிவ உலகமாகிய சிவ பதவியைப் பெற்று இன்பம் பெறுவார். அந்த உபகாரியின் பெற்றோர், மனைவி, மக்கள் ஆகியோரும், அவருடைய தாய்வழி, தந்தை வழிகளைச் சேர்ந்த இருபத்தொரு தலை முறையினரும் மண்ணை உண்ட கண்ணன் உலகமாகிய வைகுந்த பதவியைப் பெறுவர்.

விளக்கம்:

மையல் - அறியாமையாகிய மயக்க நிலை; **வாக்கியம்** - ஆகமப் பொருள்; **பயிற்றி** - கற்பித்து; **அன்னம்** - உணவு; **செய்ய** - சிவந்த; **செறிவார்** - அடைவார்;

மூ ஏழ் - மூன்று ஏழு, இருபத்து ஒன்று; **வையம் உண்டாம்** - வையம் என்பது மண். வையம் உண்டான் திருமால். **வைகுண்டம்** - வைகுந்தம். (52)

Koviloor Digital Library

சிவாகம ஆசிரியன் சிறப்பு

105. ஏற்க விரண்டு முழத்தாலு
மெல்லை கோலி யதனடுவே
கூர்த்த நான்கு கோண மலாற் கொள்க
வட்டம் வெண் சுதையாற்
சீர்த்த வெண்டாமரை யதனிற்
சிறக்க வெழுதி யதன்மீது
பார்க்கவினிய திருமுறையைப் பரிக்க
பீடத்தொடு பரிந்தே.

ஏற்க இரண்டு முழத்தாலும் எல்லை
கோலி அதன் நடுவே
கூர்த்த நான்கு கோணம் அ(ல்)லால்
கொள்க வட்டம் வெண்சுதையால்
சீர்த்த வெண்தாமரை அதனில் சிறக்க
எழுதி அதன் மீது
பார்க்க இனிய திருமுறையைப்பரிக்க
பீடத்தொடு பரிந்து ஏ.

உரை:

ஆகமங்களை ஓதுபவர் முதலில் இரண்டு முழ அளவு பொருந்த ஓர் எல்லையை வளைத்து, அந்த எல்லையின் நடுவே சதுரமாகவோ, வட்டமாகவோ பூசைமேடை அமைத்து, அதன்மீது வெள்ளை நிறச் சாந்துப் பொடியால் வெண் தாமரைப் பூவை அழகு பெற எழுதி, பார்த்ததும் கண்களுக்கு மகிழ்ச்சி தரும் திரு நூலைப் பீடத்தோடு அன்பாகத் தாங்கி, அதன்மேலே எழுந்தருளச் செய்க.

விளக்கம்:

கோலி - வகுத்து; கூர்த்த - கூர்மையான; சீர்த்த - அழகிய, சிறந்த; வெண்சுதை - வெள்ளைநிறச் சாந்துப் பொடி;

பரிக்க - தாங்க; பரிந்து - அன்போடு; நான்கு கோணம் - சதுரம்.(53)

106. மற்றுமுள்ள மங்களங்கள் வகுக்க
வரதன் திருவாக்கைக்
கற்க வளவில் காதலுடன் கற்பார்
தமக்குங் கற்பிக்கச்

Koviloor Digital Library

சொற்கள் கேட்க விரும்பினர்க்குஞ் சொல்லி
முடிக்க முடிவளவிற்
கற்பார் பரம காரணர்க்கும் புரிக
பூசை களிப்புடனே.

மற்றும் உள்ள மங்களங்கள் வகுக்க
வரதன் திருவாக்கைக்
கற்க அளவுஇல் காதலுடன் கற்பார்
தமக்கும் கற்பிக்க
சொற்கள் கேட்க விரும்பினர்க்கும் சொல்லி
முடிக்க முடிவு அளவில்
கற்பார் பரம காரணர்க்கும் புரிக
பூசை களிப்புடன் ஏ.

உரை:

சிவ ஆகமம் ஓதும் ஆசிரியன் முதலில் அச் சிவாகமத்தை நல்ல மணமுள்ள பூக்களால் வழிபாடு செய்க. பின்னர், எல்லையில்லாத அன்புடன் கிழக்கு முகமாக அமர்ந்து ஆகமத்தை ஓதுக. தன்னிடம் ஆகமத்தைக் கற்க விரும்பும் மாணாக்கரை வடக்கு முகமாக அமரச் செய்து பயிற்றுக; ஆகமம் பற்றிய விளக்கவுரையைக் கேட்க விரும்பும் மாணாக்கர்களையும் வடக்கு நோக்கி இருக்கச் செய்து ஆகமப் பொருள் களைத் தெளிவாக உணர்த்துக. பின்னர், ஆகமங் கற்கும் மாணவர்கள், ஆகமங் களுக்குத் தலைவனான சிவபிரானை அன்புடன் பூசை செய்து வணங்குவாராக.

விளக்கம்:

மங்களங்கள் - சிறப்பான வழிபாடுகள்; காதல் - மிகுந்த அன்பு; கற்பார் - மாணாக்கர்; பரமகாரணர் - சிவபெருமான்; புரிக - செய்க; வரதன் திருவாக்கு - சிவபிரான் அருளிய சிவாகமம்; சொற்கள் கேட்க - விளக்க உரையைக் கேட்க; விரும்பினர் - விரும்பிய மாணாக்கர்; களிப்பு - மகிழ்ச்சி. (54)

107. புரிகபரம சிவஞான பூசை நசையாற் றேசிகர்க்கும்
பரமஞான யோகர்க்கும் பரிவுபெருகப் பதமுதலு
முருகியிசைய வூட்டிடுக வுவகையவர்க்கு முறவுளத்துட்
பொருவில்பரம புத்தகத்தைப் பொருத்தும் வலத்தைப்
[பொருந்துதற்கே.

புரிகபரம சிவஞான பூசை நசையால் தேசிகர்க்கும்
பரமஞான யோகர்க்கும் பரிவு பெருகப் பதம் முதலும்
உருகி இசைய ஊட்டிடுக உவகை அவர்க்கும் உற உளத்து உள்
பொருஇல் பரம புத்தகத்தைப் பொருத்தும் வலத்தைப்
[பொருந்துதற்கு ஏ.

Koviloor Digital Library

உரை:

பின்னர், மேலான சிவ ஆகம வழிபாட்டை விருப்பத்துடன் செய்து, ஒப்பு இல்லாத சிவ ஆகமக் கொடையின் பலன் தனக்குக் கிடைக்கும்படி, தன்னுடைய ஆசானுக்கும், மேலான சிவயோகிகளுக்கும் அவர்கள் மகிழும் வண்ணம் அன்போடு உணவு முதலியன அளித்திடுக.

விளக்கம்:

நசை - விருப்பம்; புரிக - செய்க; தேசிகன் - ஆசான், குரு; யோகர் - இங்கு சிவயோகிகளைக் குறிக்கிறது; பதம் - உணவு; முதலும் - முதலானவையும்; உருகி - உருக்கத்தோடு; இசைய - பொருந்த; ஊட்டிடுக - உண்பிக்க; பரம புத்தகம் - மேலான ஆகம நூல்; பொருத்தும் - கொடுக்கும்; வலத்தை - வெற்றியை; பொருந்த - அடைய. (55)

சிவ ஆகம நூலின் பயன்

108. ஆதி அறைந்த வாகமத்திற்
சந்தமொன்றோ வதன்பாதி
யோது வார்க ளோதுவிப்பா ருரையை
விரிப்பாருரை கேட்பார்
போத முறவே சிந்திக்கப் புரிவார்
துணிவார் பொருளினையும்
பேதமறவே யெழுதிடுவா
ரெழுதுவிப்பா ரிவரெல்லாம்.

ஆதி அறைந்த ஆகமத்தில் சந்தம்
ஒன்றோ அதன்பாதி
ஓதுவார்கள் ஓதுவிப்பார் உரையை
விரிப்பார் உரை கேட்பார்
போதம் உறவே சிந்திக்கப் புரிவார்
துணிவார் பொருளினையும்
பேதம் அறவே எழுதிடுவார் எழுதுவிப்பார்
இவர் எல்லாம்.

உரை:

சிவன் அருளிச் செய்த ஆகமத்தில் ஒரு செய்யுள் ஆயினும் அதில் பாதி ஆயினும் அதனைப் படிப்பவரும், அதனை மாணாக்கர்க்குப் படிப்பிப்பவரும், அதன் பொருளை விரித்துச் சொல்பவரும், விரித்துச் சொன்ன உரையைக் கேட்பவரும், அவ்வாறு கேட்ட உரையின் சாரத்தை உள்ளத்தில் பதியுமாறு சிந்திப்பவரும், அதற்கு

Koviloor Digital Library

இதுவே பொருள் என்று தெளிவு பெறுகின்றவரும், அதனைப் பிழை நேராதபடி எழுதுபவரும், அதனைப் பொருள் கொடுத்துப் பிறரைக் கொண்டு எழுதுவிப்ப வரும் ஆகிய இவர்கள் அனைவரும்.

விளக்கம்:

ஆதி - எல்லாவற்றுக்கும் முன் உள்ள இறைவன், சிவன்; சந்தம் - செய்யுள்; ஓதுவார் - படிப்பவர்; ஓதுவிப்பார் - ஆசிரியர்; விரிப்பார் - விளக்கி உரைப்பவர்; போதம் - அறிவு; உற - பொருந்த; துணிவார் - நிச்சயிப்பவர்; பேதம் - வேறுபாடு; எழுதுவிப்பார் - பிறரை எழுதச் செய்கிறவர். (56)

109. மணியின்பேத மனைத்தினையு
மகிழ்ச்சியுடனே மண்முழுதுந்
துணிவு பெறவே நால்வேதந்
துயக்கமறவே யாறங்க
மெணிய மறையோர்க் கீந்த பல
மியைந்தாரியலின் பொருளெல்லாங்
கணிய கருத்தார் பலமதுதான்
கற்றாராலுங் கணிப்பரிதே.

மணியின் பேதம் அனைத்தினையும்
மகிழ்ச்சியுடனே மண்முழுதும்
துணிவு பெறவே நால்வேதம் துயக்கம்
அறவே ஆறு அங்கம்
எ(ண்)ணிய மறையோர்க்கு ஈந்தபலம் இயைந்தார்
இயலின் பொருள் எல்லாம்
க(ண்)ணிய கருத்தார் பலம் அதுதான்
கற்றாராலும் கணிப்பு அரிது ஏ.

உரை:

சிவாகமத்தில் உள்ள பன்னிரண்டு பிரிவுகளில் ஒரு பிரிவுக்கு உரிய பொருளைத் தெளிவாக அறிந்தவர் பெறும் பலன் மிகப் பெரிது. அதன் பெருமையை எல்லாக் கலைகளையும் கற்ற அறிஞர்களாலும் அளவிட்டுச் சொல்லமுடியாது.

சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களையும், அந்த வேதங்களோடு தொடர்பு உடைய சிட்சை, வியாகரணம், சந்தசு, நிருக்தம், சோதிடம், கல்பம் என்ற ஆறு துணை நூல்களையும் பிழையில்லாமல் கற்றறிந்த பிராமணருக்கு விலை உயர்ந்த ஆபரணக் கற்களையும் நிலத்தையும் கொடையாகக் கொடுத்த பயனைச் சிவாகம நூலின் ஒரு படலத்தையே கற்று அறிந்தவர் பெறுவார்.

Koviloor Digital Library

விளக்கம்:

மணி - இது வயிரம், நீலக்கல் போன்ற ஆபரணக் கற்களைக் குறிக்கும்; மண் - இது நிலத்தைக் குறிக்கிறது;

துணிவு பெற - நிச்சயிக்க; இயைந்தார் - பெற்றோராவர்; கணிப்பு - அளவிடுவது.

சிவாகமங் கற்று அதன்படி தீக்ஷைகள் பெற்றுச் சிவ கைங்கரியம் நிகழ்த்துபவர்களே சைவம் வேண்டும் அந்தணர். அந்நிலையில்லாதோர் ஸ்மார்த்தர் எனப்படுவர். அவர்களிடம் கோயில் கைங்கரியம் நடத்தும் தகுதியில்லை. (57)

பிற கருவிகளை உதவுகிறவர் பெறும் பயன்

110. பரமன் மொழியை எழுதச்
சீபன்ன மதனாற் சீனத்தா
லூரிய கடுத்தஞ் சமைத்தளிப்
பாருதவுவாரும் பலகையினை
யரிய விதழி னலேகத்தை
யளித்தா ரனைய ரவர்தாமும்
பொருவி லமலன் புரத்துறைவர்
போகம் பலவும் புணர்ந்தாங்கே.

பரமன் மொழியை எழுதச்
சீபன்னம் அதனால் சீனத்தால்
உரிய கடுத்தம் சமைத்து அளிப்பார்
உதவுவாரும் பலகையினை
அரிய இதழின் அலேகத்தை அளித்தார்
அனையர் அவர்தாமும்
பொருஇல் அமலன் புரத்து உறைவர்
போகம் பலவும் புணர்ந்து ஆங்கு ஏ.

உரை:

சிவபிரான் அருளிய சிவாகமத்தை எழுதுவதற்கு மான் தோல் அல்லது பசைக் கூழ் தடவிய துணியைச் செய்து, அதன் இரண்டு பக்கங்களிலும் குமிழ மரச் சட்டங்களைப் பொருத்தித் தருபவரும், தேக்கு மரம் முதலியவற்றிலிருந்து சித்திரப் பலகை செய்து கொடுப்பவரும், பனையோலைகளிலிருந்து எழுதுவதற்கு ஏற்ற ஏடுகளைச் செய்து கொடுத்த அடியவர்க்கு ஒப்பாவர். அவர்கள் ஒப்பு இல்லாத இறைவன் உலகான சிவ உலகத்தை அடைந்து பலவகை இன்பங்களையும் பெற்று அங்கு வாழ்வர்.

Koviloor Digital Library

விளக்கம்:

இப்பாடல், அச்சுப் புத்தங்களைப் படிக்கிற இக்காலத்தார் பழைய நிலையை அறிய உதவுகிறது. சீபன்னம் - குமிழ மரவகை;

சீனம் - ஒரு வகைப் புடைவை; கடுத்தம் - எழுதுவதற்கு அல்லது சித்திரம் வரைவதற்குப் பசைக் கூழ் தடவிய துணி; இதழ் - இது பனை ஓலையைக் குறிக்கிறது;

அலேகம் - பனை ஓலைகளால் செய்யப்பட்ட எழுதப்படாத வெற்று ஏடுகள். இதில் எழுத்தாணியால் எழுதுவர். போகம் - நுகர்வு. (58)

சிவ ஆகமக் கொடையின் பயன்

111. போக முடிவின் மனுநீதி புரக்கும்
புவி வேந்தருமாவர்
மோகமற நால் வேதமுணர் முந்நூன்
மார்ப ரெனமுளைத்துப்
பாகமுறவே மூலமலம்
பரமனடிக்கன் பருமாவர்
மாகர் பெறுதற் கரிய சிவன்
மலர்த்தா ளிணையை மருவுதற்கே.

போகம் முடிவில் மனுநீதி புரக்கும்
புவி வேந்தரும் ஆவர்
மோகம் அற நால் வேதம் உணர் முந்நூல்
மார்பர் என முளைத்துப்
பாகம் உறவே மூலமலம் பரமன்
அடிக்கு அன்பரும் ஆவர்
மாகர் பெறுதற்கு அரிய சிவன்
மலர்த்தாள் இணையை மருவுதற்கு ஏ.

உரை:

சிவ ஆகம நூலைப் பிறருக்குக் கொடையாக அளித்தவர், சிவ உலகை அடைந்து அங்குள்ள இன்பங்களை நுகர்ந்த பிறகு, மனுமிருதி என்ற ஆரிய நூலைச் சட்டமாகக் கொண்டு ஆட்சி செய்யும் அரசராகப் பிறப்பார். பிறகு, நான்கு வேதங்களை உணர வல்லவர்களாய் மார்பில் பூணூல் அணியும் வேதியராகப் பிறப்பார். பின்னர், ஆணவ மலம் தேய்ந்து, இறைவன் அருளைப் பெறுவதற்கு உரிய பக்குவம் பெற்று, தேவர் அடைய இயலாத சிவபிரானுடைய மலர்போன்ற திருவடிகள் இரண்டோடும் பொருந்தியிருப்பார். (59)

Koviloor Digital Library

சிவாகமம் வைப்பதற்கு ஏற்ற இடம்

112. கனக மதனாற் பெட்டகத்தைக்
கற்போடமைக்க கலக்கமணி
புனைக வெள்ளி செம்பாலும் புரிக
வேறும் பொருட் கிசைய
வனைக ஞான வாலய நூல் வழியாற்
சிலையா தியின் மகிழ்வாற்
றனையொப்பரிய வரிபரிக்கும் பீடமதனுட்
சமைக்க வரோ.

கனகம் அதனால் பெட்டகத்தைக்
கற்போடு அமைக்க மணி
புனைக வெள்ளி செம்பாலும் புரிக
வேறும் பொருட்கு இசைய
வனைகஞான ஆலயம் நூல் வழியால் சிலை
ஆதியின் மகிழ்வால்
த(ன்)னை ஒப்பு அரிய அரிபரிக்கும்
பீடம் அதனுள் சமைக்க அரோ.

உரை:

ஆகமத் திருமுறையை எழுந்தருள வைப்பதற்குச் சிலை முதலியவற்றால் விதிப்படி மகிழ்ச்சியுடன் ஆலயத்தை அமைத்து, அந்த ஆலயத்தின் நடுவில் தனக்கு நிகர் இல்லாத சிங்கம் தாங்குகின்ற ஒரு பீடத்தைச் செய்து வைத்து, அதன் மீது ஆகமத் திரு நூலை எழுந்தருள வைப்பதற்கு உரிய பேடகத்தைப் பொருள் வசதிக்குத் தகுந்தபடி நவமணிகள் பதிக்கப்பட்ட தங்கத்தாலோ, வெள்ளியாலோ, செம்பாலோ செய்க. இவ்வாறு செய்ய இயலாதபோது பலா, மா, மகிழ், அத்தி, முருக்கு ஆகிய வற்றின் பலகைகளாலும் செய்யலாம்.

விளக்கம்:

கனகம் - தங்கம்; பெட்டகம் - பெட்டி; கற்போடு - விதிப்படி; புனைக - பதித்திடுக; வனைக - செய்க; சிலை ஆதி - கருங்கல் முதலியன; அரி - சிங்கம்; பரிக்கும் - தாங்கும்; சமைக்க - செய்க; அரோ - அசைச் சொல். இதற்குப் பொருள் இல்லை. (60)

113. அணியார்கனகப் பெட்டகத்தை
யரியாதனத்தின் மிசையமைக்க
பணியா பரணன் பகர் மொழியைப்
பதிக்கவதனுட் பாங்குறவே

Koviloor Digital Library

தணியாக் காத லுடன் பூசை சமைக்க
விதியிற் றவறாதே
யுணவு முணர்ந்த வுயர்ந்தோர்க்கு
முவகையுறவே யுதவுகவே.

அணிஆர் கனகப் பெட்டகத்தை
அரிஆதனத்தின் மிசை அமைக்க
பணி ஆபரணன் பகர் மொழியைப்
பதிக்க அதனுள் பாங்கு உறவே
தணியாக் காதலுடன் பூசை சமைக்க
விதியில் தவறாதே
உணவும் உணர்ந்த உயர்ந்தோர்க்கும்
உவகை உறவே உதவுக ஏ.

உரை:

முன்னர்க் கூறிய சிங்க ஆதனத்தின் மேலே அழகு நிரம்பிய பொன் முதலியவற்றால் செய்த பெட்டியை வைத்து, அதன் உள்ளே நாகப் பாம்பை அணிகலனாகக் கொண்ட சிவன் அருளிச் செய்த சிவ ஆகமத் திருநூலை முறைமை பொருந்த இருத்தி, அதற்கு மிகுந்த அன்புடன் பூசை செய்து, பூசையிற் கலந்து கொண்ட, மெய்யுணர்ந்த மேலோர்க்கும் ஏனைய மக்களுக்கும் மகிழ்வோடு உணவு படைத்து, உண்ணுமாறு செய்க.

விளக்கம்:

அணி - அழகு; **ஆர்** - நிரம்பிய; **கனகம்** - பொன்; **மிசை** - மேலே; **ஆதனம்** - பீடம்; **பணி** - பாம்பு; இங்கு நாகப் பாம்பைக் குறிக்கும். **பணி ஆபரணன்** - நாகப் பாம்பை அணிகலனாக அணிந்த சிவன்; **பகர்மொழி** - அருளிய சிவ ஆகமம்; **பதிக்க** - இருத்திடுக; **பாங்கு** - முறைமை ஒழுங்கு; **தணியா** - குறையாத; **சமைக்க** - செய்க. (61)

114. என்றுமியற்றி யிடயாக
மீகநிதியு மிருநிலனும்
பொன்று முடல மெனவுணர்ந்து
பொருவிலரிய பொருடன்னை
யொன்றக் கருது முளமுடையா
ருய்யவைய மொப்பிலுரை
நின்று நிலைமை யுடையோர்பா
னெறியையறிய நிகழ்த்திடவே.

Koviloor Digital Library

என்றும் இயற்றியிட யாகம்
ஈகநிதியும் இருநிலனும்
பொன்றும் உடலம் என உணர்ந்து பொருஇல்
அரிய பொருள் தன்னை
ஒன்றக் கருதும் உளம் உடையார் உய்ய
வையம் ஒப்புஇல் உரை
நின்று நிலைமை உடையோர்பால் நெறியை
அறிய நிகழ்த்திட ஏ.

உரை:

உடம்பு நிலைத்து நில்லாது என்று அறிந்து, இந்த உடல் உள்ளபோதே ஒப்பு இன்றி ஒருவராலும் பெறுவதற்கு அரிய சிவமாகிய பொருளை அடையக் கருதும் உள்ளம் உடையவர், உலகில் உள்ள அனைவரும் பிழைக்கும் பொருட்டு, அந்த ஞான ஆலய பீடத்தில் இருக்கும் சிவ ஆகமத் திருநூலுக்கு, எந்த நாளும் பூசை நடத்துவதற்கும், மேலான ஆகமங்கள் கூறும் முத்தி வழியை ஆராய்வதற்கும், ஆராய்ந்து தெளிந்த வழியைப் பின்பற்றுவதற்கும், நிகர் இல்லாத ஆகம விளக்க உரையின் வழி நின்று நிலைபெறும் தன்மை உடையவர்களுக்குப் பொருளும் நிலமும் உதவுக.

விளக்கம்:

என்றும் இயற்றியிட யாகம் - பூசையை என்றும் இயற்றியிடுக; இட - இடுக; யாகம் - இங்கு யாகம் என்பது ஆகமத்திற்குச் செய்யப்படும் பூசை; ஈக - தருக; நிதி - செல்வம்;

பொன்றும் - அழியும்; பொரு - ஒப்பு; இல் - இல்லாத; ஒன்ற - அடைய, பெற; உய்ய - ஈடேற; நெறி - முத்தி வழி; வீடுபேறு; நிகழ்த்திட - செய்ய. (62)

பழுதடைந்த சுவடி

115. பழகிப் பழுது பல விரவிற்
பரமர் திருவாய் மொழியிதழும்
வழுவற்றெழுத வல்லாரால் வரைவித்
தெழுதி மையினையு
மழகுற்றதனை யருச்சிக்க வாசான்
பழைய வதுதன்னை
யழலிற்புரிக வாகுதியை
யானெய்யுடனே யமலனுக்கே.

Koviloor Digital Library

பழகிப் பழுதுபல விரவில் பரமர்
திருவாய் மொழி இதழும்
வழுஅற்று எழுத வல்லாரால் வரைவித்து
எழுதி மையினையும்
அழகுஉற்று அதனை அருச்சிக்க ஆசான்
பழைய அது தன்னை
அழலில் புரிக ஆகுதியை ஆன்
நெய்யுடனே அமலனுக்கு ஏ.

உரை:

சிவாகமத் திருநூலைக் கற்பிக்கும் ஆசிரியர், மேலான இறைவனுடைய திருவாய் மொழியான ஆகமம் எழுதப் பெற்ற சுவடி, நீண்ட காலம் பயன் படுத்தியதன் காரணமாக ஏடுகள் ஒடிந்துருங்கி, எழுத்துகள் தெளிவாகத் தெரியாமல் இருந்தால், பிழை இல்லாமல் எழுதக் கூடிய ஒருவரைக் கொண்டு, புதிதாக அந்த ஆகமத்தை எழுதச் செய்க. எழுதி முடித்த பின் எழுத்துகள் தெளிவாகப் புலப்பட அவற்றின் மீது அழகு பெற மைக்காப்புச் செய்க. பிறகு, புதிய ஆகமச் சுவடியை முறைப்படி வழிபாடு செய்த பின்னர், பழுதான பழைய சுவடியைப் பரமசிவனுக்குப் பசுவின் நெய்யில் தோய்த்து ஓமத் தீயில் ஓமம் செய்க.

விளக்கம்:

பரமன் திருவாய் மொழி - சிவ ஆகமத் திருநூல்; இதழ் - ஏடு; வழு - குற்றம்; வல்லார் - தகுதி உள்ளவர்; அருச்சிக்க - பூசித்து வழிபடுக; அழல் - தீ; ஆகுதி - ஓமத்தீயில் நெய் இடுதல்; ஆன் - பசு; அமலன் - இறைவன்; இங்குச் சிவனைக் குறிக்கும். (63)

ஞான ஆலய பூசைப் பயன்

116. இந்த விதியி லியற்றினர்கண்
மூவேழ் சுற்றத்தொடு மிறைவ
னந்தவுலக மடைந் தட்ட குணத்தொ
டமர்வ ரவ்விடத்துஞ்
சிந்தைக்கரிய சிவனடியைத் திளைத்தே
யிருப்பர் சிவமாவர்
வந்து பிறப்பர் போகத்தின்
மகிழ்ச்சி யாங்கே வைத்தாரே.

இந்த விதியில் இயற்றினர்கள்
மூஏழ் சுற்றத்தொடும் இறைவன்
அந்த உலகம் அடைந்து அட்டகுணத்தொடு
அமர்வர் அவ்விடத்தும்

Koviloor Digital Library

சிந்தைக்கு அரிய சிவன் அடியைத் திளைத்தே
இருப்பர் சிவம் ஆவர்
வந்து பிறப்பர் போகத்தில் மகிழ்ச்சி
ஆங்கே வைத்தார் ஏ.

உரை:

இவ்வாறு கூறியபடி சிவ ஆகமத் திருநூலுக்குச் சிலை முதலியவற்றால் ஆலயம் அமைத்து, ஆகமம் எழுந்தருள வைத்தற்கு உரிய பேடகம் முதலிய வற்றையும் செய்தவர்கள், தங்களுடைய இருபத்தொரு தலைமுறைகளைச் சேர்ந்த உறவினரோடு சிவன் எழுந்தருளியுள்ள சிவ உலகை அடைந்து, முழுதுணர் ஞானம் முதலான எட்டுக் குணங்களோடு விளங்குவர்; அங்குள்ள இன்பங்களில் மனத்தைச் செலுத்தாமல் மனத்துக்கு எட்டாத சிவபிரான் திருவடிகளைச் சிந்தனை செய்தபடியே இருப்பார்கள்; சிவகதியும் பெறுவர்; பின்னரும், இன்பங்களை விரும்பியவர்கள் மீண்டும் மண்ணுலகில் பிறப்பார்கள்.

விளக்கம்:

மூஏழ் - இருபத்து ஒரு; சுற்றம் - உறவினர்; அட்ட - எட்டு; திளைத்து - அழுந்தி; சிவமாவர் - சிவகதி பெறுவர். (64)

மண்ணுலகில் பிறந்த பயன்

117. போகமுடிவிற் புவிதன்னிற் பிறந்து
புரந்து புவியெல்லா
மோகமறவே மறைநான்கு
முறையிலுணர்ந்து முனிந்துடல
மேகனிறைவ னிணையடியை யிரண்டற்
றொளிரு மெழின் ஞான
யோகமடைந்து சிவமாவ
ரூனமனைத்து மொழிந்திடவே.

போகம்முடிவில் புவிதன்னில் பிறந்து
புரந்து புவிஎல்லாம்
மோகம் அறவே மறைநான்கும் முறையில்
உணர்ந்து முனிந்து உடலம்
ஏகம் இறைவன் இணைஅடியை இரண்டு
அற்று ஒளிரும் எழில் ஞான
யோகம் அடைந்து சிவம்ஆவர் ஊனம்
அனைத்தும் ஒழிந்திட ஏ.

Koviloor Digital Library

உரை:

சிவ உலகிலிருந்து மீண்டும் மண்ணுலகிற் பிறந்தவர்கள், நாடாளும் மன்னராவர். பிறகு உலக இன்பங்களை நுகரும் ஆசை அகல சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பிரிவுகளாக உள்ள சிவ ஆகம உண்மைகளை ஆசானிடம் கேட்டு அறிந்து, அதன் விளைவாக உடற்பற்றை விடுவர். பிறகு நல்வினை, தீவினைகளைச் சமமாக நோக்கும் பக்குவம் பெற்று, பிறவிக்கு ஏதுவான வினைகளிலிருந்து விடுபட்டு, சிவஞான யோக சித்தி பெறுதலாகிய தவநிலையில் நின்று சிவகதி பெறுவர்.

விளக்கம்:

புவி - பூமி; புரந்து - ஆட்சி செய்து; மோகம் - ஆசை; முனிந்து - வெறுத்து; ஏகன் - ஒருவன்; இணை - இரண்டு; ஒளிரும் - விளங்கும், ஒளிவிடும்; எழில் - அழகு; ஊனம் - கேடு. (65)

118. அறைந்தா மமலனருண் மொழியை யறையுமுறையு
மதன் விதமுஞ்
சிறந்தவெல்லைச் சிவாச்சிரமஞ்
செய்யுமுறையுஞ் செப்பிடுவா
நிறைந்த புகழு நிகராத போகவிதமு
நிலன் வாழ்வை
மறந்து பிறவாவரந்தானுங் கற்பார்
தமக்கும் வாய்ப்பதற்கே.

அறைந்தாம் அமலன் அருள்மொழியை அறையும்
முறையும் அதன் விதமும்
சிறந்த எல்லைச் சிவாச் சிரமம் செய்யும்
முறையும் செப்பிடுவாம்
நிறைந்த புகழும் நிகராத போக விதமும்
நிலன் வாழ்வை
மறந்து பிறவா வரம்தானும் கற்பார்
தமக்கும் வாய்ப்பதற்கு ஏ.

உரை:

தூயவனான சிவபெருமான் அருளிய ஆகமத்தை மாணாக்கர்களுக்குக் கற்பிக்கும் முறைகளும், அதன் வகைகளும், சிவஞானக் கொடையும், அதற்கு உதவியவர் பெறும் பயனும், இந்த இயலைக் கற்பவர் அடையும் கீர்த்தியும், அவர் நுகரும் இணையில்லாத இன்ப வகைகளும் பற்றி உரைத்தோம். இனி நிலவுலக வாழ்வில் அமிழ்ந்து, பிறவாதிருக்கும் நிலையை மறந்தார்க்கு, அப்பிறவா நிலை உண்டாகும் பொருட்டுச் சிவ ஆசிரமம் அமைக்கும் விதியை உனக்கு உரைப்போம்.

Koviloor Digital Library

விளக்கம்:

அறைந்தாம் - சொன்னோம்; அமலன் - மலம் இல்லாத சிவன்; நிகராத - ஒப்பில்லாத; செப்பிடுவாம் - உரைப்போம்; போகம் - இன்பம்; நிலன் - தரை; வாய்ப்பதற்கு - உண்டாவதற்கு; ஏ - அசை. (66)

119. சிறக்கச் செய்க திருவெல்லை
செறியப் புடையே திருமதிலும்
புறத்தே யெழிலார் பொழிலதனைப்
புரிசையதனைப் புடையடைய
நிறைத்த மலர்ப்பூம் பொழில் புறத்து
நிறைநீர்த்தடங்க ளதன்புடையே
பிறக்கலனைய கோபுரத்தைப் பிரியாப்
புரிசை பெறுத்துகவே.

சிறக்கச் செய்க திருஎல்லை
செறியப்புடையே திருமதிலும்
புறத்தே எழில்ஆர் பொழில் அதனைப்
புரிசைஅதனைப் புடைஅடைய
நிறைத்த மலர்ப்பூம்பொழில் புறத்து நிறைநீர்த்
தடங்கள் அதன்புடையே
பிறக்கல் அனைய கோபுரத்தைப் பிரியாப்
புரிசை பெறுத்துக ஏ.

உரை:

அழகிய எல்லையின் நடுவே சிவ ஆசிரமம் அமைத்தற்கு உரிய இடத்தைத் தீர்மானித்து, அதனைச் சூழ ஒரு திருமதிலையும் அந்த மதிலின் வெளிப்பக்கத்தில் அழகு நிரம்பிய ஒரு பூஞ்சோலையையும், அப் பூஞ்சோலையின் அருகே நீர் நிரம்பிய தடாகத்தையும், அதனைச் சூழ மலைபோல உயர்ந்து விளங்கும் திருக் கோபுரத்தோடு பொருந்தியிருக்கும் அடைய வளைந்தான் திருமதிலையும் அமைத்திடுக.

விளக்கம்:

புடை - பக்கம்; மதில் - சுற்றுச் சுவர்; புறம் - வெளிப்பக்கம்; எழில் ஆர் - அழகு நிரம்பிய; பொழில் - சோலை; புரிசை - மதில்; நீர்த்தடம் - நீர்நிலை, குளம்;

பெறுத்துக - அமைத்திடுக; பிறக்கல் - பிறங்கல் என்பது எதுகை நோக்கிப் பிறக்கல் என வந்தது, சிறுமலை என்பது பொருள்.

அடைய வளைந்தான் - கோயிலின் வெளிச்சுற்று மதில். (67)

Koviloor Digital Library

120. உரைத்த புரிசை யுண்ணாலா
மொப்பிலமல னுரைத்தவுரை
தரித்தும் விரித்துந் தக்கோர்க்குத்
தாழா நிலைமை தலைமையவ
ரிருக்கும் கழக மண்டபமு
மியற்றிடுக வெழிலுறவே
யரிக்குமரிக்குமயன் ரனக்கு
மரியானடியே யடைவாரே.

உரைத்த புரிசை உள் நாலாம்
ஒப்பில் அமலன் உரைத்த உரை
தரித்தும் விரித்தும் தக்கோர்க்குத்
தாழாநிலைமை தலைமையவர்
இருக்கும் கழக மண்டபமும் இயற்றி
இடுக எழில் உறவே
அரிக்கும் மரிக்கும் அயன் தனக்கும்
அரியான் அடியே அடைவார் ஏ.

உரை:

(இறந்து போகும் நிலையினரான) திருமாலும் பிரமனும் அறிவதற்கு அரிய சிவபெருமானுடைய திருவடிகளை அடைய எண்ணுகிறவர், முன்பு சொல்லிய முதலாவது ஆவரணத்துக்கு நடுவில் குறித்த இடத்தில் துறவிகள் தங்குவதற்கு ஏற்ற தனி இடங்களும், ஜபம், தியானம் செய்வதற்கு உரிய இடங்களும், பணியாளர் தங்குவதற்கு ஏற்ற இடங்களும் பொருத்தமாக அமையும்படி திருமடத்தைக் கட்டுக. பின்னர், அத்திருமடத்திற்கு அருகே, தனக்கு நிகரில்லாத தூயவனான சிவபெரு மான் அருளிய ஆகம நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர்களும், அவற்றின் பொருளைத் தகுதி வாய்ந்தவர்களுக்குக் கற்பிக்கும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களுமாகிய பெரியோர்கள் தங்கிக் கற்பிப்பதற்கு உரிய மண்டபத்தையும் அமைத்திடுக.

விளக்கம்:

மரிக்குந் தன்மை பிரமனுக்கும் திருமாலுக்கும் பொது. **புரிசை** – மதில்; **அமலன்** – சிவன்; **உரைத்த உரை** – ஆகம நூல்கள்; **தரித்து** – பொருள் உணர்வைத் தாங்கி;

விரித்தும் – கற்பித்தும்; **தக்கோர்** – தகுதி வாய்ந்தவர்; **கழகம்** – கல்வி கற்பிக்கும் இடம்; **அரி** – சிவபிரானுடைய தேவி, திருமால்; **மரிக்கும்** – இறக்கும்;

அயன் – பிரமன்; அரியான்; அறிய முடியாதவன்; **அடி** – திருவடிகள்; **ஏ** – அசை. (68)

Koviloor Digital Library

121. அதற்குமீதாம் பஞ்ச மத்தையமைக்க
வமலர்க் காலயத்தைக்
குதர்க்க பேத மனைத்தினையுங் குறைத்தே
குறையா மதிகொடுக்கும்
பதத்தைப் பகர்ந்த பரமனுக்குப்
பாச வினைக்கும் பகைவனுக்கு
நதத்தைக் கடந்த நம்பனுக்கு
நாடற்கரிய நாதனுக்கே.

அதற்கு மீதாம் பஞ்சமத்தை அமைக்க
அமலர்க்கு ஆலயத்தைக்
குதர்க்க பேதம் அனைத்தினையும்
குறைத்தே குறையாமதிகொடுக்கும்
பதத்தைப் பகர்ந்த பரமனுக்குப்
பாச வினைக்கும் பகைவனுக்கு
நதத்தைக் கடந்த நம்பனுக்கு
நாடற்கு அரிய நாதனுக்கு ஏ.

உரை:

உயிர்களின் பாச மலங்களை அழிப்பவனும், நாதம் கடந்தவனும், அன்பரல்லாதார் யாரும் காணமுடியாத தலைவனும், குற்றத்திற்கு இடம் தரும் முரண்பாடான விவாதங்களைக் குறைத்து, நிரம்பிய மெய்யறிவை அளிக்கும் ஆகம நூல்களை, (தட்சணா மூர்த்தமாக) தென்முகக் கடவுளாக கல்ஆல மரத்தின் கீழ் அமர்ந்து உரைத்த தூயவனுமாகிய சிவனுக்கு, முன் சொன்ன கல்விக் கழகத்துக்கு மேலாக ஆலயம் அமைத்திடுக.

விளக்கம்:

குதர்க்கம் - நெறிதவறிய தர்க்கம்; மதி - அறிவு; பதத்தைப் பகர்ந்த - ஆகம உண்மைகளை உரைத்த; அமலர் - பரமன், நம்பன், நாதன் ஆகிய பெயர்கள் சிவபிரானைக் குறிக்கும்.

நதம் - நாதம் என்பது நதம் என வந்தது; ஒலி என்பது பொருள்; ஏ - அசை. (69)

122. அங்கிமுதற் றென்றிசை யந்தத்
தடுகைமனை சத்திரசாலை
பொங்கு தழலைப் புரிசாலை
பூணும் பணியும் பேணுமிடஞ்

Koviloor Digital Library

சங்கை தணிக்குங் கொட்டாரஞ்சமைக்க
குடநீர் சமித்துறையு
ளிங்கு வேண்டும் பொருளதிதி
யேவலோரு மெய்திடமும்.

அங்கிமுதல் தென்திசை அந்தத்து
அடுகைமனை சத்திரசாலை
பொங்கும் தழலைப் புரிசாலை
பூணும் பணியும் பேணும் இடம்
சங்கை தணிக்கும் கொட்டாரம் சமைக்க
குடநீர் சமித்து உறையுள்
இங்கு வேண்டும் பொருள் அதிதி
ஏவலோரும் எய்து இடமும்.

உரை:

மடத்தின் உள்ளே தென்கிழக்குத் திசைமுதல் தென்திசையெல்லை ஈறாகத் திருமடைப்பள்ளி; கிழக்கே உணவு அளிக்கும் அறச்சாலை; வடகிழக்கிலே ஓமத் தீ வளர்க்கும் யாகசாலை; வடக்கே திரு ஆபரணங்களைச் சேமித்து வைக்கும் பொற் களஞ்சியம்; வடமேற்கிலே மிகுதியாக நெல் சேமித்து வைக்கும் நெற்களஞ்சியம்; மேற்கே நீராட்டுக்கு உரிய குடம் முதலியன வைக்கும் அறை; தென் மேற்கிலே தருப்பை புல், ஆயுதங்கள், விறகு ஆகியவை வைக்கும் இடம்; தெற்கிலே மடத்துக்கு வேண்டிய நாற்காலி, கட்டில், பாதுகை முதலியன வைப்பதற்கும்; பணியாளர்கள், புதிதாக வருகிறவர்கள் தங்குவதற்கும் ஏற்ற இடம்; ஆகியவற்றை அமைத்திடுக.

விளக்கம்:

அங்கி - நெருப்பு; இது தென்கிழக்குத் திசையைக் குறிக்கிறது. தென் திசை - தெற்கு; அந்தம் - ஈறு, முடிவு; மனை - வீடு, இல்லம்; அடுகை - சமைத்தல்; அடுகைமனை - கோயிலின் மடைப்பள்ளி; பொங்கும் - எரியும்; தழல் - நெருப்பு; புரிசாலை - யாகசாலை; பூணும் - அணிகிற; பணி - ஆபரணம்; பேணும் - சேமிக்கும்; சங்கை - ஐயம்; கொட்டாரம் - தானியக் களஞ்சியம்; சமித்து - தீ வளர்க்கும் சுள்ளிகள்; அதிதி - புதியவர்; குடநீர் - நீர்க்குடம்; ஏவலர் - பணியாளர், ஆயுதங்கள் கோயில் வெளித் திருப்பணிக்கு உரியவை. (70)

தென்முகக் கடவுளை நிலைபெறச் செய்தல்

123. விதிநூன் முறையே யதிவாத
வினையுமற்றை வினையனைத்தும்
பதியாம் பரமன்றனக்கிசையப்
பண்ணியிடுக பரிவுடனே

Koviloor Digital Library

நிதியுங் கொடுக்க நிலனுடனே
நிகழவென்று நிறைபூசை
துதியுஞ் செய்க தோன்றாத
துணையைப் பணிந்து துகளறவே.

விதிநூல் முறையே அதிவாத வினையும்
மற்றை வினை அனைத்தும்
பதியாம் பரமன் தனக்கு இசையப்
பண்ணி இடுக பரிவுடனே
நிதியும் கொடுக்க நிலன்உடனே
நிகழஎன்றும் நிறைபூசை
துதியும் செய்க தோன்றாத
துணையைப் பணிந்து துகள் அற ஏ.

உரை:

தட்சணாமூர்த்தத்தைச் சிலை முதலியவற்றால் திருமேனி அமைத்து, அதனைச் சிவபிரான் ஏற்கும்படி சிவாகமங்களில் விதித்தவாறு பிராகாரத்திலே விக்கிரகப் பிரதிட்டைக்கு உரிய சடங்குகளும், பிரதிட்டைக்கு உரிய ஏனைய ஏற்பாடுகளும் அன்போடு செய்து, குறித்த இடத்தில் திருமேனியை நிலை நிறுத்தி, எல்லாக் காலங்களிலும் பூசைகள் நடைபெறும் வண்ணம் விளைநிலங்களும், பொன் பொருள் வசதியும் ஏற்படுத்தி, தங்கள் குற்றங்கள் அகல இறைவனைத் தோத்திரம் செய்து வணங்குக.

விளக்கம்:

அதிவாத கன்மம் - பிரதிட்டைக்கு முன் செய்யும் ஒரு கிரியை. **விதிநூல்** - நூல் விதி. இது ஆகம நூலின் விதியைக் குறிக்கிறது. **அதிவாதம்** - விக்கிரகப் பிராகாரத்திலே உரிய சடங்குகள். **வினை** - பிரதிட்டைக்கு உரிய கிரியைகள். **பிரதிட்டை** - விக்கிரகத்தை உரிய இடத்தில் நிலை நிறுத்துதல்.

சிலை - விக்கிரகம், திருமேனி, மூர்த்தம்; **பதி** - கடவுள்; **பரமன்** - இறைவன்; **இசைய** - பொருந்த; **தோன்றாத துணை** - சிவபிரான்; **தட்சணாமூர்த்தம்** - தென்முகக் கடவுள், சிவனுடைய குருவடிவம். (71)

ஆசானுக்கு உதவுதல்

124. குரவன்றனக்கு நிதிமுதலுங் கொடுத்துக்
குன்றாக் குணமொழுக்கம்
விரதமுடைய வேதியர்க்கும் விழைவாற்
பதமு மிசைவிக்கப்

Koviloor Digital Library

பரமனடியா ரவர்தமக்கும்
பங்குகாலர் பாலருடல்
விரவுநோயர் விழியிழந்தார் விருத்தர்
தமக்கும் விருப்புறவே.

குரவன்தனக்கு நிதிமுதலும் கொடுத்துக்
குன்றாக் குணம் ஒழுக்கம்
விரதம் உடைய வேதியர்க்கும் விழைவால்
பதமும் இசைவிக்கப்
பரமன் அடியார் அவர் தமக்கும்
பங்குகாலர் பாலர் உடல்
விரவும் நோயர் விழி இழந்தார் விருத்தர்
தமக்கும் விருப்பு உறவே.

உரை:

தென்முகக் கடவுளை நிலைபெறுவித்த புண்ணியப் பலன் தனக்குக் கிடைக்கும் வண்ணம் தன் ஆசானுக்குப் பொருள், ஆடை முதலியவற்றை உதவுக. மேலும், நற்குணம், நல்லொழுக்கம், விரதம் உடைய வேதியர்; சிவனடியார்; முடவர்; சிறுபிள்ளைகள்; உடல் நோயாளிகள்; குருடர்; முதியோர் ஆகியோருக்கு விருப்பத்தோடு உணவு வழங்குக.

விளக்கம்:

குரவன் - சிவ ஆகம உண்மைகளைக் கற்பித்த ஆசான். நிதி - செல்வம்; குன்றா - குறையாத; விழைவு - விருப்பம்; பதம் - பொருள், ஆடை;

பரமன் - சிவன்; பங்குகாலர் - முடவர்; நோயர் - நோயாளிகள்; விருத்தர் - முதியோர். (72)

சிவபுரம் செய்தவர் பெறும் பயன்

125. செய்தார் சிறக்கச் சிவபுரத்தைச்
சிற்பவுரையிற் றிகழ்விதியா
லெய்தார் பிறப்பிற் சிவலோக மெய்திப்
போக மினிதருந்தி
வெய்தாம் வினையு மாணவமும்
வீயாமாயை யொடும் விடவே
மெய்யாம் பரம வித்தையுற
விமலன் கமலம் விரவுவரே.

Koviloor Digital Library

செய்தார் சிறக்கச் சிவபுரத்தைச்
சிற்பஉரையில் திகழ் விதியால்
எய்தார் பிறப்பில் சிவலோகம் எய்திப்
போகம் இனிது அருந்தி
வெய்து ஆம் வினையும் ஆணவமும்
வீயாமாயை யொடும் விடவே
மெய் ஆம் பரம வித்தை உற
விமலன் கமலம் விரவுவர் ஏ.

உரை:

நிலப்பரப்பில் சிவபிரானை வழிபாடு செய்வதற்கு உரிய சிவாசிரமத்தைச் சிற்பநூல் கூறும் முறைப்படி அமைத்தவர்கள், இவ்வுலகில் மீண்டும் பிறவாத நிலையைப் பெறுவர்; அப்புண்ணியப் பயனால் சிவ உலகை அடைந்து அங்குள்ள இன்பங்களையும் நுகர்வர்; பிறகு, கெடாத மாயை, ஆணவ மலம், கொடிய கர்மம் ஆகியவற்றிலிருந்து நீங்கி, மேலான மெய்யறிவுப் பெற்றுச் சிவபிரானுடைய திருவடித் தாமரைகளை அடைவர்.

விளக்கம்:

சிவபுரம் - சிவ உலகம், சிவமாநகர். இது இவ்வுலகில் சிவபிரானை வழிபாடு செய்வதற்காக அமைக்கப்பட்ட திருமடம், திருக்கோயில், திருத்தலங்கள் அனைத்தையும் குறிக்கும். இங்கு சிவாசிரமங் குறித்து நின்றது.

சிற்ப உரை - திருக்கோயில், திருமடம், விக்கிரகங்கள் ஆகியவற்றை அமைக்கும் முறைகளை விளக்கிக் கூறும் சிற்ப நூல்கள், இவை தமிழிலே உண்டு. **எய்தார்** - அடையார்; **வெய்து** - கொடியது; **வீயா** - கெடாத;

பரம வித்தை - மேலான அறிவு; **விமலன்** - இறைவன்; **கமலம்** - திருவடித் தாமரை; **விரவுதல்** - கலத்தல். (73)

சிற்பியும் பிறரும் பெறும் பயன்

126. சிவனற்புரியைச் சென்றடைவர் சிந்தை
மகிழச் சிவபுரிசெய்
தவதிமுதலோர் தருமுதலுஞ்
சாரும்பூணி யொடு மற்றும்
புவலோகத்தின் மிசைப் புகுவர்
பொருள்கொண் டேவற் புரிந்தாருங்
கவராவொருமைக் கருத்துறினே
கணிகையவருங் களிப்புறவே.

Koviloor Digital Library

சிவன்நல்புரியைச் சென்று அடைவர் சிந்தை
மகிழச் சிவபுரிசெய்
தவதிமுதலோர் தரும் முதலும்
சாரும் பூணியொடும் மற்றும்
புவலோகத்தின் மிசைப் புகுவர்
பொருள் கொண்டு ஏவல் புரிந்தாரும்
கவராஒருமைக் கருத்து உறினே
கணிகை அவரும் களிப்பு உற ஏ.

உரை:

பார்ப்பவர் மகிழுமாறு சிவ வழிபாட்டிற்கு உரிய திருமடம் முதலியவற்றை உருவாக்கிய சிற்பிகள், மரவேலை செய்யும் தச்சர்கள், உரிய கூலியைப் பெற்றுக் கொண்டு ஏவிய வேலைகளைச் செய்த பணியாள்கள், மனம் கோணாமல் மாலை கட்டுதல் முதலிய திருப்பணிகளைச் செய்கின்ற பணிப்பெண்கள் ஆகியவர்களோடு, திருப்பணிக்காக வண்டிகளில் ஏற்றப்பட்ட மரம், கல் முதலான பொருள்களை இழுத்து வந்து சேர்த்த எருதுகளும், மண் உலகிற்கு மேற்பட்ட புவலோக வாழ்வை அடைவர்.

விளக்கம்:

தவதி முதலோர் - ஸ்தபதி, சிற்பி, தச்சர், அவர்களின் உதவியாளர்கள்; தரு முதலோர் - முதல் தருவோர் கட்டிடத்துக்கு மூலமான செங்கல், கல் முதலியன தருவோர்; **பூணி** - எருது முதலியவை; **கவரா ஒருமை** - மனம் கோணாத நிலை, மன ஒருப்பாடு; ஏவல் - இட்ட பணி;

புவலோகம் - திருப்பணி செய்தவர்கள் தங்கும் பூவுலகிற்கு மேலேயுள்ள ஒருவகை உலகம்; **கணிகை** - மாலை தொடுத்தல், ஆடல், பாடல் நிகழ்ச்சிகளைச் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடும் பணிப்பெண். (74)

சிவபுரப் பெருமை

127. சிறந்து செறிவர் சிவபுரத்தைத்
தெரித்தற்கரிய சிவனகருட்
பிறந்தார் பிறழா நிலைமையினைப்
பிரியா தொருமைப் பெருமையுட
னுறைந்தா ருறையு மவர்க்கனமு
முதவுவார்க ளுறையுள்ளு
மிறந்தா ரிறக்க வெண்ணுநர்க
ளென்னுமிவர்க ளெல்லோரும்.

Koviloor Digital Library

சிறந்து செறிவர் சிவபுரத்தைத்
தெரித்தற்கு அரிய சிவன் நகருள்
பிறந்தார் பிறழா நிலைமையினைப்
பிரியாது ஒருமைப் பெருமையுடன்
உறைந்தார் உறையும் அவர்க்கு அ(ன்)னமும்
உதவுவார்கள் உறையுள்ளும்
இறந்தார் இறக்க எண்ணுநர்கள்
என்னும் இவர்கள் எல்லோரும்.

உரை:

அளவைகளால் அளவிட்டுச் சொல்ல முடியாத சிவபுரியில் பிறந்தவர்களில் நிலை தவறாத ஒருமைப்பாட்டின் பெருமையுடன் வாழ்பவரும், அங்கு இருப்பவர்களில் வசதியில்லாதவர்களுக்கு உணவும் தங்குவதற்கு இடமும் கொடுப்பவர்களும், அச்சிவபுரத்தில் இறந்தவர்களும், அங்கேயே வாழ்ந்து உயிர்விட எண்ணுகின்றவர்களும் மேலான சிவ உலகத்தை அடைவர்.

விளக்கம்:

செறிவர் - அடைவர்; பிறழாநிலை - இயல்பு மாறாத நிலை; பிரியாது - விலகாது; உறைந்தார் - வாழ்ந்தவர்; உறையுள் - வீடு;

சிவபுர விளக்கம் சிவபெருமானை வணங்குவதற்காகத் திருக்கோயில் களும், சிவசமய குருமார் தங்குவதற்காக அமைக்கப்பட்ட திருமடங்களும் மண்ணுலகில் உள்ள சிவபுரங்கள் ஆகும். இவை சைவ மக்களுக்கு உரிய புண்ணியத் தலங்கள்.

இந்த அடிப்படையில்தான் தென்னிந்தியாவில் தமிழகத்தில் தியாகராசர் எழுந்தருளியுள்ள திருவாரூரில் பிறக்கிறவர்கள் இயல்பாகவே முத்திப் பேறு பெறுவர் என்றும், வட இந்தியாவில் கங்கையாற்றின் கரையில் விசுவநாதர் எழுந்தருளியுள்ள காசிநகரில் இறப்பவர்கள் முத்திப் பேறு பெறுவர் என்றும் ஒரு நம்பிக்கை சைவ சமய மக்களிடையே இருந்து வருகிறது. அந்த நம்பிக்கையை இந்தப் பாடல் எதிரொலிக்கிறது. (75)

வணங்குவோர் பெறும் பயன்

128. பணிவார் பரவிப் பரமேசன்
பதிகடன்னைப் பணிதற்கே
துணிவார் வழியிற் றுணைச் செல்வார்
தொடர்ந்துகூடித் தொழுவாரென்

Koviloor Digital Library

றெணியா ரிவர்க ளெல்லோரு மிறைவன்
புரத்தி லிருப்பதற்கே
யணியாரவல வினையனைத்து மறுப்பார்
சமனைக் கறுப்பாரே.

பணிவார் பரவிப் பரமேசன்
பதிகள் தன்னைப் பணிதற்கே
துணிவார் வழியில் துணைச்செல்வார்
தொடர்ந்து கூடித் தொழுவார் என்று
எணியார் இவர்கள் எல்லோரும்
இறைவன் புரத்தில் இருப்பதற்கே
அணியார் அவல வினை அனைத்தும் அறுப்பார்
சமனைக் கறுப்பார் ஏ.

உரை:

அனைவருக்கும் மேலான சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக் கோயில்களுக்குச் சென்று, அப் பரமசிவனை வணங்குகிற வழக்கம் உடையவரும், இவ்வாறு வழிபாடு செய்யச் செல்லுகின்ற அடியவர்களுக்குத் துணையாகச் சென்று, அவர்களுடன் சேர்ந்து தொழுகின்றவர்களும், தாங்கள் செய்த தீய கருமப் பயன்களை அனுபவிப்பதிலிருந்து விடுபட்டு, இறப்பை வென்று, சிவ உலகை அடைந்து வாழ்வதற்குத் தகுதியுடையோர் ஆவர்.

விளக்கம்:

பரவிப் பணிவார் - போற்றி வணங்குகின்ற அன்பர்; பதிகள் - கோயில்கள்; பரமேசன் - பரம + ஈசன் - மேலான இறைவன்; எணியார் - எண்ணியவர்; இறைவன் புரம் - சிவ உலகம்; அணியார் - அணிமையிலுளார் சிவபுரத்திலிருக்கும் பேற்றுக்கு அணிமையிலுளார்;

அவல வினை - அவலம் + வினை - துன்பஞ் செய்யும் கருமப் பயன்; சமனைக் கறுப்பர் - எமனைக் கோபிப்பார்; யமனுக்கு இணங்கார்; சாவை வெல்வார். (76)

சிவபூசை செய்வோர் பெறும் பயன்

129. சிவனைப்பூசை செய்விப்பார்
சிவனற்புரியைச் சென்றடைவ
ரவனைப் பருவத் தறிவிக்கு
மாசாரியனை யன்பரையுந்

Koviloor Digital Library

தவரைத் தமிக்கும் பிணிதனையுந்
தணிப்பார்தாமுந் தனித்தேமே
யெவரிப் பிணியைத் தணிப்பாரென்றிளைப்பா
ரிளைப்புக் கிளைப்பாரும்.

சிவனைப்பூசை செய்விப்பார் சிவன்
நல் புரியைச் சென்று அடைவர்
அவனைப் பருவத்து அறிவிக்கும்
ஆசாரியனை அன்பரையும்
தவரைத் தமிக்கும் பிணிதனையும்
தணிப்பார் தாமும் தனித்தேமே
எவர்இப் பிணியைத் தணிப்பார் என்று
இளைப்பார் இளைப்புக்கு இளைப்பாரும்.

உரை:

மாணாக்கர் பக்குவத்துக்கு ஏற்ப ஒவ்வொருவரும் சிவபிரானுடைய அருளைப் பெறுவதற்கு உரிய வழியைக் கற்பிக்கும் ஆசானும், குருவிடம் உபதேசம் பெற்றுப் பயிற்சியிலே ஈடுபட்டிருக்கின்ற சீடர்களும், அவர்களைப் பூசையில் ஈடுபடுத்துகின்றவர்களும், தவநிலையில் இருப்பவர்கள் நோயால் வருந்தும் போது, தக்க மருத்துவர் மூலம் அவர்களின் நோயைப் போக்குகிறவர்களும், சிவபிரானை வணங்க வந்த இடத்தில் இந்த நோய் வந்துவிட்டதே, நாம் ஆதரவு அற்ற நிலையில் உள்ளோமே, இந்த நோயைப் போக்கி உதவுகிறவர் யார்? என்று வருந்துகிறவர் களின் நிலைக்கு இரங்கி நிற்பவரும் சிவலோக பதவியைப் பெறுவார்கள்.

விளக்கம்:

சிவன்நல்புரி - நல்சிவன்புரி - நல்ல சிவ உலகம்; பருவம் - பக்குவ காலம்; உரிய தருணம். அன்பர் - சாதகர்;

தவர் - தவசி; தமிக்கும் - வருத்தும்; தணிப்பார் - குணப்படுத்து கிறவர்; இளைப்பார் - சோர்வு அடைபவர். (77)

உபகாரிகள் பெறும் பலன்

130. ஆக்கையா லோதனத்தாலு மரு
நோயதனை யருந்தவர்க்குப்
போக்குவிப்பாரவர் தாமும் பொருந்திப்
போகஞ் சிவபுரியு

Koviloor Digital Library

ணீக்கிப் பிறந்து நிலமிசையே
நில்லாதுடல மென நினைந்து
நோக்கற்கரிய பரமசிவ
னோன்றாளடைவர் நோயறவே.

ஆக்கையால் ஓதனத்தாலும் அருநோய்
அதனை அரும் தவர்க்குப்
போக்குவிப்பார் அவர்தாமும் பொருந்திப்
போகம் சிவபுரியுள்
நீக்கிப் பிறந்து நிலம் மிசையே நில்லாது
உடலம் என நினைந்து
நோக்கற்கு அரிய பரமசிவன்
நோன்தாள் அடைவர் நோய்அற ஏ.

உரை:

தவத்தையே செல்வமாகக் கருதுகிற தவசிகளுக்கு வந்த எளிதில் நீங்காத பிணியைத் தம் பணிவிடையாலும், நல்ல உணவுகளாலும் தாமாகவோ அல்லது பிறர்மூலமாகவோ குணப்படுத்துகிறவர், சிவ உலகை அடைந்து, அங்கு உள்ள இன்பங்களை அனுபவித்த பிறகு, மீண்டும் மண்ணுலகில் பிறந்து, தம் உடம்பு அழியக் கூடியது என்று கருதி, தம்மிடம் பொருந்தி உள்ள ஆணவமலம் முதலான பிணிகள் நீங்கும் வண்ணம், யாராலும் நாடுவதற்கு அரிய மேலான சிவபிரானுடைய மகிமைக்குரிய திருவடிகளை அடைவர்.

விளக்கம்:

ஆக்கை - யாக்கை, உடல்; ஓதனம் - உணவு; போகம் - இன்பங்கள்; அருநோய் - எளிதில் நீங்காத நோய்; அருந்தவர் - சைவத் துறவி; போக்குவார் - நீக்குகிறவர்; நோன்தாள் - மகிமையான திருவடி; திருவடி - திருவடி என்பது இறைவன் திருவருள். (78)

கந்தன் உரைத்தான்

131. என்று சிவஞானவித தானமு மிசைத்தான்
குன்றுவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்று புலனைந்தினையும் வெய்யவினை நைய
நின்றமுனி யன்றுணர நிர்க்குண னினைந்தே.

என்று சிவஞான வித தானமும் இசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கு அருள் கொடுத்தான்
வென்று புலன் ஐந்தினையும் வெய்யவினை நைய
நின்றமுனி அன்று உணர நிர்க்குணன் நினைந்து ஏ.

Koviloor Digital Library

உரை:

மலைவாழ் வேடர் தலைவன் திருமகளான இளமையும், கொடி போன்ற சாயலும் உடைய வள்ளிநாயகிக்கு அருள் செய்த கந்தப் பெருமான், கொடிய வினைகள் கெட ஐந்து புலன்களையும் வென்ற அகத்திய முனிவன் உணர வேண்டும் என்று எண்ணி, சிவ ஆகம நூலை விளக்கி உரைத்தான்.

விளக்கம்:

குன்றுவர் - மலைவாழ் வேடுவர் தலைவனான நம்பிராசனை இது குறிக்கிறது. **மடக்கொடி** - மடம் + கொடி - இது இளமையும் கொடி போன்ற சாயலும் உடைய வள்ளிநாயகியைக் குறிக்கிறது. மடம் என்பது இளமை. **ஐந்துபுலன்** - சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்ற ஐந்து புலன்கள். **நிர்க்குணன்** - கடவுள் என்பது பொருள். இது இங்கு கந்தக் கடவுளைக் குறிக்கிறது. **நைய** - கெட. (79)

புகழ்மொழி

132. ஆருயிர்வேரென வாயவனே யாரண
மோதிய வாயவனே
சாரணர் நாடிய சற்பொருளே தனையொழிந்
தின்மைய சற்பொருளே
பூரணனாகிப் பொருவிலியே
புரமவைமாளப் பொருவிலியே
யாருமெண்ணாத விடத்தினனே
யருந்தியவால விடத்தினனே.

ஆருயிர் வேர் என ஆயவனே
ஆரணம் ஓதிய வாயவனே
சாரணர் நாடிய சற்பொருளே த(ன்)னை
ஒழிந்து இன்மைய சற்பொருளே
பூரணன் ஆகிப்பொரு இலியேபுரம்
அவை மாளப் பொருவி(ல்)லியே
யாரும் எண்ணாத இடத்தினனே
அருந்திய ஆல விடத்தினனே.

உரை:

எல்லா உயிர் வகைகளுக்கும் மூலமாக இருந்தவனே, அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற நான்கு பகுதிகளை நான்கு மறைகளாக வெளிப்படுத்திய திருவாயினனே, புலவர்கள் விரும்பிய நற்குணப் பொருளே, 'அசத்' எனப்படும் பொருள்களும் தன்னையில்லாதில்லை எனும் நிலையில் உள்ளவனே சிவனே, தனக்கு ஒப்பு இல்லாத முழுமுதற் பொருளே, விண்ணில் திரிந்த பொன் மதில், வெள்ளி மதில், இரும்பு மதில் என்ற மூன்று மதில்களையும் மேரு மலையை வில்லாக

Koviloor Digital Library

ஏந்தி அழித்தவனே, யாரும் கருதி அறிய முடியாத பரவெளியில் இருப்பவனே, கடல் நஞ்சைக் கழுத்தில் உடையவனே.

விளக்கம்:

ஆருயிர்வேர் - விருட்சம் நிலைப்பதற்கும் செழிப்பதற்கும் வேர்போல உலகுயிர்கள் நிலைப்பதற்கும் போகமோக்ஷப் பேறுகளிற் செழிப்பதற்கும் மூலாதாரமாயுள்ளவன் சிவன் என்பது. **ஆரணம்** - வேதம்; **மாள** - அழிய; **சாரணர்** - தெய்வத் தேட்டமே பராக்காக மேலுலகிற் சஞ்சரிக்கும் ஒரு வகையார்; **இன்மைய** சற்பொருள் ஞானமயமான உள்பொருள்.

பூரணன் - கடவுள்; **பொரு** - ஒப்பு; **இலி** - இல்லாதவன்; **பொரு** - பொருந்திய; **வில்லி** - வில்லை ஏந்திய சிவன்; சிவன் திரிபுரத்தை எரித்தான் என்பது சிவ வரலாறு. முப்புரம் அல்லது மூன்று கோட்டைகள் என்பது, ஆணவம், மாயை, காமம் என்ற மூன்று மலங்களின் அறிகுறி என்று திருமூலர் கூறுகிறார்.

''முப்புரம் ஆவது மும்மல காரியம்''

என்று *திருமந்திரம்* கூறுகிறது.

ஆரணம் ஓதிய வாயவன் - இது சிவபிரான் கல் ஆலமரத்தின் கீழ் குரு வடிவாக அதாவது தட்சணாமூர்த்தி அல்லது தென்முகக் கடவுள் வடிவமாக அமர்ந்து சனகன் முதலிய நால்வருக்கும் அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற நான்கு வகை அறங்களையும் நான்கு மறைகளாக அருளியதைக் குறிக்கும். இதனை,

''நன்றாக நால்வருக்கும் நான்மறையின் உட்பொருளை
அன்று ஆலின் கீழ் இருந்து அங்கு அறம் உரைத்தான்''

(திருவாசகம் - திருச்சாழல் - 16)

என்று திருவாதவூரர் உரைப்பது காண்க. (80)

133. கங்கைதன்னைச் சடையிற் கரத்தனே
கரிசு போக்கிடு மஞ்சக் கரத்தனே
மங்க முப்புரஞ் செய்த வைவாளியே
மதித்த மூவரை யங்குறவாளியே
சிங்கந்தன்னை யுரித்திடுந் தீரனே
செனன சாகரத் தேற்றிடுந் தீரனே
யங்கந் தன்னினு மாசை யறுக்கவே
யம்ம வாணவ மாசை யறுக்கவே.

கங்கை தன்னைச் சடையில் கரத்தனே
கரிசு போக்கிடும் அஞ்சு அக்கரத்தனே
மங்க முப்புரஞ் செய்த வைவாளியே
மதித்த மூவரை அங்கு உறவாளியே

Koviloor Digital Library

சிங்கம் தன்னை உரித்திடும் தீரனே
சென்ன சாகரத்து ஏற்றிடும் தீரனே
அங்கம் தன்னிலும் ஆசை அறுக்கவே
அம்ம ஆணவம் ஆசை அறுக்கவே.

உரை:

கங்கையாற்றைச் சடையினுள் மறைத்தவனே, உயிர்களின் பாவத்தைப் போக்குகின்ற நமசிவய என்னும் ஐந்தெழுத்தாக விளங்குபவனே, முப்புரங்கள் நிலைகுலைந்து அழியக் கூரிய அம்பை எய்தவனே, உன்னைப் போற்றிய நந்தி தேவன், மாகாளர், வாணாசுரன் என்ற மூவரையும் உனக்கு உறவாகக் கொண்டவனே, பிறருக்குத் தீங்கு விளைத்த திருமால் மாறுருவான சிங்கத்தின் தோலை உரித்து அதனை அணிந்தவனே, பிறப்பு இறப்பு ஆகிய கடலில் இருந்து கரையேற்றியவனே, உடற்பற்று, ஆணவம் முதலான பற்றுகளை ஒழித்து, உயிர்கள் முத்தி பெற அருள் செய்வாயாக.

விளக்கம்:

அம்ம - வியப்புச் சொல்; ஜனனம் - இது சென்னம் என வந்தது. இப் பாடலில் வந்துள்ள, சிவன் கங்கையைச் சடையில் ஏற்றது, முப்புரம் அழித்தது, சிங்கத்தின் தோலை அணிந்தது ஆகிய செய்திகள், சிவபிரானுடைய பெருமையை விளக்க வந்த செய்திகள் ஆகும். (81)

134. காலனையுருளக் கால்கொடு கடுகிக் கழல் பேணும்
பாலனையருளிப் பாசம தகலப் பரிவோடு
மாலதனிழலுற் றாரணமுனிவர்க் கருள்வாய்மைச்
சீலனதுரையைத் தேரறுமுகனைச் செறிவாமே.

காலனை உருளக் கால்கொடு கடுகிக் கழல்பேணும்
பாலனை அருளிப் பாசமது அகலப் பரிவோடு
மால் அதனில் உழலுற்ற ஆரணமுனிவர்க்கு அருள் வாய்மைச்
சீலனது உரையைத் தேர் அறுமுகனைச் செறிவாம் ஏ.

உரை:

எமன் தரையில் உருளும்படி உதைத்த திருவடிகளை அன்போடு வணங்கிய மார்க்கண்டனுக்கு அருள் செய்தவன்; உயிர்களின் பாசங்கள் நீங்கும் வண்ணம் கல் ஆல மரத்தின் கீழ் குருபிரானாக அமர்ந்து, சனகர் முதலிய முனிவர்களின் சந்தேகங்களைத் தீர்த்து அருள்புரிந்த சீலனாகிய சிவபிரான் அருளிய சிவ ஆகமத் திருநூல்களை ஆராய்ந்து தெளிந்த ஆறுமுகப் பெருமானோடு உறவு கொள்வோம்.

Koviloor Digital Library

விளக்கம்:

காலன் - கூற்றுவன்; பாலன் - மார்க்கண்டன்; மால் - சந்தேகம்; **சீலன்** உரை - சிவபெருமான் அருளிய சிவ ஆகமங்கள்; தேர் - ஆராய்ந்து தெளிந்த; செறிதல் - உறவு. (82)

135. அரியயனறிதற் கரியனை யமரர்க் கமிர்தீயக்
கருகிய கடுமுற் பருகிய கருணைக் கடலானைப்
பரமனை யரவக் கரையனை விரவப் பரிவானைப்
பொரு கழல் புணரப் பொதிமலை முனிசொற் புகல்வாமே.

அரி அயன் அறிதற்கு அரியனை அமரர்க்கு அமிர்துஈயக்
கருகிய கடுமுன் பருகிய கருணைக் கடலானைப்
பரமனை அரவு அக்கு அரையனை விரவப் பரிவானைப்
பொரு கழல் புணரப் பொதிமலை முனிசொல் புகல்வாம் ஏ.

உரை:

பிரமனால் முடியையும், விஷ்ணுவால் அடியையும் காண இயலாத அருமை யுடையவன்; கடலில் தோன்றிய நஞ்சைத் தான் அருந்தித் தேவர்கள் அமிர்து உண்ண அளித்த அருட்கடல்; திருவரையில் நாகப் பாம்பையும், சங்கு மணிகளையும் அணிந்திருப்பவன்; தன் அடியார்களிடம் அன்பு உள்ளவனாகிய சிவனது வீரக் கழல் அணிந்த திருவடிகளை அடையச் சாதனமாம்படி அகத்தியன் உரைத்த தமிழை விரும்புவோமாக.

விளக்கம்:

அரி - திருமால்; அயன் - பிரமன்; அமரர் - தேவர்; கருகிய - கரிய; கடு - நஞ்சு; அமிர்து - சாவைத் தடுக்கும் மருந்து; அரவு - பாம்பு; அக்கு - சங்குமணி; அரை - இடுப்பு; புணர - அடைய; பொதிமலை - பொதிகை மலை; புகலல் - விரும்புதல். (83)

KOVILOOR ANDAVAR
A. No. 11939
LIBRARY. KOVILOOR

Koviloor Digital Library

மூன்றாவது

ஐவகை யாகவியல்

சொற்பொருள் நிலையில் யாகம் என்ற சொல், வழி பாட்டைக் குறிப்பது. இந்தப் பகுதியில் ஐவகை யாகம் என்று சொல்லப்படுவது ஐந்து வகை வழிபாடுகளையாம். குண்ட மண்டலப் பொலிவுடன் நிகழும் வைதிக யாகத்தைக் குறிக்கும் நிலையில் அன்று. ஐவகை யாகங்களின் பெயர் கூறுகின்றது முதற் செய்யுள்.

136. கருமமென்றா தவமென்றா
கற்பாற்பயின் மந்திரமென்றா
பரிவால்வரு பாவனையென்றா
பரமஞான மகமென்றா
தெரியுமகமோ ரைந்தினையுஞ்
சிறந்தவிவற்றின் பலத்தினையும்
பரமயோகர் நிலையுடனே பரிவான்
முனிவ பகர்வாமே.

கருமம்என்றா தவம்என்றா
கற்பார்பயில் மந்திரம் என்றா
பரிவால்வரும் பாவனைஎன்றா
பரமஞான மகம்என்றா
தெரியும்மகம் ஓர் ஐந்தினையும் சிறந்த
இவற்றின் பலத்தினையும்
பரமயோகர் நிலையுடனே பரிவால்
முனிவ பகர்வாம் ஏ.

உரை:

அகத்திய முனிவனே! கிரியை என்றும், விரதம் என்றும், குருவினிடம் உபதேச முறையில் பெற்ற மந்திர மொழியை உரு ஏற்றுதல் என்றும், யோகம் என்றும், ஞானம் என்றும், இவ்வாறு ஐந்து வகையான வழிபாட்டு முறைகளையும், அவற்றை மேற்கொள்வதால் அடையும் பயன்களையும், மேலான சிவயோகிகளின் நிலையோடு பொருந்துமாறு உன்மீது வைத்த அன்பினால் உரைக்கின்றோம்.

Koviloor Digital Library

விளக்கம்:

கருமம் - கிரியை சம்பந்தமான வழிபாடு; தவம் - நோன்பு; விரதம் ஆகியவை இல்லறத்தாருக்கு உரிய தவம் ஆகும். பயில் மந்திரம் - மந்திரம் பயிலல். குருவினிடம் பெற்ற மந்திரத்தை உரு ஏற்றுதல். உரு ஏற்றுதலை மந்திரம் ஓதுதல் என்பர். பாவனை - தியான யாகம்; ஞானம் - யோக முதிர்ச்சி; ஞான மகம் - ஞான யாகம். (1)

ஐவகை யாகத்தில் முதல் மூன்றன் விரிவு

137. செய்துசிறக்கச் சிவபூசை
செந்தீவளர்க்கை முதல்கரும
நையவுடலம் விரதத்தை
நவிற்றலாதி தவஞ்செபமும்
பையப் பயிற்றல்பிறர் செவியிற்படாது
பயிற்றன் மந்திரத்தை
மையலகல மனத்தாலும்
வகுக்கையென மூவகைத்தாமே.

செய்துசிறக்கச் சிவபூசை
செந்தீவளர்க்கை முதல்கருமம்
நையஉடலம் விரதத்தை
நவிற்றல்ஆதி தவம்செபமும்
பையப் பயிற்றல்பிறர் செவியில்படாது
பயிற்றல் மந்திரத்தை
மையல் அகல மனத்தாலும்
வகுக்கை எனமூ வகைத்தாம் ஏ.

உரை:

அகத்தூய்மை புறத்தூய்மைகளுடன் சிவபூசையைச் சிறப்பாகச் செய்து சிவாக்கினி வளர்த்துப் பூசித்தல் முதலாவதான கரும யாகமெனப்படும். மன ஒழுக்கத்துக்குப் பொருந்துமளவு உடல் வாடச் செய்யக்கூடிய கடுமையான சிவ விரதங்களை அநுட்டித்தல் தவ யாகமாகும். தியான மந்திரத்தைப் பிறர்க்கு மெதுவாகக் கேட்க உச்சரித்தலும், தன் செவிக்கு மட்டுங் கேட்க உச்சரித்தலும், மனமயல் அறுதற் குபகாரமாம்படி ஒலியசைவு தோன்றாமலே மனதினாற் கணித்தலும் ஆகிய மூன்றும் மந்திர யாகம் ஆகும்.

விளக்கம்:

செந்தீ - செம்மை + தீ - சிவந்த நிறம் உள்ள ஓமத்தீ செந்தீ என்று

Koviloor Digital Library

விசேடித்தது சிவாக்கினி என உணர்த்துதற் பொருட்டு. நைய - மெலிய; நவிற்றல் - சொல்லுதல்; பைய - மெல்ல; பயிற்றல் - ஓதுதல்; மையல் - மோகம்; மந்திரம் - தன்னை ஒதுகிறவனைக் காப்பது மந்திரம் ஆகும். வகுக்கை - வகைப்படுத்துதல்; மூ - மூன்று; மந்திர யாகம், செப யாகம் எனவும் படும். (2)

தியான மந்திரத்தை உரு ஏற்றுதலாகிய செப யாகஞ் செய்யும் முறை

138. செறித்து வடந்தற் சனிமீதே செபிக்க
வொலியைச் சேட்டையினாற்
செறித்துவட மத்திமை தன்னிற் செபிக்க
மந்தச் சேட்டையினாற்
செறித்து வடத்தை யனாமிகையிற் செபிக்க
மனத்தைச் சேட்டையினாற்
குறிப்பிற் குறைந்த பலமந்த மதனி
லொலியுங் குறைந்தபலம்.

செறித்துவடம் தர்ச்சனிமீதே செபிக்க
ஒலியைச் சேட்டையினால்
செறித்துவடம் மத்திமை தன்னில்
செபிக்கமந்தச் சேட்டையினால்
செறித்து வடத்தை யனாமிகையில்
செபிக்க மனத்தைச் சேட்டையினால்
குறிப்பில் குறைந்தபலம் மந்தம்
அதனில் ஒலியும் குறைந்தபலம்.

உரை:

பிறருக்குக் கேட்கும்படி மந்திரத்தை ஓதும்போது, உருத்திராக்க மாலையைச் சுட்டு விரல் மீது வைத்துப் பெருவிரலால் ஒவ்வொரு மணியாகத் தள்ளி உரு ஏற்றுக; பிறருக்குக் கேளாமல் தனக்கு மட்டும் கேட்கும்படி மந்திரத்தை ஓதும்போது மந்த ஒலியாக உருத்திராக்க மாலையை நடுவிரல் மீது வைத்துப் பெருவிரலால தள்ளி உரு ஏற்றுக. செவிக்குக் கேளாமல் மந்திரத்தை மனதால் ஓதும்போது உருத்திராக்க மாலையை மோதிர விரலின் மீது வைத்துப் பெருவிரலால் தள்ளி உரு ஏற்றுக. ஆராயும்போது, மனதால் ஓதுவதைவிட மெல்லத் தனக்குக் கேட்கும்படி ஓதுவது குறைந்த பலனையும், பிறருக்குக் கேட்கும்படி ஓதுவது அதைவிடக் குறைந்த பலனையும் அளிக்கும்.

விளக்கம்:

தற்சனி - தர்ச்சனி, சுட்டுவிரல்; மத்திமை - நடுவிரல்; அனாமிகை -

Koviloor Digital Library

அநாமிகை, மோதிர விரல்; **சேட்டை** - பெருவிரல்; **வடம்** - தாழ்வடம், உருத்திராக்க மாலை; **செறித்து** - மேலே வைத்து. (3)

செப மாலைகளின் தாரதம்மியம்

139. கண்டி விசிட்டங் குசைக்கிரந்தி
கனிட்டங் கமல மதிற் கனிட்டம்
புண்டரீக மணியதனிற்
படிகமணி புத்திரதீபி
யுண்டைச் சங்க மிறைவிரலு
முணரிலொன்றுக் கொன்றூனம்
விண்டார்போக விருப்பங்கை
மேலே மறிக்க மாலையெல்லாம்.

கண்டி விசிட்டம் குசைக்கிரந்தி
கனிட்டம் கமலம் அதில்கனிட்டம்
புண்டரீக மணி அதனில்
படிகமணி புத்திர தீபி
உண்டை சங்கம் இறைவிரலும்
உணரில் ஒன்றுக்கு ஒன்று ஊனம்
விண்டார்போகம் விருப்பம்
கைமேலே மறிக்கமாலை எல்லாம்.

உரை:

செப மாலைகள் அனைத்திலும் மேன்மையானது உருத்திராக்க மாலை. முடிச்சுகளால் ஆன தருப்பைப் புல்மாலை உருத்திராக்க மாலையை விடத் தாழ்ந்தது. தாமரை விதைகளால் செய்யப்பட்ட மாலை, தருப்பை மாலையை விடத் தாழ்வானது. பளிங்கு மணிகளால் ஆன மாலை, தாமரை மணி மாலையை விடத் தாழ்வுடையது. காளா முகர் அணியும் புத்திர தீப மணிமாலை, பளிங்கு மாலையை விடத் தாழ்ந்தது. விரல்களுக்கு இடையே வைத்து உரு ஏற்ற உதவும் சங்கு மணி மாலை, புத்திர தீப மாலையை விடக் கீழானது. ஆகவே, உலக இன்பங்களில் உள்ள பற்றைத் துறந்த சைவத் துறவிகள், உருத்திராக்க மாலைதாங்கி மணிகளை மேல் நோக்கித் தள்ளி உரு ஏற்றுவாராக.

விளக்கம்:

கண்டி - கண்டிகை, உருத்திராக்க மாலை; **விசிட்டம்** - மேன்மை; **குசை** - தருப்பைப் புல்; **கிரந்தி** - முடிச்சு; **கனிட்டம்** - கீழானது; **கமலம்** - தாமரை; **புண்டரீக மணி** - தாமரை மணி; **படிகம்** - பளிங்கு; **புத்திரதீபி** - புத்திர தீபமணி; இது சைவப் பிரிவுகளில் ஒன்றான காளாமுகச் சைவப் பிரிவின் துறவிகள் கழுத்தில்

Koviloor Digital Library

அணியும் மாலை. உண்டை - உருண்டை; சங்கம் - இது சங்குமணியைக் குறிக்கிறது. விண்டார் - துறந்தவர்; போகம் - உலக இன்பம்; ஊனம் - குறை. (4)

விருப்ப நிலைக்கேற்ப ஆறு எழுத்து மந்திரம் ஓதும் முறை

140. இயங்கிற் பிராண னிடைநாடி
யிருமூன்றெழுத்து மியம்பிடுக
நயந்தார் போகமது கயந்தார்
வலது நாடிதனி னவில்க
வியங்கிற் பிராணன் சுழுமுனைவழியிரண்டு
மடைவா ரியம்பிடுக
முயங்க விளையார் முலையிணையை
வலதுநாடி முனைத்தெழினே.

இயங்கில் பிராணன் இடைநாடி
இருமூன்றெழுத்தும் இயம்பிடுக
நயந்தார் போகம் அது கயந்தார்
வலதுநாடிதனில் நவில்க
இயங்கில் பிராணன் சுழுமுனைவழி இரண்டும்
அடைவார் இயம்பிடுக
முயங்க இளையார் முலை இணையை
வலதுநாடி முனைத்து எழில் ஏ.

உரை:

உலக இன்பங்களை அனுபவிக்க எண்ணுகிறவர், மூச்சுக் காற்று மூக்கின் இடப்பக்க நாடியில் இயங்கும்போது ஓம்நமசிவய என்னும் ஆறெழுத்து மந்திர மொழியை ஓதுவதை வழக்கமாகக் கொள்க; உலக இன்பங்களை வெறுத்தவர், உயிர்க்காற்று முக்கின் வலப்புற நாடியில் இயங்கும்பொழுது ஆறெழுத்து மந்திரத்தை ஓதி வருக; உலக இன்பங்களோடு முத்திப் பேறும் பெற விரும்புகிறவர், மூச்சுக்காற்று நடுநாடியில் இயங்கும்போது ஆறெழுத்து மொழியை ஓதுவதை வழக்கமாகக் கொள்க; பெண்ணை அணைத்து இன்பம் நுகர எண்ணுகிறவர், உயிர்க்காற்று மூக்கின் வலப்பக்க நாடியில் இயங்கும்பொழுது அவளைப் புணர்க.

விளக்கம்:

பிராணன் - மூச்சு, உயிர்க்காற்று; இடைநாடி - மூக்கின் இடப்பக்க நாடி; இருமூன்று எழுத்து - ''ஓம் நமசிவய'' என்னும் ஆறெழுத்து மந்திரம். இயம்பிடுக - ஓதுவதை வழக்கமாகக் கொள்க.

Koviloor Digital Library

''போற்றி ஓம் நமசிவாய புயங்கனே மயங்குகின்றேன்''

(திருவாசகம் - திருச்சதகம் - 66)

என்று திருவாதவூரர் கூறுவது காண்க.

நயந்தார் - விரும்பியவர்; கயந்தார் - வெறுத்தவர்; இயங்கில் - இயங்கினால்; வலதுநாடி - மூக்கின் வலப்பக்க நாடி; சுழுமுனை - மூக்கின் நடுப்பக்க நாடி; முயங்க - பெண் இன்பம் பெற;

இளையார் - பெண்கள். செபம் பற்றிக் கூறுமிட மாயிருந்தும், மூச்சியக்கம் வலது நாடியில் இருக்கும்போதே செய்ய வேண்டியது என்ற தொடர்பு பற்றிப் பெண்ணைப் புணர்தலும் இங்கு சேர்க்கப்பட்டாயிற்று. (5)

தியான யாகஞ் செய்யும் முறை

141. பற்றிப்பரமன் றிருவுருவைப்
பரிவாலொருமைப் படவுள்ள
மற்றோர் பொருளின் மனம்பற்றா வண்ணந்
திண்ண முறமயக்க
மற்றே தொடர்ந்த விச்சின்ன
மடையாவறிவு பாவனைநீர்
செற்றே யொழுகு மிறைவன்பா
லற்றே யஃதென் றெண்ணுகவே.

பற்றிப்பரமன் திருஉருவைப் பரிவால்
ஒருமைப்பட உள்ள
மற்று ஓர் பொருளில் மனம் பற்றா வண்ணம்
திண்ணம்உற மயக்கம்
அற்றே தொடர்ந்து அவிச்சின்னம்
அடையா அறிவு பாவனை நீர்
செற்றே ஒழுகும் இறைவன்பால்
அற்றே அஃதுஎன்று எண்ணுக ஏ.

உரை:

தியான யாகமாவது மனம் தன்னிட்டப்படி அலைந்து மற்றொன்றைப் பற்றா வண்ணஞ் செய்யும் தாரணை நிலை பெற்றிருக்கச் செய்து கொண்டு பரமன் உருவத் திருமேனியிலொன்றை அன்பால் பற்றி அதனோடு ஒருமைப்பட்டு அஞ்ஞான மயக்கந் தீர்ந்து இடையறவுபடாமல் சிவனிடத்தில் தோய்ந்திருக்கும் நிலையாகும். அங்ஙனம் இடையறாது தொடர்ந்து தோய்ந்திருத்தல் நீர்த்தாரையினொழுக்கு இடையறாது தொட்டுத் தொடர்வது போலாம்.

Koviloor Digital Library

விளக்கம்:

பரமன்திருஉரு - இறைவன் திருமேனியாகிய விக்கிரகம். பற்றாவண்ணம் - பொருந்தாதவாறு; திண்ணம் உற - திடமாக; ஒருமைப்பட - ஒருமைப்பட், ஒன்றி நிற்க; செற்றே - பொருந்தி; ஒழுகும் - கசியும்; அஃது அற்றே - அது போல; அவிச்சின்னம் - இடையறவுபடாமை.

அவிச்சின்னம் - not seperated, undivided, continuous, uninterrupted. (6)

ஞான யாக விளக்கம்

142. ஒப்பிலமலன் றனையுணர்த்து முரையை
யோத லோதுவித்தல்
செப்பும் பொருளைத் திரிவுமறத்
தெளிகை பிறரைத் தெளிவிக்கை
தப்பாததனை மனத்தகத்தே தரிக்கை
யெனவுந் தானைந்தாம்
வைப்பா யருந்தா மருந்தாகிச்
சிறந்த ஞான மகவினையே.

ஒப்புஇல் அமலன் தனை உணர்த்தும்
உரையை ஓதல் ஓதுவித்தல்
செப்பும் பொருளைத் திரிவும் அறத்
தெளிகை பிறரைத் தெளிவிக்கை
தப்பாது அதனை மனத்து அகத்தே தரிக்கை
எனவும் தான் ஐந்தாம்
வைப்பாய் அருந்தா மருந்து ஆகிச்
சிறந்த ஞான மகவினை ஏ.

உரை:

தனக்கு யாரும் இணையில்லாத தூயவனான சிவனை அறிவிக்கும் சிவ ஆகமத் திருநூல்களைத் தான் கற்றல்; பிறரும் கற்குமாறு செய்தல்; ஆகம நூற் பொருளைச் சந்தேகம், ஒன்றை இன்னொன்றாக எண்ணுதலான விபரீதம் போன்ற குறைகள் நேராமல் தானே ஆராய்ந்து தெளிவு பெறுதல்; பிறரையும் தெளிவு பெறச் செய்தல்; கற்ற ஆகம உண்மைகளை மறவாமல் நாள்தோறும் மனத்தில் நிலைபெறச் செய்தல் என்ற ஐந்தும் ஞான யாகம் ஆகும். இவை பக்குவப்பட்டவர்களுக்குச் சேமநிதி போன்று நலம் செய்யும். பக்குவப்படாதவர்க்கு உண்ண முடியாத மருந்து போலப் பயன் அளிக்காது.

Koviloor Digital Library

விளக்கம்:

அமலன் - தூயவனான சிவன்; **உணர்த்தும் உரை** - சிவ ஆகம நூல்கள்; **திரிவு** - மாறுபட எண்ணுதல்; **தெளிகை** - ஆராய்ந்து எண்ணுதல்; **தரிக்கை** - நிலைக்கச் செய்தல்; **வைப்பு** - சேமநிதி; **அருந்தா மருந்து** - உண்ணாத மருந்து; மருந்து அருந்தா விட்டால் நோய் தீராது; கற்காவிட்டால் அறியாமை அகலாது என்பது குறிப்பு.

'கற்றல் கேட்ட லுடையார் பெரியார்கழல் கையாற் றொழுதேத்த',

கல்லார் நெஞ்சில் நில்லா னீசன்',

'கல்லாதார் காண்டற் கரியானை'

என்ற தேவாரங்கள் காண்க.

ஞானமகம் - ஞான யாகம். இங்கு யாகம் என்பது ஆகம அறிவு பெறுத லாகிய முயற்சியான வழிபாட்டைக் குறிக்கிறது. (7)

ஐவகை யாகமும் ஒன்றைவிட ஒன்று சிறந்ததென்பதும் அதுவதன் பலனும்

143. அறைந்த கருமயாக முதலைந்து
மொன்றுக் கொன்றதிகஞ்
சிறந்த பலமும் போகவிதஞ்
சிந்தைசெய்த பயனெல்லா
மறைந்துதீய வினைமாய்கை
வரதனுருவ மெனவடிவ
மிறந்தும் பிறந்து மிளையாதே யிருக்கை
யென்னுமிவை ஐந்தும்.

அறைந்த கருமயாகம் முதல் ஐந்தும்
ஒன்றுக்கு ஒன்று அதிகம்
சிறந்த பலமும் போகவிதம் சிந்தை
செய்த பயன் எல்லாம்
மறைந்து தீயவினை மாய்கை
வரதன் உருவம் எனவடிவம்
இறந்தும் பிறந்தும் இளையாதே இருக்கை
என்னும் இவை ஐந்தும்.

உரை:

முன்சொன்ன கிரியை முதல் ஞானம் வரையுள்ள ஐந்து யாகங்களுள்ளும் ஒன்றைவிட மற்றது சிறந்ததாம். கிரியைகளின் பயன் உலக இன்பங்களை

Koviloor Digital Library

அனுபவித்தல்; தவம் அல்லது விரதங்களின் பயன் எண்ணியவை நிறைவேறுதல்; சிவனுக்கு உரிய ஐந்து எழுத்து மந்திரத்தை ஓதுவதின் பயன் கொடிய செயல்களின் விளைவுகளால் துன்பம் அடையாமல் இருத்தல்; சிவன் திருமேனியைச் சிந்தித்த லாகிய தியானத்தின் பயன் சிவன் திருமேனி போல அழகிய உடல் அமைப்பைப் பெறுதல்; மெய்யறிவு பெறுதலாகிய ஞானத்தின் பயன் பிறப்பு இறப்புகளால் மெலியாமல் இறைவன் திருவருளில் இன்புறும் வீடுபேறு அடைதல்.

விளக்கம்:

இந்தப் பாடல் ஒவ்வொரு செயலையும் மகம் என்றும், யாகம் என்றும் கூறுகிறது. இது ஆரிய மரபு; சைவ மரபு பற்றி வேள்வி எனலாம். யாகம் எனினும் வேள்வி எனினும் வழிபாடு என்பதே பொருள்.

இதற்கு மாறாகப் *பகவத்கீதை* ஒவ்வொரு செயலையும் ஒவ்வொரு யோகமாகக் கூறுகிறது. கீதையில் கருமம், கரும யோகம் என்றும், தவம், தவயோகம் என்றும், மந்திரம், மந்திர யோகம் என்றும், தியானம், தியான யோகம் என்றும், ஞானம், ஞானயோகம் என்றும் கூறப் பட்டுள்ளது. காரியத்தின் திறமைப் பண்பு குறிப்பது யோகம் என்ற சொல். 'யோக: கர்மஸு குசலம்' என்பர்.

குறிப்பு:

சமயதர்ம விஷயங்களில் ஆரியச் சொற்களிலும் வழக்கிலுள்ளவற்றை அர்த்தச் சிறப்பறிந்து தழுவிக் கொளல் வேண்டும். (8)

பரம யோகியர் நிலை கூறல்

144. அஞ்சியாசை முதலாயவவல
பேத மனைத்தினையுந்
துஞ்சிப் பிறக்குந் தொழிற்கிளைத்துத்
தோன்றாத் துணைவ னடித்தூங்கும்
விஞ்சைக்குகையுள் வீற்றிருப்பர் பரமயோக
விரதியர் மெய்ந்
நெஞ்சத்திவரை நினைப்பாரை நிரந்த
வினையு நீங்கிடுமே.

அஞ்சி ஆசைமுதலாய அவல
பேதம் அனைத்தினையும்
துஞ்சிப் பிறக்கும் தொழிற்கு இளைத்துத்
தோன்றாத் துணைவன் அடித்தூங்கும்

Koviloor Digital Library

விஞ்சைக்குகைஉள் வீற்றிருப்பார்
பரமயோகர் விரதியர் மெய்ந்
நெஞ்சத்து இவரை நினைப்பாரை
நிரந்த வினையும் நீங்கிடும் ஏ.

உரை:

ஆசை, பொறாமை முதலான துன்ப வகைகள் அனைத்தினுக்கும் பயந்து வாழ்ந்து இறந்து பிறக்கும் நிலைக்கு வருந்தி, அவை நீங்கும் வண்ணம் பக்குவம் இல்லாதவர்கள் காணமுடியாத நிலையிலுங்கூடத் தோன்றாத் துணையாயுள்ள சிவபிரான் திருவடியிலே நிலை பெறுவதற்குக் காரணமான அறிவுக் குகையினுள் மேலான யோகியராம் விரதியர் தங்கியிருப்பார்கள். அந்தத் தவசிகளை உள்ளத்திலே சிந்தனை செய்பவர்களைத் தொடர்ந்து வரும் துன்பங்கள் ஒன்றொழியாமல் அகன்று விடும்.

விளக்கம்:

அவலம் - துன்பம்; **துஞ்சி** - செத்து; **இளைத்து** - வருந்தி; **தோன்றாத் துணைவன்** - தானிருப்பது தெரியாமலே இருந்து கொண்டு துணை செய்பவன்; **தூங்கும்** - தன்னை மறந்து தியானத்தில் இருக்கிற; **விஞ்சை** - அறிவு; **நிரந்த** - தொடர்ந்த; **விரதி** - விரதங்களை மேற்கொண்ட துறவி; **வினை** - கன்மம். வினையும் என்றதனால் மாயை ஆணவம் என்பனவுங் கொள்ளப்படும்.

'செடிகொள் நோயின் அடையார் திறம்பார்வரு தீமையும் திருவாஞ்சியத் தழகன்பாத மடைந்தா ரடியார்களே' என்பது *தேவாரம்*. (9)

சிவஞானியை வணங்குதலின் பலன்

145. புரிந்தார் பரமஞானிதனைப் பூசை
நசையாற் புகமுறவே
பிரிந்தூ னுடலைப் பிரியாதே
பெருமானுலகம் பெற்றிருப்பர்
நிரந்த கற்ப சதநியுத
நிகழவதன்பி னெடுமால்வாழ்
பரந்த வுலக மதுபற்றியிருப்பர்
விருப்பாற் பாங்குறவே.

புரிந்தார் பரமஞானிதனைப் பூசை
நசையால் புகழ் உறவே
பிரிந்து ஊன் உடலைப் பிரியாதே
பெருமான் உலகம் பெற்றிருப்பர்

Koviloor Digital Library

நிரந்த கற்பம்சதம் நியுதம்
நிகழ அதன்பின் நெடுமால் வாழ்
பரந்த உலகம் அதுபற்றி இருப்பர்
விருப்பால் பாங்கு உற ஏ.

உரை:

அன்பினால் சிவஞானிகளைப் பூசித்தவர்கள் தேக முடிவில், இங்கு தம் புகழ் நிலை பெற்றிருக்குமாறு ஊனால் அமைந்த உடம்பை விட்டு நீங்கிச் சிவலோகத்தினை அடைந்து அதனை விட்டு நீங்காமற் கோடி கற்ப காலம் வாழ்வர். அங்கு போகம் அநுபவித்தொழிந்ததும் திருமால் உலகான வைகுந்தத்தை அடைந்து அன்பினாலே அவர் சமீபமாக வாழ்ந்தின்புறுவர்.

(இங்கு) புகழ் உற (தங்க) ஊன் உடலைப் பிரிந்து பெருமான் உலகைப் பெற்றுப் பிரியாதே இருப்பர் எனக் கூட்டி பொருள் உரைக்க வேண்டும்.

விளக்கம்:

பரமஞானி - மேலான சிவஞானி; பூசை - மலர் சொரிந்து வணங்குதல்; நசை - விருப்பம்; ஊன் உடல் - தசையோடு கூடிய உடம்பு; பெருமான் உலகம் - சிவபெருமான் தங்கும் சிவ உலகம்; கற்பம் - உலக முடிவு, ஊழி; சதம் - நூறு; பாங்கு - பக்கம்; நியுதம் - நூறாயிரம்; சத நியுதம் - ஒரு கோடி; ஏ - அசை எழுத்து. (10)

இதுவும் அது

146. உறைந்தே யொழிந்த வுலகத்து
மோங்கும் போக விதமுண்டு
பிறந்தே புவியிற் பிறழாதே
பெரியோ னடியைப் பேணுதலுஞ்
சிறந்தே யவனுஞ் சிவஞான
யோகந் தெருட்டத் தெருண்டுடலு
மிறந்தே யிணையி லிறைவனுட
னிரண்டற் றிருப்ப ரின்புறவே.

உறைந்தே ஒழிந்த உலகத்தும்
ஓங்கும் போகவிதம் உண்டு
பிறந்தே புவியில் பிறழாதே
பெரியோன் அடியைப் பேணுதலும்
சிறந்தே அவனும் சிவஞான யோகம் தெருட்டத்
தெருண்டு உடலும்
இறந்தே இணைஇல் இறைவனுடன்
இரண்டு அற்று இருப்பர் இன்புற ஏ.

Koviloor Digital Library

உரை:

அவ்வாறு, திருமால் உலக இன்பங்களை அனுபவித்த பிறகு, மீண்டும் நிலவுலகில் பிறந்து, முன்பிறவித் தொடர்பினால் உள்ளம் மாறுபடாமல் உயர்ந்த சிவஞான ஆசிரியரைப் புகலாக அடைந்து வணங்குவார். ஆசிரியர், தம் மாணாக்கருக்குப் பக்குவ காலம் வந்ததும் திருஉள்ளம் மகிழ்ந்து, சிவ ஆகம யோக உண்மைகளைக் கற்பித்து மோனநிலை கைகூடச் செய்வார். மோனநிலை கைவரப் பெற்ற மாணவர், தம் உடலைத் துறந்து சிவபெருமான் திருவருளுடன் இரண்டறக் கலத்தலாகிய முத்தியை அடைந்து மகிழ்வார்.

விளக்கம்:

உறைந்தே ஒழிந்த - தங்கி அனுபவித்துத் தீர்ந்த; **போகம்** - இன்பம்; **புவி** - நிலவுலகம்; **பிறழாது** - மாறுபடாமல்; **பெரியோன்** - ஆசான்; **அடி பேணுதல்** - வணங்குதல்; **தெருட்ட** - அறிவுறுத்த; **தெருண்டு** - நன்றாக அறிந்து, தெளிந்து; **இணை** - நிகர்; **இல்** - இல்லாத; **இரண்டு அற்று** - கலப்பினால் ஒன்றாக; **ஏ** - அசை. இதற்குப் பொருள் இல்லை. (11)

சிவஞானி உலகியலில் ஒழுகினும் அதில் அழுந்தாமை

147. அமலனுருவ மறிந்தார்கள்
விடயபேதத் தடைந்தாலுங்
கமலத்தமரு நீர்போலக்
கலப்பதில்லைக் கருதுங்காற்
றமலத்தினையுந் தடுப்பார்கள் சமைக்க
பூசையவர் தமக்கே
விமலனவரை விடலின்றிச் செய்தார்
சிறப்பை விரும்புவனே.

அமலன் உருவம் அறிந்தார்கள்
விடய பேதத்து அடைந்தாலும்
கமலத்து அமரும் நீர்போலக்
கலப்பது இல்லை கருதுங்கால்
த(ம்) மலத்தினையும் தடுப்பார்கள் சமைக்க
பூசை அவர் தமக்கே
விமலன் அவரை விடல்இன்றிச் செய்தார்
சிறப்பை விரும்புவன் ஏ.

உரை:

மலத்தின் சார்பு இல்லாத சிவபிரானுடைய உண்மை வடிவத்தை உணர்ந்த சிவஞானிகள், உலகப் பொருள்களில் பொருந்தியிருந்தாலும், தாமரையிலையில்

Koviloor Digital Library

உள்ள நீர், அந்தத் தாமரையிலையில் ஒட்டாமல் உருள்வது போல, உலகப் பொருள்களில் உள்ளம் பற்று வைப்பதில்லை. அவர்கள் தங்களோடு பொருந்தி யிருந்த ஆணவம் முதலான மலங்களையும் போக்கி விடுவார்கள். அந்தச் சிவ ஞானிகளின் உள்ளங்களை விட்டுச் சிவபிரான் அகலுவதில்லை. அடியவர்கள் அந்தச் சிவஞானிகளுக்குச் செய்யும் வழிபாட்டைச் சிவன், தனக்குச் செய்த வழி பாடாகவே கருதி அருள் செய்வான். ஆகவே, சிவஞானிகளை மலரால் வழிபாடு செய்து வணங்குவீர்களாக.

விளக்கம்:

விடயபேதம் - உலக அநுபவ வகைகள்; **கமலத்து அமரும்நீர்** - தாமரை இலையில் தங்கும்நீர்; **சமைக்க** - செய்க; **செய்தார் சிறப்பை விரும்புபவன்** - சிவஞானிக்குச் செய்கிற பூசையை அவரிடமாகத்தான் நின்று சிவன் விரும்பி ஏற்றருள்வன்.

''நடமாடும் கோயிலாக உள்ள சிவனடியாருக்கு ஏதேனும் தந்தால் அது கோயிலில் உள்ள இறைவனுக்குத் திருப்தியை அளிக்கும்'' என்கிறார் திருமூலர்.

''நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈந்தால்
படமாடக் கோயில் பகவற்க தாமே.'' *(திருமந்திரம் - 1857)* (12)

சிவஞானியைப் புண்ணிய பாவங்கள் பொருந்தாமை

148. மருந்தைச் சிறந்த மந்திரத்தை
வல்லார் விடத்தை மாந்திடினும்
வருந்தார் தமதுசெயன்மாள வரதன்
பொருவில் வலியுணர்ந்தார்
பொருந்தார் பாவ புண்ணியங்கள்
புரிந்தேயிவரைப் புகழ்ந்தாரும்
பிரிந்தேயிகழ்ந்து பேணாரு மிவர்தம்
வினையைப் பெறுவாரே.

மருந்தைச் சிறந்த மந்திரத்தை
வல்லார் விடத்தை மாந்திடினும்
வருந்தார் தமது செயல்மாளவரதன்
பொருஇல் வலி உணர்ந்தார்
பொருந்தார் பாவ புண்ணியங்கள்
புரிந்தே இவரைப் புகழ்ந்தாரும்
பிரிந்தே இகழ்ந்து பேணாரும்
இவர்தம் வினையைப் பெறுவார் ஏ.

Koviloor Digital Library

உரை:

மருந்துகளின் குணங்களை அறிந்தவரும் மந்திர சித்தி பெற்றவரும் நஞ்சை அருந்தினாலும் அதனால் உடல் வருந்துவது கிடையாது. அவ்வாறே, சிவபிரான் அருளிய சிவ ஆகமங்களை உணர்ந்து தெளிந்த சிவஞானிகள், தம் செயல்களில் பற்று இன்றி எல்லாம் சிவன் செயல் என்று தங்கள் மனத்தைச் சிவன் திருவடியில் பொருந்த வைத்திருப்பார்கள். அதனால், அவர்கள் செயல்களில் உள்ள புண்ணியங் களோ பாவங்களோ அவர்களைச் சாருவதில்லை. ஆனால், அந்தச் சிவஞானிகளைப் போற்றுகிறவர்கள் அவர் சார்பிலான புண்ணியத்தையும், தூற்றுகிறவர்கள் அவர் சார்பிலான பாவத்தையும் தம் சார்பாக ஏற்க வேண்டும் நிலை உண்டு.

விளக்கம்:

வல்லார் - சித்தி பெற்றவர்; மாந்துதல் - உண்ணல்; **பேணாதார்** - புறக்கணிப்பவர்; வரதன் - வரம் அளிக்கும் சிவன். (13)

வசையை யார் மாற்றுவது?

149. பண்ணான் பரமசிவஞானி
பாவவிதமும் பயிற்றிடினு
முண்ணான் பலமுமெனப்
பனுவலுரைக்குமதனா லொருதலையே
நண்ணேந் துயரமெனப் பெரியோர்
நவையுமியற்றி னசையாலே
மண்ணாரவல மாகறையை
மாற்றியிடவே வல்லாரார்.

பண்ணான் பரமசிவஞானி
பாவவிதமும் பயிற்றிடினும்
உண்ணான் பலமும் எனப்பனுவல்
உரைக்கும் அதனால் ஒருதலையே
நண்ணேம் துயரம் எனப் பெரியோர்
நவையும் இயற்றில் நசையாலே
மண்ஆர் அவலமாகறையை
மாற்றியிடவே வல்லார் ஆர்?

உரை:

மேலான சிவஞானி சிற்றின்பம் நுகருதல் போன்ற பாவச் செயலைப் புரியமாட்டார். சந்தர்ப்ப வசத்தால் ஒருவாறு அச்செயலைப் புரிய நேரினும்,

Koviloor Digital Library

அவரைப் பாவம் அணுகாது என்று சிவாகம நூல்கள் கூறும். ஆதலால் அது நிச்சயமே; ஆனால் அது சாட்டாக ஒரு சிவஞானி, நாம் துன்பம் அனுபவிக்கப் போவதில்லை என்ற துணிவில் பெண்ணின்பம் நுகருதல் போன்ற குற்றங்களை மறைமுகமாகச் செய்து வந்தால் நாளடைவில் அது மெல்ல ஊர் முழுவதும் பரவிவிடும். அதனால், அவரைப் பாவம் ஒரு வேளை தாக்கா விட்டாலும், ஊரார் வசை மொழியிலிருந்து அவர் தப்ப இயலாது; வேறு யாரும் அவ்வசை மொழியிலிருந்து அவரைக் காப்பாற்றவோ முடியாது. (உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூட முடியில்லை என்பது *பழமொழி.*)

விளக்கம்:

உண்ணான் பலமும் - பயனை அனுபவிக்க மாட்டான்; **பனுவல்** - ஆகம நூல்; **ஒருதலை** - துணிவு; **நண்ணேம்** - அடைய மாட்டோம்; **மண் ஆர்** - நிலத்தில் பரவிய; **மாகறை** - பெரும்பழி; ''தன் வீட்டிலுள்ள எரியும் அகல் விளக்கைத் தன்னுடையது என்று சொந்தம் பாராட்டி அதை முத்தமிட்டால் அது சுடாமல் இராது. தன் விளக்கு ஆயினும் முத்தம் இட்டால் அது சுடும்'' என்று *குமரேச சதகம்* கூறுகிறது. விளக்கு தன்னைத் தீண்டியவரைச் சுடுவது போலப் பாவமும் செய்தவரைச் சுட்டே தீரும்.

குறிப்பு:

ஆசை வசப்படுதல் உண்டேல் அவர் சிவஞானி யாகார். அப்படிப் பட்டவரைப் பாவந் தீண்டாது விடுதற்கும் நியாயமில்லை. ஆதலால் சந்தர்ப்ப வசத்தால் என்றலே பொருந்தும். (14)

மோன நிலையுற்ற சிவஞானிக்குக் கிரியை இல்லை எனல்

150. எய்தற்கரிய பரம்பரனை யிசைந்தார்
கருமத் திசையார்கள்
செய்யிற் கருமஞ் சிறந்த
பொருள் செறிந்தாரல்லர் செழுங்கனிதங்
கையிற்புகலுங் களைந்தவலக் காயைக்
கவரக் கருதினரார்
வையத் தொளிகொண் மணியகற்றி
வழுவாஞ் சிலையார் மகிழ்வாரே.

எய்தற்கு அரிய பரம்பரனை இசைந்தார்
கருமத்து இசையார்கள்
செய்யில்கருமம் சிறந்த பொருள்
செறிந்தார் அல்லர் செழுங்கனிதம்

Koviloor Digital Library

கையில் புகலும் களைந்து அவலக்
காயைக் கவரக் கருதினர்ஆர்
வையத்து ஒளிகொள் மணி அகற்றி
வழுவாம் சிலையார் மகிழ்வார் ஏ.

உரை:

அடியவர்கள் அல்லாத யாரும் அடைவதற்கு அரிய சிவபிரானை அடைந்து, அவர்மீது கொண்ட அன்பிலே அழுந்தியிருக்கிற சிவஞானி, கிரியைகளைச் செய்வதில்லை. இந்த வரம்பை மீறி அவர் கிரியைகளைச் செய்தால் அவர் மோன நிலை கைவரப் பெற்ற ஞானி ஆகார். தமக்குக் கிடைத்த கொழுமை யான இனிய கனியை உண்டு மகிழாமல் சுவையற்ற காயைத் தின்ன விரும்புகின்றவர் யார்? ஒளி பொருந்திய வயிரமணி போன்ற ஆபரணக் கல் கிடைத்த போது அதனைப் பெறாமல் வெறும் கல்லைப் பெற விரும்புகின்றவர் யார்? கனியைப் பெற்றவர் காயை விரும்பாதது போல, விலை உயர்ந்த ஆபரணக்கல்லைப் பெற்றவர் சாதாரணக் கல்லை விரும்பாதது போல, உயர்ந்த மெய்யறிவு பெற்ற ஞானி, எளிய கிரியையைச் செய்ய விரும்பார்.

விளக்கம்:

பரம்பரன் - சிவபெருமான்; **இசைந்தார்** - பொருந்தியவர்; **களைந்து** - நீக்கி; **அவலக்காய்** - சுவை இல்லாத காய்; **கவர** - அடைய; **ஒளி கொள் மணி** - விலை உயர்ந்த ஆபரணக் கல்; **வழு** - குற்றம்; **சிலை** - வெறும் பாறைக்கல்; **ஆர்** - யார். (15)

சிவஞானிக்குப் பிறவி இல்லை எனல்

151. ஆசை முதலா மாசனைத்து
மறுத்தேயுடலும் வெறுத்தரிய
தேசன் சிவன்பொற் பாதமலர்
செறிந்தார் பிறப்பை மறந்தார்கள்
பேசற்கரிய பெருமையினைப்
பெற்றாரல்லர் கற்றாலும்
மாசுமலிந்த வாசையினான் மயங்கித்
துயங்கு மானிடரே.

ஆசைமுதலாம் மாசு அனைத்தும் அறுத்தே
உடலும் வெறுத்து அரிய
தேசன் சிவன் பொன்பாதமலர்
செறிந்தார் பிறப்பை மறந்தார்கள்

Koviloor Digital Library

பேசற்கு அரிய பெருமையினைப்
 பெற்றார் அல்லர் கற்றாலும்
மாசுமலிந்த ஆசையினால் மயங்கித்
 துயங்கும் மானிடர் ஏ.

உரை:

பெண்ணாசை முதலான குற்றங்கள் அனைத்தையும் போக்கி, உடலின்மீது உள்ள பற்றையும் நீக்கி, அறிவதற்கு அரிய ஒளி வடிவமுள்ள சிவபிரானின் தங்கம் போன்ற திருவடி மலர்களைப் பற்றுக் கோடாகக் கொண்ட ஞானிகள் பிறவாமையைப் பெற்றவர்கள் ஆவர். அவ்வாறு செய்யாமல், குற்றம் நிரம்பிய ஆசைகளில் மயங்கிச் சோர்வு அடைகின்ற மனிதர்கள், உயர்ந்த நூல்களைக் கற்றவராயினும் பிறவாமையைப் பெற இயலாது.

விளக்கம்:

மாசு - குற்றம், அழுக்கு; தேசன் - ஒளி வடிவினன்; பொன் - தங்கம்; செறிந்தார் - கலந்தார்; மலிந்த - நிரம்பிய; துயங்கும் - சோர்வடையும்; ஏ - அசை; பேசற்கரிய பெருமை - பிறவியறுதல்; திருக்குறளில் சிறப்பீனும் என்பதனாற் குறிக்கப்பட்டதும் இதுவாகும். (16)

பக்குவப்பட்டவர் பரமனைக் காண்பார் எனல்

152. காணார் மலத்தாற் கண்ணிழந்தார்
 கலந்தேயெங்கு நிறைந்தானைச்
சேணாரி ரவிதனைக் காணார்
 சிறந்த விழியை யிழந்தாரும்
கோணாகினையும் பூணெனவே கொண்டா
 னடியைக் கண்டார்கள்
மாணாமுல மலவலியை மாய்த்தா
 ரவன்றன் வலியாலே.

காணார் மலத்தால் கண் இழந்தார்
 கலந்தே எங்கும் நிறைந்தானைச்
சேணார் இரவிதனைக் காணார்
 சிறந்த விழியை இழந்தாரும்
கோண் நாகினையும் பூண் எனவே
 கொண்டான் அடியைக் கண்டார்கள்
மாணாமுல மலவலியை மாய்த்தார்
 அவன்தன் வலியால் ஏ.

Koviloor Digital Library

உரை:

பார்வையில்லாதவர் மிகுந்த தொலைவில் உள்ள வானத்திலிருந்து ஒளிபரப்பும் கதிரவனுடைய ஒளியைக் காண முடியாதது போல, இயல்பான ஆணவ மலத்தினால் அறிவு மறைக்கப்பட்டவர், எங்கும் கலந்து நிறைந்து பரவியுள்ள சிவபிரானைக் காண முடியாது. சிவபிரானுடைய திருவருளால் ஆணவ மலமாகிய திரையை விலக்கி அருள்விழி பெற்றவரே வளைந்து செல்லும் நாகப் பாம்பை அணிகலனாகக் கொண்ட சிவபிரான் திருவடிகளைக் கண்டவர் ஆவர்.

விளக்கம்:

எங்கும் நிறைந்தான் – இறைவன்; சேணார் – தொலைவில் இருக்கும்; இரவி – ஞாயிறு; கோண் – வளைந்த; நாகினை – நல்ல பாம்பை; கோள் + நாகம் எனக் கொண்டு கொலைக் குணமுடைய நாகம் எனலுமாம். பூண் – அணிகலன்; மாணா – சிறப்பு இல்லாத; மூல மலம் – ஆணவம்; மாய்த்தார் – வென்றார்; ஏ – அசை. (17)

சிவஞானிகள் எந்நிலையிலும் கடவுளைப் பிரிவதில்லையெனல்

153. வானமதனை நீங்காது
வாயுவிரைந்து மதனைப்போன்
ஞானமயனை நீங்கார் கண்
ஞானத்தவரு நடுக்கத்துந்
தேனின் மொழியா ரிணைத் தோளைத் திளைக்கும்
பொழுதுஞ் சினஞ்செறிய
வூனத்தினரை யுவர்த்தொறுக்கும் பொழுதும்
யாதாமொரு பொழுதும்.

வானம் அதனை நீங்காது வாயு
விரைந்தும் அதனைப்போல்
ஞானமயனை நீங்கார்கள்
ஞானத்தவரும் நடுக்கத்தும்
தேனின் மொழியார் இணைத் தோளைத்
திளைக்கும் பொழுதும் சினம்செறிய
ஊனத்தினரை உவர்த்து ஒறுக்கும்
பொழுதும் யாதாம் ஒருபொழுதும்.

உரை:

காற்று எங்கும் பரவி வேகமாக வீசிக் கொண்டிருந்தாலும், தனக்குப் பற்றுக் கோடான விண்ணைவிட்டு அகலாது. அதுபோலச் சிவஞானி தமக்கு அச்சம்

Koviloor Digital Library

ஏற்பட்ட போதும் தேன் போலும் இனிய மொழிகளைப் பேசும் இளம் பெண்ணின் தோள்களை அணைத்து இன்பம் நுகரும் போதும் தமக்குத் தீங்கு செய்தவரை வெறுத்துத் தண்டிக்கும்போதும் மற்றும் உள்ள எக்காலத்திலும் தம் உள்ளத்தில் இறைவனுடைய அருள் ஒளியைக் கண்டு, அதிலேயே ஒன்றித்து இருப்பார்.

விளக்கம்:

ஞானத்தவர் ஞானமயனை நீங்கார் - சிவஞானி அறிவு வடிவான இறைவனுடைய அருள் ஒளியில் எப்போதும் கலந்திருப்பார். இது அருளாளர் பலரும் கண்ட அநுபவ உண்மை.

1. நீர்க்குடம் சுமந்து வருகின்ற பணிப்பெண், மிகத் திறமையாக தன் இரண்டு கைகளையும் வீசி விளையாடி வந்தபோதும் அவள் உள்ளம் தான் சுமந்துள்ள நீர்க்குடத்தின் மீதே பொருந்தியிருக்கும். இவ்வாறே, மோனநிலை கைவரப் பெற்ற ஒரு ஞானி, எந்தத் தொழிலைச் செய்தாலும், இன்ப துன்பங்களில் எந்த நிலையை அடைந்தாலும், அவர் மனம் மோன நிலையில் திருவருளிலேயே நிலைத்திருக்கும் என்று பட்டினத்துப் பிள்ளையார் கூறுகின்றார்.

''எத்தவத்தைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர்மனம் இருக்கும் மோனத்தே - வித்தகமா
காதி விளையாடி இரு கைவீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்.''

(பட்டினத்துப் பிள்ளையார் பாடல்கள். பொது. - 40)

2. கயல்மீன் போல மாட்சிமைப்பட்ட கண்களையுடைய உமாதேவியைப் பக்கத்தில் உடைய சிவன், என்னைக் கலந்து ஆண்டு அருளிய பின் அயலார் என்பவர் இல்லாமல், அரிய வினையினால் வந்த உறவினர் என்பவர் இல்லாமல், உலகத்தின் மீது உள்ள மயக்கம் நீங்கி, மற்றும் உள்ள பேச்சும் இல்லாமல், என்னுடைய செயலும் கெட்டு நின்றது என்று மாணிக்க வாசகர் தம் அனுபவத்தை விளக்குகிறார்.

''கயல்மாண்ட கண்ணிதன் பங்கன் எனைக்கலந்து ஆண்டலுமே
அயல்மாண்டு அருவினைச் சுற்றமும் மாண்டு அவனியின் மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகம் மாண்டு என்னுடைய
செயல்மாண்ட ஆபாடித் தெள்ளேணம் கொட்டாமோ.''

(திருவாசகம் - திருத்தெள்ளேணம் - 11)

3. முருகப் பெருமானே! கற்கண்டை நிகர்த்த சொற்களைப் பேசும் மென்மையுடைய பெண்களின் இன்பப் புணர்ச்சியாகிய மதுவை நிரம்பவும் அள்ளிப் பருகி, அதனால் அறிவு மயங்கினாலும் உம்முடைய திருக்கையிலுள்ள வேற்படையை மறக்கமாட்டேன் என அருணகிரிநாத அடிகள் தம் அனுபவத்தைக் கூறுகிறார்.

Koviloor Digital Library

''கண்டு உண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக் கள்ளை
மொண்டு உண்டு அயர்கினும் வேல் மறவேன்''

(கந்தர் அலங்காரம் - 37) (18)

சிவஞானி முதலியோர்க்குச் சிவன் காட்சிதரும் முறை

154. **துயக்கம் துடைத்த ஞானிகட்குத்**
தோன்றுமெங்குந் துகளில்லான்
மயக்க மறுத்த
யோகர்க்கு மருவுமிதய மலர்மீதே
பயக்கும் பலத்தைப் பாவகனிற்
பார்ப்பார் தமக்குப் பாங்குறவே
நயக்கு முருவின் மற்றையவர்
நாடவுறைவ னாடோறும்.

துயக்கம் துடைத்த ஞானிகட்குத் தோன்றும்
எங்கும் துகள் இல்லான்
மயக்கம் அறுத்த யோகர்க்கு
மருவும் இதய மலர்மீதே
பயக்கும் பலத்தைப் பாவகனில்
பார்ப்பார் தமக்குப் பாங்குஉறவே
நயக்கும் உருவின் மற்றையவர்
நாட உறைவன் நாள்தோறும்.

உரை:

தூயவனான சிவபெருமான் உலகப் பொருள்களால் அறிவு வேறுபடும் தன்மையில்லாத சிவஞானிகளுக்கு, அவர்கள் விரும்பிய எந்த இடத்திலும் எந்த வேளையிலும் காட்சி தருவான்; யோக சித்தி பெற்ற யோகிகளுக்கு அவர்களின் நெஞ்சங்களாகிய மலர்களிற் கலந்து நின்று அருள் புரிவான்; தீயை வணங்கும் வேதியர்களுக்கு அத்தீயில் நின்றே அருள் செய்வான்; ஏனைய அன்பர்களுக்கு அவர்கள் வணங்கும் சிவலிங்கம், அம்பலவாணர் முதலிய திருமேனிகளில் எழுந்தருளி அருள் வழங்குவான்.

விளக்கம்:

ஞானிகட்குத் தோன்றும் எங்கும் துகள் இல்லான் - தூயவனான சிவபெருமான் சிவஞானி விரும்பும் இடத்தில் தோன்றிக் காட்சி தருவான். அது அருளாளர்கள் கண்ட அனுபவமாகும்.

''தாமரை மலரானது மணத்தினையும், முத்தினையும் சொரிகின்ற

Koviloor Digital Library

திருச்செங்கோட்டில் எழுந்தருளியுள்ள குமரக் கடவுளே என்று அடியேன் எவ்விடத்திலே நினைத்தாலும், அவ்விடத்திலே அடியேன் முன்வந்து எதிரிலே நின்று அருள்புரிவார்'' என்று அருணகிரிநாதர் கூறுவது கவனிக்கத்தக்கது.

''கொங்கே தரளம் சொரியும் செங்கோடைக் குமரன் என
எங்கே நினைப்பினும் அங்கே என் முன்வந்து எதிர்நிற்பனே''

(கந்தர் அலங்காரம் - 104)

யோகர்க்கு மருவும் இதயமலர் மீதே; சிவயோகிகளுக்கு இறைவன் அவர்களின் நெஞ்சங்களில் அமர்ந்து அருள்செய்வான்.

''இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க''

என்று திருவாதவூரர் கூறுகிறார்.

''திருமாலொடு நான்முகனும்
தேடிக் காணொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்''

என்று திருநாவுக்கரசர் மொழிகிறார்.

பாவகனில் பார்ப்பார் தமக்கு - தீயை வணங்குகிற வேதியர்க்கு அத்தீயின் மூலமாகவே இறைவன் அருள்வான்.

''தீயினைக் கும்பிடும் பார்ப்பான்''

என்று திரு. சி. சுப்பிரமணிய பாரதியார் கூறுகிறார்.

நயக்கும் உருவின் மற்றையவர் நாட உறைவன் விக்கிரக வடிவிலே இறைவனை வணங்குகிறவர்களுக்கு, அவ்விக்கிரகத்திலே எழுந்தருளி அருள் செய்வான்.

'' எது பாவித்திடினும் அதுவாகிவந்து அருள் செய் எந்தை நீ''

என்பது தாயுமான அடிகளின் அருள்மொழி.

துயக்கம் - மன மயக்கம்; துகள் - மாசு, குற்றம்; பலம் - பயன்; பயக்கும் - அளிக்கும்; பாவகன் - நெருப்பு; பார்ப்பார் - வேதியர். (19)

ஞானயாக நிலை கர்மயாக நிலையைவிட உயர்ந்ததெனல்

155. ஒளிய பதுமராகங் கையுடையார்க்
குவகையல துண்டோ
தெளிய யோகசித்தர்க்குஞ்
சிறப்பேயலது செலலுண்டோ

Koviloor Digital Library

புளியசிலையைப் பொறுத்தார்க்குப்
பொருளோ சிறிது துயர்பெரிது
நெளிவு பெரிதுபலஞ் சிறிது
நிரந்த கரும நிலையார்க்கே.

ஒளிய பதுமராகம் கையுடையார்க்கு
உவகை அ(ல்)லது உண்டோ
தெளிய யோக சித்தர்க்கும் சிறப்பே
அ(ல்)லது செ(ல்)லல் உண்டோ
புளிய சிலையைப் பொறுத்தார்க்குப்
பொருளோ சிறிது துயர் பெரிது
நெளிவு பெரிது பலம் சிறிது
நிரந்த கரும நிலையார்க்கு ஏ.

உரை:

மாணிக்கமணியைப் பெற்றவர் மகிழ்ச்சியடைவார்; மனம் வருந்துவதில்லை; சிவயோக சித்தி பெற்றுத் தெளிந்த சிவஞானிக்கு எப்போதும் இன்பமே உண்டு; அவர் துன்பம் அடைவதில்லை. ஆனால், அற்பமான சாதாரணக் கற்களைச் சுமந்து செல்பவருக்குக் கிடைக்கும் பொருள் கொஞ்சம்; சுமப்பதால் உண்டாகும் உடல் வருத்தம் அதிகம். அதேபோல் கிரியைகளில் உழலுபவர் அடையும் உடல் சோர்வு பெரிது. ஆனால், அவர் பெறும் பயன் சிறிது. கிரியையாளர் சாதாரண கல்லை ஒப்பவர்; சிவயோகி மாணிக்கக் கல்லை ஒப்பவர் என்பது குறிப்பு.

விளக்கம்:

ஒளிய - ஒள்ளிய என்பது ஒளிய என வந்தது. ஒளி பொருந்திய என்பது பொருள்.

தெளிய - தெள்ளிய என்பது தெளிய என வந்தது. தெளிந்த அல்லது அறிவுடைய என்பது பொருள்.

புளிய - புல்லிய என்பது எதுகை நோக்கிப் புளிய என மாறி வந்தது. அற்பமானது என்பது பொருள்.

நெளிவு - உடல் வருத்தம்; பதுமராகம் - மாணிக்கக் கல்வகை;

செல்லல் - துன்பம்; பொறுத்தார் - சுமந்தவர்;

நிரந்த - தொடர்ந்த. (20)

Koviloor Digital Library

சிவஞானி தங்கும் இடச்சிறப்பு இத்தகையது எனல்

156. சிறந்தபரம சிவனுருவந் தெருண்ட பரம சிவஞானி
யுறைந்த வெல்லை விற்கோடியளவும் பாவமொழிந்துவிடு
நிறைந்தகங்கை நிகழிடத்து ணீங்குமயுத மாறளவு
மறைந்தவளவி னருத்தத்து ளகலும்பாவ மரன்புரிக்கே.

சிறந்த பரமசிவன் உருவம் தெருண்ட பரமசிவஞானி
உறைந்த எல்லை வில்கோடி அளவும் பாவம் ஒழிந்து விடும்
நிறைந்த கங்கை நிகழ்இடத்துள் நீங்கும் அயுதம் ஆறு அளவும்
அறைந்த அளவில் அருத்தத்துள் அகலும் பாவம் அரன் புரிக்கு ஏ.

உரை:

சிறப்பினையுடைய பரம்சிவனின் வடிவத்தை உணர்ந்த மேலான சிவஞானி எழுந்தருளியுள்ள திருமடத்திலிருந்து கோடி விற்கிடை அளவு தூரமும், நீர் நிரம்பிய கங்கையாறு பாயும் இடத்திலிருந்து அறுபதாயிரம் விற்கிடை தொலைவும், திருக்கோயிலில் இருந்து அதிற்பாதியான முப்பதாயிரம் விற்கிடை தூரமும் பாவம் நெருங்காது.

விளக்கம்:

விற்கிடை - இது பண்டைக்கால இந்திய நீட்டல் அளவை. ஒரு விற்கிடை நான்கு முழ நீளம் உடையது. ஒரு முழம், இரு சாண் கொண்ட முழங்கையின் நீள அளவு.

அயுதம் - பதினாயிரம்; **ஆறு அயுத அளவு** - அறுபதாயிரம். **அருத்தம்** - பாதி; **ஆறு ஆயுத அளவின் அருத்தம்** - முப்பதாயிரம்; **தெருண்ட** - உணர்ந்த; **அகலும் பாவம்** - பாவம் அகலும்; **அரன்புரி** - அரன் கோயில்; இது காசி விசுவநாதர் கோயில். **அரன்** - பாவங்களை அறுப்பவன். **ஏ** - அசை. (21)

சிவஞானியின் அதியுயர் மேன்மை இதுவெனல்

157. நீடும் பொருளொன் றுண்டெனவே
நெஞ்சமதனு ணிச்சயித்தார்
ஆடுமுதகமாதீர்த்த மவனி
தலத்தி லனைவர்க்குங்
கூடுமெல்லை சிவபூமி கொடிய
வினைகள் கெடநினைவார்
தேடியவரை யருச்சிக்க சிந்தை
செய்க சிறப்புறவே.

Koviloor Digital Library

நீடும்பொருள் ஒன்று உண்டு எனவே
நெஞ்சம் அதனுள் நிச்சயித்தார்
ஆடும்உதகமா தீர்த்தம்
அவனிதலத்தில் அனைவர்க்கும்
கூடும்எல்லை சிவபூமி கொடிய
வினைகள் கெடநினைவார்
தேடி அவரை அருச்சிக்க சிந்தை
செய்க சிறப்பு உற ஏ.

உரை:

ஒருதலையாக நிலைத்து நிற்கும் இறைவன் ஒருவன் உள்ளான் என்று தம் உள்ளத்தில் உறுதி செய்து கொண்ட சான்றோர் நீராடும் நீர்நிலை, நிலத்தில் வாழும் மக்கள் அனைவருக்கும் பாவங்களைக் கழுவும் புண்ணியத் துறைகள் ஆகும். சிவஞானி ஒருவர் தங்கியிருக்கும் இடம் சிவன் உறையும் கோயில் ஆகும். தாங்கள் செய்த கொடிய பாவங்கள் ஒழிய வேண்டும் என்று எண்ணுகின்ற அன்பர்கள், சிவஞானி இருக்கும் இடத்தை நாடிச் சென்று அவரை மலரால் வழிபாடு செய்ய வேண்டும். அவர் திருமேனியைத் தம் மனத்தில் பதித்துத் தியானம் செய்ய வேண்டும்.

விளக்கம்:

சிவஞானிகளை மதித்துப் போற்றாத மக்களிடையே சிவஞானி தோன்றுவது இல்லை. தாயுமான அடிகள் அருளிய குரு மரபின் வணக்கம், நம் குருமாரைப் போற்ற நமக்கு வழிகாட்டுகின்றது. அடிகள் சைவ சமய குருமார் அனைவரையும் நமக்கு அறிமுகப்படுத்துவது கவனிக்கத்தக்கது.

தென்முகக் கடவுள்

துய்யகரமலரால் சொல்லாமல் சொன்ன உண்மை
ஐயனைக் கல்ஆல் அரசை யாம் அணைவது எந்நாளோ?

திருநந்தி தேவர்

சிந்தையினுக்கு எட்டாத சிற்சுகத்தைக் காட்ட வல்ல
நந்தி அடிக்கீழ்க் குடியாய்நாம் அணைவது எந்நாளோ?

சனகர் முதலிய நால்வர்

எந்தை சனற்குமரன் ஆதிஎமை ஆட்கொள்வான்
வந்த தவத்தினரை வாழ்த்தும் நாள் எந்நாளோ?

Koviloor Digital Library

மெய்கண்ட தேவர்

பொய்கண்டார் காணாப் புனிதம் எனும் அத்துவித
மெய்கண்ட நாதன் அருள்மேவும்நாள் எந்நாளோ?

அருள் நந்தி சிவாச்சாரியார்

பாதி விருத்தத்தால் இப்பார் விருத்தம் ஆக உண்மை
சாதித்தார் பொன் அடியைத் தான் பணிவது எந்நாளோ?

மறைஞான சம்பந்த தேசிகர்

சிற்றம்பலம் மன்னும் சின்மயராம் தில்லைநகர்க்
கொற்றங்குடிமுதலைக் கூறும்நாள் எந்நாளோ?

உமாபதி சிவாசாரியார்

குறைவுஇல் அருள் ஞானமுதல் கொற்றங்குடி அடிகள்
நறைமலர்த்தாளுக்கு அன்புபெற்று நாம் இருப்பது எந்நாளோ?

அடியார் வணக்கம்
திருஞான சம்பந்தர்

வெம்பந்தம் தீர்த்து உலகுஆள் வேந்தன் திருஞான
சம்பந்தனை அருளால் சாரும்நாள் எந்நாளோ?

திருநாவுக்கரசர்

ஏரின் சிவபோகம் இங்கு இவர்க்கே என்ன, உழ
வாரம் கொள் செங்கையர்தாள் வாரம் வைப்பது எந்நாளோ?

நம்பி ஆரூரர்

பித்தர்இறை என்று அறிந்து பேதைபால் தூது அனுப்பு
வித்த தமிழ்ச் சமர்த்தர் மெய்புகழ்வது எந்நாளோ?

திருவாதவூரர்

போதவூர் நாடு அறியப் புத்தர்தமை வாதில் வென்ற
வாதவூர் ஐயன் அன்பை வாஞ்சிப்பது எந்நாளோ

- தாயுமானவர் பாடல்

Koviloor Digital Library

உதகம் - நீர்; மாதீர்த்தம் - தோய்ந்தவர் பாவங்களை நீக்கும் புனித நீர்நிலை; 'மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக்கொண்ட' *அப்பர் தேவாரம்*. நீடும் பொருள் - நிலை பேறு உடைய கடவுள். (22)

புறப்பூசையினும் அகப்பூசையாற் பெறும் பலன் அதிகம் எனல்

158. அகத்திற்புரிவா ரருச்சனையை யரிய
பலத்தை யடைந்திடுவர்
சகத்திற் புரிவார் சங்கரனைச்
சார்வரதினிற் றணியபல
மகத்துளேவல் புரிவார்க்கு
மதிகபலமே யரையன்பாற்
சகத்தினேவல் புரிவார்க்கு மதனிற்
சிறுமை சார்ந்திடுமே.

அகத்தில் புரிவார் அருச்சனையை
அரிய பலத்தை அடைந்திடுவர்
சகத்தில் புரிவார் சங்கரனைச்
சார்வார் அதனில் தணியபலம்
அகத்துள் ஏவல் புரிவார்க்கும்
அதிகபலமே அரையன்பால்
சகத்தில் ஏவல் புரிவார்க்கும்
அதனில் சிறுமை சார்ந்திடும் ஏ.

உரை:

மன்னரின் மாளிகையில் ஊழியம் புரிகிறவர் அம்மன்னிரிடமிருந்து மிகுந்த வருவாயைப் பெறுவார். மன்னர் அல்லாத பிறரிடம் பணி செய்கிறவர் குறைந்த வருவாயையே பெறுவார். இவ்வாறே, சிவபிரானைத் தம் இதயத்தில் அமர்த்தி, உரிய மந்திர மொழிகளால் மனதாலேயே வழிபாடு செய்கிற சிவஞானி, சிவ பிரானுடைய அருள் ஒளியைத் தம் நெஞ்சினுள்ளே கண்டு மகிழும் பேறு பெறுவார். கடவுள் திருமேனிக்குப் பிறர்காண மலர் இட்டு வணங்குகிறவர், குறைவான பயனையே அடைவார். புறப்பூசையைவிட அகப்பூசையே சிறந்தது.

விளக்கம்:

அகம் - நெஞ்சு, வீடு; **சகத்தில்** - உலகில்; **ஏவல்** - ஊழியம், பணி; **தணிய** - குறைந்த; **அரையன்பால்** - அரசரிடம்; **சிறுமை** - தாழ்வு; **அதனில்** - அதைவிட; ஏ - அசை. (23)

Koviloor Digital Library

அகப்பூசையின் விசேடச் சிறப்பு இதுவெனல்

159. பாரியாரும் பயிலாத
பக்கமனையுட் பத்தாவைச்
சேரவவனு மவடனக்குச்
சித்தக்களிப்புஞ் செய்திடுவ
னேரிலானை நின்மலனை
நெஞ்சுணினைக்கி லவர்க்கவனும்
பூரித்திடுவன் போகவிதம்
பொல்லா மலமும் போக்குவனே.

பாரியாரும் பயிலாத
பக்கமனைஉள் பத்தாவைச்
சேர அவனும் அவள் தனக்குச் சித்தக்
களிப்பும் செய்திடுவன்
நேர்இலானை நின்மலனை நெஞ்சுள்
நினைக்கில் அவர்க்கு அவனும்
பூரித்திடுவன் போகவிதம் பொல்லா
மலமும் போக்குவன் ஏ.

உரை:

ஒருவரும் புகாத தனித்த படுக்கை அறையில் முறைப்படி மணந்து கொண்ட உரிமையுடைய மனைவி தன் கணவனை அணுக, அந்தக் கணவனும் அவளைக் கூடிக் கலந்து, அவள் விரும்பிய ஆடை அணிகலன்களைத் தந்து அவளுக்கு மன மகிழ்ச்சியை உண்டாக்குவான். இவ்வாறே, தனக்கு ஒப்பில்லாத சிவபிரானைத் தம் நெஞ்சில் கருதித் தியான நிலையில் இருக்கின்ற அன்பருக்கு அத் தூயவனான சிவபிரான் மகிழ்வோடு பல வகை இன்பங்களையும் அருள் செய்வான். பின்னர், அந்த அன்பரிடம் பொருந்தியிருந்த ஆணவ மலத்தை அகற்றி, முத்தியையும் வழங்குவான்.

விளக்கம்:

பாரியார் - மனைவியார்; பயிலாத - பழகாத; சித்தம் - மனம்; பத்தா - பர்த்தா என்பது பத்தா என வந்தது. கணவன் என்பது பொருள். பக்கமனை - தனி இடம்;

பூரித்தல் - மகிழ்ச்சி கொள்ளுதல்; பொல்லா மலம் - எளிதில் நீங்காத ஆணவ மலம்; ஏ - அசை.

Koviloor Digital Library

குறிப்பு:

மலமும் என்றதால் கன்மம் மாயை போக்குதலுங் கொள்ளப்படும். யாரும் பயிலாத பக்கமனையுள் பாரி பர்த்தாவை அணுக எனக் கூட்டிப் பொருள் செய்க. (24)

இதுவும் அது

160. ஈரைந்தாய திகை நடுவே
யியமமாதி மலர் கொண்டே
யார்வங் கூரப்பூசனையை
யமலர்க்கியற்று மவர்தாமும்
பேரன்புடைய பெருமானா ருலகிற்
போகம் பெரிதருந்திச்
சாரும் பிறப்பிற் சிவஞானஞ்
சார்ந்து சிவன்றாள் சார்வாரே.

ஈரைந்து ஆய திகைநடுவே
இயமம்ஆதி மலர் கொண்டே
ஆர்வம்கூரப் பூசனையை அமலர்க்கு
இயற்றும் அவர்தாமும்
பேரன்பு உடைய பெருமானார் உலகில்
போகம் பெரிது அருந்திச்
சாரும் பிறப்பில் சிவஞானம்
சார்ந்து சிவன்தாள் சார்வார் ஏ.

உரை:

பத்துவகை நாடிகளால் சூழப்பட்ட உடம்பினுள்ளே இயமம் முதலான ஒழுக்க மலர்களால், சிவபிரானை நெஞ்சிலே கருதித் தியான நிலையில் மோனமாக வழிபாடு செய்கிறவர், சிவ உலகை அடைந்து, அங்குள்ள இன்பங்களை நுகர்ந்து, மறுபிறவியாக நில உலகில் பிறந்து, தக்க ஆசான்மூலம் சிவ ஆகம உண்மைகளை உணர்ந்து சிவபிரான் திருவருளைப் பெறுவார்.

விளக்கம்:

இயமம் ஆதி - இயமம் முதலானவை. அவை:

1. கொல்லாமை; 2. வாய்மை; 3. திருடாமை; 4. காமம் இல்லாமை; 5. பொறுமையுடைமை; 6. உறுதியுடைமை; 7. இரக்கம் உடைமை; 8. நேர்மை; 9. அளவு அறிந்து உண்ணுதல்; 10. தூய்மை என்ற பத்துவகை ஒழுக்கங்கள். இந்தப் பத்துவகை ஒழுக்கங்களும் அகப்பூசைக்கு உரிய பத்து வகைப்பூக்கள் ஆகும்.

Koviloor Digital Library

எட்டு உறுப்புகளைக் கொண்ட சிவயோகத்தில் இயமம் முதற்பிரிவு ஆகும்.

பெருமானார் உலகு - சிவ உலகம்; சாரும் பிறப்பு - மறுபிறவி; சிவ ஞானம் - சிவ ஆகம அறிவு; சார்வார் - பொருந்துவார்;

சிவன்தாள் - இது சிவ பிரானுடைய திருவருளைக் குறிக்கும். ஏ - அசை.

குறிப்பு:

இச்செய்யுளும் அகப்பூசை பலனைக் கூறுகிறது. அப்பூசைக்கிடம் மனம், இதற்கு முன்னைய செய்யுட்கு முன்னே உள்ள செய்யுளில் அகத்திற் புரிவார் என்றதனாற் கருதப்பட்ட மனமே இச்செய்யுளிலும் 'ஈரைந்தாய திகைநடு' என்பதனாற் கொள்ளப்படுதல் தகும். அவ்வகையில் செய்யுளுரை பின்வருமாறு அமையும்.

தேகத்தின் அகமாயுள்ள பத்துத் திக்குக்கும் நடுவாயிலங்கும் மனத்தில் கொல்லாமை முதலிய அஷ்ட புஷ்பங்கள் கொண்டு ஆர்வம் மேலோங்க அமலனாகிய சிவனுக்குப் பூசை புரிவார் பேரன்புமிக்க தமது பெருமானார் வைகுஞ் சிவலோகத்தில் அவ்வுலக போகத்தை மிக அநுபவித்து, போக முடிவில் சிவஞானஞ் சார்தற்குரிய நற் குலத்திற் பிறந்து அதனைப் பெற்று அவ்வழியால் சிவன் திருவடிகளைக் கூடுவர்.

விளக்கம்:

தேகத்தின் அகமாயுள்ள பத்துத் திக்கென்றது அண்டபிண்ட இயைபுபற்றி, மனம் பத்துத் திக்குக்கும் நடு வென்றது எந்நேரமும் எத் திசையிலுங் கிளம்பத் தயாராயிருக்கும் அதன் வேக நிலைபற்றி, மனதைச் சதாகதி யெனலும் அறியத்தகும். சிவஞானம் - சிவனையே உணர வைக்கும் மெய்யுணர்வு. சார்வார் - பொருந்து பவர். (25)

சிவஞானம் பெற விரும்புதலின் பயன் இதுவெனல்

161. நச்சிலெவருஞ் சிவஞான
நம்பனமரும்புரி நண்ணித்
துய்ச்சே போகவிதந் தொலைவிற்
றோன்றிப் புவியிற் றுரிசழியக்
கச்சேபுளிய காயத்தைக் களைகண்
டமது கணிற் கண்டு
விச்சை தனக்கும் விச்சாய
விமலன் கமலம் விரவுவரே.

Koviloor Digital Library

நச்சில் எவரும் சிவஞானம்
நம்பன் அமரும் புரிநண்ணித்
துய்ச்சே போகவிதம் தொலைவில்
தோன்றிப் புவியில் துரிசுஅழியக்
கச்சே பு(ல்)லிய காயத்தைக் களைகண்
தமது க(ண்)ணில் கண்டு
விச்சை தனக்கும் விச்சுஆய
விமலன் கமலம் விரவுவர் ஏ.

உரை:

சிவ ஆகம உண்மைகளை அறிய விரும்பிப் பெற்றுக் கொள்கிறவர் யாராக இருந்தாலும், அவர் சிவபுரியை அடைந்து அங்குள்ள பலவகை இன்பங்களை நுகர்வார். பின்னர், நிலத்தில் மீண்டும் பிறந்து, துன்பங்கள் அகலும்படி அற்பமான உடலின்மீது உள்ள பற்றை வெறுத்துத் தம் உயிருக்கு ஆதரவான சிவபிரானைத் தம் உள்விழியால் கண்டு, மெய்யறிவுக்கு வித்தாக உள்ள சிவபிரான் திருவடித் தாமரையில் பொருந்தியிருப்பார்.

விளக்கம்:

நச்சுதல் - விரும்புதல்; நம்பன் - சிவன்; நண்ணி - அடைந்து; துய்ச்சே - துய்த்து, அநுபவித்து; துரிசு - பாவம்; புரி - சிவபுரி; கச்சே - கைத்தே, வெறுத்து; காயம் - உடம்பு; களைகண் - ஆதரவு; விச்சை - மெய்யறிவு; விச்சு - வித்து;

விமலன் - இறைவன்; கமலம் - தாமரை. இங்குத் தாமரைப் பூவைப் போன்ற திருவடிகளைக் குறிக்கிறது. விரவுவார் - பொருந்துவார்; ஏ - அசை. தொலைவில் - (போகம்) முடிவுறுதலும்; புல்லிய - கீழான. (26)

மூன்று வகையான வேட்கையும் மந்த தரத்தினர் நிலையும்

162. ஆசைதானு மூன்றுவித மறியிலவையுங் கனிட்டாந்தம்
பேசுங்கனிட்ட வாதரவு பெற்றார்மூன்று பிறப்படைந்து
தேசார் ஞானயோகத்தைச் செறிவர் பரமதேசிகனாற்
பாசம்பிரியப் பரமான வின்ப வெள்ளம் பருகுவரே.

ஆசை தானும் மூன்றுவிதம் அறியில் அவையும் கனிட்ட அந்தம்
பேசும் கனிட்ட ஆதரவு பெற்றார் மூன்று பிறப்பு அடைந்து
தேசு ஆர் ஞானயோகத்தைச் செறிவர் பரம தேசிகனால்
பாசம் பிரியப் பரமான இன்ப வெள்ளம் பருகுவர் ஏ.

Koviloor Digital Library

உரை:

ஆராய்ந்து பார்த்தால் சிவஞானம் பெறும் விருப்பம் அதி தீவிரம், தீவிரம், மந்தம் என மூன்று வகைகளைக் கொண்டிருக்கிறது. இவற்றில் மந்த தரத்தில் உள்ளவர், கடவுள் அருளைப் பெற மூன்று முறை இவ்வுலகில் பிறப்பார். மூன்றாவது பிறவியில் மேலான சிவ ஆகம உண்மைகளை அறிந்த குருவின் அருளால் ஆணவம் முதலான பற்றுகள் அகல, அருள் ஒளி நிரம்பிய ஞான போகத்தைப் பெற்று மோன ஆனந்தத்தில் நிலைத்து மகிழ்வார்.

விளக்கம்:

கனிட்டம் - மந்த தரம், கீழானது; தேசு - அருள் ஒளி; ஆர் - நிரம்பிய; ஞானம் - கடவுளைப் பற்றிய அறிவு; பரம - மேலான; தேசிகன் - குரு; பாசம் பிரிய - பற்று விலக; பரமான - கடவுளைப் பற்றிய; பருகுவர் - அநுபவிப்பர்; ஏ - அசை. (27)

தீவிர தரத்தினர் நிலை

163. உடையாரிடைவே ணுளத்தமல
ணுலகமதனை யுகப்புறவே
யடைவாரவனி தலத்திரண்டு
பிறப்புமவல வுடலாசை
விடுவார் பரமசிவ ஞானி
விளைத்த கருணை வெள்ளத்திற்
படிவார் பரமசிவன் பாதம்
பரிப்பார் பசுநோ யரிப்பாரே.

உடையார் இடைவேண் உளத்து அமலன்
உலகம் அதனை உகப்பு உறவே
அடைவார் அவனிதலத்து இரண்டு
பிறப்பும் அவல உடல் ஆசை
விடுவார் பரமசிவஞானி விளைத்த
கருணை வெள்ளத்தில்
படிவார் பரமசிவன் பாதம்
பரிப்பார் பசுநோய் அரிப்பார் ஏ.

உரை:

அதிதீவிர தரத்துக்கும் மந்த தரத்துக்கும் இடையில் இருப்பது தீவிரம் என்ற தரம். கடவுள் அருளைப் பெறத் தம் உள்ளத்தில் தீவிர விருப்பம் உள்ளவராய் ஞானயாகஞ் செய்தவர் சிவ உலகத்தை அடைந்து அங்குள்ள இன்பங்களை மகிழ்ச்சி பொருந்த அனுபவிப்பார். பின்னர், இவ்வுலகில் இரண்டு முறை பிறப்பார்.

Koviloor Digital Library

இரண்டாவது பிறவியில் தக்க சிவஞானியின் மிகுந்த அருளால், துன்பம் தரும் தம் உடலின் மீது உள்ள பற்றை நீக்கி, ஆணவமலத்தை அறுத்து, மேலான சிவபிரான் திருவடிகளில் பொருந்தியிருப்பார்.

விளக்கம்:

இடையே - நடுவில்; வேண் - விருப்பம்; அமலன் - தூயசிவன்; அவனி தலம் - நிலப்பகுதி; அவலம் - துன்பம்;

விளைத்த - செய்த; பரமசிவ ஞானி - மேலான சிவன் அருள் பெற்ற சைவத் துறவி; வெள்ளம் - பெருக்கு; படிவார் - பொருந்துவார்;

பரிப்பார் - தாங்குவார்; பசு நோய் - ஆணவமலமாகிய அழுக்கு; அரிப்பார் - அறுப்பார்; ஏ - அசை. (28)

அதி தீவிர தரத்தினர் நிலை

164. பெற்றார் பெரியவாதரவு
பெருமானுலக மதுபெற்றே
மற்றோருடல மண்ணுலகில் வாய்க்க
மனத்தின் மயக்கினையு
மற்றே யமல வொளி வெளியை
யறிந்தே பிறந்தே யவ்வுடலம்
பெற்றே பிரியாப் பெரும் பொருளைப்
பிரியா ரழியாப் பேரின்பம்.

பெற்றார் பெரிய ஆதரவு பெருமான்
உலகம் அது பெற்றே
மற்றோர் உடலம்மண்உலகில் வாய்க்க
மனத்தின் மயக்கினையும்
அற்றே அமல ஒளி வெளியை
அறிந்தே பிறந்தே அவ்உடலம்
பெற்றே பிரியாப் பெரும் பொருளைப்
பிரியார் அழியாப் பேரின்பம்.

உரை:

கடவுள் அருளைப் பெறுவதில் அதிதீவிர விருப்பம் உள்ளவர், சிவ உலகை அடைந்து மகிழ்வார். பின்னர், மீண்டும் இந்நில உலகில் பிறப்பார்; அப்பிறவியில் வாழும்போதே விருப்பு வெறுப்புகளை நீக்கித் தூய இறைவனின் அருள்ஞான வெளியினை உணர்ந்து, உடலைத் துறந்து, தம் நெஞ்சை விட்டு அகலாத சிவ பிரானை அடைந்து நீங்காத பெரு மகிழ்ச்சியைப் பெறுவார்.

Koviloor Digital Library

விளக்கம்:

பெருமான் உலகம் - சிவ உலகம்; வாய்க்க - உண்டாக; உடலம் - உடம்பு; அற்றே - நீங்கி; பிறிந்தே - வேறுபட்டு; அமல ஒளி வெளி - பக்குவம் இல்லாதவர் கண்ணுக்குத் தோன்றாத சிவபிரானுடைய அருவநிலை. அது ஒளிமயமாய் அகண்டமாய் இருத்தலின் ஒளிவெளி எனப்படும். பிரியா - விலகாத பெரும் பொருள் - இறைவன்; பேரின்பம் - முத்திநிலை. (29

நிர்க்குணன் உரைத்தான்

165. என்று கருமாதிய மகத்திற மிசைத்தான்
குன்றுவர்மடக் கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்று புலனைந்தினையும் வெய்ய வினை நைய
நின்ற முனி யன்றுணர நிற்குண னினைந்தே.

என்று கருமம் ஆதிய மகத்திறம் இசைத்தான்
குன்றுவர் மடக்கொடி தனக்கு அருள் கொடுத்தான்
வென்று புலன் ஐந்தினையும் வெய்ய வினைநைய
நின்றமுனி அன்று உணர நிற்குணன் நினைந்து ஏ.

உரை:

மலையில் வாழும் வேடுவர் தலைவன் நம்பிராசன் திருமகளான, இளமையும் கொடி போன்ற மென்மையான உடல் அமைப்பும் கொண்ட வள்ளி நாயகிக்கு அருள் செய்த தூயனான கந்தக் கடவுள், கொடிய தீவினை கெடுமாறு, மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளையும் அடக்கிய அகத்தியன் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணி, கருமம் முதலான யாகங்களின் தன்மைகளை உரைத்தான்.

விளக்கம்:

மகம் - யாகம்; வெய்ய - கொடிய; நைய - கெட; மடக்கொடி; மடம் + கொடி; மடம் - இளமை; இளமையும் கொடி போன்ற மெல்லிய உடல் அமைப்பும் கொண்ட வள்ளி. நிற்குணன் - நிர்க்குணன், குணம் இல்லாதவன், கடவுள்; ஏ - அசை. (30)

சிவபெருமான் புகழ்

166. காமுறுவாரையுங் கண்ணினனே காமனைக்
காய்தழற் கண்ணினனே
நாமமுமாயிரம் பெற்றவனே நான்முகன்
றன்னையும் பெற்றவனே

Koviloor Digital Library

யேமமுமென்றனக் கானவனே யேனமு
மெய்சிலைக் கானவனே
தேமொழியாளொரு பாலினனே சிறுவனுக்
கன்றருள் பாலினனே.

காமுறுவாரையும் கண்ணினனே காமனைக்
காய்தழல் கண்ணினனே
நாமமும் ஆயிரம் பெற்றவனே நான்முகன்
தன்னையும் பெற்றவனே
ஏமமும் என்தனக்கு ஆனவனே
ஏனமும் எய்சிலைக் கானவனே
தேம்மொழியாள் ஒரு பாலினனே சிறுவனுக்கு
அன்றுஅருள் பாலினனே.

உரை:

உன்னை விரும்புகின்றவர்களுக்கு அருள் செய்யக் கருதியவனே, மன்மதனை எரித்த நெற்றிக் கண்ணை உடையவனே, ஆயிரம் திருப் பெயர்களைப் பொருந்தியவனே, நான்கு முகங்களையுடைய பிரமனைப் படைத்தவனே, எனக்குப் பாதுகாப்பாக உள்ளவனே, தவநிலையில் அமர்ந்திருந்த அருச்சுனனைக் கொல்ல வந்த பன்றியின் மீது வில்லை வளைத்து அம்பு எய்தவனே, இனிய மொழி பேசும் உமாதேவியை ஒரு பக்கத்தில் கொண்டவனே, உபமன்னியு என்ற குழந்தை அருந்தப் பால் உதவியவனே.

விளக்கம்:

காமுறுதல் - விரும்புதல்; **காமன்** - மன்மதன்; **தழல்** - தீ; **ஏமம்** - காவல்; **ஏனம்** - காட்டுப் பன்றி; **எய்** - எய்த; **சிலை** - வில்; **கானவன்** - வேடன்; **தேம்** - தித்திப்பு; **மொழியாள்** - உமையம்மை; **ஒருபால்** - ஒரு பக்கம்; **உபமன்னியு** - புலிக்கால் முனிவருடைய மகன்.

மன்மதனை எரித்தது, பிரமனைப் படைத்தது, உமாதேவியை இடப் பக்கத்தில் கொண்டது, உபமன்னியுவுக்குப் பால் அருளியவை புராணக் கதைகள்.

காட்டுப் பன்றியின் மீது சிவன் வில்லை வளைத்து அம்பு எய்து கொன்றது பாரதக் கதை.

குறிப்பு:

பொறிபுலன் கடந்த விஷயங்களில் எது நடந்திருக்கலாம் எது நடந்திருக்க லாகாது என நிச்சயிக்கும் ஆற்றல் நமக்கில்லை. ஆதலால் ஏதொரு சம்பவத்திலும் முக்காலத்துக்கும் ஒவ்வும் உண்மை இருக்குமாயின் அதைக் கற்பனை என்று இனங் காண்பதில் அர்த்தமில்லை என்ற மேலோர் அபிப்பிராயம் தழுவப்பட வேண்டும். (31)

Koviloor Digital Library

சிவபெருமான் புகழ்

167. உன்னலன் வேள்வி யுடைத்தவனே
உற்றதுனாடை யுடைத்தவனே
கன்னியர் தங்களைக் காதலனே
காமுறுவாரையுங் காதலனே
பொன்னன மேனி பொறுத்தவனே
புன்மைய வென்பொய் பொறுத்தவனே
யென்னெனும் புன்மை யிலாதவனே
யானெனும் புன்மை யிலாதவனே.

உன்னலன் வேள்வி உடைத்தவனே
உற்றதுன்ஆடை உடைத்தவனே
கன்னியர் தங்களைக் காதலனே
காமுறுவாரையும் காதலனே
பொன் அ(ன்)ன மேனி பொறுத்தவனே
புன்மைய என்பொய் பொறுத்தவனே
என் எனும் புன்மை இலாதவனே
யான் எனும் புன்மை இலாதவனே.

உரை:

உன்னை எண்ணாத தக்கன், ஆடுகளைக் கொன்று செய்த யாகத்தை வீரபத்திரரை ஏவி அழித்தவனே, தையலிட்ட கந்தையை உடையாக ஏற்ற தவக் கோலத்தவனே, தமிழக மதுரை நகரில் வணிகர் குல மங்கையரின் கணவனாக இருந்தவனே, உன்னை விரும்பும் அடியவரிடம் அன்பு உள்ளவனே, தங்கம் போன்ற நிறமுடைய திருமேனியைப் பெற்றிருப்பவனே, அற்பனாகிய என் பொய்யுரையைப் பொறுத்தருளிக் குருவாக வந்தவனே, யான், எனது என்ற அகப்பற்றும் புறப்பற்றும் இல்லாதவனே.

விளக்கம்:

உன்னலன் - சிவபிரானை மதிக்காத தக்கன், பிரமனுடைய மகன். உடைத்தவன் - தகர்த்தவன்; துன் - துன்னிய, தைத்த; என் - எனது; காதலன் - கணவன், அன்புக்கு உரியவன்;

பொன் - தங்கம்; அன்ன - போன்ற; மேனி - உடல்; காமுறுவார் - விரும்புகிறவர்; புன்மை - இழிவு; புன்மைய - அற்பமான. (32)

Koviloor Digital Library

கந்தனை வணங்குவோம்

168. அனகனச்சுத னரனுருத்திரனழக
நட்டதிண்புய வீரன்
பனிவரைக்குநன் மகடனக்குளம்
பரிவுபட்டுடம் பருள்பாகன்
றினகரற்குமுன்பலை யிறுத்தவன்
சிரமறுத்துவனல ரோனைப்
புனிதனற்பு தன்புதல்வனற்பதம் புணர்
விருப்பொடும் புகழ்வாமே.

அனகன் அச்சுதன் அரன் உருத்திரன்
அழகன் அட்ட திண்புய வீரன்
பனிவரைக்கு நன்மகள் தனக்கு உளம்
பரிவுபட்டு உடம்பு அருள்பாகன்
தினகரற்குமுன் ப(ல்)லை இறுத்தவன்
சிரம் அறுத்தவன் அலரோனைப்
புனிதன் அற்புதன் புதல்வன்
நல்பதம்புணர் விருப்பொடும் புகழ்வாம் ஏ.

உரை:

பாவமில்லாதவனும், அழிவு இல்லாதவனுமாய், அரன் உருத்திரன் என்ற நாமங்களும் உள்ளவனாய், அழகனாய், வலிமை வாய்ந்த எட்டுத் தோள்களை உடையவனாய், இமயமலை அரசன் மகள் பார்வதிக்கு, தன் உடலிலே பாதியை அருளியவனாய் முன்பு, தக்கன் யாகத்தில் கலந்து கொண்ட ஓர் ஆதவனுடைய பற்களைத் தகர்த்தவனாய், பிரமனின் உச்சித் தலையைக் கொய்தவனாய், தூயவனாய், வியக்கும் செயல்களைப் புரிந்தவனாய்த் திகழும் சிவபிரான் புதல்வனாகிய கந்தக் கடவுளின் நல்ல திருவடிகளை அடையும் விருப்பத்துடன் துதிப்போம்.

விளக்கம்:

இந்தப் பாடலிலே விவரிக்கப்படும் நிகழ்ச்சிகள் புராணத் தொடர்புடையன. இவற்றின் விளக்கம் *கந்தபுராணம்* போன்ற புராணங்களில் உள்ளன.

ஏ – அசை. (33)

Koviloor Digital Library

அகத்தியன் அருளால் அழுக்குகளை அகற்றுவோம்

169. தமலமோகமுந் தவிரவே யருந்தவரு
மாதவன் முதலோரும்
விமலவீர சண்முக குகாசரண்
விடலைகாவெனுந் துதியாளுன
மமலனாதி சண்முகனதாள்
பணிந்தகில நீதியுமறிவான்வண்
கமலனான்முகன் மதலை மாதவன்
கருணையான் மலங்களைவாமே.

த(ம்)மல மோகமும் தவிரவே
அரும்தவரும் ஆதவன் முதலோரும்
விமலவீர சண்முக குகா சரண்விடலை
காஎனும் துதி ஆளும்
அமலன் ஆதிசண்முகனதாள்
பணிந்து அகில நீதியும் அறிவான்வண்
கமலநான்முகன் மதலை மாதவன்
கருணையால் மலம் களைவாம் ஏ.

உரை:

அருமையான தவம் புரிந்த ஆதவன் முதலானோர் தங்களுடைய ஆணவ மலத்தால் வரும் அறியாமை அகலும்வண்ணம் தூயவனே, ஆணவமலம் முதலான மலங்களின் வலிமையை ஒடுக்கும் ஆற்றல் வாய்ந்தவனே, ஆறுமுகங்களை உடையவனே, குகனே, வள்ளியை மணம் புரிந்தவனே, நீயே எங்களுக்குப் புகலிடம்; எங்களைக் காப்பாற்றுக என்று வணங்கிப் போற்றுவதை ஏற்றுக் கொள்ளும் தூயவனே, எல்லாப் பொருள்களுக்கும் முதல்வனே, ஆறுமுகனே, உன் திருவ்டி மலர்களை வணங்கி எல்லாப் பொருள்களையும் அறிந்து கொண்டவன் அகத்தியன். அந்த அகத்தியன் விஷ்ணுவின் தொப்பூழிலிருந்து தோன்றிய தாமரைப் பூவை இருக்கையாகக் கொண்ட நான்கு முகங்களையுடைய பிரமனின் மகன். அவன் அருளால் மாயை முதலான மலங்களைப் போக்குவோம்.

விளக்கம்:

இந்தப் பாடலில் உள்ள செய்திகள் *கந்தபுராணத்தில்* உள்ளன.

விடலை - மணவாளன்; கா - காப்பாற்று; மதலை - மகன். (34)

Koviloor Digital Library

நான்காவது

விசிட்ட காரண இயல்

கருமம், தவம் முதலானவை தரும் மேன்மையான பயன்களின் காரணங்களை விளக்கும் பகுதி என்பது இதன் பொருள்.

கந்தன் உரை

170. பிறப்பிலி பேதமில்லி
பேணுவார் தம்மையென்று
மறப்பிலி மலர்த்தாண் மன்னு
மனத்துறவுறவே வைத்துச்
சிறப்புறு தேசமாதி
செப்புவ முனிவ தேர்க
வறத்தினைப் புரிந்தார்க்காக
வரும்பய னதிகமாங்கும்.

பிறப்பு இலி பேதம் இல்லி
பேணுவார் தம்மை என்றும்
மறப்பு இலி மலர்த்தாள் மன்னும்
மனத்துறவு உறவே வைத்துச்
சிறப்பு உறு தேசம் ஆதி
செப்புவம் முனிவ தேர்க
அறத்தினைப் புரிந்தார்க்காக
வரும் பயன் அதிகம் ஆங்கும்.

உரை:

முனிவனே! தனக்கு ஒரு பிறவி இல்லாதவனும், உயிர்கள் அனைத்திலும் வேறுபாடு இல்லாமல் கலந்து இருப்பவனும், தன்னுடைய அடியாருக்கு அருள் புரிய மறவாதவனும் ஆகிய சிவபிரானுடைய மலர் போன்ற திருவடிகளை மனதில் நிலை நிறுத்தி, அறப்பலன் சிறப்பாக விளைதற்குரிய தேசம் முதலியவற்றை உனக்கு உரைப்போம்; கேட்டுத் தெளிக. சிவ ஆகமங்கள் உணர்த்தும் நெறியில் நின்று பிறருக்கு உதவுகின்றவர், இவ்வுலகில் அடையும் பலன் அதிகமாகுதல் போல, இறந்த பின்னர் வாழும் சுவர்க்க உலகிலும் அதிகமாகும்.

விளக்கம்:

அறம் - ஈகை; அறம் என்பது வறியவர்க்கு உதவுதல்;

Koviloor Digital Library

''ஈதல் அறம் தீவினை விட்டு ஈட்டல் பொருள்'' என்பது அவ்வையார் வாக்கு. *(தனிப்பாடல்)*

இலி - இல்லி, இல்லாதவன்; பேணுவார் - அடியவர்; தேர்க - அறிக; தேசம் - சிவன் கோயில்கள் உள்ள இடங்களைக் குறிக்கும். மன்னும் - நிலை பெறும்; மனத்துறவு - மனத்து உறவு, அன்பு; செப்புவம் - சொல்வோம்;

ஆங்கும் - சுவர்க்கத்திலும், ஆங்கும் அதிகம் என்றமையால் ஈங்கும் (இவ்வுலகிலும்) பலன் அதிகம் என்றாயிற்று. சிறப்புறு தேசம் - மூர்த்தி தல தீர்த்த விசேடம் வாய்ந்த இடம். (1)

அறத்தின் பயன்

171. சிறந்தநற் றேசந் தன்னிற் றேடருங் காலங்கூட
மறந்திடா விதியினாலே வாய்த்த வாதரவு கூர
வறந்தனை யறிந்த வாய்மைப் பாத்திரமாவா னங்கைச்
செறிந்திடச் செய்த வற்ப முலகிலும் பெருகுந் திண்ணம்.

சிறந்தநல் தேசம் தன்னில் தேட அரும் காலம் கூட
மறந்திடா விதியினாலே வாய்த்த ஆதரவு கூர
அறந்தனை அறிந்த வாய்மைப் பாத்திரம் ஆவான் அங்கைச்
செறிந்திடச் செய்த அற்பம் உலகிலும் பெருகும் திண்ணம்.

உரை:

மேலான தில்லைச் சிதம்பரம், திருவாரூர் போன்ற புண்ணியத் திருத்தலங்களில், சிறப்பான விசேட புண்ணிய காலம் வரும்போது, சிவ நெறிக்கு மாறு இல்லாமல் பொருந்திய அன்பு பெருக, சிவ ஆகம உண்மைகளை அறிந்த நல்ல பக்குவிக்குச் சிறிய அளவில் பொருள் உதவி செய்தாலும், அஃது உலகை விடப் பெரிய அளவிலான புண்ணியத்தை ஈந்தவருக்குத் தரும் என்பது நிச்சயமாகும்.

விளக்கம்:

வாய்மைப் பாத்திரம் - கொடையைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவர். செறிந்திடச் செய்த அற்பம் - தக்கவர் தம் கையிலே சேரும்படி செய்யப்பட்ட சிறு பொருள்; உலகிலும் பெருகும் - மிகப் பெரிய புண்ணியத்தை அளிக்கும்;

''கிள்ளியெடுக்கும் அளவுள்ளதாகிய ஆலமரத்தின் ஒரு விதை, வளருவதற்கு ஏற்ற நல்ல இடத்தில் வீழ்ந்தபோது முளைத்து எழுந்து பெருமரமாக வளர்ந்து அதிக கிளைகளை உடையதாய் நான்கு பக்கங்களிலும் நெருங்கிப் பரந்து, மிகுதியாக நிழலைத் தருவது போல, கொடையாக வழங்கும் பொருள் அளவில் சிறியதாக

Koviloor Digital Library

இருந்தாலும், கொடையைப் பெற்றுக் கொண்டவர் அதனைப் பெறுவதற்குத் தகுதி உள்ளவராக இருந்தால், அதுவே பெரும் புண்ணியமாக வளர்ந்து வானப் பரப்பளவினும் பெரும் பரப்புள்ளதாக விரியும்'' என்று *நாலடியார்* கூறுகின்றது.

''உறக்கும் துணையதோர் ஆலம் வித்து ஈண்டி
இறப்ப நிழல் பயந்தாங்கு - அறப்பயன்
தான்சிறிது ஆயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான் சிறிதாப் போர்த்து விடும்''

(நாலடியார் - 38)

''எள் அளவு பொன்னைச் சிவஞானிக்குக் கொடுத்தால், அதன் பயன் இம்மைக்குச் சித்தியும் போகமும் தரும். மறுமைக்கு முத்தியும் ஆக்கும்'' என்று திருமூலர் கூறுகிறார்.

''திலம் அத்தனை பொன் சிவஞானிக்கு ஈந்தால்
பலம் முத்தி சித்தி பரபோகமும் தரும்''

(திருமந்திரம் - 501)

''பாத்திரம் அறிந்து பிச்சை இடு; கோத்திரம் அறிந்து
பெண்ணைக் கொடு''

(பழமொழி)

''சிவபிரானுடைய தொண்டர்களுக்கு அளிக்கப்படாத பொருள்கள் மாரண வித்தைக்கும், பிசாசு வழிபாட்டிற்கும், விலைமாதருக்கும், வீண் வம்புக்கும், கொள்ளைக்காரர்களுக்கும், கள்ளுக்கும், அரசுடைமையாதற்கும், அவச் சாவுக்கும், திருடருக்கும் உரியவாம்; தீயினால் அழியவும் நேரும்'' என்கிறார் அவ்வையார்.

''நம்பன் அடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம் - வம்புக்காம்
கொள்ளைக்காம் கள்ளுக்காம் கோவுக்காம் சாவுக்காம்
கள்ளர்க்காம் தீக்காகும் காண்.''

(தனிப்பாடல் திரட்டு - 8)

குறிப்பு:

கோவுக்காம் - அரசுடைமை யாக்கப்படும் அதாவது அரசினாற் சுவீகரிக்கப் படும்.

சாவுக்காம் - வைத்திருப்பவன் அவச்சாவடையக் காரணமாய் விடும். திருடர், ஞாதிகள் முதலியோர் அவனைக் கொன்று கவர்ந்து கொள்வர். ஒருவருக்கும் உதவாத உலோபியின் பொருள் ஏதானுமொரு விதத்தில் அரசினாற் சுவீகரிக்கப் பட்டுப் போம் என்க. (2)

Koviloor Digital Library

அறம் செய்த உத்தமர் பெறும் பேறு

172. ஓங்கிய வதனைச் செய்த
வுத்தமர் சிவலோகத்துட்
டாங்கியே போக பேதம்
பிரளய சமயந் தன்னி
னீங்கரும் பொருளைக் கண்டு
நிறையுற வொருமை நேரத்
தூங்குவரின்பந் தோன்றத்
துகண்மலஞ் சோருமன்றே.

ஓங்கிய அதனைச் செய்த
உத்தமர் சிவலோகத்துள்
தாங்கியே போக பேதம்
பிரளய சமயம் தன்னில்
நீங்க அரும் பொருளைக் கண்டு
நிறை உற ஒருமை நேரத்
தூங்குவர் இன்பம் தோன்றத்
துகள் மலம் சோரும் அன்றே.

உரை:

சிறந்த பயனை அளிக்கும் சிறு பொருளைச் சிவ ஆகமப் பொருள் உணர்ந்த தக்கவருக்கு வழங்கிய பெரியார், சிவ உலகை அடைந்து அங்குள்ள இன்பங்களை நுகர்ந்த பின்னர், உலக முடிவு நாளில் குற்றமுடைய மலத்தைப் போக்கித் தம் நெஞ்சை விட்டு நீங்காத சிவஒளியைக் கண்டு, ஒருமுகப்பட்ட மனத்தோடு அச் சிவத்தோடு கலந்து ஒன்றியிருப்பர்.

விளக்கம்:

ஓங்கிய - உயர்ந்த; பிரளய சமயம் - உலக முடிவு நாள்; தாங்கி - தங்கி; நீங்க அரும் பொருள் - நெஞ்சிலிருந்து அகலாத சிவம்; ஒருமை நேர - மன ஒருமையோடு; நிறைவுற - முழுமையாக; தூங்குவர் - சிவத்தோடு கலந்திருத்தல்; இது ஓர் உயர்ந்த நிலை; சிவ இன்பாநுபவத்தில் ஒன்றி அயர்ந்திருத்தல் தூங்குதலாகும்.

''அகங்காரம் அச்சம் அகற்றி அறிவினொடு
தூங்காமல் தூங்கிச் சுகம் பெற்றாய் நெஞ்சமே''

என்று பட்டினத்து அடிகள் தம் நெஞ்சை நோக்கிக் கூறுவது கவனிக்கத் தக்கது.

''ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவ தெக்காலம்''

Koviloor Digital Library

என தாயுமானவர் கூறுவதுங் காண்க.

சோரும் - தளரும்; அன்றே - அசை, இதற்குப் பொருள் இல்லை. (3)

ஈகைப் பலன் நிலைக்குங் கால வரையறை

173. கருமிகட்கீகை நிற்குங் கலந்தொரு பிறப்பிற் கற்ற
பெரியராந் தவத்தோர்க்கீகை பிறப்பொரு நூறு நிற்கும்
அரிய மந்திரத்தார்க் கீகை யாயிரம் பிறப்பு நிற்கு
முரிய யோகிக்கு ஞானிக் கூழிபேருழி நிற்கும்.

கருமிகட்கு ஈகை நிற்கும் கலந்து ஒரு பிறப்பில் கற்ற
பெரியராம் தவத்தோர்க்கு ஈகை பிறப்பு ஒரு நூறுநிற்கும்
அரிய மந்திரத்தார்க்கு ஈகை ஆயிரம் பிறப்பு நிற்கும்
உரிய யோகிக்கு ஞானிக்கு ஊழிபேர் ஊழி நிற்கும்.

உரை:

வள்ளல் ஒருவர் சிவசம்பந்தம் உள்ள கிரியையாளருக்கு ஒன்றை உதவினால், அவர் தாம் வாழ்நாள் வரை தம்முடைய ஈகையால் உண்டான புண்ணியப் பயனைப் பெறுவார். அவர் சைவ விரத ஒழுக்கங்கள் தவறாத அடியவருக்கு உதவினால், தம்முடைய நூறு பிறவிகள் வரை, அந்த ஈகையின் பயனை அடைவார். (இங்கு நூறு பிறவி என்பதை நூறு பங்கு எனக் கொள்க), தாம் தம்முடைய ஆசானிடம் உபதேசமாகப் பெற்ற திருஐந்தெழுத்தை விதிப்படி உரு ஏற்றிவரும் மந்திர யோகிக்கு ஒன்றை அளித்தால், அந்த ஈகையின் பயனைத் தம்முடைய ஆயிரம் பிறவிகள் வரை அனுபவிப்பார். (இங்கு ஆயிரம் பிறவி என்பதை ஆயிரம் மடங்கு எனக் கொள்க); தக்க சிவயோகிக்கு ஒன்றை உதவினால், உதவியவருக்கு ஓர் ஊழி காலம் வரை அந்த ஈகையின் பயன் உதவும். ஒரு சிவஞானிக்கு ஒன்றை அளித்தால், அளித்த வருக்குப் பேருழி வரை அந்த ஈகையினால் உண்டான புண்ணியப் பயன் உதவும்.

விளக்கம்:

ஊழி - பிரமகற்பம்; பேருழி - மஹாசங்காரம்; கிரியையாளரை விட, சிவ விரதங்களை மேற்கொள்கிற தவசீலர் உயர்ந்தவர்; தவசீலரைவிட, மந்திரயோகி உயர்ந்தவர்; மந்திரயோகியை விட, சிவயோகி சிறந்தவர்; சிவயோகியைவிடச் சிவஞானி மேலானவர் என்பதை இப்பாடல் வகைப்படுத்திக் கூறுகின்றது.

கருமிகள் - கன்ம யாகஞ் செய்வோர்; தவத்தோர் - தவ யாகஞ் செய்வோர்; மந்திரத்தார் - செப யாகஞ் செய்வோர்; யோகி - தியான யாகஞ் செய்பவர்; ஞானி - ஞான யாகஞ் செய்பவர் என ஐவகை யாகத்துக்கும் பொருந்தக் காண்க. (4)

Koviloor Digital Library

காரண சூழ்நிலைகள் பொருந்தத் தானஞ் செய்தாற் பலனதிகம்

174. திருவெலை யெழுவாயான காரணஞ்
சிறக்க வீகை
யெரியினை யோம் பலீசற்
காலய மியற்ற லென்றும்
பரிவுறப்பூசை பண்ண லெனுமிவை
நான்கும் பாங்கார்
தருமமே யிவற்றால் வேண்டும்
பலமெலாம் தழைத்துச் சாரும்.

திருஎ(ல்)லை எழுவாய் ஆன
காரணம் சிறக்க ஈகை
எரியினை ஓம்பல் ஈசற்கு ஆலயம்
இயற்றல் என்றும்
பரிவு உறப்பூசை பண்ணல் எ(ன்)னும்
இவை நான்கும் பாங்கு ஆர்
தருமமே இவற்றால் வேண்டும் பலம்
எ(ல்)லாம் தழைத்துச் சாரும்.

உரை:

புண்ணியத் தலங்கள் முதல் ஈகை நிகழ வேண்டிய காலம், ஈகையில் ஆர்வம், ஏற்போர் தகுதி ஆகிய காரணங்கள் ஒழுங்காக அமையத் தேவையான பொருள் வழங்குதல், சிவ வேள்வி செய்தல், கோயில் அமைத்தல், பூசனை செய்தல் ஆகிய நான்கு வகை அறங்களையும் செய்கிறவர், அவர் விரும்பிய அனைத்தும் பெற்றுச் சிவனருளால் வளமாக வாழ்வார்.

விளக்கம்:

எழுவாய் - முதல்; எரியினை ஓம்பல் - சிவ வேள்வி; தருமம் - அறம்; பாங்கு ஆர் - ஒழுங்கான; ஈசற்கு - சிவனுக்கு; பலம் - பயன்; தழைத்துச் சாரும் - செழிப்பாகப் பொருந்தும். (5)

தகுதி உடையவர்க்களிக்குந் தானமே சிவப் பேறு தரும்

175. பாத்திரமாவான் பாவப் படுகடற்
பட்டார் தம்மைத்
தீர்த்தம லேசன் வாழும்
புரமெனும் தீரஞ் சேர்ப்பான்

Koviloor Digital Library

கூர்த்த மெய்ஞ்ஞான மென்னுங்
கரத்தினைக் கொடுத்தே மற்றார்
தீர்த்திட வல்லார் கைதா
னில்லவர்க் குண்டோ செய்கை?

பாத்திரம் ஆவான் பாவப்படுகடல்
பட்டார் தம்மைத்
தீர்த்து அமல ஈசன் வாழும்
புரம் எனும் தீரம் சேர்ப்பான்
கூர்த்த மெய்ஞ்ஞானம் என்னும்
கரத்தினைக் கொடுத்தே மற்றுஆர்
தீர்த்திட வல்லார் கைதான்
இல்லவர்க்கு உண்டோ செய்கை?

உரை:

சிவபெருமானுடைய அருள் பெற்ற அருளாளர்களே ஏற்பதற்காந் தகுதி உள்ளார். அவர்களே தாம் பெற்ற மெய்யறிவின் கூர்மையால், அறியாமையாகிற கடலில் அழுந்தியிருப்பவர்களின் அறியாமையைப் போக்கித் தூய சிவன் வாழும் சிவபுரியை அவர்கள் அடையக் கை கொடுத்துதவுவார். அந்த அருளாளரைத் தவிர, அறியாமையில் மூழ்கிக் கிடப்பவர்களுக்குத் தம் அறிவாகிய கையைக் கொடுத்து உதவுகின்றவர் வேறு யாராவது உள்ளனரா? அறிவாகிய கை இல்லாதவர் பிறருக்கு எவ்வாறு உதவ முடியும்?

விளக்கம்:

பாத்திரம் ஆவான் - தகுதி உள்ளவன்; சற்பாத்திரன். தீரம் - கரை;

பாத்திரம் - ஆகம அறிவு இல்லாதவருக்கு ஆகம அறிவை உணர்த்தி, அவர்கள் மெய்யறிவு பெற உதவுகின்ற அருளாளர். (6)

ஞானியாகிய ஏற்பவரே கரையேற்றுவார்

176. அலைபுன லதனுளாழ்ந்த சிலை
மரப் புணையாலன்றிச்
சிலையினாற்றீரந்தன்னைச் சேர்வதூ
மில்லை தேரிற்
றொலைவிலாப் பாவப் பௌவச்
சுழியிடைச் சுழல்வார் தம்மை
நிலைமையாரன்றித் தீயார் நீக்கி
வான்கரையி லீட்டார்.

Koviloor Digital Library

அலைபுனல் அதனுள் ஆழ்ந்த சிலை
மரப் புணையால் அன்றிச்
சிலையினால் தீரம் தன்னைச்
சேர்வதும் இல்லை தேரில்
தொலைவு இலாப் பாவப் பௌவச்
சுழி இடைச் சுழல்வார் தம்மை
நிலைமையார் அன்றித் தீயார் நீக்கி
வான்கரையில் ஈட்டார்.

உரை:

அலைகள் பரவிநிற்கும் நீர் நிலையில் அமிழ்ந்துள்ள உருவச் சிலை, கல்லாலான தெப்பத்தினாற் கரையைச் சேருவது இயலாது. அந்த உருவச் சிலையை ஒருவர் நீரில் மிதக்கும் மரத் தெப்பத்தின் மீது தூக்கி வைத்து அதனைக் கரையை நோக்கிச் செலுத்தினால், உருவச் சிலை, கரையை அடைதல் கூடும். இவ்வாறே அறியாமையாகிய கடலில் அழுந்தியிருப்பவர் அறியாமையுள்ளோராகிய ஏற்ப வரால் சுவர்க்கம் என்ற கரையைச் சேருவது இயலாது. ஏற்பவர் சிவ ஆகம உண்மை களை அறிந்த சிவஞானி மட்டும் அவரைப் பக்குவப்படுத்தி, சுவர்க்கம் என்ற கரையின்மீது ஏற்றி விடுவார்.

விளக்கம்:

அலைபுனல் - அலைகளையுடைய நீர்நிலை; புணை - மிதவை, தெப்பம்; தீரம் - கரை; தேரில் - ஆராய்ந்தால்; தொலைவுஇலா - விலகாத; பௌவம் - கடல்; சுழி - நீர்ச்சுழல்; வான் - உயர்ந்த; ஈட்டார் - கரையேற்ற மாட்டார்.

குறிப்பு:

இது பல விசிட்ட காரணவியல் பெயருக்கேற்ப இது தானபலன் விசிட்ட மாவதற்கேற்ற இடம், காலம், பாத்திரம் முதலியவற்றைப் பற்றிக் கூறுவதே இவ் வியலின் பண்பு. அதற்கமைய முன் செய்யுளும் இச் செய்யுளும் ஏற்பவர் ஞானியா யிருந்தால் பலன் விசிட்டம் என்பதையே கூறுகின்றன. (7)

பாத்திரப் பொருள் விளக்கம்

177. பாவெனும் பதத்தி னர்த்தம்
பாவமென் கடலிற் பட்டார்
தேவனற் பதமென்
றீரத்திருத்துவான் றிரத்தினர்த்தம்
பாவமென் கடற்பட்டாரைப்
பரமர்தம் பதமென்பாரத்
தேவியே யிருத்து வானே
பாத்திர மென்னப்பட்டான்.

Koviloor Digital Library

பாஎ(ன்)னும் பதத்தின் அர்த்தம்
பாவம் என்கடலில் பட்டார்
தேவன் நல்பதம் என் தீரத்து
இருத்துவான் திரத்தின் அர்த்தம்
பாவம் என் கடல் பட்டாரைப்
பரமர்தம் பதம் என் பாரத்து
ஏவியே இருத்துவானே
பாத்திரம் என்னப்பட்டான்.

உரை:

பா என்றால் பாவக் கடலில் அமிழ்ந்திருப்பவர் என்று பொருள். தீரம் என்ற சொல் திரம் என வந்தது. சிவபிரானுடைய திருவடிகளாகிய கரையை அடைந்து தங்குவது என்பது இதன் பொருள். இங்ஙனம் பாவம் என்கிற கடலில் அமிழ்ந்து கிடப்பவரை, மேலான சிவபிரானுடைய நல்ல திருவடி மலர்களாகிய கரையை அடையுமாறு செலுத்துகின்றவரைப் பாத்திரம் என்ற சொல் குறிப்பிடுகிறது.

விளக்கம்:

பா - இது ஓர் எழுத்து ஒரு மொழி; அர்த்தம் - பொருள், பாதி; என் - என்பது; தேவன் - இது இங்குச் சிவனைக் குறிப்பிடுகிறது. பட்டார் - விழுந்தவர்; பரமர் - மேலான சிவபிரான்; பதம் - திருவடி; பாரத்து - பரத்து என்பது பாரத்து என வந்தது. மேலான் என்பது பொருள். தீரம் - கரை; ஏவி - செலுத்தி; இருத்துதல் - நிலைபெறச் செய்தல்; பாத்திரம் - தகுதியுள்ளவர்; என்னப்பட்டான் - என்று சொல்வதற்கு உரியவன். (8)

சிவயோகிக்கு உணவு அளிப்பது சிவபுண்ணியம்

178. அருமறையாய்ந்த கோடியந்தணர்க் கருத்த வாய்த்த
தருமமுஞ் சிறிதே யென்னத் தழைத்திடுந் தம்மை யோர்ந்த
வொருமைய யோகர் தங்கை யுதவிய பிச்சை யுள்ளூன்
பிரியவே பெறுவரின்பம் பிச்சையைப் பெறுவித்தாரே.

அருமறை ஆய்ந்து கோடி அந்தணர்க்கு அருத்த வாய்த்த
தருமமும் சிறிதே என்னத் தழைத்திடும் தம்மை ஓர்ந்த
ஒருமைய யோகர் தம்கை உதவிய பிச்சை யுள்ளூன்
பிரியவே பெறுவர் இன்பம் பிச்சையைப் பெறுவித்தார் ஏ.

உரை:

தம் நெஞ்சின் உள்ளே சிவ ஒளியைக் கண்டு தெளிந்த, மன ஒருமை வாய்ந்த சிவயோகி ஒருவருக்கு, ஒருவர் அளித்த உணவு, படித்தறிதற்கரிய இருக்கு,

Koviloor Digital Library

யசுர், சாமம், அதர்வணம் என்ற வேதங்களை ஆராய்ந்த ஒரு கோடி பிராமணர்களுக்கு அளித்த உணவின் பயனைவிட மிகுதியான சிவபுண்ணியத்தைத் தரும். அதன் காரணமாக உணவு அளித்தவர், தம்மைப் பற்றியிருந்த ஆணவம் முதலான அழுக்குகளில் இருந்து விடுபட்டு முத்தி இன்பம் பெறுவார்.

விளக்கம்:

சிவனடியாருக்கு உணவு அளிப்பது பெரும் சிவபுண்ணியம் ஆகும். ''பிராமணர் கோடி பேர் உண்பதால் கிடைக்கும் புண்ணியத்தை விட, திருநீற்றை நிறையைப் பூசுகின்ற சிவனடியார் ஒருவருக்கு உணவு அளிக்க வேண்டும் என்று எண்ணுவது மிகுந்த புண்ணியத்தை அளிக்கும்'' என்று திருமூலர் கூறுகிறார்.

''ஆறிடும் வேள்வி அருமறை நூலவர்
கூறிடும் அந்தணர் கோடி பேர் உண்பதில்
நீறு இடும் தொண்டர் நினைவின் பயனிலை
பேறு எனில் ஓர் பிடி வேறு அது ஆகுமே.'' *(திருமந்திரம்)*

அந்தணர் - இது பிராமணர்களைக் குறிக்கிறது. ஒருமையோகர் - சிவ யோகி. (9)

சிவயோகி உண்பது சிவன் உண்பது ஆகும்

179. அருத்துக வமலன் றன்னை
யகத்துணர்ந் தவரையன்னங்
கருத்திருந்தவர்க்குச் செய்த பூசனை
கடவுள் கொள்வ
னொருத்தனுக் குபசாரங்க ளுடலிடை
யுலகர் செய்வர்
பிரித்துட லுயிரைப் பேணும்
பெற்றியை யாரே பெற்றார்.

அருத்துக அமலன் தன்னை
அகத்து உணர்ந்தவரை அன்னம்
கருத்து இருந்து அவர்க்குச் செய்த
பூசனை கடவுள் கொள்வன்
ஒருத்தனுக்கு உபசாரங்கள் உடலிடை
உலகர் செய்வர்
பிரித்து உடல் உயிரைப் பேணும்
பெற்றியை யாரே பெற்றார்?

உரை:

உலக நடை முறையில் ஒருவர் தம்மைவிட மேம்பட்டவரை வரவேற்று,

Koviloor Digital Library

அவர் உடல் மீது பன்னீர் தெளித்து, சந்தனம் பூசி, மாலை அணிவித்து அவர் உடலுக்கு மரியாதை செய்கிறபோது, அந்த உடலுக்கு உரிய நெஞ்சம் குளிர்கின்றது. அந்த உடலுக்குச் செய்த மரியாதை, அவருடைய ஆன்மாவாகிய உயிருக்குச் செய்த மரியாதையாக மாறிவிடுகின்றது. இவ்வாறே, தம் உள்ளத்தில் சிவபிரானுடைய திரு அருளாகிய உள் ஒளியைக் கண்டு தெளிந்த யோகியின் உள்ளம் சிவபிரானுக்கு உரிய இருக்கையாக ஆகிவிடுகின்றது. ஆகவே, ஒரு சிவயோகிக்கு ஒரு சிவனடியார் அளித்த உணவைச் சிவபிரான் தனக்கு அளிக்கப்பட்ட படையலாக ஏற்று, உணவு அளித்தவருக்கு அருள் செய்வான். ஏன்? சிவனுக்கு நேரே செய்தல் பொருந்தாதோ எனில் உடலை விட்டு உயிரைப் பிரித்து வைத்து உபசரிக்குந் தகுதி யாருக்குத் தான் இருக்க முடியும்?

விளக்கம்:

சிவயோகிக்குச் செய்த பூசனை கடவுள் கொள்வான் - சிவயோகிக்குச் செய்கிற வழிபாடு சிவபிரானுக்குச் செய்கின்ற வழிபாடாகும்.

''தீமையில்லாத சிந்தனையும் தவமும் உடைய செல்வர்கள், தாம் மகிழ்ச்சியோடு உண்டது, மூன்று புவனங்களும் உண்டது ஆகும். அவர்கள் ஏற்றுக் கொண்டது மூன்று புவனங்களும் ஏற்றுக் கொண்டது ஆகும் என்று எட்டுத் திசைகளுக்கும் தலைவனான நந்தி எடுத்துக் கூறினான்'' (நந்தி - சிவபிரான்) என்று திருமூலர் கூறுகிறார்.

''தண்டு அறுசிந்தைத் தபோதனர் தாம் மகிழ்ந்து
உண்டது மூன்று புவனமும் உண்டது
கொண்டது மூன்று புவனமும் கொண்டது என்று
எண்திசை நந்தி எடுத்து உரைத்தானே.''

(திருமந்திரம் - 1858)

''திருத்தமாகிய சிவவேடமுள்ள சிவனடியார் அருந்திய உணவு பிரமன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரும் அருந்திய தன்மை உடையது ஆகும். சித்தம் தெளிந்த அந்த அடியவர் அருந்திய மிச்சத்தை உண்டால், முத்தி உண்டாகும் என்பது நம்மூலன் மொழிந்த உண்மை ஆகும்'' (மூலன் - சிவன்) என்பது திருமூலரின் *அருள்மொழி.*

''வித்தகம் ஆகிய வேடத்தர் உண்ட ஊண்
அத்தன் அயன் மால் அருந்திய வண்ணமாம்
சித்தம் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியாம் என்று நம் மூலன் மொழிந்ததே.''

(திருமந்திரம் - 1866)

(சேடம் - உண்ட மிச்சம்)

அருத்துக - உணவு உண்ணச் செய்க; **அகத்து** - உள்ளத்தில்; **பூசனை** - வழிபாடு; **பெற்றி** - தன்மை.

Koviloor Digital Library

அவரே, 'நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாகுங் கோயிற் பகவர்க்கஃ தாமே'

என்றதுங் காண்க. நம்பர் - சிவனடியார்; பகவர் சிவபெருமான். (10)

பிதிர்க் கடன் புரியும் நாளில் அவர்க்கூட்டுதலின் பலன்

180. விடுத்துல கமலன்றன்னை விரும்பிய
விதுலர்க் கன்னங்
கொடுத்தவ ரன்பு கூரப்
பிதிர்க்களைக் குறித்த நாளி
னெடுத்தெழு மூன்று சுற்றங் கீழ்க்
கிடந் திளையா தென்று
நடத்தொழி னம்ப னாட்டி
லிருத்தியே யிருப்பர் நம்பால்.

விடுத்துலகு அமலன் தன்னை
விரும்பிய விதுலர்க்கு அன்னம்
கொடுத்து அவர் அன்பு கூரப்
பிதிர்க்களைக் குறித்த நாளில்
எடுத்து எழு மூன்று சுற்றம்
கீழ்க் கிடந்து இளையாது என்றும்
நடத் தொழில் நம்பன் நாட்டில்
இருத்தியே இருப்பர் நம்பால்.

உரை:

இறந்து போன தம் முன்னோருக்காகத் திவசஞ் செய்யும் நாளில், உலகப் பற்றை நீக்கிய ஒப்பில்லாத சிவயோகிக்கு அன்போடு உணவு அளித்து அவரை உண்ணச் செய்க. அவ்வாறு சிவயோகியை உண்பித்தவர், தம்முடைய இருபத்தொரு தலைமுறைகளைச் சேர்ந்த உறவினர்கள் நரகத்தில் அழுந்தாமல் காப்பாற்றி, அவர்களைத் திருக்கூத்து ஆடும் சிவபிரான் உலகை அடையச் செய்வார்; தாமும் சிவபிரான் அருகிலேயிருப்பார்.

விளக்கம்:

விடுத்துலகு - உலகு விடுத்து, உலக ஆசையை நீக்கி; **சுற்றம்** - உறவு; **விதுலர்** - தனக்கு ஒருவர் ஒப்பு இல்லாத சிவயோகி; **பிதிர்க்களைக் குறித்தநாள்** - இறந்து போன தம் முன்னோருக்காக ஆண்டு தோறும் செய்கிற சடங்கு, சிராத்தம்.

Koviloor Digital Library

எழுமூன்று - இருபத்து ஒன்று, இருபத்தொரு தலைமுறை; நடத்தொழில் - நடனத்தொழில், கூத்து; நம்பன் - சிவபிரான்; நம்பால் - நம்பர்பால், சிவபிரான் அருகில். (11)

சிவயோகி உண்ட உணவின் சிறப்பு

181. தம்மனையடைந்த யோகர் தமதடி பணிந்து தாமு
மெம்மையே யாளுமீச னிவரெனவிட்டபிச்சை
வெம்மைய நரகந் தன்னில் வீழ்ந்ததங் குலத்தைமீட்டு
மெய்ம்மையே சிவலோகத்து ளிருத்திடும் வியப்பென் வேறே.

தம்மனை அடைந்த யோகர் தமது அடி பணிந்து தாமும்
எம்மையே ஆளும் ஈசன் இவர்என இட்ட பிச்சை
வெம்மைய நரகம் தன்னில் வீழ்ந்ததம் குலத்தை மீட்டு
மெய்ம்மையே சிவலோகத்துள் இருத்திடும் வியப்பு என் வேறு ஏ.

உரை:

ஒருவர் தம் இல்லத்துக்கு எழுந்தருளிய சிவயோகியாரை முக மலர்ச்சியோடு கை கூப்பி வரவேற்று, அவருடைய திருவடிகளை வணங்கி, தமக்கு அருள் செய்ய வந்த சிவபெருமானாகவே அவரைக் கருதி, மிகப் பணிவோடு அவருக்கு ஆறுசுவை உணவு படைத்து உண்ணும்படி செய்ய வேண்டும். இவ்வாறு ஒரு சிவனடியாரை உண்பித்ததால் உண்டான புண்ணியப் பயன், உணவு அளித்தவரின் குலத்தினரான அவர் முன்னோரை நரகப் பள்ளத்திலிருந்து கரையேற்றி, அவர்கள் சிவபுரத்தில் தங்கியிருக்குமாறு செய்யும் என்பது உண்மை. இத்தகு வியப்பு வேறென்!

விளக்கம்:

மனை - வீடு; எம்மையே ஆளும் - எமக்கு அருள் செய்யும்; பிச்சை - உணவு; வெம்மைய - எரிகிற; குலம் - வமிசம்; மெய்ம்மை - உண்மை; இருத்திடும் - தங்கும்படி செய்யும்; என் - என்ன; ஏ - அசை. (12)

இல் வாழ்வார்க்குத் தொழிலினாற் பாவம் வருமாறும் அது தீருமாறும்

182. உலகினிற் பாவபே தமுண்டுழ வாதி யைந்தா
லலகிடன் முதலைந்தாலு மவ்வினை யறு மெம்மாதிக்
கிலகிய வெரிக்கு நூலை யிசைத்தருள் குரவர்க்கென்று
நிலைமைய தவர்க்குப் பூசை நித்தலு நிகழ்த்து வார்க்கே.

Koviloor Digital Library

உலகினில் பாவபேதம் உண்டு உழவுஆதி ஐந்தால்
அலகு இடல்முதல் ஐந்தாலும் அவ்வினை அறும் எம் ஆதிக்கு
இலகிய எரிக்கு நூலை இசைத்து அருள் குரவர்க்கு என்று
நிலைமைய தவர்க்குப் பூசை நித்தலும் நிகழ்த்துவார்க்கே.

உரை:

புறத்தில் மக்கள் வேளாண்மைத் தொழிலைச் செய்யும்போது கலப்பையால் நிலத்தை உழுகிறார்கள். அதனால் மண்புழு, எறும்பு முதலிய சிறு உயிர்கள் இறக்கின்றன. இங்ஙனம் ஐவகைத் தொழிலாற் பாவம் நேர்கின்றது. அகத்தில் மகளிர் துடைப்பத்தால் வீட்டைப் பெருக்கித் துப்புரவு செய்யும் போது வீட்டில் ஊர்ந்து திரியும் எறும்பு, மூட்டைப் பூச்சி போன்றவையும், மருந்து தெளிக்கும்போது கொசு, சிலந்திப்பூச்சி, கரப்பான்பூச்சி போன்றவையும் சாகின்றன. இங்ஙனம் அங்கும் ஐவகைத் தொழிற் பாவம் உண்டாகிறது. சிவபிரானை வணங்குதல், தீ வளர்த்துச் சிவ வேள்வி செய்தல், சிவ ஆகம நூலைக் கற்பிக்கும் ஆசானையும், சிவ சமயத் துறவியையும் தினமும் வழிபாடு செய்து அவர்களுக்கு வேண்டுவன உதவுதல் போன்ற புண்ணியச் செயல்களால் சிறு உயிர்களைச் சாகப் பண்ணுதலாம் பாவத்தை இல்லறத்தார் போக்கிக் கொள்ளலாம். (13)

சிவயோகி முதலியோரை உண்பித்து மிகுந்ததை உண்ணுக

183. அட்டவை தன்னைச் சொன்ன
நால்வரு மருந்தவன்பா
லிட்டுமிக் கதனையுண்கை யமிர்த
மீயாதே உண்கை
கட்டமுங் கடுவுமாவி
கழிந்தவூன் காயந்தானு
மொட்டியே யுடலிற் றோன்றும்
புழுவுமென் றொழிக வோர்ந்தே.

அட்டவை தன்னைச் சொன்ன
நால்வரும் அருந்த அன்பால்
இட்டு மிக்கதனை உண்கை
அமிர்தம் ஈயாதே உண்கை
கட்டமும் கடுவும் ஆவி
கழிந்த ஊன்காயம் தானும்
ஒட்டியே உடலில் தோன்றும் புழுவும்
என்று ஒழிக ஓர்ந்து ஏ.

Koviloor Digital Library

உரை:

ஒருவர் தமக்குச் சமைத்த உணவைத் தாமே தனித்து உண்ணாமல் சிவபிரான், சிவ ஆகம நூல் கற்பிக்கும் ஆசிரியன், சிவயோகி, சைவத் துறவி ஆகிய நால்வரும் முதலில் உண்ணுமாறு படைத்து, அவர்கள் உண்டு மிஞ்சியதை உண்பது சாவா மருந்தை உண்பது ஆகும். இந்த நால்வருக்கும் முதலில் உணவு படைக்காமல் உண்ணப்படுகின்ற உணவு மலம், நஞ்சு, உயிர் நீங்கிய உடல், உடற் புண்ணில் உண்டாகும் புழு ஆகியவற்றுக்கு ஒப்பாகும் என்று உணர்ந்து, அவர்களுக்கு இடாமல் உண்பதைத் தவிர்க.

விளக்கம்:

அட்டவை - சமைத்தவை; இட்டு - படைத்து; உண்கை - உண்ணுதல், மிக்கதனை - உண்டு மிஞ்சியதை; அமிர்தம் - இறவாமை செய்யும் மருந்து; கட்டம் - மலம்; கடு - நஞ்சு;

ஆவி கழிந்த - உயிர் நீங்கிய; ஊன்காயம் - தசையோடு சேர்ந்த உடல்; ஒட்டி - பொருந்தி; ஓர்ந்து - உணர்ந்து; ஒழிக - தவிர்க; ஏ - அசை. (14)

முன் செய்யுளில் உழவு முதலைந்தும் அலகிடல் முதலைந்தும் என்றவை இவையெனல்

184. தலத்துழல் கூலிவேலை சந்தையிற் கொண்டு விற்கை
குலைத்த சொற் கூட்டுங் கோபஞ் சத்தியங் கூறலுள்ளு
மலக்கிடன் மெழுக லங்கி யாக்கனீ ரரிசி யென்றே
விலக்கியத் தியம்பும் பத்துந் தமக்கெனிற் பாவமீட்டும்.

தலத்து உழல் கூலிவேலை சந்தையில் கொண்டு விற்கை
குலைத்த சொல் கூட்டும் கோபம் சத்தியம் கூறல் உள்ளும்
அலக்கு இடல் மெழுகல் அங்கி ஆக்கல் நீர் அரிசி என்றே
விலக்கி அத்து இயம்பும் பத்தும் தமக்கு எனில் பாவம் ஈட்டும்.

உரை:

நிலத்தை உழுதலும் ஊதியம் பெற்றுக்கொண்டு, பெற்ற ஊதியத்திற்குத் தகுந்த அளவில் செய்தலும், நாய் குரைப்பது போலப் பிறர் மனம் புண்படப் பேசுதலும், பிறர் மீது கோபம் கொள்ளுதலும், நடந்த ஒன்றை நடந்தபடியே கூறுதலும், இல்லத்தைத் துடைப்பத்தால் பெருக்கித் துப்புரவு செய்தலும், சாணத்தை நீரில் குழைத்துத் தரையில் பூசுதலும், உணவு சமைக்க நெருப்பு மூட்டுதலும், குளத்திலிருந்தோ கிணற்றிலிருந்தோ நீர் கொண்டு வருதலும், அரிசி குற்றுதலும் ஆகிய பத்து வேலைகளையும் தமக்கு என்று செய்யும்போது பாவம் உண்டாகும்.

Koviloor Digital Library

விளக்கம்:

சந்தை - பல கடைகளில் பலவகைப் பொருள்கள் விற்கும் இடம்; கூலி - சம்பளம்; கட்டணம், ஊதியம்; குலைத்த - குரைத்த என்பது, குலைத்த என வந்தது; அங்கி - தீ; அலக்கிடல் - அலகிடல், துடைப்பத்தால் வீட்டைப் பெருக்குதல்; மெழுகல் - சாணத்தை நீரில் கரைத்துத் தரையில் பூசுதல்; இயம்பும் - சொல்லிய. (15)

பாவம் அகலும் வழி

185. தேசுறு சிவாதிபூசைக் கெனவிவை
தன்னைச் செய்யி
னாசமாம் பாவபேதந் தம்மையே
நாடிச் செய்யிற்
பாசமாய் நரக பேதப்
படுகுழிப் படுத்தி யென்று
மூசல் போ லுழல்வித் தாக்குந்
துயரினுக் களவு முண்டோ?

தேசுஉறு சிவஆதி பூசைக்கு என
இவை தன்னைச் செய்யில்
நாசம் ஆம் பாவபேதம்
தம்மையே நாடிச் செய்யில்
பாசமாய் நரக பேதப்
படுகுழிப் படுத்தி என்றும்
ஊசல் போல் உழல்வித்து ஆக்கும்
துயரினுக்கு அளவும் உண்டோ?

உரை:

முன்னர்ச் சொல்லிய பத்துச் செயல்களையும் சிவபெருமான், சிவாகம ஆசான், சிவயோகி, சைவத்துறவி அல்லது சிவஞானி ஆகிய நால்வரின் வழிபாடுகளின் பொருட்டுச் செய்தால், அவற்றால் உண்டாகும் பாவங்கள் அச் செயல்களைச் செய்தவர்களைச் சாரா. இவ்வாறு செய்யாமல் தம் நலம் கருதி அத் தொழில்களைச் செய்தால், கருமம், பற்று முதலான பாசங்களில் சிக்கிப் பல வகை நரகத் துன்பங்களில் அழுந்தி ஊஞ்சல் போல எப்பொழுதும் சுழன்று வருந்துவர். அவ்வகையிலாகுந் துன்பங்களுக்கு அளவே கிடையாது.

விளக்கம்:

தேசு உறு - ஒளி பொருந்திய; நாசம் ஆம் - அழியும்; பாசம் - பந்தம்; ஊசல் - ஊஞ்சல்; உழல்வித்து - வருந்தச்செய்து; ஆக்கும் - செய்கிற, உண்டு பண்ணுகிற (16)

Koviloor Digital Library

சிவன் முதலிய நால்வருக்கு வழிபாடு செய்க

186. இந்த வீரைந்தினாலு மேறிய பாவமாறச்
சிந்தனை செய்தார் மற்றுஞ் செறிந்த தீவினையுந் தீர்க்கப்
புந்தி செய்தார் கடாமுஞ் சிவாதியைப் புரிக பூசை
நைந்தறும் பாவம் வாய்க்கு நலங்களு நவிற்றுவாமே.

இந்த ஈர்ஐந்தினாலும் ஏறிய பாவம் மாறச்
சிந்தனை செய்தார் மற்றும் செறிந்த தீவினையும் தீர்க்கப்
புந்தி செய்தார்கள் தாமும் சிவஆதியைப் புரிக பூசை
நைந்து அறும்பாவம் வாய்க்கும் நலங்களும் நவிற்றுவாம் ஏ.

உரை:

மேற் சொன்ன பத்துத் தொழில்களைச் செய்ததால் உண்டான பாவங்கள் அகல, சிவபிரான் முதலான நால்வரையும் முறையோடு பூசை செய்து வணங்குக. அவ்வாறு வழிபாடு செய்தால், அந்தத் தொழில்களால் ஏற்பட்ட பாவங்கள் தேய்ந்து கெடும். இனி, சிவன் முதலிய நால்வரை வணங்கியதால் கிடைக்கும் பேறுகளையும் சொல்லுவோம்.

விளக்கம்:

ஈர் ஐந்து - பத்து, பத்துத் தொழில்களாலும்; ஏறிய - சார்ந்த; மாற - விலக; செறிந்த - பொருந்திய; புந்தி - புத்தி; புந்தி செய்தார் - புத்தியால் தீர்மானித்தவர்;

நைந்து - கெட்டு; அறும் - அழியும்; நலங்கள் - நன்மைகள்; நவிற்றுவாம் - சொல்வோம்; ஏ - அசை. (17)

மேற்குறித்த அன்னதானிகள் சிவலோகமெய்தியிருக்குங் கால வரையறை

187. அருத்திய வவிழினேக மமலனை
முதலோர்க் கன்பா
லிருத்திடுஞ் சிவலோகத்தின்
வருடமாயிரமுமேயப்
பொருத்திய வன்பர் தம்மைப்
பொருந்திடிற் பருப்பு நெய்யு
முரைத்தவவ் வருடந் தன்னிற்
றசகுண மோங்கு மாங்கே.

Koviloor Digital Library

அருத்திய அவிழின் ஏகம்
அமலனை முதலோர்க்கு அன்பால்
இருத்திடும் சிவலோகத்தில் வருடம்
ஆயிரமும் ஏயப்
பொருத்திய அன்பர் தம்மைப்
பொருந்திடில் பருப்பும் நெய்யும்
உரைத்த அவ்வருடம் தன்னில்
தசகுணம் ஓங்கும் ஆங்கு ஏ.

உரை:

சிவபிரான் முதலிய நால்வரையும் அன்பினாலே உண்ணும்படி செய்யப்பட்ட சோற்றில் ஒரு சோறே, உண்பித்தவரை ஓர் ஆயிரம் ஆண்டுகள் வரை சிவ லோகத்தில் வாழ வைக்கும். அந்தச் சோற்றுடன் பருப்பும் நெய்யும் கலந்து உண்ணச் செய்த அன்பர், சோறொன்றுக்கு முன் சொன்ன ஆயிரம் ஆண்டுத் தொகையிற் பத்து மடங்குகளாகிய பதினாயிரம் ஆண்டுகள் வரை சிவ உலகில் வாழ்வார்.

விளக்கம்:

அவிழ் - சோறு; ஏகம் - ஒன்று; அவிழின் ஏகம் - ஒரு சோறு; பருப்பும் நெய்யும் பொருந்திடில் - சோற்றுடன் பருப்பும் நெய்யும் கலந்தால் சாதாரணச் சோற்றைவிடக் கடைந்த துவரம் பருப்பும் நெய்யும் கலந்த சோறு சுவை மிகுந்ததாய் இருக்கும். உடலுக்கும் நலம் தரும்.

''நெய் விரவு கறி சோறு முப்போதும் வேண்டும்''

என்பது நம்பி ஆரூரர் அருள்மொழி.

''நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும் தைப்பூசம்''

என்பது *திருஞான சம்பந்தர் திருமொழி.*

(நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் - நெய் கலந்த வெண்மையான சோறு); தசம் - பத்து; தச குணம் - பத்து மடங்கு; ஏய - பொருந்த; ஓங்கும் - வளரும்; ஏ - அசை. (18)

இதுவும் அது

188. பொரித்த நற்கறியும் புல்கிற் றசதச குணிதம் போனந்
தரித்த சாட்டியமே யென்னிற் சததச குணமுஞ் சாரும்
பரித்த நற்கந்த பத்தஞ் சதசத குணமும் பற்று
மிரத்தநற் சாலி யன்ன நியுதமே யெண்ணி லென்றும்.

Koviloor Digital Library

பொரித்த நல் கறியும் புல்கில் தசதச குணிதம் போனம்
தரித்த சாட்டியமே என்னில் சததச குணமும் சாரும்
பரித்த நல் கந்த பத்தம் சதசத குணமும் பற்றும்
இரத்த நல் சாலி அன்னம் நியுதமே எண்ணில் என்றும்.

உரை:

முன் சொன்ன பருப்பும் நெய்யும் கலந்த உணவுடன் பொரிக் கறியும் கலந்து உண்ணச் செய்தால், பதினாயிரம் ஆண்டுகள் போல் நூறு மடங்கான ஆண்டுகள் அதாவது நூறாயிரம் ஆண்டுகள் வரை உணவளித்தவர் சிவ உலகில் இருப்பார்; அவர்களுக்கு அறுபது நாள்களில் விளையும் குறுவை அரிசிச் சோற்றுணவு அளித்தால் பத்து நூறாயிரம் ஆண்டுகளும், மணம் பொருந்திய புழுகு சம்பா அரிசிச் சோற்றுணவு படைத்தால் ஒரு கோடி ஆண்டுகளும், நல்ல செந்நெல் அரிசிச் சோற்றுணவைப் படைத்தால் பத்துக் கோடி ஆண்டுகளும் உணவு அளித்தவர் சிவ உலகில் வாழ்வார்.

விளக்கம்:

சாதாரண சோற்றை விடப் பருப்பும் நெய்யும் கலந்த உணவு சிறந்தது. அதனுடன் புளியில்லாமல் சமைத்த பொரிக்கறி சேர்த்த உணவு உயர்ந்தது. இதைவிடக் குறுவை அரிசிச் சோற்றுணவு சிறப்பானது; இதைவிடச் சம்பா அரிசிச் சோறு கலந்து உணவு உயர்வானது; எல்லாவற்றையும் விடச் செந்நெல் அரிசிச் சோறு மேலானது என்பது கருத்து.

தசம் - பத்து; சதம் - நூறு; புல்கில் - சேர்ந்தால்; குணிதமடங்கு போனகம் - உணவு; சதசதம் - பதினாயிரம்; நியுதம் - பத்து நூறாயிரம் மடங்கு; சாட்டியம் - அறுபதுநாள் நெல் குறுவை; கந்தபத்தம் - புழுகு சம்பா; சாலி - செந்நெல். (19)

இதுவும் அது

189. சாலியின் விசிட்டராச சாலியாற் சமைத்தவன்ன
மேலைய பலத்தின் மிக்க தசகுணம் விளைக்கு மீண்டும்
கோலிய பலங்க ளேறுங்கொழுவிய நெய்யுங்கூடி
லேலவே கறியுங் கூடி லேற்ற முன்னிசைத்த வாற்றாம்.

சாலியின் விசிட்டம் இராச சாலியால் சமைத்த அன்னம்
மேலைய பலத்தின் மிக்க தச குணம் விளைக்கும் மீண்டும்
கோலிய பலங்கள் ஏறும் கொழுவிய நெய்யும் கூடில்
ஏலவே கறியும் கூடில் ஏற்றம் முன் இசைத்தவாறு ஆம்.

Koviloor Digital Library

உரை:

செந்நெல் அரிசிச் சோற்றுணவை விட மேலான இராச சாலிச் சோற்றுணவை அந்த நால்வரும் உண்டால், உண்பித்தவர் மேலும் பத்து மடங்குக் காலம் சிவ உலகில் இருப்பார். இந்த உணவுகளில் நெய் கலந்திருந்தால் இன்னும் அதிக காலமும், நெய் கலந்த உணவோடு வேறு பல கறிவகைகளையும் பொருத்தமாக அமைத்து அவர்களை உண்ணச் செய்தால், மேலும் பல காலமும் சிவபுரியில் வாழ்வார்.

விளக்கம்:

விசிட்டம் - மேன்மை; அன்னம் - சோறு; மேலைய - முன்சொன்ன; தசகுணம் - பத்து மடங்கு; கோலிய - தொடங்கிய; ஏல - பொருத்தமாக; ஏற்றம் - உயர்வு; இசைத்தவாறு - சொன்னபடி; கூடில் - சேர்ந்தால்; ஆம் - அமையும். (20)

சிவ விரதிகளை உண்பித்த பலன்

190. பழுதறு பாயதாதி பலவித விரத பாகங்
கொழுவிய கனியின் பேதங் குளகிருதாதி கூடு
முழுமண மோதகாதி முன்னையி னதிக முற்றும்
விழுமிய பலத்தை வேண்டி விரதரை மிசை வித்தார்க்கே.

பழுதறு பாயத ஆதி பலவித விரத பாகம்
கொழு விய கனியின் பேதம் குளகிருத ஆதி கூடும்
முழுமணம் மோதக ஆதி முன்னையின் அதிகம் முற்றும்
விழுமிய பலத்தை வேண்டி விரதரை மிசைவித்தார்க்கு ஏ.

உரை:

சுத்தமான பாயசம், சருக்கரைச் சோறு, பருப்புச் சோறு, இராச சாலி அரிசியாற் பக்குவம் செய்யப்பட்ட வேறு பல சோற்று வகைகள், வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழங்கள் முதலான பழ வகைகள், சருக்கரை, நெய், ஏலக்காய் ஆகியவை சேர்த்துச் செய்த மோதகம் முதலிய பணிகார வகைகள் ஆகிய ப்லவகை உணவு களைச் சிவ விரதங்களை மேற்கொண்டிருக்கும் சிவ விரதிகளுக்கு வழங்கி உண்ணும் படி செய்தால், அவ்வாறு அவர்களுக்கு உணவு வழங்கி உபசரித்தவர் மேன்மையான சிவபுண்ணியங்களைப் பெறுவார்.

விளக்கம்:

விரதர் - சிவ விரதங்களை மேற்கொண்ட அடியவர்கள்; பாயதம் ஆதி - பாயசம் முதலான பலவகை உணவுகள். கனியின் பேதம் - வாழை, மா, பலா முதலான பழவகைகள்.

Koviloor Digital Library

குளம் - சருக்கரை; **கிருதம்** - நெய் முதலியன; **முழுமண** - நறுமணம்; **மோதக ஆதி** - மோதகம் முதலானவை; **முன்னையின் அதிகம் முற்றும்** - முன் சொன்னவர்கள் பெறுவதிற் பார்க்க அதிகப் பயன் பெறுவர்; **விழுமிய** - மேலான; **மிசைவித்தார்** - உண்பித்தவர்; **ஏ** - அசை. (21)

சிவ யோகிகளை உண்பித்த பயன்

191. உரைத்த விப்பாகபேத முயிர்க்குயி
ருணர்ந்தார் தம்மை
யருத்தினர் சிராத்தத் தன்பா
லழுங்கிய மூவேழ் சுற்ற
மிருத்தினர் சிவலோகத்தி னெண்ணிய
படியே தாங்கள்
கருத்தினுட் களிப்பும் பொங்கப்
புதல்வனைப் பெற்றே காண்பர்.

உரைத்த இப்பாக பேதம் உயிர்க்கு
உயிர் உணர்ந்தார் தம்மை
அருத்தினர் சிராத்தத்து அன்பால்
அழுங்கிய மூஏழ் சுற்றம்
இருத்தினர் சிவலோகத்தில் எண்ணிய
படியே தாங்கள்
கருத்தினுள் களிப்பும் பொங்கப்
புதல்வனைப் பெற்றே காண்பர்.

உரை:

முன் கூறிய உணவு வகைகளை உயிருக்குள் உயிராக விளங்கும் சிவ பெருமானைத் தம் நெஞ்சத்துள் கண்டு தெளிந்த சிவயோகிகளுக்கு, சிராத்த நாளில் அன்போடு அமுது செய்வித்தால் தாம் இந்தத் தரையில் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே, நரகப் பள்ளத்தில் கிடந்து துன்பங்களை அனுபவித்து வருகின்ற தம் இருபத்தொரு தலைமுறைகளைச் சேர்ந்த உறவினர்களை, நரகத்தில் இருந்து கரையேற்றிச் சிவ உலகத்தில் தங்கச் செய்தவர் ஆவார். மேலும், தாம் கருதியபடியே நன்மகனைப் பெற்று மகிழ்வார்.

விளக்கம்:

பாக பேதம் - சுவையாகச் சமைத்த பல வகை உணவுகள்; **உயிருக்கு உயிர்** - சிவபெருமான்; **மூ** - மூன்று; **மூஏழ்** - இருபத்தொன்று; **உணர்ந்தார்** - சிவயோகி; **சிராத்தம்** - இறந்தவரைக் குறித்து வருடாந்தரஞ் செய்யும் தானக்கிரியை; **அழுங்கிய** - வருந்திய; **அருத்தினர்** - உண்பித்தவர்; **இருத்தினர்** - தங்க வைத்தவர்; **களிப்பு** - மகிழ்வு. (22)

Koviloor Digital Library

சிவயோகியின் வருகைத்தரும் உவகை

192. உயிர்க்குயிராகி நின்ற வொருவனை
யுணர்ந்த யோகி
பயிக்கமுங் கொள வென் றெண்ணிப்
பரிந்தவர் மனைமுன் பற்ற
வுயப்பெறு வோமென் றெண்ணி
யவர்குலத் துள்ளா ராங்கே
பெயர்த்தடி நடமுஞ் செய்வர்
பாடுவர் களிப்பும் பெற்றே.

உயிர்க்கு உயிர் ஆகிநின்ற
ஒருவனை உணர்ந்த யோகி
பயிக்கமும் கொள என்று எண்ணிப்
பரிந்து அவர் மனை முன் பற்ற
உயப் பெறுவோம் என்று எண்ணி
அவர் குலத்து உள்ளார் ஆங்கே
பெயர்த்து அடி நடமும் செய்வர்
பாடுவர் களிப்பும் பெற்று ஏ.

உரை:

தம் உயிருக்குள் உயிராகி விளங்கும் சிவபரம் பொருளைக் கண்டு தெளிந்த சிவயோகியார் ஒருவர், பிச்சை ஏற்போம் என்று கருதிச் சிவனடியார் ஒருவரின் இல்லத்தின் முன்னே வந்து நின்றால், அந்த அடியவரின் வீட்டில் இருப்பவர்கள் சிவ யோகியாரை வரவேற்று வணங்குவார்கள்; தங்கள் சுற்றத்தார்களும் தாங்களும் பாவங்களில் இருந்து நீங்கி ஈடேற்றம் பெற்றுவிட்டோம் என்று கருதி, ஆடியும் பாடியும் மகிழ்வர்.

விளக்கம்:

''நல்லாரைக் காண்பதுவும் நன்றே'' என்பது அவ்வையார் வாக்கு.

பயிக்கம் - பிச்சை; கொள - கொள்ள; பரிந்து - அன்புருக்க முற்று; உய - உய்ய, ஈடேற்றம் பெற; நடம் - நடனம், கூத்து; மனை - வீடு; பற்ற - நிற்க; ஏ - அசை. (23)

சிவயோகிக்குச் செய்த பூசை மகிமை

193. ஒழிவற வுறைந்து நின்ற
வொருவனை யுணர்ந்த யோகிக்
கழகுறச் செய்த பூசை
யமலனுமயனு மாலு

Koviloor Digital Library

மெழில்மிகு தேவர் தாமு
மெமக்கெனக் கொள்வரென்றும்
பிழை கெடப் பிதிர்க்கடாமு மெமக் கெனக்
கொள்வர் பெற்றே.

ஒழிவு அற உறைந்து நின்ற
ஒருவனை உணர்ந்த யோகிக்கு
அழகு உறச் செய்தபூசை
அமலனும் அயனும்மாலும்
எழில் மிகு தேவர் தாமும் எமக்கு எனக்
கொள்வர் என்றும்
பிழை கெடப் பிதிர்க்கள் தாமும்
எமக்கு எனக் கொள்வர் பெற்று ஏ.

உரை:

எல்லா உயிர்களிலும் நீக்கம் இல்லாமல் கலந்துள்ள சிவபெருமானை உணர்ந்த சிவயோகிக்குச் சிவனடியார் ஒருவர் செய்கின்ற சிறப்பு வழிபாட்டை, அரன், பிரமன், விஷ்ணு, அழகுடைய வானவர், வழிபாடு செய்தவரின் தந்தை வழியைச் சேர்ந்த பிதிரரான மூதாதையர் அனைவரும் தங்களுக்குச் செய்த வழிபாடாகவே கருதி ஏற்றுக் கொள்வர்.

விளக்கம்:

ஒழிவு அற - முடிவு இல்லாமல்; உறைந்து - தங்கி; அமலன் - தூயசிவன்; தேவர் - சுவர்க்க லோகவாசிகள்; எமக்கு என - தங்களுக்குச் செய்த மரியாதை என்று;

ஏ - அசை. (24)

பூசைக்கு உதவியவர்கள் பெறும் பலன்

194. பூசனைக் குபயோகங்கள் பொருவிலி
புரத்தைப் புல்கு
மீசனை யுணர்ந்த யோகர்க்
கிறைஞ்சியே யேவல் செய்தார்
நேசமு நிறைய நெஞ்சி
னினைத்தவர் தாமு நீக்கி
யாசினைச் சிவலோகத்தி
னரும்பய னருந்துவாரே.

Koviloor Digital Library

பூசனைக்கு உபயோகங்கள் பொருஇலி
புரத்தைப் புல்கும்
ஈசனை உணர்ந்த யோகர்க்கு
இறைஞ்சியே ஏவல் செய்தார்
நேசமும் நிறைய நெஞ்சில்
நினைத்தவர் தாமும் நீக்கி
ஆசினைச் சிவலோகத்தில்
அரும்பயன் அருந்துவார் ஏ.

உரை:

சிவபெருமானை அறிந்த சிவயோகிகளை வழிபாடு செய்ய உதவிய சந்தனம், திருநீறு முதலான பொருள்களும், நறுமணம் உள்ள பலவகைப் பூக்களும், நெல் முதலானவையும் ஒப்பு இல்லாத சிவபுரியை அடையும். சிவயோகியை வணங்கி, அவர் ஏவிய பணிகளைச் செய்தவர்களும், அவரிடம் நட்பும் அன்பும் கொண்டிருந்த வர்களும் தங்கள் குற்றங்களிலிருந்து நீங்கிச் சிவ உலகை அடைந்து அங்குள்ள இன்பங்களை அனுபவிப்பார்கள்.

விளக்கம்:

புல்கும் - பொருந்தும்; இறைஞ்சி - வணங்கி; ஏவல் - கட்டளை; ஆசு - குற்றம், ஆசினை நீக்கி எனக் கூட்டுக; அருந்துவார் - அனுபவிப்பார்; ஏ - அசை. (25)

தவ வேடத்தாரைச் சிவன் எனக் கருதுக

195. அவனியின் மனிதர் செய்கை
யறிவமென் றமலன்றானே
தவரெனு முருவந் தன்னைத்
தரித்து வந்தானென் றெண்ணி
யவர்களுக் ககத்தின் வந்த
வதிதியர்க் கன்புகூரச்
சுவைமொழி சொல்லிப் பூசை
துடங்கியே முடிக்க சூழ்ந்தே.

அவனியில் மனிதர் செய்கை அறிவம்
என்று அமலன் தானே
தவர்எனும் உருவம் தன்னைத்
தரித்துவந்தான் என்று எண்ணி

Koviloor Digital Library

அவர்களுக்கு அகத்தில்வந்த
அதிதியர்க்கு அன்புகூரச்
சுவைமொழி சொல்லிப் பூசை
துடங்கியே முடிக்க சூழ்ந்து ஏ.

உரை:

மக்கள் எவ்வாறு வழிபாடு செய்கிறார்கள் என்று பார்ப்போம் எனக் கருதிய தூயவனாகிய சிவன், தாமே ஒரு தவத்தினரைப் போல வடிவம் தாங்கி வந்துள்ளார் என்று எண்ணிக் குடும்பத் தலைவர் அந்தத் தவத்தினருக்கும், புதியவர்களாக வந்துள்ள மற்ற அடியவர்களுக்கும், அன்பு பெருக இனிய சொற்களால் முகமன் கூறி வரவேற்று, அவர்களுக்குக் கால் அலம்ப நீர் தந்து, அமருவதற்குப் பொருத்த மான இருக்கைகள் அளித்து, அமரச் செய்க. பின்னர், பூக்கள் கொண்டு முறைப்படி அவர்களைப் பூசை செய்து வணங்குக.

விளக்கம்:

அவனி – பூமி மக்கள் வாழும் நிலப்பகுதி; அறிவம் – அறிவோம்; தரித்து – தாங்கி; தவர் – சிவ விரதங்களைச் செய்த தவத்தினர்; அகம் – இல்லம்; அதிதி – முந்தியும் வந்து போன திதி குறிக்கப்பட இல்லாதவர், புதிதாக வந்தவர்; சுவை மொழி – இனிய சொல்; துடங்கி – தொடங்கி; சூழ்ந்து – ஆராய்ந்து; ஏ – அசை. (26)

வெளிக் கோலத்தைப் பாராதே

196. மலினராய் வந்தாரேனும்
வடிவொடு வந்தாரேனு
நிலைமையி னீங்காரேனு
நீங்கிய நிலையரேனு
மலைவறு மன்பர்க்காதிக்
கவர்களுக் கமைக்க பூசை
புலையுடற் பொறையைப் போக்கப்
பொருந்திய திருந்தியாரே.

மலினராய் வந்தாரேனும்
வடிவொடு வந்தாரேனும்
நிலைமையில் நீங்காரேனும்
நீங்கிய நிலையரேனும்
மலைவு அறும் அன்பர்க்கு ஆதிக்கு
அவர்களுக்கு அமைக்க பூசை
புலைஉடல் பொறையைப் போக்கப்
பொருந்திய திருந்தியார் ஏ.

Koviloor Digital Library

உரை:

இழிவான உடற் சுமையை ஒழிக்க விரும்பிய திருந்திய உள்ளம் உடையவர், தமது வீட்டிற்கு அதிதியாக வந்த தபோதனர் அழுக்கான உடலோடு தாழ்ந்த குலத்தவரைப் போல வந்தாலும், தூய ஆடை அணிந்து பகட்டான தோற்றத்தொடு உயர் குலத்தவரைப் போல வந்தாலும், ஒழுக்க நிலையிலிருந்து பிறழாத விரதம் உடையவர் போல வந்தாலும், விரதம் மேற்கொள்ளாத சாதாரண மனிதரைப் போல வந்தாலும், உலகத்தினது மூல காரணனான சிவபெருமானுடைய உண்மையான அன்பராக அவர் இருந்தால், குடும்பத் தலைவர் அவரை முறைப்படி வரவேற்று, வணங்கி வழிபாடு செய்வாராக.

விளக்கம்:

''தொழுநோயின் காரணமாக உடல் உறுப்புகள் குறைந்து அழகு இல்லாத ஒருவர், பசுவின் இறைச்சியைத் தின்றவராக இருந்தாலும் அவர், கங்கையைத் தம் திருச்சடையில் வைத்துள்ள சிவனுடைய அடியவராக இருந்தால், அவர் நாம் வணங்குதற்கு உரிய தெய்வம் ஆவார்'' என்பது திருநாவுக்கரசரின் அருள்மொழி.

''அங்கம் எலாம் குறைந்து அழுகு தொழுநோயராய்
ஆ உரித்துத் தின்று உழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பர் ஆகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.''

(அப்பர் தேவாரம்)

மலினம் - அழுக்கு; வடிவு - அழகு; மலைவு - மயக்கம்; ஆதி - மூலம்.(27)

சிவஞானியை இகழ்ந்தோன் கதி

197. காட்டு முள்ளொளியைக்கண்ட
கண்ணனைக் கயந்து சொல்லக்
கேட்டவர் கேட்பித்தார்கள் கெழுமினருடன் பட்டார் முன்
மூட்டின ரென்ற வைந்து
மூடருங் கூடி மூழ்கி
மீட்டிடுவாரு மின்றி
யெரிநிரையத்துள் வேவார்.

காட்டும் உள் ஒளியைக் கண்ட
கண்ணனைக் கயந்து சொல்லக்
கேட்டவர் கேட்பித்தார்கள் கெழுமினர்
உடன்பட்டார் முன்

Koviloor Digital Library

மூட்டினர் என்ற ஐந்து
மூடரும் கூடி மூழ்கி
மீட்டிடுவாரும் இன்றி எரி
நிரையத்துள் வேவார்.

உரை:

தம் நெஞ்சில் உள் ஒளியாக ஒளிரும் சிவஒளியைத் தம் அருட் கண்ணால் கண்ட சிவஞானியை வெறுத்து வசைமொழி பேசியவர், அவ்வசை மொழியைத் தம் காதுகளாற் கேட்டவர், பிறரும் கேட்குமாறு தூண்டினவர், அவ்வசை மொழிக்கு மனம் பொருந்தியிருந்தவர், நிந்திக்குமாறு உடன் இருந்து தூண்டியவர் என்ற ஐந்து வகையினரும் மூடர் ஆவர். இவர்கள் அனைவரும் தம்மை மீட்பவர் யாரும் இல்லா நிலையில் எரிகின்ற நரகப் பள்ளத்தில் கிடந்து வருந்துவர்.

விளக்கம்:

சிவஞானியை நிந்திப்பது, சிவபிரானை நிந்தனை செய்வது ஆகும். ''கற்புடைய மகளிரையும், சிவனடியவரையும், மெய்ஞ்ஞானிகளையும் அவர்களின் மனம் கலங்குமாறு கேடு செய்தவர்கள், தங்களுடைய பொருளையும் உயிரையும் ஓர் ஆண்டிற்குள் இழந்து அழிவடைவர்; இது உண்மை. சதாசிவத்தின் மீது ஆணை'' என்பது திருமூலரின் அருள்மொழி.

''பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டு ஒன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே.''

(திருமந்திரம் - 532)

''ஒளி நிரம்பிய சிவந்த கதிர்களையுடைய கதிரவனுக்கு முன் வெய்யிலுக்கு அஞ்சாது நிற்கலாம், ஆனால், அந்த வெய்யிலால் சூடு ஏறிய மணலில் நிற்க இயலாது. அது போல, இறைவராகிய சிவபிரானைப் பகைத்து நின்றாலும், சிவபிரானுடைய அருள் பெற்று மேன்மை அடைந்துள்ள சிவஞானியைப் பகைத்து நின்று ஒருவன் நிம்மதியாக வாழ முடியாது''

''ஈசன் எதிர் நின்றாலும் ஈசன் அருள் பெற்று உயர்ந்த
தேசர் எதிர் நிற்பது அரிதாமே - தேசுவளர்
செங்கதிர் முன் நின்றாலும் செங்கதிரவன் கிரணம்
தங்கும் மணல் நிற்க அரிதே தான்.'' *-(நீதி வெண்பா - 39)*

சிவனடியார் மனம் கலங்கினால் தேசமும் நாடும் பிற சிறப்புகளும் அழியும். வானவர் உலக இந்திரனின் ஆட்சிபீடமும் பெரிய மன்னர்களின் ஆட்சி பீடமும் நாசமாகும். இது நம் சிவபெருமான் மீது ஆணையாகும். சிவ ஞானிகளுக்குத் துன்பம் விளைவித்தவர் தம்முடைய பெரும்பதவியை இழந்து

Koviloor Digital Library

விடுவார் என்பது திருமூலரின் அருள் மொழி.

''ஈசன் அடியார் இதயம் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசமதாகுமே நம் நந்தி ஆணையே.''

(திருமந்திரம் - 534)

கண்ட கண்ணனை - சிவ ஒளியைக் கண்ட அருட் கண்ணனான சிவ ஞானியை. **மூட்டினர்** - தூண்டியவர்; **மீட்டிடுவார்** - மீட்பவர்;

நிரையம் - நரகம்; **வேவார்** - வெந்திடுவார். (28)

இதுவும் அது

198. **மனத்தினால் வடிவு தன்னால் வழுக்கிய சழக்கர் தாமு**
மினத்தொடு மிணங்கி வேவ ரெரி நிரையத்தை யெய்தி
யெனைத்துள காலந்தானு மென்றுளத் தேங்கி யெய்ப்பர்
தனக்கயலுறவிலானைத் தவறுவ ரென்னோ தாமே.

மனத்தினால் வடிவு தன்னால் வழுக்கிய சழக்கர் தாமும்
இனத்தொடும் இணங்கி வேவர் எரி நிரையத்தை எய்தி
எனைத்துஉள காலம் தானும் என்று உளத்து ஏங்கி எய்ப்பர்
தனக்கு அயல் உறவு இலானைத் தவறுவர் என்னோ தாம் ஏ.

உரை:

மனத்தாலும் உடலாலும் சிவஞானிகளுக்குத் தவறு செய்தவர்கள் முறை தவறிய அறிவிலிகள் ஆவர். அவர்கள் செயலைத் தடுத்து நிறுத்தாதவர் தங்களின் இனத்தாரோடு சேர்ந்து எரியும் நரகத்தை அடைந்து வாடுவர்; இவ்வாறு துன்பங்கள் அனுபவிக்கும் காலம் எப்பொழுது தீரும் என்று ஏங்குவர். தங்களுக்கு உறவோ பகையோ இல்லாத சிவ ஞானிகளை இவர்கள் ஏன் நிந்தனை செய்தனரோ!

விளக்கம்:

வடிவு - உடம்பு; வழுக்கிய - முறை தவறிய; சழக்கர் - மூடர்; வேவர் - வாடுவர்; எய்தி - அடைந்து;

எனைத்து உள காலம் - எனைத்து காலம் உள, எவ்வளவு காலம் உள்ளது;

எய்ப்பர் - இளைப்படைவர்; **என்னோ** - ஏன்; **ஏ** - அசை. (29)

Koviloor Digital Library

இதுவும் அது

199. மற்றைய நரகபேத மனைத்தினு மயங்கி மூவேழ்
சுற்றமுஞ் சுழலத் தாமுங் கூடியே துயங்கி வீழ்வ
ரெற்றுவ ரியம தூத ரெமக்குற வாருமில்லை
யுற்றவித் துயரந் தன்னை யொழிக்க வென் றழிவருள்ளம்.

மற்றைய நரகபேதம் அனைத்திலும் மயங்கி மூஏழ்
சுற்றமும் சுழலத்தாமும் கூடியே துயங்கி வீழ்வர்
எற்றுவர் இயமதூதர் எமக்கு உறவு ஆரும் இல்லை
உற்ற இத்துயரம் தன்னை ஒழிக்க என்று அழிவர் உள்ளம்.

உரை:

சிவஞானிகளைப் பழித்த தீயவர்கள் பல வகை நரகங்களில் தங்களின் இருபத்தொரு தலைமுறைகளைச் சேர்ந்தவர்களோடு கிடந்து வாடுவர். துன்பம் தாங்க முடியாமல் அவர்கள் நரகத்திலிருந்து மேலே ஏறும்போது, எமனுடைய பணியாட்கள் அவர்களை அடித்து மீண்டும் நரகப் பள்ளங்களில் தள்ளுவர். அதனால், தங்களை அந்தத் துயரிலிருந்து கரையேற்றுபவர் யாரும் இல்லையே என்று மனம் தளருவார்கள்.

விளக்கம்:

நரக பேதம் - பலவகை நரகங்கள்; மூ - மூன்று; ஏழ் - ஏழு; மூஏழ் - இருபத்தொன்று; துயங்கி - சோர்ந்து; எற்றுவர் - உதைப்பர்; அழிவர் உள்ளம் - உள்ளம் அழிவர், மனம் தளருவர். (30)

சிவஞானியை வணங்குக

200. ஆதலான் முனிவர் தம்மையவமதி செய்யா தஞ்சிப்
பூதலத்தோர்கள் பூவாற் புனலினாற் பரிவு பொங்கப்
பாதபூசனையும் பண்ணிப் பணிந்தவர் பணியுஞ் செய்து
நாதனேயிவர்க ளென்று நாடுக உளத் தெந்நாளும்.

ஆதலால் முனிவர் தம்மை அவமதி செய்யாது அஞ்சிப்
பூதலத் தோர்கள் பூவால் புனலினால் பரிவு பொங்கப்
பாதபூசனையும் பண்ணிப் பணிந்து அவர் பணியும்செய்து
நாதனே இவர்கள் என்று நாடுக உளத்து எந்நாளும்.

உரை:

ஆதலால், உலகில் வாழ்பவர்கள் சிவஞானிகளைப் ப்ழித்துப் பேசினால் வரும் பாவங்களுக்குப் பயந்து, அவர்களைச் சிவபிரானுக்கு ஒப்பாக மதித்து,

Koviloor Digital Library

அவர்களின் திருவடிகளை நீரால் அலம்பி அவற்றின் மீது பூக்களை இட்டு எட்டு உறுப்புகளும் தரையில் பொருந்த வணங்குவார்களாக; வணங்கி அவர்களுக்குத் தேவையான பணிவிடைகளையும் செய்வார்களாக.

விளக்கம்:

முனிவர் - சிவஞானிகள்; அவமதி - மரியாதைக் குறைவு; பூதலம் - மண் உலகம்; புனல் - நீர்; பரிவு பொங்க - அன்பினோடு;

பாதபூசனை - திருவடி வழி பாடு; நாதன் - இறைவன்; நாடுக - விரும்புக; எந்நாளும் - என்றும், எப்பொழுதும். (31)

அசற்பாத்திமாவா ரிவரெனல்

201. பகர்ந்தன முனிவ மெய்ம்மைப்
பாத்திர விசிட்டந் தன்னைச்
சகந்தவர் என்னக் கோலஞ்
சமைந்து தற்பரனைச் சாரா
ரகந்தனிற் பிறப்பு மஞ்சா
ரவர பாத்திரங்களென்றே
யிகழ்ந்திடு மிதுவுங் கேணீ
யினியுனக் கியம்ப யாமே.

பகர்ந்தனம் முனிவ மெய்ம்மைப்
பாத்திர விசிட்டம் தன்னைச்
சகம் தவர் என்னக் கோலம்
சமைந்து தற்பரனைச் சாரார்
அகம் தனில் பிறப்பும் அஞ்சார்
அவர பாத்திரங்கள் என்றே
இகழ்ந்திடும் இதுவும் கேள்நீ
இனி உனக்கு இயம்ப யாம் ஏ.

உரை:

அகத்தியனே, முன்னம் தகுதிவாய்ந்த சிவஞானிகளின் மேன்மையை உனக்கு உரைத்தோம். இனி, தகுதியில்லாதவர் யார் என்றால், உலகினர் ''இவர் உயர்ந்த விரத ஒழுக்கமுடைய தவசி'' என்று கூறும்படி பொய் வேடம் தரித்தவர்; இவர் தாம் என்று சுட்டிக் காட்ட இயலாத சிவபெருமானுடைய அருளைப் பெறாதவர்; உள்ளத்தில் பிறப்பு இறப்புகளுக்குப் பயப்படாதவர்; ஆகவே, சைவ மறைகளும் சிவாகமங்களும் இத்தகையோரை இகழும்; இவர்களைப் பற்றிக் கூறுவோம்; கேட்பாயாக.

Koviloor Digital Library

விளக்கம்:

மெய்ம்மைப் பாத்திரம் - உண்மையான தகுதியுள்ளவர்; சகம் - உலகம்; அகம் - உள்ளம் அகம் என வந்தது. இயம்ப - சொல்ல;

விசிட்டம் - உயர்வு; சமைந்து - தரித்து; 'அவர் அபாத்திரங்கள்' எனப் பிரித்தல் நல்லது. ஏ - அசை. (32)

அசற்பாத்திரத்திற் செய்த தானம் பலன்படாது

202. மெய்யனை விழைந்து பாசப்
பகையினை வென்று யாமு
முய்யவே வேணுமென்னுமுள்ளம
திழந்து நின்ற
பொய்யரைப் புரிந்த பூசை
பலத்தினைப் பொருத்துமோ தான்
செய்தது மவர்க்குப் பச்சை
மட்கல நீரே தேரில்.

மெய்யனை விழைந்து பாசப்
பகையினை வென்று யாமும்
உய்யவே வேணும் என்னும்
உள்ளமது இழந்து நின்ற
பொய்யரைப் புரிந்த பூசை
பலத்தினைப் பொருத்துமோ தான்
செய்ததும் அவர்க்குப் பச்சை
மண்கல நீரே தேரில்.

உரை:

உண்மையின் வடிவமான சிவபெருமானை விரும்பி, பிறவிக்குக் காரணமான ஆணவம் முதலிய பாசப் பகைகளை வென்று, சிவபிரான் திருவருள் பெற்றுச் சிவஞானியாகிச் சிவகதி பெற வேண்டும் என்ற குறிக்கோள் இல்லாத பொய்யர்களை, அவர்களின் காவியாடை, திருநீற்றுப் பூச்சு, கழுத்தில் இருக்கும் உருத்திராக்க மாலை, அவர்களைப் பற்றிய போலியான பத்திரிக்கை விளம்பரம், திருநீறு குங்குமம் போன்ற பொருள்களை அவர்கள் தங்களுடைய விரல்களின் வழியாகக் கொட்டச் செய்கிற மாய வித்தை போன்றவற்றில் மயங்கி அப்பொய்யர்களுக்கு அளிக்கப்படுகிற உதவி அல்லது கொடை, குயவர் ஒருவரால் புதிதாக வனையப்பட்ட ஈரமான மண்கலத்தில் ஊற்றப்பட்ட நீரைப் போலப் பயன் இல்லாமல் விரைவில் அழியும்.

Koviloor Digital Library

விளக்கம்:

''பத்தி வழியில் நின்றோர் சிவஞானிகளுக்கு நன்கொடையாக அளித்த பொருள் எள் அளவே என்றாலும், அந்த நன்கொடையை அளித்த அன்பருக்கு மேலான சிவ உலக இன்பங்கள் பெறச் செய்து, பிறப்பு இறப்புக்களில் அழுந்தாத வண்ணம் எடுத்து, பாசத்தினை நீக்க, தவஞ் செய்தற்குரிய உயர் குலத்தில் ஒரு பிறவியை அடையச் செய்து, சரியை, கிரியை, யோகங்கள் எளிதிற் கைகூடி முற்றுப் பெறச் செய்து, முடிவில் உண்மையான ஞான நெறியினை அடைவித்து, சிவபிரான் திருவடியை எய்துமாறு செய்யும்'' என்று அருள்நந்தி சிவாசாரியார் கூறுகின்றார்.

சிவஞானச் செயல் உடையோர் கையில் தானம்
திலம் அளவே செய்திடினும் நிலமலை போல் திகழ்ந்து,.
பவம்ஆய கடலில் அழுந்தாத வகை எடுத்துப்
பரபோகம் துய்ப்பித்துப் பாசத்தை அறுக்கத்
தவம்ஆரும் பிறப்பு ஒன்றில் சாரப் பண்ணிச்
சரியை கிரியா யோகம் தன்னிலும் சாராமே
நவம் ஆகும் தத்துவ ஞானத்தை நல்கி
நாதன் அடிக்கமலங்கள் நணுகுவிக்கும் தானே.

(சிவஞான சித்தியார் - சாதன இயல் - 26)

''எள் அளவு பொன்னைச் சிவஞானிக்குக் கொடுத்தால் அதன் பயன் மறுமைக்கு முத்தியும், இம்மைக்குச் சித்தியும் போகமும் ஆகும். நிலம் அளவு பொன்னை அவஞானியான பொய்யருக்குக் கொடுத்தால் அதனால் எந்தப் பயனும் இல்லை; மறுமை இன்பமும் இல்லையாம்'' என்பது திருமூலரின் அருள்மொழி.

''திலம் அத்தனைபொன் சிவ ஞானிக்கு ஈந்தால்
பலம் முத்திசித்தி பரபோகமும் தரும்
நிலம் அத்தனை பொன்னை நின்மூடர்க்கு ஈந்தால்
பலமும் அற்றே பரபோகமும் குன்றுமே.'' *(திருமந்திரம் - 501)*

மெய்யன் - உண்மையின் வடிவமான சிவன்; வேணும் - வேண்டும்; பொருந்துமோ - பயன் அளிக்குமோ;

செய்தது - பொய்யருக்கு உதவியது; பச்சை - ஈரமான; கலம் - பாண்டம்; தான் - அசை நிலை. இதற்குப் பொருள் இல்லை.

தேரில் - ஆராய்ந்தால்; பலம் - பயன். (33)

இதுவும் அது

203. பழுதறுவித்தேயேனு முவரிடைப் பயிரேயாகா
வழலிடையன்றி நீற்றினாகுதி பலத்தை யாக்கா
விழைவிலா வலியை மேவு மெல்லிய லின்ப மேவாள்
வழுவுறு மவர்க்கேயீகை வரத்தினைச் செயுமோ மாட்டா.

Koviloor Digital Library

பழுதுஅறு வித்தேயேனும் உவரிடைப் பயிரே ஆகா
அழலிடை அன்றி நீற்றில் ஆகுதி பலத்தை ஆக்கா
விழைவுஇலா அலியை மேவும் மெல்லியல் இன்பம் மேவாள்
வழுஉறும் அவர்க்கே ஈகை வரத்தினைச் செயுமோ மாட்டா.

உரை:

ஒரு பழுதுமில்லாத நல்ல விதையாக இருந்தாலும், உப்புச் சத்து உள்ள நிலத்தில் அதனை விதைத்தால் அது முளைத்துப் பயிராகாது; ஓமத் தீயில் இட வேண்டிய நெய்யைச் சாம்பலின் மீது ஊற்றினால் அது விரும்பிய பயன் தராது; விரும்பத்தகாத அலியைப் புணருகின்ற பெண் புணர்ச்சியின்பத்தைப் பெற மாட்டாள்; இவ்வாறே, சிவஞானி போல வேடம் தரித்த பொய்யருக்குக் கொடுத்த கொடை எந்தப் பயனையும் தராது.

விளக்கம்:

உவரி - இது உப்புச் சத்து உள்ள உவர் நிலத்தைக் குறிக்கிறது. அழல் - தீ; நீற்றில் - சாம்பலில்; ஆகுதி - ஓமத் தீயில் இடும் நெய்; அலி - ஆணுறுப்போ பெண் உறுப்போ அற்ற படைப்பு; மெல்லியல் - பெண்; மேவாள் - அடையமாட்டாள்; வழுஉறும் - குற்றம் பொருந்திய; வரம் - விரும்பிய பயன்.

குறிப்பு:

அலி - ஆணுறுப்போ பெண்ணுறுப்போ அற்ற படைப்பு.
அலி வேறு பேடி வேறு. (34)

பொய் ஞானிக் குதவினோர் பயன்பெறார்

204. பாத்திரமாக்கிக் கட்டி யிரும்பினைப் பண்டமேற்றி
யாற்றிடை யியக்க வெண்ணு மடைபினை யடையுமாங்கே
பாத்திரமீந்தா னோடுஞ் சிவபுரப் பாரம் பற்றும்
பாத்திர மல்லான் கட்டியிரும் பெனப் பாரம் பற்றான்.

பாத்திரம் ஆக்கிக் கட்டி இரும்பினைப் பண்டம் ஏற்றி
ஆற்றிடை இயக்க எண்ணும் அடைபினை அடையும் ஆங்கே
பாத்திரம் ஈந்தானோடும் சிவபுரப் பாரம் பற்றும்
பாத்திரம் அல்லான் கட்டி இரும்பு எனப் பாரம் பற்றான்.

உரை:

ஒருவர் தம்மிடம் உள்ள இரும்புக் கட்டிகளைக் கொண்டு ஒரு மரக் கலத்தைச் செய்து, அதில் பலவகைப் பொருள்களையும் ஏற்றி, ஆற்று நீரில் அதனைச்

Koviloor Digital Library

செலுத்தினால், மரக்கலம் எளிதாக அவர் விரும்பிய கரையை அடையும். இது போல, சிவ பெருமான் அருள் பெற்ற உண்மையான சிவஞானிகளை வணங்கி, அவர்களுக்குத் தேவையானவற்றை உதவிய அன்பர்களை, அச் சிவ ஞானிகள் மிக எளிதாக தங்களோடு சிவபுரம் அடையுமாறு செய்வர். வெறும் இரும்புக் கட்டிகளின் மீது பொருள்களை ஏற்றி ஆற்று நீரில் இறக்கிவிட்டால், அவை இறக்கிய இடத்திலேயே தம் மீது ஏற்றப்பட்ட பொருள்களோடு நீரில் அமிழ்ந்து கிடக்கும்; கரையை அடையாது. இதுபோல, போலியாகச் சிவஞானிகள் போல நடிக்கும் பொய்யர் களுக்குச் செய்த உதவியால் உதவியவர்களுக்கு எந்த நன்மையும் இல்லை. அவர்கள் சிவபுரத்தை அடையவும் மாட்டார்கள்.

விளக்கம்:

பாத்திரம் - உண்மையான சிவஞானி; அடைபு - சேரும் இடம்; பாத்திரம் அல்லான் - போலியாகச் சிவஞானி போல நடிப்பவன்; இயக்கும் - செலுத்தும்; ஈந்தான் - அளித்தவன்; பண்டம் - பொருள்; சிவபுரப் பாரம் பற்றும் - சிவபுரத்தை அடைவான்; பாரம்பற்றல் - கரையேறல். பாரம் - கரை. (35)

போலி யோகிக்கு ஈவது வீண்

205. கட்டியைக் கனலிற் காய்ச்சிக் கம்மிய னலமுமாக்க
விட்ட நற்பண்ட மேற்றுப் புனன்மிசை யியங்கு மெற்றே
யொட்டிய குரவனோது மொருபொரு ளுணர்ந்தாரற்றே
கட்டியைக் கடுப்பர் காட்டுங் கடவுளை யுணராக்கையர்.

கட்டியைக் கனலில் காய்ச்சிக் கம்மியன் நல்மும் ஆக்க
விட்ட நற்பண்டம் ஏற்றுப் புனல் மிசை இயங்கும் எற்றே
ஒட்டிய குரவன் ஓதும் ஒரு பொருள் உணர்ந்தார் அற்றே
கட்டியைக் கடுப்பர் காட்டும் கடவுளை உணராக்கையர்.

உரை:

கைதேர்ந்த இரும்புக் கொல்லர் ஒருவர், இரும்புக் கட்டிகளை உருக்கிப் பக்குவமாகச் செய்து தந்த ஒரு படகில், நல்ல பொருள்களை ஏற்றினால் அது தன்னிலிட்ட பொருள்களையுங் கொண்டு நீரில் மிதந்தோடிக் கரையடையும். இவ்வாறே, சிவபிரான் திருவருளோடு பொருந்தியிருக்கும் ஞான ஆசிரியரிடம் உபதேசம் பெற்ற சிவயோகி தமக்கீந்தவனைப் பிறவிக் கடலில் ஆழாது சென்று கரைசேர வைப்பர். உருக்கி வார்க்கப்படாத இரும்பு, பயன் தரும் ஒரு பொருளாக ஆக்கப்படாதது போல, தக்க ஞான ஆசிரியரிடம் உபதேசம் பெறாத வேடதாரி களும் தீயோர்; பயன்படுபவராகார்; அவர்களால் யாருக்கும் எந்த நன்மையும் விளையாது.

Koviloor Digital Library

விளக்கம்:

கனல் - நெருப்பு; கம்மியன் - கொல்லன்; புனல்மிசை - நீரின்மீது; ஒட்டிய - ஒன்றிய; குரவன் - சிவஞானி; கடுப்பர் - ஒப்பர்; கையர் - கீழோர். (36)

அருளுக்கு வேறுபாடு கிடையாது

206. பாத்திரா பாத்திரத்தைப் பகா துருகுதலே பற்றிக்
கூர்த்த ஆதரவினாலே கொடுப்பவர்க் கவர்க டாமும்
பாத்திரங் குருடர் பங்கு பாலகர் மிடியர் நோயர்
மூத்தவர் கிருபணாதி யிவர்களு மிரக்க முற்றில்.

பாத்திர அபாத்திரத்தைப் பகாது உருகுதலே பற்றிக்
கூர்த்த ஆதரவினாலே கொடுப்பவர்க்கு அவர்கள் தாமும்
பாத்திரம் குருடர் பங்கு பாலகர் மிடியர் நோயர்
மூத்தவர் கிருபணாதி இவர்களும் இரக்கம் முற்றில்.

உரை:

இவர் உதவி பெறத் தக்கவர், இவர் உதவி பெறத் தகாதவர் என்று பிரித்துப் பாராமல், உள்ளம் உருகத் தம்மை நாடி வந்த அனைவருக்கும் உதவும் குணம் உள்ள அருளாளருக்கு, இரக்கம் மிகுங்கால் உண்மையாகவே பிறரால் மதிக்கப்படும் தகுதியற்ற போலிச் சிவயோகிகளும் போல, குருடர், முடவர், சிறுபிள்ளைகள், வறுமையாளர், நோயாளர், முதியோர், உலோபியர் போன்றவர்களும் உதவி பெறுதற்கு உரியவர்களாகவே இருப்பர்; அவர்களுக்கு உதவியும் புரிவர்.

விளக்கம்:

பாத்திரம் - ஆதரிக்கப்படுந் தகுதியுள்ளவர்; அபாத்திரம் - ஆதரிக்கப்படுந் தகுதியில்லார்; பிறர்முன் நல்லவர்களைப் போல் நடிக்கும் பொய்யர்; கூர்த்த - மிகுந்த;

பாத்திரம் - உதவி பெறுதற்கு ஏற்றவர்; பங்கு - முடவர்; மிடியர் - வறுமையாளர்; மூத்தவர் - முதியவர்; கிருபணன் - உலோபி; முற்றில் - மிகுந்தால்; பகாது - பிரிக்காது. (37)

எவரெனினும் பசித்தோர்க்கு உதவுக

207. உச்சியி லணைவா ரெல்லா முத்தமரென்றே யெண்ணி
யர்ச்சனை புரிக வன்பா லவல வூனாக்கை தன்னைக்
கைச்சமலேசன் வாழுங் கடிநகரடைவா மென்னு
மிச்சையி னியைந்தா ரெல்லா மெண்ணிய யாவுமேயும்.

Koviloor Digital Library

உச்சியில் அணைவார் எல்லாம் உத்தமர் என்றே எண்ணி
அர்ச்சனை புரிக அன்பால் அவல ஊன் ஆக்கை தன்னைக்
கைச்சு அமலஈசன் வாழும் கடிநகர் அடைவாம் என்னும்
இச்சையில் இயைந்தார் எல்லாம் எண்ணிய யாவும் ஏயும்.

உரை:

நோய், முதுமை முதலான துன்பங்களுக்குக் காரணமான உடலை வெறுத்து, தூயவனான சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் சிறப்பினையுடைய, சிவ உலகை அடைவோம் என்ற ஆசை உடையவர்கள் எல்லாரும், நண்பகலில் பசித்து வந்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் அனைவரையும் சிவனடியார்களாக எண்ணி அன்போடு வரவேற்று, வணங்கி, அவர்கள் பசிதீரச் சுவைமிகுந்த உணவு வழங்கி உண்ணச் செய்க. அவ்வாறு உணவு வழங்கி உபசரித்த உபகாரிகள், தங்கள் மனத்தில் எண்ணியவை யாவும் கைகூடும்.

விளக்கம்:

உச்சி - நடுப்பகல்; அணைவார் - சேர்ந்தவர்; அவலம் - துன்பம்; ஊன் - தசை; ஆக்கை - உடம்பு; கைச்ச - கைத்த, வெறுத்த; அமல - தூய; கடி - சிறப்பு; இயைந்தார் - உடன்பட்டவர்கள்; ஈசன் வாழுங் கடிநகர் - சிவ உலகம்; ஏயும் - கை கூடும். (38)

உதாரமுள்ளோர் யார்

208. பாத்திரமல்லார் செய்கை யதனையும்
பகர்ந்தாம் பண்பு
வாய்த்த தாதாக்களாவார் தகைமையும்
வகுத்துச் சொல்வா
மோர்த்துண ருதாரம் தாழ்ச்சியுறவனு
கம்பங் கோபந்
தீர்த்திட லென்னு மைந்து
முடையரே சிறந்தார் தேரில்.

பாத்திரம் அல்லார் செய்கை
அதனையும் பகர்ந்தாம் பண்பு
வாய்த்த தாதாக்கள் ஆவார்
தகைமையும் வகுத்துச் சொல்வாம்
ஓர்த்து உணர் உதாரம் தாழ்ச்சி
உறவு அனுகம்பம் கோபம்
தீர்த்திடல் என்னும் ஐந்தும்
உடையரே சிறந்தார் தேரில்.

Koviloor Digital Library

உரை:

சிவஞானிபோல நடிக்கும் பொய்யர்களின் நடத்தையை இதுவரை உரைத்தோம். இனி, நற்குணம் பொருந்திய கொடையாளிகளின் மேன்மையையும் விளக்கமாகச் சொல்லுவோம். அவற்றை ஆராய்ந்து தெளிக. யோசிக்கும்போது கொடை, பணிவு, உறவு, இரக்கம், பொறுமை ஆகிய ஐந்து குணங்களும் பொருந்தியவர்களே வள்ளல்கள் ஆவர்.

விளக்கம்:

''போந்த உதாரனுக்குப் பொன் துரும்பு'' என்பர் அவ்வையார்.

''இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்'' என்பதும் அவ்வையாரின் அருள்மொழி.

''எல்லாருக்கும் கொடுங்கள்; அவர் இவர் என்று வேற்றுமை பாராட்டாதீர்கள்'' என்பது திருமூல நாயனாரின் அறிவுரை.

''ஆர்க்கும் இடுமின் அவர்இவர் என்னன்மின்''

(திருமந்திரம் - 250)

தாதா - வள்ளல்; தகைமை - பெருமை; வகுத்து - விளக்கமாக; ஓர்த்து - ஆராய்ந்து;

உதாரம் - ஈகை; தாழ்ச்சி - பணிவு; அனுகம்பம் - இரக்கம்; கோபம் தீர்த்திடல் - பொறுமை; தேரில் - யோசிக்கும்போது. (39)

சிவஞானிக்கு ஈயும் விதம்

209. பாத்திரமதனுண் மிக்க பாத்திரம் பரமஞானி
தீர்த்தவாசையினா லீயா யெனவவன் செப்பானன்றே
கூர்த்த வாதரவினாலே யவன்புடை குறுகிக் கொண்ணீ
தீர்த்தனே யென்று மீவான் பலத்தினைத் தெரிக்கலாமே.

பாத்திரம் அதனுள் மிக்க பாத்திரம் பரமஞானி
தீர்த்த ஆசையினால் ஈயாய் என அவன் செப்பான்நன்றே
கூர்த்த ஆதரவினாலே அவன்புடை குறுகிக் கொள்நீ
தீர்த்தனே என்றும் ஈவான் பலத்தினைத் தெரிக்கலாமே?

உரை:

ஏற்குந் தகுதியுள்ளோருள் மேன்மை வாய்ந்தவர் சிவஞானி. எந்தப் பொருளின் மீதும் பற்று இல்லாத சிவஞானியார், எவரிடமும் சென்று, 'இந்தப் பொருளைத் தருக' என்று கேளார். பிறருக்கு நலம் புரியும் ஈகைக் குணம் உள்ள ஒருவர், தாமே வலிய, அச் சிவஞானியார் எழுந்தருளியுள்ள இடத்திற்குச் சென்று,

Koviloor Digital Library

அவரை வணங்கி, ''தூய அடிகளே! அடியேன் தரும் இப்பொருளை மனம் உவந்து ஏற்று அருள்வீர்களாக'' என்று பணிவோடு சொல்லி அளிப்பான். அவ்வாறு அளிப்பவனே ஈகையாளன். அந்த ஈகையாளன் பெறும் பயனை அளவிட்டுச் சொல்ல இயலுமோ? இயலாது என்பது கருத்து.

விளக்கம்:

தீர்த்தன் - தூய சிவஞானி, குரு, ஆசான், தூயவன். 'நம்மைப் பிணித்த பிறவித் துன்பம் ஒழியும்படி நாம் மகிழ்ந்து ஆடுகின்ற தீர்த்தமாய் உள்ளவன், அழகிய தில்லையில் உள்ள ஞானசபையில் அனல் ஏந்தி ஆடுகின்ற கூத்தப் பெருமான்'' என்று மணிவாசகர் மொழிகின்றார்.

''ஆர்த்தப் பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீ ஆடும் கூத்தன்''

(திருவாசகம் - திருவெம்பாவை)

பரமஞானி - மேலான சிவஞானி; தீர்த்த - (பற்று) ஒழித்த; ஈயாய் - தருக; புடை - பக்கம்; குறுகி - அணுகி; தெரிக்கல் - தெரிவித்தல். (40)

மெய்ஞ்ஞானி அஞ்ஞானி, ஏற்குந் தன்மையில் வேறுபாடு

210. மெய்யினை யுணர்ந்த ஞானி
வேணவா விடுத்தானேனு
முய்யவே பிறரு முன்னியவர்கொடை
யுகப்ப னோராக்
கையர்க டம்மைத் தாமே
காதலித் திரப்ப ரந்தப்
பொய்யர்கைப் புகுத்தினார்கள்
பொருளினையிழந்தார் போட்டே.

மெய்யினை உணர்ந்தஞானி வேண்
அவர் விடுத்தானேனும்
உய்யவே பிறரும் உன்னி அவர்கொடை
உகப்பன் ஓராக்
கையர்கள் தம்மைத் தாமே
காதலித்து இரப்பர் அந்தப்
பொய்யர் கைப் புகுத்தினார்கள்
பொருளினை இழந்தார் போட்டு ஏ.

Koviloor Digital Library

உரை:

உண்மையின் வடிவமான பரம்பொருளைக் கண்ட சிவஞானி, உலகப் பொருள்களின் மீது உள்ள பற்றைத் துறந்தவர்; எனினும், தம்மால் மற்றவர்களும் சிவகதி பெற வேண்டும் எனக் கருதி, ஈகையாளர் ஒருவர் தரும் பொருளை முகமலர்ச்சியோடு ஏற்றுக் கொள்வர். ஆனால் ஞானி போலப் போலியாக வேடம் தரித்தவர், கொடையாளி நற்கதி பெற வேண்டும் என்பதை விரும்பாமல், தம் உடலைப் பாதுகாக்க எண்ணி அவர் வழங்கும் பொருளை விருப்பத்தோடு பெற்றுக் கொள்வார். இந்த அறியாமையாளருக்கு ஈந்த கொடையாளர், தாம் தேடிய பொருளை வீணிலே போட்டு இழந்தவர் ஆவார்.

விளக்கம்:

வேணவா - மிக விருப்பம்; உய்ய - நற்கதி பெற; உன்னி - கருதி; உகப்பன் - மகிழ்வான்; ஓராக்கையர் - கொடுப்பவர் நற்கதி பெறுதல் என்ற நோக்கையுணராத கீழோர்; இரப்பர் - யாசிப்பர்; புகுத்தினார் - ஈந்தவர்; போட்டு - வீணில்; ஏ - அசை. (41)

உதவி நாடி வந்தவருக்கு உபசாரம் செய்க

211. காதலித்தீவார் வானைக் கலப்பது மவர்கை காட்டு
தூதலால் வானஞ் சேர வாதரவுடையா ரஞ்சிப்
பாத பூசனையும் பண்ணிப் பகர்ந்து சற்கார பாடை
யாதன மாதியீக வதிதிகட் குறவினோடே.

காதலித்து ஈவார் வானைக் கலப்பதும் அவர்கைக்காட்டும்
தூது அலால் வானம் சேர ஆதரவு உடையார் அஞ்சிப்
பாத பூசனையும் பண்ணிப் பகர்ந்து சற்கார பாடை
ஆதனம் ஆதி ஈக அதிதிகட்கு உறவினோடு ஏ.

உரை:

புண்ணியத்தை விரும்பிய கொடையாளர் தம்மிடம் உதவி பெற வந்த புதியவர் ஒருவருக்கு, ஒரு பொருளை அளிக்கும்போது, அப்பொருளைப் பெறுகிறவரின் கைகள் கீழேயிருக்கும், கொடையாளரின் கைகள் மேலேயிருக்கும். அவ்வாறு மேலேயிருக்கும் கைகள், அவர் அளித்த கொடையின் புண்ணியப் பயனால் அவர் மேல் உலகம் செல்லுவார் என்பதை உணர்த்துகின்றன. ஆதலால், கொடையாளர் ஒருவர் தம்மிடம் உதவி பெற வந்த புதியவரை, இரப்பவர் என்று இகழாமல், அவரை உபசார மொழிகள் கூறி வரவேற்று, அவரை நல்ல இருக்கையில் அமரச் செய்து, அவருடைய பாதங்களை நீரால் அலம்பி அவற்றின் மீது பூக்களை யிட்டு வணங்கி, அவருக்கு அன்புடன் உணவு முதலியவற்றை வழங்குக.

Koviloor Digital Library

விளக்கம்:

காதலித்து - விரும்பி; வானைக் கலப்பது - மேல் உலகை அடைவது; பாத பூசனை - பாதம் பூசனை, திருவடி வழிபாடு; பகர்ந்து - கூறி;

சற்காரம் - உபசாரம்; பாடை - பாஷை, மொழி; ஆதனம் - இருக்கை; சற்கார பாடை - உபசார மொழி; ஈக - தருக; அதிதி - புதியவர்; ஏ - அசை. (42)

வந்திரக்கும் வறியவருக்கு மறாது வழங்குக

212. செறிந்து தாவென்று நின்ற
மிடியனைச் சிறியனாக்கி
யுறைந்துளான் பெரியனெங்ங னென்றுளத்
தூகஞ் செய்வான்
சிறந்த தாதாவே யல்லன்
செட்டிவன் செய்கை யெல்லா
மிறந்திடுந் தருமமேற்கு மிடியரு
மின்றே லெங்கும்.

செறிந்து தாஎன்று நின்ற
மிடியனைச் சிறியன் ஆக்கி
உறைந்து உளான் பெரியன் எங்ஙன்
என்று உளத்து ஊகம் செய்வான்
சிறந்த தாதாவே அல்லன் செட்டு
இவன் செய்கை எல்லாம்
இறந்திடும் தருமம் ஏற்கும்
மிடியரும் இன்றேல் எங்கும்.

உரை:

''செல்வத்துப் பயன் ஈதல்'' என்பது குமரகுருபரர் வாக்கு. வறியவன் ஒருவன் செல்வர் ஒருவரை அணுகி, தனக்கு ஏற்படும் இழிவைக் கருதாமல், 'எனக்கு ஏதாவது உதவுங்கள்' என்று இரந்து நிற்கும்போது, அவனை மிக அற்பனாகக் கருதி அவனுக்கு உதவாமல் இருந்து விடுகிறார். அதே வேளையில் தமக்குக் கிடைக்கும் புகழ், மாலை மரியாதைகள், விளம்பரம் ஆகியவற்றைப் பெரிதாக எண்ணித் தம்மைப் போன்ற செல்வர்கள் எங்கிருப்பர் என்று தேடிப் போய்த் தாராளமாக வழங்குகிறார். இவரைப் போன்ற நன்கொடையாளர் உண்மை வள்ளல்கள் அல்லர். செல்வர் ஒருவர் வறியவருக்கு ஈயும்போது தான் அவருக்குப் புண்ணியம் கிடைக்கிறது. ஏற்பவர் இல்லையானால், தருமம் உலகில் நில்லாது நாசமாம். ஆதலால் வந்து ஏற்பார்க்குத் தானஞ் செய்தல் அவசியமாம்.

Koviloor Digital Library

விளக்கம்:

இறந்திடும் - நாசமாம்; மிடியர் இன்றேல் தருமம் இறந்திடும் என்க.

செறிந்து - அணுகி; பெரியன் - செல்வன்; எங்ஙன் - எவ்வாறு; பெரியன் எங்ஙன் உறைந்துள்ளளான் என மாற்றிக் கூட்டுக. ஊகம் - ஆராய்வு; தாதா - வள்ளல்; மிடியர் - வறியர். தன் மேன்மை நோக்கில் தேடி ஈதல் செட்டு எனப்படும். இவன் செய்கை செட்டு என மாறிக் கூட்டுக. கோடி பேரில் ஒருவர்தாம் வள்ளலாக இருப்பர் என்பது அவ்வையார் வாக்கு.

''தாதா கோடிக்கு ஒருவர்''

(அவ்வையார் தனிப்பாடல்)

குறிப்பு:

''இரக்கத்தோடு இல்லாதவருக்கு ஈந்து வாழ்க; அதன் காரணமாக உண்டாகும் புகழோடு வாழ்க; இதைத் தவிர, உடலோடு கூடி வாழும் மனித உயிருக்கு அதனைப்பின் தொடரும் ஊதியம் வேறு இல்லை''

''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு''

(திருக்குறள் - 231)

''பொருள் இல்லாதவரை வருத்தும் பசியை ஒருவர் தீர்ப்பாராக. அவ்வாறு ஈவது, அழிந்து போகிற பொருள் அழியாது சேமமாயிருந்து பின் வந்து உதவுதற்கு உரிய இடம் கிடைத்ததாகும்.''

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி''

(திருக்குறள் - 226)

''ஒருவருக்கும் உதவி செய்யாத காரணத்தால், பலராலும் விரும்பப் பட்டாதவன் கையில் உள்ள செல்வம், ஊர் நடுவிலே உள்ள நஞ்சு மரம் பழுத்திருப்பது போலாகும்.''

''நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம் பழுத்தற்று''

(திருக்குறள் - 1008)

''இட்டுக் கெட்டவர் யாரும் இல்லை''. *(பழமொழி)* (43)

கொடுக்க இல்லையெனினும் உபசரித்தலிற் பேறுண்டு

213. பொருளரிதாகிற் கேட்பார்க் கின்சொலு
மரிதோ போந்தால்
விரைவுட னெழுகை யோடல்
வியந்தெதிர் கொள்கை பீடத்

Koviloor Digital Library

துரிமையி னிருத்தல்
பாதபூசனையுகப்புச் செய்கை
பிரிபொழுதுடனே செல்கை யெனுமிவை
யேழும் பேறே.

பொருள் அரிது ஆகில் கேட்பார்க்கு
இன்சொலும் அரிதோ போந்தால்
விரைவுடன் எழுகை; ஓடல்; வியந்து
எதிர் கொள்கை; பீடத்து
உரிமையில் இருத்தல்; பாதபூசனை;
உகப்புச் செய்கை;
பிரிபொழுது உடனே செல்கை; எனும்
இவை ஏழும் பேறு ஏ.

உரை:

பொருள் உதவியை நாடி வந்த புதியவருக்கு உதவ உங்களிடம் பொருள் இல்லாவிட்டால் என்ன? நல்ல இனிய சொற்களுமா இல்லை? ஆதலால், வந்தவரை இனிய சொற்களால் வரவேற்று முகம் மலர்ந்து பேசுக. உங்கள் இல்லத்திற்குச் சிவஞானி போன்ற சான்றோர் வந்தால், உங்களுடைய இருக்கையை விட்டு விரைந்து எழுக; ஓடிச் சென்று வந்த சான்றோரை எதிர்கொண்டு வரவேற்றிடுக; அவருடைய தகுதிக்கு ஏற்பப் பொருத்தமான இருக்கையில் அவரை அமரச் செய்க; இன்று அல்லவா எங்கள் இல்லம் தூயதாக ஆயிற்று என்று அப் பெரியாரின் வருகையைப் பாராட்டிப் பேசுக; பருகுவதற்குக் குளிர்ந்த நீரோ இனிய பாலோ தருக; அவருடைய திருவடிகளை நீரால் அலம்பிப் பூக்கள் இட்டுக் கீழே விழுந்து வணங்கி எழுக; அவர் விடைபெறும் போது மெல்லப் பதினாறு அடி தூரம் வரை பின் சென்று வழிவிடுக. இந்த ஏழு செயல்களும், நீங்கள் சிவபிரான் திருவருள் பெற உதவும் ஏழு வகைப் பேறுகள் ஆகும்.

விளக்கம்:

போந்தால் - வீட்டுக்கு வந்தால்; எழுகை - எழுந்திருத்தல்; எதிர் கொள்கை - வரவேற்றல்; பீடம் - இருக்கை; உகப்புச் செய்கை - உபசாரம் செய்தல்; பிரிபொழுது - விடைபெற்றுச் செல்லும்போது; உடனே செல்கை - பின் செல்லல்; ஏ - அசை. (44)

தக்கவரிடத்தில் ஏற்றால் ஏற்பவருக்கும் பலன்

214. இரக்க மாதரவு கூர வீபவன் கையிலேற்றா
னிருப்பனே யீந்தானோடு மீசனதுலக மெய்தி
யிரக்கமாதர விலான் கையேற்றவனீந்தானோடு
மிருப்பனே நிரையந் தன்னு ளெண்ணிமுன்வினையை யெய்த்தே.

Koviloor Digital Library

இரக்கம் ஆதரவு கூர ஈபவன் கையில் ஏற்றான்
இருப்பனே ஈந்தானோடும் ஈசனது உலகம் எய்தி
இரக்கம் ஆதரவு இலான்கை ஏற்றவன் ஈந்தானோடும்
இருப்பனே நிரையம் தன்னுள் எண்ணிமுன் வினையை எய்த்து ஏ.

உரை:

அன்பும் அருளும் பெருக உதவும் ஒரு வள்ளலின் கையில் இருந்து ஒரு பொருளைப் பெற்றால், கொடுத்த வள்ளலும் அவரிடமிருந்து ஏற்றவரும் சிவ உலகம் அடைவர். அன்பும் அருளும் இல்லாமல் வெறும் புகழுக்காக, விளம்பரத்துக்காக, வழங்கும் கொடையாளியிடமிருந்து ஒரு பொருளை ஏற்றால் அதனை ஏற்றவரும், அப்பொருளை ஈந்தவரும் நரகத்தை அடைந்து, தங்களின் முன் வினைப் பயனை எண்ணிச் சோர்ந்து கிடப்பார்கள்.

விளக்கம்:

''உலகில் பிறக்கும்போது செல்வத்தைத் தம்மோடு கொண்டு வந்தவர் யாரும் இலர்; பிறந்து பெரிதும் முயன்று தாம் ஈட்டிய செல்வத்தைத் தாம் இறக்கும்போது தம்முடன் கொண்டு செல்பவரும் இலர்; பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே உள்ள காலத்தில் நல்பேறு காரணமாகச் சிவபெருமான் தமக்கு அருளியது இச் செல்வம் என்று உணர்ந்து, வறியவர்க்கு உதவாமல் இறப்பவர்கள் கீழ் மக்கள்'' என்கிறார் பட்டினத்து அடிகள். சிவன் தந்ததாகக் கருதிக் கொடுத்தது தான் கொடை ஆகும் என்பது கருத்து.

''பிறக்கும் பொழுது கொடு வந்ததில்லை;
பிறந்த மண்மேல் இறக்கும் பொழுது கொடு போவதில்லை;
இடைநடுவில் குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்தது என்று
கொடுக்க அறியாது
இறக்கும் குலாமர்'' *(திருஏகம்பமாலை - 7)* (45)

சிவபிரான் எழுந்தருளும் இடங்கள்

215. கொடுக்குஞ் செய்கையர் தம்மையும் கூறினம்
விடுக்குஞ் செய்கையர் தம்மையும் வெண்ணிற
விடைக்கும் பாகன் விமலன் விரும்பிய
விடத்தையு மிசைப்பா மினியாமரோ.

கொடுக்கும் செய்கையர் தம்மையும் கூறினம்
விடுக்கும் செய்கையர் தம்மையும் வெண்ணிற
விடைக்கும் பாகன் விமலன் விரும்பிய
இடத்தையும் இசைப்பாம் இனியாம் அரோ.

Koviloor Digital Library

உரை:

இதுவரை கொடுக்கும் வள்ளல்களையிட்டும் கொடுக்கும் பண்பற்றவர்களை யிட்டுஞ் சொன்னோம். இனி, எருதின் மீது அமர்ந்து அதனைச் செலுத்தும் தூயவனான சிவபெருமான் விரும்பி எழுந்தருளியுள்ள திருப்பதிகளைப் பற்றி உரைப்போம்.

விளக்கம்:

கொடுக்கும் செய்கையர் - வள்ளல்கள்; விடுக்கும் செய்கையர் - கொடுத்தலை மேற்கொள்ளாது விடுவோர்; விடை - எருது; பாகன் - செலுத்து கிறவன்; விடைக்கும் பாகன் - விடைக்குப் பாகன்; விமலன் - தூயவன்; விரும்பிய இடம் - திருக்கோயில்; இசைப்போம் - உரைப்போம்; அரோ - அசை. (46)

சிவன் விரும்பும் புண்ணியத் துறைகள்

216. தீர்த்தமார் சிவகாசி திகழ் குருக்
கேத்திரம் பிரயாகை கிளரலர்
பூத்தபுட் கரிணியாதி புனிதர்க
ளார்த்த கங்கையலை கடலாதியும்.

தீர்த்தம் ஆர் சிவகாசி திகழ் குருக்
கேத்திரம் பிரயாகை கிளர் அலர்
பூத்தபுட்கரிணி ஆதி புனிதர்கள்
ஆர்த்த கங்கை அலைகடல் ஆதியும்.

உரை:

சிவகாசி சிறப்புடைய குருச்சேத்திரம், பிரயாகை, தாமரைப் பூக்கள் பூத்திருக்கும் தடாகம், ஞானிகள் விரும்பும் கங்கை, அலைகளை உடைய கடல் ஆகியனவும்,

விளக்கம்:

இப்பாடல் தலமும் தீர்த்தமுமாகிய புண்ணியத் துறைகளைக் குறிக்கிறது. கவிச் சக்கரவவர்த்தி கம்பர் இவற்றையடைதலை புண்ணியத்துறைகளாடல் என்று கூறுகிறார். புண்ணியத்துறைகளை அடைந்தாற் பாவங்கள் அகலும் என்பது நம்பிக்கை.

தீர்த்தம் - புனிதத் தலம்; திகழ் - சிறப்பான; குருக்கேத்திரம் - குருச் சேத்திரம், கவுரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே நடைபெற்ற பாரதப்போர் நிகழ்ந்த இடம். இது இந்தியாவின் தலைநகரான டில்லிக்கு அருகில் இருக்கிறது.

Koviloor Digital Library

பிரயாகை - கங்கையாறு, யமுனையாறு, சரசுவதியாறு என்ற மூன்று ஆறுகளும் ஒன்று சேரும் இடம். இது வட இந்தியாவில் உள்ளது.

கங்கை - கங்கையாறு; அலர்பூத்த புட்கரிணி - தாமரைத் தடாகம்.

குறிப்பு:

இப்பகுதியின் தலம், தீர்த்தம் இரண்டும் விமலன் விரும்பும் இடம் என்ற கருத்தேயுள்ளது. புண்ணியத் துறைகளாடல் - புண்ணியத் தலங்களை அடைதல் என்னும் பொருட்டு. (47)

217. கரப்பிலா நைமிசாரணியங் கவின்
பருப்பதம் வேதபர்ப்பதங் கோகன்னம்
அரத்த மேனி யரியர மம்பையும்
விருத்த வேதியர் வெண்ணையும் பெண்ணையும்.

கரப்புஇலா நைமிசாரணியம் கவின்
பருப்பதம் வேதபர்ப்பதம் கோகன்னம்
அரத்தமேனி அரிஅரம் அம்பையும்
விருத்த வேதியர் வெண்ணையும் பெண்ணையும்.

உரை:

வஞ்சனையில்லாத நைமிசாரணியமும், அழகு வாய்ந்த திருப்பருப் பதமும், வேதகிரியும், திருக்கோகரணமும், சிவந்த நிறம் உள்ள அரியும் அரனும் சேர்ந்த பதியான அரிஹரமும் அம்பர் மாகாளமும், நம்பி ஆரூரர்க்கு அருள் செய்யச் சிவபிரான் முதிய ஆதி சைவராக எழுந்தருளிய திருவெண்ணெய் நல்லூரும், பெண்ணையாறும்,

விளக்கம்:

கரப்பு - வஞ்சகம்; நைமிசாரணியம் - இமயமலைப் பகுதியில் உள்ள ஒரு காடு. கவின் - அழகு; பருப்பதம் - திருப்பருப்பதம், ஸ்ரீசைலம், இது ஆந்திர தேசத்திலுள்ள சைவத் திருப்பதி. கோகன்னம் - திருக்கோகரணம்; அரத்த மேனி - சிவந்த மேனி; அரிஅரம் - அரிகரம்; அரியும் அயனும் சேர்ந்திருக்கும் பதி; அம்பை - அம்பர் மாகாளம்; இது தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒரு சைவத் தலம். வெண்ணை - திருவெண்ணெய் நல்லூர். பெண்ணை - பெண்ணையாறு. (48)

218. ஒற்றியூர் திருவோத்தூர் விளைவய
லுற்றவூற லுயர்புகழ் வான்மியூர்
வெற்றியூர் திருப்பாசூர் விரிஞ்சையும்
கற்று முற்றினர் காரி வரையுமே.

Koviloor Digital Library

ஒற்றியூர் திருவோத்தூர் விளைவயல்
உற்ற ஊறல் உயர்புகழ் வான்மியூர்
வெற்றியூர் திருப்பாசூர் விரிஞ்சையும்
கற்றுமுற்றினர் காரி வரையும் ஏ.

உரை:

திருஒற்றியூர், திருஒத்தூர், நெல் வயல்களையுடைய திருஊறல், சிறந்த புகழுக்கு உரிய திருவான்மியூர், வெற்றி ஊர், திருப்பாசூர், திரு விரிஞ்சை, காரி கரை என்பனவும்.

விளக்கம்:

மேலே குறித்துள்ள ஊர்கள் யாவும் தமிழகத்தில் உள்ளவை; சைவ மக்களுக்கு நன்கு தெரிந்தவை. கற்று முற்றினர் - கல்வியிற் சிறந்த புலவர்கள். காரி வரை - காரிகரை என்பதன் பிறழ்வாகலாம். ஏ - அசை. (49)

219. கனகமார் முகலிக்கரை காஞ்சி நல்
லனகரா முதுகுன்றருணாசலம்
முனிவர் சேர் குடமூக்கிடை மாமரு
துனரு முத்தனாரூர் புலியூருமே.

கனகமார் முகலிக்கரை காஞ்சி நல்
அனகராம் முதுகுன்றம் அருணாசலம்
முனிவர்சேர் குடமூக்கு இடைமாமருது
உ(ன்)ன அரும்முத்தன் ஆரூர் புலியூரும் ஏ.

உரை:

ஆந்திர நாட்டில் பொன்முகரி நதியும் கச்சிக் கரையும், பாவம் இல்லாத சிவன் உறையும் திருமுதுகுன்றமும், திருஅண்ணாமலையும், முனிவர் வாழும் திருக் குடமூக்கும், திருவிடைமருதூரும், எண்ணி உணர இயலாத அரிய சிவன் இருக்கும் திரு ஆரூரும், திருப்புலியூரும்.

விளக்கம்:

கனகமார்முகரி - பொன்முகலி ஆறு. காஞ்சிகரை - கச்சிக் கரை என்ற தலம். காஞ்சி - கச்சி. அருணாசலம் - திருவண்ணாமலை. முனிவர் சேர் - முனிவர் வாழும். குடமூக்கு - திருக்குடந்தை; இந்த ஊரை இன்று கும்பகோணம் என்று சொல்லுகிறார்கள். முத்தன் ஆரூர் - சிவபிரான் உறையும் ஆரூர் முத்தன். இங்கு சிவபிரான் எல்லாவற்றினின்றும் விடுபட்டவன் என்ற பொருள். விடுபட்டவன் என்பது எல்லாவற்றிலுங் கலந்திருந்துகும் அவற்றின் தன்மையில்தான் தட்டா திருத்தல். (50)

Koviloor Digital Library

220. காழி முல்லையாறு தென் கண்டியூர்
வீழி வேதவனந் திருவிற்குடி
வாழை மல்கு வலஞ் சுழி வாஞ்சியந்
தாழை நீடு வெண்காடு சாய்க்காடுமே.

காழி முல்லை யாறு தென் கண்டியூர்
வீழி வேதவனம் திருவிற்குடி
வாழை மல்கும் வலஞ்சுழி வாஞ்சியந்
தாழை நீடு வெண்காடு சாய்க்காடும் ஏ.

உரை:

சீகாழி, திருமுல்லைவாயில், திருவையாறு, அழகிய திருக்கண்டியூர், திருவீழிமிழலை, திருமறைக்காடு, திருவிற்குடி, வாழைகள் நிரம்பிய திருவலஞ்சுழி, திருவாஞ்சியம், தென்ன மரங்கள் நிரம்பிய திருவெண்காடு, திருச்சாய்க்காடும்.

விளக்கம்:

மேற்கண்ட ஊர்கள் அனைத்தும் தமிழகத்தில் உள்ளவை.

தென் - அழகு; வேதவனம் - மறைக்காடு;

மல்கும் - பெருகும்; தாழை - தென்ன மரம்; ஏ - அசை.

குறிப்பு:

மடல்பெரி தென்ற தாழை தென்னையல்ல. (51)

221. எழிலுமார் பரங்குன்றிராமீச்சரம்
பொழிலுமார் மதுராபுரி பூவணம்
அழகுமாரு நெல்வேலி யஞ்சைக் களங்
குழகன் புக்கொளியூர் கொலிக் குன்றமே.

எழிலும்ஆர் பரங்குன்று இராமீச்சரம்
பொழிலும்ஆர் மதுராபுரி பூவணம்
அழகும் ஆரு நெல்வேலி அஞ்சைக்களம்
குழகன் புக்கொளியூர் கொ(ல்)லிக் குன்றம் ஏ.

உரை:

அழகு நிரம்பிய திருப்பரங்குன்றம், திருஇராமேசுவரம், சோலைகள் நிரம்பிய தென்மதுரை, திருப்பூவணம், அழகிய திருநெல்வேலி, திருவஞ்சைக்களம், சிவன் உகந்த திருப்புக்கொளியூர், கொல்லிமலை ஆகியவையும்.

Koviloor Digital Library

விளக்கம்:

எழில் ஆர் - அழகு நிரம்பிய; பொழிலும் ஆர் - சோலைகள் சூழ்ந்த; மதுராபுரி - பாண்டிய மன்னர்களின் அரச நகரான மதுரை; குழகன் - சிவன்; குன்றம் - குன்று, சிறுமலை; ஏ - அசை. (52)

222. கோதனங்கள் குவிந்த விடங்களு
மாதபோதனர் வாழு மடங்களு
மீதல் வேட்கையர்க் கேய்விட மின்னு முண்
டோது வாங்கால பேதமு மோர்கவே.

கோதனங்கள் குவிந்த இடங்களும்
மா தபோதனர் வாழும் மடங்களும்
ஈதல் வேட்கையர்க்கு ஏய்இடம் இன்னும் உண்டு
ஓதுவாம் கால பேதமும் ஓர்க ஏ.

உரை:

பசு மந்தைகள் உள்ள இடங்களும், சிவஞானிகள் எழுந்தருளியுள்ள சைவத் திருமடங்களும், கொடுப்பதில் ஆர்வம் உள்ள ஈகையாளர்களுக்குப் பொருத்தமான திருத்தலங்களும் பல இருக்கின்றன. இனி, கால வேறுபாடுகளைக் கூறுவோம். அறிவாயாக.

விளக்கம்:

கோதனம் - பசுச் செல்வம்; குவிந்த - மந்தையான; மாதபோதனர் - பெரிய சிவஞானிகள்; மடம் - துறவி வாழுமிடம்; வேட்கை - ஆர்வம்; ஓதுவாம் - கூறுவோம்; ஓர்க - அறிக; ஏ - அசை. (53)

ஈதற்குச் சிறந்த காலம்

223. அரண மாதித்தன் றன்னை யடார்ந்திட
விரவும் வேலையும் வெண்மதி தன்னையு
மிருமையான வயனமு மீவவர்க்
குரிய வேலைகண் மற்றுமுண்டோர்கவே.

அரணம் ஆதித்தன் தன்னை அடர்ந்திட
விரவும் வேலையும் வெண்மதி தன்னையும்
இருமையான அயனமும் ஈபவர்க்கு
உரிய வேலைகள் மற்றும் உண்டு ஓர்க ஏ.

Koviloor Digital Library

உரை:

இக்கருத்திற் பொருத்தவீனம் உண்டு. இங்கு குறித்த வட்டம் பரிவேடம். அக்கருத்துக் கொள்வதில் அடர்தல் என்ற சொல்லுக்கு இணக்கப்பாடில்லை. இனி, 1888இன் சுப்புராய பிள்ளை பதிப்பில் அரவமாதித்தன் என்று பாடங் கண்டு இருக்கிறது. அதன்படி பெறக் கூடும் சூரிய கிரகணம் என்ற பொருளுக்கு அடர்தல் இணங்கும் கிரகண காலம் கொடைக்குச் சிறந்த காலமாகலாம். எனவே பாடத்தை மாற்றி உரைத்தல் நலம். அங்ஙனமாகையில், கேது என்ற பாம்பு சூரியனை நெருக்க அணையுஞ் சூரிய கிரகண காலமும் என உரை அமையும். கதிரவனைச் சுற்றியும் கோட்டை கட்டியதுபோல நெருக்கமாக ஒரு வட்டம் அமைந்திருக்கும் காலம்; உத்த ராயண தக்ஷிணாயன புண்ணிய காலங்கள்; தை மாதத் தொடக்க நாள்; ஆடிமாதத் தொடக்க நாள் ஆகிய காலங்கள் என்பன கொடையாளர் திருத்தலங்களில் கொடை வழங்குவதற்கு ஏற்ற காலங்கள் ஆகும்; வேறு காலமும் உண்டு அறிவாயாக.

விளக்கம்:

அரணம் ஆதித்தன் - ஆதித்தன் அரணம், கதிரவனைச் சுற்றிலும் ஒரு வட்டம் சூழ்ந்திருக்கும் நேரம்; **அடர்ந்திட** - நெருங்கி; **விரவும் வேலை** - பொருந்தும் காலம்; **இருமை** - இரண்டு; **அயனம்** - ஓர் ஆண்டில் பாதி; சூரியன் வடக்கும் தெற்கும் நோக்கும் தன்மையால் அமைந்தது. **அயனம்** - செல்லுதல்; **வேலை** - இங்குகாலத்தைக் குறிக்கிறது; **ஏ** - அசை; **அர(வ)ணம்** - மதில் சூழ்ந்த கோட்டை. (54)

சிரத்தை இன்னதெனல்

224. **உரைத்தனங்கால பேதமு மோர்கவுட்**
சிரத்தை தன்னையுஞ் செப்புவஞ் சிந்தையுட்
பரித்த மெய்மைப் பரமப் பிரீதியே
குருத்த பத்தியு மற்ற தன் கூற்றரோ.

உரைத்தனம் கால பேதமும் ஓர்க உள்
சிரத்தை தன்னையும் செப்புவம் சிந்தை உள்
பரித்த மெய்மைப் பரமப் பிரீதியே
குருத்த பத்தியும் மற்று அதன் கூறு அரோ.

உரை:

கொடையாளர் ஒருவர் கொடை வழங்குதற்கு ஏற்ற கால வேறுபாடுகளைச் சொன்னோம். இனி, சிரத்தை பற்றியும் உரைப்போம். உள்ளத்தில் கொண்ட மேலான ஆதரவே உண்மையான சிரத்தை பெருத்த பத்தியும் சிரத்தையின் ஒரு கூறே ஆகும்; இதனை அறிவாயாக.

Koviloor Digital Library

விளக்கம்:

உரைத்தனம் - சொன்னோம்; செப்புவம் - உரைப்போம்; சிரத்தை - அன்பு; சிந்தையுள் பரித்த - உள்ளத்தில் தாங்கிய;

மெய்ம்மை - உண்மை; பரமப்பிரீதி - மேலான விருப்பம்; குருத்த பத்தி - பெருத்த பத்தி; கூறு - பகுதி; அரோ - அசை.

குறிப்பு:

சிரத்தை - கடமையிற் கண்ணும் கருத்துமாய் ஒன்றி நிற்கும் அத்யந்த ஈடுபாட்டுநிலை. அதில் அன்பும் இருக்கும். ஆனால், சிரத்தைக்குப் பொருள் அன்பல்ல. ஒரே சொல்லில் ஆதரவு என்று சிரத்தைக்குப் பொருள் கூறுதல் பொருந்தும்.

குரு - பெருமை; குருத்த - பெருத்த. (55)

நல்ல சூழ்நிலையில் தவத்தினர்க்கு உதவுதலின் பலன் மேம்பாடு

225. சிறந்த தேசமுங் காலமுஞ் சிந்தையுட்
பிறந்த காதலும் பெற்றவர் நற்றவர்க்
கறைந்த நூல்விதி யர்ச்சனை யாக்குக
நிறைந்து வானெனவே பலநீடுமே.

சிறந்த தேசமும் காலமும் சிந்தை உள்
பிறந்த காதலும் பெற்றவர் நல் தவர்க்கு
அறைந்த நூல்விதி அர்ச்சனை ஆக்குக
நிறைந்து வான் எனவே பலம் நீடும் ஏ.

உரை:

உயர்ந்த காசி, சிதம்பரம் முதலான தேசப் பொருத்தமும், அயனம் சங்கிராந்தி முதலான காலப் பொருத்தமும் உள்ளத்தில் அன்பும் வாய்க்கப் பெற்றுத் தவமுடைய சிவஞானிகளைச் சிவாகம முறைப்படி வழிபாடு செய்து, அவர்களுக்குத் தேவை யானதை உதவுக. அவ்வாறு சிவஞானிகளுக்கு உதவிய புண்ணியப் பயன் வான வெளியைப் போலப் பரந்து அழியாமல் நிலைத்து நிற்கும்.

விளக்கம்:

தேசம் - தேசம் என்பது இங்கு சிவபிரான் திருக்கோயில்கள் உள்ள நகரங்களைக் குறிக்கிறது; காலம் - முன்னதற்கு முன் பாடலிற் சொன்ன காலம்; சிந்தை - மனம், உள்ளம்; காதல் - அன்பு; ''காதலாகிக் கசிந்து'' என்பது ஆளுடைய பிள்ளையார் வாக்கு.

Koviloor Digital Library

நல்தவர்க்கு - சிவஞானிகளுக்கு; நூல்விதி - சிவ ஆகம முறைப்படி; அறைந்த - சொன்ன; அர்ச்சனை - மலர் தூவிச் செய்யும் வழிபாடு; பலம் - புண்ணியம்; ஏ - அசை. (56)

கந்தப் பெருமான் உரைத்த தெனல்

226. என்று பயன் மேன்மை தரு காரண மிசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்று புலனைந்தினையும் வெய்ய வினைநைய
நின்ற முனியன்றுணர நிர்க்குண னினைந்தே.

என்று பயன் மேன்மை தரு காரணம் இசைத்தான்
குன்றவர் மடம் கொடி தனக்கு அருள் கொடுத்தான்
வென்று புலன் ஐந்தினையும் வெய்ய வினை நைய
நின்ற முனி அன்று உணர நிர்க்குணன் நினைந்து ஏ.

உரை:

மலையில் வாழும் வேடுவர் தலைவன் நம்பிராசன் திருமகளான, இளமையும் மென்மையான உடலமைப்பும் கொண்ட வள்ளி நாயகிக்கு அருள் செய்த கந்தப் பெருமான் கொடிய தீவினை கெடுமாறு மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளையும் அடக்கிய அகத்திய முனிவன் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கருதி, கருமம், தவம் முதலானவை தரும் மேன்மையான பயன்களின் காரணஙகளை முன்னர் உரைத்தான்.

விளக்கம்:

இசைத்தான் - சொன்னான்; குன்றவர் - மலையில் வாழும் வேடுவர்; மடம் - இளமை; கொடி - கொடி போன்ற வள்ளியம்மை; வெய்ய - கொடிய; நைய - கெட;

அன்று - முன்னர்; நிர்க்குணன் - குணங்கள் பொருந்தாதவன்; அதாவது ஆன்மாவோடு ஒன்றாய் வேறாய் உடனாயிருந்தும் அதன் குணத்தில் ஒட்டாதவன் கந்தப் பெருமான். (57)

சிவபெருமான் துதி

227. வானவர் நாடருமாதவனே மான
விருட்டறு மாதவனே
கானமர் வேடனுமானவனே
கடிதெனவே செலுமானவனே

Koviloor Digital Library

யேனமு மானவ னெண்ணலனே
யெம்முளத்தாக்கிடு மெண்ணலனே
யூனமர் வெண்டலையுண்டவனே
யுத்தமர் நெஞ்சகத்துண்டவனே.

வானவர் நாட அருமாதவனே மானவ
இருட்டு அறும் ஆதவனே
கான் அமர் வேடனும் ஆனவனே கடிது
எனவே செலும் ஆன் அவனே
ஏனமும் ஆனவன் எண்ணலனே எம்
உளத்து ஆக்கிடும் எண் நலனே
ஊன் அமர் வெண்தலை உண்டவனே
உத்தமர் நெஞ்சகத்து உண்டு அவனே.

உரை:

பிரமன், விஷ்ணு முதலானவர் அறிவதற்கு அரிய பெருந்த போதனனே, நான் எனதெனும் அபிமான இருளை ஒழிக்கும் குருவாய் வரும் ஞான சூரியனே! பார்த்தனுக்கு அருள் செய்யக் காட்டில் வாழும் வேடுவனாக வந்தவனே! விரைந்து செல்லும் எருதை ஊர்தியாகக் கொண்டவனே! பன்றி வடிவம் கொண்ட விஷ்ணுவால் திருவடிகள் அறியப்படாமல் நின்றவனே! எட்டு வகைக் குணங்கள் உடையவனாக என் நெஞ்சத்தில் அமர்ந்தவனே! தசை பொருந்திய பிரமனுடைய மண்டை ஓட்டில் பிச்சை ஏற்றவனே! சிவஞானிகளின் உள்ளத்தை விட்டு அகலாமல் எப்பொழுதும் இருப்பவனே!

விளக்கம்:

அருமாதவன் - அரிய பெரிய தபோதனன்; மானவன் - மனிதன்; இருட்டு அறும் - அறியாமை அறுதற் கேதுவான; ஆதவன் - கதிரவன்; கான் அமர் - காட்டில் வாழும்; கடிது - விரைவு; ஆன் - எருது; ஏனம் - பன்றி; எண்ணலன் - எண்ணி அறிய முடியாதவன்; எண்நலன் - எண்குணம்; ஊன் - தசை; ஊன் அமர் - தசை அமர் தசை உள்ள; வெண்தலை - மண்டை ஓடு; உத்தமர் - இது இங்கு சிவஞானி களைக் குறிக்கிறது. உண்டவன் - உள்ளவன் எனும் பொருட்டு. (58)

சிவபெருமான் துதி

228. புலிமுனிபூசை புரிந்தவனே
புகழ்நடமன்று புரிந்தவனே
பலிதருவார்க் கிதபாடணனே பாங்கிலர்
வாய்க்கித பாடணனே

Koviloor Digital Library

யலலறப் போதக வாரியனே
யவிர்சடைதாங்கிய வாரியனே
மலைசிலையாக்கிய வன்மையனே வந்து
மரிப்பன வன்மையனே.

புலிமுனி பூசை புரிந்தவனே
புகழ்நடம் அன்று புரிந்தவனே
பலிதருவார்க்கு இதபாடணனே பாங்க இலர் .
வாய்க்கு அகித பாடணனே
அல்லல் அறப்போதக ஆரியனே
அவிர்சடை தாங்கிய வாரியனே
மலைசிலை ஆக்கிய வன்மையனே வந்து
மரிப்பன அன்மையனே.

உரை:

புலிக்கால் முனிவர் செய்த வழிபாட்டை ஏற்றுக்கொண்டவனே! பார்த்தவர் பாராட்ட முன்பு ஒருநாள் தில்லைச் சிதம்பரத்தில் இன்பத் திருக்கூத்து ஆடியவனே! பிச்சை உணவு கொண்டு வந்த தாருக வனத்து ஆரியப் பெண்களிடம் இனிய சொற்களைப் பேசியவனே! சிவ ஆகமங்களை நம்பாதவர்களிடம் கடுஞ்சொற்களை உரைத்தவனே! பக்குவப்பட்டவர்களின் துன்பங்கள் கெட அவர்களுக்குச் சிவ ஆகம உண்மைகளை உணர்த்தும் ஞான ஆசிரியனே! ஒளி பொருந்திய மயிர்க்கற்றையில் கங்கை நீரை ஏற்றவனே! முப்புரத்தவர்களின் மூன்று கோட்டைகளையும் அழிக்க மேரு மலையை வில்லாக ஏந்திய வல்லமையாளனே! உலகில் பிறப்பதும் இறப்பதும் இல்லாதவனே!

விளக்கம்:

சிவபிரான் துதியாக வந்துள்ள இரண்டு பாடல்களிலும் உள்ள செய்திகள், *கோயிற் புராணம்* என்ற சிதம்பர தல புராணத்தில் உள்ளவை.

பலி - பிச்சை உணவு; பாடணம் - பேச்சு; இதபாடணம் - இன்சொல்; அகிதபாடணம் - வன்சொல்; அல்லல் - துன்பம்; அவிர் - ஒளி; போதக ஆரியன் - உபதேச குரு; வாரி - நீர்; சிலை - வில்; வன்மையன் - வல்லமையாளன்; அன்மையன் - அல்லாதவன். (59)

குமரன் துதி

229. நினைவார் வினை நனிபோயறு
நிலநீள் கதிரவன் முற்
பனிபோவது மெனவே பசுபதி
யோதிய பனுவன்

Koviloor Digital Library

முனிதான் வினவிய நாணனி
மொழி வாய்மையன் முனியா
தெனையாளுடை யறுமாமுக
னெழிலா ரடியிணையே.

நினைவார் வினை நனிபோய் அறும்
நிலம் நீள் கதிரவன் முன்
பனிபோவதும் எனவே பசுபதி
ஓதிய பனுவல்
முனிதான் வினவிய நாள்
நனி மொழிவாய்மையன் முனியாது
எனை ஆளுடை அறுமாமுகன்
எழிலார் அடி இணை ஏ.

உரை:

உயிர்களுக்கு இறை ஆகிய சிவபெருமான் அருளிய சிவ ஆகமங்களைத் தனக்கு உணர்த்துமாறு ஆறுமாமுகப் பெருமானிடம் அகத்திய முனிவன் வேண்டி நின்ற காலத்தில் அந்த ஆகமங்கள் கூறும் உண்மைகளை அவனுக்கு மிகவும் நன்றாக விளக்கிக் கூறிய குமரன், நான் செய்த குற்றங்களுக்காக என்னை வெறுக்காதவன்; அப்பெருமானுடைய இரண்டு திருவடி மலர்களையும் தம் உள்ளங்களில் பொருத்தி தியானிக்கின்ற அடியவர்களுடைய கருமங்கள், தரைமீது படிந்திருக்கின்ற பனி நீர், கதிரவனின் கதிர்கள் முன்னே நில்லாது மறைவது போல முற்றாக மறைந்து அழியும்.

விளக்கம்:

நனி - மிகவும்; பசு - உயிர்; பதி - தலைவன்; பசுபதி - இறைவன்; ஓதிய பனுவல் - உரைத்த சிவ ஆகம நூல்கள்; எனை - என்னை; ஆளுடை - அருள் செய்யப் பெற்ற;

முனியாது - வெறுக்காது; வாய்மையன் - உண்மை உரைத்தவன்; எழிலார் - அழகுள்ள; அடிஇணை - இணை அடி, இரண்டு திருவடிகள்; ஏ - அசை. (60)

அகத்தியன் துதி

230. விழைவாமிரு வினையாயின விடவு மிருள் கெடவும்
வழுவாகிய மலிமாசுடன் மரவேர் வலியறவு
முழையார் கரமுடையான் மழுவுடையா னடியுறவும்
புழையார் கரமதமாமலி பொதிமாமுனி புகழே.

Koviloor Digital Library

விழைவாம் இருவினை ஆயின விடவும் இருள் கெடவும்
வழு ஆகிய மலி மாசுடல் மரம்வேர் வலிஅறவும்
உழை ஆர் கரம் உடையான் மழு உடையான் அடிஉறவும்
புழை ஆர் கரம் மதம்மாமலி பொதி மாமுனி புகழ் ஏ.

உரை:

நல்வினை தீவினை என்ற இருவினைகள் நீங்கவும், ஆணவ இருள் விலகவும், இழிவான அழுக்கு நிரம்பிய உடல் ஆகிய மரம் தோன்றுவதற்கு ஏதுவாகிய மாயையின் ஆற்றல் ஒடுங்கவும், மானையும் மழுவையும் கைகளில் ஏந்திய சிவபெருமானுடைய திருவடிகளை அடையவும், உள்துளை உள்ள தும்பிக்கையுடைய மதயானைகள் நிறைந்த பொதிகை மலை வாழ் அகத்தியருடைய புகழை விரும்புவோம்.

விளக்கம்:

விழைவோம் - விரும்புவோம்; வழு - குற்றம்; மலி - பெருக; வேர் - மூலம், முதற்காரணம்; உழை - மான்; மழு - கைக் கோடரி; புழை - துளை; கரம் - கை; மதமா - மதயானை; பொதி - பொதிகை, அகத்தியன்; ஏ - அசை. (61)

Koviloor Digital Library

ஐந்தாவது
சிவதரும இயல்

சிவதருமம் என்பது சிவபுண்ணியச் செயல்கள் ஆகும். சிவ பெருமானே முழுமுதற் பரம்பொருள் எனக் கொண்டு, அப் பெருமான் மகிழுமாறு செய்யும் நற் செயல்களே சிவ தருமம் எனப்படும்.

அகத்தியனை விளித்துக்கூறல்

231. இனி முனிவரனே யீச
னியம்பிய தருமமெல்லாந்
துனிநனி தொலையச் சொல்வார்
துணிபிணியுடலைத் தொட்டே
முனிவினை யின்றிநின்ற
மூடரு மீடுகூடி
யெனையுடை யீசனாளும் புரத்தினி
திருக்க வேய்ந்தே.

இனிமுனிவரனே ஈசன் இயம்பிய
தருமம் எல்லாம்
துனிநனி தொலையச் சொல்வாம்
துணிபிணி உடலைத் தொட்டே
முனிவினை இன்றிநின்ற
மூடரும் ஈடுகூடி
எ(ன்)னைஉடை ஈசன் ஆளும்புரத்து
இனிது இருக்க ஏய்ந்து ஏ.

உரை:

அகத்தியனே! பிணி எனத் துணியப்பட்டதான உடற்சார்பில் வெறுப்புக் கொள்ளாத அறியாமை உடையவர்களுக்கும், தவ வலிமை பெற்றுத் தங்கள் துன்பங்களிலிருந்து விடுபட்டு, என்னை அடிமையாகக் கொண்ட சிவபெருமான் ஆளுகையில் உள்ள சிவஉலகை அடைந்து மகிழ்வுடன் இருக்க, அப்பெருமான் அருளிய சிவபுண்ணியம் தரும் நல்ல செயல்களையெல்லாம் உனக்குச் சொல்வோம்.

விளக்கம்:

துனி - துன்பம்; துணி - கவர்ந்த; பிணி - நோய்; முனிவினை - முயற்சி; ஈடு - வலிமை; ஏய்ந்து - சேர்ந்து; ஏ - அசை. (1)

Koviloor Digital Library

அறங்கள் பல

232. அற்புத னமலன் கூறு மறம்பல வயிமிசாதி
கற்பொடுங் கலந்து நானா பலத்தினைக் கருதுவார்க்குத்
தற்பர னருளினாலே தருவன வனந்தகால
நிற்பன தொன்று தொட்டே யன்பரை நீங்காப் பாங்கால்.

அற்புதன் அமலன் கூறும் அறம்பல அயிமிசா ஆதி
கற்பொடும் கலந்து நானா பலத்தினைக் கருதுவார்க்கும்
தற்பரன் அருளினாலே தருவன அனந்தகாலம்
நிற்பன தொன்று தொட்டே அன்பரை நீங்காப் பாங்கால்.

உரை:

எந்தக் காலத்திலும் தன் அடியவர் நெஞ்சை விட்டு விலகாத உரிமையுடைய சிவபிரான், வியக்கத்தக்க தூயவன்; அப்பெருமான் உரைத்த சிவபுண்ணியங்கள் பல. அவற்றுள் பிற உயிர்களிடம் அன்பு செய்தலாகிய கொல்லாமை முதலியன செய்த வனுக்கு நலம் புரியுங் கற்பின் தன்மையோடு கூடியவை. அந்த நல்ல செயல்களைப் புரிகின்றவர்கள், சிவபரம் பொருளின் அருளால் அறம், பொருள், இன்பம், வீடு போன்ற பலவகைப் பயன்களையும் பெற்று எண்ணற்ற காலம் அனுபவிப்பர்.

விளக்கம்:

தொன்றுதொட்டு - பழங்காலம் முதல், எப்பொழுதும்; அற்புதன் - வியக்கத்தக்கவன்; அமலன் - தூயவன்; அறம் - தருமம்; கற்பு - நேர்மை; நானா - பல; தற்பரன் - பரம்பொருள்; அனந்த - கணக்கற்ற; நிற்பன - நிலைப்பன;

பாங்கால் - உரிமையால்; அயிங்கிசா ஆதி - கொல்லாமை முதலியன; அயிங்கிசா - அஹிம்ஸா. (2)

பத்துவகை அறங்கள்

233. அயிங்கிசை பொறையே மெய்ம்மை
யறைதலேயரிய நாணே
யுயர்ந்தவாதரவேயுள்ள மொடுக்கலே
கொடுக்கை தானே
வியந்தவர்ச்சனையே மெய்யூன் வெறுத்துறு
தவமே மேனி
நயந்த பாவனையே யென்னத்
தசமிவை நன்றெந்நாளும்.

Koviloor Digital Library

அயிங்கிசை பொறையே, மெய்ம்மை
யறைதலே, அரிய நாணே,
உயர்ந்த ஆதரவே, உள்ளம்
ஒடுக்கலே, கொடுக்கைதானே,
வியந்த அர்ச்சனையே, மெய்ஊன்
வெறுத்துஉறு தவமே மேனி
நயந்த பாவனையே என்னத்
தசம்இவை நன்று எந்நாளும்.

உரை:

ஓர் உயிரைக் கொன்று அதன் தசையைத் தின்னாமை, பொறுமை, உண்மை பேசுதல், பழி பாவங்களுக்கு அஞ்சுதல், அறச்செயல்களுக்கு ஆதரவு, மன ஒடுக்கம், கொடை, அனைவரும் போற்றுகிற சிவனை மலர்தூவி வணங்குதல், தசையோடு கூடிய உடலின் மீது பற்று இல்லாமை, அம்பலவாணர், முருகன், அம்மை முதலிய உருவத் திருமேனிகளை விரும்பித் தியானித்தல் என்ற பத்துவகைச் செயல்களும் எந்த நாளும் செய்யத் தக்கவை.

விளக்கம்:

அயிங்கிசை - கொல்லாமை; பொறை - பொறுமை; அறைதல் - சொல்லுதல்; நாண் - வெட்கம்; உள்ளம் - மனம்; ஒடுக்கல் - ஒருமைப்பாடு; கொடுக்கை - ஈகை; அர்ச்சனை - வழிபாடு; மெய் - உடம்பு; ஊன் - தசை; தவம் - விரதம்; தசம் - பத்து. (3)

அறத்தின் பயன்

234. இயன்றன வியற்றினாரு மனைத்தையு மியற்றினாரும்
பயன்பல சிவலோகத்திற் பற்றுவர் தத்தம் பாங்கா
னயந்தவர் போகமங்கு நண்ணுவர் திண்ண மண்ணைக்
கயந்தவர் போகங்காட்டுங் கடவுளை யடைவர் கண்டே.

இயன்றன இயற்றினாரும் அனைத்தையும் இயற்றினாரும்
பயன்பல சிவலோகத்தில் பற்றுவர் தம்தம் பாங்கால்
நயந்து அவர்போகம் அங்கு நண்ணுவர் திண்ண மண்ணைக்
கயந்தவர் போகம் காட்டும் கடவுளை அடைவர்கண்டு ஏ.

உரை:

தம்மால் முடிந்த அளவு பிறருக்கு நன்மைகளைச் செய்தவர்களும், எல்லா வகை அறச் செயல்களையும் புரிந்தவர்களும், சிவ உலகை அடைந்து,

Koviloor Digital Library

தம்தம் புண்ணியச் செயல்களுக்கு ஏற்றவாறு அங்குள்ள இன்பங்களை ஆர்வத்தோடு பெறுவார்கள் என்பது உறுதி. உலகப் பொருள்களின்மீது உள்ள பற்றை வெறுத்தவர், சிவனை அடைந்து அவனோடு பொருந்தியிருப்பார்.

விளக்கம்:

இயன்றன - முடிந்தவரை; இயற்றினார் - செய்தவர்; பற்றுவர் - அடைவர்; பாங்கு - உரிமை; நயந்து - ஆர்வத்தோடு; நண்ணுவர் - பெறுவர்; திண்ணம் - நிச்சயம்; மண் - பூமி; கயந்தவர் - வெறுத்தவர்; ஏ - அசை. (4)

துன்பம் தொடராது

235. இன்பமே யங்குத்தங்கி யிருப்பவர்
தமக்கு மெள்குந்
துன்பமே தொடர்வதில்லைத்
துளங்கிளம் பிறையுஞ்சூடு
மின்பொலி சடையன் வேந்தன்
விளைத்தநல் வினையாற் சேர்ந்த
வன்பர்க டலைவரல்லார்
தம்பல மருந்துவாரே.

இன்பமே அங்குத் தங்கியிருப்பவர்
தமக்கும் எள்கும்
துன்பமே தொடர்வது இல்லைத்
துளங்கு இளம்பிறையும் சூடும்
மின்பொலி சடையன் வேந்தன்
விளைத்த நல்வினையால் சேர்ந்த
அன்பர்கள் தலைவர் அல்லார்
தம்பலம் அருந்துவார் ஏ.

உரை:

அந்தச் சிவ உலக இன்பங்களை நுகர்ந்து கொண்டு இருப்பவர்களை இகழப்படுந் துன்பங்கள் நெருங்குவதில்லை. இளம் நிலவு தங்கியிருக்கும் ஒளிவீசும் செஞ்சடையாளனாய்த் தலைவனாயுள்ள சிவனை, தாம் செய்த நல்வினைப் பயனால் அடைந்து முத்திப் பேறு பெற்றவர்கள் பஞ்ச கிருத்திய கர்த்தாக்களாகார். தமக்குரிய இன்பப் பலனை அநுபவிப்பவராகவே இருப்பார்கள்.

விளக்கம்:

எள்கும் - இகழப்படுகின்ற; துளங்கு - ஒளியுள்ள; மின்பொலி - ஒளி

Koviloor Digital Library

விளங்கும்; வேந்தன் - தலைவனாகிய சிவன்; அன்பர்கள் - அடியவர்கள்; தம்பலம் - தம் இன்பப் பலன்; அருந்துவர் - அனுபவிப்பார்கள்; ஏ - அசை.

குறிப்பு:

சிவனை அடைந்தவர் சிவன் போல தாமாகப் பஞ்ச கிருத்தியமுஞ் செய்வர் என்பர் சிவசமவாதிகள். அக்கொள்கை இங்கு மறுக்கப்பட்டுள்ளது. (5)

சிவபூசை

236. முனிவர தருமபேத மொழிந்தனம் பலமு முன்னி
யினிவர மில்லாதாரு மியற்றிடும் பூசையாவு
முனையுரை செய்வா மோர்நீ யொளிர்சடை முடியிலூரும்
பனகமு மதியும் வைத்த பரனடி நினைந்து பாங்கால்.

முனிவர தருமபேதம் மொழிந்தனம் பலமும் உன்னி
இனிவரம் இல்லாதாரும் இயற்றிடும் பூசை யாவும்
உனைஉரை செய்வாம் ஓர்நீ ஒளிர்சடை முடியில் ஊரும்
பனகமும் மதியும் வைத்த பரன்அடி நினைந்து பாங்கால்.

உரை:

அகத்தியனே! ஒளி உள்ள செஞ்சடையில் ஊர்ந்து செல்லும் நாகப் பாம்பை யும், இளம் நிலவையும் அணிந்த சிவபரம் பொருளின் திருவடிகளைக் கருதி, அந்த உரிமையோடு இதுவரை கொல்லாமை, முதலான அறங்களின் இயல்புகளையும் அவற்றின் பயன்களையும் சொன்னோம். இனி, சாதாரண மக்கள் செய்வதற்கு உரிய பூசை, காலம், பயன் ஆகியவற்றையும் உனக்கு உரைப்போம்; அறிவாயாக.

விளக்கம்:

தருமபேதம் - அறவகை; மொழிந்தனம் - சொன்னோம்; உன்னி - நினைத்து; உனை - உனக்காக; ஓர் - ஓர்க, ஆராய்க; உரை செய்வாம் - உரைப்போம்; பனகம் - நாகபாம்பு; மதி - நிலவு; பரன் - சிவபிரான், கடவுள்; பாங்கு - உரிமை. (6)

சிவ வழிபாட்டின் பயன்
ஒருநாட் பூசைக்குப் பைசாச லோக பதவி!

237. அழுக்கினை யறுக்க வல்லரல்ல ராயாகந் தன்னி
லிழுக்குடையவரு மீசனிணையடிக் கொரு நாளிட்ட
பழுப்பிலைப் பாங்கினாலே பற்றியே பைசாசத்தை
யுழுக்குமுன் விதத்தை யுண்டு களிப்புற வுறைவருள்ளே.

Koviloor Digital Library

அழுக்கினை அறுக்கவல்லார் அல்லராய் ஆகம் தன்னில்
இழுக்கு உடையவரும் ஈசன்இணை அடிக்கு ஒருநாள்இட்ட
பழுப்புஇலைப் பாங்கினாலே பற்றியே பைசாசத்தை
உழுக்கும் ஊன்விதத்தை உண்டு களிப்புஉற உறைவர் உள்ளே.

உரை:

உடம்பில் படிந்துள்ள அழுக்குகளைக் குளிப்பதன்மூலம் போக்கித் துப்புரவாக வைத்துக் கொள்ளத் தெரியாத அழுக்கு உடம்பு உடையராய், நெஞ்சிலும் அழுக்குக் குற்றமுமுள்ளவர் தானும், சிவபிரான் திருவடிகளில் மரக்கிளையில் இருந்து உதிர்ந்த ஒரு பழுப்பு இலையை இட்டு வழிபாடு.செய்த புண்ணியப் பயனால், பேயின் தன்மையைப் பெற்று, அழுகிப் போன இறைச்சி வகைகளைப் புசித்து மகிழ்ச்சியோடு பேய் உலகில் வாழ்வார்.

விளக்கம்:

சிவவழிபாடு செய்ய மலர் இல்லாதபோது பச்சிலைகளைப் பயன் படுத்தலாம். அவையும் இல்லாதபோது பழுப்பு இலைகளையும் பயன்படுத்தலாம். சாக்கிய நாயனார் கற்களையே மலராகப் பயன்படுத்தினார். திருக்காளத்தியில் முகலிங்க வடிவில் இருந்த குடுமித் தேவருக்குச் சிவகோசரியார் செய்த மலர் வழிபாட்டைவிடத் திண்ணன் சுவைத்த காட்டுப் பன்றி இறைச்சியும், உமிழ் நீரும் மிக உவப்பாக இருந்தன என்று *திருத்தொண்டர் புராணம்* கூறுகின்றது. அதுபோல் உடலுளத் தூய்மைகள் கொஞ்சமில்லாதவரும் பழுப்பிலையாவது இட்டுப் பூசித்து இருந்தால் பைசாச பதவி அடைவர் என்பதாம்.

உடல் உள அழுக்குள்ளார் பைசாச பதவிக்கே தகுதியற்றவர். ஆனால் சிவனடிக்குப் பழுப்பிலையாவது இட்டதன் பலன் அவரை அப்பதவிக்கு உயர்த்தி யது எனச் சிவபூசை மகிமை கூறப்பட்டிருக்கிறது.

பொருள் பூசனை; பைசாசம் - பைசாச பதவி, புத்தி தத்துவத்தில் உள்ள ஒரு பதவி இது; ஆகம் - நெஞ்சு, உள்ளம். (7)

சிவ வழிபாட்டின் பயன்
இரண்டு நாட்பூசைக்கு ராக்ஷத லோக பதவி

238. சினத்தினாற் சிவந்த கண்ணர்
சிறப்புறு வினையுந் தீர்ந்த
மனத்தினாரிரண்டு வாரமலர்
சிவனடியின் வைக்கிற்
றனக்கிணையில்லாதாருமவர் தமைச்
சாரச் செய்வன்
துனைத்தெழு மரக்கர் தொக்கபுரத்தினுட்
டுளக்கந் தோயார்.

Koviloor Digital Library

சினத்தினால் சிவந்த கண்ணர்
சிறப்புஉறு வினையும் தீர்ந்த
மனத்தினார் இரண்டு வாரம் மலர்
சிவன் அடியில் வைக்கில்
தனக்கு இணை இல்லாதாரும் அவர்
த(ம்)மைச் சாரச் செய்வன்
துனைத்து எழும் அரக்கர் தொக்க
புரத்தினுள் துளக்கம் தோயார்.

உரை:

கோபத்தினால் சிவந்த கண்களை உடையவர்களும், புகழுக்குரிய நல்வினை களைச் செய்யாதவர்களும் ஈனமுரடர்களும் இரண்டு நாள்கள் அன்புடன் சிவபிரான் திருவடிகளில் இருநாள் பூக்களை இட்டு வழிபாடு செய்தால் தனக்கு ஒப்பானவர் யாரும் இல்லாத சிவன், அவர்களை விரைவாக எழுந்து நடமாடு கின்றவர்களும் யாருக்கும் பயப்படாதவர்களுமான இராக்கதர் வாழும் உலகில் இருக்கும்படி செய்வான்.

விளக்கம்:

வாரம் - வாரம் என்றால் இப்பொழுது ஏழுநாள்களைக் கொண்ட கால அளவுக்கு உரிய பெயராகும். ஆனால், நாம் கிழமை என்று சொல்வதை மலை யாளிகள், பிராமணர்கள், சோதிடர் ஆகியோர் வாரம் என்பர். எடுத்துக்காட்டாக நாம் ஞாயிற்றுக்கிழமை என்று சொல்வதை அவர்கள் ஆதித்த வாரம் என்று சொல்வார்கள். துனை - விரைவு; தொக்க - திரண்டு; துளக்கம் - பயம்; அரக்கர் - இரக்கம் என்கிற குணம் இல்லாதவர் அரக்கர் என்பது கம்பர் கருத்து. ஆனால், வரலாற்றுப்படி வட இந்தியாவில் மலைப் பகுதிகளில் வாழ்ந்த பல சாதிகளைச் சேர்ந்தவர்களில் இராக்கதர் ஒரு பிரிவினர். இங்கு அரக்கர் என்றது இராக்ஷத பதவியிலுள்ளார்.

குறிப்பு:

ஒருநாள் பூசைக்குப் பைசாச பதவி என்றது போல இருநாள் பூசைக்கு இராசக்ஷத பதவி என இயைபு காண்க. இந்த முரடர்களுக்கு அந்தப் பதவி உயர்வு தானே என்க. (8)

சிவ வழிபாட்டின் பயன்
மூன்றுநாட் பூசைக்கு இயக்கலோக பதவி

239. கயக்கவே தக்கவூனுங் கலந்துணுங் கடியர் தாமும்
வியக்கவே தக்க வீசன் விரைமலரடியின் மீது
பயக்கவே பலமு மூன்று பகலருச் சனையைப் பண்ணி
லியக்கர்த முலகந்தன்னி லிருத்துவ னவரையெல்லாம்.

Koviloor Digital Library

கயக்கவே தக்க ஊனும் கலந்து உண்ணும் கடியர்தாமும்
வியக்கவே தக்க ஈசன் விரைமலர் அடியின்மீது
பயக்கவே பலமும் மூன்று பகல் அருச்சனையைப் பண்ணில்
இயக்கர்தம் உலகம் தன்னில் இருத்துவன் அவரை எல்லாம்.

உரை:

வெறுக்கத்தக்க இறைச்சியைச் சமைத்து உண்கின்ற இரக்கம் இல்லாதவர்களும், கண்டவர் அதிசயிக்கத்தக்க சிவபெருமானுடைய தாமரைப் பூப்போன்ற நறுமணமும் மென்மையும் பொருந்திய திருவடிகளில், மூன்று நாள்கள் தொடர்ந்து மா, பலா, வாழை என்ற மூன்று வகைப் பழங்களைப் படைத்து, பூக்களைத் தூவி வழிபாடு செய்தால், அவ்வாறு பூசை செய்து வணங்கியவர்களைச் சிவபிரான் இயக்கர் உலகில் வாழும்படி செய்வான்.

விளக்கம்:

இயக்கர் - இயக்கர் என்பவர் வடஇந்தியாவில் வாழ்ந்த அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், கந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பிசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாய வாசியர், போக பூமியர் என்ற பதினெட்டுச் சாதியர்களில் ஒரு வகையினர். பாரதக் கதையில் இவர்களைப் பற்றியச் செய்திகள் உள்ளன. இந்தப் பதினெட்டுச் சாதியாரும் தனித்தனியே பதினெட்டு உலகங்களில் வாழ்ந்தனர் என்பது வடமொழியிலும் தமிழிலும் புராணங்களை எழுதியவர்களின் கற்பனை உரையாகும் என்பார் சிலர். அது தவறு. இந்த உலகங்கள் புத்தி தத்துவ புவனங்களிலுள்ளவை. புத்தி தத்துவ விளக்கம் பெற்றவர் கண்டு சொன்னவை இவற்றின் விபரம் ஆகமங்களிலும் உண்டு. (9)

சிவ வழிபாட்டின் பயன்
நான்குநாள் வழிபாட்டுக்குக் கந்தருவ லோக பதவி

240. காமரங் கற்றாரல்லர் பரதமுங் களிப்புக் கூரத்
தாமரன் முன்னேநின்று தட்டமு மிட்டுக் கையாற்
பாமர பறியாரேனும் பாட்டொரு நான்குபாடி
லேமமு மிசைய வாழ்வர் காந்தருவத்தை யேய்ந்தே.

காமரம் கற்றார் அல்லர் பரதமும் களிப்புக் கூரத்
தாம் அரன்முன்னே நின்று தட்டமும் இட்டுக் கையால்
பாமரபு அறியாரேனும் பாட்டு ஒரு நான்கு பாடில்
ஏமமும் இசைய வாழ்வர் காந்தருவத்தை ஏய்ந்து ஏ.

Koviloor Digital Library

உரை:

இசைக் கலையை அறியாதவர்களும், கூத்துக் கலை தெரியாதவர்களும் நான்கு நாள்கள் சிவவழிபாடு செய்து, சிவபிரான் சந்நிதியில் தங்களுக்குத் தெரிந்த முறையில் மகிழ்ச்சி பெருக ஆடியும், சிவபெருமான் புகழ் மாலைகளாக நான்கு பாடல்களைக் கை கொட்டிப் பாடியும் வணங்கி நின்றால், அவ்வாறு வணங்கிய வர்கள் இசைக் கலையில் வல்ல கந்தருவர் உலகைப் பொருந்தி இன்பமாக வாழ்வர்.

விளக்கம்:

காமரம் - இசை; பரதம் - கூத்து; கற்றார் அல்லர் - அறியாதவர்; பா - பாடல்; மரபு - முறைமை; பாமரபு - பாட வேண்டிய முறை; தட்டமும் இட்டு - தாளம் போட்டு; ஏமம் - இன்பம்; இசைய - பொருந்த; காந்தருவத்தை - கந்தருவர் உலகை; ஏ - அசை; கந்தருவர் - தேவர் இனத்தில் பாட வல்ல ஒரு வகையினர். (10)

சிவ வழிபாட்டின் பயன்
ஐந்துநாள் வழிபாட்டுக்குச் சுவர்க்க லோக பதவி

241. இவர் சிவபூசை பண்ணு
மியல்பினரென்று தம்மைப்
புவிதலம் புகழ வேண்டிப்
பூசனை புரிந்தார் தாமும்
அவனர னடியிலஞ்சு
தினமள வலகினாலுந்
திவிதல போக பேதந்
திளைப் பரிந்திரனைச் சேர்ந்தே.

இவர் சிவபூசை பண்ணும்
இயல்பினர் என்று தம்மைப்
புவிதலம் புகழல் வேண்டிப்
பூசனை புரிந்தார் தாமும்
அவன்அரன் அடியில் அஞ்சு
தினம் அளவு அலகினாலும்
திவிதல போக பேதம்
திளைப்பர் இந்திரனைச் சேர்ந்து ஏ.

உரை:

தம்மை மக்கள் சிவவழிபாடு செய்கிற வழக்கம் உடையவர் என்று பாராட்ட வேண்டும் எனப் புகழ்விரும்பிச் சிவபிரானை வணங்கும் பழக்கம் உள்ள

Koviloor Digital Library

ஒருவர் கூட சிவன் சந்நிதியை ஐந்து நாள்கள் பெருக்கித் துப்புரவு செய்து பூசிக்கும் பட்சத்தில் தேவேந்திரன் வாழும் சுவர்க்க உலகை அடைந்து அங்குள்ள இன்பங்களை அனுபவிப்பார்.

விளக்கம்:

புவிதலம் - இது ஆகுபெயராக மக்களைக் குறிக்கிறது. அரன் - சிவன்; அஞ்சு - ஐந்து; திவி - சுவர்க்கம்; தலம் - இடம்; போகம் - இன்பம்;

அலகுதல் - துப்புரவு செய்தல்; திளைத்தல் - அனுபவித்தல்; ஏ - அசை; இந்திரன் - தெய்வங்களில் ஒருவன். (11)

சிவ வழிபாட்டின் பயன்
ஆறுநாட் பூசைப்பலன் சோமலோக பதவி

242. அரிவையர் போகந் தன்னி லாதர வுடையராகிப்
பரமனைப் பரிவாற்பூசை யறுதினம் பண்ணினாரும்
விரவிய சோமலோகம் வேண்டியபடியே தாங்கண்
முருகவிழ் குழலார் தம்மையின்பற முயங்குவாரே.

அரிவையர் போகம் தன்னில் ஆதரவு உடையர் ஆகிப்
பரமனைப் பரிவால் பூசை அறுதினம் பண்ணினாரும்
விரவிய சோமலோகம் வேண்டியபடியே தாங்கள்
முருகுஅவிழ் குழலார் தம்மை இன்புஉற முயங்குவார் ஏ.

உரை:

பெண்களை அணைத்து அவர்களோடு உடல் இன்பம் நுகருவதில் ஆர்வம் உள்ளவர்கள்கூட மேலான பரமசிவனை அன்பு பெருக ஆறு நாள்கள் வரை பூசை செய்து வணங்கினால், அவ்வாறு வணங்கியவர்கள் சந்திரன் உலகை அடைந்து தாங்கள் விரும்பியவாறு அங்குள்ள மணம் கமழும் கூந்தலையுடைய மங்கையர் களைப் புணர்ந்து இன்பம் பெறுவர்.

விளக்கம்:

அரிவையர் - இளம் பெண்கள்; போகம் - உடற் சேர்க்கையின்பம்; ஆதரவு - ஆசை; பரமன் - பரமசிவன்; பரிவு - அன்பு;

அறுதினம் - ஆறுநாள்கள்; முருகு - மணம்; அவிழ் - பரவும்; குழல் - கூந்தல்;அறு - ஆறு; முயங்குதல் - புணர்தல்;

ஏ - அசை. (12)

Koviloor Digital Library

சிவ வழிபாட்டின் பயன்
ஏழு நாட் பூசைப்பலன் பிரசாபதி லோக பதவி

243. விழைவினராகிப் போக
விதந்தனில் விமலன்றன்னை
யெழுதின மருச்சித்தாரு
மிருப்பர்கள் விருப்பமெய்தி
வழுவறு போக பேத
மருவிட வொருவ லின்றி
பிழையறு பிரசை வேந்தன்
பெரும்பதியதனைப் பெற்றே.

விழைவினர் ஆகிப் போக
விதம்தனில் விமலன்தன்னை
எழுதினம் அருச்சித்தாரும் இருப்பர்கள்
விருப்பம் எய்தி
வழுஅறு போகபேதம் மருவிட
ஒருவல் இன்றி
பிழை அறு பிரசை வேந்தன்
பெரும்பதி அதனைப் பெற்று ஏ.

உரை:

பல வகை இன்பங்களை நுகருவதில் ஆசையுள்ள ஒருவர் கூட, தூய சிவபெருமானை ஏழு நாள்கள் தொடர்ந்து பூசை செய்து வணங்கினால், அவ்வாறு வணங்கியவர், குற்றமில்லாத பிரசாபதி உலகை அடைந்து, நல்ல இன்பங்களை நீங்குதல் இல்லாமல் அனுபவிப்பார்.

விளக்கம்:

விழைவு - ஆசை; போகம் - இன்பம்; விமலன் - தூயசிவன்; எழுதினம் - ஏழு நாள்கள்; வழுஅறு - குற்றம் இல்லாத; மருவிட - அணைத்திட; ஒருவல் - நீங்குதல்; பிரசை வேந்தன் - பிரசாபதி; பெரும்பதி - பிரசாபதி வாழும் இடம்; ஏ - அசை. (13)

சிவ பூசையின் பயன்
எட்டு நாட் பூசைக்குப் பிரமலோக பதவி

244. திருந்திய வேதகாயத் திரியினாற் றினமோரெட்டும்
அரன்பத மருச்சித்தாரு மலரினா லார்வங் கூரப்
பொருந்தியே பிரமலோகம் போக பேதங்களெல்லாம்
அருந்தியே யிருப்பர் தங்க ளாசையு மகலவாங்கே.

Koviloor Digital Library

திருந்திய வேத காயத்திரியினால் தினம்ஓர் எட்டும்
அரன்பதம் அருச்சித்தாரும் அலரினால் ஆர்வம் கூரப்
பொருந்தியே பிரமலோகம் போக பேதங்கள் எல்லாம்
அருந்தியே யிருப்பர் தங்கள் ஆசையும் அகல ஆங்கு. ஏ.

உரை:

எட்டு நாள்கள் வரை காயத்திரி மந்திரத்தைத் திருத்தமாகச் சொல்லி, சிவபிரான் திருவடிகளில் அன்போடு பூக்கள் தூவிப் பூசை செய்து வணங்கியவர், பிரமன் உலகை அடைந்து அங்குள்ள இன்பங்களை ஆசைதீர அனுபவிப்பார்.

விளக்கம்:

வேத காயத்திரி - இருக்கு வேதத்தில் இடம் பெற்றிருக்கும் ஒரு செய்யுள். இதனை வெளியிட்டவர் விசுவாமித்திரர் என்ற அரசத் துறவி. இது சூரியனை வணங்கும் துதிப்பாடல். ஆதலால், இதனைச் சூரிய காயத்திரி என்றும் சொல்லுவர். வேதியர்கள் நாள்தோறும் இதனை ஓதுவர். சிவ காயத்திரி போன்ற வேறு மந்திரங்களும் உள்ளன.

அரன்பதம் - சிவபிரான் திருவடி; அலர் - பூ; பிரம லோகம் - பிரமன் வாழும் இடம்; இதனைச் சத்திய லோகம் என்பர்.

அருந்துதல் - இது அனுபவித்தலைக் குறிக்கும்; ஏ - அசை. (14)

சிவ பூசையின் பயன்
ஒன்பதுநாட் பூசைக்கு நாராயண லோக பதவி

245. ஒருவனே மூவரென்று மொன்பது தினமு மன்பாற்
பரமனை யருச்சித்தாரும் பாம்பணைப் பள்ளி வள்ளல்
புரமது பொருந்தி வாழ்வர் போக பேதங்கள் பொங்க
வரியன யாவுமில்லை யவர்தமக் கமலனாலே.

ஒருவனே மூவர் என்றும் ஒன்பது தினமும் அன்பால்
பரமனை அருச்சித்தாரும் பாம்பு அணைப் பள்ளி வள்ளல்
புரம்அது பொருந்தி வாழ்வர் போக பேதங்கள் பொங்க
அரியன யாவும் இல்லை அவர் தமக்கு அமலனால் ஏ.

உரை:

உயிர் வர்க்கத்தாரான பிரமனையும் நாராயணனையும் கொள்ளாது சம்பு பக்கத்தாராகிய பிரமனையும் நாராயணனையும் அரனோடு சேர்த்து, மூவரையும் ஒரு கடவுளாகக் கருதி, மேலான சிவபெருமானை அன்போடு ஒன்பது நாள்கள் தொடர்ச்சியாக மலர் தூவிப் பூசை செய்து வணங்கினால், அவ்வாறு வணங்கியவர்

Koviloor Digital Library

தூய சிவன் அருளால், கடல் நீரிலே பாம்புப் படுக்கையில் யோக நித்திரை கொள்ளும் நாராயணன் உலகை அடைந்து, அங்குள்ள இன்பங்களை நுகர்ந்து வாழ்வார்; அங்கு அவருக்குக் கிடைக்காத பொருள் எதுவும் இல்லை.

விளக்கம்:

வள்ளல் - வள்ளல் என்பது இங்கு இறைவனைக் குறிக்கும். ''உள்ளக் கருத்து வள்ளலுக்குத் தெரியும்'' என்பது *பழமொழி*. **பாம்பு அணைப்பள்ளி** - தூங்குவதற்கு உரிய பாம்பு ஆகிய படுக்கை. இந்தப் பாம்பைப் பாம்புகளின் அரசனான ஆதிசேடன் என்று புராணம் கூறும்.

பாம்பு அணைப்பள்ளி வள்ளல்புரம் - வைகுந்த உலகம்; **அரியன** - கிடைக்காதவை; **அமலன்** - ஆணவம் முதலான மலங்கள் இல்லாத சிவபிரான். **பாம்பு அணைப்பள்ளி வள்ளல்** - நாராயணன்; இவரை விஷ்ணு என்று கூறுவர். (15)

விரதிகள் செய்யும் பூசை

246. செப்பியவிதற்குமீது சிவபுர மதனைச் சேர்வர்
ஒப்பிலா வொருவன்றன்னை யொருமைய வுணர்ச்சிகூரத்
தப்பறப் புரிந்தபூசைத் தபோதனர் தாமுமாங்கண்
எப்பய னரியதாக வியம்புவ தெளிய தேதும்.

செப்பிய இதற்குமீது சிவபுரம் அதனைச் சேர்வர்
ஒப்புஇலா ஒருவன்தன்னை ஒருமைய உணர்ச்சி கூரத்
தப்பு அறப்புரிந்தபூசைத் தபோதனர் தாமும் ஆங்கண்
எப்பயன் எளியது ஆக இயம்புவது எளியது ஏதும்.

உரை:

இவ்வாறு கூறிய வைகுந்த உலகத்துக்கு மேலே சிவ உலகம் உள்ளது. அங்கு இருக்கும் தமக்கு நிகராக ஒருவர் இல்லாத சிவபரம் பொருளை மன ஒருமையோடு பூசை செய்து வணங்கிய சிவவிரதங்களை உடையவர், சிவ உலகை அடைவார். அங்கு அவருக்குக் கிடைக்காதது எது? எல்லா இன்பங்களையும் எளிதாக அடைவார்.

அதாவது இன்னபலன் எளிதிற் கிடைப்பதெனச் சுட்டிச் சொல்வதற்கு இல்லை. எந்தவோர் பலனும் எளிதாகவே கிடைத்துவிடும் என்றபடி.

விளக்கம்:

ஒருமைய உணர்ச்சி - மன ஒருமை; **கூர** - மிகுதிப்பட; **தப்பு அற** - குற்றம் குறைகள் இல்லாமல்; **ஆங்கண்** - சிவ உலகில்; **தபோதனர்** - சிவ விரதங்களைத் தவறாமல் பின் பற்றும் அடியவர்; **இயம்புவது** - சொல்வது; **ஏதும்** - எதுவுந்தான். (16)

Koviloor Digital Library

சிவ உலகச் சிறப்பு

247. தினகர ருதயகோடி தேசெனத்
திகழ்ந்த தேர்கள்
இனையவென் றளக்கு மெண்ணை
யிகழ்ந்தெழி லிசையநிற்கும்
மனநினைவதனில் வேண்டு மகிழ்ச்சியும்
வாய்க்கச் செய்யுந்
தனைநிக ரில்லி தங்கும்
புரிவளம் சாற்றலாமே.

தினகரர் உதய கோடி தேசு
எனத் திகழ்ந்த தேர்கள்
இனையஎன்று அளக்கும் எண்ணை இகழ்ந்து
எழில் இசைய நிற்கும்
மனம் நினைவு அதனில் வேண்டும்
மகிழ்ச்சியும் வாய்க்கச் செய்யும்
தனைநிகர் இல்லி தங்கும்
புரிவளம் சாற்றல் ஆமே?

உரை:

ஒரு கோடி ஞாயிறுகள் ஒன்றாகச் சேர்ந்து ஒளி பரப்பியது போல விளங்கு கின்ற இரதங்கள் இத்தனை என்று எண்ணிச் சொல்ல முடியாத அளவு சிவபுரத்தில் அழகு பொருந்த நெருங்கி நிற்கும். அங்குத் தங்கியிருப்போர் தாங்கள் விரும்பிய இன்ப வகைகள் யாவையும் பெற்று மகிழவும் வசதி உண்டு. தமக்கு ஒப்பு இல்லாத சிவபிரான் எழுந்தருளியிருக்கும் சிவ உலகின் செழுமையை அளவிட்டுச் சொல்ல யாராலும் இயலாது.

விளக்கம்:

தினகரன் - கதிரவன்; தேசு - ஒளி; திகழ்ந்த - விளங்கிய; இனைய - இவ்வளவு; இகழ்ந்து - கடந்து; எழில் - அழகு; இசைய - பொருந்த; இகழ்ந்து, இகந்து என்பதன் பாடபேதமாதல் கூடும். தனை - தனக்கு; நிகர் - சமானம்; இல்லி - இல்லாதவரான சிவன்; புரி - சிவபுரி; வளம் - செழிப்பு; சாற்றல் ஆமே - சொல்ல இயலுமா. (17)

248. தெரிப்பருந் தேவதேவன் றிருப்பதி
வட்டந் தன்னின்
மரித்திடுஞ் சராசரங்கள்
சிவபுரமதனுள் வாழு

Koviloor Digital Library

மருச்சனை புரிந்த மற்றை
யன்பர்களடைந்து வாழ்கை
தெரித்திட வேண்டுமேயோ
தெருண்டநற் சிந்தையார்க்கே.

தெரிப்ப அரும் தேவதேவன் திருப்பதி
வட்டம் தன்னில்
மரித்திடும் சராசரங்கள் சிவபுரம்
அதனுள் வாழும்
அருச்சனை புரிந்த மற்றை
யன்பர்கள் அடைந்து வாழ்கை
தெரித்திட வேண்டுமேயோ
தெருண்டநல் சிந்தையார்க்கு ஏ.

உரை:

அறிவதற்கு அரிய மகாதேவனான சிவபிரான் எழுந்தருளியிருக்கும் புண்ணியத் தலத்திலும், அதனைச் சூழ உள்ள பகுதிகளிலும் வாழ்ந்து உயிர் துறக்கிற இயங்குவனவும் இயங்காதனவுமான உயிர் வகைகள் யாவும் சிவஉலகை அடையும் என்றால் சிவபிரானை முறைப்படி வழிபாடு செய்த அடியவர்கள், சிவ உலகை அடைந்து வாழ்வார்கள் என்பதைத் தெளிந்த நல்ல சிந்தனையாளர் களுக்குச் சொல்லவும் வேண்டுமா? வேண்டா என்பது குறிப்பு.

விளக்கம்:

தெரிப்பு - சொல்லுவதற்கு; **தேவதேவன்** - மகாதேவன், சிவபிரான்; **மரித்திடும்** - இறக்கிற; **சராசரம்** - சர அசரம்; **சரம்** - இடம் விட்டு இடம் பெயர்வது; **அசரம்** - நிலைத்து நிற்பது; **தெரித்திட வேண்டுமேயோ** - சொல்லவும் வேண்டுமோ; **தெருண்ட** - அறிவுத் தெளிவு பெற்ற; **சிந்தையார்** - சிந்தனையாளர்; **ஏ** - அசை. (18)

நட்சத்திர பதம்

249. உண்டொரு பொருளென்றுள்ளத்
தோர்கிலார் தாமுமோர்ந்த
பண்டிதர்பணியக் கண்டு
பணிந்திடிற் பரமவென்னிற்
தண்டரளங்கன் போலுந்
தாரகா தேசந்தன்னில்
எண்டிகழ் நாலேழ்கோடி யிரதபே
தத்து ளேய்வார்.

Koviloor Digital Library

உண்டுஒரு பொருள் என்று உள்ளத்து
ஓர்கிலார் தாமும் ஓர்ந்த
பண்டிதர் பணியக் கண்டு
பணிந்திடில் பரம என்னில்
தண் தரளங்கள் போலும்
தாரகா தேசம் தன்னில்
எண் திகழ் நாலு ஏழ்கோடி
இரத பேதத்துள் ஏய்வார்.

உரை:

உயிருள்ள, உயிரில்லாத பொருள்கள் அனைத்தையும் ஆளுகின்ற பரம்பொருள் ஒன்று உண்டு என்று ஆராய்ந்து அறியாதவரும், அந்தப் பொருள் உண்டு என்று உணர்ந்த புலவர் வணங்குவதைப் பார்த்துத் தாமும் வணங்கினாலும், மேலானவனே என்று போற்றினாலும், அவர்கள் குளிர்ந்த முத்துக்கள் போன்ற ஒளியுடைய நட்சத்திர மண்டலத்தில் இருபத்தெட்டுக் கோடி விமானங்கள் சூழ்ந்திருக்க அவற்றின் நடுவே பொருந்தி வாழ்வார்.

விளக்கம்:

ஓர்தல் - ஆராய்ந்து அறிதல்; ஓர்ந்து - அறிந்து; பண்டிதர் - புலவர்; பணிய - வணங்கு; தண் - குளிர்ச்சி; தரளம் - முத்து; பரமன் - மேலான சிவன்; தாரகா - தாரகை, நட்சத்திரம்; தேசம் - மண்டலம்; நாலுஏழ் கோடி - இருபத்து எட்டுக்கோடி; இரதம் - தேர், இங்கு விமானம்; ஏய்வார் - பொருந்துவார். (19)

சிவதர்மசீலர் அரன் உலகம் அடைவர்

250. இயன்றன வியற்றினாரு மற்றைய
புரத்தி லேய்ந்து
பயன்றனைப் பயின்று மீண்டு
பாரிடைப் பிறந்து பாங்கான்
முயன்றருந் தவத்தைமூவா
முதல்வனை யகத்துண்முன்னி
யயன்றனைப் பயந்தவாதி
யரன்புரி யடைவரன்றே.

இயன்றன இயற்றினாரும் மற்றைய
புரத்தில் ஏய்ந்து
பயன்தனைப் பயின்று மீண்டும்
பார்இடைப் பிறந்து பாங்கால்

Koviloor Digital Library

முயன்றஅரும் தவத்தை மூவா
முதல்வனை அகத்துள் முன்னி
அயன்தனைப் பயந்த ஆதி
அரன்புரி அடைவர் அன்றே.

உரை:

தங்களால் இயன்ற அளவு அறங்களைச் செய்தவர்கள், வைகுந்தம் முதலான உலகுகளை அடைந்து, அங்குள்ள் இன்பங்களை நுகர்ந்து முடிந்ததும் மீளவும் உலகில் பிறந்து சிவனைக் கருதிச் செய்யத் தகுந்தவத்தை மன ஒருப்பாட்டுடன் புரிந்து என்றும் முதிர்ச்சி அடையாமல் ஒரே தன்மைத்தாய் இருப்பவனும் பிரமனைப் படைத்தவனுமான சிவபிரானுடைய உலகை அடைவர்.

விளக்கம்:

பார் - பூமி; முயன்ற - தொடங்கிய; மூவா முதல்வன் - கடவுள்; அகம் - நெஞ்சு; உன்னி - எண்ணி; அயன் - பிரமன்;

ஆதி - முதல்; அரன் - பாவங்களை அறுக்கும் சிவன்; அரன்புரி - சிவபுரம்; அன்றே - அசை. (20)

மூன்று உலகங்கள்

251. உரைத்தவிப் புரத்தின்மீதும்
புரமொரு மூன்றுண்டோர்க
தரித்தவேற் குமரன் றங்குந்
தானமொன் றதற்குமீது
பரித்த பைங்கிள்ளைச் செங்கைப்
பாவைதன் பதியொன் றப்பாற்
றெரிப்பருந் தேசாரீசன் சிவபுரஞ்
செப்பா மொப்பே.

உரைத்தஇப் புரத்தின்மீதும் புரம்ஒரு
மூன்றுஉண்டு ஓர்க
தரித்தவேல் குமரன்தங்கும் தானம்
ஒன்று அதற்கும் மீது
பரித்த பைங் கிள்ளைச் செங்கைப்
பாவைதன் பதிஒன்று அப்பால்
தெரிப்ப அரும் தேசுஆர் ஈசன்
சிவபுரம் செப்பாம் ஒப்பு ஏ.

Koviloor Digital Library

உரை:

முன்பு சொன்ன சிவ உலகிற்கு மேலே மூன்று உலகுகள் உள்ளன என்பதை அறிவாயாக. அவை: கையில் வேற்படை ஏந்திய குமரப்பெருமான் எழுந்தருளியுள்ள உலகு ஒன்று; அதற்கும்மேலே தம் சிவந்த கையிலே பச்சை நிறக் கிளியைத் தாங்கியுள்ள உமையம்மையின் உலகு ஒன்று; அதற்கும் மேலே அளவு கடந்த ஒளியோடு விளங்கும் சிவபிரானுடைய மகா உலகு உள்ளது. இந்த மகா சிவ உலகிற்கு இணையாக இன்னோர் உலகு இல்லை. ஆகவே, அதற்கு ஒப்பாக வேறொன்றைச் சொல்ல மாட்டோம்.

விளக்கம்:

புரம் - ஊர்; இங்கு உலகு என்ற பொருளில் வந்துள்ளது; ஓர்க - அறிக; தரித்த - ஏந்திய; தானம் - இடம்; பரித்த - தாங்கிய; பைங்கிள்ளை - பசுமை கிள்ளை, பச்சை நிறக் கிளி; செங்கை - செம்மைகை, சிவந்த கை;

தெரிப்பு - சொல்லுதற்கு; பாவை - பதுமை; இது பாவை போலும் உடலமைப்புக் கொண்ட உமையம்மையைக் குறிக்கிறது. குமரன் தங்குந்தானம், ஸ்கந்தபுவனம். பாவைதன் பதி, சக்தி புவனம். தேசு - ஒளி; ஆர் - நிரம்பிய; செப்பாம் - சொல்லோம்; ஒப்பு - இணை; ஏ - அசை. (21)

குமரன் புகழ்

252. சத்தியைத் திரிசூலத்தைத்
தரித்த பொற்கரத்தினானை
வித்தகன் றன்னைப் பொன்னை
யொத்தொளிர் மேனியானை
முத்தனை முளைத்தவாறு
முகத்தனை முதல்வன்றன்னை
மொய்த்த கண் மயிலின்
மேலை முருகனை முன்னுவாரே.

சத்தியைத் திரிசூலத்தைத் தரித்த
பொன் கரத்தினானை
வித்தகன் தன்னைப் பொன்னை
ஒத்து ஒளிர் மேனியானை
முத்தனை முளைத்தஆறு முகத்தனை
முதல்வன் தன்னை
மொய்த்த கண் மயிலின்
மேலை முருகன் முன்னுவார் ஏ.

Koviloor Digital Library

உரை:

ஞானசத்தியாகிய வேற்படையையும் மூவிலை வேலையும் ஏந்திய தங்க நிறக் கைகளை உடையவனும், பேரறிவாளனும், தங்கத்தையொத்து ஒளிரும் உடம்பு உடையவனும், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கியவனும், ஆறு திரு முகங்களை உடையவனும், முழுமுதற் பரம்பொருளானவனும், தன் தோகையின் மீது நெருக்கமாகக் கண்களைப் பெற்றிருக்கும் ஆண் மயிலை ஊர்தியாக உடைய வனும் ஆன முன் சொன்ன முருகப் பெருமானைத் தங்கள் உள்ளத்திலே கருதி வணங்குகின்றவர்கள்;

விளக்கம்:

சத்தி - இது ஞானசத்தியாகிய வேலைக் குறிக்கும். ஞான சத்தி தரன் என்பது, முருகனுக்கு உரிய பெயர்களுள் ஒன்று. **வித்தகன்** - பேரறிவாளன்; **ஒளிர் மேனியான்** - ஒளிவிடும் உடம்பினன்; **முத்தன்** - இயல்பாகவே பாசங்களிலிருந்து விடுபட்டவன்;

மொய்த்த - நெருக்கமான; **கண்** - மயில் தோகையிலுள்ள கண்கள்; **முன்னுவார்** - தங்கள் உள்ளங்களிலே எண்ணுகிறவர்கள்; **திரிசூலம் தரித்த கரத்தினான்** - திரிசூலம் என்பது சிவனுக்கு உரிய படைக்கலங்களுள் ஒன்று. அதனை முத்தலைச் சூலம், மூவிலை வேல் என்றும் சொல்வர். சிவனும் குமரனும் ஒருவரேயென்பது அருளாளர் கருத்து. ஆகவே, இப்பாடல் சிவபெருமானுக்குரிய திரி சூலத்தைக் குமரப் பெருமான் ஏந்தியிருப்பதாகக் கூறுகிறது.

கூத்தப்பிரானும் சிவகாம வல்லியும் எழுந்தருளியுள்ள தில்லைச் சிதம் பரத்துக்குச் சென்ற அருணகிரிநாத அடிகள், சிதம்பர நடராசரைக் குமரப் பெருமனாகவே கண்டு,

''சிவசிவ! ஹரஹர! தேவா! போற்றி போற்றி; அறிவு மயமாகிய பரகதியாக விளங்குபவரே! போற்றி போற்றி; எல்லாத் திசைகளிலும் புகழிலும் வாழ்வாகத் திகழ்பவரே! போற்றி போற்றி; சிறந்த சொற்களையுடைய (தமிழ் மொழியைப் பேசும்) திருமகள் மகளாகிய வள்ளியம்மையாருடைய கணவரே! போற்றி போற்றி; முப்புரத்தை எரித்த முதல்வரே! போற்றி போற்றி; ஜயஜய ஹரஹர தேவா! அமரர்களுக்குத் தலைவரே!'' என்று கூறி வணங்கினார்.

''......................... மன்றுளாடும்
சிவசிவ ஹரஹர தேவா நமோந
தெரிசன பரகதி யானாய் நமோநம
திசையிலும் இசையினும் வாழ்வே நமோநம செஞ்சொல் சேரும்.

திருதரு க்லவி மணாளா நமோநம
திரிபுரம் எரிசெய்த கோவே நமோநம
ஜெய ஜெய ஹரஹர தேவா சுராதிபர் தம்பிரானே.''

(திருப்புகழ் - சிதம்பரம் - 22 - அவகுணவிரகனை)

Koviloor Digital Library

முளைத்த - தோன்றிய; ஆறுமுகத்தனை - ஆறு திருமுகங்கள் உடையவன்; சிவபெருமானுடைய ஐந்து திருமுகங்களும், சிவையினுடைய ஒரு திருமுகமும் இணைந்து ஆறு திருமுகங்கள் ஆயின என்பது கந்தபுராணக் கருத்து. (22)

குமரன் உலகடைதல்

253. இருப்பர்கள் குமரன்வாழு மெல்லையி
லெல்லை யில்லா
விருப்புறப் போகபேத மேவிட
விதற்கு மீதே
யிருப்பர்க ளுமையைத் தங்கள்
கருத்தினு ளிருத்தினார்கள்
பொருப்பெழு மருக்கர் கோடி
நிறமெனப் புந்தி செய்தே.

இருப்பர்கள் குமரன்வாழும்
எல்லையில் எல்லையில்லா
விருப்புஉறப் போகபேதம் மேவிட
இதற்கும் மீதே
இருப்பர்கள் உமையைத் தங்கள்
கருத்தினுள் இருத்தினார்கள்
பொருப்புஎழும் அருக்கர் கோடி
நிறம்எனப் புந்தி செய்து ஏ.

உரை:

முன் சொன்ன சிறப்புகளை உடைய குமரப் பெருமானை மனதிலே எண்ணி வணங்கியவர்கள், அக்குமரன் எழுந்தருளியுள்ள உலகை அடைந்து, தாங்கள் விரும்பிய இன்பங்களைத் துய்த்து வாழ்வர். உதயகிரியின் மீது கோடி ஞாயிறுகள் விளங்கித் தோன்றுவது போலக் கருதிச் சிவையைத் தங்கள் உள்ளங்களிலே இருத்தித் தியானித்தவர்கள், கந்தன் உலகிற்கு மேலேயிருக்கும் உமையின் உலகை அடைந்து வாழ்வர்.

விளக்கம்:

இருப்பர்கள் - தங்குவர்; எல்லையில்லா - வரம்பு இல்லாத; விருப்பு உற - ஆசையோடு; மேவிட - பொருந்த; மீதே - மேலே; பொருப்பு எழும் - கதிரவன் உதிக்கும் மலையில் தோன்றும்; 'கதிரவன் காலையில் கிழக்கே உதயகிரியில் தோன்றி, மாலையில் மேற்கே அத்தகிரியில் மறையும்' என்பது புராண மரபு. இதனை,

Koviloor Digital Library

ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து இருள்அகற்றும் - ஆங்கு அவற்றுள்
மின்நேர் தனிஆழி வெங்கதிர்ஒன்று; ஏனையது
தன்நேர் இலாத தமிழ்.

(தண்டி அலங்கார உரை மேற்கோள்)

என்ற தனிப்பாடலால் அறியலாம். (**ஓங்கல்** - மலை; **ஏங்கல்** - ஆரவாரித்தல்; **தனிஆழி** - ஒற்றைச் சக்கரம்) **அருக்கன்** - ஞாயிறு.

''அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்''

என்பது *அப்பர்* திருமொழி.

அருக்கர் கோடி நிறம் - கோடி அருக்கர் நிறம், ஒரு கோடி சூரியர்கள் ஒன்றாக விளங்கித் தோன்றுவது போன்ற சிவந்த ஒளிக்கதிர்களை உடையது. இஃது உமையம்மையின் எழிலைக் குறிக்கிறது.

''உதயமாகின்ற செங்கதிரவனும் மின்னற்கொடியும்'' போன்ற ஒளி வடிவமுடையவள் அன்னை அபிராமி என்று தேவி உபாசகரான அபிராமி பட்டர் கூறுகிறார்.

''உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி''

(அபிராமி அந்தாதி - 1)

''கிளியே கிளைஞர் மனத்தேகிடந்து கிளர்ந்து ஒளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கு இடமே ''

(அபிராமி அந்தாதி - 16)

''ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.''

(அபிராமி அந்தாதி - 19)

''மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த அணியே.''

(அபிராமி அந்தாதி - 24)

''மின்ஆயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்றது அன்னாள்''

(அபிராமி அந்தாதி - 55)

இவை அன்னை ஒளிவடிவினள் என்பதை உணர்த்துகின்றன.

ஏ - அசை. (23)

Koviloor Digital Library

சிவ உலகு அடைதல்

254. தெளிபளிங்கனைய மேனி திரிநய னங்கைத் தாங்கு
மொளிவளர் சூலமாலை யுதாரகையபய வங்கை
நளிசடை யுடையநாத னடியிணை யகத்து ணச்சி
யுளினரு மவனை யொப்பச் சிவபுரத் துறைவ ருய்ந்தே.

தெளிபளிங்கு அனைய மேனி திரிநயன் அங்கைத்தாங்கும்
ஒளிவளர்சூலம் மாலை உதாரகை அபயம் அங்கை
நளிசடை உடைய நாதன் அடிஇணை அகத்துள் நச்சி
உ(ள்)ளினரும் அவனை ஒப்பச் சிவபுரத்து உறைவர் ஆய்ந்து ஏ.

உரை:

படிகம் போன்ற திருஉடலும் மூன்று திருவிழிகளும் மேல் நோக்கிய கைகளில் ஏந்திய ஒளி பொருந்திய சூலப்படையும் செபமாலையும், கீழே உள்ள வரம்தரும் கையும் அபயம் அளிக்கும் கையும், தலையில் நெருக்கமான செஞ்சடையும் உடைய சிவபிரானின் இரண்டு திருவடிகளையும் விருப்பத்தோடு தங்கள் உள்ளங்களில் இருத்தி வணங்குகின்றவர்கள் அச்சிவபிரானுக்கு நிகராக, அவரைப் போன்ற உருவம் பெற்றுச் சிவ உலகில் வாழ்வர்.

விளக்கம்:

பளிங்கு - படிகம்; சிவபிரான் திருமேனி அழுக்குகள் இல்லாமல் பளபளப் பாகத் திகழும்.

''ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே.''

என்று திருமாளிகைத் தேவர் சிவபிரான் திருமேனியைப் பாடுகின்றார்.

(திருவிசைப்பா - 1)

திரிநயன் - மூன்று கண்களையுடைய சிவன், நயனன் என்பது நயன் என வந்தது. நயனம் - கண்.

''கண்கள் மூன்று உடையதோர் கரும்பே''

(திருவிசைப்பா - 7)

ஒளிவளர் சூலம் - சூலம், முத்தலைச் சூலம் - இது சிவபிரானுடைய படைக் கலம்.

''தனதநல் தோழா சங்கரா சூலபாணியே''

(திருவிசைப்பா - 7)

Koviloor Digital Library

நளிசடை - நெருக்கமான மயிர்க் கற்றை; ''வார்குழற் சடையுடைக் குழகனை'', ''சடையொருபால் பாலிடங்கொள் தாழ்குழல்'' ஆகியவை திருஞான சம்பந்தரின் வாக்குகள்.

''கொன்றை வார்சடைமேல் பனிதரும் திங்களும்''

(அபிராமி அந்தாதி - 4)

''கற்றைச் சடைமுடி வைத்த இறைவனை''

(சுப்பிரமணிய பாரதியார்)

உதாரகை - வரதகரம், உதாரம் கை; **உதாரம்** - கொடை; **நச்சி** - விரும்பி; **உள்ளினர்** - கருதியவர்; **ஆய்ந்து** - தேர்ந்து; **ஏ** - அசை. (24)

பிறவி இல்லாதவர்

255. மேலைய சிவலோகத்துள் விரவின ரொருமை மேவி
ஞாலமு மடையார் ஞாலவிறுதியை நாசமாக்குங்
காலமு மணைய வுள்ளக் கறுப்பினை யறுத்துக் காட்டு
மூலபண்டாரந் தன்னை முகந்துகந் திருப்பர் முத்தர்.

மேலைய சிவலோகத்துள் விரவினர் ஒருமை மேவி
ஞாலமும் அடையார் ஞால இறுதியை நாசம் ஆக்கும்
காலமும் அணைய உள்ளக் கறுப்பினை அறுத்துக்காட்டும்
மூலபண்டாரம் தன்னைமுகந்து உகந்து இருப்பர் முத்தர்.

உரை:

மேன்மையான சிவ உலகை அடைந்தவர்கள், அங்கு மன ஒருமையைப் பொருந்தி, மீண்டும் நிலத்தில் வந்து பிறவாதவர்களாய், ஆணவம் முதலான மல அழுக்குகளை ஒழித்து, சிவபிரான் திருவருள் பெற்று முத்தியின்பம் பெறுவர்.

விளக்கம்:

மேலை - மேன்மை; **விரவினர்** - அடைந்தவர்; **ஞாலம்** - நிலவுலகு; **ஞால இறுதி** - உலக முடிவு, ஊழி; **அணைய** - பொருந்த; **உள்ளக் கறுப்பு** - ஆணவம் முதலிய மல அழுக்குகள்; மன அழுக்கு; **முகந்து** - மொண்டு, அநுபவித்து; **உகந்து** - விரும்பி; **மேவி** - பொருந்தி; **முத்தர்** - எல்லாப் பற்றுக்களிலிருந்தும் விடுபட்டவர்;

மூலபண்டாரம் - ''வீடு பேற்றுச் சரக்கறை இறைவன் கொடை'' என்று பண்டிதமணி திரு. க. சு. நவநீத கிருஷ்ண பாரதியார் அவர்கள் கூறுகிறார்கள்.

''மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே''

(திருவாசகம் - திருப்பாண்டிப் பதிகம் - 5)

என்பது திருவாசகம்.

Koviloor Digital Library

மூலபண்டாரம் - ''மூலக் கருவூலம் - திருவருள்; அதில் உள்ள நிதி முத்தி இன்பம்'' என்று திருக்குறள் வேள் திரு. ஜி. வரதராசப் பிள்ளை அவர்கள் கூறுகின்றார்கள். (25)

பைசாச உலகத்தவர் முதலியோர்க்குப் பொருந்தும் எண் சித்தி உரைப்போமெனல்

256. அந்திய வியலினுக்கு மயலய வியலின் யோக
பந்தியைப் பகர்வா மெட்டுச் சித்தியும் பரிவுகூர
விந்தநல் லியலினுள்ளு மெட்டெனப் பட்டசித்தி
முந்தியே பைசாசாதிக் குறுமுறை மொழிவா மோர்ந்தே.

அந்திய இயலினுக்கும் அயல்அயல் இயலின் யோக
பந்தியைப் பகர்வாம் எட்டுச் சித்தியும் பரிவு கூர
இந்தநல் இயலின் உள்ளும் எட்டுஎனப் பட்ட சித்தி
முந்தியே பைசாச ஆதிக்கு உறும்முறை மொழிவாம் ஓர்ந்து ஏ.

உரை:

சிவ தருமோத்தரத்தின் கடைசி இயலும் பன்னிரண்டாவது இயலுமான கோபுர இயலுக்கும், அதற்குப் பக்கத்தில் இருக்கும் பதினோராவது இயலான பரிகார இயலுக்கும், அருகிலே இருக்கும் பத்தாவது இயலான சிவஞான யோக இயலிலே எட்டு உறுப்பு யோக முறைகளையும், அதனால் விளையும் எட்டுவகைச் சித்திகளை யும் அன்பு மிகுதி உண்டாகச் சொல்வோம். மேலும் இந்தச் சிவதரும இயலின் உள்ளும் பைசாச முதலிய உலகுகளில் உள்ளவர்களுக்கு எட்டுச் சித்திகளும் பொருந்தும் வகையை ஆராய்ந்து உரைக்கின்றோம்.

விளக்கம்:

யோகபந்தி - அட்டாங்க யோகம்; எட்டுச் சித்தி அட்டமாசித்தி. அந்திய - இறுதியான; அயல் - பக்கம்; அருகு; பந்தி - ஒழுங்கு; பைசாசம் - பைசாசம் என்பதற்கு இரு பொருள்கள் உள்ளன.

ஒன்று மொழி, அதாவது பைசாச பாஷை; அல்லது பைசாசி மொழி; பைசாசி என்பது பிராகிருத பாஷையின் வகை. (Paisaci Language) என்று சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி விளக்கம் தருகிறது. (தொகுதி 5. பக்கம் - 2,906)

மேலும், பிருகக் கதை - என்பதற்கு, 'பெருங்கதைக்கு முதனூலானதும்

Koviloor Digital Library

குணாட்டியரால் பைசாச மொழியில் இயற்றப்பட்டதுமான நூல்' என்று மேற்படி அகராதி கூறுகிறது. (தொகுதி 5. பக்கம் - 2,704)

பைசாசம் பிசாசு - பேய். இது சிவதருமோத்தரக் கருத்து. (26)

எண்சித்தி ஒன்றுக்கொன்றதிகமாதல்

257. எட்டெனப் பட்டசித்தி
யிசைந்திடும் பைசாசாதி
சிட்டர்கள் சேருமெல்லை சிவபுர
மிறுதி தன்னி
லொட்டிய குணமு மேன்மே லுயர்ந்துயர்ந்
தொழுகு மோரில்
விட்டொளிர் குணத்தின் மேன்மை
விளங்கிட விளம்புவாமே.

எட்டு எனப் பட்டசித்தி
இசைந்திடும் பைசாசஆதி
சிட்டர்கள் சேரும்எல்லை சிவபுரம்
இறுதி தன்னில்
ஒட்டிய குணமும் மேன்மேல் உயர்ந்து
உயர்ந்து ஒழுகும் ஓரில்
விட்டுஒளிர் குணத்தின் மேன்மை
விளங்கிட விளம்புவாம் ஏ.

உரை:

பைசாச உலகு முதல் சிவ உலகு வரையுள்ள உலகுகளில் பொருந்தி உயர்ந்தோர்கள், எட்டு வகைச் சித்திகளையும் அவற்றால் உண்டாகும் பலன் களையும், தாங்கள் வாழும் உலகுக்கு ஏற்றபடி ஓர் உலகில் இருப்பவர்களைவிட இன்னோர் உலகில் இருப்பவர்கள் அதிகம் பெறுவர்; இவற்றை மேலும் விளக்கமாக உரைப்போம்.

ஒட்டிய குணமுமென்மேலுயரும் என்பதன் விளக்கத்தை அடுத்த செய்யுள் உரையிற் காண்க.

விளக்கம்:

சிட்டர்கள் - நல்லோர், பெரியோர்; ஒட்டிய - பொருந்திய; குணம் - பலன்; ஒழுகும் - பெருகும்; விளம்புவாம் - உரைப்போம்;

ஏ - அசை;

Koviloor Digital Library

எட்டுவகைச் சித்திகள் - எட்டுவகைப் பயன்கள்.

அவை:

1. அணிமா - நுண்ணிய உடலைப் பெற்றிருத்தல்.

2. மகிமா - வேண்டிய அளவு உடலைப் பெரிதாக ஆக்கிக் கொள்ளுதல்.

3. இலகிமா - நிலத்தில் அடிபதியாமல் உடலை மிக மென்மையாக்குதல்.

4. கரிமா - எதற்கும் அசையாதபடி உடலை அதிக பாரமாக ஆக்குதல்.

5. பிராந்தி - உலகில் எங்கும் இயங்குதல்.

6. பிராகாமியம் - தன் உயிரை வேறு ஓர் உடலினுள் செலுத்துதல்.

7. ஈசத்துவம் - ஞாயிறு முதலியவற்றை விரும்பியபடி இயக்குதல்.

8. வசித்துவம் - எல்லா உயிர்களையும் தன்வசப்படுத்தி ஆளுதல். (27)

258. மண்புனலனல் கால்வான
மனமகங்காரம் புத்தி
யொண்குண மூலமென்னு மொன்பதும்
விசேடித் தோங்கிக்
கண்கமலத்த மாலைக் கலந்துளே
விளக்கு மெட்டே
வண்கம லத்தோனுள்ளே மருவியே
விளக்கு மன்றே.

மண்புனல் அனல் கால்வானம்
மனம் அகங்காரம் புத்தி
ஒண் குணம் மூலம் என்னும்
ஒன்பதும் விசேடித்து ஓங்கிக்
கண் கமலத்த மாலைக் கலந்து
உ(ள்)ளே விளக்கும் எட்டே
வண்கமலத்தோன் உள்ளே
மருவியே விளக்கும் அன்றே.

உரை:

நிலம், நீர், தீ, காற்று, விண், மனம், அகங்காரம், புத்தி ஒளிரும் பிரகிருதி யாகிய குணம் ஆகிய ஒன்பதும் சிறப்பாக வளர்ந்து, தாமரைப்பூப் போன்ற கண்களையுடைய திருமாலோடு பொருந்தி, எட்டு வகைச் சித்திகளும் விளக்கம் பெறும். வளப்பம் பொருந்திய தாமரைப் பூவை வாழும் இடமாகக் கொண்ட பிரமனிடத்தில் குணம் தவிர்ந்த எட்டு மட்டும் பொருந்தி விளங்கும்.

Koviloor Digital Library

விளக்கம்:

மண்புனல் அனல் கால்வானம் - நிலம், நீர், தீ, காற்று, வானவெளி என்ற ஐந்தும் ஐந்து இயற்கைப் பொருள்கள்; **அகங்காரம்** - செருக்கு; **ஒண்** - ஒளியுடைய; **மூலம்** - காரணம்; **விசேடித்து** - சிறப்பாக; **ஓங்கி** - வளர்ந்து; **கலந்து** - பொருந்தி; **கண்கமலத்த** - கமலத்தகண், தாமரை மலர் போன்ற கண்; **மால்** - திருமால்; **விளங்கும்** - விளங்கும்; **எட்டு** - எட்டுத் தத்துவங்கள்; **வண்** - வளப்பம்; **கமலத் தோன்** - தாமரைப் பூவில் தங்குகின்ற பிரமன்; **மருவி** - கலந்து; **விளங்கும்** - துலங்கும்; **அன்றே** - அசை.

குறிப்பு:

நிலம் முதற் சொல்லப்பட்ட ஒன்பதும் தத்துவங்கள். இவ்வொன்பதும் விஷ்ணுவினறிவிற் சிறந்து விளங்கும். புருஷன் ஒருவன்தான் மேற் சொன்ன விதமான சிவதர்மப் பேறாக மண் தத்துவத்தையுணரும் பேறு பெற்றுப் பைசாச லோக பதவியுறுமிடத்து, விஷ்ணு மூலம் அவனுக்கு மேற்காட்டிய எட்டுச் சித்தியும் ஓரளவில் இருக்கும். அவன், மண் புனல் என்ற இரு தத்துவங்களை உணரும் (to realize) பேறுபெறுமிடத்து இன்னுமொரு எட்டுக் கூடிச் சித்தி 16 ஆகும். இவ்விதமே மேல் மேல் ஒவ்வொரு தத்துவத்துக்கும் எட்டெட்டுக் கூடிக் கொண்டுபோய் எட்டாந் தத்துவமான புத்தி தத்துவம் உணரப் படுகையில் அவனுக்கு 8 X 8 = 64 சித்திகள் இருக்கும் என்ற விவரம் இவ்விரு செய்யுளாலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இஃதிருக்க.

சிவஞானசித்தியார் 146ஆஞ் செய்யுளின் சார்பில் இத்தகைய பைசாச சித்தி முதலியவற்றை விளக்கும்போது சிவாக்கிரம யோகிகள், பைசாசம் முதல் சிவபுவன மீறாக ஒவ்வோர் சித்தி மட்டத்திலும் அணிமா முதலிய எண் சித்திகளு முண்டு. ஆனால் கீழிருந்து மேல் நோக்கிப் போகப் போக அவை முறையே இரு மடங்கு அணிமா, மும்மடங்கு அணிமா என்ற ரீதியில் ஏறிப்போய்ச் சிவபுவன சித்தி வாய்க்கையில் அட்ட சித்தியில் ஒவ்வொன்றும் எட்டு மடங்கு பிரபாவமாயிருக்கும் எனக் காட்டியுள்ளார். சிவாக்கிரம யோகிகள் உரை, திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பு 1965 என்ற பிரசாரத்தில் பக். 317 முதல் 324 வரை இவ்விளக்கங் காணலாம். எண் சித்திகளென்றே வழக்கமிருத்தலால் இந்நூல் சொல்கிறபடி 64 சித்திகளுக்குக் கணக்கு வைக்காமல் ஒவ்வொன்றும் பிரபாவ நிலையால் எட்டெட்டாமெனக் கொள்வது பொருத்தம் போலத் தோன்றுகிறது.

இந்நூல் விஷ்ணுவைச் சம்பந்தப்படுத்திக் கூறியது புத்தி தத்துவத்துக்கு அத்தெய்வம் விஷ்ணு என்னும் முறைபற்றியாம். (28)

259. புந்தியையல்லா வெல்லாம் பொருந்திய பிரசவேந்தன்
சிந்தையைத் தெருட்டுமிந்தத் திறத்தினிற் கீழும் தேர்க
முந்தியே யிருந்தார் பேற்றை முற்றிய வினையினாலே
பிந்தியே செறிந்தார் தாமு மகிழ்வுறப் பெறுவரன்றே.

Koviloor Digital Library

புந்தியை அல்லா எல்லாம் பொருந்திய பிரச வேந்தன்
சிந்தையைத் தெருட்டும் இந்தத் திறத்தினில் கீழும் தேர்க
முந்தியே இருந்தார் பேற்றை முற்றிய வினையினாலே
பிந்தியே செறிந்தார் தாமும் மகிழ்வுஉறப் பெறுவார் அன்றே.

உரை:

புத்தி தத்துவம் அல்லாத கீழ் நின்ற ஏழும் தம்மோடு பொருந்தின பிரமனுடைய உள்ளத்தைப் பொருந்தி நின்று அறிவை விளக்கும். இவ்வாறே, கீழே உள்ள உலகினருக்கும் முறையே ஒவ்வொரு தத்துவம் குறைந்து நின்று அறிவை விளங்கச் செய்யும். அந்த உலகுகளிலே தங்கியிருப்போர் பெறுகின்ற பயன்களை, இந்த உலகில் வாழும்போது செய்கிற நல்வினைகளின் பயனாக மக்கள் அந்த உலகுகளுக்குச் சென்று அந்தப் பயன்களைப் பெற்று மகிழ்வர்.

விளக்கம்:

பிரச வேந்தன் - பிரசா வேந்தன் என்பது பிரச வேந்தன் என வந்தது; இது பிரசாபதியாகிய பிரமனைக் குறிக்கும்.

சிந்தை - உள்ளம்; தெருட்டுதல் - அறிவுறுத்தல்;திறம் - வகை; பேறு - பயன்; தேர்க - உறுதி செய்க;

முற்றிய - செய்த; செறிந்தார் - அடைந்தார்; அன்றே - அசை. (29)

260. தரைதனையிலக்கதாக வெறிந்தகற் றவறாதற்றே
யரனையும் குறித்துச் செய்தவினை பழுதாகாதற்றே
பரமனுஞ் செய்தார் செய்திப்பலத்தினைக் கொடுப்பன் பாங்காற்
குருலகுவென்னும் பேதம் வினைதொறுங் குறித்துக்கொண்டே.

தரைதனை இலக்கு அதுஆக எறிந்தகல் தவறாது அற்றே
அரனையும் குறித்துச் செய்த வினைபழுது ஆகாது அற்றே
பரமனும் செய்தார் செய்திப் பலத்தினைக் கொடுப்பன் பாங்கால்
குருலகு என்னும் பேதம் வினைதொறும் குறித்துக் கொண்டு. ஏ.

உரை:

நிலத்தில் ஒரு நிலையைக் குறிவைத்து வீசிய கல் தவறாமல் குறித்த இடத்தை அடைவது போல, சிவனைக் குறித்துச் செய்த பணியும் தவறாது நல்ல பலனை அளிக்கும். மேலான சிவபிரான் ஒருவர் செய்த பணியைச் சீர்தூக்கி, அதன் தன்மைக்கு ஏற்பப் பயனை நல்குவான்.

Koviloor Digital Library

விளக்கம்:

இலக்கு - குறி; பழுதாகாது - வீண் போகாது; பரமன் - பரம்பொருள்; குரு - தரம் மிக்கது; லகு - தரம் தாழ்ந்தது; பேதம் - வேறுபாடு; குறித்துக் கொண்டு - சீர்தூக்கி. (30)

கந்தக் கடவுள் உரைத்தாரெனல்

261. என்று தருமத்தொடு பலத்திற மிசைத்தான்
குன்றுவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்று புலனைந்தினையும் வெய்யவினை நைய
நின்றமுனி யன்றுணர நிர்க்குண னினைந்தே.

என்று தருமத்தொடு பலத்திறம் இசைத்தான்
குன்றவர் மடம்கொடி தனக்கு அருள்கொடுத்தான்
வென்று புலன் ஐந்தினையும் வெய்யவினை நைய
நின்றமுனி அன்று உணர நிர்க்குணன் நினைந்து ஏ.

உரை:

மலையில் வாழும் வேடுவர் தலைவன் நம்பிராசன் திருமகளானவரும், இளமையும் மென்மையுமான உடலமைப்புக் கொண்டவருமான வள்ளி நாயகிக்கு அருள்செய்த தூய கந்தக் கடவுள், கொடிய தீவினை கெடுமாறு மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளையும் அடக்கிய அகத்தியன் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணி, சிவதருமத்தையும் அதனால் உண்டாகும் பலவகைப் பயன்களையும் விளக்கமாக உரைத்தான்.

விளக்கம்:

குன்றவர் - வேடுவர்; மடம் - இளமை; கொடி - கொடி போன்ற உடல் அமைப்புக் கொண்ட வள்ளிநாயகி; வெய்ய - கொடிய; நைய - கெட; நிர்க்குணன் - தூய கந்தன்; ஏ - அசை. (31)

சிவபெருமான் புகழ்

262. உற்றவர் தீவினை யோட்டினனே
யுண்பலிதேர் தலையோட்டினனே
யெற்று புனற்சடை யேற்றினனே
யீடுடைக் கொல்லைவெள் ளேற்றினனே
கற்றவருக்கறங் காட்டினனே
கடுநடமாடிடு காட்டினனே
பற்றினவர்க்கருள் பாட்டினனே பாங்கில
னென்னையும் பாட்டினனே.

Koviloor Digital Library

உற்றவர் தீவினை ஒட்டினனே
உண்பலிதேர் தலை ஒட்டினனே
எற்று புனல்சடை ஏற்றினனே
ஈடுஉடைக் கொல்லைவெள் ஏற்றினனே
கற்றவருக்கு அறம் காட்டினனே
கடுநடம் ஆடிடும் காட்டவனே
பற்றினவர்க்கு அருள் பாட்டினனே
பாங்குஇலன் என்னையும் பாட்டினனே.

உரை:

தன்னைப் புகலாக அடைந்த அடியவர்களின் பாவங்களை அகற்றியவனே! பிரமன் தலையோட்டில் பிச்சை உணவை விரும்பி ஏற்றவனே! கங்கையாற்று நீரைத் திருச்சடையில் ஏற்றவனே! காட்டு நிலத்திற்கு உரிய வலிமை வாய்ந்த எருதை உடையவனே! சனகர் முதலான நால்வருக்கும் அறம் முதலான நான்கினையும் அறிவித்தவனே! சங்கார தாண்டவம் செய்யும் சுடலையை உடையவனே! தன்னைப் பற்றுக்கோடாகக் கொண்டவர்களுக்கு முத்தியின்பத்தை அருளும் பெருமை உடையவனே! பாடுதற்கு ஏற்றவன் அல்லாத என்னையும் பாடுவித்து அப் பாடல்களை ஏற்று அருள் செய்தவனே!

விளக்கம்:

பாடு - பெருமை; உற்றவர் தீவினை - அடியவரின் பாவங்கள்; பலி - பிச்சை உணவு; தலை - இது பிரமனுடைய மண்டை ஓட்டைக் குறிக்கும். ஈடு - வலிமை; ஏறு - காளை; கடுநடம் - சங்கார தாண்டவம்; பற்றினர் - திருவடிகளைப் பற்றுக் கோடாகக் கொண்ட ஞானியர்; பாங்கு இலன் - தகுதியில்லாதவன்; பாட்டினன் - பாடுவித்தவன். (32)

சிவபிரான் புகழ்

263. கழலென நாகமுங் கட்டினனே
கண்ணின் விழித்தடுங் கட்டினனே
மழலைநல் வீணையின் வாசகனே
மயலெனக் ககற்றிடும் வாசகனே
தழைமயிற் சாயலோர் பாலினனே
சாலத் தழைத்த கொம்பாலினனே
மிழலையுமூரென மேவினனே வெம்புர
மெய்தடு மேவினனே.

கழல் என நாகமும் கட்டினனே
கண்ணில் விழித்து அடும் கட்டினனே
மழலைநல் வீணையின் வாசகனே
மயல்எனக்கு அகற்றிடும் வாசகனே

Koviloor Digital Library

தழைமயில் சாயல்ஓர் பாலினனே
சாலத்தழைத்த கொம்பு ஆலினனே
மிழலையும் ஊர்என மேவினனே
வெம்புரம் எய்துஅடும் ஏவினனே.

உரை:

திருவடிகளிலே வீரக் கழல் போல நாகப் பாம்பினை அணிந்தவனே! அருள் செய்தற்கு உரியவர்களின் தளையைச் சேதிப்பவனே! மழலை போன்று சொல் பயில்கின்ற நல்ல வீணையின் ஒலியை உடையவனே! என்னுடைய மயக்கம் நீங்குதற்குக் காரணமான சிவ ஆகமங்களை உடையவனே! மயில்போலும் தோற்றம் உள்ள உமையை ஒரு பாகத்தில் கொண்டவனே! தழைத்துப் பரவிய கிளைகளை யுடைய கல் ஆல மரத்தின்கீழ் அமர்ந்தவனே! திருவீழிமிழலையென்னும் பதியில் எழுந்தருளியவனே! கொடிய முப்புரத்தை எரித்து நீறு ஆக்கும் அம்பினை உடையவனே!

விளக்கம்:

கழல் - வீரர்கள் காலில் அணியும் பூண்; அடும் - கொல்லும்; கட்டு - தளை; மழலை - திருந்தாத சொல், குழந்தைமொழி; தழை - பசுமையான; மயிற்சாயல் - மயிலின் சாயலுக்கு ஒப்பான சாயல்; சால - மிகவும்; ஆல் - கல் ஆலமரம்; மேவுதல் - பொருந்துதல்; மிழலை - திருவீழி மிழலை என்னும் சிவதலம்; வெம் - கொடிய; ஏ - அம்பு. (33)

குமரன் புகழ்

264. வாடா வனமுலை தோடார் சுரிகுழல்
வாளார் விழியிணை உமைபாக
னூடாவயனரிதேடா வடிமுடி
யோராதயர்வுற வருளீசன்
காடேயிடமென நாடா நடநவில்
காதார் குழையினனடி சேர்தற்
கீடாரிருவினை கூடாவகைதரு
மேராரறுமுக னியனூலே.

வாடா வ(ன்)னமுலை தோடுஆர் சுரிகுழல்
வாள்ஆர் விழிஇணை உமைபாகன்
ஊடா அயன்அரி தேடா அடிமுடி
ஓராது அயர்வுஉற அருள்ஈசன்

Koviloor Digital Library

காடே இடம்என நாடா நடம்நவில்
காதுஆர் குழையினன் அடிசேர்தற்கு
ஈடார் இருவினை கூடாவகைதரும்
ஏர்ஆர் அறுமுகன் இயல்நூல் ஏ.

உரை:

அழகு நிரம்பிய ஆறுமுகப் பெருமான் அருளிய இந்த நூல், தளராத அழகையுடைய நகில்களையும், மலர் அணிந்த சுருண்ட கூந்தலையும், வாள் போல ஒளிரும் இரண்டு கூரிய விழிகளையும் உடைய உமையைத் தன் பாகத்திலே கொண்டவனும், தமக்குள் யார் பெரியவன் என்று மாறுபட்டு நின்ற விஷ்ணுவும் பிரமனும் முறையே அடியையும் முடியையும் தேடிக் காண முடியாமல் தளர்ந்து நின்ற போது அவர்களுக்கு அருள் புரிந்தவனும், ஊழிக் காலத்தில் சுடுகாட்டையே அரங்கமாகக் கருதித் திருக்கூத்து ஆடியவனும், காதில் சங்குக் குழையை அணிந்தவனும் ஆகிய சிவபிரானின் திருவடிகளை அடைவதற்குத் தடையாம்படி வலிமை பொருந்திய இருவினைகள் சாராதவாறு திருவருள் ஞானத்தை நல்கும்.

விளக்கம்:

வாடா - தளராத; வன்னம் - அழகு; தோடு - பெண்ணின் காதணி; ஊடா - மாறுபட்ட; அயன் - பிரமன்; அரி - திருமால்; ஓராது - அறியாமல்; அயர்வு - தளர்வு; நடம் - கூத்து; காடு - சுடலை; குழை - ஆண்களின் காதணி; ஏர் - அழகு.(34)

அகத்தியன் துதி

265. கயலா ரிணைவிழி யிழையா ரிணைமுலை
கலவா வவரொடு களியாரே
யயலாரவரிவ ரயலா ரலரெனு
மறியாமையு நனியறுவாரே
வியலார் கயிலைநன் மலைவாழ் விமலன்
விரையார் மலரடி விழைவாரே
புயலார் வளமுறு பொதிமா மலைமுனி
புகழே விழைவொடு புகல்வாரே.

கயல்ஆர் இணைவிழி இழைஆர் இணைமுலை
கலவா அவரொடு களியாரே
அயலார் அவர்இவர் அயலார் அலர்
எனும் அறியாமையும் நனிஅறுவாரே
வியல்ஆர் கயிலைநல் மலைவாழ் விமலனது
விரைஆர் மலர்அடி விழைவாரே
புயல்ஆர் வளம்உறு பொதிமா மலைமுனி
புகழே விழைவொடு புகல்வார் ஏ.

Koviloor Digital Library

உரை:

மழை மேகங்கள் நிரம்பி நீர்வளம் பொருந்தியுள்ள பொதிகை மலையில் வாழும் அகத்திய முனிவரின் கீர்த்தியை விருப்பத்தோடு மக்களிடம் உரைப்பவர், அணிகலன்கள் பூண்ட கயல்விழி மங்கையரின் கலவி இன்பத்தை நாடார்; அவர் நமக்கு வேண்டியவர், இவர் நமக்கு வேண்டாதவர் என்று வேறு பிரித்து உணரும் அறியாமையை அடியோடு அகற்றி விடுவார்; அகன்று பரந்துள்ள திருக்கயிலாய மலையில் வாழும் தூய சிவபிரானின் மணம் கமழும் திருவடிகளை விரும்பும் இயல்புடையோர் ஆவர்.

விளக்கம்:

கயல் - மீன்; **இணை** - இரண்டு; **இழை** - அணிகலன்; **களி** - மகிழ்வு; **அயலார்** - அக்கம் பக்கத்தில் வாழ்கிறவர்; **நனி** - மிக அதிகமாக; `**வியல்** - அகலம்; **விமலன்** - சிவபிரான்; **விரை** - மணம்; **புயல்** - மழை முகில்; **வளம்** - செழிப்பு; **விழைவு** - விருப்பம்; **கலவா** - கலந்து; **ஏ** - அசை. (35)

Koviloor Digital Library

ஆறாவது
பாவ இயல்

இந்த இயல் எந்த எந்தச் செயல்களைச் செய்தால் ஒருவர் நரகத்தை அடைவார் என்பதை விளக்குகின்றது.

குமரன் உரை

266. முனிவர தரும பேத மொழிந்தனம் பலங்கள் முற்று
மினி நிரயத்தை யேய்வா ரியற்றிடும் பாவ பேத
முனையுரை செய்வா மோர்நீ யுடலிறு வாயினாகுந்
துணிவினைத் துரிசு நீங்கக் கேட்டிடுஞ் சூழ்ச்சி யார்க்கும்.

முனிவர தருமபேதம் மொழிந்தனம் பலங்கள் முற்றும்
இனி நிரயத்தை ஏய்வார் இயற்றிடும் பாவ பேதம்
உனை உரை செய்வாம் ஓர் நீ உடல் இறு வாயின் ஆகும்
துணிவினைத் துரிசு நீங்கக் கேட்டிடும் சூழ்ச்சி யார்க்கும்.

உரை:

முனிவர்களில் சிறந்தவனே! முன்னைய சிவதரும இயலில் சிவ தருமங்களையும் அவற்றின் பயன்களையும் உரைத்தோம். இனி இந்தப் பாவ இயலைக் கேட்கும் நுண்ணறிவு உடையவர்களுக்கு, அவர்களின் மனம், வாக்கு, மெய்களால் உண்டாகும் தீய செயல்களின் துன்பங்கள் அகலும் வண்ணம், நரகத்திற்குச் செல்லுவோர் செய்யும் தொழில் வகைகளை உனக்குச் சொல்வோம். அறிவாயாக! என்று குமரப் பெருமான் கூறினார்.

விளக்கம்:

தருமபேதம் – அறச் செயல்கள்; பலங்கள் – பயன்கள்; நிரயம் – நரகு; ஏய்வார் – அடைவார்; பாவபேதம் – தீய செய்கைகள்; உன்னை – உனக்கு; ஓர்நீ – நீ ஓர், நீ அறிவாயாக; இறுவாய் – முடிவு; துனி – துன்பம்; வினை – செயல்; துரிசு – குற்றம்; சூழ்ச்சியார் – நுண்ணறிவாளர்; உடலிறுவாயினாகுந்துரிசு – காயத்தை இறுதியாகக் கொண்டுரைக்கும் மனம், வாக்கு, காயம் என்ற திரிகரணங்களாலும் ஆகும் செயற் குற்றம். திரிகரணங்கள் மனம் வாக்குக் காயம் என்றே பயின்று வருதலின் அவற்றைப் பதரூபம் மாற்றாது கொள்ளல் விசேடமாகும். (1)

Koviloor Digital Library

பாவம் செய்தவர்

267. புரிந்துளார் பாவமுன்னும் புக்குமா நிரய மீண்டு
மிருந்த வாதனையினாலே யியற்றுவர் பாவம் பின்னும்
விரிந்திடு மனேக கோடி விதமுறப் பாவமெல்லாந்
தெரிந்திடிற் றூலமாதி திரிவிதமாகிச் சேரும்.

புரிந்து உள்ளார் பாவம் முன்னும் புக்குமா நிரயம்மீண்டும்
இருந்த வாதனையினாலே இயற்றுவர் பாவம் பின்னும்
விரிந்திடும் அநேகம் கோடி விதம் உறப் பாவம் எல்லாம்
தெரிந்திடில் தூலம் ஆதி திரிவிதம் ஆகிச் சேரும்.

உரை:

முன்னைப் பிறப்புகளிற் பாவங்களைச் செய்தவர்கள் நரகங்களிற் சென்று அவற்றுக்காந் தண்டனை பெற்றுத் தீர்த்து மீண்டும் பூமியிற் பிறந்திருக்கும்போதும் முன்னைய வாசனையினாலே மேலும் பாவங்களைச் செய்வார்கள். அவ்வகையில் அநேககோடி விதமாக அவர்கள் செய்யும் பாவமெல்லாம் ஆராயில் தூலம் முதல் மூன்று வகையாகும். வாசனை - பழக்க வாசனை; பெருங்காய பாண்டத்திலிருந்து பெருங்காயம் முற்றாக எடுக்கப்பட்ட பின்னும் அதன் மணம் இருக்குமாறு போல்வது இது. பாவியின் பாவபலன்ருத்ர தண்டனையா லொறுக்கப்பட்ட பின்னும் அவனிற் பாவப் பழக்க வாசனையிருக்கும். அதனால், மேலும் பாவங்களை விரும்புவான் என்பது கருத்து. 'வாலையில் ஆடின தேவரடியாள் வயது சென்றாலும் காலைக் காலைத் தூக்குவாள்' என்பதும் உள்ளதே.

விளக்கம்:

முன்னும் - முன்பிறவியில்; புக்க - புகுந்த; மீண்டும் - மீளவும்; இருந்த - எஞ்சிய; வாதனை - பழைய வினை; பின்னும் - மேலும்; அநேகம் கோடி விதம் - கணக்கற்றவை; தெரிந்திடில் - ஆராய்ந்தால்; திரிவிதம் - மூன்றுவகை. (2)

தூல கன்மம்

268. தூலமே சூக்கந்தானே சூக்குமதரமே யென்றிங்
கேலவே மூன்று கூறா மிவற்றினுட் டூலந்தன்னைக்
கோலியே தொகுத்திந் நூலிற் கூறுவமஃதுங் கூறின்
மாலுறு மனமே வாக்கே வடிவமே யெனவு மூன்றாம்.

தூலமே சூக்கம் தானே சூக்கும தரமே என்று இங்கு
ஏலவே மூன்று கூறாம் இவற்றினுள் தூலம் தன்னைக்
கோலியே தொகுத்து இந்நூலில் கூறுவம் அஃதும் கூறில்
மால்உறு மனமே வாக்கே வடிவமே எனவும் மூன்றாம்.

Koviloor Digital Library

உரை:

முன் சொன்ன பாவ விதங்கள் தூலம், சூக்குமம், சூக்கும தரம் என மூன்று பிரிவின ஆகும். இம் மூன்று பிரிவினுள் தூலப் பிரிவை இந்த நூலில் தொகுத்துச் சொல்லுவோம். அவற்றை ஆராய்ந்தால் மயக்கம் பொருந்திய மனத்தாலும் சொல்லாலும் உடலாலும் வருவன என்று மூன்று விதங்கள் ஆகும்.

விளக்கம்:

தூலம் - கண்ணுக்குத் தோன்றுவது; மனம் வாக்கு காயம் ஆகியவற்றால் விளையும் பாவங்கள் குறித்துப் பட்டினத்து அடிகள் தொகுத்துக் கூறுவது வருமாறு:

''சொல்லால் வரும் குற்றம் சிந்தனையால் வரும் தோடம் செய்த
பொல்லாத தீவினைப் பார்வையில் பாவங்கள் புண்ணிய நூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குகள் ''

(திருவேகம்பமாலை - 28)

சூக்கம் - நுண்மை; சூக்குமதரம் - மிக நுண்மை; ஏலவே - பொருந்த; கோலுதல் - ஆராய்தல்; தொகுத்து - சுருக்கி; கூறுவம் - சொல்லுவோம்; அஃதும் - அதுவும்; கூறில் - சொன்னால்; மால்உறு - மயங்கிய; வாக்கு - சொல்; வடிவம் - உடம்பு. (3)

ஒவ்வொன்றும் நான்கு வகை

269. பேசிய தூலபேதந் தனித்தனி நான்குபேத
மூசமுந் நான்கு பேத முற்றுமம் மூன்று மின்னும்
மாசி லோரறியும் வேலை விரிந்திடு மனேகமாக
நாசமா நரகபேதத் துயரினைக் கொடுக்கு நாளின்.

பேசிய தூல பேதம் தனித்தனி நான்கு பேதம்
மூசமுந் நான்கு பேதம் முற்றும் அம்மூன்றும் இன்னும்
ஆசு இலோர் அறியும் வேலை விரிந்திடும் அநேகமாக
நாசமாம் நரகபேதத் துயரினைக் கொடுக்கும் நாளில்.

உரை:

முன் சொன்ன தூல வேறுபாடாகிய மனம், வாக்கு, காயம் ஆகிய ஒவ்வொன்றும் நான்கு வகைகளாய் அவற்றின் மொத்த எண்ணிக்கை பன்னிரண்டு ஆகும். அந்த மனம் முதலான மூன்றும், குற்றம் இல்லாத பெரியோர் ஆராயும் போது, மேலும் பல வகைகளாக விரிவடையும். அவ்வாறு விரிவடையும் பாவங் களின் பயன், பலவகை நரகங்களிலே உயிர்கள் துயரங்களை அனுபவித்த பிறகுதான் அழியும்.

Koviloor Digital Library

விளக்கம்:

மூச - பொருந்த, கூட; முந்நான்கு பேதம் - பன்னிரண்டு விதம்; ஆசு - குற்றம்; இலோர் - இல்லாதவர்; அறியும் வேலை - ஆராயும் போது; நாசமாம் - அழியும்; கொடுக்கும் நாள் - அனுபவிக்க வைக்கும் காலம் துயர அனுபவத்தால் அன்றிப் பாவம் ஒழியாது என்பதாம். (4)

மனத்தால் உண்டாகும் பாவ வகைகள்

270. அன்னியன் மனையாடன்னை யணையுமா
தரவு கூர
வுன்னுத லயலார்தங்க ளுடைமையுங்
கொள்ள வுன்னல்
பின்னையு மவர்தம்பண்டம் பிழையுறு
விக்கப் பேண
லென்னுமிம் மூன்றுங் கொல்ல
வெண்ணலு மனத்தினீட்டம்.

அன்னியன் மனையாள் தன்னை
அணையும் ஆதரவு கூர
உன்னுதல் அயலார் தங்கள்
உடைமையும் கொள்ள உன்னல்
பின்னையும் அவர்தம் பண்டம்
பிழை உறுவிக்கப் பேணல்
என்னும் இம் மூன்றும் கொல்ல
எண்ணலும் மனத்தின் ஈட்டம்.

உரை:

பிறர் ஒருவருடைய மனைவியோடு கூடி உடலின்பம் நுகர வேண்டும் என்னும் ஆசையால் அதற்கேற்ற வழிகளை எண்ணுதலும், பிறருடைய உடைமை களைக் கவர வேண்டுமென நினைத்தலும், அவர்களுடைய பொருள்களைச் சேதப்படுத்தச் சூழ்ச்சி செய்தலும், இன்னோர் உயிரினைக் கொல்ல எண்ணுதலும் ஆகிய நான்கு செயல்களும் மனதால் ஏற்படுகின்ற பாவ விதங்கள் ஆகும்.

விளக்கம்:

அன்னியன் மனையாள் - பிறன் மனைவி; **அணையும் ஆதரவு** - கூடி இன்பம் அனுபவிக்கும் ஆசை; இது ஐந்து பெரும் பாவங்களுள் ஒன்று.

''பிறன் மனையாளை விரும்புவோரைத் தருமம், கீர்த்தி, பிறர் நேயம், கண்ணியம் ஆகிய நான்கும் சேரமாட்டா. பலர் பகையும், பழியும், பாவமும், அச்சமும் சேரும்'' என்பது *நாலடியாரின்* கருத்து.

Koviloor Digital Library

''அறம், புகழ், கேண்மை, பெருமை, இந் நான்கும்
பிறன் தாரம் நச்சுவார்ச் சேரா - பிறன் தாரம்
நச்சுவார்ச் சேரும் பகை, பழி, பாவம் என்று
அச்சத்தோடு இந்நாற் பொருள்.''

(நாலடியார் - அதிகாரம் - 9)

உன்னுதல் - நினைத்தல்; **பின்னையும்** - மேலும்; **பண்டம்** - பொருள்; அயலார் தங்கள் உடைமையும் கொள்ள உன்னல்:

''மனத்தால் பிறன் பொருளைக் கவர நினைத்தலும் தீதாக முடியும்'' என்பது திருவள்ளுவரின் அறிவுரை.

''உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.''

(திருக்குறள் - 282)

''பின்னையும் அவர் தம் பண்டம் பிழை உறுவிக்கப் பேணல்
கெடுவான் கேடு நினைப்பான்''

என்பது *பழமொழி.*

''பிறர் ஒருவருக்கு இழப்பு உண்டாக வேண்டுமென்று எண்ணிச் செயல் புரிகிறவன், தானே அழிந்து போவான் என்று *சாத்திரம்* கூறுகிறது. ஆகையால், என்னுடைய நல்ல நெஞ்சமே! பகைவனுக்குக் கூடக் கேடு எண்ணாதே'' என்கிறார் திரு. சி. சுப்பிரமணிய பாரதியார்.

''பகைவனுக் கருள்வாய் - நன்னெஞ்சே
பகை வனுக் கருள் வாய்
தாழ்வு பிறர்க் கெண்ணத் தான் அழிவான் என்ற
சாத்திரம் கேளாயோ நன்னெஞ்சே''

(பாரதியார் பாடல்)

கொல்ல எண்ணல் - இதுவும் ஐந்து பெரும் பாவங்களுள் ஒன்று.

''கொல்'' என்றும், ''குத்து'' என்றும் சொல்லிய விலங்கை ஒத்த மக்களைக் காலனுடைய ஏவலர் கயிற்றாற்கட்டிச் 'செல்' என்றும் 'நில்' என்றும் அதட்டி, அனல் கக்குகின்ற நரகத்தில் நெடுங்காலம் நிற்க என்று ஆணையிடுவர்'' என்று திருமூலர் கூறுகிறார்.

''கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற்றாற் கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே.' *(திருமந்திரம் - 198)*

(மறுமையில், பாவிகளுக்கு யமதுன்பம் உண்டென்பதற்கு இதுவும் சான்றாம்.)

ஈட்டம் - தேடுதல்; **பேணல்** - விருப்பத்திற்கொள்ளல். (5)

Koviloor Digital Library

சொல்லால் வரும் பாவங்கள்

271. அழுகையுங் கோளும் பொய்யு
மயலப வாதந் தானும்
வழுவிய வாக்கின் பேத
மற்றையன் மனையா டோளைத்
தழுவுத றமித்துக் கோறல் சராசர
பேதந் தன்னைப்
பழிபடு பண்ட முண்கை
பரர்பொரு ளதனைப் பற்றல்.

அழுகையும் கோளும் பொய்யும்
அயல் அபவாதம் தானும்
வழுவிய வாக்கின் பேதம்
மற்று அயல்மனையாள் தோளைத்
தழுவுதல் தமித்துக் கோறல்
சரஅசரபேதம் தன்னைப்
பழிபடும் பண்டம் உண்கை பரர்
பொருள் அதனைப் பற்றல்.

உரை:

காரணமில்லாமல் அழுதல், கோள் உரைத்தல், பொய் கூறுதல், பிறரை இழிவாகப் பேசுதல் ஆகிய நான்கு செயல்களும் பேச்சால் நேருகின்ற பாவ விதங்கள் ஆகும். அயலான் மனைவியோடு உடலின்பம் நுகருதல், இயங்குவன இயங்காதன என்ற இருவகை உயிர்களையும் அடித்துக் கொல்லுதல், அருளாளரால் விலக்கப்பட்ட தீய பொருள்களைச் சாப்பிடுதல், பிறர் பொருளைக் கவர்ந்து கொள்ளுதல்.

விளக்கம்:

அயல் - பிறர்; அபவாதம் - பழிச் சொல்; தமித்து - அடித்து; கோறல் - கொல்லுதல்; சரம் - இயங்குவது; அசரம் - இயங்காதது; பழிபடும் பண்டம் - விலக்கப்பட்ட பொருள்; பரர் - பிறர்; மற்று - ஏனைய; பற்றல் - கவர்ந்து கொள்ளல். (6)

அதி பாதகம் முதலிய பாவங்கள்

272. என்னுமிந் நான்குங்காயத் தீட்டிய பாவ பேதம்
பன்னிரு பேதமாக மனாதியைப் பகர்ந்தாமின்னு
மன்னிய மனாதி மூன்று மலினதி பாதகாதி
யென்னவே விரியுநொய்தி னவற்றையு மியம்புவாமே.

Koviloor Digital Library

என்னும் இந்நான்கும் காயத்து ஈட்டிய பாவ பேதம்
பன்னிரு பேதம் ஆக மனஆதியைப் பகர்ந்தாம் இன்னும்
மன்னிய மனஆதி மூன்று மலின அதி பாதக ஆதி
என்னவே விரியும் நொய்தில் அவற்றையும் இயம்புவாம் ஏ.

உரை:

இவ்வாறு முன் கூறிய செயல்கள் நான்கும் காயத்தால் தேடிய பாவ விதங்கள் ஆகும். இங்ஙனமே மனம் வாக்குக் காயங்களால் வந்த கண்களுக்குத் தெரியும் பாவங்களின் விரிவைப் பன்னிரண்டு பிரிவுகளாக விளக்கினோம். இனி, இன்னமும் நிலைபெற்ற மனம் முதலான மூன்று விதங்கள் உள்ளன. அவற்றால் அழுக்குகளை யுடைய அதிபாதகம் முதலிய பாவங்கள் உண்டாகும் செயல்களையும் சுருங்கிய அளவில் உரைப்போம்.

விளக்கம்:

காயத்து ஈட்டிய - உடம்பால் தேடிய; மன ஆதி - மனம் முதலான; பகர்ந்தாம் - சொன்னோம்; மன்னிய - நிலை பெற்ற; மலினம் - அழுக்கு; அதி பாதகம் - கொடும்பாவம்; நொய்தில் - சுருக்கமாக; ஏ - அசை. (7)

அதி பாதகர் யார்?

273. தாரகன் றன்னைச் சாதத்
தடங்கடற் றளர்வார் தம்மைப்
பாரகன் றனையும் பாரும்
படைத்தவன் றனையும் பாங்காற்
காரகன்றன்னை வாங்குங் கடவுளைக்
கயந்த நெஞ்சர்
நாரகர் மீளுநாளும் பிறிதிய
னவிற்று வாமே.

தாரகன் தன்னைச் சாதத்
தடம்கடல் தளர்வார் தம்மைப்
பாரகன் தன்னையும் பாரும்
படைத்தவன் தன்னையும் பாங்கால்
காரகன் தன்னை வாங்கும்
கடவுளைக் கயந்த நெஞ்சர்
நாரகர் மீளும்நாளும் பிறிது
இயல் நவிற்றுவாம் ஏ.

Koviloor Digital Library

உரை:

பிறவியாகிய பெருங்கடலில் அமிழ்ந்து வருந்துகின்றவர்களைக் கரையேற்றுகிறவனாகவும், உலகைத் தாங்குகிறவனாகவும் உள்ள நாராயணன்; உலக உயிர்களைப் படைக்கிற பிரமன் ஆகிய இருவரையும் ஊழி முடிவில் தம்மிடத்திலே ஒடுக்கிக் கொள்ளுகிற கடவுளாகிய சிவபெருமானை வெறுத்து இகழ்கின்றவர்கள் யாரோ, அவர்களே அதிபாதகர் ஆவர். அவர் நெடுங்காலம் நரகில் கிடந்து வருந்துவர். அவர்கள் மீட்சி பெறும் காலத்தை இந்த இயலுக்கு அடுத்து உள்ள சுவர்க்க நரக இயலில் உரைப்போம்.

விளக்கம்:

சாதம் - பிறப்பு; சாதத் தடம் கடல் - பிறவியாகிய அகன்ற கடல்; தளர்வார் - வருந்துகிறவர்கள்; தாரகன் - தாங்குபவன்; பாரகன் - கரையேற்றுபவன்; பாரும் படைத்தவன் - பிரமன்; பார் - நிலஉலகு; காரகன் - பண்ணுகிறவன்; கயந்த - வெறுத்த; வாங்கும் - இழுத்துக் கொள்ளும்; கடவுள் - சிவபிரான்;

நாரகர் - நரகத்தில் இருப்பவர்; மீளும் - மீட்சி பெறும்; பிறிது - வேறு; நவிற்றுவாம் - இனிமேல் உரைப்போம்; ஏ - அசை. (8)

சிவ நிந்தனை

274. ஒப்பிலி யனாதிமுத்த
னோதிய வேதமாதிக்
கொப்புயர் புரைப்பார் நிந்தை
யுரைப்பவ ருன்னுவாரும்
வெப்பெரிநிரயந் தன்னுள்
வீழ்ந்து வெந்துருகிவீயா
ரெப்பொழு தேறுவாமென் றிளைத்
திளைத் தேங்குவாரே.

ஒப்பிலி அநாதிமுத்தன் ஓதிய
வேதம் ஆதிக்கு
ஒப்பு உயர்பு உரைப்பார்
நிந்தை உரைப்பவர் உன்னுவாரும்
வெப்பு ஏரிநிரயம் தன்னுள் வீழ்ந்து
வெந்து உருகி வீயார்
எப்பொழுது ஏறுவாம் என்று இளைத்து
இளைத்து ஏங்குவார் ஏ.

உரை:

தனக்கு யாரும் இணையில்லாதவனும் இயல்பாகவே ஆணவம் முதலான

Koviloor Digital Library

பந்தங்கள் இல்லாதவனும் ஆகிய சிவபெருமான் அருளிய திருமுறைகள், சிவாகமங்கள் முதலான அருள் நூல்களுக்கு ஒப்பாகவும், அவற்றிற்கு மேலான தாகவும் ஒரு நூலைச் சொல்லுவோரும், அந்த அருள் நூல்களை இழிவாகச் சொல்லு வோரும், இகழ்ச்சியாக எண்ணுவோரும், வெம்மை மிகுந்து எரியும் நரகில் வீழ்ந்து, தசைகள் வெந்து உருகி, உயிர்விடாமல் தண்டனையை மறுமையில் அனுபவிக்கும் உடலோடு (யாதனா சரீரம்) நரகில் கிடந்து, இளைத்திளைத்து அதைவிட்டு எப்பொழுது கரையேறுவோமோ என்று ஏக்கமுற்றவாறிருப்பர்.

விளக்கம்:

ஒப்பிலி - ஒப்புஇலி, நிகர் இல்லாதவன்; **முத்தன்** - பாசங்கள் இல்லாதவன்; **ஓதிய** - உரைத்த; **வேதம் ஆதி** - திருமுறை முதலான;

ஒப்பு - இணை; **உயர்பு** - மேன்மை; **நிந்தை** - பழிப்புரை; **உரைப்பவர்** - சொல்பவர்; உன்னுவார் - எண்ணுகிறவர்; **வீயார்** - இறவார்; ஏ - அசை. (9)

ஆசிரிய நிந்தனை

275. ஒப்பிலியனாதி முத்த னோதிய
பனுவ லோர்ந்து
தப்பறச் சாற்று மாசான்
றன்னையு மிகழ்ந்து சாற்றில்
வெப்பெரி நிரயந் தன்னில்
வீந்து வெந்துருகி வீயா
ரெப்பொழு தேறுவாமென்
றிளைத்திளைத் தேங்குவாரே.

ஒப்புஇலி அநாதி முத்தன்
ஓதிய பனுவல் ஓர்ந்து
தப்பு அறச் சாற்றும் ஆசான்
தன்னையும் இகழ்ந்து சாற்றில்
வெப்புஎரி நிரயம் தன்னில் வீந்து
வெந்து உருகி வீயார்
எப்பொழுது ஏறுவாம் என்று
இளைத்து இளைத்து ஏங்குவார் ஏ.

உரை:

தனக்கு யாரும் நிகர் இல்லாதவனும், இயல்பாகவே பாசங்கள் இல்லாதவனு மான சிவபிரான் அருளிய வேத சிவாகமங்கள், திருமுறைகள் முதலான அருள் நூல்களை நன்கு ஆராய்ந்து கற்று, அவற்றைப் பக்குவம் உள்ள மாணாக்கர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியனை இழிவுபடுத்தி, அவரைப் பழித்துப்

Koviloor Digital Library

பேசுகிறவர்களும் கொடிய எரிநரகில் வீழ்ந்து, தசைகள் வெந்து உருக, உயிரிருக்க ஊனழிந்து மறுமைக்கு உரிய உடலோடு (யாதனா சரீரத்துடன்) இருந்து இளைத்திளைத்து நரகை விட்டு எப்பொழுது கரையேறுவோமோ என்று ஏங்கித் தளர்வர்.

விளக்கம்:

தப்பு அற - பிழையில்லாமல்; சாற்றும் ஆசான் - கற்பிக்கும் ஆசிரியன்; இகழ்ந்து - பழித்து; சாற்றில் - பேசினால்; பனுவல் - புத்தகம், நூல்; ஓர்ந்து - ஆராய்ந்து; ஏ - அசை. (10)

எல்லாப் பாவங்களையும் செய்தவர்

276. அரன்றி ரவியத்தை யாசா
 னரும்பொரு ளதனையார்க்கும்
பரம்பரன் பகர்ந்த வாக்கைப்
 பரித்த புத்தகத்தைப் பற்றிக்
கரந்தவர் முன்னஞ் சொன்ன
 கரிசர்க ளொரு மூவர்க்கும்
வரும்பல முடையர்
 பாவமனைத்தையு மருவினாரே.

அரன் திரவியத்தை ஆசான் அரும்
 பொருள் அதனை யார்க்கும்
பரம்பரன் பகர்ந்த வாக்கைப்
 பரித்த புத்தகத்தைப் பற்றிக்
கரந்தவர் முன்னம் சொன்ன
 கரிசர்கள் ஒரு மூவர்க்கும்
வரும் பலம் உடையர்
 பாவம் அனைத்தையும் மருவினார் ஏ.

உரை:

திருக்கோயிற் பொருளையும், சிவஞானியாகிய குருவின் பொருளையும், யாவருக்கும் மேலான பரம் பொருளாகிய சிவபிரான் திருமொழிகள் அடங்கிய திருமுறையையும் விரும்பிக் களவு செய்தோர், முன்சொன்ன சிவ நிந்தனையாளர், சிவாகம நிந்தனையாளர், குரு நிந்தனையாளர் என்ற மூன்று வகையினரும் பெற்ற தீவினைப் பயன்களைப் பெறுவர். தவிர, இவர்களே பாவங்கள் அனைத்தையும் செய்தோரும் ஆவர்.

விளக்கம்:

அரன் திரவியம் - திருக்கோயிற் சொத்து; பரம்பரன் - சிவன்; பகர்ந்த

Koviloor Digital Library

வாக்கு - சொன்ன திருமொழிகள்; பரித்த - அடங்கிய; புத்தகம் - திருமுறை; கரந்தவர் - களவு செய்தவர்; பற்றி - விரும்பி; கரிசர்கள் - பாவம் புரிந்தவர்கள்; பலம் உடையர் - பயனை அடைவர்; மருவினார் - பொருந்தினவர்; ஏ - அசை. (11)

277. அறைந்த விவர்களனைவர்களு
மதிபாதகரே யெனவறிக
சிறந்த வினையே தீவினையு
ளதிபாதகந் தானெனத் தெளிக
நிறைந்த துயரே நெடுநாளே
யிதனிற்பலமு மெனநினைக
பிறிந்த வதிபாதக பேதந்
தனையு மினியாம் பேசுவமே.

அறைந்த இவர்கள் அனைவர்களும்
அதிபாதகரே எனஅறிக
சிறந்த வினையே தீவினையுள்
அதிபாதகம் தான் எனத்தெளிக
நிறைந்த துயரே நெடுநாளே
இதனில் பலமும் எனநினைக
பிறிந்த அதிபாதக பேதம்
தனையும் இனியாம் பேசுவம் ஏ.

உரை:

முன் சொன்ன சிவநிந்தனையாளர் முதலான பாவியர் அனைவரும் அதிபாதக வகையான பெரும் பாவியர் ஆவர். இவர்கள் செய்த பாவங்கள், தீய பாவங்கள் அனைத்திலும் மிகக் கொடியவை என அறிக. இவற்றால் அப்பாவியர் நெடுங்காலம் துயரங்களை அனுபவிப்பர் என எண்ணுக. இவற்றின் பிரிவான பெரும்பாவ வகைகளை இனி மேல் யாம் உரைப்போம்.

விளக்கம்:

அறைந்த - முன்சொன்ன; அதிபாதகர் - பெரும் பாவியர்; சிறந்த வினையே தீவினையுள் - தீவினையுள் சிறந்த வினையே, சிறப்பு கொடுமை யினுயர்வு, கொடிய தீய வினைகளே;

அதிபாதகம் - பெரும்பாவம்; பிறிந்த - கூறான, பகுதியான; அதிபாதக பேதம் - பெரும்பாவ விதங்கள்; பேசுவம் - உரைப்போம்; ஏ - அசை. (12)

Koviloor Digital Library

அதிபாதகனுக்கு ஒப்பானவர்

278. அரிக சிரமுஞ் சிவதனத்தை
யபகாரகனை யஃதரிதே
லரிவித்திடுக விருநிதிய மளித்தும்
வலியா ரவராலே
யரிதேலஃது மப்புரிவிட் டகல்க
வகலா துறைவாரே
லுரியா ரதிபாதகத் தவனுக்
கொப்பார் நிரயத் தெய்ப்பாரே.

அரிக சிரமும் சிவதனத்தை
அபகாரகனை அஃது அரிதேல்
அரிவித்திடுக இருநிதியம் அளித்தும்
வலியார் அவராலே
அரிதேல் அஃதும் அப்புரி விட்டு
அகல்க அகலாது உறைவாரேல்
உரியார் அதிபாதகத்தவனுக்கு ஒப்பார்
நிரயத்து எய்ப்பார் ஏ.

உரை:

திருக்கோயிற் பொருளைக் கவர்ந்தவன் தலையைக் கொய்திடுக; அஃது இயலாவிட்டால் வலியவர் ஒருவருக்குப் பெரும் பொருள் ஈந்து அவன் தலையைக் கொய்விக்கும்படி செய்க; அதுவும் முடியாவிட்டால், கோயிற் சொத்தைக் கவர்ந்த கள்வர் வாழும் ஊரை விட்டு வெளியேறுக. அவ்வாறு செய்யாதவர், அந்தத் திருட னாகிய அதிபாதகனுக்கு ஒப்பாவார்; அதனால், அந்தக் கள்வன் அடைகிற நரக வேதனைகளை அடைவார்கள்.

விளக்கம்:

1. தமிழகத்தில் பாண்டிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் கள்வர்களின் தலைகளை அரிந்தனர். கோவலனைக் கொல்வித்த பாண்டியன் கண்ணகியிடம், 'கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று' எனக் கூறியது கவனிக்கத் தக்கது.

2. தமிழக மன்னர்களின் ஆட்சிக் காலத்திலும், நாயக்க மன்னர்கள், இசுலாமிய நவாப்புகள், கிழக்கு இந்திய வணிகக் குழுவினர் ஆட்சி களிலும் கோயிற் சொத்துகள், பொருள்கள் யாவும் அரசினரின் கண்காணிப்பில் இருந்தன. ஆதலால், திருட்டுகள் நடைபெறவில்லை. பின்னர், பாதிரிகளின் கிளர்ச்சியால் கிழக்கு இந்திய வணிகக் குழுவினர்

Koviloor Digital Library

கோயில்களை மேல் சாதிக்காரர்களிடம் ஒப்படைத்தனர். இதன் பிறகு கோயிற் பூசாரிகள், நிருவாகிகள், பொறுப்பாக இருப்பவும் கோயிற் சிலைகள், அணிகலன்கள், பணம் ஆகியன திருடப்பட்டு வருகின்றன. (13)

சிவனை நிந்திப்பவரை ஒப்பவர்

279. சிவனை யிகழுஞ் சிறியாரை
ய்னையர் சிவனைப் பூசனையை
யுவகையுறவே கண்களிக்க
வுருகிப்பரவா துழல்வாரும்
அவனைச் சிவன்றா ளருச்சகனை
யன்பு செய்யா தகல்வாரும்
புவனத்ததிபன் பவனத்து
ணியமத்தலது புகுவாரும்.

சிவனை இகழும் சிறியாரை
அனையர் சிவனைப் பூசனையை
உவகை உறவே கண்களிக்க
உருகிப் பரவாது உழல்வாரும்
அவனைச் சிவன்தாள் அருச்சகனை
அன்பு செய்யாது அகல்வாரும்
புவனத்து அதிபன் பவனத்துள்
நியமத்து அலது புகுவாரும்.

உரை:

சிவபிரானையும், அச்சிவபிரானுக்கு நிகழ்த்தப்படுகிற வழிபாடுகளையும் கண்ணாரக் கண்டு வணங்கிப் போற்றாதவரும் சிவன் திருமேனியின் திருவடிகளிலே மலர்களை இட்டுப் பூசை செய்கின்ற பூசகருக்கு ஆதரவு காட்டாதவரும், குளித்து, தூய ஆடை உடுத்து, பூசனைக்கு உரிய பொருள்களுடன் சமய ஒழுக்கத்தோடு திருக்கோயிலுக்குச் செல்லாமல், அநாசாரமாகச் சிவாலயத்துள் நுழைவோரும், சிவபிரானைப் பழித்துப் பேசும் கீழோரான அதிபாதகருக்கு ஒப்பாவர்.

விளக்கம்:

அனையர் - ஒப்பாவர்; கண்களிக்க - கண்ணார; உருகி - மனம் நெகிழ்ந்து; பரவுதல் - போற்றி வணங்குதல்;

புவனத்து அதிபன் - உலகின் இறைவன்; பவனம் - திருக்கோயில்; நியமம் - சிவாலய தரிசன விதி (அநுசரணை) (14)

Koviloor Digital Library

இயன்ற தொண்டு செய்க

280. பரமன் றிருமுன் னழன் முன்னும்
பரம குரவன் றிருமுன்னும்
ஒருமை யுறவே வறுமையினு
முதவாதவருஞ் சிறிதேதும்
அரிது பொருடான் பச்சிலையு
மரிதோ வஃது மரிதாகிற்
றிரணமதனைத் திருமுன்னே
மாற்றலரிதோ செயலாலே.

பரமன் திருமுன் அழல் முன்னும்
பரம குரவன் திருமுன்னும்
ஒருமை உறவே வறுமையிலும்
உதவாதவரும் சிறிது ஏதும்
அரிது பொருள் தான் பச்சிலையும்
அரிதோ அஃதும் அரிது ஆகில்
திரணம் அதனைத் திருமுன்னே
மாற்றல் அரிதோ செயலால் ஏ.

உரை:

சிவன் சன்னிதியிலும் சிவ வழிபாட்டிற்காக வளர்க்கப்பட்ட சிவாக்கினியின் முன்னும், மேலான ஞான ஆசிரியன் முன்னிலையிலும், தமக்கு வறுமை வந்த போதும் மரியாதைக்கு அறிகுறியாக, தம்மால் இயன்றதைச் சிறிய அளவிலாவது அளித்திடுக. அவ்வாறு செய்ய இயலாவிடில் வில்வம் முதலான பூசைக்கு உரிய பச்சிலைகளுமா இல்லாமற் போய்விட்டன? அவற்றையாவது கொண்டு வந்து உதவுக. அதுவும் முடியாவிட்டால் சன்னிதியில் கிடக்கிற துரும்பு, செத்தை முதலானவற்றைத் துடைப்பத்தால் அகற்றித் தூய்மை செய்க. இதனுள் எதனையும் செய்யாதவர், சிவபிரானைப் பழித்த பாதகருக்கு ஒப்பாவர்.

விளக்கம்:

பரமன் - சிவன்; அழல் - சிவாக்கினி; பரமகுரவன் - மேலான குரு; திரணம் - துரும்பு, செத்தைகள்; மாற்றல் - அகற்றுதல்;அரிதோ - முடியாதோ; செயல் - தொண்டு; ஏ - அசை. (15)

281. பொருவில் பொருளைப் புணர்ந்தாரை
யல்லா ரெல்லாம் பூரணையி
லிரவியுடனே யிளமதிய மிசையும்
பொழுது மிணையிலியு

Koviloor Digital Library

மெரியு மியலுங் குருபரனு
மிருக்கு மிடத்தை யலகிட்டு
விரையின் விதத்தான் மெழுகிட்டு
விதியாற் பூசை புரியாரும்.

பொருஇல் பொருளைப் புணர்ந்தாரை
அல்லார் எல்லாம் பூரணையில்
இரவியுடனே இளம் மதியம்
இசையும் பொழுது இணைஇலியும்
எரியும் இயலும் குருபரனும்
இருக்கும் இடத்தை அலகிட்டு
விரையின் விதத்தால் மெழுகிட்டு
விதியால் பூசை புரியாரும்.

உரை:

தமக்கு ஒருவர் ஒப்பு இல்லாத சிவபெருமானைத் தங்கள் உள்ளங்களோடு பொருந்த வைத்து மோன நிலையில் அமர்ந்திருக்கும் சிவ ஞானியர் அல்லாதார் அனைவரும், முழுமதி நாளிலும், ஞாயிறோடு தேய்பிறையின் இளம்பிறை பொருந்துகிற காலமான அமாவாசை நாளிலும், தமக்கு யாரும் இணையில்லாத சிவ பிரானும், சிவாக்கினியும், சிவாகமமும், மேலான ஆசிரியனும் எழுந்தருளி யிருக்கும் திருக்கோயில்களைத் துடைப்பத்தால் பெருக்கித் துப்புரவு செய்து, சந்தனம் முதலான நறுமணப் பொருள்களால் மெழுகிப் பணி புரியாதவர்களும், சிவனைப் பழித்துரைத்தவர்களுக்கு ஒப்பாவர்.

விளக்கம்:

பொரு இல் - நிகர் இல்லாத; பொருள் - சிவன்; பூரணை - முழுமதி நாள்; புணர்ந்தார் - உள்ளத்தோடு பொருந்த வைத்தவர்;இரவி - கதிரவன்;இளம் மதியம் - பிறை நிலவு; இசையும் - கூடும்; இணை - ஒப்பு; எரி - சிவாக்கினி; இயல் - ஆகமம்; குருபரன் - ஆசான்; அலகிட்டு - பெருக்கித் துப்புரவு செய்து; விரை - மணம்; விதி - முறை. (16)

ஞானியை இகழ்பவர் நீசர்

282. இந்தமுறையி லியற்றாரு மியற்றி
நியதி யிழந்தாரும்
பந்தமான பசுபாசப் பகையைக்
கெடுக்கும் பரம்பரனைச்

Koviloor Digital Library

சிந்தைக்கரிய சிவமுதலைத் துயக்க
மறவே தெருண்டாரை
நிந்தை நிகழ்த்து நிறையில்லாக்
கல்லாப் பொல்லா நீசருமே.

இந்த முறையில் இயற்றாரும்
இயற்றி நியதி இழந்தாரும்
பந்தம் ஆன பசுபாசப் பகையைக்
கெடுக்கும் பரம் பரனைச்
சிந்தைக்கு அரிய சிவமுதலைத்
துயக்கம் அறவே தெருண்டாரை
நிந்தை நிகழ்த்தும் நிறை இல்லாக்
கல்லாப் பொல்லா நீசரும் ஏ.

உரை:

கூறப்பட்ட இம் முறையிற் செய்யாதோரும் தம் ஆசிரியர் கற்பித்த முறைப்படி விரத ஒழுக்கங்களைப் பின்பற்றிப் பின்னர் அவற்றை இடையிலே கைவிட்டவரும், உயிர்களிடம் இயல்பாகவே பொருந்தியுள்ள ஆணவ மலத்தை அகற்றுகிற கடவுளும், எண்ணத்திற்கு எட்டாத சிவமாகிய முழுமுதற் பரம் பொருளுமான இறைவனைத் தங்களுடைய அறியாமையாகிய தளர்வு அகலும்படி அறிந்த ஞானியரை இழிவாகப் பேசும் ஒழுக்கம் இல்லாத, படிப்பறிவு இல்லாத, தீயோர்களான, இழிந்தவர்களும் சிவனைப் பழித்தவர்களுக்கு ஒப்பாவர்.

விளக்கம்:

நியதி - முறைமை; பந்தம் - தளை, பற்று; பசு - உயிர்; பரம்பரன் - கடவுள்; சிவமுதல் - சிவமாகிய முழுமுதல்;

துயக்கம் - சோர்வு; தெருண்டார் - அறிவாளர்; நிறை - ஒழுக்கம்; நிந்தை - பழிப்புரை; நீசர் - இழிந்தவர்;

ஏ - அசை. (17)

283. நிந்தை நிகரின் ஞானத்தை
நிகழ்த்து மவரை நிகர்ப்பார்தஞ்
சிந்தை திகழ வருச்சனையைச்
செய்யா தறநூ றிளைப்பாரு
மிந்தவியலை யெழுதினரு மிதனைப்
பிறருக் கிசைப்பாரும்
வந்து பொருவில் வாய்
மொழியை மதிப்பாரவரு மனத்தாலே.

Koviloor Digital Library

நிந்தை நிகரின் ஞானத்தை
நிகழ்த்தும் அவரை நிகர்ப்பார்தம்
சிந்தை திகழ அருச்சனையைச்
செய்யாது அறநூல் திளைப்பாரும்
இந்த இயலை எழுதினரும்
இதனைப் பிறருக்கு இசைப்பாரும்
வந்து பொருஇல் வாய்மொழியை
மதிப்பார் அவரும் மனத்தால் ஏ.

உரை:

தங்களின் அறிவு விளங்கும் வண்ணம் சிவனருளிய சிவ ஆகம நூல்களை, முதலில் மலர் முதலியவற்றால் பூசை செய்து வணங்காமல் அவற்றைப் படிப்பவர்களும், ஏட்டில் எழுதுபவர்களும், பிறருக்குக் கற்பிப்போரும், சிவாகம நூற்பொருளை மனதால் சிந்திப்பவர்களும், சிவஞானத்தைப் பழிப்பவர்களுக்கு ஒப்பாவர்.

விளக்கம்:

சிந்தை - மனம்; திகழ - விளங்க; திளைப்பவர் - படிப்பவர்; இயல் - சிவாகம நூல்; பொரு - நிகர்; இல் - இல்லாத; ஏ - அசை.

நிந்தை நிகரில் ஞானம் - நிந்தைக்கிடமில்லாததும், ஒப்பில்லாததுமான ஞானம். (நிந்தை இல் ஞானம், நிகரில் ஞானம்) ஞானத்தை நிகழ்த்தும். அவர் - ஞான குரு; அவரை நிகர்ப்பார் - அந்த ஞான குருவையொக்கும் அற நூலாசிரியர்;

அவர் சிந்தை - அவர் திருவுளத்திற்கேற்குமாறு. அருச்சனையைச் செய்யாது - மலரிட்டுப் பூசிக்காமல்; அறநூல் திளைப்பாரும் - அற நூல்களைக் கற்பாரும்.

அற நூலாசிரியன் ஞான குருவுக்குச் சமம் அவனைப் பூசித்தற் பாங்காக அறநூலைப் பூசித்துக் கற்க வேண்டுமென்பதாம். (18)

தூய்மை வேண்டும்

284. காய சுத்தி பண்ணாது
கற்பிப்பாருங் கற்பாருந்
தேய சுத்தி செய்யாது சிவஞானத்தைச்
சிந்தனை செய்
தாயுமவரு மவர் தம்மை யடைந்து
துயக்கமற வெண்ணி
வாய்மைப் பொருளை மதிப்பாருங்
கற்பார் தாமும் வரமுறவே.

Koviloor Digital Library

காயம் சுத்தி பண்ணாது
கற்பிப்பாரும் கற்பாரும்
தேயம் சுத்தி செய்யாது
சிவஞானத்தைச் சிந்தனை செய்து
ஆயும் அவரும் அவர் தம்மை
அடைந்து துயக்கம் அற எண்ணி
வாய்மைப் பொருளை மதிப்பாரும் கற்பார்
தாமும் வரம் உற ஏ.

உரை:

நீராடித் தம் உடலைத் தூய்மை செய்து கொள்ளாமல் சிவாகம நூல்களைக் கற்பிக்கும் ஆசிரியரும், அவரிடம் மாணாக்கர்களாக அமர்ந்து அவற்றைக் கற்பவர்களும், நிலத்தை மெழுகித் துப்புரவு செய்யாமல் அங்கு அமர்ந்து, சிவாகமங்களை ஆராய்ச்சி செய்கின்ற ஆசிரியரும், அந்த ஆசிரியரை நாடித் தங்களுடைய அறியாமையைப் போக்கி, ஆகம உண்மைகளைக் கேட்போரும் படிப்பவர்களும், சிவாகமங்களைப் பழித்தவர்களுக்கு ஒப்பாவர்.

விளக்கம்:

காயம் - உடம்பு; சுத்தி - துப்புரவு; தேயம் - நிலம்; ஆயும் அவர் - ஆசிரியர்; துயக்கம் - அறியாமை; வரம் - விருப்பம்; வாய்மை - சிவாகம உண்மை; மதிப்பார் - கேட்பவர்; உற - பொருந்த; ஏ - அசை. (19)

சிவ ஆகமங்களைப் பயிலுக

285. ஆசையதனாற் சிவகோச மதனைப்
பொருளுக் களிப்போரும்
தேசி லவல தேசத்திற்
சிறந்த முறையைச் செறிப்பாரும்
பாசப் பகைவன் பகர் மொழியைப்
பயிலா தயனூல் பயில்வாரும்
ஏசற்றரன் வாக் கியற்றாரு
மேதை யகத்து ளிருக்கவுமே.

ஆசை அதனால் சிவகோசம்
அதனைப் பொருளுக்கு அளிப்போரும்
தேசுஇல் அவல தேசத்தில்
சிறந்த முறையைச் செறிப்பாரும்

Koviloor Digital Library

பாசப் பகைவன் பகர் மொழியைப்
பயிலாது அயல்நூல் பயில்வாரும்
ஏசற்று அரன் வாக்கு இயற்றாரும்
மேதை அகத்துள் இருக்கவும் ஏ.

உரை:

உலகப் பொருள்கள் மீது வைத்துள்ள ஆசையினால் சிவ ஆகம நூல்களைத் தகுதியற்றவர்களுக்கு விற்பவர்களும், அழகும் துப்புரவும் இல்லாத இடத்தில் சிவாகம நூல்களை வைப்பவர்களும், மக்களின் ஆணவ மலம் முதலான பற்றுகளை ஒழிப்பவனான சிவன் அருளிய சிவாகமங்களையும் திருமுறையும் கற்காமல் வெறும் உலகியல் நூல்களைப் படிப்பவர்களும், நல்ல புத்தி சாதுரியமிருந்தும் அருள் வாக்காய வேத சிவாகமங்களைக் கல்லாதவரும் சிவஞான நிந்தகருக்கு ஒப்பாவர்.

விளக்கம்:

சிவகோசம் - சிவநூல்; தேசுஇல் - அழகு இல்லாத; அவல தேசம் - அழுக்கான இடம்; செறித்தல் - வைத்தல்; பாசம் - பற்று;

பகைவன் - அழிக்கும் சிவன்; பகர் - சொல்லிய; பயிலுதல் - கற்றல்; அயல்நூல் - வேறு நூல்; ஏசற்று - ஏசற்ற, குற்றம் இல்லாத; மேதை - புத்தி சாதுரியம்; அகத்தில் - தம்மிடத்தில்; ஏ - அசை. (20)

சிவாகம ஆசிரியரை வணங்குக

286 . பொருவில் குரவ னிந்தனையைப்
புரிந்தாரவரைப் புரைவார்கள்
பரிவாலவரை யருச்சனையைப் பண்ணா
தறநூல் பயில்வாரு
முருகிப் பணியை யுஞற்றாரு
முஞற்றுமவரை யொழிப்பாருந்
திருவாய் மொழியைத் திளைத் திறைஞ்சிச்
சிறந்த துதிகள் செய்யாரும்.

பொருஇல் குரவன் நிந்தனையைப்
புரிந்தார் அவரைப் புரைவார்கள்
பரிவால் அவரை அருச்சனையைப்
பண்ணாது அறநூல் பயில்வாரும்
உருகிப் பணியை உஞற்றாரும்
உஞற்றும் அவரை ஒழிப்பாரும்
திருவாய் மொழியைத் திளைத்து இறைஞ்சிச்
சிறந்த துதிகள் செய்யாரும்.

Koviloor Digital Library

உரை:

அன்போடு சிவாகம ஆசிரியருக்கு உரிய வழிபாடு செய்து அவரை வணங்காமல், அவர் ஆசி பெறாமல் சிவாகம நூல்களைப் படிப்பவர்களும், மனம் நெகிழ்ந்து ஆசிரியருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்யாதவர்களும், ஏனையோர் அவருக்குப் பணிவிடைகள் செய்யத் தொடங்கும் போது, அவற்றைத் தடுத்து நிறுத்துகிறவர்களும், அந்த ஆசிரியர் கற்பிக்கும் சிவாகம உண்மைகளைக் கேட்டு மகிழ்ந்த அன்பர்களைப் போற்றிப் புகழ்ந்து பாராட்டாதவர்களும், ஞான ஆசானைப் பழித்தவர்களுக்கு ஒப்பாவர்.

விளக்கம்:

பரிவால்-அன்பால்; அறநூல்-சிவாகமம்; உஞற்றுதல்-செய்தல்; ஒழிப்பார்-தடுப்பவர்; திருவாய் மொழி-ஆசிரியரின் உரை; திளைத்து-மகிழ்ந்து; இறைஞ்சி-வணங்கி; துதி-புகழ்மொழி; குரவன்-சிவாகம ஆசிரியர்; நிந்தனை-பழிப்புரை; புரைவார்-ஒப்பவர். (21)

ஆசிரியரை மதிக்க வேண்டும்

287. எதிருத்தரமு மிசைப்பாரு மிளைத்தபருவ
மென வெண்ணிப்
பிதிருமவரு மெதிரியராற் பிழைவந்துறினும்
பிணி யுறினும்
புதல்வர்தமையு மனைதனையும் பொருந்துஞ்
சுற்றத்தவர் தமையும்
பதரே யென்ன வவமதியைப்
பண்ணுமவரும் பரிவறவே.

எதிர் உத்தரமும் இசைப்பாரும் இளைத்த
பருவம் என எண்ணிப்
பிதிரும் அவரும் எதிரியரால்
பிழைவந்துறினும் பிணி உறினும்
புதல்வர் தமையும் மனைதனையும்
பொருந்தும் சுற்றத்தவர் தமையும்
பதரே என்ன அவமதியைப் பண்ணும்
அவரும் பரிவு அற ஏ.

உரை:

ஆசிரியர் உத்தரவுக்கு அமைந்து நில்லாமல் அவர் மொழிக்கு எதிர் மொழி உரைப்பவர்களும், அவர் வறுமையுற்ற போது அவருக்கு உதவாமல் விலகிச்

Koviloor Digital Library

செல்பவர்களும், அவருடைய உறவினரால் அவர் சிறுமை அடைந்த போதும், நோய் அவரை வருத்திய போதும், அத்துன்பங்களிலிருந்து அவர் மீட்சி பெற உதவாமல் ஒதுங்குகின்றவர்களும், ஆசிரியருடைய மகன், மனைவி, பெற்றோர் முதலியவர் களைச் சிறிதும் இரக்கம் இன்றி, மிக அற்பமாகக் கருதி இகழ்கின்றவர்களும், சிவாகம குருவைப் பழித்தவர்களுக்கு ஒப்பாவர்.

விளக்கம்:

எதிர் உத்தரம்-எதிரான மறுமொழி; இளைத்த பருவம்-வறுமைநிலை: பிதிரும்-விலகும்; பிழை-சிறுமை, தாழ்வு; பிணி-நோய்; உறுதல்-அடைதல்; பதர்-அற்பம்; உள்ளீடு இல்லாத நெல்; பரிவு-அன்பு, அருள்; ஏ-அசை. (22)

சொன்னதும் சொல்லப் போவதும்

288. அதிபாதகருக் கணியார்க
ளிவரென்றறிமா பாதகரைப்
பொதிமா முனிவ வினிவிரையப்
புந்தி செய்க புகன்றிடுவா
மதியால் வதன வாய் தன்னான்
மலின முடைய வடிவதனா
லுதயமான பாவங்கள் கேட்பார்
தமக்கு மொழிந்திடவே.

அதிபாதகருக்கு அணியார்கள் இவர்
என்று அறி மாபாதகரைப்
பொதிமாமுனிவ இனி விரையப்
புந்தி செய்க புகன்றிடுவாம்
மதியால் வதனம் வாய் தன்னால்
மலினம் உடைய வடிவு அதனால்
உதயமான பாவங்கள் கேட்பார்
தமக்கு ஒழிந்திட ஏ.

உரை:

பொதிகை மலையில் வாழும் அகத்திய முனிவனே! இது வரை உரைத்த வகையினர் அனைவரும் அதிபாதகருக்கு ஒப்பாவர் என அறிக. இவற்றைக் கேட்போருக்கு அவர்களுடைய இயற்கை அறிவாலும், முகத்தில் உள்ள வாயிலிருந்து வெளிப்படும் மொழிகளாலும், அழுக்கடைந்த உடம்பாலும் தோன்றும் பாவங்களைப் போக்குவதற்கு ஏதுவாக, மகாபாதகர் தன்மை பற்றி உனக்கு உரைக்கிறோம். விரைவில் அவை உன் புத்தியிற் பதியுமாறு கவனமாகக் கேட்பாயாக.

Koviloor Digital Library

விளக்கம்:

அதிபாதகர் - கொடும் பாவியர்; மாபாதகர் - பெரும்பாவியர்; புந்தி செய்க - அறிவாயாக; மதியால் - இயல்பான அறிவால்; வதனம் - முகம்; மலினம் - அழுக்கு;

வடிவு - வடிவம்; உடம்பு; உதயமான தோன்றிய; ஏ - அசை. (23)

ஐந்து பெரும் பாவியர்

289. கொன்றான் மறையோன்றனை மதுவைக்
குடித்த மறையோன் சோரத்தாற்
சென்றே பிறர் செம்பொனைக் கொண்டான்
றிளைத்தான் குரவன் றேவிதனை
நின்றானிவரோ டென வைவர்
மாபாதகரே நிரயத்துட்
சென்றார் விரையச் செல்லலுற
மீளு நாளுஞ் சிலவலவே.

கொன்றான் மறையோன்தன்னை, மதுவைக்
குடித்த மறையோன், சோரத்தால்
சென்றே பிறர் செம்பொன்னைக் கொண்டான்,
றிளைத்தான் குரவன் றேவி தன்னை,
நின்றான் இவரோடு என
ஐவர் மாபாதகரே நிரயத்துள்
சென்றார் விரையச் செல்லல் உற
மீளும் நாளும் சில அல்ல ஏ.

உரை:

அந்தணனைக் கொன்றவனும், மதுபானம் பருகிய பிராமணனும், பிறருடைய பொருளை அவரறியாமல் கவர்ந்து கொண்டவனும், ஆசான் மனைவியைக்கூடி மகிழ்ந்தவனும், இவர்களுடன் தோழமை கொண்டவனும் ஆகிய ஐவரும் மகாபாதகர் ஆவர். இவர்கள் விரைவில் நரகத்தை அடைந்து வருந்துவர். இவர்கள் அந்த நரகத்திலிருந்து மீட்சி பெற நெடுங்காலம் ஆகும்.

விளக்கம்:

மறையோன் - அந்தணன்; சோரம் - திருட்டு; செம்பொன் - பொருள்; குரவன் தேவி - ஆசிரியரின் மனைவி; திளைத்தல் - அனுபவித்தல்;

மாபாதகர் - பெரும் பாவியர்; மீளும் நாள் சில அல்ல - நெடுங்காலம்; ஏ - அசை. (24)

Koviloor Digital Library

சிவமுனிவனே தெளிந்திடுக

290. அறைந்தா மகாபாதக மதனுக்
கணியதணிய பாதகமுஞ்
சிறந்த பொதியிற் சிவமுனிவ
தெரிப்பாம் விரையத் தெளிந்திடுக
மறந்து புரிந்த வல்வினையு
மறவாதியன்ற வல்வினையு
மிறந்து பிறக்கவினியவினை
யிதனையுணர விசைந்தார்க்கே.

அறைந்தாம் மகாபாதகம் அதனுக்கு
அணியது அணிய பாதகமும்
சிறந்த பொதியில் சிவமுனிவ
தெரிப்பாம் விரையத் தெளிந்திடுக
மறந்து புரிந்த வல்வினையும்
மறவாது இயன்ற வல்வினையும்
இறந்து பிறக்க இனியவினை
இதனை உணர இசைந்தார்க்கு ஏ.

உரை:

மேலான பொதிகை மலையில் இருக்கும் சிவமுனிவனே! மகா பாதகத்தைப் பற்றிச் சொன்னோம். இனி, அதற்கு அடுத்துள்ள நுணுக்கமான பாவ விதங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்களுக்காக அவற்றைப் பற்றி உரைப்போம். அறிந்தே செய்த தீவினையும், அறியாமல் செய்த தீவினையும் கெட்டு, நல்வினை உண்டாகுமாறு நீ, இதனை விரைவிற் கேட்டுத் தெளிவு பெறுவாயாக.

விளக்கம்:

அறைந்தாம் - சொன்னோம்; மகாபாதகம் - பெரும் பாவம்; அணியது - அடுத்தது. பாதகம் - பாவம்; பொதியில் - பொதிகைமலை; தெரிப்பாம் - தெரிவிப்போம்; வல்வினை - தீய செயல்; இயன்ற - புரிந்த; இறந்து - கெட்டு; பிறக்க இனிய வினை - நல்வினை உண்டாக; ஏ - அசை. (25)

பாவ வகைகள்

291. வெறுப்பான் மிகுத்த கோபத்தால்
வேட்கை மிகையால் வெருட்சியினால்
ஒறுப்பா முரையந் தணர்க் குரைப்பா
னொப்பான் பிரமக் கொலையர்க்கே

Koviloor Digital Library

யறப்பேறறிவே யுளமெனவே
தன்னைமதிக்கு மறிவிலியுஞ்
சிறப்பாங் குரவ னொடு விருத்தஞ்
செய்யு மறியாச் சிறுவனுமே.

வெறுப்பால் மிகுத்த கோபத்தால்
வேட்கை மிகையால் வெருட்சியினால்
ஒறுப்பாம் உரை அந்தணர்க்கு உரைப்பான்
ஒப்பான் பிரமக் கொலையர்க்கே
அற பேறறிவே உளம் எனவே
தன்னை மதிக்கும் அறிவிலியும்
சிறப்பால் குரவனொடு விருத்தம்
செய்யும் அறியாச் சிறுவனும் ஏ.

உரை:

விரும்பாததால், அதிகச் சினத்தால், பொருள் ஆசையால், பயத்தால், பிராமணரிடம் கொடுஞ் சொற்களை உரைப்பவனும், மிகுந்த பேரறிவாளன் எனத் தன்னைத் தானே கருதுகின்ற மூடனும், மேலான ஆசிரியரோடு பகைமை பாராட்டுகின்ற அற்பனும், கொன்றவனைத் தொடர்ந்து பற்றுகின்ற பிராமணக் கொலைப் பாவத்தைச் செய்தவருக்கு ஒப்பாவர்.

விளக்கம்:

வேட்கைமிகை - மிகுந்த பொருளாசை; வெருட்சி - அச்சம்; ஒறுப்பாம் உரை - கடிந்து பேசுதல்; அந்தணர் - அருளாளர்;

''அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்''

என்பது திருள்ளுவரின் அறிவுரை.

குரவன் - ஆசான்; வருத்தம் - முரண்பாடு; ஏ - அசை. (26)

292. உண்ணவறல் மேற்செலுமாக்க
ளினையுந் நடுத்தே யொறுப்பானு
நண்ணியிரப்பத் தருவலென
நயந்து கூறியவர்வரவி
லெண்ணமிழந்து தரும் பொருளுமிலமே
யெனவு மிசைப்பானுந்
தண்மையுரையைத் தகுதியரைச் சாற்றுமவனுஞ்
சபை நடுவே.

Koviloor Digital Library

உண்ண அறல்மேல் செல்லும்
　　ஆக்களினையும் தடுத்தே ஒறுப்பானும்
நண்ணி இரப்பத் தருவல் என
　　நயந்து கூறி அவர் வரவில்
எண்ணம் இழந்து தரும் பொருளும்
　　இலமே எனவும் இசைப்பானும்
தண்மை உரையைத் தகுதியரைச்
　　சாற்றும் அவனும் சபைநடுவே.

உரை:

தண்ணீர் உள்ள நீர் நிலையை நாடி நீர் பருகச் செல்லும் பசுக்களை மறித்து, அவை நீர் அருந்தாதபடி அடித்துத் துரத்துகிறவனும், தன்னை நாடி வந்து ஒருவர் ஒரு பொருளை வேண்டிய போது,அவருக்கு நம்பிக்கை ஏற்படும்படி அவர் கேட்ட பொருளைத் தருவதாக வாக்களித்து விட்டு, பின்னர், அவர் அப்பொருளைப் பெற மீண்டும் தன் இல்லத்துக்கு வந்த போது, அவர் கேட்ட பொருளைத் தர இயலாது என்று சொல்லி ஏமாற்றுகிறவனும், தகுதிவாய்ந்த அறிஞர் ஒருவரை ஓர் அவையிலே தகாத சொற்களைக் கூறி இழிவுபடுத்துகிறவனும்.

விளக்கம்:

அறல் - தண்ணீர்; ஆக்கள் - பசுக்கள்; ஒறுத்தல் - அடித்து விரட்டுதல்; நண்ணி - நெருங்கி; இரப்ப - வேண்ட; தருவல் - தருவேன்;

நயந்து கூறி - நம்பிக்கை ஏற்படுமாறு சொல்லி; எண்ணும் இழந்து - மனம் இல்லாமல்; இலமே - எம்மிடம் இல்லையே;

இசைப்பானும் - சொல்பவனும்; தண்மை உரை - இகழத்தக்க பேச்சு; தகுதியர் - மேலான அறிஞர். (27)

பிராமணக் கொலைக்கு ஒப்பானவர்

293. அரசன் செவியிற்பிறர் குறையை
　　யறிவிப்பவனு மந்தணர்க்கும்
பரசுபாணி முதலோர்க்கும் பாங்கா
　　நிலனைப் பறிப்பானு
மொருவும் வகையை யுரைப்பானு
　　மதனுள் விளைவை உண்பானும்
பிரம கொலையர்க்கிணை மதுவைப்
　　பீதற்கிணையும் பேசுவமே.

Koviloor Digital Library

அரசன் செவியில் பிறர் குறையை
அறிவிப்பவனும் அந்தணர்க்கும்
பரசு பாணி முதலோர்க்கும் பாங்காம்
நிலனைப் பறிப்பானும்
ஒருவும் வகையை உரைப்பானும்
அதனுள் விளைவை உண்பானும்
பிரம கொலையர்க்கு இணை மதுவைப்
பீதற்கு இணையும் பேசுவம் ஏ.

உரை:

பிறர் செய்த குற்றங்களை ஆட்சியாளருக்குத் தெரிவிப்பவனும், பிராமணருக்கும், சிவபிரானுக்கும், இதர தெய்வங்களுக்கும் உரிமையுடைய நிலங்களைக் கைப்பற்றிக் கொள்கின்றவனும், அவ்வாறு கைப்பற்றிய நிலங்கள் உரியவர்களுக்குத் திரும்பக் கிடைக்காதபடி சூழ்ச்சி செய்கிறவனும், கவர்ந்து கொண்ட நிலங்களின் விளைச்சலைத் தன் இல்லத்திற்குக் கொண்டு சென்று அதனை உண்பவனும், கொன்றவனைத் தொடர்ந்து பற்றுகின்ற பிராமணக் கொலைப் பாவத்தைச் செய்தவருக்கு ஒப்பாவார். இனி, கள்ளை அருந்தியவனுக்கு ஒப்பானவரையும் உரைப்போம்.

விளக்கம்:

அந்தணர் - இது பிராமணரைக் குறிக்கிறது; பரசுபாணி - சிவன்; முதலோர் - சிவன் அல்லாத இதர தெய்வங்கள்; ஒருவும் -நீக்கும்; பிரம கொலை - பிராமணக்கொலை; பிரமன் - பிராமணன்; இணை - ஒப்பு; மதுவை - கள்ளை; பீதற்கு-குடிப்பவனுக்கு; பீதன் - குடிகாரன்: பீ - குடி, சமஸ்கிருத வினையடி யிலிருந்து ஆக்கிய தமிழ்ச் சொல்பீதன். (28)

294. ஆதியமலனருளாள னனக
னருள்செ யாகமத்தை
யோதிய தனை யொழிப்பானு
மொளி சேரழலை யோம்பானு
மாதாவுடனும் பிதாவுடனு மாறாயவர்
சொன் மறுப்பானு
மோதாவுரையை யுரைத்தானென்
றுற்றே நடுவாயுரைப்பானும்.

ஆதி அமலன் அருளாளன்
அனகன் அருள்செய் ஆகமத்தை
ஓதி அதனை ஒழிப்பானும்
ஒளிசேர் அழலை ஓம்பானும்

Koviloor Digital Library

மாதாவுடனும் பிதாவுடனும் மாறாய்
அவர்சொல் மறுப்பானும்
ஓதா உரையை உரைத்தான் என்று
உற்றே நடுவாய் உரைப்பானும்.

உரை:

எல்லாப் பொருள்களுக்கும் மூலகாரணனும் தூயவனும், இரக்கமுள்ளவனும், கடவுளுமாகிய சிவபிரான் அருளிச் செய்த சிவ ஆகம நூல்களைக் கற்கத் தொடங்கி, முழுவதையும் கற்றுப் பயன் பெறாமல் கற்பதை இடையிலே நிறுத்தியவனும், நாள்தோறும் ஓமத் தீயை வளர்த்து அதனை வணங்கி வந்து, பின்னர், அவ்வாறு வணங்கி வருவதை நிறுத்திய பிராமணனும், அன்னை தந்தையருடன் மாறுபட்டு, அவர்கள் சொல்வதைப் புறக்கணிக்கிற மகனும் ஒருவர் சொல்லாத செய்தியை அவர் சொன்னார் என்று ஒரு சபையினரின் முன்னிலையில் பொய்ச்சான்று புகல்பவனும்;

விளக்கம்:

ஆதி - மூலம்; அமலன் - தூயவன்; அனகன் - கடவுள்; ஒழிப்பான் - இடையிலே நிறுத்தியவன்; அழல் - நெருப்பு; ஓம்பான் - (ஓமம் செய்தலைப்) பாதுகாக்காதவன்; ஓதா - செல்லாத; நடுவாய் உற்றே - சபையின் நடுவில் உற்று;

உரைப்பான் - சொல்பவன்; அழல் ஓம்புதல் - இது பிராமணர்களின் எரி ஓம்புதலைக் குறிக்கும். ''தீயினைக் கும்பிடும் பார்ப்பான்'' என்பது பாரதியார் உரை. சுமார்த்தப் பிராமணர்களுக்கு ஓமத்தீயை வணங்குவதும் காயத்திரியைச் சொல்லிக் கதிரவனை வணங்குவதும் கடவுள் வழிபாடாகும். (29)

295. தோழன்றனக்குத் துயரத்தைத்
துய்ப்பிப்பவனுந் துரிசறுக்கு
மேழை பாகனடியாரை யிடரைச்
செயவு மிசைந்தானும்
பாழென்றற நூல் பழித்த பொருள்
பண்டமெனக் கொண் டுண்டானும்
வாழும் வனத்தாமாக்களையும்
வருத்துமவனு மயலுறவே.

தோழன் தனக்குத் துயரத்தைத்
துய்ப்பிப்பவனும் துரிசு அறுக்கும்
ஏழைபாகன் அடியாரை இடரைச்
செயவும் இசைந்தானும்

Koviloor Digital Library

பாழ் என்று அற நூல் பழித்த பொருள்
பண்டம் எனக் கொண்டு உண்டானும்
வாழும் வனத்து ஆமாக்களையும் வருத்தும்
அவனும் மயல் உற ஏ.

உரை:

பழகிய நண்பனுக்குத் துன்பங்கள் உண்டாக்குபவனும், பாவங்களைப் போக்குபவனும், உமையம்மையை ஒரு பக்கத்திற் கொண்டவனுமாகிய சிவ பெருமானுடைய அடியவர்களுக்கு இடையூறுகள் செய்யச் சம்மதித்தவனும், சிவாகம நூல்கள் உண்ணத் தகாதது என விலக்கிய பொருளை, உண்ணத் தக்க பொருள் என ஏற்று உண்டவனும், காட்டில் வாழும் பசு, மான் முதலியவை மயலுமாறு வேட்டையாடுகின்றவனும்.

விளக்கம்:

துய்ப்பிப்பவன் - அனுபவிக்கும் படி செய்கிறவன்; துரிசு - பாவம்; ஏழை - இது உமா தேவியைக் குறிக்கும்; ஏழைபாகன் - சிவன்; ''எருது ஏறி ஏழையுடனே'' (கோளறு பதிகம்) என்பது, திருஞான சம்பந்தரின் திருமொழி. பாழ் - வீணானது; பழித்த - இகழ்ந்த; வனம் - காடு; ஆமா - காட்டுப் பசு, மான்; மயல் - மயக்கம்; ஏ - அசை. (30)

296. ஆக்களணையு மார்க்கத்தி
லடவியதனு ளரும்பதியுட்
பார்க்குண் மதித்த பட்டினத்தும்
பழுதேயழலைப் படுப்பானு
நீக்கு மதுவையுண்டானை
நிகரேவறியார் நிதிமுதலுங்
காக்கு மனையோ கரிபரிதேர்
கவினார் மணியுங் கவர்ந்தானும்.

ஆக்கள் அணையும் மார்க்கத்தில்
அடவி அதனுள் அரும்பதியுள்
பார்க்குள் மதித்த பட்டினத்தும்
பழுதே அழலைப் படுப்பானும்
நீக்கும் மதுவை உண்டானை
நிகரே வறியார் நிதி முதலும்
காக்கும் மனையோ கரிபரிதேர்
கவின்ஆர் மணியும் கவர்ந்தானும்.

Koviloor Digital Library

உரை:

பசுக்கள் தங்கி நிற்கும் தொழுவத்தின் வாசலிலும், காடுகளிலும், திருக்கோயில்களிலும், உலகத்தில் புகழ்பெற்ற பெரிய நகரங்களிலும், ஒரு காரணமும் இல்லாமல் தீ வைப்பவன், ஏழைகளின் உடைமைகளையும், காவலையுடைய இல்லம், யானை, குதிரை, இரதம், அழகுமிகுந்த ஆபரணக் கற்கள் ஆகியவற்றையும் கவர்ந்து கொண்டவன்: என்றினோர் அற நூல்களால் ஆகாது என விலக்கப்பட்ட கள்ளை அருந்தியவனுக்கு ஒப்பாவர்.

விளக்கம்.

ஆக்கள் - பசுக்கள்; அணையும் - தங்கிநிற்கும்; அடவி - காடு; அரும்பதி - சிவபதிகள்; பார்க்குள் - உலகில்; மதித்த - சிறப்பாகப் பேசப்பட்ட; பட்டினம் - கடற்கரை நகரம்; பழுதே - வீணில்; அழலை - நெருப்பை; படுப்பான் - வைப்பவன்; நீக்கும் - ஆன்றோர் விலக்கிய; மதுவை - கள்ளை; உண்டானை - அருந்தியவனுக்கு; நிகரே - ஒப்பாவான்; காக்கும் - காவலையுடைய; மனை - இல்லம்; கரி - யானை; பரி - குதிரை; கவினார் - அழகுநிரம்பிய; மணி - ஆபரணக் கற்கள்; கவர்ந்தவன் - களவு செய்தவன். (31)

297. கதலியெழுவாய் கரும்பிறுவாய் கந்தமலி
சந்தன முயர்ந்த
பொதியிலகில் குங்குமமாதி புனைய
வினிய துகிலாதி
பதமே பாணிபயில் வனவும்
பற்றினானும் பழுதுறவே
பிதமாங்கனகந்தனைச் சோர்விற் பெற்றாற்
கிணையே பேசுங்கால்.

கதலி எழுவாய் கரும்பு இறுவாய்
கந்தம்மலி சந்தனம் உயர்ந்த
பொதியில் அகில் குங்குமம் ஆதி
புனைய இனிய துகில் ஆதி
பதமே பாணி பயில்வனவும்
பற்றினாலும் பழுது உறவே
பிதமாம் கனகம் தனைச் சோர்வில்
பெற்றாற்கு இணையே பேசுங்கால்.

உரை:

வாழைப்பழம் முதல் கரும்புவரையுள்ள உணவுப் பொருள்களும், நறுமணமுள்ள சந்தனமும், பொதிகை மலையில் வளர்ந்த அகில், குங்குமம்

Koviloor Digital Library

முதலான மணப்பொருள்களும், உடுத்துவதற்குரிய அழகிய ஆடை முதலியனவும், காலிலும் கையிலும் அணிகின்ற அணிகலன்களும் ஆகிய இவற்றைக் களவு செய்தவன், மஞ்சள் நிறமுடைய தங்கத்தை, அதற்கு உரியவர் அறியாதபடி கவர்ந்து கொண்ட கள்வனுக்கு ஒப்பாவான்.

விளக்கம்:

எழுவாய் - தொடக்கம்; **இறுவாய்** - முடிவு; **கந்தம்** - மணம்; **பொதியில்** - பொதிகை மலையில்; **புனைய** - உடுக்க; **துகில்** - ஆடை; **பதம்** - பாதம்; **பாணி** - கை; **பயில்வன** - பொருந்துவன இது அணிகளைக் குறிக்கிறது; **பற்றினான்** - கைப்பற்றியவன்; **பழுது உற** - குற்றம் பொருந்த; **பிதம்** - பீதம் என்பது பிதம் என குறுகி வந்தது. மஞ்சள் நிறம்; **கனகம்** - தங்கம்; **சோர்வில்** - உடையார் அயர்ந்திருக்கையில் கள்ளத்தனமாக; **பெற்றாற்கு** - அடைந்தவனுக்கு; **இணையே** - ஒப்பாவான். (32)

298. பெறுதற்கரிய பாத்திரத்தைப் பெற்றும்
பெற்ற கன்னிகையைச்
செறிவித்திடுதல் செய்யானுஞ் சிறந்த
புதல்வன் மனைவியொடு
மறிவிற் பரிந்தானகத்தி னொடும்
பகினியுடனும் மணைந்தானும்
பொறையிற் பயந்த புதல்வி
யொடும் புலைச்சியுடனும் புணர்ந்தானும்.

பெறுவதற்கு அரிய பாத்திரத்தைப்
பெற்றும் பெற்ற கன்னிகையைச்
செறிவித்திடுதல் செய்யானும் சிறந்த
புதல்வன் மனைவியொடும்
அறிவிற் பரிந்தான் அகத்தினொடும்
பகினிஉடனும் அணைந்தானும்
பொறையிற் பயந்த புதல்வியொடும்
புலைச்சியுடனும் புணர்ந்தானும்.

உரை:

பெறுவதற்கு அருமையான அளவு தகுதியை அடைந்திருந்தும் தான் பெற்ற மகளை உரிய காலத்தில் தக்க ஒருவனுக்கு மணம் பேசி முடிக்காதவனும், நற்குணமுள்ள தன் மருமகள்; அறிவும் அன்பும் உள்ள தன் தோழனின் இல்லாள்; தன்னுடன் பிறந்த தங்கை; தான் பெற்ற மகள்; புலால் உணவை உட்கொள்ளும் கீழ் மகள் ஆகியவர்களைப் புணர்ந்தவனும்:

Koviloor Digital Library

விளக்கம்:

பாத்திரம் - தகுதி; வேண்டுமளவு இடம் பொருள் ஏவல் ''பாத்திரம் அறிந்து பிச்சை இடு'' என்பது *பழமொழி*. புலைச்சி - புலால் உணவை உண்பவள். இது ஒரு காரணப் பெயர். ''பொல்லாப் புலாலை நுகரும் புலையரை'' என்பது திருமூலநாயனாரின் அருள் மொழி. திருமூலரின் கருத்துப்படி, புலால் உணவு உண்பவன் யாராக இருந்தாலும், எந்த மதத்தவனாக இருந்தாலும், எந்த நாட்டவனாக இருந்தாலும் அவன் புலையன் ஆவான். (புலையன் - ஆண்பால்; புலைச்சி - பெண்பால்) செறிவித்திடுதல் - மணம்புரிவித்தல்; அறிவிற்பரிந்தான் - தோழன்; அகம் - அகமுடையாள்; அகத்தினொடும் - இல்லாளோடும்; இல்லாள்; பகினி - தங்கை; புலைச்சி - கீழ்ச்சாதிப் பெண்; கீழ்மக்கள். (33)

பாவம் எது?

299. அறிந்து மனையாளவலத்தை யவளைத்
துறவா தணைவானுஞ்
சிறந்த குரவன் மனைவியொடுஞ்
செறிந்தார்க் கிணையே செப்பியவித்
திறந்தான் மகபாதக மதனிற்
சிறுமைத் ததனாற் பாதகமென்
றறைந்தா மிதனுக் கணித்தான
வுப பாதகமு மினியறைவாம்.

அறிந்து மனையாள் அவலத்தை
அவளைத் துறவாது அணைவானும்
சிறந்த குரவன் மனைவியொடும்
செறிந்தார்க்கு இணையே செப்பிய இத்
திறம்தான் மகபாதகம் அதனில் சிறுமைத்து
அதனால் பாதகம் என்று
அறைந்தாம் இதனுக்கு அணித்தான
உபபாதகமும் இனி அறைவாம்.

உரை:

தான் திருமணம் புரிந்த மனைவி கற்பிழந்தவள் என்பதை அறிந்த பின்னும், அவளை ஒதுக்கிவையாமல், அவளோடு கூடி வாழ்கின்றவன், மேலான ஆசிரியன் மனைவியோடு கூடியவர்களுக்கு ஒப்பாவான். இவை போன்ற செயல்கள் பாதகமாகும். இனி இப்பாதகத்தை அடுத்த துணைப் பாதகங்களைப் பற்றி உரைப்போம்.

Koviloor Digital Library

விளக்கம்:

அவலம் - குற்றம்; துறவாது - தள்ளி வைக்காமல்; குரவன் - ஆசிரியன்; செறிந்தார் - கூடியவர்; செப்பிய - கூறிய; இத்திறம் - இத்தன்மை; சிறுமைத்து - சிறியது; அணித்தான - அருகில் உள்ள; உப - துணை; அருகு. அறைவாம் - உரைப்போம். (34)

துணைப் பாதகங்கள்

300. மறையோர்க் கெனவே வைத்த
பொருள் மதியாததனை வெளவினனு
நிறையாற் பெரியோர் நிதியதனை
நிரந்து கவர்ந்த நிலையிலியும்
பிறராலதனுக் கிடையூறு
பேணுமவனும் பெருங்குலமு
மறிவு மருளுமுடையமெனு
மகந்தையுடைய வவலனுமே.

மறையோர்க்கு எனவே வைத்த பொருள்
மதியாது அதனை வெளவினனும்
நிறையால் பெரியோர் நிதி அதனை
நிரந்து கவர்ந்த நிலை இலியும்
பிறரால் அதனுக்கு இடையூறு பேணும்
அவனும் பெரும் குலமும்
அறிவும் அருளும் உடையம் எனும்
அகந்தை உடைய அவலனும் ஏ.

உரை:

அந்தணர்க்குக் கொடுப்பதற்கென்று தனியே எடுத்து வைத்த பொருள்களை, அவர்களைப் பொருட்படுத்தாமல் தன் உபயோகத்துக்காக எடுத்துக் கொண்டவனும், கல்வி ஒழுக்கங்களிற் சிறந்த சான்றோர் வைத்திருந்த செல்வமான பொருள்களைத் திருடிய நிலை கெட்டவனும், தீயவர்கள் மூலம் அச்செல்வங் களுக்குச் சிதைவை உண்டாக்குகின்றவனும், தன்னுடைய குடும்பப் பெருமை, கல்வியறிவும், இரக்கமும் உள்ளவர்களாக இருக்கிறோம் என்ற செருக்கு ஆகிய குற்றம் உடையவனும்.

விளக்கம்:

வெளவினன் - கொள்ளையிட்டவன்; நிலைஇலி - பண்புஇல்லாதவன்; மதியாது - பொருட்படுத்தாமல்; பெரும்குலம் - உயர்குடி; அகந்தை - செருக்கு; ஏ - அசை. (35)

Koviloor Digital Library

301. விடைத்துத் தவரை வெகுள்வானும்
விடம்ப முளத்துள் விரவினனு
மிடுக்கண் கெடுத்த வினியாரை
யெண்ணாவ வலத்திண்ணியனுந்
தடுக்கத்தரியா வாசையுடன்
போகவிதத்தைத் தரிப்பானுங்
கொடுக்கச் சிறிதுங் குறியாது
கொள்ளுங் கருத்தேயுள்ளானும்.

விடைத்துத் தவரை வெகுள்வானும்
விடம்பம் உளத்துள் விரவினனும்
இடுக்கண் கெடுத்த இனியாரை
எண்ணா அவலத் திண்ணியனும்
தடுக்கத் தரியா ஆசையுடன்
போக விதத்தைத் தரிப்பானும்
கொடுக்கச் சிறிதும் குறியாது
கொள்ளும் கருத்தே உள்ளானும்.

உரை:

சிவ விரத ஒழுக்கமுடையவர்களை மதிக்காமல் சினந்து கோபிக்கிறவனும், உள்ளத்தில் ஒன்றை எண்ணி, வெளியில் வேறொன்றைப் பேசுகின்ற வஞ்சகனும், தனக்கு வந்த துன்பத்தை நீக்கி உதவிய நல்லோருக்கு, நன்றி மறந்து குற்றம் புரியும் கல்நெஞ்சம் உடையவனும், மனதில் எழும் ஆசைகளைக் கட்டுபடுத்தாமல் இன்பங்களை நுகர்கின்றவனும், பிறருக்குச் சிறிதும் வழங்க எண்ணாமல் பிறரிடமிருந்து பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டிருப்பவனும்;

விளக்கம்:

விடைத்து - சினந்து; தவர் - சிவவிரதி; வெகுள்வான் - கோபிக்கிறவன்; விடம்பம் - வஞ்சகம்; இடுக்கண் - துன்பம்; அவலத் திண்ணியன் - குற்றம் புரியும் கடின நெஞ்சமுடையவன்; தடுக்கத்தரியா - அடங்காத; குறியாது - எண்ணாமல்; கொள்ளும் - பெறுகின்ற; உள்ளான் - உள்ளவன். (36)

302. மாணாவுளத்த வஞ்சகனும்
வயிரமுடைய மனத்தினனும்
பூணார் முலையை மணஞ்
செய்து புணர்ந்தானிருக்கப் புலனிழந்த

Koviloor Digital Library

பாணார் மொழியைப் பைங்கிளியைப்
பணைத் தோளிணையைப் பயின்றதனா
லேணாணென்னு மிரண்டினையுங் கண்ணா
வெண்ணா வெளியனுமே.

மாணா உளத்த வஞ்சகனும்
வயிரம் உடைய மனத்தினனும்
பூண் ஆர் முலையை மணம் செய்து
புணர்ந்தான் இருக்கப் புலன் இழந்த
பாண் ஆர் மொழியைப் பைங்கிளியைப்
பணைத்தோள் இணையைப் பயின்றதனால்
ஏண் நாண் என்னும் இரண்டினையும்
கண்ணா எண்ணா எளியனும் ஏ.

உரை:

உள்ளத்தில் அமைதியைப் பேணாத கபடனும், ஒருவர் செய்த தவறை மன்னித்து மறக்காமல் அதனை எப்போதும் தன் நினைவில் வைத்திருந்து பகைமை பாராட்டுகிறவனும், ஒருத்தியை முறைப்படி திருமணம் புரிந்து, அணிகலன்கள் நிரம்பிய அவளுடைய கொங்கைகளை அணைத்துப் புணர்ந்த கணவன் உயிரோடு இருக்கும் போதே, கண்களைப் போலக் கருதிப் பாதுகாக்க வேண்டிய குடும்பப் பெருமையையும் வெட்கத்தையும் இழந்து, இனிய சொற்களைக் கிளிபோலக் கொஞ்சிப் பேசுகின்ற திரண்ட தோள்களையுடைய அந்தப் பெண்ணை அவளுடைய கணவன் அறியாதபடி புணர்ந்த மூடனும்.

விளக்கம்:

மாணா உளத்தன் - மன அமைதியை இழந்தவன்; புலன் - அறிவு; வயிரம் உடைய மனத்தினன் - யானையைப் போன்று ஒருவர் செய்த தீமையை மறவாது நெடுகப் பகைமை பாராட்டுபவன்; பூண் - அணிகலன்; ஆர் - நிரம்பிய;

பான் - பாடல்; பாண் ஆர் - பண் ஆர் பண்ணிமை வாய்ந்த; பைங்கிளி - பசுமை+கிளி - கிளிபோலக் கொஞ்சிப் பேசுகிறவள்; பணை - திரண்ட; மூங்கில்; ஏண் - பெருமை; நாண் - வெட்கம்,நாணம்; கண்ணா - கணிக்காத; எண்ணா - நினைக்காத. (37)

303. கொழுநன்றனையே தெய்வமெனக்
குறித்துத் தருமநெறி கோணா
தொழுகும் விரதவுத்தமியை
நொய்யளெனவே யுளத்துன்னு

Koviloor Digital Library

மிழுதை தானு மிவளெளிய
 னென்றேய வடனிணைத் தோளைத்
தழுவக் கருதுந் தண்ணியனுங்
 கண்ணாற் புணர்ச்சி தரிப்பானும்.

கொழுநன் தனையே தெய்வம் எனக்
 குறித்துத் தருமநெறி கோணாது
ஒழுகும் விரத உத்தமியை
 நொய்யள் எனவே உளத்து உன்னும்
இழுதை தானும் இவள் எளியள்
 என்றே அவள்தன் இணைத் தோளைத்
தழுவக் கருதும் தண்ணியனும்
 கண்ணால் புணர்ச்சி தரிப்பானும்.

உரை:

தன்னைத் திருமணம் புரிந்த தன் கணவனையே தான் வணங்குவதற்கு உரிய தெய்வமாகக் கருதி, இல்லற நெறி பிறழாமல் வாழும் நோன்பு உடைய குலமகளை, மிக அற்பமானவளாகக் கருதுகிற முட்டாளும், அவள் தனக்கு எளிதாக வசப்படுவாள் என்று எண்ணி, அவளுடைய தோள்களைத் தழுவிப் புணரக் கருதுகின்ற இகழத்தக்கவனும், அக்குலமகளின் முகத்தைத் தீய எண்ணத்துடன் ஆசையோடு உற்று நோக்குகின்றவனும்;

விளக்கம்:

கொழுநன் - கணவன்; தெய்வம் எனக்குறித்து - தெய்வம் என்று எண்ணி;

'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்
பெய் எனப் பெய்யும் மழை'

என்பது *திருவள்ளுவம்.*

தருமநெறி - இல்லற நெறி; கோணாது - பிறழாது; விரதம் - நோன்பு; உத்தமி - குலமகள்.

'குலமகட்கு அழகு நன் கொழுநனைப் பேணுதல்' *(நறுந்தொகை)* என்று அதிவீரராம பாண்டியர் கூறுகிறார். நொய்யள் - அற்பமானவள்; இழுதை - முட்டாள்; தண்ணியன் - இகழத்தக்கவன். (38)

304. கரிசு சிறிதுங்கருதாத
 கவினார் மரபிற் கன்னிகையைத்
துரிசு முடையளிவளென்று
 சொல்லு மவலத் துர்ச்சனனு

Koviloor Digital Library

மொருவன் சிவனுண் டென்றுணர்ந்த
பனவன்றனைத் தேர்ந்துதவாதே
பரிவு மறிவு முடையனை மற்
றொருவற்குதவும் பழியினனும்.

கரிசு சிறிதும் கருதாத
கவின் ஆர் மரபில் கன்னிகையைத்
துரிசும் உடையள் இவள் என்று
சொல்லும் அவலத் துர்ச்சனனும்
ஒருவன் சிவன் உண்டு என்று உணர்ந்த
பனவன் தனைத் தேர்ந்து உதவாதே
பரிவும் அறிவும் உடையனை
மற்றொருவற்கு உதவும் பழியினனும்.

உரை:

பாவச் செயல்களைச் சிறிதும் எண்ணாத குடும்பத்தில் பிறந்த திருமணம் ஆகாத ஒரு பெண்ணைக் குற்றம் உடையவள் என்று சொல்லுகிற குற்றச் செயல்கள் புரியும் கொடியவனும், அன்பும் அறிவும் உடையவனும், ஒப்பற்ற கடவுளாகிய சிவபெருமான் ஒருவன் உள்ளான் என்பதைத் தன் அறிவால் உணர்ந்தவனும் ஆகிய அந்தணனுக்கு உதவாமல், பிறனுக்கு உதவுகின்ற நிந்தைக்கு உரியவனும்.

விளக்கம்:

கரிசு - பாவம்; கவினார் - நல்ல பண்புகளை உடைய; துரிசு - குற்றம்; மரபு - பரம்பரை; அவலம் - குற்றம்; துர்ச்சனன் - தீயவன்; பனவன் - அந்தணன்; பரிவு - அன்பு; பழியினன் - நிந்தைக்கு உரியவன். (39)

305. தரும மணமே பிரமாதி
நான்குந் தலைமையிடை மணந்தா
னொருவ னொருத்தி யெனுமிவர்த
மொப்பிற் பரிவுற்றுறும் புணர்ச்சி
கருதிற்கடை மூன்றாசுர முன்
கடையென் றவற்றைக் கழியாதே
விரைய விழைந்து புணர்ந்தறத்தை
விதித்த மொழியை விடுத்தாரும்.

தரும மணமே பிரம ஆதி
நான்கும் தலைமை இடை மணந்தான்
ஒருவன் ஒருத்தி எனும் இவர்தம்
ஒப்பில் பரிவுற்று உறும் புணர்ச்சி

Koviloor Digital Library

கருதில் கடைமூன்று ஆசுரம் முன்கடை
என்று அவற்றைக் கழியாதே
விரைய விழைந்து புணர்ந்து அறத்தை
விதித்த மொழியை விடுத்தாரும்.

உரை:

பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்ற நான்கு வகை மணங்களும் தலைமையான மணங்களான தருமத் திருமணங்கள் ஆகும். ஆடவரும் மகளிருமான காதலர் இருவர் மனஒருமைப்பட்டு, அன்போடு உடலுறவு கொண்டு, பின்னர் அவர்கள் மணம் புரிந்து இல்வாழ்க்கையில் ஈடுபடுவது இடைப்பட்ட காந்தருவமணம். ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்ற மூன்று வகை மணங்களும் கடைசியாக உள்ளவை. கடைசியாகச் சொல்லிப ஆசுரம் முதலான மணங்கள் கடைப்பட்ட மணங்கள். அவற்றைப் புறக்கணிக்காமல், ஆசைப்பட்ட இருவர் திருமண விதிகளை ஒதுக்கி விட்டு, மணம்புரிந்து வாழ்கின்றவர்களும்.

விளக்கம்:

இதில் கூறப்பட்டுள்ள மூவகை மணங்களுள், தமிழ் மரபுக்கேற்ற கற்பியல், களவியல் ஆகிய இரண்டும் முறையே முதல் இருவகைகளைச் சார்ந்ததாகும் (40)

306. உலகவியல்பை யொழிந்தாரை
யுதவீர் பொருளென்று ரைப்பானு
நிலைமை தளரிற்றாங்காதே
நீங்கும் பாங்கி லடியானுஞ்
சலமில் சதியைத் தணப்பானுஞ்
சாற்றிப் பழுதுஞ் சலஞ் செய்து
கொலையைப் புரியுங் கொடியானுங்
குணத்தார் தமையுங் கொதிப்பாலே.

உலக இயல்பை ஒழிந்தாரை உதவீர்
பொருள் என்று உரைப்பானும்
நிலைமை தளரில் தாங்காதே
நீங்கும் பாங்குஇல் அடியானும்
சலம்இல் சதியைத் தணப்பானும்
சாற்றிப் பழுதும் சலம் செய்து
கொலையைப் புரியும் கொடியானும்
குணத்தார் தமையும் கொதிப்பால் ஏ.

உரை:

உலக நிகழ்ச்சிகளில் மனம் செலுத்தாமல் ஒதுங்கி மோனநிலையில்

Koviloor Digital Library

இருக்கும் சிவஞானியிடம் தனக்குப் பொருள் உதவுமாறு கேட்கிறவனும், தன்னை ஆதரித்த தலைவன் வறுமையால் வாடும் போது கூட இருந்து அவன் துன்பந்தீர உதவாமல் விலகிச் செல்கிற இணக்கம் இல்லாத பணியாளனும், கற்புள்ள மனையாளின் மீது களங்கம் சுமத்தி அவளை விட்டுப் பிரிகிற கணவனும், நல்ல குணமுடையவர் மீது பழி சுமத்தி, அவரைக் கொல்லுகிற கொடியவனும்;

விளக்கம்:

நிலைமை தளர்தல் - வறுமைநிலை; பாங்குஇல் - இணக்கம் இல்லாத; சலம்இல் - வஞ்சனையில்லாத; சதி - கற்புடைய மனைவி; தணப்பான் - பிரிகிறவன்; சலம் செய்து - களங்கம் சுமத்தி; கொதிப்பு - கோபம்; ஏ - அசை. (41)

307. சுற்றத்தவரைத் துடைப்பானுஞ்
சுகிர்தத்தவரைத் துணிப்பானும்
பற்றிப் பசுவைப் படுப்பானும்
பதியைக் கொலைசெய்பழியினனு
மற்றை வசியர் வடிவினையு
மாயோடனையும் வதைப்பானுஞ்
செற்றத்துழவர் தங்களையுஞ் செருக்கிச்
சினத்துச் செகுப்பானும்.

சுற்றத் தவரைத் துடைப்பானும்
சுகிர்தத்தவரைத் துணிப்பானும்
பற்றிப் பசுவைப் படுப்பானும்
பதியைக் கொலைசெய் பழியினனும்
மற்றை வசியர் வடிவினையும்
மாயோள் தனையும் வதைப்பானும்
செற்றத்து உழவர் தங்களையும்
செருக்கிச் சினத்துச் செகுப்பானும்.

உரை:

உறவினர்களை அழிப்பவனும், அறங்கள் செய்யும் நல்லோரைக் கொல்பவனும், பசுக்களைப் பிடித்து அழிப்பவனும், பழிக்கு அஞ்சாமல் ஆட்சியாளரைக் கொலை செய்பவனும், பிறவணிகர்களையும், பெண்களையும் வதைப்பவனும், தணியாத பகைமையால் அகந்தையும் கோபமும் கொண்டு, பயிர்த் தொழில் புரியும் வேளாளரைக் கொல்பவனும்;

Koviloor Digital Library

விளக்கம்:

துடைப்பான், துணிப்பான், படுப்பான், வதைப்பான், செகுப்பான் என்பவை கொல்லுதலைக் குறிக்கும் சொற்கள். சுகிர்தத்தவர் - ஈகையாளர்; பற்றி - பிடித்து; பதி - அரசன்; வசியர் - வைசியர், வணிகர்; மாயோள் - பெண்; செற்றம் - தணியாத கோபம்; செருக்கு - அகந்தை. (42)

308. தருக்கடனையுந் தனக்குன்னித்
தறிக்குமவனுந் தருக்காலே
யொருத்தனுயிர்கட் குயிராய
வொப்பில் பரமனுறையுமெலை
விருக்க விடபமவைதனையும்
விடைத்தே யொடிக்கும் வினையினனு
மருக் கொண்மலரைத் தனக்கெனவே
பறிக்குமவல வலியனுமே.

தருக்கள் தனையும் தனக்கு உன்னித்
தறிக்கும் அவனும் தருக்காலே
ஒருத்தன் உயிர்கட்கு உயிராய
ஒப்புஇல் பரமன் உறையும் எல்லை
விருக்க விடபம் அவை தனையும்
விடைத்தே ஒடிக்கும் வினையினனும்
மருக் கொள் மலரைத் தனக்கு
எனவே பறிக்கும் அவல வலியனும் ஏ.

உரை:

செருக்கினாலே தன்தேவைக்கு என்று மரங்களை வெட்டுகிறவனும், எல்லா உயிர்களுக்கும் உயிரான ஒப்பற்ற மேலான சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் திருக்கோயில் வளாகத்திலேயிருக்கும் மரங்களின் கொம்புகளைக் கோபத்துடன் ஒடிக்கிற தீவினையாளனும், திருநந்தனவனத்தில் பூசைக்காக உள்ள நறுமணப் பூக்களைத் தனக்கு வேண்டும் என்று பறிக்கிற குற்றமுள்ள வன் செயலாளனும்,

விளக்கம்:

தருக்கள் - மரங்கள்; தறிக்கும் - வெட்டுகிற; பரமன் - சிவன்; உறையும் எல்லை - கோயில்வளாகம்; விருக்கம் - மரம்; விடபம் - சிறுகிளை;

விடைத்து - கோபித்து; மரு - மணம்; அவலம் - குற்றம்; வலியன் - முரடன்; ஏ - அசை. (43)

Koviloor Digital Library

309. பரமர் திருவாலய மதனிற்
பணி செய்பவரைப் பசுவதனை
யரிய செந்நெலவை முதலு
மபகார கனுமவமதியாற்
றருகவென்று பொருளல்லார் தங்கைப்
பொருளைத் தரிப்பானு
மரனையருச் சித்ததன் பலத்தைப்
பிறர்க்குப் பொருளுக் களிப்பானும்.

பரமர் திருஆலயம் அதனில் பணி
செய்பவரைப் பசு அதனை
அரிய செந்நெல் அவை முதலும்
அபகாரகனும் அவமதியால்
தருக என்று பொருள் அல்லார்
தம்கைப் பொருளைத் தரிப்பானும்
அரனை அருச்சித்ததன் பலத்தைப்
பிறர்க்குப் பொருளுக்கு அளிப்பானும்.

உரை:

சிவபிரான் திருக்கோயிற் பணியாளர்களையும், பசுக்களையும், பெறுவதற்கு அரிய செஞ்சாலிநெல், உளுந்து, பயறு முதலான தானியங்களையும் திருடுகிறவனையும், தகாதவரிடம் பொருள் உதவுக என்று கேட்டு ஏற்பவனையும், சிவனை வழிபாடு செய்த புண்ணியப் பயனைப் பிறர் தரும் பொருளுக்காகத் தத்தம் செய்கிறவனையும்;

விளக்கம்:

பரமர் - பரமசிவன்; அபகாரகன் - அபகரிப்பவன்; தரித்தல் - அடைதல்; பலன் - புண்ணியப் பயன்; (44)

இன்ப துன்பங்களின் காரணம்

310. துக்கம் பிரியச் சுகமடையத்
துணிவ ருலக ரவருள்ளுந்
துக்கம் பிரியச் சுகமதனைத்
துய்ப்பார் சிலரே சிலர்தாமே
துக்கம் பிரியார் சுகம் பிரிவர்
துணிந்தவிரண்டு திறத்தார்க்கும்
புக்கவினை புண்ணிய பாவ
மெனவே துணியாப் பூசுரரும்.

Koviloor Digital Library

துக்கம் பிரியச் சுகம் அடையத்
துணிவர் உலகர் அவருள்ளும்
துக்கம் பிரியச் சுகம் அதனைத்
துய்ப்பார் சிலரே சிலர்தாமே
துக்கம் பிரியார் சுகம் பிரிவர்
துணிந்த இரண்டு திறத்தார்க்கும்
புக்கவினை புண்ணியம் பாவம்
எனவே துணியாப் பூசுரரும்.

உரை:

உலகினர் அனைவரும் தங்களுடைய துன்பங்கள் அகன்று இன்பங்களைப் பெற வேண்டுமென்று எண்ணுவர். அவர்களுள் சிலர் இயல்பாகவே துன்பங்கள் இல்லாமல் இன்பங்களை நுகருவர். சிலர் துன்பங்களிலிருந்து விடுபடாமல் வருந்துவர். இந்த இருவகையினரும் அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கு அவரவர் செய்த புண்ணிய பாவங்களே காரணம் என உறுதி கொள்ளாத அந்தணரும்;

விளக்கம்:

துக்கம் - துயரம்; சுகம் - இன்பம்; துணிவர் - கருதுவர்; உலகினர் - உலகில் வாழும் மக்கள்; துய்ப்பார் - அனுபவிப்பார்; திறத்தார் - வகையினர்; துணியா - மனஉறுதி பெறாத; பூசுரர் - அந்தணர். (45)

311. தன்னாற் சமைத்த தடாகத்தைத்
தருக்களதனைத் தாரத்தைப்
பொன்னேயனைய புத்திரரைப் பொருட்குக்
கொடுக்கும் புல்லியனு
நன்னோன்புடையார் தனந்தனையு நயந்து
கொள்ளு நலமிலியும்
உன்னைப் பரிப்பலெனப் பாரி
யுடைமை தனைக் கொண்டொழிப்பானும்.

தன்னால் சமைத்த தடாகத்தைத்
தருக்கள் அதனைத் தாரத்தைப்
பொன்னே அனைய புத்திரரைப்
பொருட்குக் கொடுக்கும் புல்லியனும்
நல்நோன்பு (உ)டையார் தனம்தனையும் நயந்து
கொள்ளும் நலம் இலியும்
உன்னைப் பரிப்பல் எனப்பாரி
உடைமை தனைக் கொண்டு ஒழிப்பானும்.

Koviloor Digital Library

உரை:

தானே உண்டாக்கிய குளத்தையும், தன் மனைவியையும், தங்கம் போன்ற தன் புதல்வர்களையும் பொருளுக்கு விற்கும் இழிந்தவனும், நல்ல விரத ஒழுக்கமுடையவர்களின் செல்வத்தை விரும்பி அதனைக் கவர்ந்து கொள்கிற தீயவனும், உன்னையும், உன் பெற்றோர் உனக்கு அளித்த உடைமைகளையும் பாதுகாப்பேன் என்று சொல்லி மணம் புரிந்த தன் மனைவியின் உடைமைகளை வாங்கிக் கொண்டு அவளைக் கைவிட்டு விடுகிறவனும்;

விளக்கம்:

சமைத்த - உண்டாக்கிய; தடாகம் - குளம், நீர்நிலை; தரு - மரம்; தாரம் - மனைவி; புல்லியன் - அற்பன்; தனம் - செல்வம்; நயந்து - விரும்பி; நலம் - நன்மை; இலி - இல்லாதவன்;

நலம்இலி - தீயவன்; பரிப்பல் - தாங்குவேன்; காப்பேன்; பாரி - இல்லாள்; ஒழிப்பான் - கைவிடுகிறவன்; (46)

312. தேறலருந்துந் தேமொழியைத்
திளைக்கு மறிவில் சிறியானும்
வேறு சிலர்கைப் பொருடன்னை
விரும்பித் தருவலென வாங்கிப்
பேறுமவர்க்குப் பிழைப்பானும்
பேணுஞ் செநெலும் பிறர் தம்பாற்
கூறிக் கொடுத்து விருத்தியினைக்
கொண்டே யருந்துங் கொடியனுமே.

தேறல் அருந்தும் தேம் மொழியைத்
திளைக்கும் அறிவுஇல் சிறியானும்
வேறு சிலர் கைப்பொருள் தன்னை
விரும்பித் தருவல் எனவாங்கிப்
பேறும் அவர்க்குப் பிழைப்பானும்
பேணும் செந்நெலும் பிறர்தம்பால்
கூறிக் கொடுத்து விருத்தியினைக்
கொண்டே அருந்தும் கொடியனும் ஏ.

உரை:

தேன் போலத் தித்திக்கப் பேசுகின்ற, கள் அருந்தும் பெண்ணைப் புணர்ந்த அறிவு இல்லாத அற்பனும், வேறு பிறருடைய பொருளில் ஆசை வைத்து, திரும்பத் தருவேன் என்று அவர்களிடம் கேட்டு வாங்கிய பொருளை, உரியவர்களுக்கு உரிய காலத்தில் திரும்பக் கொடாதவனும், அனைவரும் விரும்பும் செந்நெல்லைக் கொடுத்து வட்டி வாங்கி அதனை உணவுக்காகப் பயன்படுத்துகின்ற தீயவனும்;

விளக்கம்:

தேறல் - கள்; தேம் - தித்திப்பு; தேமொழி - இனிய பேச்சு; திளைக்கும் - கூடிமகிழும்; சிறியான் - அற்பன்; தருவல் - தந்து விடுவேன்;

பிழைப்பான் - கொடாதவன்; பேணும் - விரும்பும்; விருத்தி - வளர்ச்சி. இங்கு வட்டியைக் குறிக்கிறது. ஏ - அசை. பேறும் அவர்க்குப் பிழைப்பான் - அவர்க்குப் பேறு பிழைப்பான், திரும்பப் பெறுதல் அவர்க்கில்லாமற் செய்தவன். அவர் அதைத் திரும்பப் பெற வைத்தலிற் பிழைத்தவன். (47)

313. குற்றமுடையான் வினை தணிக்கக்
கொடுக்கும் பொருளைக் கொள்வானும்
விற்கத் தகுதியல்லாத
வன்னாதிகளை விற்பானுங்
கற்பால் வசிய முதற் செய்து
கனகங் கொள்ளுங் கரிசினனு
நிற்பார் நியமத்திவரெனவே
நிகழ்த்தத் துடங்கு நியதியனும்.

குற்றம் உடையான் வினை தணிக்கக்
கொடுக்கும் பொருளைக் கொள்வானும்
விற்கத் தகுதி அல்லாத
அன்ன ஆதிகளை விற்பானும்.
கற்பால் வசியம் முதல் செய்து
கனகம் கொள்ளும் கரிசினனும்
நிற்பார் நியமத்து இவர் எனவே
நிகழ்த்தத் துடங்கு நியதியனும்.

உரை:

குற்றங்களைச் செய்த ஒருவன் தான் செய்த குற்றங்களுக்குக் கழுவாயாக அளிக்கும் தானத்தைப் பெறுகின்றவனும், விற்பனை செய்வதற்கு உரியன அல்லாத சோறுகறி வகைகளை விலைக்கு விற்பவனும், மந்திர நூல் முறைப்படி பிறரை வசியம் முதலான கிரியைகளால் தன் வசப்படுத்தி, அவர்களுடைய செல்வத்தைக் கொள்ளை கொள்ளும் கொடியவனும், பிறர் தன்னை நல்லவனென்று நம்புமாறு செய்யச் சமய ஒழுக்கங்களைப் பிறர் அறியுமாறு மேற்கொள்ளுகின்றவனும்;

விளக்கம்:

குற்றம் உடையான் - பாவம் புரிந்தவன்; வினைதணிக்க - பாவம் நீங்க; கனகம் - தங்க அணிகலன் முதலியவை; கரிசு - பாவம்; குற்றம்; நியமம் - ஒழுக்க முறைகள்; நியதி - முறைமை.

Koviloor Digital Library

'நிற்பார் நியமத் திவர்' என - இவர் நியமத்தில் நிற்பவர் என்று பிறர் பேசவைத்ததற்காக. (48)

314. கொடுத்துத் தனத்தை வேதமுதல்
கொள்ளுமவனும் பொருள் கொண்டு
படிப்பிப்பவனும் படிமத்தைப்
பரித்தேயொழிக்கும் பாங்கிலியும்
திடத்தையிழந்து தரிசனங்க
ளனைத்து மதித்துத் திரிவானும்
அடுத்த சமயத் தயற்பசுநூல்
வழியென் றதுகற் றறிவானும்.

கொடுத்துத் தனத்தை வேதமுதல்
கொள்ளும் அவனும் பொருள் கொண்டு
படிப்பிப்பவனும் படிமத்தைப் பரித்தே
ஒழிக்கும் பாங்கு இலியும்
திடத்தை இழந்து தரிசனங்கள்
அனைத்தும் மதித்துத் திரிவானும்
அடுத்த சமயத்து அயல்பசுநூல்
வழி என்று அது கற்று அறிவானும்.

உரை:

செல்வப் பொருளைக் கொடுத்து வேத சிவாகம நூல்களை வாங்குகிறவனும், பொருளைப் பெற்றுக் கொண்டு ஆகம நூல்களைக் கற்பிக்கிறவனும், ஒரு சிவ விரதத்தைத் தொடங்கி, அதனை முழுமையாக நிறைவேற்றாமல் இடையிலே விட்டு விடுகிற ஒழுங்கு இல்லாதவனும், தனக்குப் பிறப்புரிமையாகக் கிடைத்த சைவ சித்தாந்த நிலையே மேலானது என்ற உறுதி நிலையை இழந்து, பிற மத தரிசனங்களையெல்லாம் பெரிதாக மதித்து நடப்பவனும், தன் அயற்சமயத்தவர் எழுதிய பசுநூலை, முத்தி நெறிக்கு உரிய பதிநூலாகக் கருதிக் கற்று ஆராய்கிறவனும்;

விளக்கம்:

வேதமுதல் - இது உபநிடதங்களையும் சிவாகமங்களையும் குறிக்கும். சங்கர மதத்திற்கு உபநிடதங்கள் ஆதாரமாக உள்ளன. சைவசமயத்திற்குச் சிவாகம நூல்கள் ஆதார நூல்களாகும். எனினும், உபநிடதங்களின் தெளிவே சைவ சித்தாந்தம் என்பது குமர குருபர அடிகளின் கருத்து. (49)

315. அறிவையளிக்கு மதுவன்றி
யவலத் தருக்க மறைவானு
மறுவில் வடிவ வானவரை
வன்னி யதனை மந்திரத்தைப்

Koviloor Digital Library

பெறுவித்தருளும் பெரியோனைப்
பேணா தொழிந்து பிழைப்பானு
மறையோர் தமையும் பசுவினையு
மாமாத்தென வெண் மனிதரையும்.

அறிவை அளிக்கும் அதுஅன்றி
அவலத் தருக்கம் அறைவானும்
மறுஇல் வடிவ வானவரை
வன்னி அதனை மந்திரத்தைப்
பெறுவித்து அருளும் பெரியோனைப்
பேணாது ஒழிந்து பிழைப்பானும்
மறையோர் தமையும் பசுவினையும்
மாமாத்து என எண் மனிதரையும்.

உரை:

அறிவை வளர்ப்பது குறித்துப் பேசாமல், குற்றத்தைப் பெருக்கும் முறை கெட்ட சொற்போரில் ஈடுபடுகிறவனும், குற்றமில்லாத உடம்பினரான தேவர்கள், நெருப்பு ஆகியவற்றை வணங்கும் முறையைக் கற்பிக்கும் ஆசானையும், அந்தணரையும், பசுக்களையும், பெரியோரையும் ஆதரிக்காமல் அவர்களுக்குத் தீங்கு செய்பவனும்;

விளக்கம்:

அவலத் தருக்கம் - விதண்டாவாதம்; மறு - குற்றம்; வடிவு - உடம்பு; வானவர் - தேவர்; வன்னி - நெருப்பு; மந்திரம் - ஓமத்தீயின் மூலம் யாருக்காக, எந்தத் தேவதைக்காக, வழிபாடு செய்யப்படுகிறதோ அதற்கு உரிய மந்திரம்;

மறையோர் - இது சிவாச்சாரியாரைக் குறிக்கும்; மாமாத்து - மகாமகத்து, மகத்து மகா பெரியோர்; மகான்களான பெரியோர்; எண் - கருதப்படுகிற; (50)

316. அரசன் றனையு மபவாத
மறையு மவனு மவன்முன்னு
முரிய வினையைப் பிதிர் தேவர்க்
குதவா தவனு மொழுங்கிலியும்
பரம சிவனு மறநெறியும்
பாவ விதமும் பரபதமு
நரக விதமு மிலையென்றே
நவிற்று மவனு நாடோறும்.

Koviloor Digital Library

அரசன் தனையும் அபவாதம் அறையும்
அவனும் அவன் முன்னும்
உரிய வினையைப் பிதிர் தேவர்க்கு
உதவாதவனும் ஒழுங்கு இலியும்
பரமசிவனும் அறநெறியும்
பாவவிதமும் பரபதமும்
நரகவிதமும் இலைஎன்றே நவிற்றும்
அவனும் நாள் தோறும்.

உரை:

அரசன் முன்னிலையில் அவனைப் பழித்துப் பேசுகிறவனும், தன் தந்தை வழிமுதாதையருக்கும், வானவருக்கும் தான் செய்ய வேண்டிய திவசம், மந்திர நீர் இறைத்தல்(தருப்பணம்) முதலான சடங்குகளைச் செய்யாதவனும், ஒழுக்கம் இல்லாதவனும், மேலான சிவபிரானும், புண்ணிய பாவங்களும், சுவர்க்க நரகங்களும் இல்லையென்று நாள் தோறும் சொல்லுகிறவனும்;

விளக்கம்:

அபவாதம் - பழிப்புரை; பிதிர் - தந்தை வழியின் மூதாதையர்; உதவாதவன் - திவசம் முதலியன செய்யாதவன்; அறநெறி - புண்ணியம்; பரபதம் - சொர்க்கம்; நவிற்றும் - கூறும்; (51)

317. பூணார் முலையைப் பகற் பொழுதிற்
புணரு மவனும் பூரணையி
னாணாதறலின் மைதுனத்தைப்
பசுவின் பகத்தி னயப்பானு
மாணா னவர்த மாசியத்து
மயர்த்தும் பெரியோர் கருத்தாலும்
பேணா விருது மதிபகத்துப்
பேட்பாற் புணரும் பேதையுமே.

பூண்ஆர் முலையைப் பகல் பொழுதில்
புணரும் அவனும் பூரணையில்
நாணாது அறலில் மைதுனத்தைப்
பசுவின் பகத்தில் நயப்பானும்
ஆண்ஆனவர்தம் ஆசியத்தும் அயர்த்தும்
பெரியோர் கருத்தாலும்
பேணா இருது மதிபகத்துப்
பேட்பால் புணரும் பேதையும் ஏ.

Koviloor Digital Library

உரை:

அணிகலன் அணிந்த பெண்ணைப் பகல் வேளையிலும், முழுமதி நாளில் தண்ணீருக்குள்ளும் கூசாமல் புணருகின்றவனும், பசுவின் யோனியிலும் ஆடவனின் வாயிலும் மைதுனம் செய்ய விரும்புகிறவனும், மறந்தும் பெரியோர்கள் மனத்தினாலும் விரும்பாத வீட்டுக்கு விலக்காய் இருக்கிறவளை ஆசையால் புணருகின்ற மூடனும்;

விளக்கம்:

பூண் ஆர் முலை - அணிகலன் பூண்ட பெண்; பூரணை - முழுமதி நாள்; நாணாது - வெட்கப்படாமல்; அறல் - நீர்; மைதுனம் - புணர்ச்சி; பசுவின் பகம் - பசுவின் யோனி; நயப்பான் - விரும்புகிறவன்; ஆசியம் - வாய்; அயர்த்தும் - மறந்தும்; கருத்தால் - மனத்தால்; பேணா - விரும்பாத; இருதுமதி - வீட்டு விலக்கானவள்; பகம் - பெண்குறி; பேட்பு - பெட்பு ஆசை; பேதை - மூடன்; ஏ - அசை; (52)

318. உடைப்பானவனு முவகையுடன்
பிறியாதுறையு முறவினையுங்
கெடுப்பானவனுங் கிளர்சமயங்
கிளப்பானவனும் கொடுங் கிளவி
புடைப்பானவனும் புனற்கரையைக்
கூபதடமும் புலனிழந்து
துடைப்பானவனுந் துணையான
தேவர் விமானந் துயக்குறவே.

உடைப்பான் அவனும் உவகையுடன்
பிறியாது உறையும் உறவினையும்
கெடுப்பான் அவனும் கிளர்சமயம்
கிளப்பான் அவனும் கொடும் கிளவி
புடைப்பான் அவனும் புனல் கரையைக்
கூபதடமும் புலன் இழந்து
துடைப்பான் அவனும் துணையான
தேவர் விமானம் துயக்குஉற ஏ.

உரை:

மனவேறுபாடு இல்லாமல் மகிழ்வோடு இருக்கும் நட்பைப் பிரித்து விடுகிறவனும், தன் சமயத்தினர் அல்லாத பிறசமயத்தவருக்குத் தீங்கு செய்கிற வனும், தகாத சொற்களைக் கூறுகிறவனும், குளம், கிணறுகளின் கரைகளை இடித்துத் தள்ளுகிறவனும், தனக்கு உதவும் தெய்வம் எழுந்தருளியுள்ள திருக்கோயில் பங்கப்படும்படி அதனைச் சிதைக்கிறவனும்;

Koviloor Digital Library

விளக்கம்:

பிறியாது - வேறுபடாமல்; உவகை - மகிழ்வு; கிளர் - ஒளி; கிளப்பான் - கலகக்காரன்; கொடும் கிளவி - கொடியசொல்; புடைப்பான் - இடிப்பவன்; புனல் - நீர்; கூபதடம் - கிணற்றின்கரை; புலன் - அறிவு;விமானம் - கோயில்; தேவர் - தெய்வம்; துயக்கம் - பங்கம்; உற - பொருந்த; ஏ - அசை. (53)

தானே தனித்து உண்பவன் அறிவிலி

319. இறவாதிருக்கச் செயு மருந்தே
யெனினு மதனையில்லகத்துத்
துறவா திருந்தா ரனைவரொடுந்
துய்த்தல் கடனே துயக்குற்றுப்
பிறர் சொல் பழியும் பேணாதே
பெரியோர் தமக்கு நாணாதே
சிறிது மிரக்கஞ் செய்யாதே
தானே யருந்துஞ் சிதடனுமே.

இறவாது இருக்கச் செயும் மருந்தே
எனினும் அதனை இல்லகத்துத்
துறவாது இருந்தார் அனைவரொடும் துய்த்தல்
கடனே துயக்கு உற்றுப்
பிறர் சொல் பழியும் பேணாதே
பெரியோர் தமக்கும் நாணாதே
சிறிதும் இரக்கம் செய்யாதே
தானே அருந்தும் சிதடனும் ஏ.

உரை:

என்றும் இறவாமல் வாழச் செய்கின்ற மருந்தான அமிர்தமாக இருந்தாலும், அதனை வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் பகிர்ந்து உண்பதே முறை ஆகும். அவ்வாறு செய்யாமல் ஒரு குடும்பத் தலைவன், உணவின் மீதுள்ள ஆசையால் அறிவு மயங்கி, பிறர் கூறும் பழிப்புரையைக் கருதாமலும், பெரியோர் களுக்குக் கொடாமல் உண்கிறோமே என்று வெட்கப்படாமலும், இரக்க உணர்வு இல்லாமலும், தான் ஒருவனாகவே தனித்து உண்ணுகின்ற அறிவிலியும்;

விளக்கம்:

துய்த்தல் - உண்ணுதல்; துயக்கு உற்று - மனம் மயங்கி; பழி - இகழ்ச்சி; சிதடன் - அறிவில்லாதவன்; ஏ - அசை. (54)

Koviloor Digital Library

320. எனவே யிசைத்தவித்
தொகையிலென்னு மிவர்களெல்லோரு
முனமே மொழிந்த பாதகத்திற்
றணியவுபபாதக முற்றும்
வினையாரிணை வேல் விழியாரு
மிவற்றைப் புரியில் வேறல்லா
ரினியா முனிவ விதற்கினைய
பாவ விதமு மியம்புவமே.

எனவே இசைத்த இத்தொகையில்
என்னும் இவர்கள் எல்லோரும்
முனமே மொழிந்த பாதகத்தில்
தணிய உபபாதக முற்றும்
வினை ஆர் இணை வேல் விழியாரும்
இவற்றைப் புரியில் வேறு அல்லார்
இனியாம் முனிவ இதற்கு இனைய
பாவ விதமும் இயம்புவம் ஏ.

உரை:

என்று இங்குத் தொகுத்துக் கூறப்பட்டவர்கள் எல்லாரும் முன்பு சொன்ன பாவங்களைச் செய்தவர்களுக்கு அடுத்த நிலையில் உள்ளவர்கள் ஆவர். கூரிய வேல் போன்ற கண்களையுடைய பெண்களும் முதலிற் சொன்ன பாவச் செயல்களைச் செய்தால், அவர்களும் பெரும் பாவிகள் என்றே அழைக்கப்படுவர். அகத்திய முனிவனே! இனி, இப்பொழுது உரைத்த துணைப் பாவங்களுக்கு நெருக்கமான பாவங்களின் வகைகளையும் சொல்வோம்; கேட்பாயாக.

விளக்கம்:

இசைத்த - சொன்ன; தொகையில் - தொகுத்துக் கூறியதில்; முனமே - முன்பே; பாதகம் - பாவம்; உபபாதகம் - துணைப் பாவம்; இணை - இரண்டு; விழியார் - பெண்கள்; இனைய - நெருங்கிய; பாவவிதம் - பாவவகை; இயம்புவம் - சொல்வோம்; ஏ - அசை. (55)

வேறு பல பாவ வகைகள்

321. ஆவினுக்கு மருமறையாறங்க
நாவினர்க்குந் தன்னாய கனுக்கு மெய்த்
தாப தர்க்குஞ் சகிக்குந் தகைமைய
காவிநேர் விழிக் கன்னிகையார்க்குமே.

Koviloor Digital Library

ஆவினுக்கும் அருமறை ஆறு அங்கம்
நாவினர்க்கும் தன் நாயகனுக்கும் மெய்த்
தாப தர்க்கும் சகிக்கும் தகைமைய
காவி நேர் விழிக் கன்னிகையார்க்கும் ஏ.

உரை:

பசுக்களுக்கும், வேதங்கள், அவ்வேதங்களோடு தொடர்புடைய ஆறு சாத்திரங்கள் ஆகியவற்றைத் தங்களுடைய சமய நூல்களாகக் கொண்டு அவற்றை ஓதுகின்ற பிராமணர்களுக்கும், உண்மையான சிவவிரத ஒழுக்கம் உடையவர்களுக்கும், நீலோற்பல மலர் போன்ற கரிய கண்களையுடைய கன்னிப் பெண்களுக்கும்;

விளக்கம்:

ஆ - பசு; மறை - வேதம்; இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்கள். ஆறு அங்கம் - ஆறுசாத்திரங்கள்; அவை சிட்சை, வியாக்கரணம், சந்தசு, நிருக்தம், சோதிஷம், கல்பம் ஆகியவை ஆகும். (56)

322. உற்றகாரியத் தூறுகடன்னையு
முற்றுவானு முகிழ்த்த மகிழ்ச்சியைத்
துற்றுவார் தமைக் கண்டு துயக்குறும்
பற்றிலானும் பரருருப் பற்றியும்.

உற்ற காரியத்து ஊறுகள் தன்னையும்
முற்றுவானும் முகிழ்த்த மகிழ்ச்சியைத்
துற்றுவார் தமைக்கண்டு துயக்கு உறும்
பற்று இலானும் பரர் உருப் பற்றியும்.

உரை:

ஒருவர் தொடங்கிய செயல் வெற்றி பெறாதபடி, அதனைத் தொடங்கியவருக்குத் துன்பங்கள் உண்டாக்குகின்றவனும், நற்பேறு காரணமாகக் கிடைத்த செல்வத்தை அனுபவிப்பவரையும், பிறருடைய உடல் அழகையும் கண்டு மனம் பொறாமல் அறிவு மயங்கி வருந்துகிற அன்பு இல்லாதவனும்;

விளக்கம்:

ஊறுகள் - துன்பங்கள்; முற்றுவான் - பகைமை பாராட்டுகிறவன்; முகிழ்த்த - அரும்பிய; துற்றுவார் - அனுபவிப்பார்; துயக்கு உறும் - அறிவு மயங்குகிற; பற்று - அன்பு; பிறர்; உருப் பற்றியும் - உடல் அழகைப்பார்த்தும்.(57)

Koviloor Digital Library

323. ஈட்டினார் தனந்தன்னை இறைக் குறிக்
காட்டினானுங் கருதிய கையனும்
பாட்டினானுநற் பாவையர் தூடண
நாட்டினானு நரர்க்கு நவையுமே.

ஈட்டினார் தனம் தன்னை இறைக்குறிக்
காட்டினானும் கருதிய கையனும்
பாட்டினானும் நல் பாவையர் தூடணம்
நாட்டினானும் நரர்க்கு நவையும் ஏ.

உரை:

ஒருவர் தம் உழைப்பால் தேடிய பொருளைக் குறித்துத் தவறாக அரசனுக்கு அறிவித்தவனும், அப்பொருளின் மிகுதியைக் கண்டு மனம் புழுங்கியவனும், நல்லொழுக்கம் உள்ள பெண்களிடம் இகழத்தக்க தகாத பாடல்களைப் பாடுகிற வனும், நல்லவர்கள் மீது குற்றம் சுமத்துகிறவனும்;

விளக்கம்:

ஈட்டினார் - சம்பாதித்தவர்; இறை - அரசன்; கையன் - ஈனன்; பாவையர் - பாவை போன்ற பெண்கள்; தூடணம் - இகழத் தக்கது; நரர் - மனிதர்; நவை - குற்றம்; ஏ - அசை. (58)

324. ஆக்கள் சேரிடத்தாகு திச்சாலையுட்
டேக்கு நீர்த் தடந் தேர் திகழ் வீதியுள்
வேர்க்கணுந் தருச் சாயையில் வெற்பினிற்
பூக்கிளர்ந்த பொழிலின் புடையுமே.

ஆக்கள் சேர் இடத்து ஆகுதிச் சாலையுள்
தேக்கும் நீர்த்தடம் தேர் திகழ் வீதியுள்
வேர்க்கணும் தருச் சாயையில் வெற்பினில்
பூக்கிளர்ந்த பொழிலின் புடையும் ஏ.

உரை:

பசுக்கள் தங்கி நிற்கும் கொட்டிலிலும், அந்தணர்கள் தீ வளர்த்து ஓமம் செய்யும் இடத்திலும், நல்ல நீர்த்தேக்கம் உள்ள இடங்களிலும், விழாக்காலங்களில் இறைவன் திருமேனியுள்ள தேர் இழுத்துச் செல்லப்படும் கோயில் திருவீதிகளிலும், மரவேர்களின் மீதும், வெயில் மிகுந்த பகற்பொழுதில் நடந்துசெல்லும் பயணிகள் தங்கி இளைப்பாறும் மரங்களின் நிழல்களிலும், மலையின் மீதும், பூக்கள் பூத்துள்ள சோலையின் பக்கத்திலும்;

Koviloor Digital Library

விளக்கம்:

ஆக்கள் - பசுக்கள்; சேர் இடம் - கொட்டில்; ஏ - அசை; சாயல் - நிழல்; தரு - மரம்; பூக்கிளர் - பூக்கள்பூத்த; பொழில் - சோலை; வெற்பு - மலை; புடை - பக்கம். (59)

325. சிலையினீரிற் சிகதையிற் றேவர்த
மெலையின் மார்க்கத்தி லில்லத்திலீமத்திற்
றொலை விலாத தூர் வாதியிற்று ம்பையி
னிலைமை மாதவர் நீடு நிலத்துமே.

சிலையில் நீரில் சிகதையில் தேவர்தம்
எலையில் மார்க்கத்தில் இல்லத்தில் ஈமத்தில்
தொலைவு இலாத தூர்வாதியில் தும்பையில்
நிலைமை மாதவர் நீடு நிலத்தும் ஏ.

உரை:

ஓர் உருவச்சிலையின் மீது, தண்ணீரிலும், மணற் குன்றிலும், திருக்கோயில் வளாகத்திலும், மக்கள் நடக்கும் பாதையிலும், வீட்டினுள்ளும், சுடுகாட்டிலும், நீங்காத சேறு முதலானவை உள்ள இடங்களிலும், தும்பைச் செடிகளின் மீதும், உண்மையான துறவிகள் தங்கியிருக்கும் நிலப்பகுதிகளிலும்;

விளக்கம்:

சிலை - உருவச் சிலை; சிகதை - மணற்குன்று; எலை - எல்லை; தேவர் தம் எல்லை - கோயிலைச் சேர்ந்த தரைப்பகுதி; மார்க்கம் - பாதை; ஈமம் - சுடுகாடு; தொலைவு - நீங்குதல்; தூர்வாதி - அறுகு முதலியன; நிலைமை - உண்மை; மாதவர் - துறவிகள்; நீடுநிலம் - வாழுமிடம்; ஏ - அசை. (60)

326. உன்னத் தக்கதலத்திலுவர் தனிற்
செந்நெலாதிய செய்யிற் சிறப்புறு
வன்மிகாதியிற் குண்டு வனத்தினுட்
டன்னைத் தானிகர் கோமயம் தன்னினும்.

உன்னத்தக்க தலத்தில் உவர்தனில்
செந்நெல் ஆகிய செய்யில் சிறப்பு உறு
வன் மிக ஆதியில் குண்டு வனத்தினுள்
தன்னைத் தான்நிகர் கோமயம் தன்னிலும்.

உரை:

அடியவர்களால் சிந்திக்கத் தக்க சிறப்புடைய திருக்கோயில் உள்ள

Koviloor Digital Library

இடத்திலும், உப்புத் தன்மையுள்ள களர் நிலத்திலும், சிறப்புப் பொருந்திய செஞ்சாலி நெல் முதலானவை விளையும் நன்செய் நிலங்களிலும், புற்று முதலியன அமைந்த நிலத்திலும், குண்டும் குழியுமான புன்செய்க் காட்டிலும், தனக்குத் தானே இணையான சாணத்தின் மீதும்;

விளக்கம்:

உன்ன - நினைக்க; தலம் - திருக்கோயில் உள்ள இடம்; உவர் - உப்பு; உவரில் - உப்புத் தன்மையுள்ள களர்நிலம்; செய் - நன் செய் நிலம்; வன்மிகம் - புற்று; குண்டுவளம் - மேடும் பள்ளமுமான காட்டு நிலம்; கோமயம் - பசுவின் சாணம். (61)

327. நீக்குவானு மலசல நித்தலு
நாக்கினான் மதுபான நயந்துணு
மூர்க்கனு முழுவாதி விநோதமு
மார்க்கும் வீணனு மாடிடு மற்பனும்.

நீக்குவானும் மலசலம் நித்தலும்
நாக்கினால் மதுபானம் நயந்து உண்ணும்
மூர்க்கனும் முழுவு ஆதி விநோதமும்
ஆர்க்கும் வீணனும் ஆடிடும் அற்பனும்.

உரை:

இந்தப் பாடலுக்கு முன் உள்ள பாடல்களில் கூறப்பட்டுள்ள இடங்களில் மலசலம் கழிப்பவனும், நாள்தோறும் விருப்பத்தோடு கள்ளை நாவினால் சுவைத்துப் பருகுகின்ற அறிவில்லாதவனும், மத்தளம் முதலான இசைக்கருவிகளை முழக்கி, அவற்றிற்குப் பொருந்திய பாடல்களையும் பாடிக் கூத்தாடுவதைக் கண்டு மகிழ்கின்ற பயனில்லாதவனும், கூத்தாடும் சிறியனும்;

விளக்கம்:

நீக்குவான் - கழிப்பவன்; நித்தலும் - நாள்தோறும்; மது - கள்; நயந்து - விரும்பி; மூர்க்கன் - முரடன்; முழவுஆதி - மத்தளம் முதலான இசைக்கருவிகள்; விநோதம் - பொழுதுபோக்கு; ஆர்க்கும் - ஆரவாரிக்கும்; வீணன் - பயனற்றவன்; ஆடிடும் - கூத்தாடும்; அற்பன் - சிறியன். (62)

328. தேக்குநீர் விளையாடுஞ் சிறியனு
மார்க்கு நெஞ்ச த்தவர் தமக்கந்தரம்
பார்க்கும் பாங்கிலி தானும் பலர் செலு
மார்க்கந் தன்னைத் தடுக்கும் வலியனும்.

Koviloor Digital Library

தேக்கும் நீர் விளையாடும் சிறியனும்
ஆர்க்கும் நெஞ்சத்தவர் தமக்கு அந்தரம்
பார்க்கும் பாங்கு இலி தானும் பலர் செல்லும்
மார்க்கம் தன்னைத் தடுக்கும் வலியனும்.

உரை:

ஆழமான நீர் நிலையில் நீந்தி மகிழ்கின்ற குறைந்த அறிவுடையவனும், மனதைப் புலன்களின் வழியே செல்ல விடாமல் கட்டுப்படுத்திய உள்ளம் உடையவரான மேலோருக்குத் தீமை செய்யப் பார்க்கிற ஒழுங்கில்லாதவனும், பலரும் நடந்து செல்லும் வழியை முள் முதலியவற்றால் அடைத்து, மக்களைத் தடை செய்கின்ற இரக்கம் இல்லாதவனும்;

விளக்கம்:

தேக்கும் நீர் - நான்கு பக்கங்களிலும் கரைகளால் தேக்கி வைக்கப்பட்ட குளம், நீர்நிலை; சிறியன் - குறைந்த அறிவுடையவன்; ஆர்க்கும் - கட்டுப்படுத்தும்; நெஞ்சத்தவர் - உள்ளமுடைய நல்லோர்; மார்க்கம் - வழி, பாதை; வலியன் - கல் நெஞ்சம் உள்ளவன். (63)

329. ஈடிலார் மனையாதிய வெல்லையைப்
பாடிலா ரெனப் பற்றும் படிறனுங்
கூடமான கருமமுங் கூறிடு
மூடனும்மதனைச் செயு மூர்க்கனும்.

ஈடுஇலார் மனை ஆதிய எல்லையைப்
பாடுஇலார் எனப் பற்றும் படிறனும்
கூடமான கருமமும் கூறிடும்
மூடனும் அதனைச் செய்யும் மூர்க்கனும்.

உரை:

உறவினர்களாகிய ஆள் பலம் இல்லாதவரின் வீடு, நிலம் முதலான உடைமைகளை, அவை அவர்களுக்கு உரியவை அல்ல என்று வஞ்சகமாகக் கைப்பற்றிக் கொள்கிறவனும், பிறரறியாமல் மறைக்க வேண்டிய செயல்களைப் பிறருக்குக் கூறுகின்ற மூடனும், அந்தச் செயல்களைப் பலரும் அறிந்து கொள்ளுமாறு செய்கின்ற அறிவில்லாதவனும்;

விளக்கம்:

ஈடுஇலார் - ஆள்பலம் இல்லாதவர்; பாடு - அனுபவிக்கும் உரிமை; பற்றும் - கைப்பற்றிக் கொள்ளும்; படிறன் - வஞ்சகன்; கூடமான - மறைவாகச் செய்யும்; கருமம் - வேலை. (64)

Koviloor Digital Library

330. ஒளித்து நின்று பகைவ னையூறு செய்
வெளிற்றனுங்கன்னக் கோறொடு மிண்டனுந்
தெளித்த சொல்லை வழக்கிடைச் செப்பிடா
னெளித்த சொல்லை நிகழ்த்திடு நீசனும்.

ஒளித்து நின்று பகைவனை ஊறு செய்
வெளிற்றனும் கன்னக்கோல் தொடும் மிண்டனும்
தெளித்த சொல்லை வழக்குஇடைச் செப்பிடான்
எளித்த சொல்லை நிகழ்த்திடும் நீசனும்.

உரை:

தன் பகைவனை நேருக்கு நேர் நின்று எதிர்த்துக் கொல்லாமல் மறைந்து நின்று கொல்லுகிற வீரமில்லாத கோழையும், ஒரு பணக்காரருடைய வீட்டுச் சுவரைப் பெரிதாகத்துளைத்து, அத்துளையின் வழியாக வீட்டினுள் புகுந்து, அங்கிருக்கும் பொருள்களைத் திருடி ச் செல்லுகின்ற கள்வனும், ஒரு வழக்கை விசாரித்து நீதியின் அடிப்படையில் உறுதியான தீர்ப்பை வழங்காமல், ஒருதலைச் சார்பாக ஒருவருக்குச் சாதகமாகத் தீர்ப்புச் சொன்ன இழிந்தவனும்;

விளக்கம்:

ஒளித்து நின்று ஊறு செய் - பகைவரை வஞ்சகமாகக் கொல்லுதல். இவ்வாறு தனக்குப் பகைவன் அல்லாத வாலியை மறைந்து நின்று அம்பை ஏவிக் கொன்றவன் தசரதராமன். இன்னொருவன் அசுவத்தாமன். பாரதப் போரின் இறுதி நாளில் பாசறையில் உறங்கிக் கொண்டிருந்த, பாண்டவரின் ஐந்து புதல்வர்களையும், பாண்டவரின் சேனைத் தலைவனையும், அசுவத்தாமன் வாளால் அரிந்து கொன்றான் என்று *பாரதம்* கூறுகின்றது. கன்னக்கோல் - சுவரில் பெரிய துளையிடுவதற்குக் கள்வர் பயன்படுத்தும் ஒரு கருவி; தெளித்த சொல் - தெளிவான தீர்ப்புரை. (65)

331. கொடு மராதியைப் பண்ணிடுங் கோணனுங்
கொடுமராதியைக் கொள்ளுங் கொடியனு
மடியர்பாலிரங்காத வவலனு
மடியர் தம்மை யொறுத் திடு மற்பனும்.

கொடுமர ஆதியைப் பண்ணிடுங்கோணனும்
கொடுமர ஆதியைக் கொள்ளும் கொடியனும்
அடியர் பால்இரங்காத அவலனும்
அடியர் தம்மை ஒறுத்திடும் அற்பனும்.

Koviloor Digital Library

உரை:

(பறவை, விலங்கு முதலியவற்றை வேட்டையாடுவதற்குப் பயன் படும்) வில், அம்பு முதலான கொலைக் கருவிகளைச் செய்கிற முறை கேடனும், அக்கொலைக் கருவிகளை விலை கொடுத்து வாங்குகிற இரக்கம் இல்லாதவனும், சிவனடியவருக்கு மனம் இரங்கி உதவாதவனும், சிவபிரானுடைய அடியவரை மதிக்காமல் அவரைக் கடுஞ்சொற்களால் கோபித்துரைக்குங் கீழானவனும்;

விளக்கம்:

கொடுமரம் - வில்; **கொடுமரஆதி** - வில்,அம்பு முதலியன; **பண்ணிடும்** - செய்கின்ற; **கோணன்** - நீதி தவறியவன்; **அவலன்** - கல்நெஞ்சன்; **ஒறுத்தல்** - கடிந்து இகழ்தல்; **அற்பன்** - கீழானவன். (66)

332. ஆவினைத் தமிப்பானு மலலுற
நாவினாற் பொய்நவிற்று நரகனுங்
கூவ வந்தது கேட்குங் கொடியனுங்
காவலர்க்கபராதக் கருத்தனும்.

ஆவினைத் தமிப்பானும் அல்லல் உற
நாவினால் பொய் நவிற்றும் நரகனும்
கூவ வந்தது கேட்கும் கொடியனும்
காவலர்க்கு அபராதக் கருத்தனும்.

உரை:

பசுக்கள் வருந்துமாறு அவற்றை அடிக்கிறவனும், நாவினால் பொய் புகலுகின்ற நரகத்துக்கு உரியவனும், பிறர் சொல்ல வந்ததை மறைந்து நின்று கேட்கும் பொல்லாதவனும், தன் தலைவனுக்குக் குற்றம் புரியும் மனத்தை உடையவனும்;

விளக்கம்:

தமித்தல் - அடித்தல்; **அல்லல் உற** - துன்பம் அடைய; **நவிற்றும்** - சொல்லுகிற;**நரகன்** - நரகத்துக்கு உரியவன்; **கூவ** - கூற; **காவலர்** - தலைவர்; **அபராதம்** - தவறு,குற்றம்; **கருத்தன்** - எண்ணம் உடையவன். (67)

333. உறவினுக் கபராதியு மூனுடற்
பிறவி வேரினைப் பீழும் பெருவலி
யறிவனுக்கு நல்லாரிய னுக்கலற்
புறனுரைக்கு மவலப்புலையனும்.

Koviloor Digital Library

உறவினுக்கு அபராதியும் ஊன் உடல்
பிறவி வேரினைப் பீழும் பெருவலி
அறிவனுக்கும் நல் ஆரியனுக்கு அல்லல்
புறன் உரைக்கும் அவலப் புலையனும்.

உரை:

உறவினர்களுக்குத் தீங்கு செய்கிறவனும், தசை பொருந்திய உடம்பைப் பொருந்திய உடம்பைப் பெறுவதற்கு மூலகாரணமாகிய ஆணவத்தைப் பிடுங்கி அகற்றும் திறனுடைய நல்லறிவாளருக்கும், ஆசானுக்கும் துன்பத்தை உண்டாக்கும் புறங் கூறுதலாகிய குற்றம் உள்ள கீழானவனுக்கும்;

விளக்கம்:

அபராதி - குற்றம் புரிகிறவன்; ஊன் - தசை; பீழும் - பிடுங்கும்; வலி - திடம், திறன்; அறிவன் - நல்லறிவாளன்; ஆரியன் - குரு; அல்லல் - துன்பம்; புறன் உரைத்தல் - காணாத இடத்துப் பழியுரைத்தல்; அவல - குற்றமுடைய; புலையன் - புலால் தின்பவன்,கீழானவன். (68)

334. சொக்கிடுந் தொழில் வல்ல துரிசனும்
முக்கு நோயற வோட்டும் மருந்தெனப்
பொக்கம் பேசிக் கொடுக்கும் புலையனுந்
தக்க தாய் தந்தை வாட்டம் தணித்திடான்.

சொக்கு இடும் தொழில் வல்ல துரிசனும்
முக்கும் நோய் அற ஓட்டும் மருந்து எனப்
பொக்கம் பேசிக் கொடுக்கும் புலையனும்
தக்க தாய் தந்தை வாட்டம் தணித்திடான்.

உரை:

ஒருவனுடைய பொருளைக் கவரும் ஆசையால் வசியப் பொடியிட்டு அவனுடைய அறிவை மயக்கும் தொழிலைச் செய்கிற குற்றமுடையவனும், மூச்சுத் திணறும் நோயைப் போக்குகிற மருந்து என்று பொய் சொல்லி, ஒரு போலி மருந்தைக் கொடுக்கிற இழிந்தவனும், பெற்றோர்களின் பசியைப் போக்காதவனும்;

விளக்கம்:

சொக்கு - மயக்கும், சொக்குப்பொடி, வசியப்பொடி; துரிசு - குற்றம்; முக்கு - திணறுகிற; பொக்கம் - பொய்; புலையன் - இழிந்தவன்; வாட்டம் - பசி; தணித்திடான் - போக்காதவன்; (69)

Koviloor Digital Library

335. தனித்திருந் துணுந் தண்ணிய கண்ணனும்
முனித்தபோதனர் தன்னை முன்னூட்டிடான்
றுனித்த வாதுலர் துக்கந் துடைத்திடான்
பனித்த தாதர் பசியும் பறித்திடான்.

தனித்து இருந்து உண்ணும் தண்ணிய கண்ணனும்
முனித் தபோதனர் தன்னைமுன் ஊட்டிடான்
துனித்த ஆதுலர் துக்கம் துடைத்திடான்
பனித்த தாதர் பசியும் பறித்திடான்.

உரை:

புலனடக்கம் உள்ள சிவ விரதிகளை முதலில் உண்பிக்காமல், பசியால் வருந்திய இரவலர்க்கு உணவு அளித்து, அவர்கள் துன்பத்தைப் போக்காமல், பசியால் வருந்துகிற அடியவர்களுக்கு உணவு தந்து அவர்களின் பசியை அகற்றாமல் தானே தனித்து இருந்து உண்ணும் அற்ப அறிவினை உடையவனும்;

விளக்கம்:

தண்ணிய - கீழான; முனித்தபோதனர் - சிவ விரதிகள்; ஊட்டுதல் - உண்ணச் செய்தல்; துனித்த - துன்பப்படுகிற; ஆதுலர் - இரவலர்; துக்கம் - வருத்தம்; துடைத்திடல் - போக்குதல்; பனித்த - வருந்திய; தாதர் - அடியவர்; பறித்தல் - நீக்குதல். (70)

336. நீத்து முன்னைய வேத நெறியினைப்
பேர்த்து நின்ற பிராவிரச் சீயனுந்
தீர்த்தனாவரணாதி சிதைந்திடப்
பார்த்த பண்பில வவலப்படிறனும்.

நீத்து முன்னைய வேத நெறியினைப்
பேர்த்து நின்ற பிராவிரச் சீயனும்
தீர்த்தன் ஆவரணஆதி சிதைந்திடப்
பார்த்த பண்புஇல் அவலப் படிறனும்.

உரை:

பழங்கால முதல் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வரும் வேத நெறியினைப் புறக்கணித்து விட்டுத் தனக்கு என ஒரு புது வழியை வகுத்துக் கொண்டு, அந்த வழியிலே செல்லுகின்ற சந்நியாசியும், சிவன் திருக்கோயில் திருமதில் முதலியவை இடிந்து பழுதாகிக் கொண்டிருப்பதைப் பார்த்தும், அவற்றைப் பழுது பார்க்கும் திருப்பணியைச் செய்யாத வஞ்சகனும்;

Koviloor Digital Library

விளக்கம்:

வேதமா - இது உலகில் உள்ள எல்லா மதத்தினரும் பயன்படுத்துகின்ற ஒரு பொதுப் பெயர். கொள்கை அடிப்படையில் உபநிடதங்களின் தொகுப்புரையான பிரம்ம சூத்திரம், உபநிடதங்கள், கண்ணபிரான் வாக்கு என்று கருதப்படுகின்ற பகவத் கீதை ஆகிய மூன்றும். ரிக், யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கும் வேதங்கள் எனப்படும்.பிராவிரச் சீயன் - சந்நியாசி. (71)

337. ஆக்க டன்னை யரும்பிணி வந்துறி
னோக்கியே யதனோவு தன்னோவெனக்
காக்கிலானுங் கனத்தை யிளைத்த மெய்ச்
சேக்கண்மீது செறிக்கும் சிறியனும்.

ஆக்கள் தன்னை அரும்பிணி வந்துறில்
நோக்கியே அதன் நோவு தன்நோவு எனக்
காக்கிலானும் கனத்தை இளைத்த மெய்ச்
சேக்கள் மீது செறிக்கும் சிறியனும்.

உரை:

பசுக்களால் தாங்க முடியாத நோய்கள் வந்து அவற்றைத் தாக்கும் போது, அந்த நோய்கள் தனக்கு வந்ததாகக் கருதித் தக்க மருத்துவம் செய்து அவற்றின் நோயைக் குணப்படுத்தாதவனும், உடல் மெலிந்த எருதுகளின் மீது அதிகச் சுமையை ஏற்றுகிற அற்பனும்;

விளக்கம்:

நோவு - வருத்தம்; காக்கிலான் - காப்பாற்றாதவன்; இளைத்த - மெலிந்த; கனத்தை - சுமையை; செறிக்கும் - ஏற்றும்; சேக்கள் - எருதுகள்; மெய் - உடம்பு.(72)

338. விடையின் பீசத்தை வெய்ய வினைஞரா
லுடையச் செய்விக்கு மூனனும் வத்தையி
னிடையிற்பார மெடுத்து மிழுதையு
மிடபந் தன்னி லெடுத்து மிழுக்கனும்.

விடையின் பீசத்தை வெய்ய வினைஞரால்
உடையச் செய்விக்கும் ஊனனும் வத்தையின்
இடையில் பாரம் எடுத்தும் இழுதையும்
இடபம் தன்னில் எடுத்தும் இழுக்கனும்.

Koviloor Digital Library

உரை:

எருதுகளின் பீசமாகிய விதையை, கொடிய தொழில் செய்யும் சோமாறிகளால் உடையும்படி செய்விக்கிற பொல்லாதவனும், மலட்டுப் பசுவின் முதுகில் சுமைகளை ஏற்றுகிற அறிவில்லாதவனும், எருதுகளின் மீது பொதிகளை ஏற்றுகிற இழிந்தவனும்;

விளக்கம்:

வெய்ய - கொடிய; **வினைஞர்** - தொழில் செய்கிறவர்; **ஊனன்** - பொல்லாதவன்; **வத்தை** - மலடு; **எடுத்தும்** - ஏற்றுகிற; **இழுதை** - அறிவிலி; **இடபம்** - எருது; **இழுக்கன்** - இழிந்தவன்; **சோமாறி** - எருதுகளுக்கு விதை அடிப்பவன்; நலமடித்தல் என்பது யாழ்ப்பாண வழக்கு. (73)

339. வருந்து மேபதம் வைப்பின் மரிக்குமே
பொருந்து மண்ணிற் புழுக்களு மென்றுளம்
வருந்தியே பதமெல்லென வைத்திடா
தருந்த வத்தைப் பிரிந்த வரக்கனும்.

வருந்துமே பதம் வைப்பின் மரிக்குமே
பொருந்தும் மண்ணில் புழுக்களும் என்று உள்ளம்
வருந்தியே பதம் மெல்லென வைத்திடாது
அரும் தவத்தைப் பிரிந்த அரக்கனும்.

உரை:

தரையில் நடக்கும் போது புழுக்களும் எறும்பு முதலியனவும் நசுங்கிச் சாகுமே என்று உள்ளம் வருந்தி, மெத்தென அடியெடுத்து வைத்து நடக்காத, கொல்லா விரதத்தைக் கைவிட்ட இரக்கம் இல்லாதவனும்; (74)

340. உண்ணவூனை விரும்பியுயிர்க் கொலை
யெண்ணுவான் கொலை கண்டிரங்கான் கொலை
பண்ணுவாரைத் தடுத்துப் பகர்கிலா
னண்ணுவானிவ ரோடெனு நால்வரும்.

உண்ண ஊனை விரும்பி உயிர்க் கொலை
எண்ணுவான், கொலை கண்டு இரங்கான், கொலை
பண்ணுவாரைத் தடுத்துப் பகர்கிலான்,
நண்ணுவான், இவரோடு எனும் நால்வரும்.

உரை:

புலால் உணவின் மீதுள்ள ஆசையால் ஓர் உயிரைக் கொல்ல

Koviloor Digital Library

நினைக்கிறவனும், ஓர் உயிர் கொல்லப்படுவதைக் கண்டு உள்ளம் இரங்காதவனும், கொலை செய்ய முற்படுகிறவனுக்குக் கொல்லாமையின் உயர்வைக் கூறி அவனைத் தடை செய்யாதவனும், ஓர் உயிர் கொல்லப்படுவதற்குத் துணையாக இருந்தவனும் ஆகிய நால்வரும்;

விளக்கம்:

ஊன் - தசை; பகர்தல் - இங்கு அறிவுரை கூறுதலைக் குறிக்கும்; நண்ணுவான் - நண்பன். (75)

341. மிக்க சாதியுட் டோன்றியும் வேதியர்
துக்கந்துய்த்திடச் செய்யுந் துரிசனுந்
தக்க தென்றுமது மணஞ்சார்தருந்
திக்கினாசி செலுத்துஞ் சிறியனும்.

மிக்க சாதியுள் தோன்றியும் வேதியர்
துக்கம் துய்த்திடச் செய்யும் துரிசனும்
தக்கது என்று மதுமணம் சார்தரும்
திக்கில் நாசி செலுத்தும் சிறியனும்.

உரை:

உயர் குலத்தில் பிறந்தவனாக இருந்தும், அந்தணன் துன்பத்தை அனுபவிக்குமாறு செய்கின்ற பொல்லாதவனும், கள் விற்கும் இடத்தின் வழியாக அதன் மணத்தை மூக்கின் வழியாக முகர்ந்த படி செல்லுகின்ற அற்பனும்;

விளக்கம்:

மிக்க சாதி - மேலான உயர்குலம்; வேதியர் - அந்தணர். அந்தணர் துன்பப்படக் கூடாது என்பதுடன் எவரும் துன்பப்படக் கூடாது என்பது சிவசமயக் கொள்கை. 'வாழ்க அந்தணர்' என்ற திருஞான சம்பந்தருக்கு ஏனையர் வாழக் கூடாதென்று கருத்தல்ல. சிறந்தவர்களை விதந்து கூறுதல் மரபு. அந்தணர் துன்புறக் கூடாதென்பதும் அங்ஙனமே.

''எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே'' என்பது தாயுமானாரின் அருள் மொழி.

சைவம் மதமல்ல, சமயம். ஏன் என்பதற்கு விளக்கம், நீர்வேலிச் சங்கர பண்டிதரின் *சைவப்பிரகாசனம்* என்ற நூலின் சமய நிருபணம் எனும் பகுதியிற் காண்க. (76)

Koviloor Digital Library

342. பாவஞ்செய்யப் பயமில் படிறனும்
ஏவஞ் செய்ய விளைப்பிலிழுதையுந்
தேவர் தம்மைக் குறித்துத் திகழ் விதி
மேவயாகஞ் செய்யாத் தன வேந்தனும்.

பாவம் செய்யப் பயம் இல் படிறனும்
ஏவம் செய்ய இளைப்பு இல் இழுதையும்
தேவர் தம்மைக் குறித்துத் திகழ்விதி
மேவ யாகம் செய்யாத் தன வேந்தனும்.

உரை:

குற்றச் செயல்களைப் புரிய அஞ்சாத வஞ்சகனும், பிறருக்கு எப்பொழுதும் தீங்கு செய்வதற்குச் சளைக்காத மூடனும், தேவர்களுக்காக விதிமுறை தவறாமல் யாகம் செய்யாத பெருஞ் செல்வனும்;

விளக்கம்:

ஏவம் - எவ்வம்; துன்பம் வேத வேள்வி, திருமுறைகளால் ஒத்துக் கொள்ளப்பட்டது. அதனால் ஆஸ்திகருக்கு அதில் நம்பிக்கையுண்டு. அவற்றின் அர்த்தம் புரியாதவர் பலவுஞ் சொல்வர். (77)

343. ஆலயத்தை யமலனுக் காதிக்குக்
கோலினோமிலைக் கூவிளந் தண்ணறு
மாலை சூட்டவும் வல்லமு மல்லமுக்
காலமும் மென நோவறுங்கல்லனும்.

ஆலயத்தை அமலனுக்கு ஆதிக்குக்
கோலினோம் இலைக் கூவிளம் தண்நறு
மாலை சூட்டவும் வல்லமும் அல்லம் முக்
காலமும் என நோவு அறும்கல்லனும்.

உரை:

தூயவனும் எல்லாவற்றிற்கும் மூலகாரணனும் ஆகிய சிவ பிரானுக்கு ஒரு கோயில் கட்டும் முயற்சியை மேற்கொண்டதில்லை; குளிர்ச்சியும் நறுமணமும் உள்ள வில்வமாலைகளை காலை, உச்சிப் பொழுது, மாலை என்ற மூன்று வேளைகளிலும் சிவபிரான் திருமுடியில் சூட்டுகிற திறமைகூட நமக்கு இல்லையே என்று மனம் வருந்தாத கல்நெஞ்சனும்;

Koviloor Digital Library

விளக்கம்:

ஆதி - எல்லாவற்றிற்கும் மூலமானவன்; கோலுதல் - தொடங்குதல்; இலை - இல்லை; கூவிளம் - வில்வம்; தண் - குளிர்ச்சி; நறுமாலை - நல்ல மணமுள்ள மாலை; சூட்ட - அணிவிக்க; வல்லமும் அல்லம் - நமக்குத் திறமையும் இல்லை; முக்காலம் - மூன்றுவேளை; நோவு அறும் - வருந்தாத; கல்லன் - கல்நெஞ்சன். (78)

344. கூர்த்த தீபனங் கூடக் குறுகினர்க்
கார்த் தெதிர்ந் தழையாத வவலனு
மூத்துளார் பிணிமுற்றினர் பற்றிலர்
பார்த்த போது பரிவில் படிறனும்.

கூர்த்த தீபனம் கூடக் குறுகினர்க்கு
ஆர்த்து எதிர்ந்து அழையாத அவலனும்
மூத்து உளார் பிணிமுற்றினர் பற்றுஇலர்
பார்த்த போது பரிவுஇல் படிறனும்.

உரை:

கடும்பசியோடு தன் வீட்டிற்கு வந்தவர்களை எதிர் சென்று உபசார மொழி களைக் கூறி வரவேற்று, அவர்களின் பசி தீர உணவு அளிக்காத பொல்லாதவனும், முதியோர், தீராத நோயளிகள், வறியவர் முதலானோர் தன்னிடம் உதவி நாடி வந்த போது, அவர்களிடம் அன்பு காட்டி உதவாத வஞ்சகனும்;

விளக்கம்:

கூர்த்த - கடுமையான; தீபனம் - பசி; குறுகினர் - அடைந்தவர்; ஆர்த்து - விரைந்து; எதிர்ந்து - எதிர் கொண்டு; அவலன் - பொல்லாதவன்; மூத்து உளார் - முதியோர்; பற்று இலர் - வறியவர்; பரிவு - அன்பு; படிறன் - வஞ்சகன். (79)

345. தன்னிற் றண்ணிய னேவலைத் தக்கதென்
றுன்னிச் செய்யுமறிவி லவூனனு
மென்னெனா தசங்காக்கு மெலியனுந்
துன்னுமாயிடங் காக்குந் தொழிலனும்.

தன்னில் தண்ணியன் ஏவலைத் தக்கது என்று
உன்னிச் செய்யும் அறிவு இல ஊனனும்
என்எனாது அசம்காக்கும் மெலியனும்
துன்னும் ஆயிடம் காக்கும் தொழிலனும்.

Koviloor Digital Library

உரை:

தன்னைவிடத் தாழ்ந்தவன் ஏவுகின்ற வேலைகளைச் செய்கிற அறிவு குறைந்தவனும், ஆடு, எருமைகளை வளர்த்ததால் உண்டாகும் பலன்யாது என்று கருதாமல் அவற்றை மேய்க்கின்ற பாமரனும்;

விளக்கம்:

தண்ணியன் - தாழ்ந்தவன்; **ஏவல்** - சொன்னவேலை; **உன்னி** - எண்ணி; **ஊனன்** - அறிவு குறைந்தவன்; **மெலியன்** - பாமரன்; **ஆயிடம்** - ஆ இடபம், பசு எருதுகள் முதலியன. (80)

346. அச்சமின்றியருவினைக் காடகத்
திச்சை யால் வருந்துன்பமு மெண்ணிடான்
முச்சியே மரக் கோவை முயற்சியாற்
கச்சிடாது கடற் செலுங்கல்லனும்.

அச்சம் இன்றி அருவினைக் காடு அகத்து
இச்சையால் வரும் துன்பமும் எண்ணிடான்
முச்சியே மரக் கோவை முயற்சியால்
கச்சிடாது கடல் செலும் கல்லனும்.

உரை:

பொருளாசையால் பொறுத்தற்கு அரிய பாவச் செயல்களுக்கு அஞ்சாமல், ஆழிகடலின் நடுவில் ஏற்படும் துயரங்களைப் பொருட்படுத்தாமல், மிகமுயன்று மரக்கலம் செய்து அதில் ஏறிப் பயணம் செய்யும் நெஞ்சுரம் உள்ளவனும்;

விளக்கம்:

அருவினை - பாவச் செயல்; **முச்சியே** - மரவேலை செய்து; **மரக் கோவை** - மரக்கலம்; **கச்சிடாது** - வெறுக்காது; **கல்லன்** - துணிந்தவன். (81)

347. அகத்திற் பண்பறுத் தாடகத் தாசையான்
முகத்திற் பண்ணர முகிழ்த்த விதத்துடன்
சகத்திற் காளையர் தம்மை மயக்குவார்க்
குகப்புச் செய்தவடோள் புண ரூனனும்.

அகத்தில் பண்பு அறுத்து ஆடகத்து ஆசையால்
முகத்தில் பண்ணரம் முகிழ்த்த விதத்துடன்
சகத்தில் காளையர் தம்மை மயக்குவார்க்கு
உகப்புச் செய்து அவள் தோள் புணர் ஊனனும்.

Koviloor Digital Library

உரை:

உள்ளத்தில் அன்பு இல்லாமல், பொருளை விரும்பி முகத்தில் சிரிப்பைக் காட்டி, மோகக் குறிப்புகளால் இளைஞர்களை மயக்கி அவர்களை மகிழ்விக்கும் விலைமகளிருக் கிதஞ் செய்து அவரைப் புணரும் தீயவனும்;

விளக்கம்:

அகத்தில் பண்பு - உள்ளன்பு; ஆடகம் - பொன்; முகிழ்த்த - தோன்றிய; சகம் - உலகு; காளையர் - இளைஞர்; உகப்பு - விருப்பம்; ஊனன் - தீயவன். (82)

348. தபதி காருகன் கொல்லன்றனமனர்க்
குபசரிப்ப னென் றொட்டினனூன் வலி
யபகரிக்கும் பிணி யறுப்பானெனு
மிவருங் கூலியருங் கபடெய் திடின்.

தபதி காருகன் கொல்லன் தன மன்னர்க்கு
உபசரிப்பன் என்று ஒட்டினன் ஊன்வலி
அபகரிக்கும் பிணி அறுப்பான் என்னும்
இவரும் கூலியரும் கபடு எய்திடின்.

உரை:

சிற்பி, வண்ணார், கொல்லர், அரசருடைய அணுக்கப்பணி செய்கிறவர், உடல் வலிமையைக் கெடுக்கும் நோயைப் போக்குகின்ற மருத்துவர், கூலியாள் என்ற இந்த ஆறு வகைத் தொழில்களில் வஞ்சகம் செய்தவர்களும்;

விளக்கம்:

தபதி - சிற்பி; காருகன் - வண்ணான், ஈரங்கொல்லி; உபசரிப்பன் - அணுக்கன்; ஊன்வலி - உடலின் வலிமை; பிணி அறுப்பான் - மருத்துவர்; கபடு - வஞ்சனை. (83)

349. வேளை தோறும் வினை செய வேண்டியே
கூலியென்றிரை மெய்க்குக் கொடுத்திடான்
சாலவுண்ணுஞ் சழக்கனுந் தாமத
வேளைமூவைந்தில் பின்னு ணும் வீணனும்.

வேளை தோறும் வினை செயல் வேண்டியே
கூலி என்று இரை மெய்க்குக் கொடுத்திடான்
சால உண்ணும் சழக்கனும் தாமத
வேளை மூஐந்தில் பின் உணும் வீணனும்.

Koviloor Digital Library

உரை:

உழைக்கிற உடல் சோர்வு இல்லாமல் உழைப்பதற்கு, அதற்கு உரிய கட்டணமாபாங்கின் பசி வேளைகளில் மட்டும் உணவு உண்ணாதவனும், அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுகிற அறியாமையுடையவனும், நள்ளிரவில் உணவு உண்கின்ற பயனற்ற இல்லறத்தானும்;

விளக்கம்:

இரை - இரையென்பது பொதுவாக உணவைக்குறித்தாலும், பறவை, விலங்குகளின் உணவையே இரை என்பது மரபு; **மெய்** - உடம்பு; **சால** - மிகுதியாக; **வேளை** - நேரம், பொழுது; **வேளை மூவைந்து** - இது பதினைந்து நாழிகையைக் குறிக்கும். ஒரு நாழிகை, இருபத்து நான்கு நிமிடங்கள் கொண்ட கால அளவு. பதினைந்து நாழிகை என்றால் ஆறுமணி நேரம். மாலை ஆறு மணி முதல் பதினைந்து நாழிகை நேரத்தைக் கணக்கிட்டால் நள்ளிரவு பன்னிரண்டு மணி ஆகும். அந்த நேரம் உறங்குவதற்குரியது; அது உண்பதற்கு உரிய நேரம் அன்று. வீட்டிலுள்ளவர்கள் எல்லாரும் முன்னிரவில் இரவு எட்டு மணிக்கு முன்பே உணவு உட்கொள்வது உடல் நலத்திற்கு உகந்தது. (84)

350. ஆறிலொன்று கடமை கொள்ளாததி
னேறவே கொளுமீடிலிறைவனு
மூறு செய்திடுவானு முலகினை
வேறு வேறுதன் னேவல் விதத்தினும்.

ஆறில் ஒன்று கடமை கொள்ளாது அதில்
ஏறவே கொள்ளும் ஈடுஇல் இறைவனும்
ஊறு செய்திடுவானும் உலகினை
வேறு வேறுதன் ஏவல் விதத்தினும்.

உரை:

தன் குடிமக்களான உழவர்களிடம் அவர்களுக்குக் கிடைத்த நெல்லில் ஆறில் ஒரு பகுதியை மட்டும் வரியாகப் பெறாமல் அதற்கும் அதிகமாக வாங்கி, அரசனாக இருப்பதற்கு உரிய தகுதியை இழந்தவனும், தன் ஆணையால் படையினராலும், அதிகாரிகளாலும் தன்நாட்டு மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் கொடுங்கோலனும்;

விளக்கம்:

கடமை - அரசனுக்குச் செலுத்த வேண்டிய வரி. இது காகித நாணயமுறை ஏற்படாத பண்டமாற்றுக் காலத்தில் உழவுத் தொழிலே உயர்ந்த தொழிலாக இருந்தது. அரசன், நில உரிமையாளருக்குக் கிடைத்த மொத்த நெல் மணிகளை

Koviloor Digital Library

ஆறுபங்குகளாகப் பிரித்து, அதில், ஒரு பங்கைத் தனக்கு உரிய வரியாகப் பெறுவான். இதுவே ஆறில் ஒரு கடமை என்று அழைக்கப்பட்டது.

ஈடு இல் இறை - கொடுங்கோல் அரசன், அரசன் என்பதற்கு உரிய தகுதியை இழந்துவிடுகிறான். (85)

351. இத்தகைத்த விறைவனிருநிதி
வைத்திடாது கவரக்கருதிய
சித்தமேவிடச் சென்றிரந்தே கொளும்
பொய்த் தவம் புரிபூசுரன் றானுமே.

இத்தகைத்த இறைவன் இருநிதி
வைத்திடாது கவரக் கருதிய
சித்தம் மேவிடச் சென்று இரந்தே கொள்ளும்
பொய்த் தவம்புரி பூசுரன் தானும் ஏ.

உரை:

முன் சொன்ன கொடுங்கோல் மன்னனிடம் உள்ள பெருஞ் செல்வப் பொருளை ஆகாது என வெறுக்காமல், பொருளாசையால் அம்மன்னனை வணங்கி, வாழ்த்தி, புகழ் மொழிகள் பேசி, யாசகம் பெறும், மெய்த்தவம் இல்லாத போலிப் பிராமணனும்; ஏ - அசை.

விளக்கம்:

பூசுரன் - பூவுலகத் தேவன், இது பழங்காலச் சிவ ஒழுக்கமுடைய பிராமணனைக் குறிக்கும். ''பூசுரன் ஞான சம்பந்தன்'' என்று திருஞான சம்பந்தர் தம்மைக் குறிப்பிடுகிறார். (86)

352. சோரன் றன்னைத்துயக்க மனத்தினாற்
சோரனன்றென நீக்குந் துரிசனுஞ்
சோரனல்லனைச் சூழ்ச்சியிழப்பினாற்
சோர னென்று துணித்திடுந் துட்டனும்.

சோரன் தன்னைத் துயக்க மனத்தினால்
சோரன் அன்று என நீக்கும் துரிசனும்
சோரன் அல்லனைச் சூழ்ச்சி இழப்பினால்
சோரன் என்று துணித்திடும் துட்டனும்.

உரை:

நன்கு ஆராயாமல் உண்மையான கள்வனைக் கள்வன் அல்லன் என்று

Koviloor Digital Library

விடுவிக்கும் பொல்லாத ஆட்சியாளனும், நன்றாக விசாரித்து உண்மையை அறியும் திறன் இல்லாமையால், குற்றம் அற்ற ஒருவனைக் கள்வன் என்று கருதிக் கொல்விக்கும் கொடிய ஆட்சியாளனும்;

விளக்கம்:

சோரன் - திருடன்; துயக்கம் - அறிவு மயக்கம்; துரிசன் - பொல்லாதவன்; சூழ்ச்சி - ஆராய்வு; (87)

353. சோரனுக்குத் துணை செலுந் துட்டனுஞ்
சோர வித்தைகள் சொல்லுந் துரிச னுஞ்
சோரனைச் சோரனென்ற றிந்துந் துனுஞ்
சோரனு மவரைச் சுளியானுமே.

சோரனுக்குத் துணை செலும் துட்டனும்
சோரவித்தைகள் சொல்லும் துரிசனும்
சோரனைச் சோரன் என்று அறிந்து துன்னும்
சோரனும் அவனைச் சுளியானும் ஏ.

உரை:

திருடன் திருடச் செல்லும் போது அவனுக்குத் துணையாகச் சென்ற தீயவனும், அத்திருடனுக்குக் களவு நூலைக் கற்பிக்கும் பொல்லாதவனும், ஒருவனைத் திருடன் என்று தெரிந்த பின்னரும் அவனோடு தோழமை கொள்கின்ற திருடனும், திருடனைப் பார்த்த போது, நீ இந்தத் திருட்டுத் தொழிலைச் செய்யாதே என்று அவனைக் கண்டிக்காதவனும்;

விளக்கம்:

துட்டன், துரிசன் - இவை தீயவனைக் குறிக்கும்; சோர வித்தை - களவு நூல்; துன்னுதல் - நட்புக் கொள்ளுதல்; சுளித்தல் - கோபித்தல்; ஏ - அசை. (88)

354. ஏந்திளந்தடங் கொங்கையை யின்புறுங்
காந்தனீங்கவக் காரிகை தோளிணை
தோய்ந்த சோரனைத் தொட்டுத் துயர் செயா
வேந்தனும் மனைச் சோரனில் வேறலன்.

ஏந்து இளம் தடங் கொங்கையை இன்புறும்
காந்தன் நீங்க அக் காரிகை தோள் இணை
தோய்ந்த சோரனைத் தொட்டுத் துயர் செய்யா
வேந்தனும் மனைச் சோரனில் வேறு அலலன்.

Koviloor Digital Library

உரை:

அணிகலன்களைத் தாங்கிய பெரிய முலைகளையுடைய இளம் பெண்ணைக் கூடி மகிழ்ந்த கணவன் ஊரில் இல்லாத போது திருட்டுத் தனமாக வீட்டினுள் புகுந்து அப்பெண்ணைக் கற்பழித்த கயவனைப் பிடித்து, அவன் துன்புறும்படி தண்டிக்காத அரசனும் அப்பெண்ணைக் கெடுத்த காமுகனுக்கு ஒப்பானவனும்;

விளக்கம்:

ஏந்து - அணிகலன் தாங்கிய; தடங் கொங்கை - பருத்த முலை; காந்தன் - கணவன்; காரிகை - இளம் பெண்; தோய்ந்த - புணர்ந்த; சோரன் - திருடன்; மனை - இங்கு மனைவியைக் குறிக்கறது.

தமிழகம் தமிழ் மன்னர்களால் ஆளப்பட்ட காலத்தில் இரவு வேளையில் திருட்டு, கற்பழிப்புப் போன்ற குற்றங்கள் நிகழாதபடி ஊர் காவலர் ஊரைக் கண்காணிப்பர். திருட்டு, கொள்ளை, கற்பழிப்புப் போன்ற குற்றங்களைச் செய்தவர்கள் பிடிபட்டால், அவர்களின் தலைகள் துண்டிக்கப்படும். அந்த அரச நீதியை இப்பாடல் குறிப்பிடுகிறது. (89)

355. பாலை நெய்யைப் பலத்தைத் திலத்தினைச்
சாலி யாதியன்னாதியைத் தண்புனன்
மூலமாதி முதிரையிறுதியைச்
சேலையோடு பட்டாடை திருடனும்.

பாலை நெய்யைப் பலத்தைத் திலத்தினைச்
சாலி ஆதி அன்ன ஆதியைத் தண் புனல்
மூலம் ஆதி முதிரை இறுதியைச்
சேலையோடு பட்டாடை திருடனும்.

உரை:

பால், நெய், பழம், எள், செந்நெல் முதலிய தானியங்கள், சோறு கறி முதலான உணவுகள், கிழங்குகள், துவரைமுதலான பயறு வகைகள், நூல் புடைவை, பட்டாடைகள் ஆகியவற்றைத் திருடும் திருடனும்,

விளக்கம்:

பலம் - பழம்; திலம் - எள்; சாலி - செந்நெல்; மூலம் - கிழங்கு; முதிரை - துவரம் பருப்பு. (90)

Koviloor Digital Library

356. பரியகம்பளந் தன்னையும் பாசமும்
வரியவூனு மதுவுந் தயிலமுந்
திரண மீது செறிந்த சில் பண்டமுங்
கரமுறப்பற்றிக் கொண்டிடுங் கள்வனும்.

பரிய கம்பளம் தன்னையும் பாசமும்
வரியவூனும் மதுவும் தயிலமும்
திரணம் மீது செறிந்த சில் பண்டமும்
கரம் உறப்பற்றிக் கொண்டிடுங்கள்வனும்.

உரை:

பெரிய கம்பளி, கயிறு, விலக்கப்பட்ட இறைச்சி, கள், எண்ணெய், செத்தைகளில் கிடந்த பொருள்கள் ஆகியவற்றைக் கைகளால் பற்றி எடுத்துச் செல்லும் திருடனும்;

விளக்கம்:

பாசம் - கயிறு; ஊன் - இறைச்சி; திரணம் - செத்தை. (91)

357. சத்திரந் தனைப் பாதுகை தன்னையும்
வித்தரித்திடும் பாயின் விதத்தையுங்
கொத்துலா மலர்க் கூடையும் பேழையு
மத்த முட்டி யெடுக்கு மவலனும்.

சத்திரம் தனைப் பாதுகை தன்னையும்
வித்தரித்திடும் பாயின் விதத்தையும்
கொத்துலாம் மலர்க் கூடையும் பேழையும்
மத்தம் முட்டி எடுக்கும் அவலனும்.

உரை:

(திருமடத்திற்கு உரிய) கத்தி, பாதக்குறடு, தரையில் விரிக்கப்படுகிற பலவகைப் பாய்கள், பூக்கொத்துகள் வைக்கப்படும் பூக்கூடை, பெட்டி ஆகிய பொருள்களை வெறிகொண்டு எடுத்துச் செல்லும் பொல்லாதவனும்;

விளக்கம்:

சத்திரம் - கத்தி; பாதுகை - சைவத் துறவிகள் பயன்படுத்துகிற, மரத்தால் செய்யப்பட்டுள்ள பாத அணி, பாதக் குறடு; பேழை - பெட்டி; வித்தரித்தல் - விரித்தல்; மத்தம் - வெறி. (92)

Koviloor Digital Library

358. சங்கமாதி சலத்திற்சனித்தவும்
வங்கமாதி மரத்தின் வகுத்தவும்
மங்கலத்தமழலை முழவமு
மங்கையாற் பற்றிக் கொள்ளுமவலனும்.

சங்கம ஆதி சலத்தில் சனித்தவும்
வங்கம் ஆதி மரத்தில் வகுத்தவும்
மங்கலத்த மழலை முழவமும்
அங்கையால் பற்றிக் கொள்ளும் அவலனும்.

உரை:

கடல் நீரில் பிறந்த சங்கு; மரத்தால் செய்யப்பட்ட மரக்கலம் முதலியன; மங்கள இசைக்கருவியான மத்தளம் ஆகியவற்றைத் திருடும் கள்வனும்;

விளக்கம்:

சங்கம் - சங்கு; வங்கம் - மரக்கலம்; முழவம் - மத்தளம். (93)

359. ஈயந்தன் னையிரும்பினைச் செம்பினைத்
தேயனுந்திரபுத்தனைச் செங்கலை
மாய வாழ்க்கையர் தங்கண் மனையினு
மேயு மேது மெடுக்கு மிழுதையும்.

ஈயம் தன்னை இரும்பினைச் செம்பினைத்
தேயனும் திரபுத்தனைச் செங்கலை
மாய வாழ்க்கையர் தங்கள் மனையினும்
ஏயும் ஏதும் எடுக்கும் இழுதையும்.

உரை:

ஈயம், இரும்பு, செம்பு, தகரம் ஆகியவற்றாலான பொருள்களைத் திருடுகிற கள்வனும், செங்கற்களையும் பிறரை மயக்கி வாழும் விலை மாதர் வீட்டில் கிடக்கிற பொருளையும் எடுக்கின்ற முட்டாளும்;

விளக்கம்:

தேயன் - ஸ்தேயன், கள்வன்; திரபு - தகரம்; மாயவாழ்க்கையர் - வேசியர்; இழுதை - மூடன். (94)

Koviloor Digital Library

360. பிறர் பொருட் கடுகிற் பிளவாயினு
மறைய நின்றதனைக் கொளும் வஞ்சனு
நிறையறக் கொள வெண்ணிடு நெஞ்சனு
மறையுமாதனு மன்னியர்க்காகவே.

பிறர் பொருள் கடுகில் பிளவு ஆயினும்
மறையநின்று அதனைக் கொள்ளும் வஞ்சனும்
நிறை அறக் கொள்ள எண்ணிடும் நெஞ்சனும்
அறையும் ஆதனும் அன்னியர்க்கு ஆகவே.

உரை:

பிறருக்கு உரிய பொருள் கடுகில் பாதி அளவாக இருந்தாலும் உரியவர் அறியாதபடி அதனை எடுக்க நினைக்கிற கபடனும், முறை தவறிப் பிறர் பொருளைக் கவர எண்ணுகின்ற உள்ளமுடையவனும், ஒருவருடைய பொருளைப் பிறர் கொள்ள வழி சொல்லுகிறவனும்;

விளக்கம்:

நிறை - ஒழுங்குமுறை; அறையும் - சொல்லும்; ஆதன் - அறிவிலி. (95)

361. என்னுமித் தொகையாவருமீங்கியற்
பன்னு பாவக் கடலிடைப் பட்டுளா
ரின்னபேதத்துரிசுமியற்றிடிற்
பின்னுவார் குழற் பேதையர் தாமுமே.

என்னும் இத் தொகை யாவரும் ஈங்கு இயல்
பன்னும் பாவக் கடல் இடைப் பட்டுஉள்ளார்
இன்ன பேதத் துரிசும் இயற்றிடில்
பின்னுவார் குழல் பேதையர் தாமும் ஏ.

உரை:

இவ்வாறு தொகுத்துச் செல்லப்பட்ட இப்பாவ வகைகளில் அடங்கியவர் அனைவரும் துணைப் பாதகத்துக்கு நெருக்கமான பாவிகள் ஆவர். நீண்ட கூந்தலை வாரிப் பின்னி முடித்துக் கொள்ளும் மங்கையர் முன் சொன்ன பாவங்களைச் செய்திருந்தால், அவர்களும் பாவியரே ஆவர்.

விளக்கம்:

பன்னும் - சொல்லும்; தொகை - தொகுத்துச் சொல்லியது; ஏ - அசை.(96)

Koviloor Digital Library

362. ஈட்டுமிந்த வினைத் தொகையாவையு
மீட்டிடும்படி வெய்ய நமன்றமர்
காட்டிடுந் துயராக்கை கலந்து போய்
வாட்டுமா நிரயத்துள் வதிவரே.

ஈட்டும் இந்த வினைத் தொகை யாவையும்
மீட்டிடும் படி வெய்ய நமன்தமர்
காட்டிடும் துயர் ஆக்கை கலந்து போய்
வாட்டும் மாநிரயத்துள் வதிவர் ஏ.

உரை:

மக்களின் தீய செயல்களால் உண்டான பாவங்கள் அகலும்படி எமனுடைய தூதுவர், பாவிகளுக்கு நரக அனுபவம் பெறுதற்குரிய உடலை அளித்து அவர்கள் நரகத் துன்பம் அடையும்படி செய்வர்.

விளக்கம்:

ஈட்டும் - தேடிய; வினை - பாவம்; நிரயம் - நரகம்; வதிவர் - தங்குவர்; ஏ - அசை. (97)

363. மைந்தர் மாதரு மற்றையலியுமோ
பந்தபாச விலங்கும் பறவையு
முந்த வாக்கையிது வெனமுன்னுறு
மந்தவாக்கையடைந் தகன் றாழுமே.

மைந்தர் மாதரும் மற்றை அலியுமோ
பந்தம்பாச விலங்கும் பறவையும்
முந்த ஆக்கை இது என முன் உறும்
அந்த ஆக்கை அடைந்து அகன்று ஆழும் ஏ.

உரை:

ஆடவர், மகளிர், ஆடவரும் மகளிரும் அல்லாத பேடிவடிவத்தினர் என்ற மூன்று வகையினரும், தங்களின் பாவச் செயல்களுக்கு ஏற்ப நரகத் துன்பங்களை அனுபவிப்பது போல, பறவைகளும், விலங்குகளும் கூட அவை செய்த தீய செயல்களுக்குத் தக்கபடி அவை இறந்த பிறகு, நரக அனுபவம் பெறுவதற்கு உரிய உடல்களைப் பெற்று நரகத் துன்பங்களை நுகரும்.

விளக்கம்:

மைந்தர் - ஆடவர்; அலி - ஆண்பேடி; ஆக்கை - உடம்பு; ஏ - அசை.(98)

Koviloor Digital Library

364. விண்ணுளார் நரர்மற்றை விலங்குமே
பண்ணு பாவ பலத்தைக் கொடுப்பவன்
றிண்ணமேயமன் தேசிகன்றீர்த்திடும்
பண்ணிற் பாவவிதஞ் சிவபத்தரும்.

விண் உள்ளார் நரர் மற்றை விலங்குமே
பண்ணும் பாவ பலத்தைக் கொடுப்பவன்
திண்ணமேயமன் தேசிகன் தீர்த்திடும்
பண்ணில் பாவ விதம் சிவபத்தரும்.

உரை:

தேவர்களும் மனிதர்களும் விலங்குகளும் செய்த தீய செயல்களுக்கு ஏற்ற பலன்களை யமன் அளிப்பான். இவ்வாறே, சிவனடியார்களின் செயல்களால் உண்டான பாவ வகைகளைச் சிவஞானிகளாகிய குருமார் நீக்குவர்.

விளக்கம்:

நரர் - மாந்தர்; திண்ணம் - உறுதி; சிவபத்தர் - சிவனடியார், பண்ணில் - செய்தால்; தேசிகன் - ஞான உபதேசம் செய்தகுரு. (99)

365. பிணக்கந் தன் னையும்பெற்றவர் தம்மிடைக்
கணக்கிலாரையுங் கள்வர்க டம்மையும்
வணக்குவான் மன்னன் மற்றையர் தங்களை
யிணக்குவா னரகத்து ளியமனே.

பிணக்கம் தன்னையும் பெற்றவர் தம்மிடைக்
கணக்கிலாரையும் கள்வர்கள் தம்மையும்
வணக்குவான் மன்னன் மற்றையர் தங்களை
இணக்குவா னரகத்துள் இயமனே.

உரை:

தவறான வழக்கைத் தொடுத்தவருக்கும் திருடருக்கும் அரசன் தண்டனை வழங்குவான். அரச தண்டனையிலிருந்து தப்பியவர்களுக்கும், தம் ஞானாசிரியரால் பாவங்கள் நீக்கப்படாத அடியவருக்கும் யமனே நரக தண்டனையை அளிப்பான். (100)

366. ஆதலாற் செய்த தீங்கை யறுத்திட
வேதமாதி விதியும் விளங்கிய
போதகன் பதம் போற்ற வவன் செயும்
வாதியாத பிரத்திய வாயமே.

Koviloor Digital Library

ஆதலால் செய்த தீங்கை அறுத்திட
வேதம் ஆதி விதியும் விளங்கிய
போதகன் பதம் போற்ற அவன் செய்யும்
வாதியாத பிரத்திய வாயம் ஏ.

உரை:

ஆதலால் செய்த பாவங்களைப் போக்குவதற்கு வேத சிவாகம உண்மைகளை உணர்ந்த ஞானாசிரியரின் திருவடிகளைப் பற்றிக் கொள்ள வேண்டும். அவ்வாறு பற்றிக் கொண்ட அடியவரை, அவர் செய்த பாவத்தின் பலன் வருத்தாதபடி குருபிரான் தேவையான பரிகாரங்களைச் செய்து காப்பாற்றுவார்.

விளக்கம்:

வேதம் ஆதி - வேதம், சிவாகமம்; போதகன் - ஞானாசிரியன்; வாதியாத - வருத்தாத; பிரத்தியவாயம் - குற்றபரிகாரம்; ஏ - அசை. (101)

367. அதிபாதக மும‌திற் பிரிவு
மவல மகாபாதக மைந்துங்
கதித மகபாதகந் தன்னிற்
கனிட்டமான பாதகமு
மதனிற்றணிய வதற்கணிய
வுபபாதகமு மதற்கணிய
வதனிற் றணிய பலபாவ
விதமுந் தொகை செய் தறைந்தாமே.

அதிபாதகமும் அதில் பிரிவும்
அவலமகாபாதக ம்ஐந்தும்
கதித மகபாதகம் தன்னில்
கனிட்டமான பாதகமும்
அதனில் தணிய அதற்கு அணிய
உபபாதகமும் அதற்கு அணிய
அதனில் தணிய பலபாவ விதமும்
தொகை செய்து அறைந்தாம் ஏ.

உரை:

பெரும் பாவங்கள் அப்பெரும் பாவங்களின் வகைகள், துன்பத்தை விளைவிக்கும் ஐம்பெருங்குற்றங்கள், அவற்றிற்கு நெருக்கமான பாவங்கள் அந்தப் பாவங்களுக்கு அடுத்த நிலையில் உள்ள பலபல பாவங்களையும் தொகுத்துச் சொன்னோம். (102)

Koviloor Digital Library

368. என்று சிவநிந்தை யெழுவாய் வினையிசைத்தான்
குன்றுவர் மடக் கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்றுபுல னைந்தினையும் வெய்ய வினைநைய
நின்ற முனியன்றுணர நிற்குண னினைந்தே.

என்று சிவநிந்தை எழுவாய் வினை இசைத்தான்
குன்றுவர் மடக்கொடி தனக்கு அருள் கொடுத்தான்
வென்றுபுலன் ஐந்தினையும் வெய்ய வினை நைய
நின்றமுனி அன்று உணர நிர்க்குணன் நினைந்து ஏ.

உரை:

மாலையில் வாழும் வேடுவர் தலைவன் நம்பிராசன் திருமகளான இளமையும் மென்மையான உடலமைப்பும் கொண்ட வள்ளி நாயகிக்கு அருள் செய்த தூய கந்தப் பெருமான், கொடிய தீவினை கெடுமாறு மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளையும் அடக்கிய அகத்தியன் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணி, சிவநிந்தனை முதலான பாவச் செயல்களின் வகைகளை விளக்கமாக உரைத்தான்.

விளக்கம்:

நிந்தை - பழிப்பு; எழுவாய் - முதல், தொடக்கம்; குன்றுவர் - வேடர்; மடக்கொடி - மடம் கொடி - இளமையும் கொடி போன்ற மெல்லிய உடலமைப்பும் கொண்ட வள்ளியம்மை; வெய்ய - கொடிய; நைய - கெட; நிர்க்குணன் - கந்தப் பெருமான். (103)

சிவபெருமான் துதி

369. கன்றிய காலனைக் காய்ந்தவனே
கரிசினைப் போக்கிருக் காய்ந்தவனே
வென்றிவில் வேடனை வீட்டினனே
விரும்படி யார்க்கருள் வீட்டினனே
யன்றிருவர்க் கரிதாயவனே யண்டமு
மாக்கிய தாயவனே
யொன்றிய வெங்கணு முற்றவனே.
யுணர்ந்தன னுன்னையு முற்றவனே.

கன்றிய காலனைக் காய்ந்தவனே கரிசினைப்
போக்கி இருக்கு ஆய்ந்தவனே
வென்றி வில்வேடனை வீழ்த்தினனே
விரும்பு அடியார்க்கு அருள் வீட்டினனே

Koviloor Digital Library

அன்று இருவர்க்கு அரிது ஆயவனே
அண்டமும் ஆக்கிய தாயவனே
ஒன்றிய எங்கணும் உற்றவனே
உணர்ந்தனன் உன்னையும் முன்தவனே.

உரை:

மார்க்கண்டனைக் கோபித்த யமனை உதைத்து வீழ்த்தியவனே! அடியவர்களுடைய குற்றங்களை அகற்றி வேதத்தை ஆராய்ந்தவனே! கரும்பு வில்லை ஏந்திய காமனை அழித்தவனே! உன்னை விரும்புகின்ற அடியவர்க்கு முத்தியாகிய வீட்டை அருள்பவனே! முன்பு பிரமனும் விஷ்ணுவும் காணுவதற்கு அரியவனாக நின்றவனே! உலகைப் படைத்த தாயாக விளங்குபவனே! எல்லாப் பொருள்களிலும் நீக்கம் இல்லாமல் பொருந்தியிருப்பவவனே! எல்லா உயிர்களுக்குள்ளும் உயிராக இருந்து ஒவ்வொருவர் எண்ணத்தையும் உணரும் தவமுடையவனே!

விளக்கம்:

கன்றிய - கோபித்த; காலன் - யமன்; காய்ந்த - வீழ்த்திய; கரிசு - குற்றம்; இருக்கு - வேதம்; வென்றி - வெற்றி; வில் - கரும்புவில்; வேடன் - இது மன்மதனைக் குறிக்கிறது;

இருவர் - பிரமன், விட்டுணு ஆகிய இருவர்; அண்டம் - உலகம்; ஆக்குதல் - படைத்தல்; ஒன்றிய - பொருந்திய; எங்கணும் - எங்கும். (104)

சிவபிரான் துதி

370. இடுபலி கொண்டுணியென்பவனே
யிருவினை தீர்த்திடு மென்பவனே
நடநவிலுந் தொழினல்லவனே
நாசமுமா மயனல்லவனே
மடலவிழ் கொன்றைய மாலையனே
வந்தனையாஞ் செயுமாலையனே
படிதனிற் காசிப் பதியவனே
பல்லுயிர்க் கெல்லாம் பதியவனே.

இடுபலி கொண்டு உண்ணி என்பவனே
இருவினை தீர்த்திடும் என்பவனே
நடம் நவிலும் தொழில் நல்லவனே
நாசமும் ஆம்அயன் அல்லவனே

Koviloor Digital Library

மடல் அவிழ் கொன்றைய மாலையனே
வந்தனையாம் செய்யும் ஆலையனே
படி தனில் காசிப் பதியவனே
பல்லுயிர்க்கு எல்லாம் பதியவனே.

உரை:

தாருக வனத்துப் பெண்கள் இட்ட பிச்சை உணவைப் பெற்று உண்கின்றவன் என்று சொல்லப்படுகிறவனே! நல்வினை தீவினைகளை நீக்கும் என் இறைவனே! பிறந்து இறக்கும் பிரமன் அல்லாதவனே! இதழ் விரிந்த கொன்றைப் பூ மாலையைச் சூடியவனே! யாம் வணங்கும் திருக்கோயிலில் எழுந்தருளியவனே! கங்கையாற்றங் கரையில் உள்ள காசிப்பதியை உடையவனே! பலவகைகளாக உள்ள உயிரினங் களுக்கு எல்லாம் தலைவனாக உள்ளவனே!

விளக்கம்:

இடுபலி - இடப்பட்ட பிச்சை உணவு; **உண்ணி** - உண்பவன்; **என்பவன்** - என்று சொல்லப்படுகிறவன்; **இருவினை** - நல்வினை தீவினைகள்; **நடம் நவில்** - கூத்து ஆடும்;

நாசமும் ஆம் - பிறந்து இறந்து போகிற; **அயன்** - பிரமன்; **மடல் அவிழ்** - இதழ் விரிந்த, மலர்ந்த; **வந்தனை** - வழிபாடு; **படி** - தரை, நிலம்;

காசிப்பதி - வடஇந்தியாவில் கங்கையாற்றங்கரையில் விசுவநாதர் எழுந்தருளியுள்ள புண்ணியத் திருப்பதி. இங்கு விசுவநாதர் சிவலிங்க வடிவில் உள்ளார். விசுவநாதர் என்பது சிவபிரானைக் குறிக்கும். அம்மையை அன்ன பூரணி அல்லது விசாலாட்சி என்பர். **பதி** - தலைவன். (105)

சிவபிரான் துதி

371. பூதிபூடணன் வேதபாடணன் பூளை
சூடினன் காளியூடினன்
ஆதிநாயகன் பேதைநாயக னாமை
பூணினன் வாய்மை பேணினன்
போதன் மாதவனூடி நேடவும்
பூணவே னயங்கா ணொணாவரன்
காதன் மாமகனாறு மாமுகன்
காசில் வாசகம் பேசுவாமரோ.

பூதிபூடணன் வேதபாடணன் பூளை
சூடினன் காளி ஊடினன்
ஆதிநாயகன் பேதை நாயகன் ஆமை
பூணினன் வாய்மை பேணினன்

Koviloor Digital Library

போதன் மாதவன் ஊடிநேடவும்
பூணவே நயம் காண ஒண்ணாத அரன்
காதல் மாமகன் ஆறு மாமுகன்
காசுஇல் வாசகம் பேசுவாம் அரோ.

உரை:

திருநீற்றை அணிகலனாகக் கொண்டவனும், திருமுறைகளை அருளியவனும், பூளைப் பூவைத் திருச்சடையிலே சூடியவனும், காளியோடு வாதுசெய்தவனும், உலகிற்கு மூலமான தலைவனும், உமையம்மையின் கணவனும், ஆமையோட்டை அணிகலனாகப் பூண்டவனும், சிவாகம உண்மைகளைக் காப்பவனும், பிரமனும் விஷ்ணுவும் தேட நின்றவனும், கண்களிற் பொருந்தும் வண்ணம் தன் தன்மையைக் காணமுடியாதவனாக உள்ளவனுமாகிய சிவபிரானுடைய அன்புக்கு உரிய பெருமை பொருந்திய மைந்தனான ஆறுமுகப் பெருமானின் குற்றமில்லாத திருமொழிகளைப் புகழ்கின்றோம்.

விளக்கம்:

பூதிபூடணன் - திருநீறுதரித்தவன்; **பாடணம்** - போதனை; **ஆதி** - மூலம்; **நாயகன்** - தலைவன்; **ஊடினன்** - பிணங்கியவன்; **பேதை** - உமையம்மை; **ஆமை** - இது ஆமையோட்டைக் குறிக்கிறது. ''என்பொடு கொப்பொடு ஆமை இவை மார்பு இலங்க'' *(திருஞானசம்பந்தர் திருமொழி - கோளறுபதிகம்)*

போதன் - தாமரைப் பூவில் இருக்கும் பிரமன்; **போது** - தாமரைப் பூ; **ஊடி** - பிணங்கி; **காதல்** - அன்பு; **காசு** - குற்றம்; **வாசகம்** - உரை. (106)

அகத்தியன் துதி

372. ஆறு சூடினன் நீறும் ஆடினன்
ஆலநீழலன் மூலஞாழலன்
ஏறதேறினன் கூறு கூறையன்
ஈறிலாதவன் தேறிலாதவன்
மாறிலாவரன் வேறிலாவரன் வாய்மைபேசினன்
தீமை கூசினன்
கூறு மாகமம் தேறு மாதவன்
கோயிலாவ தென் கோவு நாவுமே.

ஆறு சூடினன் நீறும் ஆடினன்
ஆலநீழலன் மூலஞாழலன்
ஏறு அது ஏறினன் கூறு கூறையன் ஈறு
இலாதவன் தேறு இலாதவன்

Koviloor Digital Library

மாறுஇலாவரன் வேறு இலாவரன் வாய்மை
பேசினன் தீமை கூசினன்
கூறும் ஆகமம் தேறும் மாதவன்
கோயில் ஆவது என்கோவும் நாவும் ஏ.

உரை:

கங்கையை அணிந்தவனும், உடல் முழுவதும் திருநீறு பூசியவனும், ஆலமர நிழலில் அமர்ந்தவனும், ஞாழல் மரத்தின் அடியில் இருந்தவனும், எருதை ஊர்தியாக உடையவனும், கிழித்த கோவணத்தை ஆடையாகக் கொண்டவனும், அழிவு இல்லாதவனும், குற்றமற்றவனும், ஆராய்ந்தால் எல்லாவற்றையும் விளக்கும் அறிவு ஞாயிறாக விளங்குகிறவனும், வணங்கிய அன்பர்களுக்கு மாறாத வரத்தை அளிப்பவனும், பக்குவம் உடையவர்களுக்குச் சிவாகம உண்மைகளை உணர்த்துகிறவனும், தன்னைப் புகலாக அடைந்தவர்க்குத் தீமை செய்ய நாணுகிறவனுமாகிய சிவபிரான் அருளிய மேலான ஆகமங்களை உள்ளபடி அறிந்த பெரிய தவத்தையுடைய அகத்திய முனிவனுக்கு என் கண்ணும் நாவுமே எழுந்தருளும் திருக்கோயில் ஆகும்.

விளக்கம்:

ஆறு - கங்கை; நீறும் ஆடினன் - நீறாடி என்பது சிவனுக்கு உரிய ஒரு பெயர்; ஆல நீழலன் - ''அன்று ஆலின் கீழிருந்து அறம் உரைத்தான் காணேடி'' என்று *திருவாசகம்* கூறுகிறது. கூறு - கிழிக்கப்பட்ட; கூறை - ஆடை; இது கோவணத்தைக் குறிக்கிறது. கோ - கண்; ஏ - அசை. (107)

Koviloor Digital Library

ஏழாவது

சுவர்க்க நரக இயல்

இந்த இயல் புண்ணிய பாவங்களைச் செய்தவர்கள் அடையும் சுவர்க்க நரகங்களின் இயல்புகளை விவரிக்கிறது.

உலக மதங்கள் அனைத்தும் புண்ணியம் செய்யத் தக்கது. பாவம் விலக்கத் தக்கது என்றே கூறுகின்றன. 'புண்ணியம் ஆம் பாவம் போம்':

''அறச் செயல்கள் ஆக்கத்தையே தரவல்லன; பாவச் செயல்கள் அழிவினையே உண்டாக்க வல்லன. அவ்வாறான செயல்களை முற்பிறப்பில் செய்ததன் விளைவாகவே இப்பிறப்பில் மானிடராய் நிலத்தில் பிறந்து இன்ப துன்பங்களை அனுபவிக்கிறீர்கள் என்பதை உணர்வீர்களாக. அவ்வுண்மையை உணர்ந்ததனால்தான் பாவம் செய்யாதீர்கள்; புண்ணியத்தையே நாடுவீர்களாக என்று எல்லாச் சமயங்களும் கூறுகின்றன.'' என்பது அவ்வையாரின் அருளுரை.

'புண்ணியம் ஆம்பாவம்போம் போனநாள் செய்தஅவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் - எண்ணுங்கால்
ஈதுஒழிய வேறு இல்லை எச் சமயத்தோர் சொல்லும்
தீது ஒழிய நன்மை செயல். *(நல்வழி - 31)*

ஒவ்வொருவரும் அவரவர் செய்த செயல்களின் பயனை அனுபவித்தே தீர வேண்டும், புரோகிதனுக்குப் பொருள் கொடுத்தோ பூசாரிக்குப் பணம் தந்தோ பாவங்களைப் போக்க இயலாது.

''தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினையறுப்பான். அவனவன் செல்லும் வழியிலும், செய்த செயலிலும் வருகிற பலன்களை அவனவனே அடைந்து தீரவேண்டும். இதற்காகப் பிறர் என்ன செய்ய இயலும்? ஊரே கூடினும் ஒன்றும் செய்ய இயலாது.'' இதுவும் அவ்வையாரின் அருள்மொழி.

Koviloor Digital Library

'தாந்தாமுன் செய்தவினை தாமே அனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே - வேந்தே
ஒறுத்தாலும் என் செயலாம் ஊரெல்லாம் ஒன்றா
வெறுத்தாலும் போமோ விதி.' *(நல்வழி - 30)*

373. அறைந்தவதி பாதகமாதி
யடைந்தாரிய மனுலகதனைச்
செறிந்து சிவந்த விழிகண்டு
சித்தங் கலங்கிச் செயலழிந்து
பிறிந்து புணர்ந்து பிலவழியைப்
பிடித்துத் தூதரடித் தெறிய
மறிந்து நிரயக் குழி வீழ்ந்து
வருந்தும் விதத்தை வகுப்பதன்முன்.

அறைந்த அதிபாதகம் ஆதி
அடைந்தார் இயமன் உலகு அதனைச்
செறிந்து சிவந்த விழிகண்டு
சித்தம் கலங்கிச் செயல் அழிந்து
பிறிந்து புணர்ந்து பிலவழியைப்
பிடித்துத் தூதர் அடித்து எறிய
மறிந்து நிரயக் குழி வீழ்ந்து
வருந்தும் விதத்தை வகுப்பதன்முன்.

உரை:

முந்திய இயலிற் கூறிய பெரும்பாவங்கள் முதலான பாவ வகைகளைச் செய்தவர்கள், எமன் உலகிற்குப் போய் அவனுடைய கோபத்தாற் சிவந்த கண்களைக் கண்டு, மனங்கலங்கிச் செயலற்று, சுவர்க்கத்திற்குச் செல்லும் வழியை விட்டு, நரகத்திற்குச் செல்லும் வழியை அடைந்து, தங்களைப் பிடித்துக் கொண்டு போகும் எமதூதர்கள் அடித்து எடுத்து எறியத் தலை கீழாய் நரகக் குழியில் விழுந்து வருந்தும் வகைகளைச் சொல்வதற்கு முன்பு;

விளக்கம்:

அறைந்த - சொன்ன; **அதிபாதகம் ஆதி** - பெரும்பாவம் முதலான, **செறிந்து** - அடைந்து; **சித்தம்** - மனம்; **பிறிந்து** - விலகி; **யமன்** - திக்குப் பாலகர்கள் எண்மருள் ஒருவன். (1)

Koviloor Digital Library

374. அறிகமுனிவ வறம் புரிந்தார்
சிலரு மியமனுலகதனை
நெறியிற்றருமபல நிகழ
நீடு மகிழ்ச்சி கூடியிடச்
செறியுமுறையு மவர்க்கவனும்
செய்யுஞ் சிறப்புந் துறக்கத்தி
னுறையுமுறையுந் தொகை செய்தே
யுரைப்பா முலக முவப்புறவே.

அறிக முனிவ அறம்புரிந்தார்
சிலரும் இயமன் உலகு அதனை
நெறியில் தருமபலம் நிகழ
நீடுமகிழ்ச்சி கூடி இடச்
செறியும் முறையும் அவர்க்கு அவனும்
செய்யும் சிறப்பும் துறக்கத்தில்
உறையும் முறையும் தொகை செய்தே
உரைப்பாம் உலகம் உவப்புஉற ஏ.

உரை:

முனிவனே! புண்ணியசாலிகளுக்கு எமன் உலகில் முறையோடு புண்ணியப் பயன்கள் வந்து பொருந்துவதால் அவர்கள் பெறுகின்ற நீண்ட இன்பமும், அவர்களுக்கு எமன் செய்கின்ற மரியாதையும், சுவர்க்கத்தில் அவர்கள் இருக்கின்ற நிலையும் ஆகியவற்றைத் தொகுத்து,உலகினர் மகிழுமாறு சொல்லுவோம்.

விளக்கம்:

அறம் - புண்ணியச் செயல்; சிறப்பு - மரியாதை; துறக்கம் - சுவர்க்கம்; உறைதல் - தங்குதல், வசித்தல்; முறை - நிலை; தொகைசெய்து - தொகுத்து; உலகம் - இடவாகு பெயராக உலகினரைக் குறிக்கிறது; உவப்பு - மகிழ்ச்சி; உற - பொருந்த; உரைப்பாம் - சொல்லுவோம்: ஏ - அசை. (2)

உடல் நிலைஅற்றது

375. முளைத்தகருவு மழவுருவு
முதிராவுருவு முதிர்ந்தமையா
லிளைத்தவடிவு மெனுமிவற்றி
னிருந்த வுயிர்கள் வினையிறலும்

Koviloor Digital Library

வளைத்த தூதர்வதை செய்ய
மற்றோருடலம் பற்றி முனம்
விளைத்த செய்திப் பலம் விளைய
வியமபுரியை விரவிடுமே.

முளைத்த கருவும் மழ உருவும்
முதிரா உருவும் முதிர்ந்தமையால்
இளைத்த வடிவம் எனும் இவற்றில்
இருந்த உயிர்கள் வினை இறலும்
வளைத்த தூதர்வதை செய்ய
மற்றுஓர் உடலம் பற்றி முன்னம்
விளைத்த செய்திப்பலம் விளைய
இயமபுரியை விரவிடும் ஏ.

உரை:

தாயின் வயிற்றில் கருவாக உள்ள உடலும், குழந்தை வடிவமும், அறிவு முதிர்ச்சியில்லாத உருவும், மூப்பினால் தளர்ந்த யாக்கையும் உள்ள உயிர்கள் தம் ஊழ்வினை நீங்கியதும், யமனுடைய பணியாள்கள் அந்த உடல்களிலிருந்த உயிர்களைக் கவர்ந்து செல்ல, முன்னர் செய்த கருமபலனை நுகரும் பொருட்டு யாதனா சரீரம் பெற்று இயமலோகத்தை அடைவர்.

விளக்கம்:

முளைத்தகரு - தாய் வயிற்றில் உள்ள சிசு; மழஉரு - குழந்தை வடிவம்; முதிரா - அறிவு முதிர்ச்சியில்லாத; இளைத்த - தளர்ந்த; இறல் - முடிதல்; வதை - துன்புறுத்தல். அதாவது உடலை விட்டுப் பிரித்தல். ஏ - அசை. மற்றோர் உடலம் பற்றி - மற்றோருடலம், யாதனா சரீரம். அது தூல உடலை விட்டுக் கிளம்பும் உயிருக்கு முன்னிருந்த தூல சரீரத்துக்குப் பதிலாகக் கொடுக்கப்படும் ஒருவித சரீரமாகும். (3)

பாதுகை அளித்தவர்

376. பாதுகையுதவினர் பனவருமுறவே
வாதமுமனபரி வரவழியுகையா
வேதரி யதுவென வெளிதுறவெவையும்
போதகரிவரென யமபுரிபுகுவார்.

பாதுகை உறவினர் பனவரும் உறவே
வாதமும் அன்னபரி வரவழி உகையா
ஏது அரியது என வெளிதுற எவையும்
போதகர் இவர் என யமபுரி புகுவார்.

Koviloor Digital Library

உரை:

பிராமணருக்குத் திவச நாளில் பாதுகை அல்லது செருப்பைத் தானமாகக் கொடுத்தவர், காற்றைப் போல விரைந்து செல்லும் குதிரையின் மீது அமர்ந்து, அவருக்கு எந்தப் பொருளும் எளிதில் கிடைக்கும் என்று பிறர் சொல்லும்படி எமன் உலகை அடைவார்.

விளக்கம்:

பாதுகை- மரத்தால் செய்யப்பட்ட பாத அணிச் செருப்பு வேறு மிதியடி; **வாதம்** - காற்று; **அன்ன** - போல; **பரி** - குதிரை; **உகை** - செலுத்து; **போதகர்** - ஆசிரியர்; **பனவர்** - பிராமணர்; **பாதுகை தானம்** - மிதியடியைத் தானமாகக் கொடுப்பது.

இன்று கால இயற்கைப்படி மிதியடிக்குப் பதில் செருப்பு வழங்கும். சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழகம் தெலுங்கு நாயக்க மன்னர்களின் ஆளுகையில் இருந்தது. அப்போது அம்மன்னர்கள் தெலுங்குப் பிராமணர்களை ஆயிரக்கணக்கில் வரவழைத்து, ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு பிராமணரை (புரோகிதரை) அனுப்பி அவர்தாம் திருமணம், ஈமக்கிரியைகள் ஆகியவற்றைச் செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்தினர்; சட்டமும் இயற்றினர். இதனால், தமிழர் வீடுகளில் நடைபெற்ற ஈமச் சடங்குகள், திவசம் முதலியவற்றைத் தெலுங்குப் பிராமணர்களே நடத்தினர். திவசம் நடைபெற்ற போது, திவசம் நடத்துகிறவரின் பொருள்வசதிக்கு ஏற்ப, கன்றையுடைய பசு, குடை, செருப்பு, ஆடை முதலியவை தானமாக வழங்கப்பட்டன. அதனை இச்செய்யுள் குறிப்பிடுகிறது. (4)

குடை கொடுத்தவர்

377. **சத்திரமுதவினர் தகைமையர் பெறவே**
மொய்த்தெழு முகினிழல் வழியுறமுறையா
லெத்தொகையினியன வவை எளிதுறவே
சித்தமு மகிழ்வுற யமபுரி செறிவார்.

சத்திரம் உதவினர் தகைமையர் பெறவே
மொய்த்து எழு முகில் நிழல் வழி உற முறையால்
எத்தொகை இனியன அவை எளிது உறவே
சித்தமும் மகிழ்வு உற யமபுரி செறிவார்.

உரை:

ஒரு பிராமணருக்குக் குடையைத் தானமாக வழங்கிய பெருமைக்கு உரியவர், தாம் விரும்பிய எல்லாப் பொருள்களையும் எளிதாகப் பெற்று மகிழ்ந்து, நெருக்கமாகச் சூழ்ந்துள்ள மேகங்களின் நிழல்கள் பொருந்திய வழியே சென்று யமன் உலகை அடைவார்.

Koviloor Digital Library

விளக்கம்:

சத்திரம் - குடை, தகைமையர் - பெருமைக்கு உரியவர்; மொய்த்து - நெருங்கி; முகில் - மேகம். (5)

ஆடை அளித்தவர்

378. பட்டினையுதவினர் பனவருமுறவே
தொட்டிட வினியன துகில்புனைவடிவுட
னிட்டம துறுபயன் வழியெளிதுறவே
சிட்டருமிவரெனயமபுரி செறிவார்.

பட்டினை உதவினர் பனவரும் உறவே
தொட்டிட இனியன துகில்புனை வடிவுடன்
இட்டம்அது உறுபயன் வழி எளிது உறவே
சிட்டரும் இவர்என யமபுரி செறிவார்.

உரை:

சிவாசாரியருக்குப் பட்டாடை வழங்கியவர், மென்மையும் அழகும் பொருந்திய ஆடைகளை அணிந்தவராய், விரும்பியவற்றை எளிதாகப் பெற்று, பெரியோர் என்று பிறர் புகழ யமன் உலகை அடைவார்.

விளக்கம்:

பனவர் - சிவாசாரியர்; துகில் - ஆடை; சிட்டர் - பெரியோர். (6)

தவிசு அளித்தவர்

379. தவிசினை உதவினர் தகைமையர் பெறவே
புவிதனிலரியது பொருவினை யரிது
சிவிகையுமுறவதன் மிசை வழி திகழ்வா
ரிவர்மிகுதவரென யமபுரி யிசைவார்.

தவிசினை உதவினர் தகைமையர் பெறவே
புவிதனில் அரியது பொரும் வினையரிது
சிவிகையும் உற அதன்மிசை வழி திகழ்வார்
இவர்மிகுதவர் என யமபுரி இசைவார்.

உரை:

தரையில் அமருவதற்கு உரிய இருக்கையாக விளங்குகின்ற தவிசுப் பலகையை அளித்த பெருமைக்கு உரியவர், பொருந்திய வினையிலிருந்து நீங்கிப்

Koviloor Digital Library

பல்லக்கிலேறி இவர் மிகுந்த தவ ஒழுக்கமுடையவர் என்று பிறர் சொல்லும்படி யமன் உலகை அடைவர்.

விளக்கம்:

தவிசு - இருக்கை, ஆசனம்; புவி - உலகம்; சிவிகை - இது வலிமையுடைய நான்கு ஆண்கள் தூக்கிச் செல்லுகிற மூடுபல்லக்கு. பழங்கால அரச குடும்பப் பெண்கள் திருக்கோயிலுக்கோ பக்கத்து ஊருக்கோ செல்லும்போது சிவிகையில் அமர்ந்து செல்லுவர். அவர்களுக்குக் காவலாக முன்னும் பின்னுமாகக் குதிரை வீரர்கள் செல்லுவர்.

சைவத் துறவிகளும், சங்கரமடத்துப் பிராமணத் துறவிகளும் இவ்வாறே பல்லக்கில் அமர்ந்து அயலூருக்குச் சென்று வந்தனர். மைசூரை ஆட்சி செய்த திப்பு சுல்தான், பல்லக்கில் சென்ற பிராமணமடத் துறவிகளுக்குப் பாதுகாப்பு அளித்தான் என்று வரலாறு கூறுகின்றது.

இத்தகைய பல்லக்குகளை அரும்பொருட்காட்சியகத்தில் மக்கள் பார்வைக்காக வைத்திருக்கிறார்கள். (7)

குதிரையை அளித்தவர்

380. தத்துறு பரியினையுதவிய தகைமைய
ரத்தகுபரிமிசை யழகுற வழியே
யெத்தொகையினியன வவையெளிதுறவே
சித்தருமிவரென யமபுரி செறிவார்.

தத்துஉறு பரியினை உதவிய தகைமையர்
அத்தகுபரிமிசை அழகுஉற வழியே
எத்தொகை இனியன அவை எளிது உறவே
சித்தரும் இவர்என யமபுரி செறிவார்.

உரை:

தத்தித்தத்தி நடக்கும் குதிரையைத் தானமாக அளித்த பெருமைக்கு உரியவர், விரும்பிய அனைத்தும் எளிதாக அடைந்து, இவர் சித்தி பெற்றவர் என்று பிறர்சொல்ல, அழகு பொருந்தக் குதிரையின் மீது அமர்ந்து எமன் உலகை அடைவார்.

விளக்கம்:

பரி – குதிரை; சித்தர் – சித்தி பெற்றவர். (8)

Koviloor Digital Library

கட்டில் அளித்தவர்

381. கட்டுவையதனையு முதவினர் கவினா
ரிட்டமதுறு மஃதென வழியிடையே
கிட்டிய வதனொடு கெழுமிய வழகாற்
சிட்டருமிவரென யமபுரி செறிவார்.

கட்டுவை அதனையும் உதவினர் கவின்ஆர்
இட்டம்அது உறும்அஃது என வழி இடையே
கிட்டிய அதனொடு கெழுமிய அழகால்
சிட்டரும் இவர்என யமபுரி செறிவார்.

உரை:

கட்டிலைத் தானமாகக் கொடுத்த அழகினர், தாம் விரும்பியவை யாவும் அழகாகப் பொருந்தப்பெற்று, இவர் பெரியவர் என்று பிறர் சொல்லும்படி யமன் உலகை அடைவார்.

விளக்கம்:

கட்டுவை - கட்டில்; இட்டம் - விருப்பம்; சிட்டர் - பெரியவர், கட்வா என்ற வடசொல் கட்டுவை எனத் திரிந்தது.

இது முதல் மேல் வருவன பொதுநலப்பணி கோயில் திருப்பணி முதலியன செய்வோர் இறந்தபின் யமனுலகடையும் விதங்கூறும். (9)

சோலை அமைத்தவர்

382. பொழிலினை நிறுவிய பொருவரு புகழினர்
நிழலுறு பொழில்வழி நிறைமலருறவே
விழைவினிலினியன வெவையவை மிகவே
யழகிய ரிவரென யமபுரி அடைவார்.

பொழிலினை நிறுவிய பொரு'அரும் புகழினர்
நிழல் உறும் பொழில்வழி நிறைமலர் உறவே
விழைவினில் இனியன எவை அவை மிகவே
அழகியர் இவர் என யமபுரி அடைவார்.

உரை:

சோலையை அமைத்த ஒப்பில்லாத புகழாளர், தாம் விரும்பிய இனிய பொருள்களை நிரம்பப் பெற்று, இவர் எழில் வாய்ந்தவர் என்று பிறர் சொல்ல, பூக்கள் பூத்துள்ள சோலையின் நிழல் வழியாக எமன் உலகை அடைவார்.

Koviloor Digital Library

விளக்கம்:

பொழில் - சோலை; பொருஅரும் - ஒப்பில்லாத; விழைவு - விருப்பம். (10)

திருநந்தவனம் அமைத்தவர்

383. பூமலி பொழிலினை நிறுவிய புகழினர்
தேமல ரிரதமு முறவணி செறிவா
ரேமமு மிசைவர்கள் வழியிடையெளிதே
நாமலிபுக ழொடு நடுவனையடைவார்.

பூமலி பொழிலினை நிறுவிய புகழினர்
தேமலர் இரதமும் உறஅணி செறிவார்
ஏமமும் இசைவர்கள் வழியிடை எளிதே
நாமலி புகழொடு நடுவனை அடைவார்.

உரை:

பூக்கள் நிறைந்த திருநந்தவனத்தை அமைத்த புகழுக்கு உரியவர், தேன் பொருந்திய பூமாலைகளால் அழகு செய்யப் பெற்ற தேரில் அமர்ந்து, செல்லும் வழியில் உள்ள இன்பத்தைப் பொருந்தி, பரவிய புகழுடன் யமன் உலகைச் சேருவார்.

விளக்கம்:

பூமலி - பூக்கள் நிரம்பிய; அணி - அழகு; ஏமம் - இன்பம்; நடுவன் - எமன். (11)

திருக்கோயில் பணிவிடை செய்தவர்

384. தேவர்கண் முதலியர் பணிமுறை செயுமவர்
ஒவியமனமட வரலியருழையே
மேவிட வழியிடை மிகுகளியுறவே
நாவணி புகழொடு நடுவனையடைவார்.

தேவர்கள் முதலியர் பணிமுறை செய்யும் அவர்
ஒவியம் அன்ன மடவரலியர் உழையே
மேவிட வழிஇடை மிகுகளி உறவே
நாஅணி புகழொடு நடுவனை அடைவார்.

Koviloor Digital Library

உரை:

சிவபிரான் முதலானோர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலில் தொண்டு செய்கிறவர் சித்திரப்பாவை போன்ற அழகிய இளம் மகளிர் பக்கத்திலே இருந்து இதஞ்செய்ய செல்லும் வழியில் களிப்பேறுமாறு, பிறர் கூறும் புகழ் மொழிகளைக் கேட்டவாறு எமன் உலகைச் சேருவார்.

விளக்கம்:

தேவர் - கடவுள்; அன்ன - போல; மடவரல் - இளம்பெண்; உழை - பக்கம்; மேவிட - பொருந்த; நடுவன் - எமன். (12)

சந்நிதியில் விளக்கு இட்டவர்

385. ஒளியினை யவருற வுதவிய வவருந்
தெளிதரு திருவுருவடை வர்களிசைசேர்
மளினமுமறவழி மருவுவர் மதியோ
ரளியுள ரிவரென நடுவனை யடைவார்.

ஒளியினை அவர்உற உதவிய அவரும்
தெளிதரு திருஉரு அடைவர்கள் இசைசேர்
மளினமும் அறவழி மருவுவர் மதியோர்
அளிஉளர் இவர்என நடுவனை அடைவார்.

உரை:

இறைவன் எழுந்தருளியுள்ள திருக்கோயிற் சந்நிதி ஒளிபெறும்படி திருவிளக்கு இட்டவர், மன அழுக்குகளை அகற்றும் அறிவுத் தெளிவுடைய அழகிய உடலினைப் பெற்று, இவர்சிவன் அருள் பெற்றவர் என்று அறிவாளிகள் தம்மைப் புகழ யமன் உலகை அடைவார்.

விளக்கம்:

இசை - புகழ்; மளினம் - மலினம், அழுக்கு; அளி - அருள்; திரு - அழகிய. (13)

இரவலருக்கு இடம் அளித்தவர்

386. இல்லமு முதவின ரிரவலர் வரவே
கல்லக மருவிய வழியிடை நடவா
வெல்லையில் வளமுற மகிழ்வுற வெளிதே
வில்லியு மிவரென யமனுழை விழைவார்.

Koviloor Digital Library

இல்லமும் உதவினர் இரவலர் வரவே
கல்லகம் மருவிய வழியிடை நடவாது
எல்லைஇல் வளம் உற மகிழ்வுஉற எளிதே
வில்லியும் இவர்என யமன் உழை விழைவார்.

உரை:

இரவலர்கள் தம்மை நாடி வந்தபோது அவர்கள் தங்குவதற்கு இடமளித்து உபசரித்தவர், கால்களை உறுத்தும் கற்கள் உள்ள பாதை வழியே செல்லாது, அளவில்லாத வளமும் இன்பமும் எளிதாகப் பொருந்த, அழகில் மன்மதனுக்கு ஒப்பாவர் என்று பிறர் சொல்ல நடுவன் உலகை விரும்பி அடைவார்.

விளக்கம்:

கல்லகம் - கரடுமுரடானது; இரவலர் - யாசகர்; வில்லி - மன்மதன். (14)

வேதியருக்குப் பசுவைக் கொடையாக அளித்தவர்

387. கோவினையுதவினர் குலமறையவர்கை
பூவணியிரதமுமுறவது புகுவார்
ஓவியமன மடவரலியருடனே
தேவருமிவரென யமபரி செறிவார்.

கோவினை உதவினர் குலம் மறையவர்கை
பூஅணி இரதமும் உற அது புகுவார்
ஓவியம்அன மடவரலியர் உடனே
தேவரும் இவர் என யமபுரி செறிவார்.

உரை:

வேதியருக்குப் பசுவைத் தானமாகக் கொடுத்தவர் அழகிய தேரில் ஏறி, நல்லமனமுடைய இளம் பெண்கள் சேவிக்க இவர் வானவர் என்று பிறர் கூறும்படி எமன் உலகை அடைவார்.

விளக்கம்:

கோ - பசு; மறையவர் - பிராமணர்; மடவரல் - இளம்பெண்; (15)

பிராமணருக்கு உணவு அளித்தவர்

388. அன்னமு முதவின ரருமறையவர்பாற்
றன்னிக ரல்லன முறவழி தனினும்
பன்னியவவை தனையுணு முறைபயிலா
நன்னய ரிவரென நடுவனை யடைவார்.

Koviloor Digital Library

அன்னமும் உதவினர் அருமறையவர்பால்
தன்நிகர் அல் அன்னம் உறவழிதனினும்
பன்னிய அவைதனை உண்ணும் முறைபயிலா
நல்நயர் இவர்என நடுவனை அடைவார்.

உரை:

சிவாசாரியாருக்கு உணவு அளித்தவர், செல்லும் வழியில் ஒப்புஇல்லாத உயரிய உணவு வகைகளை, உண்ணும் முறை தெரிந்து உண்டு, இவர் நல்ல நீதியாளர் என்று பிறர் புகழ எமன் உலகைச் சேருவார்.

விளக்கம்:

மறையவர் - சிவாசாரியர்; அன்னம் - சோறு கறி முதலியன; பன்னிய - சொன்ன; நன்னயர் - நல்லநீதி உடையவர். (16)

நோயாளருக்கு மருந்து அளித்தவர்

389. உதவினரவுடத முறுபிணி யினர்கைத்
திதமுறு முருவமு முறவழி செறிவார்
இதவித மெவையவை யெளிமையி னுறவே
மதனனு மிவரென யமனுழை மகிழ்வார்.

உதவினர் அவுடதம் உறுபிணியினர் கைத்
திதம் உறு உருவமும் உறவழி செறிவார்
இதம் விதம் எவை அவை எளிமையில் உறவே
மதனனும் இவர் என யமனுழை மகிழ்வார்.

உரை:

நோயாளரின் நோய்கள் தீருமாறு மருந்து அளித்தவர் நிலையான உடலமைப்பைப் பெற்றவராய், இன்பந் தரும் பொருள்களை எளிதாகப் பெற்று, அழகானவர் என்று பிறர் சொல்ல யமன் உலகை அடைவார்.

விளக்கம்:

அவுடதம் - மருந்து; திதம் - நிலை; மதனன் - காமன், அழகானவர். (17)

ஆசிரியருக்குப் பணிவிடை செய்தவர்

390. குரவனபணிபுரி குணமுடையவர்முன்
மருமலரிரதமும் வரவழி யெதிரே
திரமுற வதனமர் தெரிவையருடனே
பொருவில ரிவரென யமபுரி புகுவர்.

Koviloor Digital Library

குரவன பணிபுரி குணம் உடையவர் முன்
மருமலர் இரதமும் வரவழி எதிரே
திரம்உற அதன்அமர் தெரிவையர் உடனே
பொருஇலர் இவர்என யமபுரி புகுவர்.

உரை:

தம்ஞானாசிரியருக்குத் தொண்டுகள் செய்தவர், நறுமணப் பூக்களையுடைய தேரில் இளம் பெண்களோடு உறுதியாக அமர்ந்து, இவர் தமக்கு யாரும் ஒப்பு இல்லாதவர் என்று சொல்லும்படி எமன் உலகை அடைவார்.

விளக்கம்:

குரவன் - ஆசான்; மருமலர் - நறுமணப்பூ; திரம் - உறுதி; பொரு - ஒப்பு. (18)

சிவாசாரியரின் பாதங்களைக் கழுவியவர்

391. அருமறையவர் திருவடியினை யதனிற்
பரிவொடு குளிர்புனல் பயில்வினையவருந்
தருமவர் குளிர்நிழல் வழிபெறு தகையே
பொருஇலர் இவரென யமபுரி புகுவார்.

அருமறையவர் திருவடியினை அதனில்
பரிவொடு குளிர்புனல் பயில்வினை அவரும்
தருஅமர் குளிர்நிழல் வழிபெறு தகையே
பொருஇலர் இவர்என யமபுரி புகுவார்.

உரை:

சிவாசாரியரின் பாதங்களில் குளிர்ந்த நீரை அபிஷேகித்து உபசரித்தவர், மரங்களின் குளிர்ந்த நிழல் வழியாகத் தமக்கு யாரும் ஒப்பில்லாதவர் என்று பிறர் சொல்ல, எமன் நகரை அடைவார். (19)

சிவாசாரியருக்கு விலையுயர்ந்த பொருளைக் கொடுத்தவர்

392. ஒளிமணி யுதவினர் கனகமுமொருமைத்
தெளிதிகழ் மறையவர் திகழ்கர மதனிற்
றுளையில கனகநல் வரைவழி துதையா
வளியுளரிவரென நடுவனையடைவார்.

Koviloor Digital Library

ஒளிமணி உதவினர் கனகமும் ஒருமைத்
தெளிதிகழ் மறையவர் திகழ்கரம் அதனில்
துளைஇல கனகநல் வரைவழி துதையா
வளிஉளர் இவர் என நடுவனை அடைவார்.

உரை:

ஒளிவீசும் இரத்தினக் கற்களையும் பொன்னையும் சிவாசாரியர்களுக்கு வழங்கியவர், ஒப்பற்ற பொன்மலை வழியாக, இவர் ஈகையாளர் என்று பிறர் சொல்ல யமனிடம் சேருவர்.

விளக்கம்:

துளை - துலை; எதுகை நோக்கி 'ல', 'ள' ஆயிற்று. துலை - ஒப்பு. (20)

பெரியோருக்குப் பணிவிடை செய்தவர்

393. உத்தம ரொருமைய வுணர்வின ரடியொடு
கைத்தல முறமுறை வருடிய கருணையர்
தத்தறு பரிமிசை யழகது தகவே
சித்தசன் இவரென யமபுரி செறிவார்.

உத்தமர் ஒருமைய உணர்வினர் அடியொடு
கைத்தலம் உறைமுறை வருடிய கருணையர்
தத்தறு பரிமிசை அழகது தகவே
சித்தசன் இவர்என யமபுரி செறிவார்.

உரை:

யாரிடமும் வேற்றுமை பாராட்டாத மேலான உணர்வுடைய பெரியோரின் பாதங்களைத் தடவி அமுக்கிப் பணிவிடை செய்கிறவர், அழகில் காமனுக்கு ஒப்பானவர் என்று பிறர் சொல்லக் குதிரையில் அமர்ந்து எமன் உலகம் செல்லுவார். பாதம்வருடுதல் மட்டுமே வழக்கிலுள்ளது. அதற்கேற்பக் கைத்தலம் அடியொடும் உறைமுறை எனக் கொண்டு கூட்டி அகங்கை பாதத்தொரு ஒன்றும் முறையாக (வருடிய) என உரைக்க.

விளக்கம்:

சித்தசன் - காமன். (21)

Koviloor Digital Library

சிவாசாரியருக்குத் தேர் வழங்கியவர்

394. அருமறை யவருற விரதமு மருளினர்
மருமல ரிரதமுன் வரவழியிடையே
திரமுறவதனமர் தெரிவையருடனே
பொருவில ரிவரென யமபுரி புகுவார்.

அருமறையவர் உற இரதமும் அருளினர்
மருமலர் இரதம் முன்வரவழி இடையே
திரம்உற அதன் அமர் தெரிவையருடனே
பொருஇலர் இவர் என யமபுரி புகுவார்.

உரை:

சிவாசாரியருக்குக் குதிரைகளால் இழுக்கப்படும் வண்டியை அளித்தவர், மணமுள்ள பூக்களால் அழகு செய்யப்பட்ட வண்டியில் இளம் பெண்களோடு நிலைபெற அமர்ந்து, ஒப்பற்றவர் என்று பிறர் சொல்லும்படி எமன் உலகிற் செல்லுவார்.

விளக்கம்:

தேர் - குதிரைகளால் இழுக்கப்பட்ட பயணவண்டி; தேர் என்பது திருக்கோயில் தேரையும் குறிக்கும். அது பயணத்திற்கு உதவாது. (22)

நிலதானம் கொடுத்தவர்

395. பூமியை யுதவிய பொருவரு புகழினர்
தாமுனு மினியன வழிபெறு தகையே
காமினி யவரொடு களியுற வளவா
நாமலி புகழொடு நடுவனையடைவார்.

பூமியை உதவிய பொரு அரும் புகழினர்
தாம்உன்னும் இனியன வழிபெறு தகையே
காமினி அவரொடு களிஉற அளவா
நாமலி புகழொடு நடுவனை அடைவார்.

உரை:

சிவாசாரியருக்கு நிலம் வழங்கிய புகழுக்கு உரியவர், தாம் எண்ணிய இனிய பொருள்களைப் பெற்று, அழகுள்ள பெண்களோடு கூடிமகிழ்ந்து, புகழுக்குரியவராக எமன் உலகைச் சேருவார்.

Koviloor Digital Library

விளக்கம்:

பொருஅரும் - ஒப்பில்லாத; உன்னும் - எண்ணுகிற; தகை - அழகு; காமினி - பெண்; களி - களிப்பு; அளவா - கலந்து; (23)

உன்ன உணவும் பருக நீரும் அளித்தவர்

396. பானமு முதவினர் பரிவொடுபலவித
போனமு முதவினர் புரிதரு முறையே
தானினி துறவவை தனையனு பவியா
மேனய ரிவரென யமனுழை விழைவார்

பானமும் உதவினர் பரிவொடு பலவித
போனமும் உதவினர் புரிதரும் முறையே
தான்இனிது உற அவைதனை அனுபவியா
மேல்நயர் இவர் என யமன் உழை விழைவார்.

உரை:

தம்மை நாடி வந்தவருக்கு அன்பாகப் பலவகை உணவுகளும் பருக நீரும் தந்து முறையாக உபசரித்தவர், உலக இன்பங்களை இனிதாக நுகர்ந்து, மேலான நீதியாளர் என்று சொல்லும்படி எமன் உலகை அடைவர்.

விளக்கம்:

பானம் - பருகும்நீர்; போனம் - போனகம்; உணவு; மேனயர் - மேல்நயர்; மேலான நீதியாளர், நயம் - நீதி. (24)

பல வகைக் கொடையாளர்

397. மற்றுள வினைநல மருவின ரவரும்
பற்றுவர் வழிதனின் முறைபெறு பலமுந்
துற்றுவர் துயரிலர் துரிசறு நெறிசேர்
நற்றவ ரிவரென நடுவனை யடைவார்.

மற்றும்உள வினைநலம் மருவினர் அவரும்
துற்றுவர் வழிதனில் முறை பெறுபலமும்
துற்றவர் துயர்இலர் துரிசுஅறு நெறிசேர்
நல்தவர் இவர்என நடுவனை அடைவார்.

உரை:

பிறருக்கு வேறுபல உதவிகளைச் செய்தவர், அதற்குரிய நல்ல பயன்களை

Koviloor Digital Library

அனுபவித்துத் துன்பம் இல்லாதவராக, குற்றம் இல்லாத நல்ல தவத்தினையுடையவர் என்று சொல்லும்படி எமன் உலகைச் சேருவார்.

விளக்கம்:

மருவினர் - பொருந்தினவர், செய்தவர்; துற்றுவர் - அனுபவிப்பார்; துரிசு - குற்றம்; (25)

உணவு அளித்தலே உயர்வான அறம்

398. அன்னதான மறைந்த வற்று
ளதிக பலமே யருந்தினனுக்
கின்னல் கெடுக்குமப்பொழுதே
யின் பந்தனையு மிசைவிக்கு
மன்னுமுடலுள் வலியதனான்
மாறின் பொருளேயஃததனா
லென்னிலுவமை யிதற்கில்லை
மண்ணின் கண்ணோ வெவ்விடத்தும்.

அன்னதானம் அறைந்தவற்றுள்
அதிகபலமே அருந்தினனுக்கு
இன்னல் கெடுக்கும் அப்பொழுதே
இன்பம் தனையும் இசைவிக்கும்
மன்னும் உடலுள் வலிஅதனால்
மாறுஇல் பொருளே அஃது அதனால்
என்னில் உவமை இதற்கு இல்லை
மண்ணின் கண்ணோ எவ்விடத்தும்.

உரை:

இதுவரை உரைத்த கொடைகளுள் உணவுக்கொடை மிகுந்த புண்ணியத்தைத் தரவல்லது. பசித்தவன் உணவை உண்டதும் பசித்துயர் நீங்குகின்றது. பசிக்களைப்பு அகன்று இன்பம் மேலிடுகின்றது. உணவின் சாரத்தால் உடலில் வலிமை ஏறுகின்றது. ஆதலால், உணவுக்கொடைக்கு நிகரான ஒரு கொடை இந்த மண்ணுலகில் கிடையாது; வேறு உலகிலும் இல்லை.

விளக்கம்:

அறைந்த - சொன்ன; **மண்ணின் கண்ணோ** - மண்ணுலகில் மட்டுமோ எவ்விடத்தும் என்ற பொருள் நன்கு தொனிக்க இதற்கிவ்வாறுரைக்க வேண்டும். (26)

Koviloor Digital Library

399. அன்னமதனிலா முதிர
மதனாற்றசையா மதனாலே
மன்னுமலின சுக்கிலமு
மலினமதனாற் கருவாகு
மன்னமின்றேலுயிர் வாழு
மாக்கை விரைய வழிந்தகலு
மன்னமதுவேயுடறன்னை
யாக்கு நிறுத்து மழித்திடுமே.

அன்னம் அதனில் ஆம் உதிரம்
அதனால் தசை ஆம் அதனாலே
மன்னும்மலின சுக்கிலமும் மலினம்
அதனால் கருஆகும்
அன்னம் இன்றேல் உயிர் வாழும்
ஆக்கை விரைய அழிந்து அகலும்
அன்னம் அதுவே உடல் தன்னை
ஆக்கும் நிறுத்தும் அழித்திடும் ஏ.

உரை:

உணவால் குருதியும், குருதியால் தசையும், தசையால் விந்துவும், விந்துவால் கருவும், கருவால் உடலும் உண்டாகின்றன. உணவே உடலை ஆக்குகிறது; வளர்க்கிறது. உணவு இல்லாவிட்டால் உடல் விரைவில் அழியும்.

விளக்கம்:

உதிரம் - இரத்தம்; சுக்கிலம் - விந்து; உணவெதிலும் அற்பமேனும் நஞ்சில்லாதிருப்பதில்லை. அவற்றின் தாக்கம் கால கதியில் ஒன்று சேர்ந்து உடலழிவுக்கு ஏதுவாம் என்பதோர் கருத்துமுண்டு. உண்ணாத நஞ்சு கொல்லாதென்பதை இப்படி விளக்கம் கூறுவர். (27)

உணவு இல்லாமல் பசி நீங்காது

400. உற்றான்பசியை கனகத்தா
லொளிசேர் மணியா லொண்டொடியான்
மற்றுமுள நல்வளனாலு
மாற்றவலனோ வலன்வயினுட்
கெற்பந்தனக்கும் பாலனுக்குங்
கிளர்ந்த தருணன்றனக்குமுட
லொற்க முடைய விருத்தனுக்கு
முண்டோ நிலையோதன மொழித்தே.

Koviloor Digital Library

உற்றான் பசியைக் கனகத்தால்
ஒளிசேர் மணியால் ஒண்தொடியால்
மற்றும் உள்ள நல்வளனாலும்
மாற்றவலனோ வலன் வயினுள்
கெற்பம் தனக்கும் பாலனுக்கும் கிளர்ந்த
தருணன் தனக்கும் உடல்
ஒற்கம் உடைய விருத்தனுக்கும் உண்டோ
நிலை ஓதனம் ஒழித்து ஏ.

உரை:

ஒருவருக்கு உண்டான பசியை அவரிடமுள்ள தங்கத்தாலும், உயர்ந்த ஆபரணக் கற்களாலும், வளையல்கள் அணிந்த இளம் பெண்ணாலும், வேறு உடைமைகளாலும் மாற்ற இயலாது. தாயின் வயிற்றில் கருவாக வளருகின்ற சிசுவும், சிறுவனும், வளர்ந்த இளைஞனும், உடல் மெலிந்த முதியவனும் உணவு உண்ணாமல் உயிரோடு நிலைத்து வாழ முடியாது.

விளக்கம்:

கனகம் - தங்கம்; ஒளிசேர்மணி - ஒளிவீசும் ஆபரணக் கற்கள்; மற்றும் உள்ள - ஏனைய; நல்வளன் - உடைமைகள்; கெற்பம் - கர்ப்பம் என்பது எதுகை நோக்கிக் கெற்பம் என வந்தது.

பாலன் - இளஞ்சிறுவன்; கிளர்ந்த - வளர்ந்த; தருணன் - இளைஞன்; ஒண் - ஒளி; தொடி - வளையல்; ஒண்தொடி - வளையல் அணிந்த இளம் பெண் (அன்மொழித்தொகை) ஒற்கம் - மெலிவு; விருத்தன் - கிழவன், முதியவன்;

ஏ - அசை. (28)

பசி நோய்க்கு மருந்து உணவு

401. தேவர்முனிவர் தானவருந்
திளைப்பருணவைத் திதிவிரும்பி
யாவருணவை விரும்பாதா
ரிடர்சேருடலுண் முந்நூற்றெட்
டோவா நோயுண்டவற்றுள்ளும்
பசிநோய் கொடியது றினதனுக்
காவாவென்றே யருளாள
னருத்து மருந்தோதன மன்றே.

தேவர்முனிவர் தானவரும்
திளைப்பர் உணவைத் திதிவிரும்பி
யாவர் உணவை விரும்பாதார்
இடர்சேர் உடலுள் முந்நூற்று எட்டு

Koviloor Digital Library

ஓவா நோய் உண்டு அவற்றுள்ளும்
பசிநோய் கொடியது உறின் அதனுக்கு
ஆவா என்றே அருளாளன்
அருத்தும் மருந்து ஓதனம் அன்றே.

உரை:

தேவர்கள், முனிவர்கள், அசுரர்கள் ஆகியோரும் தங்கள் உடம்பு அழியாமல் இருக்க உணவை விரும்பி உண்பர். ஆகையால், உணவை விரும்பாதவர் யாரும் இலர். தவிர, உடலைவிட்டு ஒழியாத முந்நூற்று எட்டு நோய்கள் உள்ளன. அவற்றுள் பசிநோய் பொல்லாதது. அப்பசி நோயால் ஒருவர் வருந்தும் போது இரக்கம் உள்ளவர் ஐயோ என்று வருந்தி, அந்தப் பசிநோய் தீர உதவுகிற மருந்து உணவு.

விளக்கம்:

தேவர் - இவர்கள் வானத்தில் உள்ளனர் என்பது மத நம்பிக்கை. முனிவர் ஒரு பிரிவினர்; இல்லற வாழ்க்கையினர். தானவர் - அசுரர்; இடர் - துன்பம்; ஓவா - நீங்காத; ஆவா - ஐயோ;அருத்தும் - ஊட்டுகிற; ஓதனம் - உணவு, சாப்பாடு, சோறு. அன்றே - அசை. (29)

உணவு ஈந்தவன் உயிரை ஈந்தவன்

402. உற்றபசிநோய்க் கனமருந்தை
யுதவுவாரு மிலராகி
லற்றதுயிரு மவ்வுடலுக்
கன்னமளிப்பா ரவருண்டேற்
பெற்ற துயிருமவ்வுடலம்
பெறுமவ்வுயிருந் தருமாதி
சொற்றை யீவானுயிரீவான்
றருமமுதலுந் துயக்கறவே.

உற்றபசிநோய்க்கு அன்ன மருந்தை
உதவுவாரும் இலர் ஆகில்
அற்றது உயிரும் அவ்வுடலுக்கு அன்னம்
அளிப்பார் அவர் உண்டேல்
பெற்றது உயிரும் அவ்வுடலம் பெறும்
அவ்வுயிரும் தரும ஆதி
சொற்றைஈவான் உயிர்ஈவான்
தருமமுதலும் துயக்கு அற ஏ.

Koviloor Digital Library

உரை:

இரவலர் ஒருவருடைய பசிநோயைத் தீர்க்கும் மருந்தாகிய சோறு அளிப்பவர் இல்லையென்றால், பசித்தவருடைய உடலும் உயிரும் அழியும். சோறு அளிப்பவர் இருந்தால் பசித்தவர் பசி தீர உண்டு உயிரோடுஇருப்பார். பசியோடு வந்தவருக்குச் சோறு அளித்து உண்ணச் செய்தவர் அவருக்கு உயிரையே அளித்தவர் ஆவார்; அதன்மூலம் அறம் முதலானவற்றை அளித்தவரும் ஆவார்.

விளக்கம்:

உற்ற - பொருந்திய; அற்றது - நீங்கியது; உடலம் - உடம்பு; சொற்றை - சோற்றை என்பது சொற்றை என வந்தது. துயக்கு - மனமயக்கம்; ஏ - அசை.

''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே''

என்பது ஆன்றோர் மொழி. (30)

சோறு அளிப்பவர் பெறும் பயன்

403. பொன்னை மணியைப்புனையிழையை
மற்றும் விரும்பும் பொருளினையு
மன்னமளிப் பாரீங்கடைவ
ரங்குத்தாம் வேண்டிய வடைவ
ரன்னமதனை யருந்தவரை
யருத்தினார்களவர் பலத்திற்
றுன்னுவார்க ளொருபாதி
யவர்தா மொருபாற் றுன்னுவரே.

பொன்னை மணியைப் புனைஇழையை
மற்றும் விரும்பும் பொருளினையும்
அன்னம் அளிப்பார் ஈங்கு அடைவர்
அங்கும் தாம் வேண்டிய அடைவர்
அன்னம் அதனை அரும்தவரை
அருத்தினார்கள் அவர் பலத்தில்
துன்னுவார்கள் ஒருபாதி அவர்தாம்
ஒருபால் துன்னுவர் ஏ.

உரை:

பசித்து வந்தவருக்கு உணவு தந்து உபசரிப்பவர், இவ்வுலகில்வாழும் போதே தங்க நகைகள், அணிகலன்களிற் பதிக்கப் பெறும்விலை உயர்ந்த கற்கள், அணிகலன்பூண்ட பெண், தாம் விரும்பிய வேறுபல பொருள்கள் ஆகியவற்றைப்

Koviloor Digital Library

பெறுவார். இறந்த பிறகும் சுவர்க்கத்தையடைந்து அங்கும் தாம் விரும்பியதை அடைவார். அரிய தவசி ஒருவருக்கு உணவு படைத்து உண்ணச் செய்தவர்கள், அவருடைய தவப்பயனில் பாதியைப் பெறுவார்கள். மீதமுள்ள பாதித் தவப் பயனையே தவசி அடைவார்.

விளக்கம்:

பொன் - தங்கம்; மணி - ஆபரணக் கற்கள்; ஈங்கு - இவ்வுலகில்; புனை இழை - நகைகள் அணிந்த பெண்; அன்னம் - சோறு, உணவு; அருந்தவர் - தவசி;பலம் - தவப்பயன்; துன்னுவார் - அடைவார்; ஏ - அசை. (31)

உணவுக்கு ஒப்பானது ஒன்றுமில்லை

404. அன்னமாக் கைதனையாக்கு
மதனாலற முன்னுளவாகு
மன்ன மதனாலனைத்தினுக்கு
மதிக கரண மதனாலே
வன்னமதனுக் கொப்பான
கரணமில்லையாயுங்கா
லன்னையான காரணமும்
புதல்வர்க்குளதோ வகலிடத்தே.

அன்னம் ஆக்கைதனை ஆக்கும்
அதனால் அறம்முன் உளஆகும்
அன்னம் அதனால் அனைத்தினுக்கும்
அதிக க(ா)ரணம் அதனாலே
அன்னம் அதனுக்கு ஒப்பான
க(ா)ரணம் இல்லை ஆயுங்கால்
அன்னையான காரணமும் புதல்வர்க்கு
உளதோ அகலிடத்து ஏ.

உரை:

நிலவுலகில் உணவே உடலை உருவாக்குகிறது. அறம் முதலான நற் செயல்கள் புரிய உணவால் ஆன உடம்பே காரணம். ஆகவேஉணவுக்கு ஒப்பான பொருள் யாதும் இல்லை. மக்களுக்கு அவர்களுடைய தாய்க்கு நிகரானவர்கள் யாரும் இலர். ஆராயுங்கால், உடம்புஉண்டாவதற்கு உணவும் தாயுமே முதன்மையான காரணம் ஆகும்.

Koviloor Digital Library

விளக்கம்:

ஆக்கை - யாக்கை, உடல்; கரணம் - காரணம்; அகலிடம் - நிலவுலகம்; ஏ - அசை.

காரணமும் என்றதில் உள்ள 'உம்' உளதோ என்பதிலுள்ள 'ஓ' என்பவற்றின் ஆற்றலால் அன்னமில்லாதவழி புதல்வர் உற்பத்திக்குப் பிரதான காரணமான தாயும் இல்லை எனப் பொருள் கொள்ளல் சிறக்கும். இறுதியடியிலுள்ள எல்லாச் சொல்லும் இப்பொருளிற் சம்பந்தமுறுதல் காண்க. (32)

உணவே மூன்று தொழில்களுக்கும் காரணம்

405. அன்னமதனை யுலகனைத்து
மாக்கு மயனென்றறையுமறை
மன்னுமுலகந்தனைக் காக்கு
மாயனெனவும் மதித்துரைக்குஞ்
சொன்னவுலகமனத்தினையுந் துடைக்குமரனு
மெனச் சொல்லு
மின்னமுறையா லெவற்றினுக்கு
மிஃதே முதலென்றெண்ணுகவே.

அன்னம் அதனை உலகு அனைத்தும் ஆக்கும்
அயன் என்று அறையும் மறை
மன்னும் உலகம் தனைக்காக்கும் மாயன்
எனவும் மதித்து உரைக்கும்
சொன்ன உலகம் அனைத்தினையும் துடைக்கும்
அரனும் எனச் சொல்லும்
இன்னமுறையால் எவற்றினுக்கும் இஃதேமுதல்
என்று எண்ணுக ஏ.

உரை:

உணவே உலகங்கள் அனைத்தையும் படைக்கிற பிரமன் என வேதம் கூறும். உணவே உலகம் நிலைத்திருக்கும்படி காக்கின்ற நாராயணன் என்றும் வேதம் வரையறுத்துச் சொல்லும். உணவே உலகுகளை அழிக்கும் அரன் என்றும் வேதம் உரைக்கும். இக்காரணங்களால் உணவே அனைத்திற்கும் காரணம் என்று அறிக.

விளக்கம்:

அயன் - படைப்பவன்; பிரமன்; மாயன் - நாராயணன்; அரன் - சிவன்; முதல் - முதல் காரணம்; ஏ - அசை. (33)

Koviloor Digital Library

உணவும் நீரும்

406. உதகமதனை யுயிரெல்லா
முண்ண விரும்பு மதனாலே
யுதகந்தனக்கு மொப்பான
பொருள்வேறில்லையுலகத்து
ளுதக மன்னமெனு மிரண்டு
முயிரை யோம்பு மதனாலே
யுதக மன்ன மெனு மிரண்டு
முதவிற்பரமபல முளதே.

உதகம் அதனை உயிர் எல்லாம்
உண்ண விரும்பும் அதனாலே
உதகம் தனக்கும் ஒப்பான
பொருள் வேறு இல்லை உலகத்துள்
உதகம் அன்னம் எனும் இரண்டும்
உயிரை ஓம்பும் அதனாலே
உதகம் அன்னம் எனும் இரண்டும்
உதவில் பரமபலம் உளது ஏ.

உரை:

உலக உயிர்கள் யாவும் நீரைப் பருக விழையும். அதனால், உலகில் தண்ணீருக்கு நிகரான பொருள் வேறு கிடையாது. நீரும் உணவும் உடலையும் உயிரையும் பாதுகாக்கும். ஆகையால், பசித்து வந்தவருக்குஉண்ண உணவும் குடிப்பதற்குத் தண்ணீரும் தந்து உதவுவதனால் மேலான புண்ணியம் கிடைக்கும்.

விளக்கம்:

உதகம் - தண்ணீர்; ஓம்பும் - காக்கும்; பரம - மேலான; ஏ - அசை.

குடிக்குந் தண்ணீரில் ஒருபகுதி நேரே பிராணனுக்குச் சேரும் என்பதுஅதன் விசேடம். (34)

407. அன்ன முதக மாவசுவ
மாடை குடை, கட்டுவையசின
மென்னு மிவைகளிருநான்கு மீயிற்
பிரேதபதி யிரங்குஞ்

Koviloor Digital Library

சொன்னபடியே மற்றுமுள தானம்
புரிவார் துயரகலத்
துன்னுவார் களியமபுரி
யதன் பின்னடைவர் துறக்கமுமே.

அன்னம், உதகம், மா, அசுவம்,
ஆடை, குடை, கட்டுவை, அசினம்
என்னும் இவைகள் இருநான்கும்
ஈயிற்பிரேதபதி இரங்கும்
சொன்னபடியே மற்றும் உள்ள தானம்
புரிவார் துயர் அகலத்
துன்னுவார்கள் இயமபுரி அதன்பின்
அடைவர் துறக்கமும் ஏ.

உரை:

உணவு, நீர், யானை, குதிரை, ஆடை, குடை முதலியனவும் கட்டில், புலித்தோல் முதலான இருக்கைகளும் ஆகிய இந்த எட்டையும் தானம் செய்பவர் எமன் அருள் பெறுவர். வேறுபல தானங்களையும் செய்பவர் துன்பம் நீங்கி எமன் உலகை அடைந்து, சுவர்க்கமும் பெறுவார்.

விளக்கம்:

பிரேதபதி – எமன்; அசினம் – தோல், மான்தோல், புலித்தோல். (35)

எமன் செய்யும் சிறப்பு

408. தருமநீதியர்க டருமராசபுரி
யடையவே தருமராசனும்
விரையவேயவரை யெதிர்கொளா வரவுவினவியே
கருணை விழைவினா
லரியவாதனமு மருளியேயுதக
விதியுமாதி நடுவந்தமு
மொருமையோ டவர்த முளமு மோகையுற
வுதவியே மதுரவுரையுமே.

தரும நீதியர்கள் தருமராசபுரி
அடையவே தரும ராசனும்
விரையவே அவரை எதிர்கொளா வரவு
வினவியே கருணை விழைவினால்

Koviloor Digital Library

அரிய ஆதனமும் அருளியே உதக
விதியும் ஆதி நடுவு அந்தமும்
ஒருமையோடு அவர்தம் உளமும் ஒகைஉற
உதவியே மதுர உரையும் ஏ.

உரை:

பிறருக்கு உதவுதலாகிய அறம்புரிந்தவர் எமன் உலகை அடையும்போது, நடுவன் விரைந்து எதிர் சென்று முகமன் கூறி அவரை வரவேற்று, அருளோடு கூடிய விருப்பத்தினால் அவர் அமருவதற்கு ஆசனம் தந்து, அவரது பாதத்தில் பாத்தியமும் வாயில் ஆசமனமும் சிரசில்அர்க்கியமுங் கொடுத்தலாகிய உதக விதியுபசாரத்தை மனஒருமையோடு செய்து அவர் உள்ளம் மகிழுமாறு இன்மொழிகளில் உரையாடுவன்.

விளக்கம்:

தருமநீதியர் - இல்லாதவர்களுக்கு உதவிய நல்லவர்கள். தருமத்தை அநுசரித்தலாகிய நீதிவழி நிற்பவர். தருமராசபுரி - எமன் உலகு; தருமராசன் என்பது இங்கு எமனைக் குறிக்கிறது. தருமராசன் என்பது கவுதம புத்தரையும் குறிக்கும்; பாண்டவரில் மூத்தனான யுதிட்டிரனையும் தருமராசன் என்பர்.

வரவு வினவுதல் - உபசார மொழிகள் கூறி வரவேற்றல். அரி - சிங்கம்; ஆதனம் - இருக்கை; உதகம் - நீர்; ஓகை - உவகை; மதுரஉரை - இனிய மொழி. ஏ - அசை. உதகவிதி - விருந்தாக ஏற்கப்படுவருக்கு நீர்கொண்டு செய்யும் மூவகை உபசாரங்கள். அவை:-

பாத்தியம் - பாதத்தில் நீர்விடுதல்; ஆசமனம் - வாயிதழில் நீர்விடுதல்; அர்க்கியம் - சிரசில் நீர்விடுதல்; ஆதி - பாதம்; நடு - வாய்; அந்தம் - சிரசு. (36)

409.. வேதமாதிதனி லோது நீதிபல
மேவினீ ரொருமை மேதையா
லாதலானுமையலாது தேடினரு
மாருயிர்க் குறுதியாவரே
நாதகீத நவின்மாதர் சூழ
நடமாட வேறுசிலர் நாண்மலர்ப்
போது சேரிரத மேறியே
கடிது போமினீரமரர் போகமே.

வேதம் ஆதிதனில் ஓதுநீதிபல
மேவினீர் ஒருமை மேதையால்
ஆதலால் உமைஅலாது தேடினரும்
ஆருயிர்க்கு உறுதி ஆவரே

Koviloor Digital Library

நாதகீதம் நவில் மாதர்சூழ நடமாட
வேறுசிலர் நாள் மலர்ப்
போது சேர்இரதம் ஏறியே கடிது
போமினீர் அமரர் போகம் ஏ.

உரை:

ஒரு முகப்பட்ட புத்தியுடன் வேத உபநிடதங்கள் முதலிய நூல்கள் கூறுகின்ற பலவகை நீதிமுறைகளை மேற்கொண்டிருந்தீர். ஆதலால், நீரல்லாதும் உம்மைத் தேடியடைந்தவர்களும் உயிர்க்குறுதி பெற்றோரேயாவர். இனி நீர், இசைக்கீதம் வல்ல இளம் பெண்கள் பாடவும் வேறுசில பெண்கள் நடனமாடவும் பெறுஞ் சிறப்புகளுடன் பூக்களால் அழகுசெய்யப் பெற்ற தேரில் அமர்ந்து அமரரின் போக பூமியை அடைவீர். இன்பங்களைப் பெறுவீர்.

விளக்கம்:

மேதை - அறிவாளி; நாதகீதம் - இசைப்பாடல்; நாள்மலர்ப் போது - புதிய பூ. (37)

410. எண்ணியாதொருபலத்தை நீரற
மியற்றினீர் தவறுமின்றியே
நண்ணியேயதனை விண்ணின்
மீதனுபவித்து நாளுமதுமாளமுன்
பண்ணியே யுடையபாவலேசமது பாறவே
யெமது பாலணைந்
துண்மினீர் நரகயாதனைப் பலமு
மென்றவர்க் கருளுரைப்பனே.

எண்ணியாது ஒருபலத்தை நீர்அறம்
இயற்றினீர் தவறும் இன்றியே
நண்ணியே அதனை விண்ணின் மீது
அனுபவித்து நாளும் அதுமாள முன்
பண்ணியே உடைய பாவ லேசம் அது
பாறவே எமது பால் அணைந்து
உண்மினீர் நரகயாதனைப் பலமும்
என்றவர்க்கு அருள் உரைப்பன்.

உரை:

எந்தப் பலனைப் பெறுவதற்காகத் தவறு இல்லாமல் தருமம்செய்தீரோ அதற்கு உரிய பயனை வானவர் உலகில் நுகரலாம். அந்நுகர்ச்சி முடிந்ததும் நீர்

Koviloor Digital Library

முற்பிறவியில் செய்தாயுள்ள சிறுபாவப் பகுதியின் பொருட்டு பின் எம்மை அணுகி சிறிது துன்பப் பலனை அனுபவித்துத் தொலைப்பீர் என யமராசன் அவர்களுக்கு அருளோடு உரைப்பான்.

விளக்கம்:

யாதனை - நரகத் துயரம்; லேசம் - சிறிது; உண்மின்நீர் - அனுபவிப்பீர் நீர். அதுமாள பாவலேசமது பாறவே எமதுபால் அணைந்து யாதனைப் பலமும் உண்மின் என்று அவர்க்கு அருள் உரைப்பன் - எனக் கூட்டுக. (38)

411. ஏவல்பெற்று நமனைத் தணந்திரத
மேறியே யறிவு தேறியே
தேவர்பெற்ற திவி தேசமுற்றதுல
போகமுற்று முறை சேரவே
மேவியிட்ட முறவே யிருப்பரிடர்
மேவுதற்கரியர் மெய்ம்மையே
பாவமுற்றினர்கள் பாதளக்
குழியிலேதமே யினிமையற்றுமே.

ஏவல்பெற்று நமனைத் தணந்து இரதம்
ஏறியே அறிவு தேறியே
தேவர் பெற்ற திவிதேசம் உற்று
அதுலபோகம் உற்றுமுறை சேரவே
மேவி இட்டம் உறவே இருப்பர்
இடர் மேவுதற்கு அரியர் மெய்ம்மையே
பாவம் முற்றினர்கள் பாதளக்குழியில்
ஏதமே இனிமை அற்று ஏ

உரை:

எமனுடைய பணிவிடைகளைப் பெற்று பின்னர், அவனை விட்டு அகன்று, அறிவுத் தெளிவு பெற்றுத் தேரில் ஏறி, வானவர் வாழும் சுவர்க்க உலகை அடைந்து, அங்குள்ள ஒப்பில்லாத இன்பங்களை நுகர்ந்து விருப்பத்தோடு தங்கியிருப்பார். அங்குத் துன்பம் இல்லையென்பது உண்மை. தேவ லோகத்தில் துன்ப மெய்தா தோவெனின் பாவஞ் செய்தவரடையும் நரகக் குழித் துன்பம் புண்ணியஞ் செய்தவர்களடையும் சுவர்க்க இன்பத்திற் பொருந்துமோ?பொருந்தாது.

விளக்கம்:

ஏவல் – பணிவிடை; தணந்து – நீங்கி; தேவர் – வானவர்; திவி – சுவர்க்கம்; திவிதேசம் – சுவர்க்க உலகு; அதுலம் – ஒப்பில்லாத; போகம் – இன்பம்; மேவி – பொருந்தி; இட்டம் – விருப்பம்; பாதளம் – பாதலம்; நரகம், மேற்செய்யுளில்

Koviloor Digital Library

சுவர்க்கத்தில் முழுஇன்பம் அநுபவித்தவர்கள் மீள ஒரு சிறு பாவபலனுக்காக மீள யமனிடம் வந்து நரகஞ் செல்ல வேண்டுவதேன். அத்துன்பப் பலனையும் அங்கே தானே அநுபவிக்கலாகாதா என்றெழக்கூடிய ஆசங்கைக்குப் பதிலளிக்கும் பாங்கில் அமைந்துள்ளது செய்யுளின் பின்பகுதி. (39)

412. புண்ணியப் பலங்கடன்னைப்
புகன்றனம் புவியிற்பாவம்
பண்ணினர் பலமுஞ் சொல்வாம்
பருப்பத முனிவ கேணி
திண்ணியர் பாவ பேதந்
தீர்ந்தவர் சிவனு முண்டென்
றெண்ணினரச்ச மெய்தக்
கேட்டிடும் போதோவென்றும்.

புண்ணிய பலங்கள் தன்னைப்
புகன்றனம் புவியில் பாவம்
பண்ணினர் பலமும் சொல்வாம்
பருப்பத முனிவ கேள் நீ
திண்ணியர் பாவ பேதம் தீர்ந்தவர்
சிவனும் உண்டு என்று
எண்ணினர் அச்சம் எய்தக்
கேட்டிடும் போதோ என்றும்.

உரை:

பொதிகை மலையில் வாழும் முனிவனே! இதுவரை புண்ணியச் செயல்களைச் செய்தவர்கள் பெறும் பயன்களை உரைத்தோம். இனி, உறுதியான உள்ளம் உடையவர்களும், சிவபிரான் ஒருவர் உண்டு என்று நம்புகின்ற நல்லவர்களும், எப்போதேனும் பாவச் செயல்களைச் செய்யப் பயப்படும்படி, பாவங்களைச் செய்தவர்கள் அடையும் பயன்களையும் புகல்வோம், அறிவாயாக!

விளக்கம்:

புண்ணியம் - நற்செயல்கள்; பலங்கள் - பயன் விளைவு; புகன்றனம் - உரைத்தோம்; சொல்வாம் - சொல்லுவோம்; பருப்பதம் - மலை; இது அகத்திய முனிவர் வாழ்ந்த பொதிகை மலையைக் குறிக்கிறது. இது தமிழகத்தில் உள்ளது.

முனிவன் - இது அகத்தியரைக் குறிக்கிறது. திண்ணியர் - தளரா உள்ளம் உடையவர். (40)

Koviloor Digital Library

பாவங்களின் பயன்

413. கருவினுளுயிரு மற்றைக் காயபேதங்கடன்னின்
மருவியவுயிருந் தொல்லை வல்வினை மாயவச்சம்
பெருகிட மோகந்துன்பம் பிரிந்துடற் பிரியும் போதிற்
றருமுடறாங்கித்தூதர் செலுத்திட யமனி சாரும்.

கருவினுள் உயிரும் மற்றைக் காயபேதங்கள் தன்னில்
மருவிய உயிரும் தொல்லை வல்வினை மாய அச்சம்
பெருகிட மோகம் துன்பம் பிரிந்து உடல் பிரியும் போதில்
தரும்உடல் தாங்கித் தூதர் செலுத்திட யமனிசாரும்.

உரை:

தாயின் வயிற்றில் கருவாக இருக்கிற உயிரும், விலங்குகள் முதலான வேறு உடல்களில் பொருந்தியிருக்கின்ற உயிர்களும் இந்தப் பிறவியில் அவை அனுபவித்துத் தீரவேண்டிய கருமபலன்களை அனுபவித்துப் போக்கியபடி பயமும் மயக்கமும் துயரமும் மேலிட, எடுத்த உடல்களை விட்டு நீங்கும். அவ்வாறு நீங்கியதும் நரகத் துன்பம் நுகருவதற்கு உரிய உடல்களைப் பெற்று, எமனுடைய பணியாள் காட்டுகிற வழியிலே சென்று யமன் உலகை அடையும்.

விளக்கம்:

காய பேதம் - உடல் வேறுபாடு; மருவிய - பொருந்தியிருக்கும்; தொல்லை - பழைய; வல்வினை - அனுபவிக்க வேண்டிய வினைகள்; மாய - தொலைய; மோகம் - உற்றார் உறவினர்மீது உள்ள பற்று;

துன்பம் - சாவுத் துயரம்; யமனி - யமனுடைய படைவீடு; தருமுடல் - துன்ப அனுபவத்துக்கேற்ற யாதனா சீரம். (41)

414. மண்டனின் மேருவென்னு மலைதனிற்
றென்பால் வார்ந்த
வெண்டிகழெண்பத்தாறா
யிரமெனும் யோசனாந்தந்
தண்டமுந்தரித்த கையன்
றங்கிய யமனிசாருந்
துண்டர்கடமக்குத் தூரமணித்தறந்
துன்னினார்க்கே.

மண்தனில் மேரு என்னும்
மலைதனில் தென்பால் வார்ந்த
எண்திகழ் எண்பத்து ஆறாயிரம்
என்னும் யோசனை அந்தம்

Koviloor Digital Library

தண்டமும் தரித்தகையன் தங்கிய
யமனி சாரும்
துண்டர்கள் தமக்குத் தூரம்
அணித்து அறம் துன்னினார்க்கு ஏ.

உரை:

தரையின் மீது மேரு மலையின் தெற்குப் பகுதியில் எண்பத்து ஆறாயிரம் யோசனை தூரம் நீண்டுள்ள, பாவிகளுக்குத் தொலைவிலும் புண்ணியருக்கு அருகிலும் உள்ள யமனி என்னும் பாசறை பொருந்திய இடத்தில் வளை தடியைக் கையில் ஏந்திய நடுவன் வாழுகின்றான்.

விளக்கம்:

யோசனை - யோசனை; ஒன்பது கல் தொலைவு உள்ள நீட்டலளவை, தென்பால் - தெற்குப் பக்கத்தில்; வார்ந்த - நீண்ட; தண்டம் - எமனுடைய படைக்கலம்; வளைதடி;

யமனி - எமனுடைய இல்லம் இருக்கும் பகுதி; துண்டர் - பாவியர்; தூரம் - தொலைவு; அறம் துன்னினார் - புண்ணியர்; அணித்து - அருகாமை; அண்மை; ஏ - அசை.

குறிப்பு:

யமனிருந்தால் யமபுரி இருக்குந்தானே? அதில் என்ன ஆச்சரியம்? அண்டத்தின் முழுமனை 'மேரு இடைபோம்' என்றிருத்தலால் *(திருமந்திரம்)* 'மேற்குத் தொடர்ச்சியில் மேரு' என்பது தவறு. (42)

415. சித்திரகுத்தன் சீவன் செய்தியின்றி றங்களெல்லாம்
புத்தியினொருமை செய்து புகன்றிடச் சமனும் போக்க
வொத்துயிர் கவருந் தூதர் வழியினு மொறுக்க வொல்கிச்
சித்தமுங் கலுழ்ந்து தீயார் செல்கைமுன் செப்புவாமே.

சித்திரகுத்தன் சீவன் செய்தியின் திறங்கள் எல்லாம்
புத்தியின் ஒருமை செய்து புகன்றிடச் சமனும் போக்க
ஒத்து உயிர்கவரும் தூதர் வழியிலும் ஒறுக்க ஒல்கிச்
சித்தமும் கலுழ்ந்து தீயார் செல்கைமுன் செப்புவாம் ஏ.

உரை:

எமனுடைய கணக்கன் ஆன சித்திரகுப்தன் உயிர்களின் செயல் வேறுபாடுகளை அவரவர் ஆயுள் முடிவடையும் போது, தன் அறிவினால் உணர்ந்து எமனுக்கு அறிவிக்க உடனே அவன் ஆயுள் முடிவடைந்தவர்களைக் கொண்டு

Koviloor Digital Library

வருமாறு தன் பணியாட்களை ஏவ, அவர்கள் உயிர்களை யமன் ஊருக்குக் கொண்டுவரும் வழியில், நெடுகிலும் கொடுக்கும் தண்டனையால் தீயவர்கள் உள்ளம் வருந்தித் தளர்ந்து செல்லுவதை முதலில் உரைப்போம்.

விளக்கம்:

சீவன் - உயிர்; செய்தியின்திறம் - செயல்களின் வகைகள்; **சமன்** - எமன்; **ஒறுக்க** - தண்டிக்க; **ஒல்கி** - தளர்ந்து; **கலுழல்** - வருந்தி அழுதல்; **ஏ** - அசை; (43)

எமனுடைய பணியாளர்கள்

416. மைத்திகழ் தருவரையினை
நிகர்வடிவுடையவர் வலியார்
மெய்த்திகழ் தருமரணமுமுளர்
விடவரவன வினையார்
குத்திர வினைபலவுடையவர்
குணமிலவல கொடியார்
இத்தகைமை யரியமன
துரைவழி விலகுதலிலரே.

மைத்திகழ் தருவரையினை நிகர்
வடிவுடையவர் வலியார்
மெய்த்திகழ் தரும் அரணமும் உளர்விட
அரவு அன்ன வினையார்
குத்திரவினைபல உடையவர் குணம்இல்
அவல கொடியார்
இத்தகைமையர் இயமனது உரைவழி
விலகுதல் இலர் ஏ.

உரை:

யமனுடைய பணியாளர்கள் கருநிறம் விளங்கும் மைநாகமலை போன்ற பருத்த வடிவமுடையவர்கள். உடம்பில் விளங்கும் கவசமுமணிந்துள்ளவர்கள். தீண்டிய மாத்திரத்தே உயிருண்ணும் விஷப்பாம்பின் செயல் போன்ற செயலாளர். சூழ்ச்சி முறையில் வஞ்சனைச்செயலாற்றுவதிலும் வல்லவர். பாவிகளிடத்து நன்மையற்ற (இரக்கமற்ற)அவலமான கொடுஞ்செயல்களே விளைப்பவர்கள்? இத்தகைய அப்பணியாளர் இயமன் சொல்வழி தவறார்.

விளக்கம்:

அஞ்சனம் - கண்ணுக்கு இடும் மை; இருண்ட நிறம்; **வரை** - மலை; **விட**

Koviloor Digital Library

அரவு - நஞ்சு உடைய பாம்பு; வரை - மாலை; குத்திரம் - வஞ்சகம்; உரைவழி - சொற்படி; ஏ - அசை. மை திகழ்தரும் வரை - மைநாக மலை. இது நிறம் பருமை வலிமை மூன்றற்க்கும் ஒரே உவமை. அரணம் - மார்புக் கவசம். (44)

நடுவனுடைய பணியாளர்கள்

417. வீரமுமுளர் வெகுளியுமுளர் விரைதலுமுளருடலத்
தீரமுமுளர் சினமுதலிய செறு நெறியினர் திருமுன்
னீரமு முளரெரியு மிழ்விழியிருமையுமுள ரிகலிற்
கூரமுமுளர் கொடுபடையினு முயிருணவல கொடியார்.

வீரமும் உள்வெகுளியும் உள் விரைதலும் உள் உடலத்
தீரமும் உள்சினம் முதலியசெறும் நெறியினர் திருமுன்
ஈரமும் உள்ளரி உமிழ்விழி இருமையும் உள் இகலில்
கூரமும் உள்கொடு படையினும் உயிர்உண்ண வல்ல கொடியார்.

உரை:

எமனுடைய பணியாளர் வீரமும், தீய செயல்களைச் செய்தவரிடம் கோபமும், எமன் ஏவிய பணிகளைச் செய்வதில் வேகமும், உடல் உறுதியும், கோபத்தை வென்ற நன்னெறியாளரிடம் இரக்கமும், தீ கக்கும் இரண்டு கண்களும் உள்ளவர்கள். பகைத்தவரிடம் கோரமாக இயல்பவர்.ஆயுதத்தைப் பயன்படுத்தி அவர்கள் உயிரைக் கவரவல்ல கொடியரும் ஆவர்.

விளக்கம்:

வெகுளி - கோபம்; தீரம் - உறுதி; செறும் - அடக்கும்; திருமுன் - முன்னிலை; ஈரம் - இரக்கம்; எரி - நெருப்பு; இருமை - இரண்டு; இகல் - பகை; கூரம் - கொடுமை;

குறிப்பு:

கூரம் கோரமாதல் கூடும் படையிலும் உயிருணவல்ல கொடியர் என்பதற்குப் படை உயிருண்ணுங் கொடுமையிலும் பார்க்கக் கூடுதலான கொடுமை வாய்ந்தவர்கள் எனப் பொருள் கொள்ளுதல் சொல் நிலைக்குப் பொருந்தும். இப்பொருளில் இல் ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் வந்ததாக அமையும். (45)

418. காலமுமிது வெனவறியுநர் கருமமுமிவை யெனவும்
சூலமுமொருகர மருவினர் சுழல் வலையமு மொருகைப்
பாலகனரனெனு மறிவறு பதர் மனிதர்கள் பயமுற்
றோலமுமிட வுடலினைவிட வுயிர்கவர் வினையுடையார்.

Koviloor Digital Library

காலமும் இது என அறியுநர் கருமமும் இவை எனவும்
சூலமும் ஒருகரம் மருவினர் சுழல்வலையமும் ஒரு கைப்
பாலகன் அரன்எனும் அறிவுஅறு பதர் மனிதர்கள் பயம் உற்று
ஓலமும் இட உடலினைவிட உயிர் கவர்வினை உடையார்.

உரை:

எமனுடைய ஏவலர் ஒவ்வொருவருடைய இறுதிக் காலத்தையும் அவர்கள் செய்த செயல்களின் தன்மைகளையும் அறிய வல்லவர்கள்; ஒரு கையில் மூவிலை வேலையும், மறு கையில் பாசக் கயிற்றையும் கொண்டிருப்பவர்கள்; உலக உயிர்களைப் பாதுகாப்பவன் சிவபெருமானே என்று உணரும் திறமையில்லாத உள்ளீடு அற்ற பதர் போன்ற மாந்தர்கள் அச்சத்தால் அலறி ஓலமிடவும் அதை நோக்காது உடலைவிட்டு உயிரைக் கொண்டு செல்லும் தொழிலினை உடையவர்கள்.

விளக்கம்:

அறியுநர் - அறிபவர்; சூலம் - மூவிலைவேல்; வலையம் - வலயம், இது சுருளாக உள்ள பாசக் கயிற்றைக் குறிக்கிறது. பாலகன் - பரிபாலிப்பவன்; பாதுகாப்பவன்; பதர் - அறிவற்றவன்; ஓலம்இட - அலறி அழ; வினை - தொழில்.

உடலினை விட என்பதில் விட, விட்டு என்னும் பொருளில் நின்றது. அதாவது செய்தெனச்சம் செயவெனெச்சமாகத் திரிந்து நின்றது. ஓலமுமிட என்பதில் 'உம்' மையை இடம் மாற்றி ஓலமிடவும் எனக்கூட்டி அதைப்பொருட் படுத்தாது எனவருவித்துக் கொள்க. (46)

419. நிட்டுரதரர் நினைவழியவு நிலையில சிலருடலைக்
கட்டுவர் முதுகுறவலிமலி கயிறுற விருகரமும்
பிட்டுதிரமு மொழுகிட விடர் பெருகிட வலறிடவும்
வெட்டுவருயர் விணில்லமர விசிறுவ ரறவெடியார்.

நிட்டுரதரர் நினைவு அழியவும் நிலைஇல சிலர்உடலைக்
கட்டுவர் முதுகுஉற வலிமலி கயிறுஉற இரு கரமும்
பிட்டுஉதிரமும் ஒழுகிட இடர் பெருகிட அலறிடவும்
வெட்டுவர் உயர் விண்ணில் அமரவிசிறுவர் அற வெடியார்.

உரை:

நிட்டுரச் செயல்களில் அதிகரித்தவர்களும் வெடிபடப் பேசுபவர்களுமான யமன் பணியாளர்கள் தம்மைக் கண்ட மாத்திரத்தே நினைவழிந்து போகின்றவர் களாயிருக்கும் ஆதரவற்ற பாவிகள் சிலருடைய உடல்களைக் குப்புறக் கிடத்தி

Koviloor Digital Library

கைகள் முதுகோடு பொருந்துமாறு பலமான கயிற்றாற் கட்டி, உடல் கிழிந்து குருதி வடியத் துயரம் பெருகி அலறி அழும்படி, உடலைப் பல துண்டுகளாக வெட்டிச் சிதைத்துஅவற்றை வானத்தை நோக்கி வீசி எறிவர்.

விளக்கம்:

நிஷ்டுரத்தில் அதிகரித்தவர். **நிஷ்டுரம்** - தாங்கொணாக் கொடுமை 'தர' comparative suffix அதிகம் எனப் பொருள் தர வருவது. **வலிமலி** - மிக வலிமையான.

பிட்டு - கிழிந்து; **உதிரம்** - குருதி; **விசிறுவர்** - வீசி எறிவர்; **வெடியார்** - வெடிபடப் பேசுகிறவர்கள். (47)

420. **இத்தகைமைய வியமன படரிடை விடலில வலியாற்**
குத்திரர்குணமறு சிறுமையர் கொடியன வினையுடையார்
கைத்துளமுடனடலையுமுற நயவிய துணையறவே.
சித்திரமிகு துயருறு வழி செறிவர்கள் பிரிவறவே.

இத்தகைமைய இயமன படர்இடை விடல்இல வலியால்
குத்திரர் குணம் அறு சிறுமையர் கொடியன வினை உடையார்
கைத்து உளமுடன் நடலையும் உற நயவிய துணைஅறவே
சித்திரம் மிகுதுயர் உறுவழி செறிவர்கள் பிரிவு அற ஏ.

உரை:

இந்த இயல்புகளும் நீங்காத உடல் வலிமையையும் உடைய எமனுடைய பணியாட்கள், வஞ்சகரும், நற்குணமில்லாதவர்களும், அற்பஅறிவு உடையவரும், கொடிய தொழில்களைச் செய்தவர்களுமாகிய பாவிகளை, அவர்கள் உள்ளம் கசந்து, துன்பம் உறுமாறு, நயம் பண்ணும் துணைவர் யாருமின்றிப் பலவகைத் துயரங்கள் பொருந்திய வழியாக அவர்கள் விலகிப் போகவிடாமல் நெருக்கிக் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள்.

விளக்கம்:

இயமனபடர் - எமன் ஏவியதைச் செய்து முடிப்பவர்கள். **விடல்இல** - விட்டு விலகாத; கிங்கரர் என்பது யமதூதரின் பெயர்;**குத்திரர்** - விருச்சிகர்;

குணம்அறு - நல்லகுணம் இல்லாத; **சிறுமையர்** - அற்பர்; **கைத்து** - கசந்து; **நடலை** - துன்பம்; **நயவிய** - நட்புடைய;

சித்திரம் - இது இங்குசித்திரவதைப்படும் துன்பத்தைக் குறிக்கிறது. (48)

Koviloor Digital Library

நரகத்திற்குச் செல்லும் வழியில் துயர்

421. கண்டகமுறுநெறி செறிசில கரிசர்கள் கதறா
விண்டிட விரைவினர் விடுமுறையறிகிலர் விழுவார்
திண்டிகழ் சிலைநுதி செறிநெறி குறுகிய சிறியார்
பிண்டிட விணையடி பிழையுற விழுவர்கள் பிழையார்.

கண்டகம் உறு நெறி செறிசில கரிசர்கள் கதறா
விண்டிட விரைவினர் விடுமுறை அறிகிலர் விழுவார்
திண்திகழ் சிலைநுதி செறிநெறி குறுகிய சிறியார்
பிண்டிட இணைஅடி பிழைஉற விழுவர்கள் பிழையார்.

உரை:

தாங்கள் செய்த பாவச் செயல்களால் முள் அடர்ந்த வழியாகச் செல்லுகிற பாவிகளிற் சிலர், தங்கள் கால்களில் தைத்த முட்களின் வேதனையால் கதறி அழுதபடி செல்வர். சிலர் தங்களின் கால்களிலே தைத்த முட்களைப் பிடுங்கி ஏறியும் முறை தெரியாமல் வழியிலே விழுந்து கிடப்பர். சிலர் உறுதியும் கூர்மையும் உடைய கற்கள் கிடக்கும் வழியாகச் சென்று, காலின் தசை கிழிந்து விழுவார்கள்.

விளக்கம்:

கண்டகம் - முள்; கரிசர்கள் - பாவிகள்; விடுமுறை - பிடுங்கி எறியும் வழி; திண் - உறுதியான; சிலைநுதி - கூர்மையான கல்; பிண்டிட - கிழிய; இணை - இரண்டு; பிழையார் - பாவிகள். (49)

நரகத்திற்குச் செல்லும் வழியின் துயரம்

422. அளறுறு நெறியிடையடியுற விடுமுறை யறியா
ருளமறுகிடவுட னடலையுமுறவலி யொழிவார்
பளமுறு நெறிசிலர் படர்வர்களிடர்பல படவே
பிளவுறவுடன் முழுதரி குசைநுதி வழிபிரியார்.

அளறுஉறு நெறிஇடை அடிஉற விடுமுறை அறியார்
உளம்மறுகிட உடல்நடலையும் உறவலி ஒழிவார்
பளம்உறு நெறிசிலர் படர்வர்கள் இடர்பலபடவே
பிளவுஉற உடல்முழுதரி குசைநுதி வழிபிரியார்.

உரை:

சிலர் சேறு நிரம்பிய நிலத்திலே நடக்கத் தொடங்கிச் சேற்றில் அழுந்திய

Koviloor Digital Library

கால்களை எடுக்கமுடியாமல் மனங்கலங்கி உடல் வருந்தி, பலம் இழந்து நிற்பர். சிலர், ஆழமான பள்ளங்களின் வழியே நடந்து துயரப்படுவர். சிலர் நாணற்புல் அடர்ந்த வழியிலே செல்லும்போது நாணற் புல்லின் கூரிய நுனி உடலில் குத்திக் கீறலும் அரிப்பும் ஏற்பட யமபுரியை நோக்கி நடப்பார்கள். (50)

நரக வழியின் துயரம்

423. விடமமு முறு தடம் விரவியகலர் சிலர் மெலிவார்
தடவரையிடைநடை தளர்வுறவறு தமியார்
பொடியறு தழல்வழி புகுதுவர் நிலையிலர் புவிஆர்
படுகுழி விடமமு மடைவர்கள் சிலரிடர் படவே.

விடமமும் உறுதடம் விரவிஅகலர் சிலர் மெலிவார்
தடவரைஇடை நடை தளர்வுஉற அறு தமியார்
பொடிஅறு தழல்வழி புகுதுவர் நிலைஇலர் புவிஆர்
படுகுழி விடமமும் அடைவர்கள் சிலர்இடர்பட ஏ.

உரை:

சிலர் சமதரையாக இல்லாத நிலத்தின் வழியே நடந்து சென்று வருந்துவர்; சிலர் ஏற்ற இறக்கங்கள் உள்ள பெரிய மலைத்தொடர் வழியாக நடந்து சென்று, களைப்படைந்து, உதவி செய்பவர் இல்லாமல் தனித்து விடப்பட்டவராகத் தரையிலே அமருவர்; சிலர் புகை படராமல் எரியும் தீயின் வழியாகச் செல்லுவர்; சிலர் குழிகள் நிரம்பிய வழியிலே நடந்து துயர்ப்படுவர்.

விளக்கம்:

விடமம் - சமத்தரையாக இல்லாத நிலம் (வி + சமம் = விஷமம், சமன மற்றது); தடவரை - பெரியமலை; தமியார் - உதவியற்றவர்; பொடி - சாம்பல்; படுகுழி - பள்ளம். (51)

நரகவழியில் ஏற்படும் துன்பம்

424. சரநிகர்சகலமுமுறு நெறி செறி சில தமியார்
வெருவுவரழனிகர்வியன் மணலிடைவழி விழுவார்
நிரைமுளை நிறுவிய நெறியிடை யடிதளர் நிலையார்
பருவரலுறுவர்கண்முளை முளுமுறு நெறி படர்வார்.

சரம்நிகர் சகலமும் உறுநெறி செறிசில தமியார்
வெருவுவர் அழல்நிகர் வியல்மணலிடை வழி விழுவார்
நிரைமுளை நிறுவிய நெறியிடை அடி தளர் நிலையார்
பருவரல் உறுவர்கள் முளைமுள்ளும் உறுநெறி படர்வார்.

Koviloor Digital Library

உரை:

சிலர் அம்பு போன்ற கூர்மையான சிறு ஓடுகளும் சிறு கற்களும் பரவிக் கிடக்கும் மிக நீண்டுள்ள வழியாகச் சென்று, உதவுகிறவர் இல்லாமல் பயந்து நிற்பர்; சிலர் தீயைப் போலக் கொதிக்கும் சூடு உள்ள மணல் பரந்த வழியாகச் சென்று, வெப்பம் தாளாமல் அம்மணலிலேயே விழுவர். சிலர் வரிசையாக ஆப்புகளை நிறுத்தி வைத்திருக்கும் வழியிலே சென்று அந்த ஆப்புகள் கால்களிலே குத்த, அதனால் கால் சோர்ந்து நிற்பர்; சிலர் மூங்கில்களின் முட்கள் பரவியுள்ள வழியிலே சென்று துன்புறுவர்.

விளக்கம்:

சகலம் - துண்டு துணுக்கைகள் ஓடுசல்லி முதலாயின; சரம் - அம்பு; தமியார் - உதவியற்றவர்; வெருவுதல் - அஞ்சுதல்; அழல் - நெருப்பு; வியல் - அகலம்; நிரை - வரிசை; ஒழுங்கு; நெறி - வழி; முளை - ஆப்பு, மூங்கில்; பருவரல் - துன்பம். (52)

425. கூரிருணெறி செறி கொடுமையர்
சிலர் நிலைகுலைவார்
காரயவலி தொடர்கனலனல்
வழியிடை கலுழ்வா
ராரழல்வன நெறியடையுநர்
சிலர் நினைவழிவார்
தீரவுமறிகில ரழனிகர்
சிலைசெறி சிறியார்.

கூர்இருள் நெறிசெறி கொடுமையர்
சிலர்நிலை குலைவார்
கார்அயம் வலிதொடர் கனல்
அனல் வழியிடை கலுழ்வார்
ஆர் அழல்வனம் நெறி அடையுநர்
சிலர் நினைவு அழிவார்
தீரவும் அறிகிலர் அழல்நிகர்
சிலை செறி சிறியார்.

உரை:

சிலர் இருள் அடர்ந்த வழியிலே சென்று ஒளி காணாமல் நிலை அழிவர்; சிலர் தீப்பொறி வெளிப்படக் காய்ச்சிய இரும்புச் சங்கிலி பின்னிக் கிடக்கும் வழியிலே நடக்க முடியாமல் அழுவர்; சிலர் காட்டுத் தீ எரியும் வழியிலே நடந்து அத் தீ பட்டு அறிவு குலைவர்; சிலர் தீ போலச் சுடுகின்ற கற்கள் கிடக்கும் வழியிலே போய் அதிலிருந்து விலகிச் செல்லும் வழி தெரியாமல் மயங்குவர்.

Koviloor Digital Library

விளக்கம்:

கூர் - அடர்ந்த; கார் - கருமையான; அபயம் - இரும்பு; கனல்,அழல், கனல் இவை தீயைக் குறிக்கும்; வனம் - காடு; சிலை - கல்; சிறியார் - அற்பர். (53)

426. உடைவர்கள் பனிநனியுறு செறியதுதனையுறுவார்
மிடறளவுறு மணல் விரவியகலர் சிலர் மெலிவார்
சுடரனதுளிமழை சொரிவழிதனினிலை தொலைவார்
வடிவற மயலுற வறளியினழல்வச மறுவார்.

உடைவர்கள் பனிநனி உறுநெறி அதுதனை உறுவார்
மிடறு அளவு உறுமணல் விரவி அகலர்சிலர் மெலிவார்
சுடர்அன துளிமழை சொரிவழிதனில் நிலை தொலைவார்
வடிவுஅற மயல்உற வறளியில் அழல்வசம் அறுவார்.

உரை:

சிலர் பனிமிகுந்த வழியிலே சென்று அப்பனியின் குளிரால் மனம் கலங்குவர்; சிலர் கழுத்துவரை அமிழ்த்தும் மணல் வழியே சென்று வருந்துவர்; சிலர் நெருப்புத் துளிகளையுடைய மழை பெய்யும் வழியிலே சென்று நிலை அழிவர்; சிலர் வறளித்தீ பொருந்திய வழியிலே சென்று உடலின் திறம் கெட்டு வாடி வருந்துவர்.

விளக்கம்:

உடைவர் - மனம்கலங்குவர்; நனி - மிகுதி; மிடறு - கழுத்து; அகலர் - நீங்காமல்; மெலிவார் - வருந்துவார்; சுடர் - தீச்சுடர்; சொரி - பொழியும்; வடிவுஅற - உடல்கெட; வறளி - மணல் நிலம்; வறளி - வறளுதல் உடையது எனும் பொருளிற் பாலை நிலமுமாம். (54)

427. சிங்கமுமுறு நெறிசெறிவின ரறிவிலர் செயலுந்
தங்கியபுலிவனமடையுநர் நிலையிலர் தளர்வார்
வெங்கொலை மிருகமு முடலட வொருவழி விழுவார்
விங்கிட மசகமு முடலினை நினைவினை விடுவார்.

சிங்கமும் உறுநெறி செறிவினர் அறிவுஇலர் செயலும்
தங்கிய புலிவனம் அடையுநர் நிலைஇலர் தளர்வார்
வெம்கொலை மிருகமும் உடல்அட ஒருவழி விழுவார்
விங்கிட மசகமும் உடலினை நினைவினை விடுவார்.

Koviloor Digital Library

உரை:

சிலர் சிங்கங்கள் வாழும் வழியே சென்று செய்வது அறியாமல் மயங்குவர்; சிலர் புலிகள் வாழும் வழியாகப் போய்த் தம் செயலிழந்து வருந்துவர்; சிலர் பிற கொடிய விலங்குகள் வாழும் வழியாகச் சென்று, அவை தங்களின் உடல்களைத்தாக்க வேறு ஒரு வழியாகப் போய் விழுவர்; சிலர் கொசுக்கள் தங்களின் உடல்களைத் துளைத்து வகுத்த அறிவு மயங்குவர்.

விளக்கம்:

வெம் - கொடிய; அட - உடலைத் தாக்க; விங்கிட - கடிக்க; மசகம் - கொசுகு; நிலை இலர் - செயலற்றவர்; (55)

428. உளைவர்களுடல் குடை கிருமிகளுறு நெறியுறுவார்
செளுகையுமுடலட வொருவழி யறிவிலர் செறிவார்
துளையுற வுடலடு சிறுபறவைகளொடு சுழல்வார்
விளைவற விடவரவடர் வழியய ருற விழுவார்.

உளைவர்கள் உடல்குடை கிருமிகள் உறுநெறி உறுவார்
செளுகையும் உடல்அட ஒருவழி அறிவுஇலர் செறிவார்
துளைஉற உடல் அடு சிறுபறவைகளொடு சுழல்வார்
விளைவுஅற விட அரவு அடர் வழி அயர் உற விழுவார்.

உரை:

சிலர் உடலைக் குடைகிற புழுக்கள் இருக்கும் வழியிலே சென்று வருந்துவர். சிலர் அட்டைகள் உள்ள வேறு வழியிலே போய் அவை கடித்து இரத்தம் குடிக்க அதனால் அறிவு கலங்குவர்; சிலர் உடம்பினைத் துளைக்கும் சிறிய பறவைகளால் கொத்தப்பட்டு மயங்குவர்; சிலர் நஞ்சுடைய நச்சுப் பாம்புகள் இருக்கும் வழியே சென்று அவை தீண்ட, அதனால் உடல் சோர்ந்து நிற்பர்.

விளக்கம்:

உளைவர் - மனம் வருந்துவர்; செளுகை - அட்டை; உடல்அடு - உடம்பைத் துளைக்கின்ற; அரவு - பாம்பு; அடர் - நெருக்கமான; விளைவு அற - செயல் அற்றுப்போக, சிறுபறவைகள் என்பது இங்கு வவ்வால்களைக் குறிக்கும். வவ்வால் வகைகளில் துரிஞ்சில்கள். இவை தூங்குகின்றவர்களின் தோலைப் பற்றி இரத்தத்தை உறிஞ்சும். ஆனால் வவ்வால் பறவை அன்று. அது சிறியதாயினும் பெரியதாயினும் குட்டியீன்று பால் கொடுக்கும். ஆகவே, விஞ்ஞானிகள் வவ்வாலைப் 'பறக்கும் விலங்கு' என்று கூறுவர். (56)

Koviloor Digital Library

429. கடகரி தொடர்வழியழு தழு தயர்வொடு கலுழ்வார்
உடலடவுளியமுமொருவழி நினைவினை யொழிவார்
இடபமுமடர் வழியிடர்பல படுவர்க ளெளியார்
திடமுடைமயிடமுமடர் வழியழிவர்கள் செயலோ.

கடம்கரி தொடர்வழி அழுது அழுது அயர்வொடு கலுழ்வார்
உடல்அட உளியமும் ஒருவழி நினைவினை ஒழிவார்
இடபமும் அடர்வழி இடர்பல படுவர்கள் எளியார்
திடம்உடை மயிடமும் அடர்வழி அழிவர்கள் செயல்ஓ.

உரை:

சிலர் மதங்கொண்ட யானைகள் உள்ள வழியாகச் சென்று அவை தாக்குவதால் சோர்வடைந்து கலங்குவர்; சிலர் கரடிகள் உள்ள வழியாகப் போய் அவை கடிப்பதால் மனம் கலங்குவர்; சிலர் மூர்க்கமான எருதுகள் மிகுதியாக உள்ள பக்கமாகச் சென்று அவற்றால் ஏற்படும் இடர்களைத் தடுக்க முடியாமல் இளைத்து நிற்பர்; சிலர் காட்டு எருமைகள் மிகுதியாக உள்ள பக்கமாகப் போய்ச் செய்வதறியாமல் அழிவர்.

விளக்கம்:

கடம் - யானைமதம்; கரி - யானை; கடகரி - மதயானை; அயர்வு - சோர்வு; உளியம் - கரடி; இடபம் - காளை,எருது, விடை; எளியார் - வலிமை இல்லாதவர்; திடம் - உறுதி; மயிடம் - எருமை. (57)

430. ஒட்டகமுறு நெறியுடல் வினைகெடநினை வொழிவார்
நிட்டுரமகளிருமடர் வழியழிவது நினைவோ
வெட்டிமைநிசிசரர்மிடைவழியுடல் வினை விடுவார்
தொட்டிட விறலுறு பிணிபல வயர்வொடு சுழல்வார்.

ஒட்டகம் உறுநெறி உடல்வினை கெடநினைவு ஒழிவார்
நிட்டுரமகளிரும் அடர்வழி அழிவது நினைவோ
வெட்டிமை நிசிசரர் மிடைவழி உடல்வினை விடுவார்
தொட்டிட விறல்உறு பிணிபல அயர்வொடு சுழல்வார்.

உரை:

சிலர் ஒட்டகங்கள் உள்ள பக்கமாகப் போய்ச் செயல் இழப்பர். சிலர் பேய்கள் உள்ள வழியாகச் சென்று அவை செய்யும் துயரால் அறிவையும் நினைவையும் இழப்பார்கள்; சிலர் கொடுமை புரியும் இராக்கதர் அதிகமாக உள்ள பக்கமாகச் சென்று உடலின் செயல் இழப்பார்கள்; சிலர் பற்றிய நோய்கள் குணமாகாமல் சோர்ந்து மயங்குவர்.

Koviloor Digital Library

விளக்கம்:

நிட்டுர மகளிர் - கொடுமைக்குணம் உள்ள பெண்கள். இது பெண் பேயைக் குறிக்கிறது; வெட்டிமை - கொடுமைக் குணம்; நிசிசரர் - இரவில் இயங்குபவர்; (58)

431. ஊறுறவுடலிடை யுணர்விலர் சரமழையுறவே
கூறுறவுடல்பல குலிசமதுறுமழை கொளவே
நீறுறவுடல் கெடவொருவழியழிவது நினைவோ
தேறியவழன் மழைபலபல முறையொடு தெறவே.

ஊறுஉற உடல்இடை உணர்வுஇலர் சரம் மழை உறவே
கூறுஉற உடல்பல குலிசம்அதுஉறு மழை கொளவே
நீறுஉற உடல்கெட ஒருவழி அழிவதுநினைவோ
தேறிய அழல் மழை பலபல முறையொடு தெற ஏ.

உரை:

சிலர் உடம்பு துன்பம் அடைய அம்பு மழையால் வருந்தி அறிவு கலங்குவர்; சிலர் வச்சிராயுத மழைபட்டு, உடம்பு பல துண்டுகளாகச் சிதைந்து கெடுவர்; சிலர் நெருப்பு மழை பலவிதமாகப் பெய்து தாக்குவதால் உடல் வெந்து சாம்பலாகி, அறிவும் செயலும் கெட்டு அழிவர்.

விளக்கம்:

சரம் - அம்பு; ஊறு - துன்பம்; கூறுஉற - பலதுண்டுகளாகச் சிதைய; குலிசம் - வச்சிராயுதம்; நீறு - சாம்பல்; அழல் - தீ, தெற - சுட; ஏ - அசை. (59)

432. கடுகிய வனிலனு முறுநெறி துகளொடு கலுழ்வார்
பொடிமழை பொழிவழி நிலையற வலலொடு புகுவார்
உடல்பிள வொருவழி மழைபொழி சிலையுறவுளைவா
ரிடிவிழவிழமினுமிடருற நிலவு தலிலரே.

கடுகிய வனிலனும் உறுநெறி துகளொடு கலுழ்வார்
பொடிமழைபொழிவழி நிலைஅற அல்லலொடு புகுவார்
உடல்பிளவு ஒருவழி மழைபொழி சிலைஉற உளைவார்
இடிவிழ விழமின்னும் இடர்உற நிலவுதல் இலர் ஏ.

உரை:

சிலர் புழுதியைக் கிளப்புகிற பெருங்காற்று வீசும்வழியிலே சென்று வருந்துவர்; சிலர் புழுதி மழை பொழியும் வழியிலே தங்கி நிற்க இடமில்லாமல்

Koviloor Digital Library

துயரத்தோடு செல்லுவர்; சிலர் உடம்பு பிளவுபடும்படி கொட்டும் கல்மழை தாக்கி வருந்தி நிற்பார்கள்; சிலர் செல்லும் வழியில் இடியாலும் மின்னலாலும் துயரடைந்து அறிவுமயங்கி நிலையழிவார்.

விளக்கம்:

கடுகிய - விரைவாக வீசுகிற; அனிலம் - காற்று; துகள் - பொடி; பொடி - புழுதி; அல்லல் - துயரம்; சிலை உற - கல் பொருந்த; உளைவார் - வருந்துவார்; மின் - மின்னல்; நிலவுதல் - விளங்குதல். ஏ - அசை. (60)

433. ஆயுதவருடமு மொருவழியுடலினையரியக்
காய்கனலினை நிகர்கடுவறல் சுடவுடல் கலுழ்வார்
ஒய்வர்கள் குளிர்பனியனிலனு முறுவழியுளைவார்
ஏய்வர்களினையன விடர்பல வழியுறு மெளியார்.

ஆயுதவருடமும் ஒருவழி உடலினை அரியக்
காய்கனலினை நிகர்கடுஅறல் சுட உடல் கலுழ்வார்
ஒய்வர்கள் குளிர்பனி அனிலனும் உறுவழி உளைவார்
ஏய்வர்கள் இனையன இடர்பல வழிஉறும் எளியார்.

உரை:

சிலர் வேறு ஒருவழியாகச் செல்லும்போது போர்க்கருவிகள் மழை பொழிவது போல விழுந்து உடல் உறுப்புகள் துண்டிக்கப்படுவர்; சிலர் எரிகிற நெருப்பைப் போன்ற நச்சுநீர் உடல்மீது விழுந்து சுட, அதனைத் தாங்க முடியாமல் சோர்ந்து விழுவர்; சிலர் குளிர்ந்த பனியும் பனிக்காற்றும் பொருந்திய வழியிலே சென்று குளிர் தாங்க முடியாமல் வருந்துவர்; இவ்வாறு கூறிய வழிகளிலே செல்லு கின்ற நல்வினை இல்லாதவர்கள், இத்தகைய துயரங்களை அனுபவிப்பார்கள்.

விளக்கம்:

ஆயுதம் - போர்க்கருவி; வருடம் - (வர்ஷம்) மழை; அரிய - துண்டிக்க; காய் - சுடுகிற;நிகர் - ஒத்த; கடு - நஞ்சு; அறல் - நீர்; கலுழ்வார் - அழுவார்; ஒய்வர் - ஒய்ந்து இருப்பார்கள்;

உளைவார் - வருந்துவார்; ஏய்வர் - பொருந்துவர்; இனையன - இத்தகைய; எளியார் - எளிமை நிலை யடைந்தோர். (61)

434. கடுகிய பசியுற வொருவழி யறிவிலர் கலுழ்வார்
விடுமுறையறிகிலர் விரவிய கொடுமைய வினையார்
இடர்படுவது முனைவினையென வுளமதிலெணுவார்
திடம்உடை யமபடர் வலிசெய வழியொடு செறிவார்.

Koviloor Digital Library

கடுகிய பசிஉற ஒருவழி அறிவுஇலர் கலுழ்வார்
விடும்முறை அறிகிலர் விரவிய கொடுமைய வினையார்
இடர்படுவது முனைவினைஎன உளமதில் எணுவார்
திடம் உடை யமபடர் வலிசெய வழியொடு செறிவார்.

உரை:

சிலர் மற்றொரு வழியில் சென்று மிகுந்த பசியினால் அறிவு மங்கி அப்பசியைப் போக்கும் முறை தெரியாமல் கலங்குவர்; இத்தகைய தீமையாளரான பாவிகள், தாங்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கு முன் செய்த பாவங்களே காரணம் என எண்ணுவர். அவர்கள் எல்லோரும் மிகுந்த வலிமையுடைய எமனுடைய பணியாள்கள் கொடுமை செய்யத் துயருற்று, யமன் உலகுக்குச் செல்லும் வழியிலே செல்லுவர்.

விளக்கம்:

கடுகிய - மிகுதியான; கலுழ்வார் - கலங்குவார்; விடும்முறை - தீரும் வழி; கொடுமைய வினையார் - பாவிகள்;

இடர்படுவது - துன்புறுவது; முனைவினை - முன்னைவினை, முன் செய்த பாவம்; உளமதில் - மனத்தில்; எணுவார் - எண்ணுவார், நினைப்பார்;

திடம் - வலிமை; யமபடர் - எமனுடைய பணியாள்கள்; வலிசெய - கொடுமை செய்ய; (62)

யமனுடைய பணியாள்கள் பாவிகளைக் கொண்டு செல்லும் முறை

435. சிலரைத் தொடரிற் செறிவித்தடியிற்
றலையைத் தரையிற் றகவைத்துயர்வா
னெலையிற் சரணத் தினைவைத்திகவா
வலலுற்றலறக் கொடுபோயடைவார்.

சிலரைத் தொடரில் செறிவித்து அடியில்
தலையைத் தரையில் தகவைத்து உயர்வான்
எலையில் சரணத்தினை வைத்து இகவா
அலல்உற்று அலறக்கொடு போய் அடைவார்.

உரை:

எமனுடைய பணியாளர்கள் தீவினையாளரிற் சிலருடைய கால்களில் இரும்புச் சங்கிலியைப் பிணைத்து, தலையைத் தரையின் மீது வைத்து, சங்கிலி பொருந்தியுள்ள இரண்டு கால்களையும் ஆகாயத்தை நோக்கி உயர்த்தி, அவர்கள் அலறும்படி இரக்கமில்லாமல் எமனுலகு அடையும் வரை இழுத்துச் செல்வர்.

Koviloor Digital Library

விளக்கம்:

தொடர் - சங்கிலி; செறிவித்து - பிணித்து; எலை - எல்லை; சரணம் - கால்; இகவா - விலகாமல்; அலல் - அல்லல், துன்பம். (63)

436. உரையிற்கொடியா ருரமிக்குடையார்
நிரையத்துறுவார் தமை நிட்டுரரே
தரையிற்கவிழத் தடமார்முகமு
மரையக் கொடுபோ யடைவித்திடுவார்.

உரையில் கொடியார் உரம்மிக்கு உடையார்
நிரையத்து உறுவார் தமை நிட்டுரரே
தரையில் கவிழத் தடமார் முகமும்
அரையக் கொடுபோய் அடைவித்திடுவார்.

உரை:

கடுமையான பேச்சும் உடல் வலிமையும் கொடுஞ்செயலும் உடைய யமனுடைய பணியாள்கள், தீவினையாளர் சிலரை நிலத்தின் மீது குப்புறத்தள்ளி, அவர்களின் முகமும் மார்பும் தேயுமாறு எமன் உலகுவரை இழுத்துக் கொண்டு போய்ச் சேருவர்.

விளக்கம்:

நிரயம் - நரகம்; நிட்டுரர் - கொடியவர். (64)

437. நேசற்றவரே நிலையற்றவரைத்
தேசற்றவரைச் சிலரைச் செறியப்
பாசத்துடலம் பரியப் பதறிக்
கோசத்தமுறக் கொடுபோயடைவார்.

நேசு அற்றவரே நிலை அற்றவரைத்
தேசு அற்றவரைச் சிலரைச் செறியப்
பாசத்து உடலம் பரியப் பதறிக்
கோசத்தம் உறக் கொடுபோய் அடைவார்.

உரை:

சிறிதும் இரக்கமில்லாத எமனுடைய பணியாள்கள் நிலையற்றுக் கலங்குந் தீவினையாளர் சிலரைப் பாசக் கயிற்றாற் கட்டி, அவர்கள் துடி துடித்துக் கோவென்று கதறியழும் அழுகை ஒலி எங்கும் பரவக்கொண்டு போய் எமனுலகை அடைவர்.

Koviloor Digital Library

விளக்கம்:

நேசற்றவர் - நேசம் அற்றவர்; நேசம் - இரக்கம்; தேசு - புகழ்; பரிய - வருந்த. (65)

438. சித்தத் துருகாதவரைத் திறலார்
மத்தக் களிறேயனையார் வலியா
ரத்தத் தமரங்குச முள்ளதனாற்
கொத்திக் குளமுங் கொடுபோயடைவார்.

சித்தத்து உருகாதவரைத் திறல்ஆர்
மத்தக்களிறே அனையார் வலியார்
அத்தத்து அமர் அங்குசமுள் அதனால்
கொத்திக் குளமும் கொடுபோய் அடைவார்.

உரை:

உடல் வலிமையில் வெற்றியினையுடைய மதயானையைப் போன்ற யமனுடைய ஏவலர், அறத்தின் பால் நாட்டம் இல்லாத தீவினையாளர் சிலரை, யானையை அடக்கும் அங்குச நுனியால் நெற்றிகளிலே குத்திக் கொண்டு போய் எமன் உலகைச் சேருவர்.

விளக்கம்:

அத்தம் - கை; அங்குசம் - யானையை அடக்கும் கருவி; குளம் - நெற்றி. (66)

439. களைகண்ணிலரைக் களவுள்ளவரைத்
தளரும்படி வெஞ்சமனார் தமரே
யுளையுள்ளூறவு முடல்பிள்ளூறவு
முளைமுள்வனமே கொடுபோய்முனிவார்.

களைகண்இலரைக் களவு உள்ளவரைத்
தளரும்படி வெம்சமனார் தமரே
உளை உள்ளூறவும் உடல் பிள்ளூறவும்
முளைமுள் வனமே கொடுபோய் முனிவார்.

உரை:

கொடிய யமனுடைய ஏவலர், ஏழையருக்கு ஆதரவு காட்டாதவர்களையும் திருடர்களையும் தண்டிப்பதற்காக, அவர்கள் உள்ளத்திற் கலக்கம் உண்டாகவும்,

Koviloor Digital Library

உடல்களைப் பிளக்கவும், மூங்கில் முட்கள் உள்ள காட்டின் உள்ளே இழுத்துக் கொண்டு போவர்.

விளக்கம்:

களைகண் - ஆதரவு; சமனார்தமர் - எமன்தூதுவர்; உளைஉள்ளுற - கலங்க; முளை - மூங்கில்; பிள்ளுற - பிளக்க; (67)

440. பழுதேபகர்வார் பயில்பாவியரைக்
குழையாதவரைக் குளிர்வாய் மொழியே
விழையாதவரைக் கடிதேவியனா
ரழல்சேர்வழியே கொடுபோயடைவார்.

பழுதே பகர்வார் பயில்பாவியரைக்
குழையாதவரைக் குளிர்வாய் மொழியே
விழையாதவரைக் கடிதே வியனார்
அழல்சேர் வழியே கொடுபோய் அடைவார்.

உரை:

யமனுடைய பணியாட்கள் கோள் உரைத்தல் முதலான பாவஞ் செய்தவர்களையும், அறச் செயல்களிலே ஈடுபட்டு மனம் நெகிழாதவர்களையும், ஆன்றோர்களின் குளிர்ந்த அருள் உரையை விரும்பாதவர்களையும் விரைந்து பற்றி, மிகுதியாகத் தீ பரவிய வழியாக யமபுரிக்குக் கொண்டு போவர்.

விளக்கம்:

பழுதே பகர்தல் - கோள்சொல்லுதல் முதலியன; குழைவு - உருக்கம்; கடிது - விரைவு; வியன் - மிகுதி. (68)

441. அத்தத்தினையுமடரக் கடிதே
பொத்திப்புறமே கயிறும் புகவே
துத்தத் தலறத் துவளத் துவளக்
குத்திச் சிலரைக் கொடுபோயடைவார்

அத்தத் தினையும் அடரக்கடிதே
பொத்திப் புறமே கயிறும் புகவே
துத்தத்து அலறத் துவளத் துவளக்
குத்திச் சிலரைக் கொடுபோய் அடைவார்.

உரை:

எமனுடைய ஏவலர், பாவிகள் சிலரின் இரண்டு கைகளையும் முதுகுப்

Koviloor Digital Library

பக்கத்திலே இழுத்து, தோளோடு தோள் பொருந்தப் பாசக் கயிற்றினால் அழுத்தமாகக் கட்டி, அவர்கள் கதறி அழ அவர்களின் வயிற்றிலே குலுங்கக் குலுங்கக் குத்தி யமன் உலகுக்குக் கொண்டு போவர்.

விளக்கம்:

அத்தம் - ஹஸ்தம்; அடர - நெருங்க; பொத்தி - மூடி; புறம் - பின்புறம்; துத்தம் - வயிறு; துவள - கலங்க. (69)

442. சிலரைக் கரமுஞ் செறிவித்த தனைத்
தளையத் தொடருந் தழலைப் புரையு
முளையைச் செறிவித்ததிராமுனியா
வுளையக் கடிதே சமனூருறுவார்.

சிலரைக் கரமும் செறிவித்து அதனைத்
தளையத் தொடரும் தழலைப் புரையும்
முளையைச் செறிவித்து அதிரா முனியா
உளையக் கடிதே சமன்ஊர் உறுவார்.

உரை:

யமனுடைய ஏவலர் பாவிகள் சிலரை இரண்டு கைகளையும் கட்டி அதனைச் சங்கிலியாற் பிணித்து, உள்ளங்கைகளில் நெருப்புப் போன்ற முளைகள் ஊடுருவும்படி செலுத்தி, அதட்டி, அவர்கள் வருந்தும்படி கோபித்து, விரைவாக யமபுரிக்குக் கொண்டு செல்வர்.

விளக்கம்:

தளைய - கட்டி; தொடர் - இரும்புச் சங்கிலி; அதிராமுனியா - அதட்டிச் சீறி; (70)

443. கண்டத் துறவேகயிறுஞ் சிலரை
கொண்டெய்த் தலறப்புகுவார் கொடியார்
துண்டப் பிறைபோற் சுழல்வான் பிடரிற்
புண்டைத் தலறச் சமனூர் புகுவார்.

கண்டத்து உறவே கயிறும் சிலரைக்
கொண்டு எய்த்து அலறப் புகுவார் கொடியார்
துண்டப்பிறை போல் சுழல் வாள் பிடரில்
புண்தைத்து அலறச் சமன்ஊர் புகுவார்.

Koviloor Digital Library

உரை:

எமனுடைய பணியாள்கள், பாவிகள் சிலரின் கழுத்துகளைப் பாசக் கயிற்றால் இறுகக் கட்டி, அவர்கள் சோர்ந்து அழும் வண்ணம் இழுத்துக் கொண்டு போவர். இளம்பிறை போல வளைந்த கொடுவாளால், சிலருடைய பிடரிகளில் புண்கள் உண்டாகும்படி வெட்டி அவர்களை எமபுரிக்குக் கொண்டு போவர்.

விளக்கம்:

கண்டம் - கழுத்து; எய்த்து - இளைத்து; சுழல் - வளைந்த; (71)

444. நாவிற்றுளையா நடுவேமுளையு
மேவக்கயிறும் விரவப் பணியே
கோவித்தலறச் சில நொய்யவரைப்
பாவப்பலமுற்றெலையே படர்வார்.

நாவில்துளையா நடுவே முளையும்
மேவக்கயிறும் விரவப் பணியே
கோவித்து அலறச் சில நொய்யவரைப்
பாவப்பலம் உற்று எலையே படர்வார்.

உரை:

எமனுடைய ஏவலர், பாவிகள் சிலரின் நாக்களைத் துளைத்து, அத்துளைகளில் முளைகளைச் செலுத்தி, அவற்றோடு பொருந்தும்படி கயிறுகளைக் கோத்து வருந்தச் செய்து பாவங்களின் பயனை அனுபவிக்கும் இடமான எமனுடைய ஊருக்குக் கொண்டு செல்வர்.

விளக்கம்:

மேவ - பொருந்த; பணி - பண்ணி; கோவித்து - கோத்து; ஏலை - எல்லை; நொய்யவர் - அற்பர். (72)

445. குய்யத்திடையே கயிறுங் கொளுவா
நையத்துயரம்பலவு நவிலா
மையற்படவே மனமுஞ் சிலரைத்
தெய்வச் சமனார் புரியைச் செறிவார்.

குய்யத்து இடையே கயிறும் கொளுவா
நையத்துயரம் பலவும் நவிலா
மையல்படவே மனமும் சிலரைத்
தெய்வச் சமனார் புரியைச் செறிவார்.

Koviloor Digital Library

உரை:

எமனுடைய பணியாள்கள், பாவிகள் சிலருடைய பிறப்பு உறுப்புகளில் (ஆண்குறிகளில்)கயிறுகளைக் கட்டி, உடல் வருந்தவும், மனங்கலங்கவும் பல துன்பங்கள் செய்து அவர்களைத் தங்கள் தலைவன் இருக்கும் யமபுரிக்கு கொண்டு போவர்.

விளக்கம்:

குய்யம் - ஆண்குறி; கொளுவி - கட்டி; நைய - வருந்த; மையல் - மயக்கம். (73)

446. துண்டப் புடையிற் றுளை செய்ததனிற்
கண்டிக் கயிறும் கடிதே யடைவார்
புண்டைத்துறவே கவுளும் புகுவார்
கொண்டக் கணமே சிலரைக் கொடியார்.

துண்டப்புடையில்துளை செய்து அதனில்
கண்டிக்கயிறும்கடிதே அடைவார்
புண்தைத்து உறவே கவுளும் புகுவார்
கொண்டு அக்கணமே சிலரைக் கொடியார்.

உரை:

கொடியவர்களாகிய எமதூதர்கள், பாவிகள் சிலருடைய மூக்குகளின் வெளிப்பக்கத்தில் துளைகள் செய்து, அத்துளைகளிற் பாசக் கயிற்றைக் கோத்துக் கட்டி விரைவில் அவர்களை யமபுரிக்குக் கொண்டு போவர்; சிலருடைய கன்னங்களில் புண்கள் ஏற்படும்படி துளைகள் செய்து, அத்துளைகளில் கயிறுகளைக் கட்டி உடனே அவர்களோடு எமன் உலகை அடைவர்.

விளக்கம்:

துண்டம் - மூக்கு; கண்டி - கட்டி; கவுள் - கன்னம். (74)

447. முத்தத் துறவே துளையுமுளையுங்
கொத்திச் சிலரைக்கொடுபோயடைவார்
சித்தத் தயர்வுஞ் செறியச் சிலரைத்
துத்தத் தொடரிற் சமனூர் தொடர்வார்.

முத்தத்து உறவே துளையும் முளையும்
கொத்திச் சிலரைக் கொடுபோய் அடைவார்
சித்தத்து அயர்வும் செறியச் சிலரைத்
துத்தத் தொடரில் சமன்ஊர் தொடர்வார்.

Koviloor Digital Library

உரை:

எமனுடைய ஏவலர்கள் பாவிகள் சிலரின் உதடுகளில் துளைகள் உண்டாகும் வண்ணம் முளைகளை அடித்து அவர்களை இழுத்துக் கொண்டு யமன் உலகை அடைவர்; வேறு சில பாவிகளுடைய மனங்களில் சோர்வு உண்டாகும்படி அவர்களுடைய வயிறுகளில் கயிறுகளைக் கட்டி அக்கயிறுகளால் அவர்களை இழுத்துக் கொண்டு எமனுடைய ஊரைச் சேருவர்.

விளக்கம்:

கொத்தி - இழுத்து; துத்தம் - வயிறு. (75)

448. கன்னத்துளையிற் கயிறுஞ்செறியா
வென்னித் துயர்தானென நொந்தழவே
துன்னப்படு நற்றுணையுமறவே
தென்னற்றிசையிற் புரியைச் செறிவார்.

கன்னத் துளையில் கயிறும் செறியா
என் இத்துயர்தான்என நொந்து அழவே
துன்னப்படுநல் துணையும் அறவே
தென்நல் திசையில் புரியைச் செறிவார்.

உரை:

எமனுடைய பணியாள்கள், பாவிகள் சிலருடைய இரண்டு காதுகளின் துளைகளில் ஊடுருவிச் செல்லும்படி கயிறுகளைக் கோத்து வருத்த, அப்பாவிகள் இத்துயரம் எந்தப் பாவத்தால் வந்ததோ என்று கலங்கி அழவும், அவர்களுக்கு உதவுவார்கள் இல்லாததால், அவர்களை எமன் உலகுக்குக் கொண்டு போவர்.

விளக்கம்:

துன்னப்படு - நெருங்கிய; தென் - தெற்கு. (76)

449. முகவாயுறவே கயிறும்முனியத்
தகவோவென நொந்தமுவார் தமையே
யகமும் புறமு மழியக் கொடுபோ
யிகமு மறிவானுழையே யிசைவார்.

முகவாய் உறவே கயிறும் முனியத்
தகவோ என நொந்து அழுவார் தமையே
அகமும் புறமும் அழியக் கொடு போய்
இகமும் அறிவான் உழையே இசைவார்.

Koviloor Digital Library

உரை:

எமனுடைய தூதர்கள், பாவிகளுடைய கீழ்வாய்ப் புறங்களில் கயிறுகள் பொருந்தும்படி கோத்து வருந்துகிற போது, இது முறையோ என்று அவர்கள் அழ, அவர்களின் உடலும் உள்ளமும் அழிய, (இப்பிறப்பில்) இவ்வுலகில் உயிர்கள் செய்த புண்ணிய பாவங்களை அறியும் எமனிருக்கும் இடத்திற்கு அவர்களைக் கொண்டு செல்வர்.

விளக்கம்:

தகவு - தக்கது; அகம் - உள்ளம்; இகம் - இவ்வுலகு. (77)

450. அங்கத்தெவையு மழியச்சிலரைப்
பங்கித்தடைவார் பயிலத்துயரும்
பொங்கப்புலைநீர்புகர்வாண முதல்கொண்
டொங்கித் தடிவார் சமனூருறுவார்.

அங்கத்து எவையும் அழியச் சிலரைப்
பங்கித்து அடைவார் பயிலத் துயரும்
பொங்கப் புலைநீர் புகர்வாள்முதல் கொண்டு
ஒங்கித் தடிவார் சமன் ஊர்உறுவார்.

உரை:

எமனுடைய பணியாள்கள், பாவிகள் உடல் உறுப்புகள் சிதையும்படி அவற்றை அரிந்தபடி அவர்களை யமனிடம் கொண்டு போவர். பாவிகள் சிலருக்குத் துன்பம் உண்டாக, அவர்களின் உடல்களில் குருதி வெளிப்பட, பழுப்புநிற வாள் முதலான கருவிகளால் ஓங்கி வெட்டி பபடி அவர்களை யமன் நகருக்குக் கொண்டு செல்வர்.

விளக்கம்:

அங்கம் - உறுப்பு; பங்கித்து - கூறுபடுத்தி; புலைநீர் - இரத்தம்; ஒங்கி - ஓங்கி. (78)

451. தக்கார் வரவிற்றவறே புரிவார்
நெக்கார்வமிலார் நிலையேதுமிலா
ருக்கே வழியிற் றுயர்வந்துறவே
புக்கார் விரையத் தருமன்புரியே.

தக்கார் வரவில் தவறே புரிவார்
நெக்கு ஆர்வம் இலார் நிலை ஏதும்இலா
ருக்கே வழியில் துயர் வந்து உறவே
புக்கார் விரையத் தருமன்புரி ஏ.

Koviloor Digital Library

உரை:

தங்கள் இல்லங்களுக்குத் தகுதிவாய்ந்த மேலோர் வந்தபோது அவர்களை முறைப்படி எதிர்சென்று வரவேற்று வணங்கி உபசரிக்காதவர்களும், மக்கள் அனைவரிடமும் மனம் நெகிழ்ந்த அன்பு செலுத்தாதவர்களும் ஆகிய இவர்கள் தங்களுக்கு என நிலையான வாழ்வைப் பெறாமல், பாவியராகி, யமனுடைய பணியாள்களால் பல துயரங்களை அனுபவித்து, விரைவாக எமபுரியை அடைவர்.

விளக்கம்:

தக்கார் - மேலார்; நெக்கு - நெகிழ்ந்து, உருகி; ஏதும்இலார் - ஒன்றும் இலாதவர்; புக்கார் - புகுவார்;

தருமன்புரி - எமனுடைய இருப்பிடம்; ஏ - அசை. (79)

எம தூதர்களின் இயல்பு

452. அழியாத வாண்மையினரகலாத
வாய்மையின ரதிபாதகாதியறிவார்
வழியாதநாகுசலாமலி மாசுமேவினரை
மறவாத மாணறிவினார்
ஒழியாத வூசலெனவுழல்வார்கள் பூதலமு
மொழியாத வாவியுடையார்
பழியாத பான்மையரை வழுவாத
தூதவர்கள் பதிபாதமீது பணியா.

அழியாத ஆண்மையினர் அகலாத வாய்மையினர்
அதிபாதக ஆதி அறிவார்
வழியாதநா குசலாம்மலி மாசு
மேவினரைமறவாத மாண் அறிவினார்
ஒழியாத ஊசல்என உழல்வார்கள்
பூதலமும் ஒழியாதவாவி உடையார்
பழியாத பான்மையரை வழுவாத தூதுவர்கள்
பதிபாத மீது பணியா.

உரை:

எப்போதும் கெடாத ஆண்மையும், தலைவன் இட்ட கட்டளையைத் தவறாமல் நிறைவேற்றுகின்ற உண்மையும், அதிபாதகமெனப்படும் பெரும் பாவங்கள் முதலான பாவ வகைகளின் வேறுபாடுகளை அறியும் திறனும், நரகத் துன்பங்களை அனுபவித்தற்குரிய உடல்களைப் பெற்றிருக்கும் பாவியரைத் துன்புறுத்தும் கெட்டித்தனமும், பாவம் செய்தவர்களை மறவாத நுண்ணிய அறிவும்

Koviloor Digital Library

எப்போதும் ஆட்டம் ஒயாத ஊஞ்சல் போலப் பாவியரை இடைவிடாமல் எமன் நகருக்குக் கொண்டு வரும் ஆற்றல் உடைமையும், சிவநிந்தனை முதலிய குற்றங்கள் புரியாத நல்லவர்களை நெருங்காத குணமும் உள்ள நல்லறிவினரான எமனுடைய ஏவலர்கள் தங்கள் தலைவனுடைய பாதங்களை வணங்கி;

விளக்கம்:

அதிபாதகம் - பெரும்பாவம்; **குசலாம்** - குசலம், கெட்டித்தனம் தென்னிமை எனும் பழைய உரை. **யாதநா** - நரகத்துன்பம் அனுபவிப்பதற்கு உரிய நுண்ணுடல். இதனை யாதனா சரீரம் என்று புராணங்கள் கூறும். இங்கு துன்பத்தை உணர்த்திற்று. **மாசுமேவினர்** - பாவியர்; **ஒழியாத** - ஒயாத; **ஊசல்** - ஊஞ்சல்; **தவாவி** - உறுதி; **பழியாத பான்மையர்** - சிவ நிந்தனை செய்யாதவர்; **வழுவாது குற்றம்** - குற்றம் புரியாத; **பதி** - இங்கு எமனைக் குறிக்கும். (80)

எம தூதர்களின் உரை

453. பாவம்செய் பாவியர்கள்பாலெம்மையேவ உன
பாசங்கை மேவவெளிதே
யேவஞ்செய்தார் விரைய வேவந்துளார் வழியி
லேறுண்டுளார் பெரிதுமே
நோவங்குளார் பரம நோலெங்குளாரிவர்கணூறங்கு
வாய்மை நுவலார்
தேவென் செய்வாமினியேனோவென்று கூறுவார்கள்
சேடஞ்செய்வாது மெணியே.

பாவம்செய் பாவியர்கள்பால் எம்மை ஏவ
உன்பாசம் கைமேவ எளிதே
ஏவம்செய்தார் விரையவே வந்துளார் வழியில்
ஏறுண்டுளார் பெரிதுமே
நோஅங்குளார் பரமநோல் எங்குளார் இவர்கள்
நூல் தங்கும் வாய்மை நுவலார்
தேஎன் செய்வாம் இனி ஏனோ என்று
கூறுவார்கள் சேடம்செய் வாதும் எணி ஏ.

உரை:

பாவங்கள் செய்த தீயவர்களிடம் நீர் எங்களை அனுப்பினீர். அப்போது உம்முடைய பாசக்கயிறு எங்கள் கைகளிலே இருந்ததால் இவர்கள் வரும் வழியிலே பல துயரங்களை அனுபவித்து விரைவாக இங்கு வந்தனர். (இவர்கள் மிகவும் நொந்து போயிருக்கிறார்கள். இப்பாசக் கயிற்றின் பிடியிலிருந்து தப்பிச் செல்ல

Koviloor Digital Library

இவர்களுக்கு இனி ஆற்றலெங்கே) இவர்கள் சிவாகமங்கள் கூறும் உண்மைகளைப் பேசாதவர்கள். மேலான வலிமையுடைய இவர்கள் பாசக் கயிற்றிலிருந்து தப்பாமல் எவ்வாறு தண்டிப்பது என்று பணிவோடு வினவினர். மீதித் தண்டனையுஞ் செய்வதற்கு எண்ணி.

விளக்கம்:

ஏவம் - எவ்வம், துன்பம்; ஏறுண்டு - தாக்குண்டு; நோ - துயரம்; பரம - மேலான; நோல் - நோன்மை, வலிமை; நூல் - சிவாகமம்; நுவலார் - பேசார்; தே - தேவனை; சேடம் - குறைவு; ஏனோ - என்ன; எணி - எண்ணி; ஏ - அசை; சேடம் - எஞ்சியிருப்பது. செய்வான் - செய்வதற்கு. அவ்வுளவுஞ் செய்தது மன்றி இனியும் மீதித் தண்டனையுங் கொடுக்க எண்ணி, இனி என் செய்வாம் என்று வினவினர் என்க. (81)

454. விண்டவர்கள் வேதநெறி வெய்யவினைதன்னைக்
கொண்!_வர்கள் வஞ்சனைய நெஞ்சினர் கொதிக்குந்
தண்டதரனைச் சமனை நச்சரவு தன்னைக்
கண்டனரெனக் கலுழ்வர் கண்டிடு கணத்தே.

விண்டவர்கள் வேதநெறி வெய்ய வினைதன்னைக்
கொண்டவர்கள் வஞ்சனைய நெஞ்சினர் கொதிக்கும்
தண்டதரனைச் சமனை நச்சு அரவு தன்னைக்
கண்டனர் எனக் கலுழ்வர் கண்டிடு கணத்து.

உரை:

உபநிடத, சிவாகமங்கள் உணர்த்தும் நேரிய வழிகளை மேற்கொள் ளாமல் அவற்றை இகழ்ந்து, தீய செயல்களை மேற்கொண்ட கபட உள்ளமுடைய பாவிகள், சினத்தால் முகம் கடுகடுத்தபடி தண்டாயுதத்தைக் கையில் ஏந்தி நிற்கும் எமனைப் பார்த்த அப்பொழுதே நஞ்சையுடைய பெரிய பாம்பைக் கண்டது போல அஞ்சிக் கலங்குவர்.

விளக்கம்:

விண்டவர் - உரைத்தவர்; வஞ்சனை - கபடம்; கொதிக்கும் - கோபத்தால் முகம் கடுகடுக்கும்; கலுழ்வார் - கலங்குவார்; சமன் - சமமாக நீதி வழங்குகிற எமன்; ஏ - அசை.

குறிப்பு:

யாகத்தில் கொல்லப்பட்ட பசு சுவர்க்க மடைவதும் தவறின் மீள எழுவதுமான செய்திகள் கேட்கப்படுதலின் யாகத்தில் பசுவேள்வி நிகழ்தல் பற்றி

Koviloor Digital Library

நம் பகுப்பாய்வுக்கு எட்டாத ஒரு யதார்த்தம் இருத்தல் தெரிகிறது. புன்மையாம் பசுத்தடிந்து - - - என வருங் *கந்தபுராணத்துக்* காமதகனப் படலச் செய்யுளே, இதற்குச் சான்று. 'பசு வேட்டெரி யோம்பும் சிறப்பர்' என்ற *தேவாரமும்* இருக்கிறது. மேலும் பிற்காலத் தில்லைவாழந்தணர்கள் பசுவேட்டு வேள்வி செய்யத் தொடங்கியதில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தலையிட்டு, கந்தபுராணச் செய்யுளில் உள்ளது போலத் தொன்மைபோ வெழுப்பும் வன்மை உமக்கிலை ஆதலால் பசு வேள்விக்கு நீவிர் தகுதியுள்ளீரல்லீர் என எடுத்துக்காட்டித் தடுத்த செய்தியுமுண்டு. இந்நிலையில் வேத காலப் பசு வேள்வி பற்றி நாம் அபிப்பிராயங் கூறாது அடங்குதல் நன்று. நம் அறிவு அதற்குப் போதாது என ஒதுங்குதல் நமக்கழகாகும். (82)

எமனுடைய தோற்றம்

455. மையனைய மேனியனை வாய்ந்தவறு மூன்று
கையுடையனைக் கடியனைக்கடிய ருள்ள
நையவுமிழ் வெய்யனழனாட்ட முடையானை
துய்யபிறை போலெயிறுறச் சுளிமுகத்தே.

மை அனைய மேனியனை வாய்ந்த அறு மூன்று
கை உடையனைக் கடியனைக் கடியர் உள்ளம்
நைய உமிழ்வெய்யன் அழல்நாட்டம் உடையானை
துய்யபிறை போல்எயிறு உறச்சுளி முகத்து ஏ.

உரை:

கருமையான உடம்பு; அதில் வலிமை வாய்ந்த பதினெட்டுக் கைகள்; கோரமானவையும் தூய இளம் நிலவைப் போன்ற வெண்மையானவையுமான பற்கள்; கடுகடுத்த முகம்; தீவினையாளர்களின் நெஞ்சங்களை நடுங்க வைக்கும் தீயைக் கக்குகின்ற கண்கள் ஆகியவற்றைக் கொண்ட தோற்றம் உடையவனாய்;

விளக்கம்:

மைஅனைய - கருமையான; அறுமூன்று - பதினெட்டு; கடியர் - தீயவர்; நைய - வருந்த;

நாட்டம் - கண்; துய்ய - தூய; எயிறு - பல்; ஏ - அசை. (83)

456. எற்றுபுருவத்தினனை யீடுடையமேனி
பற்றிமுகமீது பெறு பங்கியுடையானை
முற்றுமயிர் பெற்றமுகமுற்றதர வோட்ட
நிற்றலறவுற்ற புரணத்தினனை நேரே.

Koviloor Digital Library

எற்று புருவத்தினனை ஈடுஉடைய மேனி
பற்றிமுகம்மீது பெறு பங்கி உடையானை
முற்றும்மயிர் பெற்ற முகம் உற்று அதர ஓட்டம்
நிற்று அலற உற்ற புரணத்தினனை நேரே.

உரை:

நெற்றியின் மீது ஏறி நின்ற புருவங்கள், மிடுக்கான உடற்கட்டில் மேல் நோக்கி வளர்ந்த மயிர்கள், அடர்த்தியான மீசை; நேராக இராமல் துடிக்கின்ற மேல்கீழ் உதடுகள் ஆகிய தோற்றம் உள்ளவனாய்;

விளக்கம்:

எற்று - ஏறிய; ஈடு - வலிமை; பங்கி - ஆடவரின் மயிர்; அதரம் - உதடு; நிற்று - நின்று; புரணம் துடிப்பு முகம் மீது பெறும் - (மயிர்) நுதிமேல் நோக்கி நிற்கும். அதரம் - கீழுதடு. ஓட்டம் - (ஓஷ்டம்) மேலுதடு. உதடு துடிக்க நிற்பவன் என்பது கருத்து. (84)

457. மேருநிக ருன்னதனை வீறுடைய தண்டந்
தாரகனை மற்றைய தழற்படை யனைத்துங்
காரனைய மேதிமிசை காண வருவானை
யேருடைய செய்யவுடை யாடையனை என்றும்.

மேருநிகர் உன்னதனை வீறு உடைய தண்டம்
தாரகனை மற்றைய தழல்படை அனைத்தும்
கார் அனைய மேதிமிசை காண வருவானை
ஏர் உடைய செய்யஉடை ஆடையனை என்றும்.

உரை:

மேருமலையை ஒத்த உன்னதமுடையவனாய் வெற்றியினையுடைய தண்டாயுதமும், நெருப்பைப் போன்ற பிற படைக்கலங்களும் தரித்தவனாய், மழை மேகம் போன்ற கரிய நிறமுள்ள எருமைக் கடாவின் மீது எல்லாரும் பார்க்க வருபவனாய், எப்பொழுதும் அழகிய சிவந்த நிற ஆடைகளை அணியும் வழக்கம் உள்ளவனாய்;

விளக்கம்:

உன்னதம் - நிமிர்ந்துயர்தல்; வீறு - வெற்றி; தழல் - தீ; தாரகன் - தரிப்பவன்; கார் - கருமை. இங்கு மேகத்துக்கு ஆயிற்று; மேதி - எருமை; ஏர் - அழகு; செய்ய - சிவந்த. (85)

Koviloor Digital Library

458. செம்மைபெறுமாலையது சேர்முடியினானை
வெம்மையிடியன்ன குரல்வீறுமுடையானை
விம்முகடலோடுலகனைத்தையும் விழுங்கச்
சம்மதனெனத்தகுவனைத்தடை தடுத்தே.

செம்மைபெறு மாலைஅது சேர்முடியினானை
வெம்மைஇடி அன்ன குரல்வீறும் உடையானை
விம்மும்கடலோடு உலகு அனைத்தையும் விழுங்கச்
சம்மதன் எனத் தகுவனைத் தடைதடுத்து ஏ.

உரை:

சிவந்த நிறப்பூக்களைக் கொண்ட தலைமாலையைத் தலைமுடியில் சூடியிருப்பவனாய் இடியோசை போன்ற குரலில் வெடிப்புறப் பேசுகின்ற வனாய், ஒலிக்கும் கடலலையும் நிலப்பரப்பையும் ஒருங்கே விழுங்கச் சம்மத முற்றிருப்பது போலுந் தன்மையும்;

விளக்கம்:

செம்மை பெறுமாலை - செம்பூமாலை, தலைமாலை; விம்மும் - ஒலிக்கும்; ஏ - அசை. (86)

459. விரித்த முகின்மேனிய மிருத்தியு மிருக்கக்
கருக்கிய நிறத்தினொடு காலனுமிருக்க
நெரித்தபுரு வத்தினுடனந்தகனு நீடப்
பரித்த கொடுமைத் தொழில்செய் மாரியுமோர்பாலே.

விரித்தமுகில் மேனிய மிருத்தியும் இருக்கக்
கருக்கிய நிறத்தினொடு காலனும் இருக்க
நெரித்த புருவத்தினுடன் அந்தகனும் நீடப்
பரித்தகொடுமைத் தொழில் செய்மாரியும் ஓர்பால் ஏ.

உரை:

விரிந்த மழை மேகம் போன்ற வடிவமுடைய மிருத்தியு ஒருபுறமும், கரிய நிறம் உள்ள காலன் ஒரு பக்கமும், ஏறிட்ட புருவங்களையுடைய அந்தகன் ஒரு புறமும், கொடுமை பொருந்திய தொழில்களைச் செய்கிற மாரி ஒரு பக்கமும் இருக்க;

விளக்கம்:

மிருத்தியு, காலன், அந்தகன், மாரி என்ற நால்வரும் எமனுடைய

Koviloor Digital Library

அமைச்சர்கள் என்று *அபிதான சிந்தாமணி* கூறுகின்றது. ஆனால் *தமிழகராதிகள்* மிருத்தியு, காலன், அந்தகன் என்ற மூவரையும் எமன் என்றே குறிப்பிடுகின்றன. (87)

460. கருக்கியநிறத்தினர்கள் கண்டவர்களஞ்ச
நெரித்தவுரு நெற்றியர்கணிட்டுர ரரட்டர்
தரித்திடுகரத்தினர்கள் சத்தி திரிசூலம்
விரித்துடைய பாசமழலங்கு சமும் வேறே.

கருக்கிய நிறத்தினர்கள் கண்டவர்கள் அஞ்ச
நெரித்த உரு நெற்றியர்கள் நிட்டுரர் அரட்டர்
தரித்திடு கரத்தினர்கள் சத்தி திரிசூலம்
விரித்துடைய பாசம் அழல் அங்குசமும் வேறு ஏ.

உரை:

பார்த்தவர்கள் பயப்படுதற்கேதுவான கறுத்த உடலும், சுளித்த நெற்றியும் கொடுமையும், யாரையும் கவலைப்படச் செய்யும் குணமும், வேலும் மூவிலைச்சூலமும், நீண்ட பாசக் கயிறும்; தீ போன்ற தோட்டியும் பிறவும்,

விளக்கம்:

நிட்டுரர் - கொடுமையர்; அரட்டர் - கவலையை உண்டாக்குபவர். (88)

461. தண்டுமிளிர் வாளொளி கொள்சக்கரமுமிக்க
வெண்டிகழும் வாளியிணை தூணி யெழிலார்கோ
தண்டமிவை மற்றைய தழற்படை யனைத்து
மண்டுதொழில் வீரதர தூதரவர் வந்தே.

தண்டுமிளிர்வாள் ஒளிகொள் சக்கரமும் மிக்க
வெண்திகழும் வாளிஇணை தூணி எழில்ஆர் கோ
தண்டம்இவை மற்றைய தழல்படை அனைத்தும்
மண்டுதொழில் வீரதர தூதர் அவர் வந்து ஏ.

உரை:

தண்டாயுதம், வாள் ஒளி பொருந்திய சக்கரம், பெருமளவிலான அம்புகள், அம்புகள் சேர்ந்துள்ள அம்புக்கூடு, அழகு நிரம்பிய வில், ஏனைய தீ போன்ற போர்க்கருவிகள், அப்போர்க் கருவிகளைப் பயன்படுத்தும் முறை அறிந்த வீரம் மிகுந்த தூதர்கள் வந்து;

Koviloor Digital Library

விளக்கம்:

வாளி - அம்பு; இணை - சேர்ந்த; தூணி - அம்புக்கூடு; கோதண்டம் - வில்; படை - ஆயுதம்; மண்டு - நெருங்கிய; வீரதரர் - அதிவீரர்; ஏ - அசை. (89)

462. ஏவலருளெங்கள் பெருமானென விருக்குந்
தேவனை விதித்திற மதித் தொருமை செப்பு
நாவனை நமன்றனை நடுக்கமொடு கண்டார்
மேவலர்களென்னமனம் வேறுபடுவாரே.

ஏவல்அருள் எங்கள் பெருமான் என இருக்கும்
தேவனை விதித்திறம் மதித்து ஒருமை செப்பும்
நாவனை நமன்தனை நடுக்கமொடு கண்டார்
மேவலர்களென்னமனம் வேறுபடுவார் ஏ.

உரை:

ஒருமுகப்பட்ட மனதுடன் அவரவர் செய்த தீய செயல்களுக்கு ஏற்ற தண்டனை விதிகளை ஆராய்ந்து அவற்றை அளிக்கும்படி மன ஒருப்பாட்டுடன் ஏவும் நாவினனான யமனைப் பாவிகள் அச்சத்தோடு பார்ப்பார்கள். அவர்கள் யமனைத்தம் பகைவனாகவே எண்ணிக்கொள்வார்கள். இந்நிலையில் அவனை அணுகிய அவன் தூதர்கள் எம்பெருமானே! நாங்கள் செய்ய வேண்டிய பணிகளை அருள்வீராக என்று பணிவுடன் கூறினர். யமன் சமன் (நடுநிலை வகிப்பவன்) என்பதைப் பாவிகள் உணர முடியாமையின் தங்களைப் பகைவர்களாக அவன் கருதிக் கொண்டதாக எண்ணுவர். அதனால் மனம் வேறுபடுவர் என்க.

விளக்கம்:

ஏவல் - வேலை; தேவன் - தெய்வம்; விதி - முறை; மேவலர் - பகைவர். (90)

எமனுடைய சீற்றம்

463. வெறுத்தவரைநல்வினையை வெய்யவினை தன்னைச்
செறித்தவரை நோக்கியழல் சிந்தவழிசித்தங்
கறுத்தியமனச் சரவெனக் கடுவெனத்தா
னுறுக்கு வனறத் தளர்வுறக் கடிதொறுத்தே.

வெறுத்தவரை நல்வினையை வெய்யவினை தன்னைச்
செறித்தவரை நோக்கிஅழல் சிந்தவழி சித்தம்
கறுத்துயமன்நச்சு அரவு எனக் கடுஎனத்தான்
உறுக்குவன் அறத் தளர்வு உறக் கடிது ஒறுத்து ஏ.

Koviloor Digital Library

உரை:

கொடிய வினைகளைச் செய்த பாவியரைக் கண்களில் பொறி பறக்க நோக்கி, உள்ளம் வெகுண்டு, நச்சுப்பாம்பு போலவும் நஞ்சு போலவும் சீறி, அதட்டி, அவர்களின் வலிமை நீங்கும் வண்ணம் கடுமையாகத் தண்டித்து;

விளக்கம்:

செறித்தவர் - செய்தவர்; கறுத்து - வெகுண்டு; உறுக்குதல் - அதட்டுதல்; கடு - நஞ்சு; தளர்வு - வலிமை; ஒறுத்து - தண்டித்து; ஏ - அசை. (91)

464. வெய்ய வினை தன்னையும் விதிப்படி விளைந்த
துய்யவினை தன்னையு மதித்தொருமை சொல்லு
மெய்யுடைய சித்திர நல்குத்தனையும் வீறாக்
கையரவ ரஞ்சுவர வன்விழிகள் கண்டே.

வெய்யவினை தன்னையும் விதிப்படி விளைந்த
துய்யவினை தன்னையும்மதித்து ஒருமை சொல்லும்
மெய்யுடைய சித்திரநல்குத்தனையும் வீறுஆக்
கையரவர் அஞ்சுவர் அவன் விழிகள் கண்டு ஏ.

உரை:

கொடிய பாவச் செயல்களையும் புண்ணியச் செயல்களையும் முறைப்படி அறிந்து உள்ளதை உள்ளபடி உரைக்கும் உண்மையாளனாகிய நல்ல சித்திரகுத்தனின் கண்களைப் பார்த்தும் பாவிகள் நடுங்குவர்.

விளக்கம்:

வெய்யவினை - தீவினை; துய்யவினை - நல்வினை; மதித்து - ஒப்புநோக்கி; கையர் - மூடர்; ஏ - அசை. (92)

465. சித்திரநல்குத்தனெதிருற்றவரை நோக்கிப்
பொய்த்திற மதித்தவர்கள்போதுகமு னாணீர்
மத்தகளிறன்ன வலியாலு மெளியார்தம்
வித்தமுதல் கொண்டவர் தமக்கிடர் விளைத்தீர்.

சித்திரநல்குத்தன் எதிர்உற்றவரை நோக்கிப்
பொய்த் திறம் மதித்தவர்கள் போதுக முன்னாள்நீர்
மத்தகளிறு அன்ன வலியாலும் எளியார்தம்
வித்தம்முதல் கொண்டு அவர் தமக்கு இடர் விளைத்தீர்.

Koviloor Digital Library

உரை:

நல்ல சித்திரகுத்தன், தன் எதிரே நின்றவர்களைப் பார்த்து பாவச் செயல்களைப் பொருளாகக் கருதியவர்களே வருவீர்களாக. நீங்கள் முன் காலத்தில் ஆண்யானையைப் போன்ற வலிமை உள்ளவர்களாக இருந்து, வலிமை யில்லாதவர்களின் பொருள் முதலான உடைமைகளைக் கவர்ந்து கொண்டு அவர்களுக்குத் துயரத்தை உண்டாக்கினீர்கள்;

விளக்கம்:

பொய்த்திறம் - தீயவை; போதுக - வருக; களிறு - ஆண்யானை; அன்ன - போன்ற; வித்தம் - பொருள். (93)

466. அங்கமுறு மேன்மை யழகாலு மயலார்த
மங்கையர்க டோள்புணரு மாதரவு வைத்தீ
ரிங்கிவைகளும் மையணை யாதகல்வ தெங்ஙன்
சங்கையுறு முன்னிரய முற்றுட றளர்ந்தே.

அங்கம் உறு மேன்மை அழகாலும் அயலார்தம்
மங்கையர்கள் தோள் புணரும் ஆதரவு வைத்தீர்
இங்கு இவைகள் உம்மை அணையாது அகல்வது எங்ஙன்
சங்கை உறும் முன் நிரயம் உற்று உடல் தளர்ந்து ஏ.

உரை:

உங்களின் உடல் அழகாலும், செல்வமிடுக்காலும் பிறர் மனைவியரை மயக்கி அணைந்தீர்கள். இவ்வாறு கூறிய தீவினைப் பயன்கள் உங்களை அடையாமல் எங்கே போகும்? ஆகையால் அப்பாவங்கள் அகலும் வண்ணம் நரகத்தையடைந்து உடல் வருந்தத் துன்பங்களை அனுபவிப்பீர்களாக.

விளக்கம்:

அணைதல் - பொருந்துதல்; சங்கை - பயப்பீதி யாலாம் துன்பம். சங்கர - பயம். (94)

467. உற்றவர்கள் வெய்ய நிரயத் துயரையோரி
லற்றவர்கடீய வினையல்ல தறுமாறென்
குற்றமதனைக் குணமெனப் பெரிது கொண்டீர்
துற்ற விஙனஞ் சிலெங்ஙனீங்கும் வினை சொல்லீர்.

Koviloor Digital Library

உற்றவர்கள் வெய்ய நிரயத் துயரை ஓரில்
அற்றவர்கள் தீயவினை அல்லது அறுமாறுஎன்
குற்றம் அதனைக் குணம் எனப்பெரிது கொண்டீர்
துற்ற இங்ஙன் அஞ்சில் எங்ஙன் நீங்கும் வினை சொல்லீர்.

உரை:

கொடிய நரகத் துன்பங்களை அனுபவித்தவர்கள் தீய பாவங்களி லிருந்து நீங்கியவர் ஆவர். அவ்வாறு நரகத்துன்பங்கள் அனுபவியாமல் பாவங்கள் எவ்வாறு அகலும்? தீமைகளை நன்மையென்று கொண்டவர்களே, நீங்கள் நரகத் துயரை அனுபவிக்கப் பயப்பட்டால் உங்களுடைய பாவங்கள் எப்படித் தீரும்? அதை எனக்குக் கூறுவீராக.

விளக்கம்:

ஓரில் - ஆராயும்போது; துற்றல் - அனுபவித்தல்; எங்ஙன் - எப்படி; இஙன் - இங்ஙன்; எஙன் - எங்ஙன். (95)

468. என்றினைய வாசகமவர்க் குற விசைப்பன்
கன்றியமனுஞ் சிறியரைக் கடிது நோக்கி
யன்றுமனுநீதிமுறை யாவையு மயர்த்தீ
ரின்றுநிரயத்துற விளைப்பதெ னிசைப்பீர்.

என்று இனைய வாசகம் அவர்க்கு உற இசைப்பன்
கன்றியமனும் சிறியரைக் கடிது நோக்கி
அன்றுமனு நீதி முறையாவையும் அயர்த்தீர்
இன்றுநிரயத்து உற இளைப்பது என் இசைப்பீர்.

உரை:

என்று சித்திரகுத்தன் கூற, எமன் அந்த அற்பரைக் கடுமையாகப் பார்த்து, ''முன்பு நீங்கள் நீதிநெறி மறந்து கொடிய செயல்களைச் செய்தீர்கள். இப்போது நரகத்தையடைய ஏன் தயங்குகிறீர்கள்? சொல்வீராக'' என்றான்.

விளக்கம்:

இனைய - இத்தகைய; வாசகம் - உரை; கன்றி - கோபித்து; அயர்த்தல் - மறுத்தல்; இளைப்பது - பின்னடைவது. (96)

469. வந்திடுக மண்ணுலகமாண்ட திறன் மன்னர்
வெந்துயரமேயுயிர்களுக்குற விளைத்தீ
ரெந்தமுறையாலு மிஙனே துமதுபாலே
வந்துதவியானது சொலீர் பொருண்மதித்தீர்.

Koviloor Digital Library

வந்திடுக மண்உலகம் ஆண்ட திறல்மன்னர்
வெம்துயரமே உயிர்களுக்கு உற விளைத்தீர்
எந்த முறையாலும் இங்ஙன் ஏது உமதுபாலே
வந்து உதவியானது சொல்லீர் பொருள் மதித்தீர்.

உரை:

வெற்றிகரமாக உலகின் தரைப்பகுதியை ஆட்சி புரிந்த அரசர்களே வருவீர்களாக. நீங்கள் பொருளாசையால் உங்கள் குடிமக்கள் வருந்தும்படி கொடுமை செய்தீர்கள். அவ்வாறு நீங்கள் புரிந்த செயல்களிலே இப்பொழுது உங்களுக்கு வந்து உதவிபுரிவது எது? சொல்வீர்களாக.

விளக்கம்:

திறல் - வெற்றி; வெம் - கொடிய; (97)

470. மங்கையர்க ளெங்குளர்கள் மற்றைய வர்தாமு
மெங்குளர் சொலீர் புரவியானை நரயான
மிங்குவர யாமறியமே பகையை யெற்றும்
பொங்கு படை யெங்கொழிய விங்கெளிது போந்தீர்.

மங்கையர்கள் எங்கு உளர்கள் மற்றையவர் தாமும்
எங்குஉளர் சொலீர்புரவி யானை நரயானம்
இங்குவரயாம் அறியமே பகையை எற்றும்
பொங்குபடை எங்குஒழிய இங்கு எளிது போந்தீர்.

உரை:

மாளிகையின் அந்தப்புரத்திலே வாழ்ந்த உங்களுடைய அதிதொகை யினரான மனைவியர் எங்கே? நீங்கள் அமர்ந்து சென்ற குதிரை, யானை, சிவிகை, பகைவரைக் கொல்லும் சேனை ஆகியவை இங்கு வந்ததை யாம் பார்க்கவில்லையே? அவையாவும் உங்களை விட்டு நீங்க தனித்து நீங்கள் எளிமையாக வந்திருக்கிறீர்கள்.

விளக்கம்:

நரயானம் - மனிதர் சுமந்து செல்லும் சிவிகை. (98)

471. கன்றவெம தூதர் கசிவுற்றுமது காவ
லொன்று மறநீர் தனிமையோடிஙனு முற்றீ
ரின்று நிரயத்தினு ளிருத்தவு மிருந்தீ
ரென்றவர்களச்சமுற வேபல விசைப்பன்.

Koviloor Digital Library

கன்றஎமதூதர் கசிவுற்று உமது காவல்
ஒன்றும் அறநீர் தனிமையோடு இங்ஙனும் உற்றீர்
இன்று நிரயத்தினுள் இருத்தவும் இருந்தீர்
என்று அவர்கள் அச்சம் உறவே பல இசைப்பன்.

உரை:

நீங்கள் நம் தூதர்களின் கோப சகித ஆக்கினையால் வருந்தி, காவலர்கள் எவருமே இல்லாமல் தனிமையாக வந்து நரகத்தில் இருக்கச் செய்தபடி இருக்கிறீர்கள் என்று அவர்கள் பயப்படுமாறு பல சொற்களை உரைத்தான்.

விளக்கம்:

கன்ற - கோபிக்க; கோபசகிதம் - ஆக்கினைதர; கசிவுற்று - வருந்தி; இங்ஙன் - இவ்வாறு; இசைப்பன் - உரைப்பான். (99)

472. மற்றவரு முன்னமுள வல்வினை களெல்லா
முற்றுணர்வினிற் பருரையற்றுள நடுங்கா
வற்றொழிய மற்றிவரகத்திற மனைத்து
மெற்றிடுக சண்ட மகசண்ட கடிதென்றே.

மற்று அவரும் முன்னம் உள வல்வினைகள் எல்லாம்
உற்று உணர்வில் நிற்பர் உரை அற்று உளம் நடுங்கா
அற்று ஒழிய மற்றிவர் அகத்திறம் அனைத்தும்
எற்றிடுக சண்ட மகசண்ட கடிது என்று ஏ.

உரை:

எமன் உரைத்ததைக் கேட்ட மன்னர்கள், தாங்கள் முன்பு செய்த கொடிய செயல்கள் நினைவுக்கு வர, பேசமுடியாமல் நடுங்கி நின்றனர். உடனே, எமன் அவர்களை அடிக்குமாறு சண்டன், மகாசண்டன் ஆகிய இருவருக்கும் கட்டளையிட்டான்.

விளக்கம்:

சண்டன் - எமன்; உருத்திரர்களில் ஒருவற்கும் இப்பெயருண்டு.

மகசண்டன் - மகாசண்டன், எமனுடைய ஏவலாளர்களில் ஒருவன் என்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி கூறுகின்றது. (100)

473. ஓதநமனுற்ற மகசண்ட னெழுவாயர்
காதியவர் பாதமிருகை கொடு பிடித்தே
பேத முறவே சுழல் பெறுத்திடுவர் விண்ணின்
மீதெறிவர் பற்றிடுவ ரெற்றிட விரைந்தே.

Koviloor Digital Library

ஓத நமன் உற்ற மகசண்டன் எழுவாயர்
காதிஅவர் பாதம் இருகைகொடு பிடித்தே
பேதம் உறவே சுழல்பெறுத்திடுவர் விண்ணின்
மீது எறிவர் பற்றிடுவர் எற்றிட விரைந்து ஏ.

உரை:

யமனுடைய கட்டளைப்படி மகாசண்டன் முதலானோர் அக் கொடுங்கோல் மன்னர்களின் கால்களை இரண்டு கைகளாலும் இழுத்துப் பிடித்து அடித்துச் சுழற்றி வானத்தை நோக்கி வீசி எறிந்து, மறுபடியும் மோதி அடிப் பதற்காக அவர்களின் உடல்களைப் பற்றுவர்.

விளக்கம்:

எழுவாயர் - முதலானோர்; காதி - அடித்து; சுழல் பெறுத்தல் - சுற்றுதல். (101)

474. வெந்தழலையன்ன சிலைமீது கடி தெற்றிச்
சிந்தவுடல் செங்குருதி சேறு பெறவூற
நொந்தறவு நோலறுவர் நொய்யவினை செய்தார்
மந்தமர மெந்தவித மெற்ற வரையுற்றே.

வெம்தழலை அன்னசிலை மீது கடிது எற்றிச்
சிந்தஉடல் செங்குருதி சேறு பெற ஊற
நொந்து அறவும் நோல்அறுவர் நொய்ய வினை செய்தார்
மந்தமரம் எந்தவிதம் எற்ற வரை உற்று ஏ.

உரை:

தீய செயல்களைச் செய்த அரசர்களின் உடல்களை நெருப்புக் கல்லின் மீது அடித்தபோது அவை சிதைந்து, சேறாகும் படி செந்நீர் பெருகிற்று; அதனால் அவர்நொந்து நோன்மை கெடுவர். அது மென்மையான இளம் மரத்தைப் பறித்துப் பாறையில் மோதி அதனைச் சிதறச் செய்தது போல இருந்தது.

விளக்கம்:

சிலை - கல்; எற்றி - மோதி; மந்தம் - மென்மை; வரை - மலை; ஏ - அசை. நோல் - நோன்மை, வலிமை கௌரவம் முதலியன. (102)

475. அற்றவர்கள் சிந்தனையை யாகமது தன்னி
லுற்றுலவ மாருதமு முண்ணினைவு தன்னைப்
பெற்றிடலு மற்றவர்க டீவினைய பேத
மற்றகல வுய்த்திடுக தாழ்தல வழற்கே.

Koviloor Digital Library

அற்றவர்கள் சிந்தனையை ஆகம் அது தன்னில்
உற்று உலவ மாருதமும் உள்நினைவு தன்னைப்
பெற்றிடலும் மற்றவர்கள் தீவினைய பேதம்
அற்று அகல உய்த்திடுக தாழ்தலம் அழற்கு ஏ.

உரை:

உடல் சிதைந்து மயங்கிக் கிடந்த அரசர்களின் உடல்களின் மீது காற்று வீசியதும் அவர்கள் உள்ளுணர்வு பெற்றனர். உடனே, அவர்கள் செய்த பாவங்கள் முழுவதும் ஒழியும்படி அவர்களைப் பாதாள உலகிற்குக் கீழேயிருக்கும் எரிவாய் நரகத்தில் இடுவீராக.

விளக்கம்:

ஆகம் - உடல்; மாருதம் - காற்று; தீவினைய பேதம் - பல்வேறு பாவங்கள்; ஏ - அசை; உய்த்திடுக - செலுத்துக; தாழ்தலம் - பாதாளம். (103)

476. என்றியமனோது முரை கொண்ட வரையெல்லா
மன்றியடு தூதர்கொடு சென்றவனியின்கீ
ழொன்றிய வொரேழ்தல மொழித்த புரியின் கீழ்
நின்ற நிரயத்திடை நிறுத்துவ ரொறுத்தே.

என்று இயமன் ஓதும் உரை கொண்டு அவரை எல்லாம்
அன்றி அடும் தூதர் கொடு சென்று அவனியின் கீழ்
ஒன்றிய ஓரேழ்தலம் ஒழித்த புரியின் கீழ்
நின்றநிரயத்து இடை நிறுத்துவர் ஒறுத்து ஏ

உரை:

என்று எமன் சொன்ன உரையைக் கேட்டு, அப்பாவியர் அனைவரையும் பகைத்துத் தாக்கும் தூதர் தரையின் கீழ் உள்ள பாதாளம் முதலான ஏழு உலகுகளுக்கும் அடியில் நிலை பெற்றிருக்கும் நரகத்தில் தண்டித்து நிறுத்துவர்.

விளக்கம்:

கொடு - கொண்டு; ஒரேழ் - ஓர் ஏழ்; ஏழ் - ஏழு; அவனி - பூமி. ஏழ் தலம் - பூமிக்குக் கீழே ஏழு உலகுகளும், பூமிக்கு மேலே ஏழு உலகுகளும் உள்ளன என்பது நூற்செய்தி.

அன்றி - பகைத்து; அடும் - தாக்கும். ஏழ் தரையின் கீழ்ப்புறம் - காலாக்னி ருத்ர புவனம். (104)

Koviloor Digital Library

477. தொகையினாலிருபத் தெட்டுத்துக்கசா
கரங்கள் சொல்லின்
வகையினாற் சதமும் வாய்ந்த
நாற்பது மதிக்குங்காலை
யகலமு மிருபத்தெட்டுக் கோடியே
யாயும்போதிற்
றொகை வகையிரண்டுமிந்த
நூலினுட் சொல்லுவாமே.

தொகையினால் இருபத்துஎட்டுத் துக்க
சாகரங்கள் சொல்லின்
வகையினால் சதமும் வாய்ந்த
நாற்பது மதிக்கும் காலை
அகலமும் இருபத்து எட்டுக்
கோடியே ஆயும் போதில்
தொகைவகை இரண்டும் இந்த
நூலின்உள் சொல்லுவாம்.

உரை:

கவலைக்கடல்களாகிய நரகங்களைத் தொகுத்து உரைத்தால் அவை இருபத்தெட்டு; ஆராய்ந்து வகைப்படுத்தினால் அவை நூற்று நாற்பது அவற்றின் விரிவு இருபத்தெட்டுக் கோடி; இந்த மூன்று வகை நரகங்களின் பெயர்களை இந்த நூலில் உரைப்போம்.

விளக்கம்:

துக்கசாகரம் - கவலைக்கடல்; சதம் - நூறு; கோடி - எல்லை; நூறிலட்சம்; தொகை - தொகுப்பு; வகை - பகுப்பு; அகலம் - விரிவு. (105)

நரகங்களின் பெயரும் முறையும்

478. பேதமுமுறவே யெண்ணும் பெயர்களு முறையும் பேசும்
வேதனைக்குழிக்கநாதி விமலனூ லொன்றுக் கொன்று
பேதமுமுறவே தோன்றும் பிரளய முடிவு தன்னி
லாதலால் விரோதந் தம்மினவற்றிலை யாயுங்காலே.

பேதமும் உறவே எண்ணும் பெயர்களும் முறையும் பேசும்
வேதனைக்குழிக்கு அநாதி விமலன்நூல் ஒன்றுக்கு ஒன்று
பேதமும் உறவே தோன்றும் பிரளய முடிவு தன்னில்
ஆதலால் விரோதம் தம்மில் அவற்று இலை ஆயும்கால் ஏ.

Koviloor Digital Library

உரை:

உலக முடிவுக் காலத்திற்குப் பிறகு தோன்றும் படைப்புக் காலத்திற்கேற்ப அதாவது ஊழிவேறுபாட்டிற்கேற்ப துன்பம் செய்யும் நரகக் குழிக்கு எண், முறை, பெயர் ஆகியன ஒன்றுக்கொன்று வேறுபடும். ஆதலால், என்றும் உள்ள தூய சிவனருளியவான சிவாகமங்கள் எண், பெயர் முறைகளில் ஒன்றுடன் ஒன்று வேறுபட்டாலும் அவற்றிற்கு இடையே மாறுபாடு இல்லை.

விளக்கம்:

வேதனைக்குழி - நரகம்; அநாதி - தோற்றம் இல்லாதது. (106)

தொகை நரகங்களின் பெயர்கள்

479. கோரமதுதான் முதனரகங் கூறுமதன்
கீழ்க்கவின் கோரங்
கோரமதன் முன்னதி கூட்டிக்
கூறுமது மூன்றாநரகங்
கோர தரமேயதனது கீழ்க்
கோரரூப மற்றதன்கீழ்ச்
சேருமதன்கீழ்த் தரளதரஞ்
செறியுமதன் கீழ்ப்பயாநகமே.

கோரம் அதுதான் முதல்நரகம்
கூறும்அதன்கீழ்க் கவின் கோரம்
கோரம்அதன்முன் அதிகூட்டிக் கூறும்
அது மூன்றாம் நரகம்
கோரதரமே அதனது கீழ்க்
கோரரூபம் மற்றுஅதன் கீழ்ச்
சேரும் அதன் கீழ்த்தரளதரம்
செறியும் அதன் கீழ்ப்பயாநகம் ஏ.

உரை:

முதல் நரகம் கோரம்; அதன் கீழ் இருப்பது கீழக்கோரம்; அதன் கீழே இருப்பது அதிகோரம்; அதன் கீழே இருப்பது கோரதரம்; அதன் கீழே உள்ளது கோரரூபம்; அதன் கீழே இருப்பது தரளதரம்; அதன்கீழே உள்ளது பயாநகம். (107)

480. அதன்கீழ்க் காளராத்திரியே
யாருமதன் கீழ்ப் பயோற்கடமே
யதன்கீழ்ச் சண்டமது
தானேயடையும்மதன் கீழ் மகாசண்ட

Koviloor Digital Library

மதன்கீழச் சண்டகோலால
மாகுமதன் கீழ்ச்சண்டதர
மதன்கீழாகுஞ் சரோருகமே
அப்பாற் சலசவதி அதுவே.

அதன்கீழ்க்காளராத்திரியே ஆகும்
அதன் கீழ்ப்பயோற்கடமே
அதன்கீழ்ச் சண்டம்அதுதானே அடையும்
அதன்கீழ் மகாசண்டம்
அதன்கீழ்ச் சண்ட, கோலாலம்
ஆகும் அதன்கீழ்ச் சண்டதரம்
அதன்கீழ் ஆகும் சரோருகமே
அப்பாற் சலசவதி அதுவே.

உரை:

தரளதரத்தின் கீழே காளராத்திரி; அதன் கீழ்பயோற்கடம்; அதன் கீழிருப்பது சண்டம்; அதன் கீழ் உள்ளது மகாசண்டம்; அதன் கீழ் உள்ளது சண்ட கோலாலம்; அதன் கீழிருப்பது சண்டதரம்; அதன்கீழ் உள்ளது சரோருகம்; அப்பால் இருப்பது சலசவதி. (108)

481. அதன்கீழ் வீமமதுதானே
அப்பால் வீமவீடணமே
அதன்கீழ்க் கரளம்
விகரளமேயதற்குமப்பா லெனவறிக
அதன் கீழ்க்குலிச முக்கோணமைந்து
கோண மதற்கப்பா
வதன்கீழ்த் தீர்க்கதரமாகு மப்பாற்
பரிவர்த்துல மதுவே.

அதன்கீழ் வீமம் அதுதானே
அப்பால் வீமவீடணமே
அதன்கீழ்க் கரளம்விகரளமே அதற்கும்
அப்பால் என அறிக
அதன்கீழ்க் குலிசம்முக்கோணம் ஐந்துகோணம்
அதற்கு அப்பால்
அதன்கீழ்த் தீர்க்கதரம் ஆகும்அப்பால்
பரிவர்த்துலம் அதுவே.

Koviloor Digital Library

உரை:

சலசவதியின் கீழ் இருப்பது வீமம்; அதற்கு அப்பால் உள்ளது வீமவீடணம்; அதன் கீழ் இருப்பது கரளம்; அதற்கும் அப்பால் உள்ளது விகரளம்; அதன்கீழே உள்ளது குலிசம்; குலிசத்தின் கீழ் முக்கோணம்; முக்கோணத்தின் கீழே ஐந்து கோணம்; அதற்கும் அப்பால் இருப்பது தீர்க்கதரம்; அதற்கு அப்பால் உள்ளது பரிவர்த்துலம். (109)

482. அப்பாலேழு நிலமதனுக்கப்பா
லெட்டுநில மதனுக்
கப்பாற்றீர்க்க வொளியதனுக்
கப்பான்மாயை யெனவறிக
அப்பார்சடையன் விதியிகழ்ந்தா ரழுங்குங்
குழிக ளெழுநான்கு
மிப்பாவியலு ளெண்ணுக
வொவ்வொன்றிற் கோடியெண்ணுறவே.

அப்பால் ஏழுநிலம் அதனுக்கு
அப்பால் எட்டுநிலம் அதனுக்கு
அப்பால் தீர்க்கஒளி அதனுக்கு
அப்பால் மாயைஎன அறிக
அப்புஆர் சடையன் விதிஇகழ்ந்தார்
அழுங்கும் குழிகள் எழுநான்கும்
இப்பாஇயலுள் எண்ணுக
ஒவ்வொன்றில் கோடிஎண்உற ஏ.

உரை:

பரிவர்த்துலம் என்பதற்கு அப்பால் ஏழுநிலம்; அதற்கு அப்பால் இருப்பது எட்டுநிலம்; அதற்கும் அப்பால் இருப்பது தீர்க்கஒளி; அதற்கும் அப்பால் உள்ளது மாயை என அறிக. கங்கைநீரைச் சடையில் தாங்கிய சிவன் அருளிய சிவாகமங்களைப் புறக்கணித்தவர்கள் அழுந்தும் நரகக்குழிகள் இருபத்தெட்டு. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோடி விரிவின எனக் கணக்கிடுக. (110)

நாயக நரக வகைகள்

483. தொகையாலிருபத் தெட்டினையுஞ்
சொன்னே மினிநாயகநரகம்
வகையாலறைவ மதித்திடுக
வைந்தைந்தாக மற்றவற்றிற்

Koviloor Digital Library

பகையேபாவமெமக் கென்று பயந்து
கொடிய பாவத்தைத்
தகையார் தடுத்து நல்வினையைச்
சமைக்க நலத்தைத் தரமுறவே.

தொகையாய் இருபத்து எட்டினையும்
சொன்னேம் இனிநாயக நரகம்
வகையால் அறைவம் மதித்திடுக ஐந்து
ஐந்தாக மற்று அவற்றில்
பகையேபாவம் எமக்கு என்று
பயந்து கொடிய பாவத்தைத்
தகையார் தடுத்து நல்வினையைச்
சமைக்க நலத்தைத் தரம் உற ஏ.

உரை:

தொகுதியாக இருபத்து எட்டு நரகங்களைக் கூறினோம். இனி அவற்றை வகைப்படுத்தி, ஒவ்வொன்றுக்கும் தலைமையாக ஐந்து ஐந்து நரகங்கள் இருக்குமென்று உரைப்போம். பெருமைக்கு உரியவர்கள் பாவமே தங்களுக்குப் பகை என்று அஞ்சி, அதனைச் செய்யாமல் நல்ல செயல்களையே செய்து நன்மையடைய வேண்டும் என்பதற்காகவே இதனைக் கூறுகிறோம்.

விளக்கம்:

அறைவம் – உரைப்போம்; தகையார் – தக்கவர்; சமைக்க – செய்ய. (111)

484. வெந்துயர் செய்ரௌரவமா ரௌரவ மேமிக்க தமஞ்
சிந்தை கலுழதிசீத மதிவெப்ப மெனத்தெரித்த
வைந்தினையு முதல்நிரயத் ததிபதிக ளெனவறிக
விந்தமுறை நாயகங்களனைத்தினுக்கு மெண்ணுகவே.

வெம்துயர் செய்ரௌரவம் மாரௌரவமே மிக்கதமம்
சிந்தைகலுழ் அதிசீதம் அதிவெப்பம் எனத் தெரித்த
ஐந்தினையும் முதல் நிரயத்து அதிபதிகள் என அறிக
இந்தமுறை நாயகங்கள் அனைத்தினுக்கும் எண்ணுக ஏ.

உரை:

கொடிய துன்பத்தைச் செய்கிற ரௌரவம், மகாரௌரவம், அதிதமம், மனம் கலக்கும் அதிசீதம், அதிவெப்பம் எனக் கூறிய ஐந்தினையும் முதல் நரகமாகிய கோரத்துக்கு அதிபதிகள் என அறிக. இந்த முறையையே மற்ற நரகங்களுக்கும் கொள்ளுக. (அவற்றின் பெயர்கள் சொல்வோம்.) (112)

Koviloor Digital Library

அதிகோரம்

485. அதிகோரமறவு மிருடீக்கணமற்றம் போகம்
விதமுடைய சஞ்சீவஞ் சடமாயை விலோமமெனக்
கதமுடைய வீமமெனக் கடங்கபத்தோடிவை பத்தும்
விதமறுதீவிர வேகங் கராளமென விளம்புநவும்.

அதிகோரம் அறவும் இருள் தீக்கணம் மற்று அம்போகம்
விதமுடைய சஞ்சீவம் சடமாயை விலோமம் எனக்
கதம்உடைய வீமம்எனக் கடங்கபத்தோடு இவைபத்தும்
விதம்அறு தீவிரவேகம், கராளம் என விளம்புநஉம்.

உரை:

அதிகோரம், (மிகவுமிருண்டது) தீக்கணம், அம்போகம், சஞ்சீவம், சடமாயை, விலோமம் என கோபம் உள்ள வீமம் என, கடம் கபத்து என்ற இவைபத்தும், விதமற்ற தீவிரவேகம், கராளம் எனச் சொல்லப்படுவனவும். (113)

486. விகரானம் பிரகம்பம் வெண்கமலம் வீற்றுமுகம்
பகவீக்கும் கரும்பாசம் பயின்ற பிரமருத்தனமே
புகராய சூசிமுகம் புதைநேமி காதகமே
பகவுடற் பீடனங் கும்பீபாக மெனப் பகர்ந்தனவும்.

விகரானம் பிரகம்பம் வெண்கமலம் வீற்றுமுகம்
பகவீக்கும் கரும்பாசம் பயின்ற பிரமருத்தனமே
புகராய சூசிமுகம் புதைநேமி காதகமே
பகஉடல் பீடனம் கும்பீபாகம் எனப் பகர்ந்தனவும்.

உரை:

விகரானம், பிரகம்பம், வெண்கமலம், வீற்றுமுகம், கரும்பாசம், பிரமருத்தனம், சூசிமுகம், புதைநேமி, காதகம், பீடனம், கும்பீபாகம் எனச் சொல்லப்பட்டவையும்.

விளக்கம்:

சென்ற பாடலிலும், இந்தப்பாடலிலும் கூறப்பட்டுள்ள நரகங்கள் பற்றி தமிழ் நூல்களில் எந்த விவரமும் இல்லை. பொதுவாக ஏழு நரகங்களின் பெயர்கள் மட்டும் கூறப்பட்டுள்ளன. (114)

Koviloor Digital Library

487. அதிபாகங் கிரகச மற்ற சிதாருவங்காரங்
குதிகொள்ளு மிரத்தச் சீக்குழி யிருப்புத் துண்டப்புள்
கெதமாக்குஞ்சங் வருத்தங்கிரது வழன்மயச் செங்கல்
இதநீங்கவுழுத்த தசை திரபுவெனச் செப்பியவும்.

அதிபாகம் கிரகசம் அற்றசிதாரு வங்காரம்
குதிகொள்ளும் இரத்தச் சீக்குழி இருப்புத் துண்டுஅப்புஉள்
கெதமாக் குஞ்சம் வருத்தம் கிரது அழல்மயச் செங்கல்
இதநீங்க உழுத்ததசை திரபுஎனச் செப்பியவும்.

உரை:

அதிபாகம், கிரகசம், அசிதாரு, வங்காரம், இரத்தங்குதிகொள்ளும், சீக்குழி, இருப்புத்துண்டம், நீருட்செலும் மாககுஞ்சம், வருத்தம், அழல்மயம், தசை திரபு என உரைத்தனவும்; அப்பு உள் கெத - நீர் உள்ளே சென்ற. (115)

488. சோகிக்கு முச்வாச
நிச்வாசஞ் சுடர்த்தீர்க்க
மோகிக்குஞ் சுழலழல்வாள்
முள்ளிலவந் துணித்துருட்டஞ்
சோகிக்கு நாதஞ்
சுப்பிரவாகம் பிரவகனம்
வேகிக்குங் கரடியுரு மேட
மென விளம்புநவும்.

சோகிக்கும் உச்வாசம் நிச்வாசம்
சுடர்த் தீர்க்கம்
மோகிக்கும் சுழல்அழல்வாள்
முள்ளிலவம் துணித்துருட்டம்
சோகிக்கும் நாதம்
சுப்பிரவாகம் பிரவகனம்
வேகிக்கும் கரடிஉரு மேடம்
என விளம்புநவும்.

உரை:

உச்வாசம், நிச்வாசம், சுடர்த்தீர்க்கம், சுழல், அழல்வாள், முள்ளிலவம், துணித்துருட்டம், நாதம், சுப்பிரவாகம், பிரவகனம், கரடிஉரு, மேடம் எனக் கூறியனவும்.

Koviloor Digital Library

விளக்கம்:

இந்த இயலின் இப்பகுதியில் குறிப்பிடப்படும் நரகங்களின் பெயர்கள் சரியா பிழையா என்பதைத் தீர்மானிப்பதற்குத் தமிழ் அகராதிகளிலோ நிகண்டுகளிலோ இப்பெயர்கள் இடம் பெறவில்லை. ஆனால், *அபிதான சிந்தாமணி*யில் மூன்று வகையாக இருபத்து எட்டு நரக வகைகள் குறிப்பிடப் படுகின்றன. அவையும் இங்கு உதவா. (116)

489. விறலிடபமுட் பன்றி சிங்கம் வியாக்கிரம் யானை
திறனாய் சூகரமாடு திடமேதியிடவமச
மறவெடிய விருகான மதிகிரகங் கும்பீரங்
கறுவுள நக்கிராக்கியங் கட்டரவமெனக்கழறுநவும்.

விறல் இடபம் முட்பன்றி சிங்கம் வியாக்கிரம் யானை
திறன்ஆய சூகரம் மாடு திடமேதி இடவமசம்
அறவெடிய விருகானம் அதிகிரகம் கும்பீரம்
கறுவுள நக்கிராக்கியம் கட்டரவம் எனக் கழறுநவும்.

உரை:

எருது, முட்பன்றி, சிங்கம், புலி, யானை, பன்றி, மாடு, எருமை, விருகானம், அதிகிரகம், கம்பீரம், நக்கிராக்கியம், கட்டரவம் என்று சொல்லப் பட்டவையாம். (117)

490. உரைத்த பெயர்
பின்னுரைத்துமூன மிலையோன்னழலைப்
பரித்த கடத்தினை மற்றுமொரு
பொருளைப் பரித்திடலால்
விரித்துணர்வார்க் கரியெனுஞ்சொல்
வேறுபல பொருள்விளக்குஞ்
சுரித்தகிழித் தொகும் பொருள்கள்
பலவுமுள துணியுங்கால்.

உரைத்த பெயர்பின் உரைத்தும்
ஊனம் இலையோன் அழலைப்
பரித்த கடத்தினை மற்றும்
ஒரு பொருளைப் பரித்திடலால்
விரித்து உணர்வார்க்கு அரிஎனும்
சொல்வேறுபல பொருள்விளக்கும்
சுரித்தகிழித்தொகும் பொருள்கள்
பலவும்உள துணியுங்கால்.

Koviloor Digital Library

உரை:

பார்ப்பதற்கு ஒன்று போலத் தோன்றுகிற இரு குடங்களில் ஒரு குடத்தில் தீயும், இன்னொரு குடத்தில் வேறு பொருளும் இருந்தாலும் அவை குடமென்றே கூறப்படும். பார்வைக்கு ஒன்று போலத் தோன்றுகிற இரு பைகளில் உள்ள பொருள்கள் வெவ்வேறாக இருப்பினும் அவை பைகள் என்றே சொல்லப்படும். அரி என்ற ஒரே சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. இவ்வாறே, முன்பு சொன்ன பெயரைப் பின்பு சொல்வதால் குற்றமில்லை. அவை தனித்தனியே வேறு பொருளைக் குறிப்பிடும். (118)

491. கூர்மவுருக் கருங்காகங் கொடுங் கழுகு கடுங்கூகை
காா்வாய வட்டை புலிகவிகட் கங் கண்டகமே
யீர்வாய்ச் சீயிரத்தவிழியிகழ் பூதி மிருத்திகையே
சேர்வாய கணதூம மென முறையிற் செப்பியவும்.

கூர்மஉருக் கரும் காகம் கொடும் கழுகு கடும் கூகை
கார்வாய வட்டை புலி கவி கட்கம் கண்டகமே
ஈர்வாய்ச் சீஇரத்தவிழி இகழ்பூதி மிருத்திகையே
சேர்வாய கணதூமம் என முறையில் செப்பியவும்.

உரை:

கருங்காகம், கழுகு, கூகை, வட்டை, புலி, குரங்கு, வாள் முள், இரத்த விழி, பூதி, மிருத்திகை, கணதூமம் எனச் சொல்லியவையும்; (119)

492. அழலுமிழ்வன் புழுக்குழிய மேத்தியமப் பிரதிகரம்
வழுவாயுண்ணீர்த் தானம்வாய்நீர்ச் சீவனமூலினக்
கழியாத் தான்றனைத் தின்னல்கலர் தனத்தமனைத்துமுண
லொழியாத தாருணமேயென முறையி லுரைத்தனவும்.

அழல்உமிழ்வன் புழுக்குழி அமேத்தியம் அப்பிரதி கரம்
வழுவாய் உண்ணீர்த்தானம் வாய்நீர்ச் சீவனமூலினம்
கழியாத்தான் தனைத் தின்னல்கலர் தனத்தம் அனைத்தும் உண்ணல்
ஒழியாத தாருணமே என முறையில் உரைத்தனவும்.

உரை:

நெருப்புமிழும் புழுக்குழி, அமேத்தியம், பிரதிகரம், உண்ணீர்த்தானம், சீவனமூலினம், தான்தனைத் தின்னல், தாருணம் எனக் கூறியவையும். (120)

Koviloor Digital Library

493. வேதிக்குஞ் சங்கடமே வித்தரமே மிகுவிகடம்
வாதிக்குங் கட்பூதம் கரிநெருப்பு வறையோடு
பேதிக்கும் வைதரணி யிருப்பழற்பாற் பிணித்துறக்க
லேதத்தைத் தருமேக பாதமென விசைத்தனவும்.

வேதிக்கும் சங்கடமே வித்தரமே மிகு விகடம்
வாதிக்கும் கட்பூதம் கரிநெருப்பு வறையோடு
பேதிக்கும் வைதரணி இருப்பு அழல்பால் பிணித்துறக்கல்
ஏதத்தைத் தரும் ஏகபாதம் என இசைத்தனவும்.

உரை:

வேதித்தெடுக்குஞ் சங்கடம், வித்தரம், விகடம், கட்பூதம், கரிநெருப்பு, வைதரணி, இருப்புஅழல், ஏகபாதம் என உரைத்தவையும்; (121)

494. அறவருத்தும் பூரணமே யசிதால வனங்கோர
முறியவெலும்பினை முருக்கன் முழுப்பீடை திலச் செக்கே
யெறியவுறு மியந்திரமே கருப்பாலையிடர்ப்பாசம்
மறியவுடன் மருத்தனமே யெனமுறையில் வகுத்தனவும்.

அறவருத்தும் பூரணமே அசிதாலவனம் கோரம்
முறிய எலும்பினை முருக்கன் முழுப்பீடை திலம் செக்கே
எறியஉறும் இயந்திரமே கருப்பாலை இடர்ப்பாசம்
மறியஉடல் மருத்தனமே என முறையில் வகுத்தனவும்.

உரை:

முற்ற முடிய வருத்தும் பூரணம், அசிதாலவனம், கோரம், முருக்கல், பீடை, செக்கு, இயந்திரம், கருப்பாலை, பாசம், மருத்தனம் எனச் சொல்லியவையும்; (122)

495. பரியகலீ நுண்கல்லீ பாறையழலிருப்புமயம்
பொருவரைகள் குரதாரம்யாமளமென் பொருப்பதுவே
யருவருமூத்திர கூபமலக் கூபமறவுமிரு
ளெரியவறற் சாதனமே யுரலுலக்கை என்பனவும்.

பரியகலீ நுண்கல்லீ பாறை அழல் இருப்புமயம்
பொருவரைகள் குரதாரம் யாமளம்மெல் பொருப்பதுவே
அருவருமூத்திர கூபம் மலக்கூபம் அறவும்இருள்
எரியஅறல் சாதனமே உரல்உலக்கை என்பனவும்.

Koviloor Digital Library

உரை:

பரியகல், நுண்கல், பாறை அழல், இருப்பு மயம், குரதாரம், யாமளம், மூத்திர கூபம், மலக் கூபம், அறல் சாதனம், உரல் உலக்கை ஆகியவையும்; (123)

496. அரைத்தொறுக்கு மியந்திரமே சிலைவண்டிலயக் கலப்பை
வருத்தியிடுந்தாலவன மாமசக மண்டுகமே
தருக்கழிக்கும் சம்மோக மத்திபங் கந்தழற்குல
மிருப்பழலாமுருள் விழுங்கலென முறையிலிசைத்தனவும்.

அரைத்து ஒறுக்கும் இயந்திரமே சிலைவண்டிலயக் கலப்பை
வருத்தியிடும் தாலவனம் மாமசகம் மண்டுகமே
தருக்கு அழிக்கும் சம்மோக மத்திபம் கந்து அழற்சூலம்
இருப்பு அழலாம் உருள் விழுங்கல் எனமுறையில் இசைத்தனவும்.

உரை:

அரைத்துத் தேய்க்கும் இயந்திரம், சிலை வண்டி, கலப்பை, தாலவனம், மாமசகம், மண்டுகம், சம்மோக மத்திபம், கந்து, அழற்குலம், உருள் விழுங்கல் என்று சொல்லியவையும்; (124)

497. பலதுயரமிகு துயரம் பழுதாய கசுமலமே
நிலவரிய சமலமல நிட்டுரவாலாகலமே
விலகரிய மிதவிருபம் விகிர்தமிய மானுகமே
யிலகியிடு மொருபாதந் திரிபாத மென்பனவும்.

பலதுயரம் மிகுதுயரம் பழுதுஆய கசுமலமே
நிலவஅரிய சமலமலம் நிட்டுரம் ஆலாகலமே
விலக அரிய மித விருபம் விகிர்தமியம் ஆனுகமே
இலகி இடும் ஒரு பாதம் திரிபாதம் என்பனவும்.

உரை:

பலதுயரம், மிகுதுயரம், கசுமலம், சமலமலம், நிட்டுரம், ஆலாகலம், மிதவிருபம், விகிர்தமியம், ஆனுகம், ஒரு பாதம், திரிபாதம் என்று சொல்லப் படுகின்றனவையும்; (125)

498. அறக்கொடிய தீவிரமேய வீசிஎன வறைந்தனவுஞ்
செறித்தறிக வொருநூற்று நாற்பதெனத் திண்ணமுற
வொறுத்துயிர்க்குப் பாவவித மொழிக்க வொழுக்கிய நிரயத்
திறத்தினுக்கு நாயகங்க டெருள வெனுஞ் சிந்தையரே.

Koviloor Digital Library

அறக்கொடிய தீவிரமே அவீசி என அறைந்தனவும்
செறித்து அறிகஒரு நூற்றுநாற்பது எனத் திண்ணம் உற
ஒறுத்து உயிர்க்குப் பாவவிதம் ஒழிக்க ஒழுக்கிய நிரயத்
திறத்தினுக்கு நாயகங்கள் தெருள எண்ணும் சிந்தையர் ஏ.

உரை:

ஆகக்கொடிய தீவிரம், அவீசி எனச் சொல்லப்பட்டுள்ளனவுமான நூற்று நாற்பது நரகங்களைத் திண்ணமாகப் பிரித்து உணருவதற்கும், மக்களின் பாவ வகைகளை ஒழிக்க, நிறுவிய நரக வேறுபாடுகளில் ஒன்றுக்கு ஐந்து அதிபதிகள் என்று அறிந்து கொள்வதற்கும் என அறிக. (126)

அரச நரகங்கள்

499. இருள்புழுதி வடிவாகியிடர் மிகுந்தரௌரவத்தை
வரையனென வறிந்திடுக வருந்துயரந் தனைக் கொடுக்கு
மெரிமயக்கும்பீபாக மிதற்கு மிறையென வெணுக
கிருமிசெறிய வீசியிறை யெவற்றினுக்குங் கிளக்குங்கால்.

இருள்புழுதி வடிவுஆகி இடர்மிகுந்த ரௌரவத்தை
அரையன் என அறிந்திடுக அரும்துயரம் தனைக் கொடுக்கும்
எரிமயக் கும்பீபாகம் இதற்கும் இறை என எண்ணுக
கிருமிசெறி அவீசி இறை எவற்றினுக்கும் கிளக்குங்கால்.

உரை:

இருண்டபுழுதி வடிவாகி மிகுந்த துயரத்தைச் செய்யும் ரௌரவத்தை எல்லா நரகங்களுக்கும் அரச நரகம் என்று அறிக. கொடிய துன்பஞ் செய்யும் தீப்பிழம்பு போன்ற கும்பீபாகம் என்னும் நரகம், ரௌரவ நரகத்துக்கும் அரசன் எனக் கருதுக. சொல்லுங்கால், அவீசி நரகமே எல்லா அரச நரகங்களுக்கும் உயர்ந்த அரச நரகமாகும். (127)

பாவிகள் கரையேறும் முறைமை

500. செய்த செய்த தீவினையின் றிறத்திசைய விவற்றழுங்கி
மையலுறு மவர்துயரமுடிவின்கண் வல்வினைகள்
பையவிட வெடுத்திடவும் படுவ ரழற்படு கனகம்
வெய்யவழலினை விடுமே களிம்பறலும் விளங்கிடுமே.

Koviloor Digital Library

செய்த செய்த தீவினையின் திறத்துஇசைய இவற்று அழுங்கி
மையல்உறும் அவர்துயரம் முடிவின்கண் வல்வினைகள்
பையவிட எடுத்திடவும்படுவர் அழல்படு கனகம்
வெய்யஅழலினை விடுமே களிம்புஅறலும் விளங்கிடும் ஏ.

உரை:

தங்கத்தைப் பொற் கொல்லர் தீயிலிட்டு உருக்கியபோது, அதிலுள்ள அழுக்கு அகன்று சொக்கத் தங்கமாகத் தீயிலிருந்து வெளிவருவது போல, பாவிகள் தாங்கள் செய்த பாவங்களுக்கு உரிய பலனாக நரகத் துன்பங்களை நுகர்ந்த பிறகு, பாவம் இல்லாதவர்களாக நரகத்திலிருந்து யமதூதர்களால் எடுத்து விடுவிக்கப் படுவர். (**கனகம்** - தங்கம்) (128)

எமன் தூதர் பாவியரைத் தண்டிக்கும் முறை

501. **மறுத்தருட் டமக்குவைத்த வத்தனித்தன் வாய்மையும்**
வெறுத்தறத்தினைத் தவத்தைவிட்ட கட்ட துட்டரைக்
கறுத்துளத் தறச் சிவத்தழற் கலித்த கண்ணரா
யொறுத்தொறுத் துறுக்குவார்க டூதராயுதத்துமே.

மறுத்துஅருள் தமக்கு வைத்த அத்தன் நித்தன் வாய்மையும்
வெறுத்து அறத்தினைத் தவத்தை விட்ட கட்ட துட்டரைக்
கறுத்து உளத்து அறச் சிவத்து அழல் கலித்த கண்ணராய்
ஒறுத்து ஒறுத்து உறுக்குவார்கள் தூதர் ஆயுதத்தும் ஏ.

உரை:

தங்களுக்கு அருள் செய்யும் தந்தையும் என்றும் உள்ளவனுமாகிய சிவ பெருமான் அருளிய சிவாகமங்கள் கூறும் உண்மைகளை மறுத்து, தங்களுக்கே உரிய அறத்தையும் நோன்பையும் செய்யாது விட்ட தீயவர்களை எமனுடைய ஏவலர்கள் உள்ளம் கொதித்து தீப்பொறி பறக்கக் கண்கள் சிவந்து, இகழ்ந்து, படைக் கலத்தால் தாக்கிப் பலமுறை தாக்குவர்.

விளக்கம்:

அத்தன் - தந்தை;

''அத்தன் எனக்கு அருளிய வாறுஆர்
பெறுவார் அச்சோவே''

என்பது திருவாசகம்.

நித்தன் - என்றும் உள்ள சிவபெருமான்; தவம் - நோன்பு. இல்லறத்தார்க்குச் சிவ விரதங்களே தவமாக உள்ளன.

Koviloor Digital Library

கட்ட - பொல்லாத; துட்டர் - தீயவர்; கறுத்து - சினந்து; கலித்தல் - கக்குதல்; ஒறுத்து - தண்டித்து, இகழ்ந்து; உறுக்குவார்கள் - அதட்டுவார்கள்; தூதர் - எமனுடைய பணியாளர்; ஆயுதம் - படைக்கலம், போர்க்கருவி; ஏ - அசை. (129)

502. இருப்பழற் றொடர்ப்பிணித் திடர்ப்படக் கரத்தினும்
பரித்திடப் பணித்தவண்பழிப்புடற் பதைக்கவே
துரக்கமெய்ச் சுழன்றுருண்ட துக்கரைத் தொகுத்துவிண்
டருக்கறச் சதத் திருப்புருட் பிணிப்பர் தாளிலே.

இரும்புஅழல் தொடர்பிணித்து இடர்ப்படக் கரத்திலும்
பரித்திடப் பணித்து அவண் பழிப்பு உடல் பதைக்கவே
துரக்கமெய்ச் சுழன்று உருண்ட துக்கரைத் தொகுத்துவிண்
தருக்குஅறச் சதத்து இரும்பு உருள் பிணிப்பர் தாளில் ஏ.

உரை:

தீயைப் போன்ற வெப்பமுள்ள இரும்புச் சங்கிலியால் கைகளைக் கட்டி, துன்பங் கொள்ளும்படி அச்சங்கிலியை ஏந்தும்படி செய்து, அங்கு பழிப்புக்கு உட்பட்ட உடம்பு பதறும்படி விரட்ட, ஓட முடியாமல் உடல் சுழன்று கீழே விழுந்து புரண்டு துயரமடைய பாவிகளை மறுபடியும் பிடித்துத் தூக்கி நிறுத்தி, அவர்களின் செருக்கு அகலும்படி நூறு இரும்பு உருண்டைகளை அவர்களின் கால்களிற் கட்டுவர்.

விளக்கம்:

இருப்பு - இரும்பு; அழல் - நெருப்பு; தொடர் - இரும்புச் சங்கிலி; பிணித்து - கட்டி; பரித்திட - தாங்கிட; பணித்து - கட்டளையிட்டு; அவண் - அங்கு; பதைக்க - பதற, துடிக்க; துரக்க - துரத்த, விரட்ட; மெய் - உடம்பு; சுழன்று - சுருண்டு; துக்கர் - துயரப்படுகிறவர்; தொகுத்து - சேர்த்துப் பிடித்து; விண் - வீண் என்பது விண் என வந்துள்ளது. தருக்கு - செருக்கு; சதம் - நூறு; உருள் - உருண்டை; தாளில் - கால்களில்; ஏ - அசை. (130)

503. உன்னுவார் கண்முன்னை
வல்வினைத் திறமுளத்துளே
யென்னை செய்யலாவதென்று
மெண்ணி நொந்திளைப்பருந்
துன்னவாரு மில்லையுற்ற
துக்கநோய் துடைக்கவு
மன்னுமாமனத்தொ டல்லதில்லை
யூடல் வாய்மையே.

Koviloor Digital Library

உன்னுவார் கண் முன்னைவல்
வினைத்திறம் உள்ளத்துள்ளே
என்னை செய்யல் ஆவது என்றும்
எண்ணி நொந்து இளைப்பரும்
துன்னுவாரும் இல்லை உற்ற
துக்க நோய்துடைக்கவும்
மன்னும்மா மனத்தொடு அல்லது
இல்லை ஊடல் வாய்மை ஏ.

உரை:

முன் சொன்ன பாவியர், தாம் முன்பு செய்த கொடிய செயல்களின் வகைகளை விசாரிப்பர். இவற்றிற்குச் செய்யத்தக்க பரிகாரம் யாதுமில்லையே என்று எண்ணி, மனந் தளர்ந்து மெலிவடைவர். தம்மையடைந்த துயர நோயைப் போக்கி உதவுவார் யாரும் இல்லாததால், பிணங்குவதற்கு அவர்களின் உடலும் மனமும் தவிர வேறு எதுவுமில்லை. இதுவே உண்மை.

விளக்கம்:

உன்னுவார் - கருதுவார்; **முன்னை** - முன்பு; **வல்வினை** - பாவம்; **என்னை** - என்ன; **செய்யலாவது** - செய்யத்தக்கது; **நொந்து** - துயருற்ற; **இளைப்பர்** - மெலிவடைவர். **துன்னுவார்** - உதவுகிற நண்பர்; **உற்ற** - பொருந்திய; **துக்கநோய்** - துயரமாகிய பிணி; **துடைக்க** - நீக்க; **மன்னுதல்** - நிலைபெறுதல்; **ஊடல்** - பிணக்கு; **செய்யல் ஆவதென்னை** - இத்துயரங்கட்கு மோசனமாம்படி செய்யத் தக்கது யாது? ஏதுமில்லை. (131)

504. சித்தமுந் திகைக்கவே யிரத்தமுந் தெறிக்கவே
மொத்துவாரழற்கசைக் கொழுந்தழுந்திமூளவூன்
குத்துவாரிருப்புலக்கையைக் கரத்தினிற் கொடே
மத்தரான தூதர் பாவமேவினாரை வாடவே.

சித்தமும் திகைக்கவே இரத்தமும் தெறிக்கவே
மொத்துவார் அழல் கசைக்கொழுந்து அழுந்திமூளஊன்
குத்துவார்இருப் புலக்கையைக் கரத்தினில் கொடே
மத்தரான தூதர் பாவம் மேவினாரை வாட ஏ.

உரை:

செருக்குடைய எமனுடைய பணியாளர்கள், பாவிகளின் மனம் தடுமாற, அவர்களுடைய உடல்களிலிருந்து குருதி வெளிப்பட தீயைக் கக்கும் சவுக்கின் நுனி தசையைக் கிழித்து அதன் உள்ளே பதியும்படி அடிப்பார்கள். பின்னர், இரும்பாலான உலக்கையைக் கையில் ஏந்தி, அவர்கள் தளர் வடையும்படி குத்துவார்கள்.

Koviloor Digital Library

விளக்கம்:

சித்தம் - உள்ளம்; திகைக்க - தடுமாற; தெறிக்க - சிந்த; மொத்துதல் - அடித்தல்; கசை - அடிக்கிற சவுக்கு, பின்னற் கயிறு; கொழுந்து - இங்கு இது சவுக்கின் நுனிப்பகுதியைக் குறிக்கிறது.

அழுந்தி - உள்ளே பதிந்து; கொடு - கொண்டு; மத்தர் - வெறியர், செருக்குடையவர்; குத்துதல் - தாக்குதல்; இருப்புலக்கை - இரும்பினால் செய்யப்பட்ட உலக்கை; உலக்கை - நெல்குற்றுங்கருவி; மேவினார் - பொருந்தியவர்; வாட - தளர்வடைய. (132)

505. ஒழுக்குவார்கள் காரநீரு மொள்ளழற் குழம்புமோ
தெழித்திரத்த வெள்ளமுந் திறக்க மெய்மறக்கவே
யழுத்திவாளையங்க மெங்குமன்றி நின்றரிந்துடற்
புழுக்குவாரெணெய்த் தடக் குடத்தினுட் புகுத்தியே.

ஒழுக்குவார்கள் காரநீரும் ஒள் அழல்குழம்புமோ
தெழித்து இரத்த வெள்ளமும் திறக்கமெய் மறக்கவே
அழுத்திவாளை அங்கம் எங்கும் அன்றி நின்று அரிந்து உடல்
புழுக்குவார் எண்ணெய்த் தடக் குடத்தினுள் புகுத்தி ஏ.

உரை:

இவ்வாறு அடிபட்டுப் புண்ணாகிய உடம்பிலே கூச்சலிட்டபடி உப்பு முதலான காரநீரையும், தீக்குழம்பையும் கொட்டுவார்கள். மேலும், உடலில் இருந்து குருதி வெளிப்பட்டு ஓட, நினைவு மறக்குமாறு வாளால் உடல் உறுப்புகளைச் சிறிது சிறிதாக அரிந்து, பெரிய எண்ணெய்க் குடத்தினுள் போட்டு வேக வைப்பார்கள்.

விளக்கம்:

ஒழுக்குவார் - ஊற்றுவார்; காரநீர் - உப்புநீர் முதலானவை; ஒள் - ஒளிஉள்ள; அழல் - தீ; தெழித்து - உரப்பி, கூச்சலிட்டு; மெய்மறக்க - உடல் நினைவு சோரல்;

அன்றி - அல்லாமல்; அங்கம் - உறுப்பு; அரிந்து - அறுத்து; புழுக்குதல் - அவித்தல்; எணெய் - எண்ணெய்; தட - பெரிய; குடம் - நீர் பாத்திரம். (133)

506. விட்டைமிக்க கூபவாய் விழுங்கவே யழுங்குவார்
கட்டமிக்க மேதைசீக் கலந்துளங் கலங்குவார்
நிட்டுரப் புழுக்குழிக்கு ணின்றயர்ந்து நீங்கிலார்
விட்டறத்தினைக் களித்தவம் புரிந்த வீணரே.

Koviloor Digital Library

விட்டைமிக்க கூபம்வாய் விழுங்கவே அழுங்குவார்
கட்டம் மிக்க மேதைசீக் கலந்து உள்ளம் கலங்குவார்
நிட்டுரப் புழுக்குழிக்குள் நின்று அயர்ந்து நீங்கிலார்
விட்டு அறத்தினைக் களித்து அவம்புரிந்த வீணர் ஏ.

உரை:

இல்லாதவருக்கு ஈதல் முதலான அறப்பணிகளைக் கைவிட்டுத் தீய செயல்களைப் புரிந்து மகிழ்ந்த கொடியவர்கள், கழுதை முதலிய விலங்குகளின் மலம் நிரம்பிய நரகக் கிணற்றில் மூழ்கிக் கிடந்து வருந்துவர்; சிலர் துயரம் மிகுந்த புலால், சளி, சீழ் ஆகியவை நிறைந்த நரகத்தையடைந்து நெஞ்சம் மயங்குவர். சிலர்கொடிய புழுக்கள் நிரம்பிய நரகக் குழிக்குள் கிடந்து, அதிலிருந்து வெளியேற முடியாமல் மனம் தளருவர்.

விளக்கம்:

விட்டை - கழுதையின் மலம். 'கழுகை விட்டை கைநிரம்ப' என்பது ஒரு *பழமொழி.*

கூபம் - கிணறு; விழுங்க - அமிழ்ந்து; அழுங்குவர் - வருந்துவர்; கட்டம் - துன்பம்; மேதை - இறைச்சி; சீ - சீழ், சளி; நிட்டுரம் - கொடுமை; 'நிட்டுரமாக நிதிதேடும் மன்னவனும்' என்பது அவ்வையாரின் வாக்கு. *(தனிப்பாடல்).* அயர்ந்து - சோர்வுற்று; நீங்கிலார் - வெளியேற முடியாதவர். அறம் - ஈதல்; 'ஈதல் அறம் தீவினை விட்டு ஈட்டல் பொருள்' என்பது அவ்வையாரின் அருள்மொழி. *(தனிப்பாடல்).* அவம் - தீமை; வீணர் - தமக்கே துயர்விளைக்கும் அர்த்தமற்ற செயல் (வீண்செயல்) செய்தவர். (134)

507. கூரிதாய வாயவாயதாதி கோதிமோதியு
மீரவீரவாறுபோ லிரத்தமும் பரக்கவே
தீருமாறு தேடுவார்கடீய பாவ மேவினார்
வீரமாய நாயுமாய வாயினால் விடக்கடும்.

கூரிதாய் அவாய வாயதாதி கோதி மோதியும்
ஈரஈர ஆறுபோல் இரத்தமும் பரக்கவே
தீரும்ஆறு தேடுவார்கள் தீயபாவம் மேவினார்
வீரம்ஆய நாயும் ஆய வாயினால் விடக் கடும்.

உரை:

தீய செயல்களைச் செய்த பாவியரை, அபாயமான கூரிய வாய்களை யுடைய கழுகு முதலான பறவைகள் தம் கால்களால் தாக்கியும், அலகுகளால் கொத்திக் கிழித்து இழுக்கவும், வலிமையுள்ள நாய் தன் பற்களால் கடித்துக் குதறவும்,

Koviloor Digital Library

அதனால் உடல் கிழிந்து குருதி ஆறுபோல் பரவவும் வருந்தி, அத்துன்பங்களைப் போக்க அவதிப்படுவர்.

விளக்கம்:

கூரிதாய வாய வாயத ஆதி - கூரியவாயையுடைய காகம் முதலியன. வாயத - வாயச. வாயசம் - காகம். 'அவாயம் அறவே அடிமையதாக்கி' என்பது திருமூலர் வாக்கு. கோதி - கிழித்து; மோதி - தாக்கி; ஈர - ஈர்க்க, இழுக்க; பரக்க - விரிய; தீரும்ஆறு - தீரும்வழி; மேவினார் - பொருந்தியவர்; வீரம் - வலிமை; கடும் - கடிக்கும். இரத்தமும் ஆறு போல் பரக்க எனக் கூட்டுக. (135)

508. செக்கிடைத் திலத்தினுக்கு மொப்பெனத் திருக்குவார்
இக்கினுக்கு மொப்பெனக் கலைப்பர் வைத்தியந்திரத்
தப்பினைக் கலந்தவுப் பெனத் தழற்கழுத்துவார்
தப்பறத் தமக்கறம் புரிந்திலார்க டம்மையே.

செக்குஇடைத் திலத்தினுக்கும் ஒப்பு எனத் திருக்குவார்
இக்கினுக்கும் ஒப்பு எனக்கலைப்பர் வைத்து இயந்திரத்து
அப்பினைக் கலந்த உப்பு எனத் தழற்கு அழுத்துவார்
தப்புஅறத் தமக்கு அறம்புரிந்திலார்கள் தம்மை ஏ.

உரை:

தனக்குத்தான் நல்லதென்று கொண்டு அறஞ்செய்யாத கருமிகளான தீயவர்களை, எமனுடைய பணியாளர்கள் செக்கில் இட்டு எள்ளை அரைப்பது போல் செக்கைத் திருகி அரைத்து தண்டிப்பர்; அவர்களைக் கரும்புக்கு நிகராக எண்ணிக் கரும்பைச் சாறுபிழியும் ஆலையில் இட்டு அவர்களை இறுக்கி நசித்துத் தண்டிப்பர்; மேலும், நீருடன் கலந்த உப்பு, அந்த நீருடன் இரண்டறக் கலந்து விடுவது போல, எரியும் நரக நெருப்பில் அவர்களுடைய உடல்களும் ஒன்றாகக் கலந்துவிடுமாறு தீயில் அமிழ்த்துவர்.

விளக்கம்:

திலம் - எள்; ஒப்பு - நிகர்; திருக்குவர் - திருகுவார், பின்னால் உடலை வளைத்து முறிப்பர்; திருக்குதல் - செக்கை வலிந்து திருப்புஞ் செயல். இக்கு - கரும்பு; கலைப்பர் - நறுக்குவர்; இயந்திரம் - கரும்பை நறுக்கும் பொறி. அப்பு - நீர்; அமிழ்த்தல் - அமுக்குதல்; தப்பு - குற்றம்; ஏ - அசை. (136)

509. பொய்யினைப் புகன்றபுல்லர்
வாயினைப் புடைத்துநாக்
கொய்வர்துக்க பேதமுங் கொடுப்பர்
தூதர் கோணனா

Koviloor Digital Library

வெய்யர் முன்பு சொன்ன
பொய்வினைத் திறம் விளங்கவே
நைவரென்னை செய்வமென்று
தீருமாறு நாடியே.

பொய்யினைப் புகன்ற புல்லர்
வாயினைப் புடைத்து நாக்
கொய்வர்துக்க பேதமும்
கொடுப்பர்தூதர் கோணனா
வெய்யர்முன்பு சொன்ன பொய்
வினைத்திறம் விளங்கவே
நைவர் என்னை செய்வம்
என்று தீரும்ஆறு நாடி.

உரை:

எமனுடைய பணியாள்கள் பொய் பேசிய அற்பர்களின் வாய்களிலே அடித்து, அவர்களின் நாக்குகளை அரிந்து பல கொடுமைகளுக்கு உட் படுத்துவர். அப்போது அந்த நேர்மையில்லாதவர்கள், தாங்கள் முன்பு பேசிய பொய்யுரைகள் யாவும் தங்கள் நினைவுக்கு வர, அவற்றால் உண்டாகிய பாவப் பலன்களை நீக்குவதற்கு என்ன செய்வதென்று எண்ணி எண்ணிப் பரிதவிப்பர்.

விளக்கம்:

புல்லர் - அற்பர்; புடைத்து - அடித்து; நா - நாக்கு; கொய்வர் - அறுப்பார்கள்; துக்க பேதம் - பலவகைத்துன்ப; தூதர் - எமனுடைய ஏவலர்;

கோணன் - நேர்மையில்லாதவன்; வெய்யர் - கொடியவர்; விளங்குதல் - நினைவுக்கு வருதல்; நைவர் - வருந்துவர்; என்னை - என்ன; செய்வம் - செய்வோம்; தீரும் ஆறு - தீரும்வழி. (137)

510. வேதமாதிநூலினுள் விதித்தறத்தினைப் பழித்
தேதமான நூலியம்புமீனர் நாவெழுந்து போய்க்
காதமோடரைத்தூரங்கலிக்க வெங்கலப்பையால்
வாதைகூருமாறு கீறி யூறு செய்ய மாய்வரே.

வேதம்ஆதி நூலின்உள் விதித்த அறத்தினைப் பழித்து
ஏதம்ஆன நூல்இயம்பும் ஈனர் நாவு எழுந்து போய்க்
காதமோடு அரைத்தூரம் கலிக்கவெம் கலப்பையால்
வாதை கூருமாறு கீறி ஊறு செய்யமாய்வர்.

Koviloor Digital Library

உரை:

சிவாகமம் முதலான அறநூல்கள் கூறும் நேர்மையான வழிகளைப் புறக்கணித்து இகழ்ந்து, அவற்றிற்கு நேர்மாறான நூல்களை இயற்றுகிற இழிந்தவரின் நாக்கு, பதினைந்து மைல் தூரம் வரை நீண்டு வளரும். அவ்வாறு நீண்டு வளர்ந்த நாவின் மீது யமதூதர் கொடிய கலப்பையால் உழுவார்கள். அதனால், கலப்பையின் கொழு நாவைக் கிழிக்க வருந்திமாள்வர்.

விளக்கம்:

வேதம் - ஒவ்வொரு மதத்துக்கு வேதம் உண்டு. இந்து மதத்துக்கு *இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்* என்பவை வேதங்களாக உள்ளன. சிவசமயத்தினருக்கு அவற்றுடன் *சிவாகமங்களும் திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள்* ஆகிய தமிழ் நூல்களும் வேதங்களாக உள்ளன. அறம் - வாழ வேண்டிய முறைகளை உணர்த்துவது. ஏதம் - குற்றம்; ஈனர் - இழிந்தவர்; எழுந்து - வளர்ந்து; காதம் - பத்து மைல்; ஒன்றரைக் காதம் - பதினைந்துகல் தொலைவு. கலிக்க - தழைக்க; வெம் - கொடிய; வாதை - துன்பம்; கலப்பை - நிலத்தை உழும் கருவி. (138)

511. விதித்திறத்தை செவிப்புலத்துள்
விளைத்தருள்செய் வேதியனைக்
கொதித்த தட்டுமவர் முகத்தைக்
குடைந்திரத் தங்குடித்திடலும்
பதைத்திடுவரட்டைபல பருகிய
பின்னழற் காரம்
விதிர்த்தலற விட்டிடுவர்
தாமிரத்தின் வெவ்வழலும்.

விதித்திறத்தைச் செவிப்புலத்துள்
விளைத்துஅருள் செய்வேதியனைக்
கொதித்து அதட்டும் அவர்
முகத்தைக்குடைந்து இரத்தம் குடித்திடலும்
பதைத்திடுவர் அட்டை பல
பருகிய பின் அழல்காரம்
விதிர்த்து அலறவிட்டிடுவர்
தாமிரத்தின் வெவ்வழலும்.

உரை:

சிவாகமங்கள் உணர்த்தும் நெறிகளைத் தங்களின் காதுகள் கேட்டு அறியுமாறு கற்பித்த ஆசிரியரைத் தங்களுக்கு இருக்கும் வசதி காரணமாக, மதிக்காமல், கோபத்தோடு அதட்டிப் பேசுகிறவர்கள் பாவிகள் ஆவர்.

Koviloor Digital Library

அப்பாவிகளின் கன்னங்களை அட்டைகள் குடைந்து குருதியைக் குடித்துவிட, அதனால், உடல் பதற கீழே விழுவர். பின்னர், எமனுடைய தூதுவர் அவர்களின் உடம்புகளின் மீது எரிச்சலை ஏற்படுத்தும் காரநீரையும், நடுங்கி அலறியழும்படி தீயில் உருக்கிய செம்புக் குழம்பையும் ஊற்றுவர்.

விளக்கம்:

விதித் திறத்தை - ஆகம உண்மைகளை; **செவிப்புலம்** - காதுகளால் கேட்கப்படுகிற அறிவு; **புலம்** - அறிவு; **அருள்செய்** - உபதேசித்த, கற்பித்த; **வேதியன்** - இது சிவாகமங்கள் ஆகிய வேத உண்மைகளை உணர்த்தும் ஆசிரியரைக் குறிக்கிறது. **கொதித்து** - சினந்து; **அதட்டுதல்** - இரைந்து வெருட்டிப் பேசுதல்; **பதைத்தல்** - பதறுதல்; **காரம்** - எரிச்சலை உண்டாக்கும் உப்பு, மிளகாய்த்தூள் முதலியவை கலந்த நீர்; **தாமிரம்** - செம்பு; **தாமிரத்தின் வெவ்வழல்** - தீயில் உருகிய செம்புக் குழம்பு. (139)

512. **உருகிய பித்தளைத் தழலு மொழுக்கிடுவ ரதன் பின்பு**
விரையவழலுறு தயிலமது தனையும் விட்டிடுவர்
பொருகிருமி மலவளறும் பூரிப்பர் புல்லியரை
வெருவுறுத்தி நமன் றூதர் விதியிகந்த வினைவிடவே.

உருகிய பித்தளைத் தழலும் ஒழுக்கிடுவர் அதன்பின்பு
விரைய அழல்உறும் தயிலம் அதுதனையும் விட்டிடுவர்
பொருகிருமி மலம்அளறும் பூரிப்பர் புல்லியரை
வெருவுஉறுத்தி நமன் தூதர் விதிஇகந்த வினைவிட ஏ.

உரை:

சிவாகம விதிகளை இகழ்ந்து புறக்கணித்த கீழ்மக்களின் பாவம் ஒழியும்படி எமனுடைய ஏவலர்கள் அவர்களைப் பயமுறுத்தித் தீயில் உருகிய பித்தளைக் குழம்பை அவர்களுடைய உடல்களின் மீது விடுவர்; பின்னர், விரைவாக அவர்களுடைய உடம்புகளிலே கொதிக்கக் காய்ச்சிய எண்ணெயையும் ஊற்றுவர்; மேலும், புழுக்கள் நெருங்கிய மலமுள்ள நரகச் சேற்றில் அவர்களை மூழ்கடிப்பர்.

விளக்கம்:

ஒழுக்கிடுவர் - ஊற்றுவர்; **தயிலம்** - தைலம், எண்ணெய்; **பித்தளைத் தழல்** - தீயால் நெகிழ்ந்து உருகிய பித்தளைக் குழம்பு; **அழல்உறும் தைலம்** - கொதிக்கக் காய்ச்சிய எண்ணெய்; **அதுதனை** - அதனை; **அளறு** - குழைசேறு நரகம்; **வெருவு** - அச்சம்; **பூரிப்பர்** - அமிழ்த்துவர், நிறைவிப்பர்; **புல்லியர்** - கீழ்மக்கள்; ''புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம் புண்ணியர் ஆவாரோ புகல்.'' (*நீதிவெண்பா*-33) என்பது *நீதிவெண்பாவின்* அறிவுரை.

இகந்த - பழித்த, இகழ்ந்த என்பதன் தொகுத்தல். **வினைவிட** - பாவம் ஒழிய. (140)

Koviloor Digital Library

513. உற்றிடுவ ருரைத்த துயரனைத்தினையு மொருவாதே
பெற்றெடுத்ததாய் தன்னைத் தந்தைதனைப் பெரியோரைப்
பற்றறவே பாடித்துக் கொதித் ததட்டும் பாவியருங்
குற்றமவர் செய்திடினும் பொறுத்திடுகை குணமன்றோ.

உற்றிடுவர் உரைத்ததுயர் அனைத்தினையும் ஒருவாதே
பெற்றுஎடுத்த தாய்தன்னைத் தந்தைதனைப் பெரியோரைப்
பற்று அறவே பாடித்துக் கொதித்து அதட்டும் பாவியரும்
குற்றம் அவர் செய்திடினும் பொறுத்திடுகை குணம் அன்று ஓ.

உரை:

ஈன்று வளர்த்த அன்னையையும் அத்தனையும் சான்றோரையும் பரிவு இல்லாமல் கோபித்து இரைந்து வெருட்டிப் பேசியவர்கள் பாவிகள் ஆவர். அப்பாவிகள் முன்பு சொன்ன நரகத் துன்பங்கள் அனைத்தையும் நீங்குதல் இல்லாமல் அனுபவிப்பார்கள். ஆகையால், அவர்கள் புரியும் குற்றச் செயல்களைப் பொருட்படுத்தாமல் பொறுத்தலே நலம்.

விளக்கம்:

உற்றிடுவர் உரைத்த துயர் - வணங்கத் தக்கவர்களின் மனம் புண்படுமாறு பேசியதால் ஏற்படுகிற துன்பம். ஒருவாதே - விலக்க முடியாமல்; செய்த தீவினையின் பயனை ஒவ்வொருவரும் அனுபவித்தே தீரவேண்டும். பிராமணனுக்குத் தானம் வழங்கியோ, கோயில் குருக்களுக்குத் தக்கணை அளித்தோ மட்டும் பாவத்தைத் தொலைக்க முடியாது. சிவபெருமான் நீதியையே தனக்குரிய வடிவமாகப் பெற்றவன் என்பது மணிவாசகரின் அருளுரை. ''நீதியில் செல்வத்திருப்பெருந்துறையில் நிறைமலர்க் குருந்த மேவிய சீர் ஆதியே....'' என்று *திருவாசகம்* பேசுகின்றது. (*திருவாசகம் அருட்பத்து*-1) ஆனால் திருவருள் மட்டும் ஓர் அடியவரைப் பாவப் பலனினின்று காக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றது. இதற்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:- கண்ணபிரானும் அருச்சுனனும் சிறந்த சிவனடியார்கள். பாரதப் போரில் கர்ணன், அருச்சுனனுடைய கழுத்தைக் குறிவைத்து நாகக் கணையை ஏவினான். கண்ணன் ஓர் அடி ஆழத்துக்குமேல் தேர்ச் சக்கரங்களை நிலத்தில் அழுந்தச் செய்து பார்த்தனைக் காத்தான். இங்கே சிவபிரானுடைய திருவருள், கண்ணன் மூலமாக அருள் செய்தது. (141)

514. உத்தமரை மதியாதேயுபான பதத்தொடு நடக்கு
மத்தரையுமழற்சுரிமுள்ளிலவமரமது தன்னிற்
பொத்திடுவர் முதுகறைவர் புணரிருப்பு முளைத் தண்டாற்
கொத்திடுவரங்குசத்தாலீர்வாளாற் குறைப்பருமே.

Koviloor Digital Library

உத்தமரை மதியாதே உபான பதத்தொடு நடக்கும்
மத்தரையும் அழல்சுரிமுள் இலவமரம் அது தன்னில்
பொத்திடுவர் முதுகுஅறைவர் புணர்இரும்பு முளைத்தண்டால்
கொத்திடுவர் அங்குசத்தால் ஈர்வாளால் குறைப்பர். உம்ஏ.

உரை:

பெரியோர்களை மதியாமல் அவர்கள் முன்னே மிதியடி முதலிய வற்றை அணிந்து நடக்கும் அறிவில்லாதவர்களை எமனுடைய தூதர்கள் எரிகின்ற நெருப்பு, முள்ளிலவமரம் ஆகிய நரகங்களில் குப்புறத்தள்ளி, இரும்பு முளைகள் பொருத்தப்பட்ட தடிகளால் முதுகிலே அடிப்பார்கள். மேலும், குடாரியால் குத்தி இழுத்து, மரம் அறுக்கும் இரம்பத்தாலும் உடலை அறுப்பார்கள்.

விளக்கம்:

இப்பாடல் முற்காலத்திலிருந்த பழக்கத்தைக் குறிப்பிடுகிறது. முன் காலத்தில் பெரியோர்களைக் கண்டதும் செருப்பைக் கழற்றி விட்டு வெறுங்காலுடன் நிற்றல், மேலாடையை எடுத்து இடுப்பில் கட்டுதல், அவர்கள் முன்னே நின்றபடி பேசுதல் ஆகியவை மரியாதைக்குரிய செயல்களாகக் கருதப்பட்டன. இத்தகைய மரியாதை, பண்பாடு, சீர் புறக்கணிக்கப்படுவது குற்றமாகும். (142)

515. உற்றிடுவ ருரைத்ததுயரனைத்
தினையுமுயிர்க் கிரக்க
மற்றுவதைத்தவை தன்னையவல
மெனா தவற்றூனைத்
துற்றினரு மற்றுமுள
கொலைபுரிந்த துரிசினரும்
பற்று மிலர் படுந்துயர்க்குக்
கடுந்தூதர் வலிப்பட்டே.

உற்றிடுவர் உரைத்ததுயர் அனைத்தினையும்
உயிர்க்கு இரக்கம்
அற்றுவதைத்து அவைதன்னை அவலம்எனாது
அவற்று ஊனைத்
துற்றினரும் மற்றும் உளகொலை
புரிந்த துரிசினரும்
பற்றும் இலர்படும் துயர்க்குக்
கடும் தூதர் வலிப்பட்டு.

Koviloor Digital Library

உரை:

பறவை, விலங்கு ஆகிய உயிரிகளின் மீது இரக்கம் இல்லாமல் அவற்றைக் கொன்று, அவற்றின் தசைகளைக் குற்றம் எனக் கருதாமல் தின்றவர்களும், உண்பதற்கு அருகமல்லாத உயிரிகளைக் கொன்ற பாவியரும், எமனுடைய பணியாளர்களின் வலிமையான பிடியிலே சிக்கி, எந்த ஆதரவும் இல்லாமல், முன்பு கூறிய எல்லாவகை நரகத் துன்பங்களையும் அனுபவிப்பார்கள்.

விளக்கம்:

வதைத்து - கொன்று; **அவலம்** - குற்றம்; **எனாது** - என்று கருதாமல்; **ஊனை** - இறைச்சியை; **துற்றினர்** - புசித்தவர்; **துரிசினர்** - பாவியர்; **பற்று** - பற்றுக்கோடு; **கடும்** - கொடிய; **வலிப்பட்டு** - வலிமையான பிடியில் சிக்கி; **உயிர்** - உயிரி; உயிரை உடையது உயிரி; பிராணனை உடையது பிராணி. சைவன் அல்லது வைணவன் என்றால், ஊன் உண்ணாதவன் என்பது பொருள். தமிழ்ச் சிவஆகமமான திருமந்திர மாலையை அருளிய திருமூல நாயனார், ''பொல்லாத புலால் உணவை உண்ணும் கீழ்மக்களை, எல்லாரும் பார்க்கும்படி எமதூதர்கள், கறையானைப் போலப் பற்றி அரித்துப் பின்னர், முதுகு கீழ்ப்பக்கமாக இருக்கும்படி, அனல் கக்குகின்ற நரகத்தில் கிடத்தி வைப்பார்கள்'' என்று கூறுகின்றார்.

''பொல்லாப் புலாலை நுகரும்புலையரை
எல்லாரும் காண இயமன்தன் தூதவர்
செல்ஆகப்பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே.'' *(திருமந்திரம்* 199)

நரகத்துன்பம் புராணக்காட்சியன்று. சாஸ்வதமாக உள்ளதே என்பதற்கு இத்திருமந்திரமும் அத்தாட்சியாம். (143)

516. அரிந்தரிந்தே யுடலூனை
யருத்திடுவரிரத்த மெலாஞ்
சொரிந்து குடித்திடச் சொலுவர்
தூதர் பசி தோன்றவன
மிரந்தவர்க்குப் பசி
தணியாதிருந்தருந்து மீனரையும்
அருந்தியிடக் குளிர்ந்த
புனலுதவாத வவலரையும்.

அரிந்து அரிந்து உடல் ஊனை
அருத்திடுவர் இரத்தம் எல்லாம்
சொரிந்து குடித்திடச் சொல்லுவர்
தூதர் பசிதோன்ற அன்னம்

Koviloor Digital Library

இரந்தவர்க்குப் பசிதணியாது இருந்து
அருந்தும் ஈனரையும்
அருந்தியிடக் குளிர்ந்தபுனல்
உதவாத அவலரையும்.

உரை:

பசியோடு வந்த இரவலருக்குப் பசிதீர உணவு கொடாமல் தாமே தனித்திருந்து உண்ணும் இழிந்தவர்களையும், நீர் வேட்கையோடு வந்தவர்களுக்கு அவர்களின் வேட்கை தணியக் குளிர்ந்த நீர் தராத பொல்லாதவர்களையும் எமனுடைய பணியாளர்கள், பிடித்து அவர்களுடைய உடம்புகளில் உள்ள தசைகளை அறுத்து அறுத்து அவர்களையே தின்னச் செய்வர். அறுத்த இடங்களிலிருந்து வழிந்த குருதியை அவர்களே பருகுமாறு அவர்களின் வாய்களிலே ஊற்றுவர்.

விளக்கம்:

அரிந்து - அறுத்து; ஊன் - இறைச்சி; சொரிந்து - வாய்களில் ஊற்றி, அனம் - அன்னம், உணவு; இரந்தவர் - இரவலர்; ஈனர் - இழிந்தவர்; அருந்தியிட - அருந்த, பருக; புனல் - நீர்; அவலர் - தீயவர். (144)

517. பின்னுமவர் தமையாலைக்
கரும்பெனவே பேதிப்பர்
துன்னுமசி தாலவனத்துடற்றுணியத்
தொகுத் திழுப்பர்
பின்ன முறவுடலழன்ற
சூசி பல பெறுத்திடுவர்
கொன்னவிலுந் தழற்சூலக் கொழுந்தினு
மெய் கொளுத்துவரே.

பின்னும் அவர்தமை ஆலைக்
கரும்பு எனவே பேதிப்பர்
துன்னும் அசிதாலவனத்து உடல்
துணியத் தொகுத்து இழுப்பர்
பின்னம்உற உடல்அழன்ற
சூசிபல பெறுத்திடுவர்
கொன்நவிலும் தழல்சூலக் கொழுந்தினு
மெய் கொளுத்துவர் ஏ.

உரை:

மேலும் அவரைக் கரும்பைச்சாறு எடுப்பதற்கு இயந்திரத்தில் வைத்து

Koviloor Digital Library

நசுக்குவது போல் வைத்து நசிப்பர். வாள்போன்ற ஓரம் உள்ள கறுக்கு மட்டைகள் கிடக்கும் பனங்காட்டு வழியாக உடல் கிழியக் கட்டியிழுப்பார்கள்; உடல் உறுப்புகள் கேடு அடையப் பல ஊசிகளைச் செலுத்துவர்;அச்சம் கொள்ளும்படி, எரிகின்ற சூலத்தீயில் உடம்பை வாட்டுவர் எமன் தூதர்.

அசி - வாள்; தாலம் - கூந்தற்பனை; சூசி - ஊசி; கொன் - பயம். (145)

518. அறுத்தொறுப்ப ருறுப்பனைத்து
மீர்வாளாலகத் தெலும்பு
முறித்திடுவர் கண்கலங்கமுகத்
தறைவர் முரணழியப்
பொறுப்பரிய துயரனைத்தும்
பொருத்திடுவ ரெரித்திடுவர்
கறுத்திடுவரி ரங்காத
கரிசுதனைக் கழித்திடவே.

அறுத்து ஒறுப்பர் உறுப்பு அனைத்தும்
ஈர்வாளால் அகத்து எலும்பு
முறித்திடுவர் கண்கலங்க முகத்து
அறைவர் முரண்அழியப்
பொறுப்பு அரிய துயர்
அனைத்தும் பொருத்திடுவர் எரித்திடுவர்
கறுத்திடுவர் இரங்காத
கரிசுதனைக் கழித்திட ஏ.

உரை:

இரவலர்களிடம் இரக்கம் காட்டாதவர்களின் பாவங்கள் நீங்குமாறு, எமனுடைய பணியாளர்கள் முகம் கடுத்து, அவர்களின் உடல் உறுப்புகளை இரம்பத்தால் (வாள்) அறுப்பார்கள்; உள் எலும்புகளை ஒடித்திடுவர்; கண்ணீர் வெளிப்பட கன்னங்களிலே அடிப்பர்; அவர்களுடைய வலிமை அழியும்படி தாங்க முடியாத துன்பங்களைச் செய்து தண்டிப்பார்கள்.

விளக்கம்:

கறுத்தல் - கோபித்தல்; அகம் - உள்ளுடல்; முரண் - வலிமை; கரிசு - பாவம். (146)

519. நிறுத்திடுவருச் வாச நிருச்வாச நிரயத்தும்
வறுத்தமணன் முகத்தறைவர் மாரெளர ரெளரவத்து
முறுத்திமிக வொறுத்திடுவ ரொள்ளழற்கூ ரிருப்புமுளை
செறித்தறைவர் கோசத்தின் முகமதனிற் சிரத்தினுமே.

Koviloor Digital Library

நிறுத்திடுவர் உச்சுவாச நிருச்சுவாச நிரயத்தும்
வறுத்த மணல்முகத்து அறைவர்மாரௌரம் ரௌரவத்தும்
உறுத்திமிக ஒறுத்திடுவர் ஒள் அழல்கூர் இரும்பு முளை
செறித்து அறைவர் கோசத்தின்முகம் அதனில் சிரத்தினும் ஏ.

உரை:

(பசித்து வந்தவர்களின் பசிதீர உணவு அளிக்காத பாவியரை) எமனுடைய பணியாளர்கள் உச்சுவாச நிச்சுவாசம் (மூச்சை விடுதல், மூச்சை அடக்குதல்) என்ற நரகத்திலே தள்ளுவர்; சூடு ஏறிய மணலை வாரிக் கன்னத்திலே எறிந்தும், மகாரௌரவம், ரௌரவம் என்ற நரகங்களிலே தள்ளியும் தண்டிப்பதோடு, சுடர்விட்டு எரிகின்ற கூர்மையான இரும்பு முளைகளைத் தடிகளிற் பொருத்தி, அவற்றால் மர்மஸ்தானத்தின் முகத்திலும், தலையிலும் ஏற்றுவார்கள்.

விளக்கம்:

உச்சுவாசம் - மூச்சு விடுதல்; நிச்சுவாசம் - மூச்சை அடக்குதல்; கோசம் - ஆண்குறி. (147)

520. பதத்தறைவர் குதத்தறைவர்
பதைத்தழுங்க வுரத்தறைவர்
விதிர்த்த கரத்தினுமறைவர்
வெய்யவழற் செங்கலினு
மிதித்திழுப்ப ருததான
முதவாத வெட்டியரைக்
கதத்தெழுந்து நமனாணை
கடவாத கடுந்தூதர்.

பதத்து அறைவர்குதத்து அறைவர் பதைத்து
அழுங்க உவுரத்து அறைவர்
விதிர்த்த கரத்திலும் அறைவர்
வெய்ய அழல் செங்கலிலும்
மிதித்து இழுப்பர்உதம் தானம்
உதவாத வெட்டியரைக்
கதத்து எழுந்து நமன்
ஆணை கடவாத கடும்தூதர்.

உரை:

தாகத்தோடு வந்தவர்களுக்குத் தாகம் தீரத் தண்ணீர் தந்து உதவாத வீணர்களை, எமனுடைய கட்டளையை மீறாத கொடிய தூதர்கள் கால்களிலும்,

Koviloor Digital Library

மலவாயிலிலும், துடித்து அழும்படி மார்பிலும், நடுங்கும் கைகளிலும் அடித்து, சூடேறிய செங்கற்களில் தள்ளி மிதித்து இழுப்பார்கள்.

விளக்கம்:

பதம் - கால்; உதம் - நீர்; கதம் - சினம். (148)

பிறர்மனை நயந்தவர்கள் பெறும் தண்டனை

521. பரிவுடைய பரதாரி
யழலிருப்புப் பாவையினை
யுருகியிட உடன்முழுதுந்
தழுவிய முதுளைந்திடுவ
னுரியவனை யொழிந்தொருவற்குடல்
கொடுத்த வொண்டொடியு
மெரியுருவப் பாவையவனெனத்
தழுவி யிளைப்பாளே.

பரிவு உடைய பரதாரி
அழல் இருப்புப் பாவையினை
உருகி இட உடல்முழுதும்
தழுவி அழுது உளைந்திடுவன்
உரியவனை ஒழிந்து ஒருவற்கு
உடல் கொடுத்த ஒண்டொடியும்
எரி உருவப்பாவை அவன்
எனத்தழுவி இளைப்பாள் ஏ.

உரை:

பிறனுடைய மனையாளை இன்பமாகப் புணர்ந்தவன், தீயினால் உருகுகின்ற பெண்வடிவ இரும்புப்பதுமையைத் தழுவி, உடல் வெந்து கவலைப்படுவான். இவ்வாறே, கணவனுக்குத் தெரியாமல் தன் உடலைப் பிறன் தழுவி அனுபவிக்க உடன்பட்டவள், எரிகின்ற ஆண் வடிவ இரும்புப் பதுமையை அவன் என்றே தழுவி மெலிவடைவாள்.

விளக்கம்.

பரதாரி - பிறன் மனைவியைப் புணர்ந்தவன்; உளைதல் - கவலைப்படுதல்; பாவை - பதுமை;

ஒருவற்கு - பிறனுக்கு; இளைப்பாள் - மெலிவாள். (149)

Koviloor Digital Library

522. பிரிந்திடவே விரைந்திடுமப்
பேதைதனைப் பிரியாதே
பொருந்தியிட வழலுருவிற்
புணர்த்திடுவர் கணவனைநீ
பிரிந்தனையே புணர்ந்தனையே பிறருரு
நின் பெரும்பாவம்
பிரிந்திடுநாட் பிரிந்திடுநீ
யெனத்தூதர் பேசுவரே.

பிரிந்திடவே விரைந்திடும்
அப்பேதைதனைப் பிரியாதே
பொருந்திஇட அழல் உருவில்
புணர்த்திடுவர் கணவனைநீ
பிரிந்தனையே புணர்ந்தனையே
பிறர்உருநின் பெரும்பாவம்
பிரிந்திடுநாள் பிரிந்திடுநீ
எனத்தூதர் பேசுவர் ஏ.

உரை:

கணவன் அறியாதபடி தன் உடம்பைப் பிறன் தழுவி அனுபவிக்க இணங்கியவளை நோக்கி, 'நீ, செய்த பெரும்பாவம் எந்த நாளில் நீங்குகிறதோ அந்த நாள் வரும்வரை, எரிகிற ஆண்வடிவத் தீப்பதுமையைப் பொருந்தியபடி இருப்பாயாக' என்று கூறி எமதூதர் பொருத்துவர். (150)

523. மற்றவனு மழன் மயத்த
வடிவுசுட வறிவுசெய
லற்றழிந்து பிரிந்திடவே
யாதரிப் பனவன்றனையு
மற்றொருவன் மனைமகிழ்ந்த வல்வினை
நின்றனைப் பிரிந்தே
யற்றிடு நாளகன்றிடுநீ
யெனத்தூதர் பேசுவரே.

மற்றவனும் அழல்மயத்த
வடிவுசுட அறிவுசெயல்
அற்று அழிந்துபிரிந்திடவே
ஆதரிப்பன் அவன்தனையும்

Koviloor Digital Library

மற்றொருவன் மனைமகிழ்ந்த வல்வினை
நின்றணைப் பிரிந்தே
அற்றிடும் நாள் அகன்றிடுநீ
எனத்தூதர் பேசுவர் ஏ.

உரை:

பிறனுடைய மனைவியை அவனுடைய கணவன் அறியாதபடி கூடி மகிழ்ந்தவனைப் பார்த்து எமதூதர், ''நீ, செய்த கொடிய பாவம் எந்த நாளில் உன்னை விட்டு அகலுமோ, அந்த நாள் வரும் வரை, எரிகின்ற இரும்புப் பதுமையோடு பொருந்தி இருந்திடுக'' என்று கூறிப் பொருத்தி வைப்பர்.

விளக்கம்:

அழல் மயத்த வடிவு - உருகும் இரும்பு வடிவம்; மனை - மனைவி. (151)

524. இனைய கடுவினையதனை யியற்றினரை யிரும்பாலே
வனைகுட த்துட்புகுத்தியதன் - வாயடைத்து வன்றூதர்
கனன்மிசையே வைத் தெரிப்பர் கன்றவுட லுரலிடிப்ப
ரனலொழுகு சிலைதனிலு முடற் சிதறவறைவாரே.

இனைய கடு வினை அதனை இயற்றினரை இரும்பாலே
வனைகுடத்துள் புகுத்தி அதன் வாய் அடைத்துவன்தூதர்
கனல்மிசையே வைத்து எரிப்பர் கன்ற உடல்உரல் இடிப்பர்
அனல் ஒழுகுசிலைதனிலும் உடல் சிதற அறைவார் ஏ.

உரை:

இத்தகைய கொடிய செயல்களைச் செய்த பாவியரை, எமனுடைய கொடிய தூதர்கள், இரும்பினால் செய்யப்பட்ட பானையில் அடைத்து, அதன் வாயை மூடி அடுப்பிலே வைத்து எரிய விடுவர்; நைந்து கெடும்படி. அவர்களின் உடம்புகளை உரலில் இட்டுக் குத்துவர்; எரிகிற கல்லின்மீதும் அவ்வுடல்களை மோதுவர்.

விளக்கம்:

இனைய - இத்தகைய; கடுவினை - தீயசெயல்; வனை - செய்த; வன் - கொடிய; கனல் - தீ; கன்ற - நோக; சிலை - கல். (152)

525. வெருளவிருட் கூபத்தும் விட்டிடுவர் விள்ளவுடற்
பிரமரங்கள் பெறுத்திடுவர் நிறுத்திடுவர் பெருங்கிருமி
யுருவவுடற் குடைந்திடலு முதிரவெள மொழுகியிட
வெரியனைய காரவெள்ளக் கூபத்து மிறக்குவரே.

Koviloor Digital Library

வெருள இருள் கூபத்தும் விட்டிடுவர் விள்ள உடல்
பிரமரங்கள் பெறுத்திடுவர் நிறுத்திடுவர் பெரும்கிருமி
உருவ உடல் குடைந்திடலும் உதிர வெள்ளம் ஒழுகியிட
எரிஅனைய கார வெள்ளக் கூபத்தும் இறக்குவர் ஏ.

உரை:

பிறன்மனை நயந்த பாவிகள் அஞ்சும்படி எமனுடைய பணியாளர்கள், அவர்களை இருண்ட கிணற்றிலே தள்ளுவர்; அவர்களுடைய உடம்புகளை வண்டுகள் துளைக்கும்படி செய்வர்; அவர்களுடைய உடல்களைப் பெரிய புழுக்கள் குடைந்து குருதிப் பெருக்கு ஏற்படச் செய்வர்; எரிச்சலை உண்டு பண்ணும் உப்பு, மிளகாய்த் தூள் முதலியவை கலந்த கார நீர் நிரம்பிய கிணற்றிலும் இறக்குவர்.

விளக்கம்:

வெருள - அஞ்ச; கூபம் - கிணறு; விள்ள - பிளக்க; பிரமரம் - வண்டு. (153)

526. பின்னும வரெரிவாய
நிரயத்துப் பெயப்பட்டுக்
கின்னமுற உடலுருகக்
கிடந்திடுவர் தொடர்ந்தவினை
தன்னைநினைந் தழுங்கிடுவர்
விதித்தவினை தனைத்தவறித்
துன்னினர்கடுயரவிதம்
தனைக் கொடுக்குந்துரிசினையே.

பின்னும் அவர் எரிவாய
நிரயத்துப் பெயப்பட்டுக்
கின்னம்உற உடல் உருகக்
கிடந்திடுவர் தொடர்ந்தவினை
தன்னைநினைந்து அழுங்கிடுவர்
விதித்தவினை தனைத்தவறித்
துன்னினர்கள் துயரவிதம்தனைக்
கொடுக்கும் துரிசினை ஏ.

உரை:

மேலும் முன்பு சொன்ன பாவியர், தீ எரிகின்ற நரகத்திலே உடல் கருகத் துயர் உறும்படி கிடத்தப்படுவர். அப்பொழுது, முறைப்படி இல்லற ஒழுக்கத்தைப் பேணாமல், தீய நடத்தைகளை மேற்கொண்டதால் வந்து பொருந்திய பாவங்களையும், துன்பங்களையும் எண்ணித் துயருறுவர்.

Koviloor Digital Library

விளக்கம்:

கின்னம் - துன்பம்; அழுங்கிடுவர் - துயருறுவர்; துன்னினர் - பொருந்தியவர். (154)

குரு முதலிய மூவருக்கும் பணிவிடை செய்யாதவர் பெறும் தண்டனை

527. தேசிகர்க்குந் தேவர்க்குஞ் சிறப்புடைய வருந்தவர்க்குங்
கூசினரை யேவலுக்குக் கொதித்தமனக் கோணின்ரைத்
தூசினையும் பிறர்மனையிற் றொட்டெடுத்த சோரரையும்
பாசமுறவுறுப்பெவற்றும் பிண்டமெனப்பந்தித்தே.

தேசிகர்க்கும் தேவர்க்கும் சிறப்புஉடைய அருந்தவர்க்கும்
கூசினரை ஏவலுக்குக் கொதித்த மனக்கோணினரைத்
தூசினையும் பிறர்மனையில் தொட்டு எடுத்த சோரரையும்
பாசம் உற உறுப்பு எவற்றும் பிண்டம் எனப்பந்தித்து ஏ.

உரை:

சிவஞானியாகிய குருவுக்கும், திருக்கோயிலில் திருமேனி வடிவில் எழுந்தருளியுள்ள சிவபிரானுக்கும், சிவனடியார்க்கும் பணிசெய்ய நாணினரும், அவர்களைக்கடுத்துப் பேசிய மனத்திருக்குள்ளவருமாகிய சகலரையும் இல்லத்தில் உரியவர் அறியாமல் ஆடையைக் களவு செய்தவர்களையும், எமனுடைய பணியாளர்கள், அவர்களுடைய உடல் உறுப்புகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டைக்கட்டாகக் கட்டி;

விளக்கம்:

தேசிகர் - குரு; தேவர் - சிவன்; அருந்தவர் - சிவனடியார்(குருலிங்க சங்கமம்); கூசுதல் - நாணுதல்; கோணினர் - மாசு உள்ளவர்; சோரர் - திருடர்; தூசு - ஆடை; பிண்டம் - ஒரு கூட்டாயிருப்பது; பந்தித்து - கட்டி; (155)

528. எறிந்தருந்த விருப்புமயத்தும்பிகளையேவிடுவர்
செறிந்திடவுஞ் செந்தழலிற் செலுத்தி மிகவொறுத்திடுவர்
பிறிந்திடவுஞ் செந்தழலிற் பெய்திடுவர் நைய உள
முறைந்துருகக்காரீடவழலிடையுமுறுத்துவரே.

எறிந்து அருந்த இரும்புமயத் தும்பிகளை ஏவிடுவர்
செறிந்திடவும் செந்தழலில் செலுத்தி மிக ஒறுத்திடுவர்
பிறிந்திடவும் செந்தழலில் பெய்திடுவர் நைய உள்ளம்
உறைந்து உருகக் காரீட அழலிடையும் உறுத்துவர் ஏ.

Koviloor Digital Library

உரை:

இரும்புபோலக் கருமை நிறமுள்ள வண்டுகள் தின்னுமாறு எறிவர்; சிவந்த தீயில் இட்டுத் தண்டிப்பர்; நெஞ்சம் வருந்த, இறுகிய மணல் உருகும் வெப்பம் மிகுந்த மணற்பரப்பிலும் கிடத்துவர்.

விளக்கம்:

தும்பி - கருவண்டு; காரீடம் - வரண்ட மணல்வெளி. (156)

529. கூட்டிடுவ ருமியழற்குங் கொடிதாயவது தன்னின்
மீட்டரைப்பர் சரசரத்த வெட்டிய கற் பாறையினு
மூட்டிடுவரூனனைத்து முடலிடையேயுற்பவித்துத்
தேட்டுடையவிரைக்கிருமியனைத்தினுக்குஞ் சிறப்புறவே.

கூட்டிடுவர் உமி அழற்கும் கொடிதாய அது தன்னில்
மீட்டு அரைப்பர் சரசரத்த வெட்டிய கற்பாறையிலும்
ஊட்டிடுவர் ஊன் அனைத்தும் உடலிடையே உற்பவித்துத்
தேட்டுஉடைய இரைக்கிருமி அனைத்தினுக்கும் சிறப்புஉற.ஏ.

உரை:

குரு முதலான மூவருக்கும் செய்ய வேண்டிய பணிவிடைகளைத் தவிர்த்தவர்களை, எமனுடைய பணியாளர்கள் உமிகள் எரியும் தீயிலே இடுவர்; பிறகு அதிலிருந்து அவர்களை எடுத்து, கரடு முரடான பாறைக் கல்லில் இட்டு அரைப்பர்; அவ்வாறு அரைத்த உடல்களை, அந்த உடல்களிலே தோன்றிய புழுக்களுக்கு நல்ல இரையாகும்படி செய்வர்.

விளக்கம்:

உமி - தானியங்களின் கோது; ஊன் - இறைச்சி; உற்பவித்து - உண்டாக்கி. (157)

530. அழுத்திடுவர் கிருமி செறி யவக்குழிக்கு மதன்மீட்டே
உழுத்த தசைக் குழியுள்ளு முறுத்திமிக வொறுத்திடுவர்
வழுக்கறவே பொருகிரியி னிடை நெருக்கி வருத்திடுவ
ரழற் குழியி னதோ முகமா வழுத்திடுவ ரவர்தமையே.

அழுத்திடுவர் கிருமி செறி அவக்குழிக்கும் அதன்மீட்டே
உழுத்த தசைக் குழியுள்ளும் உறுத்திமிக ஒறுத்திடுவர்
வழுக்குஅறவே பொருகிரியின் இடை நெருக்கி வருத்திடுவர்
அழல்குழியில் அதோமுகமா அழுத்திடுவர் அவர்தம்மை. ஏ.

Koviloor Digital Library

உரை:

குரு முதலிய மூவருக்கும்.தொண்டு செய்ய மறுத்தவர்களை எமனுடைய தூதர்கள், புழுக்கள் நிறைந்த நரகக் குழிக்குள் அமிழ்த்தி எடுத்து, பதனழிந்த இறைச்சியுள்ள நரகத்தில் புகுத்தித் தண்டிப்பர்; பிறகு, இரு மலைகளுக்கு இடையே அவர்களை இருத்தி வழுக்காமல் இறுக்கமாக நெருக்கி வருந்தச் செய்வர்; எரியும் நரகத்தில் தலைகீழாகவும் அழுத்துவர்.

விளக்கம்:

அவக்குழி - நரகக்குழி; உழுத்த - பதனழிந்த; அதோமுகம் - தலைகீழாக. (158)

பரிவு இல்லாதவர் கொடுத்த உணவை உண்டவர் பெறும் தண்டனை

531. அழலொழுகு மிருப்புண்டையவை
விழுங்க வடித்திடுவர்
ஒழுகியிட யுதிரவெளங்
கசையாலு மொலித்திடுவர்
பழுதுறவே பராமதியா
திடுசோறுண் பரிசிலரை
யழுதழுது கதறியவர்
வீழ்ந்திடத்தூ துவரதிர்த்தே.

அழல் ஒழுகும் இரும்பு உண்டை
அவை விழுங்க அடித்திடுவர்
ஒழுகியிட உதிரவெள்ளம்
கசையாலும் ஒலித்திடுவர்
பழுது உறவே பராமதியாது
இடுசோறு உண்பரிசிலரை
அழுது அழுது கதறி அவர்
வீழ்ந்திடத் தூதுவர் அதிர்த்து ஏ.

உரை:

அன்பாக மதித்து வரவேற்று உபசரியாதவர் தந்த உணவை உண்ட இரவலரை, எமனுடைய பணியாளர்கள், கதறி அழுதுவிழும்படி அதிர அடிப்பார்கள்; தீயில் உருகி வடியும் இரும்பு உருண்டையை விழுங்கும் படி அடிப்பர்; தசை கிழிந்து குருதிப் பெருக்கு ஏற்படுமாறு குதிரைச் சவுக்கால் ஓசை எழ அடிப்பர்.

Koviloor Digital Library

விளக்கம்:

மதியாது இடு சோறு - அன்பாதரவின்றி அளிக்கப்படுகின்ற உணவு. உண்ணுங்கள் உண்ணுங்கள் என்று மதித்து அழையாதவர் வீட்டில் உணவு கொள்ளாதிருத்தல் ஒரு கோடி பொன்பெறத்தக்கது என்பது அவ்வையாரின் அறிவுரை.

உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார்தம் மனையில்
உண்ணாமை கோடி பெறும்.

(அவ்வையார்-தனிப்பாடல்)

''ஒருவர் தம்மை முகமலர்ச்சியோடு வரவேற்று, உண்மையான சொற்களைப்பேசி, அன்போடு உப்பு இல்லாத கேழ்வரகுக் கூழை அளித்தாலும், அதனை உட்கொள்வதே அமுதம்போல இனிமையைத் தரும்'' என்று *விவேக சிந்தாமணி* கூறுகின்றது.

''ஒப்புடன் முகம்மலர்ந்தே உபசரித்து உண்மை பேசி
உப்பிலாக்கூழ் இட்டாலும் உண்பதே அமுதமாகும்''

(விவேக சிந்தாமணி-4)

உண்டை - உருண்டை; **கசை** - அடிக்கிற சவுக்கு; **பரிசிலர்** - இரப்பவர். (159)

ஆலயம் முதலானவற்றை மாசுபடுத்தியவர் பெறும் தண்டனை

532. ஈசர்திருவாலயத்து மிடர்கடியும் புனற்றடத்தும்
வாசமலர்த் திருநந்தவனத்திடைய மடத்தினுளும்
மாசுகளைந் தருந்தியன மைதுனமற்றைய தொழிலுங்
கூசமறப்புரிகின்ற கொடியாரை மிகக் கொதித்தே.

ஈசர் திரு ஆலயத்தும் இடர்கடியும் புனல் தடத்தும்
வாசம் மலர்த் திருநந்த வனத்திடையும் மடத்தினுள்ளும்
மாசுகளைந்து அருந்தி அன்னம்மைதுனம் மற்றைய தொழிலும்
கூசம் அறப்புரிகின்ற கொடியாரைமிகக் கொதித்து ஏ.

உரை:

சிவபிரான் எழுந்தருளியுள்ள திருக்கோயிலையும், துன்பம் போக்கும் திருக்குளத்தையும், மணமுள்ள பூக்கள் உள்ள திருக்கோயிலின் பூந்தோட்டத்தையும், திருமடத்தையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். இதற்கு மாறாக உண்ணுதல், ஆணும் பெண்ணும் கலவியில் ஈடுபடுதல், உறங்குதல், மலசலம் கழித்தல் போன்ற தகாத செயல்களை அவ்விடங்களிற் செய்த கொடியவர்கள் மீது, எமனுடைய பணியாளர்கள் மிகவும் கோபங்கொண்டு;

Koviloor Digital Library

விளக்கம்:

ஈசர் - சிவன்; இடர்கடியும் - துயரை நீக்கும்; வாசம் - நறுமணம்; திருநந்தனவனம் - கோயிற் பூசைக்குத் தேவையான மலர்களைத் தரும் கோயிலுக்குச் சொந்தமான பூந்தோட்டம். புனல் தடம் - திருக்கோயிலுக்கு உரிய திருக்குளம், நீர்நிலை; மடம் - சைவசமயத் துறவிகள் தங்கியிருக்கும் திருமடம்; மைதுனம் - ஆணும் பெண்ணும் நுகரும் சிற்றின்பம், கலவி; கூசம் - கூச்சம்; நாணம் - வெட்கம். (160)

533. இக்கெனவே செக்கிடையிட்டியந்திரிப்பர் யமதூதர்
துக்கமற நரகவித மெனைத்தனைத்துந் தொகுத்தொறுப்பர்
உக்கிரவாரழனிரயத் தொடுக்கிடுவருருகிவிழத்
தக்ககதிர் மதியளவு மவரதனிற் றவிப்பாரே.

இக்கு எனவே செக்கிடை யிட்டு இயந்திரிப்பர் யமதூதர்
துக்கம் உறநரகவிதம் எனைத்து அனைத்தும் தொகுத்து ஒறுப்பர்
உக்கிரம்வார் அழல் நிரயத்து ஒடுக்கிடுவர் உருகி விழத்
தக்க கதிர் மதியளவும் அவர் அதனில் தவிப்பார் ஏ.

உரை:

சாறு எடுக்கக் க்ரும்புகளை இயந்திரத்தில் இட்டு நசுக்குவது போலத் திருக்கோயில் முதலியவற்றை மாசுபடுத்திய பாவியரை எமன் தூதர்கள் செக்கில் இட்டு நசுக்குவர்; அவர்கள் கவலையடையும்படி எல்லாவகை நரகங்களிலும் புகுத்தித் தண்டிப்பார்கள்; கதிரவனும் நிலவும் உள்ள காலம் வரை, கொடிய தீ எரியும் நரகத்தில், இட்டு, உடல் உருகித் தவிக்குமாறு செய்வர்.

விளக்கம்:

இக்கு - கரும்பு; இயந்திரிப்பர் - இயந்திரத்திலிட்டு நசுக்குவர்; உக்கிரம் - கொடுமை; எனைத்து அனைத்தும் - எல்லாவகை நரகங்களிலும்; தொகுத்து - சேர்த்து; ஒறுப்பர் - தண்டிப்பர்; கதிர் - கதிரவன்; மதி - நிலவு; அளவும் - வரை. (161)

குருவை நிந்தனை செய்வதைக் கேட்டவர் பெறும் தண்டனை

534. குரவனையு நிந்தனைகள் கூறியிடக் கேட்டார்த
மிருசெவி யிற் றுளையுற வே யெரியிருப்பு முளையறைவர்
உருகிய தாமிரமற்று மொழுக்கிடுவ ரவற்றுளுறப்
பருவரலுற் றிட நிரயவிதத்து முறப் பதிப்பாரே.

Koviloor Digital Library

குரவனையும் நிந்தனைகள் கூறியிடக் கேட்டார்தம்
இருசெவியில்துளைஉறவே எரி இருப்புமுளை அறைவர்
உருகிய தாமிரம்மற்றும் ஒழுக்கிடுவர் அவற்றுள் உறப்
பருவரல் உற்றிட நிரயவிதத்தும் உறப்பதிப்பார் ஏ.

உரை:

தன்னுடைய ஆசிரியரைப் பிறர் பழித்துப் பேசுவதைத் தடுத்து நிறுத்தாமல் கேட்டுக் கொண்டிருந்தவருடைய இரண்டு காதுகளிலும் எமனுடைய தூதர்கள் துவாரங்கள் உண்டாகும்படி இரும்பு முளைகளை அடிப்பர்; தீயில் உருகிய செம்புக் குழம்பு முதலியவற்றையும் காதுகளிலே ஊற்றுவர்; துன்பங்கள் பொருந்தப் பலவகை நரகங்களிலும் புகுத்துவர்.

விளக்கம்:

குரவன் - குரு; நிந்தனை - பழிப்புரை; இருப்பு - இரும்பு; பருவரல் - துன்பம். (162)

535. உற்றிடுவர் செவிப்புலத்தினுறு துயரமெனைத்தனைத்து
மற்றுமுள விந்திரியத் தபராத மருவினர்க
ணெற்றிவிழி நிருமலனை நினைந்துலகவியற்கையினை
யற்றவருந்தபோதனர்க்கும் புரிந்தாருமபராதம்.

உற்றிடுவர் செவிப்புலத்தில் உறுதுயரம் எனைத்து அனைத்தும்
மற்றும் உள இந்திரியத்து அபராதம் மருவினர்கள்
நெற்றிவிழி நிருமலனை நினைந்து உலக இயற்கையினை
அற்ற அரும் தபோதனர்க்கும் புரிந்தாரும் அபராதம்.

உரை:

ஆசிரியருடைய கண்முதலான உறுப்புகளுக்கு ஊறு செய்தவர்களும், உலக நிகழ்ச்சிகளிலிருந்து ஒதுங்கிச் சிவபிரானையே எண்ணித் தவ நிலையில் இருக்கும் சிவஞானிகளுக்குக் குற்றம் புரிந்தவர்களும் ஆசிரியரைப் பழித்தவர் பெறும் துன்பங்களை அனுபவிப்பார்கள்.

விளக்கம்:

நெற்றி விழி நிருமலன் - சிவன்; இந்திரியம் - பொறி; அபராதம் - தீங்கு. (163)

Koviloor Digital Library

பிறர்மனைவியைத் தொட்டவர் பெறும் துயரம்

536. மற்றொருவன் மனையாளை வாஞ்சையுறப்பரிசித்த
குற்றமறக்கூரழல்வாய்ச் சூசியினாற்குத்திடுவர்
முற்றுமுடற்றாமிரத்தின் முழுக்கனலு மொழுக்கிடுவர்
மற்றுமுள நிரயவிதத்தினுமழுத்திவருத்துவரே.

மற்றொருவன் மனையாளை வாஞ்சை உறப்பரிசித்த
குற்றம் அறக்கூர் அழல்வாய்ச் சூசியினால் குத்திடுவர்
முற்றும் உடல் தாமிரத்தின் முழுக்கனலும் ஒழுக்கிடுவர்
மற்றும் உளநிரய விதத்தினும் அழுத்தி வருத்துவர் ஏ.

உரை:

அயலானுடைய மனைவியை ஆசையோடு தொட்டவனுடைய பாவம் தீர, எமனுடைய தூதர்கள் நெருப்பில் காய்ச்சிய ஊசியால் குத்துவர்; உடல் முழுவதும் தீயில் உருகிய செம்புக் குழம்பை ஊற்றுவர்; ஏனைய நரகங்களிலும் செலுத்தித் தண்டிப்பர்.

விளக்கம்:

வாஞ்சை - விருப்பம்; சூசி - ஊசி; தாமிரம் - செம்பு. (164)

பிறர் மனைவியை ஆசையுடன் பார்த்தவர் பெறும் தண்டனை

537. மனமுருக விழிகுளிர வாஞ்சையுறப்பார்த்திடினு
முனமுரைத்த துயரவிதங்கண்டனிலு முற்றுவிப்பர்
நினைவழியவலி தொலைய நிலைமையினை நீங்கினர்க்குத்
துனியதனை முறையுறவே துய்ப்பிக்குந் தூதுவரே.

மனம்உருக விழிகுளிர வாஞ்சை உறப்பார்த்திடினும்
முனம்உரைத்த துயரவிதம்கண்தனிலும் முற்றுவிப்பர்
நினைவு அழியவலிதொலைய நிலைமையினை நீங்கினர்க்குத்
துனி அதனைமுறை உறவே துய்ப்பிக்கும் தூதுவர் ஏ.

உரை:

இல்லற ஒழுக்கம் என்ற முறையிலிருந்து விலகி, அயலானுடைய மனைவியை மனம் நெகிழக் கண்கள் குளிரப்பிரியத்தோடு பார்த்த காமுகனின் தீய எண்ணம் ஒழியவும், ஆற்றல் அழியவும், அச்சம் கொள்ளவும், எமதூதர்கள் பிறர்

Koviloor Digital Library

மனைவியைத் தொட்ட பாவி பெற்ற நரகத் துன்பங்கள் அனைத்தையும் அவன் கண்ணிலும் உடலிலும் பெற்று அனுபவிக்கச் செய்வர்.

விளக்கம்:

முனம் - முன்பு; நிலைமை - இல்லறமுறை; துனி - பயம்; கண் தனிலும் (தன் - சாரியை) உம்மையால் உடம்பிலும் ஏற்றுக் கொள்ளப்படும். (165)

குருவை மதியாதவர் அடையும் துன்பம்

538. எற்றியிட விணைப்புருவமிரத்தவரி விழியிரண்டும்
பற்றியிடப்பரிவொழியக்குரவனுருப்பார்த்தாரை
யெற்றியிருவிழிமுழுது மெரிவிரவுஞ் சூசியினை
யுற்றுறுத்திக்காரவழலொழுக்கிடுவருணர்வறவே.

எற்றிஇட இணைப்புருவம்இரத்தவரி விழிஇரண்டும்
பற்றி இடப்பரிவு ஒழியக் குரவன் உருப்பார்த்தாரை
எற்றிஇரு விழிமுழுதும் எரிவிரவும் சூசியினை
உற்றுஉறுத்திக் காரஅழல் ஒழுக்கிடுவர் உணர்வு அற ஏ.

உரை:

ஆசிரியரை மதிக்காமல் இருபுருவங்களும் மேல்நோக்கி ஏறி நிற்க, சிவந்த கோடுகள் உறும்படி இருகண்களாலும் கோபத்தோடு உறுத்துப் பார்த்து, ஆசிரியரிடம் பணிவில்லாமல் நடந்துகொண்டவருடைய உணர்வு மயங்க, எமனுடைய பணியாளர்கள் நெருப்பில் காய்ச்சிய ஊசியால் கண்களிலே குத்தி, உப்பு, மிளகாய்ப்பொடி முதலியவை கலந்த எரிச்சலைத் தரும் நீரையும் ஊற்றுவர்.

விளக்கம்:

இரத்தவரி - செவ்வரி; இணை - இரண்டு; பரிவு - அன்பு; சூசி - ஊசி; எரிவிரவு - தீயில் காய்ச்சிய. (166)

539. பஞ்சவித லோகவழற்பதைத்தலறக் கவிழ்த்தொறுப்பர்
நஞ்சழிய மனமவரை மற்றை நரகினு நலிப்பர்
துஞ்சிருளினடமாடியடிப்பூசை தொடங்காதே
யஞ்சியழலோம்பாதே யதிதியரையருத்தாதே.

பஞ்சவிதலோக அழல் பதைத்து அலறக்கவிழ்த்து ஒறுப்பர்
நஞ்சு அழிய மனம் அவரை மற்றை நரகினும் நலிப்பர்
துஞ்சு இருளில் நடம்ஆடி அடிப்பூசை தொடங்காதே.
அஞ்சி அழல் ஓம்பாதே அதிதியரை அருத்தாதே.

Koviloor Digital Library

உரை:

ஊழிமுடிவில் கூத்து ஆடும் சிவனுடைய திருவடியைப் பூசை செய்து வணங்காதவர், தீ வளர்த்து வழிபாடு செய்யாதவர், விருந்தினருக்கு உணவு அளிக்காதவர் ஆகியோருடைய பாவங்கள் நீங்க, யமன் தூதர் உருகிய ஐந்து உலோகக் குழம்பை அவர்கள் மீது கொட்டி மற்ற நரகங்களிலும் புகுத்தித் தண்டிப்பர்.

விளக்கம்:

பஞ்சலோகம் - பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம் ஆகியவற்றின் கலவை. அதிதி - விருந்தாளி. (167)

540. அருந்தினர்கணாவினிடை யழலொழுகு மிருப்பாணி
பொருந்தியிடவொருநூறு புதைத்திடுவர்பதைத்தலற
வருந்தியிடக் காரவழலுடன் முழுதும் வார்த்திடுவ
ரெரிந்தொழுகு தாமிரமுமிறைத்திடுவரிளைப்புறவே.

அருந்தினர்கள் நாவினிடை அழல் ஒழுகும் இருப்பு ஆணி
பொருந்தியிட ஒரு நூறு புதைத்திடுவர் பதைத்து அலற
வருந்தியிடக் கார அழல் உடல்முழுதும் வார்த்திடுவர்
எரிந்து ஒழுகு தாமிரமும் இறைத்திடுவர் இளைப்பு உற ஏ.

உரை:

முன்பு சொன்ன சிவபூசை முதலான வழிபாடுகளைச் செய்யாமல் உணவு உண்டவர்களின் நாக்குகளில் எமனுடைய பணியாள்கள், தீயில் காய்ச்சிய ஒரு நூறு இரும்பாணிகளைச் செலுத்துவர்; அவர்கள் துடிதுடித்து அலறி அழுது வருந்தக் கொதித்த கார நீரை உடல் முழுதும் சொரிவர்; தீயின் வெப்பத்தால் உருகி வடியும் செம்புக் குழம்பையும் அவர்களின் உடல்களிலே ஊற்றுவர்.

விளக்கம்:

அழல் - தீ; புதைத்தல் - ஊடுருவச் செலுத்துதல்; வார்த்திடுவர் - ஊற்றுவர். (168)

பூசைக்கு உரிய பூவை மோந்து பார்ப்பது பாவம்

541. இணையிலிநந்தனவனத்து ளிணராருமணமலரை
யெணமிழந்துபறித்து முகர்ந்தெழிலுறவே முடிக்கணியிற்
றிணமுடைய வழலிருப்புமுளையறைவரவர் சிரத்தின்
மணமுகர்ந்த நாசியினுங் காரமுதல் வார்ப்பாரே.

Koviloor Digital Library

இணைஇலி நந்தனவனத்துள் இணர்ஆரும்மணம்மலரை
எண்ணம்இழந்துபறித்து முகர்ந்து எழில் உறவே முடிக்கு அணியில்
திண்ணம் உடைய அழல் இருப்புமுளை அறைவர் அவர் சிரத்தில்
மணம்முகர்ந்த நாசியிலும் காரம் முதல்வார்ப்பார் ஏ.

உரை:

ஒப்பற்ற சிவபிரானுடைய பூசைக்குப் பூக்களை உதவும் திருக்கோயிலுக்கு உரிய பூந்தோட்டத்தில் கொத்தாகப் பூத்திருக்கும் பூவைப் பறித்து மோந்து, தலையில் சூடிக் கொண்டவருடைய தலையில் எமன் தூதர்கள் சூடேறிய இரும்பு முளையைச் செலுத்துவர்; மோர்ந்த மூக்கினுள் எரிச்சலை உண்டாக்கும் காரநீரை விடுவர்.

விளக்கம்:

இணையிலி - சிவன்; நந்தனவனம் - கோயிலுக்கு உரிய மலர்த்தோட்டம். முகர்ந்து - மோந்து; திணம் - திண்ணம், கெட்டி; நாசி - மூக்கு. (169)

சிவநிந்தனை முதலான பாவங்களைச் செய்தவர் பெறும் துயரம்

542. அமலனையுங் குரவனையு மமலனுக்கே யாட்பட்டுத்
தமலமறத்தவஞ் செய்யுந்தகுதியர்களவர் தமையு
நிமலனுரையதுதனையு நிந்தித்தாரவர்வாயுட்
டுமிலமுற விருப்பாணியழலறைவர் துயருறவே.

அமலனையும் குரவனையும் அமலனுக்கே ஆள்பட்டுத்
தம்மலம் அறத்தவம் செய்யும் தகுதியர்கள் அவர்தமையும்
நிமலன்உரை அது தனையும் நிந்தித்தார் அவர் வாயுள்
துமிலம் உற இருப்பு ஆணி அழல் அறைவர் துயர் உற ஏ.

உரை:

சிவபிரானையும், சிவாகமங்களையும் கற்பிக்கும் ஆசிரியனையும், சிவனுக்கே அடியவராகித் தம்மைப் பற்றியிருக்கும் ஆணவம் முதலான அழுக்குகள் அகல, நோன்பிருந்து, உடலை வருத்திக் கடவுள் வழிபாடு செய்யும் தக்கவராகிய சிவயோகியையும், சிவபிரான் திருமொழியாகிய சிவ ஆகமங்களையும் பழித்துப் பேசியவர் துன்பம் பொருந்த எமனுடைய தூதர்கள், மிகுந்த ஆரவாரத்தோடு அவருடைய வாயின் உள்ளே நெருப்பில் இட்டுக் காய்ச்சிய இரும்பு ஆணியைப் புகுத்தி அடிப்பர்.

விளக்கம்:

அமலன் - ஆணவம் முதலான மலங்கள் இல்லாத சிவன். தவம் செய்யும்

Koviloor Digital Library

தகுதியர் - பட்டினி முதலியவற்றால் உடலை வாட்டிக் கடவுள் வழிபாடு செய்யும் யோகி. **நிமலன் உரை** - சிவன் திருமொழியாகிய சிவாகமங்கள். **நிந்தித்தல்** - பழித்துப் பேசுதல்; **துமிலம்** - மிகுந்த ஆரவாரம்; **இருப்பு** - இரும்பு; **அறைவர்** - அடித்துப் புகுத்துவர். (170)

சிவநிந்தனை முதலானவை செய்தவர் அடையும் துயரங்கள்

543. தந்தத்தினிடை தோறு மதரோட்டமவை தனினுஞ்
சிந்தச் செங்குருதிவெளஞ்சிரத்திடையு முரத்திடையுஞ்
சந்தித்த விடைதோறு நாசியினுந்தழலொழுக
வெந்துற்ற விருப்புமுளையறைந்தொறுத்து வெறுப்பாரே.

தந்தத்தின் இடைதோறும் அதரஓட்டம் அவைதனிலும்
சிந்தச் செங்குருதிவெள்ளம் சிரத்திடையும் உரத்திடையும்
சந்தித்த இடைதோறும் நாசியிலும் தழல் ஒழுக
வெந்துற்ற இருப்புமுளை அறைந்து ஒறுத்து வெறுப்பார் ஏ.

உரை:

முன்பு சொன்ன சிவ, குரு, ஆகமம் முதலானவற்றை இகழ்ந்தவரை எமனுடைய பணியாளர்கள், செந்நீர் பெருகித் தரையில் சிந்தப் பற்களிடையிலும், கீழுதடு, மேலுதடுகளிலும் தலை, மார்பு, இடுப்பு, மூக்கு ஆகிய உறுப்புகளிலும், நெருப்பில் வெந்து உருகுகின்ற இரும்புமுளையால் அடித்துத் தண்டிப்பார்கள்.

விளக்கம்:

தந்தம் - பல்; செங்குருதி - செந்நீர்; சிரம் - தலை; உரம் - மார்பு; இடை - இடுப்பு; அதரம் - கீழுதடு; ஒட்டம் (ஓஷ்டம்) - மேலுதடு. (171)

544. ஒழுக்கிடுவரழற்காரமுடன் முழுதுந்தாமிரத்தி
னழற் சொரிவர் மற்றுமுள வல்லலெலா மருத்திடுவர்
பழித்திடுவர் நிரயவிதமனைத்து முறப்பதைக்கவுடற்
றொழிற்பலத்தை முறையுறவே துய்ப்பிக்குந் தூதுவரே.

ஒழுக்கிடுவர் அழல்காரம் உடல்முழுதும் தாமிரத்தின்
அழல் சொரிவர் மற்றும் உள்ள அல்லல் எல்லாம் அருத்திடுவர்
பழித்திடுவர் நிரயவிதம் அனைத்தும் உறப்பதைக்க உடல்
தொழிற்பலத்தை முறைஉறவே துய்ப்பிக்கும் தூதுவர் ஏ.

Koviloor Digital Library

உரை:

முன்பு சொன்ன பாவத்தொழிலின் பயனை அனுபவிக்கச் செய்யும் எமனுடைய பணியாளர்கள், அந்தப் பாவியரின் உடல்கள் மீது சூடான கார நீரை வார்ப்பர்; தீயில் உருகிய செம்புக்குழம்பை உடல் முழுவதும் ஊற்றுவர்; எல்லாத் துன்பங்களையும் அனுபவிக்கும்படி துடிதுடிக்கப் பல நரகங்களிலும் இடுவர்.

விளக்கம்:

அல்லல் - துன்பம்; துய்ப்பிக்க - நுகர. (172)

திருடுதல் முதலான பாவப் பயன்கள்

545. அந்நியர் தம் பொருளதனை யங்கையினாற் பற்றிடினு
மன்னுபுகழ் விப்பிரர்தம் வடிவிடத்து மறந்தேனுந்
தன்னுடைய பதம்படினுஞ் சங்கரர்க்குக் குறித்த பொரு
ளின்னிசைய வாகம மென்றியம்பியிடு மிவை தனினும்.

அந்நியர்தம் பொருள் அதனை அங்கையினால்பற்றிடினும்
மன்னுபுகழ் விப்பிரர்தம் வடிவு இடத்து மறந்தேனும்
தன்னுடைய பதம்படினும்சங்கரர்க்குக் குறித்த பொருள்
இன்னிசைய ஆகமம் என்று இயம்பியிடும் இவை தனிலும்.

உரை:

பிறருக்குச் சொந்தமான பொருளை உள்ளங்கையால் தொட்டு எடுத்துக் கொள்ளுதலும், நிலையான புகழுடைய ஆசிரியரின் உடல் மீதும், சுகம் அளிக்கும் சிவபெருமானுக்கு உரிய பூசைப் பொருள்களின்மீதும், சிவன் திருவாக்குகள் அடங்கிய சிவாகமங்கள் மீதும் பாதம்படும்பட நடந்து செல்லுதலும் பாவச் செயல்களாகும்.

விளக்கம்:

அங்கை - அகம்கை, உள்ளங்கை; **மன்னும்** - நிலையான; **வடிவு** - உடல்; **சங்கரன்** - சுகமளிக்கும் சிவன்; **குறித்த** - பூசைக்கு உரிய; **விப்பிரன்** - பிராமணன்.

'*ரிக் வேதத்திலேயே* புரோகிதர்களைப் பிராமணர் என்று குறிப்பிடும் இடங்களை விடக் கவி, காரு, விப்ர முதலிய சொற்களால் குறிப்பிடும் இடங்களே அதிகம். பிரமன் என்று இயற்கை கடந்த ஆற்றலை உடையவன் என்ற பொருளிலே, பிராமணன் என்ற சொல் முதலில் பயிலப்பெற்றது.'

(பேராசிரியர் எஸ். இராமகிருஷ்ணன், '*இந்தியப் பண்பாடும் தமிழரும்*' - பக்கம் - 153)

சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி, பிரமன் என்றால் பிராமணன் என்று விளக்கம் தருகிறது. (173)

Koviloor Digital Library

546. கரமதனிற் பதமதனிற் காரவழற் கவிழ்த்திடுவ
ருருகிய தாமிரத்தினையு மொழுக்கிடுவர் வழுக்கறவே
நிரயவித மெனைத்தனைத்து முணர்வறவே நிறுத்திடுவர்
கரவினையும் பதவினையுங் கட்டதரங் கட்டதரம்.

கரம் அதனில் பதம்அதனில் காரஅழல் கவிழ்த்திடுவர்
உருகிய தாமிரத்தினையும் ஒழுக்கிடுவர் வழுக்கு அறவே
நிரயவிதம் எனைத்து அனைத்தும் உணர்வு அறவே நிறுத்திடுவர்
கரவினையும் பதவினையும் கட்டதரம் கட்டதரம்.

உரை:

எமனுடைய பணியாளர்கள் திருட்டு முதலான குற்றங்களைச் செய்தவரின் கைகால்களில் உப்பு முதலியன கலந்த கொதிக்கும் நீரைக் கொட்டுவர்; அவர்களின் உடல்கள் மீது தீயில் உருகிய செம்புக் குழம்பையும் ஊற்றுவர்; கொடுமையான தண்டனைகளிலிருந்து நீங்கி விடாமல் அவர்களை எல்லாவித நரகங்களிலும் புகுத்துவர்.

விளக்கம்:

கரவினை - கையால் செய்த திருட்டு; பதவினை - கால்பட்ட குற்றம்; கட்டதரம் - கஷ்டதரம், வெகு கஷ்டம் (தர - Comparative Suffix) (174)

திருக்கோயில் முதலானவற்றை மாசுபடுத்திய பாவம்

547. ஈசர் திருவாலயத்து மெழிலுறு நந்தனவனத்தும்
மோசகனை மலமதனை மூத்திரமுமுரணழித்துக்
கோசமதிற் பீசமதில யோமயத்த குறுந் தண்டா
லோசையுற நமன்றூதர் தருக்கிமிக வொறுப்பாரே.

ஈசர்திரு ஆலயத்தும் எழில்உறு நந்தனவனத்தும்
மோசகனைமலம் அதனை மூத்திரமும் முரண் அழித்துக்
கோசம் அதில் பீசம் அதில் அயோமயத்த குறும்தண்டால்
ஓசை உற நமன் தூதர் தருக்கி மிக ஒறுப்பார் ஏ.

உரை:

சிவபிரான் திருக்கோயிலிலும், திருக்கோயிலின் அழகிய மலர்த் தோட்டத்திலும் மலசலம் கழித்து மாசுபடுத்தியவனுடைய வலிமை ஒழிய எமனுடைய பணியாளர்கள், குட்டையான இரும்புக் கம்பியால் ஆண் குறியிலும் விதையிலும் ஒலி உண்டாக அடித்துத் தண்டிப்பர்.

Koviloor Digital Library

விளக்கம்:

மோசகன் - மாசுபடுத்தியவன்; கோசம் - ஆண்குறி; பீசம் - விதை; அயோ மயத்த குறுந்தண்டு - இரும்பு மயமாகிய குறுந்தண்டு. அயம் - இரும்பு. (175)

548. அனலொழுகுஞ்சூசிபல வழுத்திடுவரவைதன்னிற்
கனலொழுகு மயோமயத்ததண்ட மதிற்கண்டகமு
மினலுறவே குதத்தியற்றிச் சிரத்தின் மிசையெழவேற்றி
நினைவழியவலி தொலையத் துயரவித நிறுத்துவரே.

அனல்ஒழுகும்சூசிபல அழுத்திடுவர் அவைதன்னில்
கனல் ஒழுகும் அயம் மயத்த தண்டம் அதில் கண்டகமும்
இன்னல் உறவே குதத்து இயற்றிச் சிரத்தின்மிசை எழ ஏற்றி
நினைவு அழிய வலி தொலையத் துயரவிதம் நிறுத்துவர் ஏ.

உரை:

முன்சொன்ன திருக்கோயில் முதலியவற்றை மாசுபடுத்தியவரின் உடல்மீது எமனுடைய பணியாளர்கள் தீயில் காய்ச்சிய ஊசிகளை ஏற்றுவர்; சூடேறிய இரும்புத் தடியாலும் முள்ளாலும் துன்பம் பொருந்தக் குதத்தினூடே புகுந்து உச்சிவழி மேலேறும்படி ஏற்றி, அவரின் எண்ணமும் வலிமையும் கெடத் தண்டிப்பர்.

விளக்கம்:

அயம் - இரும்பு; குதம் - மலவாசல். (176)

549. கனலனைய காரவழலவைதன்னிற் கவிழ்த்திடுவ
ரனலொழுகு தாமிரமு மலறிடவே சொரிவார்க
ளினையதுயர்மற்றுமுள விந்திரியத் தியற்றிடுவர்
வினையவல மவற்றாலும் விதியிகந்து விளைத்தவர்க்கே.

கனல் அனைய காரஅழல் அவை தன்னில் கவிழ்த்திடுவர்
அனல் ஒழுகும் தாமிரமும் அலறிடவே சொரிவார்கள்
இனைய துயர் மற்றும் உள்ள இந்திரியத்து இயற்றிடுவர்
வினை அவலம் அவற்றாலும் விதிஇகந்து விளைத்தவர்க்கு ஏ.

உரை:

எமனுடைய தூதர்கள், முறைதவறிக் குற்றம் பொருந்திய செயல்களைச் செய்தவரின் குதம், தலை முதலான உறுப்புகளிலும், ஏனைய உறுப்புகளிலும் சூடேறிய காரநீரையும், உருகும் செம்புக் குழம்பையும், அவர் கதறி அழும்படி ஊற்றுவர்.

Koviloor Digital Library

விளக்கம்:

இனைய - இத்தகைய; இகந்த - கடந்த; (177)

பிறருக்கு வழங்காத செல்வர் படும் துன்பம்

550. தனமிகுதிதரித்திருந்துந்தானவினைபுரியாரை
மனைதனிற் செஞ்சாலிமிகவுளராயும் வறியார்வந்
தனமுளதே யெனவிரந்தவதிதியரையருத்தாதே
தனியிருந்துண்ணவலரையுந்தண்ட தரன்றமர்தாமே.

தனம்மிகுதி தரித்திருந்துந்தானம் வினை புரியாரை
மனைதனில் செஞ்சாலி மிக உளராயும் வறியார்வந்து
அன்னம் உளதே என இரந்த அதிதியரை அருத்தாதே
தனி இருந்து உண் அவலரையும் தண்ட தரன்தமர்தாம் ஏ.

உரை:

மிகுந்த செல்வம் உடையவராக இருந்தும், ஈதல் முதலான அறங்களைச் செய்யாதவர்களையும்; செந்நெல் முதலான தானியங்கள் மிகுதியாக இருந்தும், பசியோடு வந்து உணவு வேண்டும் என்று கேட்ட இரவலரின் பசிதீர உணவு அளிக்காமல் தானே தனித்திருந்து உண்ணும் தீயவரையும்; எமனுடைய பணியாளர்கள்;

விளக்கம்:

தனம் - செல்வம்; தானம் - ஈகை; செஞ்சாலி - செந்நெல்; மனை - வீடு; அதிதி - இரவலர்; தண்டதரன் - எமன்; தமர் - துணைவர், தூதர். (178)

551. அறைந்திடுவர் கூரியவாயிருப்பு
முளையவர் மிடற்றுட்
புறம்புறுமவ் வாணிவளைச்
சிருங்கலையைப் பூட்டிடுவர்
சிறந்தவய விருதம்பத்திடைக்
கணையிற் செறித்திடுவர்
பறந்திடவே பதம்பாணி
பக்கமுறப் பயிற்றுவரே.

அறைந்திடுவர் கூரியவாய் இருப்புமுளை
அவர் மிடற்றுள்
புறம்பு உறும் அவ்வாணிவளைச்
சிருங்கலையைப் பூட்டிடுவர்

Koviloor Digital Library

சிறந்த அயம் இருதம்பத்து
இடைக்கணையில் செறித்திடுவர்
பறந்திடவே பதம்
பாணிபக்கம் உறப்பயிற்றுவர் ஏ.

உரை:

கூரிய நுனிகளையுடைய இரும்பு முளைகளை அவர்களின் கழுத்துகளின் உள்ளே நுழையுமாறு அடிப்பார்கள்; உடல்களோடு பொருந்திய இரும்பு ஆணி வளையத்தில் இரும்புச் சங்கிலியை இணைத்துக் கட்டி, இரண்டு இரும்புத் தூண்களின் மேலேயுள்ள விட்டத்தில் கால், கைகள் பக்கங்களிலே விரித்தபடி இருக்குமாறு தொங்கவிடுவர்.

விளக்கம்:

சிருங்கலை - இரும்புச் சங்கிலி; மிடறு - கழுத்து; பதம் - கால்; பாணி - கை; அயம் - இரும்பு; தம்பம் - தூண்; பூட்டி - சேர்த்து. (179)

552. சிரத்தறைவர் குளத்தறைவர்
திறந்துறவாய் தனிலறைவ
ருரத்தறைவர் பதத்தறைவ
ரொள்ளழற் கூரிருப்புமுளை
கரத்தறைவர் வருத்தமுறக் கசிந்தன்
பாற் கடும்பசியி
லருத்தியிடா தருந்தவரை
யருந்திய தீவினையறவே.

சிரத்து அறைவர் குளத்து அறைவர்
திறந்து உறவாய்தனில் அறைவர்
உரத்து அறைவர்பதத்து அறைவர் ஒள்
அழல் கூர் இருப்புமுளை
கரத்து அறைவர் வருத்தம் உறக்
கசிந்து அன்பால் கடும்பசியில்
அருத்திஇடாது அருந்தவரை அருந்திய
தீவினை அற ஏ.

உரை:

மிகுந்த பசியோடு வந்த நல்ல தவமுடையவரின் பசிதீர, மனம் குழைந்து அன்பாக உணவு அளித்து உண்பிக்காமல், தானே தனித்து இருந்து உண்டவரின் பாவம் அகல (எமன் தூதர்கள்) ஒளி பொருந்திய தீயிலிட்டுச் சூடேற்றிய கூரான

Koviloor Digital Library

இரும்பு முளையால், துன்பம் உண்டாகும்படி தலை, நெற்றி, வாய்,மார்பு, கால், கை ஆகிய உறுப்புகளில் குத்தித் தாக்குவர்.

விளக்கம்:

குளம் - நெற்றி; உரம் - நெஞ்சு; அருத்தல் - உண்பித்தல். (180)

553. வாக்கதனைக் கிருமிபல
மண்டியுண வயத்துண்டக்
காக்கை பறித்தருந்தியிட
மற்றுமுள கடுந்துயர
மாக்கிடுவர் காக்கினடுத்துளைத் தழன்ற
வயத் தொடரால்
வீக்கியதிபார விருப்புண்டை
பல விடுவாரே.

வாக்கு அதனைக் கிருமிபல
மண்டி உண அயத்துண்டக்
காக்கை பறித்து அருந்தியிட மற்றும்
உள்ள கடும் துயரம்
ஆக்கிடுவர் காக்கின் நடுத் துளைத்து
அழன்ற அயம் தொடரால்
வீக்கி அதிபார இருப்பு
உண்டை பலவிடுவார் ஏ.

உரை:

பசித்து வந்தவருடைய பசியைத் தணிக்காமல் தனித்து இருந்து உண்டவரின் பாவம் அகல, எமனுடைய பணியாளர்கள், அவருடைய வாயைப் புழுக்கள் அடர்ந்து தின்னவும், இரும்பு அலகினையுடைய காகம் கொத்தித் தின்னவும் செய்வர்; சூடேறிய இரும்புச் சங்கிலியால் உடலைக் கட்டி, அதிலுள்ள துளைகளில் பளுவுடைய இரும்புக் குண்டுகளைக் கட்டித் தொங்க விடுவர்; வேறுபல துன்பங்களும் செய்வர். (181)

அறம் செய்யாத செல்வர் பெறும் தண்டனை

554. கட்டிடுவர் பீசத்துங் கோசத்துங்
கடிய தொடர்
விட்டதனை நான்றிடவே
வியனிருப்புக் கட்டியினைக்

Koviloor Digital Library

கட்டிடுவரதன் முடிவிற் கரத்து
மிவற்றிரட்டி ரட்டி
நிட்டுரரை நிதியுதவக்
கருதாத நெஞ்சரையே.

கட்டிடுவர் பீசத்தும் கோசத்தும்
கடிய தொடர்
விட்டு அதனை நான்றிடவே
வியல் இருப்புக் கட்டியினைக்
கட்டிடுவர் அதன் முடிவில் கரத்தும்
இவற்று இரட்டி இரட்டி
நிட்டுரரை நிதிஉதவக்
கருதாத நெஞ்சரை ஏ.

உரை:

தாம் தேடிய செல்வத்தை அறப் பணிகளிலே செலவிடாத அறப் பணிகளுக்கு உதவாத கொடியவரின் விதையிலும், ஆண் குறியிலும் காலனுடைய பணியாளர்கள் இரும்புச் சங்கிலியைக் கட்டி அதன் நுனியில் பளுவான இரும்புக் குண்டைத் தொங்க விடுவர். பின்னர், கைகளிலும் இரும்புச் சங்கிலியைப் பிணித்து, முன் சொன்ன இரும்புக் குண்டைவிட நான்கு மடங்கு பளுவுடைய இரும்புக் குண்டைக் கட்டி விடுவர்.

விளக்கம்:

பீசம் - ஆண்குறியின் கீழ் இருக்கும் விதை; கோசம் - ஆண்குறி; தொடர் - இது இங்கு இரும்புச் சங்கிலியைக் குறிக்கும். கடிய - வன்மையான; நான்றிடல் - நாலுதல்; தொங்குதல்; வியன் - பெரிய; இருப்பு - இரும்பு; நிட்டுரர் - நிட்டூரர், கொடியவர். கட்டி - இது இங்கு உருண்டு கனத்த இரும்புக் குண்டைக் குறிக்கும். இரட்டி இரட்டி - இரண்டு இரண்டு நான்கு; நிதி - செல்வம்; உதவ - வழங்க; கருதாத - எண்ணாத; நெஞ்சர் - உள்ளத்தினர். (182)

முன் பாடலின் தொடர்ச்சி

555. அரிந்தரிந்தே யவராகந் திலமெனவே யருத்திடுவர்
கொரிந்திரத்தங் குடித்திடவுஞ் சொல்லிடுவர் சூசியினா
லெரிந்தொழுகுங்காரவற லிறைத்திடுவர் தாமிரமுஞ்
சொரிந்திடுவரழ லொழுகுந் தயிலமும்பின் சொரிவாரே.

Koviloor Digital Library

அரிந்து அரிந்தே அவர்ஆகம் திலம் எனவே அருந்திடுவர்
சொரிந்து இரத்தம் குடித்திடவும் சொல்லிடுவர்சூசியினால்
எரிந்து ஒழுகும் கார அறல் இறைத்திடுவர் தாமிரமும்
சொரிந்திடுவர் அழல் ஒழுகும் தயிலமும்பின் சொரிவார் ஏ.

உரை:

கூற்றுவனுடைய பணியாளர்கள் ஈகைப் பண்பு இல்லாதவரின் உடலை எள்ளளவாக அரிந்து தின்னச் சொல்லுவர்; ஊசியினால் உடம்பைக் குடைந்து அங்கிருந்து வடியும் குருதியைப் பருகச் சொல்லுவர்; குடைந்ததால் ஏற்பட்ட புண் உள்ள இடத்திலே தீப்பிழம்பு போன்ற காரநீரைச் செலுத்தி, அதில் உருகிய செம்புக் குழம்பையும் விடுவர்; பின்னர், கொதிக்கக் காய்ச்சிய எண்ணெயையும் ஊற்றுவர்.

விளக்கம்:

செல்வம் பெற்றிருப்பவர்கள் அனைவரும் ஈகையாளராக இருத்தல் இயலாது. கொடுப்பதைப் பிறவிப் பண்பாகப் பெற்றிருப்பவரே ஈகையாளராக விளங்குவார். சித்திரம் கைப்பழக்கத்தாலும், செந்தமிழ்ப் புலமை நாவின் பழக்கத்தாலும், கல்வித் தேர்ச்சி மனப்பழக்கத்தாலும் அமையும். ஆனால், நட்பு, இரக்கம், கொடை என்ற மூன்றும் பிறவிக் குணமாக ஒருவருக்கு அமைய வேண்டு (கொடையும் பிறவிக்குணம்) மென்று அவ்வையார் கூறுகிறார்.

(பாடல்: சித்திரமும் கைப்பழக்கம் - *தனிப்பாடல்*)

அரிந்து - அறுத்து; ''வாளால் மகவரிந்து ஊட்டவல்லேன்'' என்பது பட்டினத்தார் வாக்கு.

ஆகம் - உடம்பு; திலம் - எள்; அருத்திடுவர் - உண்ணச் செய்வர்; சூசி - ஊசி; அறல் - நீர்; காரம் - உப்பு முதலானவை கலந்தது; தாமிரம் - செம்பு; தயிலம் - எண்ணெய்; அழல் - தீ. (183)

பசித்து வந்தவரை உண்பிக்காதவர் பெறும் தண்டனை

556. அதிதூர வழலிடையு மழுத்திடுவ ரதன் பின்பு
கொதியாமற்றைய நிரயத் துயரனைத்துங் கொடுத்திடுவ
ருதராங்கி தனைமிகவு முதிப்பித்தே யொறுத்திடுவ
ருதகாசையுறத் தபன வழலினையு முதிப்பிப்பர்.

அதிதூர அழலிடையும் அழுத்திடுவர் அதன்பின்பு
கொதியா மற்றைய நிரயத்துயர் அனைத்தும் கொடுத்திடுவர்
உதர அங்கி தனைமிகவும் உதிப்பித்தே ஒறுத்திடுவர்
உதக ஆசை உறத்தபன அழலினையும் உதிப்பிப்பர்.

Koviloor Digital Library

உரை:

பசியோடு தன் வீடு தேடிவந்தவருக்கு உணவு அளிக்காமல் தான் மட்டும் தனியேயிருந்து உண்ட குற்றமுடையவரை, எமனுடைய பணியாளர்கள், மிகுந்த ஆழமுள்ள எரிநரகிலும், கொழுந்து விட்டு எரிகின்ற பிற நரகங்களிலும் செலுத்தி, எல்லாத் துயரங்களையும் நுகரச் செய்வர். பின்னர், அவருக்குப் பசித் தீயை அதிகப்படுத்தி, நீர் அருந்தும் வேட்கை ஏற்படும்படி நாவறட்சியை உண்டாக்கித் தண்டிப்பார்கள்.

விளக்கம்:

அதிதூரம் - மிகத் தொலைவு; இது இங்கு நரகக் குழியின் ஆழத்தைக் குறிக்கிறது.

கொதியா - பொங்கி எரிகின்ற; **நிரயம்** - அளறு, நரகம்; **உதரம்** - வயிறு; **அங்கி** - தீ; **உதர அங்கி** - பசியாகிய தீ; **உதகம்** - நீர்; **உதக ஆசை** - நீர் அருந்தும் வேட்கை; **தபனம்** - வெப்பம், தாகம், நாவறட்சி; **தபன அழல்** - நாவறட்சி, நீர் அருந்தும் விருப்பம், தாகம்; (184)

நரகத்துயருக்கு அளவு கிடையாது

557. ஒருநிரயத்துயர் பலவேயுரைப்பன வோவுரைத்திடினு
நிரயவிதமனைத்தினுக்கு நிரந்த துயர் நிச்சயித்து
வருடமொரு சதமுறினு மதித்து ரைக்க வலரிலரே
யருநிரயக் கடற்றுயரப் பெருவெளத்துக் களவுண்டோ?

ஒரு நிரயத் துயர்பலவே உ ரைப்பனவோ உரைத்திடினும்
நிரயவிதம் அனைத்தினுக்கு நிரந்த துயர் நிச்சயித்து
வருடம் ஒரு சதம் உறினும் மதித்து உரைக்க வலர் இலரே
அரு நிரயக் கடல் துயரப் பெருவெள்ளத்துக்கு அளவு உண்டோ?

உரை:

ஒவ்வொரு நரகத் துன்பங்களையும் ஆராய்ந்தால் அவை அளவு கடந்தனவாக உள்ளன. அளவு கடந்தவையாக உள்ளவற்றை அளவிட்டுச் சொல்ல முடியுமா? முடியாது. எல்லா வகை அளறுகளுக்கும் பொருந்திய துயரங்களை அளவிட்டு நூறு ஆண்டுகள் தொடர்ந்து உரைத்தாலும், முழுவதையும் கணக்கிட்டு உரைக்க வல்லவர்கள் யாரும் இலர். ஆதலால், உரைத்தற்கு அரிய நரகக் கடலின் துயரங்களாகிய நீர்ப்பெருக்கிற்கு எல்லை உண்டோ? எல்லை இல்லை.

விளக்கம்:

நிரயம் அல்லது நரகம் என்பதைத் தமிழில் அளறு என்பர்.

Koviloor Digital Library

''அண்ணாத்தல் செய்யாது அளறு'' என்று *திருக்குறள்* கூறுகிறது. **நிரந்த** - பொருந்திய; **நிச்சயித்து** - உறுதி செய்து; **சதம்** - நூறு; **மதித்து** - அளவிட்டு, கணக்கிட்டு; **வெள்ளம்** - நீத்தம், நீர்ப் பெருக்கு; **அளவு** - எல்லை. (185)

நரகத்தை விரும்புவர் இலர்

558. வேதத்தினாகமத்தின் விதியிகந்து விடுத்தார்கள்
வாதிக்கப்படுவரவற்ற னைத்தினுந்தாமரியாரும்
மேதைக்குண் மாதுரியர் கேட்டவுடன் வீவரெனப்
போதிக்குங் கடுந்தழலிற் கொடுவினையார் புகுவாரே.

வேதத்தில் ஆகமத்தில் விதிஇகந்து விடுத்தார்கள்
வாதிக்கப்படுவர் அவற்று அனைத்தினும் தாம் மரியாரும்
மேதைக்குள் மாதுரியர் கேட்டவுடன் வீவர் எனப்
போதிக்கும் கடும் தழலில் கொடுவினை யார் புகுவார்? ஏ.

உரை:

உபநிடதங்களும் சிவ ஆகமங்களும் உரைக்கும் நன்னெறிகளை மேற்கொள்ளாமல் அவற்றைப் புறக்கணித்தவர்களை நடுவனுடைய பணியாளர்கள், எல்லா வகை அளறுகளிலும் புகுத்தித் துன்பங்களை ஏற்படுத்துவர். எனினும், அவர்கள் சாதல் இல்லை. அறிவுடைமையிற் சிறந்தோராக உள்ளவர்கள், இந்த நரகத் துயரங்களைக் கேட்ட அளவிலேயே உயிர் விடுவர் என்று உபநிடத, சிவாகமங்கள் உரைக்கும். ஆதலால், கொடிய துன்பங்களைத் தருகின்ற கொடும் தீயைப் போன்ற அளறிலே புகுத யார் தான் விரும்புவார்?

விளக்கம்:

விதி - நெறி அல்லது வழி; **இகந்து** - கடந்து, (மீறி) அதாவது மதியாமல்; **வாதிக்கப்படுவர்** - துன்புறுத்தப்படுவர்; **மரியார்** - இறவார்; **மேதை** - பேரறிவாளர்;

மாதுரியர் - விவேகி; கூரறிவுடையவர்; **வீவர்** - சாவர்; **போதிக்கும்** - உரைக்கும்; **கடும்தழல்** - கொடிய தீ; **கொடு வினை** - கொடிய துன்பம்; (186)

பாவியரிடம் எமனுடைய பணியாளர்களின் உரை

559. வித்தகனற்றுணையென்று மதித்து விரும்பீரே
பொத்தையுடற் பொறை நிற்கு மெனப் பொய் புகன்றீரே
யொத்துமருற்ற தயக்க மயக்க மொழிந்தாரோ
மித்திரரைப் பரிவற்ற தன்மத்தை விளைத்தீரே.

Koviloor Digital Library

வித்தகன் நல்துணை என்று மதித்து விரும்பீர்ஏ.
பொத்தை உடல் பொறை நிற்கும் எனப் பொய் புகன்றீர்ஏ.
ஒத்து உமர் உற்ற துயக்கம் மயக்கம் ஒழிந்தாரோ.
மித்திரரைப் பரிவு உற்று அதன்மத்தை விளைத்தீர் ஏ.

உரை:

உங்களுடைய நண்பருக்கு வருத்தம் உண்டாகிப் பாவத் தொழில் புரிந்தவர்களே! நீவிர் அறிவு வடிவான சிவபிரானே உங்களுக்கு உற்றதுணை என்று கருதி மேன்மையடைய விரும்பவில்லை; அழுக்குச் சேரும் உடற்சுமை நிலைத்து நிற்கும் என்று கருதிப் பொய் உரைத்தீர்கள்; இப்போது உங்களுடைய உறவினர்கள் மனம் இசைந்து உங்களுடைய உடற் சோர்வையும் மனக் குழப்பத்தையும் போக்கினார்களா?

விளக்கம்:

வித்தகன் - அறிவன், இது வாலறிவனான சிவனைக் குறிக்கிறது. இறைவன் அறிவையே வடிவமாக உடையவன். 'சித்த மிசை குடி கொண்ட அறிவான தெய்வமே' என்பது தாயுமானார் திருமொழி. **பொத்தை** - அழுக்குச் சேரும் உடம்பு;

''அழுக்குப் பேணும் பொத்தையே போற்றி'' (*தேவாரம்* - 996,1.)

பொத்தை - பொத்தல்; ஓட்டை;

''பொத்தையூன் சுவர்'' (*திருவாசகம்:* 26,7)

பொறை - சுமை, பாரம்; **உமர்** - உம்மவர், உறவினர்; **ஒத்து** - சம்மதித்து; **துயக்கம்** - சோர்வு; **மயக்கம்** - அறிவுக் குழப்பம். **மித்திரர்** - நண்பர்; **அதன்மம்** - இங்கு பாவச் செயலைக் குறிக்கும். (187)

560. யாதனையுண்டு கொலென்று துயங்கியிருந்தீரே
நாதனுமுண்டு கொலென்று கயந்து நவின்றீரே
யோதன முண்டு கொலென்றவர் தம்மை யொழித்தீரே
வேதனை கண்டு வியந்து பயந்து விழுந்தீரே.

யாதனை உண்டு கொல் என்று துயங்கி யிருந்தீர்ஏ.
நாதனும் உண்டு கொல்என்று கயந்து நவின்றீர்ஏ.
ஓதனம் உண்டு கொல் என்றவவர் தம்மை ஒழித்தீர்ஏ.
வேதனை கண்டு வியந்து பயந்து விழுந்தீர். ஏ.

உரை:

நரக வேதனை என ஒன்று உண்டா என்னும் ஐயத்தால் அறிவு மயங்கியிருந்தீர்கள்; சிவபிரான் என ஒருவர் உள்ளனரா என்று வெறுப்போடு

Koviloor Digital Library

பழித்து உரைத்தீர்கள்; பசியோடு உங்கள் வீடு தேடிவந்து உணவு இருக்கிறதா என்று கேட்ட இரவலரை உண்பிக்காமல் பசியோடு போகச் செய்தீர்கள்; இந்தப் பாவச் செயல்களின் பயனாக இப்போது உங்களுக்கு ஏற்பட்ட நரகத் துன்பத்தைக் கண்டு அதிசயித்து, நடுங்கி, மனம் தளர்ந்து விழுந்தீர்கள்.

விளக்கம்:

யாதனை - வேதனை; உண்டுகொல் - இருக்கின்றதா; துயங்கி - அறிவு கலங்கி; நாதன் - தலைவன், கடவுள்; இங்குச் சிவபிரானைக் குறிக்கும்; ''நாதன் நாமம் நமச்சிவாயவே''

என்பது ஆளுடைய பிள்ளையாரின் அருளுரை.

''நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க''

என்பது ஆளுடைய அடிகளின் அருள் மொழி.

ஓதனம் - உணவு; ஒழித்தீர் - தவிர்த்துவிட்டீர்; (188)

561. கண்டகரோடு களித்தறநீதி கறுத்தீரே
யுண்டொரு தெய்வமு மென்றவர் தம்மையுவர்த்தீரே
அண்டர்தமாலய மாமர மற்று மறுத்தீரே
மண்டனில் வாழ்வை மதித்தெளியாரை வதைத்தீரே.

கண்டகரோடு களித்து அறம்நீதி கறுத்தீர் ஏ.
உண்டுஒரு தெய்வமும் என்றஅவர் தம்மை உவர்த்தீர் ஏ.
அண்டர்தம் ஆலய மாமரம் மற்றும் அறுத்தீர் ஏ.
மண்தனில் வாழ்வை மதித்து எளியாரை வதைத்தீர் ஏ.

உரை:

கொடியவர்களோடு கூடி மகிழ்ந்து நீதிநூல்கள் கூறும் நேரிய வழியிற் செல்வதற்குச் சினந்தீர்கள்; மக்கள் அனைவரும் வணங்குவதற்கு உரிய செல்வம் ஒன்று உண்டு என்று உரைத்த சான்றோரை அருவருத்தீர்கள்; சிவபிரான் எழுந்தருளியுள்ள திருக்கோயிலுக்கு உரிய மாமரம் முதலான பயன் தரும் மரங்களை வெட்டினீர்கள்; மண்ணுலக வாழ்வைப் பெரிதாகக் கருதி ஏழை மக்களுக்குக் கொடுமை செய்தீர்கள்.

விளக்கம்:

கண்டகர் - கொடியவர்; களித்து - மகிழ்ந்து; நீதி - நேர்மை; அறம் - இது *திருக்குறள்* போன்ற அறநூல்களைக் குறிக்கிறது. திருக்குறளை 'அறம்' என்றே *புறநானூற்றுப்* பாடல் ஒன்று கூறுகின்றது.

Koviloor Digital Library

''நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்என
அறம் பாடிற்றே ஆயிழை கணவ.'' (*புறநானூறு* 34)

கறுத்தல் - சினத்தல்; **உவர்த்தல்** - அருவருத்தல்; **மண்** - பூமி, நிலப்பரப்பு. **உண்டு ஒரு தெய்வம்** - தெய்வம் ஒன்று உண்டு; ''ஒன்று என்று இரு தெய்வம் உண்டு என்று இரு'' என்பது பட்டினத்து அடிகளின் அருளுரை. **அண்டர் தம் ஆலயம்** - தேவருக்குரிய கோயில்; இங்குத் தேவர் என்பது சிவபிரானைக் குறிக்கும்; சிவனே மகாதேவன் என்பர். (189)

562. **பஞ்ச பாதக மன்றெளிதென்று பயின்றீரே
நஞ்சன வெஞ்சொலை நற்றவரோடு நவின்றீரே
வஞ்சக நெஞ்சக மாதர் களிப்பு மதித்தீரே
யஞ்சன வேல்விழியாருறு கற்பு மழித்தீரே.**

**பஞ்ச பாதகம் அன்று எளிது என்று பயின்றீர்ஏ.
நஞ்சுஅன்ன வெம்சொல்லை நல்தவரோடு நவின்றீர்ஏ.
வஞ்சக நெஞ்சக மாதர் களிப்பு மதித்தீர்ஏ.
அஞ்சன வேல்விழியார் உறுகற்பும் அழித்தீர்ஏ.**

உரை:

நீங்கள் உலகில் வாழ்ந்த காலத்தில் ஐந்து பெருங்குற்றச் (பஞ்சமாபாதகம்) செயல்களையும் சிரமப்படாமல் மேற்கொண்டீர்கள்; நல்லவர்களின் மனங்கள் நோகுமாறு செய்யும் நஞ்சைப் போன்ற கொடுஞ் சொற்களை உயரிய தவசிகளை நோக்கி உரைத்தீர்கள்; பொருள் பறிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு, வெளிப் பார்வைக்கு அன்பு உடையவர்கள் போல நடிக்கும் கபட உள்ளமுடைய விலை மகளிரோடு கூடி இன்புறுவதைப் பெரிதாகக் கருதினீர்கள்; மை தடவிய வேல்போலும் கூரியவிழிகளையுடைய குடும்பப் பெண்டிரின் நிறையைக் கெடுத்து, அவர்களின் வாழ்வைப் பாழாக்கினீர்கள்.

விளக்கம்:

பஞ்சபாதகம் - கொலை, பொய், களவு, கள் அருந்துதல், குரு நிந்தை என்ற ஐந்து வகைக் கொடுஞ் செயல்கள். **நஞ்சு அன்ன** - நஞ்சு போன்ற; **வெம்சொல்** - கொடுஞ்சொல்; ''ஞயம்பட உரை''- என்பார் அவ்வையார். ''மென்மதுர வாக்கால் விரும்பும் சகம்'' - என்கிறது *நீதிவெண்பா*. **வஞ்சக நெஞ்சக மாதர்** - இது வேசியரைக் குறிக்கும். **அஞ்சனம்** - கண்ணுக்கு இடும் மை; **வேல் வழியார்** - கூரிய விழிகளையுடைய குலமகளிர்; 'வரிக்கோல வேல் விழியார்' என்று பட்டினத்து அடிகள் கூறுவார்; **கற்பு** - பெண்மைக் குணமாகிய நிறை. (190)

Koviloor Digital Library

563. ஓரவழக்கினை மன்றிலிருந்து முரைத்தீரே
யாரெதி ரென்றுமையே மிகமேன்மை யறைந்தீரே
பாரெனவே பொறையாரையு நொய்மை பகர்ந்தீரே
நீரெனவே யினியாரையும் வெல்ல நினைந்தீரே.

ஓரவழக்கினை மன்றில் இருந்தும் உரைத்தீர்ஏ.
யார் எதிர் என்று உம்மையே மிக மேன்மை அறைந்தீர்ஏ.
பார்எனவே பொறையாரையும் நொய்மை பகர்ந்தீர்ஏ.
நீர்எனவே இனியாரையும் வெல்ல நினைந்தீர் ஏ.

உரை:

நீதிமன்றத்தில் அமர்ந்து நடுவுநிலை தவறி ஒரு பக்கத்தின் சார்பாக வழக்குத் தீர்ப்புகளை மொழிந்தீர்கள்; மற்றியார் எமக்குநிகர் என்று தற்பெருமை புகன்றீர்கள்; பொறுமையிற் பூமியையொத்த சான்றோரை இழிந்த மனிதராக அவமதித்துப் பேசினீர்கள்; தண்ணீர் போலப் பிறருக்கு இனியவை செய்யும் நல்லவர்களையும் வென்றொடுக்க எண்ணினீர்கள்.

விளக்கம்:

ஓரவழக்கு - ஒருதலைச் சார்பான வழக்கு. எந்த வழக்கிலும் ஒரு பக்கச் சார்பாக அல்லாமல் நடுவு நிலையுடன் தீர்ப்புச் சொல்ல வேண்டும். ''ஓரஞ் சொல்லேல்'' என்பது அவ்வையாரின் உரை. யார் எதிர் - யார் நிகர்; மேன்மை அறைந்தீர் - தற்பெருமை பேசுதல்; பாரெனவே - பூமியையொத்த; பொறையார் - பொறுமையாளர்; நொய்மை - அற்பம்; நொய்மை பகர்தல் - அற்பமான சொற்களைக் கூறுதல்; நீர் என - தண்ணீரைப் போன்று; வெல்ல - ஒடுக்க. (191)

564. உற்ற விடுக்கணொழித்தவர் தம்மையு மோரீரே
மற்றவர் காணியு மெம்மது வென்ன மதித்தீரே
சிற்றினமேயின மென்று தெளிந்து செறிந்தீரே
மற்றினமொன்றிடினன்பு மறுத்து மருண்டீரே.

உற்ற இடுக்கண் ஒழித்தவர் தம்மையும் ஓரீர்ஏ.
மற்றவர் காணியும் எம்மது என்ன மதித்தீர்ஏ.
சிற்றினமே இனம் என்று தெளிந்து செறிந்தீர்ஏ.
மற்றுஇனம் ஒன்றிடில் அன்பு மறுத்து மருண்டீர் ஏ.

உரை:

நீங்கள் நோய், வறுமை முதலான துன்பங்களில் சிக்கித் தவித்த போது, அத்துன்பங்கள் தீர உங்களுக்கு உதவியவர்களை, நன்றியறிதலோடு எண்ண

Koviloor Digital Library

மறந்தீர்கள்; பிறருக்குச் சொந்தமான நிலத்தை, உங்களுடைய உடைமையாக்கிக் கொள்ளக் கருதினீர்கள்; அற்பர்கள் என்று நன்றாக அறிந்திருந்தும் அவர்களே வேண்டியவர்களெனத் தழுவி உறவாடினீர்கள். பெரியோர்களிடஞ் சேருந்தருணத்தில் அவர் சேர்க்கையை மறுத்து மருண்டீர்கள்.

விளக்கம்:

உற்ற இடுக்கண் - நேர்ந்த துன்பம்; **ஓர்தல்** - நினைத்தல்; **மற்றவர்காணி** - பிறர் உடைமையான நிலம்; **சிற்றினம்** - கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் தாழ்ந்தோர், அற்பர்; காகம் பிணத்தை விரும்புவது போல அற்பர் அற்பரையே விரும்புவர்.

''மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்.'' (*மூதுரை* 24)

என்பது அவ்வையார் வாக்கு.

மருண்டீர் - அறிவு மயங்கினீர்கள். (192)

565. ஆதுலருற்றிடினேச மவர்க்கு மறுத்தீரே
வாதவினோதிகள் வந்துறினாசையை வைத்தீரே
யேதிலர் குற்றமெடுத்திளை யாமலிசைத்தீரே
சூதுபொருந் தொழினன்றெென வன்று துணிந்தீரே.

ஆதுலர் உற்றிடில் நேசம் அவர்க்கு மறுத்தீர்ஏ.
வாதவிநோதிகள் வந்து உறின் ஆசையை வைத்தீர்ஏ.
ஏதிலர் குற்றம் எடுத்து இளையாமல் இசைத்தீர்ஏ.
சூதுபொரும் தொழில் நன்றுஎன அன்று துணிந்தீர் ஏ.

உரை:

நீங்கள் உலகில் வாழ்ந்த காலத்தில் வறியவர்கள் உங்களின் உதவியை நாடி வந்த போது, அவர்களிடம் அன்பு காட்டி உதவ மறுத்தீர்கள்; வேடிக்கையாகத் தருக்கம் செய்து வீண்பொழுது போக்க வருகின்ற வீணர் உறவில் ஆசை கொண்டீர்கள்; உங்களுடைய அயலாரின் குறைகளைச் சிறிதும் சளைக்காமல் பிறரிடம் உரைத்தீர்கள்; வீண் பொழுது போக்கு பொருள் இழப்பு, கண்ணியக்குறைவு, சண்டை சச்சரவுகளுக்குக் காரணமான சூதாடுதலை நல்லது என மேற்கொண்டீர்கள்.

விளக்கம்:

ஆதுலர் - வறியவர்; ''இல்லாரை எல்லாரும் எள்ளுவர்'' என்று *தமிழ்மறை* கூறுகின்றது. **வாதவிநோதிகள்** - வீண் பேச்சுப் பேசிப் பொழுதைக் கழிப்பவர்கள்; **ஏதிலர்** - அயலார்; **சூது** - சூதாட்டம்; 'சூதும்வாதும் வேதனை செய்யும்' என்பது அவ்வையாரின் அறிவுரை. பாண்டவர்களும்

Koviloor Digital Library

துரியோதனாதியரும் தங்கள் உற்றார் உறவினர் நண்பர்களோடு போரிட்டு அழிவதற்குக் காரணமாக அமைந்தது சகுனியோடு தருமன் ஆடிய சூதாட்டம். இதனைச் சூது போர் என்றே *பாரதம்* கூறுகிறது. 'ஒன்று எய்தி நூறு இழக்கும் சூதர்' என்கிறது *தமிழ்மறை*. (193)

566. ஊறறிவொக்கு மெனாதுயிர் மெய்யை யொறுத்தீரே
வேறல வெம்முடலோடு மெனாது மிசைந்தீரே
பேறுண வல்லது மில்லையெனக் கை பிழைத்தீரே
சீறுதலே பொருளென்றுயிரன்பு செகுத்தீரே.

ஊறு அறிவு ஒக்கும் எனாது உயிர் மெய்யை ஒறுத்தீர்ஏ.
வேறு அல எம் உடலோடும் எனாது மிசைந்தீர்ஏ.
பேறு உணவு அல்லதும் இல்லை எனக் கை பிழைத்தீர்ஏ.
சீறுதலே பொருள் என்று உயிர் அன்பு செகுத்தீர்ஏ.

உரை:

நம் உடலில் சிறு காயம் ஏற்பட்டால் நாம் நோவால் வருந்துவது போலப் பிற உயிரிகளுக்குக் காயம் உண்டாகும்படி ஊறு செய்தால் அவையும் நோவால் துடிக்கும் என்பதை ஆராய்ந்து பாராமல் பிற உயிரிகளைக் கொன்றீர்கள்; நம்முடைய தசையும் மற்ற உயிரிகளின் தசையும் பொதுவாக ஊன் என்றே சொல்லப்படும். ஒரு மனிதனைக் கொல்லும்போது அவன் எப்படித் துடிதுடித்து இறப்பானோ அவ்வாறே ஒரு பறவையையோ விலங்கையோ ஒருவன் கொல்லும்போது அவையும் துடிதுடித்து இறக்கும். உயிரில் மனித உயிர் வேறு; பிறவற்றின் உயிர் வேறு என்ற பாகுபாடு கிடையாது; இந்த உண்மையை மறந்து பிற உயிரின் தசையைப் புசித்தீர்கள்; அத்தசையைத் தின்பதையே ஒரு பேறு அதைவிடப் பேறு வேறில்லை எனக் கருதிப் பிற உயிர்களிடம் அன்பு செலுத்துதலை அழித்தீர்கள்.

விளக்கம்:

உயிரையுடையது உயிரி; பிராணனை உடையது பிராணி. **ஊறு** – துன்பம்; **வேறு அல** – வேறு அன்று; ஒன்றுதான்; **பேறு** – பயன்; **கைபிழைத்தீர்** – கை விட்டீர்கள்;

சீறுதல் – கோபித்தல்; பொதுவாகச் சைவன் அல்லது வைணவன் என்று சொன்னால் அதற்குப் புலால் தின்னாதவன் என்பதுதான் பொருள். 'கொல்லாவிரதம் ஒன்று கொண்டவரே நல்லோர் மற்றல்லாதோர் யாரோ? அறியேன் பராபரமே.' என்பது தாயுமான அடிகளின் அருளுரை. புலால் தின்பவனை மனிதன் என்று சொல்ல அடிகளுக்கு மனம் வரவில்லை! (194)

Koviloor Digital Library

567. ஈயுமவர்க்கிடையூறுகடேற விசைத்தீரே
காயுமவர்க் கனுபந்தருமாயுள் களித்தீரே
நோயு முறப்பிறர் தீமையுடற்கு நுவன்றீரே
தூயரியற்றியிடா வவலம்பல சொன்னீரே.

ஈயும் அவர்க்கு இடையூறுகள் தேற இசைத்தீர்ஏ.
காயும் அவர்க்கு அனுபந்தருமாய் உள் களித்தீர்ஏ.
நோயும் உறப்பிறர் தீமை உடற்கு நுவன்றீர்ஏ.
தூயர் இயற்றியிடா அவலம் பல சொன்னீர் ஏ.

உரை:

ஒருவர் இன்னொருவருக்கு ஒரு பொருளை விரும்பிக் கொடுக்கும் போது, கொடுப்பவர் மனத்தைக் குழப்பி, அவர் கொடாதபடி பல தடைகளைச் செய்தீர்கள்; ஒருவர் மற்றொருவரை ஏதோ ஒரு காரணத்தால் கோபிக்கும் போது, ஆறுதல் மொழிகளைக் கூறி அவருடைய சினத்தைத் தணிக்காமல், அவரோடு ஒத்துப் பேசிக் கொண்டாடினீர்கள். பிறருடைய உள்ளம் வருந்தவும், அவர்கள் நோய்வாய்ப்படவும் பல தீங்கான மொழிகளைப் பேசினீர்கள்; நல்ல உள்ளம் படைத்த மேலோர்கள் செய்யாதனவற்றைச் செய்ததாக அவதூறு மொழிந்தீர்கள்.

விளக்கம்:

ஈயும் அவர்க்கு இடையூறு - ஈகையாளரின் மனத்தில் கலக்கம் உண்டாக்கி, அவர் ஈவதைத் தடுத்தல். 'ஈவது விலக்கேல்' என்பது அவ்வையாரின் அறிவுரை.

காய்தல் - சினத்தல்; காயும் அவர்க்கு அனுபந்தர் - கோபிப்பவருக்குத் துணையாக இருப்பவர்.

'உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கும் சினம் காத்துக்
கொள்ளும் குணமே குணம் என்க - வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு''

என்பது நன்னெறி.

நோய் உற நுவலுதல் - பிறர் உடலும் உள்ளமும் வருந்தப் பேசுதல்.

''இன்சொலால் அன்றி இருநீர் வியன் உலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே''

என்பது நன்னெறி. (195)

568. ஒழுக்குடையா ரதிமேதையர் தம்மையு மோராதே
புழுக்கு மழுக்கு மனத்துற வெம்மை புகன்றீரே
சழக்கெழுவாய் வினைவாதனையுற்றமை தன்னாலே
யழற் குழியாங்களழுத்த வழுங்கியறீந்தீரே.

Koviloor Digital Library

ஒழுக்கு உடையார் அதிமேதையர் தம்மையும் ஓராதுஏ.
புழுக்கம் அழுக்குமனத்து உள வெம்மை புகன்றீர்ஏ.
சழக்கு எழுவாய வினை வாதனை உற்றமை தன்னால்ஏ.
அழல் குழியாங்கள் அழுத்த அழுங்கி அறிந்தீர் ஏ.

உரை:

நல்லொழுக்கம் உள்ளவர்களையும், நல்ல அறிவாளிகளையும் அவர்களுடைய பெருமையை ஆராயாமல் கெட்ட எண்ணத்தால் மனம் புழுங்கிக் கொடுஞ் சொற்களால் பழித்தீர்கள்; உங்களுடைய குற்றம் பொருந்திய மனத்தின் விளைவால் நேர்ந்த பாவங் காரணமாக, எரியும் அளறுகளாகிய இந்த நிரயங்களில் நாங்கள் உங்களை அமிழ்த்திய போது உணர்ச்சி பெற்றீர்கள்.

விளக்கம்:

ஒழுக்கு - ஒழுக்கம்; மேதையர் - பேரறிவினர்; ஓராது - ஆராயாமல்; அழுக்குமனம் - குற்றம் பொருந்திய மனம்; வெம்மை புகலுதல் - கொடிய சொற்களால் பழித்தல்; சழக்கு - குற்றம்; ''சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்'' என்பது மணிவாசகர் வாய்மொழி. (*திருவாசகம்* - 30:6). அழல்குழி - எரியும் அளறுகளாகிய நரகங்களைக் குறிக்கும். அழுங்குதல் - வாய்விட்டு அழுமளவுக்கு வருந்துதல். ''அழுங்குகின்றேன் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே'' என்பது மணிமொழியாரின் அருளுரை. (*திருவாசகம்* - 24:40) (196)

பாவியர் துயருறுவர்

569. என்றழல் வாயழிவாரொடு தூதரிசைப் பார்க
ளன்றறி யோமிவை யென்றவர்தாமு மயர்ந்தாழ்வர்
பொன்றுவ ரோவினை போமளவுந் துயர்பூரித்தே
நின்றுறுவார்முனை வல்வினையாவு நினைந்தே தாம்.

என்று அழல்வாய் அழிவாரொடு தூதர் இசைப்பார்கள்
அன்று அறியோம் இவை என்று அவர் தாமும் அயர்ந்து ஆழ்வர்
பொன்றுவரோ வினை போம் அளவும் துயர்பூரித்தே
நின்று உறுவார்முன்னை வல்வினையாவும் நினைந்து ஏ; தாம்.

உரை:

இவ்வாறு பலவற்றையும் எரிகின்ற அளறில் அழிய இருப்பவர்களிடம் எமனுடைய பணியாளர்கள் கூறுவர். அவ்வுரையைக் கேட்கிற பாவியர், தாங்கள் பூமியில் வாழ்ந்த போது இந்த நிரயத் துயரங்களைப் பற்றி அறிந்ததில்லையே என்று சோர்ந்து விழுவார்கள். எனினும், அவர்கள் இறப்பதெங்கே? அவர்கள் செய்த

Koviloor Digital Library

பாவங்கள் தீரும் வரை, தாங்கள் செய்த தீய செயல்களை எண்ணியபடி அளறுகளிலே கிடந்து துயருற்றாக வேண்டுமே.

விளக்கம்:

அழல்வாய் - எரிகின்ற நரகத்தில்; **இசைப்பார்கள்** - சொல்வர்; **அன்று** - மண்ணுலகில் வாழ்ந்தபோது; **அறியோம்** - அறிந்ததில்லை; **பொன்றுதல்** - சாதல்; **பூரித்தல்** - நிரம்புதல்; **வல்வினை** - முன்செய்த தீவினை;

''மடங்களன் வல்வினைக் காட்டைநின் மன்னருள் தீக்கொளுவும்'' என்பது மணிவாசகர் திருமொழி. (திருவாசகம் - 6:73) (197)

பெரும்பாவியரின் துயருக்குரிய கால அளவு

570. உற்றிடுவரெழு நான்கு கோடியினு மொருவாதே
பற்றியதி பாதத்தைப் பரித்தார்கள் பாரினையு
மற்றைய விண்டலத்தினையும் வாரிகொளு நாள்வரையு
முற்றுமதி பாதகத்துக் கிணைய தனை முடித்தாரும்.

உற்றிடுவர் எழு நான்கு கோடியிலும் ஒருவாதே
பற்றி அதி பாதகத்தைப் பரித்தார்கள் பாரினையும்
மற்றைய விண் தலத்தினையும் வாரி கொள்ளும் வரையும்
உற்று அதிபாதகத்துக்கு இணை அதனை முடித்தாரும்.

உரை:

அதிபாதகமெனப் பெறும் பெரும்பாவங்களைச் செய்தவர்களும், அவற்றுக்கு ஒப்பான வேறு குற்றங்களைப் புரிந்தவர்களும், இருபத்தெட்டுக் கோடி அளறுகளையும் பொருந்தி, மண்ணுலகையும் விண்ணுலகையும் கடல்சூழ்ந்து கொள்ளும் பெரும் பிரளய காலம் வரை அவற்றை விட்டு அகலாது கிடந்து வருந்துவர்.

விளக்கம்:

''திருப்பிரமபுரம் என்னும் இப்பதியில் மேவிய பெருமானாகிய சிவனை, ஒருமைப்பட்ட மனத்துடன் உணர்ந்த திருஞான சம்பந்தன் பாடிய சிவநெறி காட்டுகின்ற (தோடுடைய செவியன் என்று தொடங்குகின்ற) இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள் தங்களுடைய பழவினைகளைப் போக்கிக் கொள்ளுதல் எளிய செயலாகும்'' என்பது ஆளுடைய பிள்ளையாரின் அறிவுரை.

''பெருநெறியபிர மாபுரம் மேவிய பெம்மான் இவன்தன்னை
ஒருநெறியமனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே.''

Koviloor Digital Library

என்பது திருநெறித்தமிழ். இது திருநெறிய தமிழ் ஓதினார்க்கு மட்டுமே லயிக்கும். நரகத்திருப்பார்க்கு அப்படி ஓத வாய்க்குமென்பதற்கு என்ன உத்தரவாதம். அதையுஞ் சிந்திக்க வேண்டும். (198)

முன்பாடலுடன் தொடர்புடையது

571. இரவி மதியுள்ளளவு மிவற்ற ழுங்கி யிடுவார்கள்
பிரமவதை முதலாய பிழைபுரிந்த பேதையர்கள்
விரவிடுவர் பாதகத்தை விளைத்தார்கள் பதினான்குட்
பிரமனொரு பகற்பாதி மற்றையர்க்கும் பேசிடுவாம்.

இரவிமதி உள்ளளவும் இவற்று அழுங்கி யிடுவார்கள்
பிரமவதை முதலாய பிழைபுரிந்த பேதையர்கள்
விரவிடுவர் பாதகத்தை விளைத்தார்கள் பதினான்குள்
பிரமனொரு பகல்பாதி மற்றையர்க்கும் பேசிடுவாம்.

உரை:

இப்பாடலுக்குச் சாலிவாடீசுர ஓதுவாமூர்த்திகள் கூறியுள்ள உரை வருமாறு:

''பஞ்சமாபாதகத்தைச் செய்தவர்கள் இருபத்தெட்டுக் கோடி நரகத்திலே சந்திராதித் தருள்ளவரையுங் கிடந்து அழுங்குவார்கள். பாதகத்தைச் செய்தவர்கள் பதினாலுகோடி நரகத்திலே பிரமாவினது நித்தியப் பிரளயத்திற் பாதியாகிய ஐந்நூறு சதுர் யுகமளவுங் கிடந்தழுங்குவார்கள்.''

விளக்கம்:

இரவி - ஞாயிறு; மதி - நிலவு; அழுங்குதல் - வருந்துதல்; பிரமன் - பிராமணன்; பிரமவதை - பிராமணக் கொலை செய்வது பெரும்பாவம். பேதையர் - அறிவிலிகள். (199)

முன்பாடலுடன் தொடர்பு உடையது

572. பாதமுறப் பகலதனிற் பதினான்கிற் பாதிதனில்
வாதையுறுவார்களுப பாதகத்தை மருவினர்கள்
பாதத்திற் பாதியுற மூன்றரையிற் பாவியர்கள்
கேதமறும் பொழுதவல வினையனைத்துங் கெட்டிடுமே.

பாதம் உறப் பகல் அதனில் பதினான்கில் பாதிதனில்
வாதை உறுவார்கள் உப பாதகத்தை மருவினர்கள்
பாதத்தில் பாதிஉற மூன்றரையில் பாவியர்கள்
கேதம் அறும் பொழுது அவல வினை அனைத்துங் கெட்டிடும் ஏ.

Koviloor Digital Library

உரை:

இப்பாடலுக்கும் பிரமபுராண அடிப்படையில் ஓதுவா மூர்த்திகள் கூறியுள்ள உரை வருமாறு:

''உப பாதகத்தைச் செய்தவர்கள் ஏழு கோடி நரகத்திலே இரு நூற்றைம்பது சதுர்யுகமளவுங்கிடந்து அழுங்குவார்கள். அதற்குத் தண்ணிதான பாவத்தைச் செய்தவர்கள், மூன்றரைக் கோடி நரகத்திலே நூற்று இருபத்தைந்து சதுர்யுகமளவுங் கிடந்து அழுங்குவார்கள். இங்ஙனம் விதித்த காலங்களளவும் அதிபாதக முதலிய பாவத்தைச் செய்தவர்கள் நரகத்திலே கிடந்து துக்கங்களையனுபவித்துத் தொலையும் பொழுது, அவர்களைத் தொடர்ந்து நின்ற கொடிதான பாவமெல்லாம் விட்டு நீங்கும்.

விளக்கம்:

வாதை - வேதனை; மருவினர்கள் - பொருந்தியவர்கள்; கேதம் - துக்கம்; அவலம் - துன்பம்; பாதம் - நாலிலொன்று. ஆயிரத்தில் 1/4 அதாவது 250 - சதுர்யுகம்.

பாதத்திற்பாதி - அரைக்கால் ஆயிரத்தில் 1/8 அதாவது 125 - சதுர்யுகம். தண்ணிதானது - குறைவானது. வேகந்தணிவானது. (200)

பாவியர் மீண்டும் பிறப்பார்கள்

573. பாவ பேதம் பயிற்றிய பாவிக
ளேவமாய நரகிட ரெய்தியுந்
தீவினைப்பல சேடமுஞ் சேரவே
சேர்வர் முன்பயின் மண்மிசைத் திண்ணமே.

பாவபேதம் பயிற்றிய பாவிகள்
ஏவம் ஆய நரகுஇடர் எய்தியும்
தீவினைப்பல சேடமும் சேரவே
சேர்வர் முன்பயில் மண்மிசைத் திண்ணம் ஏ.

உரை:

பலவகைக் குற்றங்களைச் செய்த பாவிகள், அவற்றின் விளைவாக நரகத் துன்பங்களை நுகர்ந்தும், எஞ்சிய பாவங் காரணமாக மீண்டும் முன்பு பழகிய நிலவுலகில் பிறப்பது உறுதி.

விளக்கம்:

பயிற்றிய - செய்த; ஏவம் - குற்றம்; சேடம் - மிச்சம்; பயில் - பழகிய. (201)

Koviloor Digital Library

574. அடைவர்தாபர பேத மனைத்தையும்
படர்வ ரங்குள துன்ப பலத்தினும்
விடுவர் தாபர யோனியை விட்டபின்
றொடுவர் கீடவுருவுந் துரிசரே.

அடைவர் தாபர பேதம் அனைத்தையும்
படர்வர் அங்கு உள்ள துன்ப பலத்திலும்
விடுவர் தாபர யோனியை விட்டபின்
தொடுவர் கீட உருவும் துரிசர் ஏ.

உரை:

இவ்வாறு பூமிக்கு வந்த பாவிகள், அவர்கள் புரிந்த வினைக்கு ஈடாக இடம் பெயரா உயிராகிய புல், பூண்டு, செடி, கொடி, மரங்களாகப் பிறப்பார்கள். பின்னர், அப்பிறப்பை விட்டு நீங்கிப் புழுக்களாகப் பிறந்து துன்புறுவர்.

விளக்கம்:

தாபரம் - மரப்பொது; கீடம் - புழு; துரிசர் - பாவிகள். (202)

முன் இரண்டு பாடல்களின் தொடர்ச்சி

575. கிட்டியே நின்ற கீட வுருவமும்
விட்டு மற்றை விகங்க வுருவினைத்
தொட்டு நின்ற துயர்பல துய்த்தபி
னெட்டுவார் விலங் கின்னுரு யாவையும்.

கிட்டியே நின்ற கீட உருவமும்
விட்டு மற்றை விகங்கம் உருவினைத்
தொட்டு நின்ற துயர்பல துய்த்தபின்
எட்டுவார் விலங்கின் உரு யாவையும்.

உரை:

இவ்வாறு புழுவாகப் பிறந்த உடம்பை விட்டு நீங்கிப் பறவைகளாகப் பிறந்து பல துன்பங்களை நுகர்ந்தபின், பலவகை விலங்குகளின் யாக்கைகளை அடைவர்.

விளக்கம்:

விகங்கம் - பறவை; உரு - வடிவம். (203)

Koviloor Digital Library

576. விட்டுநின்ற விலங்கினுருவினைத்
தொட்டுளார் பசுவின்னுருத் துன்பமும்
பட்டுளார் துயரம் பல பட்டபின்
விட்டுளார் பெற்றமாகிய மேனியும்.

விட்டு நின்ற விலங்கின் உருவினைத்
தொட்டு உள்ளார் பசுவின் உருத்துன்பமும்
பட்டு உள்ளார் துயரம் பல பட்டபின்
விட்டு உள்ளார் பெற்றம் ஆகிய மேனியும்.

உரை:

பின்னர், அவ்விலங்குகளின் உடல்களை விட்டுநீங்கிப் பசுக்களாகப் பிறந்து பல துன்பங்களில் உழன்ற பிறகு எருதுகளாகப் பிறப்பார்கள்.

விளக்கம்:

பெற்றம் - எருது. (204)

முன் நான்கு பாடல்களின் தொடர்ச்சி

577. இனைய யோனி விதம்பல வெய்தியே
துனியனைத்தையுந் துய்த்துத் துரிசறு
வினையினீங்கி முன்னால் வினைமேவவே
மனிதராகிப் பிறப்பர்கள் வாய்ப்பினால்.

இனைய யோனி விதம்பல எய்தியே
துனி அனைத்தையும் துய்த்துத் துரிசு அறு
வினையில் நீங்கிமுன்னால் வினை மேவவே
மனிதர் ஆகிப் பிறப்பர்கள் வாய்ப்பினால்.

உரை:

தாவரம்முதல் எருதுவரை பல பிறவிகளை அடைந்து, பலவகைத் துன்பங்களை அனுபவித்து, பாவங்களால் வாய்ந்த தீய வினைப்போகங்களில் இருந்து விடுபட்டு, மனிதப் பிறவி எய்துவதற்கு ஏற்ற பக்குவ நிலை வந்து பொருந்த, அப்பேறு காரணமாக மனிதப் பிறவியைப் பெறுவர்.

விளக்கம்:

இனைய - இவ்வாறான; யோனி - பிறவி; துனி - துன்பம்; துரிசு - குற்றம். (205)

Koviloor Digital Library

மனிதப் பிறவியின் உயர்வு

578. அரிய மானிட யாக்கை யடைந்தபின்
பரமலோக பலத்தினைப் பற்றவு
மொருவியே யுலகஞ் சிவத் தொன்றவு
மிருளை நீக்கவு மெண்ணில ரென்கொலோ.

அரிய மானிட யாக்கை அடைந்தபின்
பரமலோக பலத்தினைப் பற்றவும்
ஒருவியே உலகம் சிவத்து ஒன்றவும்
இருளைநீக்கவும் எண்ணிலர் என்கொலோ.

உரை:

அடைவதற்கு அரிய மனிதப் பிறவியை அடைந்தும், மேலான சிவ உலக இன்பங்களைப் பெறவும், அதற்குத் தடையாக உள்ள அறியாமையை அகற்றி, உலகினர் சிவபெருமானுடன் ஒன்றவும் எண்ணுகின்றார்கள் இல்லையே! இதுவென்!

விளக்கம்:

''பெறுதற்கு அரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கு அரிய பிரான் அடி பேணார்''

என்பது திருமூலரின் மொழி. (206)

மானிடராகப் பிறத்தல் அரிது

579. அரிது மானிட யோனி யவற்றுளு
மரிது பூசுர ராகையு மாகிய
மரிது நான்மறையாய்கையு மாசற
வரிது வானொடு முத்தியடைகையும்.

அரிது மானிட யோனி அவற்றுள்ளும்
அரிது பூசுரர் ஆகையும் ஆகியும்
அரிது நான்மறை ஆய்கையும் மாசு அற
அரிது வானொடுமுத்தி அடைகையும்.

உரை:

ஓரறிவுள்ள தாவரமுதல் ஐந்து அறிவுள்ள எருதுவரையுள்ள பிறவிகளை விட ஆறு அறிவுள்ள மாந்தராகப் பிறப்பது அருமை; மாந்தராகப் பிறப்பதிலும்

Koviloor Digital Library

பூவுலகத் தேவராகிய பிராமணச் சாதியினராகப் பிறப்பது அருமை; பிராமணனாகப் பிறந்தாலும் ரிக், யசுர், சாம, அதர்வணம் என்கிற நான்கு வேதங்களையும் ஆராய்ந்து உணர்ந்தவனாக இருத்தல் அருமை; அங்ஙனம் வேதங்களைப் பிழையற ஆராய்ந்து அறிந்தவனாயினும், சுவர்க்க உலக இன்பமும், வீடு பேறும் பெறுவது அருமை.

விளக்கம்:

அரிது - அருமை; யோனி - பிறவி; வான் - சுவர்க்கம்; முத்தி - வீடு பேறு; பூசுரர் - பூவுலகில் வாழும் தேவர். (207)

முன்பாடலோடு தொடர்பு உடையது

580. பெற்று மந்தணராய பிறப்பினைக்
கற்று நான்மறை வேள்விக் கருமமு
முற்றிவானவராக முயல்கிலார்
குற்றமே பெரிதாகிய குற்றமே.

பெற்றும் அந்தணர் ஆய பிறப்பினைக்
கற்றுநான்மறை வேள்விக் கருமமும்
முற்றி வானவர் ஆக முயல்கிலார்
குற்றமே பெரிதாகிய குற்றம் ஏ.

உரை:

கிடைத்தற்கு அரிய பிராமணச் சாதியிலே பிறந்திருந்தும், ரிக் முதலான நான்கு வேதங்களை யாகக் கிரியைகள் செய்து முழுதுணர் தேவர்களாகும் நிலையினை மேற்கொள்ள முயலாத குற்றமே மிகப் பெரிய குற்றமாகும்.

விளக்கம்:

திருவாசகத்திற்போல இங்கும் தேவர்களென்பது சிவபதநிலைகளில் உள்ளாரை. (208)

பாரத நாட்டிற் பிறப்பது சிறப்பு

581. இந்தப் பாரத மெய்தற் கெளியதே
வந்து பாரதந் தன்னினு மானிட
ரந்தவான மடையுங் கருமமுஞ்
சிந்தியார் சிவன் சேவடி சேரவும்.

Koviloor Digital Library

இந்தப் பாரதம் எய்தற்கு எளியதே?
வந்து பாரதம் தன்னிலும் மானிடர்
அந்த வானம் அடையும் கருமமும்
சிந்தியார் சிவன் சேவடி சேரவும்.

உரை:

பாரத நாட்டில் மனிதராக வந்து பிறப்பது எளிய காரியமா, அன்று; ஒருவாறு பிறக்கும் பேறு பெற்றிருந்தும், மேல் உலகம் அடைவதற்கு ஏற்ற நற்பணிகளைச் செய்ய வேண்டும்; சிவபிரானின் சிவந்த திருவடித் தாமரைகளிலே பொருந்த வேண்டும் என்று எண்ணி, முயற்சி மேற்கொள்ளாமல் இருக்கின்றார்கள்.

விளக்கம்:

பாரதம் - பாரதநாடு; வானம் - மேல் உலகம், சுவர்க்கம்; சேவடி - சிவந்த திருவடி; கருமம் - பணி. (209)

582. வேதநீதி விளங்குமிவ் வெல்லையு
ளோதியுண்மை யுணர்ந்துயி ரொன்றிய
வாதிபாத மடையு மருந்தவஞ்
சாதியார் தமக்கே வஞ்சர் தாமரோ.

வேதநீதி விளங்கும்இவ் எல்லையுள்
ஓதி உண்மை உணர்ந்து உயிர்ஒன்றிய
ஆதிபாதம் அடையும் அரும்தவம்
சாதியார் தமக்கே வஞ்சர்தாம் அரோ.

உரை:

வேதநீதி *சிவாகம நூல்களும், திருமுறை நூல்கள்* வாயிலாகவும் விளங்கித் தோன்றும் பாரத நிலத்தில் பிறந்தும், அத்திருவருள் நூல்களை ஓதி, மெய்யறிவு பெற்று, மன ஒருமை உற்று, சிவன் திருவடி பெறுதற்குரிய வழிபாடுகளை மேற்கொள்ளாதவர், தம் ஈடேற்றத்துக்குத் தாமே கேடு செய்தவர் ஆவார்.

விளக்கம்:

வேதம் - வேத சிவாகமங்கள்; ஆதி - சிவன்; அரோ - அசை.

வேதநீதி திருமுறை யாட்சிபெற்ற ஒன்று. அதை நாம் எவ்வகையிலும் இகழ்தலாகாது. (210)

Koviloor Digital Library

நாள் என்பது உயிர் ஈரும்வாள்

583. ஈரும் வாளுயிர்க் கென்றறியாரெழு
வாரமாகி வருந்தின மானிடர்
தாரமாதியுந்தாமு நிலையென்றே
கோரமாய குழிவிழுவார்களே.

ஈரும்வாள் உயிர்க்கு என்று அறியார்எழு
வாரம்ஆகி வரும்தினம் மானிடர்
தாரமாதியும் தாமும் நிலை என்றே
கோரம் ஆய குழி விழுவார்கள் ஏ.

உரை:

ஞாயிறு முதல் சனி வரையுள்ள ஏழு நாள்களையும் உயிரை அறுக்கும் கூரிய கத்தி என்று உணர்ந்து அறப்பணிகளைச் செய்யாதவர்கள், தாங்களும், தங்கள் மனைவி முதலானோரும் நிலையான வாழ்வை உடையவர்கள் என்று கருதிப்பாவச் செயல்களைப் புரிந்து நரகப் பள்ளத்தில் விழுவர்.

விளக்கம்:

ஈரும்வாள் - அறுக்கும் கூரிய கத்தி.

''கூர்ந்து அறியும் அறிஞர்களுக்கு, உயிரானது நாள் என்று அளவிடுவதாகிய ஒரு கால அளவு போல் தன்னைக் காட்டி வாழ்நாளைச் சம அளவான சிறு சிறு பகுதியாக அறுத்துச் செல்லும். வாளின் வாய்ப்பட்டிருப்பதாகத் தெரியும்.'' என்பது திருவள்ளுவர் வாய்மொழி.

'நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாள்அது உணர்வார்ப் பெறின்.' (*குறள்:* 334)

எழு - ஏழு; வாரம் - இங்கு ஞாயிறு முதல் சனி வரையுள்ள நாள்கள்; தாரம் - மனைவி; தாரம் ஆதி - மனைவி முதலானோர்; கோரம் - கொடுமை; ஆரவாரித்து எழுகின்ற உறவினரும், அன்புள்ள மனைவியும், பெற்ற மக்களும், ஊருக்குப் புறத்தேயுள்ள நீர்த்துறை வரைவந்து நீங்குவர். விறகிலே உடலைக் கிடத்தித் தீமூட்டிவிட்டு நீரில் மூழ்குவர்; வாழ்வு நிலை அற்றது'' என்பது திருமூலரின் அருளுரை.

''ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக்காலே ஒழிவர் ஒழிந்தபின்
வேர்த்தலைப் போக்கி விறகிட்டு எரிமூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதிஇல் லோரே.'' (*திருமந்திரம்* -157) (211)

Koviloor Digital Library

நிலைபேறுடையது முத்திநிலை

584. அழியுமாக்கை கொடே யழியாப் பதங்
கெழுவுவார் பெற்றதே நல்ல கேள்வியு
மழியு மாக்கை தனையழியா தென
விழுவரே நரகக் குழி வெய்யரே.

அழியும் ஆக்கை கொடே அழியாப் பதம்
கெழுவுவார் பெற்றதே நல்ல கேள்வியும்
அழியும் ஆக்கைதனை அழியாது என
விழுவரே நரகக் குழி வெய்யர் ஏ.

உரை:

நிலைபேறு இல்லாத உடம்போடு கூடி இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்குமபோதே, நிலைபேறான முத்தியைப் பொருந்துவோர் பெற்ற கல்வியே சிறந்த கல்வி; அழிகின்ற உடலை நெடுங்காலம் நிலைத்து இருக்குமென்று விரும்பிய பொல்லாதவர்களே நிரயப் பள்ளத்தில் விழுவர்.

விளக்கம்:

அழியும் யாக்கை - அழியும் உடம்பு; உடல் ஒருநாள் அழியும். 'நூற்றுக்கு இருந்தாலும் கூற்றுக்கு இரை' என்பது *பழமொழி*. **அழியாப்பதம்** - முத்திநிலை; **கெழுவுவார்** - பொருந்துவார்; **கேள்வி** - கல்வி; கற்றலின் பகுதி; பாடங்கேட்டல்; 'கற்றல் கேட்டல் உடையார் பெரியார்கழல் கையால் தொழுதேத்த''என்பது ஆளுடைய பிள்ளையாரின் அருளுரை.

''சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீரில் ஐம்புலன்களால்
முந்தையான காலம் நின்னை எய்திடாத மூர்க்கனேன்''

என்பது மணிவாசகர் மணிமொழி. *(திருவாசகம் - திருச்சதகம்)* (212)

சிவ வழிபாடு செய்கிறவரே வாழ்கின்றவர்

585. ஆக்கை தானிலையா தென்றறிந்து தம்
வாக்கினாலரன் மந்திர மோதியே
நோக்கினாலவன் மேனியை நோக்கியே
பார்க்குள் வாழ்பவர் நன்பயன் பற்றினார்.

ஆக்கை தான் நிலையாது என்று அறிந்துதம்
வாக்கினால் அரன்மந்திரம் ஓதியே
நோக்கினால் அவன் மேனியை நோக்கியே
பார்க்குள் வாழ்பவர் நல்பயன் பற்றினார்.

Koviloor Digital Library

உரை:

உடம்பு நிலைபேறு இல்லாதது என்பதை உணர்ந்து, தம்முடைய வாயால் சிவன் திருப்பெயராகிய திரு ஐந்தெழுத்தை ஓதிக் கண்களால் அவன், திருமேனிகளை உற்று நோக்கி, நாள்தோறும் முறையாக வழிபாடு செய்வதையே நோன்பாகக் கொண்டு வாழ்கின்றவர் நல்ல சிவ புண்ணியப் பேறு பெற்றவர் ஆவார்.

விளக்கம்:

ஆக்கை - யாக்கை உடம்பு; **அரன்** - பாவங்களை அறுப்பவன்; **அரன் மந்திரம்** - திரு ஐந்தெழுத்தாகிய சிவமந்திரம். **ஓதி** - சிவபிரானுடைய திருப்பெயராகிய திரு ஐந்தெழுத்தைக் ''காதலோடு ஓத வேண்டும்; உள்ளம் குழைந்து கண்ணீர் பெருக ஓத வேண்டும் என்பது ஆளுடைய பிள்ளையாரின் அருளுரை. 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்' என்பது திருநெறித் தமிழ்.

''இப்பிறப்பினில் இணைமலர் கொய்துநான் இயல்பொடு அஞ்செழுத்தோதி''

என்பது மணிவாசகரின் மணிமொழி. *(திருவாசகம் - அற்புதப்பத்து)* **நோக்கினால்** அவன் மேனியை நோக்கி, ''கண்காள் காண்மின்களோ - கடல் நஞ்சு உண்ட கண்டன் தன்னை'' என்பது அப்பரின் அருள்மொழி. **பார்க்குள் வாழ்பவர் நல்பயன் பற்றினார்** - **பார்** - பூமி; **பயன்** - பேறு. (213)

வினைக்கு ஏற்ற பயன்

586. இந்த நாட்டுள் வினைநன்கியற்றின
ரந்த நாட்டிடையே பயனார்வர்க
ளெந்த நாட்டிடையு மிருப்பாரவ
ரிந்த நாட்டுட் கருமமியற்றியே.

இந்த நாட்டுள் வினைநன்கு இயற்றினர்
அந்த நாட்டிடையே பயன் ஆர்வர்கள்
எந்த நாட்டிடையும் இருப்பார் அவர்
இந்த நாட்டுள் கருமம் இயற்றி ஏ.

உரை:

இந்த உலகிற் செய்ய வேண்டிய கடமைகளைச் செவ்வையாகச் செய்து முடித்தவர்கள் சுவர்க்க உலகை அடைந்து அங்குள்ள இன்பங்களை நுகர்வர்; இவ்வுலகில் சிவபூசை செய்தல் முதலான நற்பணிகளை நாள்தோறும் முறையாகச் செய்தவர்கள், எல்லாப் புண்ணிய உலகுகளையும் அடைந்து அங்குள்ள இன்பங்களை நுகர்வர்.

Koviloor Digital Library

விளக்கம்:

வினை - நற்பணி. (214)

நன்னெறியாளர் நற்கதி பெறுவர்

587. பதிகர் தாமன்ன பானத்தொடே செலிற்
புதிய வெல்லையை யின்பொடு புல்குவர்
விதியில் நின்றவர் விண்ணுல கெய்தியே
புதிய போக விதமும் புணர்வரே.

பதிகர்தாம் அன்னபானத்தொடே செல்லில்
புதிய எல்லையை இன்பொடு புல்குவர்
விதியில் நின்றவர் விண்உலகு எய்தியே
புதிய போக விதமும் புணர்வர் ஏ.

உரை:

தனிவழியில் நடந்து செல்லும் வழிப்பயணி, தேவையான உணவும் நீரும் கொண்டு சென்றால், பசியும் களைப்பும் இல்லாமல் மகிழ்வோடு தாம் அடைய வேண்டிய புதிய ஊரை அடைவார். இவ்வாறே, சிவாகமங்கள் கூறும் முறைப்படி முறையாக வாழ்ந்து நல்லறம் புரிந்தவர்கள், சுவர்க்க உலகை அடைந்து புதிய இன்பங்களை நுகருவர்.

விளக்கம்:

பதிகர் - வழிப்போக்கர்; விண்உலகு - சுவர்க்கம்; புல்குவர் - சேருவர். (215)

சிவாகம நெறியை விட்டவர் துயர் அடைவர்

588. வேதநீதியை விட்டவர் தாமிக
வேதமாய நரகினை யெய்துவ
ராதலா லென்றுஞ் செய்க வறத்தினைக்
காதலோடுநல் வானிற் களிக்கவே.

வேதநீதியை விட்டவர் தாம்மிக
ஏதம் ஆய நரகினை எய்துவர்
ஆதலால் என்றும் செய்க அறத்தினைக்
காதலோடு நல்வானில் களிக்க ஏ.

Koviloor Digital Library

உரை:

வேத சிவாகமங்கள் உணர்த்தும் அறவழியிலே வாழாதவர்கள், கவலை தரும் நரகை அடைந்து துயருறுவர். ஆதலால், மேல் உலகிலே நீங்கள் இன்புற்று மகிழ எந்நாளும் ஈகை முதலாம் அறங்களை மேற்கொள்வீராக.

விளக்கம்:

ஏதம் - துன்பம்; காதல் - ஆசை; அறம் - ஈகை; நல்வான் - மேல்உலகு, சுவர்க்கம். (216)

அரன்அடியவர் நரகினை அடையார்

589. ஆதிநாத னமல னரன் றிருப்
பாத முன்னினர் பாவம் பயிற்றினும்
வேதனா நரகக் குழி வீழ்வரோ
நாதரே யமனிக்கவர் நாடிலே.

ஆதிநாதன் அமலன் அரன்திருப்
பாதம் உன்னினர் பாவம் பயிற்றினும்
வேதனா நரகக் குழி வீழ்வரோ
நாதரே யமனிக்கு அவர்நாடில் ஏ.

உரை:

படைக்கப்பட்டவை அனைத்துக்கும் மூல காரணனும், தலைவனும், தூயவனும், அரனும் ஆகிய சிவபிரானுடைய திருவடிகளை உள்ளத்திலே பதித்தவர் தவறு செய்தாலும் நரகை அடையார்; ஆராய்ந்தால் அவரே யமபுரிக்குத் தலைவர்.

விளக்கம்:

ஆதி நாதன், அமலன், அரன் இவை சிவபிரானுடைய திருப்பெயர்கள். பாதம் - திருவடி; உன்னினர் - தியானித்தவர்;

பயிற்றினும் - செய்தாலும்; வேதனா - வேதனை; யமனி - யமபுரம்; நாதர் - தலைவர். (217)

யமபுரியின் தலைவர் சிவபுரியை அடைவார்

590. முற்றக்கால முருக்குங் கொடுத்தொழி
லற்றுச் சங்கரனாளும் புரத்தினைப்
பற்றிப் பண்ணிய புண்ணியப் பாங்குறத்
துற்றுவார் சிவலோக சுகோதயம்.

Koviloor Digital Library

முற்றக்காலம் உருக்கும் கொடுந்தொழில்
அற்றுச் சங்கரன் ஆளும் புரத்தினைப்
பற்றிப் பண்ணிய புண்ணியப் பாங்கு உறத்
துற்றுவார் சிவலோக சுகோதயம்.

உரை:

இவ்வாறு யமபுரிக்குத் தலைவராக இருந்த காலம் முடிவு பெற்றதும், யமபுரிக்கு உரிய் கொடுமையான தொழில்களைப் புரியும் உடலை விட்டு நீங்கிச் சிவஉலகை அடைந்து, முன் செய்த புண்ணிய இயல்பைப் பொருந்தி, அங்குள்ள இன்பங்களை நுகர்வார்.

விளக்கம்:

முற்றக்காலம் - காலம் முடிவடைய; உருக்கும் - சாகும்;
சங்கரன் ஆளும்புரம் - சிவஉலகு; சுகோதயம் - இன்பஎழுச்சி. (218)

சிவஞானியைப் பாவம் சாராது

591. என்று மிறையைத்தம் கருத்துற விருத்தா
நின்றவர்களீசனடி யோ டொருமை நின்றார்
துன்று துரிசோடுமவர் தோய்விலர்கணீதா
னொன்றியிடுமோ நளினபத்திரம துற்றே.

என்றும் இறையைத் தம் கருத்து உற இருத்தா
நின்றவர்கள் ஈசன் அடியோடு ஒருமைநின்றார்
துன்று துரிசோடும் அவர் தோய்விலர்கள் நீர்தான்
ஒன்றியிடுமோ நளினபத்திரம் அது உற்று ஏ.

உரை:

எந்நாளும் இறைவரைத் தம் சிந்தையிலே இருத்தித் தியானிக்கிற வர்கள் சிவன் திருவடிகளிலே ஒன்றியிருப்பர். நீரில் படர்ந்துள்ள தாமரை இலையின் மேலே நீர் ஒட்டாதது போல, ஈசன் அடியவரைப் பாவம் பொருந்தாது.

விளக்கம்:

நளினபத்திரம் - தாமரையிலை; உற்று - பொருந்தி; (219)

Koviloor Digital Library

கந்தன் உரைத்தான்

592. என்று திவிவாழ்வு நிரயத் துயரிசைத்தான்
குன்றுவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்று புலனைந்தினையும் வெய்யவினை நைய
நின்றமுனி யன்றுணர நிர்க்குணனினைந்தே.

என்று திவிவாழ்வு நிரயத் துயர் இசைத்தான்
குன்றுவர் மடக் கொடி தனக்கு அருள் கொடுத்தான்
வென்றுபுலன் ஐந்தினையும் வெய்ய வினைநைய
நின்றமுனி அன்று உணர நிர்க்குணன் நினைந்து ஏ.

உரை:

சிறுமலையில் வாழும் வேடுவர் தலைவன் நம்பிராசன் திருமகளான, இளமையும் மென்மையான உடலமைப்பும் கொண்ட வள்ளிநாயகிக்கு அருளிய கந்தப் பெருமான், கொடிய தீவினை கெடுமாறு புலனடக்கம் பெற்ற அகத்தியன் அறிந்து கொள்ள வேண்டும் என்று கருதி, சுவர்க்க இன்பத்தையும் நரகத் துன்பத்தையும் கூறினான்.

விளக்கம்:

மடக்கொடி - மடம்+கொடி, இளமையும் கொடி போன்ற உடல் அமைப்பும் கொண்ட வள்ளியம்மை; வெய்ய - கொடிய. (220)

சிவபிரான் துதி

593. வடவரைவில்லெய வல்லவனே மண்புனன்
மற்றைய வல்லவனே
படவரவங்கையிற் பற்றினனே பத்தரைத்
தீர்த்திடும் பற்றினனே
யடியிணை காண்டற் கரியவனே
யகம்பரமென்னாக் கரியவனே
விடைய தன்மேல்வரும் வீரியனே
விதிமுக மொன்றற வீரியனே.

வடவரைவில்எய்ய வல்லவனே
மண்புனல் மற்றைய வல்லவனே
படஅரவு அங்கையில் பற்றினனே
பத்தரைத் தீர்த்திடும் பற்றினனே

Koviloor Digital Library

அடிஇணைகாண்டற்கு அரியவனே அகம்பரம்
என் நாக்கு அரியவனே
விடைஅதன் மேல்வரும் வீரியனே
விதிமுகம் ஒன்று அற ஈரியனே.

உரை:

மேருமலையை வில்லாக வளைத்து எய்யும் திறமையாளனே! மண்நீர் முதலிய தத்துவப் பொருள்களுக்கு வேறாக இருக்கிறவனே! நாகத்தைக் கையில் பிடித்தவனே! அடியவரின் பாவத்தைத் தீர்க்கும் பற்றுள்ளவனே! விஷ்ணு தேடிக்காண இயலாத திருவடிகளை உடையவனே! நாமே பிரமம் என்போரின் நாவை அறுப்பவனே! எருதை ஊர்தியாக ஏறும் வீரம் உடையவனே! பிரமனின் ஐந்தாவது தலையை நகத்தாற் கிள்ளியவனே! (221)

சிவபிரான் துதி

594. ஈடுபெற்றிளையா விளவேற்றனே யிகலும்
புன்சமயத்தவ வேற்றனே
யாடிடும் தில்லையில் அம்பலவாணனே
யதுலனே யரவாட்டிய வாணனே
தேடரும் பொருளாகிய தேசனே சிறந்த
காஞ்சி வளநகர்த் தேசனே
வேடனாய் விசயற்கருள்வில்லியே
விமலநேயவனே யுறவில்லியே.

ஈடுபெற்று இளையா இளம் ஏற்றனே
இகலும் புன்சமயத்தவ வேற்றனே
ஆடிடும் தில்லையில் அம்பலவாணனே
அதுலனே அரவாட்டிய வாணனே
தேட அரும்பொருள் ஆகிய தேசனே
சிறந்த காஞ்சி வளநகர்த் தேசனே
வேடனாய் விசயற்கு அருள் வில்லியே
விமலர் நேயவனே உறவு இல்லியே.

உரை:

வலிமையும் தளராத இளமையும் உடைய எருதை ஊர்தியாகக் கொண்டவனே! சிவசமயத்தினரோடு மாறுபட்ட புன்சமயத்தவருக்கு வேறாக இருப்பவனே! தில்லை அம்பலத்தில் திருநடனம் செய்து வாழ்பவனே! தனக்கு இணை ஒருவரும் இல்லாதவனே! நாகப் பாம்பைப் பற்றி ஆட்டிய திறலுடையவனே! உயிர்கள் தேடி அடைவதற்கு அருமையான ஒளியாக விளங்குகிறவனே!

Koviloor Digital Library

சிறப்புடைய காஞ்சி நகரில் எழுந்தருளியிருப்பவனே! அருச்சுனனுக்கு வேடுவனாக வந்து அருள் செய்த வில்லை உடையவனே! மனமாசு இல்லாதவரிடம் அன்பு உடையவனே! அன்பில்லாதவரிடம் உறவு இல்லாதவனே!

விளக்கம்:

ஈடு - வலிமை; ஏறு - காளை; இகலும் - மாறுபடும்; அரவு - நாகம்; அதுலன் - ஒப்பற்றவன்; தேசன் - ஒளிவடிவினன்; விசயன் - அருச்சுனன்; வில்லி - வில் ஏந்திய சிவன்; விமலர் - தூயவர். (222)

குமரன் துதி

595. ஆறாறு கூறு முதித்தவப்புறமாளான
சேடரவர்க் கிருப்பிடம்
வீறானவேதகசிற்கனப் புரிமீளாத
வாழ்வெனக் களிப்பவ
னீறேறு மேனியினித்தனுத்தம னேரார்களூரு
மெரித்த நிட்டுர
னாறேறு வேணியளித்தவற்புத
னாணாருமாறு முகத்தெனத்தனே.

ஆறுஆறு கூறும் உதித்த அப்புறம்
ஆளான சேடர் அவர்க்கு இருப்பிடம்
வீறு ஆன வேதக சிற்கனப்
புரிமீளாத வாழ்வுஎனக்கு அளிப்பவன்
நீறு ஏறு மேனியில் நித்தன் உத்தமன்
நேரார்கள் ஊரும் எரித்த நிட்டுரன்
ஆறுஏறு வேணி அளித்த அற்புதன்
ஆணாரும் ஆறுமுகத்து என் அத்தனே.

உரை:

திருநீறு அணியும் மேனியனாகவும், என்றும் உள்ளவனாகவும், உயர்ந்தோனாகவும், பகைவரின் முப்புரத்தை எரித்த கொடுமையாளனாகவும், கங்கை நீரைத் திருச் சடையில் தாங்கியவனாகவும் இருக்கின்ற சிவபிரான் அருளிய, வியப்பும் ஆண்மையும் நிரம்பிய என் தந்தை, மண் முதல் நாதம் ஈறான முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்புறமான முத்தியைத் தன்னுடைய அன்பர்களாகிய அடியவர்களுக்கு இருப்பிடமாகத் தருபவனும், பெருமையோடு அறிவிக்கிறவனும், அறிவு வடிவமாகிய சிவ தத்துவத்தில் உண்டாகிய நாதகலா புவனத்தை அடைகிற வாழ்வை அளிப்பவனும் ஆவான்.

Koviloor Digital Library

விளக்கம்:

ஆறு ஆறு கூறு - முப்பத்தாறு தத்துவக் கூறுகள்; சேடர் - மேலோர்; வீறு - பெருமை; மீளாத வாழ்வு - முத்தி நிலை; வேதகம் - அறிவித்தல்; நித்தன் - என்றும் உள்ள சிவன்; உத்தமன் - உயர்ந்தோன்;

நேரார் - பகைவர்; ஆணாரும் - ஆண்மை உள்ள; அத்தன் - தந்தை. சித் - ஞானம்; கனம் - திணிவு அல்லது செறிவு; புரி - நகரம். ஞானச் செறிவுள்ள மோஷபுரி. சித்கனம் என்பது இன்பகனம் என்பது போல. (223)

அகத்தியர் துதி

596. மாறாமலானென வற்றியற்றிடு மாயா
விகார வவப்பவக்கட
லேறாதுயானென வுற்றகுற்றமு மீசேச
ஞானமு முற்றியுற்றிடும்
வீறான வேதகனித்த வுத்தமன்
வேதாகமாதியெனைத் தனைத்தினு
மாறாறுமாறு மதித்தகத்தி
னுளானாத ஞானவகத்தியற்கெனா.

மாறாமல் ஆன்என வற்றி
அற்றிடும் மாயாவிகார அவப்பவக்கடல்
ஏறாதுயான் என உற்ற குற்றமு
மீசேச ஞானமு முற்றி உற்றிடும்
வீறுஆன வேதகன் நித்தன் உத்தமன்
வேதஆகம ஆதி எனைத்தனைத்தினும்
ஆறாறும் ஆறும்மதித்து அகத்தினுள்
ஆனாதஞான அகத்தியற்கு எனா.

உரை:

இப்பாடலுக்குச் சாலிவாடீசுரஓதுவா மூர்த்திகள் எழுதியுள்ள உரை வருமாறு:

''வீறாக வறிவிக்கப்பட நித்தியனுமா. யுத்தமனுமாகிய சிவனருளிய வேதாகம முதலிய நூல்களெத்தனையுண்டத்தனையும், வேதாங்கமாறினையும், முப்பத்தாறு தத்துவத்தினையு முளத்தினுள் நிச்சயித்து, நீங்காத ஞானத்தினை யுடைய அகத்திய முனிக்கு, இடையறாமலடிமையென்று என்னாலானது சொன்ன

Koviloor Digital Library

மாத்திரத்திலே யெனக்கு மாயையினின்று நானா விகாரமாய்த் தோற்றப்பட்ட வவலமாகிய செனன சாகரமும் வற்றியற்றிடும். யானென தென்னுஞ் செருக்காகிய வாணவ தோஷமும் பொருந்தாது. சிவனது ஞானமு மிகுதியாய்ப் பொருந்தும்.

விளக்கம்:

அகத்தியர் துதியாக உள்ள இப்பாடல், மிகுதியான வடசொற்கள் கலந்து மணிப்பிரவாளமாக உள்ளது; உரையாசிரியரும் மணிப்பிரவாள நடையிலேயே, நூலாசிரியர் கூறும் சொற்களைப் பயன்படுத்தியே, உரை எழுதுகிறார். (224)

Koviloor Digital Library

எட்டாவது

சனன மரண இயல்

புண்ணியத்தாலும் பாவத்தாலும் புண்ணிய பாவங்களாலும் உண்டாகும் பிறப்பு இறப்புகளையும் அவற்றால் நேரும் இன்ப துன்பங்களையும் இந்த இயல் விளக்கிக் கூறும்.

பிறப்பு வகை

597. பாதலக் குழியினாழும்
பாவிகள் படிவந்தானு
மீதலத் தடையு மேன்மை
விண்ணவருடலந் தானும்
பூதலம் பொருந்து மற்றையுயிர்ப்பொறை
தானும் பொற்றை
மாதவ வுதிக்குமாறும்
வகையுற வறைகுவாமே.

பாதலக் குழியில் ஆழும்
பாவிகள் படிவந்தானும்
மீதலத்து அடையும் மேன்மை
விண்ணவர் உடலம்தானும்
பூதலம் பொருந்தும் மற்றை உயிர்ப்
பொறை தானும் பொற்றை
மாதவம் உதிக்கும்
ஆறும்வகைஉற அறைகுவாம் ஏ.

உரை:

நரகில் அழுந்தும் பாவிகள் உடலெடுக்கும் முறையையும் சுவர்க்க உலகை அடைகிறவர்கள் மேன்மையான வானவர் உடம்பை அடைகிற முறையினையும், தத்தம் நல்வினை தீவினைகளுக்கு ஈடாகத் தரையில் மனித உடலையும் பிற உடல்களையும் பொருந்துகின்ற முறைகளையும் வகுத்து உரைப்போம்.

விளக்கம்:

பாதலம் - நிலத்தின் கீழ் இருப்பதாக நம்பப்படுகிற உலகம், நரகம்;

Koviloor Digital Library

படிவம் - உருவம்; மீதலம் - சுவர்க்க உலகு; விண்ணவர் - வானவர்; பூதலம் - தரை, பூமி; மற்றை - ஏனைய; உயிர்ப்பொறை - உடம்பு; ஆறு - வழி; உதிக்கும் - தோன்றும்; வகைஉற - வகுத்து; அறைகுவாம் - உரைப்போம்; பொற்றை - மலை. (1)

உடம்பின் வகை

598. அருந்துயர்க் குழியினாழ்வா ராகமே பாவத்தாகும்
பொருந்திய பூதத்தாலே யிமைத்திடும் போது தன்னுட்
புரிந்து விண்புகுவாராகம் புண்ணியத் தாலேயாகும்
பொருந்திய பூதசாரத் தொருகணப் பொழுது தன்னில்.

அரும்துயர்க் குழியில் ஆழ்வார் ஆகமே பாவத்து ஆகும்
பொருந்திய பூதத்தாலே இமைத்திடும்போது தன்னுள்
புரிந்து விண்புகுவார் ஆகம்புண்ணியத்தாலே ஆகும்
பொருந்திய பூதசாரத்து ஒரு கணப் பொழுது தன்னில்.

உரை:

நரகில் அமிழ்கின்றவருடைய உடம்பு, பாவத்தின் பயனாகப் பஞ்ச பூதமெனும் மண் முதலான ஐந்து முதற்பொருள்களிலிருந்து இமைப்பொழுதில் தோன்றும்; சுவர்க்க உலகை அடைகின்றவருடைய உடல், புண்ணியத்தின் விளைவாக கந்தம் முதலிய ஐந்து பூதமூலங்களிலிருந்து ஒரு நொடிப் பொழுதில் உண்டாகும்.

விளக்கம்:

துயர்க்குழி - அளறு, நரகம்; ஆழ்வார் - அழுந்துவார்; ஆகம் - உடம்பு; பூதம் - பஞ்சபூதம். இவை மண், நீர், தீ, காற்று, விண் என்ற ஐந்து முதற்பொருள்கள். விண்புகுவார் - சொர்க்க உலகு அடைகிறவர். கணம் - நொடி; பூதசாரம் - பஞ்சபூதசத்து. இவை கந்தம், இரசம், ரூபம், பரிசம், சப்தம் என்பன. கணம் - இமைப்பொழுது. (2)

மனித உடம்பும் பிற உடல்களும்

599. புண்ணிய பாவத்தாலே பூதத்தின் பரிணாமத்தான்
மண்ணிடை மனிதராக மற்றைய வடிவமெல்லாம்
நண்ணிடுஞ் சராயுசத்தி னரர்தனு விலங்குமற்றைத்
திண்ணிய கமடம்பாம்பு சிறைப்புளு மண்டஞ் சேரும்.

புண்ணிய பாவத்தாலே பூதத்தின் பரிணாமத்தால்
மண்இடை மனிதராக மற்றைய வடிவம் எல்லாம்
நண்ணிடும் சராயுசத்தில் நரர்தனு விலங்கு மற்றைத்
திண்ணிய கமடம் பாம்பு சிறைப்புளும் அண்டம் சேரும்.

Koviloor Digital Library

உரை:

நல்வினை தீவினைகளால், மண் முதலிய முதற்பொருள்கள் மாறுபடுதலால், தரையில் மனித உடம்பும், விலங்கின் உடலும் கருப்பையில் தோன்றுகின்றன. உறுதியான மேல் ஓடு உள்ள ஆமை, பாம்பு, பறவை முதலிய மற்றவை முட்டையில் உண்டாகின்றன.

விளக்கம்:

பூதம் - மண் முதலான முதற்பொருள்கள் ஐந்து; **பரிணாமம்** - ஒன்று மற்றொன்றாக மாறுதல், மாறுபாடு. **மண்இடை** - தரையில், பூமியில்; **நண்ணும்** - தோன்றும்; **சராயுசம்** - கருப்பை; **நரர்** - மாந்தர்; **தனு** - உடல்; **திண்ணிய** - உறுதியான; **கமடம்** - ஆமை; **அண்டம்** - முட்டை; **சிறைப்புள்** - சிறகுடைய புள், பறவை; **சேரும்** - உண்டாகும். புளும் - தொகுத்தல். (3)

பிற சிறு உயிரிகளின் பிறப்பு

600. கிருமிகள் கீடமற்றுங்
கசிவினிற் கெழுமித்தோன்று
மரமெழுவாய வெல்லா மண்டனில்
வாரி சேர
விரவிட வனிலம் வெய்யில்
வித்தினும் விளங்கித் தோன்று
மரியனவவற்று ளெல்லாம்
யவைமுதற் செந்நெலந்தம்.

கிருமிகள் கீடம் மற்றும்
கசிவினில் கெழுமித் தோன்றும்
மரம்எழுவாய எல்லாம்
மண்தனில் வாரி சேர
விரவிட அனிலம் வெய்யில்
வித்தினும் விளங்கித் தோன்றும்
அரியன அவற்றுள் எல்லாம்
யவைமுதல் செந்நெல் அந்தம்.

உரை:

புழு, எறும்பு முதலான சிறு உயிரிகள் வியர்வையிலிருந்து நெருங்கித் தோன்றும்; மரம்,செடி,கொடி முதலியவை நிலத்தில் தண்ணீர், காற்று வெயில் ஆகியவை பொருந்த விதைகளிலிருந்து உண்டாகும்; கோதுமை முதல் நெல்வரையுள்ள கூலங்கள் அவற்றுள் மிக அருமையானவை.

Koviloor Digital Library

விளக்கம்:

கிருமி - புழு; கீடம் - ஊர்ந்து செல்லும் சிறு வண்டு முதலான உயிரிகள். எழுவாய - முதலான; வாரி - கடல்; இங்கு நீரைக் குறிக்கிறது; அனிலம் - காற்று; யவை - கோதுமை; சென்னல் - ஒருவகை நெல். (4)

பசிப்பிணிக்கு மருந்து

601. எண்ணிரண்டேக மென்றசெந்நெலையிறுதியெல்லாம்
நண்ணிடு பல்பாகத்தினசித்திடு நாடுங்காலை
மண்ணிடை மனிதர்க் கெல்லா மவுடதமாக வாய்க்குந்
தண்ணியவுணவே மற்றைத் தானிய விதங்களெல்லாம்.

எண்இரண்டு ஏகம் என்ற செந்நெலை இறுதி எல்லாம்
நண்ணிடும் பல்பாகத்தில் நசித்திடும் நாடும் காலை
மண்இடை மனிதர்க்கு எல்லாம் அவுடதமாக வாய்க்கும்
தண்ணிய உணவே மற்றைத் தானிய விதங்கள் எல்லாம்.

உரை:

முன்சொன்ன கோதுமைமுதல் பதினேழுவகை நெல்வரை உள்ள பயிர்களையும் அறுவடை செய்து அவற்றின் தானியங்களைப் பிரித்து எடுத்துக் கொண்டபின் பல்வேறு விதமாகப் பாகம் பண்ணுதலால் தானியத் தன்மை அழிந்து உணவாகுந்தன்மை பெறும். ஆராயும்போது இக் கூல வகைகள் யாவும் மாந்தரின் பசிப்பிணிக்கு மருந்தாக அமைகின்றன. எனினும், நன்செய்த் தானியமாகிய நெல்மணிகளைவிட, புன்செய்த் தானியங்களாகிய வரகு, கேழ்வரகு, தினை, சோளம், கம்பு முதலியன தாழ்ந்தவையாகும்.

விளக்கம்:

என் - எட்டு; ஏகம் - ஒன்று; என் இரண்டு ஏகம் - பதினேழு. இது நெல்லினத் தொகை. பயிர்கள் நன்செய் புன்செய் என்ற பெயரே நெல்மணி உயர்ந்தது என்பதை உணர்த்துகிறது. திருக்கோயிலில் இறைவனுக்கு அமுது படைப்பதற்கும், திருமணம் போன்ற சிறப்பு நாள்களில் விருந்து உணவுக்கும் நெல்லின் உள்ளீடாகிய அரிசியையே பயன்படுத்துகின்றோம். அரிசிக்கு அடுத்த நிலையில் கோதுமை சிறந்த உணவு. உலகின் பெரும்பான்மையினரான ஆசிய மக்களுக்கு அரிசிச் சோறு இன்றியமையாத உணவு. அரிசி, கோதுமைகளுக்கு அடுத்த நிலையில் கேழ்வரகும் சோளமும் மக்களின் உணவாக விளங்கி வருகின்றன. மலைவாழ் மக்களுக்கு தினை முதலியன முக்கிய உணவு.

அவுடதம் - மருந்து; தண்ணிய - தாழ்ந்த. (5)

Koviloor Digital Library

அரிசியால் ஆன உணவு

602. தானிய விதத்தானாகுந் தண்டுலம் பிண்டிபேத
மூனமிலோதனாதியுறுமவற் றழநீரொன்ற
மானிடரருந்தும் போதுவயினனாசயத்தின் வைகிப்
பானமும் பருகப்பட்டுப் பக்குவாசயமும் பற்றும்.

தானிய விதத்தால் ஆகும் தண்டுலம் பிண்டிபேதம்
ஊனம்இல் ஓதனஆதி உறும் அவற்று அழல்நீர் ஒன்ற
மானிடர் அருந்தும் போதுவயினன் ஆசயத்தின் வைகிப்
பானமும் பருகப்பட்டுப் பக்குவ ஆசயமும் பற்றும்.

உரை:

நெல்மணியாகிய அரிசியை உலையிலிட்டு உணவாகச் சமைத்தும், அரிசி மாவினால் அப்பம் முதலான சிற்றுண்டிகளைச் செய்தும் மக்கள் உண்டு, நீரைப் பருகியதும் உண்ட உணவு வயிற்றில் உள்ள வயினன் ஆசயத்தில் தங்கிப் பின்பக்குவாசயத்தை அடைந்து சீரணமாகும்.

விளக்கம்:

தானியம் - கூலம்; தண்டுலம் - அரிசி; பிண்டி - அரிசிமாவு; **ஊனம்** - குற்றம்; **ஓதனம் ஆதி** - சோறு முதலியன; **அழல்நீர்** - கொதிக்கும் நீர்; **வயினன்** - வயிற்றில் ஒரு பகுதி; **ஆசயம்** - பை; **வயினனாசயம்** - வயினன் ஆசயம்; **பக்குவாசயம்** - பக்குவ ஆசயம்; வயிற்றின் உணவு தொடும் பகுதி வயினன் ஆசயம்; அதைச்சமிக்கச் செய்து சத்தும் சக்கையுமாகப் பகுக்கும் பகுதி பக்குவாசயம்.

வயினன் ஆசயம், பக்குவாசயம் என்ற இரண்டிற்கும் *சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி* - இரைப்பை என்ற ஒரே பொருளைக் கூறி, இந்தப் பாடலை மேற்கோளாகக் குறிப்பிடுகின்றது. (6)

உணவு சீரணமாகும் முறை

603. பக்குவாசயத்தினன்ன பானத்தைப் பிராணவாயுத்
தொக்கிருகூறு செய்யச் சொன்றிமேல் தோயங்கீழா
மக்கியு மறலின் கீழேயாகலும் வாயுவங்கிப்
புக்கிருபாகமாக்கப் பொருந்திடுஞ் சாரங்கிட்டம்.

பக்குவ ஆசயத்தில் அன்னம் பானத்தைப் பிராணவாயுத்
தொக்கு இரு கூறு செய்யச் சொன்றிமேல் தோயம்கீழாம்
அக்கியும் அறலின் கீழே ஆகலும் வாயு அங்கிப்
புக்குஇருபாகம் ஆக்கப் பொருந்திடும் சாரம் கிட்டம்.

Koviloor Digital Library

உரை:

இரைப்பையில் உள்ள உணவு நீரோடு உயிர்வளி பொருந்தி அவற்றை இரண்டு கூறுகளாகப் பிரித்து, உணவு மேலும் நீர் கீழும் இருக்குமாறு செய்யும். அந்த நீரின் அடியில் கொப்பூழிலிருந்து தோன்றுகிற தீயில் காற்றுப் புகுந்து எரியச் செய்வதால் உணவு செரித்து, அதன் சத்தும் சக்கையும் இரு பகுதிகளாகப் பிரியும்.

விளக்கம்:

பக்குவ ஆசயம் - உணவு செரிக்கும் பகுதி; அன்னம் - உணவு; பானம் - நீர்; பிராணவாயு - உயிர்வளி, உயிர்க்காற்று; தொக்கு - பற்றி; சொன்றி - சோறு, உணவு; தோயம் - நீர்; அக்கி; அங்கி, தீ, இது வயிற்றுத்தீ. இதனைச் சடராக்கினி எனவும் கூறுவர்.

வாயு - காற்று; சாரம் - சத்து; கிட்டம் - கறை, அழுக்கு. (7)

உடலுறுப்புகளில் சேரும் அழுக்குகள்

604. நோக்கினுட் செவியின்
மூக்கினொய்யன வழுக்கேயாயும்
வாக்குறு நாக்கிற் பல்லின்
மிடற்றினுள் வழுக்கேயாயு
நீக்கிடுமல நீராயு
நிகழுகிரழுக் கேயாயு
மாக்கையின் வேர்வதாயுங்
குதகுயத் தவலமாயும்.

நோக்கினுள் செவியில் மூக்கில்
நொய்அன்ன அழுக்கே ஆயும்
வாக்குஉறு நாக்கில் பல்லில்
மிடற்றினுள் வழுக்கே ஆயும்
நீக்கிடும் மலம் நீராயும்
நிகழ்உகிர் அழுக்கே ஆயும்
ஆக்கையின் வேர்வது ஆயும்
குதம்குய்யத்து அவலம்ஆயும்.

உரை:

கண்களிலிருந்து பீளையாகவும், காதுகளிலிருந்து குறும்பியாகவும், மூக்கிலிருந்து இலேசான சளியாகவும், பேசுவதற்கு உதவுகின்ற நாக்கிலும் பற்களிலும் சேரும் கறைகளாகவும், தொண்டையிலிருந்து கோழையாகவும், வெளியேற்றப்படுகின்ற மலம், மூத்திரமாகவும், நகங்களில் சேரும் அழுக்காகவும், உடம்பிலேகசிகின்ற வியர்வை ஆகவும், எருவாயிலும் கருவாயிலும் உண்டாகின்ற கழிவாகவும்.

Koviloor Digital Library

விளக்கம்:

நோக்கு - கண்; நொய் அன்ன - இலேசான; வாக்குறு நாக்கு - வசனம் பொருந்தும் நாக்கு; மிடறு - கழுத்து, தொண்டை; நீக்கிடும் நீர் - மூத்திரம்; உகிர் - நகம்; ஆக்கை - யாக்கை, உடம்பு; குதம் - எருவாய், மலம்கழியும் உறுப்பு; குய்யம் - கருவாய், சிறுநீர் விடும் உறுப்பு; அவலம் - இங்கு கழிவைக் குறிக்கும். (8)

உணவுச் சத்துப் பிரியும் முறை

605. பன்னிரு பேதமென்னப் பழுதுட லுறுப்பிற்பாறு
மன்னிய வன்னசாரமிருதய மலரின் வாய்த்துத்
துன்னிய நாடி தோறுஞ் சொரிந்திடுஞ் சமானன்றொக்கும்
பின்னையுமுடலாற் சாரம் பெற்றிடும் பாகபேதம்.

பன்னிருபேதம் என்னப் பழுதுஉடல் உறுப்பில் பாறும்
மன்னிய அன்னசாரம் இருதய மலரில் வாய்த்துத்
துன்னிய நாடிதோறும் சொரிந்திடும் சமானன் தொக்கும்
பின்னையும் உடலால் சாரம் பெற்றிடும் பாகபேதம்.

உரை:

அழுக்கானது பன்னிரண்டு வகையாகப் பொல்லாத உடல் உறுப்புகளிலிருந்து வெளியாகிச் செல்லும். உடலைப் பொருந்திய உணவுச் சத்து நெஞ்சத் தாமரையை அடைந்து, சமானன் என்னும் காற்றுடன் கூடி, உடலில் உள்ள நாடித் துளைகள்தோறும் பரவும்; மேலும், அந்தச் சத்து உயிர் வளியினால் உடலில் வெப்பத்தைப் பொருந்திப் பலவிதமாகப் பாகம் பண்ணப்படும். (சமைக்கப்படும்).

விளக்கம்:

பாறும் - சிதறும், அழியும்.

''பத்திநெறி அறிவித்துப் பழவினைகள்பாறும் வண்ணம்''

என்பது மணிவாசகரின் மணிமொழி.

பேதம் - வேறுபாடு; மன்னிய - நிலையான; இருதயம் - நெஞ்சம்; அன்னசாரம் - உணவுச்சத்து; துன்னிய - பொருந்திய; நாடி - தாது நரம்பு, மூச்சுக்குழாய்; பாகபேதம் - பலபிரிவு. சமானன் - உணவுச் சத்தை உடலின் உள் உறுப்புகளுக்குச் சமமாகப்பிரித்து நிரப்புகின்ற உடலின் உட்புறக்காற்று. பாகம் பண்ணப்படும் - சமைக்கப்படும். அதாவது அரிசி சோறாவது போலவும் காய்பிஞ்சு கறியாவது போலவும், ஒன்றிலிருந் தொன்றாகப் பலவித மாறுதலுறும் என்பது. அது வருஞ் செய்யுளால் விளங்கும். (9)

Koviloor Digital Library

உடலின் உறுப்புகள் தோன்றும் முறை

606. பெற்றிடும் பாகந் தன்னிற் பிறந்திடுந் துவக்குத்தன்னி
லுற்றெழுமு திரந்தன்னி னிணத்துடனூனுதிக்கு
மற்றையநரம்பு வாய்க்கு மயிர்தசை தன்னினாடி
யுற்றெழு நரம்பி னென்பு நாடியினு திக்குமன்றே.

பெற்றிடும்பாகம் தன்னில் பிறந்திடும் துவக்குத்தன்னில்
உற்றுஎழும் உதிரம் தன்னில் நிணத்துடன் ஊன் உதிக்கும்
மற்றைய நரம்பு வாய்க்கும் மயிர்தசை தன்னில்நாடி
உற்றுஎழும் நரம்பில் என்பு நாடியில் உதிக்கும் அன்றே.

உரை:

முன்சொன்ன வேறுபாட்டிலிருந்து தோல் உண்டாகும். தோலில் இருந்து குருதி தோன்றும். குருதியிலிருந்து கொழுப்பும் இறைச்சியும் தோன்றும். இறைச்சியிலிருந்து நரம்பும் மயிரும் உண்டாகும். அந்த நரம்பிலிருந்து அதனைச் சார்ந்த நாடியும் எலும்பும் தோன்றும்.

விளக்கம்:

துவக்கு - தோல்; உதிரம் - குருதி; நிணம் - கொழுப்பு; ஊன் - இறைச்சி; என்பு - எலும்பு; உதிக்கும் - தோன்றும்; நாடி - வாத பித்த சிலேட்டுமங்களைக் குறிக்கும் தாதுநரம்பு; இடை பிங்கலை சுழுமுனை என்ற மூச்சுக்குழாய்கள் முதலியன. அன்றே - அசை. (10)

முன்செய்யுளின் தொடர்ச்சி

607. தோற்றிடுமூளை யென்பிற் சுழனுதி
நகமுந் தோன்றுந்
தோற்றிடுமூளை தன்னிற்
சுக்கிலங் கருத்தான்றோன்றும்
பாற்று சுக்கிலத்திற் பத்தாப்
பாரிதன் பகத்திற்பாங்கா
லேற்ற மாமிரத
சாரமிம்முறை யீராறாமே.

தோற்றிடும் மூளை என்பில்
சுழல்நுதிநகமும் தோன்றும்
தோற்றிடும்மூளை தன்னில் சுக்கிலம்
கருத்தான் தோன்றும்

Koviloor Digital Library

பாற்று சுக்கிலத்தில் பத்தாப்
பாரிதன் பகத்தில் பாங்கால்
ஏற்றமாம் இரதம்சாரம்
இம்முறை ஈராறு ஆம் ஏ.

உரை:

அந்த எலும்புலிருந்து கூரிய நகம் தோன்றும். மூளையிலிருந்து விந்து தோன்றும். கணவன் மனைவியைப் புணரும் போது அவளுடைய யோனியில் செலுத்துகிற விந்துவால் கருப்பம் ஏற்படும். இவ்வாறு உடல் தோன்றுவதற்குக் காரணமான சத்து பன்னிரண்டு வகை ஆகும்.

விளக்கம்:

நுதிநகம் - கூரிய நகம்; சுக்கிலம் - விந்து; பாற்றும் - விடும்; பத்தா - கணவன்; பாரி - மனைவி; பகம் - பெண்குறி, யோனி; பாங்கால் - முறைமைப்படி; ஏற்றம் - உயர்வு; இரதம் - புணர்ச்சி; சாரம் - சத்து; ஈராறு - பன்னிரண்டு. (11)

மக்களின் பிறப்பு வகைகள்

608. சுக்கிலமதிக மாகினாணெனு
முருவந் தோன்றுஞ்
சுக்கிலங் குறையிற் பெண்ணாஞ்
சோணிதந் துலையேயாகிற்
சுக்கிலத் தலிதான் றோன்றுந்
தோய்ந்தவவ் விருவர்பாலு
மெக்குண மிலங்கு மக்கள்
பாலுமக் குணமே யேயும்.

சுக்கிலம் அதிகமாகில் ஆண்என்னும்
உருவம் தோன்றும்
சுக்கிலம் குறையில் பெண்ணாம்
சோணிதம் துலையே ஆகில்
சுக்கிலத்து அலிதான் தோன்றும்
தோய்ந்த அவ்இருவர்பாலும்
எக்குணம் இலங்கும் மக்கள்
பாலும் அக்குணமே ஏயும்.

உரை:

புணர்ச்சியின்போது கணவனுடைய விந்து பெண்ணின், சூதகத்தை விட அதிகப்படின் ஆண்மகவு பிறக்கும்; விந்து குறைந்து, மனைவியினிடம் உண்டாகும்

Koviloor Digital Library

சூதகம் அதிகப்படில் பெண்மகவு தோன்றும். புணர்ச்சியில் ஆணின் விந்துவும் பெண்ணின் சூதகமும் சமஅளவில் கலந்தால், ஆணும் பெண்ணும் அல்லாத அலி வடிவம் உண்டாகும். புணர்ச்சிக் காலத்தில் கணவனும் மனைவியும் முக்குணங்களில் எந்தக் குணத்தைப் பொருந்தியிருந்தார்களோ அந்தக் குணமே பிறக்கும் பிள்ளையிடமும் பொருந்தியிருக்கும்.

விளக்கம்:

குழந்தைப் பேறு பற்றித் *திருமந்திரத்தின் இரண்டாம் தந்திரத்தில்* ''கர்ப்பக் கிரியை'' என்னும் தலைப்பில் திருமூல நாயனார் மிக அழகாகவும் தெளிவாகவும் விளக்குகின்றார். இதில் வரும்

''ஆண்மிகில் ஆண் ஆகும் பெண் மிகில் பெண் ஆகும்
பூண் இரண்டு ஒத்துப் பொருந்தில் அலி ஆகும்'' *(திருமந்திரம்-478)*

என்ற பாடலின் இரண்டு வரிகளே மேலேயுள்ள பாடலுக்கு ஆதாரம் ஆகும்.

சுக்கிலம் - விந்து, இந்திரியம்; சோணிதம் - சூதகம்.

சுக்கிலம் - வெண்மை நிறம்; சோணிதம் - சிவப்புநிறம்.

துலை - தராசு, ஒப்பு; முக்குணம் - சத்துவம், இராசதம், தாமதம். (12)

புரியட்டக உடல்

609. அட்டக வுடலத்தோடே
யுயிர்பிதாவருந் தன்னாதி
தோட்டவனுதரர் தொக்குச்
சுக்கிலத்துடனே தோன்றிப்
பட்டனை பகத்தின் மற்றைக்
கருப்பையிற் பதிந்துமுற்றிச்
சட்டக மென்னத் தோன்றித்
தரணியிற்றங்கிச் சாயும்.

அட்டக உடலத்தோடே உயிர்பிதா
அருந்து அன்ன ஆதி
தோட்டு அவன் உதரம்
தொக்குச் சுக்கிலத்துடனே தோன்றிப்
பட்டு அன்னை பகத்தின் மற்றைக்
கருப்பையிற் பதிந்து முற்றிச்
சட்டகம் என்னத் தோன்றித்
தரணியில் தங்கிச் சாயும்.

Koviloor Digital Library

உரை:

உயிர், எட்டுக் கூறுகளைக் கொண்ட புரியட்டகம் அல்லது சூக்கும உடலைப் பெற்றுத் தந்தை உண்ணும் உணவு வகைகளோடு வயிற்றை அடையும். பிறகு, கலவியால் தந்தையின் விந்து தாயின் யோனியை அடைந்து கருப்பையில் கருத்தரித்து உறுப்புகள் யாவும் உண்டாகி, ஒரு வடிவமாக உலகில் பிறந்து வாழ்ந்து இறக்கும்.

விளக்கம்:

அட்டகம் - எட்டு; இது புரி அட்டகம் எனப்படும். **அட்டக உடலம்** - எட்டுத் தத்துவக் கூறுகளைக் கொண்ட சூக்கும உடம்பு; இது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து நுண்ணிய பொருள்களையும் (தன் மாத்திரைகள்) மனம், புத்தி, அகங்காரம் என்ற தத்துவங்களையும் குறிக்கும்.

அருந்தும் - உண்ணும்; **அன்னம்ஆதி** - உணவு முதலியவை; **உதரம்** - வயிறு; **பகம்** - பெண்குறி; **சட்டகம்** - வடிவு; **தரணி** - பூமி; **தங்கி** - வாழ்ந்து; **சாயும்** - இறக்கும். (13)

உயிர் பருவுடலைப் பொருந்தும் முறை

610. காந்தனிருதுமதி தன்னிற் கலந்து
கலித்த சுக்கிலந்தான்
றோய்ந்தபொழுதிற் சோணிதத்திற்றுயக்க
முறவேயவள் பகத்திற்
பாய்ந்து பயின்ற கரணத்தாற்
பண்டை வினையாற் பரிப்பெய்திச்
சேர்ந்து நிற்குஞ் சீவனொரு
தினத்திற் குன்றித் திரளெனவே.

காந்தன் இருதுமதி தன்னில் கலந்து
கலித்த சுக்கிலம்தான்
தோய்ந்த பொழுதில் சோணிதத்தில் துயக்கம்
உறவே அவள் பகத்தில்
பாய்ந்து பயின்ற கரணத்தால் பண்டை
வினையால் பரிப்பு எய்திச்
சேர்ந்து நிற்கும் சீவன்
ஒரு தினத்தில் குன்றித்திரள் என ஏ.

உரை:

கணவன் தன் மனைவியை வீட்டு விலக்கம் நின்ற மறுநாள் முதல் உள்ள

Koviloor Digital Library

நாள்களில் தான் பழகிய கலவியால் மகவை விரும்பி அணைய, அப்போது வெளியான விந்து அவளுடைய சுரோணிதத்தில் கலந்த போது, உயிர் பொருந்தி அவளுடைய யோனியிற் சென்று கருப்பையை அடைந்து, முன் செய்த வினைக்கு ஈடாக அக்கருவைத் தாங்கும் நிலையைப் பொருந்தி, ஒரு நாளுக்குப் பிறகு குன்றிமணி அளவு திரண்டிருக்கும்.

விளக்கம்:

இருதுமதி - பூப்படைந்த பெண்; இங்கு வீட்டு விலக்காக இருந்த சுமங்கிலியைக் குறிக்கும். **காந்தன்** - கணவன்; **கலந்து** - அணைந்து; **கலித்த** - மகிழ்ந்த; **சுக்கிலம்** - வெண்ணிறமுடைய விந்து; **தோய்ந்த** - சேர்ந்த; **சோணிதம்** - சிவந்த நிறமுள்ள சுரோணிதம்; **பகம்** - யோனி; **கரணம்** - கலவி; **பண்டை** - முன்னைய; **பரிப்பு எய்தி** - தாங்கி; **சீவன்** - உயிர்; **குன்றி** - குன்றிமணி; **திரள்என** - திரண்டு. கருவிற் பதியுஞ் சுக்கிலம் ஒரு கணஞ் சென்றால் இரு திரிசரேணும் ஒன்றான வடிவாகி ஒரு நாழிகை சென்றால் ஒரு பேனளவாகி ஒரு நாட்சென்றால் ஒரு குன்றி மணியளவினதாகும் என முன்னைய உரையிற் காணப்படும் இக்கர்ப்பக் கிரியை நயங் கவனிக்கத்தகும். (14)

முன்பாடலின் தொடர்ச்சி

611. தினமோரைந் தினவ்வுருவந் தெண்ணீர்க்
குமிழியெனச் சிறக்குந்
தினமோ ரேழினிளவூனாம் பருவஞ்
செறிந்து திரண்டிலங்குந்
தினமீரேழிற் றிரளூனாய்ச் செந்நீர்
பரந்து செறிந்திலங்கும்
தினமூவேழு யொருநான்கும் செறியப்
பீசம் சிறிதுதிக்கும்.

தினம்ஓர் ஐந்தில் அவ்வுருவம் தெள்நீர்க்
குமிழி எனச் சிறக்கும்
தினம் ஓர்ஏழில் இளம் ஊனாம் பருவம்
செறிந்து திரண்டு இயங்கும்
தினம் ஈர்ஏழில் திரள் ஊனாய்ச்
செந்நீர் பரந்து செறிந்து இலங்கும்
தினம் மூஏழும் ஒரு நான்கும்
செறியப் பீசம் சிறிது உதிக்கும்.

உரை:

தாயின் கருப்பையில் வளரும் உயிர் ஐந்தாம் நாளில் தெளிந்த நீர்க்குமிழி அளவில் வளர்ந்திருக்கும்; ஏழாம் நாளில் மென்மையான தசை உண்டாகும் காலம்

Koviloor Digital Library

அமைய நெகிழ்ச்சியான தசை திரண்டு விளங்கும்; பதினாலாம் நாளில் திரண்டுள்ள தசையில் குருதி அடர்த்தியாகப் பொருந்தி விளங்கும்; இருபத்தைந்தாம் நாளில் சிறிய அளவில் விதை உண்டாகும்.

விளக்கம்:

தெள் - தெளிந்த; குமிழி - உருண்டு திரண்ட நுரை வடிவம்; இளம் - நெகிழ்ச்சியான; ஊன் - இறைச்சி; பருவம் - காலம்; ஈர் - இரண்டு; ஈர் ஏழு - பதினான்கு; தினம் - நாள்; செறிந்து - பொருந்தி, அடர்ந்து; திரள் - திரட்சி; திரள் ஊன் - திரண்ட இறைச்சி; மூ - மூன்று; மூஏழ் - இருபத்தொன்று; பீசம் - விதை; உதிக்கும் - தோன்றும். (15)

கரு வளர்ச்சி அடைதல்

612. சிரமே கனமே சிறுபுறமே
திரண்டு திணிந்த முதுகெலும்பே
வருமேதின மோராறைந்தின் மற்றை
யிரண்டாம் மாதத்தின்
கரமேபதமேகடி தடமே
கலிபாருசமே கனதாளே
வருமேமாத மொருமூன்றில் வடிவிற்
சந்திவகுப் பெல்லாம்.

சிரம்மே கனமே சிறுபுறமே
திரண்டு திணிந்த முதுகெலும்பே
வருமே தினம்ஓர் ஆறு ஐந்தின்
மற்றையிரண்டாம் மாதத்தில்
கரமே பதமேகடிதடமே
கலிபாருசமே கனதாளே
வருமே மாதம் ஒரு மூன்றில்
வடிவில் சந்தி வகுப்பெல்லாம்.

உரை:

கருவில் வளரும் குழந்தைக்கு முப்பதாம் நாளில் தலை, கன்னம், பிடரி, உருண்டு திரண்ட முதுகெலும்பு ஆகியவை காணப்படும்; இரண்டாம் மாதத்தில் கை, கால், (பெண்ணாக இருந்தால்) அல்குல் ஆகியன அமையும்; மூன்றாம் மாதத்தில் குழந்தையின் உருவத்தில் மூட்டு அல்லது பொருத்துகள் யாவும் பொருந்தும்.

Koviloor Digital Library

விளக்கம்:

சிரம் - தலை; **கனம்** - கன்னம்; **சிறுபுரம்** - பிடரி; **ஆறு ஐந்து தினம்** - முப்பதாம் நாள்; **கரம்** - கை; **பதம்** - கால்; **கடிதடம்** - அல்குல்.

கலிபாருசம் - இச்சொல்லின் பொருள் விளங்கவில்லை; அகராதிகளில் இச்சொல் இடம் பெறவில்லை; ஓதுவாமூர்த்திகள் இதற்கு விலாப்புறம் என்று பொருள் கொள்ளுகிறார். **கனதாள்** - இச்சொல்லுக்கும் சரியான பொருள் தெரியவில்லை; *தமிழகராதிகளில்* இச்சொல் இல்லை. **தாள்** - பதம் ஆகிய சொற்கள் பொதுவாகக் காலைக் குறிக்கும். கால் என்றால் உள்ளங்காலும் புறங்காலும் சேர்ந்ததுதான். இச்சொல்லுக்கு ஓதுவாமூர்த்திகள் உள்ளங்கால் என்று பொருள் கொள்ளுகிறார்.

சந்தி - எலும்புகளின் மூட்டு அல்லது பொருத்துகளைக் குறிக்கும் கீல். (16)

கருவின் வளர்ச்சி

613. **உதிக்கும் விரல்கள் சதுர்மாதத்தொளிசேர்**
முகநாசிகை கன்னம்
உதிக்குங் குய்யமுகிர்தந்த வொழுங்கூன்
மாத மோரைந்தின்
உதிக்கு மோசைப்புழை
கன்னத்துற்ற மாதமோராறுள்
உதிக்குமாத மோரேழுளு
பத்தமிலிங்க மொளிபெறவே.

உதிக்கும் விரல்கள் சதுர்மாதத்து
ஒளிசேர்முகம் நாசிகை கன்னம்
உதிக்கும் குய்யம் உகிர்தந்த ஒழுங்கு
ஊன்மாதம் ஓர் ஐந்தில்
உதிக்கும் ஓசைப்புழை கன்னத்து
உற்றமாதம் ஓர் ஆறுள்
உதிக்கும் மாதம் ஓர் ஏழுள்
உபத்தம் இலிங்கம் ஒளிபெற ஏ.

உரை:

கருவில் வளரும் பிள்ளைக்கு நாலாம் திங்களில் கைகால்களில் விரல்களும், அழகு பொருந்திய முகமும் மூக்கும் கன்னங்களும் உண்டாகும்; ஐந்தாம் திங்களில் மலவாயிலும், நகங்களும், எயிறுகளும், தசையும் உண்டாகும்; ஆறாம் திங்களில் இரு கன்னங்களிலும் துளைகளையுடைய காதுகள் உண்டாகும்;

Koviloor Digital Library

ஏழாம் திங்களில் பெண் மகவாயின் நிதம்பமும், ஆண்மகவாயின் ஆண் குறியும் அழகும் பொருந்த உண்டாகும்.

விளக்கம்:

உதிக்கும் - உண்டாகும்; சதுர்மாதம் - நாலாம் திங்கள்; நாசிகை - மூக்கு; குய்யம் - சிறுநீர் வெளியாகும் உறுப்பு; உகிர் - நகம்; தந்தம் - பல்; தந்த ஒழுங்கு - எயிறு; ஊன் - தசை; ஓசைப்புழை - துளைகள் உள்ள காதுகள்; உபத்தம் - பெண்குறி; இலிங்கம் - ஆண்குறி; ஒளி - அழகு.

இங்கு இலிங்கம் என ஆண்குறி சொல்லப்படுதலால் முன்செய்யுளில் மேகனம் - ஆண்குறி என்றல் பொருந்தாது சிரமே+கனமே எனப் பிரித்துக் கனம் கன்னம் என்பதன் தொகுத்தல் எனக் கொள்ளல் பொருந்தும். (17)

கருவில் வளரும் குழந்தை

614. குதமுந் தோன்றுங் கொப்பூழுங்
கூருஞ்சந்தி பேதமெலா
முதயமான விருநான்கு
ளுதிக்குங்கேச முயர்சிரத்திற்
றிதமேயங்கப் பிரத்தியங்கஞ் செறிந்த
மற்றையுறுப் பெல்லாம்
விதமாம் பிராணவாயு முதலைந்தும்
விரவி விளங்கிடுமே.

குதமும் தோன்றும் கொப்பூழும்
கூரும் சந்தி பேதமெல்லாம்
உதயமான இருநான்குள்
உதிக்கும்கேசம் உயர்சிரத்தில்
திதமே அங்கப்பிரத்தி அங்கம்
செறிந்த மற்றை உறுப்பெல்லாம்
விதமாம் பிராணவாயு முதல்
ஐந்தும் விரவி விளங்கிடும்.ஏ.

உரை:

மல உறுப்பும், கொப்பூழும், எலும்பு மூட்டுகளும், தோன்றிய எட்டாம் மாதத்தில் பிற உறுப்புகளும், தலைமயிரும் உண்டாவதோடு, பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன் என்ற ஐந்து காற்றுகளும் தோன்றும்.

Koviloor Digital Library

விளக்கம்:

குதம் - மலம் வெளியாகும் உறுப்பு; **சந்தி** - மூட்டு, பொருத்து; **உதயமான இருநான்கு** - கருத்தரித்த எட்டாம் மாதம்; **கேசம்** - தலைமயிர்; **அங்கப் பிரத்தி அங்கம்** - தலை முதலியவற்றின் உள் உறுப்புகள்; 6ஆம் செய்யுளில் சிரம் வந்துள்ளதால் இங்கு அங்கப் பிரத்யங்கம் அதன் உள்ளுறுப்பாகும். **செறிந்த** - பொருந்திய; **விரவி** - கலந்து; **பிராணவாயு முதல் ஐந்து** - பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன் என்ற ஐந்து காற்றுகள். **பிராணன்** - உயிர்வளி அல்லது உயிர்க்காற்று; **அபானன்** - மலக்காற்று; **உதானன்** - ஒலிக்காற்று; **சமானன்** - நிரவு காற்று; **வியானன்** - தொழிற்காற்று. (18)

கருவில் குழந்தையின் வளர்ச்சி நிலை

615. அன்னையருந்து மாகாரத்
தாறு சுவையுமடைவுறவே
துன்னுநாபி சூத்திரத்
தாலுதரத்திடையே தொகுமதனால்
மன்னுமனா தியவற்றாலு மாந்துந்
துக்கஞ் சுகஞ் சீவன்
முன்னைச் செயலுங் கனவெனவே
முளைக்கும்பிரியு மோகமுமே.

அன்னை அருந்தும் ஆகாரத்து
ஆறு சுவையும் அடைவுஉற
துன்னம்நாபி சூத்திரத்தால் உதரத்து
இடையே தொகும் அதனால்
மன்னும் மனஆதி அவற்றாலும் மாந்தும்
துக்கம் சுகம் சீவன்
முன்னைச் செயலும் கனவெனவே
முளைக்கும் பிரியு மோகமும் ஏ.

உரை:

தாய் உண்ணும் உணவில் இருந்து இனிப்பு, புளிப்பு, கசப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, உறைப்பு என்ற ஆறுவகைச் சத்துகளும் தொப்பூழ்க் கொடியின் துளைவழியாகக் கருவில் உள்ள குழந்தையின் வயிற்றை அடையும்; அதனால் பொருந்திய மனம், அறிவு, நினைப்பு, முனைப்பு என்னும் அகக் கருவிகள் நான்கும் உண்டாகும். நான்கினால் கருவில் வளரும் உயிர் இன்ப துன்பங்களை நுகரும்; பின்னர், முன் பிறவிகளில் செய்த புண்ணிய பாவங்கள் அதன் அறிவில் கனவு போலத் தோன்றும்; அப்போது அதனிடம் உள்ள அறியாமை அகலும்.

Koviloor Digital Library

விளக்கம்:

அருந்தும் - உண்ணும்; **ஆகாரம்** - உணவு; **அடைவு** - முறை; **ஆறுசுவை** - இனிப்பு, புளிப்பு, கசப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, உறைப்பு என்ற ஆறுவகைச் சுவைகள். இவை ஆறுவகைச் சத்துகளாக மாறிக் கருவில் வளரும் குழந்தையை அடைகின்றன. இனிப்பால் விந்துவும், புளிப்பால் மூளையும், உவர்ப்பினால் எலும்பும், கசப்பால் கொழுப்பும், உறைப்பால் தசையும், துவர்ப்பால் குருதியும் உண்டாகும் என்பது மருத்துவ நூல் முடிபு. **மனம் ஆதி** - மனம் முதலான நான்கு அகக் கருவிகள். அவை மனம், அறிவு, நினைப்பு, முனைப்பு ஆகியன. **மாந்தும்** - நுகரும்; **துக்கம்** - துன்பம்; **சுகம்** - இன்பம்; **முன்னைச் செயல்** - முன்பிறவிகளில் நிகழ்ந்தவை; **முளைக்கும்** - தோன்றும்; அஞ்ஞானம் மயக்கம். (19)

கருப்பையில் உள்ள பிள்ளையின் மன நிலை

616. இறந்தே முனமே யினிப்பிறப்பே
மென்றுமிந்த முறையினியாம்
பிறந்த பொழுதே பிறவாத
பெருமையுடைய பிஞ்ஞகனை
யறிந்தேயவலப் பிறப்பிறப்பை
யறுத்து விடுவோமவனருளாற்
செறிந்தே குரவன் றிருவடியைத்
திகழ்ந்த வேதாகமந் தெருண்டே.

இறந்தேம் முனமே இனிப்பிறப்பேம்
என்றும் இந்தமுறை இனியாம்
பிறந்த பொழுதே பிறவாத
பெருமை உடைய பிஞ்ஞகனை
அறிந்தே அவலப் பிறப்பு இறப்பை
அறுத்து விடுவோம் அவன் அருளான
செறிந்தே குரவன் திருவடியைத்
திகழ்ந்த வேதஆகமம் தெருண்டு ஏ.

உரை:

முன்னமே பிறந்து இறந்தோம்; மறுபடியும் பிறப்போம். ஆகையால், இப்பொழுது உலகில் பிறந்ததும் தலைக்கோலம் அணிந்த சிவபிரானுடைய திருவருளால் குருவின் திருவடிகளை அடைந்து, ஒளிபொருந்திய உபநிடத ஆகமங்களின் உண்மைகளைத் தெளிவாகக் கற்றறிந்து, பிறவாத பெருமையுடைய சிவபிரானின் திருவருளைப் பெற்று, பயனற்ற பிறப்பு இறப்புகளை ஒழித்துவிட வேண்டும் என்று எண்ணும்.

Koviloor Digital Library

விளக்கம்:

இறந்தேம் - இறந்தோம்; இனி - மீண்டும்; பிறப்பேம் - பிறப்போம்; பிஞ்ஞகம் - தலைக்கோலம், தலைஅணி. பிஞ்ஞகன் - தலைக்கோலமுடைய சிவபிரான் என்பது அப்பர் அருள்மொழி. அவலம் - பயனற்றது; செறிந்து - அடைந்து; திகழ்ந்த - ஒளியுள்ள; தெருண்டு - கசடறத் தெளிவாகக் கற்றறிந்து; அறுத்து - ஒழித்து.

குறிப்பு:

பிஞ்ஞகம் தலைமாலையல்ல, சந்திரப்பிறை என வழங்கும் அணிக்குச் சமமாகச் சிவன் சடையில் உள்ள இளம்பிறைதான் பிஞ்ஞகம். சந்திரப் பிறையும் பிஞ்ஞகம் எனப்படும். (20)

முன்பாடலின் தொடர்ச்சி

617. என்றென் றெண்ணி
யிருக்குமுயிரிடர்ப்பட்டழியு மெழில்வரைக்கீ
ழொன்று மொருவன்றனைப்
போலக் கருப்பாசயப்பையுறுத்து தலான
மன்றவுததி மறிந்தாழ்வான்
வருத்தமென்ன வருந்தியிடு
நின்ற கருப்பாசய வுதக வெள்ளங்
கொள்ள நிறையழிந்தே.

என்றுஎன்று எண்ணி இருக்கும் உயிர்
இடர்ப்பட்டு அழியுட எழில்வரைக்கீழ்
ஒன்றும் ஒருவன் தனைப்போலக்
கருப்பாசயப்பை உறுத்துதலால்
மன்றஉததி மறிந்து ஆழ்வான்
வருத்தம் என்ன வருந்தியிடும்
நின்றகருப்ப ஆசயஉதக வெள்ளம்
கொள்ள நிறை அழிந்து ஏ.

உரை:

இவ்வாறு எண்ணிக் கொண்டிருக்கின்ற உயிர், கருப்பையின் அழுத்தத்தால், அழகிய மலையின் கீழ் நெருக்கப்பட்ட ஒருவன் அடையும் துயரத்தைப் போலத் துன்புறும். மேலும் கடலில் மரக்கலத்தில் இருந்த ஒருவன் கடல்நீரில் அமிழ்ந்து வருந்துவது போல, கருப்பையில் உள்ள நீரில் அழுந்திய உயிர் வருந்த அறிவு மயங்கியிருக்கும்.

Koviloor Digital Library

விளக்கம்:

இடர்ப்பட்டு - துன்புற்று; வரை - மலை; ஒன்றும் - நெருக்கிய; ஆசயம் - பை; கருப்ப ஆசயம் - கருப்பை; உததி - கடல்; உறுத்துதல் - அழுத்துதல், நெருக்குதல்; கருப்பாசய உதகம் - கருப்பையில் உள்ள நீர்; வெள்ளம் - நீர்ப் பெருக்கு; நிறை - இங்கு மனவுறுதி. நிறை அழிதல் - மனக்கலக்கம்; அறிவு மயக்கம். (21)

முன்பாடலின் தொடர்ச்சி

618. அங்கிய தனிற்றங்கியிடு மயோமயத்த கும்பத்திற்
றங்கு மொருவன் றபனம் போற்றபனமெய்துந் தாயுதரத்
தங்கி சுடவே யழலனைய சூசியதனா லாகத்தைப்
பங்கித்திடவே படுமிடரி லிருநாற்குணிதம் பட்டழுங்கும்.

அங்கி அதனில் தங்கிஇடும் அயோமயத்த கும்பத்தில்
தங்கும் ஒருவன் தபனம் போல் தபனம் எய்தும் தாய் உதரத்து
அங்கி சுடவே அழல் அனைய சூசி அதனால் ஆகத்தைப்
பங்கித்திடவே படும் இடரில் இருநால் குணிதம்பட்டு அழுங்கும்.

உரை:

தீயிலிருந்து அகற்றப்படாத இரும்புக் குடத்திலே அமர்த்தப்பட்ட ஒருவன் எவ்வாறு வெப்பத்தால் துயரம் அடைவானோ அதைப் போலவும், தீயில் காய்ச்சிய இரும்பு ஊசியால் ஒருவனுடைய உடலைத் துளைத்தால் அவன் எத்தகைய துன்பத்தை அடைவானோ, அதைப் போல எட்டு மடங்கு துன்பத்தையும், தாயின் கருப்பையில் இருக்கிற உயிர், அத்தாயின் வயிற்றுத்தீயின் வெப்பத்தால் அடைந்து துன்புறும்.

விளக்கம்:

அங்கி - நெருப்பு; அயம் - இரும்பு; அயோமயத்த - இரும்பினால் செய்த; கும்பம் - குடம்; தபனம் - சூடு; உதரத்து அங்கி - வயிற்றுத்தீ; அழல் - தீ; அனைய - போன்ற; சூசி - ஊசி; ஆகம் - உடம்பு; பங்கித்து - துளைத்து, பிளந்து; இருநால் - எட்டு; குணிதம் - மடங்கு; அழுங்கும் - துன்புறும். (22)

பிறக்கும் போது உயிரின் துயரம்

619. கருப்பாசயமே கட்டதரமதனின
திகங் கடுங்காலு
முரிக்கமிகவு மோக முற
முன்னையுணர்வு மந்நிலையே

Koviloor Digital Library

மரிக்க ஆலைக் கரும்பனவே
யோனிவழியின் வலிதொலைய
நெருக்கப்பட்டு நிலமிசையே தோன்று
முயிரு நிலையுடனே.

கருப்பாசயமே கட்டதரம் அதனில்
அதிகம் கடுங்காலும்
முரிக்க மிகவும் மோகம்
உறமுன்னை உணர்வும் அந்நிலையே
மரிக்க ஆலைக் கரும்பு எனவே
யோனி வழியில் வலிதொலைய
நெருக்கப்பட்டு நிலம்மிசையே தோன்றும்
உயிரும் நிலையுடன் ஏ.

உரை:

உயிர், தாயின் கருப்பையில் இருந்த போது அனுபவித்த துயரமே அதிகம். அதினும் அதிகமான துயரத்துடன் வியானன் என்ற தொழிற்காற்று உயிரின் உடலை மடக்கித் தலை கீழாகத் தள்ளும்போது அது மேலும், துயரடைந்து, மயங்கி, முன் இருந்த நல்லுணர்வும் கலக்கம் எய்தி, ஆலையில் உள்ள உருளையால் அழுத்தப்படும் கரும்பு போலத் தாயின் யோனியில் நெருக்கப்பட்டு, உடலோடு தரைமீது பிறக்கும்.

விளக்கம்:

கட்டதரம் - மிகத்துயரம்; **முரிக்க** - மடக்கித் தள்ள; **கடுங்கால்** - தொழிற்காற்று. வடமொழியாளர் இதனை 'வியானன்' என்பர். **முனை உணர்வு** - முன் பிறவி பற்றியும் இனிப் பிறவாநெறி காண வேண்டும் என்பது பற்றியும் மிகுந்த உணர்வு. **மரிக்க** - கெட்டு **ஆலை** - கரும்பு ஆலை; கரும்புகளை இரும்பு உருளைகளிடையே வைத்து அழுத்திச் சாறுபிழிந்து, சருக்கரை முதலியன செய்யும் தொழிற்சாலை. **யோனி** - அல்குல்; **வலி** - வலிமை; **தொலைய** - ஒழிய; **நெருக்கப்பட்டு** - அழுத்தப்பட்டு; **நிலம் மிசை** - மண்மீது. (23)

பிறந்த உயிரின் இயல்பு

620. சூக்க வுருவைத் தொட்டெழுந்த
தூலவுருவைத் துதைந்தந்த
வாக்கை தன்னை
யானென்றேயபிமானித்தே யறம்பாவ

Koviloor Digital Library

மாக்கும் பயனை முறையுறவே
யருந்திப் பின்னுமறம்பாவ
மாக்கியானென் செருக்காலே
யடங்கிப் பிறக்குமாருயிரே.

சூக்கம் உருவைத் தொட்டு எழுந்த
தூலம் உருவைத் துதைந்துஅந்த
ஆக்கை தன்னை யான்என்றே
அபிமானித்து அறம்பாவம்
ஆக்கும் பயனை முறை உறவே
அருந்திப் பின்னும் அறம்பாவம்
ஆக்கியான் என்செருக்காலே அடங்கிப்
பிறக்கும் ஆருயிர் ஏ.

உரை:

உயிரானது சூக்கும உடம்பைக் கொண்டு பருவுடலைப் பொருந்தி, அந்தப் பருவுடலையே தான் என்று கருதி ஆசை வைத்துப் புண்ணிய பாவங்களைச் செய்யும். பின்னர், அவற்றின் பயனை நுகர மீண்டும் பிறந்து, யான் எனது என்னும் பற்றினால் புண்ணிய பாவச் செயல்களைத் தொடர்ச்சியாகச் செய்து மறுபடியும் இறந்து பிறந்து உழலும்.

விளக்கம்:

சூக்கம் - சூக்குமம். இது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், மனம், அறிவு, செருக்கு என்ற எட்டுத் தத்துவங்களைக் கொண்ட நுண் உடல்.

தூலஉரு - பருவுடல்; துதைந்து - பொருந்தி; ஆக்கை - உடல்; அபிமானம் - ஆசை, பற்று; அறம் - ஈகை; ஆக்கும் - செய்யும். (24)

உடலின் உறுப்புகளுடைய எண்ணிக்கை

621. முற்று முடலின் முளைத்தமயிர்
மூன்று கோடியரைக்கோடி
மற்றுமுளவே நாடிகளு
மதிக்கிலனைத் தேவாயதனுட்
பற்றிமுளைத்தபல்லெழு நான்கொரு
நான்கெனவே பார்த்திடுக
உற்றவுகிரு மொருபஃதே
கரத்திற்பதத்து மொருபஃதே.

Koviloor Digital Library

முற்றும் உடலில் முளைத்தமயிர்மூன்று
கோடி அரைக்கோடி
மற்றும் உளவே நாடிகளும் மதிக்கில்
அனைத்தே வாய் அதனுள்
பற்றிமுளைத்த பல்எழு நான்கு
ஒருநான்கு எனவே பார்த்திடுக
உற்ற உகிரும் ஒருபத்தே
கரத்தில் பதத்தும் ஒருபத்து ஏ.

உரை:

உடலில் முளைத்த மயிர்களின் எண்ணிக்கை மூன்றரைக் கோடி; அளவிட்டால் உடம்பில் உள்ள நாடிகளின் எண்ணிக்கையும் மூன்றரைக் கோடியே; வாயினுள் முளைத்த பற்கள் முப்பத்திரண்டு; கைவிரல்கள் பத்து; அவற்றில் தோன்றும் நகங்களும் பத்து; கால் விரல்கள் பத்து; அவற்றில் உண்டாகும் நகங்களும் பத்து.

விளக்கம்:

எழுநான்கு - இருபத்தெட்டு + ஒரு நான்கு - முப்பத்திரண்டு; பஃது - பத்து. (25)

நாடி முதலியவற்றின் எண்ணிக்கை வேறுபடுவதுண்டு

622. நாடியளவு மயிரளவு
நாடின் மற்றையுறுப்பளவும்
நாடவரிய பராபரன்றான
வின்ற மற்றையனவுரையிற்
கூடும்பேத மூழிதொறுஞ் சிருட்டி
பேதங் கூடுதலா
லூடும் பொருள்களொப் பிலிதனுரைக்கு
முண்டோ வுணருங்கால்.

நாடி அளவும் மயிர் அளவும்நாடின்
மற்றை உறுப்பு அளவும்
நாட அரிய பராபரன்தான்
நவின்ற மற்றையன உரையில்
கூடும் பேதம் ஊழிதொறும்
சிருட்டி பேதம் கூடுதலால்
ஊடும் பொருள்கள் ஒப்பிலிதன்
உரைக்கும் உண்டோ உணருங்கால்.

Koviloor Digital Library

உரை:

நாடி, மயிர் முதலான உறுப்புகளின் எண்ணிக்கை அளவை ஆராயும் போது, கருதுவதற்கு அரிதான இறைவன் அருளிய நூல்களுக்குள் மாறுபடக் கூறப்பட்டிருப்பது ஊழிதோறும் ஏற்பட்ட படைப்பு வேறுபாடுகளின் காரணமாக மாறுபடச் சொன்னதாகும். இதைத் தவிர, ஒப்பற்ற சிவன் அருளிய நூல்களுக்கு இடையே பிணக்கு இல்லை.

விளக்கம்:

பராபரன், ஒப்பிலி - இவை சிவனைக் குறிக்கும் பெயர்கள். நாடின் - ஆராயின்; நாட - கருத; பராபரன் நவின்ற உரை - சிவாகமங்கள்; ஊடும் - பிணங்கும்; ஊழி - உலகமுடிவு நாள்; சிருட்டி - படைப்பு; பேதம் - மாறுபாடு, வேறுபாடு. (26)

உடம்பின் தன்மை

623. உற்ற உடற்பித்த முழக்குரியுடனே நானாழி
மற்றைமிடற்றுறுகபமும் வசை நிணத்தின் பலமைஞ்ஞான்
குற்ற கலிலப் பலமுமொருபஃதென் பறுபஃது
மற்றுமிருநூறு மொருநூறு முள மதிக்குங்கால்.

உற்ற உடல் பித்தம் உழக்கு உரிஉடனே நால்நாழி
மற்றை மிடற்று உறுகபமும் வசை நிணத்தின்பலம் ஐஞ்ஞான்கு
உற்ற கலிலப்பலமும் ஒரு பஃதுஎன்பு அறுபஃது
மற்றும் இருநூறும் ஒரு நூறும் உள மதிக்குங்கால்.

உரை:

அளவிடுங்கால் உடலில் சேரும் பித்தத்தின் அளவு முக்காற்படி; தொண்டையில் சேரும் கோழை நான்குபடி; கொழுப்பின் நிறை இருபது பலம்; குருதியின் நிறை பத்துப்பலம்; எலும்பின் அளவு முந்நூற்று அறுபது.

விளக்கம்:

உழக்கு, உரி, நாழி - பழைய முகத்தல் அளவைப் பொருள்கள்; பலம் - இது நிறுத்தல் அளவைக்கு உரியது; படிக்கல் என்பர். கபம் - கோழை; கலிலம் - செந்நீர்; என்பு - எலும்பு; நாழி - படி; அறுபஃது - அறுபது; உழக்கு - காற்படி; உரி - அரைப்படி; மிடறு - தொண்டை; ஐஞ்ஞான்கு - ஐந்து நான்கு - இருபது; அறுபது+இருநூறு+ஒரு நூறு - முந்நூற்று அறுபது.

உழக்கு, உரி, நாழி என்கிற முகத்தலளவைப் பொருள்களும், பலம், வீசை போன்ற நிறுத்தலளவைக்குரிய கற்களும் இப்பொழுது புழக்கத்தில் இல்லை. (27)

Koviloor Digital Library

முன்பாடலின் தொடர்ச்சி

624. ஒருபஃதே பலம் பித்த வுருவான மேதைக்குப்
பெரிய பலமைந்நூறு பெற்றிடு மூனொரு நூறு
முருகுதிரமிறுகுதிர மொருமூன்று பலமாகு
மிருமூன்று மிருமூன்று மூளையினுக் கெய்தியிடும்.

ஒருபஃதே பலம் பித்தம் உருவான மேதைக்குப்
பெரியபலம் ஐந்நூறு பெற்றிடும் ஊன்ஒரு நூறு
முருகுதிரம் இறுகுஉதிரம் ஒரு மூன்று பலம் ஆகும்
இருமூன்றும் இருமூன்று மூளையினுக்கு எய்தியிடும்.

உரை:

உடம்பில் உள்ள பித்தத்தின் நிறை பத்துப்பலம் ஆகும்; அமைந்த இறைச்சி, தோல், நரம்பு ஆகியவற்றின் எடை ஐந்நூறு பலம் ஆகும்; தசையின் எடை நூறு பலம் ஆகும்; அழகிய கட்டி இரத்தம் மூன்று பலம் எடையுடையது; மூளையின் நிறை பன்னிரண்டு பலம் ஆகும்.

விளக்கம்:

பஃது - பத்து; மேதை - கொழுப்பு; ஊன் - தசை; இறுகுதல் - கட்டியாதல்; உதிரம் - செந்நீர்; இருமூன்றும் இருமூன்றும் - பன்னிரண்டு; பலம் - நிறை, எடை. தசை ஐந்நூறு பலமெனப் பின்வருதலின் மேதையில் இறைச்சியடங்காது. (28)

முன்பாடலின் தொடர்ச்சி

625. வீரியமு மாழாக்கு விளம்பியிடுமிவையெல்லா
மோரளவு படவுணரி லுகிர்மயிரென்பொடு மொன்றப்
பாரவுடற் குறுபலமுமாயிரமே பழுதாய
நீரினுக்கு மலத்தினுக்கு நிறையில்லை நிகழ்த்துங்கால்.

வீரியமும் ஆழாக்கு விளம்பியிடும் இவை எல்லாம்
ஓர் அளவுபட உணரில் உகிர்மயிர் என்பொடும் ஒன்றப்
பார உடலுக்கு உறுபலமும் ஆயிரமே பழுது ஆய
நீரினுக்கும் மலத்தினுக்கும் நிறையில்லை நிகழ்த்துங்கால்.

உரை:

மனித உடம்பில் உள்ள சுக்கிலம் அல்லது சுரோணிதத்தின் அளவு அரைக்காற்படி. இவ்வாறு இங்குச் சொல்லப்படுகின்ற அனைத்தையும் ஒருவரையறை செய்து அறிந்தால் நகம், மயிர், எலும்போடு பொருந்திய

Koviloor Digital Library

தசையுடலின் பருத்த உடம்பின் கனம் அல்லது எடை ஆயிரம் பலம் ஆகும். சொல்லுவதாயின், பயனற்ற சிறுநீரும் மலமும் கழிவுப் பொருள்களாக உடலில் அவ்வப்போது தோன்றி அவ்வப்போது வெளியேறி விடுவதால் அவற்றிற்கு எடை இல்லை.

விளக்கம்:

வீரியம் - இது ஆடவருக்கும் மகளிருக்கும் பொதுவானது. ஆடவரின் வீரியம், ஆண்மை, சுக்கிலம், விந்து, வெண்ணீர் எனப்படும். பெண்ணின் வீரியம், பெண்மை, சுரோணிதம், சூதகம், செந்நீர் எனப்படும்.

ஆழாக்கு - அரைக்காற்படி; ஒரு படியில் எட்டில் ஒரு பாகம்; 1/8. ஏறக்குறைய ஒரு பால் குவளை அளவு கொள்ளக் கூடியது; இதுவும் ஒரு சிறு முகத்தில் அளவைப் பொருள்; இதுவும் இப்போது புழக்கத்தில் இல்லை.

விளம்புதல் - சொல்லுதல்; அளவுபட - வரையறை செய்து; பழுது ஆய - பயனற்ற; குற்றமுள்ள. (29)

அறிவாளிகள் உடலைப் பொருட்படுத்துவதில்லை

626. பொல்லாத புலையுடலைப்
புழுப்பொதிந்த போர்வையினை
நில்லாத நீரெழுத்தை
நிகரிலிதன் றிருவாக்கைக்
கல்லாதார் பொருளெனவே
காண்பதனைக் கலந்தறிந்து
நல்லார்கள் பொருளாக
வொருகணமு நாடாரே.

பொல்லாத புலைஉடலைப்
புழுப்பொதிந்த போர்வையினை
நில்லாதநீர் எழுத்தைநிகர்
இலிதன் திருவாக்கைக்
கல்லாதார் பொருள் எனவே
காண்பதனைக் கலந்து அறிந்து
நல்லார்கள் பொருள்ஆக ஒரு
கணமும் நாடார் ஏ.

உரை:

அழுக்கு அடையும் ஊன் உடலை, உள்ளே கிருமிகள் இருக்க அவற்றைச் சேர்த்துத் தோலால் மூடப்பட்டிருப்பதை, நீரில் எழுதிய எழுத்தைப் போல விரைவில் மறைவதை, ஒப்பற்ற சிவபிரான் திருவாய் மொழியான சிவாகமங்களைத்

Koviloor Digital Library

தக்கவரிடம் கற்று, உணர்ந்து, தெளியாத சாதாரண மாந்தர், இந்த உடலை நிலையான ஒரு பொருளாகக் கண்களாற் கண்டு நம்புவதை, சிவாகம உண்மைகளைத் தக்க ஆசான் மூலமாகக் கற்று, தெளிந்து, திருவருளோடு கலந்து, அவ்வுணர்வோடு இருக்கும் சிவஞானியர், இவ்வுடலை நிலையான ஒரு பொருளாக ஓர் இமைப்பொழுதும் விரும்புவதில்லை.

விளக்கம்:

பொல்லாத - இது உடல் விளைக்குந் தீங்குகளைக் குறிக்கிறது. புலை - ஊன்; பொதிந்த - மூடிய; நிகர்இலி - ஒப்பற்ற சிவன்;

திருவாக்கு - இது சிவாகமங்களைக் குறிக்கிறது. கலந்து - திருவருளோடு பொருந்தி; நாடார் - விரும்பார். (30)

உடம்பு அருவருப்பானது!

627. தன்னுடலத் தருவருப்பைத் தானறிந்துஞ்சரீரத்து
ளென்னிருப்பாமெனத் துளங்கியிளையாத விழுதைக்குப்
பன்முறையாலுடற்பழுதைப் பாடித்தும் பயனில்லைச்
சொன்னிரையிற்றுணிவாரோ காட்சியினிற்றுணியாரே.

தன் உடலத்து அருவருப்பைத்தான் அறிந்தும் சரீரத்துள்
என் இருப்பாம் எனத் துளங்கி இளையாத இழுதைக்குப்
பன்முறையால் உடற்பழுதைப் பாடித்தும் பயன்இல்லை
சொல்நிரையில் துணிவாரோ காட்சியினில் துணியார் ஏ.

உரை:

தன் உடம்பானது வியர்வை, மூத்திரம், மலம், சளி, கோழை, முதலான அழுக்குகளை உடையது; நோய்வாய்ப்படுவது; இளமை, முதுமை போன்ற பருவ மாற்றங்களாலும், வெயில், பனி, மழைகளாலும் வருந்துவது என்பதை நேரில் அனுபவ வாயிலாக அறிந்திருந்தும், இவ்வுடலோடு கூடிய வாழ்வு பயனற்றது என உணர்ந்து, மனம் தளராத அறிவிலிக்கு, பல தடவைகளில் விளக்கமாக எடுத்துரைத்தாலும் மனம் தெளிவு பெறாது. நேரிற் கண்டறிந்தும் மனத்துணிவு பெறாதவர் வெறும் அறிவுரையால் தெளிவு பெறுவாரா.

விளக்கம்:

துளங்கல் - கலங்கல்; இழுதை - அறிவிலி; பழுது - குறைபாடு; பாடித்து - கூறி; சொல்நிரை - அறிவுரை; துணிவு - மனத் தெளிவு. (31)

Koviloor Digital Library

உடம்பின்மீது வெறுப்பு

628. பொற்கடத்துண் மலம் பொருந்திற்
புல்லியரும் யொருணசையா
வக்கடத்தைப் பற்றியிடா
ரங்கையினால வனிதனின்
மக்கடம துடலினைத்தா
மலபாண்ட மெனவறிந்து
மெக்கணக்காலி கழாதேயரு
வருப்பற் றிருக்கின்றார்.

பொன்கடத்துள் மலம் பொருந்தில்
புல்லியரும் பொருள் நசையால்
அக்கடத்தைப் பற்றியிடார்
அங்கையினால் அவனிதனில்
மக்கள் தமது உடலினைத்தாம்
மலபாண்டம் என அறிந்தும்
எக்கணக்கால் இகழாதே அருவருப்பு
அற்று இருக்கின்றார்.

உரை:

உலகில் தங்கக் குடத்தின் உள்ளே மலம் சேர்ந்து இருந்தால், கீழானவர்கள் எனக் கருதப்படுகின்றவர்களும் அக்குடத்தைத் தம் கையால் பிடித்து எடுக்க மாட்டார்கள். இவ்வாறு இருந்தும், மக்கள் எந்தக் காரணத்தால் தம் உடலை மலம் உள்ள பாண்டம் என உணர்ந்து இகழ்ந்து வெறுப்படையாமல் இருக்கின்றார்கள்? (32)

உடம்பு தூய்மை இல்லாதது

629. அருந்திடி னானமிர்ததனை மலமாக்கு மலவாக்கை
பொருந்திடுமோ நலம்புனித தீர்த்தத்திற் பொருந்திடினும்
விரிந்த கருங்கம்பளத்தின் வெள்ளைநிறம் விளைந்திடுமோ
சொரிந்திடினுமான்பாலை யொருபொழுதுந் துறவாதே.

அருந்திடில் ஆன் அமிர்துதனைமலம் ஆக்கும்மல ஆக்கை
பொருந்திடுமோ நலம்புனித தீர்த்தத்தில் பொருந்திடினும்
விரிந்த கரும் கம்பளத்தில் வெள்ளைநிறம் விளைந்திடுமோ
சொரிந்திடினும் ஆன்பாலை ஒருபொழுதும் துறவாது ஏ.

Koviloor Digital Library

உரை:

தரையில் விரிக்கும் கரிய நிற விரிப்பில் பசுவின் வெள்ளைநிறப் பாலை ஊற்றினாலும் அதன் கரிய நிறம் மாறாதது போல, பசுவின் பாலைப் பருகினாலும் செரிப்பதன்மூலம் அதனையும் மலமாக மாற்றிவிடும் இவ்வுடலின் அழுக்கு, நன்னீரில் மூழ்குவதனால் மட்டும் நீங்கி விடாது.

விளக்கம்:

அருந்திடில் - பருகினால்; **ஆன்** - பசு; **அமிர்து** - பால்; **மலஆக்கை** - அழுக்கான உடம்பு; **புனிததீர்த்தம்** - நன்னீர்; **சொரிதல்** - ஊற்றுதல்; **துறவாது** - நீக்காது. (33)

630. அருவருப்பை யாகத்தைச் சுத்திபணயார் வல்லார்
கரிசறுத்து மனமதனிற் கருதரியன் கழலடியி
லொருமையுற லுயிர்ச் சுத்தியுவமனிலாப் பதமுதவுங்
குரவனருளிய பரமவாக்கியத்தைக் குறிக்கொண்டே.

அருவருப்பை ஆகத்தைச் சுத்திபண்ண யார்வல்லார்
கரிசு அறுத்துமனம் அதனில் கருது அரியன்கழல் அடியில்
ஒருமைஉறல் உயிர்ச்சுத்தி உவமன் இலாப்பதம் உதவும்
குரவன் அருளிய பரம வாக்கியத்தைக் குறிக்கொண்டு ஏ.

உரை:

வெறுப்புக்கு உரிய உடலைத் தூய்மையாக வைத்திருக்கும் வல்லமையுள்ளவர் யாரும் இல்லாததால் உயிரும் தூய்மை பெற வழி இல்லை. ஆகையால், உயிரின் மாசு நீங்குவதற்கு, இணையில்லாத முத்தியின்பத்தைத் தரவல்ல ஞானாசிரியர் உபதேசித்த மேலான மந்திர மொழியைக் குறிக்கோளாகக் கொண்டு, ஆசை முதலிய குற்றங்களை ஒழித்து, மனதால் கருதுவதற்கு அரிய சிவபிரான் திருவடிகளிலே உயிரை ஒன்ற வைப்பதே உயிர்தூய்மை பெறுவதற்கு உரிய வழி ஆகும்.

விளக்கம்:

அருவருப்பு - வெறுப்பை விளைவிப்பதோர் தன்மை; **ஆகத்தை** - உடலை; **சுத்திபண்ண** - தூய்மைப்படுத்த; **வல்லார்** - ஆற்றல் உடையார்; **கரிசு** - குற்றம்; **அறுத்து** - ஒழித்து; **கருதுதல்** - எண்ணுதல்; **அரியன்** - அரிய சிவபிரான்; **கழல்** - வீரக்கழல் அணிந்த; **அடி** - திருவடிகள்; **ஒருமை உறல்** - ஒன்றி நிற்றல்; **சுத்தி** - தூய்மை; **உவமன்** - ஒப்பு; **பதம்** - முத்திநிலை; **குரவன்** - ஞானாசிரியர்; **பரம** - மேலான; **வாக்கியம்** - மந்திரமொழி.

Koviloor Digital Library

குறிப்பு:

இக்கருத்தைப் பதிக்கு முகமாகத்தான் முன்னைய செய்யுள்களில் உடலிழிவை அழுத்திக் கூறியதென்பதை இங்கு வைத்தும் உணர்க. (34)

ஞானிக்கு ஆகாமியம் இல்லை

631. மனத்துமய லுற்றனனே
மனைவிதனைத் தழுவியவன்
றனக்குமகடனைத் தழுவித்
தங்கினனோ வங்குமயன்
முனைப்பயனை யருந்திடினுந்
தெருண்டார் கண்மோகமிலை
வினைப்பயனை வியந்தருந்தி
மற்றையரே வினைவிளைப்பார்.

மனத்துமயல் உற்றனனே
மனைவிதனைத் தழுவியவன்
தனக்குமகள் தனைத்தழுவித் தங்கினனோ
அங்கும் அயன்
முனைப்பயனை அருந்திடினும்
தெருண்டார்கண் மோகம்இல்லை
வினைப்பயனை வியந்து அருந்தி
மற்றையரே வினைவிளைப்பார்.

உரை:

கணவன் தன் மனைவியை ஆசையோடு அணைக்கிறபோது அவன் மனதில் சிற்றின்ப உணர்வு எழுகின்றது. அவனே தான் பெற்ற புதல்வியை அன்போடு அணைத்துக் கொள்ளுகிற போது சிற்றின்ப உணர்வு உண்டாவதில்லை; வாஞ்சை உண்டாகின்றது. இவ்வாறே, ஒரு ஞானி இப்பிறவியில் முன் செய்த வினைப்பயன்களை நுகரும்போது உண்டாகின்ற இன்ப துன்பங்களில் நாம் செய்கின்றோம் என்ற பற்று வைப்பதில்லை. அதனால், அவருக்கு இப்பிறவியில் ஆகாமியம் ஏற்படுவதில்லை. ஞானி அல்லாத பிறர், இப்பிறப்பில் முன் செய்த வினைகளின் பயனாக உண்டாகும் இன்ப துன்பங்களை நாம் செய்கிறோம் என்று எண்ணுகின்றனர்; அவற்றின் மீது விருப்பு வெறுப்புக் கொள்கின்றனர். அதனால், மேலும் புண்ணிய பாவங்களைப் பெருக்கிக் கொள்கின்றனர்.

விளக்கம்:

மயல் – சிற்றின்ப ஆசை, மோகம்; **தழுவி** – அணைத்து; **முனைப்பயன்** – முன்பிறவியில் செய்த புண்ணிய பாவங்கள்; **அருந்துதல்** – இது இங்கு

Koviloor Digital Library

அனுபவித்தலைக் குறிக்கும். **தெருண்டார்** - அறிவுடையார்; **தெருண்டார்கண்** - அறிஞரிடம்; **வினைவிளைப்பார்** - பாவ புண்ணியங்களைப் பெருக்குவார்; **ஆகாமியம்** - இப்பிறவியில் இன்ப துன்பங்களை அனுபவிக்கும் வகையால் ஈட்டுகின்ற புண்ணிய பாவங்கள். இவையே அடுத்துவரும் பிறவிக்குக் காரணமாக அமைகின்றன. ''வினைப்போகமே ஒரு தேகம் கண்டாய்'' என்பது பட்டினத்து அடிகளின் வாக்கு. (35)

இருவகை நிலை

632. குழவி பயந்தவள் குயத்தை
வருடுதலுங் குழைந்துமன
மொழுகுமுலைப் பாலூட்டி
யொருவாத பரிவினளே
கொழுநனவள் குயம்வருட
வவன்புயத்தைக் கூடுதற்கு
விழைவினளே யித்தகையர் வினைகெடுப்பார்
வினை விளைப்பார்.

குழவிபயந்தவள் குயத்தை வருடுதலும்
குழைந்து மனம்
ஒழுகும் முலைப்பாலூட்டி
ஒருவாத பரிவினளே
கொழுநன் அவள் குயம் வருட
அவன் புயத்தைக் கூடுதற்கு
விழைவினளே இத்தகையர்
வினைகெடுப்பார் வினைவிளைப்பார்.

உரை:

தாய்ப்பால் அருந்தும் குழந்தை, பசித்த போது தாயின் முலைகளைத் தடவும். உடனே தாய்மனம் இளகி, தன் முலைகளிலிருந்து சுரக்கும் பாலைப் பற்றற்ற மனத்தோடும் நீங்காத அன்போடும் தன் குழந்தைக்கு ஊட்டி அதன் பசியைப் போக்குவாள். பசித்த குழந்தைக்குப் பாலூட்டுவது தன் கடமையெனக் கருதுவாள். அக்குழந்தையிடமிருந்து கைம்மாறாக எதனையும் எதிர்பார்ப்பதில்லை.

இவ்வாறே, பயனை எதிர்பாராது பற்றற்ற நிலையில் பிறருக்கு உதவுகிறவர், பிறவிக்குக் காரணமான வினையை ஒழிப்பார்.

உடலின்பத்தை எதிர்பார்த்த கணவன் தன் முலைகளைத் தடவும்போது, உடனே தானும் அவ்வின்பத்தை விரும்பித் தன் கணவனின் தோள்களை அணைத்துக் கொள்ள விரும்புகிற பெண்ணைப் போன்றவர்கள், சாதாரண மக்கள், அவர்கள் உலக இன்பங்களை நாடிப் பிறவிக்குக் காரணமான புண்ணிய பாவங்களைப் பெருக்குவர்.

Koviloor Digital Library

விளக்கம்:

குழவி - மகவு, சேய், குழந்தை; பயந்தவள் - பெற்றவள்; குழைந்து - இளகி; ஒருவாத - நீங்காத; பரிவு - அன்பு; கொழுநன் - கணவன்; குயம் - முலை; புயம் - தோள்; வரிட - தடவ; விழைவினள் - விருப்பினள்; ஒழுகும் - சுரக்கும். (36)

உள்ளத் தூய்மையும் உடல் தூய்மையும்

633. அகச்சுத்தியுடையார் களறுத்திடுவர் பிறப்பினையு
மகச் சுத்தி தனையின்றி யாகத்தைச் சுத்தி செய்வார்க்
குகத்தக்க தீயவினை யொன்றுமிலை யுணருங்காற்
புகத்தக்க புண்ணியத்தின் பலந்தானும் புல்லியதே.

அகச் சுத்தி உடையார்கள் அறுத்திடுவர் பிறப்பினையும்
அகச் சுத்திதனை இன்றி ஆகத்தைச் சுத்தி செய்வார்க்கு
உகத்தக்க தீயவினை ஒன்றும் இல்லை உணருங்கால்
புகத்தக்க புண்ணியத்தின் பலம்தானும் புல்லியது ஏ.

உரை:

ஆராயும்போது, உள்ளத்தூய்மை உள்ளவர்கள் பிறவியை ஒழித்துவிடுவர். உள்ளத் தூய்மையில்லாமல் உடலை மட்டும் துப்புரவாக வைத்துக் கொண்டிருப்பவர் களிலிருந்து நீங்கத்தகும் தீவினை எதுவும் இராது. அவர்கள் அடைகின்ற புண்ணியப் பலனும் அற்பமே.

விளக்கம்:

அகச் சுத்தி - இயம நியமங்களோடு கூடிய தவ ஒழுக்கம். ஆகச் சுத்தி - இயம நியமங்கள் இல்லாமல் நீராடி உடலைத் துப்புரவாக வைத்துக் கொள்ளுதல்; ஆகம் - உடல்.

''சித்த சுத்தன் பூசைக்கு நவில் அங்க சுத்தி இல்லை'' *(குமரேச சதகம்)*
என்று குமர குருபரதாசர் கூறுகின்றார்.

''மனதிலே களங்கம் உள்ள யோகி, மனிதர் நடமாட்டம் இல்லாத காட்டிலே குடிசை அமைத்துத் தனித்திருந்து யோகம் புரிந்தாலும் அவருடைய மனக்களங்கம் அகலாது. மனத் தூய்மையுடைய யோகி இல்லறத்தில் மனைவியோடு கூடி இன்பம் நுகர்ந்தாலும் அவர் பிறப்பு அற்ற முத்திப் பேறு பெற்றிருப்பவர் ஆவார்'' என்று சிவவாக்கியர் கூறுகின்றார்.

Koviloor Digital Library

''மனத்து அகத்து அழுக்கு மவுனஞான யோகிகள்
வனத்து அகத்து இருக்கினும் மனத்து அகத்து அழுக்கு அறார்
மனத்து அகத்து அழுக்கு அறுத்த மவுனஞான யோகிகள்
முலைத்தடத்து இருக்கினும் பிறப்பு அறுத்து இருப்பரே''

(சிவவாக்கியர் பாடல்-175) (37)

சிற்றின்பம் நிலையானது அன்று

634. குட்டவுடற் கொடுக்குமிதங்
கூடினழற் கொடியிடையா
ரிட்டமுமிம் முறையெணுக
விளையவர் தம்பருவம்போற்
குட்டமழற் கூடுதலுங் கொழுநனுக்
கொப்பெனக் கொள்க
தொட்ட துவக்கிந்திரியஞ்
சொற்பொருளுந் துணிவாரே.

குட்ட உடல் கொடுக்கும் இதம்
கூடில் அழல் கொடி இடையார்
இட்டமும் இம்முறை எண்ணுக
இளையவர்தம் பருவம்போல்
குட்டம் அழல் கூடுதலும் கொழுநனுக்கு
ஒப்பு எனக் கொள்க
தொட்ட துவக்கு இந்திரியம்
சொல் பொருளும் துணிவார் ஏ.

உரை:

தொழுநோயாளி ஒருவர் தீயைச் சூழ்ந்து அமர்ந்திருக்கின்ற நேரம் வரை அவருக்கு இதமாக இருக்கும். அவ்வாறே காளைப் பருவமுடையவர் கொடி போன்று சிறுத்த இடுப்பினையுடைய இளம் மகளிரைக் கூடி இன்பம் நுகருகின்ற நேரம் வரை மகிழ்வோடு இருப்பார் எனக் கருதுக.

சிற்றின்ப நுகர்ச்சியை விரும்பும் வாலிபப் பருவம் தொழுநோய்க்கு ஒப்பாகும். இளம் மகளிரைக் கூடி இன்பம் நுகர்கின்றவன் தீக்கு ஒப்பாவான். தீயைச் சார்ந்து இருக்கும் தோல் ஊறு உணர்ச்சியை உணர்த்தும்.

விளக்கம்:

குட்டம் - தொழுநோய்; இதம் - இன்பம்; அழல் - தீ; இட்டம் - விருப்பம்; இம்முறை - இத்தகையது; கொழுநன் - கணவன்; துவக்கு - தோல். இந்திரியம் - இது ''ஊறு'' என்ற உணர்வுடைய தோலைக் குறிக்கும். (38)

Koviloor Digital Library

சிற்றின்பம் சிறிது நேர இன்பம்

635. மூத்திரத்தை மலமதனை மோசிக்கு மப்பொழுதும்
வாய்த்துளதே சிறிதின்ப மவ்வளவே வனிதையர்கள்
மூத்திரத்தை மோசிக்குங் குழியினிமை முடைப்பன்றி
நாத்தனக்கு நலமலமே மலநலமோ நாடுங்கால்.

மூத்திரத்தை மலம் அதனை மோசிக்கும் அப்பொழுதும்
வாய்த்து உளதே சிறிது இன்பம் அவ்வளவே வனிதையர்கள்
மூத்திரத்தை மோசிக்கும் குழி இனிமை முடைப்பன்றி
நாத்தனக்கு நலம் மலமே மலம் நலமோ நாடுங்கால்.

உரை:

ஆராய்ந்து பார்த்தால் மலசலம் கழிக்கும் போது கழிவுப் பொருள்களாகிய அவை வெளியேறுகின்ற வேளையில் சிறிது இன்பம் உண்டாவதை உணரலாம். இவ்வாறே பெண்கள் சிறுநீரை வெளியேற்றும் உறுப்பாகிய அல்குலில் ஆண்கள் நுகரும் சிற்றின்பம் சிறிது நேரமேயாகும். தீய மணம் உள்ள பன்றியின் நாவுக்கு அழுக்காகிய மலம் நல்லதே. ஆனால், கழிவுப் பொருளாகிய மலம் விரும்பத் தக்கதா?

விளக்கம்:

மூத்திரம் - சிறுநீர்; மலம் - உண்ட உணவின் சக்கையாகிய கழிவுப் பொருள்; மோசித்தல் - வெளியேற்றுதல்; வாய்த்து - கிடைத்து; வனிதை - பெண்; மூத்திரத்தை மோசிக்கும் குழி - பெண்குறி; முடை - தீய மணம்; நாடுங்கால் - ஆராய்ந்து பார்க்கும் போது. (39)

திருவருள் பெற்றவரே மேலோர்

636. நாயினுக்கும் பேயினுக்கு நரியினுக்குங் கழுகினுக்கு
மீயினுக்குமினிது பிணமெனிலது தானினியதுவோ
வாயினுக்கு மனத்தினுக்கு மதிப்பாகிய மாதேவன்
றேயினுக்கே சிவமதனைத் திளைப்பாரே சிறந்தாரே.

நாயினுக்கும் பேயினுக்கும் நரியினுக்கும் கழுகினுக்கும்
ஈயினுக்கும் இனிதுபிணம் எனில் அதுதான் இனியதுவோ
வாயினுக்கும் மனத்தினுக்கும் மதிப்பு அரிய மாதேவன்
தேயினுக்கே சிவம் அதனைத் திளைப்பாரே சிறந்தார் ஏ.

Koviloor Digital Library

உரை:

உயிர் நீங்கிய உடல் நாய், பேய், நரி, கழுகு, ஈக்களுக்கு இரையாகி அவற்றுக்கு இன்பத்தை அளிக்கும். இவ்வாறே பெண்களோடு கூடி அனுபவிக்கும் உடலின்பம், சிற்றின்பத்தில் விருப்பம் உள்ளவர்களுக்கு இதம் தரும். ஆனால், புலன்களை வென்ற பெரியோர் பெண்ணின்பத்தை நாடுவதில்லை. பேச்சாலும் எண்ணத்தாலும் அளவிட்டு உரைக்க இயலாத பெருங்கடவுளாகிய சிவபிரானுடைய திருவருளிலே கலந்து மகிழ்ந்திருப்பவர்களே மேலோர் ஆவர்.

விளக்கம்:

'ஈதல் அறம்; தீவினைவிட்டு ஈட்டல் பொருள்; எஞ்ஞான்றும் காதல் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம்; பரனை நினைத்து இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு' என்பது அவ்வையாரின் அருளுரை.

பிணம் - உயிர் நீங்கிய உடம்பு; **மதிப்பு** - அளவிடுதல்; **தே** - தெய்வம்; **மாதேவன்** - பெருங்கடவுள், சிவபெருமான்; **திளைத்தல்** - மகிழ்தல்.

குறிப்பு:

இது குறிப்பது சிற்றின்பமல்ல, திருவருளின்பம். (40)

எரிவாய் நரகத்தை அடைகின்றவர்கள்

637. புரிந்தவர்க டீவினையைப் பொருவரியனடிக்கன்பு
பிரிந்தவர்கள் வனிதைய ரைப் பெறற்கரிய பேறென்றே
யிருந்தவர்கள் நடந்தவர்களிழுக்காய குழிவழிக்கே
யெரிந்தவர்கள் கிடந்தெரிவாய் நிரயத்து மிளைப்புறவே.

புரிந்தவர்கள் தீவினையைப் பொரு அரியன் அடிக்கு அன்பு
பிரிந்தவர்கள் வனிதையரைப் பெறற்கு அரிய பேறுஎன்றே
இருந்தவர்கள் நடந்தவர்கள் இழுக்கு ஆய குழிவழிக்கே
எரிந்தவர்கள் கிடந்து எரிவாய் நிரயத்தும் இளைப்புஉற ஏ.

உரை:

தீவினையாளர்களும், ஒப்பற்ற சிவனுடைய திருவடிகளில் அன்பு செலுத்தாதவர்களும், பெண்களைக் கூடி அனுபவிக்கும் உடல் இன்பமே கிடைத்தற்கு அருமையான பேறு என்று கருதிச் சிற்றின்பத்தில் அழுந்திக் கிடப்பவர்களும் பொல்லாத எரிகின்ற நரகக் குழியில் தங்கி மெலிந்து வருந்துவர்.

Koviloor Digital Library

விளக்கம்:

பொரு - ஒப்பு; அரியன் - இல்லாதவன்; பேறு - பெறத் தக்கது; இழுக்கு - குற்றம்; இழுக்கு ஆய குழி - நரகக் குழி; இளைப்பு உற - மெலிய, நலிவடைய. (41)

பாசங்களிலிருந்து நீங்கியவர் இன்புறுவர்

638. வைத்தவரழுக்கினில் வாஞ்சை மையலாற்
றுய்த்தவ ரளவிலாச் சோக வாரியே
வித்தகப் பொருளினை விரும்புவார்மல
முத்தரின்புறுவர் கனகாதி முத்தனால்.

வைத்தவர் அழுக்கினில் வாஞ்சை மையலால்
துய்த்தவர் அளவு இலாச் சோக வாரியே
வித்தகப் பொருளினை விரும்புவார் மல
முத்தர் இன்புறுவர் கனகஆதி முத்தனால்.

உரை:

பெண் இன்பம் பெறுவதாகிய அழுக்கிலே ஆசை வைத்தவர் எல்லை இல்லாத கவலைக் கடலிலே அழுந்தியவர் ஆவார். அறிவுப் பொருளான இறைவரை அடைய விரும்புகின்றவர் பாசங்களிலிருந்து விடுபட்ட மலமுத்தர் ஆவார். அவர் இயல்பாகவே பாசங்கள் இல்லாத சிவன் அருள் பெற்று இன்பம் எய்துவார்.

விளக்கம்:

அழுக்கு - ஆணவம் முதலிய பாசங்கள்; வாஞ்சை - பிரியம்; மையல் - பெண்ணை இச்சித்தல்; துய்த்தவர் - அனுபவித்தவர்; சோகம் - துக்கம், கவலை; வித்தகம் - அறிவு; வித்தகப் பொருள் - அறிவே வடிவாகிய இறைவன்; மலமுத்தர் - பாசங்களிலிருந்து நீங்கியவர். ஆதிமுத்தன் - இயல்பாகவே பாசங்கள் இல்லாத கடவுள். (42)

பிரமன் அடைந்த வசவு

639. உருத்திரன் மணவினையுகந்த நாடனிற்
றரித்தனன் சதுமுகன் சாப சோகமும்
வரத்தினால் வலியுடைத் தக்கன்றன் மகள்
கருத்தினிலடங்கிடாக் கதத்தினானரோ.

Koviloor Digital Library

உருத்திரன் மணவினை உகந்தநாள் தன்னில்
தரித்தனன் சதுமுகன் சாப சோகமும்
வரத்தினால் வலியுடைத் தக்கன் தன்மகள்
கருத்தினில் அடங்கிடாக் கதத்தினால் அரோ.

உரை:

தக்கன் மகள் தாட்சாயணியை இமயமலைப் பகுதியில் ஈசுவரன் மணம் புரிந்த காலத்திலே பிரமன் தன் மீது இச்சை கொண்டான் என்பதை அறிந்த தாட்சாயணி, பிரமன்மீது கடுங்கோபங் கொண்டு அவனைக் கொடுஞ் சொற்களால் வசை கூறினாள். அம்மொழிகளைக் கேட்ட பிரமன் கவலை அடைந்தான்.

விளக்கம்:

உருத்திரன் - இது தக்கன் மகளை மணம் புரிந்த ஈசுவரனைக் குறிக்கிறது. மணவினை - திருமண நிகழ்ச்சி; உகந்த - விரும்பிய; சதுமுகன் - சதுர்முகன், நான்கு முகங்கள் கொண்ட பிரமன்; சாபம் - ஒருவரைத் தீயபலன் அநுபவிக்க விதிப்பது. சோகம் - துக்கம், கவலை; கதம் - கோபம்; அரோ - அசை. (43)

பிறர் மனைவியரை விரும்பிய கயவர்கள்

640. இந்திரன் முனிமனை யிணங்கி யெய்திய
வந்தரமினைத்தென வளப்ப தல்லவே
சந்திரன் குருமனை தன்னிற் றங்கியே
வந்திடும் துயரினை மதிக்க வல்லரோ.

இந்திரன் முனிமனை இணங்கி எய்திய
அந்தரம் இனைத்துஎன அளப்பது அல்லவே
சந்திரன் குருமனை தன்னில் தங்கியே
வந்திடும் துயரினை மதிக்க வல்லரோ.

உரை:

தேவர்களின் அரசன் கவுதம முனிவனின் மனைவியான அகலிகை யோடு கூடி அனுபவித்த உடலின்பத்தால் அவன் அடைந்த தீமை இத்தகையது என வரையறுத்துச் சொல்ல இயலாது. இவ்வாறே, சந்திரன் வியாழனின் மனைவியான தாரையைக் கூடி நுகர்ந்த உடலுறவால் விளைந்த துயரத்தை அளவிட முடியாது.

இந்திரன் சந்திரன் கதைகளை *அபிதான சிந்தாமணி* விளக்கமாகக் கூறுகின்றது.

Koviloor Digital Library

விளக்கம்:

இந்திரன் - இந்திரன் என்றால் அரசன் என்பது பொருள்.

விலங்குகளுக்கு அரசன் - மிருகேந்திரன்.

மனிதர்களுக்கு அரசன் - நரேந்திரன்.

தேவர்களுக்கு அரசன் - தேவேந்திரன்.

மனை - மனை என்பது இங்கு மனைவியைக் குறிக்கும். அந்தரம் - தீமை,துயரம்; மதிக்க - அளவிட; (44)

காமத்தால் அழிந்த வேடுவர்

641. நளனது பாரியை நச்சி வேடுவ
னெளிய ளென்றவடனைத் திளைக்க வெண்ணின
னளவிய துயருறச் சாம்பலாயின
னுளமுளைந் தவளபகர் சாபமொன்றியே.

நளனது பாரியை நச்சி வேடுவன்
எளியள் என்று அவள்தன்னைத் திளைக்க எண்ணினன்
அளவு இல துயர்உறச் சாம்பலாயினன்
உளம் உளைந்து அவள்பகர் சாபம் ஒன்றி ஏ.

உரை:

கலியின் கொடுமையால் காட்டில் தன் கணவனைப் பிரிந்து, தனியே அவனைத் தேடி அலைந்த நள மன்னனுடைய மனைவி தமயந்தியின் கழுத்தை ஒரு பாம்பு சுற்றிக்கொண்டது. அவள் பாம்பை விடுவிக்க முடியாமல் உதவிகோரிக் கூச்சலிட்டாள். அவள் குரலைக் கேட்ட வேடன் ஒருவன் பாம்பைக் கொன்று அவளைக் காப்பாற்றினான். எனினும், தமயந்தி கணவன் துணையில்லாமல் தனித்திருப்பதை அறிந்து அவளைக் கூடி மகிழ விரும்பினான். அவனுடைய தீய எண்ணத்தை அறிந்த தமயந்தி, மனம் புண்பட்டு வேடன் எரிந்து சாம்பலாகுமாறு வசையுரை பகர்ந்தாள். கற்புடைய தமயந்தியின் வசையுரை உடனே பலித்தது. வேடன் எரிந்து சாம்பலானான்.

(இந்த நள தமயந்தியின் கதை பாரதத்தின கிளைக் கதைகளுள் ஒன்று. இக்கதையைத் தமிழில் புகழேந்திப் புலவர் *'நளவெண்பா'* என்ற தலைப்பிலும், அதிவீரராமபாண்டியர் *'நைடதம'* என்ற தலைப்பிலும் மிகச் சிறப்பாகப் பாடியுள்ளனர்.)

விளக்கம்:

பாரி - மனைவி; நச்சி - விரும்பி; எளியள் - துணையில்லாதவள்;

Koviloor Digital Library

திளைக்க - கூடி மகிழ; உளம் உளைந்து - மனம் புண்பட்டு; சாபம் - தீங்கு பயக்கும் ஆணை; ஒன்றி - சார்ந்து; ஏ - அசை. (45)

காம இச்சை துயரம் தரும்

642. அரக்கனுஞ் சானகிக் காசை யுற்றனன்
சிரக்கன மீழந்தனன் றிளைத்து மல்லனே
தரித்தவ ராசையைத் தையலார்கள்பால்
வருத்தமே மருவினர் மண்ணும் விண்ணுமே.

அரக்கனும் சானகிக்கு ஆசை உற்றனன்
சிரக்கனம் இழந்தனன் திளைத்தும் அல்லனே
தரித்தவர் ஆசையைத் தையலார்கள்பால்
வருத்தமே மருவினர் மண்ணும் விண்ணும் ஏ.

உரை:

தசரதராமன் மனைவியான சானகியை விரும்பிய இராவணன், அவளைக் கூடி மகிழாமலே போரில் தன் தலையை இழந்து மாண்டான். விண்ணுலகிலும் மண்ணுலகிலும் வாழ்ந்த பலர் பெண்கள்பால் கொண்ட காம இச்சையால் துயரத்தையே அடைந்தனர். (46)

காமத்தால் இன்னலை அடைந்தோர்

643. இந்திரன் புயத்துறவாதமீடிலன்
சந்திரன் கயாமயந் தரித்திளைத்தனன்
மந்தனுமுடவனே மற்றையார்களு
மிந்தவாறெவ ருடலெடுத் திடர்ப்படார்.

இந்திரன் புயத்து உறவாதம் மீடிலன்
சந்திரன் கயாமயம் தரித்து இளைத்தனன்
மந்தனு முடவனே மற்றையார்களும்
இந்தவாறு எவர்உடல் எடுத்து இடர்ப்படார்.

உரை:

யாகத் தலைவனான இந்திரன், தன் தோளிலே பொருந்திய வாத நோயிலிருந்து மீளவில்லை. சந்திரன் சயரோகத்தால் வருந்தி மெலிந்தான். சனி முடவன் ஆனான்; இவ்வாறு உடலோடு பிறந்து இன்னல் அடையாதவர் யார்? (47)

Koviloor Digital Library

நோயால் வருந்திய முன்னோர்

644. தக்கனுஞ் சுரத்தினை யுடலிற் றாங்கினன்
றொக்கிடத் தலைவ்லியரியுந் துக்கிதன்
மிக்குறச் சுலோதரம் வருணன் வீறில
னுக்குடற்பழுதுள னுதயபானுவும்.

தக்கனும் சுரத்தினை உடலில் தாங்கினன்
தொக்கிடத் தலைவலி அரியும் துக்கிதன்
மிக்கு உறச் சுலோதரம் வருணன் வீறுஇலன்
உக்கு உடற்பழுது உளன் உதய பானுவும்.

உரை:

தக்கன் வெப்பு நோயாகிய காய்ச்சலாலும் திருமால் தலைவலியாலும் கவலையடைந்தனர். நீர்க்கோவை என்ற வியாதியால் வருணன் பொலிவை இழந்தான். உடலில் ஏற்பட்ட குறையால் சூரியன் ஒளி இழந்தான். (48)

சிவன் கோபத்தால் தண்டனை பெற்றவர்கள்

645. காமனுந் திருவுருக் காயப்பட்டனன்
பூமக னொருசிரம் போக்கப்பட்டன்
னாமகணாசியும் நறுக்கப்பட்டனள்
சேமமாஞ் சிவனவன் சினந்து சீறவே.

காமனும் திருஉருக் காயப்பட்டனன்
பூமகன் ஒருசிரம் போக்கப்பட்டனன்
நாமகள் நாசியும் நறுக்கப்பட்டனள்
சேமமாம் சிவன் அவன் சினந்துசீற ஏ.

உரை:

சிவன் சீற்றங் கொண்டதால் மன்மதன் தன் வடிவிலே மாற்றம் பெற்றான். இதன் விவரத்தைக் *கந்த புராணத்தில்* காணலாம். பிரமன் தன்னுடைய செருக்கின் காரணமாகத் தன் ஐந்து தலைகளுள் ஒன்றை இழந்தான். இதனைத் *திருவாசகம்,*

''நல்ல மலரின் மேல் நான்முகனார் தலை
ஒல்லை அரிந்ததென்று உந்தீபற
உகிரால் அரிந்த தென்று உந்தீபற''

என்று கூறுகின்றது. தக்கன் செய்த யாகத்தில் கலந்து கொண்டதற்காகப் பிரமன் மனைவியான நாமகள் வீரபத்திரரால் மூக்கு அறுபட்டாள்.

Koviloor Digital Library

விளக்கம்:

காமன் - மன்மதன், விஷ்ணுவின் மகன்; பூமகன் - பிரமன்; சிரம் - தலை; போக்கப்பட்டனன் - அரிந்து நீக்கப்பட்டான்; நாமகள் - பிரமன் மனைவி; இவளைப் பிராமி என்றும் சொல்வர். நாசி - மூக்கு; சேமம் - பாதுகாப்பு. (49)

சிவனால் தண்டிக்கப் பட்டவர்கள்

646. கன்றிய காலனுங் களையப் பட்டன
னொன்றிய புரத்துளா ரொழிக்கப் பட்டன
ரன்றியவரிசிர மரியப்பட்டனன்
பன்றியின் கொம்பினைப் பறிக்கப் பட்டதே.

கன்றிய காலனும் களையப் பட்டனன்
ஒன்றிய புரத்துளார் ஒழிக்கப்பட்டனர்
அன்றிய அரிசிரம் அரியப்பட்டனன்
பன்றியின் கொம்பினைப் பறிக்கப்பட்டது ஏ.

உரை:

கோபத்தோடு மார்க்கண்டனுடைய உயிரைக் கவரவந்த எமனைச் சிவன் தம் இடக்காலால் எற்றினார்; அதனால் அவன் மாண்டான். வானவெளியில் மூன்று கோட்டைகளில் வாழ்ந்த முப்புரத்தார் அழிக்கப்பட்டனர். இதனைத் *திருவாசகம்,*

''வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன் வெந்தவா உந்தீபற''

என்று கூறுகின்றது. மாறுபட்ட விஷ்ணுவின் தலை கொய்யப்பட்டது. பன்றி வடிவம் கொண்ட விஷ்ணுவின் அகங்காரத்தை ஒடுக்க அதன் கொம்பு(பல்) பிடுங்கப்பட்டது. இவை புராணச் சம்பவங்கள்.

புராணச் செய்திகளில் சிவனுக்கு ஏற்றம் கூறுகின்றவை தேவார *திருவாசகங்களில்* இடம் பெற்றிருக்கின்றன. (50)

சிவனால் தண்டிக்கப் பட்டவர்கள்

647. தக்கனு மிழந்தனன் றலையைப் பல்லெலா
முக்கிழந் தருணனு மொடுங்கி யோடின
னக்கியுங் கரமிழந்தஞ்சி நஞ்சன்ன
துக்கமே மிக்குறச் சூரரு மோடினார்.

Koviloor Digital Library

தக்கனும் இழந்தனன் தலையைப்பல் எல்லாம்
உக்குஇழந்து அருணனும் ஒடுங்கி ஓடினன்
அக்கியும் கரம் இழந்து அஞ்சி நஞ்சுஅன்ன
துக்கமே மிக்குஉறச் சுரரும் ஓடினார்.

உரை:

சிவனைப் புறக்கணித்து ஆட்டு யாகம் செய்த தக்கன் தன் தலையை இழந்தான். இதனைத் *திருவாசகம்*,

''தக்கனார் அன்றே தலையிழந்தார் தக்கன்
மக்களைச் சூழநின்று உந்தீபற
மடிந்தது வேள்வி என்று உந்தீபற''

என்று கூறுகின்றது. பற்கள் கழன்று விழச் சூரியன் ஓடினான்;அக்கினி கையை இழந்து நடுங்கினான்; நஞ்சு போன்ற கவலை வாட்டத் தேவர் ஓடினர்.

விளக்கம்:

தக்கன் - பிரமனுடைய மக்களுள் ஒருவன். தக்கன் சிவனை மதியாமல் ஆட்டு யாகம் செய்து தன் தலையை இழந்து ஆட்டுத்தலை பெற்றதையும், தக்கன் யாகத்தில் கலந்து கொண்ட விஷ்ணு, பிரமன், இந்திரன், சூரியன், அக்கினி, நாமகள் முதலானோர் வீரபத்திரரால் தண்டிக்கப்பட்டதையும் *கந்த புராணம்* விரிவாகக் கூறுகின்றது.

அருணன் - சூரியன்; அக்கி - அக்கினி; சுரர் - தேவர். (51)

போரில் மாண்டவர்கள்

648. தாருகன் காளியாற் றறிக்கப் பட்டனன்
சூரனெம் வேலினாற் றுணிக்கப் பட்டனன்
போருடைய யசுரரும் போக்கப் பட்டனர்
பாரத குலத்தினுட் பார்த்த னெய்யவே.

தாருகன் காளியால் தறிக்கப்பட்டனன்
சூரன் எம்வேலினால் துணிக்கப்பட்டனன்
போருடை அசுரரும் போக்கப்பட்டனர்
பாரத குலத்தினுள் பார்த்தன் எய்ய ஏ.

உரை:

தாருகாசுரன் பத்திர காளியால் வெட்டப்பட்டான்; சூரபதுமன் நம் வேலினாலே பிளக்கப்பட்டு அழிந்தான்; பாரதகுல அருச்சுனனால் நிவாதகவசர் என்கிற அசுரர்கள் இறந்தனர்.

Koviloor Digital Library

விளக்கம்:

தாருகன் - சூரபதுமனுடைய தம்பி; சூரன் - சூரபதுமன்; சூரன், சிங்கமுகன், தாரகன் ஆகியோரைப் பற்றிய கதைகள் *கந்த புராணத்தில்* உள்ளன. நிவாத கவசர் - இவர்கள் பிரகலாதன் வமிசத்தினர்; தேவேந்திரன் ஏவலால் அருச்சுனன் பாசுபதத்தால் இவர்களைக் கொன்றான். அசுரர் - சுரருக்கு மாறுபட்டவர்களை அசுரர் என்று கூறினர். (52)

கருவபங்கம் அடைந்தவர்கள்

649. பாம்பென நகுடனும் படியில் வீழ்ந்தன
னோம்பிய வருமுனி சாபமொன்றியே
தேம்பினன் பரசுடன் சிறந்த ராமனும்
வாம்பரித்தசரதன் மகன் வலிக்கரோ.

பாம்பு எனநகுடனும் படியில் வீழ்ந்தனன்
ஓம்பிய அருமுனி சாபம் ஒன்றியே
தேம்பினன் பரசுடன் சிறந்த ராமனும்
வாம்பரித் தசரதன் மகன் வலிக்கு அரோ.

உரை:

நகுடன் என்னும் அரசன் குதிரையாகம் செய்து இந்திர பதவியைப் பெற்றான். அதனால், ஏழு இருடிகள் சுமக்கும் பல்லக்கில் அமர்ந்து இந்திரன் உலகிற்குச் சென்றான். இந்திராணியைக் காணவேண்டும் என்ற ஆவலால் விரைந்து செல்லுமாறு இருடிகளைத் தூண்டினான். அதனால் பல்லக்கைச் சுமந்த இருடிகளில் ஒருவனான அகத்தியன் மிகுந்த சீற்றத்தோடு நகுடனை மலைப்பாம்பாக ஆகுமாறு வசையுரை மொழிந்தான். உடனே, நகுடன் மலைப்பாம்பாக மாறி நிலத்தில் விழுந்தான். இக்கதை *பாரதத்தில்* உள்ளது.

பரசு என்னும் கைக் கோடரியைப் படைக்கலமாகக் கொண்டவன் பரசுராமன். இவன் வட இந்திய அரசர்களின் பகைவன். தசரதராமன் மிதிலையில் சீதையை மணம்புரிந்த பின்னர், தந்தை தாயரோடு அயோத்திக்குத் திரும்புகிற வழியில் பரசுராமன் எதிர்ப்பட்டான். அவன் தசரத ராமனிடம் ஒரு வில்லைக் கொடுத்து வளைக்கச் சொன்னான். அவன் அம்பைப் பொருந்தினான். இதனை எதிர்பாராத பரசுராமன் தோல்வியை ஒப்புக் கொண்டு நாணிப் பின்வாங்கினான். இக்கதை *இராமாயணத்தில்* உள்ளது.

விளக்கம்:

நகுடன் - பாரத காலத்தில் வாழ்ந்தவன். இந்திராணியின் மீது கொண்ட ஆசையால் அழிந்தவன்; பரசுராமன் சமதக்கினிக்கும் இரேணுகைக்கும் பிறந்தவன்; பாரத காலத்தவன். அரோ - அசை; சாபம் - வசையுரை. (53)

Koviloor Digital Library

கண்ணபிரானும் மாண்டார்

650. ஆயிரங்கரமுடைய சுரவாணனு
மாயனாலிரு கரமலா லிழந்தன
னாயமொருசர மாலின் வீழவே
யாயுவு மிழந்தன் னங்கமங்கவே.

ஆயிரம் கரம் உடை அசுரவாணனும்
மாயனால் இருகரம் அல்லால் இழந்தனன்
ஆயம் ஒருசரம் ஆலின் வீழவே
ஆயுவும் இழந்தனன் அங்கம் மங்க ஏ.

உரை:

இதனுரை பின்வரும் வரலாற்று வடிவிற் பெறப்படும். ஆயிரம் கைகளை உடைய வாணாசுரன் சிவன் தாண்டவம் நிகழ்த்தும்போது குடமுழா முழக்குகிறவன். குடமுழா என்பது ஒரு தோற்கருவி. இவன் முறையாக சிவபூசை செய்யும் வழக்குமுடையவன். இவனுடைய மகள் உஷையை, கண்ணபிரானுடைய மகன் அனுருத்தன் விரும்பினான். அவள் கன்னிமாடத்தில் தனிமையில் இருந்தபோது அங்கே சென்று அவளைக் கூடி மகிழ்ந்தான். இதனை அறிந்த வாணாசுரன் அனுருத்தனைப் பிடித்துச் சிறையில் அடைத்தான். இதனால் கண்ணனுக்கும் வாணாசுரனுக்கும் போர் மூண்டது. கண்ணன், வான்சுரனுடைய ஆயிரம் கைகளில் அவன் சிவபூசை செய்வதற்கு ஏதுவாக இரண்டு கைகளை விட்டு வைத்து ஏனைய கைகள் அனைத்தையும் வாளால் வெட்டி வீழ்த்தினார். இத்தகைய ஆற்றல் வாய்ந்த கண்ணபிரான் பாரதம் முடிவுற்ற பின் தமையன், உறவினர் முதலானோரை இழந்த வருத்தத்தால் ஆலமர இலைகளின்மீது ஒருகாலை உயர்த்தியபடி படுத்திருந்தார். அவருடைய சிவந்த உள்ளங்காலைத் தொலைவிலிருந்து பார்த்த ஒரு வேடன் அதனை ஒரு பறவை என்று எண்ணி அதன் மீது நஞ்சுள்ள அம்பை எய்தான். அதனால், அவருடைய ஆவி பிரிந்தது. இதனைப் பாரதியார், பாரதி அறுபத்தாறில், ''தீயதொரு கணையாலே கண்ணன் மாண்டான்'' என்று குறிப்பிடுகிறார். இக்கதை பாரதத்தில் உள்ளது.

விளக்கம்:

சரம் - அம்பு; மாயன் - கண்ணபிரான்; ஆயு - ஆயுள். (54)

கண்ணனை வென்ற சராசந்தனும் மாண்டான்

651. ஆயனும் புறகிட வவன்றுவாரையுந்
தாயமும் தனதெனத் தரித்த சந்தனும்
வாயுசன் வீமனால் வதைக்கப்பட்டனன்
வாயுவோட்டிய சேடன் வாடினான்.

Koviloor Digital Library

ஆயனும் புறகிட அவன் துவாரையும்
தாயமும் தனது எனத் தரித்த சந்தனும்
வாயுசன் வீமனால் வதைக்கப் பட்டனன்
வாயுவோடு ஊடிய சேடன் வாடினான்.

உரை:

இதுவும் வரலாற்று ரீதியில் உரைக்கப்படும். இடையர் குல மன்னரான கண்ணபிரானுக்குரிய துவாரகையைச் சராசந்தன் முற்றுகையிட்டான். கண்ணபிரான் போரிலே தோற்றுப் பின் வாங்கினார். சராசந்தன் கண்ணனுடைய நாட்டையும் செல்வங்களையும் கவர்ந்து கொண்டான். பின்பொருகால் கண்ணன் சூழ்ச்சியால் இத்தகைய வலிமை வாய்ந்த சராசந்தனைக் காற்றின் மைந்தனான வீமன் மற்போருக்கு அழைத்தான்; கண்ணன் காட்டிய குறிப்பை உணர்ந்து சராசந்தனைக் கொன்றான். இக்கதை *பாரதத்தில்* விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. காற்றுக்கும் ஆதிசேடன் என்ற பாம்புகளின் தலைவனுக்கும் இடையே தங்களுக்குள் யார் வலிமை மிக்கவர் என்பது பற்றி ஒரு போட்டி நிகழ்ந்தது. போட்டியில் ஆதிசேடன் தோற்று வருந்தினார். இக்கதை புராணங்களில் உள்ளது

விளக்கம்:

ஆயன் - இடையன்; இது இங்கு கண்ணனைக் குறிக்கிறது. புறகிட - தோற்றுப் பின் வாங்கியதும்; தாயம் - சொத்து முதலியன; துவாரை - கண்ணனுக்குரிய நகர் துவாரகை. தரித்த - உரிமையாக்கிக் கொண்ட; சந்தன் - சராசந்தன். வாயுசன் - காற்றின் புதல்வனாகிய வீமன்; வதைக்க - கொல்ல; ஊடிய - பிணங்கிய. (55)

ஒன்றைவிட ஒன்று வலியது

652. அழிவிலா வரமுடை அனுமனாகமும்
பழுதுறப் பகலவன் பதறிப் பாற்றின
னெழுகதிர் தடைபட வெதிர்ந்து வானிடைக்
குழுவிய குயினிலை வளியிற் குன்றுமே.

அழிவுஇலா வரம்உடை அனுமன் ஆகமும்
பழுது உறப் பகலவன் பதறிப் பாற்றினன்
எழுகதிர் தடைபட எதிர்ந்து வான்இடைக்
குழுவிய குயின்நிலை வளியிற் குன்றும் ஏ.

உரை:

சிரஞ்சீவி அல்லது என்றும் என்றும் வாழும் வரம் பெற்றிருந்த்வன் என்ற அனுமான், தன்னுடைய இளமைப் பருவத்தில், வானவெளியில் சிவந்த ஒளியுடன்

Koviloor Digital Library

விளங்கிய சூரியனை ஒருபழம் என்று கருதி அதனைப் பற்ற, சூரியன் தன்னுடைய வெப்பம் பொருந்திய கதிர்களால் அனுமனைத் தாக்கி விழச் செய்தான். இத்தகைய ஆற்றல் உள்ள சூரியனை வானத்திலே திரண்ட மேகங்கள் மறைத்தன. அதனால், சூரிய ஒளி பரவத் தடை உண்டாயிற்று. சூரிய ஒளி பரவாமல் தடுத்த மேகங்களை விரைவாக வீசிய பெருங்காற்று சிதறிப் போகும்படி செய்தது.

விளக்கம்:

அனுமன் - ''அஞ்சனா தேவிக்கும் காற்றுக்கும் பிறந்தவன்; இவனுக்கு ஆஞ்சநேயன் என்ற பெயருண்டு. இவன் சிரஞ்சீவிகளுள் ஒருவன்'' என ஆஞ்சநேய புராணம் கூறும்.

ஆகம் - உடம்பு; பாற்றுதல் - அழித்தல்; குயின் - மேகம்; வளி - காற்று. (56)

கந்தன் சொல்லியது

653. சிற்றுயிர் படுந்துயர் செப்புவாமெனை
நெற்றியின் விழியுடை நிமலன் வீரியத்
துற்றடல் குமரனென்றுரைக்கப்பட்ட யான்
சற்றல வசுரராலுற்ற சங்கையே.

சிறுஉயிர் படும்துயர் செப்புவாம்எனை
நெற்றியின் விழியுடை நிமலன் வீரியத்து
உற்ற அடல் குமரன் என்று உரைக்கப்பட்டயான்
சற்று அல்ல அசுரரால் உற்றசங்கை ஏ.

உரை:

நெற்றியில் ஒரு கண்ணையுடைய தூய சிவபிரானுடைய நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய வெற்றியினையுடைய குமாரன் என்று கூறப்படுகின்ற எனக்கு சூரபதுமன் முதலானோரால் உண்டான ஐயம் கொஞ்சம் அல்ல. இனி, சிறு உயிர்களுக்கு ஏற்படும் இன்னல்களைப் பற்றி உரைப்போம்.

விளக்கம்:

வீரியம் - சிவனது நெற்றிகண் பொறி, அதை வீரியம் என்றது உருவகம். அடல் - வெற்றி; சங்கை - சந்தேகம். குமரன் - இது முருகனுக்கு உரிய சிறப்புப் பெயர்களுள் ஒன்று.

''முருகன் குமரன் குகன் என்று மொழிந்து உள்ளம் உருகி முருகனை வணங்க வேண்டும்'' என்று சுவாமி அருணகிரிநாதர் கூறுகின்றார். மணிவாசகர் சிவபிரானைக் ''குமரவேள் தாதை'' என்கிறார். ''குமரன்தன் தாதைக்கே உந்தீபற'' என்று *திருவாசகம்* கூறுகின்றது. திருநாவுக்கரசர் சிவபெருமானை ''கூர்

Koviloor Digital Library

இலங்குவேற் குமரன் தாதை'' என்றும், ''குறவி தோள் மணந்த செல்வக் குமரவேள் தாதை'' என்றும் கூறுகிறார். சுந்தரர் உமையம்மையை, ''குமரனைப் பயந்த வார்த் தயங்கிய முலைமடமானை'' என்று கூறுகிறார். திருஞான சம்பந்தர் சிவபிரானை, ''வள்ளிமுலைதோய் குமரன் தாதை'' என்று கூறுகின்றார். சைவச்சமயநெறி, ''குமரனடி சிந்திப்பாம் கூர்ந்து'' என்று கூறுகின்றது. (57)

பிரமனும் இறப்பான்

654. அயனொரு தினந்தனிலமரர் மற்றையர்
வயவலி தொலையவே வருந்திவாடுவ
ரயனு மற்றவருட னழிவனாண்டுகள்
கயமுறப் பரார்த்த வெண்ணிரண்டு காட்டியே.

அயன்ஒரு தினம் தனில் அமரர் மற்றையர்
வயம்வலி தொலையவே வருந்தி வாடுவர்
அயனும் மற்றவருடன் அழிவன் ஆண்டுகள்
கயம் உறப் பரார்த்த என்இரண்டு காட்டி ஏ.

உரை:

பிரமனுக்கு உரிய வாழ்நாளில் ஒரு நாளுக்கு உரிய கால அளவு எவ்வளவோ அவ்வளவு காலம் வரை அமரர் முதலானோர் நலமாக வாழ்வர். பின்னர், அவர்கள் தம் வெற்றிக்கு உரிய வலிமையை இழந்து வருந்துவர். ஒரு கற்பகாலம் முடிவுறும் போது பிரமனும் அமரர் முதலானவர்களோடு அழிவை எய்துவான்.

விளக்கம்:

அயன் - பிரமன்; **அமரர்** - அமுதம் உண்டு சாவாநிலை பெற்றவர்; **கயம்உற** - குறைய; **பரார்த்தம் இரண்டு** - ஒரு கற்பகாலம். கற்பம் முதலியவற்றின் கால அளவு *பிரமபுராணத்தில்* உள்ளது. ஆங்கிலக் கல்வியறிவு பெற்ற ஆய்வாளர்கள் அந்தக் கால அளவை ஏற்க மறுக்கின்றனர். அயன் மற்றவருடன் அழிவான் - பிரமன், விஷ்ணு, உருத்திரன் முதலியோர் படைக்கப்பட்டவர்கள்.

''ப்ரஹ்ம விஷ்ணுருத் ரேந்த்ராஸ் ஸம்ப்ரனூயந்தே நகாரணம்;
காரணந்து சர்வைச்வர்யஸ் சம்பந்த
ஸர்வேஸ்வர: சம்புராகா சமத்யே த்யேய'' *(அதர்வசிகை உபநிடதம்)*

பொருள் - பிரம்மா, விஷ்ணு, ருத்திரேந்திரர்கள் படைக்கப்பட்டவர்கள் எனவும், ஆதலின் காரணர்கள் ஆகமாட்டார்கள் எனவும், காரணர் ஆவர் ஆவார் சர்வ ஐஸ்வர்ய சம்பந்தரும், சர்வேசுவரரும், சம்புவாயும் உள்ளார் எனவும், அவரே தகாராகாச மத்தியில் தியானிக்கத் தக்கவர்.

(திருமுருக கிருபானந்த வாரியார், *திருப்புகழ் விரிவுரை*, தொகுதி-9, பக்கம்-193) (58)

Koviloor Digital Library

மானிடர் இயல்பு

655. கருப்பையுளுணர்வினைக் காலுமோதலாற்
பிரித்துயிர் பிறத்தலாற் பேசப்பட்டதே
விரித்துறு வேதமும் விளங்க வாய்திலார்
மரிப்பரே பிறப்பரே மனிதர் தாமுமே.

கருப்பை உள் உணர்வினைக் காலும் மோதலால்
பிரித்து உயிர் பிறத்தலால் பேசப்பட்டதே
விரித்து உறு வேதமும் விளங்க வாய்திலார்
மரிப்பரே பிறப்பரே மனிதர் தாமும் ஏ.

உரை:

மக்கள் தாய் வயிற்றிலே அறிவோடு கூடிக் கருவாக வளரும் போது, வளரும் குழந்தையைத் தாயின் கருப்பையில் உள்ள காற்று மோதுவதால் அதன் உணர்வு கலக்கம் அடைகின்றது. உரிய காலத்தில் கருவில் வளர்ந்த குழந்தையை அபானன் என்னும் காற்று உந்தித் தள்ளுவதால் அது தாயின் பிறப்பு வாசல் வழியாக நிலத்திலே வந்து பிறந்து வருத்தம் உறுகின்றது. வளர்ந்த பின்னர்; சிவாகமம் உணர்த்துகின்ற நல்ல நெறிகளைப் பின்பற்றி, வாழ வேண்டிய முறைப்படி வாழாமல் இறப்பதும் பிறப்பதுமாகவேயிருக்கின்றனர்.

விளக்கம்:

உணர்வு - அறிவு; கால் - காற்று; வேதம் - சிவாகமம், உபநிடதம்; வாய்திலார் - பொருந்திய வாழ்வை மேற் கொள்ளாதவர்; மரித்தல் - இறத்தல். (59)

இளமைக்காலத் துன்பங்கள்

656. அன்னைதன் வயினிடையனேக துன்பமே
பின்னையும் பிறப்புழி பெரிது துன்பமே
தன்னயர்வறவுரை தரிக்கத் தாதையோ
சொன்னவில் குரவனுஞ் சுளியத் துன்பமே.

அன்னைதன் வயின்இடை அனேக துன்பமே
பின்னையும் பிறப்புழி பெரிது துன்பமே
தன் அயர்வு அற உரை தரிக்கத் தாதையோ
சொல்நவில் குரவனும் சுளியத் துன்பம் ஏ.

உரை:

தாயின் வயிற்றிலே கருவாக வளரும்போது பல துன்பங்கள் நேருகின்றன. குழந்தையாக நிலத்திலே பிறந்து வளரும் போது நோய் முதலிய துன்பங்கள்

Koviloor Digital Library

உண்டாகின்றன. பிள்ளைப் பருவத்தில் தந்தையின் அறிவுரையை மறந்தால் அவருடைய கோபத்துக்கு ஆளாக நேருகிறது. கல்வி பயிலும் போது மறதி ஏற்பட்டால் ஆசிரியர் கோபித்துத் தண்டிப்பது துன்பத்தை உண்டாக்குகின்றது.

விளக்கம்:

அன்னைதன் வயினிடை அநேகதுன்பம் - ஒருதாய் கருத்தரித்தது முதல் கருவில் வளரும் குழந்தைக்கு நேரும் இன்னல்களைப் போற்றித் திருவகவலில் மாணிக்க வாசகர் கூறுவன வருமாறு:

முதலாம் மாதத்தில் புழுக்களால்; இரண்டாவது மாதத்தில் கரு பிளவுபடுதலால்; மூன்றாம் மாதத்தில் தாயின் மதநீர்ப் பெருக்கால்; நாலாம் மாதத்தில் மதநீரால் ஏற்படும் இருளால்; ஐந்தாம் மாதத்தில் இறத்தலால்; ஆறாம் மாதத்தில் ஊறும் அலரால்; ஏழாம் மாதத்தில் கருப்பை தாங்காமையால், எட்டாம் மாதத்தில் வளர்ச்சியின் நெருக்குதலால்; ஒன்பதாம் மாதத்தில் வெளிப்பட முயல்வதால்; பத்தாம் திங்களில் பிறக்கும் போது தாயோடு படும் துன்பம்.

பிறப்புழி - பிறந்த பின்னர் மலசலம் கழித்தல், பசி, நித்திரை, நோய்களால் பிள்ளைக்குத் துன்பங்கள் நேரும்.

வயின் - வயிறு; **அயர்வு** - மறதி; **குரவன்** - ஆசிரியன்; **சுளிய** - கோபிக்க. (60)

இருவகை இன்பங்களையும் இழப்பவர்கள்

657. **ஒருமையயுணர்வின ருரைக்கும் வாசகத்**
தருமைய பொருளவரருளினாற்பெறும்
பெருமையைப் பெறற்கரும் பேறென் றெண்ணிலா
ரிருமையு மிழப்பரே யினைய ரிச்சையால்.

ஒருமைய உணர்வினர் உரைக்கும் வாசகத்து
அருமைய பொருள் அவர் அருளினால் பெறும்
பெருமையைப் பெறற்கு அரும்பேறு என்று எண்ணிலார்
இருமையும் இழப்பரே இனையர் இச்சையால்.

உரை:

மனதை ஒருமுகப்படுத்திப் பொறிகளை வென்ற சிவஞானிகள் அருளிச் செய்த அருள் மொழிகளில் அடங்கியுள்ள உண்மைகளை, அந்த ஞானிகளின் அருளாலே அறிந்து நலம்பெற வேண்டும் என்று கருதாமல், மனைவி, மக்கள், உறவினர்கள் மீது பற்று வைத்து வாழ்பவர்கள், இவ்வுலக வாழ்வில் பெற வேண்டிய செல்வம், புகழ் போன்ற இன்பங்களையும், முத்தியின்பத்தையும் ஒருங்கேயிழந்து விடுவர்.

Koviloor Digital Library

விளக்கம்:

ஒருமை உணர்வினர் - புலனடக்கம் பெற்ற சிவஞானிகள். பெறற்கு - பெறுவதற்கு; பேறு - செல்வம்; இருமை - இம்மை மறுமை. இம்மை என்பது இவ்வுலக வாழ்வில் பெற வேண்டிய கல்வி, செல்வம், புகழ் ஆகியவை. மறுமை என்பது பேரின்பமாகிய முத்திப் பேறு. (61)

காமுகர் இடர்ப்படுவர்

658. துடியிடைத்தட முலைத்துளங்கு தோள்வளைப்
பிடிநடைக் கடுவிழிப் பேதை மாதரார்
கடிதடக் கலவியிற் காமமீதுரப்
படுமிடர்க் களவிலைப் போகர் பாருளே.

துடிஇடைத் தடம்முலைத் துளங்கு தோள்வளைப்
பிடிநடைக் கடுவிழிப் பேதை மாதரார்
கடிதடக் கலவியில் காமம் மீதுரப்
படும் இடர்க்கு அளவு இல்லை போகர் பாருள் ஏ.

உரை:

உடுக்கை போன்ற சிறுத்த இடுப்பும், பருத்த கொங்கைகளும், அணிகலன் அணிந்த தோள்களும், பெண் யானை போன்ற நடையும், நஞ்சை ஒத்த பார்வையும் கொண்ட இளம் பெண்களின் அல்குலைப் புணரும் சிற்றின்ப இச்சையை அதிகமாகக் கொண்டிருக்கும் காமுகர்கள், இப்பூமியில் அனுபவிக்கும் துன்பங்களுக்கு அளவே கிடையாது.

விளக்கம்:

இப்பாடல் வாழ வேண்டிய முறைப்படி வாழுகின்ற இல்வாழ்க்கையினரான ஆடவரையோ மகளிரையோ குறிக்கவில்லை. துடி - உடுக்கை; இடை - இடுப்பு; தடம் - பருத்த; தோள்வளை - பெண்களின் தோள் அணி; பிடி - பெண்யானை; கடு - நஞ்சு; விழி - இது இங்கு பார்வையைக் குறிக்கிறது. பேதைமாதரார் - இளம் பெண்கள்; பேதை - ஏழு வயதுச் சிறுமி; கடித்தடம் - பெண்குறி, பிறப்பு வாசல்; கலவி - புணர்ச்சி; காமம் - இங்குச்சிற்றின்ப இச்சையைக் குறிக்கிறது; மீதுர - அதிகப்பட; போகர் - காமுகர்; இடர் - துன்பம்; பாருள் - பூமியில். (62)

உடலின் மீது பற்று

659. விடக்கினை விரும்பியே வெறுப்பு மேலிடக்
கடித்திரு நாய்தமிற் கதறுமாறுபோல்
முடைப்புழுக் குரம்பையின் மோக மெய்தியே
விடைப்பரே மனிதருந் தம்மில் வெல்லவே.

Koviloor Digital Library

விடக்கினை விரும்பியே வெறுப்பு மேலிடக்
கடித்து இரு நாய் தம்மில் கதறுமாறுபோல்
முடைப்புழுக் குரம்பையில் மோகம் எய்தியே
விடைப்பரே மனிதரும் தம்மில் வெல்ல ஏ.

உரை:

இறைச்சியைத் தின்னவேண்டும் என்ற ஆசையால் இரண்டு நாய்கள் தமக்குள்ளே சண்டையிட்டு, ஒன்றையொன்று கடித்துக் குதறிக் குரைக்குமாறு போல, கெட்ட நாற்றம் வீசும் கிருமிகள் நிரம்பிய பெண் உடலை விரும்புகிற காமுகர்கள், ஒருவரையொருவர் வீழ்த்தத் தமக்குள்ளே அடிபட்டுக் கொள்வர்.

விளக்கம்:

இப்பாடல் விலைமகளிரை நாடிச் செல்கின்ற ஆடவர்களைக் குறிக்கின்றது.

விடக்கு - இறைச்சி; தம்மில் - தமக்குள்ளே; கதறு - ஊளையிடுதல்; முடை - கெட்ட நாற்றம்; புழு - கிருமி; குரம்பை - உடம்பு; மோகம் - காம இச்சை; விடைப்பர் - சண்டையிடுவர்; வெல்ல - வீழ்த்த. (63)

அளவோடு இன்பம் நுகருக

660. திலத்திணை யினிமையைத் திளைக்க மானிடர்
மலைக்கிணைத் துயரிணை விரைய மாந்துவர்
துலைக்கணக் கறிகிலாத் துரிசினாரவர்
கலைக்கணக் கினைத்தலை காணவல்லரோ.

திலத்து இணை இனிமையைத் திளைக்க மானிடர்
மலைக்கு இணை துயரினை விரைய மாந்துவர்
துலைக்கணக்கு அறிகிலாத் துரிசினார் அவர்
கலைக் கணக்கினைத் தலைகாண வல்லரோ.

உரை:

ஆடவர்கள் பெண்களோடு கூடி அனுபவிக்கும் உடற்புணர்ச்சி, எள்ளுக்கு ஒப்பான சிறிய இன்பமாகும். இந்தச் சிறிய இன்பத்தில் அளவோடு ஈடுபட வேண்டும். அளவு கடந்து உடற் புணர்ச்சியில் ஈடுபட்டால் விந்து அதி விரயமாகிப் பல நோய்களுக்கு ஆளாகி மிகப் பெரிய அளவில் துன்பத்தை அனுபவிக்க நேரும். பயிருக்கு ஏற்றத்தின் மூலம் நீர் இறைக்கும் அளவை அறியாதவர்கள், சிவாகமங்கள் கூறும் உயரிய உண்மையை எவ்வாறு அறிவர்?

Koviloor Digital Library

விளக்கம்:

திலம் - எள். இது சிறிய அளவுக்கு உவமை. **மலை** - இது பெரிய அளவுக்கு உவமை. **திளைத்தல்** - உடலின்பம் நுகருதல். **துலை** - பயிருக்கு நீர் இறைக்கும் ஏற்றம். இது சிற்றின்பத்துக்கு உவமை. கிணற்றிலுள்ள நீரைப் பயிர்க்கு வேண்டுமளவின்றி முழுவதும் இறைத்து விட்டால் கிணறு வரளுதலே பயனாய் விடும். இவ்வாறே அதிக உடல் இன்பத்தில் ஈடுபட்டால் விந்து வீணாகி உடல் நலியும். **துலைக்கணக்கு** - இங்குப் பயிருக்குப் பாயும் நீரின் அளவு. **கலை** - கல்வி. இது இங்கு சிவாகமங்களைக் குறிக்கும். **கலைக்கணக்கு** - இது சிவாகம உண்மைகளைப் பற்றிய அறிவு. **துரிசினார்** - குற்றமுடையவர். (64)

இன்பம் பெறுவது எப்போது?

661. பனியினும் பனிப்பரே பவனனெய்தினுந்
துனிவெயிற் கூதிரின் மிகவும் துன்பமே
யினையன துயர்பல வின்பமெய்துவர்
மனிதர்க ளெப்பொழு துறுகண் மாறியே.

பனியினும் பனிப்பரே பவனன் எய்தினும்
துனிவெயில் கூதிரில் மிகவும் துன்பமே
இனையன துயர்பல இன்பம் எய்துவர்
மனிதர்கள் எப்பொழுது உறுகண் மாறி ஏ.

உரை:

வாழும் இடத்தின் தட்ப வெப்பங்களுக்கு ஏற்ப மக்கள் பனிக்காலத்தில் குளிரால் நடுங்குவர்; சூறைக்காற்று, புயற்காற்றுகள் வீசும்போது உண்டாகும் இடி, மின்னல், பலத்த மழைகளாலும், கோடைக் காலத்தின் வெயிலாலும், ஐப்பசி கார்த்திகை மாதங்களில் உண்டாகும் குளிராலும் பலவகைத் துன்பங்களை அடைகின்றனர். இந்த இயற்கை இடர்கள் அகன்று அவர்கள் எப்பொழுது இன்பம் பெறுவர்?

விளக்கம்:

இப்பாடல் தமிழ்நாட்டின் தட்ப வெப்பநிலையைக் குறிக்கிறது. **பனி** - குளிர்ந்த நீர்த்துளி; **பனிப்பர்** - நடுங்குவர்; **பவனம்** - காற்று; **துனி** - துன்பம்; **கூதிர்** - தமிழ்நாட்டின் ஆறுவகைப் பருவகாலங்களுள் ஒன்று. இது ஐப்பசி, கார்த்திகை மாதங்களைக் குறிக்கும் குளிர்காலம்; **இணையன** - இத்தகைய; **மாறி** - நீங்கி; **உறுகண்** - துன்பம். (65)

Koviloor Digital Library

துன்பம் மிகுந்த வாழ்வு

662. காலையு மலத்தினாற் கடிய துன்பமே
சாலவும் பசியினாற் றளர்வ ருச்சியின்
மாலையிற் காமமும் மலிய வாடுவர்
வேலைகடொறு மிடர் விளையும் விஞ்சியே.

காலையும் மலத்தினால் கடிய துன்பமே
சாலவும் பசியினால் தளர்வர் உச்சியில்
மாலையில் காமமும் மலிய வாடுவர்
வேலைகள் தொறும் இடர் விளையும் விஞ்சி ஏ.

உரை:

மனிதர்களுக்குக் காலை நேரத்தில் ஒழுங்காக மலசலம் வெளியேறா விட்டால் துன்பம் உண்டாகின்றது. நண்பகலில் மிகுந்த பசியால் துன்பம் ஏற்படுகின்றது. மாலை வேளையில் பெண்ணின்பம் பெற வேண்டும் எண்ணம் வளர்வதால் வருத்தம் உண்டாகின்றது. ஒவ்வொரு வேலையைச் செய்கின்ற போதும் மிகுந்த இன்னல் விளைகின்றது.

விளக்கம்:

கடிய - கடுமையான; சால - மிகவும்; தளர்வு - சோர்வு; உச்சி - உச்சிப்பொழுது, நண்பகல்; மலிய - பெருக; விஞ்சி - மேலோங்கி. (66)

வாழ்க்கைத் துன்பங்கள்

663. ஆக்கையை நிலையென வாடகந்தனை
யாக்கலு மருந்துயரஞ்சிச் சோரரைக்
காக்கலுங் கடுந்துயர் களித்தவின் முத
லாக்கலு மருந்துய ரழியும் போதுமே.

ஆக்கையை நிலைஎன ஆடகம்தனை
ஆக்கலும் அரும்துயர் அஞ்சிச் சோரரைக்
காக்கலும் கடும்துயர் களித்தஇல்முதல்
ஆக்கலும் அரும்துயர் அழியும்போது ஏ.

உரை:

உடம்போடு கூடிய வாழ்வு நிலையானதென்று கருதி, தங்கம் முதலான செல்வப் பொருள்களைத் தேடிச் சேமித்து வைப்பது துன்பம். அவ்வாறு சேமித்து

Koviloor Digital Library

வைத்த செல்வப் பொருள்களைக் கள்வர்கள் கவர்ந்து செல்லாமல் பாதுகாப்பதும் துன்பம்; உறுதியான வீடு என எண்ணி மகிழ்ச்சியோடு வாழ்ந்திருந்த இல்லம் நாளடைவில் பழுதடைந்து சரிந்து விழும்போது அளவற்ற துயர் உண்டாகின்றது.

விளக்கம்:

ஆக்கை - உடல்; ஆடகம் - தங்கம்; சோரர் - திருடர்; இல் - வீடு. (67)

வாழ்க்கை நிலை

664. ஆடையு மொன்றலாலதிக மென்செய
வீடுமொன்றல்லது வேண்டுமோபல
பாடுடைப் புவிமனர் பாவ சாதனந்
தேடிய மற்றைய வனைத்துந் தேரிலே.

ஆடையும் ஒன்று அல்லால் அதிகம் என் செய்ய
வீடும் ஒன்று அல்லது வேண்டுமோபல
பாடுஉடைப் புவிமன்னர் பாவ சாதனம்
தேடிய மற்றைய அனைத்தும் தேரில் ஏ.

உரை:

வாழ்க்கைக்குத் தேவை என மிக முயன்று பலவகைப் பொருள்களைத் தேடிக் குவித்தாலும் ஒருவர் உடுத்துவது ஓர் ஆடையே, குடியிருப்பதும் ஒரு வீடே. ஆராய்ந்து பார்க்கும்போது அரசர்கள் கோட்டைகள் சூழ்ந்த பெரிய மாளிகைகளை அமைப்பதெல்லாம் பாவத்தைத் தேடுவதாகவே உள்ளது. அவை புண்ணியத்தைத் தருவன அல்ல.

விளக்கம்:

புவி - இங்கு நாட்டைக் குறிக்கும். தேரில் - ஆராய்ந்தால். (68)

அரசர்களும் அஞ்சி வாழ்வர்

665. அஞ்சுவர் புதல்வனையரையர் மற்றையர்
தஞ்சல்இல் பிறரிடைச் சாற்றுவாமெனை
விஞ்சிய அரசர்கள் வெகுண்ட வேளையிற்
றுஞ்சுவர் சமர்தனிற்றுயரந் துய்த்தமே.

அஞ்சுவர்புதல்வனை அரையர் மற்றையர்
தஞ்சல் இல்பிறரிடைச் சாற்றுவாம் என்னை
விஞ்சிய அரசர்கள் வெகுண்ட வேளையில்
துஞ்சுவர் சமர்தனில் துயரம் துய்த்து ஏ.

Koviloor Digital Library

உரை:

பாதுகாப்புக்குப் படைகளை வைத்திருக்கும் அரசரும், தம்முடைய புதல்வன் தம்மைக் கொன்றுவிட்டு நாட்டைக் கைப்பற்றிக் கொள்வானோ என்று அஞ்சுகிறார். சொந்தப் பிள்ளையையே நம்ப முடியாத நிலையில் ஆதரவு வழங்க முடியாத பிறரைக் குறித்துச் சொல்வதற்கு என்ன இருக்கிறது? வலிமை மிகுந்த வேற்று அரசர் முற்றுகை செய்தால், அதனால் ஏற்படும் போரில் அரசர் துன்பமுற்று இறப்பார்.

விளக்கம்:

அரையர் - அரசர்; **தஞ்சலில்** - புகலிடம் தர முடியாத; **சாற்றுவாம் என்னை** - சொல்வதற்கு என்ன உண்டு? **விஞ்சுதல்** - மேம்பட்ட, வலிமை வாய்ந்த; **வெகுண்ட** - கோபங்கொண்ட; **சமர்** - போர்; **துயத்து** - அனுபவித்து; **துஞ்சுவர்** - இறப்பர். (69)

விலங்குகளுக்கு நேரும் துன்பம்

666. கரிபரி முதலவுங் கனங்கடாங்கியே
புரவலர்க் கேவலர் புடைக்க நொந்திடும்
பொருகள மதனிடைக் குருதி பொங்கவே
சரமுறத் தளர்வுறச் சாய்ந்து வீழுமே.

கரிபரி முதலவும் கனங்கள் தாங்கியே
புரவலர்க்கு ஏவலர் புடைக்க நொந்திடும்
பொருகளம் அதனிடைக் குருதி பொங்கவே
சரம்உறத் தளர்வு உறச் சாய்ந்து வீழும் ஏ.

உரை:

யானையைப் பழக்கும் போது யானைப்பாகன் அதனை அங்குசத்தால் குத்தி வருத்துகிறான். குதிரையைப் பழக்குகிற சாரதி அதனைக் கசையால் அடித்துத் துன்புறுத்துகிறான். ஒட்டகம், எருது முதலியவை பாரங்களைச் சுமந்து செல்வதால் வருந்துகின்றன. போர்க்களத்திற்கு வீரரைச் சுமந்து செல்லுகின்ற யானை, குதிரை, ஒட்டகங்கள் பகைவரால் வெட்டி வீழ்த்தப்பட்டுக் குருதி வெளிப்பட மாள்கின்றன. ஆடு, பன்றி போன்றவை மக்களின் உணவுக்காகக் கொல்லப்படுகின்றன.

விளக்கம்:

கரி – யானை; **பரி** – குதிரை; **கனம்** – பாரம், சுமை; **புரவலர்** – வளர்ப்பவர்; **ஏவலர்** – பணியாள்; **புடைக்க** – அடிக்க; **பொருகளம்** – போர் செய்யுமிடம்; **குருதி** – செந்நீர், இரத்தம்; **பொங்க** – வெளிப்பட; **சரம்** – அம்பு; **உற** – பொருந்த; **தளர்வு** – சோர்வு; **வீழும்** – இறக்கும். (70)

Koviloor Digital Library

காட்டு விலங்குகளுக்கு நேரும் துன்பம்

667. மானினங் கானவர் வலையின் வாடிடு
மானினம் புலியுறினழுங்கி யஞ்சுமே
வானற வுணவற வருந்தி வாடிடு
மேனைய மிருகமு மிடுக்க ணெய்துமே.

மான் இனம் கானவர் வலையில் வாடிடும்
ஆன் இனம்புலி உறின் அழுங்கி அஞ்சுமே
வான்அற உணவுஅற வருந்தி வாடிடும்
ஏனைய மிருகமும் இடுக்கண் எய்தும் ஏ.

உரை:

காட்டில் வாழும் மான்கள், வேடர்கள் விரித்த வலைகளில் சிக்கி அவர்களுக்கு உணவாகின்றன. காட்டுப் பசுக்கள் புலிகள் தாக்கும்போது வருந்தி நடுங்குகின்றன. மழை பெய்யாவிடில் புல், பூண்டு முதலியன கருகிப் போய், அவற்றை இரையாகக் கொள்ளும் விலங்குகள் போதிய இரையின்றி மெலிகின்றன. இவ்வாறே ஏனைய விலங்குகளும் துன்பம் அடைகின்றன.

விளக்கம்:

கானவர் - வேடர்; ஆன் - பசு; வான் - மழை; அற - அற்றுப்போக; உணவு - இங்கு இரையைக் குறிக்கும். வாடிடும் - மெலியும், இளைக்கும்; ஏனைய - பிற; இடுக்கண் - துன்பம். (71)

பறவைகளும் வருந்தும்

668. வியங்கமும் வருந்திடும் வெயிலின் மாரியின்
வயங்கெடத் துயங்கிடும் வாடை வீசவும்
நயங்கெடு முணவற நாரமாறினு
மியங்கினும் பகையினுக் கச்ச மெய்துமே.

வியங்கமும் வருந்திடும் வெயிலில் மாரியில்
வயம்கெடத் துயங்கிடும் வாடை வீசவும்
நயம்கெடும் உணவுஅற நாரம் மாறினும்
இயங்கினும் பகையினுக்கு அச்சம் எய்தும் ஏ.

உரை:

மிகுந்த வெயிலாலும் மழையாலும் பறவைகள் வருந்தும். வடக்குத் திசையிலிருந்து வீசுகிற குளிர்காற்றால் பறவைகள் வலிமை குன்றித் தளரும். ஏரி,

Koviloor Digital Library

குளம் முதலான நீர் நிலைகள் வறண்டு போனால் மீன்கொத்தி, நாரை, கொக்கு முதலிய நீர்ப்பறவைகள் இரையில்லாமல் துக்கப்படும். இராசாளி, வல்லூறு போன்ற பறவைகளால் புறா, கொக்கு முதலிய பறவைகள் உயிருக்கு அஞ்சி நடுக்கம் கொள்ளும்.

விளக்கம்:

வியங்கம் - விஹங்கம் என்ற வடசொல்லின் திரிபு. பறவை ஆகாயத்திற் செல்வது என்ற சொற்பொருள். **வாடை** - வடக்குத் திசையிலிருந்து வீசும் குளிர்காற்று. **வயம்** - வலிமை; **துயங்குதல்** - சோர்வடைதல்; **நயம்** - இனிமை, மகிழ்வு; **நாரம்** - நீர்; **மாரி** - மழை; **இயங்குதல்** - இங்குப் பறத்தலைக் குறிக்கும். **பகை** - இங்குப் பறவைகளைக் கொன்று தின்னும் வல்லூறு முதலியவற்றைக் குறிக்கும். (72)

பாம்பும் வருந்தும்

669. **பசியுறப் பகையுறப் பாம்புந் தேம்பிடும்**
நசமுறும் வலையுற நார மீனுமோ
கசிவினிற் கிருமியுங் கலித்தழுங்கியே
வசமறும் வெயிலினோர் தினத்துண் மாயுமே.

பசிஉறப் பகை உறப் பாம்பும் தேம்பிடும்
நாசம் உறும் வலை உற நாரம் மீனுமோ
கசிவினில் கிருமியும் கலித்து அழுங்கியே
வசம்அறும் வெயிலில் ஓர் தினத்துள் மாயும் ஏ.

உரை:

பாம்பாட்டியின் கூடையிலே அடைக்கப்பட்ட பாம்பு, பசித்தபோது இரையின்றி வருந்தும்; கருடணைக் கண்டதும் மயங்கி வாடும். நீரில் வாழும் மீன்கள் செம்படவன் வீசிய வலையிலே சிக்கி அழியும். சதுப்பு நிலத்திலே பெருகி வளரும் புழுக்கள், தோன்றிய ஒரு நாளுக்குள் கதிரவனின் கிரணங்களால் மடியும்.

விளக்கம்:

பாம்பின் பகை - பாம்பைக் கொன்று தின்னும் கருடன்; **தேம்பிடும்** - வாடும்; **நாசம்** - அழிவு. இது நசம் என வந்தது. **நாரம்** - நீர்; **கசிவு** - ஈரம்; **கிருமி** - புழு; **கலித்தல்** - இது இங்கு மிகுதியாகப் பெருகுவதைக் குறிக்கும். **அழுங்கி** - துன்புற்று; **அறும்** - மடியும். (73)

Koviloor Digital Library

மரங்களும் நாசமுறும்

670. வருந்திடு தாபரவுருவ மாதவ
ரரிந்திட வற்கலையதனை யாக்கவும்
பொரிந்திடும் பனியினும் பொருகையானைகண்
முரிந்தறு மூலமும் பறிக்க மூசியே.

வருந்திடு தாபர உருவம் மாதவர்
அரிந்திட வற்கலை அதனை ஆக்கவும்
பொரிந்திடும் பனியிலும் பொருகை யானைகள்
முரிந்து அறும் மூலமும் பறிக்க மூசி ஏ.

உரை:

தவசிகளுக்குத் தேவையான மரவுரி ஆடை செய்வதற்காக மரப்பட்டைகளை வெட்டி உரிப்பதால் ஓர் அறிவுடைய மரங்கள் வேதனையடைகின்றன. பனி பெய்வதால் மரங்களின் தோல் பொரிகின்றது. சண்டையிடும் துதிக்கைகளையுடைய யானைகள் ஒன்று சேர்ந்து மரங்களின் வேர்களைப் பறிப்பதால் அவை வளைந்து ஒடிந்து கெட்டு அழிகின்றன.

விளக்கம்:

தாபரம் - தாவரம், மரப்பொது, இடம் பெயராத ஓர் அறிவு உயிர். மாதவர் - தவசிகள்; அரிந்திட - நறுக்க, அறுக்க; ஆக்க - செய்ய; பொருகை - போர் செய்தல் துதிக்கை; முரிந்து - ஒடிந்து; மூலம் - வேர்; மூசி - கெட்டு; அறும் - அழியும்; வற்கலை - மரவுரி. (74)

மன அமைதியில்லாத வாழ்க்கை

671. பெற்றிடுஞ் செல்வமும் பீடை செய்திடு
மற்றுயர் வாழ்வினை மதித்த வேளையி
லுற்றிடுமுணர்வுமிம் முறையினொத்திடுஞ்
சிற்றுயிர்க் குடற்சிறை செறிதலாலரோ.

பெற்றிடும் செல்வமும் பீடை செய்திடும்
மற்று உயர்வாழ்வினை மதித்த வேளையில்
உற்றிடும் உணர்வும் இம்முறையில் ஒத்திடும்
சிற்றுயிர்க்கு உடற்சிறை செறிதலால் அரோ.

உரை:

செல்வர் ஒருவர் தம்மைவிட அதிகச் செல்வம் உள்ளவரைப் பார்த்து ஏங்கிப் பெருமூச்சு விடுகிறார். கற்றவர் ஒருவர் தம்மிலும் மேம்பட்ட கல்வியாளரைப்

Koviloor Digital Library

பார்த்துத் தாமும் அத்துணை அளவு கல்வி கற்றுப் பட்டம் பெறவில்லையே என்று மனம் புழுங்குகின்றார். இவ்வாறு உடலாகிய சிறைக்குள் அடைபட்டுள்ள மக்கள் ஒவ்வொருவரும் தம்மை விட வசதியாக வாழ்கின்றவரோடு தம்மை ஒப்பிட்டு, உலகப் பற்றுகளில் சிக்கித் துன்பம் அடைகின்றனர்.

விளக்கம்:

பீடை - துன்பம்; **உயர்வாழ்வு** - வளமான வாழ்க்கை; **சிற்றுயிர்** - இது இங்கு மக்களைக் குறிக்கிறது; **உடற்சிறை** - உடம்போடு கூடிய வாழ்க்கையாகிய பந்தம்; **செறிதல்** - பொருந்துதல்; **அரோ** - அசை. (75)

முன்பாடலின் தொடர்ச்சி

672. பரிமிசைக் களியுறப் பயின்ற பாவகன்
தரைதனிற் சிவிகையுட் டங்கினானெதிர்
வரமுனைக் களிப்பினை மாற்றிமையலும்
பிரிவிலன் றோர்வரச் சிவிகைப் பேதையும்.

பரிமிசைக் களிஉறப் பயின்ற பாவகன்
தரைதன்னில் சிவிகையுள் தங்கினான் எதிர்
வரமுன்னைக் களிப்பினை மாற்றி மையலும்
பிரிவு இலன் தேர்வரச் சிவிகைப் பேதையும்.

உரை:

குதிரையின் மீது அமர்ந்து மகிழ்ச்சியோடு செல்லுகின்ற ஒருவன், தன் எதிரே பல்லக்கில் அமர்ந்து வருகின்ற வசதி மிகுந்தவனைப் பார்த்துத் தன் மகிழ்ச்சியை இழக்கிறான். பல்லக்கிலே அமர்ந்து செல்கின்ற பணக்காரன், தன் எதிரே குதிரைகள் பூட்டிய வண்டியில் அமர்ந்துவரும் செல்வம் மிகுந்தவனைப் பார்த்துத் தானும் அவனைப் போலச் செல்வம் உள்ளவனாக ஆகவேண்டும் என்று ஆசை கொள்கிறான்.

விளக்கம்:

பரி – குதிரை; **களி** – மகிழ்வு; **பயின்ற** – பழகிய; **பாவகன்** – குற்றமற்றவன்; **சிவிகை** – நான்கு மனிதர் சுமந்து செல்லும் பல்லக்கு; **பிரிவு இலன்** – நீங்காதவன்; **மையல்** - ஆசை; **தேர்** – குதிரைகள் இழுக்கும் வண்டி. (76)

முன்பாடலின் தொடர்ச்சி

673. இம்முறையமரரு மிடுக்க ணெய்துவர்
தம்மினு முயர்ந்தவர் பதத்தைத் தாமுனி
யெம்முறையானு மெய்யிடுக்கணேதுவே
செம்மைய செல்வமே சிவானுபூதியே.

Koviloor Digital Library

இம்முறை அமரரும் இடுக்கண் எய்துவர்
தம்மினும் உயர்ந்தவர் பதத்தைத்தாம் உன்னி
எம்முறையாலும் மெய் இடுக்கண் ஏதுவே
செம்மைய செல்வமே சிவ அனுபூதி ஏ.

உரை:

இவ்வாறே தேவர்கள் முதலானோரும் தம்மைப் பார்க்கிலும் மேலான நிலையில் உள்ளவர்களின் பதவியையும், செல்வங்களையும் எந்த வகையிலாவது அடையக் கருதி ஒருகாலைக்கொரு காலதிகமாக உடல் வருந்தத் துன்பங்களை அனுபவிப்பர். ஆகவே, சிவபிரானுடைய திருவருளைப் பெறுதலாகிய மெய்யறிவை அடைதலே செம்மையான செல்வம் ஆகும்.

விளக்கம்:

அமரர் - அமுதம் உண்டு சாகாத நிலை பெற்றவர்கள்; **தம்மினும்** - தம்மைப் பார்க்கிலும்; **உயர்ந்தவர்** - மேலானவர்; **பதம்** - பதவி; **உன்னி** - கருதி; **எம்முறையாலும்** - எந்த வகையிலாவது; **மெய்** - உடம்பு; **இடுக்கண்** - துன்பம்; **ஏது** - காரணம்; **செம்மைய** - நேர்மையான: **சிவஅனுபூதி** - சிவபிரானுடைய திருவருளைப் பெற உதவுகின்ற மெய்யறிவு; **அநுபூதி** - மெய்யறிவு.

குறிப்பு:

முன்னை உரையிலுள்ளது உத்தரம் அல்ல உத்தரோத்தரம். மேலுக்கு மேல் என்பது பொருள். (77)

அமரரும் அசுரரும்

674. **சமர்தனிலமரரா லசுரர் தாழ்வரே**
யமரருமவர்களாலப சயத்தரே
யிமையவர் தயித்திய ரிந்த நீர்மையர்
தமதமவினைபரி பாகஞ் சாரவே.

சமர்தனில் அமரரால் அசுரர் தாழ்வரே
அமரரும் அவர்களால் அபசயத்தரே
இமையவர் தயித்தியர் இந்த நீர்மையர்
தமதம வினை பரிபாகம் சார ஏ.

உரை:

அமரருக்கும் அசுரருக்கும் இடையே நடந்த போர்களில் அமரர்கள் அசுரர்களை வென்றனர். இவ்வாறே, சிலபோது அசுரர்களால் அமரர்கள்

Koviloor Digital Library

தோற்கடிக்கப்பட்டனர். வானவரும் தயித்தியரும் தாம்தாம் செய்த வினைகளின் பக்குவ நிலைக்கு ஏற்ப இவ்வாறு வெற்றியையும் தோல்வியையும் அடைந்தனர்.

விளக்கம்:

சமர் - போர்; தாழ்வர் - வெல்லப்படுவர்; **தமதம** - தாம்தாம்; **அபசயத்தர்** - தோற்றவர்; **இந்த நீர்மையர்** - இத்தகையவர்; **பரிபாகம்** - பக்குவம்; **சார** - பொருந்த; **தைத்தியர், இமையவர்** - இவர்கள் காசிபரின் மக்கள்.

''சுரர், அசுரர், தானவர், தைத்தியர், அரக்கர், இயக்கர், நாகர் முதலானோர் மரபுகளுக்கும், கருடன், அருணன், பர்வதன், விபாண்டகர், வசிட்டர் ஆகியோருக்கும் காசிபரே தந்தை'' *(தமிழ்க் கலைக் களஞ்சியம் - தொகுதி 3, பக்கம் - 433)* காசிபருக்கும் அதிதிக்கும் பிறந்தவர்கள் சுரர்கள். காசிபருக்கும் திதிக்கும் பிறந்தவர்கள் அசுரர்கள். அதிதியும் திதியும் தட்சனுடைய புதல்விகள். இவர்கள் ஒருவருக்கொருவர் பகைவர். ஆனால், ஒரே தந்தையின் மக்கள். (78)

ஈசனே பலன் தருவான்

675. கருமமும் பலத்தினைக் காட்ட வல்லதே
பருவமுந் தனக்கது பண்ணவல்லதே
இருவினைப் பருவமும் பலமுமீசனே
தருவனென்றுணர்கிலாருடலிற் சார்வரே.

கருமமும் பலத்தினைக் காட்ட வல்லதே
பருவமும் தனக்கு அது பண்ண வல்லதே
இருவினைப் பருவமும் பலமும் ஈசனே
தருவன் என்று உணர்கிலார் உடலில் சார்வர் ஏ.

உரை:

செயலும் காலமும் உயிரற்றவை. ஆகையால், அவை பயனை அளிக்கா. ஒவ்வொருவரும் செய்கின்ற செயல்களால் உண்டாகும் நன்மை தீமைகளை அறிந்து, அவற்றிற்குரிய பயன்களைச் சிவபெருமானே தருவார் என்று உணராதவர்கள், பிறவியைச் சாருவர்.

விளக்கம்:

கருமம் - தொழில், வினை, செயல்; **பலன்** - பயன்; **பருவம்** - காலம்; **காட்ட வல்லதே** - காட்டக் கூடியதே, பண்ணவல்லதே, பண்ணக்கூடியதே; **இருவினை** - நல்வினை தீவினைகள், புண்ணிய பாவங்கள்; **ஈசன்** - சிவபெருமான்; **உணர்கிலார்** - அறியாதவர்; **உடலில் சார்வர்** - பிறவியை சாருவர். (79)

Koviloor Digital Library

நோயால் வரும் துன்பம்

676. அருந்துயரடையுமே யவர்தமாதியின்
மருந்தினை யருந்தினுந் துயரம் வந்துறு
மருந்திடுந் துயரினை யறிவர் யாவரும்
விரிந்திட விவ்விடத் துரைக்க வேண்டுமே.

அரும்துயர் அடையுமே அவர்தம் ஆதியில்
மருந்தினை அருந்தினும் துயரம்வந்து உறும்
அருந்திடும் துயரினை அறிவர் யாவரும்
விரிந்திட இவ்விடத்து உரைக்க வேண்டுமே.

உரை:

மக்கள் தங்களுக்கு நோய் உண்டானதும் துன்புற்று வருந்துகின்றனர். மருந்தினை உட்கொண்டதும் உடலில் ஏற்படுகின்ற தாக்கங்களால் துயரம் உண்டாகின்றது. மருந்தை உட்கொள்ளும் போது உண்டாகும் கசப்பு, வாந்தி, மயக்கம் ஆகியவற்றை யாவரும் அறிவர். அவற்றை இங்கு விரித்துச் சொல்ல வேண்டியதில்லை.

விளக்கம்:

அரும்துயர் - பெரிய துன்பம்; அருந்தினும் - உட்கொண்டாலும்; விரிந்திட - விளக்கமாகச் சொல்ல; வேண்டுமே - வேண்டா என்பது குறிப்பு. 'ஓ' எதிர்மறை. (80)

நரை திரைகளால் வரும் துன்பம்

677. நரை திரை வருதலி னடலையோ பெரி
திரைதரு மவரெவ ரென்ன வேங்கியே
வருதூயரளவிலை மரண வேளையில்
விரவிய தூதரான் மிக்க துக்கமே.

நரை திரை வருதலின் நடலையோ பெரிது
இரை தரும் அவர் எவர் என்ன ஏங்கியே
வருதுயர் அளவு இல்லை மரண வேளையில்
விரவிய தூதரால் மிக்க துக்கம் ஏ.

உரை:

மயிர் வெளுப்பதும் தோல் சுருங்குவதும் முதுமைப் பருவத்தில் நிகழும். முதுமைப் பருவம் துன்பம் தருவது. மிகுந்த முதுமையில் உழைத்துப் பொருள் தேட

Koviloor Digital Library

முடியாமையால் எங்கே உணவு கிடைக்கும் என்று அலைந்து வருந்துகிற வறியவர்களும் உள்ளனர். தவிர்க்க முடியாத சாவு வேளை நெருங்குகிற போது எமனுடைய பணியாள்களால் மிகுந்த துயரம் உண்டாகும்.

விளக்கம்:

நரை - கரிய நிற மயிர் வெண்மை நிறம் அடைவது. **திரை** - தோல் சுருங்குவது; **நரை திரை** - முதுமை அடைதல்; **நடலை** - துன்பம்; **இரை** - இங்கே இது உணவைக் குறிக்கிறது; **ஏங்கி** - கவலைப்பட்டு; **மரண வேளை** - இறக்கும் தருணம்; **விரவிய** - பொருந்திய; **தூதர்** - எமனுடைய பணியாளர்கள். (81)

முதுமைக் காலத் துன்பம்

678. ஆயவுஞ் சதமென வறையப்பட்டதே
யாயினு மவரவர் கருமத்தாலுடன்
மாயு மென்றறிக மாதுயரமே வருந்
தேயுமந் நாடனிற் காலன் சேரவே.

ஆயவும் சதம்என அறையப்பட்டதே
ஆயினும் அவர் அவர் கருமத்தால் உடல்
மாயும் என்று அறிக மாதுயரமே வரும்
ஏயும் அந்நாள் தன்னில் காலன்சேர ஏ.

உரை:

மக்களின் முழுமையான வாழ்நாள் நூறு ஆண்டுகள் என்று நூல்களிற் கூறப்பட்டுள்ளது. எனினும், தாயின் வயிற்றில் கருவாக வளரும் போதும் அழிய நேருகின்றது. கரு முதிர்ந்து குழந்தையாகப் பிறக்கும்போதும், பிறந்து வளரும் போதும், கல்வி பயிலும் போதும், திருமணப் பருவத்திலும், முதிய பருவத்திலும் சாவு உண்டாகின்றது. இவ்வாறு உயிர் உடலை விட்டுப் பிரிகின்ற வேளையில் எமனுடைய பணியாளர் வந்ததும் பெரிய துன்பம் வந்து பொருந்துகின்றது.

விளக்கம்:

ஆயு - வாழ்நாள்; **சதம்** - நூறு ஆண்டுகள்; **அறைய** - சொல்ல; **கருமம்** - செயல்; **மாயும்** - அழியும்; **மா** - பெரிய; **துயரம்** - துன்பம்; **ஏயும்** - பொருந்தும்; **காலன்** - எமன்; எமதூதன். (82)

இறப்பு இருவகை

679. மிருத்தியு மிருவித மொன்று மீண்டிடு
மருத்திய மருந்தினு மழலை யோம்பினு
முரைத்த மந்திரத்தினு மோதனாதியைக்
குருத்தவர்க் குதவினு மன்பு கூரவே.

Koviloor Digital Library

மிருத்தியும் இருவிதம் ஒன்று மீண்டிடும்
அருத்திய மருந்திலும் அழலை ஓம்பிலும்
உரைத்த மந்திரத்திலும் ஓதன ஆதியைக்
குருத்தவர்க்கு உதவிலும் அன்புகூர ஏ.

உரை:

மனிதர்களுக்கு நேருகின்ற மரணம் இருவகை. ஒன்று நீண்ட ஆயுளோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒருவர் தம் முதுமையின் காரணமாக உடல் தளர்ந்து அடைகின்ற மரணம். அது காலமிருத்யு - இயற்கை மரணம் எனப்படும். இன்னொன்று எதிர் பாராத வகையில் நேர்கின்ற அகால மரணம். மருத்துவ நூலில் கூறியுள்ள மருந்தை முறையாக உட்கொள்வதாலும், சீந்தித்தண்டு முதலியன கொண்டு ஓமம் செய்வதாலும், சாவைத் தடுக்கும் மந்திரத்தை ஓதுவதாலும், அறுசுவைக்ளோடு கூடிய உணவு வகைகளை அன்போடு தவசிகளுக்கு அளித்து அவர்களை உண்ணச் செய்வதாலும் அகால மரணத்திலிருந்து மீட்சி பெறலாம்.

விளக்கம்:

மிருத்தியு - மரணம்; அருத்திய - உட்கொண்ட; அழலை ஓம்புதல் - ஓமம் வளர்த்தல்; ஓதனம் - உணவு; உரைத்த மந்திரம் - சாவைத் தடுக்கும் 'மிருத்தியுஞ்சயம்' என்னும் மந்திரம், குருத்தவர் குருவும் தவசிகளும். (83)

உயிர் உடலை அடையும் முறை

680. மற்றைய மிருத்தியும் வந்த வேளையி
லுற்றெவருடலிடையிருப்ப ரோர்ந்திடிற்
பற்றிய உடலினை விட்டுப் பாறியே
முற்றிய வினைப்பயன் சீவன் மூளுமே.

மற்றைய மிருத்தியும் வந்த வேளையில்
உற்று எவர் உடலிடை இருப்பர் ஓர்ந்திடில்
பற்றிய உடலினை விட்டுப் பாறியே
முற்றிய வினைப்பயன் சீவன் மூளும் ஏ.

உரை:

ஏனைய மரணத்தை ஆராயும்போது யாரும் தம் உடலோடு நிலையாக வாழ்வதில்லை. அனுபவிக்க வேண்டிய பழவினையை (பிராரத்தம்) அனுபவித்து முடிந்தவுடன், இறப்பு வந்த போது பொருந்தியிருந்த உடலை விட்டு நீங்கிய உயிர், தன் அறிவு முதிர்ச்சிக்கு ஏற்ப வேறு உடலைப் பொருந்தும்.

Koviloor Digital Library

விளக்கம்:

ஓர்ந்திடில் - ஆராயும் போது; பாறி - ஓடி; சீவன் - உயிர்; மூளும் - உடலோடு பொருந்தும்; பற்றிய - பொருந்தியிருந்த; முற்றிய வினைப்பயன் - அனுபவித்துத் தீர்ந்த பழவினை. (84)

உயிர் பிரியும்போது உண்டாகும் துன்பம்

681. விட்டிடும் வேளையின் வியந்த வச்சமே
பட்டிடப் படுந்துயர் பகரலாவதே
கட்டுவை நீங்கியே காதல் செய்யுமண்
கட்டுவை தன்னையும் பின்னைக் காமுறும்.

விட்டிடும் வேளையில் வியந்த அச்சமே
பட்டிடப் படும்துயர் பகரல் ஆவதே
கட்டுவை நீங்கியே காதல் செய்யும்மண்
கட்டுவை தன்னையும் பின்னைக் காமுறும்.

உரை:

உயிர் உடலை விட்டுப் பிரியும் நேரத்தில் உடலுக்கு ஏற்படும் துயரத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. அதனைப் பார்த்து உற்றார் உறவினர்கள் வியப்பும் பயமும் அடைகிறார்கள். ஏனையோர்தாம் விரும்பும் கட்டிலை விட்டிறங்கியதும் மேல் நிலமாகிய கட்டிலை விரும்பிப் படுப்பவராவார். மரக்கட்டிலை விரும்பித் தூங்குபவர் மரணத்தின் பின் மண்கட்டிலை விரும்பித் தூங்குபவராவார் என்றபடி.

விளக்கம்:

''காதல் செய்யும் கட்டுவை நீங்கியே மண் கட்டுவை தன்னையும் பின்னைக் காமுறும்'' எனப் பிரித்துக் கூட்டுக. கட்டுவை - கட்டில்; விட்டிடும் வேளை - உயிர்பிரியும் நேரம்; பட்டிட - அனுபவிக்க; பகரல் - சொல்லுதல்; ஆவதே - இங்கு முடியாது என்பதைக் குறிப்பிடுகிறது. காதல் - விருப்பம். மண் - இங்கு பிணம் புதைக்கப்பட்ட இடத்தைக் குறிக்கும். பின்னை - பிறகு, பின்னர்; காமுறும் - விரும்பும். (85)

உயிர் பிரியும்போது ஏற்படும் துன்பம்

682. தனத்தினை மனைதனைத் தானியந்தனை
நினைத்தினி யெவரனுபவிப்பர் நீங்குநா
ளெனக்கிவை யன்னியமாகு மேயெனா
மனத்துயர் மலியவே மாயு மாவியே.

Koviloor Digital Library

தனத்தினை மனைதனைத் தானியம்தனை
நினைத்து இனிஎவர் அனுபவிப்பர் நீங்குநாள்
எனக்கு இவை அன்னியம் ஆகுமே யெனா
மனத்துயர் மலியவே மாயும் ஆவி ஏ.

உரை:

ஒருவருடைய மரண வேளையில் அவருடைய உடலில் இருந்து உயிர் பிரியும் நேரத்தில் அவர் தேடிய செல்வம், அவர் கட்டிய வீடு, அவருடைய நன்செய் புன்செய் நிலங்களில் விளைந்த நெற்குவியல் ஆகியவை இனி தமக்கு உதவாதே, இவற்றைப் பிறர்தாமே அனுபவிக்கப் போகிறார்கள் என அவருடைய மனம் எண்ணுகின்றது. அதனால் ஏற்படும் துன்பம் பெருக, அவருடைய உடம்பிலிருந்து உயிர் நீங்கும்.

விளக்கம்:

தனம் - காகித நாணயம். தங்க அணிகலன்கள், வங்கியில் உள்ள சேமிப்பு, பிற சொத்துகள் முதலியவை.

மனை - வாழும் இல்லம்: தானியம் - இங்கு நெற்குவியல். நீங்குநாள் - உயிர் நீங்கும் நாள், இறக்கும் நாள்; அன்னியம் - வேறானது; எனா - என்று; மலிய - பெருக; மாயும் - அழியும்; ஆவி - உயிர். (86)

உயிருக்குத் துணை புண்ணியம்

683. பாம்பழல் வாயினாற் பற்ற மண்டூகம்
தேம்பிடுந் துயருறுஞ் சீவன் றேயுநா
ளோம்பிட வல்லரேயுற்ற மற்றையார்
போம்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம்.

பாம்பு அழல் வாயினால் பற்ற மண்டுகம்
தேம்பிடும் துயர்உறும் சீவன் தேயும்நாள்
ஓம்பிட வல்லரே உற்ற மற்றையார்
போம்பொழுது அரும்துணை புரிந்த புண்ணியம்.

உரை:

ஒரு நச்சுப் பாம்பு தனக்கு இரையாக ஒரு தவளையைக் கவ்விய போது, அதன் பற்களிலே சிக்கிய தவளை வாடித் துன்புற்றுப் பாம்புக்கு இரையாகும். இவ்வாறே ஒருவருடைய மரணத் தறுவாயில் அவருடைய உடம்பிலிருந்து உயிர் விலகாமல் பாதுகாக்கக் கூடிய உற்றார் உறவினர் யாரும் இலர். பாம்பின் வாயிற் சிக்கிய தவளை மீள முடியாததுபோலச் சாவின் பிடியில் சிக்கிய உயிரும் தப்ப

Koviloor Digital Library

இயலாது. இந்த உலகை விட்டுப் பிரிந்து போகிற ஒவ்வொருவருக்கும் அவரவர் செய்த புண்ணியங்களே உற்ற துணையாகச் சென்று உதவும்.

விளக்கம்:

''ஒருவர் உலகை விட்டு மறையும் போது,
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே''

என்பது பட்டினத்து அடிகளின் அருள்உரை.

அழல் - நஞ்சு; **மண்டுகம்** - தவளை; **தேம்பிடும்** - வாடும்; **சீவன்** - உயிர்; **தேயும்நாள்** - நீங்கும்நாள்; **ஓம்பிட** - பாதுகாக்க; **உற்ற மற்றையார்** - சுற்றத்தார்; **புண்ணியம்** - நல்வினைப்பயன். (87)

உயிர் உடலைப் பொருந்தும் முறை

684. **திரணுறுஞ் செழுகை போற் சீவன் றீண்டியே**
வருமுருவதனை முன்னுருவ மாற்றிடுந்
தருமமே பருவமேற் சாரும் வானினைப்
பருவமேற் றீவினை நிரயம் பற்றுமே.

திரண் உறும் செழுகைபோல் சீவன் தீண்டியே
வரும்உரு அதனைமுன் உருவம் மாற்றிடும்
தருமமே பருவ மேல் சாரும் வானினைப்
பருவ மேல் தீவினை நிரயம் பற்றும் ஏ.

உரை:

புல்லில் பொருந்தியிருக்கும் சாண் அளப்பான் புழு, தன்னுடைய மேல் ஒரு புல்லைப் பற்றிக் கொண்டு முன்பற்றிய புல்லை விடுவது போல, சாகும் தறுவாயில் வந்து தோன்றுகிற யாதனா சரீரத்தைப் பற்றிக் கொண்டே உயிர் தன் முன்னைய உடம்பை விட்டு நீங்கும். இவ்வாறு மற்றொரு உடலைப் பெற்றுக் கொண்டு செல்லுகின்ற உயிர், நல்வினைப்பயன் பக்குவப்பட்டிருந்தால் சுவர்க்க உலகையும், தீவினைப் பயன் பக்குவப்பட்டிருந்தால் நரகத்தையும் அடையும். தருமம் பருவமேல் எனவும் தீவினை பருவமேல் எனவுங் கூட்டுக. பருவம் - பரிபாகம், பக்குவம்.

விளக்கம்:

திரண் - திரணம், புல்; **உறும்** - பொருந்திய; **சீவன்** - உயிர்; **தீண்டி** - தொட்டு, சார்ந்து; **செழுகை** - சாண் அளப்பான் புழு; **தருமமே பருவம்** - அறப்பயனான புண்ணியம் பக்குவமுறல்; **வான்** - இங்கே சுவர்க்க உலகு; **நிரயம்** - நரகம்; **பற்றும்** - சாரும், அடையும். (88)

Koviloor Digital Library

இரப்பதும் கரப்பதும் துன்பம்

685. மரிப்பதி னருந்துயர் மதிக்கின் மற்றிலை
யிரப்பதே யதனினும் பெரிய வின்னலே
கரப்பதூ மிரப்பதிற்கடிய வின்னலே
யிரப்பதுங் கரப்பது மின்மையின்பமே.

மரிப்பதின் அரும்துயர் மதிக்கின்மற்று இல்லை
இரப்பதே அதனிலும் பெரிய இன்னலே
கரப்பதும் இரப்பதில் கடிய இன்னலே
இரப்பதும் கரப்பதும் இன்மை இன்பம் ஏ.

உரை:

வாழ்க்கையில் ஏற்படுகின்ற மிகப் பெரிய துன்பங்கள் பல உண்டு. எனினும், சாவைப் போலப் பெரும்துயரம் தருவது வேறு எதுவும் இல்லை. ஒருவரிடம் சென்று ஒன்றைக் கொடு என யாசிப்பது இறப்பைவிடப் பெருந்துன்பமாகும். ஒன்றை வைத்துக் கொண்டு யாசிப்பவனுக்கு இல்லை என்று சொல்வது, யாசிப்பதை விடப் பெரிய துயரமாகும். ஆதலால், ஒருவரிடம் சென்று ஒரு பொருளை இரவாதிருத்தலும், இல்லை என்று தன்னை நாடி வந்தவருக்கு இல்லையென்று சொல்லாமல் உதவுதலும், இம்மை மறுமை இரண்டிற்கும் இன்பமாகும்.

''சாதலின் இன்னாத தில்லை இனித தூஉம்.
ஈத லிசையா தெனின்''

- என்ற *திருக்குறள்* வழியது இச்செய்யுட் பொருள்.

விளக்கம்:

மரிப்பதின் அருந்துயர் மதிக்கின்மற்று இல்லை; இறப்பதைவிடப் பெரிய துன்பம் வேறு எதுவும் இல்லை. மரித்தல் - சாதல்; மதிக்கின் - ஆராய்ந்தால்; இரப்பது - யாசிப்பது; கரப்பது - மறைப்பது; இன்னல் - துயரம்; இன்மை - இல்லை; மற்றிலை - வேறு இல்லை. (89)

துறவியே இன்பமுடன் இருப்பார்

686. மண்ணினுந் தனத்தினு மனைக்கு வாய்த்தநற்
பெண்ணினு மகவினும் பெரிய பேரினுந்
துண்ணென விழைவினைத் துறந்த தூயரே
விண்ணினு மின்புடன் விளங்கி மேவுவார்.

Koviloor Digital Library

மண்ணிலும் தனத்திலும் மனைக்கு வாய்த்தநல்
பெண்ணிலும் மகவிலும் பெரிய பேரிலும்
துண்என விழைவினைத் துறந்த தூயரே
விண்ணிலும் இன்புடன் விளங்கி மேவுவார்.

உரை:

இல்லற வாழ்க்கைக்கு ஏற்ற நற்குணமும் நல்லொழுக்கமும் பொருந்திய மனையாள், பெற்ற குழந்தை ஆகியோர் மீதும், நிலம், வீடு, அணிகலன்கள், சேமித்து வைத்த பணம், மிகுந்த புகழ் ஆகியவற்றின் மீதும் கொண்ட பற்றைச் சடிதியில் கைவிட்ட மேலோரே இம்மண்ணுலகிலும் வானவர் உலகிலும் மகிழ்ச்சி பெற்றவராக விளங்குவர்.

விளக்கம்:

இப்பாடல் சைவ சமய வளர்ச்சிக்காக இல்லற இன்பங்களை ஒதுக்கிய சைவமட அதிபதிகளுக்கும், ஆறுமுக நாவலர் பெருமான், இராமலிங்க வள்ளலார் போன்று சமயப் பணிக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட பெரியார்களுக்கும் பொருத்தமானது. ஏனைய சைவசமய மக்கள் இல்வாழ்க்கையைத் துறக்கலாகாது. நாம் வணங்கும் சிவபிரானும் முருகனும் தேவிமாரோடு விளங்குகின்றனர். சைவ நாயன்மார் பலர் இல்லற வாழ்விலிருந்தே முத்தி பெற்றனர். 'இல்லறம் அல்லது நல்லறம் அன்று' என அவ்வையாரும், ''அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை'' எனத் திருவள்ளுவரும் கூறிய அறிவுரைகளைப் புறக்கணிப்பது தவறு. இல்வாழ்க்கை அனுபவ முதிர்ச்சியில் துறவு தானாக நேர வேண்டியது என்பது சைவம். **துண்ணென** - சடிதியில்; **விழைவு** - பற்று; **பெரிய பேர்** - புகழ். தானாக வரும் உண்மைத் துறவு சடிதியில் வரும் என்பதை அறிவிப்பது 'துண்ணென' என்ற இச்சொல்லாற்றல். (90)

சிவனே துயரத்தை அறுப்பான்

687. ஆக்கையிற்றுயர் பெரிய தற்பமின்பமென்
றாக்கையயறவெறுத் தார்வங் கூர்வரே
லாக்கையினனாதியே முத்தனுக்கவ
னாக்கையுந் துயரமு மறுப்பனாணையால்.

ஆக்கையில் துயர்பெரிது அற்பம்இன்பம்என்று
ஆக்கையை அறவெறுத்து ஆர்வம் கூர்வரேல்
ஆக்கைஇல் அனாதியே முத்தனுக்கு அவன்
ஆக்கையும் துயரமும் அறுப்பன் ஆணையால்.

உரை:

உடம்பால் ஏற்படும் துன்பம் பெரிது; இன்பம் மிகச் சிறிது என உணர்ந்து,

Koviloor Digital Library

உடம்பை அறவே வெறுத்து, தனக்கு ஓர் உருவம் இல்லாத, தொடக்கம் இல்லாத, இயல்பாகவே ஆணவம் முதலான மலங்கள் இல்லாத சிவபிரானிடம் அன்பு செலுத்தி வந்தால், அப்பெருமானுடைய அருளால் பிறவியையும் அதற்கு ஏதுவாகிய உடம்பையும் போக்கிக் கொள்ளலாம்.

விளக்கம்:

ஆக்கை - யாக்கை, உடல்; **ஆர்வம் கூர்வரேல்** - அன்பு செலுத்தினால்; **ஆக்கை இல்** - உருவம் இல்லாத; **அனாதி** - தனக்கு ஒரு தொடக்கம் இல்லாத; **முத்தன்** - இயல்பாகவே ஆணவம் முதலான பாசங்களிலிருந்து விடுபட்டவன், கடவுள்; **ஆக்கையை அறவெறுத்து** - இப்பாடல் உடலை வெறுக்கச் சொல்கிறது.

குறிப்பு:

இப்பாடல் உடலை வெறுக்கச் சொல்லினும், ''ஆர்வங் கூர்வரேல்'' என்பதால், ''உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்'' என்ற திருமந்திரம் (725) பாடலுக்கும் இப்பாடலுக்கும் கருத்து வேற்றுமையில்லை.

திருமூலர் உடம்பிலிருந்து எதை ஓம்பினார் என்பதைச் சிந்திக்க வேண்டும். உடற் செழுமையைத் தானோம்பினார் என்றால் அல்ல. அதில் இருந்து கொண்டும் ஆன்மிக சாதனைச் செழுமையையே ஓம்பினார். அதுவே துறவுதான். ஆதலால் இங்கு பேதங்கிளப்பதற்கில்லை. மேலுஞ் சொல்லில் திருமூலர் உடலாசையால் உடலை ஓம்பவில்லை என்பது பிரதானம். உடலினுள் உத்தமன் கோயில் கொண்டானென்று தன் உடலோம்பலுக்குக் காரணம் அவர் சொல்லிவிட்டார். உடலை அவர் கோயிலாக்கி விட்டமை வெளிப்படை.

திருநாவுக்கரசு நாயனார் அருளிய திரு அங்கமாலை உடலையும் உடலுறுப்புகளையும் சிவவழிபாட்டிலே நெறிப்படுத்துகின்றது. அவர் தம் உறுப்புகளை நோக்கி,

''தலைமாலை தலைக்கு அணிந்து தலையாலே பலிதேரும்
தலைவனைத் தலையே! நீ வணங்குவாயாக!

என்றும்,

''கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்டோள் வீசிநின்று ஆடும் பிரான்தன்னைக்
கண்களே காண்பீராக!

என்றும்,

சிவன் எம்இறை செம்பவள, எரிபோல் மேனிப்
பிரான் திறம் எப்போதும் செவிகளே கேட்பீராக!

என்றும்;

முதுகாடு உறையும் முக்கண்ணனை, வாக்கே நோக்கிய
மங்கை மணாளனை மூக்கே முரலுவாயாக!

என்றும்,

Koviloor Digital Library

மதயானையின் உரி போர்த்துப் பேய்வாழ் காட்ட
கத்துஆடும் பிரான்தன்னை வாயே வாழ்த்துவாயாக!

என்றும்,

நிமிர்புன்சடை நின்மலனை, மலைமங்கை
மணாளனை நெஞ்சமே நீ நினைப்பாயாக!

என்றும்,

'கடிமாமலர் தூவிநின்று பாம்பு அரையார்ந்த
பரமனைக் கைகளே கூப்பித் தொழுவீராக!

என்றும்,

'கறைக்கண்டன் உறைகோயில் கோலக் கோபுரம்
சூழ வலம் வருதல் கால்கள் பெறவேண்டிய பயன்

என்றும்கூறி,

'அரன் கோயிலை வலம்வந்து, மலர்தூவிச்சிவனை
வணங்குதல் ஆக்கை பெறவேண்டிய பயன்

என்று கூறியிருப்பது கவனிக்கத் தக்கது.

இவற்றால் உடலுறுப்புக்களின் போக்கை அவர் இயல்புக்கு மாறாகத் திருப்பிவிட்டார். அதுவே துறவுதான் என்க. இம்மட்டில்லாமல், 'சீத்தையைச் சிதம்பு தன்னைச் செடிதலை அழுக்குப் பாயும் ஊத்தையை'- என்றெல்லாம் அவர் வெறுத்துப் பாடியதையும் கருத்தில் கொள்ள வேண்டும். (91)

இருவகை ஆசைகளின் விளைவு

688. ஆசை தானிரு பேதமேயவை
யேயனாதி யிலாதவன்
பேசுநூல் விதி பேணியே செயும்
பெற்றிதான் முதன் மற்றதுந்
தேசுசேர் வினைதீரவே
வருசேனா விபரீதமே
யாசிலா வரனா ணையா
லவையாள்வரே யுடலாளரே.

ஆசைதான் இருபேதமே அவையே
அனாதி இலாதவன்
பேசும் நூல் விதிபேணியே செய்யும்
பெற்றிதான் முதல் மற்றதும்

Koviloor Digital Library

தேசுசேர் வினை தீரவேவரு
சேதனா விபரீதமே
ஆசுஇலா அரன் ஆணையால்
அவை ஆள்வரே உடலாளர் ஏ.

உரை:

ஆசைகள் இருவகைப்படும். அவற்றுள் ஒன்று என்றுமே ஆசை இல்லாதிருக்கிற சிவன் அருளிச்செய்த சிவாகமங்கள் உணர்த்தும் நேரிய வழியிலே நடக்கும் இயல்பு. மற்றொன்று நல்வினை நீங்கிய அறிவு மயக்கத்தால் இதுவே பின்பற்றத் தக்கது என்று கருதிச் செய்யும் தீவினை. ஆதலால், உடலோடு கூடி வாழ்கின்றவர்கள் நல்வினை தீவினை இரண்டையும் குற்றமற்ற சிவனுடைய கட்டளையால் அனுபவிப்பார்கள்.

விளக்கம்:

பேதம் - வேறுபாடு; விதிபேணி - ஒழுக்க முறைகளை ஏற்று; பெற்றி - பெருமை; தேசுசேர் - நன்மை பொருந்திய; விபரீதம் - மாறுபாடு: ஆசு - குற்றம்: ஆணை - கட்டளை; உடலாளர் - உடலோடு கூடி வாழ்பவர். (92)

முற்றும் உணர்ந்தவர்

689. ஆசை மாசற வாக வேரற வாணவாதியு மாயவே
பாச நாசக வீசனாசிலி பாத தாமரை நாண்மலர்
வாச நேசனு பூதியாவது வாதையேதுமிலாததே
தேசுதேசமோ ரேகமோ சிவநேசர் பூரண தேசரே.

ஆசை மாசு அற ஆகம் வேர்அற ஆணவ ஆதியுமாயவே
பாச நாசக ஈசன் ஆசு இலி பாத தாமரை நாள்மலர்
வாச நேச அனுபூதி ஆவது வாதை ஏதும் இல்லாததே
தேசு தேசம் ஓர் ஏகமோ சிவநேசர் பூரண தேசர் ஏ.

உரை:

உயிர்களுக்கு ஆசையை உண்டாக்கும் செயல் நீங்க, உடலுக்குக் காரணமான மாயையின் வலிமை கெட, ஆணவச் செயல்கள் அகல, பற்றை அகற்றுபவனும், ஆணவம் முதலிய குற்றம் இல்லாதவனும் ஆகிய சிவனுடைய திருவடித் தாமரைகளாகிய புதுமலரை அன்புடன் அனுபவித்து இருத்தலே வேறு ஒரு துன்பமும் இல்லாத நிலை. அவ்வாறு அந்த அனுபவத்தையுடைய - மலங்களிலிருந்து விடுபட்ட சிவநேசர்களுடைய அறிவு, முற்றும் உணர்தலாகிய நிலையில் விளங்கும்.

Koviloor Digital Library

விளக்கம்:

மாசு - அழுக்கு; ஆகம் - உடம்பு; வேர் அற - அறவே நீங்க; பாசம் - பற்று; நாசக ஈசன் - அழிக்கும் சிவன்; ஆசுஇலி - குற்றம் இல்லாத; பாதம் - திருவடி; நாள்மலர் - புதுமலர், மணமுள்ள மலர்; அனுபூதி - அனுபவ அறிவு, வாதை - துன்பம்; ஏகம் - ஒன்று;பூரண தேசர் - முற்றும் உணர்ந்தவர்; தேசு - ஒளி, அறிவு. (93)

பற்றை அறுத்தவன் முத்தன்

690. ஏகதேச வுட லுற்றவர்க்
கறிவுமேகதேசமல தில்லையே
யேகதேச வுடலற்ற போதும்
விவேகதேச மெனலென்சிவ
னேகதேச வுடலற்றவன்
னறிவுமேகதேச மலவாதலா
லேகதேச வுடலற்ற முத்தனறி
வேகதேச மலவென்பரே.

ஏக தேச உடல் உற்றவர்க்கு
அறிவும் ஏகதேசம் அல்லது இல்லையே
ஏகதேச உடல் அற்ற போதும் விவேகதேசம்
எனல்என்சிவன்
ஏகதேச உடல் அற்றவன்
அறிவும் ஏகதேசம் அல்ல ஆதலால்
ஏகதேச உடல் அற்ற முத்தன்
அறிவு ஏகதேசம் அல்ல என்பர் ஏ.

உரை:

பந்தம் உள்ள மக்களின் அறிவு, பந்தங்களுக்கு உட்பட்ட சிற்றறிவாகும். பந்தங்களிலிருந்து நீங்கியவரைச் சிற்றறிவினர் என்று சொல்லுதல் ஆகாது. சிவபெருமான் எந்தப் பந்தமும் இல்லாதவர். ஆகவே, அவர் பேரறிவினர் ஆவார். பற்று அற்ற முத்தருக்கு ஒரு பந்தமும் இல்லை. ஆகவே, அவரும் பேரறிவினர் ஆவார்.

விளக்கம்:

ஏகதேச உடல் உற்றவர் - உலக ஆசைகளுக்கு உட்பட்டவர். ஏகதேச உடல் அற்றவர் - பற்றற்ற ஞானி; முத்தன் - முத்தி பெற்றவன், பற்றை விட்டவன். ஏகதேசம் - காலதேசங்களின் ஒரு பகுதிக்குக் கட்டுப்பட்டடங்கியிருப்பது.

Koviloor Digital Library

தனிப்பட்ட உடம்பு எங்கும் இருப்பதுமில்லை எல்லாக் காலத்தும் இருப்பதுமில்லை. காலத்தைப் பொறுத்தவரை குறிக்கப்பட்ட ஒரு ஆண்டுத் தொகைக்கு மட்டும். தேசத்தைப் பொறுத்தவரை குறிக்கப்பட்ட ஒரு ஊரின் ஒருபகுதியில் ஒரு ஸ்தானத்தில் மட்டும் இருப்பது உடல். இதுதான் ஏகதேச உடல் என்பது. இவ்வுடல் சார்பில் நிகழும் அறிவும் ஒரு தனிப்பட்ட விஷயத்தின் ஒரு கோணத்தின் ஒரு அம்சத்தை மட்டும் ஒரு தடவையில் அறியும் இதுதான் ஏகதேச அறிவு. ஏகதேசவுடற் பற்றிருக்கு மட்டும் அறிவும் ஏகதேசவறிவுதான். அதிற்பற்று முற்றாக விடப்பட்ட பின் அறிவுக்கு ஏக தேச அறிவாந்தன்மையில்லைல. அதற்கெதிர், அவ்வறிவு வியாபக அறிவு என்ற பேர்பெறும். ஏகதேச உடல் விட்டவர் சீவன் முத்தர். அவர் அறிவு வியாபக அறிவு. - என்பது பொருள். (94)

சிவனுடன் கலப்பது பெரும் பேறு

691. வேரறப் பணையுமற்று மற்றொழியும்
வேறவற்று முதன்மேவுமே
யாரணத்தினையு மாகமத்தினையு
மாயுமற்பு தனலாரியன்
பேரருட் பெறவனாதி முத்தனொடு
பேதமற்ற நிலைபேறு தான்
கூரிருட் குழு வறுத்தறுக்குமுடல்
கூடமுத்தனனு கூலமே.

வேர் அறப்பணையும் அற்று மற்று ஒழியும்
வேறு அவற்று முதல் மேவுமே
ஆரணத்தினையும் ஆகமத்தினையும் ஆயும்
அற்புதன்நல் ஆரியன்
பேரருள்பெற அனாதி முத்தனொடு
பேதம் அற்ற நிலைபேறுதான்
கூர்இருள்குழு அறுத்து அறுக்கும்
உடல்கூட முத்தன் அனுகூலம் ஏ.

உரை:

ஒரு மரம் வேரற்று விழுந்ததும் அதன் கிளை முதலாகிய பகுதிகள் அனைத்தும் அழியும்; அதிலிருந்து புதிய இனப்பெருக்கம் ஏற்படாது. இவ்வாறே ஆணவமாகிய நிறைந்த இருள் நீங்கியதும் உடம்பு, மாயை கருமங்களோடு அழிய உயிர் முத்தி பெறும். வேதத்தையும் சிவாகமங்களையும் கசடறக் கற்றுத் தேர்ந்த நல்ல ஞானாசிரியனின் மிகுந்த அருளைப் பெற்று, பரம் பொருளாகிய சிவனோடு இரண்டறக் கலந்திருப்பதே உயரிய பேறு ஆகும்.

Koviloor Digital Library

விளக்கம்:

பணை - கிளை. கிளைப்பதைப் பனைத்ததென்பர். பண்ணைப் பனைந்த பெருஞ் செல்வம் எனல் காண்க. **ஆரணம்** - ரிக் முதலிய வேத நூல்கள். **சிவாகமம்** - சைவ சமயத் தத்துவங்களை விளக்கும் நூல். **ஆயும் அற்புதன்** - சிவஞானி; **நல் ஆரியன்** - ஞானாசிரியன்; **அனாதிமுத்தன்** - கடவுள், இங்குச் சிவனைக் குறிக்கும். **நிலைபேறு** - பெரும்பேறு; **கூர்இருள்** - நிறைந்த இருள்; **முத்தன்** - முத்தி பெற்றவன்; **அனுகூலம்** - உதவி. (95)

முத்தனுடைய இயல்பு

692. முத்தி பெற்றவனழுக்கனைத்தினையு
முற்றவிட்டு முளையற்றவ
னித்தனுத் தமனிருத்த
சுத்தசுகசிற்கனத்து நிலையுற்றவன்
புத்தனத்து விதமுற்று
மிக்கபிரபுத்தனைக் கெழுவுபூரணன்
தத்துவத் தொகை மலத் தோடற்று
முடலைப் பெறப் பிறர் சமைப்பனோ.

முத்தி பெற்றவன் அழுக்கு அனைத்தினையும்
முற்றவிட்டு முளை அற்றவன்
நித்தன் உத்தமன் நிருத்தசுத்த
சுகசிற்கனத்து நிலை உற்றவன்
புத்தன்அத்துவிதம் உற்றுமிக்க பிரபுத்தனைக்
கெழுவும் பூரணன்
தத்துவத் தொகைமலத்தோடு அற்றும்
உடலைப் பெறப்பிறர் சமைப்பனோ.

உரை:

முத்திபெற்றவன், ஆணவம் முதலான மலங்கள் முழுவதையும் போக்கி மறுபிறவி இல்லாது இருப்பவன். அழிவற்றவனாய், மேலானவனாய், கூத்தனாய், எதிலும் பற்று இல்லாத தூயவனாய், நன்மையான அறிவு வடிவிலே நிலைபேறு உள்ளவனாய், எப்பொழுதும் புதுமை விளைவிப்பவனாய், எல்லாப் பொருள்களிலும் பொருந்திய இளமை வாய்ந்தவனாய் விளங்கும் சிவனுடன் அன்போடு கலந்திருக்கும் முத்தன், தத்துவக் கூட்டங்களுடனும் மலங்களுடனும் பொருந்திய உடம்பைப் பிறர் அடையுமாறு வகுக்குஞ் சிருட்டித்தொழிலைப் பண்ணுவானோ? பண்ண மாட்டான். முக்தான்மா சிவன் போல ஐந்தொழிலுஞ் செய்யும் என்ற சிவசமவாதக் கருத்து இங்கு ஒரு வகையில் மறுக்கப்பட்டிருக்கிறது.

Koviloor Digital Library

விளக்கம்:

அழுக்கு - ஆணவம் முதலிய மலங்கள்; முளை - பிறப்பு; **நித்தன்** - அழிவு இல்லாதவன்; **உத்தமன்** - மேலோன்; **நிருத்தன்** - கூத்தன்; **சுத்தன்** - தூயவன்; **சுகம்** - நன்மை; **சிற்கனத்து** - அறிவு வடிவிலே; **நிலை உற்றவன்** - நிலைபேறு உள்ளவன்; **புத்தன்** - புதுமை விளைவிப்பவன்; **அத்துவிதம்** - எல்லாப் பொருள்களிலும் இரண்டறக் கலந்திருத்தல்; **பிரபுத்தன்** - ஞானம் வாய்ந்தவன்; **கெழுமுதல்** - பொருந்துதல்; **பூரணன்** - கடவுள்; **சமைத்தல்** - படைத்தல். (96)

குமரன் துதி

693. என்று பிறவித் துயரிறப்பல விசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்று புலனைந்தினையும் வெய்ய வினைநைய
நின்றமுனியன்றுணர நிர்க்குண னினைந்தே.

என்று பிறவித் துயர் இறப் பல இசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கு அருள் கொடுத்தான்
வென்று புலன் ஐந்தினையும் வெய்ய வினை நைய
நின்ற முனி அன்று உணர நிர்க் குணன் நினைந்து ஏ.

உரை:

மலையில் வாழும் வேடுவர் தலைவன் நம்பிராசன் திருமகளும் இளமையும் மென்மையான உடலமைப்பும் கொண்டவளுமான வள்ளி நாயகிக்கு அருள் செய்த குமரப் பெருமான், கொடிய தீவினை கெடுமாறு மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளையும் அடக்கிய அகத்தியர் அறிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணி, பிறவித் துன்பம் அழிந்து போகும்படி சனன மரண இயல்புகளை உரைத்தான்.

விளக்கம்:

மடக்கொடி - மடம்+கொடி; மடம் - இளமை. இது இளமையும் கொடி போன்று மென்மையான உடலமைப்பும் கொண்ட வள்ளி நாயகியைக் குறிக்கிறது. **இசைத்தான்** - உரைத்தான்; **வெய்ய** - கொடிய; **நைய** - கெட; **நிர்க்குணன்** - கடவுள்; இங்குக் குமரனைக் குறிக்கும். (97)

சிவன் துதி

694. மூரிவல்லானை முருக்கினனே
முதிர்சடை சூடு முருக்கினனே
பாரியோர் பாலுறப் பண்ணினனே
பாடிய நான் மறைப்பண்ணினனே

Koviloor Digital Library

கூரிருளாடிடுங் கொள்கையனே
கோல்வளையார்பலி கொள்கையனே
காரிய காரணனானவனே கரிசறக்
கரிய முன்னானவனே.

மூரிவல்ஆனை முருக்கினனே முதிர்சடை
சூடும் முருக்கினனே
பாரிஓர் பால் உறப் பண்ணினனே
பாடிய நால்மறைப் பண்ணினனே
கூர்இருள் ஆடிடும் கொள்கையனே கோலம்
வளையார் பலி கொள்கையனே
காரிய காரணன் ஆனவனே கரிசு
அறக் காய முன் ஆனவனே.

உரை:

கோபமும் வலிமையும் கொண்ட யானையின் தோலை உரித்தவனே! முதிர்ந்த திருச்சடையில் பலாசம் பூமாலையை அணிந்தவனே!பார்வதியை இடப்பாகத்தில் பொருந்த வைத்தவனே! நான்கு வேதங்களைப் பாடிய இசையை உடையவனே! ஊழிமுடிவில் கூத்தாடுவதையே குறிக்கோளாகக் கொண்டவனே! அழகிய வளையல்கள் அணிந்த தாருகவனத்து ஆரியப் பெண்கள் அளித்த பிச்சை உணவை ஏற்கும் கைகளை உடையவனே! மண், நீர், தீ, காற்று, வானம் ஆகியவற்றால் உண்டாகும் இயற்கை நிகழ்வுகளுக்குக் காரணனாக இருப்பவனே! ஆணவம் முதலிய செயல்கள் அழியும்படி செய்ய முதன்மையுடையவனே.

விளக்கம்:

மூரி - முரண்; முருக்கினன் - சிவந்த நிறமுள்ள பலாசம் பூ மாலையை அணிந்தவன்; முருக்குதல் - அழித்தல்; பாரி - மனைவி; பால் - பக்கம்; நான்மறை - வேதங்கள். கூர்இருள் - ஊழிக்கால இருள்; கோலம் - அழகு; வளை - வளையல்; பலி - உணவு; கரிசு - ஆணவ; காய - அழிக்க; கரிசு அற காய முன்ஆனவனே. முன் - முதன்மை. (98)

சிவன் துதி

695. என்வினை தன்னை யிறுத்தவனே
யேதுயிரென்ன விறுத்தவனே
முன்மலைவாரை முருக்கினனே முன்னினர்
நெஞ்சு முருக்கினனே

Koviloor Digital Library

யன்னையுமத்தனு மற்றவனே யகமெனு
மற்பனு மற்றவனே
முன்னொரு வேள்வி முடித்தவனே
முதிர்சடைக்கங்கை முடித்தவனே.

என்வினைதன்னை இறுத்தவனே ஏது
உயிர் என்ன இறுத்தவனே
முன்மலைவாரை முருக்கினனே முன்னினர்
நெஞ்சும் உருக்கினனே
அன்னையும் அத்தனும் அற்றவனே அகம்
என்னும் அற்பனும் அற்றவனே
முன்ஒரு வேள்வி முடித்தவனே
முதிர்சடைக் கங்கை முடித்தவனே.

உரை:

நான் செய்த கருமங்கள் அனைத்தையும் போக்கியவனே! உயிரின் வடிவம் யாது என்று ஆராய்ந்து தெளியும் அறிவு தந்தவனே! தங்களுக்குள் யார் பெரியவன் என்று பிணங்கிய பிரமனுக்கும் விஷ்ணுவுக்கும் இடையே தீப்பிழம்பாகத் தோன்றி அவர்களின் அறியாமையை அகற்றியவனே! உன்னை நினைப்பவரின் உள்ளத்தை உருகச் செய்பவனே! அன்னையும் தந்தையும் இல்லாதவனே! நான் என்னும் ஆணவ முனைப்பு இல்லாதவனே! தக்கன் செய்த ஆட்டு யாகத்தை வீரபத்திரரை ஏவித் தகர்த்தவனே! முதிர்ந்த திருச்சடையில் கங்கையாற்றைத் தரித்தவனே!

விளக்கம்:

இறுத்தல் - போக்குதல்; மலைவார் - பிணங்கியவர்; முன்னினர் - நினைத்தவர்: உருக்குதல் - நெகிழச் செய்தல்; அத்தன் - தந்தை: அற்பன் - புல்லியன்; வேள்வி - யாகம்; முடித்தல் - இங்கு இது அழித்தலைக் குறிக்கும். கங்கை முடித்தல் - கங்கையாற்றைத் தரித்தல். (99)

கந்தன் துதி

696. தமலமற்றிட நேசார் தாய்மனை
தனயர் மற்றையர் தாமாரேயென
விமலவித் தகவீறார் வேறது விதுல
சிற்கன தாதாவானவன்
கமலை நற்பதி வேதாவாதியர்
கழறொழக் கசியாரூர் காய்விலி
யமலனற்பு தனானேறேறி தந்தருள்
குகற்கினி யாளாவாமரோ.

Koviloor Digital Library

தம்மலம் அற்றிட நேசம்ஆர் தாய்மனை
தனயர் மற்றையர்தாம் ஆரே என
விமலவித்தக வீறார் வேறறு
விதுலசிற்கன தாதாவானவன்
கமலைநற்பதி வேதா ஆதியர் கழல்
தொழக்கசியார் ஊர்காய் வில்லி
அமலன் அற்புதன் ஆன்ஏறு ஏறிதந்தருள்
குகற்கு இனிஆள் ஆவாம் அரோ.

உரை:

தம் அடியவரின் ஆணவம் முதலான மலங்கள் நீங்கவும், அன்புடைய தாய், மனைவி, புதல்வன் மற்றும் உள்ள உறவினர்கள் யார்? நாம் யார்? என்னும் விசாரம் உண்டாகவும், மேன்மை பொருந்திய மெய்யறிவைத் தரும் வள்ளலுமாய், திருமால் பிரமன் முதலானோர் வந்து விமலனே! அறிஞனே! ஒப்பில்லாதவனே! என்று போற்றி வணங்க, இரக்கமில்லாதவரின் ஊரான முப்புரத்தை எரித்த வில்லாளியாய் மலம் இல்லாதவனாய், வியப்பையுடையவனாய், காளை ஊர்தியில் அமர்ந்து வருபவனாய் விளங்கும் சிவன் அருளிய குகப் பெருமானுக்கு இனி அடிமைப்படுவோம்.

விளக்கம்:

நேசார் - நேசம்ஆர், அன்பு பொருந்திய; **மனை** - மனைவி; **தனயர்** - புதல்வர்; **விமலன்** - மலம் இல்லாத தூயவன்; **வித்தகன்** - அறிஞன்; **விதுலன்** - ஒப்பில்லாதவன்; **சிற்கனம்** - மெய்யறிவுடைமை; **தாதா** - வள்ளல்; **கமலை** - இலக்குமி; **நற்பதி** - நல்ல கணவன்;

கமலை நற்பதி - இலக்குமியின் கணவனாகிய நாராயணன்; **வேதா** - பிரமன்; **கழல்** - திருவடி; **தொழ** - வணங்க; **கசிவு** - இரக்கம்; **கசியார்** - இரக்கமில்லாதவர்; **காய்** - எரித்த; **வி** - வில்லி; வில்லாளியான சிவன்; **அமலன்** - மலம் இல்லாதவன்; **அற்புதன்** - வியக்கத்தக்கவன்: **ஆன்ஏறு** - எருது; **குகனுக்கு** - கந்தனுக்கு; **ஆளாவாம்** - அடிமையாவோம்; **அரோ** - அசை. (100)

அகத்தியர் துதி

697. மருவியுற்றனை நீயே நீயலை
மருவுவித்தது மாதாவாருயி
நிருளறுத்தனை நீயே நீயலை யென
வெனக்கிய லீவானேயவன்
மரவமுற்றிய வாசார் காரகின் மலிய
நற்றவர் மாடே நீடிய
வருவரைப் பயிலானா
மாதவனருனகத்திய றாறாகமே.

Koviloor Digital Library

மருவி உற்றனை நீயே நீஅல்ல
 மருவு வித்தது மாதா ஆருயிர்
இருள் அருத்தனை நீயேநீ அல்லை என
 எனக்கு இயல் ஈவானே அவன்
மரவம் முற்றிய வாசார்கார்
 அகில்மலிய நல்தவர்மாடே நீடிய
அருவரைப் பயில் ஆனாமாதவன் அருள்
 அகத்தியன் ஆறாறு ஆகம் ஏ.

உரை:

குங்கும மரமும் விளைந்து மணம் பொருந்திய காரகிலும் நெருங்கி, நல்ல தவமுடையவர்களும் தன்னிடத்தில் பொருந்திய, அரிய பொதிய மலையை விட்டு நீங்காது இருக்கின்ற பெரிய தவமும் அருளும் உடையவனும் முப்பத்திஆறு தத்துவ ரூபனுமாகிய அகத்தியன் ஆனவனே, இந்த உடலில் பொருந்தினவன் நீயா? நீ அன்று. இந்த உடலைத் தாயும் உண்டாக்கவில்லை. உடலில் உண்டாகிய ஆணவத்தை நீக்கினதும் நீயோ? நீ அல்ல என்னும் வாக்கியத்தை எனக்குத் தெரிவித்தவன். அகத்தியன் எழுவாய். ஏயவன் பயனிலை. எனக்கு இயல் ஈவான் ஏயவன் - எனக்கு உள்ள இயல்பை ஈதற்கு தெரிவித்தற்கு அமைந்தன் என்க.

விளக்கம்:

மருவி - பொருந்தி; இருள் - இங்கு ஆணவமலத்தைக் குறிக்கும். மரவம் - குங்கும மரம்; வாசார் - வாசம்+ஆர்; மணமுள்ள; மலிய - நெருங்கி; வரை - மலை; ஆனா - நீங்காத; ஆகம் - உடல்; நீடிய - பொருந்திய; மாதவன் - பெரிய தவத்தையுடையவன். (101)

KOVILOOR ANDAVAR LIBRARY. KOVILOOR
A. No. 11939

Koviloor Digital Library

ஒன்பதாவது

சுவர்க்க நரக சேட இயல்

இந்த இயல் சுவர்க்க நரக அநுபவங்களின் பின் நல்வினை செய்தோர் உயர்ந்த சாதியிலும், தீவினை செய்தோர் தாழ்ந்த சாதியிலும் பிறப்பார்கள் என்று கூறுகின்றது.

நல்வினை தீவினையாளர்கள் பிறப்பை அடையும் முறை

698. புண்ணியர் விண்ணவர் தம் புரிக்கே
மண் மறையோர் குலமாய் வருமாறும்
பண்ணினர் தீவினை பாதள முற்றே
தண்ணியராகையுமின்று சமைப்பாம்.

புண்ணியர் விண்ணவர் தம் புரிக்கே
மண்மறையோர் குலமாய் வருமாறும்
பண்ணினர் தீவினை பாதளம் உற்றே
தண்ணியர் ஆகையும் இன்று சமைப்பாம்.

உரை:

புண்ணியம் செய்தவர்கள் சுவர்க்க உலகுக்குச் சென்று அங்குள்ள இன்பங்களை நுகர்ந்து அவை முடிந்தபின், இம் மண்ணுலகில் பிராமணர் முதலான உயர் குலங்களில் வந்து பிறக்கின்ற முறைமையையும், பாவம் செய்தவர்கள் நரகை அடைந்து அங்குள்ள துன்பங்களை அனுபவித்து முடிந்த பின்னர், தாழ்ந்த குலங்களில் பிறக்கின்ற முறைமையையும் இப்போது சொல்வோம்.

விளக்கம்:

இப்பாடல் கந்தப் பெருமான் அகத்தியருக்குக் கூறுவதாக உள்ளது.

புண்ணியம் - ஈகையாளர்; **விண்ணவர்புரி** - சுவர்க்கம்; **மண்** - பூமி; **மறையோர்** - வேதியர்; **குலமாய்** - சாதியினராய்; **வருமாறும்** - பிறத்தலையும்; **பாதளம்** - பாதலம், நரக உலகு; **தண்ணியர்** - தாழ்ந்த குலத்தினர்; **இன்று** - இப்போது; **சமைப்பாம்** - உரைப்போம். (1)

Koviloor Digital Library

பிராமணப் பிறவியை அடையும் முறை

699. வேதக னோதிய வேத விதிக்கே
சாதகர் வானவர் தம்புரி புக்கே
மோதக ராயதன் வாழ்வு முடித்தே
வேதிய ராவர்கண் மேதினி மீதே.

வேதகன் ஓதிய வேத விதிக்கே
சாதகர் வானவர் தம்புரி புக்கே
மோதகர் ஆயதன் வாழ்வு முடித்தே
வேதியர் ஆவர்கள் மேதினி மீது ஏ.

உரை:

சிவபெருமான் அருளிச் செய்த வேதசிவாகம நெறியைப் பின்பற்றியவர், சுவர்க்க உலகை அடைந்து அங்குள்ள இன்பங்களை மகிழ்வோடு அனுபவித்துத் தீர்ந்த பிறகு நிலத்தில் பிராமணராக வந்து பிறப்பார்கள்.

விளக்கம்:

வேதகன் - இங்குச் சிவனைக் குறிக்கும்.

வேதம் - இங்கு வேத சிவாகமங்களைக் குறிக்கிறது.

சாதகர் - பின்பற்றியவர், மாணாக்கர்.

வானவர் தம்புரி - சுவர்க்க உலகு; புக்கு - புகுந்து; மோதகர் - மகிழ்ச்சியுடையவர்; வாழ்வு முடிந்து - சுவர்க்க இன்பம்தீர்ந்த பிறகு; மேதினி மீது - உலகில், பூமியில்; வேதியர் ஆவர் - பிராமண குலத்திற் பிறப்பார். (2)

முன் செய்த புண்ணியப் பயன்

700. முன்னைய நல்வினை வாதனை மூளத்
துன்னுவர் நூல் விதியான தொடர்ந்தே
யென்னிலர் மண்மிசை நல்வளமீயத்
தன்னிகரில்லி தன்னாணை தரித்தே.

முன்னைய நல்வினை வாதனை மூளத்
துன்னுவர் நூல்விதிஆன தொடர்ந்தே
என் இலர் மண் மிசை நல்வளம் ஈயத்
தன் நிகர் இல்லிதன் ஆணை தரித்து ஏ.

உரை:

முன் பிறவியில் செய்த புண்ணியத்தின் வாசனையால் இந்தப்பிறவியிலும்

Koviloor Digital Library

வேத சிவாகமங்களை ஓதி, அவை உணர்த்தும் நல்வழிகளைப் பின்பற்றி திருநீறு, அக்கமாலை முதலான சிவ சின்னங்களை அணிந்து, சிவ வழிபாடு செய்து, அவர்கள் அடையப் பெறாதது எதுவும் இல்லை என்னும்படி எல்லா வகைச் செல்வங்களையும் பெற்றவர்களாக விளங்குவர்.

விளக்கம்:

முன்னைய - முன்பிறவியின்; **நல்வினை** - ஈகை முதலானவை; **வாதனை** - வாசனை; **மூள** - ஏற்பட; **துன்னுவர்** - பொருந்துவர்; **நூல்விதி** - வேத சிவாகம நெறி; **என் இலர்** - அடையப் பெறாதது இல்லை; **மண் மிசை** - பூமியில்; **தன்நிகர் இல்லி** - தனக்கு ஒப்பு இல்லாத சிவன்; **ஆணை தரித்து** - திருநீறு, அக்கமாலை முதலான சின்னங்கள் அணிந்து; **வாசனை** - பழக்கவசம் பழக்கத்தாலான பயிற்சி;

வாதனை வேறு வாசனை வேறு. **வாதனை** - தாக்குண்ணல். (3)

நல்வினையாளர் பெறும்பயன்

701. முற்றுவர் நல்வினைமுற்றிய பின்னர்ப்
பற்றுவர் வானுயரும் பதிபற்றித்
துற்றுவர் போக விதம்பல துற்றிப்
பற்றுவர் பற்றற வீச னற்பாதம்.

முற்றுவர் நல்வினை முற்றிய பின்னர்ப்
பற்றுவர் வான் உயரும் பதிபற்றித்
துற்றுவர் போக விதம் பலதுற்றிப்
பற்றுவர் பற்று அற ஈசன் நல்பாதம்.

உரை:

இவ்வாறு பூமியில் நல்வினைகளையே செய்து கொண்டிருப்பவர்கள், அப்புண்ணியப் பேற்றினால் சிவ உலகை அடைந்து அங்குள்ள இன்பங்களை நுகருவார்கள். பின்னர், அவ்வின்பங்களில் வெறுப்படைந்து, வேறு ஒன்றிலும் பற்று வையாமல் சிவபிரான் திருவடிகளையே பற்றுக் கோடாகக் கொண்டு அத் திருவடிகளை அடைவர்.

விளக்கம்:

நல்வினை முற்றுவர் - நல்வினைகளையே செய்து வருபவர்; **பற்றுவர்** - அடைவர்; **வான் உயரும் பதி** - உயரிய சிவ உலகு; **துற்றுவர்** - அனுபவிப்பர்; **போகம்** - இன்பம்; **துற்றி** - அனுபவித்தபின்; **பற்று அற** - பிறபொருள்களில் பற்று வையாமல்; **ஈசன் பாதம்** - இறைவன் திருவடிகள். (4)

Koviloor Digital Library

702. ஈட்டினர் பாவபேத மிரக்கமிலியம தூதர்
கூட்டிய நரக பேதக் குழிவிழுந் தழுங்கியாழ்ந்து
மீட்டு மண்ணிழிந்தயோனி விதமெலாம் விரவி முன்ன
மீட்டிய வறத்தினாலு நரர் தனு வெடுக்கும் போதும்.

ஈட்டினர் பாவபேதம் இரக்கம் இல்இயம தூதர்
கூட்டிய நரக பேதக் குழி விழுந்து அழுங்கி ஆழ்ந்து
மீட்டும் மண் இழிந்த யோனி விதம் எலாம் விரவி முன்னம்
ஈட்டிய அறத்தினாலும் நரர் தனு எடுக்கும் போதும்.

உரை:

முன் சொன்ன கொடிய பாவ வகைகளைச் செய்தவர்கள், இரக்கம் இல்லாத எமனுடைய பணியாளர்கள் புகுத்திய பலவகை நரகப் பள்ளங்களில் விழுந்து அமிழ்ந்து துயரடைந்து, பின்னர் இத்தரையில் இழிந்த பிறவிகளாகிய தாவரம் முதலியனவாகப் பிறப்பார்கள். பின்னர், முன் பிறவியில் செய்த நல்வினைப் பயனால் மனிதப் பிறவியை அடையும் போதும்;

விளக்கம்:

ஈட்டுதல் - தேடுதல்; பாவபேதம் - பலவகைத் தீய செயல்கள்; இல் - இல்லாத; கூட்டிய - தள்ளிய; நரகபேதம் - பல வகை நரகங்கள்; குழி - பள்ளம்; அழுங்கி - வருந்தி; மீட்டும் - மறுபடியும்; மண் - தரையில்;யோனி - பிறவி; முன்னம் - முன் பிறவி; அறம் - நற்செயல்; நரர் - மனிதர்; தனு - உடம்பு; எடுக்கும் - அடையும். (5)

பாவியரின் துயரம்

703. வஞ்ச மனத்தராயும் வாக்கினை இழந்தாராயுஞ்
செஞ்சொலைக் கேட்கு மற்றைச் செவியினையிழந்தாராய்
நஞ்சிடவழுகு நோயினடலை மெய்யுடையராயுந்
தஞ்செயற் கிசைய வாணை வழியினிற் சரிப்பர் தாமே.

வஞ்சக மனத்தராயும் வாக்கினை இழந்தாராயும்
செஞ்சொல்லைக் கேட்கும் மற்றைச் செவியினை இழந்தாராயும்
அஞ்சிட அழுகு நோயின் நடலை மெய் உடையராயும்
தம் செயற்கு இசைய ஆணை வழியினில் சரிப்பர் தாம் ஏ.

உரை:

பாவியர் கபட எண்ணம் உள்ளவர்களாகவும், ஊமையர்களாகவும், செவிடர்களாகவும், பிறர் நெருங்கி வரத் தயங்குகிற உடலுறுப்புகள் அழுகி விழுகிற

Koviloor Digital Library

தொழுநோயால் வருந்துகிற உடலை உடையவர்களாகவும் இறைவனாணையால் நேரும் பல பிறவிகளை அடைந்து உழலுவர்.

விளக்கம்:

வஞ்சகம் - கபடம்; வாக்கு இழந்தவர் - ஊமையர், ஊமையர் செவிடராகவும் இருப்பர்; செஞ்சொல் - நன்மொழி; செவியினை இழந்தவர் - காது கேளாதவர்;அழுகு நோய் - உடலுறுப்புகள் அழுகி விழும் குட்ட நோய், தொழு நோய்; நடலை - துன்பம்; மெய் - உடம்பு; தம் செயற்கு இசைய - தம்முடைய விருப்பப்படி செய்ததற்கேற்ப;ஆணை வழி - விதியின்படி; சரிப்பர் - இயங்குவர். (6)

அரனையும் ஆசானையும் பழிக்கும் பாவியர்

704. உறவுமாயுயிர்கட் கெல்லா
முயிருமா யொழிவிலாத
வறவனை யரனை நெஞ்சத்
தனிட்டரு மவல வாக்கை
பிறவி நோய்ப்பிணியைத் தீர்க்கும்
பெருமையை குரவன்றன்னைக்
கறுவிய மனத்தினாலே கரிசுறுங்
கடையர் தாமும்.

உறவுமாய் உயிர்கட்கெல்லாம் உயிருமாய்
ஒழிவு இல்லாத
அறவனை அரனை நெஞ்சத்து
அனிட்டரும் அவல ஆக்கை
பிறவி நோய்ப் பிணியைத் தீர்க்கும்
பெருமையை குரவன் தன்னைக்
கறுவிய மனத்தினாலே கரிசு
உறும் கடையர் தாமும்.

உரை:

அனைத்து உயிர்களுக்கும் சுற்றமாய், உயிருக்கு உயிராய், அவர்களோடு இரண்டறக் கலந்துள்ளவனாய், புண்ணிய வடிவினனாய், விளங்குகின்ற சிவனைப் பழிக்கின்ற பாவியரும், பொல்லாத உடலினையுடைய பிறவிப் பெரும் நோயைத் தம் உபதேச உரையால் போக்கும் சிறப்பினையுடைய ஞானாசிரியரையும் வெறுப்பினையுடைய மனதால் அவ்வண்ணமே பழித்துள்ள பாவியரும்;

Koviloor Digital Library

விளக்கம்:

உறவு - சுற்றம்; ஒழிவு - நீக்கம்; அறவன் - புண்ணிய வடிவினன்; அரன் - பாவங்களை அறுப்பவன்; நெஞ்சத்து - உள்ளத்திலே; அனிட்டர் - தீயவர்; அவலம் - குற்றம்; ஆக்கை - உடம்பு; பிணி - நோய்;தீர்க்கும் - போக்கும்: பெருமையை - சிறந்த; குரவன் - உபதேசிக்கும் குரு; கறுவு - வெறுத்தல்; கரிசு - பாவம்; உறும் - பொருந்தும்; கடையர் - கீழோர். (7)

705. மலத்தினுட் கிருமியாகி மாண்டு மாண்டு தித்து மானா
வலக்க ணுற்றாழ்வர் நிந்தையறைந்தவர் யாவராலும்
விலக்கரும் விதன முற்று முயலகன் வியாதி மேவிக்
கலக்கிய வுளத்தராகிக் கதறியே கழிவர்தாமே.

மலத்தின்உள் கிருமிஆகி மாண்டு மாண்டு உதித்து மானா
அலக்கண் உற்று ஆழ்வர்நிந்தை அறைந்து அவர் யாவராலும்
விலக்க அரும் விதனம் உற்று முயலகன் வியாதி மேவிக்
கலக்கிய உளத்தர் ஆகிக் கதறியே கழிவர் தாம் ஏ.

உரை:

மலத்தினுள் புழுவாகப் பிறந்து பிறந்து, இறந்து இறந்து, நீங்காத துயரம் அடைந்து கிடப்பார்கள். சிவனையும் உபதேச குருவையும் பழித்துப் பேசியவர்கள் எழுந்து நடமாட முடியாத முயலகன் என்னும் பிணியைப் பொருந்தி, யாராலும் தடுக்க முடியாத துன்பமடைந்து, மனங்கலங்கி அழுது திரிவர்.

விளக்கம்:

கிருமி - புழு; மாண்டு - இறந்து; உதித்து - பிறந்து; மானா - நீங்காத; அலக்கண் - துன்பம்; உற்று - பொருந்தி; ஆழ்வர் - கிடப்பர்; நிந்தை - பழிப்புரை; அறைந்த - கூறிய; விலக்க அரும் - தடுக்க முடியாத; முயலகன் வியாதி, படுக்கையை விட்டு எழுந்து நடமாடமுடியாத கொடிய நோய்; மேவி - அடைந்து; கலக்கிய - கலங்கிய; கழிவர் - திரிவர்; உளத்தர் - மனத்தினர்; கதறியே - அழுதபடி. (8)

ஆசானை மதிக்க வேண்டும்

706. கருத்துடனேவல் செய்யாக் கரிசர்கள்
குரவன் காதை
திருத்தினுந் திருந்தா வுள்ளத்
திமிரரே யாவரேவல்

Koviloor Digital Library

கருத்துறச் செய்வார் தம்மைக்
கலைத்தவன் கோம்பியாவன்
சிரத்து நோயடைவன் றானுஞ்சினப்பனேற்
சினத்த போதில்.

கருத்துடன் ஏவல் செய்யாக்
கரிசர்கள் குரவன் காதை
திருத்தினும் திருந்தா உள்ளத்
திமிரரே ஆவர் ஏவல்
கருத்து உறச் செய்வார் தம்மைக்
கலைத்தவன் கோம்பி ஆவன்
சிரத்து நோய் அடைவன்
தானும் சினப்பனேல் சினத்தபோதில்.

உரை:

ஆசிரியர் ஏவிய பணியைக் கவனத்தோடு செய்து முடிக்காதவர்கள், ஆசிரியர் கூறும் அறிவுரையை உணர முடியாத மனக் கோளாறு உள்ளவர்களாகப் பிறப்பார்கள். ஆசிரியர் சொன்ன வேலையைக் கவனத்தோடு செய்து முடிக்கிறவனை, அவ்வாறு செய்யாமல் தடுத்தவன் ஓணானாகப் பிறப்பான். ஆசிரியர் கோபித்த போது பணிவில்லாமல் அவர் மீது கோபங் கொண்டவன், தலைநோய் உள்ளவனாகப் பிறப்பான்.

விளக்கம்:

ஏவல் - பணி; கரிசர் - தீயவர்; திமிரர் - அறியாமையாகிய இருள் உடையவர்; காதைத் திருத்தல் - மாணாக்கள் காதில் விழும்படி அறிவுரை கூறுதல்; கோம்பி - ஓணான்; சிரம் - தலை. (9)

தீயவர் அடையும் மறுபிறவி

707. அந்தணன் றன்னைக் கொன்றா னருங்கய ரோகியாவன்
றந்தமும் பழுதேயாகுந் தணியலை யருந்தினார்க்குச்
சிந்திய குந்தியாவன் செம்பொனைத் திருடினானுங்
குந்திய குட்டநோயன் குருமனை குழுவினானே.

அந்தணன் தன்னைக் கொன்றான் அரும்கய ரோகிஆவன்
தந்த மும்பழுதே ஆகும் தணியலை அருந்தினார்க்குச்
சிந்திய குந்தி ஆவன் செம்பொன்னைத் திருடினானும்
குந்திய குட்ட நோயன் குருமனை குழுவினான் ஏ.

Koviloor Digital Library

உரை:

பிராமணனைக் கொன்றவன் எலும்புருக்கி நோயாளியாகப் பிறப்பான். கள்ளை அருந்துகிறவனுடைய பற்கள் கெடும். தங்கத்தைத் திருடியவன் அடிக்கடி வெட்டி எறியப்படும் சொத்தை நகம் உள்ளவனாகப் பிறப்பான். குருவினுடைய மனைவியைப்புணர்ந்தவன் இருந்த இடத்தை விட்டு நகர முடியாத தொழு நோயாளியாகப் பிறப்பான்.

விளக்கம்:

அந்தணர் - பிராமணர். கயரோகி - எலும்புருக்கி நோயாளி, சய ரோகி; தந்தம் - பல்; தணியல் - கள்; குந்தி - சொத்தை நகம்; குட்ட நோய் - தொழுநோய்; மனை - மனைவி; குழுவுதல் - அணைதல். (10)

தெய்வ நிந்தனையின் பயன்

708. பாம்பெனு முருவந்தன்னைப்
பரித்திடும் பகைக்கு மஞ்சித்
தேம்பியே திரிவன் றெய்வத்
திரவியங் கவர்ந்த தீம்பன்
பாம்பணைப் பள்ளியானைப்
பழிமொழி பகர்ந்தபாவி
கோம்பியா யுதரவங்கி
கூர்ந்திடக் குலையுமன்றே.

பாம்பு என்னும் உருவம் தன்னைப்
பரித்திடும் பகைக்கும் அஞ்சித்
தேம்பியே திரிவன் தெய்வத்
திரவியம் கவர்ந்த தீம்பன்
பாம்பு அணைப் பள்ளியானைப்
பழிமொழி பகர்ந்த பாவி
கோம்பி ஆய் உதர அங்கி
கூர்ந்திடக் குலையும். (அன்றே)

உரை:

சிவபிரான் எழுந்தருளியுள்ள திருக்கோயிலின் உடைமைகளைத் திருடிய கீழ்மகன், பாம்பாகப் பிறந்து தன்னைக் கொல்லும் கருடனுக்கும் மனிதருக்கும் பயந்து காட்டிலே வாட்டமுடன் திரிவான். கடலிலே பாம்புப் படுக்கையிலே துயிலும் நாராயணனை இழிவாகப் பேசிய தீயவன், ஓணானாகப் பிறந்து வயிற்றிலே தோன்றும் தீயால் உடல் குலைந்து நிற்பான்.

Koviloor Digital Library

விளக்கம்:

பரித்திடும் - தரித்திடும்; உருவம் - உடம்பு; அஞ்சி - நடுங்கி; **தேம்பி** - வாட்டமடைந்து; **திரிவன்** - அலைவான்; **திரவியம்** - நிலம், அணிகலன்,பணம் முதலான செல்வம்; **கவர்ந்த** - திருடிய;**தீம்பன்** - கீழ்மகன்; **தெய்வம்** - இறைவன்;

பாம்பு அணைப்பள்ளியான் - கடலில் பாம்புப் படுக்கையிலே யோகத் துயில் கொள்ளும் நாராயணன்; **பழிமொழி** - இழிவாகப் பேசும் வசை உரை; **கோம்பி** - ஓணான்; **உதரம்** - வயிறு; அங்கி - தீ; **கூர்ந்திட** - அதிக; **குலையும்** - நடுங்குவான்; **அன்றே** - அசை. (11)

இழிவான பிறவியை அடைகின்றவர்கள்

709. பறைந்தவ னாயினோடும் பழுதுறு பதிதனோடும்
புறம்புறு புலையனோடும் புறம்புறு புலையனாவன்
அறந்தனை மறந்த பாவியவனொடு மிருதுவாகி
உறைந்திடு மவளைக் காமுற்று வகையோ டுரைத்தான் றானும்.

பறைந்தவன் நாயினோடும் பழுது உறு பதிதனோடும்
புறம்பு உறுபுலையனோடும் புறம்பு உறுபுலையன் ஆவன்
அறம்தனை மறந்தபாவி அவனொடும் இருது ஆகி
உறைந்திடும் அவளைக்காமுற்று உவகையோடு உரைத்தான் தானும்.

உரை:

விரதங்களை நிறைவேற்றாத தன் நிலையிலிருந்து தழுவிய குற்றம் உள்ளவனோடும், இழிந்தவனோடும், தனக்கு ஏற்பட்டுள்ள கடமைகளைச் செய்யத் தவறிய தீயவனுடனும், பூப்படைந்து சுத்தம் இல்லாமல் தனித்து இருக்கிற கன்னிப் பெண்ணைக் கூட விரும்பி, மகிழ்ச்சியாக அவளோடு பேசுகிறவனும் இழிவான குலத்தில் பிறப்பார்கள்.

விளக்கம்:

பறைந்தவன்+நாயினோடும்; பறைந்தவன் இச்சை வசத்தாற் சல்லாபஞ் செய்தவன்; **பழுது உறு** - குற்றமுடைய; **பதிதன்** - ஒழுக்கமில்லாதவன்; **புலையன்** - புலால் தின்னும் இழிந்தவன்;

அறம் - அவரவருக்கு விதிக்கப்பட்ட கடமை; **இருது** - பூப்படைதல்; **உறைந்திடும்** - தனியிடத்தில் இருக்கும், இருக்கும் கன்னிப் பெண்ணைக் குறிக்கும்; **காமுற்று** - விரும்பி; **உவகை** - மகிழ்ச்சி; (12)

Koviloor Digital Library

ஈயாதவர் அடையும் தண்டனை

710. கருவினு ளழிவன் முற்றிக்
கழிந்துடனழிவன் காளைப்
பருவமுற் றழிவனீகை
பகர்ந்துபின் னுதவாப்பாவி
பெருவலைக் கண்ணியாலும்பிடித்துயிர்
வதைத்த பேதை
கருதிய பொருளைத் தக்கோர்க்கு
தவிடான்றிளைத் தகையன்.

கருவினுள் அழிவன் முற்றிக்
கழிந்துடல் அழிவன் காளைப்
பருவம் உற்று அழிவன் ஈகைபகர்ந்து
பின் உதவாப் பாவி
பெருவலைக் கண்ணியாலும் பிடித்து
உயிர் வதைத்த பேதை
கருதிய பொருளைத் தக்கோர்க்கு
உதவிடான் திளைத்த கையன்.

உரை:

ஒருவருக்கு ஒரு பொருளைத் தருவதாக வாக்களித்து, பின்னர் அதைக் கொடாதவன், மறுபிறவியில் தாயின் வயிற்றில் கருவாக வளரும் போதே அழிவான். பெரிய வலையாலும் கண்ணியாலும் விலங்குகளையும் பறவைகளையும் பிடித்துக் கொல்லுகின்ற மூடன், கருமுற்றிக் குழந்தையாகப் பிறந்தவுடன் சாவான். மேலோருக்கு வழங்க வேண்டிய பொருளை அவர்களுக்குத் தராமல் தானே அனுபவித்த வஞ்சகன், இன்பங்களை அனுபவிக்கும் திருமணப் பருவத்தில் இறப்பான்.

விளக்கம்:

காளைப்பருவம் - திருமணம் நிகழவேண்டிய காலம்; ஈகை பகர்ந்து - ஒருவருக்கு ஒன்றைத் தருவதாக வாக்களித்து; **கண்ணி** - பறவையைப் பிடிக்க உதவும் சிறிய வலை; **பேதை** - அறிவற்றவன்; **தக்கோர்** - சான்றோர்; **கையன்** - கீழோன் கொடாத வஞ்சகன். (13)

தொழு நோயின் காரணம்

711. அவயவமனைத்துங் குன்றி
யழிந்திடு மாக்கையாரூன்
சுவையினைவிரும்பியுண்ட
துட்டர்க்ள் சோலைதன்னைத்

Koviloor Digital Library

திவலைய திரைநீர் தேங்குந்
திண்ணிய தீரந்தன்னை
அவமதியாலே சாலவழித்திடு
மற்பர் தாமும்.

அவயவம் அனைத்தும் குன்றி
அழிந்திடும் ஆக்கையார் ஊன்
சுவையினை விரும்பி உண்ட
துட்டர்கள் சோலை தன்னைத்
திவலைய திரைநீர் தேங்கும்
திண்ணியதீரம் தன்னை
அவ மதியாலே சால அழித்திடும்
அற்பர் தாமும்.

உரை:

இறைச்சியை விரும்பி உண்ணும் பொல்லாதவரும், மரங்கள் அடர்ந்த தோப்பையும், நிறைந்த நீர் தேங்கி நீர்த்துளி தெறிக்க அலை வீசுகின்ற வலுவான ஏரி, குளம் முதலான நீர் நிலைகளின் கரைகளையும் அறிவுக் குறைவால் வெட்டி அழிக்கும் கீழானவரும், மறுபிறவியில் உடல் உறுப்புகள் குறைந்து அழிவை உண்டாக்கும் தொழு நோயாளராகப் பிறப்பார்கள்.

விளக்கம்:

அவயவம் - உடலின் உறுப்பு; குன்றி - குறைந்து; ஆக்கை - உடல்; ஊன் - புலால்; துட்டர் - பொல்லாதவர்; சோலை - பொழில்; திவலை - நீர்த்துளி; திரை - அலை; தேங்கும் - தங்கிய; திண்ணிய - உறுதியான; தீரம் - கரை; அவம் - பயனற்ற; மதி - அறிவு; சால - மிகவும்; அற்பர் தாமும் - கீழானவர்களும்; அவமதி - பேண வேண்டியதைப் பேணாமையாய செருக்கு. (14)

பன்றியாகப் பிறப்பவர்கள்

712. ஐவகையாகத் தொன்று மாக்கிடா தருந்தினானும்
தெய்வமே கொழுநனென்று தெளிந்தவச் சிந்தையற்ற
தையலைக் காமுற்றானுந் தணந்து கற்புடையாடன்னைப்
பொய் முயக்கியரைப் புல்கும்புலையனும் பன்றியாவான்.

ஐவகையாகத்து ஒன்றும் ஆக்கிடாது அருந்தினானும்
தெய்வமே கொழுநன் என்று தெளிந்த அச் சிந்தை அற்ற
தையலைக் காமுற்றானும் தணந்து கற்பு உடையாள் தன்னைப்
பொய் முயக்கியரைப் புல்கும்புலையனும் பன்றி ஆவான்.

Koviloor Digital Library

உரை:

தெய்வயாகம், பிதிர்யாகம், பசுயாகம், மாநுடயாகம், பிரமயாகம் எனக் கூறும் ஐந்து வகை யாகங்களில், தன்னால் இயன்றதொன்றைச் செய்யாமல் உண்டவனும், தன்னுடைய கணவனையே தெய்வமென்று கருதிப் பிறர் முகத்தைப் பாராத பிறருடைய மனையாளைத் தழுவ ஆசைப்படுகிறவனும், கற்புடைய தன் வாழ்க்கைத் துணையை விட்டு, போலியாக அன்பு காட்டுபவளைப் போல நடிக்கிற விலைமகளைத் தழுவி அணைகின்ற இழிந்தவனும் மறுபிறவியில் பன்றிகளாகப் பிறப்பார்கள்.

விளக்கம்:

கொழுநன் - கணவன்; அச்சிந்தை அற்ற - பிறரை விரும்பாத; காமுறுதல் - ஆசைப்படுதல்; தையல் - பெண்; தணந்து - பிரிந்து; முயக்கியர் - புணருகின்ற வேசியர்; புல்கும் - தழுவும்; புலையன் - இழிந்தவன்; பன்றி ஆவான் - பன்றியாகப் பிறப்பான்.

குறிப்பு:

யாகம் என்றால் ஓமம் வளர்த்துச் செய்யும் காரியம் மட்டுந்தான் என்றில்லை. அர்ப்பண புத்தியோடு செய்யும் அறக்கடன்கள் எல்லாம் யாகம். விருந்தோம்புதல் மாநுடயாகம். பிதிர்க்கடன் பிதிர்யாகம். இவையெல்லாம் ஸ்மார்த்தருக்குப் போலச் சைவருக்குமுரியவை. தென்புலத்தார்-என்ற *திருக்குறள்*, விருந்தோம்பல் என்ற அதிகாரம் எல்லாம் ஓமம் வளர்த்துச் செய்யுங் கிரியையா சொல்வன இது வீண் பிராந்தி. (15)

நாயாகப் பிறப்பவன்

713. ஒரு குடிப்பிறந்தாள்
போகமுகந்தவனூர் நாயாவான்
றருமமே யெமக்கு மொக்குந்
தனந்தருவானோ டென்று
கருண ணயாலன்ன சாலை
காப்பது கற்பலாது
பொருளினை மதித்துச் செய்தான்
புலையனும் நாயுமாவன்.

ஒருகுடிப் பிறந்தாள் போகம் உகந்தவன்
ஊர் நாய் ஆவான்
தருமமே எமக்கு ஒக்கும்
தனம் தருவானோடு என்று

Koviloor Digital Library

கருணையால் அன்னசாலை காப்பது
கற்பு அல்லாது
பொருளினை மதித்துச் செய்தான்
புலையனும் நாயும் ஆவன்.

உரை:

அந்நிய கோத்திரத்தைச் சேர்ந்த குமரியைத் திருமணம் செய்யாமல், தன்னுடைய கோத்திரத்தில் பிறந்த பெண்ணை மணம் புரிந்தவன், மறுபிறவியில் யாரும் வளர்க்காத தெருவில் அலையும் நாயாகப் பிறப்பான். பயன் கருதாமல் அருளோடு பிறருக்கு உதவுகிற அன்ன சத்திர முதலியவற்றை நடத்துகிறவர் புண்ணியம் பெறுவார். ஆனால், விளம்பரம், புகழ் முதலியவற்றை விரும்பிப் பிறருக்கு ஒன்றை உதவுகிறவன் பிணம் சுடும் தொழிலைச் செய்கிறவனாகவும் நாயாகவும் பிறப்பான்.

விளக்கம்:

கோத்திரம் - வமிசம், குடி. 'கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு' என்பது *பழமொழி*. ஒரே குடியிற் பிறந்தவர்கள் சகோதர சகோதரி முறை உடையவர்களாக இருப்பார்கள். ஒரு குடிப் பிறந்தாள் ஒருவனுக்குச் சகோதரிமுறை உள்ளவளாக, அன்னை முறை, அத்தை முறை உள்ளவளாக இருப்பவள். ஆதலால் அவருள் திருமணம் பொருந்தாது.

போகம் - திருமணத்தால் பெறும் சிற்றின்பம்;

கருணை - அருள்; **அன்னசாலை** - இலவச உணவு அளிக்கும் இடம்; **புலையன்** - சண்டாளன், பிணம் எரிப்பவன். (16)

புலையனாகவும் நாயாகவும் பிறப்பார்கள்

714. **இம்மைப் பயனைக் குறியாதே**
யிறைவன் திருவாலயமதனுட்
செம்மை சிறக்க மாபூசை
செய்விப்பவரே சிறப்புடையார்
இம்மைப் பயனைக் குறித்தியற்று
மதிகாரியர் நாயுடலெடுப்பர்
புன்மைப் புலையனெனுமுடலும் பொருந்தி
விடுவர் புகழினையே.

இம்மைப் பயனைக் குறியாதே இறைவன்
திரு ஆலயம் அதனுள்
செம்மை சிறக்க மாபூசை
செய்விப்பவரே சிறப்புடையார்

Koviloor Digital Library

இம்மைப் பயனைக் குறித்து இயற்றும்
அதிகாரியர் நாய் உடல் எடுப்பர்
புன்மைப் புலையன் என்னும் உடலும்
பொருந்தி விடுவர் புகழினை ஏ.

உரை:

சிவபிரானுடைய திருக்கோயிலின் நிருவாகிகள் உள்ளன்போடும் பயபக்தியோடும் புகழைக் கருதாமல் திருக்கோயிலில் நிகழவேண்டிய தினசரிப் பூசைகளையும், மிகப்பெரும் பூசைகளாகிய திருவிழாக்களையும் குறைவு நேராமல் கவனமாக நடைபெறுமாறு செய்யவேண்டும். இவ்வாறு செய்யாமல் வெறும் பாராட்டுக்காக ஆடம்பரமாகப் பூசைகளைச் செய்விக்கின்றவர்கள் மறுபிறவியில் தம் புகழை இழந்து புலையர்களாகவும் நாய்களாகவும் பிறப்பார்கள்.

விளக்கம்:

இம்மைப் பயன் - இவ்வுலக இன்பம்; குறியாது - கருதாமல்: இறைவன் - சிவன்; செம்மை சிறக்க மாபூசை - திருவிழா; அதிகாரியர் - நிருவாகிகள்: புன்மை - இழிவான; விடுவர் - இழப்பார்கள். (17)

குருடராயும் செவிடராயும் பிறப்பவர்கள்

715. எங்கள் குரவன் பெரியனென
வெண்ணுமது கற்பதுவல்லா
னுங்கள்குரவன் னொய்யனென
நுவலும் பரிவாதவர்தாமும்
பங்குபதத்தர் விழியிழந்து
பார்வைதனையு மிழந்தார்கள்
அங்கணவற்றைக் கேட்டார்கள்
கேள்விப் புலனற்றவர்தாமே.

எங்கள் குரவன் பெரியன் என
எண்ணும் அது கற்பு அல்லால்
உங்கள் குரவன் நொய்யன்
என நுவலும் பரிவாதவர் தாமும்
பங்கு பதத்தர் விழிஇழந்து
பார்வை தன்னையும் இழந்தார்கள்
அங்கண் அவற்றைக் கேட்டார்கள்
கேள்விப்புலன் அற்றவர்தாம் ஏ.

Koviloor Digital Library

உரை:

ஒருவர் தம்முடைய குருவைப் பெரியவர் எனப் போற்றிப் பாராட்டுதல் கற்புடைமையாகும். அதைவிட்டு, பிறரைப் பார்த்து உங்களுடைய குரு ஒன்றும் அறியாதவர் என்று பழித்துப் பேசுகிறவர் மறுபிறவியில் முடவராகவும் குருடராகவும் பிறப்பார். அந்தக் குரு நிந்தனையை மனம் ஒப்பிக் கேட்டவர்கள் செவிடர்களாகப் பிறப்பார்கள்.

விளக்கம்:

குரவன் - குரு; **கற்பு** - திண்மை, கடைப்பிடி; **அல்லால்** - அதைவிட்டு; **நொய்யன்** - ஒன்றும் அறியாதவன்; **நொய்யன்** - ஒன்றும் அறியாதவன்; **நுவலும்** - சொல்லுகிற; **பரிவாதவர்** - பழித்துப் பேசுகிறவர்; **பங்கு பதத்தர்** - முடவர்; **அங்கண்** - அவ்விடம்; **கேள்விப்புலன்** - காது; **அற்றவர்தாம்** - கேளாதவர். (18)

புழுவாகப் பிறப்பவன்

716. கண்ணிலாக் கிருமியாவன்
கருத்தினுணொய்ய னென்றே
யெண்ணினன் குரவன்றன்னை யிடர்ப்படக்
குய்யந் தன்னிற்
புண்ணையு முறுவன்
பின்பு புகன்றவனபவாதத்தைக்
கண்ணூனத் திலனேயாகிக்
கரத்தினைக் காப்பனன்றே.

கண்இலாக் கிருமி ஆவன்
கருத்தினுள் நொய்யன் என்றே
எண்ணினன் குரவன் தன்னை
இடர்ப்படக் குய்யம் தன்னில்
புண்ணையும் உறுவன் பின்பு
புகன்றவன் அபவாதத்தைக்
கண் ஊனத்திலனே ஆகிக்
கரத்தினைக் காப்பன் நன்று ஏ.

உரை:

தன்னுடைய ஆசிரியரை அற்பர் எனக் கருதியவன் மறுபிறவியில் பார்வையில்லாத புழுவாகப் பிறப்பான். பின்னர், அடுத்த பிறப்பில் மனிதனாகப் பிறந்து மலம் வெளியாகும் உறுப்பில் புண் உள்ளவனாக வருந்துவான். ஆசிரியர்

Koviloor Digital Library

செய்யாத செயலைச் செய்தார் என்று குற்றம் சுமத்தியவன் மறு பிறப்பில் அறிவு மழுங்கியவனாகப் பிறந்து கழுதையை மேய்த்துக் கொண்டு திரிவான்.

விளக்கம்:

கிருமி - புழு; கண் இலா - பார்வையில்லாத; நொய்யன் - அற்பர்; குரவன் தன்னை - ஆசிரியரை; இடர்ப்பட - துன்பப்பட; குய்யம் - மலம் வெளியாகும் உறுப்பு; கரத்தினை - கழுதையை; அபவாதம் - பழிசுமத்துதல்; கண் ஊனத்திலன் - அறிவு மழுங்கியவன்; காப்பன் - மேய்ப்பான். (19)

அலியாகப் பிறப்பவன்

717. பரமனாங் கருத்தாவே வற்பற்றிய
கருத்தாத் தேவர்க்
குரிமையிற்பூசை
மற்று முஞற்றிடாவூனத்தாலே
வரமறு மலியனாவன்
வாய்ந்த நற் சுற்றத்தார்க்கு
முருகிடா தொழிந்தான் கண்டு
மிடியனு முறுவன் கண்ணோய்.

பரமனாம் கருத்தா ஏவல்
பற்றிய கருத்தாத் தேவர்க்கு
உரிமையில் பூசை மற்றும்
உஞற்றிடா ஊனத்தாலே
வரம் அறும் அலியன்
ஆவன் வாய்த்தநல் சுற்றத்தார்க்கும்
உருகிடாது ஒழிந்தான் கண்டு
மிடியனும் உறுவன் கண் நோய்.

உரை:

அரசரின் கட்டளைப்படி ஆசிரியர் கற்பித்தவாறு சிவபிரானுக்கும் பிற தெய்வங்களுக்கும் பூசைகள், திருவிழாக்கள் முதலான சிறப்புகளைச் செய்யாதவர்கள் அலிகளாகப் பிறப்பார்கள். சிவனடியார்களைக் கண்டு மனம் நெகிழ்ந்து உபசரியாதவன், வறுமையாலும் கண்நோயாலும் வருந்துவான்.

விளக்கம்:

பரமனாம் கருத்தா - அரசர்; ஏவல் பற்றிய கருத்தா - ஆசிரியர்; உஞற்றுதல் - செய்தல்; ஊனம் - குற்றம்; வரம் அறும் - அருள் நீங்கிய; அலி - ஆண்மை பெண்மை தோன்றா நிலை; மிடிமை - வறுமை. (20)

Koviloor Digital Library

கன்ன, நெஞ்சு நோய்களால் வருந்துகிறவன்

718. விருந்தினையருத்தா துள்ளே
வீற்றிருந் தடிசிறானே
யருந்தினன் கபோல நோய
னருந்தவர்க் கருத்தாமுன்றா
னருந்தியே யவரைப் பின்னை
யருத்திய வவனே நெஞ்சின்
வருந்தவே மருவு நோயன்
மாறுமோ மருந்தினாலும்.

விருந்தினை அருத்தாது உள்ளே வீற்று
இருந்து அடிசில் தானே
அருந்தினன் கபோல நோயன்
அருந்தவர்க்கு அருத்தாமுன் தான்
அருந்தியே அவரைப் பின்னை
அருத்திய அவனே நெஞ்சில்
வருந்தவே மருவும் நோயன்
மாறுமோ மருந்தினாலும்.

உரை:

தன் இல்லத்தை அடைந்த விருந்தினருக்கு உணவு அளித்து அவரை உண்ணும்படி செய்யாமல், தானே தனித்திருந்து உணவு உண்டவன், கன்னத்திலே நோய் உள்ளவனாகத் துன்புறுவான். தன் வீட்டிற்கு வந்த தவத்தினர்களை உபசரித்து, முதலில் உண்ணுமாறு செய்யாமல், தான் உண்ட பிறகு அவர்களை உண்ணச் செய்தவன், மருந்துகளால் குணப்படுத்த முடியாத நெஞ்சு நோயால் துயர் அடைவான்.

விளக்கம்:

விருந்து - புதிதாக வந்தவர்; அருத்தாது - உண்பிக்காமல்; உள்ளே வீற்றிருந்து - தானே தனியாக அமர்ந்து; அடிசில் - உணவு; கபோலம் - கன்னம்; மருவும் - பொருந்திய; மாறுமோ - மாறாது என்பது குறிப்பு. (21)

வாய்ப் புண்ணால் வருந்துவோர்

719. ஓதன மொளித்துக் கொண்டானு
தரமந் தாங்கியாவன்
வாய் தனிற் புண்ணுமாவன்
வழக்கிடைக் கூடமாக

Koviloor Digital Library

வீதிவன் செய்தா னென்றே
வியம்பிய விழுதை தானும்
வாய்தனிற் புண்ணேயாவன்
வாக்கினால் வழுக்கலாலே.

ஓதனம் ஒளித்துக் கொண்டான் உதரம்
மந்த அங்கி ஆவன்
வாய் தன்னில் புண்ணும் ஆவன்
வழக்கு இடைக் கூடமாக
ஈது இவன் செய்தான் என்றே
இயம்பிய இழுதை தானும்
வாய் தன்னில் புண்ணே
ஆவன் வாக்கினால் வழுக்கலால் ஏ.

உரை:

உரியவருக்குத் தெரியாமல் உணவைத் திருடி உண்டவன், பசி மந்தத்தாலும் வாய்ப்புண்ணாலும் வருந்துவான். ஒரு வழக்கில் சாட்சி கூறச் சென்று, ஒரு சாரார் மீது உள்ள பிரியத்தால், குற்றம் புரிந்தவர் இன்னார் என்று உண்மையை உரைக்காமல், வஞ்சகமாகப் பேச்சிலே குற்றம் உண்டாகும்படி மறைத்துச் சொன்னவன் வாயில் ஏற்படும் புண்ணால் துயரப்படுவான்.

விளக்கம்:

ஓதனம் - உணவு; ஒளித்து - திருடி; கொண்டவன் - புசித்தவன்; உதர அங்கி - பசி; கூடமாக - உண்மையை மறைத்து; ஈது - இக்குற்றம்; இயம்பிய - கூறிய; இழுதை - மூடன்; வாக்கினால் வழுக்கல் - பொய் சொல்லுதல். (22)

கண், கால் நோய்களால் வருந்துவோர்

720. கண்டனி னோயுமாவன்
காறனிற் புண்ணுமாவன்
கொண்டநோய் கண்டு தன்னைக்
குறுகிய பெரியோர் தம்மை
விண்டவன் பிதாவைத் தாயை
விரும்பிய சுற்றத் தாரைப்
பண்டையோர் தமையும் நெஞ்சிலிரக்கமும்
பாங்கு மற்றே.

கண்தன்னில் நோயும் ஆவன்கால்
தன்னில் புண்ணும் ஆவன்
கொண்ட நோய்கண்டு தன்னைக்
குறுகிய பெரியோர் தம்மை

Koviloor Digital Library

விண்டவன் பிதாவைத் தாயை
· விரும்பிய சுற்றத்தாரைப்
பண்டையோர் தம்மையும் நெஞ்சில்
இரக்க மும்பாங்கும் அற்று ஏ.

உரை:

வளமாக வாழ்கின்ற ஒருவன், ஒரு நோயாளியாகத் தன்னைப் புகலாக அடைந்த பெரியோரையும், பெற்றுவளர்த்த தாய் தந்தையரையும் தன்னிடம் பிரியமுள்ள உறவினர்களையும், பழைய நண்பர்களையும் ஆதரிக்காமல், அருளும் உரிமையும் இன்றி ஒதுக்கியவன், கண்நோய்களாலும் கால்களில் உண்டாகும் புண்களாலும் துயர்ப்படுவான்.

விளக்கம்:

கொண்ட - பற்றிய; குறுகிய - அடைந்த; விண்டவன் - தள்ளியவன்; பண்டையோர் - பழைய நண்பர்கள்; இரக்கம் - அருள்; பாங்கு - உரிமை; அற்று - இல்லாமல். (23)

ஆண் பேடியாகப் பிறப்பவன்

721. சொற்ற விப்பலன் கடன்னைத்
துன்னுவன் சோரன் சோரற்
குற்றுடன் பட்டான்றானு
முரைத்தவ னுபாயிதானும்
பத்தினிபல ருட்பக்க
பாதத்தை யொருத்திபாலே
முற்றினனலிய னென்னு முடையுட
லெடுக்கு மூடன்.

சொற்ற இப்பலன்கள் தன்னைத்
துன்னுவன் சோரன் சோரற்கு
உற்று உடன் பட்டான் தானும்
உரைத்தவன் உபாயி தானும்
பத்தினி பலருள்
பக்கபாதத்தை ஒருத்திபாலே
முற்றினன் அலியன் என்னும்
முடையுடல் எடுக்கும் மூடன்.

உரை:

பிறர் சொத்தைக் கவரும் கள்வனும், அக்கள்வனுக்குத் துணையாகச் சென்றவனும், அவர்கள் கவருவதற்கு ஏற்ற சூழ்ச்சியை உரைத்தவனும் முன் சொன்ன

Koviloor Digital Library

கண், கால் நோய்களால் வருந்துவர். மனைவியர் பலரோடு வாழ்கின்றவன், எல்லாரையும் சரிசமமாக நடத்தாமல், ஒருத்தியிடம் மட்டும் பிரியம் கொண்டு மற்றவர்களைப் புறக்கணித்து, ஒரு தலைச் சார்வாக நடந்து கொண்டால் அவன் மூடன் ஆவான். அவன் தீய நாற்றம் உள்ள உடலைப் பெற்று அலியாகப் பிறப்பான்.

விளக்கம்:

சொற்ற - சொன்ன; **துன்னுதல்** - பொருந்துதல்; **சோரன்** - திருடன்; **உபாயி** - சூழ்ச்சியாளன்; **பத்தினி** - மனைவி; **பக்கபாதம்** - ஒருதலைச் சார்வு; **ஒருத்திபாலே** - ஒருத்தியிடம் மட்டும்; **முற்றினன்** - பிரியம் வைத்தவன்; **முடைஉடல்** - தீயநாற்றம் உள்ள உடம்பு; **அலி** - ஆண்மை பெண்மை தோன்றா நிலை. (24)

குட்ட நோய், வயிற்று நோய்களால் வருந்துவோர்

722. வெள்ளி பட்டாடை தன்னை
விரும்பியே யெடுத்தகையன்
கொள்ளுமே குட்டநோய் நீர்க்கோவை
யென்னுதர நோயா
லுள்ளமு மொல்கிவாடு முதக
நீர்ப்பந்தர் தன்னை
யன்ன சத்திரத்தை நல்லார்
நடுக்குற நாசஞ் செய்தான்.

வெள்ளி பட்டாடை தன்னை
விரும்பியே எடுத்த கையன்
கொள்ளுமே குட்ட நோய் நீர்க்
கோவை என்னும் உதரநோயால்
உள்ளமும் ஒல்கி வாடும்
உதகநீர்ப் பந்தர் தன்னை
அன்ன சத்திரத்தை நல்லார்
நடுக்குற நாசம் செய்தான்.

உரை:

வெள்ளியாற் செய்யப்பட்ட பொருள்களையும், பட்டுத்துணிகளையும் திருடுகிறவன், வெண்குட்ட நோயால் வருந்துவான். நல்லவர்கள் நடுங்கும்படி, வழிப்பயணிகளுக்கு இலவசமாக உணவு அளிக்கும் உணவுச்சாலையில் உள்ள உணவுப் பொருள்களைப் பாழாக்கி, வழிப்போக்கரின் நீர் வேட்கையைத் தணிக்கும் தண்ணீர்ப் பந்தரையும் அழித்தவன், நீர்க்கோவை என்ற கொடும் நோயால் துயரப்படுவான்.

Koviloor Digital Library

விளக்கம்:

எடுத்த கையன் - திருடன்; உதரம் - வயிறு; ஒல்கி - வாடி; உதகம் - உதக நீர் என்றது நன்னீர் என்னும் பொருட்டு; தண்ணீர்ப்பந்தர் - வழி நடந்து செல்வோரின் தண்ணீர்த் தாகத்தைத் தீர்க்க நல்ல நீரை வழங்கும் இடம்; அன்ன சத்திரம் - விலைக்கு உணவை விற்கும் சாப்பாட்டுக் கடைகள் இல்லாத முற்காலத்தில் வழி நடந்து செல்வோரின் பசியைத் தணிக்க இலவசமாக உணவருந்தி பயணிகள் ஒய்வாகத் தங்கியிருந்து செல்ல உதவும் இடம். நீர்க் கோவை - நீரிழிவு சதர நோயில் ஒருவகையெனலுமாம். (25)

செயல்களுக்கு ஏற்ற பிறப்புகள்

723. புலையனேயாவன் கோவிபூதி
நாசிகனே கோளன்
கலகமே விளைத்தான் கண்ணைக்
காட்டியும் கையினாலும்
வலமறு மழுகல் வாயன்
வனத்து மாசுணமேயாவன்
விலை செய்வானீயந்தன்னை
பித்தளை கவரி வேறும்.

புலையனே ஆவன் கோவி
பூதிநாசிகனே கோளன்
கலகமே விளைத்தான் கண்ணைக்
காட்டியும் கையினாலும்
வலம் அறு அழுகல் வாயன்
வனத்து மாசுணமே ஆவன்
விலை செய்வான் ஈயம் தன்னை
பித்தளை கவரி வேறும்.

உரை:

தணியாத கோபம் உடையவன் இழிவான குலத்தினனாகவும், பிறர் மீது கோள் சொல்லிக் கலகம் உண்டாக்குகிறவன் சளி நீங்காத மூக்கு உள்ளவனாகவும், கண் சாடையாலும், கைச் சைகையாலும் ஒருவரையொருவர் பகைத்துச் சண்டையிடுமாறு செய்கிறவன் துர்நாற்றம் அகலாத அழுக்கு நிரம்பிய வாய் உடையவனாகவும் பிறப்பார்கள். ஈயம்,பித்தளை முதலான உலோகங்களால் செய்த பொருள்களையும் வெண் சாமரையையும் அவற்றை உருவாக்கியவர்களே விற்பனை செய்ய வேண்டும். பிறர் அவற்றை வாங்கி விற்றால் விற்பவர்கள் மலைப் பாம்புகளாகப் பிறப்பார்கள்.

Koviloor Digital Library

விளக்கம்:

பண்டைக்கால இந்தியாவில் பித்தளை முதலிய உலோகங்களால் செய்யும் பொருள்கள் கைகளால் சுருங்கிய அளவில் செய்யப்பட்டன. அவற்றை வசதியுள்ளவர்கள் வாங்கினார்கள். ஏழை மக்கள் மண்கலங்களையே பயன்படுத்தினர். வியாபாரிகள் உலோகப் பொருள்களை வாங்கி அதிக இலாபத்திற்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாமல் தடுக்கவே ஒரு பொருளைச் செய்யாதவன் அந்தப் பொருளை விற்கலாகாது என்ற கட்டுப்பாடு இருந்தது.

இதனையே ஒரு பொருளைச் செய்யத் தெரியாதவன் அதனைச் செய்பவரிடம் வாங்கி விற்றால் மலைப்பாம்பு ஆவான் எனக் குறிக்கப்படுகிறது. (மாசுணம்- மலைப்பாம்பு) ஆகமக் காட்சிகள் பல பகுத்தறிவுக் காட்சிக்கு மொத்திருத்தல் சகஜம். அதற்கிது உதாரணமாம். (26)

செயல்களுக்கு ஏற்ற பிறவிகள்

724. செலலுறு மென்று மால வட்டமுந் திருடுந் தீம்பன்
வலமில னேனுந்தன்னை மதித்து வாமன னேயாவன்
கொலை விடையூர்திபுண்ணுமரையுறக் குலைந்து கோல
னலலுறும் பிறவியந்தனாவினை வதைத்தவற்பன்.

செல்லல் உறும் என்றும் ஆல வட்டமும் திருடும் தீம்பன்
வலம் இலனேனும் தன்னை மதித்து வாமனனே ஆவன்
கொலை விடை ஊர்தி புண்ணும் அரை உறக் குலைந்து கோலம்
அல்லல் உறும் பிறவி அந்தன் ஆவினை வதைத்தஅற்பன்.

உரை:

பயன்படும் என்று கருதி விசிறியைத் திருடிய தீயவன் எந்நாளும் துன்புறுவான். ஒரு வேலையையும் ஒழுங்காகச் செய்யத் தெரியாதவன் தான் எல்லாம் வல்லவன் என்று பிறரிடம் தற்பெருமையாகச் சொல்லுகிறவன் மிகவும் குள்ளனாகப் பிறப்பான். எருதில் அமர்ந்து செல்லுகிறவன் ஆண் குறியில் புண் உண்டாகி வருந்துவான். பசுவைக் கொன்றவன் பிறவிக் குருட்னாகப் பிறப்பான்.

விளக்கம்:

ஆலவட்டம் - விசிறி; தீம்பன் - பொல்லாதவன்; வலம் இலன் - வல்லமை இல்லாதவன்; திறமை அற்றவன் வாமனன் - மிகவும் குள்ளன்;

அரை - இங்கு அரையாப்பு என்ற கொடு நோயைக் குறிக்கும்; விடை - எருது; ஊர்தி - வாகனம்; ஆ - பசு; அந்தன் - அந்தகன், குருடன். (27)

Koviloor Digital Library

செயல்களுக்கு ஏற்ற பிறப்புகள்

725. கோவினைத்துக்கஞ் செய்தான் கோணிய நாசியாவன்
கோவினுக்கிரக்க மில்லான் கூறிடிற் சிபுடனாசி
காவியங்கண்ணி நீங்காக் கற்பினளவள் பாற்காத
லோவினன் களத்தினீங்காக் கழலையையுடையனன்றே.

கோவினைத்துக்கம் செய்தான் கோணிய நாசி ஆவன்
கோவினுக்கு இரக்கம் இல்லான் கூறிடில் சிபுடன் நாசி
காவியங்கண்ணி நீங்காக் கற்பினள் அவள்பால் காதல்
ஓவினன் களத்திலல் நீங்காக் கழலையை உடையன் அன்றே.

உரை:

பசுவை அடித்துக் கொடுமை செய்தவன் கோணல் மூக்கு உள்ளவனாகப் பிறப்பான். பசுவுக்கு இரக்கம் காட்டாதவன் மூக்கின் உள்ளே கொப்புளம் உள்ளவனாகப் பிறப்பான். கழுநீர்ப்பூ போன்ற அழகிய கண்களையுடைய கற்புடைய மனைவியிடம் அன்பு செலுத்தாத கணவன், தன் கழுத்திலே நீங்காத சதைக் கட்டி உள்ளவனாகப் பிறப்பான்.

விளக்கம்:

கோ - பசு; கோணிய நாசி - கோணல் மூக்கு; சிபுடன் நாசி - உள்ளே கொப்புளம் உடைய மூக்கு; காவி - கழுநீர்ப்பூ; காதல் - அன்பு; ஓவினன் - செலுத்தாதவன்; கழலை - சதைக் கட்டி; அன்றே - அசை. (28)

செயல்களுக்கு ஏற்ற பிறப்புகள்

726. விற்றவன் சோமந் தன்னை
வேட்டைவார் வேடனாவன்
னுற்றினன் கடத்திற் கூலிவேலை
செய் துரிசனாவன்
கற்புறுமானை தன்னைக்
காப்பவன் றயிலந்தன்னை
விற்பவன்றானுங் கூலி விரும்பியிற்
கொடுத்த வீணன்.

விற்றவன் சோமம் தன்னை
வேட்டை வார்வேடன் ஆவன்
துற்றினன் கடத்தில் கூலி வேலை
செய் துரிசன் ஆவன்

Koviloor Digital Library

கற்புறும் ஆனை தன்னைக்
காப்பவன் தயிலம் தன்னை
விற்பவன் தானும் கூலி விரும்பி
இல் கொடுத்த வீணன்.

உரை:

யாகத்திற்குப் பயன்படும் சோமப்பூண்டை விற்றவன், வலை வீசி விலங்கு, பறவைகளைப் பிடிக்கும் வேடனாகப் பிறப்பான். உண்கலத்தில் உணவை வைத்து உண்ணாமல், சமைத்தற்குப் பயன்படும் சட்டி பானைகளில் உணவு உண்பவன் கூலிக்கு வேலை செய்யும் குற்றம் உள்ளவனாகப் பிறப்பான். எண்ணெய் வாணியனைத் தவிர வேறு ஒருவன் எண்ணெயை விற்றால், அவ்வாறு விற்றவன் யானைப் பாகனாகப் பிறப்பான். தனக்கு உரிய வீட்டைப் பிறருக்கு வாடகைக்குத் தருகிற பயனற்றவனும் யானைப் பாகனாகப் பிறப்பான்.

விளக்கம்:

சோமம் - யாகம் செய்யும் போது, சோமபானம் பருக வேண்டும் என்று ரிக்வேதம் கூறுகின்றது. அந்தச் சோமபானத்தைச் செய்ய உதவுகின்ற பூண்டுக்குச் 'சோமம்' என்பது பெயர்.

வாணியனைத் தவிரப் பிறர் எண்ணெய் விற்கக்கூடாது; தன் வீட்டை ஒருவன் வாடகைக்குத் தரக் கூடாது என்பவை கொள்கை.

துற்றுதல் - உண்ணுதல்; கடம் - பாண்டம், சமையற் பாத்திரம்; துரிசு - குற்றம்; தயிலம் - எண்ணெய்; இல் - இல்லம்; வீணன் - பயனில்லாதவன்: (29)

செயல்களுக்கு ஏற்ற பிறவிகள்

727. களத்தினிற் கண்டமாலி
கழித்தவூன் முதலுண்கல்ல
னுளத்திலன் பொழிக்குநூலை
யோதினன் மூகணாவன்
றனத்தியல் கோசந்தன்னைத்
தற்கரன் சாத்தியந்தன்
பனக்கு மூக்குடையான் பாங்கார்
தரும நூல் பழித்தபாவி.

களத்தினில் கண்டமாலி கழித்த
ஊன்முதல் உண்கல்லன்
உளத்தில் அன்பு ஒழித்து நூலை
ஓதினன் மூகன் ஆவன்

Koviloor Digital Library

தனத்து இயல் கோசம் தன்னைத்
தற்கரன் சாத்திய அந்தன்
பனக்கு மூக்கு உடையான் பாங்கார்
தரும நூல் பழித்த பாவி.

உரை:

உண்ணத் தகாதது என நல்லோர் விலக்கிய புலால் முதலானவற்றைப் புசிப்பவன், கழுத்திலே கண்டமாலை என்னும் நோய் பொருந்தியவனாகப் பிறப்பான்; உள்ளத்திலே சிரத்தை இல்லாமல் ஆசிரியரின் வற்புறுத்தலுக்காகச் சிவாகமம் முதலியவற்றை ஓதுபவன் ஊமையாகப் பிறப்பான்; ஆகம உண்மைகள் அடங்கிய திருமுறை நூல்களைத் திருடுகிறவன் பிறவிக் குருடனாகப் பிறப்பான்; சிவாகமங்கள் முதலான அற நூல்களைப் பழிக்கிறவன் உள்ளே கொப்புளம் உடைய மூக்கு உள்ளவனாகப் பிறப்பான்.

விளக்கம்:

களம் - கழுக்கு; கண்டமாலி - கண்டமாலை, கழுத்தைச் சுற்றி உண்டாகும் புண்; ஊன் - இறைச்சி; உண்கல்லன் - உண்ணத் தகாதது; மூகன் - ஊமையன்; கோசம் - புத்தகம்; கரன் - கரம், கை; அந்தன் - குருடன்; பனக்கு - கொப்புளம் உள்ள; பாங்கார் - ஒழுங்குடைய; தருமநூல் - சிவாகமம் முதலிய அறநூல்கள். (30)

ஒரக்கண்ணனாகவும் கோணல் வாயனாகவும் பிறப்பவர்கள்

728. கற்புளார் செயலை நொய்து
கழறினன் காக்கைக் கண்ண
னற்றவர் தேவர் ஞான
யோகர்நல்லறஞ் செய்வார்கண்
மற்றுமுத்தமர் பாலன்பு வைத்திலன்
கோணல் வாயன்
பற்புழுப்பயிலு நோயன்
பழுதுரைப் பவனீவார்பாற்.

கற்பு உள்ளார் செயலை நொய்து
கழறினன் காக்கைக் கண்ணன்
நல்தவர் தேவர் ஞான யோகர்
நல் அறம் செய்வார்கள்
மற்றும் உத்தமர்பால் அன்பு
வைத்திலன் கோணல் வாயன்
பல்புழுப் பயிலும் நோயன்
பழுது உரைப்பவன் ஈவார்பால்.

Koviloor Digital Library

உரை:

கற்றவர்களின் ஒழுக்கம் தவறாத நற் செயல்களைச் சிறுமை செய்து பேசியவன் மாறு கண்ணனாகப் பிறப்பான்; நல்ல தவத்தினரையும், ஞான யோகிகளையும், ஈகையாளர்களையும், மேலோரையும் அன்பு செலுத்தி மதிக்காதவன் கோணல் வாயனாகப் பிறப்பான். ஒருவர் இன்னொருவருக்கு ஒரு பொருளைக் கொடுக்கும் போது, கொடுப்பவருக்கு இடையூறு செய்து கொடுக்க விடாமல் தடுக்கிறவன் பற்களிலே புழுக்கள் தங்கும் நோய் உள்ளவனாகப் பிறப்பான்.

விளக்கம்:

கற்பு உள்ளார் - கற்றவர்; நொய்து - அற்பமாக; கழறினன் - பேசியவன்; காக்கைக் கண் - மாறு கண், ஓரப் பார்வை; அறம் செய்வார் - ஈகையாளர்; உத்தமர் - மேலோர்; ஈவார்பால் - கொடுப்பவருக்கு; பழுதுரைப்பவன் - தடுப்பவன்; (31)

மூன்று வகை வஞ்சகர்

729. சலமெனும் வாதியாவன் றகைபெறு சமயந்தன்னை
நிலைகுலை செய்தான் கள்ள நீசரை நேசஞ் செய்து
கொலை விலக்கிடுவான்றானுங் கோணிய வழக்குக்கூறும்
புலையனும் பொருந்தி மன்றிற் புந்தியிற் புன்மையாலே.

சலம் என்னும் வாதி ஆவன் தகைபெறு சமயம் தன்னை
நிலைகுலை செய்தான் கள்ள நீசரை நேசம் செய்து
கொலை விலக்கிடுவான் தானும் கோணிய வழக்குக்கூறும்
புலையனும் பொருந்தி மன்றில் புந்தியில் புன்மையால் ஏ.

உரை:

பெருமைக்கு உரிய ஒரு சமயத்தைத் தாழ்ந்த நிலையை அடையச் செய்தவனும், கொல்லப்பட வேண்டிய இழிவான கள்ளரை, அவர்கள் தண்டனை பெறாமல் விடுவித்தவனும், ஒரு வழக்கில் நடந்த உண்மைச் செய்திகளை உரைக்காமல் பொய்ச் செய்திகளைச் சொன்ன இழிந்தவனும் கோணல் புத்தியுடைய வஞ்சகர் ஆவர்.

விளக்கம்:

சலம் - வஞ்சகம்; சலவாதி - வஞ்சகர்; தகைபெறு - பெருமை வாய்ந்த; நிலைகுலை - தாழ்ந்தநிலை; கள்ளர் - திருடர்; நீசர் - இழிந்தவர்;விலக்கிடுவான் - தப்பு வித்தவன்; கோணிய - நேர்மை இல்லாத;மன்று - நீதி மன்றம்; புந்தி - புத்தி; புன்மை - இழிவு. (32)

Koviloor Digital Library

செயல்களுக்கு ஏற்ற பிறவிகள்

730. எளியரை வதைத்தவந்த வீணி
கைகாலு மில்லான்
களவிலாவடியார் தம்மைக் கறுத்
தொறுத்தவன் கைகாலுந்
தளர்வுறக் குட்ட நோயுந்
தாங்கிய உடலனாவன்
விளிபவன் கொண்ட நோன்பு
வீடிழந்துழல்வன் வேறே.

எளியரை வதைத்த அந்த
வீணி கைகாலும் இல்லான்
களவு இல்லா அடியார் தம்மைக்
கறுத்து ஒறுத்தவன் கை காலும்
தளர்வு உறக் குட்ட நோயும்
தாங்கிய உடலன் ஆவன்
விளிபவன் கொண்ட நோன்பு வீடு
இழந்து உழல்வன் வேறு ஏ.

உரை:

குற்றம் புரியாத ஏழை மக்களை ஒரு காரணமும் இல்லாமல் வீணிலே கொன்ற கொடியவன் கை கால்கள் இல்லாத முடவனாகப் பிறப்பான்; களவு செய்யாத அடியவரைக் கள்வர் எனக் கருதி அடித்துத் துன்புறுத்தியவன் கை கால்கள் சோர்வடையச் செய்யும் தொழுநோய் கொண்ட உடலை உடையவனாகப் பிறப்பான்;தொடங்கிய சிவ விரதங்களை இறுதிவரை நிறைவு செய்யாமல் இடையிலே விட்டவன் தன்னுடைய வீட்டை இழந்து பல இடங்களில் அலைந்து திரிவான்.

விளக்கம்:

வதைத்த - கொன்ற; எளியர் - ஏழைகள்; வீணி - பயனற்றவன்;கை கால் இல்லான் - முடவன்; கறுத்து - கோபங் கொண்டு; ஒறுத்தவன் - அடித்தவன்; தளர்வு - சோர்வு; உற - பொருந்த; குட்ட நோய் - தொழுநோய்; விளிபவன் - விட்டவன்; நோன்பு - விரதம்; உழல்வன் - வருந்துவான். (33)

செயல்களுக்கு ஏற்ற பயன்

731. நீடிய மனைவியல்லான் மற்றை நேரிழையாரோடு
கூடியே சதுரங்காதியாடிய கொள்கையாளன்
கேடுறு முடலினற்ப கேசியே யாவன் கேளி
ரீடிளைத்திடக் கை விட்டான் பரிபவப் படுவனெங்கும்.

Koviloor Digital Library

நீடிய மனைவி அல்லால் மற்றை நேரிழையாரோடு
கூடியே சதுரங்க ஆதி ஆடிய கொள்கையாளன்
கேடு உறும் உடலில் அற்ப கேசியே ஆவன் கேளிர்
ஈடு இளைத்திடக் கைவிட்டான் பரிபவப் படுவன் எங்கும்.

உரை:

தன்னுடைய மனைவி அல்லாமல் பிறர் மனைவியரோடு சேர்ந்து இருந்து சதுரங்கம், சொக்கட்டான் முதலியவற்றை ஆடிய பழக்கம் உள்ளவன், தன்னுடைய உடலில் உள்ள மயிர்களை இழந்து சொட்டை உடையவன் ஆவான். தன்னுடைய உறவினர்கள் தங்களுடைய செல்வங்களை இழந்து வறியவர்கள் ஆன போது, அவர்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்யாமல் பராமுகமாய் இருந்தவன், தான்செல்லும் இடம் எங்கும் நிந்திக்கப்பட்டு அவமானம் அடைவான்.

விளக்கம்:

நீடிய பாரி - நிலையான மனைவி; மற்றை நேரிழையார் - பிறருடைய மனைவியர்; சதுரங்கம் - நான்கு வகைச் சேனைகளாகக் காய்களை நிறுத்தி நகர்த்தி விளையாடும் ஒரு விளையாட்டு; கேசம் - மயிர்; அற்பகேசி - சொட்டை; கேளிர் - உறவினர்; ஈடு இளைத்திட - வறியவரான போது; பரிபவம் - அவமானம். (34)

விலைமகளிர் தொடர்பால் உண்டாகும் துன்பம்

732. பொருதவன் சதுரங்காதி பொது மடவரலாரோடு
திருவறவுருவு மின்றித் தீம்பரும் புடையே சேரத்
தருபவரெவரேயென்று தளர்ந்துடற்றாழ்ச்சி பேசித்
திரிவனேயிரந்து தின்று தீர்த்திடச் செல்ல லோடே.

பொருதவன் சதுரங்க ஆதி பொது மடவர லாரோடு
திரு அற உருவும் இன்றித் தீம்பரும்புடையே சேரத்
தருபவர் எவரே என்று தளர்ந்து உடல் தாழ்ச்சி பேசித்
திரிவனே இரந்து தின்று தீர்த்திடச் செல்லலோடு ஏ.

உரை:

வேசியரோடு சதுரங்கம், சொக்கட்டான் முதலியவற்றால் சூதாடியவன், தன்னுடைய செல்வங்களையும் உடல் அழகையும் இழந்து, தீயவர்கள் அருகிலே சூழ, பணம் தருபவர் யார் என்று எண்ணி, தன்னுடைய தாழ்ந்த நிலையைச் சொல்லி இரந்து உண்டு, உடல் சோர்ந்து தீராத துயரத்தோடு திரிவான்.

விளக்கம்:

சதுரங்க ஆதி - சதுரங்கம், சொக்கட்டான் முதலியவை; பொது

Koviloor Digital Library

மடவரலாரோடு - பொதுமகளிரான வேசியரோடு; பொருதவன் - சூதாடியவன்; திரு - செல்வம்; அற - நீங்க; உரு இன்றி - உடல் அழகு நீங்க;

தீம்பர் - தீயவர்; புடையே சேர - அருகிலே சூழ; தளர்ந்து - மெலிந்து; தாழ்ச்சி பேசி - தாழ்ந்த நிலையைச் சொல்லி; இரந்து - பிச்சையெடுத்து; செல்லல் - துன்பம். (35)

பழங்கால இல்லறத்தார்க்குச் சொன்ன அறிவுரை

733. அருக்கனத்த மனந்தன்னி
லடைந்தவர்க்கிடங் கொடாதான்
பரித்திடும் பாரி தன்னை
யிழந்துளம் பதைப்பன் பாங்கால்
விரைத் தெழுந்தெதிர் கொளாதான்
விரும்பிய பொருளை வீழ்ப்பன்
றரித்தநால் வேதத்தாரைத் தபோதனர்
தமையும் தாழ்ந்தே.

அருக்கன் அத்தமனம் தன்னில்
அடைந்தவர்க்கு இடம் கொடாதான்
பரித்திடும்பாரி தன்னை இழந்து
உள்ளம் பதைப்பன் பாங்கால்
விரைந்து எழுந்து எதிர் கொள்ளாதான்
விரும்பிய பொருளை வீழ்ப்பன்
தரித்தநால் வேதத்தாரைத் தபோதனர்
தம்மையும் தாழ்ந்து ஏ.

உரை:

கதிரவன் மறைந்த வேளையில் தன் வீட்டிற்கு வந்தவர்களுக்குத் தங்க இடம் அளிக்காதவன், முறைப்படி மணம் புரிந்த தன் மனைவியை இழந்து வருந்துவான். தன் இல்லத்திற்கு வந்த வேதியரையும் தவத்தினரையும் உரிமையோடு எதிர் சென்று பணிவாக வணங்கி வரவேற்று அழைத்து வந்து உபசரிக்காதவன், தனக்கு விருப்பமான செல்வத்தை இழப்பான்.

விளக்கம்:

அருக்கன் - கதிரவன்; அத்தமனம் - மறைவு; பாரி - மனைவி; பரித்த - மணந்த; பாங்கால் - முறையாக; விரைத்து - விரைவாக;

எதிர் கொள்ள - வரவேற்க; பொருள் - செல்வம்; தரித்த - உரிமையோடு; வேதத்தார் - வேதியர். (36)

Koviloor Digital Library

வேதமும் வேதியரும்

734. வேதநிந்தகனே புன்மை
விடக்குணும் புலையனாவன்
வேதநல்லந்த நிந்தன்
வெவ்வினை வேடனாவன்
வேதகஞானி நிந்தை
விளம்பினன் பித்தனாவன்
வேதியர் பொருளைக் கொண்டான்
விளக்குறு விட்டிலாமே.

வேதநிந்தகனே புன்மை விடக்கு
உண்ணும் புலையன் ஆவன்
வேத நல் அந்தம் நிந்தன்
வெவ்வினை வேடன் ஆவன்
வேதகஞானி நிந்தை விளம்பினன்
பித்தன் ஆவன்
வேதியர் பொருளைக் கொண்டான் விளக்கு
உறும் வீட்டில் ஆம் ஏ.

உரை:

இருக்கு முதலான வேதங்களைப் பழிக்கிறவன் புலால் தின்னும் புலையனாகப் பிறப்பான்; உப நிடதங்களைப் பழித்தவன் வேடனாகப் பிறப்பான்; வேதங்களைக் கற்றுத் தேறிய அறிஞனைப் பழித்துப் பேசியவன் கிறுக்கனாகப் பிறப்பான்; வேதியர் பொருளைக் கவர்ந்தவன், விளக்கிலே விழுந்து இறக்கும் விட்டிலாகப் பிறப்பான். (37)

கொடிய நோயாளிகளாகப் பிறப்பவர்கள்

735. விட்டிடாவிய னோயாளனயிட்டிக விரதம் விட்டா
னொட்டக மாதியின்மைதுனி பிரமேக ரோகி
யிட்டமிக் கிணங்கினானு நாரியரிணைத் தோணீக்கப்
பட்டவைம் பருவந்தன்னிற் பாங்கலா மற்றைப் பாலும்.

விட்டிடா இயல் நோயாளன் நயிட்டிக விரதம் விட்டான்
ஒட்டகம் ஆதியின் மைதுனி பிரமேக ரோகி
இட்டம் மிக்கு இணங்கினானும் நாரியர் இணைத்தோள் நீக்கப்
பட்ட ஐம்பருவம் தன்னில் பாங்கு அல்லா மற்றைப் பாலும்.

Koviloor Digital Library

உரை:

நைஷ்டிக தீக்ஷை பெற்று வாழ் நாள் வரை மணம் புரியாமல் இருப்பதாக உறுதி செய்து அதனை ஆயுள் வரை கடைப்பிடிக்காமல் இடையிலே விட்டவன் எந்நாளும் தீராத நோயாளனாகப் பிறப்பான். மனைவியுடன் கலவி புரியத் தகாத நாள்கள் என விலக்கப்பட்ட நாள்களில் தன் மனைவியைப் புணர்ந்தவனும், ஒட்டகம் முதலான விலங்குகளின் யோனிகளிலே மைதுனம் செய்தவனும் வெட்டை நோய் கொண்டவராகப் பிறப்பார்கள்.

விளக்கம்:

நயிட்டிகம் - நியமப்படி தீக்ஷை பெற்று வேண்டுங்கிரியை நியமங்களுடன் நைட்டிகம், ஆயுள் முழுவதும் பிரமசரியம் பூண்டு ஒழுகும் நிலை. விரதம் - நோன்பு; மைதுனி - மைதுனம் செய்தவன்;

பிரமேக ரோகி - வெட்டை நோயாளி; நீக்கப்பட்ட ஐம்பருவம் - மாதரோடு கலவி செய்யக் கூடாது என விலக்கப்பட்ட காலங்கள் விதிபாதம் முதலியன; பாங்கு அல்லா - ஒழுங்கு இல்லாத. (38)

அன்பில்லாதவருக்கு அமைதி இல்லை

736. தந்தை பாற்றாய் பாலன்பு தவிர்ந்தவன் றனமுமின்றி
நைந்துள நடுக்கமுற்று நாடிய பலத்து ளொன்றும்
வந்து கை கூடிடாது வாடுவன் மனத்தின் கண்ணு
மந்தரமடைவ னென்றும் பிறர் பழியறைந்த வற்பன்.

தந்தைபால் தாய்பால் அன்பு தவிர்ந்தவன் தனமும் இன்றி
நைந்து உள்ளம் நடுக்கம் உற்று நாடியபலத்துள் ஒன்றும்
வந்து கை கூடிடாது வாடுவன் மனத்தின் கண்ணும்
அந்தரம் அடைவன் என்றும் பிறர்பழி அறைந்த அற்பன்.

உரை:

பெற்றோரிடம் அன்பு செலுத்தத் தவறியவன் கைப்பொருளை இழந்து வறியவனாகி, உள்ளம் நொந்து, அமைதி அற்று, எதிர் பார்த்த பொருள் கிடைக்கப் பெறாமல் மெலிவடைவான். தகாத முறையில் பிறர் மீது பழி சுமத்தியவன், மனங்கலங்கி அழகு இழந்த கண்களையுடையவனாகப் பிறப்பான்.

விளக்கம்:

நைந்து - கெட்டு; பலம் - பொருள்; அந்தரம் - இருள்; அறைந்த - சொன்ன; பழி - குற்றம்; அற்பன் - கீழானவன். (39)

Koviloor Digital Library

வாதநோயாளியாகப் பிறப்பவன்

737. கூட்டியேயவலர் தம்மைக் கூறினான் பெரியோர் குற்றம்
நாட்டமும் பிதுங்க நீங்கா நடலையை யுறுவன் மாலை
சூட்டிய கணவன் றோனைத்துறந்தகத் தூய்மையற்ற
வாட்டடங் கண்ணி தோளை மருவினான் வாதரோகி.

கூட்டியே அவலர் தம்மைக் கூறினான் பெரியோர் குற்றம்
நாட்டமும் பிதுங்க நீங்கா நடலையை உறுவன் மாலை
சூட்டிய கணவன் தோளைத் துறந்த அகத் தூய்மை அற்ற
வாள் தடம் கண்ணி தோளை மருவினான் வாதரோகி.

உரை:

பொல்லாதவர்களை ஒன்று சேர்த்து, பலர் முன்னிலையில் பெரியோர்கள் செய்த தவறுகளை வெளிப்படுத்தியவன், தன் கண்ணிலே பிதுக்கம் ஏற்பட்டுப் பெரிய துயரத்தை அடைவான். மணமாலை சூட்டி மணந்த கணவனுக்குத் தெரியாமல், அவனுக்குத் துரோகம் செய்து இல்லற நெறியைக் கைவிட்ட, ஒழுக்கம் அற்றவளோடு கலவி செய்தவன் வாதநோயாளனாகப் பிறப்பான்.

விளக்கம்:

அவலர் - பொல்லாதவர்; நாட்டம் - விழி; நீங்கா - அகலாத; நடலை - துன்பம்; துறந்த - கைவிட்ட; அகம் - உள்ளம்; வாள் தடம் கண்ணி - கூரிய அகன்ற விழிகளையுடையவள்; மருவினான் - புணர்ந்தவன்; ரோகி - நோயாளி. (40)

மிருதியின் வழி வாழாதவர் பெறும் பயன்

738. மிருதியின் வழியின் விட்டு
வேண்டிய தெல்லாஞ் செய்தா
னுருவினு மனத்துந் துன்பமொரு
விலனென்று மற்றைக்
கரிசரும் கலப்பர் தத்தங்
கடுவினைக் கிசைந்த கட்டம்
விரியு நூல் துயரபேதந்
தனித்தனி விளம்பும் வேலை.

மிருதியின் வழியில் விட்டு
வேண்டியது எல்லாம் செய்தான்
உருவிலும் மனத்தும் துன்பம்
ஒருவிலன் என்று மற்றைக்

Koviloor Digital Library

கரிசரும் கலப்பர் தம்தம்
கடுவினைக்கு இசைந்த கட்டம்
விரியும் நூல் துயர பேதம்
தனித்தனி விளம்பும் வேலை.

உரை:

மநு மிருதி, பராசரமிருதி முதலான மிருதிகள் உணர்த்திய நெறிகளைப் பின்பற்றாமல் தன் மனம் போன போக்கிலே வாழ்ந்தவர் உடலிலும் மனதிலும் என்றும் நீங்காத துயரத்தை அனுபவிப்பான். வேறு பாவங்களைச் செய்து அதனால் நரகத்தை அடைந்த பாவியரும் தாம் செய்த தீய செயல்களுக்குத் தக்கபடி துன்பங்களை அடைவார்கள். அந்தத் துன்பங்களைத் தனித்தனியே விளக்கிச் சொன்னால், அவை ஒரு விரிந்த நூலாகும்.

விளக்கம்:

மிருதி - மநு, பராசரன் முதலானோர், தம் மதத்தினர் பின்பற்ற வேண்டிய வாழ்க்கை முறைகளை, 'ஸ்மிருதி' என்ற பெயரால் நூல்களாக எழுதி வெளிப்படுத்தினர். மநு எழுதியது *'மநு ஸ்மிருதி'* பராசரன் எழுதியது 'பராசரஸ் மிருதி'. இவ்வாறு பல ஸ்மிருதிகள் ஆரிய மொழியில் உள்ளன. 'ஸ்மிருதி' என்பது தமிழில் 'மிருதி' என வழங்கும். (41)

பன்றி, நாய், வண்டுகளாகப் பிறப்பவர்கள்

739. பன்முறையாமதிபாதகரே பன்னெடு நாண்மல பாதகரே
பன்மயவா மகபாதகரே பற்பல பன்றி மெய் பற்றுவரே
பன்மய மற்றைய பாதகரே பற்பல நாயுடல் பற்றுவரே
பன்மயவா முப பாதகரும் பற்பல பிரமரசாதியரே.

பல்முறையாம் அதிபாதகரே பல் நெடுநாள் மலபாதகரே
பல் மயவாம் மகபாதகரே பலபல பன்றி மெய்பற்றுவரே
பல்மயம் மற்றைய பாதகரே பலபல நாய் உடல்பற்றுவரே
பல் மயவாம் உபபாதகரும் பலபல பிரமர சாதியரே.

உரை:

பலமுறைகளில் அதிபாதகங்களைச் செய்தவர்கள் நீண்ட காலம் நரகத்துன்பங்களை அனுபவித்த பிறகு நிலத்தில் அழுக்கில் நெளியும் புழுக்களாகப் பிறப்பார்கள்; பல தடவைகளில் மகா பாதகம் புரிந்தவர்கள், பலவகைப் பன்றிகளாகப் பிறப்பார்கள்; பலகாலும் கொடும்பாவத்துக்கு உபபாதகங்களைச் செய்தவர்கள் பலவகை நாய்களாகப் பிறப்பார்கள்; பல காலங்களில் கொடிய பாவங்களை விடக் குறைவான பாவங்களைப் புரிந்தவர்கள், பலவகை வண்டுகளாகப் பிறப்பார்கள்.

Koviloor Digital Library

விளக்கம்:

அதிபாதகர் - கொடிய பாவிகள்; பல் நெடுநாள் - நீண்ட காலம்: மகாபாதகர் - பெரும்பாவியர்; பற்றுவர் - பிறப்பார்கள்; பல் மயம் - பலவகை: பிரமர சாதியர் - வண்டுகளாகப் பிறப்பவர்கள்; பிரமரம் - வண்டு. (42)

தொடர்ந்து பாவங்களைச் செய்பவர்கள்

740. பண்ணினர் முன்னதிபாதகமே
பண்ணுவரேயதி பாதகமே
பண்ணினர் முன்மக பாதகமே
பண்ணுவர் பின்மக பாதகமே
பண்ணினர் மற்றைய பாதக
முன்பண்ணுவர் மற்றைய பாதகமே
பண்ணினர் முன்னுப பாதகமே
பண்ணுவர் பின்னுப பாதகமே.

பண்ணினர் முன் அதிபாதகமே
பண்ணுவரே அதிபாதகமே
பண்ணினர் முன்மகாபாதகமே
பண்ணுவர்பின் மகா பாதகமே
பண்ணினர் மற்றைய பாதகம் முன்
பண்ணுவர் மற்றைய பாதகமே
பண்ணினர் முன் உபபாதகமே
பண்ணுவர்பின் உப பாதகம் ஏ.

உரை:

முன் பிறவியில் அதிபாதகம், மகாபாதகம், உப பாதகங்களைச் செய்தவர்கள், இப்பிறவியிலும் தொடர்ச்சியாக அந்தந்தப் பாவங்களைச் செய்வர்.

விளக்கம்:

புண்ணியம் பயன்களோடு வந்து பிறக்கிறவன், புண்ணியச் செயல்களைத் தொடர்ந்து செய்து புண்ணியப் பேறு பெறுகின்றான். பாவப் பயன்களோடு வந்து பிறக்கிறவன், பாவச் செயல்களைத் தொடர்ந்து செய்து பாவப் பயனைப் பெறு கின்றான். புண்ணியங்களாலும் பிறவி உண்டு; பாவங்களாலும் பிறவி உண்டு. (43)

இழிந்த குலத்திலே பிறப்பவர்கள்

741. பண்ணினர் மற்றைய பாவவிதம்
பண்ணுவரே பல பாவ விதம்
பண்ணினரேற் பரிகார விதம் பற்றிலர்
முற்றிய பாவ விதம்

Koviloor Digital Library

பண்ணினரேற் பரிகார விதம் பற்றிய
வாழ் குழி பற்றுவரே
பண்ணிய பாதக சேட முறப்
பாரிழி யோனியும் பற்றுவர்.

பண்ணினர் மற்றையபாவ விதம்
பண்ணுவரே பல பாவவிதம்
பண்ணின ரேல் பரிகாரவிதம் பற்றிலர்
முற்றிய பாவ விதம்
பண்ணின ரேல் பரிகார விதம் பற்றிய
ஆழ் குழி பற்றுவரே
பண்ணியபாதக சேடம் உறப்பார்
இழி யோனியும் பற்றுவர்.

உரை:

முன் பிறவியில் பாவச் செயல்களைச் செய்தவர்கள், இப்பிறவியிலும் அப்பாவங்களை விரும்பிச் செய்வர். முன் பிறவியில் பாவம் செய்தவர், இப் பிறவியில் பாவம் செய்யாதிருக்கச் சிவாசாரியர் மூலம் தக்க கழுவாயைச் செய்ய வேண்டும். அவ்வாறு, பாவம் தொடராமல் இருக்க உரிய கழுவாயைச் செய்யாதவர், நரக உலகையடைந்து பாவங்களைத் தொலைத்த பிறகு பூமியில் இழிந்த குலத்திலே பிறப்பார்கள்.

விளக்கம்:

பரிகாரம் - கழுவாய்; ஆழ் குழி - நரகம்; பாதக சேடம் - பாவமிகுதி; பார் - பூமி; இழி - தாழ்ந்த; யோனி - பிறப்பு. (44)

கந்தன் துதி

742. என்று வினையொன்று பல சேடமு மிசைத்தான்
குன்றவர் மடக் கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்று புலனைந்தினையும் வெய்ய வினை நைய
நின்ற முனியன்றுணர நிர்க்குணனினைந்தே.

என்று வினை ஒன்று பல சேடமும் இசைத்தான்
குன்றவர்மடக் கொடி தனக்கு அருள் கொடுத்தான்
வென்று புலன் ஐந்தினையும் வெய்ய வினைநைய
நின்றமுனி அன்று உணர நிர்க்குணன் நினைந்து ஏ.

Koviloor Digital Library

உரை:

மலையில் வாழும் வேடுவர் தலைவன் நம்பிராசன் திருமகளான இளமையும் மென்மையுமான உடலமைப்பும் கொண்ட வள்ளி நாயகிக்கு அருள் செய்த கந்தப் பெருமான், கொடிய தீவினை கெடுமாறு மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளையும் அடக்கிய அகத்தியன், தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணிச் சுவர்க்க நரகசேட இயலின் தன்மைகளை உரைத்தான்.

விளக்கம்:

மடக்கொடி - மடம்+கொடி, இளமையும் கொடி போன்ற உடல் அமைப்பும் கொண்ட வள்ளி நாயகி. வெய்ய - கொடிய; நைய - கெட; நிர்க்குணன் - கடவுள். (45)

சிவன் துதி

743. அன்றற மாதியறைந்தவனே
யருக்கனுரப்பல றைந்தவனே
குன்ற விலங்கையிற் கொண்டவனே
கோலவிலங்கையிற் கொண்டவனே
வென்றி நினைந்து விலங்கலுமே
மிண்டியெடுக்க விலங்கலுமே
யன்றவனாக மரக்கினனே யவனிசைக்
கங்கிய ரக்கினனே.

அன்று அறம் ஆதி அறைந்தவனே
அருக்கன் உரப்பல் அறைந்தவனே
குன்றவில் அங்கையில் கொண்டவனே
கோல இலங்கையில் கொண்டவனே
வென்றி நினைந்து விலங்கலுமே
மிண்டி எடுக்க விலங்கலுமே
அன்று அவன் ஆகம் அரக்கினனே
அவன் இசைக்கு அங்கி அரக்கினனே.

உரை:

முன் நாளில்கல் ஆலின் கீழ் அமர்ந்து நால்வர்க்கு அறம் உரைத்தவனே!. தக்கன் யாகத்தில் கலந்து கொண்ட பன்னிரண்டு சூரியர்களுள் ஒருவனுடைய பலம் வாய்ந்த பல்லை உடைத்தவனே! மகா மேருவை வில்லாக உள்ளங்கையில் ஏந்தியவனே! அழகுள்ள இலங்கையில் வாழ்ந்த இராவணன் திக்கு விசயத்துக்குப் புறப்பட்ட போது கயிலாய மலையைத் தன் மிடுக்கினாலே எடுக்க, கால்

Koviloor Digital Library

பெருவிரலால் அவன் உடலை அழுத்தியவனே! பின்னர், அவனுடைய இசையால் மகிழ்ந்து தீயைப் பொருந்திய அரக்கைப் போல உருகியவனே!

விளக்கம்:

அறம் ஆதி - சிவாகமம் முதலியவை; அருக்கன் - ஆதித்தன்; குன்றம் - மேருமலை; அங்கை - உள்ளங்கை; கோலம் - அழகு; இலங்கை - தீவு; வென்றி - வெற்றி; மிண்டு - துடுக்கு; ஆகம் - உடம்பு; அரக்கினன் - நெருக்கினன்; அங்கி - தீ; வென்றி நினைந்து விலங்கல் - வெற்றி பெறற் பொராட்டுத் திக்குவிஜயத்துக்குப் புறப்படல். (46)

சிவன் துதி

744. வாக்கிறை நோயினை மாற்றினனே
மனமயலாதிக்கு மாற்றினனே
தூக்கியற் சுந்தரன் றூதுவனே
தொண்டர் முகந்துணுந்தூதுவனே
பாக்க விப்பாண்டியன் மந்திரியே
பாச மறப்பகர் மந்திரியே
நோக்கரி தாகிய நுண்ணியனே
நொடிபலியூன் கலனுண்ணியனே.

வாக்கு இறை நோயினை மாற்றினனே
மனம் மயல் ஆதிக்கு மாற்றினனே
தூக்கு இயல் சுந்தரன் தூதுவனே
தொண்டர் முகந்து உண்ணும் தூதுவனே
பாக்க விப்பாண்டியன் மந்திரியே
பாசம் அறப்பகர் மந்திரியே
நோக்க அரிது ஆகிய நுண்ணியனே
நொடிபலி ஊன் கலன் உண்ணியனே.

உரை:

திருநாவுக்கரசருடைய வயிற்று நோயைப் போக்கியவனே! மனத்தில் உண்டாகிய மயக்கம் முதலான தீமைகளை மாற்றுபவனே! தமிழ்ப் பாடல்களாகிய திருப்பாட்டை அருளிய நம்பி ஆரூராரின் தூதுவனாகப் பரவையார் இல்லத்துக்குப் போய் வந்தவனே! அருள் அமுதை அடியவர்கள் அள்ளிப் பருகுவதற்கு ஆதாரமாக இருப்பவனே! பாண்டிய அரசரின் முதல் அமைச்சரான மாணிக்கவாசகரின் பற்றுகள் நீங்கக் குருவடிவாக அமர்ந்து உபதேசித்த மந்திரத்தை உடையவனே! பக்குவம் இல்லாதவர்கள் காண்பதற்கு அரிய நுட்பமாக விளங்குகின்றவனே! தாருகவன ஆரியர்களின் மனைவியர் அளித்த உணவை பிரமன் மண்டை ஒட்டில் ஏற்று உண்டவனே!

Koviloor Digital Library

விளக்கம்:

வாக்கு இறை - திருநாவுக்கரசர்; மயல் - மயக்கம்; தூக்கு இயல் - செய்யுள்; சுந்தரன் - நம்பி ஆரூரர்; தொண்டர் - அடியவர்; முகந்து - அள்ளி; பாக்கவி - பாவலர்; பாண்டியன் மந்திரி - வரகுணபாண்டியரின் முதல் அமைச்சரான மாணிக்கவாசகர்; பலி - உணவு; ஊன்கலன் - மண்டையோடு; உண்ணியன் - உண்டவன். (47)

குமரன் துதி

745. மாலயன் மயலுறவு மாலெரி வடிவுடைய
காலனை வெருவுறவுங் காதிய கழலடிய
னாலதனிழல் மருவு மாரணனவனருளும்
வேலன திருபதமும் வேணினரேணினரே.

மால் அயன் மயல் உறவும் மால் எரிவடிவு உடைய
காலனை வெருவு உறவும் காதிய கழல் அடியன்
ஆல் அதன் நிழல் மருவும் ஆரணன் அவன் அருளும்
வேலனது இருபதமும் வேணினர் ஏணினர் ஏ.

உரை:

விஷ்ணுவும் பிரமனும் தங்களுக்குள் யார் பெரியவன் என்று பூசலிட்டு மயங்க, அம் மயக்கம் அகலும்படி அவர்கள் இருவருக்கும் இடையே தீப்பிழம்பாகத் தோன்றியவனும், மார்க்கண்டன் உயிரைக் கவர வந்த எமன் அஞ்சும்படி உதைத்த வீரக்கழல் அணிந்த திருவடியை உடையவனும், கல் ஆல மரத்தின் கீழ் அமர்ந்து சிவாகமங்களை அருளியவனும் ஆகிய சிவன் அருளிய வேலவனின் இரண்டு திருவடிகளையும் விரும்பினவர்களே பெருமையுடையவர் ஆவர்.

விளக்கம்:

மால் - விஷ்ணு; அயன் - பிரமன்; எரி - நெருப்பு; வெருவு - அச்சம்; காதிய - கொன்ற; கழல் - வீரக் கழல்; அடியன் - திருவடியை உடையவன்; ஆல் - ஆலமரம்; மருவும் - அமர்ந்த;ஆரணன் - வேத சிவாகமம் அருளியவன்; இருபதம் - இரண்டு திருவடிகள்; வேணினர் - விரும்பினவர்கள்; வேள் - விருப்பம்; ஏணினர் - பெருமையுடையவர். (48)

அகத்தியர் துதி

746. தீதுக நினைபவருஞ் சிவகதி தருவதுதா
னே தெனவெனுமவரு மெனதுரையினி தறிமி
னோதுக வொருமையுடனுல குயவுமையுதவும்
போதக னருள் புணரும் பொதிமலை முனிபுகழே.

Koviloor Digital Library

தீதுஉக நினைபவரும் சிவகதி தருவது தான்
ஏது என என்னும் அவரும் எனது உரை இனிது அறிமின்
ஓதுக ஒருமையுடன் உலகு உய்ய உமை உதவும்
போதகன் அருள் புணரும் பொதிமலைமுனி புகழ் ஏ.

உரை:

குற்றம் அகல வேண்டும் என்று எண்ணுகின்றவரும், சிவபிரான் திருவடிகளைப் பொருந்தும் நெறி எது என எண்ணுகின்றவரும் வருவீர்களாக. யான் சொல்லுவதை நன்றாக அறிந்து கொள்வீர்களாக. வையகமாந்தர் நற்கதி பெறும் பொருட்டு, உமையவள் அருளிச் செய்த குருபிரானாகிய குமரப் பெருமானுடைய திருவருளைப் பெற்ற பொதிய மலையின் தமிழ் முனிவருடைய புகழை மன ஒருமையோடு வணங்கி ஓதுக.

விளக்கம்:

உக - நீங்க; அறிமின் - அறிந்து கொள்வீராக; உலகு - உலகமக்கள்; உய்ய - நற்கதிபெற; போதகன் - குரு, குமரன்; பொதிமலைமுனி - அகத்தியர். (49)

Koviloor Digital Library

பத்தாவது

சிவஞான யோக இயல்

சிவஞானம்-பதியுணர்வு.

யோகம்-1. சிவாகமத்தின் யோக பாதம். 2. ஆழ்ந்த தியான நிலை.

புண்ணியப் பயனால் மனிதப் பிறவியை அடைந்தவர்கள் ஞானாசிரியரை அடைந்து, சிவஞானத்தைப் பெறும் முறைகளைச் ''சிவஞானயோக இயல்'' உணர்த்துகின்றது.

கணபதி துதி

747. ஒருவனிரண்டற வெங்கணுமொழிவற
வொன்றி யுணின்றவ
னிருவரகம்பர மென்றவர்க் கிகலறவன்
றெரி யொன்றின
னருளிய வைங்கர னன்பர்கள னன்பர்களக
வினை நைந்தற வன்பு செய்
கரிமுகனம் பவளம்புரை கணபதி
யெங்களி கண்களே.

ஒருவன் இரண்டு அற எங்ஙனும் ஒழிவு அற
ஒன்றி உள் நின்றவன்
இருவர் அகம்பரம் என்றவர்க்கு இகல்
அற அன்று எரி ஒன்றினன்
அருளிய ஐங்கரன் அன்பர்கள் அகவினை
நைந்து அற அன்பு செய்
கரிமுகன் அம்பவளம் புரை
கணபதி எம்களி கண்கள் ஏ.

உரை:

ஒப்பு இல்லாதவனாய், எல்லாப் பொருள்களிலும் நீக்கம் இல்லாமல் கலந்து விளங்குபவனாய், நானே பெரியவன் எனத் தம்முள் மாறுபட்டு நின்ற பிரம விஷ்ணுக்களின் இடையே நெருப்பு வடிவாகத் தோன்றிய சிவன் அருளிய ஐந்து கைகளையுடையவனும், தன் அன்பர்களின் வினை தேய்ந்து கெட அருள் செய்யும்

Koviloor Digital Library

யானை முகத்தினையுடையவனும், அழகிய பவளம் போன்ற நிறம் உள்ளவனும், ஆய்க் கணங்களுக்குப் பதியாயுமுள்ள விநாயகக் கடவுள், நமக்கு மகிழ்ச்சியைத் தரும் பொருள்கள் யாவையும் காட்டும் கண்கள் போல, அகப் பொருள் அனைத்தையும் உணர்த்தும் கண்களாய் நின்று அருள்வானாக.

விளக்கம்:

இரண்டு அற - வேறுபாடு இல்லாமல்; எங்கணும் - எல்லாவற்றிலும்; இருவர் - பிரமன், விஷ்ணு; இகல் - போர்; எரி - தீ; கரி - யானை. (1)

இறைவன் துதி

748. உருவருவென்ற வுடம்புடனொருவ
விரண்டனு பந்தமு
மிருண்மலபந்த முமந்த
முமிணையுமிலின் புறகம்புட
னிருமலனின் பநிரந்தவனிலன்
முடிவெங்கு நிறைந்தவ
னருளிய சந்தமதன்
பொருளவனவளென்று வணங்குவம்.

உரு அரு என்ற உடம்புடன்
ஒருவன் இரண்டு அனுபந்தமும்
இருள்மலபந்தமும் அந்தமும் இணையும்
இல் இன்பு உறகம்புடன்
நிருமலன் இன்ப நிரந்தவன் இலன்
முடிவு எங்கும் நிறைந்தவன்
அருளிய சந்தம் அதன் பொருள் அவன்
அவள் என்று வணங்குவம்.

உரை:

உருவம் அருவம் என்ற இரு உடலுடன் மாயையும் கருமமும் இருள் போன்ற ஆணவ மல மயக்கமும் நம்மை விட்டு அகலவும், முடிவும் ஒப்பும் இல்லாத பேரின்பம் நம்மை வந்து அடையவும் எங்கும் நீக்கம் அறக்கலந்து நிற்பவனும், தூயவனும் இன்ப சொரூபனும் ஆகிய சிவ பெருமான் அருளிய மேலான சிவாகமங்களில் உள்ள சொல்லையும் அதன் பொருளையும் சிவனும் சிவையுமாகக் கருதி அன்புடன் வணங்குகிறோம்.

விளக்கம்:

உரு - வடிவம்; அரு - வடிவம் இல்லாதது; அனுபந்தம் - பின் சேர்க்கப்படுவது; இருள்மலம் - ஆணவமலம்; அந்தம் - முடிவு; இணை - ஒப்பு;

Koviloor Digital Library

நிருமலன் - தூயவன்; நிரந்தவன் - பொருந்தியவன்; முடிவு இலன் - என்றும் உள்ளவன்; சந்தம் - வேதமாகிய சிவாகமம்; வணங்குவம் - வணங்குகிறோம். (2)

சிவஞான யோகம்

749. அலற் பிறப்ப வலமாவிக்
கறவுற வறிவானந்தஞ்
சொலத் தொடங்கு வங்கேண்
ஞானயோகமுந்து கடீர் சத்தி
மலத்தினு மனாதிமுத்தன் மயமுணர்ந்
துணர்த்தல் ஞான
முலப்பிலாவவனுள் வேறற்றுறை
தலையுணர்தல் யோகம்.

அல்லல் பிறப்பு அவலம் ஆவிக்கு
அற உற அறிவு ஆனந்தம்
சொல்லத் தொடங்குவம் கேள் ஞான
யோகமும் துகள் தீர் சத்தி
மலத்தினும் அனாதிமுத்தன் மயம்
உணர்ந்து உணர்த்தல் ஞானம்
உலப்பு இலா அவனுள் வேறு
அற்று உறைதலை உணர்தல் யோகம்.

உரை:

துன்பத்தை உண்டாக்கும் குற்றத்திற்கு இடமான பிறப்பு நீங்கவும், அறிவு இன்பம் வந்து பொருந்தவும், யாம் சொல்லப் புகுகின்ற ஞான யோகத்தைக் கேட்பாயாக. குற்றமற்ற அறிவாற்றலையுடைய, மலங்களிலிருந்து நீங்கிய, கடவுளின் வடிவத்தை ஆசிரியர் முன்பே ஆராய்ந்து அறிந்து மாணாக்கருக்கு அறிவித்தல் ஞானம்; அழிவில்லாத அக்கடவுளுடன் ஆழ்ந்த தியான நிலையில் வேறுபாடு இன்றிக் கலந்திருத்தலை அறிதலே யோகம்.

விளக்கம்:

அல்லல் - துன்பம்; ஆவிக்கு - உயிருக்கு; அவலம் - குற்றம்; அற - நீங்க; ஆனந்தம் - இன்பம்; துகள்தீர் - குற்றம் இல்லாத; சத்தி - ஆற்றல்; மலத்தினும் அனாதி முத்தன் - மல்ங்களிலிருந்து அநாதியே நீங்கிய கடவுள்; மயம் - அறிவு; உணர்ந்து - அறிந்து; உணர்த்தல் - அறிவித்தல்; ஞானம் - இங்குக் கடவுளைப் பற்றிய அறிவு; ''சித்தமிசை குடி கொண்ட அறிவான தெய்வமே'' என்பது தாயுமானார் திருவாக்கு. உலப்பு - அழிவு; இலா - இல்லாத; அவனுள் - இறைவனோடு; உறைதல் - கலந்திருத்தல்; வேறு அற்று - வேறுபாடு இல்லாமல்; யோகம் - ஆழ்ந்த தியானநிலையில் இறைவனைக் கூடுதல். (3)

Koviloor Digital Library

ஞானயோகி

750. தன்னது சத்தி காட்டுந்
தத்துவத் தொடர்ச்சி நீங்க
வன்னிய னலனைத்
தன்னோடனாதிய வமலன்றன்னைக்
கன்ம முமலனைத் தாமுன்
கண்டு கண்டிடாது காட்டப்
பின்னதனா லவ்வுண்மை
பெற்றவன் ஞானயோகி.

தன்னது சத்தி காட்டும்
தத்துவத் தொடர்ச்சி நீங்க
அன்னியன் அலனைத் தன்னோடு
அனாதிய அமலன் தன்னைக்
கன்ம மும்அலனைத் தாம்
முன்கண்டு கண்டிடாது காட்டப்
பின் அதனால் அவ் உண்மை
பெற்றவன் ஞான யோகி.

உரை:

மக்களுக்குக் கலை முதலான தத்துவங்களின் தொடர்பு அகன்றதும், தனக்கு அயலான் அல்லாதவனாய் என்றுமே மலம் இல்லாதவனாய் சுட்டி உணர்த்த முடியாதவனுமான சிவனை, ஆன்ம அறிவாற்றல் அகத்தியன் உள்ளே ஒளியாய்க் காட்டும் அதைக்காணும் பக்குவம் பெற்றவர்களுக்கு ஞானாசிரியர் தாம் முன்பு கண்டு அனுபவித்த அம்மெய்ப் பொருளைக் கண்காண உணர்த்தாமல், உபதேசத்தின் மூலம் அறிவிப்பர். அவ்வாறு ஆசிரியர் அறிவித்த மெய்ப்பொருளை யார் தம் அனுபவத்தால் கண்டு அனுபவிக்கிறாரோ அவர் தாம் ஞானயோகி.

விளக்கம்:

அனாதிய - தொடக்கம் இல்லாதுள்ள, என்றும் உள்ள; **அன்னியன்** - பிறன்; **அலன்** - அல்லாதவன்; **அமலன்** - கடவுள்; **கன்மம்** - வினைப்பயன்; **ஞானயோகி** - மெய்ப்பொருளைக் கூடும் நிலையினன். (4)

சிவஞான யோகி

751. உலகுளார் பெறாது துஞ்சு மொரு
பொருள் விழித்த யோகி
பல குளார் விழித்த
பண்டத்துறங்குவ னுருவமாக

Koviloor Digital Library

வலகெலா மொன்றிவேறற் றொளிரு
மொப்பிலித னொண்டா
ளலர்தலைக் கணிந்த யோகிக்
கவனலான் ஞேயம் யாதே.

உலகு உள்ளார் பெறாது துஞ்சும்
ஒரு பொருள் விழித்த யோகி
பலகு உள்ளார் விழித்த பண்டத்து
உறங்குவன் உருவம் ஆக
அலகு எல்லாம் ஒன்றி வேறு அற்று
ஒளிரும் ஒப்பு இலிதன் ஒண்தாள்
அலர் தலைக்கு அணிந்த யோகிக்கு
அவன் அல்லால் ஞேயம் யாது ஏ.

உரை:

உலகில் உள்ளவர்கள் மல மறைப்பினால், சிவதரிசனம் பெறாமல் உறங்கும் போது, அத்தரிசனத்தை தனது உள்விழியால் விழித்துக் கண்டிருக்கும் சிவயோகி, உலகினர் தம் ஊனக் கண்ணால் கண்டு கொண்டிருக்கும் உலக விஷயத்தை நோக்குதலின்றித் துயின்றவன்போல் இருப்பன், ஆதலால் அவ்வுலகமும் தன் வடிவேயாம்படி கலந்து அனைத்துந் தானேயாய்ப் பேதம் அறநின்று விளங்கும் ஒப்பில்லாத சிவபெருமானுடைய ஒள்ளிய தாமரையைப் புனைந்த அந்த ஞானயோகிக்கு, அப்பரம சிவன் அல்லால் அறியப்படும் பொருள் வேறு யாது?

விளக்கம்:

துஞ்சும் - உறங்கும்; அலகு - அளவு; ஒளிரும் - பிரகாசிக்கும்; ஒப்பிலி - சிவபெருமான்; ஒண்தாள் - ஒளிபொருந்திய திருவடி; அலர் - மலர்; ஞேயம் - அறியப்படும் பொருள். (5)

சிவாகமங்களின் பெருமை

752. ஒப்பிலியநாதி முத்தனோதிய காமிகாதி
விப்பரஞானயோகம் விரியவேயியம்பு மென்றுந்
தப்பிலாக் கருமயோகந்தருமமுன் கருமஞ்சாரும்
அப்பல பேதமென்ற வனைத்தையு மறையுமன்றே.

ஒப்பிலி அநாதி முத்தன் ஓதிய காமிக ஆதி
இப்பர ஞானயோகம் விரியவே இயம்பும் என்றும்
தப்பு இல்லாக் கருமயோகம் தருமம்முன் கருமம் சாரும்
அப்பல பேதம் என்ற அனைத்தையும் அறையும் அன்றே.

Koviloor Digital Library

உரை:

தனக்கு ஒருவரும் இணையில்லாத, இயல்பாகவே பாசங்கள் இல்லாத, சிவபெருமான் அருளிய காமிகம் முதல் வாதுளம் ஈறான இருபத்தெட்டு உயரியஆகமங்களும், இந்த மேலான ஞான யோகத்தை விரிவாகக் கூறும். மேலும் எக்காலமும் தவறுதல் இல்லாத கருமயோகம் எனவும், புண்ணிய பாவங்கள் எனவும் முன்காட்டப்பட்ட வினையின் பலன்கள் அனைத்தையும் விரிவாக உரைக்கும்.

விளக்கம்:

ஒப்பிலி - தனக்கு இணையில்லாதவன்; அநாதிமுத்தன் - சிவபெருமான்; காமிகாதி - காமிக ஆகமம் முதல் வாதுள ஆகமம் வரை உள்ள இருபத்துஎட்டு ஆகமங்கள்; பர - மேலான; இயம்பும் - உரைக்கும்; பலபேதம் - வினைப்பயன்; அறையும் - கூறும்; அன்றே - அசை. (6)

அநாதி மலமுத்தன்

753. காட்சியிற் பொருளுமந்தக் காட்சியான்
முன்னங் கண்டே
யாட்சி யாமனுமானத்தி
னருத்தமு மணுகொணாத
சேட்சியிற் பொருளு
மையந்திரிபுறச் செப்பிச்சீவ
னாட்சியவறிவு மாக்குமவன்
மலத்தநா திமுத்தன்.

காட்சியில் பொருளும் அந்தக்
காட்சியால் முன்னம் கண்டே
ஆட்சியாம் அனுமானத்தின் அருத்தமும்
அணுக ஒண்ணாத
சேட்சியில் பொருளும் ஐயம் திரிபு
அறச் செப்பிச் சீவன்
ஆட்சி அவ்வறிவும் ஆக்கும் அவன்
மலத்து அநாதி முத்தன்.

உரை:

காட்சியளவையாற் காணும் பொருளையும் அவ்வளவையால் முன் தான் கண்டறிந்து பின்னர் அதுமான அளவையால் ஆய்ந்து நிச்சயிக்கும் பொருளையும், இந்த இரண்டினாலும் அளத்தற்கு அருமையாகி உரை அளவையால் அளக்கும் ஆகமப் பொருளையும் ஐயவிபரீத மேற்படா விதத்திற் கூறி அந்த அளவைகளால் உயிர்களிடம் அனுபவ உண்மையாகிய அறிவை உண்டாக்குகின்றவனே, இயல்பாகவே மலப்பிணிப்பிலிருந்து விடுப்பட்டவன் ஆவான்.

Koviloor Digital Library

விளக்கம்:

காட்சி - காண்பது; அனுமானம் - ஏது திருஷ்டாந்தங்களால் யூகித்து உணர்தல்; அருத்தம் - பொருள்; அணுக - நெருங்க; ஒண்ணாத - முடியாத; சேட்சி - தூரம்; திரிபு - வேறுபாடு; செப்பி - கூறி; சீவன் - உயிர்; மலத்து அநாதி முத்தன் - அநாதிமல முத்தன், இயல்பாகவே மலப்பிணிப்பு அற்ற இறைவன். (7)

பிற மதத்தினர் சிவ சமயத்தைச் சாரும் வகை

754. இருவினை யுணர்ந்த புத்தரவர் முதலிகலும் வாதத்
தரிசன மனைத்துஞ் சேர்ந்தார் சிவசமயத்துச் சேர்வார்
பொருவிலி புகன்ற வாக்கிற் கருமநன் னெறியும் புக்கே
விரவுவர் ஞான யோகம் விடுவர் மெய்யடைவர்மெய்யே.

இருவினை உணர்ந்த புத்தர் அவர் முதல் இகலும்வாதத்
தரிசனம் அனைத்தும் சேர்ந்தார் சிவசமயத்துச் சேர்வார்
பொரு இலிபுகன்ற வாக்கில் கரும நல் நெறியும்புக்கே
விரவுவர் ஞான யோகம் விடுவர் மெய் அடைவர்மெய் ஏ.

உரை:

நல்வினை தீவினைகள் உண்டு என்று அறிந்த பௌத்தர் முதல் ஒருவருக்கொருவர் கொள்கையில் மாறுப்பட்ட சமணம் முதலான மதங்களைச் சேர்ந்த முறைப்படி ஒழுகுமவர் தாம் செய்யும் நல்வினைப் பயனால் சிவசமயத்தைச் சாருவார்கள். அவ்வாறு சைவ சமயத்தைச் சார்ந்த பின்னர், ஒப்பில்லாத இறைவன் கூறிய ஆகமங்கள் கூறும் சரியை, கிரியை, யோக நெறிகளைப் பயின்று தேறிய பின் ஞானயோகத்தை அடைவர். அவ்வாறு அடைந்தவர்கள், உடற்பற்றை நீக்கி, உண்மை நிலையையும் பெறுவர்.

விளக்கம்:

இருவினை - நல்வினை, தீ வினை ''பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே'' என்பது பட்டினத்து அடிகளின் அருளுரை. இகலும் - மாறுபடும்; தரிசனம் - மதக்கொள்கை; பொருஇலி - ஒப்பு இல்லாத சிவன்; புகன்ற வாக்கு - சிவாகமம்; கரும நல்நெறி - சரியை, கிரியை முதலியவை; புக்கு - புகுந்து, பயின்று; விடுவர்மெய் - மெய் விடுவர், உடற்பற்றை நீக்குவர்; அடைவர் மெய் - மெய்அடைவர், உண்மை நிலையைப் பெறுவர்.

குறிப்பு:

நல்வினை தீவினையே இருவினை புண்ணிய பாவம் அவற்றின் பேறுகள் பற்றித் தொடரும். இருவினைப் புண்ணிய பாவமுமே எனல் காண்க. இருவினைப் புண்ணிய பாவம் - இருவினைகளின் விளைவான புண்ணிய பாவம் என்பது பொருள். (8)

Koviloor Digital Library

சைவ சமயச் சிறப்பு

755. எடுத்ததோராக்கை தன்னிலிருண்மலசத்திதன்னைத்
தடுத்தருள் சைவநூலின் சாதன மதனைத் தள்ளி
விடுத்து வீறற்ற நூலின் சாதனம் விரும்புவார்முன்
னடுத்தவாரமிர்தம் விட்டுப் புற்கையாதரிப் பாரன்றே.

எடுத்ததோர் ஆக்கை தன்னில் இருள் மலசத்தி தன்னைத்
தடுத்து அருள் சைவநூலின் சாதனம் அதனைத் தள்ளி
விடுத்து வீறு அற்ற நூலின் சாதனம் விரும்புவார்முன்
அடுத்தவார் அமிர்தம் விட்டுப் புற்கை ஆதரிப்பார் அன்றே.

உரை:

இப்பிறவியிற் பெற்றுள்ள உடம்பில்தானே இருண்ட ஆணவமல ஆற்றலை நீக்கிப் பேரின்பம் வழங்கவல்ல திருமுறைகளும் மெய்கண்ட சாத்திரங்களும் சிவாகமங்களும் உணர்த்துகின்ற நெறிகளை ஆராய்ந்து உணர்ந்து தெளிவு பெறாமல், மலபந்தம் உடைய மறுசமயிகள் நிறுவிய மேன்மையில்லாத பிற மதங்கள் கூறும் வழியை விரும்புகின்றவர், தம் எதிரே உள்ள நிறைந்த அமிர்தத்தை விட்டுக் கூழை விரும்புகிறவரை ஒப்பர்.

விளக்கம்:

ஆக்கை - உடம்பு; இருள் மலசத்தி - ஆணவமல ஆற்றல்; தடுத்து - நீக்கி; சாதனம் - நெறி; விடுத்து - நீங்கி; வீறு - பெருமை; அற்ற - இல்லாத; அடுத்த - அருகில் உள்ள; வார் - நிறைந்த; புற்கை - கூழ்; அமிர்தம் - சாவாமருந்து; அன்றே - அசைநிலை; அமிர்தம் என்பதைத் திருவள்ளுவர் 'சாவாமருந்து' என்பர்.

''விருந்து புறத்ததாத் தான் உண்டல் சாவா
மருந்து என்னும் வேண்டற் பாற்று அன்று''

என்பது குறள். (9)

பிறமத நூல்களின் தன்மை

756. ஒப்பிலி அநாதிமுத்தனுரைக்
கயனூலொவ் வொன்று
தப்பறுஞ் சிருட்டியாதித் தலைமை
யொவ் வொருவர் தம்மை
யப்பரமென்று மற்றைய னைவரும்
பரமே யென்னுந்
தப்பறத் துணியும் புத்தி
தன்னையும் பரமே யென்னும்.

Koviloor Digital Library

ஒப்பு இலி அநாதிமுத்தன் உரைக்கு
அயல் நூல் ஒவ்வொன்று
தப்பு அறும் சிருட்டி ஆதித்
தலைமை ஒவ்வொருவர் தம்மை
அப்பரம் என்னும் மற்றை
அனைவரும் பரமே என்னும்
தப்பு அறத்துணியும் புத்தி
தன்னையும் பரமே என்னும்.

உரை:

தனக்கு யாரும் ஒப்பு இல்லாத அநாதிமல முத்தனாகிய சிவன் உரைத்த மேலான சிவாகமங்களுக்கு மாறுபட்ட மத நூல்களில் ஒவ்வொரு நூல், குற்றமில்லாத படைப்பு முதலான தொழிலால் தலைமை பூண்ட பிரம விஷ்ணுக்களில் ஒவ்வொருவரைக் கடவுள் என்று சொல்லும். சங்கரமதச் சுமார்த்தப் பிராமணர்களின் மாயாவாத மற்றும் ஏகான்மவாதமத நூல் மனிதரையும் பிற உயிர்களையும், நிலம், கடல் முதலான இயற்கைப் பொருள்களையும் கூடப் பிரமம் என்று சொல்லும். புத்தமத நூலான *திரிபிடகம்*, புத்தி தத்துவத்தையே பரம் என்று சொல்லும்.

விளக்கம்:

நாமே பிரமம் (கடவுள்) என்பது சங்கரமதக் கொள்கை. நாராயணனே கடவுள் என்பது இராமாநுச மதக் கொள்கை. கண்ணபிரானே கடவுள் என்பது மாத்துவ மதக் கொள்கை. கவுதம புத்தர் ஒழுக்கத்தை வலியுறுத்தினார். கடவுள் பற்றி ஏதும் உரைக்கவில்லை. சுவாமி விவேகானந்தர், புத்தரை மதிக்கிற அளவுக்குச் சங்கரரை மதிக்கவில்லை. (சுவாமி விவேகானந்தரின் *ஞான தீபம்* என்ற பத்துத் தொகுதிகளையும் பார்க்கவும்.) சங்கர மதத்திற்கு மகாயான புத்த மதப் பிரிவே அடிப்படை (மேற்படி நூல்களைப் பார்க்கவும்) பரம் - கடவுள். (10)

உயிர்கள் முழு முதற் கடவுள் அல்ல

757. அசேதன வாக்கை
யாவாரவர் பரப்பிரமமல்ல
வசேதனத் தநாதிமுத்தன்
சிவன் பரப்பிரமமாகு
மசேதன வாக்கையின்றே
லறிவு மஞ்சனத்தார்க்கில்லை
யசேதனத் தநாதி முத்த
னதிபரை யாக்குவானும்.

Koviloor Digital Library

அசேதன ஆக்கை ஆவார்
அவர் பரப்பிரமம் அல்ல
அசேதனத்து அநாதிமுத்தன் சிவன்பரப்
பிரமம் ஆகும்
அசேதன ஆக்கை இன்றேல்
அறிவும் அஞ்சனத்தார்க்கு இல்லை
அசேதனத்து அநாதி முத்தன்
அதிபரை ஆக்குவானும்.

உரை:

அறிவற்ற தத்துவங்களாலான உடலால் கட்டப்படுபவர்களும், உடற் புணர்ச்சி இல்லாத போது மலமறைப்பால் அறியும் தொழிலும் தடைப்படப் பெறுபவர்களும் ஆகையால், ஆன்மாக்கள் முழுமுதற் கடவுளர் அல்லர். மும்மலங்களிலிருந்து இயல்பாகவே நீங்கிய சிவபெருமானே முழுமுதற்கடவுள் ஆவான். படைப்பு முதலான தொழில்களுக்கு உரிய மலசம்பந்திகளான பிரம விஷ்ணுக்களை உண்டாக்குபவனும், அவர்கள் தங்கள் தொழில்களைச் செய்ய ஆற்றல் அளிப்பவனும், அவர்களுக்கும் உடம்பு, உறுப்பு, இடம், நுகர்பொருள் ஆகியவற்றைத் தருபவனும் சிவபிரானே ஆவன்.

விளக்கம்:

அசேதனம் - அறிவில்லாத பொருள், சடம்; **ஆக்கை** - உடம்பு; **பரப்பிரமம்** - முழுமுதற்கடவுள்; **அநாதிமுத்தன்** - இயல்பாகவே மலங்களிலிருந்து நீங்கிய சிவன்; **அஞ்சனத்தார்** - இருண்ட ஆணவ மலமறைப்பு உடையவர்கள்; **அதிபர்** - இது பிரம விஷ்ணுக்களைக் குறிக்கிறது. (11)

சிவபெருமானே காரணன்

758. உருக்குதனவ நீதாதி
யுலர்த்துத லீரமண்ணும்
விரிக்குதல் கமலமாதி வெறிகமழ்
குவளை மற்றுஞ்
சுருக்குதலென்ற விந்தந்
தொழில்வித மில்லானேனு
மருக்கனே யவற்றிற் கேது
சடச் செயற்க நாதிமுத்தன்.

உருக்குதல் நவநீத ஆதி
உலர்த்துதல் ஈரமண்ணும்
விரிக்குதல் கமலம் ஆதி
வெறிகமழ் குவளை மற்றும்

Koviloor Digital Library

சுருக்குதல் என்ற இந்தத்
தொழில்விதம் இல்லானேனும்
அருக்கனே அவற்றிற்கு ஏது சடச்
செயற்கு அநாதி முத்தன்.

உரை:

வெண்ணெய் முதலிய பொருள்களை உருக்குதல்; ஈரம் உள்ள தரையை உலர்த்துதல்; தாமரைப் பூ முதலியவற்றை மலரச் செய்தல்; மணம் வீசுகின்ற நெய்தல் முதலான மலர்களைக் குவியச் செய்தல் என்ற காரியங்களில் தான் வேறு வேறு தொழில் செய்தல் இல்லாதவன் ஆயினும், இவையெல்லாம் நிகழுவதற்குக் கதிரவனே காரணன். இவ்வாறே, உடல் முதலியவற்றை உண்டாக்கி, அவற்றின் இயக்கத்துக்கு அநாதிமல முத்தனான சிவனே காரணன். சூரியன் தன் நிலையிலிருக்க அவன் காரணமாக உருக்குதல் உலர்த்துதல் முதலான தொழில்கள் நிகழ்கின்றன. அது போல் சிவன் தன்னிலையிலிருக்க அவன் காரணமாகச் சடஇயக்கம் பலவும் நடைபெறுகின்றன என்றவாறு.

விளக்கம்:

உருக்குதல் - நெகிழவைத்தல்; நீதம் - நவநீதம், வெண்ணெய்; விரிக்குதல் - மலர்த்துதல்; கமலம் - தாமரை; சுருக்குதல் - குவியச் செய்தல்; குவளை - நெய்தல்; தாமரை முதலியன பகற்பூக்கள், அல்லி, குவளை ஆகியன இரவுப் பூக்கள். அல் என்பது இரவு. அல்லில் மலரும் பூ அல்லிப்பூ. அருக்கன் - கதிரவன்; ஏது - காரணம்; சடச் செயற்கு - அறிவில்லாத பொருள்களின் இயக்கத்துக்கு. (12)

பாசங்கள் நீங்கும் முறை

759. அநாதி யேயமலன்
சச்சிதானந்தன் பதியான்மாக்கள்
அநாதியே பெத்தர் பந்தமக
விருளநாதி மூன்றும்
அநாதியே பசுபாசத்திற்
பக்குவத்த துலனான
அநாதியே யமலனாலே
யவர்தமையவைகணீங்கும்.

அநாதியே அமலன்
சச்சிதானந்தன்பதி ஆன்மாக்கள்
அநாதியே பெத்தர் பந்தம்
அகவிருள் அநாதி மூன்றும்

Koviloor Digital Library

அநாதியே பசுபாசத்தில் பக்குவத்து
அதுலன் ஆன
அநாதியே அமலனாலே அவர்தம்மை
அவைகள் நீங்கும்.

உரை:

இறைவன், இயல்பாகவே மலத்திலிருந்து நீங்கிய சச்சிதானந்த வடிவத்தை உடையவன். மக்கள், இயல்பாகவே மலம் முதலானவற்றால் தடுக்கப்பட்ட அறிவு செயல்களை உடையவர்கள். இருளாகிய ஆணவம், மாயை, கன்மம் என்ற மூன்றும் இயல்பாகவே கட்டுகளாக உள்ளன. ஆகையால், ஆணவம், மாயை, கன்மங்கள் பரிபாக முதிர்ச்சி அடைந்ததும், என்றுமே மலங்கள் இல்லாத ஒப்பற்ற சிவனாய், இயல்பாகவே கட்டுற்ற உயிர்களை, கட்டுகள் ஆகிய பாசங்கள் மூன்றும் விட்டு விலகும்.

விளக்கம்:

அநாதியே - தொடக்கம் இன்றியே; ஆன்மா - உயிர்; அமலன் - மலங்களிலிருந்து நீங்கியவன்; பதி - இறைவன்; சச்சிதானந்தன் - உண்மை அறிவு இன்ப வடிவினன்; பெத்தர் - கட்டுற்ற உயிர்கள்; பந்தம் - கட்டு; அகவிருள் - ஆணவம்; பசு - உயிர்; பாசம் - தளை; பக்குவத்து - பரிபாக முதிர்ச்சி பெற்று; அதுலன் ஆன - ஒப்பில்லாதன் ஆன; அவை - பாசங்கள். (13)

சிவனே அழுக்கை அகற்ற வல்லவன்

760. செம்பினிற் களிம்பு தானே
செம்பினைத் தீராதென்றுஞ்
செம்பினுக்கதனைத் தீர்க்குஞ் சித்தியு
மில்லைத் தேரிற்
செம்பினிற் களிம்பு தீர்க்குஞ்
சித்தனு முண்டு தேடிற்
செம்பினிற் களிம்பு தீர்க்கும்
மருந்து மற்றவனாற் சேரும்.

செம்பினில் களிம்பு தானே
செம்பினைத் தீராது என்றும்
செம்பினுக்கு அதனைத் தீர்க்கும்
சித்தியும் இல்லைத் தேரில்
செம்பினில் களிம்பு தீர்க்கும்
சித்தனும் உண்டு தேடில்
செம்பினில் களிம்பு தீர்க்கும் மருந்து
மற்று அவனால் சேரும்.

Koviloor Digital Library

உரை:

செம்பில் இயற்கையாகப் பொருந்தியிருக்கின்ற களிம்பு, தானே செம்பினை விட்டு அகலாது. அந்தச் செம்பினுக்கும் களிம்பைத் தானே போக்கிக் கொள்ளும் திறன் இல்லை. களிம்பை அகற்ற வேண்டும் என்று கருதி ஆராய்ந்தால், அதனை அகற்றும் ஆற்றல் உடையவனும் உள்ளான். அவனால் அந்த அழுக்கைப் போக்க வல்ல மருந்தும் வந்து அடையும்.

விளக்கம்:

''எங்கள் நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான், ஆணவம் முதலிய பாசத்தை நீக்கியருளினான். தன் அருள் ஆற்றலைப் பதிய வைத்துப் பாசத்தைப் போக்கியருளினான். மேலும், பாச இருள் வந்தடையா வண்ணம் சிவசூரியனை உதிப்பித்து, சிவபெருமான் பளிங்கு போன்ற உயிரில் பவளம் போன்ற செந்நிறமான சோதியைப் பதிப்பித்து அருளினான்'' என்று திருமூலர் கூறுகிறார்.

''களிம்பு அறுத்தான் எங்கள் கண் நுதல் நந்தி
களிம்பு அறுத்தான் அருள் கண் விழிப்பித்துக்
களிம்பு அணுகாத கதிர் ஒளி காட்டிப்
பளிங்கில் பவளம் பதித்தான் பதியே. '' *(திருமந்திரம்-114)*

களிம்பு - மலஅழுக்கு, மாசு; சித்தி - திறன், ஆற்றல்; தேரில் - ஆராயின்; சித்தன் - சிவன்; சித்திகள் உள்ளவன்.

குறிப்பு:

நந்தி சிவனைக் குறிக்கும் பெயர், நந்தி தேவர் என்பவர் அவர் அருளால் அவர் பெயரே தம் பெயராகப் பெற்றவர். சிவன் சித்திகள் பெற்றவரென்றாற் கொடுத்தவ ராரென்ற கேள்வி எழும். ஆதலால், பெற்றவரெனாது உள்ளவரெனல் வேண்டும். (14)

ஈசனே உயிர்க்கு உடலை அளிப்பவன்

761. விளக்கினுக் கில்லைத் தன்னையாக்கிடும்
வினைதா னென்றும்
விளக்கினை யாக்க வல்ல
வினைவிழி தனக்குமில்லை
விளக்கினை யாக்கிப் போக்கி
விழிக்கிரு எருத்தபேதம்
விளக்குவான் போலுமீசன் விழியுயிர்
விளக் கொப்பாக்கை.

Koviloor Digital Library

விளக்கினுக்கு இல்லைத் தன்னை
ஆக்கிடும் வினைதான் என்றும்
விளக்கினை ஆக்க வல்ல வினை
விழி தனக்கும் இல்லை
விளக்கினை ஆக்கிப் போக்கி விழிக்கு
இருள் அருத்த பேதம்
விளக்குவான் போலும் ஈசன் விழி
உயிர் விளக்கு ஒப்பு ஆக்கை.

உரை:

விளக்கிற்குத் தன்னைத் தானே உண்டாக்கிக் கொள்ளும் செயல் என்றேனும் அதனிடம் இருந்ததில்லை. விளக்கை நாம் காண உதவுகின்ற கண்ணுக்குத் தானே காட்சியை உண்டாக்கிக் கொள்ளும் செயல் அதனிடமில்லை. ஆதலால், விளக்கு என்னும் சுடரை உண்டாக்கிக் கண்களின் ஒளியைத் தடுத்த இருளை நீக்கிப் பொருள்களின் வேறுபாடுகளை அறிவிக்கிறவன் சிவபிரான்; உயிர்களுக்குக் கண்கள் ஒப்பு; கலை முதலான தத்துவங்களின் வடிவமாகிய உடம்புக்கு, விளக்கு ஒப்பாகும்.

விளக்கம்:

வினை - செயல்; என்றும் - என்றேனும்; அருத்த பேதம் - பொருள்களின் வேறுபாடு; ஈசன் - இறைவன்; (15)

இருவகை உடம்புகள்

762. ஆக்கையுந் தூலசூக்கமென விரண்ட வற்றுட்டூல
வாக்கைதான் பஞ்ச பூத பரிணமத் தாகுமற்றை
யாக்கை யாறைந்திற் காலமாதியி னாகுமந்த
வாக்கையு மாயைதன்னி னமலனின் னருளாலாமே.

ஆக்கையும் தூலம் சூக்கம் என இரண்டு அவற்றுள்தூல
ஆக்கைதான் பஞ்சபூத பரிணமத்து ஆகும் மற்றை
ஆக்கை ஆறு ஐந்தில் காலம் ஆதியினால் ஆகும் அந்த
ஆக்கையும் மாயை தன்னில் அமலனின் அருளால்ஆம் ஏ.

உரை:

உடல், பருவுடல், நுண்உடல் என இருவகைப்படும். அவற்றுள் பருவுடல், மண், நீர், தீ, காற்று, விசும்பு என்ற ஐந்து இயற்கைப் பொருள்களின் பரிணாமத்தால் ஏற்படும். நுண்ணுடல், கால தத்துவம் முதல் நிலம் முடியவுள்ள முப்பது

Koviloor Digital Library

தத்துவங்களால் உண்டாகும். அந்த நுண்ணுடலுக்குக் காரணமாகிய முப்பது தத்துவங்களும், சிவனுடைய திருவருளின் தூண்டுதலால் மாயையிலிருந்து உண்டாகும்.

விளக்கம்:

ஆக்கை – உடல்; தூலம் – கண்ணால் காணக் கூடிய பருவுடம்பு; சூக்கம் – சூக்குமம், கண்ணால் காண இயலாத நுண்ணிய உடம்பு. பஞ்ச பூதம் – மண், நீர், தீ, காற்று, விண் என்ற ஐந்து பொருள்கள்; பரிணமம் – பரிணாமம், உருத்திரிதல் – ஒன்று மற்றொன்றாக மாறுதல்; ஆறு ஐந்து – முப்பது; அமலன் – மலங்கள் இல்லாத சிவன்.

முப்பது தத்துவங்கள்

பூதம் – 5; தன்மாத்திரை – 5; ஞானேந்திரியம் – 5; கன்மேந்திரியம் – 5; அந்தக்கரணம் – 3; பிரகிருதி – 1; கலாதி – 5; மாயை –1;

ஆக முப்பது தத்துவங்கள். (16)

உயிர்கள் இன்பம் துய்க்கும் முறை

763. பாங்குளான் கொடுத்த
கோலைப்பற்றியே குருடனூன்றி
யீங்கெமக்கியங்கு மார்க்கமிஃ தென
வெண்ணிச் செல்வ
னாங்கரனளித்த வித்தை
யாதியினற் பஞானந்
தேங்கிய போகந் தேற்றத்
திளைத்துடலியக்குஞ் சீவன்.

பாங்கு உள்ளான் கொடுத்த கோலைப்
பற்றியே குருடன் ஊன்றி
ஈங்கு எமக்கு இயங்கும் மார்க்கம்
இஃது என எண்ணிச் செல்வன்
ஆங்கு அரன் அளித்த
வித்தையாதியில் அற்பஞானம்
தேங்கிய போகம் தேற்றத் திளைத்து
உடல் இயக்கும் சீவன்.

உரை:

கண் பார்வையில்லாதவன், பண்புள்ள ஒருவன் கொடுத்த ஊன்று கோலைப் பிடித்த படிதான் செல்லும் வழியை உணர்ந்து செல்லுவான். இவ்வாறே,

Koviloor Digital Library

மூல மலத்தால் தடைப்பட்ட அறிவு செயல்களையுடைய உயிர்கள், அரன் அருளிய வித்தை முதலான தத்துவங்களால் உண்டாகிய அறிவானது மாயா போகங்களை உண்டாக்கித்தர, அவற்றை நுகர்ந்து கொண்டு உடலை இயக்கும்.

விளக்கம்:

பாங்கு - பண்பு; ஈங்கு - இங்கு; **மார்க்கம்** - வழி; **இயங்கும்** - செல்லும்; **அரன்** - பாவங்களை அறுக்கும் இறைவன்; **அற்பஞானம்** - சிற்றறிவு; **போகம்** - இன்பம்; **திளைத்து** - நுகர்ந்து; **இயக்கும்** - செலுத்தும். **தேங்கிய போகம்** - மாயா போகம், மாயையிலிருந்துண்டாம் போகம். (17)

பிறமதக் கொள்கைகள்

764. ஆக்கையினைச் சிலரான்மாவென
வறைவர றிவிலர்மெய்
வாக்குமன மெனு மிவையே யென
மதிப்பர் மதித்தவற்றின்
நீக்க மிலாக் குணமென்பர்
நிரந்தவற்றின் மேனின்ற
நோக்கினையு நோலினையு
முடைத்தான்மா நுவலுங்கால்.

ஆக்கையினைச் சிலர் ஆன்மா என
அறைவர் அறிவிலர் மெய்
வாக்குமனம் என்னும் இவையே என
மதிப்பர் மதித்து அவற்றின்
நீக்கம் இல்லாக் குணம் என்பர்
நிரந்த அவற்றின் மேல் நின்ற
நோக்கினையும் நோலினையும் உடைத்து
ஆன்மா நுவலுங்கால்.

உரை:

உண்மை அறிவு இல்லாமையால் கடவுள் இல்லை என்னும் கொள்கையுடைய உலகாயதன், உடம்பையே உயிர் என்று சொல்லுவான்; புத்த மதத்தினன், மனம், அறிவு, நினைவு, முனைப்பு என்ற அகக் கருவிகளையே உயிர் என்பான்; சமண மதத்தினன், எல்லா உயிர்களிலும் பரவியிருக்கின்ற முக்குணங்களையே உயிர் என்பான்; சொல்லுமிடத்து, இங்குக் கூறப்பட்ட அனைத்துக்கும் மேலான ஞானம், கிரியை எனும் அறிவு செயல்களை உடையதே உயிர் ஆம்.

Koviloor Digital Library

விளக்கம்:

ஆக்கை - உடம்பு; ஆன்மா - உயிர்; அறைவர் - சொல்லுவர்; வாக்கு - சொல்; மதிப்பர் - எண்ணுவர்; நோக்கு - ஞானம் அறிவு; உடைத்து - பொருந்தியிருப்பது. நோல் - கிரியை;

குறிப்பு:

நோலுதல் வேறு. அதற்கு வினையடி 'நோல்', 'நோ' அல்ல. (18)

உடல்களுக்கு உயிரே இறைவன்

765. ஆக்கை சடந்தனித்தியங்
காதறிவனையு மின்றியகத்
தாக்கை விளக்கெனவறியப்
படுங்கரண மான்மாவுக்
காக்கை விதம் பேதமென
வத்தியக்க மறிவிக்கு
மாக்கை விதத்த திபதியே
யமலனுயிர்க் கதிபதியே.

ஆக்கை சடம் தனித்து இயங்காது
அறிவனையும் இன்றி அகத்து
ஆக்கை விளக்கு என அறியப்
படும் காரணம் ஆன்மாவுக்கு
ஆக்கை வித்ம் பேதம்
என அத்தியக்கம் அறிவிக்கும்
ஆக்கை விதத்து அதிபதியே
அமலன் உயிர்க்கு அதிபதி ஏ.

உரை:

உடம்பு அறிவியக்கமற்ற சடப் பொருள். அறிவுடைய உயிர் இல்லாமல் அது இயங்காது. கரணங்கள், நுண் உடலாகிய கலை முதலிய தத்துவங்கள் பருவுடலுக்கு விளக்கைப் போல அறிவை ஒளிரவைக்கும். உடல்கள் உயிருக்கு வேறாக இருக்கும். அதைப் பிரத்தியட்சம் அறிவிக்கும். ஆதலால், சொல்லப்பட்ட உடல் வேறுபாடுகளுக்கு எல்லாம் உயிரே இறைவன். அந்த உயிர் ஈசுவரனால் இயக்கப்படுவதால், உயிருக்குச் சிவனே இறைவன்.

விளக்கம்:

சடம் - அறிவில்லாத பொருள்; அறிவன் - அறிவுடைய ஆன்மா; கரணம்

Koviloor Digital Library

- மனம், அறிவு, நினைவு, முனைப்பு என்ற அகக் கருவிகள்; **பேதம்** - வேறுபாடு; **அதிபதி** - தலைவன்; **அமலன்** - சிவன்; **தியக்கம்** - பிரத்தியக்கம்; **பிரத்தியட்சம்** - காட்சியளவை; **அத்தியக்கம்** - அந்தப் பிரத்தியக்கம், அந்த என்றது ஏனென்றால் உடம்பே உயிர் என்னும் உலகாயதனுக்கு உடன்பாடான அளவை பிரத்தியக்க அளவை தான் என்ற காரணத்தால். (19)

மெய்யுணர்வு இல்லாதவர்கள்

766. அறிவென்பர் சிலர் சடமே
மனமொன்றி னறிவென்ப
றறியு நிருமலனறிவை யளிக்கி
லென வறைந்திடுவ
றறிவில்லாரவர் மூலமலத்
தான்மா சாதித்த
வறிவுடைத்தே மாயையெனுந்
துணையினையு மஃதுடைத்தே.

அறிவு என்பர் சிலர் சடமே
மனம் ஒன்றின் அறிவு என்பர்
அறியும் நிருமலன் அறிவை
அளிக்கில் என அறைந்திடுவர்
அறிவில்லார் அவர்
மூலமலத்து ஆன்மாசாதித்த
அறிவு உடைத்தே மாயை எனும்
துணையினையும் அஃது உடைத்து ஏ.

உரை:

மாயாவாதி, உயிரை விளங்கிய அறிவு என்று கூறுவார். வைகேடிகர், மனம் முதலிய தத்துவங்கள் பொருந்துகிற போது அறிவு உண்டாகும் என்பர். பரிணாமவாதி, உயிருக்கு இயல்பாக அறிவு இல்லை, இறைவன் உணர்த்தினால் உணரும் என்பார். இவர்கள் எல்லாரும் மெய் உணர்வு இல்லாதவர்கள். உயிர், இயல்பாகவே மூலமலத்தினால் தடுக்கப்பட்ட உணர்வை உடையதாகி, அதனை நீக்குகிற மாயை என்னும் துணைக் காரணத்தையும் உடையது.

விளக்கம்:

மாயாவாதம் - இது கேரள நம்பூதிரிப் பிராமணரான சங்கரரால் தோற்றுவிக்கப்பட்ட மதம்; **வைசேடிகம்** - இது கணாதர் என்ற வட இந்தியரால் தோற்றுவிக்கப்பட்ட மதம்; **பரிணாமவாதம்** - காரணம் தன்னோடு ஒத்த காரியமாக

Koviloor Digital Library

உருமாறும் என்ற கொள்கை. (இலங்கைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு.கி. லட்சுமணன் அவர்கள் எழுதியுள்ள *'இந்தியத் தத்துவஞானம்'* என்ற நூலில் இந்தியத் தத்துவங்கள் அனைத்தையும் அறியலாம்.) **நிருமலன்** - இறைவன்; **மூலமலம்** - ஆணவமலம். (20)

உண்மையைக் காணாதவர்கள்

767. ஆக்கை தனிலோரிட
மென்றறைவரலவணு வென்பர்
நீக்க மறவடன் முழுது
நிற்குமென நிகழ்த்திடுவர்
போக்குவர வில்லாத
பூரணமே யெனப்புகல்வர்
மேக்கிலர் நுண்டனுமூல
வியாத்திக்கும் வியாபகமே.

ஆக்கை தன்னில் ஓர் இடம் என்று
அறைவர் அல்ல அணு என்பர்
நீக்கம் அற உடல் முழுதும்
நிற்கும் என நிகழ்த்திடுவர்
போக்கு வரவு இல்லாத
பூரணமே எனப் புகல்வர்
மேக்கு இலர் நுண்தனுமூல
வியாத்திக்கும் வியாபகம் ஏ.

உரை:

மேலான அறிவில்லாத கருமயோகியர், உயிர், உடலில் ஓர் இடத்தில் இருக்கும் என்பர்; நையாயிகரும் பாஞ்சராத்திரியும் உயிர் மிகச்சிறிய அணுவடிவில் இருக்கும் என்பார்கள்; சமணர்கள், உயிர், உடல் முழுவதும் பரவியிருக்கும் என்பர்; மாயாவாதிகள் உயிர், போக்குவரவு இல்லாமல் முழுமையாக நிற்கும் என்பர். இவர்கள் அனைவரும் உண்மையைக் காணாதவர்கள்; ஆனால் சைவசித்தாந்த நோக்கில் உயிர், நுண்ணிய தத்துவங்களாலான நுண் உடலுக்குக் காரணமாகி, பரவியிருக்கும் அசுத்த மாயைக்கும் சுத்த மாயைக்கும் அப்பாலும் பரவியிருக்கும் முத்தி நிலையில்.

விளக்கம்:

கருமயோகி - உடலை நீண்டகாலம் நிலைத்திருக்கச் செய்கிறவர். **நையாயிகர்** - கௌதமர் இயற்றிய நியாயநூல் கொள்கையினர். **பாஞ்சராத்திரி** -

Koviloor Digital Library

வைணவ சமயத்தில் பாஞ்சராத்திரி ஆகமத்தை அநுசரிப்பவர். அணு - நுண்ணியது, உயிர்; பூரணம் - முழுமை; மேக்கிலர் - மேலான அறிவில்லாதார்; மேக்கு - மேலான தன்மை; வியாபகம் - எங்கும் இருப்பது. சமணர் - அருக (சமண) மதத்தினர். நுண்டனு - நுண்+தநு. சூக்கும தேகம். (21)

வியாபக முறை

768. அமலைக்கு வியாபகனே யரனவற்கு வியாப்பியமே
விமலை வியாபகி யுயிர்கட்குயிர வட்கு வியாப்பியமே
சமலைக்கு வியாபகியே சமலையுயிர் வியாப்பியமே
சமலைசக வியாபகியே சகஞ்சமலை வியாப்பியமே.

அமலைக்கு வியாபகனே அரன் அவளுக்கு வியாப்பியமே
விமலை வியாபகி உயிர்கட்கு உயிர்அவட்கு வியாப்பியமே
சமலைக்கு வியாபகியே சமலை உயிர் வியாப்பியமே
சமலைசகம் வியாபகியே சகம் சமலை வியாப்பியம் ஏ.

உரை:

சிவைக்குச் சிவன் வியாபகம்: சிவனுக்குச் சிவை வியாப்பியம். உயிர்களுக்குச் சிவை வியாபகம்; சிவைக்கு உயிர்கள் எங்கும் வியாப்பியம்; ஆன்மாக்கள் தமது மலத்தோடு கூடிய ஆன்ம சத்திக்கு வியாபகர்; ஆன்ம சத்திக்கு ஆன்மாக்கள் வியாப்பியம். உலகத்துக்கு ஆன்ம சத்தி வியாபகம்: ஆன்ம சத்திக்கு உலகம் வியாப்பியம்.

விளக்கம்:

வியாபகம் - எங்கும் நிறைந்திருப்பது; வியாப்பியம் - வியாபகத்துக்குள் அடங்கியிருப்பது; வியாபகி - எங்கும் பரவும் சிவசக்தி, அமலை; விமலை - இவை சிவையைக் குறிக்கும்; சமலை - ஆன்மசத்தி மலத்தோடு கூடிய ஆன்ம சத்தி; சகம் - உலகம்;

குறிப்பு:

வியாபகம் வியாப்பியம் வியாத்தி என்பன மரபுவழிப் பிரயோகங்கள். அவற்றுக்குச் சொல்லுருவம் மாற்றினால் பொருள் விளக்கம் தவறுபடும்.

''எப்பொரு ளைச்சொவி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதல் மரபே'' (22)

Koviloor Digital Library

ஒளிக்கும் இருளுக்கும் ஒரே இடம்

769. உயிரொளியு மிருண்மலமுமொன்று
தறுல்லிய வியாத்தி
யயர்வுற லாலறிவதனா
லத்தற்கு வியாபகமல்ல
வயர்வுறுத்து மகவிருளுமதற்கு
வியாப்பிய மல்ல
நயன வொளியிருளிவற்றின் கலப்
பொப்பே நாடுங்கால்.

உயிர் ஒளியும் இருள் மலமும்
ஒன்றுதல் துல்லிய வியாத்தி
அயர்வு உறலால் அறிவு அதனால்
அதற்கு வியாபகம் அல்ல
உயர்வு உறுத்தும் அக இருளும்
அதற்கு வியாப்பியம் அல்ல
நயன ஒளி இருள் இவற்றின்
கலப்பு ஒப்பே நாடுங்கால்.

உரை:

உயிரின் ஒளியும் அந்த ஒளியை மறைத்து இருளே வடிவமாகி உள்ள ஆணவ மலமும் ஒன்றுக்கு ஒன்று ஏற்றத் தாழ்வு இல்லாமல் பரவியிருக்கும். உயிரின் அறிவுச் செயல்கள் மலத்தால் தடைப்படுவதால் அதன் வளர்ச்சி குறையும். உயிரின் அறிவுச் செயல்களைத் தடுக்கின்ற ஆணவ மலம் வலிமையில் குறைந்தது அன்று ஆராயுங்கால், உயிருக்கும் ஆணவ மலத்துக்கும் சம வியாத்தியே எதுபோலெனில் கண்ணொளியும் இருளும் சமவியாபகமாயிருப்பது போல. (23)

பாசம் பக்குவ முதிர்ச்சியால் நீங்கும்

770. பரமசிவன் பராசத்தி
பல்லுயிர்க்கும் பயின்றிருக்க
விரவுவதென்னிருளெனிற் கேள்
வெய்யவழற் பசுமரத்தின்
விரவியதே பசுமரமும் வெந்தவல
வெந்து விழும்
பருவமுறக் கரண முறப்
பதியுமுறப் பழுதறவே.

Koviloor Digital Library

பரமசிவன் பராசத்தி பல்உயிர்க்கும்
பயின்று இருக்க
விரவுவது என் இருள் என்னில்
கேள் வெய்ய அழல் பசுமரத்தில்
விரவியதே பசுமரமும் வெந்த
அல்ல வெந்து விழும்
பருவம் உறக் கரணம்
உறப்பதியும் உறப்பழுது அற ஏ.

உரை:

சிவனும் சிவையும் எல்லா உயிர்களிலும் கலந்திருக்கிற நிலையில் இருளாகிய ஆணவம் உயிரைப் பொருந்துவது எப்படி என்றால், வெம்மையை உடைய தீ, பசுமையை உடைய மரங்களின் அடி முதல் உச்சிவரையலவே பரவலாயிருப்பினும் அவை வெந்து விடுவன அல்ல. அவை முதிர்ந்து தக்க பருவம் உண்டானபோதே தம்மிடத்தில் உள்ள நெருப்பை வெளிப்படுத்தும். தீக்கடை கோலும் அதனைக் கொண்டு தீயை உண்டாக்குகிறவனும் பொருந்துகிற போது., நெருப்பு உண்டாகி, அதனால் மரங்கள் வெந்து விழுவது போல, ஆணவமும் தக்க பரிபாகம் உண்டான போது, சிவபெருமானுடைய திருவருளால் தன்வலிமை கெட்டொழியும்.

விளக்கம்:

பரமசிவன் - மேலான சிவபிரான்; **பராசத்தி** - சிவை; **பயின்று** - கலந்து; **விரவுவது** - பொருந்துவது; **இருள்** - ஆணவம்; **என்னில்** - என்றால்; **வெய்ய** - வெம்மையுள்ள; **அழல்** - நெருப்பு; **பசு** - பசுமை, ஈரமான; **பருவம்** - பரிபாகம்; **பதி** - இறைவன்; இதினுள்ள உவமையை விரித்துக் காணல் தகும். பச்சை மரத்திலே அக்கினி வெளித் தோன்றாமல் மரப் பசுமைக்குள் தன்னை மறைத்திருந்தது. அதுபோல அந்த நிலையான ஆன்மாவில் சிவனும் சிவையும் அருள் மயமாய் வெளித் தோன்றாமல் ஆணவத் திணிலிக்குள்ளே தம்மை மறைத்திருந்தனர். மரம் முதிர்ந்து ஈரம் வற்றும் பரிபக்குவ நிலையொன்று ஒருகால் வருவதுபோல ஆன்மாவிலும் திணிந்திருந்த ஆணவம்மெலிந்துவிடும் பரிபக்குவம் ஒருகால் வரும். பரிபக்குவமுற்ற மரத்தில் தீக்கடை கோலடைத்துக் கடைய தீ மூண்டு மரம் முழுவதும் எரிந்தொழிவது போல மலபரிபாகமுள்ள ஆன்மாவுக்குச் சிவன் குருவாய் வந்து தீக்ஷை செய்ய ஏலவே மறைந்திருந்த அருள் வெளிப்பட்டு ஆணவத்தை முற்றாக அகற்றும்.

பச்சை மரம் - பெத்தான்மா; **தீ** - திருவருள்; **மரம் காய்தல்** - மலபரிபாகம்; **தீக்கடைகோல்** - தீகை; **மரமெரிதல்** - ஆணவம் விலகுதல் எனக் காண்க. (24)

Koviloor Digital Library

சிவனருளால் ஆணவவலி ஒடுங்கும்

771. உக்கொழியா தொளிக்குமிருளுதய
கதிரொளி முன்னே
பக்குவத்திற் பசுபாச
வலியடங்கும் பரமசிவ
னக்கனுயிர்க் கருள்புரிய
நசித்தல வசித்தல
நெய்க்கன நீங்கதலென்ன
மாயேய நிலைதொலையும்.

உக்கு ஒழியாது ஒளிக்கும் இருள்
உதய கதிர் ஒளிமுன்னே
பக்குவத்தில் பசுபாச வலி
அடங்கும் பரமசிவ
நக்கன் உயிர்க்கு அருள் புரிய
நசித்தது அல்ல வசித்தது அல்ல
நெய்க் கனம் நீங்குதல் என்ன
மாயேயம் நிலை தொலையும்.

உரை:

காலைக் கதிரவனின் கதிர் ஒளிமுன் இருள் தான் அழியாமல் மறைந்து நின்றதுபோல சிவனுடைய திருவருளால் உயிர்களின் ஆணவமலம் பக்குவப்பட்டுத் தான் அழியாமல், உயிரின் அறிவு செயல்களைத் தடுக்கும் ஆற்றலை இழக்கும் மாயையின் செயல்கள் நாசம் இல்லாமலும் நிலை பெறுதல் இல்லாமலும், உறைந்திருந்த நெய், உருக்கிய பிறகு கனம் குறைந்து கெட்டுப் போகாமல் இருப்பது போல, முத்தி நிலையிலும் இந்த மலங்கள் கெடாமலும் உயிர்களைக் கட்டுக்கு உட்படுத்தாமலும் நிற்கும்.

விளக்கம்:

நசித்ததல்ல - தான் அழிந்ததல்ல; வசித்ததல்ல - உயிரைக் கட்டுப்படுத்தியதல்ல; உக்கு - இற்றுப் போய்; பசு - உயிர்; பாசம் - தளை; நக்கன் - சிவன்; நசித்தல் - அழிதல்; வசித்தல் - நிலை பெறுதல்;

''முத்திகளில் மூன்று முதலும் மொழியக்கேள்
சுத்த அநுபோகத்தைத் துயத்தலணு - மெத்தவே
இன்பங் கொடுத்தல் இறை இத்தை விளைவித்தல் மலம்
அன்புடனே கண்டுகொள் அப்பா''

Koviloor Digital Library

என்ற உண்மை விளக்கப் பாடற் பொருள் இச்செய்யுள் இறுதியடிப் பொருளோடு ஒப்பு நோக்கப்படும். (25)

நுண்மையும் பருமையும்

772. நுண்ணியனே சிவன் றூலஞ்
சத்தியவ ணொய்யார்க்கு
நுண்ணியளே நொய்யார்களதிதூலர்
நுதன் மதிக்கு
நுண்ணியரே நொய்யார்தஞ்
சத்திகளுக் கவர்தாமும்
நுண்ணியரே நோய்க் கவர்க்கு
மதி தூல தரநோயே.

நுண்ணியனே சிவன் தூலம்
சத்தியவள் நொய்யார்க்கு
நுண்ணியளே நொய்யார்கள்
அதிதூலர் நுதல்மதிக்கு
நுண்ணியரே நொய்யார்தம் சத்திகளுக்கு
அவர் தாமும்
நுண்ணியரே நோய்க்கு அவர்க்கும்
அதி தூல தர நோய் ஏ.

உரை:

சிவன், சிவைக்கு நுண்ணியவனாக இருப்பான்; அந்தச் சிவனுக்குச் சிவை பருமையாக இருப்பாள். சிவை உயிர்களுக்கு நுண்ணியவளாக இருப்பாள்; அந்தச் சிவைக்கு உயிர்கள் மிகப் பருமையாக இருக்கும். உயிர்கள் தம் வல்லமைக்கு நுண்ணியவையாக இருக்கும்; அந்த உயிர் வல்லமை, உயிருக்குப் பருமையாக இருக்கும். உயிர் வல்லமை, மும்மலங்களுக்கு நுண்ணியதாக இருக்கும்; மும்மலங்கள், உயிர் வல்லமைக்குப் பருமையாக இருக்கும்.

விளக்கம்:

நுண்மை - சூக்குமம், **பருமை** தூலம்; **நுண்ணியன்** - நுட்பமானவன்; **நுண்ணியள்** - நுட்பமானவள்; **சத்தி** - சிவை; **தூலம்** - பருமை; **நொய்யர்** - வலிமை குறைந்தவர் என்றது உயிர்களை; **நுதல்மதி** - சிவை, சத்தி, சிவனுக்கு பெண்பால் சிவை; **அதி தூலர்** - மிகப் பருமையர்; **சத்தி** - வல்லமை, ஆற்றல்; **நோய்** - இது இங்கு, ஆணவம், மாயை, கன்மம் என்று மூலங்களைக் குறிக்கும். (26)

Koviloor Digital Library

சிவன் ஆணவ நோய்க்கு மருத்துவன்

773. பெரு நோயே மூலமலம் பிணி
மருந்து முடன் மூலந்
தருமலன் மருத்துவனே
மருந்தறிந்து சாரா்து
பெருநோயர் மருந்தறியா ரெனல்
பேசிப் பெறுவதல
நிருமலனை மருத்துவ னென்றறிக
பிணி நீங்கிடுமே.

பெரும் நோயே மூலமலம்
பிணிமருந்தும் உடல் மூலம்
தரும் அமலன் மருத்துவனே
மருந்து அறிந்து சாராது
பெரும் நோயர் மருந்து அறியார்
எனல் பேசிப் பெறுவது அல்ல
நிருமலனை மருத்துவன் என்று
அறிக பிணி நீங்கிடும் ஏ.

உரை:

ஆணவ மலம் என்பது உயிர்களுக்குப் பெரிய பிணி. அப்பிணிக்கு மருந்து மாயாகாரியமாகிய உடம்பு மூலம் தரவல்ல மாசு இல்லாத சிவனே, ஆணவநோயைத் தீர்க்கும் மருந்தை உதவிப் பிணியை அகற்றுவான். மருந்து, தானே பிணியாளியைத் தேடி வந்து அடையாது. பெரிதான ஆணவ நோயை உடைய உயிர்கள், தாமே தம் பெரும் நோயைப் போக்கிக் கொள்ளும் மருந்தை அறிந்தவர் அல்லர் என்று சொல்லுவதால் பிணி அகன்றுவிடாது. இயல்பாகவே ஆணவம் முதலான மலங்களிலிருந்து நீங்கிய சிவனே, பிணியைத் தீர்க்கும் பண்டிதன் என அறிந்து அவனிடம் இடையறாது அன்பு செலுத்தி வரப் பிணி அகலும்.

விளக்கம்:

மூலமலம் - ஆணவமலம்; அமலன் - தூயவன்; மருத்துவன் - பிணி அகற்றும் பண்டிதன்; நிருமலன் - மாசு இல்லாத சிவன்; சாராது - வந்து அடையாது. (27)

சிவனே ஆணவ மலத்தை அகற்றும் பண்டிதன்

774. மருத்துவனும் பிணியாளி
யெனிற் பிணியுமாறாது
மருத்துவன் முன் பிணியாளி யெனிற்
பிணியை மாற்றிய தோர்

Koviloor Digital Library

மருத்துவனு ண்டிம் முறையின்
மாற்ற மனவத்தைவரு
மருத்துவனை யநாதிமல
முத்தனென மதிக்கவரோ.

மருத்துவனும் பிணியாளி என்னில்
பிணியும் மாறாது
மருத்துவன் முன் பிணியாளி என்னில்
பிணியை மாற்றியது ஓர்
மருத்துவனும் உண்டு இம் முறையில்
மாற்றம் அனவத்தை வரும்
மருத்துவனை அநாதிமலமுத்தன்
என மதிக்க. (அரோ)

உரை:

நோய் தீர்க்கும் பண்டிதனே நோயாளி என்றால் நோய் அகலாது. முன்னரே அப்பண்டிதன் நோயாளி என்றால், அவனுடைய பிணியைத் தீர்த்தவன் ஒருவன் இருக்கிறான். இம்முறையால், பிணியை அகற்றுகிற வேறு ஒருவன் உள்ளான் என்னும் போது, அநவத்தை என்னும் குற்றம் வரும். ஆதலால் இயல்பாகவே மலங்களிலிருந்து விடுபட்ட சிவனே உயிர்களிடம் பொருந்தியுள்ள ஆணவம் என்னும் பிணியைப் போக்கும் பண்டிதன் ஆவான்.

விளக்கம்:

பிணி, நோய் - இவை ஒரே கருத்துடைய சொற்கள்; **மருத்துவன், பண்டிதன்** - இவை ஒரே பொருளைத் தரும் சொற்கள்; **அநாதிமல முத்தன்** - இயல்பாகவே பாசங்கள் இல்லாதவன்; **கடவுள்** - இது சிவனைக் குறிக்கிறது; உரையாசிரியர் கூறுகிற 'அநவத்தை' என்னும் சொல், சென்னைப் பல்கலைக் கழக அகராதியில் இல்லை; வடசொல் - தமிழ் அகர வரிசையிலும் இல்லை. **அவத்தை** - அவதி, முடிவு; **அநவத்தை** - முடிவின்மை; **அநவத்தை வரும்** - முடிவுபெறாமல் நீளும். **இம்முறையில் மாற்றம் அனவத்தை வரும்** - இப்படிச் சொல்லிச் செல்ல முடிவின்மை என்னுங் குற்றம் வரும். (28)

சிவனே ஆக்கல் காத்தல் அழித்தலைச் செய்வான்

775. ஆக்கையினை யியக்குதற்கு
மாக்கையிலை யான்மாவுக்
காக்கையிலான வனமலனாக்
குவிப்ப னனைத்துலகு

Koviloor Digital Library

மாக்கியொரு மூவரைமுன்
முக்குணத் தினளிப்பிப்பன்
போக்கு விப்பனவர் பாற்றன்
சத்தி விதத்தினைப் புணர்ந்தே.

ஆக்கையினை இயக்குதற்கும் ஆக்கை
இல்லை ஆன்மாவுக்கு
ஆக்கை இல்லான் அவன் அமலன்
ஆக்குவிப்பன் அனைத்து உலகும்
ஆக்கி ஒருமூவரை முன்
முக்குணத்தில் அளிப்பிப்பன்
போக்குவிப்பன் அவர்பால் தன்
சத்தி விதத்தினைப் புணர்ந்து ஏ.

உரை:

உருவம் இல்லாத உயிர் உடலை இயக்குவது போல, மாசு இல்லாமலும் அருவமாகவும் இருக்கிற சிவன் தன் முன்னிலை மாத்திரத்தால் உலகை இயக்குவன். அவ்வகையில் (சாத்துவிதம்) சத்துவம் (இராசதம்) எழுச்சி (தாமதம்) மயக்கம் என்ற மூன்று வகைக் குணங்களையுடைய பிரமன், மாயன், சீகண்ட பரமேசுரன் என்ற மூவரையும் உண்டாக்குவான். பின்னர், கிரியா சத்தியைப் பிரமனிடம் நிலைப்படுத்தி, உலகங்களையும் உயிர்களையும் படைப்பான்; ஞான சத்தியை மாயனிடம் நிலைப்படுத்திக் காத்தலைச் செய்வான்; இச்சா சத்தியைச் சீகண்ட பரமேசுரனிடம் நிலைப்படுத்தி அழித்தலையும் புரிவான்.

விளக்கம்:

மூவர் - அயன், அரி, அரன்; முக்குணம் - சத்துவம், இராசதம், தாமதம்; கிரியா சத்தி - செயலாற்றல்; ஞானசத்தி - அறிவாற்றல்; இச்சா சத்தி - விழைவாற்றல்; அதிட்டித்து - தன்வலுவுக்குட்படுத்தி. (29)

மூன்று குணங்களும் மூவரும்

776. உள்ளுறச் சத்துவந்தானுருத்திரனு
ருவந் தோன்று
முள்ளுற விராசதந்தானு
திக்குமாலுரு முன்மெய்யி
னுள்ளுறத் தமோகுணந்தானயனு
ருத்தானு முற்ற
வொள்ளிய வொரு மூவர்க்கு
மொழிப் பிறுவாய் வேறொன்றும்.

Koviloor Digital Library

உள்உறச் சத்துவந்தான் உருத்திரன்
உருவம் தோன்றும்
உள்உற இராசதந்தான் உதிக்கும்மால்
உரு முன்மெய்யில்
உள் உறத்தமோ குணந்தான்
அயன் உருத்தானும் முற்ற
ஒள்ளிய ஒரு மூவர்க்கும் ஒழிப்பு
இறுவாய் வேறு ஒன்றும்.

உரை:

படைப்பு வேறுபாடுகள் பல வகையாக இருக்கும். அவற்றில் புராண மரபில் வரும் முறைமைப்படி பிரகிருதி மாயையின் மூன்று குணங்களிலிருந்து மூன்று தலைவர்களைப் பரமசிவன் தோற்றுவித்தார். அவருள் உருத்திர மூர்த்தியாகிற சீகண்ட பரமேசுரன் திருமேனி, சாத்துவிக குணம் அதிகப்பட்டு, ஏனைய இராசத, தாமத குணங்கள் குறைந்து தோன்றும்; மாயவன் திருமேனி, இராசத குணம் அதிகப்பட்டு, சாத்துவிகமும், தாமதமும் குறைந்து காணப்படும்; பிரமனுடைய திருமேனி, தாமத குணம் அதிகப்பட்டுப் பிற சாத்துவிகமும் இராசதமும் குறைந்து தோன்றும், இப்படி மூன்று வகைத் திருமேனிகளையுடைய தலைவர்கள், பிரகிருதிக்குக் கீழ் உள்ள படைப்பு, காப்பு, அழிப்பு ஆகிய செயல்களைப் புரிவார்கள்.

விளக்கம்:

ஒள்ளிய - அறிவுடைய; **மூவர்** - பிரமன், மாயவன், உருத்திரன்; **மால்** - திருமால்; **இறுவாய்** - முடிவு; பிரகிருதி - மாயையின் கீழ்ப் பகுதி; பிரகிருதி மாயை எனப்படும்; **ஒழிப்பு** - அழிப்பு.

குறிப்பு:

படைப்பு வேறுபாடு பலவகை என்றது ஆகமங்களில் ஒரு வகை, புராணங்களில் ஒருவகை என்பன போல்வனவற்றை. அவற்றில் புராணங்களில் வரும் முறையே இங்கு தழுவப்பட்டது. முன்னைய உரையிற் பௌராணிகப் பிரக்கிரியையில் என்றதன் விளக்கம் இதுதான். பிரகிருதிக்கு இயற்கை என்பதும் ஒருபொருள்தான். இவ்விடத்துக்கு அது அமையாது. பகுதி, பிரகிருதியின் சொற் சிதைவான தமிழ் வடிவம். (30)

உருத்திரனே உயர்ந்தவன்

777. காரகன்றனையுங் காயங்காசினி
காறுங் காக்கும்
பாரகன்றனையும் பாரும் படைத்
திடப்பட்ட யாவும்

Koviloor Digital Library

ஆரதனதிகனென்னா தவர் தமக்
கொப் பென்பார்கள்
காரகர் பரிகாரத்தை நவிற்று
நூலறியாநாமே.

காரகன் தன்னையும் காயம்
காசினிகாறும் காக்கும்
பாரதன் தன்னையும் பாரும்
படைத்திடப்பட்ட யாவும்
ஆர் அதன் அதிகன் என்னாது அவர்
தமக்கு ஒப்பு என்பார்கள்
காரகர் பரிகாரத்தை நவிற்றும்
நூல் அறியாநாம் ஏ.

உரை:

உடலையும் நிலம் முதலான உலகுகளையும் படைக்கும் பிரமனையும், அவற்றைக் காக்கும் நாராயணனையும், அவனால் காக்கப்படும் இயங்கும் பொருள் இயங்காப் பொருள்களையும் அழிக்கிற உருத்திரனை, பிரமனுக்கும் நாராயணனுக்கும் தலைமையானவன் என்று சொல்லாமல், அவர்களுக்கு ஒப்பானவன் என்று சொல்லுகிறவர்கள் பாவியராகி நரகை அடைவர். இப்பாவத்தைப் போக்கும் கழுவாயை சொல்லும் நூல்களை நாம் அறிந்ததில்லை.

விளக்கம்:

காரகன் - செய்கிறவன், இங்குப் படைக்கிற பிரமனைக் குறிக்கும். காயம் - உடம்பு; காசினி - உலகு; பார் - பூமி; பாரகன் - காப்பவன், இங்கு நாராயணனைக் குறிக்கும், பரிகாரம் - கழுவாய்; நவிற்றும் - சொல்லுகிற. (31)

இறைவன் இருபத்தேழாவது பொருள் ஆவான்

778. எண்ணுக பிரதானத்தை யிருபத்து
நாலாம் வேறென்
றெண்ணுக புருடன் றன்னை
யிருபத்தைந் தாவானென்றே
யெண்ணுக விருபத்தாறாம்
பொருளென வீசன்றன்னை
யெண்ணுக விணையிலீச
னிருபத்தே ழாவனென்றே.

Koviloor Digital Library

எண்ணுக பிரதானத்தை இருபத்து
நாலாம் வேர் என்று
எண்ணுக புருடன் தன்னை
இருபத்தைந்து ஆவான் என்றே
எண்ணுக இருபத்து ஆறாம் பொருள்
என ஈசன் தன்னை
எண்ணுக இணை இல் ஈசன்
இருபத்தேழு ஆவான் என்று ஏ.

உரை:

சைவ வைணவ மதங்களும் மாயாவாத மதமும் தத்துவக் கொள்கையில் மாறுபடுகின்றன. இப்பாடலுக்குப் புராணங்களின் கொள்கைப்படி உரையாசிரியர் ஒதுவா மூர்த்திகள் பின்கண்டவாறு உரை கூறுகின்றார்.

''பிரகிருதி மாயையானது அதில் தோற்றப்பட்ட இருபத்து நாலு தத்துவத்துக்கும் வேர் ஆதலால், அதற்குக் காரணம் என்றறிக; ஆன்மாவை அந்த மாயைக்கு மேலாய் இருபத்தைந்தாக எண்ணப்பட்டவனென்று அறிக; அதற்கும் மேலாக இருபத்தாறாம் பொருளென்றே எண்ணப்பட்டவர் ஈசுரன் என்று அறிக. அதற்கும் மேலாகி இருபத்தேழாம் பொருளாக எண்ணப்பட்டிருக்கிற வரை ஒப்பற்ற பரமேசுரனே என்று அறியுங்கள்.

''*இந்தியத் தத்துவ ஞானம்*'', ஆசிரியர் திரு. கி.லட்சுமணன், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை''

''*பிரும்ம ரகசியம்*''ஆசிரியர் திரு. ர.சு.நல்லபெருமாள், வானதி பதிப்பகம், சென்னை.

மேற்கண்ட இரு நூல்களிலும் இந்தியத் தத்துவக் கொள்கைகளைப் பற்றித் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. ஆனால், புராணக் கொள்கைகள் விடப்பட்டுள்ளன. (32)

பரமசிவனைத் தியானம் செய்வதன் பயன்

779. பார்த்தவ ரிருபத்தேழாம்
பொருடனைப் பகவன்றன்னைப்
பேர்த்துட லெடுப்பரல்லர் பெறற்
கரும் போக பேத
மூர்த்துவ புவனத்துண்டே
யுலகெலா மொடுங்கும் போது
தீர்த்திட மூலநோயுஞ்
சிவனவனாவர் திண்ணம்.

Koviloor Digital Library

பார்த்தவர் இருபத்து ஏழாம் பொருள்
தன்னைப் பகவன் தன்னைப்
போர்த்து உடல் எடுப்பர் அல்லர்
பெறற்கு அரும் போக பேதம்
ஊர்த்துவ புவனத்து உண்டே உலகு
எல்லாம் ஒடுங்கும் போது
தீர்த்திட மூலநோயும் சிவன்
அவன் ஆவர் திண்ணம்.

உரை:

இருபத்தேழாம் பொருளான பரம் சிவனைத் தம் மெய்யறிவால் உணர்ந்தவர், மீண்டும் இப்பூமியிலே வந்து பிறக்கமாட்டார். எவராலும் பெறுவதற்கு அரிய பலவகை இன்பங்களை மேல் உலகில் நுகர்ந்து, உலகம் ஒடுங்கும் ஊழிக் காலத்தில் சிவன் அருளால் ஆணவநோய் நீங்கப் பெற்று, சிவபிரானுடன் இரண்டறக் கலக்கும் முத்தியை அடைவார்; இதற்கு ஐயமில்லை.

விளக்கம்:

இருபத்து ஏழாம் பொருள் - பரமசிவன்; பார்த்தவர் - அறிந்தவர்; பகவன் - கடவுள்; போர்த்து - மீண்டும்; பெறற்கு - பெறுவதற்கு; போக பேதம் - பலவகை இன்பங்கள்; ஊர்த்துவம் - மேல்; புவனம் - உலகு; தீர்த்திட - அகன்று; மூலநோய் - ஆணவமலம்; திண்ணம் - நிச்சயம். திருமூலர் கருத்துப்படி 27 தத்துவக் கொள்கை வைணவர்க்குரியது. இங்கு புராண மதப்படி சைவர்க்குஞ் சொல்லப்பட்டாயிற்று. 'அருஞ் சைவர் தத்துவம் ஆறு' 6 x 6 = 36 என்ற உண்மை நிலையானது. (33)

முன் பாடலின் தொடர்ச்சி

780. திதியினாதாரஞ் சேர்ந்து
சிவனுயிர்ப் பாசந்தீர்க்கப்
புதியன போகமுண்டு சிலர்
சிவம் பொருந்துவார் மேற்
றிதிநிலைத் தொலைவினந்தக் கணத்தினிற்
சிவமே யாவர்
பதியருள் விழியினாலே நள்ளிருட்
பார்க்கப் பட்டார்.

திதியின் ஆதாரம் சேர்ந்து சிவன்
உயிர்ப் பாசம் தீர்க்கப்
புதியன போகம் உண்டு சிலர்
சிவம் பொருந்துவார் மேல்

Koviloor Digital Library

திதிநிலைத் தொலைவில் அந்தக்
கணத்தினில் சிவமே ஆவர்
பதி அருள் விழியினாலே
நள்இருள் பார்க்கப் பட்டார்.

உரை:

நிகழ்காலத்தில் பரமசிவன் ஞானாசிரியரை இடங்கொண்டு, உயிர்களின் பக்குவத்திற்கு ஏற்ப, அவரவர் பாசத்தை அகற்ற, அவர்கள் புதிய இன்பங்களை நுகர்ந்து, ஊழிக் காலத்தில் ஒரு பற்றுக் கோடும் இல்லாமல் சிவனருளால் முத்தியை அடைவர்.

விளக்கம்:

திதி - நிகழ்காலம்; உயிர்ப்பாசம் - உயிரோடு பொருந்தியிருக்கும் ஆணவம் முதலான மலங்கள்; நிலை - பற்றுக் கோடு; நள்ளிருள் - இங்கு ஊழிக்கால இருளைக் குறிக்கிறது; கணம் - நொடிப் பொழுது. (34)

பக்குவம் பெற்றவர் அருள் பெறுவார்

781. உற்பவ வேளைதன்னி லுலகினையாக்கவல்ல
கற்புளர் சிலருமாவர் கழலடைவாரு முண்டு
தற்பரன் விழியிற்பட்டார் சங்கார வாரம் பத்திற்
கற்புடன் படைப்பு மூலக் கருத்தரும் வருகாலத்தின்.

உற்பவவேளை தன்னில் உலகினை ஆக்கவல்ல
கற்பு உளர் சிலரும் ஆவர் கழல் அடைவாரும் உண்டு
தற்பரன் விழியில் பட்டார் சங்கார ஆரம்பத்தில்
கற்புடன் படைப்பு மூலக் கருத்தரும் வரும் காலத்தில்.

உரை:

சிவன் படைத்தல் தொழில் தொடங்கும் காலத்தில் தத்தமக்கு முதன்மையான அதிகாரம் பெற்றிருந்தவர்கள், அந்த அதிகாரத்தில் பற்றின்மை ஏற்பட்டதும் முத்தி பெறுவர். சிவனுடைய அழிப்பு நிகழுகிறபோது, பாச நீக்கத்துக்குரிய பக்குவம் பெற்றவர்கள், பரமசிவன் அருள் பெறுவர். மலபரிபாக மாந்தியத்தை உடையவர்கள், ஊழிக்காலத்துக்குப் பிறகு நிகழும் படைப்புக் காலத்தில் திண்மையுடன் படைப்பு முதலானவற்றைச் செய்வதற்குரிய சிவன் ஆணை பெற்றவர்களாக வருவர்.

விளக்கம்:

தற்பரன் - இறைவன்; கற்பு - திண்மை; கழல் - திருவடி; மூலக்கருத்தர் - படைப்பவர்; உற்பவம் - பிறப்பு; சங்காரம் - அழிப்பு. (35)

Koviloor Digital Library

கரும யோகம்

782. பரம மெய்ஞ்ஞான யோகப்
பாங்கிலார் தம்க்கும் பாங்காங்
கருமயோகினையுங் காணக்
கழறுவங் கருதுவானே
கருதிடும் பொருளேயந்தக் கருத்ததன்
பயனே யென்ன
வருமொரு நான்கு முன்னே
மதிக்கவே யோகம் வாய்க்கும்.

பரம மெய்ஞ் ஞான யோகப்
பாங்கு இல்லார் தமக்கும் பாங்காம்
கரும யோகினையும் காணக்
கழறுவம் கருதுவானே
கருதிடும் பொருளே அந்தக் கருத்து
அதன் பயனே என்ன
வரும் ஒரு நான்கும் முன்னே
மதிக்கவே யோகம் வாய்க்கும்.

உரை:

மேலான உண்மையாகிய ஞான யோகம் பயின்று தேர்ச்சி பெறாதவர்க்கு, நன்மையை அளிக்கும் கரும யோகத்தின் இயல்பைக் கூறுகிறோம். அறிந்து கொள்வாயாக. ஒரு பொருளை அடைய விரும்புகிறவர்; அவர் அடைய விரும்புகின்ற பொருள்; அப்பொருளை அடைய விரும்புகிற எண்ணம்; அந்த எண்ணத்தால் வரும் பயன் என்ற நான்கையும் முன்னரே ஆராய்ந்து தெளிந்தவர்க்கு, அக்கரும யோகநெறி கைகூடும்.

விளக்கம்:

பரம - மேலான; மெய்ஞ்ஞானம் - உண்மையறிவு; **யோகம்** - மனம் அடங்கிய நிலை; **யோகு** - **யோகம்**; **கருமம்** - வினை; **கழறுவம்** - சொல்லுகிறோம்; **கருதுவானே** - உணருக; மதிக்க - ஆராய்ந்து தெளிவுபெறுதல். (36)

கரும யோகம் தொடர்ச்சி

783. மலத்தினு மநாதி முத்தன்
வாக்கினு ளேக தேசம்
பலிப்பது முந்திப் பார்க்க
விம்மையிற் பயனுட் பார்த்தான்

Koviloor Digital Library

மலத்தினு நீங்கி யீசன்
மலரடி நீழல் வாழ்க்கை
விலக்கிலை யென்றே யெண்ணி
விரும்புவன் யோகம் வேறும்.

மலத்திலும் அநாதிமுத்தன்
வாக்கினுள் ஏகதேசம்
பலிப்பது முந்திப் பார்க்க
இம்மையில் பயனுள் பார்த்தான்
மலத்திலும் நீங்கி ஈசன் மலர்
அடி நீழல் வாழ்க்கை
விலக்கு இலை என்றே எண்ணி
விரும்புவன் யோகம் வேறும்.

உரை:

இயல்பாகவே மலங்களிலிருந்து நீங்கிய சிவபிரானால் அருளப்பட்ட சிவாகமங்களுள் ஒரு பக்கம் இவ்வுலகப் பயனுள் கிடைத்த கருமயோக நெறியை முறை வழுவாமல் செய்து முடித்த பின் மேலும் ஆராய்தலைச் செய்க. அவ்வாறு செய்தால் அத்தகையோர் ஆணவ மலத்திலிருந்து நீங்கி, இறைவனுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளையடைந்து வாழுவதற்கு மறுப்பு இல்லையெனக் கருதிக் கரும யோகத்துக்கு வேறான சிவஞான யோகத்தையும் செய்ய விரும்புவார்.

விளக்கம்:

அநாதி முத்தன் வாக்கு - சிவபிரான அருளிய சிவாகமங்கள்; ஏகதேசம் - ஒருபக்கம்; பலித்தல் - பயன்; இம்மை - இப்பிறப்பு; விலக்கு - மறுப்பு. (37)

கருமயோகம் தொடர்ச்சி

784. எல்லையை யெழுவாயெல்லா மெண்ணுக
வுபாங் கமென்றே
யல்லலிவ் வாக்கை கண்ட
வருவருப் பென வறிந்து
புல்லிய புலன்கள் வென்று
பொருவிலி புரியும் புக்குச்
செல்ல லெல்லாமுந்தீரச்
சிவனடியடையுஞ் சித்தர்.

Koviloor Digital Library

எல்லையை எழுவாய் எல்லாம்
எண்ணுக உபஅங்கம் என்றே
அல்லல் இவ் ஆக்கை கண்டு
அருவருப்பு என அறிந்து
புல்லிய புலன்கள் வென்று
பொருஇலி புரியும் புக்குச்
செல்லல் எல்லாமும் தீரச்
சிவன்அடி அடையும் சித்தர்.

உரை:

நிலையில்லாத உடம்பு துன்பங்களை உண்டாக்கும் என்பதை கண்ணால் கண்டு வெறுக்கப்படும் மலசலப் போர்வை என்பதை அறிந்தவர் சிற்றறிவைத் தரும் செயல்களின் மூலம் கிடைக்கும் இன்பங்களைப் பொருட்படுத்தாமல், பொறிகளை வென்று, தனக்கு ஒப்பு இல்லாத இறைவனைப் புகலாக அடைந்து, தொடர்ந்து வரும் துயரங்களிலிருந்து நீங்கிச் சிவனுடைய திருவருள் பெறுதலாகிய சிவ உலகை அடைவார். இடம் பொருள் ஏவல் செய்வோர் எனும் மூன்றும் இக்கரும யோகத்திற்கு உபாங்கமாம்.

விளக்கம்:

எழுவாய் - தொடக்கம்; உபாங்கம் - துணையுறுப்பு; அல்லல் - துன்பம்; அருவருப்பு - வெறுப்பு; புல்லியம் - கீழான; பொரு - ஒப்பு; இலி - இல்லாத; பொருஇலி - சிவன்; பொருஇலிபுரி - சிவஉலகு; புக்கு - புகுந்து; செல்லல் - துன்பம். (38)

யோக சாதனைக்கு ஏற்ற இடங்கள்

785. அரவினான் மற்று மச்சமற வருவருப்பு மின்றி
மரநிரை மலருமல்க மனிதர்கள் பலரும் வந்து
விரவிடா வெல்லை தன்னில் விரும்பியே குகையுஞ் செய்து
திருவிளக்குடனே தூபஞ் சிறக்கவே குகையுட் செய்க.

அரவினால் மற்றும் அச்சம் அற அருவருப்பும் இன்றி
மரம் நிரை மலரும் மல்க மனிதர்கள் பலரும் வந்து
விரவிடா எல்லை தன்னில் விரும்பியே குகையும் செய்து
திருவிளக்குடனே தூபஞ் சிறக்கவே குகையுள் செய்க.

உரை:

யோகப் பயிற்சி செய்வதற்கு பயத்தை உண்டாக்கும் பாம்பு முதலிய உயிரிகள் இல்லாத, வெறுப்பை உண்டாக்காத, பசுமை நிரம்பிய மரங்களும்

Koviloor Digital Library

மலர்களும் நிரம்பிய சோலையாக இருக்க வேண்டும். அந்த இடமும் மக்கள் நடமாட்டம் இல்லாமல் ஊருக்கு வெளியே இருக்க வேண்டும். அத்தகைய இடத்தில் குகை அமைத்து, அதனுள் எப்போதும் திருவிளக்கு ஒளியும், நறுமணப் புகையும் இருக்கும்படிச் செய்து வர வேண்டும்.

விளக்கம்:

அரவு - பாம்பு; அருவருப்பு - வெறுப்பு; **மரம்நிரை** - மரங்கள் அடர்ந்த; **மலரும் மல்க** - பூக்கள் நிரம்பிய; **விரவிடா எல்லை** - பிறர் அடைந்து இடைஞ்சல் செய்யா இடம், ஊருக்கு வெளியே இருக்கும் தனியிடம்; **குகை** - இது தனியே கட்டப்படும் குகை வடிவான அமைப்பைக் குறிக்கிறது; **தூபம்** - சாம்பிராணி முதலான நறுமணப் புகை. (39)

யோகம் புரியத் தகாதவர்

786. ஆக்கையிற் பிணியை
யுற்றானா தரவகத்திலற்றான்
காக்கவே யாக்கை தன்னைக்
கருத்தினுளருத்தி வைத்தா
னீக்கிடாக் கருமத் தோடே
வலியுற நிரந்து நின்றா
னூக்கமே யுடையானூன
மிலி பணிக்கொருமையுற்றே.

ஆக்கையில் பிணியை உற்றான்
ஆதரவு அகத்தில் அற்றான்
காக்கவே யாக்கை தன்னைக்
கருத்தினுள் அருத்திவைத்தான்
நீக்கிடாக் கருமத்தோடே வலிஉற
நிரந்து நின்றான்
ஊக்கமே உடையான் ஊனம் இலி
பணிக்கு ஒருமை உற்று ஏ.

உரை:

உடம்பிலே பிணியுள்ள நோயாளியும், மனைவி மக்களின் அன்பை இழந்தவரும், உடலைப் பேண வேண்டும் என்று எண்ணி, உண்பதிலே எண்ணம் உள்ளவனும் கருமயோகம் செய்யத் தகாதவர் ஆவர். தமக்கென உள்ள கடமைகளைச் செய்வதில் நிரம்பிய உற்சாகம் உள்ளவரும், அழிவு இல்லாத சிவனுக்குரிய பணிகளை ஒருமுகப்பட்ட மனத்தோடு செய்து முடிப்பவரும் கருமயோகம் புரியத் தகுதி உள்ளவர் ஆவர்.

Koviloor Digital Library

விளக்கம்:

நீக்கிடாக் கருமம் - கடமையின் வழுவாமை; ஆக்கை - உடம்பு; பிணி - நோய்; ஆதரவு - அன்பு; அகம் - வீடு; அருத்தி - ஆசை; காக்கவே யாக்கை - உடலை வளர்க்க; நீக்கிடாக் கருமம் - விலக்க முடியாத கடமை; வலிஉற - ஆற்றல், பொருந்தி; நிரந்து - நேர்ப்பட்டு; ஊனம் இலி - அழிவு இல்லாத சிவன். (40)

கருமயோகம் புரியத் தகாதவர்

787. ஆரிய னேவல் செய்வானதிக தீபனமு முள்ளான்
பாரிய தபனந் தன்னைப் பற்றினன்மற்றும் குற்றம்
சேரிய னென்று செப்பு மிவரெலாஞ் சிறந்த யோகத்
தூரியர் சொல்லப்பட்ட விவரலார் தூடங்கலாமே.

ஆரியன் ஏவல் செய்வான் அதிக தீபனமும் உள்ளான்
பாரிய தபனம் தன்னைப் பற்றினன் மற்றும் குற்றம்
சேரியன் என்று செப்பும் இவர்எல்லாம் சிறந்தயோகத்
தூரியர் சொல்லப்பட்ட இவர் அல்லார் துடங்கலாம் ஏ.

உரை:

ஆசிரியருடைய பணிவிடையில் ஈடுபட்டிருப்பவனும், அளவுக்கு அதிகமாக உணவு உண்பவனும், மிகுந்த வெப்பமுள்ள உடம்பை உடையவனும், குற்றச் செயல்களைப் புரிகிறவனும் கருமயோகம் புரியத்தகாதவர் ஆவர். இவர்கள் அல்லாத பிறர் கரும யோகம் புரியத் தொடங்கலாம்.

விளக்கம்:

ஆரியன் - இது இங்கு ஆசிரியரைக் குறிக்கிறது; ஏவல் - பணி; தீபனம் - பசி, உணவு; பாரிய - மிகுந்த; தபனம் - சூடு, வெப்பம்; குற்றம் - குற்றச் செயல்கள்; சேரியன் - பொருந்தியவன்; இவர் எல்லாம் - இவர்கள் எல்லாரும்; யோகத் தூரியர் - யோகத்துக்கு விலக்கப்பட்டவர்; துடங்கலாம் - தொடங்கலாம். (41)

கருமயோகம் புரிதற்கு உரியவர்

788. பதவிதாய்ச் சிறிய சூடும்
பற்றிய பரிமிதான
முதர தீபனமுங்கூரவுச்சிப்பின்
னொரு போதுண்பா
னுதகமு நொய்தி னுண்பா
னுதரபந்தனமு முள்ளான்
மிதமித மென்றே யெண்ணி
வேணவாத் துடைத்து விட்டான்.

Koviloor Digital Library

பதவிதாய்ச் சிறிய சூடும்
பற்றிய பரிமிது ஆன
உதர தீபனமும் கூர உச்சிப்பின்
ஒருபோது உண்பான்
உதகமும் நொய்தின் உண்பான்
உதரபந்தனமும் உள்ளான்
மிதம் இதம் என்றே
எண்ணி வேணவாத்துடைத்து விட்டான்.

உரை:

மேன்மையுள்ள கருமயோகி, பசித்த போது மட்டும் சிறுசூட்டுடன் சிறிதளவு பத்தியமான உணவை, உச்சிப் பொழுதுக்குப் பிறகு ஒரு வேளை மட்டும் உண்பார்; தண்ணீரும் சிறிதளவே பருகுவார். வயிற்றில் ஒட்டியானக் கட்டும் யோகப்பட்டமும் பொருந்தியுள்ளவன் சிற்றுண்டி எழுந்தருணிடம் சிறிது அளவு பயன்படுத்தி, ஆசைப் பெருக்கை ஒழித்திருப்பார்.

விளக்கம்:

பரிமிது ஆன - சிறு அளவு; **உதரம்** - வயிறு; **தீபனம் கூர** - பசித்தபோது; **உச்சி** - நடுப்பகல்; **ஒரு போது உண்பான்** - ஒருவேளை மட்டும் உண்பார்; **உதகம்** - நீர்; **நொய்து** - கொஞ்சமாக; **உதரை பந்தனம்** - ஒட்டியானக் கட்டு; **மிதம்** - மட்டான அளவு; **இதம்** - நன்மை; **மிதம்இதம்** - தற்செயலாகச் சிற்றுண்டி ஆசையெழுதல் சார்பானது. நுகர்பொருள் என முன்னுரை கூறியது சிற்றுண்டியை; **வேணவா** - மிகுந்த ஆசை; **துடைத்து** - ஒழித்து;

குறிப்பு:

ஒருபோது உண்பான் - ஒரு வேளை மட்டும் உண்பவன் யோகி; இருவேளை உண்பவன், போகி; மூன்று வேளை உண்பவன் ரோகி; நான்கு வேளை உண்பவன் உடலை விட்டுப் போகி (இறப்பவன்) என்று *நீதி வெண்பா* கூறுகின்றது.

ஒரு போது யோகியே ஒண்தளிர்க்கை மாதே
இருபோது போகியே என்ப - திரிபோது
ரோகியே நான் குபோது உண்பான் உடல் விட்டுப்
போகியே என்று புகல் *(நீதிவெண்பா - 9)*

உதர பந்தனம் - யோகி, தியானத்தில் அமர்ந்திருக்கும் போது முதுகையும் முழங்கால்களையும் சேர்த்துக் கட்ட உதவும் கச்சை. இதனை யோக பட்டம் என்பர்.

உதரபந்தனம் வேறு யோகபட்டம் வேறு. யோகபட்டம் முதுகையும் கால்களையுஞ் சேர்த்திணைப்பது. உதரபந்தனம் வயிறு சம்பந்தப்பட்டது. ஒட்டியானக் கட்டென்பதே சரி. (42)

Koviloor Digital Library

கருமயோகி உண்ணத் தகாத பொருள்கள்

789. நீக்குவான் றிரண்ட பானெய்
நிகழ்ந்த திநனையு நெய்யி
னாக்கிய வபூபமாதிய
னைத்தையுமவலமென்றே
தூக்கினுட் சொல்லு முண்டைச்
சுரையுளி முருங்கை தொண்டை
பீர்க்கினுட் பெரிய தத்தி
யெனுமிவையாதி பேணான்.

நீக்குவான் திரண்டபால் நெய் நிகழ்
ததி தன்னையும் நெய்யில்
ஆக்கிய அபூபம் ஆதி
அனைத்தையும் அவலம் என்றே
தூக்கினுள் சொல்லும் முண்டைச் சுரை
உள்ளி முருங்கை தொண்டை
பீர்க்கினுள் பெரியது அத்தி
என்னும் இவையாதி பேணான்.

உரை:

கருமயோகி, சருக்கரையிட்டுக் காய்ச்சிய திரட்டுப் பால், நெய்; தயிர், நெய்யில் வேகவைத்த அப்பம் முதலான பணிகாரங்கள் அனைத்தையும் உண்ணாமல் ஒதுக்க வேண்டும். யோக நூலில் யோகி உண்ணத் தகாதது என்று ஒதுக்கிய கொவ்வை, சுரைக்காய், வெங்காயம், முருங்கைக்காய், முட்டை, அத்தி முதலிய பொருள்களை உண்ணாமல் தவிர்க்க வேண்டும்.

விளக்கம்:

திரண்ட பால் - திரட்டுப்பால், **ததி** - தயிர்; **அபூபம் ஆதி** - நெய்யில் வேகவைத்த அப்பம் முதலான பணிகாரங்கள்; **நீக்குவான்** - உண்ணாமல் விலக்குவான்; **அவலம்** - தகாதது; **தூக்கு** - நூல், புத்தகம்; **முண்டை** - முட்டை; **சுரை** - சுரைக்காய்; **உள்ளி** - வெங்காயம்; **முருங்கை** - முருங்கைக்காய்; **தொண்டை** - கொவ்வை; **அத்தி** - அத்திக்காய்; **பேணான்** - விரும்பமாட்டான்.

குறிப்பு:

யோகிக்கு ஆகாது என ஒதுக்கிய இந்தப் பொருள்கள் இல்லற வாழ்க்கையினரான ஆடவர்களுக்கு ஏற்றவை. ஏனெனில், இவை விந்து விருத்திக்கு உதவும். ஆதலால் தான் யோகிக்கு இவை விலக்கு.

Koviloor Digital Library

யோகி இவற்றை உண்டால் ஒழுக்கம் தவறுவான். வடஇந்தியப் பிராமணர் மீன் புசிப்பர்; வெங்காயம் உண்ணமாட்டார். தென்னிந்தியப் பிராமணர், வெங்காயம் உண்பார்; மீன் புசிக்க மாட்டார்; இவை பழக்க வேறுபாடுகள். (43)

சிற்றின்பத்தை நாடாதவன் யோகி

790. அஞ்சுவானாசை தோன்றி
வருவருப்பான் றன்னாகம்
பஞ்சின் மெல்லடியார் வந்து
பரித்து மெய்ப் பற்றினாலு
நஞ்சுள நடுங்கியன் னையெனவவர்
தம்மை நாடி
வஞ்சி நுண்ணிடையார் போக
மறுத்தற வெறுக்க வல்லான்.

அஞ்சுவான் ஆசைதோன்றில்
அருவருப்பான் தன் ஆகம்
பஞ்சில்மெல் அடியார் வந்து
பரித்து மெய் பற்றினாலும்
நஞ்சு உள்ளம் நடுங்கி அன்னை
என அவர் தம்மை நாடி
வஞ்சி நுண் இடையார் போகம்
மறுத்து அற வெறுக்க வல்லான்.

உரை:

கருமயோகி, தன் மனதிலே சிற்றின்ப ஆசை எழுந்தால், தன் உடலின் மீதே வெறுப்படைவான். பஞ்சை விட மென்மையான பாதங்களையுடைய அழகிய பெண் வலிய வந்து தன் உடலைத் தொட்டு அழைத்தாலும், உள்ளம் வருந்தி, பயந்து, அவளைத் தன் அன்னையாக எண்ணுவான். வஞ்சிக் கொடி போன்ற சிறு இடுப்பையுடைய மகளிரின் கலவியை அறவே மறுத்து வெறுப்படைவான்.

விளக்கம்:

அருவருப்பு - வெறுப்பு; ஆகம் - உடம்பு; பரிந்து - பரிவு காட்டி வலியவந்து; மெய் பற்றி - உடலைத் தொட்டு; நஞ்சு - நைந்து, வருந்தி; நடுங்கி - நடுக்கமுற்று; வஞ்சி - வஞ்சிக் கொடி போன்ற; நுண் இடை - ஒல்லியான இடுப்பு; போகம் - கலவி. (44)

Koviloor Digital Library

கருமயோகத்தின் பயனை அடையத் தக்கவர்

791. தொழிலினைச் சுருக்கியுள்ளான் சுளிப்பவன்
றுயிலுந் தோன்றில்
விழை வினை ஞான யோக
பலத்ததி விரைவின் வைத்தான்
உழையுறை புலன் களெல்லா
மொடுக்கியே யுள்ளானென்று
கழறிய விவரே யோக
பலத்தினைக் கைக் கொண்டாரே.

தொழிலினைச் சுருக்கி உள்ளான்
சுளிப்பவன் துயிலும் தோன்றில்
விழை வினை ஞானயோக பலத்து
அதி விரைவில் வைத்தான்
உழை உறை புலன்கள்
எல்லாம் ஒடுக்கியே உள்ளான் என்று
கழறிய இவரே யோக
பலத்தினைக் கைக் கொண்டார் ஏ.

உரை:

சிவாகமத்திற் சொல்லியுள்ள நாள் வழிபாடு, சிறப்பு வழிபாடுகளுக்கு உரிய பயன் கருதிச் செய்யும் சடங்குகளைச் சுருக்கமாகச் செய்தவன்; உறக்கம் வந்த போது அதனை வெறுத்துத் தடுத்தவன்; யோகத்தின் பயனாக மிக விரைவில் உண்மையறிவைப் பெற மிக விருப்பம் உடையவன்; உடலிற் பொருந்தியுள்ள பொறிகள் அனைத்தும் ஒடுங்கச் செய்தவன் ஆகிய இவர்களே கரும யோகத்தின் பயனை எய்துவர்.

விளக்கம்:

தொழில் - கிரியை பற்றியவை; **சுளிப்பவன்** - வெறுப்பவன்; **துயில்** - உறக்கம்; **விழைவு** - விருப்பம்; **கழறிய** - சொன்ன; **ஞானயோக பலன்** - உண்மையறிவின் பயன்; **உழை உறை** - உடம்பிற் உள்ள; **யோகபலன்** - யோகத்தின் பயன்; **கைக் கொண்டார்** - பெற்றவர். (45)

யோகாசனம்

792. ஆதனம் பதும மாதியல்லது
மிசைந்த தொன்றா
லேதமக்கி யற்றித்
தேவனிணையடி யிறைவிபாதம்

Koviloor Digital Library

போதக வுருவன் பொற்றாள்
புந்தியுணினைந்து போற்றிச்
சாதகர் புரிகயோகந்
தவறறு முபயோகத்தால்.

ஆதனம் பதுமம் ஆதி
அல்லதும் இசைந்தது ஒன்றாலே
தமக்கு இயற்றித் தேவன்
இணைஅடி இறைவிபாதம்
போதக உருவன் பொன் தாள்
புந்தியுள் நினைந்து போற்றிச்
சாதகர் புரிக யோகம் தவறு
அறும் உபயோகத் தால்.

உரை:

யோகம் பயிலுகின்றவர் பதும ஆசனம் முதலான பலவகை ஆசனங்களில் ஒன்றில், அல்லது தன் உடலுக்ககுப் பொருத்தமான ஓர் இருக்கையில் முதுகு வளையாமல் அமர்ந்து, சிவன், சிவை, தென்முகக் கடவுள் ஆகிய இவருள் ஒருவருடைய திருவடிகளை மனதால் எண்ணி வணங்கிய பிறகு, யோக நெறிக்குத் தவறு நேராமற் செய்க.

விளக்கம்:

ஆதனம் - ஆசனம், இருக்கை; **பதுமம்** - தாமரை; **பதுமாசனம்** - தாமரையிருக்கை; **தேவன்** - சிவன்; **போதக உருவன்** - குருவடிவம் உள்ள தட்சணாமூர்த்தி, தென்முகக் கடவுள்; **இணையடி** - இரண்டு திருவடிகள்; **புந்தி** - புத்தி; **சாதகர்** - சாதனை செய்வோர்; **யோகம்** - ஆழ்ந்த தியான நிலையிற் சிவனோடொன்றுதல்;

யோகத்தின் பல கூறுகளைத் திருமூலர் மிகத் தெளிவாக விளக்குகின்றார். திருவாரூர் கருணையானந்த ஞானபூபதிகள் அருளிய *ஞானயோக ரகசியம்*, *வேதாந்த பாஸ்கரன்*, *ஞானக்களஞ்சியம்* என்ற மூன்று நூல்களும் உரை நடையில் வெளிவந்த யோக நூல்களுள் மிகச் சிறந்தவை. கேரளாவின் சிவானந்த பரமஹம்சரின் சித்தயோக விளக்கத்தைச் ''*சித்தவேதம்*'' என்ற நூலால் அறியலாம். இராவணன் மிகப் பெரிய சிவஞானி. அந்தச் சிவ ஞானி அருளிய சிவயோக முறையை ''*ஜீவரகசியம்*'' என்ற நூல் தெளிவாக விளக்குகின்றது. இதனைப் பலர் அறியார். (46)

Koviloor Digital Library

793. கரந்திரியக் கேயாகக் கவான்
மிசை கலக்கத் தென்பாற்
கரந்தனிற் பிருட்ட சாய்கை
கலக்க மற்றங்கைக் கண்ணே
பிரிந்த பன்னடுவே நாவினந்தமும்
பெய்து நிற்க
வுரந்தள முன்னே பின்னும்
நிமிர்ந்திடக் களமுமோங்க.

கரம் திரியக்கே ஆகக் கவான்
மிசை கலக்கத் தென்பால்
கரம் தன்னில் பிருட்ட சாய்கை
கலக்க மற்று அங்கைக் கண்ணே
பிரிந்த பல் நடுவே நாவின்
அந்தமும் பெய்து நிற்க
உரந்தள முன்னே பின்னும்
நிமிர்ந்திடக் களமும் ஓங்க.

உரை:

கையையும் காலையும் குறுக்கே வைத்து, வலது காலை இடது தொடைக்குள்ளே வைத்து, அதன் மேலே மடியிலே முதலில் இடது உள்ளங்கையை வைத்து, பின்னர், அந்த இடது உள்ளங்கையின் மேலே வலது புறங்கையை வைத்து, பல்ஒன்றோடொன்று கிட்டாமல் நடுவே நாக்கு நிற்கும்படி செய்து, மார்பை முன்னே தள்ளிப் பின்னே உடல் நிமிர்ந்து செவ்வையாக அமைய;

விளக்கம்:

பெங்களூர் யோகாசன ஆசிரியர் திரு. சுந்தரம் அவர்கள் எழுதியுள்ள *'யோக சிகிச்சை'* என்னும் நூலில், ஆசனங்கள் செய்யும் முறைகள் படங்களோடு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. அந்நூலை வாங்கிப் படித்துப் புரிந்து கொண்ட பிறகு ஆசனம் செய்யத் தொடங்குக. ஆசனங்கள் செய்வதற்கு அதிகாலைப் பொழுதே ஏற்றது.

கரம் - கை; பிருட்டம் - இடுப்புப் பூட்டின் பின்பக்கம்; சாய்கை - வளைதல்; அங்கை - உள்ளங்கை; நாவின் அந்தம் - நாவின் நுனி; பெய்து - பொருந்தி; உரம் - மார்பு; களம் - கழுத்து; கவான் - தொடை; (47)

Koviloor Digital Library

பிராணாயாமம் (வளிநிலை)

794. நாசியினந்தஞ் சேர்த்தி நாட்ட
நான்கைந் தொன்றென்றே
தேசுறு திசை கடன்னிற்
செலுத்திடா திருந்து வாயு
ரேசக பூரகங்களெனு
மிவையிரண்டு மின்றிப்
பேசுதனானு யில்லாச் சிலை
யென விருக்கை பெற்றே.

நாசியின் அந்தம் சேர்த்தி நாட்டம்
நான்கு ஐந்து ஒன்று என்றே
தேசு உறு திசைகள் தன்னில்
செலுத்திடாது இருந்து வாயு
ரேசகம் பூரகங்கள் என்னும்
இவை இரண்டும் இன்றிப்
பேசுதல் தானும் இல்லாச் சிலை
என இருக்கை பெற்று ஏ.

உரை:

கண்கள் மூக்கின் நுனியைப் பொருந்தி நோக்கி. ஒளியுள்ள பத்துப் பக்கங்களிலும் மனம் செல்லாதபடி தடுத்து நிறுத்தி, மூச்சைவிடுதலும் இழுத்தலும் இல்லாமல், வாயுவை அடிவயிற்றில் அசைவற நிறுத்தி, மோன நிலையில் கல் உருவம் போல அசையாமல் இருக்கும் நிலை பெற்று;

விளக்கம்:

நாசியின் அந்தம் - மூக்குநுனி; **சேர்த்தி** - பொருத்தி; **நாட்டம்** - கண்; **நான்கு, ஐந்து, ஒன்று** - பத்து; **தேசு** - ஒளி; **உறு** - பொருந்திய; **திசைகள்** - திக்குகள்; **பத்துத் திசைகள்** - கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வட மேற்கு, தென் கிழக்கு, தென் மேற்கு, மேல், கீழ் என்பன. **வாயு** - இங்கு மூச்சைக் குறிக்கும்; **ரேசகம்** - மூச்சை விடுதல்; **பூரகம்** - மூச்சை இழுத்தல்; **சிலை என இருக்கை** - மூச்சை அடக்கிக் கும்பகஞ் செய்து கொண்டு உடல் அசையாது இருத்தல். (48)

நினைவு ஒருமை

795. மனநிலை யொடுங்க வீசன்
வடிவினையகத்துள் வைத்துப்
பினைவடிவறு திபேசுந் தேசிக
னருளாற் பெற்று

Koviloor Digital Library

மனநிலை யொடுங்க வாய்த்த
 வாய்மையினறிவை வைக்கக்
கனிவொடு காண்பான் காட்சி
 காட்சியிற் பாடலுங் கைத்தே.

மனநிலை ஒடுங்க ஈசன்
 வடிவினை அகத்துள் வைத்துப்
பின்னைவடிவு அறுதிபே சுந்தேசிகன்
 அருளால் பெற்று
மனநிலை ஒடுங்க வாய்த்த
 வாய்மையில் அறிவை வைக்கக்
கனிவொடு காண்பான் காட்சி
 காட்சியில் படலும் கைத்து ஏ.

உரை:

மனதை ஒன்றிலும் செல்ல விடாமல் ஒடுக்கிச் சிவனில் நிறுத்தி ஞானாசிரியரின் அருளால் அருவநிலை உபதேசிக்கப் பெற்றபடி மூலாதார ஒளியை அடியிலிருந்து மேல் நோக்கிச் செலுத்தி இடையறாத தியானத்தில் நிலைத்து, காண்பானும் காட்சியும் காணப்படும் பொருளும் என்ற பேதந் தோன்றாதபடி உள்ளம் ஒருமை பெற்று, அறிவே வடிவான பரம் பொருளில் மனதை ஒன்ற வைத்து;

விளக்கம்:

வடிவு - உருவம்; அகம் - உள்ளம்; வடிவ அறுதி - அருவநிலை; தேசிகன் - குரு; வாய்மை - உண்மை; கனிவு - அன்பு; அறிவை வைக்க - இது இறைவனை எண்ணுதலைக் குறிக்கும். கைத்து - கசந்து; வெறுத்து - காணுஞ் சார்பற்று. இதில் மனதை ஒடுக்கிச் சிவனில் நிறுத்தல் - தாரணை மூலாதாரந் தொடக்கம் மேல் மேல் ஆதாரங்களில் ஒளியைத் தரிசித்தல் - தியானம்; உள்ளம் ஒருங்கித் தியானப் பொருளில் ஒன்றுதல் - சமாதி. (49)

பொருந்தியதைச் செய்க

796. நீங்கின ரிந்தவுண்மை நிலையினை நெஞ்சந் தன்னிற்
றாங்குக சகளந் தன்னைச் சங்கரன் றன்னையுன்னி
நீங்குக சகளந் தன்னை முன்னையிணி லையினீடித்
தூங்குக திரியிற் பின்னுஞ் சகள மாதரிக்கச் சூழ்ந்தே.

நீங்கினர் இந்த உண்மை நிலையினை நெஞ்சம்தன்னில்
தாங்குக சகளம் தன்னைச் சங்கரன் தன்னை உன்னி
நீங்குக சகளம் தன்னை முன்னையின் நிலையில் நீடித்
தூங்குக திரியில் பின்னும் சகளம் ஆதரிக்கச் சூழ்ந்து ஏ.

Koviloor Digital Library

உரை:

உள்ளம் ஒருமை பெற்றுத் தியான நிலையில் நீடிக்க முடியாதவர், சிவபெருமானை அம்பலவாணர், சிவலிங்கம் போன்ற உருவத் திருமேனி வடிவிலே இடைவிடாமல் மனதிலே நினைத்து வணங்குக. பின்னர், மீண்டும் மனத்தைப் பரம் பொருளோடு ஐக்கியப்படுத்தி நிலை நிறுத்துக. அது கை கூடாதபோது மீண்டும், சிவனை உருவத் திருமேனியிலேயே எண்ணுக.

விளக்கம்:

நீங்கினர் - தியான நிலையில் நிலைக்காதவர்; **உண்மை நிலை** - உருவம் இல்லாத அருவநிலை; **தாங்குக** - மேற் கொள்ளுக; **சகளம்** - உருவத்திருமேனி; **சங்கரன்** - நலம் அருளும் சிவன்; **உன்னி** - கருதி; **முன்னை நிலை** - யோகநிலை; **தூங்குக** - சிவனோடு ஒன்றி உலக நினைப்பு இல்லாமல் இருந்திடுக; **திரியில்** - கை கூடாத நிலையில்; **சூழ்ந்து** - ஆராய்ந்து; **ஆதரிக்க** - ஈடுபடுக. (50)

அகப் பூசையின் உயர்வு

797. அகத்தினுட் பூசை செய்வார்க்
கருவருப்பில்லைக் கொல்லும்
பகைத் தொழிலில் லையல்
லற்படுதலு முடலுக்கில்லை
யுகப்புறு பலமுமேலா
முறும்பல முனையினற்பஞ்
சகத்தினுட் பூசை செய்வார்
தமக்கெலாம் வருத்தஞ் சார்ந்தும்.

அகத்தினுள் பூசை செய்வார்க்கு
அருவருப்பு இல்லைக் கொல்லும்
பகைத் தொழில் இல்லை அல்லல்
படுதலும் உடலுக்கு இல்லை
உகப்பு உறுபலமும் மேலாம்
உறும்பலம் முனையில் அற்பம்
சகத்தினுள்பூசை செய்வார் தமக்கு
எல்லாம் வருத்தம் சார்ந்தும்.

உரை:

இறைவனை மனத்திற் கொண்டு அகப்பூசை செய்கிறவருக்கு இடஅழுக்கு என்பது இல்லை; உயிர்க் கொலைத் தோஷம் இல்லை; மலர் பறிக்குதல் முதலியவற்றில் வரும் உடல் வருத்தமும் இல்லை; மனமகிழ்ச்சியும் பயனும்

Koviloor Digital Library

அதிகம். வீட்டில் தனியே பூசை அறை அமைத்து, சிலையையோ படத்தையோ வைத்துப் பூசை செய்கிறவருக்குப் பூசைக்குத் தேவையான மலர் சேகரிக்க வேண்டிய சிரமம் உண்டு; படையலுக்காக, பால், பழம், பொங்கல், பாயசம் போன்றவை வைக்க வேண்டிய சிரமமும் ஏற்படும். இவையெல்லாம் புறப் பூசை. இந்த வழிபாட்டினால் உண்டாகும் பயனும் குறைவு.

விளக்கம்:

சைவ நாயன்மார் அறுபத்துமூவரில், 'வாயிலார் நாயனார்' மனத்தாலேயே சிவபிரானைப் பூசித்து முத்தி பெற்றவர். பூசலார் நாயனார் மனத்தாலேயே கும்பாபிஷேகங் கூடச்செய்தவர்.

அகப்பூசை - இது மனத்தால் செய்யும் பூசை வழிபாடு. இந்த மனப்பூசையால் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சிவ வாக்கியர்,

''செய்ய தெங்கிலே இளநீர் சேர்ந்த காரணங்கள் போல்
ஐயன்வந்து என் உள்ளம் புகுந்து கோயில் கொண்டனன்
ஐயன் வந்து என் உள்ளம் புகுந்து கோயில் கொண்டபின்
வையகத்தில் மாந்தர் முன்னம் வாய் திறப்பது இல்லையே''

(சிவ வாக்கியர் பாடல் - 30)

என்று கூறுகின்றார். உகப்பு - மகிழ்ச்சி; பலம் - பயன்.

இதில் வாய் திறப்பதில்லை என்பதற்கும் முன்குறித்த வாயிலார் என்பதற்குமிடையிலான பொருத்தங் காண்க. (51)

அகப்பூசைக்கு உரிய திருமேனி

798. மங்கல வங்குலத்தும் வளர்திருவுருவந் தன்னைத்
தங்கருத்தினுக் கே தக்க நிறத்துணிச் சலசந்தன்னு
ளெங்களுக் கிறைவா விட்ட சித்தி தாவென்றேயேத்தச்
சங்கரனவர்க் கேயிட்ட சித்தியைச் சமைப்பன்றானே.

மங்கல அங்குலத்தும் வளர்திரு,உருவம் தன்னைத்
தம்கருத்தினுக்கே தக்கநிறத்து உன்னிச் சலசம் தன்னுள்
எங்களுக்கு இறைவா இட்ட சித்தி தா என்றே ஏத்தச்
சங்கரன் அவர்க் கேஇட்ட சித்தியைச் சமைப்பன்தான் ஏ.

உரை:

எட்டு அங்குல உயரமுள்ள ஒரு சிவலிங்கத்தை நினைந்து, தம் கருத்துக்கு ஏற்ப ஒரு நிறத்தில் அதனைக் கருதி, நெஞ்சத் தாமரையில் அதனை அமர்த்தி,

Koviloor Digital Library

முறைப்படி வழிபாடு செய்து, ''எம் இறைவா! யான் அடைய விரும்பிய பொருள்கள் அனைத்தையும் அளித்து அருள் புரிவாயாக!'' என்று வேண்டி வணங்கிவர, சிவபிரான் திருவுள்ளம் மகிழ்ந்து, அவர்கள் வேண்டியவற்றை இப்பிறவியிலேயே கொடுத்து அருளுவான்.

விளக்கம்:

மங்கலம் - எட்டுமங்கலம் என்று சொல்வது மரபு. இந்த மரபுப்படி, மங்கல அங்குலம் என்பதற்கு எட்டு அங்குலம் எனப்பொருள் கொள்ளப்படுகிறது. **உன்னி** - எண்ணி; **சலசம்** - தாமரை, இங்கு நெஞ்சத் தாமரை; **இட்டம்** - விருப்பம்; **சித்தி** - அடைதல்; **இட்ட சித்தி** - விரும்பியதை அடைவது; **ஏத்த** - போற்ற; சங்கரன் நலம் அருளுகிற சிவன்; **சமைப்பான்** - கொடுப்பான். புறப்பூசையில் அமையும் கிரியாம்சங்கள் அனைத்தும் அகப்பூசையிலும் உண்டு. ஆனால் எல்லாம் மனத்தால். (52)

உயிர்களில் இறைவன் கலந்து நிற்கும் முறை

799. சராசரத் தமலனீங்காத்
தன்மையன் ஆதலாலே
சராசரமவன்றன் மேனி யெனவுணர்
தக்கோர் தாமுஞ்
சராசர வுயிர்க்குத் தாயாஞ்
சங்கர னுலகஞ் சார்ந்து
சராசர மொடுங்கும் போது
தற்பரன்றாளும் சார்வார்.

சராசரத்து அமலன் நீங்காத்
தன்மையன் ஆதலாலே
சராசரம் அவன்தன் மேனி என
உணர் தக்கோர் தாமும்
சராசர உயிர்க்குத் தாயாம்
சங்கரன் உலகம் சார்ந்து
சராசரம் ஒடுங்கும் போது
தற்பரன் தாளும் சார்வார்.

உரை:

இயங்குகிற உயர்திணையாகிய மக்களும், எறும்பு முதல் யானை வரையுள்ள அஃறிணை உயிர்களும், இயங்காத பிற பொருள்களும், இறைவன் திருமேனிகள் என மேலோர் அறிவர்; இறைவன் உயிருள்ள உயிரில்லாத எல்லாப் பொருள்களிலும் கலந்து நிற்கும் இயல்பு உடையவன்; அவனே அனைத்துக்கும்

Koviloor Digital Library

தாய் என உணர்ந்து அகப்பூசை செய்வோர் திருவருள் பெற்றுச் சிவ உலகைப் பொருந்தியிருந்து உலகமும் உலக உயிர்களும் பிற பொருள்களும் ஒடுங்குகிற ஊழிக் காலத்தில், இறைவன் திருவடிகளைப் பொருந்துவர்.

விளக்கம்:

சரம் - இயங்குகின்ற மாந்தர், விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீந்துவன ஆகியவை; அசரம் - நிலம், கல், மலை முதலியன; அமலன், மலமற்றவன் - கடவுள்; சங்கரன் - நன்மை செய்பவன் சிவன்; தக்கோர் - மேலோர்; சங்கரன் உலகம் - சிவ உலகு; சராசரம் ஒடுங்கும் போது - ஊழிக் காலத்தில். (53)

ஆறு உறுப்புகளையுடைய யோகம்

800. யோகத்தை யிங்குமங்கும்
புணரமுன் பொருந்திநின்ற
மோகத்தை முனிய
யோக மூவிரண் டங்கத்தாலே
யூகித்தே யுரைப்பாஞ்
சொல்லற் கொருபொருளல்லாவூத்தை
யாகத்தைய யலென்றாய்ந்த
வறிவுடையார் கடாமே.

யோகத்தை இங்கும் அங்கும்
புணரமுன் பொருந்தி நின்ற
மோகத்தை முனிய யோக
மூவிரண்டு அங்கத்தாலே
யூகித்தே உரைப்பாம் சொல்லற்கு ஒரு
பொருள் அல்லா ஊத்தை
ஆகத்தை அயல் என்று ஆய்ந்த
அறிவு உடையார்கள் தாம் ஏ.

உரை:

இது தான் என்று வரையறுத்துச் சொல்ல இயலாத அழுக்கு நிரம்பிய உடம்பு, நமக்குப் புறம்பானது என்று ஆராய்ந்து உணர்ந்த அறிவாளர்கள், மேல்கதியான அபரபோகத்தையும் வீடு பேறான பரபோகத்தையும் பொருந்துவதற்கு முன்னே பிறவி தோறும் தொடர்ந்த அறியாமைகள் தொலைய, ஆறு உறுப்புகளை யுடைய யோகத்தை ஆராய்ந்து சொல்லுவோம்.

விளக்கம்:

யோகம் - தியான நிலை; புணர - பொருந்த; மோகம் - ஆசை; முனிதல் - வெறுத்தல்; யூகித்து - ஆராய்ந்து; உரைப்பாம் - சொல்லுவோம்; பொருள் அல்லா

Koviloor Digital Library

- பொருட்படுத்தப்படாத; ஆகம் - உடம்பு; அயல் - சொந்தம் அல்லாதது, புறம்பானது; **யோகம் மூவிரண்டு அங்கம்** - ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற ஆறு உறுப்பு யோகம். திருமூலர் அருளிய *திருமந்திரம்* இவற்றைப் பற்றித் தெளிவாகக் கூறுகின்றது. (54)

பிராணாயாமம்

801. முந்திய பிராணாயாம முத்தி
சாதன சமாதி
யந்த மாறங்கயோக
மவற்றுளும் பிராணாயாமம்
தந்தியைப் பாகனெற்றே
தடுத்தடர்த் திடுகையற்றே
பந்தமாம் பிராணன் றன்னைப்
பயிற்று தலுரைக்கும் பாங்கால்.

முந்திய பிராணாயாமம் முத்தி
சாதனம் சமாதி
அந்தம் ஆறு அங்க
யோகம் அவற்றுள்ளும் பிராணாயாமம்
தந்தியைப் பாகன் எற்றே
தடுத்து அடர்த்திடுகை அற்றே
பந்தமாம் பிராணன் தன்னைப்
பயிற்றுதல் உரைக்கும் பாங்கால்.

உரை:

பிராணாயாமம் முதல் சமாதி ஈறாக உள்ள ஆறு உறுப்பு யோகம் முத்தி பெறுவதற்கு உரிய வழிகளுள் ஒன்று. அவற்றுள் முதன்மையானது பிராணாயாமம். பிராணாயாமம் என்பது, யானைப்பாகன் தன் பொறுப்பில் உள்ள யானையை அதன் போக்கிலே செல்லவிடாமல், அங்குசத்தால் தலையில் குத்தித் தன் வசப்படுத்துவது போல, உயிரோடு சேர்ந்திருக்கும் மூச்சுக் காற்றை, விடுத்தல், இழுத்தல், நிறுத்தல் என்ற செயல்களால் தடுத்துத் தன் வசப்படுத்துதல்.

விளக்கம்:

பிராணாயாமம் - உயிர்ப்பை தடுத்து நிறுத்தும் பயிற்சி; **முத்தி சாதனம்** - முத்தியடைவதற்குரிய வழி; **சமாதி** - உயிர் பரம் பொருளோடு ஒன்றியிருக்கும் நிலை; **அந்தம்** - இறுதி; **ஆறு அங்கயோகம்** - ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம் (ஐம்பொறி அடக்குகை), தாரணை (நினைவு ஒருமை), தியானம் (மனமொடுங்கி நினைத்திருத்தல்), சமாதி என்பன. **அங்கம்** - உறுப்பு, பிரிவு, பகுதி;

Koviloor Digital Library

தந்தி - யானை; பாகன் - செலுத்துபவன்; **எற்று** - எத்தகையது; **அடார்த்திடுகை** - கீழ்ப்படிய வைத்தல்; அற்றே - போல; பந்தம் - தொடர்பு; **பிராணன்** - உயிர்ப்பு; மூச்சு, பயிற்றுதல் - பழக்குதல்; பாங்கு - ஒழுங்கு, முறை. (55)

பிராணாயாமம் செய்யும் முறை

802. ஊன்றியே வலப்பா னாசிப்புடை விரலுதர வாயுக்
கான்றிட விடையினாலே களைக பிங்கலையினாலே
யூன்றியே யிடப்பானாசியு தரத்துள்ளூறவே பூரித்
தூன்றியே யிரண்டுங் கும்பித்திடுக பின்னுதரத்துள்ளே.

ஊன்றியே வலப்பால் நாசிப் புடைவிரல் உதரவாயு
கான்றிட இடையினாலே களைக பிங்கலையினாலே
ஊன்றியே இடப்பால் நாசி உதரத்து உள்ளூறவே பூரித்து
ஊன்றியே இரண்டும் கும்பித்திடுகபின் உதரத்துள் ஏ.

உரை:

வலக்கைப் பெரு விரலால் வலப்புற மூக்குப் பக்கத்தை அமுக்கிக் கொண்டு, இடப்புற மூக்குத் துளையால் மூச்சை மெல்ல விடுக. பின்னர், இடப்புறத் துளைப்பக்கத்தைச் சுண்டு விரலால் அமுக்கிக் கொண்டு வலப்புறத் துளையால் மூச்சை மெல்ல விடுக. பிறகு வலப்புறத் துளையால் மூச்சை மெல்ல இழுத்துக் குறிப்பிட்ட நேரம் வரை உதரத்தில் அடக்கி, இடப்புறத் துளை வழியாக மிக மெதுவாக விடுக. பின்னர், இடப்புறத் துளை வழியாக மெல்ல மூச்சை இழுத்து, குறித்த நேரம் வரை உதரத்தில் நிறுத்தி, மெதுவாக வலப்புறத் துளை வழியாக விடுக.

விளக்கம்:

வலப்பால் நாசி - வலப்பக்க மூக்குத் துளை; **உதரவாயு** - மூச்சு; **புடை** - பக்கம்; **விரல்** - இங்குக் கட்டைவிரல், சுட்டு விரல்களைக் குறிக்கும்; **கான்றிட** - வெளியேற்றுக; **இடை** - இடகலை, இடப்பக்கநாடி; **பிங்கலை** - வலப்பக்க நாடி; வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலுமம் இயங்காமல் நடுவே இயங்குவதை நடுநாடி அல்லது சுழுமுனை என்பர். மூச்சை நிறுத்தி வைக்கும் கால அளவை இத்தனை மாத்திரை என்று குறிப்பிடுவது மரபு. மாத்திரை என்பது கணப்பொழுது, கண் இமைக்கும் நேரம். இவற்றையெல்லாம் திருமந்திரம் விளக்கமாகக் கூறுகின்றது. கும்பகம் - மூச்சை அடக்குவது. (56)

பிராணாயாமம் பெயர் விளக்கம்

803. பெற்றமையா லேநீங்காப் பெற்றியைப்
பிராண னோடே
பெற்றிடும் பிராணனென்னும்
பெயரினை யனிலந்தானு

Koviloor Digital Library

மற்றதன் வருத்தந் தன்னை
மதித்துரை யாம மென்றே
பற்றுக பிராணாயாமப் பதப்
புணர்ச்சியினைப் பாங்கால்.

பெற்றமையாலே நீங்காப்
பெற்றியைப் பிராணனோடே
பெற்றிடும் பிராணன் என்னும்
பெயரினை அனிலம் தானும்
மற்று அதன் வருத்தம் தன்னை
மதித்து உரை ஆயாமம் என்றே
பற்றுக பிராணாயாமப் பதப்
புணர்ச்சியினைப் பாங்கால்.

உரை:

உயிரோடு உயிர்க் காற்று நீங்காதிருக்கும் தன்மையால் அதற்குப் பிராணன் (உயிர்ப்பு) என்றும் பெயர் உண்டாயிற்று. அதனை இரசேக பூரகங்களால் கட்டுப்பாட்டுடன் இயங்கச் செய்யும் சிரமம் நேர்தலால் 'ஆயாமம்' என்னும் பெயர் ஏற்பட்டது. இவ்வாறு உயிர்ப்பாகிய பிராண வாயுவைக் கட்டுப்பாட்டுடன் இயங்கச் செய்வது பற்றிப் பிராணாயாமம் என்னும் பெயர் ஆயிற்று.

விளக்கம்:

திருவாரூர் கருணையானந்த ஞானபூபதிகள், பிராணாயாமம் என்பதாவது: ''பிராணன், பிராணனை, ஆயாமம், தடுத்தல்; அதாவது - பிராண வாயுவை வெளிச் செல்ல விடாது தடுத்துப் பிராணனை வசமாக்குதல் எனப் பொருள் பெறும்'' என்று கூறியுள்ளார்கள்.

(நூல்: ஞானயோக ரகசியம் - 1930 - பக்கம்: 55)

பெற்றி - பெருமை; பிராணன் - உயிர்ப்பு; அனிலம் - காற்று; ஆயாமம் - கட்டுப்படுத்துதல். (57)

பிராணாயாமத்தால் நேரும் நன்மை தீமைகள்

804. அந்தரம் பெரி தேயாகு மவகதி யயாமத்தான்
வந்துறு மேன்மை நன்கு வாய்க்கினயாமம் பாச
பந்தமும் பயிற்றியச்சப்படுத்தி யங்குசத்தாற் யுற்றுந்
தந்தி வாகனறுஞ் சாலத் தளர்வனே தவறே சாரில்.

Koviloor Digital Library

அந்தரம் பெரிதே ஆகும் அவகதி ஆயாமத்தால்
வந்துஉறும் மேன்மை நன்கு வாய்க்கின்ஆயாமம் பாச
பந்தமும் பயிற்றி அச்சப் படுத்தி அங்குசத்தால் பற்றும்
தந்தி வாகனனும் சாலத் தளர்வனே தவறே சாரில்.

உரை:

பிராணாயாமம் என்பது மூச்சுப் பழக்கத்தால் ஏற்படுவது. இதனை யோக சித்தி பெற்ற ஞான யோகி ஒருவரைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு தான் பழக வேண்டும். அவ்வாறு தக்க குருவின் வழிகாட்டுதலோடு யோகம் பயில்கின்றவர் யோக சித்தி பெற்றுப் பல நன்மைகளை அடைவார். குருவின் வழிகாட்டுதல் இல்லாமல் ஒரு புத்தகத்தைப் படித்து விட்டு, யோகம் பயிலுகின்றவர் நரம்புக் கோளாறு முதலான நோய்களால் வருந்த நேரிடும். காலிலே சங்கிலி பூட்டப்பட்டு பாகன் அங்குசத்தாலே வருத்திச் செலுத்த இயங்கும் யானையின் மீது அமர்ந்து செல்லும் இந்திரனாக இருந்தாலும், பிராணாயாமமாகிய மூச்சுப் பயிற்சியிலே பிசகு ஏற்பட்டால் அதனால் மிக வருத்தமுறுவார்.

விளக்கம்:

அந்தரம் - தீமை; அவகதி - தாழ்ந்தநிலை; ஆயாமம் - மூச்சைக் கட்டுப்படுத்துதல்; வாய்க்கின் ஆயாமம் - பிராணாயாம சித்தி; பந்தம் - இது இங்குச் சங்கிலியைக் குறிக்கிறது; அங்குசம் - யானையை அடக்கும் இரும்புக் கருவி; தந்தி - களிறு, ஆண்யானை; சால - மிகவும்; தளர்வு - சோர்வு; தவறு சாரில் - பிசகு நேர்ந்தால்; தந்தி வாகனன் - யானை வாகனன் ஆன இந்திரன். (58)

வாதநோயைப் போக்கும் வழி

805. வாயு வாயாமந்தானுந்
தவறுறின் வருத்தமாக்கு
நோயுறு முற்ற நோய்கணுங்குதனு
வலக் கேண்மோ
தேயுவைத்தியானஞ் செய்யச் செறிந்த
நோயங்கந் தன்னின்
மாயுமே வாதரோக மனத்தகத்
தொருமை வாய்த்தே.

வாயு ஆயாமம் தானும் தவறு
உறின் வருத்தம் ஆக்கும்
நோய் உறும் உற்ற நோய்கள்
நுங்குதல் நுவலக் கேன்மோ

Koviloor Digital Library

தேயுவைத்தியானம் செய்யச் செறிந்த
நோய் அங்கம் தன்னில்
மாயுமே வாத ரோகம் மனத்து
அகத்து ஒருமை வாய்த்து ஏ.

உரை:

மூச்சைத் தடுத்து நிறுத்துவதில் பிசகு நேர்ந்தால் துன்பந்தரும்; வாதநோய் வந்து பொருந்தும். அந்த நோய் நீங்குவதற்கு ஓர் உபாயம் சொல்வோம்; கேட்பீராக. மன ஒருமையோடு அக்கினியைத் தியானித்தால், உடலிற் பொருந்திய வாயு நோய் தொலையும்.

விளக்கம்:

வாயு ஆயாமம் - மூச்சுக் காற்றைத் தடுத்து வசப்படுத்துதல். இது எளிதாக வாய்க்காது.

''ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கு அறிவார் இல்லை''

என்பது திருமூலரின் அருளுரை. தவறு உறின் - பிசகு நேர்ந்தால்; நுங்குதல் - நீங்குதல்; நுவல - சொல்ல; கேன்மோ - கேட்பீராக; தேயு - தீ; அங்கம் தன்னில் - உடல் உறுப்பில்; செறிந்த - பொருந்திய; வாத ரோகம் - வாயுவால் ஏற்பட்ட நோய்; மாயும் - தொலையும்; மனத்து அகத்து - மனத்தின் உள்ளே; ஒருமை - மனம் அலையாமை. (59)

நீரும் நெருப்பும்

806. அங்கியான் வருத்த முற்ற
அவயவ மதனிலாழ்ந்த
பொங்கு தண்புனலைச் சிந்தை
புரிந்திடிற் பிரிந்து போகும்
பொங்கு தண் புனலாற்றுன்பம்
பொருந்தியவுறுப்புத் தன்னி
னங்கியைத் தியானம் பண்ண
வல்லவர்க் கழியு மந்நோய்.

அங்கியால் வருத்தம் உற்ற
அவயவம் தன்னில் ஆழ்ந்த
பொங்கு தண்புனலைச் சிந்தை
புரிந்திடில் பிரிந்து போகும்

Koviloor Digital Library

பொங்கு தண் புனலால் துன்பம்
பொருந்திய உறுப்புத் தன்னில்
அங்கியைத் தியானம் பண்ண
வல்லவர்க்கு அழியும் அந்நோய்.

உரை:

தீயைத் தியானஞ் செய்ததால் உடலுறுப்புகளில் வேதனை ஏற்பட்டால், அத்தீக்கு மாறுபட்ட, ஆழமான மடுவில் நிரம்பியிருக்கும் குளிர்ந்த நீரைத் தியானித்தால், வெப்பத்தால் வந்த துன்பம் நீங்கும். குளிர்ந்த நீரைத் தியானித்ததால் உடலில் குளிர் மேலிட்டு வேதனை ஏற்பட்டால் நீருக்கு ஒவ்வாத நெருப்பைத் தியானம் செய்தால், குளிர் மிகுதியால் வந்த நோய் தொலையும்.

விளக்கம்:

தீயைத் தியானிக்கும் அக்கினி செபமும், நீரைத் தியானிக்கும் வருண செபமும் சங்கரம்த இராமாநுச மத மாத்வ மதப் பிராமணர்களுக்கு உரியவை. தீயுருவிலும் நீருருவிலுஞ் சிவனையே தியானத்தல் சைவசமயத்தினருக்கு உரிய வணக்க முறையாம். முந்திய செய்யுளிலும் இச்செய்யுளிலும் இவ்விதம் விரித்து பொருள் காண வேண்டும். அங்கி - நெருப்பு; அவயவம் - உடலுறுப்பு; தண் - குளிர்ந்த; புனல் - நீர். (60)

வெப்பத்தைப் போக்கும் முறை

807. உற்றிடி னுதரந் தன்னினு தாசனனுற்ற போதே
பற்றுக வமிர்த வெள்ளப் பாவனை யதனாற் பாறு
மற்றைய வுதக வேட்கை வரினு மிவ்வாறு செய்க
வற்றிடுமறலின் வேட்கை யாகமுங் குளிருமன்றே.

உற்றிடில் உதரம் தன்னில் உதாசனன் உற்ற போதே
பற்றுக அமிர்த வெள்ளப் பாவனை அதனால் பாறும்
மற்றைய உதகம் வேட்கை வரினும் இவ்வாறு செய்க
வற்றிடுக அறலின் வேட்கை ஆகமும் குளிரும். (அன்றே)

உரை:

முன் சொன்ன பாடலில் கூறியவாறு அக்கினி வயிற்றுத் தீயுடன் பொருந்தித் துன்பத்தை உண்டு பண்ணினால், விந்து தோன்றும் இடத்தில் இருக்கிற அமிர்தம், உடலின் உட்புறம் முழுவதும் பரவியதாகப் பாவனை செய்தால், வெப்பத்தின் துன்பம் தணியும். தவிர, மிகவும் தண்ணீர்த் தாகம் ஏற்படும் போது, முன்பு போலவே அமுத பாவனை செய்தால், தாகம் தீர்ந்து உடலும் குளிரும்.

Koviloor Digital Library

விளக்கம்:

உதரம் - வயிறு; உதாசனன் - அக்கினி; பற்றுக - செய்க; பாறும் - அழியும்; உதகம், அறல் - இவை நீரைக் குறிக்கும்; வேட்கை - விருப்பம்; ஆகம் - உடம்பு; அன்றே - அசை.

குறிப்பு:

பூசை தியானம் ஹோமம் என்ற விஷயங்களில் நெருப்பு என்ற சொற் பிரயோகம் தகுதியற்றதாகும். சொல்லாட்சிக்கும் ஒரு மரபுண்டு. அதைக் கடைப்பிடித்தல் கடனாம். (61)

நோய்களைப் போக்கும் வழி

808. உற்ற நோயுடலினா டியுணர்ந்தபின் விபரீதத்தைப்
பற்றுக பாவகத்தாற் பற்றிய வுறுப்பி னோய்கள்
அற்றிடுமைவர் வீரமடக்கியே யவாவு மாய்த்த
நற்றவர் புரிகவிந்த முறையினைப் பலிக்கு நாளும்.

உற்றநோய் உடலில் நாடி உணர்ந்தபின் விபரீதத்தைப்
பற்றுக பாவகத்தால் பற்றிய உறுப்பில் நோய்கள்
அற்றிடும் ஐவர் வீரம் அடக்கியே அவாவும் மாய்த்த
நல்தவர் புரிக இந்த முறையினைப் பலிக்கும் நாளும்.

உரை:

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளைக் கட்டுப்படுத்தி, ஆசையை ஒழித்து, நாடிகளின் நிலையை அறிந்து கொண்ட பிறகு, உடலில் பொருந்தியுள்ள நோய் தீரும்படி மனதாலே பாவனை செய்க. பின்பு, மாறுபாடாக நாடியை ஆராய்ந்தால் உடலைப் பற்றியிருந்த நோய்கள் போய்விடும். நல்ல சிவயோகியர் நாள்தோறும் இவ்வாறு செய்து வந்தால் யோக சித்தி பெறுவர்.

விளக்கம்:

நாடி - வாதபித்த சிலேட்டுமங்களைக் குறிக்கும் தாது நரம்பு; விபரீதம் - மாறுபாடு; பற்றுக - செய்க; பாவகம் - பாவனை; அற்றிடும் - ஒழியும்; ஐவர் வீரம் - ஐந்து பொறிகளின் ஆற்றல்; அவா - ஆசை; மாய்த்த - அழித்த; புரிக - செய்க; நாளும் - நாள்தோறும்; பலிக்கும் - சித்தி உண்டாகும். (62)

பாம்பின் நஞ்சைப் போக்கும் முறை

809. கடுவெயிற்றரவ மெய்யிற்
கடித்திடிற் கனலுமந்த
வுடலெல்லாமமிர்த தாரை யொழுக்கியே
நனைக்க வுள்ளத்

Koviloor Digital Library

திடமுளான் றனக்கப் போதே
தீர்ந்திடும் விடமுமற்றை
விடமுறும் போது யிந்த
நினைவுறின்விரைந்து மீளும்.

கடு எயிற்று அரவம் மெய்யில்
கடித்திடில் கனலும் அந்த
உடல் எல்லாம் அமிர்ததாரை
ஒழுக்கியே நனைக்க உள்ளத்
திடம் உள்ளான் தனக்கு அப்போதே
தீர்ந்திடும் விடமு மற்றை
விடம் உறும் போதும் இந்த
நினைவு உறின் விரைந்து மீளும்.

உரை:

நச்சுப் பற்களையுடைய பாம்பு உடலைத் தீண்டி அதனால் பாம்பின் நஞ்சு குருதியில் கலந்து, உடல் வெப்பம் மிகுதியால் துன்பம் தரும். அப்போது, பாம்பு தீண்டப்பெற்றவர் மிகுந்த மனவுறுதியுடன் தன் சிரசில் இருக்கும் அமுதம் ஒழுகி, நஞ்சு பரவிய உடலின் உள்ளுறுப்புகளை நனைப்பது போலப் பாவனை செய்து கொண்டேயிருந்தால், நஞ்சு தீர்ந்து நலம் பெறுவார். தேள், பூரான் முதலிய நச்சு உயிரிகள் தீண்டினாலும் இவ்வாறு செய்தால் நஞ்சிலிருந்து மீட்சி பெறுவார்.

விளக்கம்:

பாம்புக்குப் பகை கருடன், கருடமந்திரத்தை உருஏற்றி, பாம்பின் நஞ்சைப் போக்குகிறவர்கள் தமிழகத்தில் உள்ளனர். கேரளாவிலும் இருக்கின்றனர். ''கருடமந்திர உபாசகன் தனது ஆன்ம சத்தியினால் கருடமந்திரத்துக்கு உரிய அதிதேவதையை நினைத்த உடனே, பெரிய நஞ்சு தீர்ந்து நாகம் கடித்தவன் மரணபயம் நீங்கி எழுவது போல'' என்று திருமூலநாயனார் கூறுகின்றார்.

''கருடன் உருவம் கருதும் அளவில்
பருவிடம் தீர்ந்து பயங்கெடுமா போல்'' *(திருமந்திரம் - 2659)*

கருடன் - கருடமந்திரத்துக்குரிய அதிதேவதை வெறுங்கருடன் தியானம் பலன் தராது சிவஞான போத மாபலம் பார்க்கத்தகும்.

கடு - நஞ்சு; எயிறு - பல்; அரவம் - பாம்பு; மெய் - உடம்பு; தாரை - ஒழுக்கு; திடம் - உறுதி; விடம் - நஞ்சு. (63)

Koviloor Digital Library

யோக சித்தியின் அறிகுறிகள்

810. வாயுவைச் செயித்த செய்கை
வாய்த்ததற் கடையாளங்கள்
ஆயுரா ரோக்கியாதி யவற்றையவ்
வுடலங் காட்டு
மாயமு மனத்தினில் லைவச
முறும் புலன்களெல்லாங்
காயத்தின் மலநீர் மற்றும்
நொய் தெனக் கழியுமன்றே.

வாயுவைச் செயித்த செய்கை
வாய்த்ததற்கு அடையாளங்கள்
ஆயுர் ஆரோக்கிய ஆதி அவற்றை
அவ் உடலம் காட்டும்
மாயமும் மனத்தில் இல்லை வசம்
உறும் புலன்கள் எல்லாம்
காயத்தில் மலம் நீர் மற்றும்
நொய்து எனக் கழியும். (அன்றே)

உரை:

சிவயோகி ஒருவர் தம்முடைய மூச்சுக் காற்றைப் பயிற்சியால் தடுத்து நிறுத்தித் தன் வசப்படுத்திச் சித்தி பெற்றதைக் காட்டும் அறிகுறிகள் சில உள்ளன. அவருடைய நீண்ட ஆயுள், உடல் நலப்பொலிவு முதலியவற்றை அவருடைய உடம்பே காட்டும். அவருக்கு வஞ்சகம் இராது. உடம்பின் கழிவுகளாகிய மலசலங்கள் சிரமமில்லாமல் வெளியாகும். சுவை முதலான புலன்கள் யாவும் அவருடைய கட்டுப்பாட்டில் இருக்கும்.

விளக்கம்:

வாயுவை - மூச்சுக் காற்றை; **செயித்த** - வசப்படுத்திய; **வாய்த்ததற்கு** - வென்றதற்கு; **அடையாளங்கள்** - அறிகுறிகள்; **ஆயுர்** - ஆயுள்; **ஆரோக்கியம்** - உடல் நலம்; **உடலம்** - உடம்பு;

காட்டும் - உணர்த்தும்; **மாயம்** - வஞ்சகம்; **புலன்** - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து புலன்கள்; **காயம்** - உடல்; **நொய்து என** - எளிதாக; **கழியும்** - வெளியேறும். (64)

Koviloor Digital Library

இருவகை வளிநிலை (பிராணாயாமம்) 1. சகற்பம்

811. வாயுவினாயா மந்தானிரு
விதமாக வாய்க்கு
மாயினொன்றகற்ப மற்றையது
மகா சகற்பமாகும்
வாயின் மந்திரத்தைச் சொல்லிப்
பயிற்றலு மனத்தினாலே
தேயனைச் சிந்தை செய்தே
பயிற்றலுஞ் சகற்பந் தேரில்.

வாயுவின் ஆயாமம் தான்
இருவிதமாக வாய்க்கும்
ஆயின் ஒன்று அகற்பம் மற்றையது
மகா சகற்பம் ஆகும்
வாயில் மந்திரத்தைச் சொல்லிப்
பயிற்றலும் மனத்தினாலே
தேயனைச் சிந்தை செய்தே
பயிற்றலும் சகற்பம் தேரில்.

உரை:

வளிநிலையாகிய பிராணாயாமம், சகற்பப் பிராணாயாமம், அகற்பப் பிராணாயாமம் என இருவகை. அவற்றுள் வாயால் மந்திரத்தை மொழிந்து, மனத்தினாலே ஒளிவடிவினனாகிய சிவபிரானைத் தியானம் செய்து பிராணாயாமம் செய்வது, சகற்பம் ஆகும்.

விளக்கம்:

வாயுவின் ஆயாமம் - மூச்சுக் காற்றைக் கட்டுப்படுத்துவது; தேயன் - தேசன், ஒளி வடிவினனான சிவன்; சகற்பப் பிராணாயாமம் - மந்திரங்களோடு கூடிய வளிநிலை; ''மூச்சை இழுக்கும் போது மனத்துக்ககுள்ளேயே மூச்சுடன் சேர்த்து, 'வங், சிங், என்றாவது; 'ஓம்' என்னும் பிரணவத்தையாவது; ஒரு தலை மாணிக்கமும், சூக்கும ஐந்தெழுத்துமாகிய 'ஓம் அம்உம்சிவயநம' என்பதையாவது; இருதலை மாணிக்கமும் காரண ஐந்தெழுத்துமாகிய 'ஓம் அம் உம் சிவயவசி' என்பதையாவது பிறருக்குக் கேளாத படி செபித்தல் வேண்டும் என, கருணையானந்த ஞானபூபதி அவர்கள் கூறியுள்ளார்கள். இது சைவசமயிகளுக்கு உரியது. *(ஞான யோக ரகசியம் - 1930 - பக்கம் - 67)*

திருமந்திரம், நாலாம் தந்திரத்தில் பல மந்திரங்களும் அவற்றிற்குரிய சக்கரங்களும் விளக்கங்களோடு உள்ளன. அவற்றுள் ஏற்ற ஒன்றைத்

Koviloor Digital Library

திருவாவடுதுறைச் சைவ ஆதீனக் குருமகாசந்நிதானம் அவர்களைப் பணிந்து உபதேசமாகப் பெற்றுப் பயில்க. பிராமணத் துறவிகளுக்குத் திருமந்திர உண்மைகள் தெரியா. ஆகவே, அவர்களை நாடவேண்டா. ஆறுமுக நாவலர் பெருமான் அவர்கள் திருவாவடுதுறை ஆதினத்தோடேயே தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பது கவனிக்கத்தக்கது. (65)

இருவகைப் பிராணாயாமம் 2. அகற்பப் பிராணாயாமம்

812. அகற்பமவ் விரண்டு
மின்றியாக்கிடு மாயாமந்தான்
மகத்பல வாஞ்சையாலே பயிற்று
மாதவர்க்கு வாய்த்த
சகற்பமே யகற்பந் தன்னிற்
றரும் பலமதிகந் தாழ்ந்த
வகற்பமு மலசினர் க்குப்பலத்தினை
நொய் தினாக்கும்.

அகற்பம் அவ்இரண்டும் இன்றி
ஆக்கிடும் ஆயாமந்தான்
மகத் பல வாஞ்சையாலே
பயிற்றும் மாதவர்க்கு வாய்த்த
சகற்பமே அகற்பம் தன்னில்
தரும்பலம் அதிகம் தாழ்ந்த
அகற்பமும் அலசினார்க்குப் பலத்தினை
நொய்தில் ஆக்கும்.

உரை:

மந்திர தியானங்கள் இல்லாமல் செய்யப்படுகின்ற பிராணாயாமம் அகற்பப் பிராணாயாமம் என்று பெயர் பெறும். மிகப் பெரிய பலனை அடைய விரும்புகின்ற உயரிய தவமுடையவர்கள், மந்திர தியானங்களோடு கூடிய சகற்பப் பிராணாயாமத்தையே செய்வர். அது செய்யமாட்டாமற் சோம்பினோர் சிறுபலனைத் தரும் அகற்பப் பிராணாயாமத்தைச் செய்து அற்பப் பயனை அடைவர்.

விளக்கம்:

அகற்பம் - மந்திர, தியானம் இல்லாத பிராணாயாமம். ஆயாமம் - மூச்சுப் பழக்கம்; மகத் - மகத்து, பெருமை, பெரியவர்; வாஞ்சை - ஆசை; பயிற்றும் - பழக்கும்; மாதவர் - உயரிய தவத்தினர்; வாய்த்த - கிட்டிய; அலசினார் - சோம்பலுற்றார்; ஆலஸ்யம் - சோம்பல்; பலம் - பயன்; நொய்து - அற்பம். (66)

Koviloor Digital Library

பிராணாயாமத்தின் மேன்மை

813. இந்திய விருத்தி யெல்லாம்
பிராணனே யியக்கவேயு
மிந்தியஞ் செயிக்க வெண்ணிற்
பிராணனைச் செயிக்கப் பஞ்ச
விந்தியஞ் செயித்தார் தாமே
யெய்துவர் சமாதி தன்னை
யிந்தியஞ் செயிக்கமாட்டா ரெய்துவ
தேது மின்றே.

இந்திய விருத்தி எல்லாம்
பிராணனே இயக்க ஏயும்
இந்தியம் செயிக்க எண்ணில்
பிராணனைச் செயிக்கப் பஞ்ச
இந்தியம் செய்தார் தாமே
எய்துவார் சமாதி தன்னை
இந்தியம் செயிக்கமாட்டார் எய்துவர்
ஏதும் இன்று.

உரை:

மூச்சு இயங்கும் போது தான் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளும் இயங்கும். பொறிகளை அடக்க வேண்டுமானால், மூச்சை அடக்கி வசப்படுத்த வேண்டும். ஐந்து பொறிகளைத் தம் வசப்படுத்தி வென்றவரே கடவுள் அருள் பெற்று அவரோடு ஐக்கியம் ஆவார். பொறிகளை அடக்க இயலாதவர் அடையும் பயன் எதுவும் இல்லை.

விளக்கம்:

இந்தியம் - இந்திரியம், மெய், வாய், கண் மூக்கு, காது என்ற ஐந்து பொறிகள்; விருத்தி - வளர்ச்சி; பிராணன் - உயிர்ப்பு, மூச்சுக்காற்று; ஏயும் - பொருந்தும்; செயிக்க - வெல்ல, வசப்படுத்த; பஞ்ச இந்திரியம் - ஐம்பொறி; எய்துவர் - அடைவர்; ஏதும் - எதுவும்; இன்று - இல்லை; சமாதி - உயிர் பரம் பொருளோடு இரண்டறக் கலக்கும் நிலை, முத்தி. (67)

உயிர் இருவகைப் பயன்களை அடைதல்

814. விசையுறு பரிகளாக விரவுமிந்திரிய பேதங்
கசையதுவாக வாயுக் கற்புற்றாயாமத்தாலே
தசையுடலிரதந் தன்னைச் சாரதியாகித் தானே
யசைவது மின்றி யூருங் கொளவிருபயனு மான்மா.

Koviloor Digital Library

விசை உறு பரிகள் ஆக விரவும் இந்திரிய பேதம்
கசை அதுவாக வாயுக் கற்பு உற்று ஆயாமத்தாலே
தசை உடல் இரதம் தன்னைச் சாரதி ஆகித் தானே
அசைவதும் இன்றி ஊரும் கொள்ள இரு பயனும் ஆன்மா.

உரை:

கண், காது முதலான பொறிகள் விரைந்து செல்லும் குதிரைகள் போன்றவை. அவை மூச்சு இயக்கும் போது மட்டும் இயங்கும்; தாமாக இயங்கா. அந்த மூச்சும் பிராணாயாமத்தை முறைப்படி செய்து கும்பகமாக்கும் போது அடங்கியிருக்கும். அப்போது அது பொறிகளை இயக்காது. மூச்சு, பொறிகளை இயக்காது அடங்கியிருக்கும் போது உயிருக்கு வசப்பட்டிருக்கும். அந்த நிலையில் உயிர், இன்பம் முத்தி என்ற இருவகைப் பயன்களையும் பெறுவதற்குச் சாதனமாம்படி இறைச்சியோடு கூடிய உடலைத் தேராகவும், பொறிகளைத் தேரில் பூட்டும் குதிரைகளாகவும், மூச்சைச் சவுக்காகவும் கொண்டு, தான் தேரோட்டியாக அசைவு இல்லாமல் இருந்து, (உடலாகிய தேரைச்) செலுத்தும்.

விளக்கம்:

விசை உறு - வேகமுடைய; பரிகள் - குதிரைகள்; கசை - சவுக்கு; இந்திரியம் - பொறி; பேதம் - வேறுபாடு; ஆயாமம் - கட்டுப்படுத்தல்; இரதசாரதி - தேரோட்டி; ஊரும் - செலுத்தும்; ஆன்மா - உயிர்; (68)

உயிர் சிவன் முன்னிலையில் இயக்கும்

815. இயக்கினுடலுயிர் விதற்கி
யெனிற் பூணிக்கியந்திரத்தின்
றியக்கு விக்கு மிறைய
மலனெனிற் றொழிலுண்டிறைவனுக்கு
மியக்க மிருநிலமெய்து
யிரவிக் கேவுதலில்லை
யியக்கமிரும் பெய்தியிடுங் காந்தத்து
மிலைத் தொழிலே.

இயக்கில் உடல் உயிர் இதற்கு
என்னில் பூணிக்கு இயந்திரத்தில்
இயக்குவிக்கும் இறை அமலன் என்னில்
தொழில் உண்டு இறைவனுக்கும்
இயக்கம் இருநிலம் எய்தும்
இரவிக்கு ஏவுதல் இல்லை
இயக்க இரும்பு எய்தியிடும்
காந்தத்தும் இல்லைத் தொழில் ஏ.

Koviloor Digital Library

உரை:

எருதுகள் பூட்டப்பட்ட வண்டிதானே இயங்காது. வண்டியோட்டி அதனைச் செலுத்தும் போது தான் இயங்குகின்றது. கதிரவன் தோன்றிய பிறகு தான் பெரிய நிலத்தில் வாழுகின்ற மக்களும் பிற உயிரிகளும் தொழிற்படுகின்றனர். காந்தக் கல்லின் முன்பு தான் இரும்பு தொழிற்படுகின்றது. இரும்பு தனியே இருக்கும்போது அதற்கு இயக்கம் இல்லை. இவ்வாறே உலகம் சிவன் இயக்குவதாலேயே இயங்குகின்றது.

விளக்கம்:

பூணி - வண்டியை இழுக்கும் எருது; **இயந்திரம்** - வண்டியைக் குறிக்கும்; **அமலன்** - தூயவன்; கடவுள்; **இயக்கம்** - அசைவு; **இரு நிலம்** - பெரிய நிலம், பூமி; **இரவி** - ஞாயிறு; **ஏவுதல்** - இயக்குவது; (69)

சிவபெருமானே வினைமுதல்வன்

816. அவயவத்துங்காரிய மெய்யாதிய தற்கமலனிறை
யவயவத்த விரதாதிகாரிய முண்டாக்கினர் மெய்
யவயமுமாக்கு மறிவ தற்குமுதற் காரணத்தின்
றவயவத்தாற் பந்திக்கப்படுமவர்க்கு மவர் வினைக்கும்.

அவயவத்தும் காரியம் மெய் ஆதியதற்கு அமலன்இறை
அவயவத்த இரதஆதி காரியமும் உண்டாக்கினர் மெய்
அவயமும் ஆக்கும் அறிவதற்கு முதல் காரணத்தில்
அவயவத்தால் பந்திக்கப்படும் அவர்க்கும் அவர் வினைக்கும்.

உரை:

உடம்பு, மெய், வாய், கண் மூக்கு, செவி ஆகிய உறுப்புகளோடு சேர்ந்து தொழிற்படும், இந்த உடலையும் அதன் உறுப்புகளையும் தனக்கு ஒரு வடிவம் இல்லாத இறைவனே உருவாக்குகிறான். ஒரு தேர், தேர்த்தட்டு, உருளையை நிலைப்படுத்தும் அச்சு முதலானவற்றைச் செய்கிற திறமை வாய்ந்த சிற்பி, உடலுறுப்புகளோடு தோன்றுகிறானே என்றால் அவ்வுறுப்புகளை அவன் தாமே ஆக்கிக் கொள்ளவில்லை; ஆக்கிக் கொள்ளவும் இயலாது. மேன்மையான செயல்களைப் புரியவல்ல உறுப்புகளைக் கொண்ட உடல் தோன்றுவதற்கும் இறைவனே தலைவன்; வினைமுதல்.

விளக்கம்:

அவயவம் - உடலின் உறுப்பு; **காரியம்** - தொழில், செயல்; **மெய்** - உடம்பு; **அமலன் இறை** - கடவுளே தலைவன்; **அவயவத்த** - உறுப்புகளையுடைய; **இரதம்** - தேர்; இது குதிரைகளால் இழுக்கப்படும் வண்டி. **பந்திக்கப்படுதல்** - கட்டுண்ணுதல்; **வினை முதல்** - நிமித்த காரணன். (70)

Koviloor Digital Library

மாணாக்கன் ஐயம் தெளிதல்

817. அமலனிறை சடச் செயல்களனைத்
தினுக்கு மெனிலனுக்கள்
சமலரவர்சபக்கத் திற்றலை
வரெனச் சாற்றினையென்
விமலவவரதிபால ரெனிற்
காட்சி விருத்தமுண்
டெமலமற விருந்தவனே
பரிகார மிவற்றியம்பாய்.

அமலன் இறைசடச் செயல்கள்
அனைத்தினுக்கும் என்னில் அணுக்கள்
சமலர் அவர் சபக்கத்தில் தலைவர்
எனச் சாற்றினை என்
விமல அவர் அதிபாலர் என்னில்
காட்சி விருத்தம் உண்டு
எம்மலம் அற இருந்தவனே
பரிகாரம் இவற்று இயம்பாய்.

உரை:

உயிர்கள் செய்யும் செயல்கள் எல்லாவற்றுக்கும் மலத்தொடக்கு இல்லாத சிவனே காரணன் என்று கூறி, அதற்கு எடுத்துக்காட்டாகத் தேர் செய்த சிற்பியைக் கூறினீர்கள். மலத்தால் மறைக்கப்பட்ட வரைக்காரணர் என்று கூறியது ஏன்? தவிர, சிறப்பான மலத்தோடு பொருந்திய அவர் காரணர் ஆகார் என்றால், அச்சிற்பியை நம் கண்முன்னால் காண்கிறோம். ஆதலால், எல்லாவற்றுக்கும் சிவனே காரணர் என்று சொல்வது, கண்ணால் கண்ட காட்சிக்கு மாறானது. எம்முடைய மலத்தை அகற்றுவதற்குத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருப்பவரே! இந்த ஐயத்தைப் போக்ககுவீர்களாக.

விளக்கம்:

அமலன் – மலத் தொடக்கில்லாதவன்; இறை – சிவன்; சடம் – அறிவற்றது; சமலர் – மலத்தொடு கூடியவர். உயிர்கள்சபக்கம் – ஒத்த பக்கம் சார்பான உதாரணம்; சாற்றினை என் – கூறியது ஏன்; விமல அவர் – கடவுள்; அதிபாலர் – காரணர்; விருத்தம் – முரண்; எம் – எம்முடைய; மலம் – அழுக்கு, அறியாமை; பரிகாரம் – இங்கு ஐயம் தெளிவித்தல்; இயம்பாய் – சொல்லுவீராக. (71)

Koviloor Digital Library

ஆசிரியர் கூறும் விடை

818. ஆக்கையு மாக்குதற்கு
வலரலரணுக் கடமக்கமலன்
ஆக்கையு மாக்குவன வருட் சிலர்க்
கவருட் சிலர் சிலருக்
காக்கையு மாக்குவர
வருட்சிலர் சிலருக்கவருள்ளு
மாக்கையும் பிந்தின ரிரத
மாதியு நின் மலனருளால்.

ஆக்கையும் ஆக்குதற்கு வல்லார் அல்லார்
அணுக்கள் தமக்கு அமலன்
ஆக்கையும் ஆக்குவன் அவருள் சிலர்க்கு
அவருள் சிலர் சிலருக்கு
ஆக்கையும் ஆக்குவர் அவருள்
சிலர் சிலருக்கு அவருள்ளும்
ஆக்கையும் பிந்தினர் இரதம்
ஆதியும் நின்மலன் அருளால்.

உரை:

உயிர்கள் தமது உடம்பு முதலானவற்றைத் தாமாக உண்டாக்க மாட்டார்கள். பரமசிவன் சுத்த மாயையை தொழிற்படுத்தி அணு சதாசிவர், அட்டவித்தியேசுரர், சப்தகோடி மகா மந்திரர்களையும் உண்டாக்குவான். அந்த விஞ்ஞானகலருள் பரமசிவன் அனந்தாதிகளைத் தொழிற்படுத்தி, அசுத்த மாயையில் படைத்தல் முதலான தொழில்களைப் பண்ணுவிப்பான்; அனந்ததேவர், சீகண்ட பரமேசுரனைத் தொழிற்படுத்தி அவரால் பிரகிருதி மாயையில் உண்டாகும் படைப்பு முதலிய தொழில்களைச் செய்விப்பர்; அந்தச் சீகண்ட பரமேசுரன், பிரமாவைத் தொழிற்படுத்தி மண், நீர், தீ, காற்று, விண் ஆகியவற்றின் தூல உருவப் படைப்பைப் பண்ணுவித்து, அதில் ஆண்பெண் பேதப் படைப்பால் எல்லா உயிர்களையும் உண்டாக்கி அப்பரமசிவனே அருளால் தச்சன் முதலானவர்கள் மூலம் தேர் முதலியவற்றையுஞ் செய்விப்பான்.

விளக்கம்:

இப்பாடல் படைப்பு முதலானவற்றைச் சாத்திர அடிப்படையில் கூறுகின்றது. ஓதுவா மூர்த்திகளின் மேற்கண்ட விளக்கத்தை இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ள அருணந்தி சிவாசாரியாரின் சிவஞான சித்தியாரை உரையோடு படித்துணர வேண்டும். சென்னை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கையும் சிறந்த உரைக்ளோடு இரண்டு பகுதிகளாக வெளியிட்டிருக்கிறார்கள். இவை பயனுள்ளவை.

Koviloor Digital Library

குறிப்பு:

அஷ்டவித்யேஸ்வரர், சப்தகோடி மகாமந்திரர், அதிட்டித்தல் சைவ சித்தாந்த நூல்களில் நெடுங்காலம் ஆட்சிப்பட்ட சொற்கள், அவற்றுக்குத் தம்மாலான ஆட்சி வலுவுண்டு. அவற்றைப் பிரயோகிக்கத் தவறக் கூடாது. மேலும் அதிட்டித்தல் என்ற சொல்லை எப்படி மாற்றினாலும் அதன் உள் பொருள் புலப்படாது. நிலைப் படுத்தல் என்ற கருத்து அதற்கில்லை. அதி+ஸ்தா என்பது அதன் தாது; அதன் பொருள் மேற்கொண்டு நிற்றல். ஸ்தா - நில். அதிமேற் கொண்டு என்ற பொருள் தரும். முன்னெட்டு எனவே மேற்கொண்டு நின்று இயக்கி என்றால் தான் அதன் பொருள் வெளியாகும். தொழிற்படுத்துதல் என்பதும் அதற்குச் சமமாகலாம். சதாசிவர் அநந்தரைத்தாம் மேற்கொண்டு நின்று அசுத்த மாயா சிருஷ்டியும் சதாசிவரால் மேற்கொள்ளப்பட்ட அநந்தர் சீகண்டருத்திரரை மேற்கொண்டு நின்று பிரகிருதி மாயா சிருஷ்டியும் நிகழ்கின்றன என்பதே உண்மை நிலை. பிரகிருதி மாயை, பிரகருதி மாயை தான்; இயற்கை மாயையன்று. மாயை மாயை தான்; அதில் இயற்கை மாயை செயற்கை மாயையென்றில்லை. இயற்கை என்ற பொருளில் பிரகருதி வழங்கும் சந்தர்ப்பம் வேறு, தத்துவக் குறிக்கையில் அது அர்த்தமற்றதாகும். (72)

படைக்கப்பட்டவர்கள் மேலான தலைவர் அல்லர்

819. உற்பவத்து முடலாதி
யுண்மையினு மொடுக்கத்தும்
அற்பறிவின்றி ரோதான
மனுக்கிரக மெனுமிவற்றுந்
தற்பரனால் விளைவுள தாந்
தலைவரலர் தமோவினைக்குஞ்
சிற்கனன னாதியம லன்சிவன்
சாதகன் தேசால்.

உற்பவத்தும் உடல் ஆதி
உண்மையிலும் ஒடுக்கத்தும்
அற்ப அறிவின் திரோதானம்
அனுக்கிரகம் என்னும் இவற்றும்
தற்பரனால் விளைவு உளதாம்
தலைவர் அல்லர் தமோ வினைக்கும்
சிர்கனன் அநாதி அமலன்
சிவன் சாதகன் தேசால்.

உரை:

பிரபஞ்சத்தின் அழிவு காலம் முடிவடைந்து, பரமசிவன் உடம்பு உறுப்பு உலக நுகர் பொருள்களை மீள உண்டாக்கும் வேளையிலும், அழிவையடைந்து

Koviloor Digital Library

அடியிற் கிடக்கிற காலத்திலும், ஊழிமுடிவு வந்த வேளையிலும், பக்குவம் பெற்ற உயிர்களுக்குப் பரமசிவன் அருள் செய்வார். அவர்களுள் உயரிய பக்குவமடைந்த சிலரைத் தம் திருவடிகளிலே சேர்த்துக் கொள்ளுவார். சில்ரை, அதிகாரத் தலைவர்களாக ஆக்கி, அவர்களுக்குச் சுத்தமாயை தவிர்த்த இரண்டு மாயைகளில் உண்டாக்கப்பட்ட அதிகாரத் தலைவர்கள் எல்லார் மூலமும் பரமசிவனால் அருளப்பட்ட அதிகாரத் தலைவர்கள் எல்லார் மூலமும் பரமசிவனால் அருளப்பட்ட அனந்தாதிகளைக் கொண்டு அருளல் முதலான ஐந்து தொழில்களையும் பண்ணுவிப்பார். அந்த வேளையிலும் சிவனால் மலநீக்கம் பெற்றவர்களைத் தவிர ஏனையோர் அருளல் முதலியவற்றை மேற்கொள்ளார். அதிகாரத் தலைவர்கள் மேலான தலைவர்கள் அல்லர். இனி, காத்தற் காலத்தில் பக்குவம் பெற்ற உயிர்களின் மலத்தைப் போக்கியும், அறிவுடைய உயிர்களை மறைப்பு ஆற்றல், (அவர்களுடைய மல ஆற்றலைச்) செலுத்தாமல் கைவிட்டு அருள் செய்த போதும், குரு முதலானவர்கள் மலத்தை நீக்கும் வேளையிலும், மெய்யறிவை அருளும் சிவனுடைய அருளாற்றல் அவர்களிடம் இருக்கும். ஆதலால் அவர்கள் சிவனருளால் தலைவராக விளங்குவர்.

விளக்கம்:

உற்பவம் - பிறப்பு; திரோதானம் - மறைப்பு; அனுக்கிரகம் - அருள்; தற்பரன் - சிற்கனன், அநாதி அமலன் - இறைவனைக் குறிக்கும். தேசு - ஒளி. (73)

பரமசிவனுக்கு உருவம் இல்லை

820. உண்மையினான் முதற்பக்கத்
துறுதலினாற் சபக்கத்தும்
நண்ணுமுரு நான்கிறையை ஞாபகக்
காரியம் பணுவா
னண்ணு முருவைந்தினையு மிருளிலி
நான் குருவினை மெய்
பண்ணினனு மவனறிவு
முடலிலியும் பலமாமே.

உண்மையினால் முதற்பக்கத்து
உறுதலினால் சபக்கத்தும்
நண்ணும் உருநான்கு இறையை
ஞாபகக் காரியம் பண்ணுவான்
நண்ணும் உருஐந்தினையும் இருள் இல்லி
நான்கு உருவினை மெய்
பண்ணினனும் அவன் அறிவும்
உடல் இல்லியும் பலமாம் ஏ.

Koviloor Digital Library

உரை:

இப்பூமியில் குடம் முதலான அறிவில்லாத பொருள்கள் தாமாகத் தோன்றுவதில்லை. அவை அறிவுள்ள குயவரால் செய்யப்படுவதைக் காண்கிறோம். இவ்வாறே ஒத்தப் பக்கமான மேலான மாயைகளிலும் உடல் உறுப்பு உலகம் நுகர் பொருள்கள் தாமாகத் தோன்றவில்லை அவற்றை உண்டாக்கிய ஒருவன் உள்ளான். சிவனுடைய திருமேனி என்று சொல்லப்படுகிற உருவம் நான்கும் அருவுருவம் ஒன்றும் சேர்ந்த ஐந்து திருமேனிகளும் இருள் அற்று ஒளிவடிவமாக இருக்கும் சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் அருவமாகிய திருமேனிகன் நான்கும், ஆக ஒன்பது திருமேனிகளையும் செயற்படுத்துகிறவன் உருவம் இல்லாத பரமசிவனே ஆவன். எனினும், அச்சிவன் அருளைப் பெற்ற அதிகாரத் தலைவர்களாலும் உலகம் பயன் பெறும்.

விளக்கம்:

சபக்கம் - ஒத்தபக்கம்; அதாவது துணியும் பொருளுக்கு ஒத்தாசையான பொருள் உள்ள பக்கம்; நான்கு அரு - சிவம், சத்தி, நாதம், விந்து; இல்லி - இல்லாத; மெய் - திருமேனி; பலம் - பயன். (74)

பிராணாயாம விதி உரைத்தல்

821. ஆயாம மறைபொழு
திலறைந்த வனுபாடணத்தாற்
றேயாரு மனுமானவித
மூன்றினுறத் தெருளத்
தாயானை யனைத்துயிர்க்குந்
தற்பரனைச் சிற்கனனை
நேயாரு நெஞ்சினர்க்கு நிறையு
றவே நிகழ்த்தினமே.

ஆயாமம் அறைபொழுதில்
அறைந்த அனுபாடணத்தால்
தேயாரும் அனுமான விதம்
மூன்றில் உறத் தெருளத்
தாயானை அனைத்து உயிர்க்கும்
தற்பரனைச் சிற்கனனை
நேயாரும் நெஞ்சினர்க்கு நிறை
உறவே நிகழ்த்தினம் ஏ.

Koviloor Digital Library

உரை:

பிராணாயாம விதி கூறும் போது அனுபாடணத்தால் சொல்லத் தக்க ஆற்றல் பொருந்துவதால் விளக்கம் பொருந்திய மூன்று வகை ஆராய்தலாலும், பொருத்தமாக அறிய எல்லா உயிர்களுக்கும் தாய் போல் ஆதரவாக இருக்கிற மேலான சிவனை, அறிவே வடிவமாக உள்ளவனை, அன்பு பொருந்திய உள்ளம் உடையவர்களுக்கு ஏற்றத் த்தாழ்வு உண்டாகாமல் வரையறையோடு சொல்லுகின்றோம்.

விளக்கம்:

ஆயாமம் - மூச்சுப் பழக்கம்; **அறை** - சொல்லுதல்; **தே** - அருள்; **அனுமானவிதம் மூன்று** - துணி பொருள், ஏது, திருஷ்டாருதம் என்ற மூன்று வகை. இவை அநுமானத்தின் பகுதிகள். **வகை** - பகுதி; **தெருள** - தெளிவு பெற; **தற்பரன்** - கடவுள்; **சிற்கனன்** - அறிவே வடிவாக விளங்குபவன்; **நிறை** - ஏற்றத் தாழ்வு இல்லாமை;

குறிப்பு:

கருதலளவை, வழியளவை, உய்த்துணர்தல் மூன்றும் ஒன்றே. மூன்றல்ல, இங்கு அநுமான வகையென்றது அநுமானத்தின் பகுதி. அவை துணிபொருள், ஏது, திருஷ்டாந்தம் என்பன.

துணிபொருள் - இவ்வுலகு ஒரு கருத்தாவையுடைத்து; **ஏது** - காரியம் ஆகையால்; **திருஷ்டாந்தம்** - குடம் போல; **அநுபாஷணம்** - பாஷணம், சொல்லல். **அநு** - தொடர்ந்து, அதாவது தொடர்ந்து சொல்லல்; முன்னைய உரையில் பிரசாங்காப் பிரசங்கம் என்றது அதனையே.

மேற் குறித்த அநுமான பகுதிகளாற் கடவுள் உண்மை தொடர்ந்து பேசப்பட்டு வருகின்றது என்பது பொருள். (75)

பிராணாயாமக் கால அளவு

822. **கைத்தலத் தாலேசா னுப்புரிவலங்**
கணிக்க வீரெட்
டத்தொகையனைத்து மொன்றே யாகு
மாத்திரை யாயாமத்
துத்தம நாற்பத் தெட்டா
மொருபது மிரண்டு நீச
மத்திம மெண்மூன்றாங்கை நொடியு
மாத்திரை மாட்டார்க்கே.

Koviloor Digital Library

கைத்தலத்தாலே சானுப்புரிவலம்
கணிக்க ஈரெட்டு
அத்தொகை அனைத்தும் ஒன்றே
ஆகும் மாத்திரை ஆயாமத்து
உத்தமம் நாற்பத்து எட்டாம் ஒரு
பத்தும் இரண்டும் நீசம்
மத்திமம் எண்மூன்றாம் கை
நொடியும் மாத்திரை மாட்டார்க்கு ஏ.

உரை:

இடக்கையினாலே இடக்காலின் முழங்காலைப் பதினாறு முறை சுற்றி எண்ணினால், அது ஒரு மாத்திரை. அந்த மாத்திரை நாற்பத்து எட்டைக் கொண்டது உயரிய பிராணாயாமம்; இருபத்து நான்கு மாத்திரை அளவைக் கொண்டது நடுத்தர பிராணாயாமம்; பன்னிரண்டு மாத்திரை அளவைக் கொண்டது தாழ்ந்த தரப் பிராணயாமம். இவ்வாறு செய்ய முடியாதவர்கள், முன் சொன்ன எண்ணிக்கையில் கைநொடித்தலை மாத்திரை அளவாகக் கொள்க.

விளக்கம்:

கைத்தலத்தால் - கையால்; சானு - முழங்கால்; புரி - சுற்றுதல்; மாத்திரை - மூச்சைக் கட்டுப்படுத்துகிற நேரத்தின் அளவு; உத்தமம் - உயரியது; மத்திமம் - நடுத்தரம்; நீசம் - இழிவு; கைநொடி - விரல் தெறித்து ஒலி உண்டாக்குதல்; மாட்டார் - முடியாதவர். (76)

தருப்பைப் புல்லின் உயர்வு

823. குசை நுதிநீரை நாளுங்
குடித்திட விடை விடாதே
தசதச வருடங் கூடத்
தங்கிய பலத்தைச் சார்வார்
இசைவுடன் பிராணாயாம மியற்றின
ரொருகால் விண்ணில்
அசைவற விருக்க யாக
மனைத்தையு மியற்றினாரே.

குசைநுதி நீரை நாளும்
குடித்திட இடை விடாதே
தசதசம் வருடம் கூடத்
தங்கிய பலத்தைச் சார்வார்

Koviloor Digital Library

இசைவுடன் பிராணாயாமம் இயற்றினர்
　　ஒருகால் விண்ணில்
அசைவுஅற இருக்க யாகம்
　　அனைத்தையும் இயற்றினார் ஏ.

உரை:

காலை மாலை வழிபாடுகள் செய்து முடித்த வேளைகளில் ஒருவர் நாள் தோறும் இடைவிடாமல் தருப்பைப் புல்லின் நுனியிலிருந்து விழுகிற நீரை வலது உள்ளங்கையிலே ஏற்றுப் பருகினால், நூறு ஆண்டுகள் பிராணாயாமம் செய்த பயனைப் பெறுவார். இவ்வாறு பிராணாயாமம் செய்த பலனைப் பெற்றவர், யாகங்கள் எல்லாவற்றையும் செய்தவர் பெறுகின்ற சுவர்க்கத்தைப் பொருந்துவார்.

விளக்கம்:

இப்பாடல் குறிப்பிடுகிற தருப்பைப் புல்லின் நீரைப் பருகுதல் பொதுவாகத் தருப்பைப் புல்லால் செய்த தடுக்கின் மீது ஒரு தூய வெள்ளைத் துணியை விரித்து அதன்மீது அமர்ந்து பலர் பிராணாயாமம் செய்வதுண்டு. சிலர் தருப்பைத் தடுக்கின் மீது மான் தோலை விரித்து, அதனை வெள்ளைத் துணியால் மூடி, அதன் மீது அமர்ந்து பிராணாயாமம் செய்வதும் உண்டு.

குசை - குசம், தருப்பைப் புல்; நுதி - நுனி; தச தசம் - பத்துப் பத்து; விண் - இங்குச் சுவர்க்கத்தைக் குறிக்கும்.

குறிப்பு:

தருப்பை மகிமை சைவத்திலும் பேணப்பட்டுள்ளது. அதை நிராகரித்தல் ஆகாது. குற்ற நீக்கத்துக்கு மந்திர நீரைத் தருப்பையால் தொட்டுத் தெளித்தல் பிரசித்தம். விசேட கிரியைகளில் எஜமானுக்குத் தருப்பையால் தீர்த்தங் கொடுப்பது உண்டல்லவா. (77)

பிரத்தியாகாரம் அல்லது நினைவு ஒருமை

824. மனத்தையும் விடயம் தன்னின்
　　மறித்துளே யடக்கி வைத்துப்
பினைச் சலியாமை செய்கை
　　பிரத்தியாகாரம் வேதத்
தெனைத்துள யாகபேத
　　மனைத்தையு மியற்றினார்கள்
மனத்தையு மறித்தமைந்தரவர்
　　சிவபுரத்துள் வாழ்வார்.

Koviloor Digital Library

மனத்தையும் விடயம் தன்னில் மறித்து
உள்ளே அடக்கி வைத்துப்
பின்னைச் சலியாமை செய்கை
பிரத்தியாகாரம் வேதத்து
எனைத்து உள்ள யாகபேதம்
அனைத்தையும் இயற்றினார்கள்
மனத்தையும் மறித்த மைந்தர்
அவர் சிவபுரத்துள் வாழ்வார்.

உரை:

மனதை அதன் போக்கிலே போக விடாமல் தடுத்து நிறுத்துக. அவ்வாறு தடுத்து நிறுத்திய மனம் மீண்டும் இயங்காமல் ஒருமுகப்பட்டு அடங்கியிருப்பது பிரத்தியாகாரம் அல்லது நினைவொருமை ஆகும். மனம் அடங்கப் பெற்ற தீரர்கள் இருக்கு வேதம் கூறுகிற அசுவமேதம் முதலான பலவகை யாகங்களையும் செய்த பயனைச் சிவபுரத்திற் பெறுவார்.

விளக்கம்:

விடயம் - பொருள்; மறித்து - தடுத்து; பின்னை - பிறகு; சலியாமை - இயங்காமை; பிரத்தியாகாரம் - நினைவொருமை; மைந்து - வலிமை, வீரம்; மைந்தர் - தீரர். (78)

தாரணை

825. நசையுடனிதயப் போதினாட்டிய பொருளிற் சித்த
மசை வறநிறுத்தறானே தாரண மதனைச் செய்தார்
கசிவுறு மூவேழ் சுற்றங் கடுநரகதனின் மீட்டு
யிசையுறு சிவலோகத்துளிருப்பரே விருப்பமிக்கே.

நசையுடன் இதயப் போதில் நாட்டிய பொருளில் சித்தம்
அசைவு அறநிறுத்தல் தானே தாரணம் அதனைச்செய்தார்
கசிவு உறு மூஏழ் சுற்றம் கடுநரது அதனில் மீட்டும்
இசை உறு சிவலோகத்துள் இருப்பரே விருப்பம்மிக்கு ஏ.

உரை:

ஆசையுடனே நெஞ்சத் தாமரையில் குறித்த ஒரு பொருளில் மனதைச் சிறிதும் இயங்காமல் தடுத்து நிறுத்துதல் தாரணை எனப் பெயர் பெறும். இதனை நாள்தோறும் முறையாகச் செய்து வருகிறவர், தம்முடைய இருபத்தொரு தலைமுறையைச் சேர்ந்த உறவினர்களை நரகத்திலிருந்து மீட்டு, புகழ் பொருந்திய சிவஉலகில் வாழும்படி செய்து, தாமும் உடனிருந்து மகிழ்வர்.

Koviloor Digital Library

விளக்கம்:

நசை - ஆசை; இதயப் போது - நெஞ்சத்தாமரை; நாட்டிய - குறித்த; சித்தம் - இது இங்கு அடிமனத்தைக் குறிக்கும்; அசைவு அற - இயங்காமல்; தாரணம் - தாரணை, நினைவு ஒருமை; கசிவு உறு - இரங்கத்தக்க; மூஏழ் - மூன்று ஏழு; இருபத்தொரு; சுற்றம் - உறவினர்; மீட்டு - எடுத்து; இசை - புகழ்.

குறிப்பு:

இதயப் போது என்றது இதயம் சிவ யோகவிஷயத்தில் அது 12 இதழ்த் தாமரையாய் விரிதல் பற்றிப் போது எனப்படும். அது ஆதாரங்கள் ஆறில் மூன்றாவதான அனாகதத்தைக் குறிக்கும். இதனால் மற்றைய ஆதாரங்களும் உபலக்கணத்தால் தழுவப்படும். (79)

தியானம்

826. ஆற்றிடைப்புனறா னெற்றேய
விச்சினமாக வோடன்
மாற்றற வற்றே யீசன்
மலர்ப்பதத் தறிவை வைத்துக்
கேற்றுற நிற்கை தானே
தியானமித் தியானஞ் செய்தார்
மாற்றியே நரகிற் சுற்றமவர்களைப்
போல வாழ்வார்.

ஆற்று இடைப் புனல் தான்
எற்றே அவிச்சின்னம் ஆக ஓடல்
மாற்று அற அற்றே ஈசன்
மலர்ப்பதத்து அறிவை வைத்து
ஏற்று உற நிற்கை தானே
தியானம் இத்தியானம் செய்தார்
மாற்றியே நரகில் சுற்றம்
அவர்களைப் போல வாழ்வார்.

உரை:

ஆற்றிலே இடைவிடாமல் சென்று கொண்டிருக்கின்ற நீரோட்டம் போல, மனம் இறைவன் திருவடி மலர்களை இடையறாமல் தொடர்ந்து பற்றி நிற்க எண்ணுவதே தியானம். உயர்வான இந்தத் தியான முறையை நாள்தோறும் முறையாகச் செய்து வருகின்றவர், தம் உறவினர்களை நரகத்திலிருந்து விடுவித்து, அவர்கள் நற்கதி பெற்று வாழ வைத்துத் தாமும் அவர்களைப் போல வாழ்வர்.

Koviloor Digital Library

விளக்கம்:

புனல் - நீர்; அவிச்சின்னமாக - இடைவிடாமல்; அற்றே - போல; மலர்ப்பதம் - மலர் போன்ற திருவடி; ஏற்று - ஏற்றம்; உற - அடைய; தியானம் - அகவழிபாடு; சுற்றம் - உறவு. (80)

மந்திரத்தை உருஏற்றும் முறை

827. மானதமந்த மற்றைப் பாடித வசன மென்றாத்
தானொரு மூன்றாஞ் சாத்து மந்திரந் தகைமை சார்ந்த
மானத மனத்தினாலே மந்திரிப்பது வேவாய்க்க
வேனைய மந்தஞ் சற்றேயிதமுறவியம் பறானே.

மானதம் மந்தம் மற்றைப் பாடித வசனம் என்றாத்
தான் ஒரு மூன்றாம் சாற்றும் மந்திரம் தகைமை சார்ந்த
மானதம் மனத்தினாலே மந்திரிப்பதுவே வாய்க்க
ஏனைய மந்தம் சற்றே இதம் உற இயம்பல் தானே.

உரை:

மானதம், மந்தம், பாடித வசனம் என மூன்று வகைகளில் மந்திரம் உரு ஏற்றப்படும். ஒரு மந்திரத்தை பிறருக்குக் கேட்கும்படி சொல்லிக் கொண்டே உரு ஏற்றுவது கீழ்த்தரமானது. இதுவே பாடித வசனம்; உதடுகள் மாத்திரம் அசைந்து, ஒலி வெளிப்படாமல் வாய்க்குள்ளே மவுனமாக உரு ஏற்றுவது மந்தம் ஆகும்; மந்திரத்தையும் அதன் பொருளையும் உணர்ந்து மனதாலேயே உரு ஏற்றுவது பெருமை வாய்ந்த மானதம் ஆகும்.

விளக்கம்:

மானதம் - மனதுக்குள்ளே சொல்லிக் கொள்வது, மனத் தொடர்பு உடையது. மந்தம் - தரம் குறைந்தது; பாடிதம் - பேசுதல், வாசிகம்; மந்திரம் - மறைமொழி. ஆசிரியரால் பக்குவப்பட்ட மாணாக்கருக்கு, தனி இடத்தில் உபதேச முறையில் உரைக்கப்படுவது. பத்தாம் திருமுறை, சிவமந்திரமாகிய திருஐந்தெழுத்தை மிக நுணுக்கமாக, உபதேச முறையில் விளக்குகின்றது. அந்த ஐந்தெழுத்து மந்திரமே திருமந்திரம். தகைமை - மேலானது; இயம்பல் - சொல்லுதல். (81)

முன்பாடலின் தொடர்ச்சி

828. அருகிருந்தவர் தாங் கேட்க
வறைதல் பாடணமேயாதி
திருவுருக் கருதிச் செப்பிற்
சிறப்புடைத் தெல்லாந் தூல

Koviloor Digital Library

வுரை தனிற் சிறப்பே மந்த
வுரையது தன்னிற் சாலப்
பெருமையை யுடைத்தே நெஞ்சிற்
பேசிடாப் பேச்சுத்தானே.

அருகு இருந்தவர் தாம்
கேட்க அறைதல் பாடணமேஆதி
திருஉருக் கருதிச் செப்பில் சிறப்பு
உடைத்து எல்லாம் தூல
உரை தன்னில் சிறப்பே மந்த
உரை அது தன்னில் சாலப்
பெருமையை உடைத்தே நெஞ்சில்
பேசிடாப் பேச்சுத்தான் ஏ.

உரை:

ஒரு மந்திர மொழியைப் பக்கத்தில் இருப்பவர் காதுகளில் விழும்படி உச்சரிப்பது பாடிதம் ஆகும். எனினும், இறைவனுடைய உருவத் திருமேனியின் முன்னே அம்மூர்த்திக்கு உரிய மந்திரத்தைப் பிறர் அறியச் சொல்வது சிறப்பேயாகும். பாடிதத்தைவிட, வாய்க்குள்ளே மவுனமாக மந்திரத்தை ஓதுவது சிறப்பாகும். இந்த மந்த உரையினை விட, ஆசிரியர் கற்பித்த மந்திரத்தை நெஞ்சில் பதித்து, மனஒருமையோடு ஓதாதோதுதல் மிகப் பெருமை வாய்ந்தது.

விளக்கம்:

அருகு - பக்கத்தில்; அறைதல் - சொல்லுதல்; பாடணம் - வாசிகம்; திருஉரு - திருமேனி, விக்கிரகம்; தூல உரை - வாசிகம்; சால - மிகவும்; பேசிடாப் பேச்சு - மனதுக்குள் சொல்வது ஓதாதோதுவது. (82)

சமஸ்கிருத இலக்கண மரபு

829. உற்றிடு முயிரொவ் வொன்றே
யுயர்ந்து யார்ந்தொரு மூன்றாகு
மற்றைய வுன்னதாதி கூடலு
மொன்பான் வாய்க்கும்
பற்றிட நாசி நீங்கப்
பத்துட னெட்டாமீரா
றுற்றிடு முயிரு மோர்ந்துச்சரிக்கவே
பலிக்கு மோதில்.

Koviloor Digital Library

உற்றிடும் உயிர் ஒவ்வொன்றே உயர்ந்து
உயர்ந்து ஒரு மூன்று ஆகும்
மற்றைய உன்னத ஆதி
கூடலும் ஒன்பான் வாய்க்கும்
பற்றிட நாசி நீங்கப்
பத்துடன் எட்டாம் ஈராறு
உற்றிடும் உயிரும் ஓர்ந்து
உச்சரிக்கவே பலிக்கும் ஓதில்.

உரை:

இப் பாடல் சமஸ்கிருத இலக்கண மரபுப்படி அமைந்துள்ளது. இதற்கு உரையாசிரியரான ஒதுவா மூர்த்திகள் வரைந்துள்ள உரை வருமாறு:-

அகரம் முதலாக உள்ள உயிர் எழுத்துகளைத் தனித்தனியே உச்சரிக்கும் போது ஒவ்வொன்றும் மும்மூன்றாகப் பேதப்படும். அஃதாவது உயர உச்சரிப்பது உதாத்தம்; தாழ உச்சரிக்கிறது அனுதாத்தம்; சமமாய் உச்சரிக்கிறது சுவரிதம்; இவ்வாறு மூன்று விதமாம். இந்த மூவிதமும் ஒவ்வொன்று மும்மூன்றாக ஒன்பது பேதமாம். அஃதாவது ஒரு மாத்திரை கொண்டது இலகு. இரண்டு மாத்திரை கொண்டது குரு. மூன்று மாத்திரை கொண்டது புலுதம். இப்படி உதாத்தம் மூன்றும், அனுதாத்தம் மூன்றும், சுவரிதம் மூன்றுமாக ஒன்பதாம். இந்த ஒன்பதையும் நாசியைக் கூட்டி உச்சரிக்குமிடத்து சானு நாசிகம் எனப் பெயர் பெறும். நாசிகம் கூடாமல் உச்சரிக்கும் போது நிரனு நாசிகம் என்று பெயர் பெறும். இப்படிப் பதினெட்டுப் பேதமாம். அகர முதலிய உயிரெழுத்துப் பதினாறுள் அலி எழுத்து நாலு நீக்கி, நின்ற பன்னிரண்டு உயிரெழுத்தும்- செப காலத்திலே அந்தந்த மந்திரத்துப் பிரயோகத்துக்கீடாக அறிந்து உச்சரிக்கில் மந்திர சித்திவரும்.

விளக்கம்:

உதாத்தம் - எடுத்தலோசை; அனுதாத்தம் - படுத்தலோசை; சுவரிதம் - நலிதலோசை. (83)

மந்திரத்தை விதிப்படி உச்சரிக்க வேண்டும்

830. அந்தரத்தியங்கவல்ல வசுரரு மணுகமாட்டார்
சிந்திய சித்தக் கொத்தைப் பேய்களுந் தீண்ட மாட்டா
செந்தழ லென்ன வஞ்சித் தீயவாயரவுந்தீண்டா
மந்திர நவிற்று வாரை மறலியு மஞ்சுமன்றே.

அந்தரத்து இயங்கவல்ல அசுரரும் அணுக மாட்டார்
சிந்திய சித்தக் கொத்தைப்பேய்களும் தீண்ட மாட்டா
செந்தழல் என்ன அஞ்சித் தீயவாய் அரவுந் தீண்டா
மந்திரம் நவிற்று வாரை மறலியும் அஞ்சும்(அன்றே).

Koviloor Digital Library

உரை:

ஆசிரியரிடம் உபதேசமாகப் பெற்றுக் கொண்ட ஒரு மந்திரத்தை முறைப்படி உரு ஏற்றுகின்ற அடியவரை வானவெளியிலே செல்லும் ஆற்றலுடைய அசுரரும் அணுகார்; பலவகை எண்ணங்கள் உள்ள குருட்டுப் பேய்கள் தொடமாட்டா; சிவந்த நெருப்பு எனப் பயந்து கொடிய நஞ்சுடைய பாம்புகளும் தீண்டமாட்டா; எல்லாரையும் துன்பத்துக்கு உள்ளாக்கும் எமனும் அஞ்சுவான்.

விளக்கம்:

அசுரர் - திதி என்பளும் அதிதி என்பவளும் தக்கனுடைய புதல்விகள். இவர்கள் காசிபனை மணந்தார்கள். இவர்களில் திதி என்பவளுடைய மக்களைத் தைத்தியர், அரக்கர், அசுரர் என்று கூறுகிறார்கள். அதிதி என்பவளுடைய மக்களைத் தேவர், சுரர் என்று கூறுகிறார்கள். **சிந்திய சித்தம்** - கலங்கிய உள்ளம்; **கொத்தை** - குருடு; **செந்தழல்** - சிவந்த நெருப்பு; **தீயவாய்** - நச்சுப்பற்கள் உள்ள வாய்; **மறலி** - எமன்; திருஐந்தெழுத்தை ஓதிய மார்க்கண்டனது உயிரைக் கவர வந்த எமனே தன் உயிரை இழந்தான் என்பது புராணம். அன்றே - அசை. (84)

முன் பாடலின் தொடர்ச்சி

831. வினைகளு மஞ்சும் வெய்ய வினைஞரும் அஞ்சுவார்க
ணினைவினிலிட்ட மெல்லாமவர்க்கொரு கணத்தினேருந்
துனையவே சுழன்று போகுந் துட்டசார்த் தூல மற்று
மனிதருணல்லா ரேயோ வமரரும் வாஞ்சிப்பாரே.

வினைகளும் அஞ்சும் வெய்ய வினைஞரும் அஞ்சுவார்கள்
நினைவினில் இட்டர் எல்லாம் அவர்க்கு ஒரு கணத்தில் நேரும்
துனையவே சுழன்று போகும் துட்ட சார்த்தூலம் மற்றும்
மனிதருள் நல்லார் ஏயோ அமரரும் வாஞ்சிப்பார் ஏ.

உரை:

மந்திர மொழியை விதிப்படி உருஏற்றுகிற அடியாரைத் தீய வினைகள் நெருங்க அஞ்சும்; தீயவர்களும் அணுகப் பயப்படுவர். அந்த அடியவர் விரும்பியவை அனைத்தும் ஓர் இமைப் பொழுதில் பெறுவார். கொடிய புலியும் மயங்கி விரைவிலே ஓடிவிடும். நல்ல மனிதர்களும் நட்புடன் வந்து பொருந்துவர்; தேவரும் பிரியங் கொள்வர்.

விளக்கம்:

வினைகள் - தீயவை; **வெய்ய** - கொடிய; **வினைஞர்** - தொழில் செய்பவர்; **இட்டம்** - விரும்பியவை; **கணம்** - இமைப்பொழுது; **நேரும்** - வந்து

Koviloor Digital Library

சேரும்; **துனைய** - விரைவாக; **சுழன்று** - தலை சுழன்று, மயக்கமுற்று; **துட்ட** - கொடிய; **சார்த்தூலம்** - புலி; **அமரர்** - விண்ணவர்; **வாஞ்சிப்பார்** - பிரியப்படுவார். (85)

வேண்டும் வரம் தரும் வள்ளல்

832. பரமனை யொருமை
கூரப்பாவனை பண்ணியுள்ளே
யுரைதனிலதிக நுன
மொழியவே விதியினோதிப்
பரவிடும் பத்தர் முன்னைப்
பாவமும் பறிப்பன் வேண்டும்
வரமெலாங் கொடுப்பன் வள்ளன்
முத்தியு மவர்க்கே வாய்க்கும்.

பரமனை ஒருமை கூரப்
பாவனை பண்ணி உள்ளே
உரை தன்னில் அதிக நூனம்
ஒழியவே விதியின் ஓதிப்
பரவிடும் பத்தர் முன்னைப்
பாவமும் பறிப்பன் வேண்டும்
வரம் எல்லாம் கொடுப்பன் வள்ளல்
முத்தியும் அவர்க்கே வாய்க்கும்.

உரை:

மேலான சிவபிரானை மிகுந்த ஒருமைப்பாட்டுடன் மனதில் எண்ணியும், திரு ஐந்தெழுத்தை ஏற்றத் தாழ்வு இல்லாமல் முறைப்படி ஓதியும் துதிக்கின்ற அடியவருடைய முற்பிறப்புப் பாவங்களைச் சிவன் அகற்றுவான். அவர்கள் வேண்டும் வரங்களை இப்பிறப்பிலேயே அருள்வான். அவர் முத்தியையும் பெறுவார்.

விளக்கம்:

பரமன், வள்ளல் - இவை சிவபிரானைக் குறிக்கும்; **பாவனை** - தியானம்; **நூனம்** - குறைபாடு; **பரவுதல்** - துதித்தல்; **பத்தர்** - அடியவர்; **முன்னை** - முன்பிறப்பு; **பறிப்பன்** - அகற்றுவான்; **வரம்** - தெய்வத்தின் மூலம் பெறும் பேறு; **முத்தி** - சிவப்பேறு. (86)

Koviloor Digital Library

சமாதியின் இலக்கணம்

833. பொருளெனு மாத்திரத்தாய்ப் புலனிறந்
திரவி கண்ணுக்
கிருளறுத் திலங்கலென்ன
வெண்ணகத் திலங்கியெங்குந்
திரையறயுததியெல்லாந் தேங்கல் போல்
விம்மிச் சித்தங்
கருதுரு வல்லாமூலங்
கண்டிரண்டறல் சமாதி.

பொருள் என்னும் மாத்திரத்தாய்ப்
புலன் இறந்து இரவி கண்ணுக்கு
இருள் அறுத்து இலங்கல்என்ன எண்ணம்
அகத்து இலங்கி எங்கும்
திரைஅற உததிஎல்லாம் தேங்கல்போல்
விம்மிச் சித்தம்
கருதுஉரு அல்லாமூலம் கண்டு
இரண்டு அறல் சமாதி.

உரை:

உண்மைப் பொருளாக மட்டும் விளங்குவதும், சுவை, ஒளி முதலான புலன்கள் அடங்கி, ஞாயிற்றின் ஒளி கண்ணிலே பொருந்தியுள்ள இருளை அகற்றி ஒளிருதல் போல, கருதிய நினைவு உள்ளே விளங்க, ஆரவாரிக்கும் அலைகள் இல்லாத கடல் எல்லா இடங்களிலும் நிறைதல் போல, நிறைந்து பொலிந்து, உள்ளத்தால் கருதும் உருவம் அல்லாத எல்லாவற்றுக்கும் காரணமானதுமான சிவபரம் பொருளைக்கண்டு அதனுடன் பிரிவு இல்லாமல் கலந்திருப்பதே சமாதி.

விளக்கம்:

மாத்திரம் – மட்டும்; இறந்து – செயல் அற்று; இரவி – ஞாயிறு; இலங்கல் – விளங்குதல்; அகத்து – உள்ளே; திரை அற – அலையின்றி; உததி – கடல்; விம்மி – பொங்கிய; சித்தம் – உள்ளம்; உரு – வடிவம்; மூலம் – காரணம்; அறல் – நீங்குதல்; சமாதி – உயிர் பரம் பொருளோடு கலந்திருக்கும் நிலை. (87)

சமாதி சித்திபெறுவதற்கு உரிய முறை

834. இடையினு மியங்கிடாதே பிங்கலை தனினும் வாயு
நடுமுனை நாடி தன்னினடக்குமேற் சமாதி வாய்க்குந்
திடமுடைச் சிலையே யென்னச் சித்திரமென விருப்பர்
விடயமு முணராரந்தக் கரணமும் வேறுபட்டே.

Koviloor Digital Library

இடையினும் இயங்கிடாதே பிங்கலை தன்னிலும் வாயு
நடுமுனை நாடி தன்னில் நடக்குமேல் சமாதி வாய்க்கும்
திடம்உடைச் சிலையே என்னச் சித்திரம் என இருப்பர்
விடயமும் உணரார் அந்தக் கரணமும் வேறுபட்டு ஏ.

உரை:

சமாதி நிலையை அடைவதற்கு, மூச்சுக் காற்று இடப்பக்க மூக்குத் துளையிலும், வலப்பக்க மூக்குத் துளையிலும் நடையிடாமல், நடுநாடியாகிய சுழு முனையில் நடையிடும் வேளை ஏற்றது. அப்போது மனம், அறிவு, நினைவு, முனைப்பு என்ற அகக்கருவிகள் அடங்கி நிற்க மனம் ஒரு முகப்பட்ட ஆழ்ந்த தியான நிலையில் கற்சிலை போலவும் ஓவியம் போலவும் அசைவு இல்லாமல் இருத்தலே சமாதி நிலையை அடையும் வழி.

விளக்கம்:

இடைகலை - இடநாடி, இடப்பக்க மூக்குத் துளையோடு தொடர்புறும் நாடி; **பிங்கலை** - மூக்கின் வலப்பக்கத்து துளையோடு தொடர்புறும் நாடி; **சுழுமுனை நாடி** - நடு நாடி; **விடயம்** - பொருள்; **சமாதி** - அகக் கருவிகளும் மனமும் அடங்கிச் சித்தம் தியானப் பொருளில் ஆழ்ந்த தியானநிலை; **அந்தக்கரணம்** - மனம், அறிவு, நினைவு, முனைப்பு என்ற நான்கு அகக் கருவிகள். (88)

சமாதிநிலை சித்திபெற்றவர் அடையும் பயன்

835. அட்டமாசித்தியென்ற வணிமாதி யவர்க்கேயாகு
மிட்டமாஞ் சந்தோ பேதமியற்றவும் வல்லரென்னின்
முட்டற வேதமாகி மொழியவும் வல்லர்நல்ல
துட்டியாற் சமாதி தன்னிற்றூங்கிய தூயோர் தாமே.

அட்டமா சித்தி என்ற அணிமாஆதி அவர்க்கே ஆகும்
இட்டமாம் சந்தசு பேதம் இயற்றவும் வல்லர் என்னில்
முட்டுஅற வேதம் ஆதி மொழியவும் வல்லர்நல்ல
துட்டியால் சமாதி தன்னில் தூங்கிய தூயோர் தாம் ஏ.

உரை:

மனநிறைவோடு சமாதி நிலையில் தம் உடலை மறந்த நிலையில் ஆழ்ந்திருக்கும் சிவ யோகிக்கு அணிமா முதலான எட்டுச் சித்திகளும் கைகூடும். அவர் விருப்பத்தோடு சந்தசு முதலான சமஸ்கிருத இலக்கண நூல்களை இயற்றவல்லவர். வட இந்திய பழைய மொழியில் எழுதப்பட்டிருக்கிற இருக்கு

Koviloor Digital Library

முதலான மத நூல்களையும், பிற்காலச் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டிருக்கிற புராணங்களையும் முழுமையாக அறியவும், அவற்றைப் பிறருக்கு எடுத்துக் கூறவும் வல்லவர் ஆவர்.

விளக்கம்:

துட்டி - மன நிறைவு; அட்டமாசித்திகள் - எட்டுப் பெரும் சித்திகள்; சமாதியில் தூங்கல் - ஆழ்ந்த தியானத்தில் தம் உடலை மறந்து ஒன்றி இருக்கும் நிலை. அணிமா - எட்டுவகைச் சித்திகளில் முதற்சித்தி. முட்டு - தடை; சந்தோ - சந்தசு, ஆரிய மொழியில் எழுதப்பட்டிருக்கிற வேத அங்கங்களுள் ஒன்றாய், யாப்பிலக்கணம் கூறும் நூல். (89)

எட்டுவகைச் சித்திகளின் விவரம்

836. அணுவினு நுண்ணுருவுகொளலனிமா வாழளற்றினதி வேகத்
தியங்கியுந் தோய்வற்றவுடலகிமாத்,
திணிய பெருவரையென மெய்ச் சிறப்புறுகை மகிமாச்
சிந்தித்த பலமெவையுஞ் செறிந்துறுகை பிராத்தி,
பிணைவிழியாராயிரவ ரொடும் புணர்ச்சிபெறுகை பிராகாமி
யீசிதை மாவலியுமடி பேணன்,
மணமலர்போ லெவராலும் வாஞ்சிக்கப் படுகைவசி
வசிதை வலியாராற்றடுப் பரிய வாழ்வே.

அணுவினும் நுண்உருவு கொள்ளல்அணிமா; ஆழ்
அளற்றில் அதி வேகத்து இயங்கியும் தோய்வு அற்ற உடல் இலகிமா;
திண்ணிய பெருவரையென மெய்ச்சிறப்பு உறுகைமகிமா;
சிந்தித்தபலம் எவையும் செறிந்து உறுகை பிராத்தி;
பிணை விழியார் ஆயிரவரோடும் புணர்ச்சிபெறுகை பிராகாமி;
ஈசிதைமாவலியும் அடிபேணல்;
மணமலர்போல் எவராலும் வாஞ்சிக்கப்படுகை வசி;
வசிதை வலியாரால் தடுப்பு அரிய வாழ்வு ஏ.

உரை:

அணுவினும் சிறிய வடிவு கொள்வது அணிமா; மிக வேகத்துடன் சேற்றினுள் அழுந்தியிருந்தும் சேறுபடாமல் எழுந்திருப்பது இலகிமா; பெரியமலை போல வடிவு கொள்ளுதல் மகிமா; விரும்பிய இன்பங்களைப் பெறுதல் பிராத்தி; ஒரே நேரத்தில் பலராக மாறிப் பெண்கள் பலரைப் புணர்ந்து இன்புறுதல் பிராகாமியம்; எல்லாத் தேவர்களையும் தன் கட்டளைப்படி செய்வித்தல் ஈசத்துவம்;

Koviloor Digital Library

எல்லாராலும் விரும்பப்படுவது வசித்துவம்; எவராலும் தடுக்க முடியாத வலிமையைப் பெறுதல் வசிதை.

ஆழ் அளற்றின் அதிவேகத்து இயங்கியும் எனப்பதச் சேதஞ் செய்க.

விளக்கம்:

அட்டமாசித்தி - எட்டுவகைச் சித்தி. அவை: அணிமா, இலகிமா, மகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம், வசிதை என எட்டு.

திண்ணிய - வலிமையான; **பலம்** - பயன்; **பிணை** - பெண்மான்; **வஞ்சித்தல்** - பிரியப்படுதல். (90)

சிவயோக சமாதியாளரின் பெருமை

837. அடைந்திடுஞ் சமாதியாளர்க்கமரருஞ் சிறப்பு செய்வார்
திடம்படு சித்தத்தாலே யவற்றினைத் தீண்டாதார்க்கு
நடம்பயினாதன் வேண்டும் வரத்தினை நல்கியென்று
முடன்பிரியாத பேறுமுதவுவன் கருணையுற்றே.

அடைந்திடும் சமாதியாளர்க்கு அமரரும் சிறப்புச்செய்வார்
திடம்படு சித்தத்தாலே அவற்றினைத் தீண்டாதார்க்கு
நடம்பயில் நாதன் வேண்டும் வரத்தினை நல்கி என்றும்
உடன்பிரியாத பேறும் உதவுவன் கருணைஉற்று ஏ.

உரை:

சிவயோக சமாதி நிலையினை அடைந்தவர்க்குக் கிடைக்கும் எட்டு வகைச் சித்திகளையும் வெறுத்த சிவயோக சமாதியாளரை விண்ணவரும் மதித்துப் போற்றுவர். அவர்கள் விரும்பியதைத் தில்லையில் திருக்கூத்து இயற்றும் அம்பலவாணர் தருவதோடு, தம்மை என்றும் பிரியாத முத்திப் பேற்றையும் அருள் செய்வார்.

விளக்கம்:

அமரர் - அமுதம் உண்டு சாகாவரம் பெற்றவர்கள் என்பது புராண மரபு. **அவற்றினைத் தீண்டாதார்** - எட்டுவகைச் சித்திகளையும் விரும்பாத சிவயோகி. சித்தியை நாடினால் முத்தி கிட்டாது. **திடம்படு சித்தம்** - தளராத மனவுறுதி; **நடம் பயில் நாதன்** - திருக்கூத்து இயற்றும் நடன அரசர், அம்பலவாணர், தில்லைக்கூத்தன்; **நல்கி** - தந்து; **உடன் பிரியாத பேறு** - முத்தி; **கருணை** - அருள். (91)

Koviloor Digital Library

திருஐந்தெழுத்தை ஓதுவது சிறப்பு

838. அதிகமா யாமந்தன்னி லறுவரையடக்கு மாற்றால்
அதிகமேய தனினாக்கை மனத்தினை யனகன் பாதத்
ததிகமே யதனிற் சித்தத் தவிச்சினத் தியானமம்ம
வதிகமே யதனினுள்ளத் தரனை வைத்தறையும் வாக்கே.

அதிகம் ஆயாமம் தன்னில் அறுவரை அடக்கும் ஆற்றால்
அதிகமே அதனில் ஆக்கை மனத்தினை அனகன் பாதத்து
அதிகமே அதனில் சித்தத்து அவிச்சின்னத் தியானம்அம்ம
அதிகமே அதனில் உள்ளத்து அரனை வைத்துஅறையும் வாக்கு ஏ.

உரை:

பிராணாயாமத்தால் பெறும் பயனை விட, மாயாசக்திகள் என்னும் ஆசை முதலான ஆறு உள்பகைவரை அடக்கி வெல்லுவது உயர்வு. இதனைவிட, இறைவன் திருவடிகளில் மனம் பொருந்தியிருக்குமாறு செய்வது உயர்வு. இதனைவிட, உள்ளத்தில் இடையறாமல் செய்து வருகின்ற தியான நிலை உயர்வு. இவை எல்லாவற்றையும்விட சிவபிரான் திருமேனியை உள்ளத்திலே பதித்து, திருஐந்தெழுத்தை ஓதுவது அதி உயர்வாகும்.

விளக்கம்:

ஆயாமம் - பிராணாயாமம்; **அடக்கும் ஆற்றால்** - வெல்லும் வழி; **அறுவர்** - ஆசை, சினம், கடும்பற்றுள்ளம், மயக்கம், செருக்கு, பொறாமை என்ற ஆறு உள்பகை. காமக் குரோத லோப மத மார்ச்சரியம். **ஆக்கை** - இங்கு இது செய்தல், ஆக்குதல் என்னும் பொருளைக் குறிக்கும். **அனகன்** - குற்றமில்லாதவன், கடவுள்; **சித்தம்** - உள்ளம்; **அவிச்சின்னம்** - இடைவிடாமல்; **தியானம்** - நினைவு, அகவழிபாடு; **அரன்** - அடியவரின் பாவங்களை அறுப்பவன், சிவன்; **அறையும் வாக்கு** - ஓதப்படும் திருவைந்தெழுத்து. (92)

முன்பாடலின் தொடர்ச்சி

839. வாக்கினுமதிக மூல
வாக்கினு மனத்தினாலு
நோக்கரும் பொருளைத்
தன்னுணோக்கற நோக்குநிட்டை
நோக்கிடிற் பலங்கடானு
நுவன்ற விம்முறையானோன்மை
யாக்குவ னவற்றை யெல்லா
மன்பருக்கனாதி முத்தன்.

Koviloor Digital Library

வாக்கிலும் அதிகம் மூல
வாக்கிலும் மனத்தினாலும்
நோக்க அரும் பொருளைத் தன்னுள்
நோக்கு அறநோக்கும் நிட்டை
நோக்கிடில் பலங்கள் தானும்
நுவன்ற இம்முறையால் நோன்மை
ஆக்குவன் அவற்றை எல்லாம்
அன்பருக்கு அனாதிமுத்தன்.

உரை:

மூலவாக்காகிய வைகரி வாக்காக உச்சரிப்பதிலும் மந்த ஒலியால் மந்திரத்தை உரு ஏற்றுவது மேன்மை. அதிலும் எழுத்து வடிவங்களுடன் மூர்த்தியை நினைந்து மனதால் செபித்தல் மேன்மை. அந்த மந்த செபத்தைப் பார்க்கிலும் பரம்பொருளை நோக்காது நோக்குஞ் சமாதிநிலை மேன்மை. இவற்றின் பலன்களும் இங்கு சொன்ன கிரமத்தில் ஒன்றுக்கொன்றதிகமாகும். அப்பலன்களை அவற்றின் தரம் அறிந்து அடியவருக்கு இறைவன் அருள் புரிவான்.

விளக்கம்:

மூலவாக்கு - வாக்கு நான்கனுள் தெளிவாகச் செவிக்குக் கேட்கும் எழுத்து வடிவான ஒலி; நோன்மை - பெருமை; நிட்டை - தியான நிலை; அநாதிமுத்தன் - மலத் தொடக்கம் இல்லாத சிவன். (93)

சிவயோக தியானத்தால் அடையும் பயன்

840. சிலரேண யோகர் திடமாகமேனி
சிவலோகராக மெனவே
பலகாலம் வாழ்வர்படி நீதியாள்வர்
பசுபாச நாசமுறவே
நிலனீறுமாய வருகாலமேய
நிகழ்வாய காயமறவே
மலமாசு மாய வமலேசர்
பாதமலர்சூடி வாழ்வர் மகிழ்வால்.

சிலர் ஏண யோகர் திடமாக
மேனி சிவலோகர் ஆகம் எனவே
பலகாலம் வாழ்வர் படிநீதி ஆள்வர்
பசுபாசம் நாசம் உறவே

Koviloor Digital Library

நிலன்ஈறும் ஆய வருகாலம் ஏய
நிகழ்வு ஆய காயம் அறவே
மலம்மாசுமாய் அமல ஈசர்பாதமலர்சூடி
வாழ்வர் மகிழ்வால்.

உரை:

சிவயோகப் பயிற்சியால் தியானநிலை அடைந்த ஞானயோகியரிற் சிலர், சிவ உலகில் அச்சிவனுடைய உருவத் திருமேனி போன்ற உடலை அடைந்து நெடுங்காலம் வாழ்ந்து உலகு எங்கும் நீதி செலுத்துபவர்களாய், பசுபாசங்கள் அகல நடமாடி, ஊழிக்காலத்தில் மலக் குற்றங்கள் நீங்கவும், உடல் மாறவும் பெற்று மேலான சிவபிரான் திருவடி மலர்களைப் பொருந்திப் பேரின்பத்துடன் வாழ்வர்.

விளக்கம்:

ஏணயோகர் - நிலைபேறு பெற்ற யோகிகள்; மேனி, ஆகம் - உடம்பு. பலகாலம் - நெடுங்காலம்; படி - பூமி; நாசம் - அழிவு; காயம் - உடல். நிலன் ஈறும் ஆய வருகாலம் - உலகமுடிவு, ஊழி; ஈறு - இறுதி; மாசு - குற்றம்; அமல ஈசர் - தூய சிவன்; பாதமலர் - திருவடிகள்; மாய - ஒழிய; சூடி - அணிந்து. (94)

அடியார் பெறும்பயன்

841. அறுமாசை கோபமவை நாசமாகவறு
மேறுபாச மறலு
மறவே செய்பாவ மறனாக
மாயுமது மாயமாயையகலு
மறமாயை தானு மகமாயை
தீருமது தீரமூலமலமு
மறமூலநோயு மமலேசர்
பாதமடைவார்கள் யோகரடியார்.

அறும்ஆசை கோபம் அவை நாசமாக
அறும் ஏறுபாவம் அறலும்
அறவே செய்பாவம் அற ஆகம்மாயும்
அதுமாய மாயை அகலும்
அறமாயை தானும் மகமாயை
தீரும் அதுதீரமூலமலமும்
அறமூலநோயும் அமல ஈசர் பாதம்
அடைவார்கள் யோகர் அடியார்.

Koviloor Digital Library

உரை:

சிவஞான யோகிகளுக்குப் பணிவிடை செய்யும் அடியார்களின் ஆசை, கோபம், உலோபம், மயக்கம், செருக்கு, பொறாமை ஆகிய ஆறு உட்பகைகளும் நீங்கும். அவை நீங்கவே இப்பிறவியில் ஈட்டும் புண்ணிய பாவங்கள் அவர்களைச் சாரா. அவை சாராமற் போகவே, சிவஞானியின் அருள் நோக்கால் முன்பே அனுபவித்தது போக எஞ்சியுள்ள கன்மம் கெடும். அது கெடவே, தூலஉடல் அழியும். அது மீண்டும் பிறக்காமல் கன்மமும் மாயையின் செயலாகிய சூக்கும உடலும் அழியும். அது அழிய, அசுத்தமாயை அகலும். அது அகலவே, சூக்குமை முதலான வாக்குகள் அடங்கும். அவை அடங்க, சுத்த மாயையும் தீரும். அதுதீர, மூலமலம் அற்றுப் போகும். மூலமலம் அற்றதும் நின்மலனாகிய சிவபிரான் திருவடிகளை அடைவர்.

விளக்கம்:

ஆகம் - உடம்பு; மாயை - உடல் தோன்றுவதற்குக் காரணமாக இருப்பது. சூக்குமை வாக்கு - நால்வகை வாக்குகளில் எழுத்தினை உச்சரிக்கத் தொடங்கும் போது, தொப்பூழிலிருந்து எழுவதாகக் கருதப்படும் பரை என்னும் ஒலி. (95)

சிவமும் சத்தியும்

842. சிவன்றனக் கவனியந்தஞ் சகமதி தூலதேகம்
அவனுடற்றூல மாறாறாருயிர் வர்க்கஞ் சூக்கம்
பவன்றனக்குயிர்க்குமப்பாற் பராபரை பரமசூக்கம்
அவன்சிவன் பரமசத்திதனையனு பவிப்பனார்ந்தே.

சிவன் தனக்கு அவனி அந்தம் சகம்அதி தூலதேகம்
அவன் உடல்தூலம் ஆறுஆறு ஆருயிர்வர்க்கம் சூக்கம்
பவன்தனக்கு உயிர்க்கும் அப்பால் பராபரை பரமசூக்கம்
அவன்சிவன்பரமசத்தி தன்னை அனுபவிப்பான் ஆர்ந்து ஏ.

உரை:

பரமசிவனுக்கு நாதம் முதல் பிருதிவி ஈறாக முப்பத்தாறு தத்துவங்களில் தோன்றிய அளவில்லாத விண்ணுலகும் நிலப்பரப்பும், உயிர்களின் பருவுடல்களும் மிகப் பருமனாக இருக்கும். சிவனுக்குப் பரு உடலாக இருப்பவை முப்பத்தாறு தத்துவங்கள். உயிர் வடிவங்கள் அனைத்தும் சிவனுக்கு நுண் உடல்களாக இருக்கும். அந்த உயிர் வடிவங்களுக்கு மேம்பட்டிருக்கிற மேலான இறைவி, உயிர்களின் வடிவங்களைவிட மிக நுண்மையாக இருப்பாள். சிவன் தன்னுடைய பராசத்தியோடு பேரின்பத்தை நுகர்ந்து கொண்டிருப்பான்.

Koviloor Digital Library

விளக்கம்:

அவனி - பிருதிவி; அந்தம் - ஈறு; சகம் - உலகம்; ஆர்ந்து - பொருந்தி; தூலதேகம் - பருவுடல்; ஆறு ஆறு - முப்பத்தாறு; வர்க்கம் - வகை; பவன் - சிவபெருமான்; பராபரை - பராசத்தி; பரம - மேலான; சூக்கம் - நுண்மை; பரமசத்தி - மேல ான ஆற்றல், இறைவி. தத்துவம் - பொருள்களின் குணம், மூலப்பொருள். (96)

ஆன்மா ஆன்மசத்தி விஷயம்

843. பாரியைப் பரர்கண்பார்வைப் படாப்பதி
விரதை தன்னை
யாரிய முணர்ந்த
காந்தனவடனைத் திளைப்பனார்ந்தே
பாரியைப் பரர்கண்பார்வைப்
படாபராசத்தி தன்னை
யாரிய னனாதி
முத்தனவடனைத் திளைப்பனார்ந்தே.
பாரியைப் பரர்கண்பார்வைப்
படாப்பதிவிரதை தன்னை
ஆரியம் உணர்ந்த காந்தன் அவள்
தன்னைத் திளைப்பன் ஆர்ந்தே
பாரியைப் பரர் கண் பார்வைப்
படாப் பராசத்தி தன்னை
ஆரியன் அனாதிமுத்தன் அவள்தன்னைத்
திளைப்பவன் ஆர்ந்து ஏ.

உரை:

உயிர் ஆற்றலாகி அந்தந்த உயிருக்கே உரித்தாய்ப் பிறரிடத்துச் செல்லாத கற்பரசியாக இருக்கிற சத்தியை, வடமொழி ஆகமங்களை நன்றாக ஆராய்ந்த அறிஞனான கணவன், மும்மலங்கள் நீங்கிய ஐக்கியத்தைப் பெற்ற போது பொருந்திக் களங்கம் இல்லாத இன்பத்தை நுகருவான். இனி, இயல்பாகவே மலங்களிலிருந்து நீங்கிய மேலான சிவனும் தன்னைவிட்டு அகலாது இருக்கிற பராசத்தியைப் பொருந்திப் பேரின்பமயமாயிருப்பன்.

விளக்கம்:

பாரி - மனைவி; பரர் - பிறர்; பதிவிரதை - கற்பு உடையவள்; ஆரியம் - சமஸ்கிருதம், வடமொழி; காந்தன் - கணவன்; திளைத்தல் - அனுபவித்தல்; ஆர்ந்து - பொருந்தி; பராசத்தி - இறைவி; ஆரியன் - இது இங்கு சிவனைக் குறிக்கும். அநாதி முத்தன் - இயல்பாகவே மலங்கள் இல்லாத இறைவன். (97)

Koviloor Digital Library

முத்தியில் ஆன்மா தற்சொருபத்தை இச்சித்தலால் அல்லாமல் தன்சத்தியைப் பொருந்துதலினாலேயே இன்புறும்

844. மண்டலத்தவரு மற்றையவர்களும்
வாஞ்சை செய்தே
யொண்டொடியாரை யின்ப
முறுவரேயவர் தோளொன்றிக்
கண்டிலந் தம்மைத்தாமே காமுறல்
களிப்பார் தங்கள்
எண்டனக் கெட்டானிச்சித் திறைவியைத்
திளைக்கு மென்றும்.

மண்தலத்தவரும் மற்றையவர்களும்
வாஞ்சை செய்தே
ஒண்டொடியாரை இன்பம் உறுவரே
அவர் தோள்ஒன்றிக்
கண்டிலம் தம்மைத்தாமே காமுறல்
களிப்பார் தங்கள்
எண்தனக்கு எட்டான் இச்சித்து
இறைவியைத் திளைக்கும் என்றும்.

உரை:

உலகினரும் தேவராதிய பிறரும் பெண்கள்மீது ஆசை வைத்து, அவர்களுடைய தோள்களைத் தழுவிப் புணர்ந்தே இன்பத்தை அனுபவிப்பார்கள். இதற்கு மாறாகத் தங்களைத் தாங்களே இச்சித்தலால் இன்பம் பெற்றவர்களைக் கண்டதில்லை. இதுபோல, மக்களின் சிந்தைக்கு எட்டாத இறைவன், இறைவியின் இன்பத்தை நுகருவான். உயிர்களின் அறிவைப் பொருந்திய மலங்கள் நீங்கிய உயர்நிலையில் அவை இறைவன் திருவருளாகிய சத்தியோடு ஒன்றிவிடும்.

விளக்கம்:

மண்டலம் - மண்தலம், தரை; வாஞ்சை - ஆசை; ஒண்டோடி - ஒள்தொடி, கையணி பூண்ட பெண்; கண்டிலம் - கண்டதில்லை; காமுறல் - விரும்புதல்; எண் - எண்ணம்; இச்சித்து - விழைந்து. (98)

சிவனும் சிவையும் உயிர்களின் பெற்றோர்

845. அணுக்களேயவர்க்கு மைந்த
ரன்னையு மத்தன்றானு
மணுக்களுக் கார்வங்
கூர்ந்தேயணுக்கடன் சத்தியோடே

Koviloor Digital Library

யணுக்களைப் புணர்ப்பர் சத்திப்
பருவமும் அறிந்துதாமே
யணுக்கடஞ்சத்தி தன்னைத்
திளைப்பரஞ் சனமுமற்றே.

அணுக்களே அவர்க்கு மைந்தர்
அன்னையும் அத்தன்தானும்
அணுக்களுக்கு ஆர்வம் கூர்ந்தே
அணுக்கள்தன் சத்தியோடே
அணுக்களைப் புணர்ப்பர் சத்திப்
பருவமும் அறிந்து தாமே
அணுக்கள் தம்சத்தி தன்னைத்
திளைப்பர் அஞ்சனமும் அற்று ஏ.

உரை:

சிவபெருமானுக்கு உயிர்களே மக்கள். அவற்றுக்குத் தாயும் தந்தையுமாக விளங்குபவர் சிவபெருமான். அவர் உயிர்களிடம் அன்புவைத்து, அந்த உயிர்களின் சத்தியுடன் அவ்வுயிர்களை, சத்தியின் பக்குவ காலங்களை அறிந்து தாமே பொருந்த வைப்பார். அதனால், அவ்வுயிர்கள் தங்கள் சத்தியை மலம் நீங்குந் தசையில் அனுபவிப்பர்.

விளக்கம்:

அணுக்கள் - உயிர்கள்; அத்தன் - தந்தை; புணர்ப்பர் - பொருத்துவர்; பருவம் - உரிய காலம்; அஞ்சனம் - மலம். (99)

சிவனருளால் பாசங்கள் நீங்கும்

846. அநாதியே யமலன் றன்னையகன்மனைக் காண்பரன்ப
மநாதிய பசுபாசத்தை யறுத்தவனருளினாலே
யநாதியேயமலன் கன்ம மாயனுபவிப்பரென்ப
ரநாதிய பசுபாசத்தை யறுத்திலா ரறிவிலாரே.

அநாதியே அமலன் தன்னை அகன்மனைக் காண்பர் அன்பர்
அநாதியே பசுபாசத்தை அறுத்து அவன் அருளினாலே
அநாதியே அமலன் கன்மமாய் அனுபவிப்பர் என்பர்
அநாதிய பசுபாசத்தை அறுத்திலார் அறிவு இல்லார் ஏ.

Koviloor Digital Library

உரை:

அன்பரானவர்கள் சிவனருளால் தொன்மையான பசு பாசங்களைப் போக்கி, தனக்கு ஒரு தொடக்கம் இல்லாதவனும், இயல்பாகவே மலங்கள் அற்றவனுமான சிவனைத் தம் உள்ளத்திலே காண்பர். அறிவில்லாதவர்கள், தொன்மையான பசுபாசங்களைச் சிவனருளால் நீக்கிக் கொள்ளாமலும், அச்சிவனே எல்லாவற்றையும் செய்விக்கின்றான் என்பதை உணராமலும், நான் செய்தேன், பிறர் செய்தார் என்னும் தற்போதத்தால் வரும் கன்மங்களை அனுபவித்ததற்காக இறந்தும் பிறந்தும் திரிவர்.

விளக்கம்:

அமலன் - இறைவன்; அகன்மன் - கன்மத் தொடர்பு இல்லாதவன்; அநாதிய - தொன்மையான; பசு - உயிர்; பாசம் - தளை; அறுத்தில்லார் - போக்காதவர். (100)

உயிர் சிவனை நோக்கும்

847. நோக்குமோ தூலவாக்கை
நுண்டனுவதனைத் தூல
நோக்கு நுண்டனுவுந்தன்னை
நோக்குமோ மீது மாக்கை
நோக்குமாருயிருந் தன்னை
நோக்குமோமீது மெல்லா
நோக்கு நின்மலனை நோக்கு
நோக்கறத்தனையு நோய்போய்.

நோக்குமோ தூல ஆக்கை
நுண்தனு அதனைத் தூலம்
நோக்கும் நுண்தனுவும் தன்னை
நோக்குமோமீதும் ஆக்கை
நோக்கும் ஆருயிரும் தன்னை
நோக்குமோமீதும் எல்லாம்
நோக்கும் நின்மலனை நோக்கும்
நோக்குஅறத் தன்னையும் நோய்போய்.

உரை:

பருவுடம்பு தன்னையே நோக்கும். நுண்ணுடம்பை நோக்காது. நோக்கும் தன்மையுள்ள நுண்ணுடம்பும் தன்னை நோக்காது. அதேபோல் உடலை நோக்குந்

Koviloor Digital Library

தன்மையதான உயிருந் தன்னை நோக்காது. ஆனால், மலங்களிலிருந்து விடுபட்ட போது உயிர் சிவனை உள்ளத்திலே கண்டு நோக்கற நோக்கி நிற்கும்.

விளக்கம்:

நோக்குமோ - நோக்காது; நோக்கம் - பார்வை, விருப்பம்; நுண்தனு - நுண்ணுடம்பு, சூக்கும உடல்; நின்மலன் - சிவன்; நோக்கு அற நோக்கல் - கண்ணால் நோக்குவது போலல்லாமல் உணர்வால் உணர்தல்; நோய் போய் - மலம் நீங்கி. (101)

இறைவன் உயிரில் கலந்திருக்கிறான்

848. ஆக்கையினாவி யென்ன
வமலனாருயிரின் வாழ்வ
னோக்கிலர் மூல நோயால்
நோலறிவடங்கி நொய்யார்
நோக்குவரமலன் மூல
நோய் வலியடக்கப்பாகத்
தோக்கொளியுணர்வைச் சேர்ந்தாரென
லுபசாரத் தொன்றும்.

ஆக்கை யில் ஆவி என்ன
அமலன் ஆருயிரில் வாழ்வன்
நோக்கிலர் மூல நோயால்
நோல்அறிவு அடங்கி நொய்யார்
நோக்குவர் அமலன்
மூலநோய்வலி அடக்கப்பாகத்து
ஒக்குஒளி உணர்வைச் சேர்ந்தார்
என்னல் உபசாரத்து ஒன்றும்.

உரை:

உடம்பிலே உயிர் ஆவிவடிவாகக் கலந்திருப்பது போல, அந்த உயிரில் சிவன் கலந்திருப்பான். இவ்வாறு கலந்திருக்கும் சிவனை, ஆணவ மல மேலீட்டால் தமது இச்சை ஞானம் கிரியை என்பன மறைக்கப் பெற்றோர் காண மாட்டார்கள். பக்குவப்பட்ட அன்பர்களுக்கு இறைவன் அவர்களுடைய ஆணவ மலத்தைக் கெடுத்து, தான் அவர்களோடு இரண்டறக் கலந்திருப்பதைக் காட்டுவான். இவ்வாறு சிவனைக் கண்டார்கள் என்று சொல்லும்போது, முன்பு இல்லாததை இப்போது பார்த்தார்கள் என்று பொருளாகாது. கண்ணில் இருந்த மறைப்பு நோய் நீங்கியதும்

Koviloor Digital Library

கண்ணுக்கு ஒளி உண்டானது போலவாகும். அது, இருந்தும் பக்குவப்பட்டவர் சிவ ஒளியைச் சேர்ந்தார் என்பது உபசாரம் ஆகும்.

விளக்கம்:

ஆக்கையில் - உடலில்; அமலன் - இறைவன்; வாழ்வன் - பொருந்தியிருப்பான்; நோக்கிலர் - பார்க்கவில்லை; மூலநோய் - ஆணவ மலம்; நோல் அறிவு - நோன்மையான அறிவு முதலியன; நொய்யார் - பக்குவம் இல்லாதவர்; ஒக்கு - உயர்வு; என்னல் - என்று சொல்லுதல்; உபசாரம் - அது ஆகாததை அதுவாய்ச் சொல்லுதல்; ஒன்றும் - அடங்கும்.

குறிப்பு:

மரியாதை குறிக்கும் உபசாரம் வேறு. அது ஆகாததை அதுவாகச் சொல்லுதல் இங்குள்ள உபசாரம் என்க. (102)

சிவசத்தியின் அருளால் மலம் நீங்கும்

849. இருட்டெலையிருந்தான்றுஞ் சாவிணை
விழியொளியவ் வெல்லைப்
பொருட்டனைப் புணர்ந்துங் காணா
தொளியுறிற் புதைந்து நின்ற
விருட்டற வுடலைக்
காணுமேனைய யாவுங்காணும்
பொருட்டனிற் புணர்ச்சி கண்ட
பொழுதெனப் புகல்வரேயோ.

இருட்டு எல்லை இருந்தான் துஞ்சா
இணைவிழி ஒளி அவ்வெல்லைப்
பொருள் தன்னைப் புணர்ந்தும் காணாது
ஒளி உறில் புதைந்து நின்ற
இருட்டுஅற உடலைக் காணும்
ஏனைய யாவும் காணும்
பொருள் தன்னில் புணர்ச்சி
கண்டபொழுது எனப்புகல்வர் ஏ, ஓ.

உரை:

இருள் நிரம்பிய அறையிலிருக்கிற ஒருவர் தம் கண்களை விழித்துப் பார்த்தபடியிருந்தாலும், அவர்தம் உடலையும் அறையிலிருக்கின்ற பொருள்களையும் காணமாட்டார். அங்கு ஒரு விளக்கை ஏற்றியதும் அறையில் இருக்கிற

Koviloor Digital Library

பொருள்களையும் தம் உடம்பையும் காண்பார். இவ்வாறே, உயிரின் ஆற்றலைத் தடைப்படுத்திய மலம், சிவசத்தியின் அருளால் நீங்கியதும் உள்ளத்தில் உயிரொளியைக் காண்பதோடு, சிவ ரூபத்தையுங் காணும் ஆன்ம தரிசனம் பெறுவர். அதன்மேல் பரை தரிசனமும் அதன் மூலம் சிவதரிசனமும் பெற்று அதனோடு பொருந்தியிருப்பர்.

விளக்கம்:

துஞ்சா - உறங்காத; இணைவிழி - இருகண்கள்; புணர்ந்தும் - பொருந்தியும்; புதைந்து - மறைந்து. (103)

முன்பாடலின் தொடர்ச்சி

850. கூடுதலேக தேசியெனுமிரு பொருட்கேகூடு
மோடிவான் றேடிக்கூடு மவரெவரு யிருளூனம்
வாடலுந் தன்னுண் மெய்யை நோக்கற நோக்குவானி
னீடொளி படலநீங்கக் கண்டனி னிகழுமன்றே.

கூடுதல் ஏகதேசி என்னும் இருபொருட்கே கூடும்
ஓடிவான் தேடிக் கூடும் அவர்எவர் உயிருள் ஊனம்
வாடலும் தன்னுள் மெய்யை நோக்குஅற நோக்குவானின்
நீடு ஒளிபடலம் நீங்கக் கண் தன்னில் நிகழும் அன்றே.

உரை:

உயிர் சிவனைக் கூடியது என்றால் ஒரே இடத்தில் இருப்பு உடையது ஆகிக் குடம் முதலானவற்றைப் போலப் பிரிந்து இரண்டு பொருள்கள் ஆகிவிடும். அஃது எப்படியென்றால், எங்கும் பரந்திருக்கிற வானத்தைத் தேடி அடைவோம் என்று எவன்தான் சொல்வான்? ஆனால், முடியும் என சாத்திரம் உரைக்கிறது. அஃது எப்படி என்றால், உயிரின் ஆற்றலைத் தடை செய்யும் ஆணவமலம் அருளால் அகல, உடனே தன் வடிவமும் விளங்கி, அதற்கு மேலாகிய இறைவன் வடிவத்தை அகத்திலே பார்த்திருத்தல் ஆகும். இது வானவெளியில் ஞாயிற்றின் ஒளிக் கதிர்களை மேகங்கள் மறைத்தபோது, அது தெரியாமலிருந்து மேகங்கள் விலகியதும் கண்ணுக்குப் புலப்படுவது போல்வதாகும்.

விளக்கம்:

ஏக தேசி - ஓர் இடத்தில் இருப்பு உடையது. வானம் - விண்; ஊனம் - பழுது; வானில் நீடு ஒளி - ஞாயிற்றின் கதிர் ஒளி; படலம் - மறைப்பு; கண் தன்னில் நிகழும் - கண்ணுக்குத் தோன்றும். (104)

Koviloor Digital Library

உயிரும் சிவமும் தம்மில் வேறுபாடு இல்லாமல் இருக்கும்

851. பேதமே லேகதேசி முத்தியிற் பிரானுமேக
வாதமுமயக்கஞ் செம்பு மலின நாசகனு மொன்றோ
வாதலாலிரண்டு மல்லாவ பேதமே யமலனாவி
வேதகருயிருங் கண்ணும் வேறெனா ரொன்று மென்னார்.

பேதமேல் ஏகதேசி முத்தியில் பிரானும் ஏக
வாதமும் மயக்கம் செம்பு மலின நாசகனும் ஒன்றோ
ஆதலால் இரண்டும் அல்லா அபேதமே அமலன் ஆவி
வேதகர் உயிரும் கண்ணும் வேறு என்னார் ஒன்றும் என்னார்.

உரை:

ஆன்மாவும் சிவனும் வேறு என்று நீ சொன்னால் ஏகதேசியாய் விடும். அதலால் அப்படி அன்று. முத்தி நிலையில் உயிரும் சிவனும் ஒன்றே என்றால் ஏகான்மவாதம் ஆகி மயக்கத்தையும் கொடுக்கும். அதிற் குற்றம் எங்ஙனம் என்றால் செம்பும் அதனுடைய களிம்பைப் போக்கும் பொருளும் ஒன்றல்லவே. ஆகையால், முன் சொன்ன பேதம், ஏகம் எனும் இரண்டும் இல்லாமல் உயிரும் சிவமும் அபேதமாக இருக்கும். சிவாகமங்களை உணர்ந்த அறிஞர்கள் உயிர் அறிவும் கண்ணின் ஒளியும் கலந்திருத்தலை வேறு என்றும் ஒன்று என்றும் சொல்லார்.

விளக்கம்:

ஏகதேசி - ஒரே இடத்தில் இருப்பு உடையது. **ஏகவாதம்** - ஏகான்ம வாதம். ஒன்று என்னும் கொள்கை; **மலினம்** - அழுக்கு; **அபேதம்** - வேறுபாடு இல்லாமை; **அமலன் ஆவி** - சிவனும் ஆன்மாவும்; **வேதகர்** - சிவாகம உண்மைகளை அறிந்த அறிஞர். (105)

முத்தர்களிடம் உள்ள மூலமலம்

852. கடல்விடங் கொல்லுங் கண்டார் தம்மையுங் காலகாலன்
மிடறுறுங் கொல்லவல்ல மிடலிலை யெற்றே யற்றே
யடியிணை சரணமென்றே யமலனை யடைந்தார் தங்க
ணடல்வலியடங்கன் மூலமலத்தினுக் கழிவுமின்றே.

கடல்விடம் கொல்லும் கண்டார் தம்மையும் காலகாலன்
மிடறுஉறும் கொல்லவல்ல மிடல்இல்லை எற்றே அற்றே
அடிஇணை சரணம் என்றே அமலனை அடைந்தார்தங்கள்
அடல்வலி அடங்கல் மூலமலத்தினுக்கு அழிவும் இன்று ஏ.

Koviloor Digital Library

உரை:

தேவர்கள் அமிர்தம் பெறுவதற்காகக் கடலைக் கடைந்தபோது அதில் தோன்றிய ஆலகால நஞ்சு, அதனைப் பார்த்தவர்களையும் கொல்லும். அத்தகைய நஞ்சு, காலனுக்குக் காலனாகிய சிவபிரானுடைய கழுத்தில் வந்து பொருந்தியது. எனினும், அது வேதனைப் படுத்துமதன் ஆற்றல் கெட்டு நின்றது. இவ்வாறே, சிவபிரானுடைய திருவடிகளை அடைந்த பக்குவிகளை ஆணவமலம் துன்புறுத்தாமலும், தன் நித்தியத் தன்மை கெடாமலும் தன் சக்தி மடங்கி நிற்கும்.

விளக்கம்:

கடல்விடம் - கடலில் எழுந்த நஞ்சு; **கால காலன்** - சிவன்; **மிடறு** - கழுத்து; **கொல்லவல்ல மிடல்** - வல்லதாம் ஆற்றல்; **எற்றே அற்றே** - என்பது போல; **அடிஇணை** - திருவடி இரண்டும்; **சரணம்** - அடைக்கலம்; **அமலன்** - சிவன்; **அடல்** - ஆற்றல்; **மூலமலம்** - ஆணவம்; **இன்று** - இல்லை. (106)

முன்பாடலின் தொடர்ச்சி

853. அடங்குமேல நாதிமூல மலவலியதனைப் போல
வடங்கிடுமநாதி முத்தன் வலியணு வலியு மென்னி
லடங்கிடாதநாதி முத்தன் சத்தியாற்றடுக்கும்பாச
மடங்கு நுண்ணாக்கை நீங்க வணுவறி வதீதத் தாசால்.

அடங்குமேல் அநாதிமூல மலவலி அதனைப்போல
அடங்கிடும் அநாதிமுத்தன் வலி அணுவலியும் என்னில்
அடங்கிடாது அநாதிமுத்தன் சத்தியால் தடுக்கும்பாசம்
அடங்கும் நுண் ஆக்கை நீங்க அணு அறிவு அதீதத்து ஆசால்.

உரை:

அநாதியாம் மூலமலமாகிய ஆணவ மலத்தின் ஆற்றல் முத்திநிலை சார்ந்தவரிடம் அடங்கி நிற்கிறது. ஆணவமலம் ஒன்றே அது தன்பல வேறு சக்திகளுள் ஒவ்வொன்றினால் ஒவ்வொருயிரை மறைப்பதாகும். ஆகையால் முத்தியில் அந்தந்தச் சத்திமாத்திரம் அந்தந்த உயிரை மறையாமலும் கெட்டுப் போகாமலும் இருக்கும். தொடக்கம் இல்லாத காலந்தொட்டு மறைத்துவருஞ் சத்தியாயினும் இந்நிலையில் ஆணவசக்தி மறையாமல் தன் ஆற்றல் குன்றி அடங்கும் என்க. அது போல, தனக்கு ஒரு தொடக்கம் இல்லாத சிவனும் சத்தியும், தொடக்கம் இல்லாத உயிரின் ஆற்றலும் வலிமை குன்றி அடங்குமோ என்னில், தொடக்கம் இன்றியே மும்மலங்களின் நீங்கிய சிவனுடைய சத்தி அடங்காது. ஆன்மசத்தி அடங்குதல் ஆன்ம அறிவு விளக்கத்துக்கேதுவாகிய சூக்குமதேகம் நீங்கப்பெறும் கேவலாதீத அவத்தையில் மட்டுந்தான் என்றுணர்க.

Koviloor Digital Library

விளக்கம்:

அநாதி - தொடக்கம் இல்லாதது; தனக்கு ஒரு தொடக்கம் இல்லாதது; அநாதி முத்தன் - கடவுள், சித்தன்; அணு - உயிர்; வலி - ஆற்றல்; அதீதம் - கடந்த நிலை, கேவல அதீத நிலை. அதில் தான் ஆணவசக்தி மூடிக்கொள்ள ஆன்ம சக்தி அடங்கியிருப்பது. (107)

சிவன்-உயிர் ஐக்கியம்

854. ஏகமன் றிறைவனாவியிரண்டு
மன்ற பேதமென்றே
யாகம வேதமெல்லா
மயிக்கிய பதத்தினாலே
யூகமுள்ளவர் தம்முள்ளத்
துணர்த்திடும் பிரத்தியாயத்
தூகமு மற்றொன்றென்ப
ரயிக்கிய பதார்த்தமூனர்.

ஏகம் அன்று இறைவன் ஆவி இரண்டும்
அன்று அபேதம் என்றே
ஆகம வேதம் எல்லாம்
அயிக்கிய பதத்தினாலே
ஊகம் உள்ளவர் தம்
உள்ளத்து உணர்த்திடும் பிரத்தியாயத்து
ஊகமும் அற்று ஒன்று என்பர்
அயிக்கிய பதார்த்தம் ஊனர்.

உரை:

உயிரும் சிவனும் ஒன்று அல்ல; இரண்டும் அல்ல; அவை அபேதயூகம் உள்ளவர்கள் கருதி உணருமாறு வேதங்களும் ஆகமங்களும் அவற்றினிணைப்பை ஐக்கியம் என்ற பதத்தாற் சொல்லும். அஃதிருக்க புத்தியூகமே அற்ற சிலர் துவை ஐக்கியம் என்றதன் கருத்து இரண்டும் ஒன்றுதான் என்பர்.

விளக்கம்:

ஏகம் - ஒன்று; அபேதம் - வேறுபாடு இல்லாமை; பதம் - நிலை; ஊகம் - ஊகித்து அறிதல்; பிரத்தியாயம் - அறிவு; பதார்த்தம் - சொற்பொருள்; ஊனர் - குறையுடையவர். (108)

Koviloor Digital Library

முன்பாடலின் தொடர்ச்சி

855. தருநிழ லொன்றோவன்றே தனித்திரு
பொருளோ வன்றே
பரமனு முயிருமிந்தப்படியென
வபேதம் பாரார்
ஒருபுடை யேக தேச
மெனவுபமான மோரார்
அரிவைசொல்லமிர்த மென்றானா
வினாலறிவதோ சொல்.

தருநிழல் ஒன்றோ அன்றே தனித்து
இரு பொருளோ அன்றே
பரமனும் உயிரும் இந்தப்படி
என அபேதம் பாரார்
ஒருபுடை ஏக தேசம்
எனஉபமானம் ஓரார்
அரிவை சொல் அமிர்தம் என்றால்
நாவினால் அறிவதோ சொல்.

உரை:

மரமும் நிழலும் ஒன்றென்று சொல்லமுடியாது. அன்றி இரண்டென்றும் சொல்லப் பெறாது. இவையிரண்டையும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க இய்லாது. இதுபோல, சிவனும் உயிரும் பிரிக்கப்படாமலிருக்கிற ஒற்றுமை இயல்பு அபேதம் ஆகும் என பாராதோர் ஓர் பொருட்கு உவமானமாகச் சொல்வது அப்பொருளின் ஒரோருவொரு அம்சத்துக்கே பொருந்தும் என்னாமல் பொருள் முழுமைக்கும் என்று கருதாமல் பொருந்துவது என்று கருதுகின்றவர்கள் ஆவர். ஓர் இளம்பெண் ஒருத்தியின் பேச்சை அமிர்தம் போல இருக்கிறது என்று சொன்னால், அதன் சுவையறியும் நோக்கில் நாவினால் நக்கிப் பார்ப்பது முண்டோ சொல் அகத்தியனே.

விளக்கம்:

தரு - மரம்; பரமன் - இறைவன்; அபேதம் - வேறுபாடு இல்லாமை; ஒருபுடை - ஒருபக்கம்; ஏகதேசம் - சிறுபான்மை; அரிவை - இருபத்து ஐந்து வயதுக்கு உட்பட்ட பெண்; அமிர்தம் - இறவா மருந்து. (109)

மாயாவாதியின் கொள்கை மறுப்பு

856. அத்துவித மென்ற சொலுமுன்முறையினாய்க
வத்துவயமென்ற சொலுமம்முறையினாய்க
முத்தனிணை யற்றொருவனென்று மொழிவேதத்
தத்தமறியா ரமலனாவிமல மென்பர்.

Koviloor Digital Library

அத்துவிதம் என்ற சொல்லும் முன்முறையில் ஆய்க
அத்துவயம் என்ற சொல்லும் அம்முறையில் ஆய்க
முத்தன்இணை அற்ற ஒருவன் என்று மொழிவேதத்து
அத்தம் அறியார் அமலன் ஆவிமலம் என்பர்.

உரை:

அத்துவிதம் என்ற சொற்பொருளை முன்னே ஆசிரியர்கள் காட்டிய முறையில் ஆராய்க. அத்துவயம் என்ற சொற்பொருளையும் அவர்கள் சொன்ன முறைப்படியே ஆராய்ந்து உணர்க. அந்ாதியாகவே மலமற்றவனும், தனக்கு நிகராக யாரும் இல்லாதவனும் ஒருவனென்று உபநிடதங்கள் கூறும் அந்த உண்மைப் பொருளை அறியாமல் தூயவனான சிவனையும் மலசகிதனான உயிரையும், அவித்தையாகிய மலத்தையையும் ஒன்று எனக் கூறுதல் தகாது. அது அத்துவிதம் என்ற வேத மொழியின் அர்த்தம் அறிய மாட்டாத மாயாவாதிகள் கூற்றாம் என அறிக.

விளக்கம்:

அத்துவிதம் - இரண்டு அற்றது; அத்து வயம் - இரண்டாவது இல்லாதது; அவித்தை - அஞ்ஞானம்; அத்தம் - பொருள்; அமலன் - தூயசிவன்; முத்தன் - மலங்களிலிருந்து விடுபட்டவன்; இணை - ஒப்பு; (110)

மாயாவாதம்

857. பார்த்திபனுமேவல் வினை பற்றினரும் வாழ்வுந்
தீர்த்தரச னேவலிடர் சேருநரு மொன்றோ
வார்த்தவுடலோ வறிவனாருயிரனைத்து
மூர்த்தமவன் மூர்த்தியென வோர்கவறுமோகம்.

பார்த்திபனும் ஏவல்வினை பற்றினரும் வாழ்வும்
தீர்த்து அரசன் ஏவல் இடர் சேருநரும் ஒன்றோ
வார்த்த உடலோ அறிவன் ஆருயிர் அனைத்தும்
மூர்த்தம் அவன் மூர்த்தி என ஓர்க அறும் மோகம்.

உரை:

அரசரும் அவருக்கு ஏவல்புரியும் பணியாள்களும், படைகளுமாய அவர் சுற்றமும் குடிமக்களுக்கு இடர் நேர்ந்த வேளையில் அதனைப் போக்கியும், அவர்கள் தவறு செய்தபோது தண்டித்துத் திருத்தியும் ஆட்சி செலுத்துகிறார்கள். எனினும், அரசரும் அவருடைய ஏவலர்களும் ஒன்றாகக் கருதப்படுவதில்லை. அது போல்

Koviloor Digital Library

எலும்பு, தசைகளாற் கட்டப்பட்ட உடல், உயிர் ஆகாது. எல்லா உயிர்களும் இறைவனுக்கு வடிவங்கள். இறைவன் அந்த வடிவங்களுக்கு மூர்த்திமான் என ஆராய்ந்து உணர்ந்தால், உன்னிடமுள்ள அறியாமை நீங்கும்.

விளக்கம்:

பார்த்திபன் - அரசன்; ஏவல் வினை பற்றினர் - பணியாளர்கள்; இடர் - துன்பம்; மூர்த்தம் - வடிவம்; மூர்த்திமான் - இறைவன், தலைவன், கடவுள்;

ஓர்க - ஆராய்ந்து உணர்க; மோகம் - அறியாமை; அறும் - நீங்கும்.(111)

முன்பாடலின் தொடர்ச்சி

858. **ஊடலிருவர்க் கொழிய வுண்டுகொ லொருத்தர்க்**
கேடணையு மேவ லெழுவாயு மியனூலு
மூடருணரார் மலைவு முன்னொடு பின்னென்னோ
தேடுவர் சிவன்றனையுமாதரவு செய்தே.

ஊடல் இருவர்க்கு ஒழிய உண்டுகொல் ஒருத்தர்க்கு
ஏடணையும் ஏவல் எழுவாயும் இயல் நூலும்
மூடர் உணரார் மலைவும் முன்னொடு பின்என்னோ
தேடுவர் சிவன்தன்னையும் ஆதரவு செய்து ஏ.

உரை:

சண்டை என்பது இருவருக்கிடையே ஏற்படும். தனியேயிருக்கிற ஒருவர் தம்மோடு தாமே சண்டையிடுவதில்லை. ஒருவர் இன்னொருவரிடம் கொள்ளுகின்ற விருப்பம், வா-போ என ஒருவரை ஏவுதல், ஆகிய தொழிலும் ஏவுவானாகிய கருத்தாவும் இல்லாமல் அமையாது. முன்னுக்குப் பின் முரணாகப் பொருள் கொள்ளும் மயக்கம் இல்லாமல், சாத்திர நூல்கள் கூறும் உண்மைகளை உணராத மூடர்கள், சிவனும் உயிரும் ஒன்றே என்று சொல்லுவார்கள். பின்னர், இவர்கள் சிவனை அன்போடு கூட வேண்டுமென்ற ஆராய்ச்சியில் எதற்காக ஈடுபடுகிறார்கள்?

விளக்கம்:

ஊடல் - கணவன் மனைவியரிடையே ஏற்படும் பிணக்கு; **ஏடணை** - ஆசை; **எழுவாய்** - கருத்தா. இது இங்குத் தலைவனைக் குறிக்கும். **ஏவல்** - கட்டளையிடுதல்;

இயல் நூல் - சாத்திரநூல், அறிவு நூல். **மலைவு** - மயக்கம்; **என்னோ** - எதற்காக; **ஆதரவு** - அன்பு; **தேடுவர்** - ஆராய்வர். (112)

Koviloor Digital Library

மாயாவாத மறுப்பு முன் தொடர்ச்சி

859. பொத்தையுடலூனுமற வேயருள்புரிந்து
தத்துவமசிப் பொருடருங் குரவனாரென்
றத்த உதயத் தவல மாசினையறுத்தே
சித்திபெறுமோபிரம மென்கொலிது செப்பாய்.

பொத்தை உடல் ஊனும் அறவே அருள்புரிந்து
தத்துவமசிப் பொருள் தரும் குரவன்யார்என்று
அத்த உதயத்து அவல மாசினை அறுத்தே
சித்திபெறுமோ பிரமம் என்கொல் இதுசெப்பாய்.

உரை:

பொந்து போன்று தசை பொருந்திய உடற்றும் நீங்குமாறு அருள் நோக்கஞ் செய்து அது நீ ஆகிறாய் என்ற வேத வாக்கியப் பொருளை உபதேசித்து அருள்புரியும் குரு எங்கேயிருக்கிறார் என்று தேடி, அதனால் மேம்பட்ட தத்பதப் பொருளான சிவனையும், துவம் பதப் பொருளான உயிரையும் வசப்படுத்தும் அசிபதத்தினால் ஒன்றுபடுத்தி, மறைவு தோற்றமாகிய இறப்புப் பிறப்புக் குற்றந்தரும் அறியாமையைப் போக்கிப் பிரமம் முத்தி பெறுமோ? இது என்ன விபரீதம் சொல்வாயாக.

விளக்கம்:

பொத்தை - பொந்து; ஊன் - தசை; குரவன் - குரு, ஆசிரியன்; தத்துவமசி - 'அது நீ ஆகிறாய்' என்று பொருள் கொண்ட சாந்தோக்ய உபநிடத வாக்கியம். இதனைத் தமிழில் 'நீயே தெய்வம்; நீயே கடவுள்' என்று திரு. சி.சுப்பிரமணிய பாரதியார் கூறுகிறார். இது மாயாவாத மதக் கொள்கை.

''சாமிநீ சாமி நீ சாமிநீயே
தத்வமசி தத்வமசி நீயே தெய்வம்
பூமியிலே நீ கடவுள் இல்லையென்று
புகல்வது உன் மனத்துள்ளே புகுந்தமாயை'' *(பாரதியார் பாடல்கள்)*

அத்தம் - மறைவு; உதயம் - தோற்றம்; இவை இறப்புப் பிறப்புகளைக் குறிக்கும். அவலம் - குற்றம்; மாசு - அழுக்கு, அறியாமை; சித்தி - முத்தி நிலை; என்கொல் - என்ன விபரீதம்; செப்பாய் - சொல்லுவாயாக. (113)

முன் தொடர்ச்சி

860. விண்டனுபவத்தெழுவிருத்த மெழுவாயு
மண்டமவனன்றவனதாக மயலென்றே
கொண்டவர்கள் விண்டவர்கள் கூடினர்களாகம்
பண்டைய பராபரனிணைக் கமலபாதம்.

Koviloor Digital Library

விண்ட அனுபவத்து எழு விருத்தம் எழுவாயும்
அண்டம் அவன்அன்று அவனது ஆகம் அயல் என்றே
கொண்டவர்கள் விண்டவர்கள் கூடினர்கள் ஆகம்
பண்டைய பராபரன் இணைக் கமலபாதம்.

உரை:

முன்சொன்ன 'அது நீ ஆகிறாய்' என்ற ஐக்கிய பாவத்தை ஒன்று என்று சொன்னால், அது அனுபவத்துக்கு மாறு ஆகும். முட்டையிலிருந்து பிறப்பவை முதலான நால்வகைத் தோற்றங்களும் அவனிடமிருந்து தோன்றியவை அல்ல. அதற்கு அவன் வேறுபட்டவன் என்று யார் கொண்டார்களோ அவர்களே உடற்பற்று நீங்கியவர்கள். ஆகையால், அவர்களே பரமசிவன் திருவடிகளை அடைந்தவர்கள் ஆவர்.

விளக்கம்:

விருத்தம் - முரண்; எழுவாய் - இது தோற்றத்தைக் குறிக்கும்; அண்டம் - முட்டை; ஆகம் - உடம்பு; அயல் - வேறானது; கொண்டவர்கள் - ஏற்றுக் கொண்டவர்கள்; விண்டவர்கள் - சொன்னவர்கள்; பண்டைய - தொன்மையான; பராபரன் - சிவபெருமான்; இணை - இரண்டு; கமலபாதம் - திருவடித் தாமரை. (114)

முன்தொடர்ச்சி

861. மோசகனுயிர்க்கிருளனாதி மலமுத்தன்
பேசுமியல் வேதமொழி பெற்றுமறிவற்றார்
மாசறிவினார் சிலர்கண் மற்றையியல் பெற்றார்
தேசில ருணர்ச்சியினு மென்றறிக திண்ணம்.

மோசகன் உயிர்க்கு இருள் அநாதிமலமுத்தன்
பேசும்இயல் வேதமொழி பெற்றும் அறிவு அற்றார்
மாசு அறிவினார் சிலர்கள் மற்றை இயல் பெற்றார்
தேசுஇலர் உணர்ச்சியிலும் என்று அறிக திண்ணம்.

உரை:

உயிர்களின் ஆணவமலத்தைப் போக்குகிறவனும் தனக்கு ஒரு தொடக்கம் இல்லாதவனும், இயல்பாகவே மலங்கள் இல்லாதவனுமான இறைவன் அருளிச் செய்த வேதமொழிகளின் உண்மைகளை உணர்ந்திருந்தும், அறிவில்லாதவர்களே உயிரும் சிவனும் ஒன்று என்பர். தவிர, வியாழன் முதலானவர்களால் சொல்லப்பட்ட

Koviloor Digital Library

குற்றம் பொருந்திய நூலைக்கற்று அதன் உண்மைகளை அறிந்தவர்களேயாயினும், அவர்களின் அறிவு உண்மை ஒளி பொருந்தியது அன்று என்பதை நிச்சயமாக உணர்க.

விளக்கம்:

மோசகன் - அகற்றுபவன்; அநாதி மல முத்தன் - கடவுள்; பேசும் - சொன்ன; வேதமொழி - உபநிடத உண்மைகள்; பெற்றும் - கற்றிருந்தும்; மாசு அறிவினார் - வியாழன் எழுதிய நூலைக் கற்றவர்கள்; தேசு - உண்மை ஒளி; திண்ணம் - உறுதி, நிச்சயம். (115)

பிற சமய மறுப்பு

862. ஆக்கைசட மாருயிரை யின்றியசையாது
நோக்கிலர் கொல்பாவையுடலாவியெனு நொய்யார்
சாக்கியரு மற்றையர்கடாமு முரையானு
மேக்கிலருணர்ச்சியினு மென்னையவர்வீடே.

ஆக்கைசடம் ஆருயிரை இன்றி அசையாது
நோக்குஇலர் கொல்பாவை உடல் ஆவிஎன்னும் நொய்யார்
சாக்கியரும் மற்றையர்கள் தாமும் உரையாலும்
மேக்குஇலர் உணர்ச்சியிலும் என்னை அவர்வீடு ஏ.

உரை:

ஒரு மரப்பாவை அதனை இயக்குகிறவர் இல்லாமல் இயங்காது. இவ்வாறே அறிவு இல்லாத உடம்பும் உயிரில்லாத போது இயங்காது. உடலே உயிரென்னும் அறிவீனர் மரப்பாவை சூத்திரதாரியினாலல்லாது செயற்படமாட்டா தென்பதைக் கருதிப் பார்த்திலர் போலும். புத்தமதத்தினரும், பிற சமயத்தவர்களும் தங்கள் சமய நூல்களைக் கற்றறிந்தவர்கள்; அந்த நூல்கள் கூறும் ஏதோ ஒரு முத்தியைப் பெற்றவர்கள் அன்றிப் பரமுத்தியைப் பெறாதவர்கள். பரமுத்தி பெறாதவர்கள் மீண்டும் பிறப்புக்குத் திரும்ப வேண்டியவர் ஆதலால் அவர்கள் கூறுகின்ற முத்திநிலை தாழ்ந்து, அவர்களும் அறிவுக் குறைவு உடையவர்கள்.

விளக்கம்:

ஆக்கை - உடம்பு; சடம் - அறிவில்லாதது; வீடு - முத்தி. உடல்ஆவி என்னும் - உடலை உயிர் என்று சொல்லுகிற; நொய்யர் - அற்பர்; சாக்கியர் - புத்த மதத்தினர்; மற்றையோர் - சமண, வியாழ மதத்தினர். வியாழமதம் - லோகாயதம். வியாழ மதம் வட இந்திய மதங்களுள் ஒன்று. இவர்களின் சமய நூல் 'பிருகற்பதி'. இவர்களைச் *'சார்வாகர்'* என்பர். சமணமதமும் புத்தமதமும் ஆரியர்களின் உயிர்க்

Koviloor Digital Library

கொலையாகங்களைத் தடுப்பதற்காக வட இந்தியாவில் தோன்றிய மதங்கள். சமண மதத்தினர் தம் குருமாரையே 'தீர்த்தங்கரர்' என வணங்குகின்றனர். இவர்கள் இன்றளவும் சிறுபான்மையினராக இந்தியா முழுவதும் உள்ளனர். மகாயான புத்தமதம், சங்கர மதத்தில் கலந்து விட்டது. இராமாநுச மதம் புத்தரை விஷ்ணுவின் அவதாரமாக இணைத்துக் கொண்டது. ஹீனயானம் இலங்கை, பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் நிலைத்திருக்கிறது. (116)

சிவபிரான் திருவடிகளை அடைதலே முத்தி

863. கந்தமறல் பந்தமறல் கட்டுரு வெண்சித்தி
யந்தமறிவூறு கடகாச மறலப்பு
முந்தவரையுற்ற திரண் முத்தியல முத்தி
பந்தமறவின்புறல் பிறப்பிலி பதத்தே.

கந்தம் அறல் பந்தம் அறல்கட்டு உருஎண் சித்தி
அந்தம் அறிவு ஊறு கடஆகாசம் அறல் அப்பு
முந்தவரை உற்ற திரண் முத்தி அல்ல முத்தி
பந்தம் அற இன்பு உறல் பிறப்பு இலி பதத்து ஏ.

உரை:

உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்ற ஐந்து கந்தங்களும் கெடுவதே முத்திநிலை என்பது புத்தமதக் கொள்கை. வெவ்வேறு உருவம் கொள்ளும் அணிமாமுதல் பிராகாமியம் ஈறாக உள்ள எட்டுச் சித்திகளையும் பெறுதலே முத்தி என்பது யோக மதத்தின் கொள்கை. கடாகாசம் மடகாசமாகி இரண்டாய் நின்றாற் போலவும், ஒரே நிலவு இரவில் நீர் நிலைகள் முழுவதிலும் பலவாகத் தோன்றுதல் போலவும், பிரமமானது உடம்புகள் அனைத்திலும் நின்று முத்தியில் ஒன்றாகும் என்பது, சங்கர மாயாவாத மதக் கொள்கை. மகா மேருமலையை அடைந்த கரிய நிறக்காகம், தங்க நிறமுடையதாக ஆனது போலவும், உப்பளத்தில் விழுந்த துரும்பு உப்பாக ஆனது போலவும், சிவனைச் சார்கையில் ஆன்மா தன்மை கெட்டு ஒன்றாகும் என்பது சிவசமவாதியின் கொள்கை. இவை யாவும் பரமுத்தி நிலைகள் ஆகா. ஆணவம் முதலான கட்டுகள் நீங்கிய ஆன்மா பிறப்பு இறப்பு இல்லாத சிவபிரான் திருவடிகளை அடைந்து, அவன் அருளில் கலந்து இன்புறுதலே உண்மையான பரமுத்தியாகும்.

விளக்கம்:

கடம் - குடம்; கடகாசம் - கடத்திலுள்ள ஆகாசம்; மடகாசம் - அண்டத்திலுள்ள ஆகாசம்; ஆகாசம் - வெளி; அப்பு - நீர்; (இந்திய மதங்களின்

Koviloor Digital Library

அடிப்படைக் கொள்கைகளை, இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. கி.இலட்சுமணன் அவர்கள் எழுதியுள்ள ''*இந்திய தத்துவஞானம்*'' என்ற நூலிற் காண்க.)

குறிப்பு:

மிடாதான் பெரிய பாண்டம் மடா அல்ல. (117)

உயிர்களுக்கு அளவு கிடையாது

864. விண்டவர்கண் மூலமலம் வீற்றிவர மீளார்
பண்டைமுறை நாடுடல் படைப்பு நிலையீறுங்
கண்டனை யிழந்தவுயிர் காரணனிடத்தே
யுண்டுல விடாத கிழியுற்ற பொருளொத்தே.

விண்டவர்கள் மூலமலம் வீற்றிவரம் மீளார்
பண்டைமுறைநாடு உடல் படைப்புநிலை ஈறும்
கண்தன்னை இழந்த உயிர்காரணன் இடத்தே
உண்டு உலவிடாத கிழி உற்றபொருள் ஒத்து ஏ.

உரை:

கண் மறைப்பு நோய் நீங்கியதும் கண் பார்க்கும் நிலைபெற்று விளங்குவது போல, மூலமலத்திலிருந்து விடுபட்டு முற்றும் உணர்தலை அடைந்தவர்கள், கடலை அடைந்த ஆற்றுநீர் மீளாதது போல முத்தியை அடைவர்; மீளவும் வந்து பிறக்க மாட்டார்கள். படைப்பு முதலான தொழில்களையும் புரியார். அங்ஙனம் உயிர்கள் மீளாதிருப்பின் சிவனுக்குப் பஞ்சகிருத்தியம் நடத்த வாய்ப்பில்லையே எனில் தொன்மைக் காலம் முதற்கொண்டே உயிர்கள் அளவற்ற தொகையாய் இருப்பார்கள். குறைவுபடாத பொன்னுலவாக் கிழி எடுக்க எடுக்கக் குறையாமல் இருப்பது போல, முத்தியடைந்த உயிர்களுக்கும் அளவில்லை; இனி, முத்தியடையப் போகிற உயிர்களுக்கும் அளவு கிடையாது.

விளக்கம்:

விண்டவர்கள் - இது இங்கு ஆணவப் பிடிப்பிலிருந்து நீங்கினவர்கள். **மூலமலம்** - ஆணவமலம்; **பண்டை** - தொன்மை; **ஈறு** - முடிவு; **காரணன்** - இறைவன், தலைவன்;

உலவிடாத - உலவாத; எடுக்க எடுக்கக் குறைவுபடாத; **கிழி** - பணமுடிப்பு; **வீற்று+இவர** - வீற்றிவர. **வீற்று** - வேறு, **இவர** - ஏற, அதாவது வேறு உடலில் ஏற - மறுபிறப்பெடுக்க; **மீளார்** - மீளமாட்டார். (118)

Koviloor Digital Library

அபக்குவர்க்கு உண்மையை உணர்த்தலாகாது

865. ஆக்கையினை யைந்தலைய நாகமென வஞ்சி
நீக்க நினைவார்க்குருகி நேயமுட னிந்த
வாக்கறைக மற்றையர் தமக்கறையு மாந்தர்
தீக்குழியினாழ்ந்தழிவர் சேர்ந்தவரு மாய்ந்தே.

ஆக்கையினை ஐந்து தலைய நாகம் என அஞ்சி
நீக்க நினைவார்க்கு உருகி நேயமுடன் இந்த
வாக்கு அறைக மற்றையர் தமக்கு அறையும் மாந்தர்
தீக்குழியில் ஆழ்ந்து அழிவர் சேர்ந்தவரும் மாய்ந்து ஏ.

உரை:

உடம்பை ஐந்து தலைகள் உள்ள நச்சுப் பாம்பென எண்ணிப் பயந்து அதனை விட்டுவிடக் கருதுகிற பக்குவப்பட்ட மாணாக்கருக்கு உள்ளம் குழைந்து அன்போடு, தம் குருபிரானிடம் உபதேச முறையில் பெற்றுக் கொண்ட உண்மையை உணர்த்துக. இதற்கு மாறாகப் பக்குவம் இல்லாதவர்க்கு ஆசான் உரைத்த மறைமொழியைக் கூறினால், கூறியவரும் அதனைக் கேட்ட மாணாக்கரும் எரியும் நரகில் கிடந்து அழிவடைவர்.

விளக்கம்:

'சொலஆரணமாம் சுருதிமுடிந்த இடம்
எல்லார்க்கும் சொன்னால் எழுநரகம்'

என்பது ஆன்றோர் மொழி. உருகி - உள்ளம் நெகிழ்ந்து; இந்த வாக்கு - குருமொழியை; அறைக - கூறுக; மற்றையர் - பக்குவம் இல்லாத மாணாக்கர்கள்; தீக்குழி - எரிகின்ற நரகப் பள்ளம்; சேர்ந்தவர் - மாணாக்கர். (119)

ஆசான் பக்குவப்பட்டவர்க்கு உபதேசிக்க வேண்டும்

866. உற்றசிறைச்சாலையென வூனுடல் வெறுத்தே
நெற்றி விழிநின்மலன தாளிணையி னேய
முற்றவர் தமக்குருகி யோதுதல் செய்யாத
குற்றமுடையானுமழல் வீழ்வனயர் கொண்டே.

உற்றசிறைச்சாலை என ஊன்உடல் வெறுத்தே
நெற்றிவிழி நின்மலனதாள் இணையில் நேயம்
உற்றவர் தமக்கு உருகி ஓதுதல் செய்யாத
குற்றம் உடையானும் அழல் வீழ்வன் அயர்வு கொண்டு ஏ.

Koviloor Digital Library

உரை:

தசையோடு கூடிய உடம்பை ஒரு சிறைச்சாலையாக எண்ணி வெறுத்து, நெற்றிக் கண்ணினையுடையவனும் மலம் இல்லாதவனுமான சிவபெருமானுடைய திருவடிகளில் அன்பு கொள்ளுதலாகிய பக்குவம் பெற்ற மாணாக்கருக்கு மெய்ப்பொருளை உணர்த்தி அருள் செய்யாத குற்றத்துக்கு ஆளான ஆசிரியனும் எரியும் நரகில் கிடந்து உடல் தளர்ந்து வருந்துவர்.

விளக்கம்:

அடியவர்க்கு எளியவனான சிவபெருமான், பெற்றான் சாம்பனுக்குத் தீக்கை செய்து அவனை உய்விக்குமாறு உமாபதி சிவாசாரியாருக்குப் பின்வருமாறு திருமுகம் வரைந்தார்.

'அடியார்க்கு எளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியார்க்கு எழுதிய கைச்சீட்டுப் - படியின்மிசைப்
பெற்றான் சாம்பானுக்குப் பேதம் அறத் தீக்கை செய்து
முத்தி கொடுக்க முறை.'

இதனை ''அம்பலவாணர் திருமுகம்'' எனவும் கூறுவர். அதைக் கண்டதும் சிவாசாரியர் உடனே தீக்ஷை கொடுத்து முத்தியடைவித்தார். கற்றவர்கள் தங்கள் கல்வியைப் பிறருக்கு உதவாமல் மறைத்து வைப்பது கூடப் பாவம் என்றே பெரியோர் கூறுவர். ஊன் - தசை; தாள்இணை - இருதிருவடிகள்; அழல் - தீ; அயர்வு - தளர்ச்சி. (120)

பக்குவப்பட்ட ஆசிரியரும் மாணாக்கரும்

867. ஆசிலர் தமக்குருகியன்புடனு ணர்த்துந்
தேசிகனுந் தேர்ந்தவருஞ் சேர்ந்து சிவலோகம்
வாசமலர் மேலுறைவர் மாசறலு மந்தத்
தீசனடி கண்டனுபவிப்பர் தமதின்பம்.

ஆசுஇலர் தமக்கு உருகி அன்புடன் உணர்த்தும்
தேசிகனும் தேர்ந்தவரும் சேர்ந்து சிவலோகம்
வாசமலர் மேல் உறைவர் மாசுஅறலும் அந்தத்து
ஈசன்அடிகண்டு அனுபவிப்பர் தமது இன்பம்.

உரை:

குற்றமில்லாத பக்குவப்பட்ட அன்பருக்கு, நெஞ்சம் குழைந்து அன்போடு மெய்ப்பொருள் உண்மைகளை உபதேச முறையில் உணர்த்திய பெருமை பொருந்திய ஆசானும், அவரிடம் உபதேச முறையில் மெய்ப் பொருள் உண்மைகளை அறிந்து கொண்ட அன்பரும் பாசங்களாகிய அழுக்கு நீங்கி முடிவில் சிவ உலகை அடைந்து, இறைவன் திருவடி மலர்களில் தங்கி இன்புறுவர்.

Koviloor Digital Library

விளக்கம்:

ஆசு - குற்றம்; தேசிகன் - குரு, ஆசான்; தேர்ந்தவர் - தெளிந்தவர், இங்கு உபதேசம் பெற்றவரைக் குறிக்கும்; வாசம் மலர் - மணமுள்ள தாமரைப்பூ; மாசு - அழுக்கு; அந்தத்து - முடிவில். (121)

பிற சமயத்தவரின் நிந்தனைகளைத் தடுக்க வேண்டும்

868. நிறுத்திட வலானமலனூ னெறியையென்று
மறுத்திட வலானவல மார்க்க மயலுற்றே
நிறுத்திலன் மறுத்தில னெனிற் கரிசன்நேச
மறுத்தவனை மாய்க்கை கரிசல்ல வறமாமே.

நிறுத்திட வல்லான் அமலன் நூல் நெறியை என்றும்
மறுத்திட வல்லான் அவலமார்க்க மயல் உற்றே
நிறுத்திலன் மறுத்திலன் என்னில் கரிசன் நேசம்
அறுத்து அவனை மாய்க்கை கரிசு அல்ல அறம் ஆம் ஏ.

உரை:

பிற சமயங்களைச் சேர்ந்த தீயவர்கள், தம்தம் சமயக் கொள்கைகளே உண்மையானவை என நம்மிடம் வாது செய்யும் போது, சிவபிரான் அருளிய மேலான சிவாகமங்களின் உண்மைகளைக் கற்றுத் தேர்ந்த நம் சமய ஆசிரியர்கள், பிற சமய நூல்களின் பொய்ம்மைகளை விளக்கி, நம் சமய அறங்களை நிலை நிறுத்த வேண்டும். நம் சமயத்தை நிந்தனை செய்கிறவர்களின் நட்பை நீக்கி, அவர்கள் கொள்கையை மறுத்தொழித்தல் குற்றமாகாது. அது அறமாகும்.

விளக்கம்:

அமலன் நூல்நெறி - சிவாகமங்களின் உண்மைகள்; அவலமார்க்கம் - அபல மார்க்கம், பலனற்ற மார்க்கம்; நிறுத்திலன் - பிறமதக் கொள்கையைத் தடுத்து நிறுத்திலன்; மறுத்திலன் - பிறமதப் பொய் மறுக்காதவன்; அவனை மாய்க்கை - பிற மதத்தவன் கொள்கையை மறுத்தொழித்தல்; கரிசு - பாவம். (122)

வீடுபேறு பக்குவப்பட்டவர்களே அறியத் தக்கது

869. செந்தமிழினின்ப மிறுவாயலது செப்பார்
அந்தமிலியாதியுமிலானு ரையை யாய்ந்தார்
செந்தமிழினுங் கேவுடமாக வுரை செய்தார்
இந்தயுக காலகலி யீடற நல்வீடும்.

Koviloor Digital Library

செந்தமிழில் இன்பம் இறுவாய் அல்லது செப்பார்
அந்தம் இல்லி ஆதியும் இல்லான் உரையை ஆய்ந்தார்
செந்தமிழிலும் கவுடமாக உரை செய்தார்
இந்தயுக காலகலி ஈடுஅற நல்வீடும்.

உரை:

திருவள்ளுவர் தாம் அருளிய *திருக்குறளில்* அறம் பொருள் இன்பம் என்ற முப்பாலையும் கூறி, வீட்டு நெறியை விளக்கிக் கூறவில்லை. சிவாகம உண்மையை உணர்ந்தவராதலால் பக்குவப்பட்டவர்களே முத்திபெறும் பொருட்டும், கலிகாலத்தின் வலிமை தொலையும் பொருட்டும், மறைபொருளாக மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தால் உய்த்துணரத்தக்க அளவில் மட்டும் கூறினார். ஆளுடைய தேவநாயனார். திருவுந்தியார் என்னும் சாத்திரத்தைத் தமிழிலே இயற்றியுள்ளார். ஆதலால், தமிழில் உரைத்தாலும் குற்றமில்லை.

விளக்கம்:

அந்தம் இல்லி - அழிவு இல்லாதவன்; இறுவாய் - முடிவு; ஆதியும் இல்லான் - தனக்கு ஒரு தொடக்கம் இல்லாத இறைவன்; உரை - இது சிவாகமத்தை உணர்த்துகின்றது; கவுடமாக - மறை பொருளாக; வீடு - வீடுபேறு; இந்த யுக காலகலி - கலியுக காலம்; இது இந்துக்களின் காலக் கணக்கு; கலி - துன்பம். (123)

கந்தன் துதி

870. என்று சிவஞானவர யோகமு மிசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்று புலனைந்தினையும் வெய்யவினை நைய
நின்ற முனி அன்று உணர நிர்க்குணன் நினைந்தே.

என்று சிவஞானவர யோகமும் இசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்குஅருள் கொடுத்தான்
வென்று புலன் ஐந்தினையும் வெய்யவினை நைய
நின்றமுனி அன்று உணர நிர்க்குணன் நினைந்து ஏ.

உரை:

மலையில் வாழும் வேடுவர் தலைவன் நம்பிராசன் திருமகளும், இளமையும் மென்மையான உடலமைப்பும் கொண்டவளான வள்ளி நாயகிக்கு அருள் செய்த கந்தப் பெருமான், கொடிய தீவினை கெடுமாறு சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து புலன்களையும் அடக்கிய அகத்தியன், தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணி, மேலான சிவஞானயோகத்தின் தன்மைகளை உரைத்தான்.

Koviloor Digital Library

விளக்கம்:

மடக்கொடி - மடம்+கொடி; இளமையும் கொடிபோன்ற உடலமைப்பும் கொண்ட வள்ளிநாயகி; மடம் - இளமை; **வெய்ய** - கொடிய; **நைய** - கெட; நிர்க்குணன் - கடவுள்; (124)

சிவத்துதி

871. மையனீக்கி யெனக்கருள் வள்ளலேமாற
மாசுடலாகிய வள்ளலே
யைவர்தம்மையடர்த்து மடக்கியே
யாலநஞ்சு மிடற்றுமடக்கியே
பைய பாம்பணியாகப் பரிப்பனே
பாண்டியற் குமுடல் வெப்பரிப்பனே
மையம் பெய்பவர் நாணு
மறுப்பனே யருச்சுனன்றனு நாணுமறுப்பனே.

மையல்நீக்கி எனக்கு அருள் வள்ளலே
மாறமாசு உடல் ஆகிய வள்ளலே
ஐவர்தம்மை அடர்த்தும் அடக்கியே
ஆலநஞ்சும் மிடற்றும் அடக்கியே
பைய பாம்பு அணியாகப் பரிப்பனே
பாண்டியற்கும் உடல்வெப்பு அரிப்பனே
ஐயம் பெய்பவர் நாணும் அறுப்பனே
அருச்சுனன்தனு நாணும் அறுப்பனே.

உரை:

மலக்குற்றம், பொருந்திய உடலாகிய சேறு மாறும்படி மயக்கத்தை அகற்றி எனக்கு அருள் செய்யும் வள்ளலே! என்னிடமுள்ள சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து புலன்களையும் அடக்கியவனே! கடல் நஞ்சைக் கழுத்தில் அடக்கியவனே! படத்தையுடைய பாம்பை அணிகலனாகத் தரித்தவனே! பாண்டியனுக்குற்ற உடல் வெப்பை ஒழித்தவனே! பிச்சை உணவை எடுத்து வந்த தாருகவன ஆரியப் பெண்களின் வெட்கத்தை விலக்கியவனே! காட்டுப் பன்றியைக் கொன்றது பற்றி எழுந்த சண்டையில் அருச்சுனனுடைய வில்லின் நாணை அறுத்தவனே!

விளக்கம்:

மையல் - மயக்கம்; **வள்ளல்** - அருள் செய்கின்ற இறைவன்; **மாற** - நீங்க; **மாசு** - அழுக்கு; **ஐவர்** - இது ஐந்து புலன்களைக் குறிக்கும்; **அடர்ந்து** - போரிட்டு; **ஆலநஞ்சு** - ஆலகாலமென்ற நஞ்சு; **மிடறு** - கழுத்து; **பைய** - படம் உள்ள; **அணி**

Koviloor Digital Library

- அணிகலன்; பரித்தல் - தரித்தல்; வெப்பு - காய்ச்சல்; ஐயம் - பிச்சை; நாண் - வெட்கம், வில் நாண். (125)

சிவத் துதி

872. கங்கை செஞ்சடைத் தாங்கிய
கண்டனே காளவல் விடமுண்டிருள் கண்டனே
மங்கை மாதவம் செய்திட வாடியே
மதித்து மற்றவளோடுற வாடியே
சங்கமேவித் தருந்தமிழ்ச் சைவனே
தவிரினன்றறயானு மசைவனே
திங்களூரினப் பூதிக்குஞ் செல்வனே திளைத்து
நின்னைப் பவத்தினுஞ் செல்வனே.

கங்கை செஞ்சடைத் தாங்கிஅ கண்டனே காளவல்விடம்
உண்டு இருள் கண்டனே
மங்கை மாதவம் செய்திட வாடியே
மதித்து மற்றவளோடு உறவாடியே
சங்கம் மேவித்தரும் தமிழ்ச் சைவனே
தவிரில்அன்று அறம்யானும் அசைவனே
திங்கள் ஊரில் அப்பூதிக்கும் செல்வனே
திளைத்து நின்னைப் பவத்திலும் செல்வனே

உரை:

கங்கையாற்றைச் சிவந்த சடையில் தரித்து எங்கும் நிறைந்தவனே! கருமையான வலிமையுள்ள நஞ்சை அருந்தி அதனால் கரிய நிறக் கழுத்தை உடையவனே! உமையவள் திருமேனி வருந்த அரிய தவம் செய்வதை அறிந்து வாடி அவளோடு உறவாடியவனே! மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் புலவராக எழுந்தருளித் தமிழ் இலக்கணத்தை உதவிய தமிழ்ச் சைவனே! நீங்குவதற்கு அரிய நன்மைகள் கெடும்போது நரக சுவர்க்கங்களில் யானும் திரிவனே! திங்களூரில் அப்பூதி நாயனாருக்குச் செல்வமாக இருந்தவனே! உன் அருளால் உன்னுடன் கலந்த பிறகு மீண்டும் பூமியில் நான் பிறப்பேனோ, பிறக்க மாட்டேன்.

விளக்கம்:

தாங்கி - அகண்டனே; அகண்டன் - எங்கும் நிறைந்தவன்; இருள் - கருமை; கண்டம் - கழுத்து; மங்கை - உமையவள்; மா - பெரிய; சங்கம் - மதுரைத் தமிழ்ச் சங்கம்; மேவி - எழுந்தருளி; சைவன் - சிவபெருமான் எனல் ''ஐயாறு அதனில் சைவன் ஆகியும்'' என்ற *திருவாசகத்தாற்* பெறப்படும். அசைவன் -

Koviloor Digital Library

நடமாடுவேன்; திங்கள்ஊர் - அப்பூதி அடிகள் வாழ்ந்த ஊர்; அசைவன் - நிலை தளர்வேன் எனலுமாம்; அப்பூதி நாயனார் - திருநாவுக்கரசரின் அருள் பெற்ற மறையவர். திளைத்து - கலந்து; பவம் - பிறப்பு. (126)

குமரன் துதி

873. உமையாள் புதல்வா வுனதாளிணையே
யிமையோர் தொழவே யெதிர் சூரனையுங்
குமையாவவர் வாழ்வருள் கூரியனே
யெமையா ளெமையாளிட ரோடிடவே.

உமையாள் புதல்வா உனதாள் இணையே
இமையோர் தொழவே எதிர் சூரனையும்
குமையா அவர் வாழ்வு அருள் கூரியனே
எம்மைஆள் எம்மைஆள் இடர் ஓடிட ஏ.

உரை:

சூரபதுமனால் தொல்லைகளுக்கு ஆளான வானவர்கள் தங்களைக் காத்து அருள் செய்யுமாறு உன்னை வணங்க, எதிர்த்து வந்த சூரபதுமன் முதலானோரை அழித்து, அவர்கள் வாழ அருள் புரிந்தவனே! எங்களைத் தொடர்ந்த துன்பங்கள் விரைந்து மறைய, சிவையின் மைந்தனே! உன்னுடைய இரண்டு திருவடிகளையும் தொழுதோம். எங்களைக் காத்து அருள்க! எங்களைக் காத்து அருள்க!!

விளக்கம்:

உமையாள் - சிவை, பார்வதி; தாள் இணை - இரண்டு திருவடிகள்; இமையோர் - வானவர்; கண்களை இமைக்காதவர்கள்; குமையா - அழித்து; அருள் கூரியன் - அருள்புரிந்தவன்; ஆள் - அழகைகொண்டருளுக; இடர் - துன்பம்; ஓடிட - மறைய. (127)

அகத்தியர் துதி

874. அதிபாதகமாதிய பாவ விதம்
புதுமாமலர் சூடுதல் போற்புரிவேன்
விதியே விழையேன் வினைவேரரியாய்
பொதிமாமலை மாதவனே புனிதா.

அதிபாதகம் ஆதிய பாவவிதம்
புதுமாமலர் சூடுதல் போல் புரிவேன்
விதியே விழையேன் வினைவேர் அரியாய்
பொதிமாமலை மாதவனே புனிதா.

LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

உரை:

புத்தம் புதிய நறுமணப் பூக்களைப் பறித்து மகளிர் விருப்பத்துடன் தம் கூந்தலில் சூடிக் கொள்வது போல, நான் அதிபாதகம் முதலான கொடும் பாவவகைகளை விரும்பிச் செய்வேன். விதிக்கப்பட்ட நற் செயல்களைச் செய்ய விரும்பேன்; பொதிய மலையில் அமர்ந்து பெரும் தவத்தைச் செய்கின்றவனே! தூயவனே! பிறவிக்குக் காரணமான என் வினைகளின் மூலத்தை அறுத்து அருள் செய்க.

விளக்கம்:

அதிபாதகம் ஆதிய - அதிபாதகம் முதலான; **புது** - புதிய; **பாவ விதம்** - பலவகைப் பாவம்; **மாமலர்** - மணம் பொருந்திய பூக்கள்; **சூடுதல்** - அணிதல்; **விதி** - விதிக்கப்பட்ட நற்செயல்கள்; **விழைதல்** - விரும்புதல்; **வேர்** - மூலம்; **அரியாய்** - அறுத்திடுக; **மாதவன்** - பெருந்தவம் புரிகிறவன்; **புனிதன்** - தூயவன்.

குறிப்பு:

அதிபாதகம் - பாவவியல் கூறிய பாவ வகைகளில் ஒன்று. அதை அப்பெயராலேயே சொல்ல வேண்டும். அகத்தியர் பொதிகையில் என்றும் போல் இன்றும் தவஞ்செய்கின்றார் என்பதைப் பொதிகைச் சூழல் சொல்லும். அவர் நித்திய சீவிகளில் ஒருவர். (128)

KOVILOOR MADALAYAM
A. No. 11939
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

பதினோராவது

பரிகார இயல்

பரிகாரம் என்றால் பிராயச்சித்தம் அல்லது கழுவாய். இந்த இயல் உயிர்கள் முற்பிறப்பின் காரணமாக இப்பிறப்பில் தங்களுக்கு ஏற்பட்ட நல்வினை தீவினை என்ற இருவினைப் பயன்களை நுகரும் போது வந்து பொருந்துகின்ற பாவச் செயல்களிலிருந்து நீங்கும் வழிகளை உரைக்கின்றது.

முனிவனே கேள்

875. அறிந்திடுக பரிகாரமவல வினையறுத்தற்
கறைந்திடுவாமரு முனிவ ஆகார சுத்தி
நிறைந்த புனலான் மாசுநீக்கலுடற் காடை நிகழ்
நீரி னழுக்கறுக்கை நீசரைப் பேசிடினும்
பிறந்திறந்த வாசூசம் பேணியறன் மூழ்கும்
பெற்றியெனப் பேசியவிம்முறையனைத்தும்பெற்றார்
சிறந்த பரிகாரத்தைச் செய்தவலமான தீவினையிற்
றீர்ந்திடுவர் நன்பலமுஞ் செறிவார்.

அறிந்திடுக பரிகாரம் அவலம் வினை அறுத்தற்கு
அறைந்திடுவாம் அருமுனிவ ஆகார சுத்தி
நிறைந்த புனலால் மாசுநீக்கல் உடற்கு ஆடை நிகழ்
நீரின் அழுக்கு அறுக்கை நீசரைப் பேசிடிலும்
பிறந்து இறந்த ஆசூசம் பேணி அறல் மூழ்கும் பெற்றி
எனப் பேசிய இம்முறை அனைத்தும் பெற்றார்
சிறந்த பரிகாரத்தைச் செய்து அவலமான தீவினையில்
தீர்ந்திடுவர் நன்பலமும் செறிவார்.

உரை:

அகத்திய முனிவனே! உயிர்களின் பாவம் அகலுவதற்கு ஏற்ற வழிகளைக் கூறுவோம்; அதனை அறிவாயாக. உடலின் வாய், கண், காது, மூக்கு, குதம், குறி ஆகிய உறுப்புகளில் உண்டாகின்ற அழுக்குகளை ஆறு, கிணறு போன்ற நீர்நிலைகளுக்குச் சென்று குளித்து நீக்காமல், சிறிதளவு வெந்நீரில் குளித்த குற்றமும்,

Koviloor Digital Library

ஆடையில் விந்து முதலியன பட்ட குற்றமும், இழிந்தவர்களோடு பேசிய குற்றமும், பிறப்பு இறப்புகளால் வீட்டில் ஏற்படும் தீட்டு முதலான குற்றமும் நீங்க, நல்ல நீரில் முழுகித் தூய்மை செய்து கொள்ளாத குற்றமும் போன்ற செயல்களைச் செய்தவர்கள், அக்குற்றங்களுக்கு ஏற்ற கழுவாய்களைச் செய்து, தூய்மையடைந்தால் அவர்கள் செய்த குற்றங்களிலிருந்து விடுபடுவர்; நல்ல பலன்களையும் பெறுவர்.

விளக்கம்:

குற்றங்களுக்குப் பிராயச்சித்தம் செய்து குற்றத்தின் பயனாக ஏற்படும் விளைவுகளிலிருந்து நீங்கலாம் என்பது கொள்கை. (1)

பரிகாரம் செய்ய வேண்டியவர்கள்

876. **பரிகாரங் கிருகபதிக்கும் பிரமசரிக்கும் பகர்ந்திடுவாம்**
பவுதிகனே நயிட்டிகனே யென்றா
விரதியருமிருவரிரு விதங்காமாகாமமென வினையுங் கிருச
பதிய காம வினையினுக்குப்
பரிகாரம் பகர்ந்திடுவா மொழியாலுங் காமம் பார்க்கஇரு
குணிதமெனப் பவுதிகனுக்கிரட்டி
கிருகபதியினும் பரம விரதிக்கு நான்குகெழுமு மெனவறிக
வினைப் பாவங்கள் கெடுப்பார்.

பரிகாரம் கிருக பதிக்கும் பிரமசரிக்கும் பகர்ந்திடுவாம்
பவுதிகனே நயிட்டிகனே என்று ஆம்
விரதியரும் இருவர் இருவிதம் காமம் அகாமம்என வினையும்
கிருக பதிஅ காம வினையினுக்குப்
பரிகாரம் பகர்ந்திடுவாம் ஒழியாலும் காமம் பார்க்க
இரு குணிதம் எனப் பவுதிகனுக்கு இரட்டி
கிருகபதியினும் பரம விரதிக்கு நான்கு கெழுமும் என
அறிக வினைப் பாவங்கள் கெடுப்பார்.

உரை:

இங்கு யாம் இல்வாழ்வானுக்கும் மணமாகாதவனுக்கும் பரிகாரம் சொல்லுவோம். மணமாகாதவர் பவுதிகப் பிரமசாரி, நைட்டிகப் பிரமசாரி என இருவகையினர். *மனுமிருதி* கூறியுள்ளபடி கல்வி கற்றுத் தேர்ச்சி பெறும் வரை பிரமசரியம் பேணி, தேர்ச்சி பெற்ற பின்னர் மணம் புரிந்து இல்வாழ்க்கையில் ஈடுபடுகிறவர் பவுதிகப் பிரமசாரி. வாழ்நாள் வரை மணம் செய்து கொள்ளாமல் உரிய கிரியாநுட்டானங்களோடிருந்து பிரமசரிய விரதத்தைப் பேணுகின்றவர் நைட்டிகப் பிரமசாரி. இவர்கள் செய்கின்ற செயல்களும் தெரிந்தே செய்வன; தெரியாமற் செய்வன என இருவகைப்படும், இங்கு இல்வாழ்வான். அறியாமற்

Koviloor Digital Library

செயும் பாவச் செயலுக்குப் பரிகாரம் கூறுவோம். ஒழிபு என்னும் விதியால் முன்பு கூறியதில் இருமடங்கு தெரிந்தே செய்த செயலுக்கு என அறிக. இல்வாழ்வானுக்கு அறியாமற் செய்ததற்குச் சொன்னதில் இருமடங்கு பவுதிகன் தெரிந்தே செய்த செயலுக்கு என அறிக. அந்தப்பவுதிகனுக்குச் சொன்னதில் இருமடங்கு நைட்டிகப் பிரமசாரி தெரிந்தே செய்த செயலுக்கு என அறிக. அதில் இருமடங்கு தெரிந்தே செய்த செயலுக்குப் பொருந்தும். ஆதலால் நான்கு மடங்கு ஆயிற்று என அறிக. தான் செய்த வினை செய்வினை எனப் பாவங்கள் இருவகையில் வரும். அது தெரிந்தே செய்வது, தெரியாமலே செய்வது என்னும் வேறுபாட்டால் நான்கு வகைகளாகும். இவ்வாறு செயல்களின் வேறுபாடுகளை உணர்ந்து, அந்தந்தச் செயலுக்கு ஏற்றபடி பரிகாரஞ் செய்து பாவங்களைப் போக்குக.

விளக்கம்:

பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்ற நான்கு ஆசிரமங்கள் அடிப்படைக் கொள்கைகள். இவையே வாழ்க்கை நெறிகளாகும்.

கிருகம் - வீடு; பதி - தலைவன்; கிருகபதி - குடும்பத் தலைவன். (2)

வினைகளின் வகை

877. முற்றும் வினைதை விகத்தான் மோகத்தானோ யான்
மூர்க்கரசர் சோரரிவர் முடுகு பயத்தாலும்
அற்று முறை யறிவழிந்து மகாமமென வறிக வல்லனவே
காம மென வறிக வமலேசன்
சொற்றனையுந் துணியாத துயக்கந் தைவிக மே
துணிந்தவரும் பேராசை தொட்டறிவு கெட்டும்
பற்றியிடும் வினைமோகம் பரமனுரை கேட்டும் பரலோக
மார்கண்டா ரென்றெண்ணும் பழுதும்.

முற்றும் வினைதை விகத்தால் மோகத்தால் நோயால்
மூர்க்க அரசர் சோரர் இவர் முடுகு பயத்தாலும்
அற்றுமுறை அறிவு அழிந்து அகாமம் எனஅறிக அல்லனவே
காமம் என அறிக அமல ஈசன்
சொல் தனையும் துணியாத துயக்கம் தைவிகமே
துணிந்தவரும் பேராசை தொட்டு அறிவு கெட்டும்
பற்றி இடும் வினைமோகம் பரமன் உரை கேட்டும் பரலோகம்
ஆர் கண்டார் என்று எண்ணும் பழுதும்.

உரை:

தெய்வத்தாலும், மயக்கத்தாலும், நோயாலும் உண்டாகிய செயல்களும், அரசர், கள்வர்களின் பயத்தால் ஏற்படும் செயல்களும், பேய் முதலியவற்றால் அறிவு

Koviloor Digital Library

இழந்து செய்யப்படும் செயலும் அகாமவினை எனப் பெயர் பெறும். இவை அல்லாத பிற செயல்கள் காமம் என அறிக. சிவாகமங்களில் இன்ன செயலைச் செய்தால் இன்ன பாவம் உண்டாகும் என்று கூறியுள்ளதை அறிந்திருந்தும், அதனை மீறிச் செய்வது, தெய்விகம் என அறிக. சிவாகமங்களை உணர்ந்தவர்கள் ஆசை மிகுதியால் செய்வது மோகம் என அறிக. கடவுள் நம்பிக்கை இல்லாதவன், இவ்வுலகில் உண்டாகும் பயன்களைத் தவிர, மறு உலகில் உண்டாகும் பயன்களைக் கண்டவர் யார் என்று எண்ணுவதும் மோகம் எனப் பெயர் பெறும்.

விளக்கம்:

தைவிகம் - தெய்வத்தால் ஏற்படுவது; **மோகம்** - மயக்கம்; **சோரர்** - திருடர்; **அகாமவினை** - அபுத்திபூர்வ கன்மம், அறியாமல் செய்யும் செயல்; **காமவினை** - புத்திபூர்வம் அறிந்து செய்வது; **அமல ஈசன் சொல்** - சிவாகமம். (3)

வைகறைப் பொழுதில் வழிபாடு செய்க

878. **உன்னிடுக சதாசிவமும் பிராம மெனு முகூர்த்தத்**
தொழிந்திடிற்பின்னிரு குணிதமுணர்ச்சிக்கே யொரு நான்
குன்னிடுக வல்ல திறையுருவத்தை மூல முரைத்திடுக
விருநூறு நீறுடலிற்பூசிப்
பின்மனையிற் புறப்படுக பிழைத்தானேயாகிற் பேசிடுக
வகோரத்தை யிருநூ றெண்பெறவே
யன்ன மருந்தாதருந்திக் கவ்வியத்தை யற்றைக் கபசவியம்
பூணானு மலசல மோசனத்தே.

உன்னிடுக சதா சிவமும் பிராமம் என்னும் முகூர்த்தத்து
ஒழிந்திடில்பின் இருகுணிதம் உணர்ச்சிக்கே ஒரு நான்கு
உன்னிடுக அல்லது இறை உருவத்தை மூலம்
உரைத்திடுக இருநூறு நீறு உடலில் பூசிப்
பின்மனையில் புறப்படுக பிழைத்தானே யாகில் பேசிடுக
அகோரத்தை இருநூறு எண் பெறவே
அன்னம் அருந்தாது அருந்திக் கவ்வியத்தை அற்றைக்கு
அபசவ்வியம் பூண் நாணும் மல சலம் மோசனத்து.

உரை:

வைகறையில் எழுந்திருந்து தூய்மை செய்து திருநீறு தரித்துக் கொண்டு ஆழ்ந்த தியானநிலையில் அமர்க. தியானம் செய்தற்கு அருகதை இல்லாதவர்; சிவலிங்கத் திருமேனியை வழிபாடு செய்க. தூக்கத்தினால் வழிபாடு தவறினால், இருமடங்கு நேரம் வழிபாட்டில் ஈடுபடுக. உறங்காதிருந்தும் வழிபாடு செய்யத் தவறினால், நான்கு மடங்கு நேரம் தியானம் செய்க. இவ்வாறு செய்யாதிருந்த குற்றம்

Koviloor Digital Library

நீங்க, மூலமந்திரத்தை இருநூறு முறை உரு ஏற்றுக. பின்னர், திருநீறு அணிந்து தியானம் செய்து இல்லத்தில் இருந்து புறப்படுக. திருநீறு அணியாமல் வெளியே செல்லுதலும், பூணூலை வலக்காதிலோ வலத்தோளிலோ இட்டுக் கொள்ளாமல் மலசலம் கழித்தலும் குற்றம். அக்குற்றம் நீங்க, விரதமிருந்து, பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகியவற்றைக் கலந்து சிவன் திருமேனியை முழுக்காட்டி, எஞ்சியதை உண்டு, அகோர மந்திரத்தை இருநூறு முறை உரு ஏற்றுக.

விளக்கம்:

சதாசிவம் – சிவலிங்க வடிவம்; பிராம முகூர்த்தம் – வைகறை; பூண்நாண் – பூணூல்; அபசவ்வியம் – வலப்பக்கம்; குணிதம் – மடங்கு; மோசனம் – கழித்தல்; மூலம் – மூலமந்திரம். (4)

மலசலம் கழித்தல்

879. பார்த்தவன் மூத்திர மலமும் பாற்றியிடும் போதிற் பருதி
முதற் பண்ணவரைப் பார்ப்பாரைப் பசுவைச்
சேர்த்தறைகவொருநூறு திகைபிழைத்தான்றானுந் தேசத்தைப்
பிழைத்தானுஞ் சிவகணத்துஞ் சிறந்த
நீர்த்தடத்து நிறைவாச நந்தனத்து மலநீர் நீக்கினனே
லொருகா னெஞ்சழிந் தூனு நீக்கிச்
சேர்த்தறைக பிரமங்க ளொருநூறைந்நூறு செப்பிடுக ஈசானஞ்
சுடலை திருப்புரிக்கும்.

பார்த்தவன்மூத்திரம் மலமும் பாற்றி இடும் போதில் பருதிமுதல்
பண்ணவரைப் பார்ப்பாரைப் பசுவைச்
சேர்த்து அறைக ஒரு நூறு திகை பிழைத்தான் தானும்
தேசத்தைப் பிழைத்தானும் சிவகணத்தும் சிறந்த
நீர்த் தடத்தும் நிறைவாச நந்தனத்தும் மலம் நீர் நீக்கினனேல்
ஒருகால் நெஞ்சு அழிந்து ஊனும் நீக்கிச்
சேர்த்து அறைக பிரமங்கள் ஒருநூறு ஐந்நூறு செப்பிடுக
ஈசானம் சுடலை திருப்புரிக்கும்.

உரை:

மலசலம் கழிக்கும் நேரத்தில் சூரியனையும், பிராமணரையும், பசுவையும் பார்த்த குற்றம் தீர அகோர மந்திரத்தை நூறு முறை உரு ஏற்றுக. திசை மாறியும் விதித்த இடத்திற்குச் செல்லாமலும் மலசலம் கழித்தவன் முன்சொன்ன மந்திரத்தை உரு ஏற்றுக. சிவபிரான் திருக்கோயில் உள்ள தெருவிலும், கோயிற் பூந்தோட்டத்திலும், குளக்கரையிலும், மலசலம் கழித்தவன், உள்ளம் வருந்தி, உண்ணாதபடி விரதமிருந்து பஞ்சப் பிரம மந்திரத்தை நூறு தடவை உரு ஏற்றுக.

Koviloor Digital Library

திருவிழா நடைபெறும் வீதியிலும் சுடலை அருகிலும் மலசலம் கழித்தவன், உபவாசமிருந்து ஈசான மந்திரத்தை ஐந்நூறு உருச்செபிக்க. இவ்வாறு செய்தால் குற்றங்கள் போகும். (5)

நீர் நிலைகள்

880. ஆடுக நீரினையாற்று ளரிதெனின் மற்றவற்று மாடைதனி
னழுக்கறுக்க வருந்திடினு மலத்தாற்
றூடிதமென் மூத்திரத்துஞ் சுக்கிலத்தினாலுந் தோய்த்திடுக
காரத்திற் சுடுநீருஞ் சொரிக
கூடியிடக் கோசலமும் குளிர்நீருஞ் சொரிக கூட்டிடுக
சுத்தமிருத்திகை தனையுந் துலங்க
வோடு புனல் வெள்ளத்துமுறுத்தியொலித் தழுக்கை யொழித்திடுக
வாதபத்தினுலர்த்திடுக வுணர்ந்தே.

ஆடுக நீரினை யாற்றுள் அரிது என்னில் மற்றவற்றும் ஆடைதன்னில்
அழுக்கு அறுக்க வருந்திடினும் மலத்தால்
தூடிதம்என் மூத்திரத்தும் சுக்கிலத்தினாலும் தோய்த்திடுக
காரத்தில் சுடுநீரும் சொரிக
கூடியிடக் கோசலமும் குளிர்நீரும் சொரிக கூட்டிடுக
சுத்த மிருத்திகை தன்னையும் துலங்க
ஓடும்புனல் வெள்ளத்தும் உறுத்தி ஒலித்து அழுக்கை ஒழித்திடுக
வாதபத்தில் உலர்த்திடுக உணர்ந்து.

உரை:

ஆறு முதலியவற்றில் நீராடுவது சிறப்பு. ஒடை, கிணற்று நீரிலும் நீராடலாம். நீராடி வழிபாடு செய்த பிறகு ஆடைகளைத் துவைத்து உலர்த்துக. உண்ணும் போது ஏற்பட்ட அசுத்தத்தையும் தூய்மை செய்க. மலசலம், விந்து முதலியவற்றால் ஆடை அழுக்கடைந்தால், அதனை உவர் நீர் முதலிய காரநீரிலே நனைத்து, வெந்நீரும் மண்ணும் கூட்டி, பசுவின் சிறுநீர் தெளித்த குளிர்ந்த நீரிலே துவைத்தால் துப்புரவாகும். ஒடுகிற நீரில் கல்லில் அடித்து ஆடைகளைத் துவைத்து வெயிலில் உலர்த்துக.

விளக்கம்:

தூடிதம் - கெடுக்கப்பட்டது; காரம் - உவர்நீர்; கோசலம் - பசுமூத்திரம்; மிருத்திகை - மண்; புனல் - நீர்; (6)

Koviloor Digital Library

குளிக்க முடியாத நோயாளிகள்

881. அஞ்சினனேற் பிணியாளனாடியிடக் குளிர்நீ
ரழன்ற புனலாடிய பினகத்து நினைத் தறைக
தஞ்சமெனப் பிரமங்கள் சடங்கங் கன் முக்காற்
றண்புனலுக்கன்னியனு மஞ்சின னேற்றானு
மெஞ்சலற வெண்பத்து மிருபத்து மியம்ப
விருநூறுஞ்சாதத்தை யியம்பிடுக நூற்றெட்
டஞ்ச லெனும கோரத்தை யாடையற நீரு
ளாடினனே லுணலொழிக வற்றைய நாளலந்தே.

அஞ்சினனேல் பிணியாளன் ஆடியிடக் குளிர் நீர்
அழன்ற புனல் ஆடியபின் அகத்துநினைத்து அறைக
தஞ்சம் எனப்பிரமங்கள் சடங்கங கள் முக்கால்
தண்புனலுக்கு அன்னியனும் அஞ்சினனேல் தானும்
எஞ்சல் அற எண்பத்தும் இருபத்தும் இயம்ப
இருநூறும் சாதத்தை இயம்பிடுக நூற்று எட்டு
அஞ்சல் என்னும் அகோரத்தை ஆடை அற நீருள்
ஆடினனேல் உண்ணல் ஒழிக அற்றைய நாள் அலந்து.

உரை:

நோயாளர் வெந்நீரில் குளித்த குற்றம் தீரப் பஞ்சப் பிரம சடங்க மந்திரங்களை மூன்று முறை உரு ஏற்றுக. நோயில்லாதவன் வெந்நீரில் குளித்த குற்றம் அகலச் சத்தியோசாதத்தை முந்நூறு உரு ஏற்றுக. தீக்கை பெற்றவன் ஆறு முதலியவற்றில் ஆடையின்றி நீராடிய குற்றம் நீங்க, அன்று உண்ணா நோன்பு இருந்து, வருந்தி, அகோர மந்திரத்தை நூற்று எட்டு உருஏற்றுக.

விளக்கம்:

அழன்றபுனல் - சுடுநீர்; **அகத்து நினைத்து** - உள்ளத்திலே எண்ணி; **அறைக** - செபிக்க; **தஞ்சம்** - அடைக்கலம்; **சடங்கம்** - அங்க மந்திரம் ஆறு; **பிரமங்கள்** - சிவபெருமானுடைய ஐந்து முகங்கள் பற்றிய மந்திரம்; **சத்தியோ சாதம்** - சிவனுடைய மேற்கு நோக்கிய முகத்துக்குரிய மந்திரம்; **அகோரம்** - சிவனுடைய தெற்கு நோக்கிய முகத்துக்கு உரிய மந்திரம்; **தண்** - குளிர்ந்த; **எஞ்சல்** - குறைவு; **எண் பத்தும் இருபத்தும்**; நூறு; **சாதம்** - சத்தியோசாதமந்திரம்; **அஞ்சல்** - அஞ்சாதே; **அலந்து** - வருந்தி. (7)

Koviloor Digital Library

தீட்டு ஏற்படுதல்

882. ஒருவருடல் விடினூருளுண்டவ் வூர்க் கசூசி
யொருதெருவுளொருமுகடே லைம்பதுவிற்கிடையுண்
டிருபதினோடொரு பதினுண்டிடை விடினே முகடு
மிடை செலினே நாராச மிலையப்பால் சூசி
யொருபதி னொன்றள வுண்டு மற்றைய வீதிக்கண்
ணூனவுட லெடுப்பதன் முன் வேதமுத லோதேற்
பரமனையர்ச்சனை புரியேன் முப்பது தண்டளவுட்
பற்றியிடுமாசூசம் பசு பதியாலயத்தின்.

ஒருவன் உடல்விடில் ஊருள் உண்டு அவ்வூர்க்கு அசூசி
ஒருதெருவுள் ஒருமுகடேல் ஐம்பது விற்கிடை உண்டு
இருபதினோடு ஒரு பதின் உண்டு இடைவிடிலே முகடும்
இடைசெலினேல் நாராசம் இல்லை அப்பால் சூசி
ஒருபதி னொன்று அளவு உண்டு மற்றைய வீதிக் கண்
ஊன உடல் எடுப்பதன் முன் வேதம் முதல் ஓதேல்
பரமனை அர்ச்சனை புரியேல் முப்பது தண்டு அளவுள்
பற்றியிடும் ஆசூசம் பசுபதி ஆலயத்தில்.

உரை:

ஒரு சிற்றூரில் ஒருவன் இறந்தால் அவ் ஊரார் அனைவருக்கும் தீட்டு உண்டு. ஒரு தெருவில் ஒரு முகட்டுக் கூரை இடைவிடாது இருந்தால் அதற்கு ஐம்பது விற்கிடை தூரம் தீட்டு உண்டு. அதுவன்றி நடுமுகடு இடைவிட்டிருந்தால் முப்பது விற்கிடை தீட்டு உண்டு. ஒரு தெருவின் நடுவில் ஒடுக்குச் சந்து இருந்தால் அதற்கு அப்பால் தீட்டு இல்லை. இருக்கிற வீட்டைத் தவிரப் புழைக்கடைப் பக்க வீதியில் ஏற்பட்டால் பதினொரு விற்கிடை தூரம் தீட்டு உண்டு. இவ்வாறு தீட்டுக்கு உட்பட்ட இடங்களில் பிணம் எடுப்பதற்கு முன் சிவபூசை செய்தலும், சிவாகமங்களை ஓதுதலும் ஆகாது. திருக் கோயிலிருக்கும் தெருவில் ஒருவர் காலமானால், முப்பது தண்டு தூரம் வரை தீட்டு உண்டு. பிணத்தைப் பார்த்து தீட்டு நீங்கக் கலசம் நிறுவி அபிடேகம் செய்க.

விளக்கம்:

விற்கிடை, தண்டு - இவை பழங்கால நீட்டலளவை; **நாராசம்** - ஒடுக்கமான சந்து; **பசுபதி** - சிவன்; **ஆசூசம்** - தீட்டு; **பரமன்** - இறைவன்; **அர்ச்சனை** - பூசை. (8)

Koviloor Digital Library

883. எட்டுமிரண்டும் பிறந்த நாளிறந்தநாளு மிழுக்குண்டு
மறையோருக்கரையருக் கீராறுண்
டெட்டுடனே ழேனையருக் கீரெட் டொன்றூன மியல்
வழியினியங்கியிடுஞ் சூத்திரருக் கிரட்டி
விட்டவர்க்கு விதிபுதல்வி தன்னுடனே பிறந்தாள்
வேறல்லா நன்மாம னெழு வாயா வியோகத்
தொட்டு மொருமூன்று நா ளொழிந்தார்க்கு மூழ்க
வொழியுமொருபதினைந்துட் சிவகணிகையோர்க்கே.

எட்டும்இரண்டும்பிறந்தநாள் இறந்தநாளும் இழுக்குஉண்டு
மறையோருக்கு அரையருக்கு ஈராறு உண்டு
எட்டுடன் ஏழ் ஏனையருக்கு ஈர்எட்டு ஒன்றும் ஊனம்
இயல் வழியில் இயங்கியிடும் சூத்திரருக்கு இரட்டி
விட்டவர்க்கு விதிபுதல்வி தன்னுடனே பிறந்தாள்
வேறு அல்லா நன்மாமன் எழுவாயா வியோகத்து
ஒட்டும் ஒரு மூன்று நாள் ஒழிந்தார்க்கு மூழ்க
ஒழியும் ஒரு பதினைந்துள் சிவகணிகை யோர்க்கு.

உரை:

பிறப்பு இறப்பு இரண்டிலும் பிராமணர்க்குப் பத்து நாள்களும், அரசர்க்குப் பன்னிரண்டு நாள்களும், வைசியருக்குப் பதினைந்து நாள்களும், தீக்கை பெற்றுச் சிவாகமங்களின் வழி நடக்கும் சூத்திரர்க்குப் பதினைந்து நாள்களும், ஏனைய சூத்திரர்க்கு முப்பது நாள்களும் தீட்டு உண்டு.

இனி, தன் மகள், தன் சகோதரி, தாயுடன் பிறந்த மாமன், தாயைப் பெற்ற பாட்டன், பாட்டி, தாயின் சகோதரிகள், தான் மணம் புரிந்து கொண்ட குடும்பத்து மாமன், மாமி இவர்களில் யாரேனும் இறந்தால், மூன்று நாள் தீட்டு உண்டு. ஒருவன் வேறொருவர் வீட்டில் இறந்தால் வீட்டின் உரிமையாளருக்கு ஒருநாள் தீட்டாகும். கோயிற்கணிகை இறந்தால், அவள் வீட்டாருக்குப் பதினைந்து நாள்கள் தீட்டு உண்டு. (9)

தீக்கை பெற்றவரை அடையும் தீட்டு

884. ஒடுங்கமன மமலனடி யொன்றினர்க் காசுச
மொட்டாது சிவதருமணியர்க்கு முலகம்
விடும்பரி சில்லாவு லக தருமணிய தீக்கை
விரும்பினர்க்கு நாண்மூன்று விரவியிடு மசுசி
சடங் கொருமையன்னியராற் சங்கரற்குப் பூசை
சமைப்பிக்க வல்லது தானீரவுடை தரித்தே
தொடங்கலு மாஞ் சிவபூசை யிரண்டார் தீக்கையினைத்
தொட்டாருமிம்முறையைத் தொடங்கலுமாஞ் சூழ்ந்தே.

Koviloor Digital Library

ஒடுங்கமனம் அமலன் அடி ஒன்றினர்க்கு ஆசூசம்
ஒட்டாது சிவ தரும அணியர்க்கும் உலகம்
விடும்பரிசு இல்லா உலக தரும அணிய தீக்கை
விரும்பினர்க்கு நாள்மூன்று விரவியிடும் அசுசி
சடங்கு ஒருமை அன்னியரால் சங்கரற்குப் பூசை
சமைப்பிக்க வல்லது தான் ஈரவுடை தரித்தே
தொடங்கலும் ஆம் சிவபூசை இரண்டாம்தீக் கையினைத்
தொட்டாரும்இம்முறையைத் தொடங்கலும் ஆம் சூழ்ந்து.

உரை:

சிவபிரான் திருவடிகளிலே மனதை ஒன்ற வைத்த சிவஞானிக்குத் தீட்டு இல்லை. ஆசிரியரால் பக்குவப்படுத்தப் பெற்றுத் தீக்கை பெற்றவர், தமக்கு உரிய உணவைத் தாமே சமைத்துப் புசித்துத் தனித்து இருந்தால் அவரையும் தீட்டு அணுகாது. உலக வாழ்க்கை நெறியைப் பொருந்திய தீக்கையுடையவர்க்கு, புண்ணிய பாவங்களால் வரும் தீட்டு மூன்று நாள் உண்டு. ஆசானிடம் சிவாகம தீக்கை பெற்றவர், தீக்கை பெறாதவர்கள் சமைத்த உணவை உண்டு அவர்களோடு பழகினால், அவருக்கும் மூன்று நாள் தீட்டு உண்டு. இந்த இருவகையினரும் சிவபூசை செய்யாத மூன்று நாள்களில் அந்தர் யாகம் செய்த பிறகு உண்க. அவர்களுடைய சிவலிங்கத்தை வேறு ஒருவர் சாதாரண மந்திரத்தால் பூசை செய்க. ஆசானிடம் சிவலிங்க பூசை செய்வதற்குரிய தீக்கை பெற்றவர், நீராடி ஈர ஆடையுடன் பூசை செய்க. விசேட தீக்கை பெற்றவர், அதற்கு உரிய முறையில் பூசை செய்க.

விளக்கம்:

ஆசூசம் - அசுசி, தீட்டு. (10)

குடும்பத் தீட்டு

885. மரித்தழுநாளுணலொழிக மகவிழந்த பிதாவு
மற்றிரு நாட்கவ்விய மாந்துக மாதாப் பாரி
பரித்தவனையிழந்தழு நாட்பணுக தலைவ பனம்
பண்ணிடுக சாந்திராயணம் ஆதிபதைத்தே
சரித்தபினைச் சிறிதுண்க தாங்கவுடறன்னைச்
சங்கர நற்றாளிணையைச் சாரவறிவுண்டே
லருச்சனையைப் புரிந்திடுக வாரியன்றனருள் பெற்
றவனிதனிற் சயிக்க புலனடக்குக நைந்தழுதே.

மரித்து அழும்நாள் உண்ணல் ஒழிகமகவு இழந்த பிதாவும்
மற்று இருநாள் கவ்வியம் மாந்துக மாதா, பாரி

Koviloor Digital Library

பரித்தவனை இழந்து அழும்நாள் பண்ணுக தலைவபனம்
பண்ணிடுக சாந்திராயணம் ஆதி பதைத்தே
சரித்த பின்னைச் சிறிது உண்க தாங்க உடல் தன்னைச்
சங்கரன் நல்தாள் இணையைச்சார அறிவு உண்டேல்
அருச்சனையைப்புரிந்திடுக ஆரியன் தன் அருள் பெற்று
அவனிதன்னில் சயிக்கபுலன் அடக்குக நைந்து அழுது.

உரை:

பிள்ளையை இழந்த தாய் தந்தையர் பிள்ளை இறந்த அன்று உண்ணாது இருந்திடுக. தாய் இரண்டு அல்லது மூன்றாம் நாளில் விதிப்படி கவ்வியத்தை அமைத்து, அதனையே உண்டு உபவாசம் இருந்திடுக. கணவனைச் சாகக் கொடுத்த மனைவி, கணவன் இறந்த அன்று வருந்தி, அழுது, தலைமயிரைக் களைக. பின்னர், சாந்திராயணம் முதலான விரதங்களை விரைந்து மேற்கொள்ளுக. பிறகு, உயிர் வாழ்வதற்காக தினசரி ஒருவேளை உண்க. பின்னர், ஆசானிடம் தீக்கை பெற்று, வழிபடு கடவுளை எழுந்தருளச் செய்து வழிபாடு செய்க. உள்ளம் உருகி அழுது புலன்களை வென்றிடுக.

விளக்கம்:

கவ்வியம் - பால், தயிர், நெய், பசுவின் மூத்திரம், சாணம்; சாந்திராயணம் - ஒரு விரதம்; வபனம் - தலையை மொட்டையடித்தல்; பரித்தவன் - கணவன்; பாரி-மனைவி. (11)

வாழ்வரசியின் ஒழுக்கம்

886. ஏந்திழைக்குப் பதியே வலியற்றுதலே நியதி
ஈசனிணைத்தாளணைய வேசறவு பெருகிற்
காந்தனனு மதி பெற்றுக் கைக் கொள்க பூசை
கலித்திடினேயிருது கலுழ்ந் தொருமூன்று நாளும்
வாய்ந்திடச் செய்துடற் சுத்தி மற்றையர் நீர் தரவே
மானத பூசனைபுரிக மற்றைய நாட்புனலுட்
டோய்ந் தருந்திக் கவ்வியத்தைச் சூட்டுக போதரற்குச்
சூதகமுன் பெருநோய்முன் சூட்டு விக்கப் பிறரால்.

ஏந்திழைக்குப் பதிஏவல் இயற்றுதலே நியதி
ஈசன் இணைத்தாள் அணைய ஏசறவு பெருகில்
காந்தன் அனுமதி பெற்றுக் கைக் கொள்கபூசை
கலித்திடினேல் இருது கலுழ்ந்து ஒருமூன்று நாளும்
வாய்ந்திடச் செய்து உடல் சுத்தி மற்றையர் நீர் தரவே
மானத பூசனைபுரிக மற்றைய நாள் புனலுள்
தோய்ந்து அருந்திக் கவ்வியத்தைச் சூட்டுக போதரற்குச்
சூதகம்முன் பெருநோய்முன் சூட்டுவிக்கப் பிறரால்.

Koviloor Digital Library

உரை:

கணவனோடு வாழுகின்ற இல்லத்தரசிக்குக் கணவனுக்குப் பணிவிடை செய்தலே மேலான அறம். அவளுக்குச் சிவபிரானுடைய திருவருள் பெற வேண்டுமென்று விருப்பம் ஏற்பட்டால், கணவன் அனுமதியோடு தக்க ஆசானிடம் தீக்கை பெற்றுச் சிவலிங்கத்தையோ, அம்பலவாணர் திருமேனியையோ பூசை செய்க. மாதவிடாய் ஏற்பட்ட போது மூன்று நாள்களிலும் பிறரை நீர்வார்க்கச் சொல்லி உடம்பைத் தூய்மை செய்க. நாலாம் நாள் ஆற்றிலோ குளத்திலோ குளித்த பிறகு, பசுப் பயனாகிய பால், நெய் முதலியவற்றைப் பருகிச் சிவபூசை செய்க. தான் பிள்ளை பெற்றதாலோ, தன் உறவினர் இறந்ததாலோ, நோயினாலோ பூசை செய்ய முடியாதபோது, தீக்கை பெற்ற வேறு ஒருவரைக் கொண்டு சாதாரண மந்திரத்தாற் பூசை செய்வித்திடுக.

விளக்கம்:

ஏந்திழை - கணவனோடு வாழ்கிற வாழ்வரசி; **ஏவல்** - பணிவிடை: **ஏசறவு** - விருப்பம்; **காந்தன், பதி** - கணவன்; **கலித்து** - நெருங்கி; **கலுழ்ந்து** - ஒழுகி; **மானதம்** - மனம் சம்பந்தப்பட்டது; **சூதகம்** - தீட்டு; (12)

கணவன் கவனிக்க வேண்டியவை

887. நிசிவேளையந்திய யாமத்தி ருதுநிகழி னேரிழைக்
கற்றைய நாளை முதலெனவே நினைந்து
நசையுறவே பதியவடோ ணண்ணுக வைந்தாநா
ணான்கினுமாமிவை தனினு நணுகலமா வாசை
யிசையினும் பூரணை பதினான் கெட்டாறு திதிமூன்
றெட்டுடனீரிரண் டென்னுந் திங்களெழு வாய்கள்
சுசியாய விதிபாத மெனு மிவற்று ளொன்று தொடினு
மணைந்தாற் பலியா சொல்லிடு மந்திரமே.

நிசிவேளை அந்திய யாமத்து இருது நிகழில் நேரிழைக்கு
அற்றைய நாளை முதல் எனவே நினைந்து
நசை உறவே பதி அவளோடு நண்ணுக ஐந்தாம் நாள்
நான்கினுமாம் இவைதன்னிலும் நணுகல்அமாவாசை
இசையினும் பூரணை பதினான்கு எட்டு ஆறு திதிமூன்று
எட்டுடன்ஈர் இரண்டுஎன்னும் திங்கள் எழுவாய்கள்
சுசியாயவிதிபாதம் என்னும் இவற்றுள்ஒன்று தொடினும்
அணைந்தால் பலியாது சொல்லிடும் மந்திரம்.

Koviloor Digital Library

உரை:

பெண் இரவு நாலாம் சாமத்தில் தீட்டு அடைந்தால், அதனை அதற்கு முந்திய நாள் தீட்டாகக் கொள்க. கணவன் அவளை விருப்பத்தோடு நாலாம் ஐந்தாம் நாள்களிற் கூடுக. அமாவாசை, பூரணை, சதுர்த்தசி, அட்டமி, சட்டி, துவாதசி, மாதப் பிறப்பு, விதிபாதம் முதலான காலங்கள் பொருந்தும் நாள்களில் கணவன் மனைவியைப் புணருதல் தகாது. ஆசை மிகுதியால் இந்த நாள்களில் மனைவியைக் கூடி மகிழ்கின்ற கணவன் சொல்லுகிற மந்திரம் பலிக்காது. (13)

பிராமணர் கவனிக்க வேண்டியவை

888. அந்தணார்க் கைந்தா நாளே யன்னியர்க்கு நான்கு மல்லா
வைந்தாதியும மாவாசையாதி
வந்துறினே மருவற்க வவற்றுள்ளுந் தவத்தை மதித்
துவசிக்கின்ற வர முடையானே யாகில்
அந்தணனு மைந்தா நாளணையேன் மந்திரத்தி
லாகுதியுஞ் செய்க பழியகன்றிட வேயறிந்து
பைந்தொடியைத் தவம்பண்ணான் பரிசியானாகிற்
பதைக்க ஒரு கர்ப்பத்தை வதைத்த பழிப்படுவான்.

அந்தணர்க்கு ஐந்தாம்நாளே அன்னியர்க்கு நான்கும் அல்லா
ஐந்து ஆதியும் அமாவாசை ஆதி
வந்து உறினே மருவற்க அவற்றுள்ளும் தவத்தை மதித்து
வசிக்கின்ற வரம் உடையானே ஆகில்
அந்தணனும் ஐந்தாம் நாள் அணையேல் மந்திரத்தில்
ஆகுதியும் செய்க பழிஅகன்றிடவே அறிந்து
பைந் தொடியைத் தவம் பண்ணான் பரிசியான் ஆகில்
பதைக்க ஒரு கர்ப்பத்தை வதைத்த பழிப்படுவான்.

உரை:

மாதவிடாய் ஏற்பட்ட ஐந்தாம் நாளில் பிராமணன் மனைவியைப் புணர்க. அமாவாசை முதலான ஆகாத நாள்களிலும் ஒன்று ஐந்தாம் நாளாயிருந்தாற் கூடலாகாது. தீட்டு நீங்க நீராடியபின் உள்ள பன்னிரண்டு நாள்களும் கருத்தரிக்கும் காலமாதலால் கணவன் மனைவியை விட்டுப் பிரியலாகாது. அந்த ஐந்தாம் நாள் விரதம் அநுட்டிப்பவன் மனைவியைக் கூடலாகாது. அங்ஙனம் கூடாத குற்றம் போம்படி விதிப்படி ஓமம் செய்க. விரதம் மேற் கொள்ளாத நாளில் கணவன் உள்ளூரில் இருந்தும் அவளை அணையாது இருந்தால், அவன் கருவைச் சிதைத்த பழிக்கு ஆளாவான். நீராடியபின் ஈராறு நாளும் - - - நம்பியகப்பொருள் மேற்கோள்.

விளக்கம்:

அகப்பொருள் விளக்கம் தமிழ் நூல். (14)

Koviloor Digital Library

ஆகாது என்ற காலங்களில் பெண்ணின்பம் ஆகாது

889. விலக்கிய காலங்களிலும் புணர்ந்தாரேலயுதம்
விளம்பிடுக பிரணவமே லோரெழுத் தஞ்சல்லார்
முலைத் தடத்தைப் பகற்பொழுதின் முயங்கிடினு மிந்த
முறையறைக பசுப்புணர்ச்சி முதலான நோக்கின்
அலற்ற விரப் பகலுறங்கின கோர மொரு நூற்றெட்
டறைந்திடுக வரிவையர் தம் போகத்தை யணித்தே
சொலத் தொடங்கிச்சிலர் கேட்ட தோடமறத் தனக்குச்
சொல்லிடுக நூற்றெட்டுத் துரிசுடனே துடைப்பார்.

விலக்கிய காலங்களிலும் புணர்ந்தாரேல் அயுதம்
விளம்பிடுக பிரணவம் மேல்ஓர் எழுத்து அஞ்சு அல்லார்
முலைத்தடத்தைப் பகற் பொழுதில் முயங்கிடினும் இந்த
முறை அறைக பசுப்புணர்ச்சி முதலான நோக்கில்
அல் தவிரப்பகல் உறங்கில் அகோரம் ஒரு நூற்று எட்டு
அறைந்திடுக அரிவையர் தம் போகத்தை அணித்தே
சொலத் தொடங்கிச் சிலர் கேட்ட தோடம் அறத்தனக்குச்
சொல்லிடுக நூற்று எட்டுத்துரிசு உடனே துடைப்பார்.

உரை:

பெண்ணின்பம் நுகருவதற்குத் தகாது என விலக்கப்பட்ட காலங்களில் தன் மனைவியைப் புணர்ந்தவன் பதினாயிரம் முறை ஓங்காரத்தை உரு ஏற்றுக. சூத்திரராகில் திருவைந்தெழுத்தை இந்த எண்ணிக்கைப்படி உரு ஏற்றுக. பகல் பொழுதில் மனைவியைக் கூடியவனும் இவ்வாறு மந்திரத்தைச் செபிக்க. பசு, காளையோடு கூடுவதைப் பார்த்தாலும், பகலில் தூங்கினாலும், சிலர் தம்மனைவியரோடு கூடி அனுபவித்த இன்பத்தைக் கூறும்போது அதைக் கேட்டாலும், அந்தக் குற்றம் போக அகோர மந்திரத்தை நூற்றெட்டு முறை உரு ஏற்றுக.

விளக்கம்:

அயுதம் - பதினாயிரம்; முலைத்தடம் - மார்பகம்; முயங்குதல் - புணருதல்; அரிவை - இருபத்தைந்து வயதுள்ள பெண்; அணித்தே - அருகே; அகோரம் - ஒரு சிவமந்திரம்; துரிசு - குற்றம். (15)

பிறர் மனைவியைத் தீண்டற்குப் பரிகாரம்

890. பரதாரந்தனை வேசிதனை விடலி தனையும் பரிசித்தான்
மோகத்தாற் பதைத்துடலுந் தெளிந்தே

Koviloor Digital Library

யொருநூறாயிரத்துடனே யைம்பதினாயிர முச்சரிக்க
வகோரத்தைக் கன்னிகை தோளொன்றி
விரு குணித மிணங்க வினமல்லாரைக் கண்ணா
லிச்சை யுறப்பார்க்கிலொரு சதமுறவேயியம்பக்
குருமனையைக் குணதோட முறப்பார்த்த கொடியான்
கூறிடுக சாதத்தை யொரு நூறு குறித்தே.

பரதாரம் தன்னை வேசிதன்னை விடலிதன்னையும் பரிசித்தான்
மோகத்தால் பதைத்து உடலும் தெளிந்தே
ஒரு நூறாயிரத்துடனே ஐம்பதினாயிரம் உச்சரிக்க
அகோரத்தைக் கன்னிகை தோள் ஒன்றில்
இரு குணிதம் இணங்க இனம் அல்லாரைக் கண்ணால்
இச்சை உறப்பார்க்கில் ஒரு சதம் உறவே இயம்பக்
குருமனையைக் குணதோடம் உறப்பார்த்த கொடியான்
கூறிடுக சாதத்தை ஒரு நூறு குறித்து.

உரை:

பிறர் மனைவி, விலைமகள், கற்பிழந்தவள் ஆகிய பெண்களை ஆசையோடு தொட்டவன், அக்குற்றத்திற்காக உடல் நடுங்கி, வருந்தி, தெளிவு பெற்று, அகோர மந்திரத்தை நூற்று ஐம்பதாயிரம் தடவை உரு ஏற்றுக. திருமணமாகாத கன்னிப் பெண்ணைத் தொட்டவன், அகோர மந்திரத்தை மூன்று இலட்சம் உரு ஏற்றுக. இணங்குவதற்குத் தகுதியில்லாதவளை ஆசையோடு பார்த்தால், நூறு தடவை உரு ஏற்றுக. ஆசிரியன் மனைவியைத் தீய எண்ணத்தோடு நோக்கிய கயவன், அக்குற்றம் நீங்க, சத்தியோசாத மந்திரத்தை நூறுமுறை உரு ஏற்றுக.

விளக்கம்:

விடலி - கற்பிழந்தவள்; பதைத்து - நடுங்கி; குணிதம் - மடங்கு; சதம் - நூறு; குருமனை - ஆசிரியன் மனைவி; தோடம் - குற்றம்; சாதம் - சத்தியோசாத மந்திரம். (16)

திருமணம் இல்லாதவர்

891. உரையாதே விரதி யரிவையர் பெயரு
முன்னாதே கனவினவ ரொடும் புணர்ச்சியுறினும்
வெருவிவியனீ ரூழ்கியுண லொழிந் தத்திரத்தை
விளம்புக நூறொழுகினு நீர் வீரியத்தை விளக்கிற்
சுரிகுழலார் தோணினைவிற் சொல்லுக நாஹூறு
துயக்கமற வாமத்தைச் சொல்லிடுக விருநூ

Koviloor Digital Library

றிரவினிளையாரை யெணியிறக்கினன் வீரியத்தை
யீன வியோனியை யிணங்கினா ரயுத மெணுவார்.

உரையாதே விரதி அரிவையர் பெயரும்
உன்னாதே கனவில் அவரொடும்புணர்ச்சி உறினும்
வெருவி வியல் நீர்மூழ்கி உண்ணல் ஒழிந்து அத்திரத்தை
விளம்புக நூறு ஒழுகினும் நீர்வீரியத்தை விளக்கில்
சுரி குழலார் தோள் நினைவில் சொல்லுக நானூறு
துயக்கம் அற வாமத்தைச் சொல்லிடுக இருநூறு
இரவில் இளையாரை எண்ணி இறக்கினன் வீரியத்தை
ஈன யோனியை இணங்கினார்அயுதம் எண்ணுவார்.

உரை:

வாழ்நாள் வரை மணம் புரிவதில்லை என்ற விரதமுடையவர், எந்தப் பெண்ணின் பெயரையும் கூறலாகாது. பெண்ணின் வடிவத்தை எண்ணலாகாது. ஒரு பெண்ணோடு கூடுவதாகக் கனவு கண்டால், அதிகாலையில் திருக்குளத்தில் நீராடி, உண்ணாமல் இருந்து, அத்திர மந்திரத்தை நூறு உரு ஏற்றுக. சிறுநீர் வெளிப்பட்டிருந்தாலும் அவ்வாறே செய்க. சுருண்ட கூந்தலையுடைய பெண்ணை அணைய வேண்டும் என்ற எண்ணத்தால் அறிவு மயங்கி விந்தை வெளிப்படுத்தியவர் வாமதேவ மந்திரத்தை நானூறு உரு ஏற்றுக. இரவில் இளம் பெண்ணைக் கூட வேண்டுமென்ற விருப்பத்தால் விந்தை விட்டவர் வாம தேவத்தை இருநூறு உரு ஏற்றுக. ஒழுக்கமில்லாதவளைக் கூடினால், அகோர மந்திரத்தைப் பதினாயிரம் உரு ஏற்றுக. (அத்திரம், அகோரம், வாம தேவம் ஆகிய மந்திரங்களைச் சைவமட அதிபதிகளிடம் உபதேசமுறையில் பெறுக; சைவன் அல்லாதவனிடம் ஒரு சைவன் உபதேசம் பெறலாகாது என்று சிவாகமம் கட்டளையிடுகின்றது.) (17)

பெண் இன்பம் நாடுகிறவர் மணம்புரிக

892. புரிந்தனனேற் போகத்தை விரதத்தை நூலிற்
புகன்ற முறையுற விறக்கிப்புனையிழையை விதியாற்
றிருந்த மணஞ் செய்தணைக செய்யா திவ்வாறு
தீண்டியிடிற் றெரிவையரைத் தனது சிறை உடலி
னிரந்தமயி ரெனைத்தனைத்தும் வருடமுறக் கொடிய
நிரயத்தின ழுந்திடுவனீற்றினணு வெனைத்தும்
வருந்திடுவ னவ்வளவு வருடமு முற்றிடவே
மற்றிதற்குப் பரிகாரம் வாக்கியத் துளரிதே.

Koviloor Digital Library

புரிந்தனனேல் போகத்தை விரதத்தை நூலில்
புகன்றமுறைஉற இறக்கிப்புனை இழையை விதியால்
திருந்த மணம் செய்து அணைக செய்யாது இவ்வாறு
தீண்டியிடில் தெரிவையரைத் தனது சிறை உடலில்
நிரந்தமயிர் எனைத்து அனைத்தும் வருடம் உறக்கொடிய
நிரயத்தில் அழுந்திடுவன் நீற்றில் அணு எனைத்தும்
வருந்திடுவன் அவ்வளவு வருடமும் உற்றிடவே
மற்று இதற்குப் பரிகாரம் வாக்கியத்துள் அரிது.

உரை:

மணம் புரியாத விரதம் பூண்டவர் பெண் இன்பத்தை விரும்பினால், சிவாகமங்களிற் சொல்லியுள்ளபடி, அவ்விரதத்துக்கு உரிய குடுமி, அக்கமணி முதலானவற்றை ஆசான் மூலம் அகற்றி, உரிய சடங்குகள் அனைத்தையும் செய்து, இல்லறத்தை மேற்கொள்க என்று ஆசிரியன் கட்டளையிட்டதும் முறைப்படி ஒருத்தியை மணந்து, அவளோடு இன்பம் நுகர்க. இவ்வாறு விரதத்தை மாற்றாமல் பெண் இன்பம் நுகர்ந்த விரதி, அவருடைய உடம்பில் எத்தனை மயிர்கள் உள்ளனவோ அத்தனை ஆண்டுகளும், அவர் பூசிய திருநீற்றில் எத்தனை அணுக்கள் உள்ளனவோ அத்தனை ஆண்டுகளும் கொடிய நரகில் கிடந்து வருந்துவார். இவை தவிர, சிவாகமங்களில் வேறு கழுவாய் இல்லை.

விளக்கம்:

புனையிழை - பெண்; தெரிவை - முப்பத்தொரு வயதுக்கு உட்பட்ட பெண்; நிரந்த - நிரம்பிய; எனைத்து - எத்தனை; நூல், வாக்கியம் - சிவாகமம்; பரிகாரம் - கழுவாய்; இறக்கி - விரத்தை மாற்றி; (18)

பிரமசாரியாக இருந்து மணம் புரிந்தவர்

893. பவுதிகனே மோகத்தாற் பரதாரந்தன்னைப்
பரிசித்த துயக்கமறப் பார்த்தழிந்து நெஞ்ச
முபவசியா யோங்கார மோரிலக்கமுறவே
யுச்சரித்தாயாம வினையினைப் புரிகவுணர்வா
லவடனையே யறிந்தும் பின்னணைந்தானேயாகி
லவனுக்குப் பரிகாரமாக மத்து மில்லைச்
சுவையுறவேயவள் சொல்லைக் கேட்டானேயாகிற்
துயக்கமற வாமத்தைச் சொல்கவொரு நூறே.

பவுதிகனே மோகத்தால் பரதாரம் தன்னைப்
பரிசித்த துயக்கம் அறப்பார்த்து அழிந்து நெஞ்சம்

Koviloor Digital Library

உபவாசியாய் ஓங்காரம் ஓர் இலக்கம் உறவே
உச்சரித்து ஆயாம வினையினைப் புரிக உணர்வால்
அவள்தன்னையே அறிந்தும் பின் அணைந்தானே ஆகில்
அவனுக்குப்பரிகாரம் ஆகமத்தும் இல்லைச்
சுவை உறவே அவள் சொல்லைக் கேட்டானே ஆகில்
துயக்கம் அறவாமத்தைச் சொல்க ஒரு நூறு.

உரை:

பிரமசாரியாக இருந்து பிறகு மணம் புரிந்து இல்லறத்தை மேற் கொண்டவன், ஆசையால் அயலானுடைய மனைவியைத் தொட்டதால் ஏற்பட்ட குற்றத்திற்காக உள்ளம் வருந்தி, ஓங்காரத்தை ஓர் இலட்சம் உரு ஏற்றுக; உபவாசம் மேற்கொள்க. பிராணாயாமமும் செய்க. மேலும், தெரிந்தே மறுபடியும் அயலான் மனைவியைப் புணர்ந்தால், அதற்கு ஏற்ற கழுவாய் சிவாகமத்திலும் இல்லை. விருப்பத்தோடு அயலான் மனைவியோடு பேசிய குற்றம் நீங்க, வாமதேவ மந்திரத்தை நூறு உரு ஏற்றுக.

விளக்கம்:

பவுதிகன் - பிரமசரிய விரதத்தை நிறைவேற்றி மணம் புரிந்தவன். பரதாரம் - பிறர் மனைவி; பரிசித்த - தொட்ட; இலக்கம் - இலட்சம்; உபவாசி - விரதமிருப்பவன்; ஆயாமம் - மூச்சுப் பயிற்சி: வாமம் - வாம தேவம், இது சிவனுடைய வடக்கு நோக்கிய முகத்துக்கு உரிய மந்திரம். (19)

புலால் தின்பவரே புலையர்

894. புன்புலைச்சிமனை புகுந்தாற் புத்தியிழப்பாகிற்
போக்கிடுக மட்பாண்ட 'மிற்புனிதம்புரிக
வென்செய்கோ மென விரங்கித் தற்புருட மெண்ணி
யியம்புக வையாயிரமுங் கிருச்சிரத்தோடீனி
தன்கையினாலறியாது தானொருநாள ருந்திற்
றப்தகிருச் சிரத்தயுதஞ் சாற்றிடுக வகோரம்
அன்புடனே யானைந்து மமலனணிமுடியி
னாட்டியது தனையருந்திற் புன்புலை போயறுமே.

புன்புலைச் சிமனை புகுந்தால் புத்தி இழப்பு ஆகில்
போக்கிடுக மண்பாண்டம் இல் புனிதம்புரிக
என் செய்கோம் என இரங்கித் தற்புருடம் எண்ணி
இயம்புக ஐயாயிரமும் கிருச்சிரத்தோடு ஈனி
தன்கையினால் அறியாது தான் ஒருநாள் அருந்தில்
தப்தகிருச் சிரத்த அயுதம் சாற்றிடுக அகோரம்

Koviloor Digital Library

அன்புடனே ஆன் ஐந்தும் அமலன் அணி முடியில்
ஆட்டியதுதன்னை அருந்தில் புன்புலை போய்அறும்.

உரை:

இழிவான புலையர் குலத்தில் பிறந்த ஒருத்தி, உயர் குலத்தினர் வீட்டில் தெரியாமல் நுழைந்தால், அக்குற்றம் போக, வீட்டில் உள்ள மண்பாண்டங்களை அகற்றி விடுக; வீட்டையும் துப்புரவு செய்க. சிவனுடைய கிழக்கு நோக்கிய முகத்துக்கு உரிய தற்புருட மந்திரத்தை ஐயாயிரம் உரு ஏற்றுக; பிராயச்சித்தமாக கிருச்சிர விரதத்தை மேற்கொள்க. தெரியாமல் அப்பெண் தந்த உணவை ஒரு நாள் உண்ட குற்றம் நீங்கக் கிருச்சிர விரதம் இருந்து, அகோர மந்திரத்தைப் பதினாயிரம் உரு ஏற்றுக; சிவனுக்குப் பால், தயிர், வெண்ணெய், நெய், மோர் என்ற பசுப்பொருள் ஐந்தையும் திருமுழுக்காட்டி, எஞ்சியதை உண்டு, உண்ணாவிரதம் இருந்திடுக.

விளக்கம்:

புலையன், புலைச்சி என்பன புலால் தின்றதால் ஏற்பட்ட காரணப் பெயர்கள். புலையன் ஆண்பால், புலைச்சி பெண்பால், 'பொல்லாப் புலாலை நுகரும் புலையரை' என்பது திருமூலரின் அருளுரை. திருமூலரின் கருத்துப்படி புலால் தின்னும் ஆண்கள் எல்லாரும் புலையர் ஆவர்; பெண்கள் எல்லாரும் புலைச்சியர் ஆவர்.

புன் - இழிவான; **மனை** - வீடு; **புனிதம் புரிக** - தூய்மை செய்க; **தற்புருடம்** - சிவனுடைய ஐந்து முகங்களில் கிழக்கு நோக்கிய முகத்துக்கு உரிய மந்திரம். **கிருச்சிரம்** - ஒரு குற்றத்திற்குக் கழுவாயாக மேற்கொள்ளும் கடும் விரதம். **அயுதம்** - பதினாயிரம்; **ஆன் ஐந்து** - பால், தயிர், நெய், வெண்ணெய், மோர்; அல்லது பால், தயிர், நெய், பசு மூத்திரம், சாணம் என்பன. **ஆட்டியது** - திருமுழுக்கு; **ஈனி** -புலைச்சி. (20)

முன்பாடலின் தொடர்ச்சி

895. அறிந்து மொருநாளவள்கை யருந்தினனேயாகில்
ஐவகைய கிருச்சிரமு மியற்றிடுக வடைவே
சிறந்த வுருவாமத்தைச் சித்தத்தின் வைத்தே
செப்பிடுக வயுதமுற விரதமும் செய்திடுக
வறிந்தவள் கையருந்தியது மிரண்டு மூன்றாகி
லதிக மறிந்தியற்றிடுக வப்பாறு மருந்திற்
பிறிந்திடுவ தலப் புன்மை சண்டாள னாகிப்
பிரிந்திடுவன் முன்னிலைமையருந்து முறை பிழைத்தான்.

Koviloor Digital Library

அறிந்தும் ஒருநாள் அவள்கை அருந்தினனே ஆகில்
ஐவகைய கிருச்சிரமும் இயற்றிடுக அடைவே
சிறந்த உருவாமத்தைச் சித்தத்தில் வைத்தே
செப்பிடுக அயுதம்உற விரதமும் செய்திடுக
அறிந்து அவள்கை அருந்தியதும் இரண்டு மூன்று ஆகில்
அதிகம் அறிந்து இயற்றிடுக அப்பாலும் அருந்தில்
பிறிந்திடுவது அல்ல அப்புன்மை சண்டாளன் ஆகிப்
பிரிந்திடுவன் முன்நிலைமை அருந்தும் முறை பிழைத்தான்.

உரை:

புலைச்சி என்று அறிந்தும் ஒருநாள் அவள் பரிமாறிய உணவை உண்ட குற்றம் நீங்கச் சாந்திராயணம் முதலிய ஐந்து வகை விரதங்களையும் முறையாகக் கடைப்பிடித்து, சிவனுடைய வடக்கு நோக்கிய முகத்துக்கு உரிய வாமதேவ மந்திரத்தை, விரதம் இருந்து பதினாயிரம் உரு ஏற்றுக. அவள் யார் என்று அறிந்திருந்தும், இரண்டு மூன்று நாள்கள் வரை அவள் பரிமாறிய உணவைப் புசித்தால், மந்திரத்தை மேலும் அதிகமாக உரு ஏற்றுக. ஆனால் தொடர்ந்து அவள் சமைத்த உணவை உண்ணத் தொடங்கினால், அப்பாவம் விட்டு நீங்காது, தன்னுடைய சாதியிலிருந்து விலகிச் சண்டாளன் ஆவான்.

விளக்கம்:

கிருச்சிரம் - ஒரு குற்றத்திற்குக் கழுவாயாக மேற் கொள்ளும் விரதம்; வாமம் - வாமதேவ மந்திரம்; அயுதம் - பதினாயிரம். (21)

வண்ணாத்தி நுழைதல்

896. வத்திரத்தினிருதுவினை மாற்றிடுவாணில
வண்ணாத்தி தோற்பணத்திவல கருமகாரி
யெத்தொகையவிழி குலத்தா ரறியாது மனையி
னிணங்கிடினே மண்பாண்டமெறிந்திடுக மண்ணாற்
சுத்தி செய்க கிருகத்தைக் கோமய கோசலத்துஞ்
சொல்லுகநாண்மூன்றையாயிரமயுதமகோர
மத்தத்தா லறியாதே யருந்தினனே லொருகா
லறைக பதினாயிரமுமைந்துறு மாயிரமும்.

வத்திரத்தில் இருதுவினை மாற்றிடுவாள் நீல
வண்ணாத்தி தோல் பணத்தி வல்ல கருமகாரி
எத்தொகைய இழிகுலத்தார் அறியாது மனையில்
இணங்கிடிலே மண்பாண்டம் எறிந்திடுக மண்ணால்

Koviloor Digital Library

சுத்திசெய்க கிரகத்தைக் கோமயம் கோசலத்தும்
சொல்லுக நாள்மூன்று ஐயாயிரம் அயுதம் அகோரம்
மத்தத்தால் அறியாதே அருந்தினனேல் ஒருகால்
அறைக பதினாயிரமும் ஐந்து உறும் ஆயிரமும்.

உரை:

நால் வருணப் பெண்களின் 'ருது' அடையாளம் பட்ட புடவையைத் துப்புரவாக்கும் வண்ணாத்தி, நீல வண்ணாத்தி, தோற்பணத்தி முதலான இழிந்த குலப் பெண்களில் ஒருத்தி, அறியாமல் உயர் குலத்தினர் வீட்டில் நுழைந்தால் அந்த வீட்டுக்கு உரியவர் தம் வீட்டிலுள்ள மண்பாண்டங்களை வெளியிலே எறிய வேண்டும். புற்றுமண், சாணம், பசுவின் மூத்திரம் ஆகியவற்றால் வீட்டைத் துப்புரவு செய்ய வேண்டும். அகோர மந்திரத்தை மூன்று நாள்கள் பதினைந்தாயிரம் உரு ஏற்றுக; அவள் அளித்த உணவை உண்டால், அக்குற்றம் அகல அகோரத்தைப் பதினையாயிரம் உரு ஏற்றுக. (22)

முன் பாடலின் தொடர்ச்சி

897. நாண்மூன்றிம் முறை நவிற்றிக் கவ்வியத்தை அருந்த
நாளிரண்டே லிருகுணித நவிற்றிடுக வறிந்தே
யூணுடையானிரு குணித மொருநாளைக் கியற்ற
வுண்டதும் பன்னாளாகி லுணவினையு மொழிந்து
நாணீராற் சாந்திராயண விரதர் தன்னை
நவிற்றுக மற்றாகார தோட நவை நணினு
நீணிலவு சமையமலற் கானைந்து மாட்டி
நிசிவேளை தனிலருந்த வவல மெல்லா நீங்கும்.

நாள்மூன்று இம்முறை நவிற்றிக் கவ்வியத்தை அருந்த
நாள் இரண்டேல் இருகுணிதம் நவிற்றிடுக அறிந்தே
ஊண் உடையான் இரு குணிதம் ஒருநாளைக்கு இயற்ற
உண்டதும் பன்னாள்ஆகில் உணவினையும் ஒழிந்து
நாள் நீரால் சாந்திராயண விரதம் தன்னை
நவிற்றுக மற்று ஆகாரதோடம் நவை் நண்ணினும்
நீள்நிலவு சடை அமலற்கு ஆன் ஐந்தும் ஆட்டி
நிசிவேளை தன்னில் அருந்த அவலம் எல்லாம் நீங்கும்.

உரை:

இவ்வாறு மூன்று நாள்களும், ஒவ்வொரு நாளும் பதினையாயிரம் உரு ஏற்றி பஞ்சகவ்வியத்தை உண்ணுக. அறியாமல் அவள் படைத்த உணவை இரண்டு நாள் உண்டால், அகோரத்தை முப்பதினாயிரம் உரு ஏற்றுக; கவ்வியத்தையும்

Koviloor Digital Library

அருந்துக. அறிந்தே அவள் பரிமாறிய உணவை ஒரு நாள் உண்டால், முன் சொன்னதை இரு மடங்கு உரு ஏற்றுக. அறிந்தே உண்டது பல நாள்கள் ஆகி விட்டால், ஏற்றி ஏற்றிச் செபித்திடுக. முடிவில் நாள் தோறும் குளித்துச் சாந்திராயணவிரதம் மேற்கொள்க. வேறு இடத்தில் உண்ட குற்றம் நீங்க, பிறையணிந்த சடையுடைய சிவனுக்குப் பால் முதலான பசுப்பயன் ஐந்தையும் திருமுழுக்குச் செய்து, அதனை அருந்தி விரதம் இருந்திடுக.

விளக்கம்:

சாந்திராயணம் - பிராயச்சித்த விரதம்; குணிதம் - மடங்கு; ஊண் - உணவு; பன்னாள் - பலநாள்; நவிற்றுக - கூறுக; தோடம் - குற்றம். (23)

சாந்திராயண விரதம்

898. முதற்பக்க மூவைந்து மொன்றிரண்டென்றேற்றி
முகந்து வலக் கரத்தாலே நீரருந்தி முறையா
லதற்கபர பக்கத்தி னொவ்வொன்று குறைத்தே
யருந்துதலே சாந்திராயண விரதமாகும்
பதத்துணவு நீருணவு மின்றிப் பன்னிரு நாட்
பட்டினியே பராக மினிப் பிராசாபத்தியந்தா
னுதித்த பகன் மூன்றூண் மற்ற யாசகமு மொருமூன்
றொருமூன்று நிசியூண் முப்பகலனிலனுணலாம்.

முதற்பக்கம் மூவைந்தும் ஒன்று இரண்டு என்று ஏற்றி
முகந்து வலக் கரத்தாலே நீர் அருந்தி முறையால்
அதற்கு அபர பக்கத்தில் ஒவ்வொன்று குறைத்தே
அருந்துதலே சாந்திராயண விரதம் ஆகும்
பதத்து உணவும் நீர் உணவும் இன்றிப் பன்னிரு நாள்
பட்டினியே பராகம் இனிப் பிராசாபத்தியம் தான்
உதித்த பகல் மூன்று ஊண் மற்றஅயாசகமும் ஒருமூன்று
ஒருமூன்று நிசிஊண் முப்பகல் அனிலன் உண்ணலாம்.

உரை:

வளர்பிறையின் பிரதமை முதல் பதினைந்து நாள்களும் வலக்கையால் நீரை ஒவ்வொரு சிறங்கையாக ஏற்றி ஏற்றிப் பருகுக. பிறகு, தேய்பிறைப் பிரதமை முதல் நாள் தோறும் ஒவ்வொரு சிறங்கை நீராகக் குறைத்துப் பருகி முடிப்பது, சல சாந்திராயண விரதம் என அறிக. உணவு நீர் என்ற இரண்டையும் உண்ணாமல் பன்னிரண்டு நாள்கள் முழுப்பட்டினியாக இருப்பது, பராகம் என்னும் பிராயச்சித்த விரதம். மூன்று நாள்கள் நண்பகலில் ஒருவேளை உணவு உண்டும், அதற்கு அடுத்த மூன்று நாள் கேளாமல் கிடைக்கும் பிச்சை உணவைப் புசித்தும், அடுத்த மூன்று

Koviloor Digital Library

நாள் இரவில் ஒரு வேளை உண்டும், இறுதியாக உள்ள மூன்று நாள்களில் காற்றையே உணவாகக் கொண்டும் பன்னிரண்டு நாள்கள் தூய்மையாக இருத்தல் பிரசாரபத்தியம் என்னும் கிருச்சிர விரதமாம்.

விளக்கம்:

முதற்பக்கம் - வளர்பிறை; அபரபக்கம் - தேய்பிறை; அனிலன் - காற்று; அயாசகம் - கேளாது கிடைக்கும் பிச்சை உணவு. பராகம் - உண்ணாமையோடு கூடிய நோன்பு. (24)

முன்பாடலின் தொடர்ச்சி

899. அருந்துக வாரழற்றோயமொரு மூன்று பகலு
வழனிகழு மாவின்பாலருந்துக முப்பகலு
ளருந்திடுக வழனிகழு மானெய் முப்பகலு
ளருந்தாதே யாதேனுமாக பகன் மூன்றுள்
வருந்துதலிம் முறைதன்னின் முன்னான்கு தினமும்
மதித்திடுக தத்தகிருச்சிர மென்றே மதியோ
ரருந்து தன்முப்பலப்பான் மூவைந்தாறு தினமும்
மதிதபன மரபென்றேயறிக கரிசறுப்பார்.

அருந்துக வார் அழல் தோயம் ஒரு மூன்று பகலும்
அழல் நிகழும் ஆவின்பால் அருந்துக முப்பகலுள்
அருந்திடுக அழல்நிகழும் ஆன் நெய் முப்பகலுள்
அருந்தாதே யாதேனும் ஆக பகல் மூன்றுள்
வருந்துதல் இம்முறை தன்னில் முன் நான்கு தினமும்
மதித்திடுக தத்த கிருச்சிரம் என்றே மதிஓர்
அருந்துதல் முப்பலப்பால்மூ ஐந்து ஆறு தினமும்
அதிதபன மரபு என்றே அறிக கரிசு அறுப்பார்.

உரை:

தாம் செய்த பாவங்களைப் போக்க வேண்டுமென அறிந்தவர், சுடுநீரை மூன்று பகலும், சுடுகிற பசுவின் பாலை மூன்று பகலும், சுடுகிற பசுவின் நெய்யை மூன்று பகலும் அருந்துக. வேறு ஒன்றுமே அருந்தாமலும் மூன்று நாள்கள் இருந்திடுக. இவ்வாறு உடல் வருந்த பன்னிரண்டு நாள்கள் இருப்பது தத்த கிருச்சிரம் என அறிக. இருபத்தொரு நாள்கள் மூன்று பலப் பசுவின் பாலைப் பருகி இருப்பது, அதிதபனம் என்னும் கிருச்சிர முறைமை என்று அறிக.

விளக்கம்:

கிருச்சிரம் - செய்த பாவத்திற்குக் கழுவாயாக மேற்கொள்ளும் கடும்

Koviloor Digital Library

விரதம்; **கிருச்சிரம்** - கஷ்டத்தோடு கூடியது; **அழல்** - வெப்பம்; **ஆன்** - பசு; **முப்பலம்** - மூன்றுபலம்; பலம் என்பது நிறுத்தல் அளவை, எடை; **அதி** - மேலான; **தபனம்** - வெப்பம். (25)

திருவிழா

900. தேவனது திருவிழவஞ் சேவிக்கயாருந் திரண்ட திரு
வீதிதனிற் றீண்டார் தீண்டிடினும்
பாவமிலைப் பரமேசன் பதிவணங்கச் செல்லும்
பரிசினுமா மகந்தனினும் பணிமொழிதன் பாணி
மேவியிடும் விவாகத்தும் வெண்பொடி பூ சிடுக
விரிபுனலின் மூழ்கிடுக மற்றையன வேளைப்
பாவியரைப் பார்த்தானே லகோர சதாட்டகத்தைப்
பகர்ந்திடுக பரிசித்தான் பகர்க புனல் படிந்தே.

தேவனது திருவிழவம் சேவிக்க யாரும் திரண்டதிரு
வீதிதன்னில் தீண்டார் தீண்டிடிலும்
பாவம் இல்லைப் பரமேசன் பதி வணங்கச் செல்லும்
பரிசினும் மாமகம் தன்னிலும் பணிமொழிதன்பாணி
மேவிஇடும் விவாகத்தும் வெண்பொடி பூசிடுக
விரிபுனலில் மூழ்கிடுக மற்றையன வேளைப்
பாவியரைப் பார்த்தானேல் அகோர சதாட்டகத்தைப்
பகர்ந்திடுக பரிசித்தான் பகர்க புனல் படிந்து.

உரை:

சிவபெருமானுடைய திருவிழாவில் வீதியில் மக்கள் நெருக்கமாகச் செல்லும்போது, ஒருவருடைய கை இன்னொருவர்மீது படும். அதனால் குற்றமில்லை. சிவதரிசனத்துக்குச் செல்லும் போதும், ஓமம் வளர்க்கும் போதும், திருமணம் நடைபெறும் வேளையிலும், தீண்டத் தகாதவர் தொட்டால், அக்குற்றம் தீரத் திருநீறு தரித்திடுக. இத்தகைய காலங்களைத் தவிர வேறு காலங்களில் தொட நேர்ந்தால், அக்குற்றம் போக நீராடுக. பெரும் பாவியரைப் பார்த்தாலும், தொட்டாலும் குளித்த பிறகு, அகோர மந்திரத்தை நூற்று எட்டு உரு ஏற்றுக.

விளக்கம்:

தேவன் - சிவபிரான்; **விழவம்** - திருவிழா; **சேவிக்க** - வணங்க; **தீண்டார்** - தொடத்தகாதவர்; **தீண்டிடில்** - தொட்டால்; **பாணி** - கை; **பரமேசன் பதி** - சிவன் கோயில்; **மகம்** - யாகம்; **பணிமொழி** - பெண்; **சதம்** - நூறு; **அட்டகம்** - எட்டு; **சதாட்டகம்** - நூற்றெட்டு. (26)

Koviloor Digital Library

இடமறிந்து உண்ணுக

901. அருந்தினரே லக்கணமே பதிதரெனவறிக
வதிபாதகான மமரார்ப் பழிப்பாரன்ன
மருந்தினரே லொருமாத முறப்பதிதராவ
ரபவாதா பிசினர் பிளையற்றா ளென்றிவர்சோ
றருந்தினரேல் வருடமுறப் பதித ரென வறிக
வஞ்சாச் சூத்திரர் கரிசுக் களியில்லாவரையர்
பொருந்த மணம் புணர் நாண்முன் புரிவார் புல்லறிவ
ரெனுமிவர்த மன்னத்தைப் புசித்தார்கடாமும்.

அருந்தினரேல் அக்கணமே பதிதர் என அறிக
அதிபாதகன் அமரார்ப் பழிப்பார் அன்னம்
அருந்தினரேல் ஒருமாதம் உறப்பதிதராவர்
அபவாத பிசினர் பிள்ளைஅற்றாள் என்று இவர் சோறு
அருந்தினரேல் வருடம் உறப்பதிதர் என அறிக
அஞ்சாச் சூத்திரர் கரிசுக்கு அளி இல்லா அரையர்
பொருந்த மணம் புணர் நாள்முன்புரிவார் புல்லறிவர்
என்னும் இவர்தம் அன்னத்தைப்புசித்தார்கள் தாமும்.

உரை:

சிவ நிந்தனையாளர் தரும் உணவை ஒருவர் புசித்தால், புசித்த உடனேயே அவர் ஒழுக்கத்தில் வீழ்ச்சியுற்ற பதிதர் ஆவார். தேவர்களைப் பழித்தவர் தரும் உணவை ஒரு மாதம் உண்பவரும், வீண் வதந்தியைப் பரப்புகிறவர், கோள் சொல்பவர், பிள்ளைப் பேறு இல்லாத பெண் ஆகியோர் தரும் உணவை ஓர் ஆண்டு உண்பவரும் அத்தகையர் ஆவார். பாவத்துக்குப் பயப்படாதவர், இரக்கமில்லாத அரசர், மணம் புரியாதவர், இழிந்த குணமுள்ளவர்கள் ஆகியோர் அளித்த உணவை உண்டவரும் அந்நிலையினரே ஆகிவிடுவார்.

விளக்கம்:

பதிதர் - ஒழுக்கம் தவறியவர். (27)

முன்பாடலின் தொடர்ச்சி

902. கன்னிகையை விற்பார்கள் பரதாரந் தன்னைக்காமுறுவார்
மனைவிகுறை கண்டறிந்துந் துறவார்
பொன்வினை செய் கொல்லர்மரக் கொல்லர் பொருட் பெண்டிர்
புலைவிலைஞர் மதுவிலைஞர் புரந்தாரை மறந்தார்
தென்னனவே பாடுமவராடுமவர் வாளாற் சேவிப்பார் பூவிற்பார்

Koviloor Digital Library

செக்கார் சொக்கிடுவா
ரென்னுமிவரெழுவாய ரன்னாதியருந்தே
லிழுக்கான வனமுளத்தை யழுக்காக்கி விடுமே.

கன்னிகையை விற்பார்கள் பரதாரந் தன்னைக்
காமுறுவார் மனைவிகுறை கண்டு அறிந்தும் துறவார்
பொன்வினை செய் கொல்லர் மரக்கொல்லர் பொருட் பெண்டிர்
புலைவிலைஞர் மதுவிலைஞர் புரந்தாரை மறந்தார்
தென்னனவே பாடுமவர் ஆடுமவர் வாளால்
சேவிப்பார் பூவிற்பார் செக்கார் சொக்கு இடுவார்
என்னும் இவர் எழுவாயர் அன்ன ஆதி அருந்தேல்
இழுக்கு ஆன அன்னம் உள்ளத்தை அழுக்கு ஆக்கிவிடும்.

உரை:

மணப்பருவம் அடைந்த பெண்ணைத் தானம் செய்யாமல் பணம் பெற்றுக் கொண்டு மணம் புரிவிப்பவரும், பிறர் மனைவியை விரும்புகிறவரும், நடத்தை கெட்ட மனைவியை ஒதுக்காத கணவரும், பொற்கொல்லர், மரத்தச்சர், விலைமகள், புலால் விற்பவர், கள் விற்பவர், செய்ந்நன்றி மறந்தவர், பாடகர், கழைக் கூத்தாடுபவர், வாள் ஏந்தும் வீரர், பூ விற்பவர், எண்ணெய் விற்பவர், மயக்க மருந்து தூவித் திருடுகிறவர் ஆகியோர் தரும் உணவைப் பெற்றுப் புசிக்கலாகாது, அந்த அழுக்குடைய உணவு, அதனை உண்டவரின் உள்ளத் தூய்மையைக் கெடுத்து விடும்.

விளக்கம்:

பரதாரம் - பிறர்மனைவி; பொருட் பெண்டிர் - விலைமகள்; புலை - புலால்; மது - கள்; புரந்தார் - ஆதரித்தவர்; சேவித்தல் - பணிபுரிதல்; செக்கார் - வாணியர்; சொக்கு இடுவார் - திருடர். (28)

மன அழுக்கே பாவத்துக்குக் காரணம்

903. அழுக்குள மேபாவத்தை யாக்கு தற்குத் துணியு
மவ்வினையா நிரயத்தினழுங்கிய ழுந்துவரே
யிழுக்கான மொழித்தவரே யிச்சிப்பார் சுகிர்த
மேறிடுவர் பரலோக மின்புறவேயிருப்பர்
வழுக்காய மொழிக்க மணில் வந்து தவம் புரிந்து
மறந்திடுவர் பிறப்பினையுஞ் சிறந்திருப்பர் சிவன்றாள்
சழக்கான மனத்தாரே சடலத்தைப் பேணித்
தமக்கு வருந்துயரத்தைச் சாற்றினுந் தாங்கேளார்.
அழுக்கு உள்ளமே பாவத்தை ஆக்குதற்குத் துணியும்

Koviloor Digital Library

அவ்வினையால் நிரயத்தில் அழுங்கி அழுந்துவரே
இழுக்கு அன்னம் ஒழித்தவரே இச்சிப்பார் சுகிர்தம்
ஏறிடுவர் பரலோகம் இன்பு உறவே இருப்பர்
வழுக்காயம் ஒழிக்க மண்ணில் வந்து தவம்புரிந்து
மறந்திடுவர் பிறப்பினையும் சிறந்து இருப்பர்சிவன் தாள்
சழக்கு ஆன மனத்தாரே சடலத்தைப் பேணித்
தமக்கு வரும் துயரத்தைச் சாற்றினும்தாம் கேளார்.

உரை:

மனஅழுக்கே உள்ளம் தூய்மை இழந்து குற்றச் செயல் புரியக் காரணமாகின்றது. அதனால், பாவச் செயல்கள் புரிந்து நரகை அடைந்து வருந்துகின்றனர். ஆதலால், பொல்லாதவர்கள் அளித்த உணவை ஒருபோதும் உண்ணாதவர்களே நன்மை அடையக் கருதுவர்; அதனால் சுவர்க்கத்தை அடைந்து மகிழ்ந்திருப்பர்; குற்றம் பொருந்திய பிறவியைப் பெறாதவாறு நிலத்திலே வந்து அரிய நோன்புகளை நோற்றுச் சிவபூசை செய்து, அப்புண்ணியப் பயனால் சிவன் திருவடியை அடைந்து இன்புறுவர். மனக் கோணல் உடையவர்கள் இப்பிறப்பில் உடம்பை வளர்ப்பதையே கருத்தாகக் கொண்டு, பொல்லாதவர்கள் தந்த உணவைப் புசித்து, மறுமையில் நரகை அடைவர். அவர்கள் ஆன்றோர் அறிவுரையைக் கேளார்.

விளக்கம்:

அழுங்கி - துன்பமடைந்து; சுகிர்தம் - நன்மை; பரலோகம் - சுவர்க்கம்; வழு - குற்றம்; காயம் - உடம்பு; சழக்கு - தீமை; சடலம் - உடல். (29)

திருமணம் முதலியவை

904. அருந்தினனேல் விவாகத்தில கோர சதமறைக
வாயிரமுச்சரித்திடுக நாலா நாளருந்தி
னருந்தினன் சீமந்தத்து மாயிர முச்சரிக்க
வவ்வளவே நாமகரணத் தருந்தினாலு
மருந்தினனே லன்னத்தை யருத்தியிடு நாளு
மவ்வளவே யுச்சரிக்க வறைந்திடுக வயுத
மருந்தினனேற் சிரார்த்தத்திற் சபிண்டி தனி லருந்தி
லாயிரமப் பாலருந்திலறைக வொரு நூறே.

அருந்தினனேல் விவாகத்தில் அகோரம் சதம் அறைக
ஆயிரம் உச்சரித்திடுக நாலாம் நாள் அருந்தில்
அருந்தினன் சீமந்தத்தும் ஆயிரம் உச்சரிக்க
அவ்வளவே நாம கரணத்து அருந்தினாலும்
அருந்தினனேல் அன்னத்தை அருத்தியிடும் நாளும்

Koviloor Digital Library

அவ்வளவே உச்சரிக்க அறைந்திடுக அயுதம்
அருந்தினனேல் சிரார்த்தத்தில் சபிண்டி தன்னில்அருந்தில்
ஆயிரம் அப்பால் அருந்தில் அறைக ஒரு நூறு.

உரை:

அயலாரின் திருமண உணவை உண்டால் அகோரம் நூறு உரு ஏற்றுக. நாலாம் மஞ்சள் நீராட்டுச் சடங்கிலும், கருத்தரித்த பெண்ணுக்குச் செய்யும் சடங்கிலும், பெயரிடும் சடங்கிலும், பிள்ளைக்கு முதலில் சோறு ஊட்டும் சடங்கிலும் உறவினர் அல்லாதவரின் வீட்டில் உண்டால், அகோரம் ஆயிரம் உரு ஏற்றுக. ஒருவர் இறந்த பன்னிரண்டாம் நாள் செய்யும் சிரார்த்தத்திலும், ஆண்டுதோறும் செய்யும் திவசத்திலும் உண்டால், சிரார்த்தத்திற்கு அகோரம் பதினாயிரமும், திவசத்திற்கு ஆயிரமும் உரு ஏற்றுக.

விளக்கம்:

சீமந்தம் - முதன் முதல் கருத்தரித்த பெண்ணுக்குச் செய்யும் சடங்கு; நாமகரணம் - பெயரிடுதல்; அன்னம் அருத்துதல் - சோறு ஊட்டுதல்; சபிண்டி - இறந்தவருக்கு பன்னிரண்டாம் நாள் செய்யும் சடங்கு. (30)

முன் பாடலின் தொடர்ச்சி

905. அறிவழிந்து வீரியத்தை யவலமல சலத்தை
யருந்தினனும தோசாதிய கத்தினருந்தினனு
மெறி விழிப்பட்டிரங்கிமனம் புலைச்சியிணைத் தோளை
யிணங்கவெண்ணு மிழுதையு மென்றியம்பிய வெல்லோரு
மறிவுறவேயகோரத்தை யயுதமுற வறைந்தே
யருந்துக வானைந்தினையு மமலனணி முடியிற்
செறிவுறவே திளைத்தாட்டி முப்பொழுதும் பூசை
சிறப்புறவே செய்விக்க வவ்வினைக டீரும்.

அறிவு அழிந்து வீரியத்தை அவல மல சலத்தை
அருந்தினனும் அதோசாதி அகத்தில் அருந்தினனும்
எறிவிழிப்பட்டு இரங்கி மனம் புலைச்சி இணைத்தோளை
இணங்க எண்ணும் இழுதையும் என்று இயம்பிய எல்லோரும்
அறிவுஉறவே அகோரத்தை அயுதம் உற அறைந்தே
அருந்துக ஆன் ஐந்தினையும் அமலன் அணிமுடியில்
செறிவு உறவே திளைத்து ஆட்டி முப்பொழுதும்பூசை
சிறப்பு உறவே செய்விக்க அவ்வினைகள் தீரும்.

Koviloor Digital Library

உரை:

மனக்கோளாறினால் அறிவு கலங்கி விந்து, மலசலங்களைப் புசித்தவரும், தன்னை விடத் தாழ்ந்த சாதியாரின் வீட்டில் உண்டவனும், அச்சம் உண்டாக்கும் பார்வையால் மனம் இரங்கிப் புலைச்சியை அணைக்க எண்ணுகிற மூடனும், இவ்வாறு கூறப்பட்ட அனைவரும் தம் தவறுக்காக வருந்தி, மூன்று வேளையும் அகோர மந்திரத்தைப் பதினாயிரம் உரு ஏற்றுக; சிவபிரானைச் சிறப்பாக வழிபடுக; பசுப் பயனாகிய பால் முதலான ஐந்து பொருள்களையும் சிவன் திருமேனிக்கு முழுக்காட்டி அதனையே உண்ணுக; பாவங்கள் அகலும்.

விளக்கம்:

அறிவழிந்து - மனக் கோளாறால் அறிவு கலங்கி; அதோ - கீழான; அகம் - வீடு; எறி - அஞ்சும்; இணை - இரண்டு; இணங்க - பொருந்த; **ஆன் ஐந்து** - பசுப்பயனாகிய ஐந்து; அவை பால், நெய், தயிர், சாணம், பசுவின் மூத்திரம்; சிலர் பால், நெய், தயிர், வெண்ணெய், மோர் என்பார்; **ஆட்டி** - முழுக்காட்டி; முப்பொழுது - மூன்று வேளை. (31)

பாண்டங்களின் தூய்மை

906. அருங்கனக பாத்திரமுன் மாப்பலகையந்த
மழனீராற் சுத்தியுறு மருவருப்புண்டாகிற்
பொருந்தியிடும் புனிதங் கோசலத்தான் மண்ணீராற்
பொருகரியின் மருப்பு வளை சுத்திமு தற்புனித
மரிந்து கடைந்திடவுமியானீரானாடோறு
மாம்புனிதங் கோமயத்து மறலாறு மாகு
மெரிந்த புனன் மண்ணிவற்றா னிலங்கியிடுமவல
மெய்தியிடிற் புளிநீராற்றா மிரந்தா னிலங்கும்.

அருங்கனக பாத்திரம்முன் மாப்பலகை அந்தம்
அழல் நீரால் சுத்தி உறும் அருவருப்பு உண்டாகில்
பொருந்தியிடும் புனிதம் கோசலத்தால் மண் நீரால்
பொருகரியின் மருப்புவளை சுத்திமுதல் புனிதம்
அரிந்து கடைந்திட உமியால் நீரால் நாள் தோறும்
ஆம்புனிதம் கோமயத்தும் அறலாறும் ஆகும்
எரிந்த புனல் மண் இவற்றால் இலங்கியிடும் அவலம்
எய்தியிடில் புளிநீரால் தாமிரம் தான் இலங்கும்.

உரை:

பொன்முதலான உலோகப் பாத்திரங்களும், மரப்பலகையால் செய்யப்படும் மரவை முதலான ஏனங்களும் சுடுநீரால் கழுவினால் துப்புரவாகும்.

Koviloor Digital Library

மேலும் அழுக்கு இருந்தால் பசுவின் சிறுநீர், உவர் மண், நீர் ஆகியவற்றால் தூய்மையடையும். போரில் வெல்லப்பட்ட யானையின் தந்தம், சங்கு முதலியவற்றை அரிந்து கடைந்த பிறகு, கருகிய உமியால் நாள்தோறும் தேய்த்து, சாணத்தாலும் நீராலும் கழுவப் பளபளப்பாகும். புளிநீரால் செம்பின் களிம்பு நீங்கிப் பளிச்சிடும்.

விளக்கம்:

கனகம் - தங்கம்; பாத்திரம் - ஏனம்; அருவருப்பு - அழுக்கு; அழல் - தீ; புனிதம், சுத்தி - தூய்மை; கோசலம் - பசுவின் மூத்திரம்; கோமயம் - சாணம்; கரி - யானை; மருப்பு - கோடு, தந்தம்; அறல் - நீர்; தாமிரம் - செம்பு; இலங்கும் - பளபளக்கும். (32)

முன் பாடலின் தொடர்ச்சி

907. வெண்பொடியாற்றண்புனலால் வெண்கலமுன் விளங்கும்
வெதுப்பிய நெய் தடவியழ லழுத்தியிட விளங்குந்
திண்கலச வெண்கலமுன் றீண்டியிடிற் காகஞ்
சிறப்புடைய கௌசிகமும் பெருங்கடுகு செறிந்த
தண்புனலாற் குதபாதி யரிட்டத்தைக் கலந்த
தண்ணீரால சினாதி தடந்திரை நீர் தன்னான்
மண்பயிலக் கோசலமும் வாரியும் வார்த்திடினே
மலினமுறினசினத்திற் புனித மிக வாய்க்கும்.

வெண் பொடியால் தண்புனலால் வெண்கலம்முன் விளங்கும்
வெதுப்பிய நெய் தடவிஅழல் அழுத்தியிடவிளங்கும்
திண்கலசம் வெண்கலம்முன் தீண்டியிடில் காகம்
சிறப்புடைய கவுசிகமும் பெரும் கடுகு செறிந்த
தண்புனலால்கு தபம் ஆதி அரிட்டத்தைக் கலந்த
தண்ணீரால் அசினம்ஆதிதடந் திரைநீர் தன்னால்
மண்பயிலக் கோசலமும் வாரியும் வார்த்திடிலே
மலினம் உறின் அசினத்தில் புனிதம்மிக வாய்க்கும்.

உரை:

வெண்கலப் பாத்திரம், சாம்பற் பொடியால் தேய்த்து நீரால் கழுவினால் சுத்தமாகும்; அவற்றைக் காகம் அலகால் கொத்தினால், பசுவின் வெண்ணெயை உருக்கித் தடவி, தீயில் சூடேற்றினால் சுத்தமாகும்; சிறந்த பட்டாடைகள், வெண்கடுகு கலந்த நீரால் துப்புரவாகும்; தருப்பைப் புல் முதலியன மோர் கலந்த நீரால் தூய்மை பெறும்; மான்தோல் முதலியவை புற்றுமண், பசுவின் மூத்திரம், தண்ணீர் ஆகியவற்றால் துப்புரவு பெறும்; ஆற்றுநீரில் துவைத்தும் சுத்தமாக்கலாம்.

Koviloor Digital Library

விளக்கம்:

தண்புனல் - குளிர்ந்த நீர்; கலசம் - குடம்; கவுசிகம் - பட்டாடை; குதபம் - தருப்பைப் புல்; அரிட்டம் - மோர்; அசினம் - மான்தோல், புலித்தோல் முதலியவை; வாரி - கடல்; புனிதம் - தூய்மை. (33)

உணவுத் தூய்மை

908. பாண்டத்திற் பதமதனைப் பற்றிடினே வாயாற்
பன்றி கரபம் நாய் பூனை காகமிவற்றொன்று
வேண்டற்க பாண்டத் தோடன்னத்தை விடுக
மிக்க விராசியினேக தேசத்தின் விரவிற்
கீண்டெற்றிச் சேடத்திற் றிருநீறு கெழுமிக்
கவ்வியத்தும் புரோக்கிக்க வுண் கலத்திற் கெழுமின்
மாண்டற்ற மசகாதியுறும் புறத்தை மாற்றி
மற்றைய பாற்றிரு நீறு மருவுதலின் வரமே.

பாண்டத்தில் பதம் அதனைப் பற்றிடினே வாயால்
பன்றி கரபம் நாய்பூனை காகம்இவற்றுள் ஒன்று
வேண்டற்க பாண்டத்தோடு அன்னத்தை விடுக
மிக்க அவிராசியில் ஏகதேசத்தில் விரவில்
கீண்டு எற்றிச் சேடத்தில் திருநீறு கெழுமிக்
கவ்வியத்தும் புரோக்கிக்க உண் கலத்தில் கெழுமின்
மாண்டு அற்ற மசகம்ஆதி உறும் புறத்தை மாற்றி
மற்றையபால் திருநீறு மருவுதலில் வரம்.

உரை:

சோற்றுப்பானையில் உள்ள சோற்றில் பன்றி, கழுதை, நாய், பூனை, காகம் இவற்றுள் ஏதேனும் ஒன்று வாய் வைத்தால், பானையோடு சோற்றையும் வெளியிலே எறிக. தெய்வத்திற்காகப் படைத்த மிகுதியான சோற்றில் ஒரு பக்கத்தில் பன்றி முதலியன வாய் வைத்தால், அவை வாய் வைத்த இடத்திலுள்ள சோற்றை எடுத்து எறிந்துவிட்டு, அந்த இடத்தைப் பால் முதலிய பசுப்பயனாலும், திருநீற்றாலும் துப்புரவு செய்க. உண்ணும்போது உண்கலத்தில் கொசுகு முதலியன விழுந்து செத்தால், அவை விழுந்த இடத்தைச் சுற்றியிருக்கும் உணவை அள்ளி எறிந்து விட்டு, மீதமுள்ள உணவில் திருநீற்றை தெளித்து, கையைச் சுத்தம் செய்த பிறகு உண்ணுதல் சிறப்பு.

விளக்கம்:

பதம், அவி, அன்னம் - இவை சோற்றைக் குறிக்கும்; வாடை விட்டது அவிராசி - பரத்; பாண்டம் - ஏனம், பாத்திரம்; கரபம் - கழுதை; மசகம் - கொசுகு;

Koviloor Digital Library

கீண்டு எற்றி - அள்ளி எறிந்து; **சேடம்** - மிச்சம்; **கெழுமி** - பொருந்தி; **புரோக்கித்தல்** - மந்திரம் சொல்லி நீர் தெளித்தல்.

தெய்வத்துக்கு அன்னம் படைத்தல் அன்னப்பாவாடையிடல் என்பது மரபு. (34)

தேன் முதலியன

909. தேன்வடித்துச் செந்தழலிற் செறிக்கவுறும் புனிதந்
தெண்ணீரிற் செறித்துப்புக் காய்ச்சியிடச் சிறக்கும்
மான் வெண்ணெயாம் புனித மழலின் வெதுப்பிடலு
மற லெண்ணெய் யாதியருக்கியத் தானாம் புனிதங்
கான்மலிந்த கருப்பூரங் குங்குமங் கத்தூரி
கமழ் சாந்து புழுகு சவாதெனு மிவையுங் கமழு
மான்பாலும் புனிதங் கன்றருந்திய பின் முலையுங்
கழுவியறலாற் கறந்தே வெதுப்பு தலுமழலின்.

தேன் வடித்துச் செந்தழலில் செறிக்க உறும்புனிதம்
தெள் நீரில் செறித்து உப்புக்காய்ச்சியிடச் சிறக்கும்
ஆன் வெண்ணெயாம் புனிதம் அழலில் வெதுப்பிடலும்
அறல் எண்ணெய்ஆதி அருக்கியத்தால் ஆம்புனிதம்
கான் மலிந்த கருப்பூரம் குங்குமம்கத்தூரி
கமழ் சாந்து புழுகுசவ்வாது என்னும்இவையும் கமழும்
ஆன்பாலும் புனிதம் கன்று அருந்திய பின் முலையும்
கழுவி அறலால் கறந்தே வெதுப்புதலும் அழலில்.

உரை:

தேனைத் துணியால் வடிகட்டிக் காய்ச்சினால் சுத்தமாகும்; உப்பைத் தண்ணீர் விட்டுக் கழுவிக் காய்ச்சினால் சுத்தமடையும்; பசுவின் வெண்ணெயை உருக்கி வடிகட்டினால் துப்புரவாகும்; நீர், நல்லெண்ணெய் முதலியனவும், மணம் பொருந்திய கருப்பூரம், குங்குமம், கத்தூரி, மணம் கமழும் சந்தனம், புழுகு, சவ்வாது ஆகியவையும் மந்திர நீர் இறைத்தலால் துப்புரவு பெறும்; கன்று குடித்த பின் முலைக் காம்புகளைக் கழுவிப் பாலைக் கறந்து அதைக் காய்ச்சினால் தூய்மை பெறும்.

விளக்கம்:

தெள் - தெளிந்த; **ஆன்** - பசு; **அறல்** - நீர்; **கான்** - மணம்; **அருக்கியம்** - மந்திரநீர் இறைத்தல்; **கத்தூரி** - மான் மதம்; **சாந்து** - கலவைச் சந்தனம்; **புழுகு** - புனுகு; **முலை** - பால் மடி; **சவ்வாது** - ஒரு வகைப் பூனையின் வீரியமான மணப் பொருள்; **புனிதம்** - தூய்மை. (35)

Koviloor Digital Library

சிவலிங்கம் முதலியவை

910. தெண்ணீராற் கோசலத்தாற் றிருநீற்றான் மயத்தாற்
சிறந்த நிலப் புற்று மண்ணாற் சிவலிங்கஞ் சுத்தி
விண்ணிவந்த வில்வத்தின் பத்திரத்தின் சாற்றான்
விசேடித்த சுத்தி நிவேதன பொன்மாதி
புண்ணிய வருக்கிய சலத்தைப் புரோக்கிக்கப் புனிதம்
பொருவரிய பரமசிவன் பூரணத்தையுயிரி
னெண்ணவலார்க்குயிர்ச் சுத்தியேனைய தத்துவத்து
மியைந்த முறையறியினி வைகளுஞ் சுத்தி யெய்தும்.

தெள்நீரால் கோசலத்தால் திருநீற்றால் மயத்தால்
சிறந்த நிலப்புற்று மண்ணால் சிவலிங்கம் சுத்தி
விண் நிவந்த வில்வத்தின் பத்திரத்தின் சாற்றால்
விசேடித்த சுத்தி நிவேதனம் பொன்மாதி
புண்ணிய அருக்கியசலத்தைப் புரோக்கிக்கப் புனிதம்
பொருவு அரிய பரமசிவன் பூரணத்தை உயிரில்
எண்ணவல்லார்க்கு உயிர்ச் சுத்தி ஏனைய தத்துவத்தும்
இயைந்தமுறை அறியின் இவை களுஞ்சுத்தி எய்தும்.

உரை:

தெளிந்த நீர், பசுமூத்திரம், சாணம், நல்ல நிலத்துப்புற்றுமண் ஆகியவையால் சிவலிங்கம் சுத்தம் பெறும்; வானளாவ வளர்ந்த வில்வ இலைகளின் சாற்றால் சிவலிங்கத்திற்குத் திருமுழுக்குச் செய்தால் பிராயச்சித்தத்தில் அதற்குச் சிறப்பான சுத்தம் ஆகும்; சிவனுக்குப் படைக்கும் அமுது, மந்திரநீர் தெளித்தலால் துப்புரவு பெறும்; ஒப்பில்லாத மேலான சிவன் உயிருக்குள் கலந்திருந்த முறைமையை உள்ளபடி அறிந்து தியானிப்பவர்களின் உயிர் தூய்மை பெறும்; நாதம் முதல் பிருதிவி யீறான தத்துவங்களில் சிவன் பரவியிருப்பதை உள்ளபடி அறிந்து தியானித்தால் தத்துவம் சுத்தி பெறும்.

விளக்கம்:

மயம் - கோமயம், சாணம்; **விண் நிவந்த** - வானளாவ வளர்ந்த; **பத்திரம்** - இலை; **விசேடித்த** - சிறந்த; **புரோக்கிக்க** - தெளிக்க; **நிவேதனம்** - கடவுளுக்குப் படைக்கும் அமுது; **பொருவு** - ஒப்பு; **பூரணம்** - நிறைவு; **அருக்கிய சலம்** - மந்திரித்து சுவாமி சிரசிற் சேர்க்கும் நீர்; **தத்துவம்** - பொருளியல் உண்மை. (36)

Koviloor Digital Library

நாள் தோறும் செய்ய வேண்டிய வழிபாடுகள்

911. சாற்றிடுக தவறிடினோர் சந்திய சாதத்தைச்
சதமுறவே சதுர்த்தியெனுஞ் சந்தி நிலை தவறி
னேற்றியொரு நாற்குணித மியம்பிடுக தவறி
னெழிற்பூசைய கோரத்தை யெண்ணுக வாயிரத்திற்
போற்றியுடன் பூசையினைப் புரிந்திடுக வறிந்தான்
புகன்றிடுக விருகுணிதம் புசிப் பொழிக வழலி
னேற்றியவி யியற்றிடுக பன்னாளும் தவறி
னிந்த முறையறிந்தியற்றப் பூசனை வாய்த்திடுமே.

சாற்றிடுக தவறிடில் ஓர் சந்திய சாதத்தைச்
சதம் உறவே சதுர்த்தி என்னும் சந்திநிலை தவறில்
ஏற்றி ஒரு நாற்குணிதம் இயம்பிடுக தவறில்
எழில் பூசை அகோரத்தை எண்ணுக ஆயிரத்தில்
போற்றி உடன் பூசையினைப் புரிந்திடுக அறிந்தான்
புகன்றிடுக இரு குணிதம் புசிப்பு ஒழிக அழலில்
ஏற்றி அவி இயற்றிடுக பல் நாளும் தவறில்
இந்த முறை அறிந்து இயற்றப்பூசனை வாய்த்திடும்.

உரை:

காலைப் பொழுதில் தன்னை அறியாமலே சந்தியா வந்தனம் செய்யத் தவறினால், அக்குற்றம் நீங்கச் சத்தியோசாத மந்திரத்தை நூறு உரு ஏற்றுக; நாலாம் சந்தியாவேளை தவறினால், அம்மந்திரம் நானூறு உரு ஏற்றுக; தெரிந்தே தவறினால், இரு மடங்கு உரு ஏற்றுக. ஒரு காலம், தெரியாமல் சிவபூசை செய்யத் தவறியிருந்தால், அகோரம் ஆயிரம் உரு ஏற்றி, பின்பு சிவபூசை செய்தால் அக்குற்றம் நீங்கும், தெரிந்தே ஒரு காலம் பூசை செய்யாதிருந்த குற்றம் போக, விரதமிருந்து அகோரத்தை இரண்டாயிரம் உரு ஏற்றுக. பல நாள்கள் பூசை செய்யாதிருந்த குற்றம் போக, உபவாசமிருந்து அம்மந்திரத்தை அந்த எண்ணிக்கைப் படியே உரு ஏற்றி, ஓமம் செய்க.

விளக்கம்:

சந்தியாவந்தனம் - காலை உச்சி மாலை வேளைகளில் மந்திரங்களாற் செய்யும் வழிபாடு.

சத்தியோசாத மந்திரம் - சிவபிரானுடைய ஐந்து முகங்களில் மேற்கு நோக்கிய முகத்தின் நாமம்.

Koviloor Digital Library

ஒரு தருப்பைப்புல் முடிச்சு

912. ஆக்கியரன் திருமுடியிற் பவித்திரத்தை யணிக
வாடி முதன் மூன்றினுளே யயர்த்தானேலகோர
வாக்கறைக விருநியுத மறுத்தூணை மறந்தான்
மந்திரிக்க விருகுணித மழலை மறந்தானு
நோக்கியியற்றா நாள் கணவின்றிடுக நியுதம்
வருடத்தின் மாதத்தின் னொய்தியற்றிய கோர
வாக்கறைக ஈரயுதநிவே தனத்தை மறந்தான்
மற்றவற்றுஞ் சிவகாயத்திரி சதமெண் வாக்கே.

ஆக்கி அரன் திருமுடியில் பவித்திரத்தை
அணிக ஆடிமுதல்மூன்றின் உள்ளே அயர்த்தானேல் அகோரம்
வாக்கு அறைக இருநியுதம் மறுத்து ஊணை மறந்தால்
மந்திரிக்க இருகுணிதம் அழலை மறந்தாலும்
நோக்கி இயற்றா நாள்கள் நவின்றிடுக நியுதம்
வருடத்தில் மாதத்தில் நொய்து இயற்றி அகோர
வாக்கு அறைக ஈர்அயுதம் நிவேதனத்தை மறந்தால்
மற்று அவற்றும் சிவகாயத்திரி சதம் எண் வாக்கு.

உரை:

சிவபிரான் திருமுடியிலே ஆடி, ஆவணி, புரட்டாசி என்ற மூன்று மாதங்களுக்குள் தருப்பைப் புல்லால் செய்த ஒரு முடிச்சைச் சாத்துக; அவ்வாறு செய்ய மறந்தால் அகோர மந்திரத்தை, உண்ணாமல் இருந்து இரண்டு இலட்சம் உரு ஏற்றுக. தெரிந்தே தருப்பைப்புல் முடிச்சு அணிவியாதிருந்தால், உண்ணா நோன்பிருந்து அம்மந்திரத்தை நான்கு லட்சம் உரு ஏற்றுக. ஒரு காலம் ஓமம் செய்யாதிருந்தால், ஒருவேளை பூசை செய்யத் தவறியதற்குச் சொன்ன முறைப்படி உரு ஏற்றுக. இந்த முறைப்படி ஓமம் செய்யாத நாள்கள் தோறும் கணக்கு அறிந்து உரு ஏற்றி ஏற்றிச் செய்க. ஒரு மாதம் ஓமம் செய்யாவிடில் நாள்தோறும் முந்நூறு வீதம் உயர்த்தி உரு ஏற்றுக. ஓர் ஆண்டு ஓமம் செய்யாதிருந்தால் தினசரி ஓர் இலட்சம் உயர்த்தி உரு ஏற்றுக. சிவனுக்கு அமுது படைக்காவிட்டால், அகோர மந்திரத்தை இருபதாயிரம் உரு ஏற்றுக; சிவகாயத்திரியை நூறு உரு ஏற்றுக.

விளக்கம்:

பவித்திரம் - தருப்பைப் புல்லால் செய்த ஒரு முடிச்சு; மோதிரம் அணிவது போல் மோதிர விரலில் அணிவது. அதனால் மோதிரத்துக்கு அது பெயராம். அயுதம் - பத்தாயிரம்; நியுதம் - இலட்சம்; ஈர் - இரண்டு; சதம் நூறு. (38)

Koviloor Digital Library

சிவலிங்க வழிபாடு

913. செந்தழலினபாயத்தாற் சிவலிங்கத் துருவஞ்
சிறப்பழியி லழிந்தறிவு தேசிகனை வணங்கி
வந்த வினை நைந்தழிய வுண்டியொழிந்த கோர
மந்திரிக்க நியுதமுற மற்றொரு லிங்கத்தைத்
தந்திடவே தாங்கிடுக சோர ரான் மற்றுந்
தவறுறினு முறைத்தமுறை தனைச் செய்க தழல்வந்
தந்தவுருவந் தீண்டியும் பழுதின்னாகிலறைந்திடுக
மூன்றயுத முடல் விடல் பொல்லாதே.

செந்தழலின் அபாயத்தால் சிவலிங்கத்து உருவம்
சிறப்பு அழியில் அழிந்துஅறிவு தேசிகனை வணங்கி
வந்து வினை நைந்து அழிய உண்டி ஒழிந்து அகோரம்
மந்திரிக்க நியுதம் உற மற்றொரு லிங்கத்தைத்
தந்திடவே தாங்கிடுக சோரரால் மற்றும்
தவறு உறினும் உரைத்தமுறை தன்னைச் செய்க தழல்வந்து
அந்தஉருவம் தீண்டியும் பழுதுஇன்று ஆகில் அறைந்திடுக
மூன்று அயுதம் உடல் விடல் பொல்லாது.

உரை:

சிவலிங்கமானது தீயினால் பழைய வடிவம் மாறிக் காணப்பட்டால், மனம் வருந்தி, ஆசாரியரை வணங்கி, அக்குற்றத்தை நீக்கி அருள்புரிய வேண்டுமென்று முறையிட்டு, விரதமிருந்து அகோர மந்திரத்தை நூறாயிரம் உரு ஏற்றுக; ஆசாரியரிடம் வேறு ஒரு சிவலிங்கத்தைப் பெற்றுப் பூசை செய்க. திருடர் முதலியவர்களால் அச்சிவலிங்கம் கவரப்பட்டால் முன்பு சொன்னபடி பரிகாரம் செய்து, மீண்டும் சிவலிங்கம் எழுந்தருளச் செய்க. மறுபடியும் தீ தாக்கிப் பழுது இல்லாமல் இருந்தால், அக்குற்றம் நீங்க அகோரத்தை முப்பதாயிரம் உரு ஏற்றுக. இதற்கு மாறாகப் பக்தியினால் உயிரை விடுதல் தகாது.

விளக்கம்:

அபாயம் - ஆபத்து; தேசிகன் - ஆசாரியர்; வியுதம் - நூறாயிரம்; மந்திரிக்க - உரு ஏற்றுக; சோரர் - கள்வர்; தழல் - நெருப்பு; அயுதம் - பத்தாயிரம். (39)

முன் பாடலின் தொடர்ச்சி

914. ஊறுபடிற் றிருமேனி பரார்த்தத்து மொழிக்க
வுரித்தாகு மற்றொன்று சுயம் பெழுவாயொழியேற்

Koviloor Digital Library

கூறிடுக வீரயுதம் பதமேனி குறுகிற்
கடந்திடினிற் றூளிபடிற் கூறுக வோரயுதம்
நூறு மிரு நூறு முற நுவல்கநிழல் கடந்தான்
பீடத்திற் சாய்ந்திடினு மவ்வளவே நுவல்க
வாறியிடவ பராத முருண்டிடினாயிர
ராயிரம் பின்னும் முருண்டாலப்பா லோரயுதம்.

ஊறுபடில் திருமேனி பரார்த்தத்தும் ஒழிக்க
உரித்துஆகும் மற்றுஒன்று சுயம்பு எழுவாய் ஒழியேல்
கூறிடுக ஈர் அயுதம் பதம் மேனி குறுகில்
கடந்திடினில் தூளிபடில் கூறுக ஓர் அயுதம்
நூறும் இரு நூறும் உற நுவல்க நிழல் கடந்தால்
பீடத்தில் சாய்ந்திடினும் அவ்வளவே நுவல்க
வாறியிட அபராதம் உருண்டிடில் ஆயிரம் ஈராயிரம்
பின்னும் உருண்டால் அப்பால் ஓர் அயுதம்.

உரை:

மனிதர் நிலைநிறுத்தியது பரார்த்த லிங்கத்தை. அதற்குத் தீ முதலியவற்றால் பழுது ஏற்பட்டால் அகற்றி விடுக. ஏனைய ஆன்மார்த்த லிங்கத்திலும் சுயம்புலிங்கத்திலும் ஊறு ஏற்பட்டால் அகற்றக் கூடாது. சிவலிங்கத்தின் மீது கால்பட்டாலும் அதைக் கடந்து சென்றாலும் அகோர மந்திரத்தை இருபதாயிரம் உரு ஏற்றுக. காலின் தூசி திருமேனியில்பட்டால் பதினாயிரம் உரு ஏற்றுக. அதன் பீடத்தையோ நிழலையோ கடந்தால் முந்நூறு உரு ஏற்றுக. பீடத்தில் சாய்ந்தால் ஆயிரம் உரு ஏற்றுக; இரு முறை சாய்ந்தால் இரண்டாயிரம் உரு ஏற்றுக; சாய்ந்து கீழே விழுந்தால் பதினாயிரம் உருவும் ஏற்றுக.

விளக்கம்:

ஆன்மார்த்த லிங்கம் - தன்னுடைய வழிபாட்டுக்கு உரியது; சுயம்பு - தானே தோன்றியது; எழுவாய் - முதலானவை; ஒழியேல் - அகற்றலாகாது; பதம் - கால்; தூளி - தூசி, தூள்; நுவல்க - சொல்லுக; ஈர் - இரண்டு; அபராதம் - குற்றம்; வாறியிட - கீழே விழ; அயுதம் - பத்தாயிரம். (40)

முன் பாடலின் தொடர்ச்சி

915. அயுதமியம் பாதாரத் தொடு விழினே சாணுக்
காதாரமற விழினே யீரயுத மறைக
அயுத மிரண்டறைந்திடுக வாய்த் திவலையணுகி
லறைந்திடுக மூன்றயுத மணுகிடினே கோழை

Koviloor Digital Library

நியுத முற நிகழ்த்துக வாழ் நீர்தன்னிற்படியி
நின்மாலியப் புனலிற் படிந்திடினு நியுதம்
விதி வினைதானிலைப் புருட மாத்திரத்தின் வீழ்ந்து
விண்டிடினே சிவலிங்கம் பீடம் பிண்டிடினும்.

அயுதம் இயம்பு ஆதாரத் தொடு விழிலே சாணுக்கு
ஆதாரம் அற விழிலே ஈர் அயுதம் அறைக
அயுதம் இரண்டு அறைந்திடுக வாய்த் திவலை அணுகில்
அறைந்திடுக மூன்று அயுதம் அணுகிடிலே கோழை
நியுதம் உற நிகழ்த்துக ஆழ்நீர் தன்னில் படியில்
நின் மாலியப் புனலில் படிந்திடினும் நியுதம்
விதிவினைதான் இல்லை புருட மாத்திரத்தில் வீழ்ந்து
விண்டிடிலே சிவலிங்கம் பீடம் பிண்டிடிலும்.

உரை:

அயுதம் இயம்பு, ஆதாரத்தொடு வீழில், ஆதாரம் - பெட்டகக் கோயில், பெட்டகக் கோயிலுடன் சேமப் பழுது நேர்ந்தால் ஒரு சாணுக்கு அகோரம் பதினாயிரம் உரு ஏற்றுக. ஆதாரம் இல்லாமல் இலிங்கத்துக்கு மாத்திரம் சேமப் பழுது உண்டாயின் சாணுக்கு இருபதாயிரம் உரு ஏற்றுக. வாய் எச்சில் சிவலிங்கத்தின் மீது விழுந்தால் இருபதாயிரமும், கோழைபட்டால் முப்பதாயிரமும் உரு ஏற்றுக. ஆழமான மடுவில் சிவலிங்கம் கை தவறி விழுந்தால் நூறாயிரம் உரு ஏற்றுக. பிறகு ஆசான் மூலம் வேறு ஒரு சிவலிங்கம் எழுந்தருளச் செய்க. சிவலிங்கம், நிர்மாலியப் பாத்திரத்தில் விழுந்தால் நூறு ஆயிரம் உரு ஏற்றுக. ஓர் ஆள் மூலமான பாதுகாப்புப் பழுது நேர்ந்து, சிவலிங்கம், பீடம் ஆகியவை பழுதடைந்தால் அவற்றுக்குப் பரிகாரமில்லை.

விளக்கம்:

ஆதாரம் - பற்றுக்கோடு, சேமம், பாதுகாப்பு; சாண் - ஒரு சாண் நீளம்; கோழை - சளி; திவலை - எச்சில் துளி; அயுதம் - பதினாயிரம்; நியுதம் - நூறாயிரம்; நின்மாலியம் - பூசித்து நீக்கிய மலர் முதலியன. (41)

ஆசான் முதலானோர்

916. தேசிகன்ற னிழல் கடந்தார் செபிக்க சதத் திரயந்
திருவேடத்தார் நிழலைக் கடக்கினுஞ் செப்பியவா
றாசகல வகோரத்தை யந்தணர் தந்நீழ
லாவினிழல் விளக்கினிழல் கடந்திடி னூறறைக

Koviloor Digital Library

வீசனது நிவேதனத்திற் கிருமி மயிரிணங்கி
விழிந்திடுக நிவேதிக்கி லியம் பிடுக வொருநூ
றாசகல விரு தூணியரிசியுயர் விழிவு
விருநாழியை யுழக் கெக்காலத்து மாகா.

தேசிகன்தன் நிழல் கடந்தார் செபிக்க சதத் திரயம்
திருவேடத்தார் நிழலைக் கடக்கினும் செப்பியவாறு
ஆசுஅகல அகோரத்தை அந்தணர்தம் நீழல்
ஆவின் நிழல் விளக்கின் நிழல் கடந்திடில் நூறு அறைக
ஈசனது நிவேதனத்தில் கிருமிமயிர் இணங்கில்
இழிந்திடுக நிவேதிக்கில் இயம்பிடுக ஒரு நூறு
ஆசு அகல இரு தூணி அரிசி உயர்வு இழிவு
இருநாழி ஐஉழக்கு எக்காலத்தும் ஆகா.

உரை:

ஆசான், சிவனடியார்களின் நிழல்களைக் கடந்தால் அகோர மந்திரத்தை முந்நூறு உரு ஏற்றுக. பிராமணன், பசு, விளக்குகளின் நிழல்களைக் கடந்தால் நூறு உரு ஏற்றுக. சிவபிரானுக்குப் படைக்கும் திருஅமுதில் புழு, மயிர்கள் விழுந்தால் அதனைப் படைக்காது அகற்றுக; தெரியாமல் படைத்தால் நூறு உரு ஏற்றுக. ஆசான் விருப்பத்தோடு பூசை செய்வதற்கு என்று அளித்த சிவலிங்கத்துக்கு அமுது படைக்க இரு தூணி அரிசி உயர்வு; இருநாழி அரிசி இழிவு; ஐந்து உழக்கு அரிசி என்றும் ஆகாது.

விளக்கம்:

சதம் - நூறு; திரயம் - மூன்று; சதத்திரயம் - முந்நூறு; ஆசு - குற்றம்; தேசிகன் - ஆசான்; திருவேடத்தார் - சைவ அடியார்; ஆ - பசு; அந்தணர் - இங்கு பிராமணரைக் குறிக்கும்; நிவேதனம் - திரு அமுது; இழிந்திடுக - அகற்றுக; ஐ - ஐந்து; தூணி - நாழி - உழக்கு ஆகியவை முன் காலத்தில் இருந்த முகத்தல் அளவை. (42)

பூசைக்கு உரிய சிவலிங்கத்தைப் பிராமணர் முதலானோர் தொடலாகாது

917. தீக்கையிலாவந்தண ராதியரிட்ட லிங்கந்
திண்டியிடிற் சிறப்புறவே பூசையினைச் செய்தே
நோக்கி முறையுற நூறு நுவல்க விருநூறு முந்நூறு
நானூறு வாம சமயத்தார்
மூர்க்கரெனும் வேடர்முதலோர் தீண்டினயுதமொழிந்திடுக
நாய் காகந் தீண்டின் மூவயுத

Koviloor Digital Library

நாய்க்கடுவான் றீண்டியிடினவின்றிடுக நியுத
நம்பனுக்குப் பூசையினைச் செய்து விதிநயந்தே.

தீக்கைஇல்லா அந்தணர்ஆதியர் இட்டலிங்கம் தீண்டியிடில்
சிறப்பு உறவே பூசையினைச் செய்தே
நோக்கி முறை உற நூறு நுவல்க இருநூறு முந்நூறு
நானூறு வாம சமயத்தார்
மூர்க்கர் என்னும் வேடர்முதலோர் தீண்டின் அயுதம் மொழிந்திடுக
நாய் காகம் தீண்டில் மூஅயுதம்
நாய்க் கடுவான் தீண்டியிடில் நவின்றிடுக நியுதம்
நம்பனுக்குப் பூசையினைச் செய்து விதி நயந்து.

உரை:

ஒருவருடைய நித்திய வழிபாட்டுக்கு உரிய ஆன்மார்த்த லிங்கத்தைச் சிவ தீக்கையில்லாத பிராமணர் முதலானோர் தொடுவது குற்றம். அக்குற்றம் நீங்கச் சிறப்பான பூசனை செய்து, அகோர மந்திரத்தை நூறு முதல் நானூறு உரு ஏற்றுக. சத்தி வழிபாடு செய்கின்றவர்களும், கொல்லும் தொழிலையுடைய வேடுவர்களாகிய இழிந்தவர்களும் சிவலிங்கத்தைத் தொட்டால் பதினாயிரம் உரு ஏற்றுக. நாயும் காகமும் தீண்டினால் முப்பதாயிரமும், இழிந்தவனான சண்டாளன் தொட்டால் நூறாயிரமும் உரு ஏற்றி முறைப்படி சிறப்பான பூசைகளை செய்க

விளக்கம்:

இட்ட லிங்கம் - ஆன்மார்த்த லிங்கம்; மூ - மூன்று; வாமசமயத்தார் - சத்தியைக் கோரமான முறையில் வழிபாடு செய்பவர்கள். இவர்கள் பூசையில் இறைச்சி, மது, மைதுனம் ஆகியவை இடம் பெறும். இப்பூசையில் கலந்து கொள்கிற ஆடவரும் மகளிரும் ஆடையில்லாமற் கூட இருப்பார்கள். ஆகவே இப்பூசை மிக இரகசியமாக நடைபெறும். (43)

செபமாலை முதலியன

918. திருவுருவுக்குரைத்த பரிகாரத்திற் பாதி
செபமாலை சிவஞான மெழுவாய்க்குஞ் செய்க
கருதிடுக கெண்டைக்கும் பாதத்திற் பாதி
கைதவறியபிடேக கலசமது கடுகிற்
திருமுடியைத் தீண்டியிடினீரயுதஞ் செபிக்கத்
திண்ணிய வருக்கியம் வீழிற் சிதையினுருண்டிடினு
மிருசதமாயிர மைந்நூ றியம்புகநாய்க் கடுவான்
தரிசிக்கி லைந்தயுத மியல் விதிசெய் திறைக்கே.

Koviloor Digital Library

திருஉருவுக்கு உரைத்த பரி காரத்தில் பாதி
செபமாலை சிவஞானம் எழுவாய்க்கும் செய்க
கருதிடுக கெண்டைக்கும் பாதத்தில் பாதி
கைதவறி அபிடேக கலசம் அது கடுகில்
திருமுடியைத் தீண்டியிடில் ஈர் அயுதம் சபிக்கத்
திண்ணியஅருக்கியம் வீழில்சிதையில் உருண்டிடிலும்
இருசதம் ஆயிரம் ஐந்நூறு இயம்புக நாய்க்கடுவான்
தரிசிக்கில் ஐந்துஅயுதம்இயல் விதிசெய்து இறைக்கு.

உரை:

வடமொழி உருவிற் சொல்லின் ஜபம். தமிழுருவிற் சொல்லின் செபம் என்பதே சரி. வடமொழி வர்க்க மெய்களின் மூன்றாவது எழுத்து எடுத்துச் சரிப்பதைக் காட்டுவது செபம்.

சிவலிங்கத்துக்குச் சொன்ன பரிகாரத்தில் பாதி அக்கமாலை, சிவாகமம் முதலியவற்றில் கால்பட்டாலும் பரிகாரம் செய்க. சிவலிங்கத்துக்குச் சொன்னதில் எட்டில் ஒன்றும் மணி முதலிய துணைப் பொருள்களில் கால்பட்டால் பரிகாரம் செய்க. திருமுழுக்குக் குடம் கையிலிருந்து நழுவித் திருமுடியில் பட்டால், அகோர மந்திரத்தை இருபதினாயிரம் உரு ஏற்றுக. சாதாரணமாகப் பட்டால் பதினாயிரம் உரு ஏற்றுக. மந்திர நீர் உள்ள ஏனம் கீழே விழுந்தால் நூறு உருவும், அது உடைந்தால் ஆயிரம் உருவும், அது உருண்டால் ஐந்நூறு உருவும் செபிக்க. சிவலிங்கத்தை நாய்க்கடுவான் பார்த்தால் ஐம்பதாயிரம் உரு ஏற்றுக; சிவாகமத்திற் சொன்னபடி சிவலிங்க பூசை செய்தபின்;

விளக்கம்:

செபமாலை - அக்கமாலை முதலியன; **கெண்டை** - கணைக்கால்; அபிடேகம் - திரு முழுக்கு; **கலசம்** - குடம்; அருக்கியம் - மந்திரநீர்ப் பாத்திரம்; நாய்க்கடுவான் - ஆரியப் பெண்ணுக்கும் சுடலையில் பிணம் எரிப்பவனுக்கும் பிறந்தவன். இதற்கு ஒரு வரலாறு உண்டு. (44)

பூசையை விலைக்கு விற்கும் பூசாரிகள்

919. சிவலிங்கம் விற்பார்கள் சிவஞானம் தனையும்
திருவுருவமது தனையுந் தீராப் பாதகரே
யவர் தமக்குப் பரிகார மறையா தாகமமு
மாரணத்தினுண் பொருளை யாருயிர்க்குத் துணையைச்
சிவனையுணரற் பொருட்டாலே செய்வாரேற் பூசை
சிறப்புடைய வைதிகரே சைவரே தெளிந்த
வெவரேனும் பதிதரவ ரெனவெண்ணி யிணங்கே
லிற்புகுந்தாற் றீண்டிய பாண்டத்தை விடலினிதே.

Koviloor Digital Library

சிவலிங்கம் விற்பார்கள் சிவஞானம் தன்னையும்
திருஉருவம் அது தன்னையும் தீராப் பாதகரே
அவர் தமக்குப் பரிகாரம் அறையாது ஆகமமும்
ஆரணத்தின் நுண்பொருளை ஆருயிர்க்குத் துணையைச்
சிவனை உணரல் பொருட்டாலே செய்வாரேல் பூசை
சிறப்பு உடைய வைதிகரே சைவரே தெளிந்த
எவரேனும் பதிதர் அவர் என எண்ணி இணங்கேல்
இல்புகுந்தால் தீண்டிய பாண்டத்தைவிடல் இனிது.

உரை:

சிவஞானத்தை உணர்த்தும் சிவாகமங்களாய் உபநிடதங்களின் தெளிவாய், ஆருயிர்கள் அனைத்துக்கும் துணையாய் விளங்குகின்ற சிவபிரான், திருக்கோயில்களில் சிவலிங்க அம்பலவாணர் வடிவம் முதலான திருமேனிகளில் எழுந்தருளியிருக்கிறான். அச்சிவனுக்குப் பூசனை செய்யும் பூசாரிகள், தமக்கும் வணங்கவரும் அன்பர்களுக்கும் பத்தி உணர்வேற்படும் பொருட்டாகவே பூசைகள் செய்ய வேண்டும். இதற்கு மாறாக கூலிபெறும் அருச்சனை என்ற நோக்கில் பூசைகளை விலைக்கு விற்கும் பூசாரிகள் பெரும் பாவியர் ஆவர். அத்தகைய பூசாரிகள் வைதிகப் பிராமணராய் இருந்தாலும், சிவாசாரியர் சைவக் குருக்களாக இருந்தாலும், அவர்களை ஒழுக்கம் தவறியவர்களாகக் கருதி ஒதுக்குக. அவர்களுக்குப் பரிகாரம் ஆகமங்களில் இல்லை. அவர்கள் ஒரு வீட்டிற்கு வந்து, அங்குள்ள ஒரு பாத்திரத்தைத் தொட்டால் அதனை எறிந்து விடுக.

விளக்கம்:

பதிதர் - ஒழுக்கம் தவறியவர், ஒழுக்கத்தின் இழுக்கியவர்; **ஆரணம்** - உபநிடதம்; வைதிகர் - பிராமணர்; பாதகர் - பாவிகள். (45)

கோயிற் பூசாரிகள்

920. பொருணசையாற் பூசையினைப் புரிவார்கண் மாலைப்
புரந்தரனைத் திசைமுகனைப்புரந்தரன்றன் சேனைப்
பெருமானை விநாயகனைப் பேரறங் காப்பாளைப்
பேருலகத் தாயரெனப் பேசு மெழுவரையும்
இருமையிலும் பயனிழந்தாரவர் தம்மை யிணங்கே
லிகலாதே சாக்கியரோ டேனையர் தம்மோடும்
விரவிடினுந் திருநீறு மெய்ப்பூசியிடுக விளம்பிடுக
சிவநாமம் வெறுப் பொழிக வெவர்க்கும்.

பொருள் நசையால் பூசையினைப் புரிவார்கள் மாலைப்
புரந்தரனைத், திசைமுகனைப், புரந்தரன் தன் சேனைப்

Koviloor Digital Library

பெருமானை, விநாயகனைப், பேரறம் காப்பாளைப்
பேருலகத் தாயர் எனப் பேசும் எழுவரையும்
இருமையிலும் பயன் இழந்தார் அவர்தம்மை இணங்கேல்
இகலாதே சாக்கியரோடும் ஏனையர் தம்மோடும்
விரவிடிலும் திருநீறு மெய்ப்பூசி இடுக விளம்பிடுக
சிவன் நாமம் வெறுப்பு ஒழிக எவர்க்கும்.

உரை:

திருமால், பிரமன், தேவசேனாதிபதியான கந்தன், கணபதி, உமை, சப்தமாதர் என்ற தெய்வங்களின் கோயில்களிலே பணி செய்யும் பூசாரிகள், வணங்க வருகின்ற அடியவர்களிடம் கூலி பெற்றுக் கொண்டு பூசனை செய்வது தகாது. இவ்வாறு அடியவரிடம் அர்ச்சனை என்று சொல்லிப் பணம் பெறும் பூசாரிகள், இம்மை மறுமை என்ற இருவகைப் பயன்களையும் இழந்துவிடுவர். ஆகையால், பணம் வாங்கிக் கொண்டு பூசை செய்யும் பூசாரிகளின் தொடர்பை ஒதுக்குக. புத்த மதத்தினர் முதலான பிறமதத்தினரை எதிர்த்து வாதிடாப் பின்னிற்பார் தொடர்பையும் ஒதுக்குக. தாமாகவரின் சிவபிரான் திருப்பெயரைக் கூறி அவர்களின் உடம்பிலும் திருநீறு அணிவிக்க. எவரையும் வெறுக்கற்க.

விளக்கம்:

இப்பாடலின் கருத்து மிக உயர்ந்தது. கோயில்கள் வரவு செலவு கணக்குப் பார்க்கும் இடங்களாக இல்லாமல் பத்தி நெறி வளரும் அருள் நிலையங்களாக மாற வேண்டும். அதற்கு இன்றைய அருச்சனை முறை மாறவேண்டும். சிவாகமம் அருச்சனையை மட்டும் கூறவில்லை. (46)

திருக்கோயிலுக்கு உரிய பொருள்

921. பரமசிவனாலயத்திற் பதர் திரண மற்றும்
பற்றாதே பற்றியிடினழுங் கியுளம் பதைத்து
வெருவிய பராதத்தைப் பொறுத் தருளென் றிறைஞ்சி
விண்ணப்பஞ் செய்தறியா தெடுத்தவனாற்குணிதம்
கருதியெடுத்தவனைந்து குணிதமுறக் கொடுத்துக்
கடிதினியற்றிடுக சாந்தி ராயணத்தைக் கசிந்தே
யருமறையோர் பொருள் குரவனரும் பொருள் கொண்டானு
மம்முறையிற் கொடுத்திடுக வவல வினையறுமே.

பரமசிவன் ஆலயத்தில் பதர் திரணம் மற்றும்
பற்றாதே பற்றியிடில் அழுங்கி உள்ளம் பதைத்து
வெருவி அபராதத்தைப் பொறுத்து அருள் என்று இறைஞ்சி
விண்ணப்பம் செய்து அறியாது எடுத்தவன் நால் குணிதம்

Koviloor Digital Library

கருதி எடுத்தவன் ஐந்த குணிதம் உறக் கொடுத்துக்
கடிதினில் இயற்றிடுக சாந்தி ராயணத்தைக் கசிந்தே
அரும் மறையோர் பொருள்குரவன் அரும்பொருள் கொண்டானும்
அம்முறையில் கொடுத்திடுக அவலவினை அறும்.

உரை:

சிவன் திருக்கோயிலுக்கு உரிய பொருள்கள், பயனில்லாத பதர், துரும்புகளாக இருந்தாலும் தொடலாகாது. ஒருவன் கோயிலுக்குச் சொந்தமான ஒரு பொருளை அறியாமல் எடுத்திருந்தால் அதற்காக மனம் வருந்தி, அக் குற்றத்தைப் பொறுத்து அருள் செய்யுமாறு இறைவனை வேண்டித் தான் எடுத்த பொருளைப் போல நான்கு மடங்கு பொருளைக் கோயிலுக்குத் தரவேண்டும்; அறிந்தே எடுத்தவன், தான் எடுத்த பொருளைப் போல ஐந்து மடங்கு பொருளைக் கோயிலுக்குச் செலுத்த வேண்டும்; தன் குற்றத்திற்குக் கழுவாயாகச் சாந்திராயண நோன்பு நோற்க வேண்டும். வேதியர், ஆசிரியர் ஆகியோரின் பொருள்களைக் கவர்ந்தவனும் அக்குற்றம் நீங்க, அவ்வாறே ஐந்து மடங்கு பொருள்களைத் திரும்பக் கொடுத்திடுக.

விளக்கம்:

சாந்திராயணம் - ஒருவர் தாம் செய்த தவறுக்குப் பிராயச்சித்தமாக மேற்கொள்ளும் உயர்தர விரதம். பதர் - அரிசி இல்லாத நெல்; திரணம் - துரும்பு; குணிதம் - மடங்கு. (47)

முன் பாடலின் தொடர்ச்சி

922. கூடியெடுத்தனுபவித்தான் பாதமுறக் கொடுக்கக்
கூடினனைக் கூடினனும் பாதத்திற் பாதி
யோடியுட வூனவினை வுரைத்திடுக நியுத
முருபிதனை யடுத்தவனு முரைக்க வதன் பாதங்
கூடினனைக் கூடினனும் பாதத்திற் பாதி
கூறிடுக வந்தணர் தம்பொருளினைக் கொண்டானும்
பாடிய விம்முறை சபத்தைப் பணிற்றீரு மந்தப்
பாவவினையல்ல தழற் குழிதன்னிற் படுத்தும்.

கூடிஎடுத்து அனுபவித்தான் பாதம் உறக் கொடுக்கக்
கூடினனைக் கூடினனும் பாதத்தில் பாதி
ஓடியிட ஊன வினை உரைத்திடுக நியுதம்
உருபி தன்னை அடுத்தவனும் உரைக்கஅதன் பாதம்

Koviloor Digital Library

கூடினனைக் கூடினனும் பாதத்தில் பாதி
கூறிடுக அந்தணர்தம் பொருளினைக் கொண்டானும்
பாடிய இம்முறை சபத்தைப் பண்ணில் தீரும் அந்தப்
பாவவினை அல்லது அழல் குழிதன்னில் படுத்தும்.

உரை:

திருக்கோயிலுக்கு உரிய பொருளை இன்னொருவனோடு சேர்ந்து எடுத்தவன், தான் எடுத்த பொருளைப் போல நான்கில் ஒரு மடங்கு அதிகமான பொருளைக் கோயிலுக்குக் கொடுத்திடுக; இன்னொருவனோடு சேர்ந்து எடுத்தவனுக்குத் துணை செய்தவன், தனக்குக் கிடைத்த பொருளில் எட்டில் ஒரு பங்கை அதிகமாகச் சேர்த்துத் தருக; கோயிலின் பொருளைத் தெரிந்தே கவர்ந்தவன், தான் எடுத்ததைப் போல ஐந்து மடங்கு பொருளைத் திரும்பக் கொடுப்பதோடு, தனக்கென ஓர் உருவம் இல்லாத சிவனுக்குரிய அகோர மந்திரத்தை நூறாயிரம் உரு ஏற்றுக; பொருளைக் கவர்ந்தவனுக்குத் துணையாக இருந்தவன், இருபத்தையாயிரம் உரு ஏற்றுக; துணையாக இருந்தவனோடு சேர்ந்தவன், அதிற் பாதி உரு ஏற்றுக. வேதியர் பொருளைக் கவர்ந்தவனும் இவ்வாறே செபம் செய்க; செய்யாவிடில் தீ எரியும் நரகை அடைவான்.

விளக்கம்:

ஊன - குற்றம் பொருந்திய; உருபி - அகோர மந்திரம்; அழல் குழி - நரகம்; நியுதம் - நூறாயிரம்; அந்தணர் - வேதியர்.

குறிப்பு:

இச்செய்யுளில் ஊனைவினை என்று முன் பிரசுரமாயுள்ள பாடம் தவறானது. அகரத்தை ஐகாரம் அதிக்கிரமித்த தவறு அது. (48)

ஆசாரியர் முதலானோர்

923. பார்த்திவரு மற்றையரு முயத்தேவ பிரதிட்டை
பண்ணினனே லாசானு மிருநியுதம் பகர்க
தீர்த் துணலுஞ் சிவாகமத்தினுண்மை தெளியாதே
தீக்கைபுரி தேசிகனு மஞ்சிலக்கஞ் செபிக்க
வார்த்தையினைக் கடின முற வசனித்தானாகின்
மந்திரிக்க வோரிலக்கம் பாதியதன் பாதங்
கூர்த்தவருட் சோதகனைப் போதகனை முத்தி
கொடுப்பானைப் பதம் பணிந்து குறை பொறுத் தாளென்றே.

Koviloor Digital Library

பார்த்திவரும் மற்றையரும் உய்யத்தேவ பிரதிட்டை
பண்ணினனேல் ஆசானும் இரு நியுதம் பகர்க
தீர்த்து உண்ணலும் சிவாகமத்தின் உண்மை தெளியாதே
தீக்கைபுரி தேசிகனும் அஞ்சு இலக்கம் செபிக்க
வார்த்தையினைக் கடினம் உற வசனித்தான் ஆகில்
மந்திரிக்க ஓர் இலக்கம் பாதி அதன் பாதம்
கூர்த்த அருள் சோதகனைப் போதகனை முத்தி
கொடுப்பானைப்பதம் பணிந்துகுறை பொறுத்து ஆள் என்று.

உரை:

அரசர் முதலானோர் நற்கதி பெறும் பொருட்டு ஆசாரியர் சிவ லிங்கத்தை நிலை நிறுத்தினால், அக்குற்றம் நீங்கும்படி, உண்ணாநோன்பு மேற்கொண்டு அகோர மந்திரத்தை இரு நூறாயிரம் உரு ஏற்றுக; சிவாகம முறைமையை உணராமல் ஒருவருக்குத் தீக்கை அளிக்கும் ஆசிரியன்; அக்குற்றம் போக விரதமிருந்து ஐந்நூறாயிரம் உரு ஏற்றுக, சோதகர், போதகர், முத்தி அளிப்போர் என்ற மூவகைக் குருமாரிடமும் கொடுஞ் சொற்களை உரைத்தவன், அக்குற்றம் போக அவர்களை வணங்கி மன்றாடி முறையே நூறாயிரம், ஐம்பதாயிரம், இருபத்தையாயிரம் உரு ஏற்றுக.

விளக்கம்:

சிவாகமக்கிரியை திகழத் தூண்டுகிறவர் சோதகர்; அதனைப் போதிப்பவர் போதகர்; நிருவாண தீக்கை அளித்து மாணாக்கர் முத்தி பெறச் செய்பவர் முத்தி கொடுப்போர். உய்ய - வீடுபேறு அடைய; பாதம் - காற்பங்கு; வசனித்தல் - பேசுதல்; அஞ்சு - ஐந்து. (49)

முன்பாடலின் தொடர்ச்சி

924. தாக்கிடினே தன்னது கையவனுடலந் தன்னிற்
சாற்றிடுக வாறிலக்க மாயுதத்தாற் றடியி
னேற்றியிரு குணித முறயியம்பிடுக பூசை
யியற்றிடுக சிறப்புறவே யீசனுக்கஞ் சென்னுங்
கூற்றுடைய சாந்திராயண விரத முதலுங்
கொள்க விரதத்தினையு முடிவினடி குறுகிப்
போற்றியுள பொருளெல்லாங் கொடுத்தவன் செய் தீக்கை
பொருந்திடுக வருந்தவரைப் பிழைக்கினு மிப்புரிவே.

தாக்கிடினே தன்னதுகை அவன் உடலம் தன்னில்
சாற்றிடுக ஆறு இலக்கம் ஆயுதத்தால் தடியின்
ஏற்றி இரு குணிதம் உற இயம்பிடுக பூசை
இயற்றிடுக சிறப்பு உறவோசனுக்கு அஞ்சு என்னும்

Koviloor Digital Library

கூற்று உடைய சாந்திராயண விரதம் முதலும்
கொள்க விரதத்தினையும் முடிவில் அடிகுறுகிப்
போற்றி உள்ள பொருள்எல்லாம் கொடுத்து அவன் செய் தீக்கை
பொருந்திடுக அரும்தவரைப் பிழைக்கினும் இப்புரிவு.

உரை:

மூன்று வகைக் குருமாருள் ஒருவரை ஒருவர் தம் கையால் அடித்தால், அப்பாவம் தீர அகோர மந்திரத்தை அறு நூறாயிரம் உரு ஏற்றுக; ஒரு கருவியால் அக்குருவின் உடம்பிலிருந்து குருதி வெளிப்படுமாறு தாக்கினால், அந்தப் பாவம் அகலப் பன்னிரண்டு நூறாயிரம் உரு ஏற்றுவதோடு, சிவனுக்குச் சிறப்புப் பூசனை செய்து திருவமுது படைத்துச் சலசாந்திராயணம் முதல் ஐந்து வகைச் சாந்திராயண விரதங்களையும் நிறைவேற்றிய பிறகு, குருவின் பாதத்திற் பணிந்து, தமக்குள்ள பொருள் அனைத்தையும் அவருக்குத் தந்து, அவர் அளிக்கும் தீக்கையைப் பெறுக. வேறு சிவஞானியிடம் தவறாக நடந்து கொண்டாலும் இவ்வாறே பரிகாரம் புரிக.

விளக்கம்:

தாக்குதல் - அடித்தல்; உடலம் - உடம்பு; இலக்கம் - நூறாயிரம்; இரு குணிதம் - இருமடங்கு; அஞ்சு - ஐந்து; கூற்று - கூறப்படுவது; சாந்திராயணம் - செய்த பாவத்திற்குக் கழுவாயாக மேற்கொள்ளப்படும் கடும் நோன்பு. (50)

குருவுக்குப் பிழை செய்தவர்

925. பலமிரண்டாயிர முறவே பாறதி நெய் பழமும்
பண்ணிடுக திருமுடியி னபிடேகம் பரிவாற்
பலமிரண்டாயிர முறவே யேல முதற் பண்டம்
பயிற்றிய நீரபிடேகம் பண்ணிடுக பதமும்
பலமிரண்டாயிர முறவே கறியமுது பாதி
பரமனுக்கு நிவேதனமும் பண்ணிடுக பாங்காற்
பலகுவளை விளக்கு மிரண்டாயிர மானெய்யாற்
பார்த்திடுக தேசிகனுக் கபராதம் பணினார்.

பலம் இரண்டாயிரம் உறவே பால் தயிர் நெய் பழமும்
பண்ணிடுக திருமுடியில் அபிடேகம் பரிவால்
பலம் இரண்டாயிரம் உறவே ஏலம் முதல் பண்டம்
பயிற்றிய நீர் அபிடேகம் பண்ணிடுக பதமும்
பலம் இரண்டாயிரம் உறவே கறிஅமுது பாதி
பரமனுக்கு நிவேதனமும் பண்ணிடுக பாங்கால்
பலகுவளை விளக்கும் இரண்டாயிரம் ஆன் நெய்யால்
பார்த்திடுக தேசிகனுக்கு அபராதம் பண்ணினார்.

Koviloor Digital Library

உரை:

தமக்கு ஞான உபதேசம் செய்த ஆசானிடம் பிழைபட நடந்து கொண்ட மாணாக்கர், அக்குற்றம் அகல இரண்டாயிரம் பலம் நிறையுடைய பால், தயிர், நெய், பழச்சாறு ஆகியவற்றால் தம் ஆசான் திருமுடியில் அன்போடு திருமுழுக்குச் செய்க; இரண்டாயிரம் பலம் எடையுடைய ஏலக்காய் முதலான மணப் பொருள்கள் ஊறிய நறுமண நீராலும் ஆசிரியனை முழுக்காட்டுக. இரண்டாயிரம் பலம் எடையுடைய சோறு, கறி வகைகளைச் சமைத்து, அதிற் பாதி அளவு உணவைச் சிவபிரானுக்குப் படைத்திடுக; மேலும், சிவன் திருக்கோயிலில் பசுவின் நெய் ஊற்றி இரண்டாயிரம் திருவிளக்குகளை ஏற்றுக.

விளக்கம்:

பலம் - தமிழ் நாட்டில் முன்பு வழக்கத்தில் இருந்த ஓர் எடை; பாறதி - பால் ததி, ததி தயிர்; அபிடேகம் - முழுக்கு; முடி - தலை; பரிவு - அன்பு; ஏலம் - ஏலக்காய்; பயிற்றிய - ஊறிய; பரமன் - இறைவன்; நிவேதனம் - இறைவனுக்குப் படைக்கும் உணவு. (51)

எரி ஓம்புதல்

926. அங்கியினாகுதியு மிரண்டாயிர மேயாக்க
யானெய்யானியுத முறச் செபமறையும் போது
மங்கியினாயிர முறவே யாக்குக வானெய்யா
னயுதத்துக் கப்பாலுந் தசத் தொன்றே யாக்க
வெங்குமிது பொது வெனவே யெண்ணியியற்றிடினே
யியம்பிய மந்திர பலன்றா னெய்தியிடு மென்று
மங்கியினுக் கருகரலா ராரியனாலங்கிக்
காகுதியைக் கொடுப்பிக்கி லவலவினை யறுமே.

அங்கியினால் ஆகுதியும் இரண்டாயிரமே ஆக்க
ஆன்நெய்யால் நியுதம் உறச்சபம் அறையும் போதும்
அங்கியில் ஆயிரம் உறவே ஆக்குக ஆன் நெய்யால்
அயுதத்துக்கு அப்பாலும் தசத்து ஒன்றே ஆக்க
எங்கும் இது பொது எனவே எண்ணி இயற்றிடிலே
இயம்பிய மந்திரபலன் தான் எய்தியிடும் என்றும்
அங்கியினுக்கும் அருகர் அல்லார் ஆரியனால் அங்கிக்கு
ஆகுதியைக் கொடுப்பிக்கில் அவலவினை அறும்.

உரை:

ஒருவர் நூறாயிரம் உரு ஏற்றும் போது பசுவின் நெய்யால் இரண்டாயிரம் உரு ஓமம் செய்க; பதினாயிரம் உரு ஏற்றும் போது ஆயிரம் உரு

Koviloor Digital Library

ஓமம் செய்க; பதினாயிரத்துக்கு மேல் அதிகமாக உரு ஏற்றினால் பத்துக்கு ஒன்று அதிகமாக ஏற்றி ஓமம் செய்க; இது முன் சொன்ன எல்லா உரு ஏற்றுதலுக்கும் பொதுவிதி என்று அறிந்து செய்தால், அவன் செய்த உரு ஏற்றியதற்குரிய பலனை அவன் பெறுவான். ஓமம் செய்தற்குத் தகுதியில்லாத போது ஆசானால் ஓமம் பண்ணுவித்தால், அவனுடைய பாவங்கள் விலகும்.

விளக்கம்:

இங்குக் கூறப்பட்டுள்ள ஓமம் சிவாசாரியர் குருக்கள் போன்றவர் களுக்கு உரியது. ஆகுதி - ஓமம்; அங்கி - தீ; நியுதம் - இலட்சம்; அயுதம் - பதினாயிரம்; செபம் - உரு ஏற்றுதல்; அருகர் - தகுதியானவர்; ஆரியன் - ஆசான். (52)

பரிகாரம் செய்யும் முறை

927. உண்மை மொழியுரைத்திடுகை யொண்டொடியார் கலவி
யொழிந்திடுகை நிசிதனிலூண் பூதலத்திலுறங்கல்
எண்ணெயினைத் தீண்டாமை கவ்வியத்தைத் தினமு
மிறைவனணி முடிக்காட்டி யருந்தலிவை யெல்லாம்
பண்ணுதலே பஞ்ச வருடத் தளவும் விரதம்
பரிகாரந் தேசிகனைப் பழித்த வினைப் பகைக்கும்
புண்ணியர் தமடியிணையும் புரிந்து பணிந்தவர்தம்
பொருவரிய வருள் பெறலும் புன்மை வினை போமே.

உண்மைமொழி உரைத்திடுகை ஒண்டொடியார் கலவி
ஒழிந்திடுகை நிசிதனில் ஊண் பூதலத்தில் உறங்கல்
எண்ணெயினைத் தீண்டாமை கவ்வியத்தைத் தினமும்
இறைவன் அணிமுடிக்கு ஆட்டி அருந்தல் இவை எல்லாம்
பண்ணுதலே பஞ்ச வருடத்து அளவும் விரதம் பரிகாரம்
தேசிகனைப் பழித்த வினைப் பகைக்கும்
புண்ணியர் தம்அடிஇணையும் புரிந்து பணிந்து அவர்தம்
பொருவு அரிய அருள் பெறலும் புன்மை வினைபோம்.

உரை:

உண்மை பேசுதல், சிற்றின்பத்தை விட்டுவிடல், நாள்தோறும் விரதம் இருந்து இரவில் ஒரு வேளை உண்ணுதல், தரையிலே படுத்து உறங்குதல், எண்ணெய் தேய்த்து முழுகாமை, பசுப் பயன் ஐந்தையும் இறைவன் திருமுடியில் திருமுழுக்குச் செய்து எஞ்சியதைப் புசித்தல், ஐந்து ஆண்டுகள் நோன்பு நோற்றல், தமக்கு ஒப்பு இல்லாத சிவஞானிகளின் திருவடிகளை வணங்கி அவர்களின் அருள் பெறுதல் போன்ற நற் செயல்களால், ஆசானை இழிவாகப் பேசிய பாவம் தீரும்.

Koviloor Digital Library

விளக்கம்:

ஒண்டொடியார் - மகளிர்; கலவி - புணர்ச்சி; நிசி - இரவு; ஊண் - உணவு; பூதலம் - தரை; கவ்வியம் - பசுப்பயன்; அவை பால், தயிர், நெய், வெண்ணெய், மோர் அல்லது பால், தயிர், நெய், சாணம், பசுமூத்திரம் ஆகியவை. பஞ்ச வருடம் - ஐந்து ஆண்டுகள்; விரதம் - நோன்பு; புண்ணியர் - நல்வினையாளர்; பொரு - ஒப்பு; (53)

பிராமணக் கொலைக்குப் பரிகாரம்

928. அறிவிலனாயந்தணனைய தஞ்செய்தானவல
னாயிரமானிரை நடுவே மண்டலத்தை யாக்கி
யறைகவ தனடு விருந்தே யீசான நியுத
மாக்கிடுக நிதியாளன் மகவினையை யாங்கே
பொறையுறவே சாந்திராயணம் பின்பு புரிகை
பொது வலது புலனைந்தும் வென்று திருநீற்றின்
அறையின்மகா வுருத்திரத்தை யறைந்து நினைந்து அரனை
யையறுநாண் மரண முடிவறிந்த கொலையறுமே.

அறிவு இலனாய் அந்தணனை அதம் செய்தான் அவலன்
ஆயிரம் ஆன் நிரை நடுவே மண்டலத்தை ஆக்கி
அறைக அதன்நடுவு இருந்தே ஈசான நியுதம்
ஆக்கிடுக நிதியாளன் மகவினையை ஆங்கே
பொறை உறவே சாந்திராயணம் பின்பு புரிகை
பொது அல்லது புலன் ஐந்தும் வென்று திருநீற்றின்
அறையில் மகாஉருத்திரத்தை அறைந்து நினைந்து அரனை
ஐஅறு நாள் மரணம்முடிவு அறிந்த கொலைஅறும்.

உரை:

அறியாமல் பிராமணனைக் கொன்ற பாவம் போக, ஆயிரம் பசுக்கள் நிற்கிற மந்தையின் நடுவே மண்டலத்தைச் செய்து, அதன் நடுவில் அமர்ந்து ஈசானம் மந்திரத்தை நூறாயிரம் உரு ஏற்றுக. பொருள் வசதியுடையவனாக இருந்தால் அவ்விடத்திலேயே யாகத்தைச் செய்து, சாந்திராயண விரதம் மேற் கொள்க. இது பொது விதி. இதனைச் செய்ய முடியாத போது ஐந்து புலன்களையும் அடக்கி, திருநீற்று அறையில் இருந்து சிவபெருமானைத் தியானித்து, வேதத்திற் சொல்லிய சதருத்திரம் என்னும் மந்திரத்தை முப்பது நாள்கள் வரை உரு ஏற்றுக; இதனைத் தொடர்ந்து ஆயுள் வரை இவ்வாறே உரு ஏற்றி வருக. இக்குற்றம் நீங்கும்.

விளக்கம்:

அதம் ஹதம் - கொலை; அவலன் - பயனில்லாதவன்; ஆன் - பசு; நிரை

Koviloor Digital Library

- கூட்டம்; மண்டலம் - வட்டம்; ஈசானம் - சிவனுடைய ஐந்து முகங்களில் மேல்நோக்கிய முகம்; மகம் - யாகம்; உருத்திரம் - யசுர் வேதத்துச் சதருத்ரீய சூக்தம்; ஐஅறு - ஐந்து ஆறு, முப்பது; அறைந்து - சொல்லி. (54)

மது அருந்தும் பிராமணன்

929. பண்ணினனே லறிவிலனாய் மதுபானம் பார்ப்பான்
பரமேச னாலயத்திற்றற்புருடம் பகர்க
வெண்ணியுறவிலக்க மகமியற்றிடுக நிதியன்
பராகமெனுங் கிருச்சிரத்தையியற்றியிடல் பொதுவே
வெண்ணெயழல் வெதுப்பிவாயாக்கலுமா மன்றி
வெதுப்பிய கோசலம் வெந்த வெண்கலமு மாகும்
புண்ணிய வெண்ணீற்றறையி னுருத்திரத்தைப் புகன்று
பொருந்தலு மாமுன்புகன்ற படியிரண்டும் போமே.

பண்ணினனேல் அறிவு இலனாய் மதுபானம் பார்ப்பான்
பரமேசன் ஆலயத்தில் தற்புருடம் பகர்க
எண்ணி உற விலக்க மகம் இயற்றிடுக நிதியன்
பராகம் என்னும் கிருச்சிரத்தை இயற்றியிடல் பொதுவே
வெண்ணெய் அழல் வெதுப்பிவாய் ஆக்கலும்ஆம் அன்றி
வெதுப்பிய கோசலம் வெந்த வெண்கலமும் ஆகும்
புண்ணிய வெண்ணீற்றுஅறையில் உருத்திரத்தைப் புகன்று
பொருந்தலும் ஆம்முன்புகன்றபடி இரண்டும் போம்.

உரை:

பிராமணன் புத்தி கெட்டு மது அருந்தினால், திருக்கோயிலுக்குச் சென்று ஓர் இடத்தில் வட்டமிட்டு அதனுள் அமர்ந்து சிவனுடைய கிழக்கு நோக்கிய முகத்துக்கு உரிய தற்புருட மந்திரத்தை ஓதுக. பொருள் வசதி உள்ளவனாயின் யாகத்தைச் செய்து பராகம் என்னும் கிருச்சிரத்தைச் செய்க. இது பொது விதி. இதனைச் செய்ய முடியாவிட்டால், வெண்ணெயை நன்றாக உருக்கிக் கொதிக்கிற நெய்யை வாயினுள்ளே ஊற்றுக; அல்லது பசுவின் மூத்திரத்தைக் கொதிக்கக் காய்ச்சி வாயினுள் வார்த்திடுக; அல்லது வெண்கலத்தை உருக்கி வாயினுள் வார்த்திடுக; அல்லது முன்பு சொன்னதுபோல, திருநீற்றறையில் அமர்ந்து சதருத்திர மந்திரத்தை உரு ஏற்றுக; அப்போது அக்குற்றம் தீரும்.

விளக்கம்:

பராக கிருச்சிரம் - ஒரு குற்றத்திற்குக் கழுவாயாக உண்ணா கடும் நோன்பு நோற்கும் விரதம். தற்புருடம் - சிவபிரானுடைய கிழக்கு நோக்கிய முகத்துக்கு உரிய மந்திரம். (55)

Koviloor Digital Library

தங்கம் திருடியவன்

930. கனகமொரு கழஞ்சளவு கருத்தழிந்து கொண்ட கள்வ
ஹுடல் சுடுகளரி யெல்லையினைக் கலந்தே
பனுக வகோரத்தை நியுதத்தை நிதியாளன்
பணுக மகம் பொதுப் பிரசா பத்தியமேயல்லா
லெனைமுசலத்திரும்பாலே யெற்றுக மன்னவனேயென்
றழிக வல்லது வெண்ணீற்றறையை யெய்தி
முனமுரைத்த முறைமுயலின் மோசனமே யாகுமோக
வினைமுன்னுணர்வின் முற்றிய தீவினையும்.

கனகம் ஒருகழஞ்சு அளவு கருத்து அழிந்து கொண்ட கள்வன்
உடல்சுடு களரி எல்லையினைக் கலந்தே
பன்னுக அகோரத்தை நியுதத்தை நிதியாளன்
பண்ணுக மகம் பொதுப்பிரசாபத்தியமே அல்லால்
என்னை முசலத்துஇரும்பாலே எற்றுக மன்னவனே என்று
அழிக அல்லது வெண்ணீற்று அறையை எய்தி
முன்னம்உரைத்த முறைமுயலின் மோசனமே ஆகும் மோக
வினை முன் உணர்வின் முற்றிய தீவினையும்.

உரை:

அறியாமல் ஒரு கழஞ்சு எடையுள்ள தங்கத்தைத் திருடிய கள்வன் சுடுகாட்டை அடைந்து, அகோர மந்திரத்தை நூறாயிரம் தடவை சொல்லுக; பொருள் படைத்தவனாக இருந்தால் அங்கேயே யாகத்தைச் செய்க. இவையிரண்டும் பொது விதி. இதனைச் செய்ய முடியாதவன் பிரசாபத்திய விரதத்தை மேற்கொள்க; அல்லது அரசனிடம் சென்று தன்னுடைய திருட்டுக் குற்றத்திற்காகத் தன்னை இரும்பு உலக்கையால் அடிக்கச் சொல்லிச் செத்திடுக; அல்லது முன்பு கூறியது போலத் திருநீற்று அறையை அடைந்து அகோர மந்திரத்தை உரு ஏற்றினால் திருடிய பாவம் போகும். அறிந்து செய்த தீவினைப் பாவமும் அகலும்.

விளக்கம்:

கழஞ்சு - தங்கத்தை அளவிடும் பழங்கால எடை; சுடுகளரி - சுடுகாடு; நியுதம் - இலட்சம்; பன்னுக - சொல்லுக; நிதியாளன் - பொருளுடையவன்; முசலம் - உலக்கை; மோசனம் - விடுபடுதல். (56)

ஆசான் மனைவியை அணைந்தவன்

931. அற்றறிவு குருமனையை யொருநாளுற் றணைந்தா
னழலோம்புஞ்சாலை தனில் வாமத்தையறைக
வுற்றிடவே யோரிலக்க மகமியற்றி நிதியன்
றத்த கிருச் சிரமியற்ற வொக்கு மிருவருக்கு

Koviloor Digital Library

மற்றலது குய்யத்தைப் பீசத்தைக் கருக்காண்
மாற்றியுண்ன் மறந்து திசை தெற்கியங்கி மரிக்க
முற்பகர்ந்த முறையுறவே நீற்றறையின் முயல்க
முயங்கி லறிந் திரண்டா நாணரகத்து மூழ்கும்.

அற்று அறிவு குருமனையை ஒருநாள் உற்று அணைந்தான்
அழல் ஓம்பும்சாலை தன்னில் வாமத்தை அறைக
உற்றிடவே ஓர் இலக்கம் மகம் இயற்றி நிதியன்
தத்த கிருச் சிரம் இயற்ற ஒக்கும் இருவருக்கும்
மற்று அல்லது குய்யத்தைப் பீசத்தைக் கருக்கால்
மாற்றி உண்ணல் மறந்துதிசை தெற்கு இயங்கிமரிக்க
முற்பகர்ந்த முறை உறவே நீற்று அறையில் முயல்க
முயங்கில் அறிந்து இரண்டாம்நாள் நரகத்து மூழ்கும்.

உரை:

பெண் மோகத்தால் புத்திகெட்டு ஆசிரியன் மனையாளை ஒரு நாள் புணர்ந்தவன், பிராமணர்களின் யாக சாலையை அடைந்து, சிவனுடைய வடக்கு நோக்கிய முகத்துக்கு உரிய வாமதேவ மந்திரத்தை நூறாயிரம் உரு ஏற்றுக. அவன் பொருள் வசதி உள்ளவனாக (நிதியன்) இருந்தால், அந்த இடத்திலேயே யாகம் புரிக; பாவ நீக்கத்துக்கு உரிய தத்த கிருச்சிர விரதத்தையும் பின்பற்றுக. இது பொது விதி. இதனைச் செய்யாவிட்டால், ஆசானுடைய மனைவியை அணைந்தவனுடைய ஆண் குறியையும் விதரையும் கூர்மையான வாளால் அறுத்தெறிந்து விட்டு, அவன் தென் திசை நோக்கிப் பட்டினியாக இருந்து இறந்தால் அவன் செய்த பாவம் விலகும்; அல்லது திருநீற்று அறையில் இருந்து சதருத்திரத்தை உரு ஏற்றுக. மீண்டும் ஆசான் மனையாளை அணைந்தவன் எல்லா நரகங்களையுமடைவான்.

விளக்கம்:

கருக்கு - கரிய அரிவாள்; குய்யம் - குறி; பீசம் - விதர். (57)

பாவியருக்கு உரிய பரிகாரம்

932. கூடியவனிவர் தம்மு ளொருவனுடன் சாதங்
கூறிடுக நியுதமுறக் குலவரையினுச்சி
மாடுடையன் புரிந்திடுக மகவினையை யாங்கே
வருந்திடுக மற்றையதி தபனத்தை மதித்துத்
தேடரிய தேனுவினைத் தெளியாது செகுத்தான்
செப்புகவோரி லக்கமுற வகோரத்தைத் தெளிந்தா
னாடியிரு குனிதமுற நவின்றிடுக வந்த
நாயகனை மனத்திருத்தியூ ணொழிந்து நைந்தே.

Koviloor Digital Library

கூடியவன் இவர் தம்முள் ஒருவனுடன் சாதம்
கூறிடுக நியுதம் உறக் குலவரையின் உச்சி
மாடுஉடையன் புரிந்திடுக மகம் வினையை ஆங்கே
வருந்திடுக மற்றை அதி தபனத்தை மதித்துத்
தேடு அரிய தேனுவினைத் தெளியாது செகுத்தான்
செப்புக ஓர்இலக்கம் உறஅகோரத்தைத் தெளிந்தான்
நாடி இரு குணிதம் உறநவின்றிடுக அந்த
நாயகனை மனத்து இருத்தி ஊண் ஒழிந்து நைந்து.

உரை:

கொலை புரிதல், களவு, கள் அருந்தல், பிறன் மனையாளைப் புணர்தல் என்னும் நான்கு வகைப் பாவங்கள் செய்தவர்களில் ஒருவனுடன் சேர்ந்தால், சேர்ந்தவனும் பாவியாவது திண்ணம். அப்பாவம் தீரச் சத்தியோசாத மந்திரத்தை நூறாயிரம் உரு ஏற்றுக. அவன் பொருள் உடையவனாக இருந்தால் சிறந்த மலை உச்சியை அடைந்து பாவம் தீர்க்கும் யாகம் புரிக; உடல் வருந்த அதிதபனம் என்னும் கிருச்சிர விரதத்தையும் பின்பற்றுக. தேடிப் பெறுவதற்கு அரிதான பசுமாட்டை அறியாமல் கொன்றவன், அகோர மந்திரத்தை நூறாயிரம் உரு ஏற்றினால் அப்பாவம் தீரும். தெரிந்தே ஒரு பசுவைக் கொன்றவன், அதற்காக வருந்தி, உண்ணா விரதம் இருந்து, அகோர மூர்த்தியை மனதிலே எண்ணி இருநூறாயிரம் உரு ஏற்றினால் அப்பாவம் தொலையும்.

விளக்கம்:

நியுதம் - இலட்சம்; குலவரை - சிறந்த மலை; மாடு - செல்வம்; மகம் - யாகம்; தேனு - பசு; தெளியாமல் - அறியாமல்; செகுத்தல் - கொல்லுதல்; தெளிந்தவன் - அறிந்தவன்; குணிதம் - மடங்கு. (58)

பெரும் பாவத்துக்குப் பரிகாரம்

933. கங்கை நதிப் புனலாடிக் கடப்பாடு மீந்து
காசிவிசுவேசனடிக் கமல விணை பணிந்து
தங்கி னொரு நாளுணல் காமாதிகளுந்தவிர்ந்து
தாமறந்து புரிந்தமகா பாவமொன்று தவிருந்
திங்களுறினறிந்து புரிமா பாவமொன்று தீருங்
கேதாரஞ் சீசயிலங் காளத்தி
சங்கை தசரதன் மகனைத் தணந்த தலமாரூர்
சபை மருது குடமூக்கையா றெழுவாய்த் தலத்தும்.

கங்கை நதிப்புனல் ஆடிக் கடப்பாடும் ஈந்து
காசி விசுவேசன் அடிக் கமலம் இணைபணிந்து

Koviloor Digital Library

தங்கின் ஒருநாள் உண்ணல் காமாதிகளும் தவிர்ந்து
தாம் மறந்து புரிந்த மகாபாவம் தவிரும்
திங்கள் உறின் அறிந்து புரி மாபாவம் ஒன்று தீரும்
கேதாரம் சீசயிலம் காளத்தி
சங்கை தசரதன் மகனைத் தணந்த தலம் ஆரூர்
சபை மருதுகுடமூக்கு ஐயாறு எழுவாய்த் தலத்தும்.

உரை:

கங்கையாற்றில் முழுகி இயன்றவரை ஈகை செய்து காசி நகரில் எழுந்தருளியுள்ள விசுவநாதரின் தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்கி, அவா, சினம், கடும்பற்றுள்ளம், மயக்கம், செருக்கு, பொறாமை என்னும் உட்பகை ஆறையுந்தவிர்த்து, ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தால், அறியாமற் செய்த பெரிய பாவங்களுள் ஒன்று விலகும்; இவ்வாறு ஒரு மாதம் நோன்பு நோற்றால், அறிந்தே செய்த பெரும் பாவங்களுள் ஒன்று நீங்கும். இவ்வாறே, கேதாரம், திருப்பருப்பதம், திருக்காளத்தி, திருவாரூர், சிதம்பரம், திருவிடைமருதூர், திருக்குடமூக்கு, திரு ஐயாறு முதலிய திருத்தலங்களில் உள்ள புண்ணிய நீர் நிலைகளில் நீராடிச் சிவனை வணங்கினால் பெரும் பாவங்கள் அகலும்.

விளக்கம்:

கேதாரம் - இமயமலையில் உள்ள ஒரு சிவபதி; **சீசயிலம்** - திருப்பருப்பதம்; இந்தச் சிவபதியும், திருக்காளத்தியும் ஆந்திரா தேசத்தில் உள்ளன; திருக்குடமூக்கு - திருக்குடந்தை, கும்பகோணம். (59)

சிவஞானிகளை வணங்கினால் பாவம் தீரும்

934. அநாதிமலமுத்தனவன் சிவனுயிர்கட்குயிரா
யகலாதே வினைப்பலன்களருத்தி மலமறுப்பான்
மனாதியினுக் கெட்டாதா னெனமதித்துத் தம்முண்
மனோலய வாழ்வுறவவன்றாள் கண்டவர்தாள் வணங்கி
யெனாதியிவ ரென வெண்ணி யொரு பகற் பூசனையை
யியற்றினர்களொரு திங்களுறவியற்றினார்கள்
முனோதியவா றொழிந்தார் தாமுற்றிய மாபாவ
முட்டாம லியற்றினர்கள் விட்டார் தீ முழுதும்.

அநாதிமலமுத்தன் அவன் சிவன் உயிர்கட்கு உயிராய்
அகலாதே வினைப் பலன்கள் அருத்தி மலம் அறுப்பான்
மனம் ஆதியினுக்கு எட்டாதான் என மதித்துத் தம் உள்
மன இலய வாழ்வுஉற அவன்தாள் கண்டவர்தாள் வணங்கி

Koviloor Digital Library

என் ஆதி இவர் என எண்ணி ஒரு பகல் பூசனையை
இயற்றினர்கள் ஒரு திங்கள் உற இயற்றினார்கள்
முன் ஓதியவாறு ஒழிந்தார் தாம் முற்றிய மாபாவம்
முட்டாமல் இயற்றினர்கள் விட்டார் தீமுழுதும்.

உரை:

என்றும் இயல்பாகவே ஆணவம் முதலான மலங்கள் இல்லாதவனும், அனைத்து உயிர்களுக்கும் உயிராக விளங்குபவனும், உயிர்கள், பாவ புண்ணியங்களின் பயனை நுகரச் செய்து, அவற்றின் பிறவிகளுக்குக் காரணமான ஆணவம் முதலிய மலங்களை அகற்றுபவனும், எண்ணம், சொல் முதலியவற்றால் அளவிட முடியாதவனும் ஆகிய சிவன் எனக் கருதி, மனம் அடங்கிய ஆழ்ந்த தியான நிலையில், அச்சிவன் திருவடியைத் தம் உள்ளத்திலே கண்டு வணங்கியவரே சிவஞானி. அச்சிவஞானியைத் தம் வழிபடு தெய்வமாகக் கருதி, ஒருநாள் பகற்பொழுது பூசை செய்து வணங்கியவரும், எந்தக் குறையும் நேராமல் ஒரு மாதம் முழுவதும் பூசை செய்து வழிபட்டவரும் பாவம் தீர்ந்து நரகத் தீயிலிருந்து தப்புவர்.

விளக்கம்:

அநாதி மலமுத்தன் - இறைவன்; அருத்தி - ஊட்டி; தாள் - திருவடி; எட்டாதான் - அளவிட முடியாதவன்; பூசனை - வழிபாடு; ஆதி - கடவுள்; திங்கள் - மாதம்; ஓதிய - சொன்ன; முட்டாமல் - குறையாமல். (60)

அக்கமாலை பாவம் அகற்றும்

935. அரித்திடவேயவல வினையனுமதித்தார் கண்டி
யாமலக பலத்தினளவாகவு மேயன் பாற்
றரித்திடுக சிகை தன்னிற் கன்னத்திற் களத்திற்
றடவரை மார்பிடைப் புயத்துத் தாங்குக பூணூலின்
உருத்திரசாதனராயின் கண்டத் தினுறினு
மொன்றியிடுஞ் சிவபுரியை யதுதானு மென்றே
விரித்தவுரை மெய்யெனவே யுணர்ந்தா ரெல்லாரும்
விருப்புறவே தரித்திடுக கண்டியினை விரைந்தே.

அரித்திடவே அவலவினை அனுமதித்தார் கண்டி
ஆமலக பலத்தின் அளவாகவுமே அன்பால்
தரித்திடுக சிகை தன்னில் கன்னத்தில் களத்தில்
தடவரை மார்பிடைப் புயத்தும் தாங்குக பூணூலில்
உருத்திர சாதனர் ஆயின் கண்டத்தில் உறினும்
ஒன்றியிடும் சிவபுரியை அது தானும் என்றே
விரித்த உரை மெய்எனவே உணர்ந்தார் எல்லாரும்
விருப்பு உறவே தரித்திடுக கண்டியினை விரைந்து.

Koviloor Digital Library

உரை:

நெல்லிக்காய் அளவு பருமனுள்ள அக்கமணியை, உருத்திராக்கத்தை, அன்போடு ஓர் அணிகலனைப்போலக் குடுமி, கன்னம், கழுத்து, அகன்ற மார்பு, தோள் ஆகிய உறுப்புகளிலும், முப்புரி நூலிலும் அணிக. உருத்திராக்கத்தைக் கண்டிகையாகக் கழுத்திலே அணியும் பழக்கம் உள்ளவர், சிவனருள் பெற்றுச் சிவஉலகில் இருப்பார் எனச் சிவாகமம் உரைப்பதை உண்மை என உணர்ந்தவர்கள் அனைவரும் விருப்பத்தோடு விரைந்து அக்கமாலையை அணிவாராக. அவ்வாறு அணிந்தவர்கள் தம் பாவங்களை அறுத்தவர் ஆவர்.

விளக்கம்:

கண்டி - கண்டிகை, தாழ்வடம், அக்கமாலை இவை அனைத்தும் உருத்திராக்க மாலையைக் குறிக்கும். அரித்தல் - அறுத்தல்; தரித்தல் - அணிதல்; ஆமலகம் - நெல்லிக்காய்; சிகை - குடுமி; களம் - கழுத்து; புயம் - தோள்; கண்டம் - கழுத்து; உருத்திர சாதனர் - உருத்திராக்கம் அணிபவர். (61)

சிவனடியாரோடு தொடர்பு கொள்ளுக

936. பூசிடுக நீற்றினையுந் தீவினையைப் போக்கப்
புரிந்தார்க டிருநீறு பூசினரைப் பணிந்து
பேசிடுக மதுவுரையவரேவ றன்னைப்
பெற்றிடுகமுற்றிடுக பேணியொருப்பட்டே
கூசினர்களவர்தம்மைக் கும்பிடவுமேவற்
குறித்தியற்றியிடத்தானுங்கொடுநரகக்குழியாழ்
நீசரென நினைத்திடுக நின்மலனைத் தம்மு
ணினைப்பாரை நினைப்பார்கள் வினைப்பாவ நீங்கும்.

பூசிடுக நீற்றினையும் தீவினையைப் போக்கப்
புரிந்தார்கள் திருநீறு பூசினரைப் பணிந்து
பேசிடுக மதுர உரை அவர் ஏவல் தன்னைப்
பெற்றிடுக முற்றிடுக பேணி ஒருப்பட்டே
கூசினர்கள் அவர்தம்மைக் கும்பிடவும் ஏவல்
குறித்து இயற்றியிடத் தானும் கொடு நரகக்குழி ஆழ்
நீசர்என நினைத்திடுக நின்மலனைத் தம் உள்
நினைப்பாரை நினைப்பார்கள் வினைப்பாவம் நீங்கும்.

உரை:

சைவ சமயத்தினர் அனைவரும் தம் தீவினை அகலத் திருநீறு அணிக. அவ்வாறு திருநீறு அணிந்த சிவனடியார்களை வணங்குக. அவர்களோடு இனிய சொற்களால் உரையாடுக. விருப்பத்தோடு மனம் விரும்பி அவர்கள் சொல்லும்

Koviloor Digital Library

வேலைகளை ஏற்று அவற்றை நிறைவேற்றுக. இவ்வாறு, சிவனடியார்களை மதித்து வணங்கவும், அவர்களுக்குத் தொண்டு புரியவும் தயங்கிப் பின்வாங்கு கின்றவர்களை, நரகக் குழியில் அழுந்த எண்ணும் இழிந்தவர்கள் என எண்ணுக. சிவபெருமானைத் தம் உள்ளத்திலே தியானிக்கும் சிவஞானியை மதித்துப் போற்றி எண்ணுகின்ற அன்பர்களின் பாவங்கள் தாமாக விடுபடும்.

விளக்கம்:

புரிந்தார்கள் - அணிந்தவர்கள்; மதுர உரை - இனிய பேச்சு; ஏவல் - பணி; பெற்றிடுக - ஏற்றுக் கொள்க; முற்றிடுக - நிறைவேற்றுக; பேணி - விரும்பி; கூசினர் - பின் வாங்கியவர்; நீசர் - இழிந்தவர்; நின்மலன் - கடவுள், சிவன். (62)

சிவனடியார்களின் பெருமை

937. மண்ணாளு மன்னவன்றன் மகன் குணந் தீங்கிரண்டும்
வையகத்தார் பாராதே வணங்கிடுவ ரஞ்சி
எந்நாளு மிறையமலன் றிருவேடந் திருநீ
றிட்டார்கள் குணங் குணக்கேடெனு மிரண்டு மெண்ணார்
விண்ணாளத் தீவினையை வீட்டியிட விழைந்தார்
விரும்பியவரடிபணிவர் விமலனுரைவிலக்க
லொண்ணாதேயெனக் கருதி யொருப்பட்டே யமல
னொப்பரிய புரிவாழ்வு மற்றையருக் குண்டோ.

மண்ஆளும் மன்னவன்தன் மகன்குணம் தீங்கு இரண்டும்
வையகத்தார் பாராதே வணங்கிடுவர் அஞ்சி
எந்நாளும் இறைஅமலன் திருவேடம் திருநீறு இட்டார்கள்
குணம் குணக்கேடு என்னும் இரண்டும் எண்ணார்
விண் ஆளத் தீவினையை வீட்டியிட விழைந்தார்
விரும்பி அவர்அடிபணிவர் விமலன் உரைவிலக்கல்
ஒண்ணாதே எனக்கருதி ஒருப்பட்டே அமலன்
ஒப்பரிய புரிவாழ்வு மற்றையருக்கு உண்டோ.

உரை:

நாடாளும் அரசனுடைய குடிமக்கள், அவ்வரசனுடைய மகனாகிய இளவரசனின் குணங்களை ஆராயாமல், அவனை எதிர்கால வேந்தனாகக் கருதிப் பணிந்து மரியாதை செய்வது போல, தம் பாவங்களை ஒழித்துச் சுவர்க்க உலகை அடைய விரும்புகின்றவர்கள், உருத்திராக்கம், திருநீறு ஆகியவை அணிந்து சைவத் திருவேடத்தோடு விளங்குகின்ற சிவனடியாரை, ஒப்பற்ற சிவனாகவே கருதி, மனம் விரும்பி அவரைப் பணிவாராக; அவர் குணங்களை ஆராய வேண்டா. அவருக்கே சிவ உலகை அடையும் தகுதி உண்டு; பிறருக்கு அத்தகுதி இல்லை.

Koviloor Digital Library

விளக்கம்:

வையகத்தார் - குடிமக்கள்; இறை அமலன் - தூய சிவன்; திருவேடம் - சைவக் கோலம்; விண் ஆள - சுவர்க்க உலகு அடைய; வீட்டியிட - அழிக்க; விமலன் உரை - சிவாகமம்; ஒண்ணாது - முடியாது; ஒருப்பட்டு - மனசார விரும்பி. (63)

நிலை தவறியவர்கள்

938. அந்தணர் தங்குலத்துமுதித்தழிவுபுரிவாளை
யதஞ்செய்யேற் பரிகார மவள்வகைக்கு மறியேம்
வெந்த வெண்ணீறணிந்தமலன் வேட மணிந்தாரும்
விப்பிரரும் வேண்டியது செய்து வினைவிடினுஞ்
சிந்தையினொய்யவரெனவே தேறியவர்தம்மைத்
தெளியற்க தெளிந்து மவர்தமைச் செகுத்தாராயி
னொந்தழிவர் நிரயத்தில் தேசிகனுக்கவரை
நோவிக்கை நிலைநிறுத்தல் கடன் விதித்த நூலால்.

அந்தணர் தம் குலத்தும் உதித்து அழிவு புரிவாளை
அதம் செய்யேல்பரிகாரம் அவள் வகைக்கும் அறியேம்
வெந்த வெண்ணீறு அணிந்து அமலன் வேடம் அணிந்தாரும்
விப்பிரரும் வேண்டியது செய்து வினைவிடினும்
சிந்தையில் நொய்யவர் எனவே தேறி அவர் தம்மைத்
தெளியற்க தெளிந்தும்அவர்தம்மைச் செகுத்தாராயின்
நொந்து அழிவர் நிரயத்தில் தேசிகனுக்கு அவரை
நோவிக்கை நிலை நிறுத்தல் கடன் விதித்த நூலால்.

உரை:

ஒரு பிராமணப் பெண், தன் குலத்துக்கு இழிவு நேரும்படி ஒழுங்கீனமாக நடந்து கொண்டால், அக்குற்றத்திற்கு உரிய பரிகாரம் இன்னது என யாம் அறியோம். ஆதலால், அவளைக் கொல்லாமல் சாதியிலிருந்து தள்ளி விடுக. பொது மக்களால் பெரிதும் மதிக்கப்படுகிற திருநீறு முதலான சிவ சின்னங்கள் அணிந்த சிவனடியாரும், பிராமணரும் தங்களுக்குரிய கடமைகளை மறந்து, தம் மனம் போல ஒழுங்கீனமாக நடந்து கொண்டால், அவர்களைச் சிவாகம உண்மைகளை உணர்ந்த ஆசான் விசாரித்து அவரவர் செயலுக்கு ஏற்ற பரிகாரத்தைச் செய்யும்படி கட்டளையிட வேண்டும். சிவாகம உண்மைகளைக் கற்றுத் தெளியாதவர்கள், அவர்களை இழிந்தவர்களாகக் கருதித் துன்புறுத்த முயன்றால் ஆசான் அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் அவர் சொல்லை மதியாமல் சிவனடியாரையும் பிராமணரையும் கொன்றவர்கள், நரகத்தை அடைந்து வருந்தி அழிவர்.

Koviloor Digital Library

விளக்கம்:

அதம் - அழிவு; விப்பிரர் - பிராமணர்; செகுத்தல் - கொல்லுதல். (64)

கொலையைத் தடுத்து நிறுத்துக

939. என்றனைநீ புன்மைமொழி யிசைப்பாயேயென்று
மெனது தனந்தாராதே யேகுவையே யென்று
நின்றனுக்கோவுரித் திந்த நிலமெனக்கு மென்று
நின்முன்னேயென்னுயிரை நீக்குவனே யென்றுந்
தன்றனையே தான் வதைக்கிற்ற டுத்துமுறைபுரியாச்
சலத்தெதிரியவன் றன்னைத்தன்னது கையாலே
கொன்றவனே யாதலினாற்றடுத்திடுக கொலையைக்
கொடுத்திடுக கணக்குளது கொலைக்கஞ்சுங் குணத்தார்.

என்றனைநீ புன்மைமொழி இசைப்பாயே என்றும்
எனது தனம் தாராதே ஏகுவையே என்றும்
நின்றனுக்கே உரித்து இந்த நிலம் எனக்கும் என்றும்
நின் முன்னே என் உயிரை நீக்குவனே என்றும்
தன்தன்னையே தான் வதைக்கில் தடுத்து முறை புரியாச்
சலத்து எதிரி அவன் தன்னைத் தன்னது கையாலே
கொன்றவனே ஆதலினால் தடுத்திடுக கொலையைக்
கொடுத்திடுக கணக்கு உள்ளது கொலைக்கு அஞ்சும் குணத்தார்.

உரை:

கொடுக்கல் வாங்கல் காரணமாக எழும் சச்சரவில், கொடுத்தவர் மற்றவரை நோக்கி, 'நீ, என்னை இழிமொழி பேசித் துரத்தப் பார்க்கிறாய் எனக்குச் சேர வேண்டிய பொருளைத் தராமல் போவாயோ? இந்த நிலம் உனக்கு மட்டுமல்ல எனக்கும் உரியது,' என்று கூறவும், மற்றவர் இசைவு காட்டா விடத்து ''உன் முன்னிலையிலேயே என் உயிரைப் போக்கிக் கொள்வேன் பார்'' என்று தற்கொலை செய்து கொள்ள முயலும் போது, அவரைத் தடுத்து நிறுத்தி, இருவர் கணக்கையும் பார்த்து முறையான தீர்ப்பை வழங்குகின்றவர், கொலைக்கு அஞ்சும் பண்பாளர் ஆவார். அவ்வாறு, தற்கொலையைத் தடுத்து நிறுத்தாதவர், தாமே அவரைக் கொன்றவர் ஆவார்.

விளக்கம்:

புன்மை - வசை; **இசைப்பாய்** - உரைப்பாய்; **தனம்** - பொருள்; **உரித்து** - உரியது; **வதைத்தல்** - அழித்தல்; **முறை** - நீதி; **சலம்** - கோபம், வஞ்சனை; (65)

Koviloor Digital Library

கோபம் கொடிது

940. கோபத்தானாகத்திற் கொடு நோயான் மற்றுங்
குற்றத்தாற் றான்றன்னைக் கொலைபுரிகைகுணமோ
பாவத்தான் மிக்காரே தமைத்தாமே வதைக்கும்
பதர்மனித ரந்தணர்க்கும் பாங்கல்ல கும்பீ
பாகத்திற் பட்டமுங்கிச் சீக்குழிக்கும் படிவர்
பகர்வருட மறுபதினாயிரமுறவே யாங்கே
சாகத்தாந் துணிந்தழிகை சங்கரனாலயத்திற்
றவறுறினேயவரமலன் புரியதனைச் சார்வார்

கோபத்தால் ஆகத்தில் கொடு நோயால் மற்றும்
குற்றத்தால் தான்தன்னைக் கொலைபுரிகைகுணமோ
பாவத்தால் மிக்காரே தம்மைத்தாமே வதைக்கும்
பதர் மனிதர் அந்தணர்க்கும் பாங்கு அல்லகும்பீ
பாகத்திற் பட்டு அழுங்கிச் சீக்குழிக்கும் படிவர்
பகர்வருடம் அறுபதினாயிரம் உறவே ஆங்கே
சாகத்தாம் துணிந்து அழிகை சங்கரன் ஆலயத்தில்
தவறு உறினே அவர் அமலன் புரி அதனைச் சார்வார்.

உரை:

கோபத்தாலும் உடம்பைவிட்டு அகலாத கொடிய நோயாலும் தான் புரிந்த தவற்றால் நேர்ந்த மானக்குறைவாலும் வாழ்வதை வெறுத்துத் தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளுதல் பண்பாகாது. மிகுந்த பாவங்கள் செய்த பயனில்லாத மனிதரே தம் உயிரைத் தாமே போக்கிக் கொள்ளும் முறையற்ற செயலை மேற்கொள்ளுவார். பிராமணருக்கும் இது பொருந்தும். அந்த அடாத செயலால், கும்பீ பாகம், சீக்குழி ஆகிய நரகங்களில் அறுபதாயிரம் ஆண்டுகள் கிடந்து வருந்துவார். சிவன் திருக்கோயிலில் செத்து மடியத் துணிந்தவர், அம்முயற்சியில் தவறினால் சிவ உலகை அடைவார்.

விளக்கம்:

கொடுநோய் - தொழுநோய்; பதர்மனிதர் - பயனற்றவர்; சீ - சீழ்; கும்பீபாகம், சீக்குழி - இவை நரகங்கள்; அமலன் - இறைவன்; சங்கரன் ஆலயத்தில் சாதல் - இது உண்ணா விரதம் இருந்து உயிர் நீத்தலைக் குறிக்கும். (66)

குற்றம் இல்லாத பிராமணக் கொலை

941. படைபிடித்துத் தங்கையிற் பற்றாரைச் சமரிற்
பாழ்படுக்கப் போர் புரியும் பார்ப்பாரைப்பற்றா

Koviloor Digital Library

ருடலிறுத்தா ரேலவர்க்குப் பிரமகத்திப்பாவ
　　மொன்றுவ தன்றென வுணர்க வுள்ளத்தே கள்ள
மிடலுறவே நள்ளிருளின் வேற்றயலார் மனையின்
　　வேண்டியது கொண்டியங்கும்வேளைதனில் வேந்தன்
படையவரைப் பந்தித்தேயப்பொழுது நாசம்
　　பண்ணிடினும் பிரமவதை பற்றா பார்த்திபர்பால்.

படைபிடித்துத் தம் கையில் பற்றாரைச் சமரில்
　　பாழ்படுக்கப் போர்புரியும் பார்ப்பாரைப் பற்றார்
உடல் இறுத்தாரேல் அவர்க்குப் பிரமகத்திப் பாவம்
　　ஒன்றுவது அன்று என உணர்க உள்ளத்தே கள்ளம்
இடல் உறவே நள்ளிருளில் வேற்று அயலார் மனையில்
　　வேண்டியது கொண்டு இயங்கும்வேளை தன்னில் வேந்தன்
படை அவரைப் பந்தித்தே அப்பொழுது நாசம்
　　பண்ணிடிலும் பிரமவதை பற்றா பார்த்திபர்பால்.

உரை:

ஒரு பிராமணன் படையில் போர்வீரனாகச் சேர்ந்து கையில் ஆயுதம் தாங்கிப் பகைவருடன் போர் புரியும் போது, பகைவர் அவனைக் கொன்றால், அவர்களைப் பிராமணனைக் கொன்ற பாவம் நெருங்காது. திருடும் உள்ளம் கொண்ட பிராமணன், மக்கள் அயர்ந்து உறங்கும் நடுஇரவில் பிறர் வீட்டினுள் புகுந்து தான் விரும்பிய பொருள்களைத் திருடிச் செல்லும் போது, அரசனுடைய காவற்படை அவனைப் பிடித்து அப்போதே கொன்றாலும் அரசனைப் பிராமணனைக் கொன்ற பாவம் அணுகாது.

விளக்கம்:

பிரமகத்தி - பிராமணனைக் கொன்ற பாவம், விடாது தொடரும் என்பது கொள்கை. படை - ஆயுதம்; பற்றார் - பகைவர்; சமர் - சண்டை; இறுத்தல் - வெட்டுதல்;

குறிப்பு:

பிராமணனைக் கொன்றால் பிரமஹத்தி பாவந் தொடரும் என்பது. பிரமத்தை அணுகுந் தகைமை உள்ளவன், தன் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல்களால் உலக சுபீட்சத்துக்குதவுபவன் இலட்சிய பிராமணன். பகுத்தறிவு நியாயத்தின் படிக்கே சாதாரணரை விட அவன் உயர்ந்தவன். ஆதலின் அவனைக் கொலை செய்த பாவமும் விகிதாசார நோக்கிற் கொடும்பாவம், ஆம் என்பது தாற்பரியம். (67)

Koviloor Digital Library

சத்திரியர்-வைசியர்-சூத்திரர்

942. ஓரயுதஞ் சூத்திரனை யொடுக்கின னுச்சரிக்க
உருபிகனை யொண்டொடிக்குங் குழவிக்குமொக்கு
மீரயுதம் வைசியனுக் கொன்றிறுத்தவ னுச்சரிக்க
வேந்திழைக்குங் குழவிக்கு மிக்கணக்கேயியம்ப
வோரயுதமீரயுதம் பார்த்திபனை யொடுக்கி
லுச்சரிக்க வொண்டொடிக்குங் குழவிக்கு மொக்கு
மீரயுதஞ் சூத்திரனை யெணியிறுத்தானியம்ப
யேனையர்க்கு மிசைக்கவிருகுணித மெணியிறுத்தான்.

ஓர் அயுதம் சூத்திரனை ஒடுக்கினன் உச்சரிக்க
உருபிகனை ஒண்டொடிக்கும் குழவிக்கும் ஒக்கும்
ஈர்அயுதம் வைசியனுக்கு ஒன்று இறுத்தவன் உச்சரிக்க
ஏந்திழைக்கும் குழவிக்கும் இக் கணக்கே இயம்ப
ஓர் அயுதம் ஈர் அயுதம் பார்த்திபனை ஒடுக்கில்
உச்சரிக்க ஒண்டொடிக்கும் குழவிக்கும் ஒக்கும்
ஈர அயுதம் சூத்திரனை எண்ணி இறுத்தான் இயம்ப
ஏனையர்க்கும் இசைக்க இரு குணிதம் எண்ணி இறுத்தான்.

உரை:

சூத்திரனையும் அவ்வினத்தாரையும் பெண்களையும் பிள்ளைகளையும் கொன்றவன் அகோர மந்திரத்தைப் பதினாயிரம் உரு ஏற்றுக. ஏனைய வைசிய, சத்திரியரையும், அவர்களுடைய மனைவி மக்களையும் கொன்றவன், இருபதாயிரம், முப்பதாயிரம், உரு ஏற்றுக. அறிந்து சூத்திரத்தைக் கொன்றவன் அகோர மந்திரத்தை இருபதாயிரம் உரு ஏற்றுக; வைசியனையும் அவன் பெண்டு பிள்ளைகளையும் கொன்றவன் நாற்பதாயிரம் உரு ஏற்றுக; சத்திரியரைக் கொன்றவன் அறுபதாயிரம் உரு ஏற்றுக. (68)

முட்டைகளில் தோன்றும் உயிரிகள்

943. வதைத்தவனே மயிலன்னங் குக்குடமும்பாம்பு
மற்றுமுள வண்டசமு மர்க்கடமு மறப்பான்
மதித்தறைக வகோர மிரண்டாயிர மார்ச்சால
மறப்பாலே வதைத்தானோ ராயிரமாஞ் சாதம்
வதைத்தவனேயசமேதி மற்றைய மான் மரையு
மந்திரிக்க வகோரமொரு நூறு நானூறு
வதைத்தவனே வராகத்தைவன்மிருகமற்று
மதித்தறைகவொரு நூறு மறந்த வினை மாயும்.

Koviloor Digital Library

வதைத்தவனே மயில் அன்னம் குக்குடமும் பாம்பு
மற்றும் உள்ள அண்டசமும் மார்க்கடமும் மறப்பால்
மதித்து அறைக அகோரம் இரண்டாயிரம் மார்ச்சாலம்
மறப்பாலே வதைத்தான் ஓர் ஆயிரமாம் சாதம்
வதைத்தவனே அசம் மேதி மற்றைய மான் மரையும்
மந்திரிக்க அகோரம் ஒரு நூறு நானூறு
வதைத்தவனே வராகத்தை வன்மிருகம் மற்றும்
மதித்து அறைக ஒரு நூறு மறந்த வினைமாயும்.

உரை:

மயில், அன்னப் பறவை, கோழி முதலிய பறவைகளையும், பாம்பு முதலான ஊரும் உயிரிகளையும், குரங்கையும் அறியாமல் கொன்றால், அக்குற்றம் தீர அகோர மந்திரத்தை இரண்டாயிரம் உரு ஏற்றுக; பூனையை அறியாமற் கொன்றவன், அப்பாவம் தீரச் சத்தியோ சாத மந்திரத்தை ஆயிரம் உரு ஏற்றுக; ஆடு, எருமை, மான் மரைகளை அறியாமற் கொன்றவன், நூறு உரு ஏற்றுக; அறிந்தே கொன்றவன் நானூறு உரு எண்ணுக; அறியாமல் காட்டுப் பன்றி, சிறுத்தை, புலி முதலான விலங்குகளைக் கொன்றவன், அப்பாவம் தீரச் சத்தியோசாதத்தை நூறு வரை எண்ணுக. அவற்றை அறிந்து கொன்றவன் நானூறு வரை எண்ணுக.

விளக்கம்:

அன்னம் - அன்னப் பறவை; **குக்குடம்** - கோழி; **அண்டசம்** - முட்டையிலிருந்து பிறப்பவை; **மார்க்கடம்** - குரங்கு; **மதித்து** - எண்ணி; **அறைக** - கூறுக; **மார்ச்சாலம்** - பூனை; **சாதம்** - சத்தியோசாத மந்திரம்; **அசம்** - ஆடு; **மேதி** - எருமை; **மரை** - ஒருவகை மான்; **வராகம்** - பன்றி; **வண் மிருகம்** - புலி முதலியவை; **வதைத்தல்** - கொல்லுதல். (69)

முன் பாடலின் தொடர்ச்சி

944. வதைத்தவனே நாய் நரியுஞ் சாதத்தை மறப்பின்
மந்திரிக்க வாயிர மீராயிரமே மதித்தான்
வதைத்தவனே மூடிகத்தை வாலமூடிகமு
மந்திரிக்க சாதத்தையொரு நூறு மறந்தான்
வதைத்தவனே யென்பில்லா வடிவை யறிவின்றி
மந்திரிக்க ஐம்பது மற்றையவனூறும்
வதைத்தனனேற் பலகிருமியொரு நாளின் மறப்பான்
மந்திரிக்க மூன்றயுத மதிக்கிலிரு குணிதம்

வதைத்தவனே நாய் நரியும் சாதத்தை மறப்பின்
மந்திரிக்க ஆயிரம் ஈர் ஆயிரமே மதித்தான்

Koviloor Digital Library

வதைத்தவனே மூடிகத்தை வாலமூடிகமும்
மந்திரிக்க சாதத்தை ஒரு நூறு மறந்தான்
வதைத்தவனே என்பு இல்லாவடிவை அறிவு இன்றி
மந்திரிக்க ஐம்பது மற்றையவன் நூறும்
வதைத்தனனேல் பல கிருமி ஒரு நாளில் மறப்பால்
மந்திரிக்க மூன்று அயுதம் மதிக்கில் இருகுணிதம்.

உரை:

நாய் நரிகளை அறியாமல் கொன்றவன், அக்குற்றம் தீரச் சத்தியோசாத மந்திரத்தை ஆயிரம் உரு ஏற்றுக; அறிந்தே அவற்றைக் கொன்றவன் அப்பாவம் தீர அம்மந்திரத்தை இரண்டாயிரம் உரு ஏற்றுக; பெருச்சாளி, எலிகளை அறியாமற் கொன்றவன் அக்குற்றம் நீங்கச் சத்தியோ சாதத்தை நூறு உரு ஏற்றுக; அறிந்து கொன்றவன் இருநூறு ஏற்றுக. எறும்பு முதலான எலும்பு இல்லாத உயிரிகளை அறியாமற் கொன்றவன், அக்குற்றம் அகல ஐம்பது உரு ஏற்றுக; அறிந்தே அவற்றைக் கொன்றவன், நூறு உரு ஏற்றுக; புழு வடிவில் இருந்து உருமாறும் சிறு உயிரிகளை ஒரு தினத்தில் அறியாமல் கொன்றவன், சத்தியோ சாதத்தை முப்பதாயிரம் உரு ஏற்றுக; அறிந்தே கொன்றவன், அப்பாவம் போக அம்மந்திரத்தை அறுபதாயிரம் உரு ஏற்றுக.

விளக்கம்:

மூடிகம் - பெருச்சாளி; **வால மூடிகம்** - சிறு எலி; **என்பு** - எலும்பு; **கிருமி** - புழு; வண்ணத்துப் பூச்சி முதலியன புழுவடிவிலிருந்தே முழு வடிவம் பெறும். **அயுதம்** - பத்தாயிரம்; **இரு குணிதம்** - இரண்டு மடங்கு. (70)

நாய் கடித்தலுக்குப் பரிகாரம்

945. உடலூறு படக் கடிக்கினாய் நரி மார்க்கடமு
முரகமுந் தேள்விடமுறினு மொழிவு மடுநீருண்
மிடறுற நின்றயுத முறவிளம்ப வகோரத்தை
விக்கிரக நினைந்து சுழல் விழிமூன்று முடையார்
சடைமுடியிற் றலைமாலை கரியவுருக் கராளந்
தாடிமுகந் தடமார்பிற் சர்ப்ப விருச்சிகப்பூண்
படைசூல மழுத்தண்டு வாள் வலப்பாலிடப்பாற்
பற்றியுளர் கட்டங்கந் தலை பலகை பாசம்.

உடல் ஊறுபடக் கடிக்கில் நாய் நரி மார்க்கடமும்
உரகமும் தேள்விடம் உறினும் ஒழியும் மடுநீர் உள்
மிடறு உற நின்று அயுதம் உற விளம்ப அகோரத்தை
விக்கிரகம் நினைந்து சுழல்விழி மூன்றும் உடையார்

Koviloor Digital Library

சடைமுடியில் தலைமாலை கரிய உருக் கராளம்
தாடிமுகம் தடம் மார்பில் சர்ப்பம் விருச்சிகம் பூண்
படைசூலம் மழுத்தண்டு வாள் வலப்பால் இடப்பால்
பற்றி உள்ளார் கட்டங்கம் தலை பலகை பாசம்.

உரை:

நாய், நரி, குரங்கு, பாம்பு, தேள் ஆகியவை, உடம்பில் நஞ்சு ஏறும்படி கடித்தால், ஒரு தடாகத்தில் கழுத்தளவு நீரில் நின்று, சடைமுடியில் தலைமாலையையும், கரிய நிறத்தையும் தீயகுணத்தையும், தாடியிலும் முகத்திலும் அகன்ற மார்பிலும் பாம்பையும் தேளையும் அணிகலனாகக் கொண்டும், முத்தலை வேல், கைக் கோடரி தண்டு, வாளைப் பற்றிய வலப்புறக் கைகளையும், தலை பலகை, பாசம் ஏந்திய இடப்புறக் கைகளையும் உடைய அகோர தேவரை எண்ணி அகோரம் பதினாயிரம் உரு ஏற்றினால், நஞ்சு நீங்கும்.

விளக்கம்:

ஊறு - தீங்கு; மர்க்கடம் - குரங்கு; உரகம் - பாம்பு; விடம் - நஞ்சு; மிடறு - கழுத்து; அயுதம் - பதினாயிரம்; விளம்ப - சொல்ல; விக்கிரகம் - வடிவம்; கராளம் - பயங்கரம்; தடம் - அகன்ற; சர்ப்பம் - பாம்பு; விருச்சிகம் - தேள்; பூண் - அணிகலன்; மழு - கைக் கோடரி; தண்டு - கதை; பால் - பக்கம்; பாசம் - கயிறு; கட்டங்கம் - மாத்திரைக்கோல்; (71)

தானம் பெறுதலுக்குப் பரிகாரம்

946. தாங்கின னேற்றனத்தை யரிதாரத்தைக் கழஞ்சு
தரத்தாதா வகோரத்தைச் சாற்றிடுக வயுதந்
தூங்கிருளினட மாடியாலயத்திற் பாவந்
தொலைத் தருளென்பாவமெனச் சொல்லுகமுந்நூறு
தாங்கினனேற் றயிலத்தைத் ததியானெய் தனையுந்
தரித்திடிற் கார்ப்பாசத்தைக் கம்பளத்தை மற்றுந்
தாங்கின னேற்றத்துபரி தனை யெருது தன்னைத்
தானியத்தைத் தரணியையுஞ் சாற்றுக வோரயுதம்.

தாங்கினனேல் தனத்தை அரிதாரத்தைக் கழஞ்சு
தரத் தாதா அகோரத்தைச் சாற்றிடுக அயுதம்
தூங்கு இருளில் நடம் ஆடி ஆலயத்தில் பாவம்
தொலைத்து அருள் என் பாவம் எனச் சொல்லுக முந்நூறு
தாங்கினனேல் தயிலத்தைத் ததி ஆன்நெய் தன்னையும்
தரித்திடில் கார்ப்பாசத்தைக் கம்பளத்தை மற்றும்
தாங்கினனேல் தத்துபரி தன்னை எருது தன்னைத்
தானியத்தைத் தரணியையும் சாற்றுக ஓர் அயுதம்.

Koviloor Digital Library

உரை:

பொன், அரிதாரம் முதலியவற்றை ஒரு கழஞ்சு எடை அளவு ஒருவரிடமிருந்து தானமாகப் பெற்றால், அக்குற்றம் தீரச் சிவாலயத்தில் இருந்து அகோர மந்திரத்தைப் பதினாயிரம் உரு ஏற்றுக; பால், தயிர், பசுவின் நெய் - எண்ணெய், பருத்தியாடை, கம்பளம் ஆகியவற்றைத் தானமாகப் பெற்றவர்கள், சிவபிரான் சந்நிதியில் அக்குற்றத்தைப் போக்கி அருள் செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொண்டு, அகோரத்தை முந்நூறு உரு ஏற்றுக. குதிரை, எருது, நெல் முதலான தானியங்கள், நிலம் முதலானவற்றைத் தானமாகப் பெற்றவர்கள், சிவன் திருக்கோயிலில் அமர்ந்து, அக்குற்றம் அகல அகோரத்தைப் பதினாயிரம் உரு ஏற்றுக.

விளக்கம்:

யாரிடமிருந்தும் ஒரு பொருளைத் தானமாகப் பெறலாகாது என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

தனம் - இது இங்கு தங்கத்தைக் குறிப்பிடுகிறது; கார்ப்பாசம் - பருத்தி; அரிதாரம் - ஒரு மருந்துச் சரக்கு; தரணி - நிலம். (72)

திருமடம் அமைத்தல்

947. சிறப்புறவே திருமடத்தைச் செய்து தலை வணங்கித்
தேவயினியானுமுயச் செறிந்திருக்க வென்றே
அறத்தினையா தரித்தான் கையது பரித்தா னாகி
லறைந்திடுக நியுதமுற ஆலயத்தின மர்ந்தே
பெறற்கரியா யான்றரவே பெற்றிதனை யென்றன்
பிழை தீர வருந்துக வுள்ளளவு மெனப் பேசுங்
குறிப்பினன் கைக்கொண்டு மரணாந்தமுணல் கொடுமை
கொள்கசில நாளினுக்கேயவன் வினைக்குக்குழைந்தே.

சிறப்பு உறவே திருமடத்தைச் செய்து தலை வணங்கித்
தேவ இனியானும் உய்யச் செறிந்து இருக்க என்றே
அறத்தினை ஆதரித்தான் கையது பரித்தான் ஆகில்
அறைந்திடுக நியுதம் உற ஆலயத்தில் அமர்ந்தே
பெறற்கு அரியாய் யான்தரவே பெற்று இதனை என்றன்
பிழைதீர அருந்துக உள்ள அளவும் எனப் பேசும்
குறிப்பினன்கைக் கொண்டு மரணஅந்தம் உண்ணல் கொடுமை
கொள்கசில நாளினுக்கே அவன் வினைக்குக் குழைந்து.

Koviloor Digital Library

உரை:

சிவனடியார் ஒருவர்தம் ஆசிரியருக்காக ஒரு திருமடம் அமைத்து அதற்கு வேண்டிய தளவாடப் பொருள்களையும் வாங்கி வைத்து தம் ஆசிரியரிடம், ''தேவரீர் அடியேன் உய்யும் வண்ணம் இத்திருமடத்திலே எழுந்தருளியிருத்தல் வேண்டும்'' என வணங்கிக் கொடுக்க, அதனைப் பெற்றுக் கொண்ட ஆசிரியர், திருக்கோயிலில் அமர்ந்து அகோர மந்திரத்தை, நூறாயிரம் உரு ஏற்றுக. ''யாரும் பெறுவதற்கு அரியவரே! யான் அளிக்கும் அமுதை ஏற்று என் குற்றம் தீர வாழ்நாள் முழுவதும் இம்மடத்திலேயே தங்கியிருக்க வேண்டும் என்று அந்த அன்பர் வேண்டினால், அவர் வேண்டுதலுக்கிரங்க, அவர் வினை கெடுமாறு சில நாள்கள் மட்டும் அவர் தரும் உணவை உண்க; தாம் உள்ளளவும் அவர் தரும் உணவை ஏற்பது கொடிது என உணர்க.

விளக்கம்:

திருமடம் - சிவஞானி தங்கும் இடம்; உய்ய - நற்கதி பெற; மரண அந்தம் - வாழ்நாள் வரை; குழைந்து - உருகி; நியுதம் - இலட்சம். (73)

பெற்றதைச் சிவனுக்குப் படைத்திடுக

948. தரப் பிறர்கைத் தாங்கியது சங்கரற்கு நாளுஞ்
சமைத்து நிவேதனம் செய்க தவறிய நாணூற்றெட்
டுரைக்க சிவ குரவனுக்கு மூட்டுக நாடோறு
மொரு தேசத்தயனாட்டி லுன்னியவன் பாதஞ்
சிரத்தையுற மலர் தூவித் திசையதனை நோக்கித்
தண்டெனவே பணிந்தெழுக சிவநேசருடனே
விருப்புடனே நாடோறு மிசைந்திடுக தீக்கை
வேறற்றார் சாதியினு மொருபந்தி மிசைவே.

தரப்பிறர் கைத்தாங்கியது சங்கரற்கு நாளும்
சமைத்து நிவேதனம் செய்க தவறியநாள் நூற்று எட்டு
உரைக்க சிவகுரவனுக்கும் ஊட்டுக நாள்தோறும்
ஒரு தேசத்து அயல் நாட்டில் உன்னி அவன்பாதம்
சிரத்தை உற மலர் தூவித் திசை அதனை நோக்கித்
தண்டு எனவே பணிந்து எழுக சிவநேசருடனே
விருப்புடனே நாள் தோறும் மிசைந்திடுக தீக்கை
வேறு அற்றார் சாதியிலும் ஒருபந்தி மிசைவு.

உரை:

ஈகையாளரிடம் பெற்றுக் கொண்ட பொருளைப் பக்குவம் செய்து அதைச் சிவனுக்கும் ஞான ஆசானுக்கும் நாள்தோறும் படையல் செய்க. ஒரு நாள் அவ்வாறு

Koviloor Digital Library

செய்யத் தவறினால், அக்குற்றம் நீங்க, அகோரத்தை நூற்று எட்டு உரு ஏற்றுக. ஆசிரியர் அருகே இல்லாவிடில், அவர் திருவடியை மனத்திலே எண்ணி, மலர் இட்டு வணங்கி, அவர் தங்கியிருக்கும் திசையை நோக்கித் தடியைத் தரையில் கிடத்தியது போல நிலத்திலே பணிந்து எழுக. பின்னர், சிவனடியார்களோடு சேர்ந்து உண்ணுக. தம்முடைய சாதியினராகத் தமக்கு நிகராகத் தீக்கை பெற்றவர்களையும் தம்மோடு அமரச் செய்து, நாள்தோறும் அவர்களோடு சேர்ந்து உண்ணுதல் சிறப்பாகும்.

விளக்கம்:

சங்கரற்கு - சிவனுக்கு; நாளும் - தினமும்; நிவேதனம் - படையல்; சிவகுரவன் - சிவஞானியாகிய ஆசிரியர்; ஊட்டுக - உண்பிக்க; உன்னி - நினைத்து; சிரத்தை - அன்பு; தண்டு - தடி; சிவநேசர் - சிவனடியார்; மிசைதல் - உண்ணுதல். (74)

பந்தியில் அமர்ந்து உண்ணுதலால் நேரும் குற்றம்

949. அற்றழியவாகார தோடங்க ளென்று
மருவினையுமெனக்கு விரைந் தழிந்தொழிய வென்றும்
பெற்ற சிரத்தையினாலே யாக்கடனைப் பேணிப்
பெற்றவற்றினைந்தினையும் பேதமிலி தன்னை
நெற்றி விழி நின்மலனை நேயத்தாலாட்டி
நிசியருந்திலாகார தோடங்கணீங்கு
மற்றழியு மரும்பாவ நல்வினையு மாகு
மவனது நற்புரி தன்னை யடைந்துறலு மாமே.

அற்றுஅழிய ஆகார தோடங்கள் என்றும்
அருவினையும் எனக்கு விரைந்து அழிந்து ஒழிய என்றும்
பெற்ற சிரத்தையினாலே ஆக்கள் தன்னைப் பேணிப்
பெற்று அவற்றின் ஐந்தினையும் பேதம் இல்லி தன்னை
நெற்றிவிழி நின்மலனை நேயத்தால் ஆட்டி
நிசி அருந்தில் ஆகார தோடங்கள் நீங்கும்
அற்று அழியும் அரும்பாவம் நல்வினையும் ஆகும்
அவனது நற்புரி தன்னை அடைந்து உறலும் ஆம்.

உரை:

உண்ணும் உணவு, பருகும் நீர் ஆகியவற்றால் நேரும் குற்றமும், செய்த பாவங்களும் விரைவில் அறவே ஒழிய வேண்டும் என்று கருதி, ஒருவர் பசுக்களை அன்போடு வளர்த்து, அவைதரும் பால், தயிர், நெய், மூத்திரம், சாணம் என்ற ஐந்து பொருள்களையும் வேறுபாடு இல்லாதவனும், நெற்றியில் ஒரு கண்ணையுடைய தூயவனுமாகிய சிவனுக்குத் திருமுழுக்குச் செய்து, பட்டினியாக இருந்து, அந்தப் பால் முதலிய பொருள்களையே இரவில் ஒரு வேளை மட்டும் உண்டால், உணவால்

Koviloor Digital Library

நேரும் குற்றமகலும்; பாவங்கள் விலகும்; புண்ணியமும் நேரும். அதனால், சிவ உலகை அடையும் பேறும் பெறலாம்.

விளக்கம்:

அற்று - நீங்கி; ஆகாரம் - உணவு; தோடம் - குற்றம்; ஆக்கள் - பசுக்கள்; பேணி - விரும்பி; இல்லி - இல்லாதவன்; நின்மலன் - இறைவன்; நேயம் - அன்பு; ஆட்டி - திருமுழுக்கு நிகழ்த்தி; நிசி - இரவு; நல்வினை - புண்ணியம்; நற்புரி - சிவ உலகு. (75)

பசுக்களின் வகை அறிதல்

950. பிணி மூப்புச் சாகன்று பிறந்திளைய கன்று
பெறுங்கன்று கருக்கன்று பெறாக்கன்றூண் மலமென்
றெணிய விருநான் கொழிந்த வெவையு மினியனவே
யிவற்று தித்த மயமாதி யாட்டிடுக விறைக்கே
மணிலணவாமுன் மயத்தைத் தாமிரத்திற் கொள்க
வானிடையே கமலத்தின் வகிர்ந்து நடுமயத்திற்
பிணியிலர் கைப் பெருவிரலிற் பாதியெனுமளவு
பெற்றிடுக மற்றைய வுங் கொளுமுறைபேசுவமே.

பிணி மூப்புச் சாகன்று பிறந்து இளையகன்று
பெறும் கன்று கருக்கன்று பெறாக்கன்று ஊண்மலம் என்று
எண்ணிய இருநான்கு ஒழிந்த எவையும் இனியனவே
இவற்று தித்த மயம் ஆதி ஆட்டிடுக இறைக்கே
மண்ணில் அணவாமுன் மயத்தைத் தாமிரத்தில் கொள்க
வான் இடையே கமலத்தில் வகிர்ந்து நடுமயத்தில்
பிணி இல்லார்கைப் பெருவிரலில் பாதி என்னும் அளவு
பெற்றிடுக மற்றையவும் கொள்ளும் முறைபேசுவம்.

உரை:

நோய்ப் பசு, கிழப் பசு, கன்று செத்த பசு, கன்று போட்டுப் பத்து நாள் சூதகம் உள்ள பசு, கிடாரிக் கன்று ஈன்ற பசு, சினைப் பசு, மலட்டுப் பசு, மலம் தின்னும் பசு என்ற இந்த எட்டு வகைப் பசுக்களைத் தவிர, ஏனைய பசுக்கள் யாவும் சிறந்தவை. இவற்றிலிருந்து பெற்ற சாணம் முதலியவற்றால் இறைவன் திருமேனிக்குத் திருமுழுக்குச் செய்க. பசு சாணமிடும் போது, அச்சாணம் தரையில் விழுவதற்கு முன் அதனைத் தாமரையிலையில் ஏந்துக. ஏந்திய சாணத்தின் நடுவே உடல் நலமுள்ளவரின் கைப் பெருவிரலில் பாதி மாத்திரம் பகிர்ந்து எடுத்துக் கொள்க. இனி, பசுவின் மூத்திரம் முதலியவற்றைப் பெறும் முறையை உரைப்போம்.

Koviloor Digital Library

விளக்கம்:

சாகன்று - கன்று செத்த பசு; கருக் கன்று - சினைப் பசு; ஊண் - தின்னும்; மயம் - கோமயம், சாணம்; ஆட்டிடுக - திருமுழுக்குச் செய்க; தாமிரம் - இது செம்புச் சத்துள்ள தாமரையிலையைக் குறிக்கிறது. (76)

பசுவின் சிறுநீர் கொள்ளும் முறை

951. பலமொன்று நீர் கொள்க நீலநிறப்பசுவிற்
பால்கொள்கபலமைந்திற்செம்மைநிறப்பசுவின்
பலமூன்றினுறத்ததியைப்பானிறத்திற்கொள்க
பலமிரண்டினெய் கொள்க கபிலைநிறப்பசுவி
னல திவைகளரியனவேற் கபிலைதனிற்கொள்க
வைந்தினையுமதுதானுமரியதுவேயாகிற்
பலநிறத்தும் பாலெழுவாயைந்தினையுங்கொள்க
பசிதணியவூட்டியபின் பால்கொள்க பாங்கே.

பலம் ஒன்று நீர்கொள்க நீலநிறப்பசுவில்
பால்கொள்கைபலம் ஐந்தில் செம்மை நிறப்பசுவில்
பலம்மூன்றில்உறத் ததியைப்பால் நிறத்தில் கொள்க
பலம்இரண்டில் நெய்கொள்க கபிலைநிறப்பசுவில்
அல்லது இவைகள் அரியனவேல் கபிலைதன்னில் கொள்க
ஐந்தினையும் அதுதானும் அரியதுவே ஆகில்
பலநிறத்தும் பால் எழுவாய் ஐந்தினையும் கொள்க
பசிதணிய ஊட்டியபின்பால்கொள்க பாங்கு.

உரை:

நீலநிறப் பசுவின் மூத்திரம் ஒருபல எடையும், செந்நிறப் பசுவின் பால் ஐந்து பல எடையும், வெள்ளை நிறப் பசுவின் தயிர் மூன்று பல எடையும், கபிலைநிறப் பசுவின் நெய் இரண்டு பல எடையும் கொள்க. அவை கிடைப்பது அரிதாயின், கபிலை நிறப்பசுவின் பால், தயிர், நெய், சாணம், மூத்திரம் ஆகிய ஐந்தையும் அதே அளவில் கொள்க. அதுவும் அரிது என்றால் பல நிறங்கள் கொண்ட பசுவிலிருந்து அந்த ஐந்தையும் பெறுக. (பசுவைப் பசி தீர உண்ணச் செய்தபின்பே பால் கொள்ளற்பாலதாம்).

விளக்கம்:

பலம் - நூற்று அறுபது குன்றிமணியின் எடை கொண்டது ஒரு பலம். செம்மை - சிவந்த நிறம்; கபிலை - கருமை கலந்த மஞ்சள் நிறம். எழுவாய் - முதல்; ததி - தயிர்; பாங்கு - முறை (77)

Koviloor Digital Library

பசுப் பயனுக்குரிய ஏனம்

952. கோட்டந் தண்டுலத் தொன்பான்கொள்க தருப்பையினால்
கொள்ளலுமாமுகமைந்திற் குறித்த நிறமுறவே
தீட்டிடுக நடுப்பூர்வந் தெற்கு வடக்கொழிவுஞ்
சிறப்புறவே யீசத்திற் பொதுமை நிறஞ் செய்க
கூட்டிடுக விவை தம்மிற் கனக பாத்திரங்கள்
கொள்ளலுமாம் வெள்ளியினாற்பலாசினுங் கொண்டிடுக
வீட்டுடைய தாமிரத்தினியற்றலுமாமுறையே
யவற்றினுக்குப் பெயர்களையு மியம்பியிடுவாமே.

கோட்டம் தண்டுலத்து ஒன்பான் கொள்க தருப்பையினால்
கொள்ளலும் ஆம்முகம் ஐந்தில் குறித்தநிறம் உறவே
தீட்டிடுக நடுப்பூர்வம் தெற்கு வடக்கு ஒழிவும்
சிறப்பு உறவே ஈசத்தில் பொதுமை நிறம் செய்க
கூட்டிடுக இவை தம்மில் கனக பாத்திரங்கள்
கொள்ளலும் ஆம் வெள்ளியினால் பலாசிலும் கொண்டிடுக
வீட்டு உடைய தாமிரத்தில் இயற்றலும் ஆம் முறையே
அவற்றினுக்குப் பெயர்களையும் இயம்பியிடுவாம்.

உரை:

சிவன் சந்நிதியில் மூன்று அடி அல்லது ஒன்றரையடி நாற்கோணமாக மெழுகி, அதன் மீது அரிசியைப் பரப்பி, தாமரை வடிவில் ஒன்பது கோலம் அமைத்து, அதில் ஐந்து அல்லது மூன்று தருப்பையை வடக்கும் தெற்கும் நுனியாக்கிக் கிழக்கு முதலாகப் போட்டு, அந்தக் கோலத்தின் நடுவில் வெள்ளையும், கிழக்கில் மஞ்சளும், மேற்கில் கருமையும், தெற்கில் வெண்மையும், வடக்கில் செம்மையும் ஆக நிறங்கள் இட்டு, வட கிழக்கில் ஐந்து நிறங்களை இட்டு, அவற்றிற்கு முறையாகப் பூசை செய்க; பொன், வெள்ளி, செம்பு ஆகியவற்றால் செய்யப்பட்ட ஏனங்களில் இயன்றது ஒன்றையும் வைத்திடுக. அந்தக் கோட்டமாகிய கோலங்களின் பெயர்களை இனிக் கூறுவோம்.

விளக்கம்:

கோட்டம் - கோலம், வளைவு; **தண்டுலம்** - அரிசி; **ஒன்பான்** - ஒன்பது; **தீட்டிடுக** - வரைக; **பூர்வம்** - கிழக்கு; **ஈசம்** - ஈசானம்; வடகிழக்கு; **கனகம்** - தங்கம்; **தாமிரம்** - செம்பு. (78)

Koviloor Digital Library

கோட்ட பூசை செய்தல்

953. புரிக சிவதத்துவ கோட்டாய நமவென்றே
பூசை நடுக்கோட்டத்திற் பூருவ கோட்டத்திற்
புரிக சதாசிவ தத்துவ கோட்டாய வென்று
பூவானும் பூசனையைத் தென்புடைக் கோட்டத்திற்
புரிகவித்தியா தத்துவ கோட்டாய நமவென்று
பூவானும் வடபாற் கோட்டத்தினிடம் பூசை
புரிக பொதுப்புருடதத்துவக் கோட்டாய கால
தத்துவக் கோட்டாயவென மேல்பாற் பூவாலும்.

புரிக சிவ தத்துவ கோட்டாய நமஎன்றே
பூசை நடுக் கோட்டத்தில், பூருவ கோட்டத்தில்
புரிக சதாசிவ தத்துவ கோட்டாய என்று
பூவாலும் பூசனையைத் தென்புடைக் கோட்டத்தில்
புரிக வித்தியா தத்துவ கோட்டாய நமஎன்று
பூவாலும் வடபால் கோட்டத்தினிடம் பூசை
புரிக பொதுப்புருட தத்துவக் கோட்டாய
கால தத்துவ கோட்டாய என மேல்பால் பூவாலும்.

உரை:

நடுக் கோ்ட்டத்தில் சிவதத்துவனுக்கு வணக்கம் என்று கூறி, பூக்களால் வழிபாடு செய்க; கிழக்குக் கோட்டத்தில் சதாசிவ தத்துவனுக்கும், தெற்குக் கோட்டத்தில் வித்தியா தத்துவனுக்கும், வடக்குக் கோட்டத்தில் புருட தத்துவனுக்கும், மேற்குக் கோட்டத்தில் கால தத்துவனுக்கும் வணக்கம் என்று சொல்லி மலர் தூவி வணங்குக.

விளக்கம்:

சிவ தத்துவம் - ஞான சத்தியின் இருப்பிடம். சதாசிவ தத்துவம் - ஞானமும் கிரியையும் ஒத்து நிற்கும் நிலை. புருட தத்துவம் - மும்மலங்களுடன் கூடிய உயிர்நிலையாகிய தத்துவம். வித்தியா தத்துவம் - உயிர்களுக்குப் பகுத்தறிவை அளிப்பது. கால தத்துவம் - ஆன்ம போகங்களை அளக்கும் காலமாக இருப்பது. தத்துவம் - இயற்கை. உடல் அறிவு நிலை சார்பான உண்மைகளை உட்கொண்டது. பூருவம் - கிழக்கு; மேல் பால் - மேற்கு. (79)

பாத்திரமும் பால் முதலியனவும்

954. உரைத்த முறை நிரையுறவே பாத்திரப்பேருணர்க
வொளிருஞ் சுப்பிரதிட்டை சுசாந்தையே யென்றுந்
தெரித்தறைக தேசோவற் பாத்திரமே யென்றுந்
சிறப்புடைய விரற்றினச பாத்திரமே யென்றும்

Koviloor Digital Library

பரிக்குமிய னல்லமிர்த பாத்திரமே யென்றும்
படித்தறிந்து பஞ்சக நற்பாத்திரத்தின் பெயரால்
அருச்சனையை நமோந்தமுற வலரானுமாக்க
வடைவுறவே பாறதி நெய்நீர்மயமாக்குகவே.

உரைத்த முறை நிரை உறவே பாத்திரப் பேர்உணர்க
ஒளிரும் சுப்பிரதிட்டை சுசாந்தையே என்றும்
தெரிந்து அறைக தேசோவல் பாத்திரமே என்றும்
சிறப்பு உடைய விரற்றில் அச பாத்திரமே என்றும்
பரிக்கும் இயல் நல் அமிர்தபாத்திரமே என்றும்
படித்து அறிந்துபஞ்சகம் நல்பாத்திரத்தின் பெயரால்
அருச்சனையை நமோஅந்தம் உற அலராலும் ஆக்க
அடைவு உறவே பால்-ததி-நெய்-நீர்- மயம் ஆக்குக.

உரை:

ஆகம பத்ததிகளிற் சொல்லப்பட்ட முறையே சுப்பிரதிஷ்ட பாத்திரம், சுகந்தா பாத்திரம், தேஜோவத் பாத்திரம், இரத்தினோதக பாத்திரம், அமிர்த பாத்திரம் என்ற நாமங்களில் ஐந்து பாத்திரங்களைக் கோட்ட அறைகளில் அமைத்து சுப்பிரதிஷ்ட பாத்திராய நம: என்பது முதலாக அவ்வவ் பெயரோடு கூடிய நம: அந்த மந்திரத்தினாலே மலரிட்டு அர்ச்சித்து மேற்கண்ட ஒழுங்கின்படியே பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்ற ஐந்து திரவியங்களையும் சுப்பிரதிஷ்ட பாத்திரம் முதலாகிய ஐந்திலும் தனித்தனி இடுக. இக்கிரியையில் கோசலம் இரத்தனோதகம் எனவும் கோமயம் அமிர்தம் எனவும் பெயர் பெறுதல் கருதத்தகும்.

விளக்கம்:

உரைத்த முறை – ஆகம பத்ததிகளில் உரைத்த முறை.

இரத்தினச – இரத்னோதக.

பால்+தயிர்+நெய்+நீர்+மயம் = பாறயிர்நெய்நீர்மயம்

பாத்திரம் – ஏனம், கலம்; நிரைஉற – வரிசை முறைப்படி; ததி – தயிர்; நீர் – பசு மூத்திரம்; மயம் – கோமயம், சாணம் (80)

பால் முதலியவற்றை மந்திரித்தல்

955. உச்சரிக்க வீசான மந்திரத்தையொருகா
லுத்தமத்தபால்வலக்கை தொட்டொருமையுறவே
யுச்சரிக்க புளிப்பொழிந்த ததி யிருகாற்புருட
மொள்ளிய வத்திரத்துவடித் தொளிவுடையநெய்யின்
உச்சரிக்கவகோரத்தை முக்காணான்குறவே
யொழுகு சலம் வாமத்தை யுச்சரிக்கமயத்தின்

Koviloor Digital Library

உச்சரிக்க சத்தியோ சாதத்தை ஐங்கா
லுடல் வெறுத்தான் கோமயமுன் புரிந்திடு கவுணர்ந்தே.

உச்சரிக்க ஈசான மந்திரத்தை ஒருகால்
உத்தமத்தபால் வலக்கை தொட்டு ஒருமை உறவே
உச்சரிக்க புளிப்பு ஒழிந்த ததி இருகால் புருடம்
ஒள்ளிய வத்திரத்து வடித்து ஒளி உடைய நெய்யில்
உச்சரிக்க அகோரத்தை முக்கால் நான்கு உறவே
ஒழுகுசலம் வாமத்தை உச்சிரிக்க மயத்தின்
உச்சரிக்க சத்தியோ சாதத்தை ஐங்கால்
உடல் வெறுத்தான் கோமயம்முன் புரிந்திடுக உணர்ந்து.

உரை:

அதன்மேல் வலக்கையின் சுட்டுவிரல் முதலிய நால் விரல்களாலும் சுப்பிரதிஷ்ட பாத்திரத்துள்ள பாலை ஒருதரம் தொட்டு ஈசான மந்திரத்தை ஒரு தரமும், சுசாந்த பாத்திரத்துள் புளிப்பற்ற தயிரைத் தொட்டுத் தற்புருட மந்திரத்தை இருதரமும், தேஜோவத் பாத்திரத்துள்ள நெய்யைத் தொட்டு அகோர மந்திரத்தால் மூன்று தரமும், இரத்தினோதக பாத்திரத்துள்ள கோசலத்தைத் தொட்டு வாமதேவ மந்திரத்தால் நான்கு தரமும், அமிர்த பாத்திரத்துள்ள கோமயத்தைத் தொட்டுச் சத்யோ ஜாத மந்திரத்தால் ஐந்து தரமும் செபிக்க. போகம் விரும்புகளான போக காமிகளுக்கு உரியது இந்த ஒழுங்கு. மோகூஷம் விரும்பிகளான முத்தி காமிகளுக்கு இவ்வொழுங்கு நேர் எதிராயாமயும். அவர்கள் முதல் கோமயத்திற்றொட்டுச் சத்தியோசாத மந்திரத்தால் ஐந்துதரம் செபித்து பின் மற்றைப் பாத்திரங்களில் மேற்சொன்னவாறுள்ள அவ்வம்மந்திரங்களால் முறையே நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று - ஒரு தரம் செபிக்கக் கடவர்.

விளக்கம்:

ஒருகால் - ஒருமுறை; ஒருமை உற - மனம் அடங்கி; ஈசானம் - ஈசான மந்திரம்; புருடம் - தற்புருடமந்திரம்; ஒள்ளிய - வெள்ளை நிற; வத்திரத்து - ஆடையால்; வடித்து - வடிகட்டி; முக்கால் - மூன்று முறை; வாமம் - வாம தேவ மந்திரம்; மயம் - சாணம். (81)

நீர் முதலியன கலத்தல்

956. அருச்சிக்க வீசானத் தவ்வியத்தகோட்ட
மதன்மீது சத்தி தத்துவ பாத்திரத்தையலரால்
அருச்சித்தோர் பலத்தளவு சுத்தசலம் பூரித்
தறுகு குசை சந்தனமு மதனுடனே கலந்து

Koviloor Digital Library

தெரித்து அறிந்த சிவகாயத்திரியை யறுவாரஞ்
செபித்திடுக மூலத்தைச் சிறப்புறவே செப்பிப்
புரிந்திடுக மயநிசி னீர் நெய்யி னெய்யைப்
பூரிக்க ததி தன்னிற் றதிபாலிற் புகவே.

அருச்சிக்க ஈசானத்து அவ்வியத்த கோட்டம்
அதன்மீது சத்திதத்துவ பாத்திரத்தை அலரால்
அருச்சித்து ஓர் பலத்து அளவு சுத்தசலம்பூரித்து
அறுகு குசை சந்தனமும் அதனுடனே கலந்து
தெரித்து அறிந்து சிவகாயத்திரியை அறுவாரம்
செபித்திடுக மூலத்தைச் சிறப்பு உறவே செப்பிப்
புரிந்திடுக மயம்நிசி நீர் நெய்யில் நெய்யைப்
பூரிக்க ததி தன்னில் ததிபாலில் புக.

உரை:

வடகிழக்குத் திசையில் அமைத்த அவ்வியக்த கோட்டத்தைப் பூசை செய்து, அதிலே ஏனத்தை வைத்து, அந்த ஏனத்திலே சத்தி தத்துவத்தைப் பூசித்து, அதிலே ஒருபல எடை அளவு நல்ல நீரை நிரப்பி, அதில் அறுகம்புல், தருப்பை புல், சந்தனம் ஆகியவற்றை இட்டு, நாள்தோறும் சிவகாயத்திரி மந்திரத்தை ஆறுதரம் உரு ஏற்றுக. பிறகு, மூல மந்திரத்தை நன்றாகக் கூறிக் கொண்டே சாணம், பசு மூத்திரத்திலும்; பசு மூத்திரம் நெய்யிலும், நெய் தயிரிலும், தயிர் பாலிலும் கலக்கச் செய்க.

விளக்கம்:

அவ்வியத்தம் - பஞ்சகவ்விய பூசைக்கு அமைக்குங் கோஷ்டங்களிலொன்று; ஈசானம் - வடகிழக்கு; சத்தி தத்துவம் - சுத்த தத்துவங்களுள் ஒன்றாய்ச் சிவனுடைய கிரியா சத்திக்கு இடமாய்ச் சுத்த மாயையைக் காரியப்படுத்துவதாய் உள்ள விருத்தி. சிவகாயத்திரி - இம்மந்திரத்தைத் திருவாவடுதுறை அல்லது தருமபுரக்குருமகா சன்னிதானம் அவர்களை அணுகி உபதேச முறையில் அறியவேண்டும். (82)

நல்ல நீர் கலந்து அபிஷேகம் செய்யும் முறை

957. உச்சரித்தே சிவகாயத்திரி தன்னையொருகா
லுதகத்தைப்பாலுடனே யொடுக்கிடுக வனைத்தும்
உச்சரிக்க பிரமாங்கஞ் சிவகாயத்திரியு
மொரு நூற்றெட்டுறமூல மந்திரமுமுரைக்க
வெச்சமற வெண்டிசைக்கும் பந்தனத்தையியற்றி
யியற்றிடுக வவகுண்டர் தேனுவின் முத்திரையும்
உச்சரித்தே சத்திமனுவுறுத்திடுக மகத்தென்
றுரைத்தபெரு முத்திரையுமூலத்தையுரைத்தே.

Koviloor Digital Library

உச்சரித்தே சிவகாயத்திரி தன்னை ஒருகால்
உதகத்தைப் பாலுடனே ஒடுக்கிடுக அனைத்தும்
உச்சரிக்க பிரமஅங்கம் சிவகாயத்திரியும்
ஒரு நூற்று எட்டு உறமூல மந்திரமும் உரைக்க
எச்சம் அற எண் திசைக்கும் பந்தனத்தை இயற்றி
இயற்றிடுக அவ குண்டம் தேனுவின் முத்திரையும்
உச்சரித்தே சத்திமனு உறுத்திடுக மகத்து என்று
உரைத்த பெரும்முத்திரையும் மூலத்தையும் உரைத்து.

உரை:

சிவகாயத்திரியை ஒரு முறை சொல்லி, நல்ல நீரைப் பாலுடன் கூட்டுக. அதனைச் சொல்லும் தகுதியில்லாதவர், இதய மந்திரத்தைச் சொல்லிக் கூட்டுக. எல்லாம் கூட்டியிருக்கிற நடுவில் பாத்திரத்தைத் தொட்டுச் சங்கிதையையும் சிவகாயத்திரியையும் ஒரு முறை உரு ஏற்றி, பணிமாறச் செய்து திருமுழுக்குச் செய்க. பரிகாரத்தின் பொருட்டு என்றால் மூலமந்திரத்தை நூற்று எட்டு உரு, வால் முதலான பசுப் பயனை ஐந்திலே உரு ஏற்றி திக்குப்பந்தனம், சோடிகர முத்திரை, அவகுண்டம், பரிகார முத்திரை, தேனு முத்திரை, சத்தி மந்திரம் ஆகியவற்றால் ஆராதிக்க என்பது ஓதுவாமூர்த்திகளின் உரை.

இப்பாடலுக்குச் சிவபூசை செய்யும்முறையை நன்கு அறிந்த பெரியோர்களே சரியான விளக்கம் கூற இயலும். அச்சுவேலி சிவத்திரு ச. குமார சுவாமி குருக்கள் எழுதிய *'சிவ பூசை விளக்கம்'* என்ற நூலும், தருமபுர ஆதீன வெளியீடான *''சிவபூஜாவிதி''* என்ற நூலும் பயனுடையவை. (83)

பசுப்பயனை முறையாகத் திருமுழுக்குச் செய்தல்

958. ஆட்டிடுக பச்சிம திக்கானனனுக்கமலற்
கது தன்னையான் புரிந்த வவலவினைக்குய்யம்
ஒட்டிடுக வென்றதனை யுண்டுபகலிரவு
முறங்காதே பூருவதிக் கானனாயுற்றே
நாட்டமவன் றிருமேனி நாடியிட நாவா
லோங்காரமுன்மூல மந்திரத்தை நவின்று
வீட்டிடுக பிறரறியாதே புரிந்த வவல
வினைதன்னை மற்றைவினை போக்குவதும் வியப்போ.

ஆட்டிடுக பச்சிமதிக்கு ஆனனனுக்கு அமலற்கு
அது தன்னை யான் புரிந்த அவலம் வினைக்குய்யம்
ஒட்டிடுக என்று அதனை உண்டுபகல் இரவும்
உறங்காதே பூருவதிக்கு ஆனனாய் உற்றே

Koviloor Digital Library

நாட்டம் அவன் திருமேனிநாடியிட நாவால்
ஓங்காரம் முன் மூலமந்திரத்தை நவின்று
வீட்டிடுக பிறர் அறியாதே புரிந்த அவலவினை தன்னை
மற்றை வினைபோக்குவதும் வியப்போ.

உரை:

மேற்கு முகமாக அமைந்துள்ள சிவன் கோயில் இருக்கும் சிவண் திருமேனிக்கு, தான் பிறர் அறியாமல் செய்த தீவினையைப் போக்க வேண்டும் என வேண்டிடுதலுடன், பால் முதல் சாணம் ஈறான பசுப் பயன் ஐந்தையும் திருமுழுக்குக்காகச் செய்து, பகலில் உண்டு இரவில் உறங்காமல் அச்சிவன் சந்நிதியில் கிழக்கு முகமாக அமர்ந்து, திருமேனியை நோக்கி, ஓங்காரத்தோடு திருஐந்தெழுத்தை ஓதிவர மறைவாகச் செய்த தீவினைப் பயன் நீங்கும். அது வியப்பு ஆகாது.

விளக்கம்:

பச்சிமம் - மேற்கு; பூருவம் - கிழக்கு; குய்யம் - வஞ்சகம்; கரவு, மறைவிலுள்ளது. ஆனனம் - முகம்; வீட்டிடுக - போக்குக; அவலம் - தீமை. (84)

பசுப்பயன் திருமுழுக்கிற்கு ஏற்ற காலம்

959. ஆட்டிடுக வபரபக்கத் தட்டமியினிசியி
லானைந்து மமலேசனணிமுடியிலன்பா
லூட்டிடுக தேசிகன்றான் றனக்கடிமை யொட்டி
யோட்டுதற்குத் தீவினையை யொருப்பட்டான் றனக்குக்
காட்டிய விம்முறை நவமி பதினான்கு காறுங்
கருத்துறவே செய்தருத்திற் கரிசவலங்கழியு
மீட்டியிவை யைந்தினையுமிருதயத்தாற் செபித்தே
யிறைவனணிமுடிக் காட்டி யருத்தலுமா மெளிதே.

ஆட்டிடுக அபரபக்கத்து அட்டமியில் நிசியில்
ஆன் ஐந்தும் அமல ஈசன் அணிமுடியில் அன்பால்
ஊட்டிடுக தேசிகன்தான் தனக்கு அடிமை ஒட்டி
ஓட்டுதற்குத் தீவினையை ஒருப்பட்டான் தனக்குக்
காட்டிய இம்முறை நவமி பதினான்கு காறும்
கருத்து உறவே செய்து அருத்தில் கரிசுஅவலம் கழியும்
மீட்டி இவை ஐந்தினையும் இருதயத்தால் செபித்தே
இறைவன் அணிமுடிக்கு ஆட்டி அருத்தலும்ஆம் எளிது.

Koviloor Digital Library

உரை:

தேய்பிறைக் காலத்தில் எட்டு ஒன்பது பதினான்காம் நாள்களில் இரவில் பால், தயிர், நெய், பசுவின் சிறுநீர், சாணம் என்ற ஐந்தின் கலவையை ஆசான், இறைவன் திருமுடியில் திருமுழுக்காகச் செய்க. பிறகு தனக்கு அடிமையாக உடன்பட்டுத் தீவினைப் பயனைத் தொலைப்பதற்கு விரதம் இருக்கிற மாணவனை எஞ்சிய பஞ்சகவ்வியத்தை உண்பித்தால், அவன் பிறர் அறியாமற் செய்த பாவத்தில் ஒன்று விலகும். மீண்டும் அப்பசுப் பொருள்களின் கலவையை இருதய மந்திரத்தால் பூசை செய்து திருமுழுக்காட்டி, முன்போல இரவில் விரதமிருந்து அதனை உண்டால், பாவங்களுள் ஒன்று விலகும்.

விளக்கம்:

ஆட்டிடுக - திருமுழுக்குக்காகச் செய்க; அபரபக்கம் - தேய்பிறைக் காலம்; அட்டமி - எட்டாம் நாள்; நவமி - ஒன்பதாம் நாள்; சதுர்த்தசி - பதினாலாம் நாள்; தேசிகன் - ஆசான்; கரிசு - பாவம். இருதயம் - இருதய மந்திரம்; செபித்தல் - உருஏற்றுதல், செபித்தல் தான் உருவேற்றுதலைக் குறிக்கும். சபித்தல் என்றால் சாபம் போடுதல் என்றும் ஆய்விடும். இதற்குத் தப்புகில் ஜபித்தல் என்றெழுத வேண்டும். சொற்களை வகையறிந்து கையாள வேண்டும். (85)

கபில நிறப் பசுவைப் பூசித்தல்

960. ஆருயிரினருவினையை யறுத்தறத்தையாக்க
வமல வரனருள் புரியப் பாற்கடலி னுதித்துப்
பாரிடரைப் பாற்றியடும்பயோதரியே தாயே
பற்றுகபுல்லென்று வடமொழிப் பொருளைப் பகர்க
யாரியத்தை வல்லாராரியம்பகர்ந்து புல்லை
யருத்திடுக வருக்கியத்தைத் தெளித்திடுகவலருங்
கூரருளாற் சூட்டிடுக கும்பிடுகபாலுங்
கொண்டுமுறையமலன்முடிக்காட்டுக போங்குற்றம்.

ஆருயிரின் அருவினையை அறுத்து அறத்தை ஆக்க
அமல அரன் அருள்புரியப் பால்கடலில் உதித்துப்
பார்இடரைப் பாற்றியிடும் பயோதரியே தாயே
பற்றுக புல் என்று வடமொழிப் பொருளைப்பகர்க
ஆரியத்தை வல்லார் ஆரியம் பகர்ந்து புல்லை
அருத்திடுக அருக்கியத்தைத் தெளித்திடுக அலரும்
கூர் அருளால் சூட்டிடுக கும்பிடுக பாலும்
கொண்டு முறை அமலன் முடிக்கு ஆட்டுகபோம் குற்றம்.

Koviloor Digital Library

உரை:

தூயவனாகிய சிவனருளால் உயிர்கள் பாவங்களிலிருந்து விடுபட்டு நற்கதி பெற, பாற்கடலில் தோன்றிய முலைக்காம்புகளையுடைய தாயே! நான் தருகிற புல்லை நீ, ஏற்றுக் கொள்வாயாக என்று வடமொழிப் பொருளைச் சொல்லுக. வடமொழி வல்லார் வடமொழி மந்திரங்களாற் சொல்லுக. அர்க்கியத்தை விடுக. மலர்களைச் சூட்டுக. வணங்குக. பால் கொண்டு இறைவன் முடிக்கு சூட்டினால் பாவம் விலகும். (86)

எண்ணத்தாலும் பேச்சாலும் வரும் பாவம்

961. சங்கரனைச் சதாசிவனைத் தரித்து இதயமலரிற்
தண்புனலுளாழ்ந் திருந்து வாயுவினைத் தடுத்து
மங்க மனத்தோடமெனச் சிவகாயத்திரியை
மானதத்தா லட்டசதமுச்சரிக்க மாயும்
பொங்கிய பொல்லாங் கொன்று வாக்கிளது புன்மை
போமென்று வாக்கடக்கப் பொறியழலை யோம்பி
மங்கையொரு பங்கனடி மலர் சூட்டி யென்றன்
வாக்கியன்ற தோடத்தை மாற்றிடுவாயெனவே.

சங்கரனைச் சதாசிவனைத் தரித்து இதயமலரில்
தண்புனல்உள் ஆழ்ந்து இருந்து வாயுவினைத் தடுத்து
மங்கமனத் தோடம் எனச் சிவகாயத்திரியை
மானதத்தால்அட்டசதம் உச்சரிக்கமாயும்
பொங்கிய பொல்லாங்கு ஒன்று வாக்கினது புன்மை
போம் என்று வாக்கு அடக்கப்பொறி அழலை ஓம்பி
மங்கை ஒரு பங்கன் அடிமலர்சூட்டி என்றன்
வாக்கு இயன்ற தோடத்தை மாற்றிடுவாய் என.

உரை:

நெஞ்சத்தாமரையில் சதாசிவமூர்த்தியை எண்ணி, மூச்சுக் காற்றை அடக்கி, நீர்நிலையில் உள்ள குளிர்ந்த நீரில் மூழ்கியிருந்து சிவகாயத்திரியை மனதுக்குள்ளே நூற்று எட்டு உரு ஏற்றினால் மனத்தால் நேர்ந்த பாவம் போகும். பிறகு, மவுனமாகச் சிவபூசைக்கு உரிய ஓமத்தைச் செய்து, பேச்சினால் நேர்ந்த பாவத்தைப் போக்கியருள வேண்டுமென்று முன்சொன்ன சிவகாயத்திரியை நூற்று எட்டு உரு ஏற்றப் பேச்சினால் வந்த குற்றம் விலகும்.

விளக்கம்:

தரித்து - நினைத்து; வாயுவைத் தடுத்து - மூச்சை அடக்கி; மனத்தோடம் - தீய நினைப்பால் வந்த பாவம்; தோடம் - குற்றம்; மானதம் - மனதுக்குள்ளேயே

Koviloor Digital Library

சொல்லிக் கொள்வது. மங்கை ஒரு பாகன் - உமையை இடப்பாகத்திற் கொண்ட சிவன். அட்ட - எட்டு; சதம் - நூறு; அட்ட சதம் - நூற்றெட்டு. (87)

உடம்பினால் வரும் குற்றம்

962. கழிந்து விடுங் காயத்திற்கரி சொன்றுவிரையக்
கட்டுரைக்கை நாண்மூன்று விட்டுணலுங்கடுக
வொழிந்தறலைச் சந்தி தொறு முண்டு மடவார்தோ
ளொன்றாதே சிவனடியை யொருப்பட்டே நினைக்கி
லிழிந்த விருமற்றும்மல் பொருமலிவை யெழினே
யெழுமூன்றோங்காரமுற வியற்றுக வாயாம
மொழிந்தவர்சூத்திரர் தம்மைச் சூத்திரரோ மொழித்தே
யுச்சரிக்க வைந்தெழுத்துமைம்முகனையுனியே.

கழிந்து விடும் காயத்தில் கரிசு ஒன்று விரையக்
கட்டுரைக்கை நாள்மூன்றுவிட்டு உண்ணலும் கடுக
ஒழிந்து அறலைச் சந்தி தொறும் உண்டு மடவார் தோள்
ஒன்றாதே சிவனடியை ஒருப்பட்டே நினைக்கில்
இழிந்த இருமல் தும்மல் பொருமல் இவை எழினே
ஏழுமூன்று ஓங்காரம் உற இயற்றுக ஆயாமம்
ஒழிந்தவர்சூத்திரர் தம்மைச் சூத்திரர் ஓம் ஒழித்தே
உச்சரிக்க ஐந்தெழுத்தும் ஐம்முகனை உன்னி.

உரை:

மூன்று நாள்கள் வரை உண்ணா நோன்பு நோற்று, காலை உச்சி மாலை வேளைகளில் நாள்தோறும் நீராடி, ஒழுங்காக நீரையே உணவாக அருந்தி, பெண் கலவியை நீக்கி, சிவனை எண்ணி மவுனமாகச் சிவகாயத்திரியை முன் சொல்லியபடி நூற்று எட்டு உரு ஏற்றினால், பிறர் மனைவியைத் தழுவிய உடம்பின் குற்றம் ஒன்று நீங்கும். இழிவான இருமல், தும்மல், வயிற்றுப் பொருமலால் வரும் ஏப்பம் முதலான உடற் குற்றங்கள் அகல, மூச்சை நிறுத்தி, இருபத்தொரு முறை ஓங்காரத்தை எண்ணுக. சூத்திரர்கள், சதாசிவ மூர்த்தியை எண்ணி ஓங்காரம் நீக்கி ஐந்தெழுத்தை, மூச்சை அடக்கி எண்ணுக.

விளக்கம்:

சூத்திரர் ஓங்காரத்தை விலக்கி ஐந்தெழுத்தை ஓத வேண்டுமென்று சொல்வது சிவாகம நெறி. ஆகம நெறி வேறு; அன்பு நெறி வேறு. பக்தி மார்க்கத்தில் பாகுபாடு இல்லை; நாயன்மார் நெறி அன்பு நெறி; ஆகமநெறியன்று; இங்கு சூத்திரர் என்றது பிரணவம் ஓதுந் தகுதியில்லாதவரை எனக் கொள்க. (88)

Koviloor Digital Library

சதாசிவமூர்த்தியைத் தியானித்தல்

963. உச்சிமுகமீசான மொளி தெளிய பளிங்கே
உத்தரபூருவ திசையை நோக்கியுறு முகத்தே
நிச்சயித்த முகத்தின் கீழ்ப்பூர்வதிசை நோக்கி
நிகழுமுகம் தற்புருடங் கோங்கலர்போ னிறமே
யச்சுறுத்து மகோரமுக மறக்கரிது கராள
மவிழ்தாடி வலத்தோளிற் றென்னோக்கியமருஞ்
செச்சை நிறத் தெரிவை முகமிடத் தோண்மேல் வாமஞ்
சிறுபுறத்தின் முகஞ்சத்தியோசாதந் திகழ்பால்.

உச்சிமுகம் ஈசானம் ஒளி தெள்ளிய பளிங்கே
உத்தரபூருவ திசையை நோக்கி உறு முகத்தே
நிச்சயித்த முகத்தின் கீழ்ப்பூர்வதிசை நோக்கி
நிகழு முகம் தற்புருடம் கோங்கு அலர்போல் நிறமே
அச்சுறுத்தும் அகோரமுகம் மறக்க அரிது கராளம்
அவிழ் தாடி வலத்தோளில் தென்நோக்கி அமரும்
செச்சை நிறத் தெரிவைமுகம் இடத் தோள்மேல் வாமம்
சிறுபுறத்தில் முகம் சத்தியோசாதம் திகழ்பால்.

உரை:

மேல் நோக்கிய ஈசான முகம், கண்ணாடி போலத் தெளிந்த ஒளி பொருந்தி மேல் நோக்கியபடியிருக்கும்; இம்முகத்தின் கீழே கோங்கு மலர் போன்ற நிறமுள்ள தற்புருடம் இளமையுடையவர் முகம் போல் கிழக்கு நோக்கியிருக்கும்; கண்டவர்களுக்குப் பயங்கரமான முகமாய், கீழே தொங்குகின்ற தாடியையும், வெளியே தெரியும் பற்களையுமுடைய, கறுத்த நிறக் கிழவர்முகம் போன்ற முகமுள்ள அகோர முகம் வலத்தோளின் மேல், தெற்கு நோக்கியிருக்கும்; வெட்சிப் பூ நிறம் பெற்று, பெண் முகம் போல அவர்களின் அணிகலன்களையுடைய வாமதேவமுகம் இடத்தோளின் மீது இருக்கும்; பிடரியில் மேற்கை நோக்கியிருக்கிற சத்தியோசாதமுகம், அரசர் முகம் போலப் பால் நிறமாய் இருக்கும்.

விளக்கம்:

சிவனுடைய ஐந்து முகங்கள் வருமாறு; சத்தியோசாதம் - மேற்கு நோக்கிய முகம்; வாமதேவம் - வடக்கு நோக்கிய முகம்; தற்புருடம் - கிழக்கு நோக்கிய முகம்; அகோரம் - தெற்கு நோக்கிய முகம்; ஈசானம் - மேல் நோக்கிய முகம்; சிறுபுறம் - பிடரி. (89)

Koviloor Digital Library

சதாசிவமூர்த்தி

964. திருவுருவந் தெளி பளிங்கு சடாமகுடத் திதழி
சிறுபிறையு மூவைந்து திருநயனம் வலப்பாற்
கரதலத்தில் சத்தியபயஞ்சூல நீண்ட கட்டங்கந்
தமருகமுமற்றையிடக்கரத்தின்
வரதமு மாதுளங்கபாலம் போகி செபமாலை
மணமலிநீலோற்பலமு முடையர்வயதீரெட்
டுருவிரட்டியுறுப்பிரண்டு பதம் பதுமா தனந்தான்
னுறவிருப்பர் சதாசிவர் தத்துவ தவிசினுகந்தே.

திருஉருவம் தெளிபளிங்கு சடாமகுடத்து இதழி
சிறுபிறையும் மூவைந்து திரு நயனம் வலப்பால்
கரதலத்தில் சத்தி அபயம் சூலம் நீண்ட கட்டங்கம்
தமருகமும் மற்றை இடக் கரத்தில்
வரதமும் மாதுளம் கபாலம் போகிசபமாலை
மணம்மலி நீலோற்பலமும் உடையர் வயது ஈர்எட்டு
உருஇரட்டி உறுப்பு இரண்டுபதம் பதும ஆதனம்தான்
உற இருப்பர் சதாசிவர் தத்துவ தவிசில் உகந்து.

உரை:

படிகம் போன்ற திருமேனி; சடைமுடியிற் கொன்றைமாலை; இளம்பிறை; பதினைந்து திருக்கண்கள்; வலப்புறத் திருக்கையில் முத்தலை வேல், அபயம், மாத்திரைக் கோல் - உடுக்கை ஆகியவை. இடப்புறத் திருக்கையில் வரதம், மாதுளம் பழம், பாம்பு செபமாலை, நீலோற்பலம் ஆகியவை; இவர்றோடு பதினாறு வயதும் முப்பத்திரண்டு உறுப்புகளும் இரண்டு திருவடிகளும் உடைய சதாசிவமூர்த்தி, சதாசிவ தத்துவத்தில் தாமரை மலரே இருக்கையாக விரும்பி எழுந்தருளியிருப்பார்.

விளக்கம்:

பளிங்கு - படிகம்; சடாமகுடம் - சடைமுடி; இதழி - கொன்றைப் பூ; மூவைந்து - பதினைந்து; நயனம் - கண்; கரதலம் - கை; சத்தி - வேல்; கட்டங்கம் - மாத்திரைக்கோல்; தமருகம் - உடுக்கை; கபாலம் - தலை ஓடு; போகி - பாம்பு; ஈர் எட்டு - பதினாறு; பதம் - திருவடி; பதுமம் - தாமரை; ஆதனம் - இருக்கை; விசு - பீடம்; உகந்து - விரும்பி. (90)

ஈசான தற்புருட மூர்த்திகள்

965. திருவுருவந்தெளி பளிங்கு திரிநயனம் பிறையுஞ்
செறிசடையர் வலக்கரத்திற் றிரிசூலம் வரதங்

Koviloor Digital Library

கருதுக மற்றைய கரத்திற் செபமாலை அபயங்
காருணிகர்க் கீசானர்க்கவர் தமக்குக்கனிட்டர்
திருவுருவங்கோங்கின்வர் திரிநயனங்கரமுன்
செப்பியதே திருநாமந் தற்புருடதேவர்
வரியரவு மிளம்பிறையுஞ் சடைமுடியின் வைத்தார்
மலரடியை மறவாதார் வல்வினையை மாய்ப்பார்.

திருஉருவம் தெளி பளிங்கு திரிநயனம் பிறையும்
செறிசடையர் வலக்கரத்தில் திரிசூலம் வரதம்
கருதுக மற்றைய கரத்தில் சபமாலை அபயம்
காருணிகர்க்கு ஈசானர்க்கு அவர்தமக்குக் கனிட்டர்
திருஉருவம் கோங்கின் அலர் திரிநயனம் கரம்முன்
செப்பியதே திருநாமம் தற்புருட தேவர்
வரி அரவும் இளம்பிறையும் சடைமுடியில் வைத்தார்
மலர்அடியை மறவாதார் வல்வினையை மாய்ப்பார்.

உரை:

பளிங்குபோன்ற திருமேனியும் மூன்று திருக்கண்களும், திருச்சடைமுடியில் பிறை நிலவும், வலக்கையில் முத்தலை வேல் வரதமும் இடக்கையில் செபமாலை, அபயமும் தரித்து, அருளுடைய ஈசான தேவர் இருப்பார். அவருக்குத் தாழ்ந்திருக்கிற தற்புருடதேவர், கோங்கம் பூப் போன்ற நிறமும் மூன்று திருக்கண்களும், வலக்கையில் சூலம், வரதமும், இடக்கையில் செபமாலை, அபயமும், திருச்சடையிற் பிறை நிலவும் தரித்திருப்பார். இந்த மூர்த்திகளைத் தியானம் புரிந்தவர்கள் வலிய வினைகளைப் போக்கினவர் ஆவர்.

விளக்கம்:

திரிநயனம் - மூன்று கண்கள்; பிறை - நிலவு; திரிசூலம் - முத்தலை வேல்; வரதம் - வரம் அளிப்பது; அபயம் - அடைக்கலம்; காருணிகர் - அருளாளர்; கனிட்டர் - இளையவர். (91)

அகோர மூர்த்தி

966. கரியவுருவெரிய சடை கபாலநிரைமாலை
கராளமுகங்கவிழ்தாடி கண்மூன்று வட்டம்
கரதலங்களொரு நான்குங்கட்டுரைத்தபடியே
காட்டினமுன்னிரு நான்கு கரமுமுள ரென்றே
வெருவியிட மருவலரை வெருட்டிய வுக்கிரத்து
விக்கிரகா கோரமெனவிளம்பு பெயருடையா
ரிருபதமு மொருபொழுது மறவாதே யேத்தி
யெண்ணுமவ ரிடர்வினையை யிடிப்பார்களென்றும்.

Koviloor Digital Library

கரிய உரு எரியசடை கபாலநிரைமாலை
கராள முகம் கவிழ் தாடி கண்மூன்று வட்டம்
கரதலங்கள் ஒருநான்கும் கட்டுரைத்தபடியே
காட்டினமுன் இருநான்கு கரமும் உள்ளார் என்றே
வெருவியிட மருவலரை வெருட்டிய உக்கிரத்து
விக்கிரகம் அகோரம் எனவிளம்பு பெயர் உடையார்
இருபதமும் ஒரு பொழுதும் மறவாதே ஏத்தி
எண்ணும் அவர்இடர் வினையை இடிப்பார்கள் என்றும்.

உரை:

கறுத்த வடிவமும் தீச்சுவாலை போன்ற சடையும், பிரம விஷ்ணுக்களின் தலையோடுகளை ஒழுங்காகக் கோத்து அணிந்த தலைமாலையும், பயங்கர முகமும், கீழ் நோக்கிய தாடியும், வட்ட வடிவமான மூன்று கண்களும், எட்டுக் கைகளும், பகைவர் அஞ்சி ஓட விரட்டும் கொடுமையான திருமேனியு முடைய அகோர தேவரின் இரண்டு திருவடிகளையும் எப்பொழுதும் மறவாமல் வணங்கி எண்ணுகிறவர்கள், துன்பந்தரு தம் பாவங்களை அழித்து விடுவர்.

விளக்கம்:

கபாலம் - தலையோடு; நிரை - வரிசை; கராளம் - பயங்கரம்; வெருவி - அஞ்சி; மருவலர் - பகைவர்; உக்கிரம் - கொடுமை; விக்கிரகம் - திருமேனி; அகோரம் - தெற்கு நோக்கிய முகம்; விளம்புவர் - சொல்லுவர்; இருபதம் - இரண்டு திருவடிகள்; ஏந்தி - துதித்து; இடிப்பார்கள் - அழிப்பார்கள். (92)

வாமதேவ சத்தியோசாத மூர்த்திகள்

967. தேமொழியாளுமையென்னத் திருமுகமுந்தோடுந்
திலதநுதற் சிறப்பு மிருளளகவிதச் செறிவும்
வாமமெனுந் தேவர்க்கு வாய்த்தனவே செம்மை
வடிவுமவர் கரதலங்கண்ணாதி தனில் வகுப்பே
சேமவுருந் திகழ் சங்கஞ் சடாமுடியிற் பிறையுந்
திரிநயனங்கரதலங்கள் செப்பிய முற்படியே
நாமமது சத்தியோசாதமென நவின்ற
நாதற்கு நயந்தவரை நினைக்க வினை நாசம்.

தேம்மொழியாள்உமை என்னத் திருமுகமும் தோடும்
திலதம்நுதல் சிறப்பும் இருள்அளகவிதச் செறிவும்
வாமம் என்னும் தேவர்க்கு வாய்த்தனவே செம்மை
வடிவும் அவர்கரதலம் கண் ஆதிதன்னில் வகுப்பே

Koviloor Digital Library

சேம உருத் திகழ் சங்கம் சடாமுடியில் பிறையும்
திரிநயனம் கரதலங்கள் செப்பிய முன்படியே
நாமம்அது சத்தியோசாதம் என நவின்ற
நாதற்கு நயந்து அவரை நினைக்க வினைநாசம்.

உரை:

தேன் போன்று இனிய மொழிகளைப் பேசும் பார்வதி தேவி என்று சொல்லும்படி அழகிய முகமும், பொட்டு அணிந்த நெற்றியின் சிறப்பும், இருண்டு அடர்ந்த கூந்தலும், சிவந்த மேனியும், சிவந்த நிறக் கண்களும் கைகளும் கொண்டவர் வாமதேவர். இன்பமே வடிவான திருமேனியின் சடை முடியில் நிலவும், மூன்று கண்களும், ஏந்திய சத்தியோ சாத நாதரை விரும்பித் தியானம் செய்தவரின் பாவம் ஒழியும்.

விளக்கம்:

தேம் - தேன்; உமை - பார்வதி; திலதம் - பொட்டு; நுதல் - நெற்றி; அளகம் - கூந்தல்; செறிவு - அடர்த்தி; நாதன் - இறைவன்; வாமதேவர் - வடக்கு நோக்கிய முகத்தினர்; கரதலம் - கை; சத்தியோசாதநாதர் - மேற்கு நோக்கிய முகத்தினர்; நாமம் - பெயர்; நயந்து - விரும்பி; நவின்ற - சொன்ன; (93)

இருதய மூர்த்தி

968. திருவுருவமிருதயர்க்குத் தவளமெனத் தெளிக
சேடித்த உறுப்பனைத்துஞ் செப்பிய முற்படியே
திருவுருவங்கனகமெனச் சிரத்தினுக்குத் தெளிக
சேடித்த வுறுப்பனைத்தும் செப்பிய முற்படியே
திருவுருவஞ் சிந்தூரமெனத் தெளிக சிகைக்குச்
சேடித்த வுறுப்பனைத்தும் செப்பிய முற்படியே
திருவுருவம் வண்டினிறங்கராளமுகங்கவசஞ்
சேடித்த வுறுப்பனைத்துஞ் செப்பிய முற்படியே.

திரு உருவம் இருதயர்க்குத் தவளம் எனத் தெளிக
சேடித்த உறுப்பு அனைத்தும் செப்பியமுற்படியே
திரு உருவம் கனகம் எனச் சிரத்தினுக்குத் தெளிக
சேடித்த உறுப்பு அனைத்தும் செப்பிய முற்படியே
திரு உருவம் சிந்தூரம் எனத் தெளிக சிகைக்குச்
சேடித்த உறுப்பு அனைத்தும் செப்பிய முற்படியே
திரு உருவம் வண்டின் நிறம் கராளமுகம் கவசம்
சேடித்த உறுப்பு அனைத்தும் செப்பிய முற்படியே.

Koviloor Digital Library

உரை:

இருதயரின் உடம்பும் உறுப்புகளும் வெண்மையானவை என்று தெளிந்துடுக. அவருடைய தலை தங்கநிறமுடையது; சிரசிலுள்ள சடை சிவந்த நிறமுள்ளது; கவசம் பொருந்திய பயங்கரமான முகம் கரியநிறம் உடையது என்று தெளிந்திடுக. ஏனையவை முன்னைய மூர்த்திகளுக்குச் சொல்லப்பட்டபடியாம்.

விளக்கம்:

சேடித்தல் - தொழிற்படுதல்; தவளம் - வெண்மை; கனகம் - தங்கம்; சிந்தூரம் - சிவப்பு; சிகை - குடுமி; வண்டின் நிறம் - கருமை; கவசம் - காப்பு (94)

நேத்திர தேவ மூர்த்தி அத்திர மூர்த்திகள்

969. ஒவ்வொன்றே திருமுகமு நேத்திரங்கட் குணரி
லுடலொளியுமிரவி மதியுதாசனனை யொக்கு
மிவ்விரண்டே கரதலமும் வரமபயமவையு
மிவ்விரண்டே விழியுமென வெண்ணிடுக வெழிலார்
செவ்வரத்தந் திருவுருவங்கரதலமீரைந்துந்
திருநயனமொருமூன்றுஞ் சினத்திடித்த குரலு
மிவ்வகையெல்லாமுடையரத்திரரென்றியம்பு
மிவரடியை இருதயத்தி னிருத்தி னிடரிலையே.

ஒவ்வொன்றே திருமுகமும் நேத்திரங்கட்கு உணரில்
உடல் ஒளியும் இரவி மதி உதாசனனை ஒக்கும்
இவ்விரண்டே கரதலமும் வரம் அபயம் அவையும்
இவ்விரண்டே விழியும் என எண்ணிடுக எழிலார்
செவ்வரத்தம் திருஉருவம் கரதலம் ஈர்ஐந்தும்
திருநயனம் ஒருமூன்றும் சினத்து இடித்த குரலும்
இவ்வகை எல்லாம் உடையார் அத்திரர் என்று இயம்பும்
இவர் அடியை இருதயத்தில் இருத்தில்இடர்இல்லை.

உரை:

கண்கள் மூன்றுக்கும் ஒவ்வொரு திருமுகம் உடையவராய், முச்சுடர் போன்ற நிறமும், தனித்தனி இரண்டு திருக்கண்களும், வரதம் அபயம் ஆகிய தனித்தனி இரண்டு கைகளும் உடையவர்களாக நேத்திர தேவர்கள் இருப்பார்கள். பளபளப்பான செவ்வரத்தம் பூப்போன்ற நிறமும், மூன்று திருக்கண்களும், கோபத்தினால் இடி போல முழங்கும் திருவாக்கும், வலப்புறத்தில் கமண்டலம், வேல், சூலம், மழு, பிரம தண்டம், இடப்புறத்தில் வாள், கேடகம், அம்பு, வில், செபமாலை ஆகிய இவற்றைப் பத்துக் கைகளிலும் அத்திரமூர்த்தி ஏந்தியிருப்பார். இவரை நெஞ்சிலே வைத்துத் தியானிப்பவர்களுக்குத் துன்பம் இல்லை.

Koviloor Digital Library

விளக்கம்:

அத்திர மூர்த்தி - விழாக் காலங்களில் வீதியைச் சுற்றிவரும் ஆயுத வடிவான மூர்த்தி; இவ்விரண்டு - தனித்தனி இரண்டு; கமண்டலம் - ஒரு வகை நீர்ப்பாத்திரம்; பிரமதண்டம் - பெரிய வளைதடி; அடி - திருவடி. (95)

சிவனுடைய உருவத் திருமேனிக்கு உரிய காரணம்

970. வாக்குரையாலறிவரியன் வாக்குணர்ந்த மனத்து
மதிப்பரியனிணையிலியனநாதி மலமுத்த
னோக்கி மலநோயாளர் போகவிதநுகர்ந்து
நோயற்றுத் தன்மயத்தை நோக்காதே நோக்க
நீக்கமிலாப் பஞ்சவித நிறத்துருவினிகழ்ந்தா
னிலனீருமவனுருவே நீங்கினனோநிலத்து
மாக்கையிலானாக்கையினை யாதரித்தானணுக்கட்
கழுக்கறுக்க வல்லதறி வாரவனை யாரே.

வாக்கு உரையால் அறிவு அரியன்வாக்கு உணர்ந்த மனத்தும்
மதிப்பு அரியன் இணைஇல்லியன் அநாதிமலமுத்தன்
நோக்கிமல நோயாளர் போகவிதம் நுகர்ந்து
நோய் அற்றுத்தன் மயத்தை நோக்காதே நோக்க
நீக்கம் இல்லாப் பஞ்சவித நிறத்து உருவில் நிகழ்ந்தான்
நிலன் நீரும் அவன் உருவே நீங்கினனோ நிலத்தும்
ஆக்கை இல்லான் ஆக்கையினைஆதரித்தான் அணுக்கட்கு
அழுக்கு அறுக்க அல்லது அறிவார் அவனையார்.

உரை:

சொற்களாலும் அச்சொற்களால் ஆன சிவாகமங்களாலும், பிற சாத்திரங்களை உணர்ந்த மனத்தாலும் அளவிட்டுச் சொல்ல முடியாதவனாய் தனக்கு யாரும் ஒப்பு இல்லாதவனாய், இயல்பாகவே மலங்களிலிருந்து நீங்கியவனாகத் திகழ்கின்ற சிவன், ஆணவம் முதலான மலப்பிணிகளால் கட்டுப்பட்டிருக்கும் ஆன்மாக்கள் தன்னை வழிபட்டு உலக இன்பங்களும் வீடு பேறுமாகிய பலன்களை நுகர்ந்து, ஆணவம் முதலிய மலத்துன்பங்கள் தவிர்ந்து, தன் உள்ளொளியிலே ஒன்றியிருக்க வைக்குமாறு ஐந்து வகை நிறங்கள் உள்ள சதாசிவமூர்த்தியை அதிஷ்டித்து அதில் கலந்திருந்தான். அதுமட்டுமின்றி நிலம், நீர் முதலான பொருள்களிலும் வியாபித்து விளங்குபவனும் ஆவான். தனக்கென ஓர் உருவம் இல்லாத சிவன், உயிர்கள் தன்னை வணங்கிப் பிறப்பு இறப்புகளிலிருந்து நீங்கிவிடுபட வேண்டும் என்பதற்காகவே உருவத் திருமேனியோடு விளங்கு கின்றான். அவ்வாறு உருவத் திருமேனி கொள்ளாவிட்டால், அப்பெருமானை யாராலும் அறிய இயலாது.

Koviloor Digital Library

அதிஷ்டித்தல் - நிலைக்களனாகக் கொண்டிருத்தல் (மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி - என்ற அப்பரின் திருப்பாடலை இதனோடு ஒப்பு நோக்குக.) (96)

வீடு பேற்றை விரும்புவோர் உணர்க

971. சேர்ந்திடுக சதாசிவ நற் றிருவெல்லை வட்டந்
தீவினையுந் தீர்ந்து சதா சிவபுரியைச் செறிவார்
சார்ந்திடுக வப்புரியுட் டமையுணர்ந்தார்தாளைத்
தாமறிவ ரெம்பிணியு மருந்து மெனத் தம்மு
ளோர்ந்தவர்த மேவலினுக் கொருப்படுக விருப்பா
லுயிர்க்குயிராய் நின்றசிவ னுள்ளொருமையுணர்ந்தே
தீர்ந்திடவே பசுபாசமூலமலமதுவுந்
தேசிகனையதிட்டித்துத் திருவருளைப் புரிவன்.

சேர்ந்திடுக சதாசிவநல் திருஎல்லை வட்டம்
தீவினையும் தீர்ந்துசதா சிவபுரியைச் செறிவார்
சார்ந்திடுக அப்புரியுள் தன்மை உணர்ந்தார் தாளைத்
தாம்அறிவர் எம்பிணியும் மருந்தும் ஏனத்தம்முள்
ஓர்ந்து அவர்தம் ஏவலினுக்கு ஒருப்படுக விருப்பால்
உயிர்க்கு உயிராய் நின்ற சிவன்உள் ஒருமை உணர்ந்தே
தீர்ந்திடவே பசுபாசம்மூல மலம்அதுவும்
தேசிகனை அதிட்டித்துத்திரு அருளைப் புரிவன்.

உரை:

காசி, இராமேசுவரம் முதலான சிவப்பதிகளில் ஒன்றை அடைந்து, அத்தலத்தில் அன்றாடக் கடமைகளை நிறைவேற்றிச் சிவாலயத் தொண்டு புரிந்தபடி அங்கேயே தங்கியிருந்தால், தீய பாவங்கள் விலகி, எப்பொழுதும் சிவ உலக இன்பத்தை நுகர்ந்தபடியிருப்பர். அச்சிவப்பதியில் ஏற்கனவேயிருக்கும் சிவஞானியை வணங்கி அவருடன் சேர்ந்து இருந்தால், குழந்தையின் நோய் இன்னது என அறிந்து மருந்து கொடுத்துக் குணப்படுத்தும் தாய் போல, அவர்நம் பக்குவம் அறிந்து உபதேசம் செய்வார் என நம்பி அவருக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்து வந்தால், எல்லா உயிர்களிலும் கலந்திருக்கிற சிவன், மாணாக்கனுடைய ஒருமைப்பட்ட உணர்வை அறிந்து, ஆசானை நிலைக்களணாகக் கொண்டு அவனுக்கு அருள் செய்வான். அதனால், மாணாக்கன் பாசங்களிலிருந்து விடுபட்டு வீடு பேறு பெறுவான்.

(சதாசிவம் என்பது, அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கவடிவில் அருள்புரியும் சிவமூர்த்தி.) அதிட்டித்தல் - நிலைக்களனாகக் கொள்ளல். (97)

Koviloor Digital Library

அருள் பெறும் முறைமை

972. எழுதுகொடியிடை மடவாரிணை விழிவேலெறியு
மிளவுருவந் தளருருவும் வேறோவன் றென்றே
யழுததனைப் பரிப்பதனுக் கருவருத்தே யழுங்கி
யநாதிமல முத்தனழுக் கறுப்பானென்றடைந்தா
ரொழுகுமவ நவவாய் தலூனுடலினுதியா
ரொண்குரவனுபதேசத் துற்றதுல லோக
முழுதுலகு மொடுங்கிடுநாண் மூலமலந்தனிலு
முத்தருமாயநாதிமல முத்தனடிப் பிரியார்.

எழுது கொடிஇடைமடவார் இணைவிழி வேல்எறியும்
இளஉருவம் தளர்உருவும் வேறோ அன்று என்றே
அழுது அதனைப் பரிப்பதனுக்கு அருவருத்தே அழுங்கி
அநாதிமலமுத்தன் அழுக்கு அறுப்பான் என்று அடைந்தார்
ஒழுகும்அவம்நவம் வாய்தல் ஊன் உடலில் உதியார்
ஒண்குரவன் உபதேசத்து உற்ற அதுலலோகம்
முழுதுஉலகும் ஒடுங்கிடும் நாள்மூலமலம் தன்னிலும்
முத்தருமாய் அநாதிமலமுத்தன் அடிப்பிரியார்.

உரை:

கொடிபோல எழுதப்பட்டிருக்கிற இடுப்பையுடைய மகளிரின் இரண்டு விழி அம்புகளால் துன்பப்பட்டிருக்கிற இளமையும் முதிர்ச்சியும் ஒரு தன்மையனவே அவ்விரண்டினாலும் நலமில்லை எனக் கருதி, தளர்ச்சியும் வளர்ச்சியுமாகிய மாற்றத்தையுடைய உடம்பைத் தாங்குவதற்குச் சிறைக் கைதி சிறைக்கூடத்தில் வெறுப்படைவது போல் அதனை வெறுத்து அழுது வருந்தி, இத்துயரைப் போக்குபவர் யார் என்று தேடி, உயிர்களின் ஆணவம் முதலிய அழுக்குகளை, இயல்பாகவே என்றும் மலங்களிலிருந்து விடுபட்டிருக்குஞ் சிவனே அகற்றுவான் எனக் கருதி அடைந்தவர்கள், ஒன்பது துளைகளையுடைய உடலைப் பொருந்தார்கள்; ஆசிரியர் உபதேசித்த முறையில் மனதைப் பரம் பொருளோடு ஒன்றவைத்து, ஒப்பற்ற மேல் உலகைப் பொருந்தி, ஊழி முடிவில் ஆணவ அழுக்கு நீங்கி சிவபிரானுடைய திருவடிகளில் ஒன்றியிருப்பர்.

விளக்கம்:

முத்தன் - பாசங்களிலிருந்து விடுபட்டவன்; **அநாதிமலமுத்தன்** - சிவன்; **உலகு ஒடுங்கும்நாள்** - ஊழி; **பரித்தல்** - தாங்குதல்; **குரவன்** - ஆசான். (98)

Koviloor Digital Library

வீடு பேற்றுக்குத்தகுதியுடையவரின் சிறப்பு

973. வாழ்கையினை மகிழ்ந்தாலும் வாழ்க்கையவமதித்து
வனத்துவரை தனிற்கனிகாய்மூலமிவை மாந்தி
யாக்கையினை யொறுத்தாலு மாக்கையினை யாக்கி
யளித்தழிக்கு மமலனுளனவன் பெயரே தாயே
நீக்கமறவுயிர்க்குயிராய் நிற்பனவனெனவே
நினைந்தொருமையுறநின்றார் மலமனைத்துநீங்க
நோக்கறவேநோக்குவர்களுளத் தொளித்துநின்ற
நுண்ணியனை யவரல்லாருடறோறு நுழைவார்.

வாழ்க்கையினை மகிழ்ந்தாலும் வாழ்க்கை அவமதித்து
வனத்துவரை தன்னில் கனிகாய்மூலம் இவைமாந்தி
யாக்கையினை ஒறுத்தாலும் ஆக்கையினை ஆக்கி
அளித்து அழிக்கும் அமலன்உளன் அவன் பெயரே தாயே
நீக்கம் அறஉயிர்க்கு உயிராய்நிற்பன் அவன் எனவே
நினைந்து ஒருமைஉற நின்றார் மலம்அனைத்தும் நீங்க
நோக்கு அறவே நோக்குவர்கள் உள்ளத்து ஒளித்து நின்ற
நுண்ணியனை அவர்அல்லார் உடல்தோறும் நுழைவார்.

உரை:

இல்லறவாழ்வில் மகிழ்ந்து வாழ்ந்தாலும், அதனை வெறுத்துத் துறவியாகிக் காட்டிலுள்ள மலையின் மீது பழம் காய் கிழங்குகளை உண்டு உடலை வாட்டினாலும், உடம்பைப் படைத்துக் காத்து, அழிக்கும் கடவுள் ஒருவன் தாய் போல உள்ளான்; அவன் எல்லா உடம்புகளிலும் உயிர்க்ககு உயிராய்ப் பிரிவு இல்லாமல் கலந்திருக்கிறான். அவனை எப்போதும் மன ஒருமையுடன் கருதி நிற்பவர் சீவன் முக்தர்கள். அவர்கள் மலங்களிலிருந்து நீங்கி, பக்குவம் இல்லாதவர்க்குப் புலப்படாமல் மறைந்து நிற்கும் சிவனை, தியான நிலையில் தம் உள்ளே கண்டு மகிழ்வர். இவ்வாறு காணும் தகுதியில்லாத பிறர், பிறந்தும் இறந்தும் திரிவர்.

விளக்கம்:

''வீட்டிலிருக்கிலென் காட்டிலே போகிலென்
கூட்டில்வாள் சாத்திநின் றுந்தீபற''

- திருவுந்தியார்.

வரை - மலை; மூலம் - கிழங்கு; ஒறுத்தல் - வாட்டுதல்; அளித்து - காத்து; அமலன் - இறைவன்; நீக்கம்அற - பிரிவு இல்லாமல்; உடல் தோறும் நுழைவர் - பிறந்தும் இறந்தும் திரிவர். (99)

Koviloor Digital Library

மேலான பரிகாரம்

974. பரிகாரந்தீவினைக்குப் பலவிதமே யவற்றும்
பரமான பரிகாரம் பரமசிவஞான
மிரவியொளி யிருளறுக்கை யெற்றற்றே பாவ
மெனைத் தனைத்துமஃதறுக்கை யிருண்மலத்தின் வலியு
மொருவுமதன்முன் பாவவிதமொழிகை வியப்போ
வுயிர்க்குயிரா யிரண்டறவே யொருவாதே நிற்கும்
பரமசிவன் பத்தினியைப் பாராதே பார்க்கும்
தன்பதிக்கும் பார்ப்பிக்கு மதுபரமஞானம்.

பரிகாரம் தீவினைக்குப் பலவிதமே அவற்றுள்
பரமான பரிகாரம் பரமசிவஞானம்
இரவி ஒளிஇருள் அறுக்கை எற்று அற்றே பாவம்
எனைத்து அனைத்தும் அஃதுஅறுக்கை இருள் மலத்தின் வலியும்
ஒருவும் அதன்முன் பாவவிதம் ஒழிகை வியப்போ
உயிர்க்குஉயிராய் இரண்டு அறவேஒருவாதே நிற்கும்
பரமசிவன் பத்தினியைப் பாராதே பார்க்கத்
தன்பதிக்கும் பார்ப்பிக்கும் அதுபரமஞானம்.

உரை:

உயிர்கள் செய்த பாவம் விலகுதற்கு உரிய பரிகாரம் பலவகை ஆகும். அவற்றுள் உயரிய பரிகாரம் சிவஞானம் பெறுதல். உலக இருளைக் கதிரவன் ஒளி போக்குவது போல, பாவங்கள் அனைத்தும் சிவஞானத்தாற் போக்கப்படும். சிவஞானனத்தின் முன் பாவங்கள் வலுவற்று அகலுவது வியப்பாகாது. சிவஞானத்தின் முன் ஆணவம் முதலிய மலங்களும் தம் ஆற்றல் ஒடுங்கி நிற்கும். எல்லா உயிர்களிலும் நீங்காமல் கலந்திருக்கும் சிவசத்தியைத் தம் நெஞ்சில் உள் விழியால் பார்த்தால், அந்தச் சத்தியே தன் பதியாகிய சிவனை எப்பொழுதும் சிந்திக்கும்படி செய்யும். அதுவே மிக உயரிய சிவஞானம் ஆகும்.

விளக்கம்:

பரிகாரம் - கழுவாய்; கேடுநீங்கும் வழி; **பரமான** - மேலான; **சிவஞானம்** - பதியாகிய சிவனைத் திருவருளை கண்ணாகக் காணும் அறிவு; **இரவி** - ஞாயிறு; **ஒருவும்** - நீங்கும்; **பரமசிவன்பத்தினி** - சிவை, சிவசக்தி. **பரமஞானம்** - மேலான மெய்யறிவு. (100)

Koviloor Digital Library

பரிகாரம் செய்யப்பெறுவதற்குத் தக்கவரும் தகாதவரும்

975. பரிகாரவியலிதனைப் பாவவினைக் கஞ்சிப்
பழிக்குமழிந்திவையிரண்டும் பாற்றியிடப் பணிந்து
குருபாத மலர் தலையிற் கொண்டழுவான் குறிப்பைக்
குறித்தறிந்தாண்டாறிரண்டுட் குரவனுளங் குழைந்தே
பரிவுறவேயவன் றனக்கே பகர்ந்திடுக வஞ்சாப்
பாதகர்க்குப் பகரற்க பகர்ந்தானேயாகி
லெரிவாய நிரயத்திலிருவரும் வீழ்வாரே
யெவராவர் துணையமலனுரையிலங்கித்தார்க்கே.

பரிகாரஇயல் இதனைப்பாவவினைக்கு அஞ்சிப்
பழிக்கும் அழிந்துஇவை இரண்டும் பாற்றியிடப் பணிந்து
குருபாதமலர் தலையில் கொண்டு அழுவான் குறிப்பைக்
குறித்து அறிந்து ஆண்டு ஆறுஇரண்டுள் குரவன் உள்ளம் குழைந்த
பரிவுஉறவே அவன் தனக்கே பகர்ந்திடுக அஞ்சாப்
பாதகர்க்குப் பகரற்க பகர்ந்தானே ஆகில்
எரிவாய நிரயத்தில் இருவரும் வீழ்வாரே
எவர்ஆவர் துணைஅமலன் உரை இலங்கித்தார்க்கு.

உரை:

இப்பரிகார இயலைக் கவனமாக ஆராய்ந்து, பாவி என்று பிறர் கூறும் வசைக்குப் பயந்து வருந்தி, ஆசான் திருவடியில் உடலின் எட்டு உறுப்புகளும் தரையில் படிய வணங்கி அழுத மாணாக்கனின் உள்ள நிலைமையைப் பன்னிரண்டு ஆண்டுகள் பரிசோதித்து, அவன் தகுதியுள்ளவனாக இருந்தால், அவனுக்குத் தீக்கை அளித்துப் பாவநீக்கத்துக்கு உரிய பரிகாரம் கூறுக; இத்தகைய தகுதி இல்லாத பாதகனுக்குப் பரிகாரம் கூறாது ஒழிக. பக்குவம் இல்லாதவனுக்குப் பரிகாரம் சொன்னால், சொன்ன ஆசானும் கேட்ட மாணவனும் எரியும் நரகில் வீழ்ந்து கிடப்பார்கள்.

விளக்கம்:

பாற்றியிட – அகற்ற; குறிப்பை – மனநிலையை; பாதகர் – பாவியர்; அமலன் – இறைவன்; இலங்கித்தார் – மீறினவர்; லங்கனம் – மீறல்; பரிவு – அன்பு. எரிவாய நிரயம் – எரியும் தீக்குழி; ஆறுஇரண்டு – பன்னிரண்டு. (101)

Koviloor Digital Library

கந்தன் துதி

976. என்று பரிகார விதமாசற விசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்று புலந்தினையும் வெய்யவினைநைய
நின்றமுனியன்றுணர நிர்க்குணனினைந்தே.

என்றுபரிகார விதம் மாசுஅற இசைத்தான்
குன்றவர்மடக்கொடி தனக்கு அருள் கொடுத்தான்
வென்று புலன் ஐந்தினையும் வெய்யவினை நைய
நின்றமுனி அன்று உணரநிர்க்குணன் நினைந்து.

உரை:

மலையில் வாழும் வேடுவர் தலைவன் நம்பிராசன் திருமகளான இளமையும் மென்மையான உடலமைப்பும் கொண்ட வள்ளி நாயகிக்கு அருள் செய்த தூய கந்தப் பெருமான், கொடிய தீவினை கெடுமாறு சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து புலன்களையும் அடக்கிய அகத்தியன் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணி, பரிகார வகைகளைக் குற்றங்கள் அகலும்படி உரைத்தான்.

விளக்கம்:

மடக்கொடி - மடம் + கொடி. இளமையும் கொடி போன்று ஒல்லியான உடலமைப்பும் கொண்ட வள்ளிநாயகி.

வெய்ய - கொடிய; நைய - கெட; நிர்க் குணன் - கடவுள். (102)

சிவத்துதி

977. அன்னியம்பசுபாச மெனப்பனே
யநாதியே மலமற்ற வனப்பனே
கன்னிபாசங் கலந்தகணவனே
கருதுமெய்யடிதங் கணவனே
முன்னமேபுர மூன்றையுமட்டனே
முத்தர்கண்டு முகந்துணுமட்டனே
தென்னன்றேவியுநின்கண்சிறப்பரே
செறிகிலார்கள் பிறந்துஞ் சிறப்பரே.

அன்னியம் பசுபாசம்என் அப்பனே
அநாதியே மலம்அற்ற வனப்பனே
கன்னிபாசம் கலந்தகண் அவனே
கருதும்மெய் அடியார்தம் கணவனே

Koviloor Digital Library

முன்னமேபுரம் மூன்றையும் அட்டனே
முக்தர்கண்டு முகந்து உண்ணும் அட்டனே
தென்னன்தேவியும் நின்கண் சிறப்பரே
செறிகிலார்கள் பிறந்தும் சிறப்பர்.

உரை:

பசுவுக்கும் பாசத்துக்கும் இலக்கணனாக விளங்கும் தந்தையே! இயல்பாகவே என்றும் ஆணவம் முதலான அழுக்கு இல்லாத அழகனே! உமையம்மைக்குத் தன் திருமேனியின் இடப்பக்கம் தந்த கண் போன்றவனே! மெய்யடியார்கள் விரும்பும் தலைவனே! முன்பு முப்புரத்து அசுரர்களை அழித்தவனே! வீடு பேற்றுக்குத் தகுதியுடையவர் சுவைக்கும் தேன் போன்றவனே! பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியார் நின் அருளால் முத்தி பெற்றாரே! உன் திருவடித் தாமரைகளைப் பொருந்தாதவர்கள் பிறந்தும் சிறப்பு இல்லாதவர்களே!

விளக்கம்:

பசுவுக்கும் பாசத்துக்கும் பொருட்டன்மையில் வேறானவன் சிவன். இச்செய்யுள் முதற் கூற்றுக்கு அப்படியுமுரைக்கலாம். ஆனால் முன் உரைகாரர் பசுவுக்கும் பாசத்துக்கும் இல்ககணனாயிருக்கப்பட்டவன் என உரைத்துள்ளார். சிவனில்லாமல் பசுவும் பாசமும் விளக்கமுறா என்பது அவர் கருத்தாகத் தெரிகிறது. **அப்பன்** - தந்தை; **வனப்பன்** - அழகன்; **கன்னி** - பார்வதி; **கண் அவனே** - கண்களைப் போன்றவன்; **அட்டவன்** - எரித்தவன்; **உண்ணும் அட்டனே** - சுவைத்தவன்; **செறிகிலார்** - பொருந்தாதவர்; **தென்னன் தேவி** - கூன்பாண்டியன் மனைவியான மங்கையர்க்கரசி. **மட்டு** - தேன். (103)

சிவத்துதி

978. நடலை வாழ்வெனை நீக்கிய நம்பனே
நயந்து பார்த்தற்களித்த சொன்னம்பனே
சுடலை நீறணி சுந்தரவேடனே
சுரத்து நாய்புடைசூழச் செல் வேடனே
கடலினஞ்சினையுண்ட களத்தனே
கரிசர் நெஞ்சி னொளித்த களத்தனே
யுடலினற் பூணெனப் பாம்புமுடையனே
யுழுவையின்னுரித் தோலுமுடையனே.

நடலை வாழ்வு எனை நீக்கிய நம்பனே
நயந்து பார்த்தனுக்கு அளித்த சொல் அம்பனே
சுடலைநீறு அணிசுந்தர வேடனே
சுரத்து நாய்புடை சூழச்செல் வேடனே

Koviloor Digital Library

கடலின் நஞ்சினை உண்ட களத்தனே
கரிசர் நெஞ்சில் ஒளித்த கள்ளத்தனே
உடலில்நல் பூண்எனப் பாம்பும் உடையனே
உழுவையின் உரித்தோலும் உடையனே.

உரை:

என் துன்ப வாழ்வை நீக்கிய சிவனே! அருச்சுனனுக்கு விருப்பத்தோடு பாசுபத அஸ்திரத்தைக் கொடுத்தவனே! சுடுகாட்டுச் சாம்பலைத் தரித்த அழகிய கோலம் உடையவனே! காட்டுப் பன்றியின் தாக்குதலிலிருந்து பார்த்தனைப் பாதுகாக்கப் பாலை நிலத்தில் நாய்கள் தொடர வேடனாகச் சென்றவனே! கடல் நஞ்சைக் கழுத்தில் அடக்கிக் கொண்டவனே! பாவியர் கண்ணுக்குத் தோன்றாத கள்வனே! உடம்பில் நாகப் பாம்பை அணிகலனாக அணிந்தவனே! புலித்தோலை உடையாக உடையவனே!

விளக்கம்:

நடலை - துன்பம்; **நம்பன்** - சிவன்; **நயந்து** - விரும்பு; **சொல்அம்பு** - பாசுபத அத்திரம்; **பார்த்தன்** - அருச்சுனன்; **சுடலை** - சுடுகாடு; **சுரம்** - பாலைநிலம்; **களம்** - கழுத்து; **கரிசர்** - பாவி; **கள்ளத்தன்** - கள்வன்; **பூண்** - அணிகலன்; **உழுவை** - புலி. அம்புவேறு அஸ்திரம் வேறு. (104)

குமரன் துதி

979. முருகனே யெனக் கருமுனாசறம்
பருகுபாலினும் பெருகுமின்பமே.

முருகனே என்னக் கருமுன்ஆசுஅறும்
பருகும் பாலினும் பெருகும் இன்பம்.

உரை:

முருகனே! என்று அன்போடு அழைக்கும் அடியவருக்கு அது சுவைமிகுந்த பாலைவிட மிகுந்த இன்பத்தை உண்டாக்கும். மேலும், பிறவிக்குக் காரணமான ஆணவ அழுக்கும் அகலும்.

விளக்கம்:

ஆசு - குற்றம், அழுக்கு; **என்ன** - என்று அழைக்க; **கரு** - பிறப்பு; **அறும்** - நீங்கும்; **கருமுன்** - பிறப்புக்குமுன்னிலைக் காரணமான ஆணவம். (105)

Koviloor Digital Library

அகத்தியர் துதி

980. பொதியமலைக் கதிபனே யெனக்
கதியுமாமுடற் பொதியும் மாயுமே.

பொதியமலைக்கு அதிபனே என்னக்
கதியும்ஆம் உடற்பொதியும் மாயும்.

உரை:

பொதியமலைக்குத் தலைவனே! என்று அன்போடு அகத்தியரை வணங்குகிறவர் நற்கதி பெறுவார்; அவருடைய உடற்பொதிசுமக்கும் பிறவியும் ஒழியும்.

விளக்கம்:

கதி - நற்கதி, சிவகதி; உடற்பொதி - பிறவி; மாயும் - அழியும். (106)

Koviloor Digital Library

பன்னிரண்டாவது

கோபுர இயல்

கோபுரம் என்பது ஒரு பெரிய திருக்கோயிலின் நுழை வாயிலின் மேல் நிமிர்ந்தெழுந்து நிற்குஞ் சிற்ப சகிதமான கட்டுமானம். ஆனால் இங்குக் கோபுரம் என்பது, சிவ உலகில் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலின் முடிவிடத்தில் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்ற ஐந்து பசுக்களும் தங்கி நிற்கும் கோபுரம் ஆதல் இந்த இயலின் 91-ஆம் பாடலால் தெரிகிறது. கோ என்பது பசு; புரம் என்பது அது தங்கி நிற்கும் இடம். ஆகவே, கோபுரம் என்பது, பசுப்புரை அல்லது பசுத்தொழுவுக்கும் பொருந்தும் நயம் பற்றி இங்கு பசுத் தொழுவம் அப்பெயராற் குறிக்கப்பட்டிருக்கிறது. (இன்று பசுத்தொழுவங்களுக்கு இடையர் குலத்தைக் குறிக்கும் கோகுலம் என்ற பெயரை இட்டு வழங்குதல் தவறு. அது கோபுரம் என மாற்றம் பெற வேண்டும்.)

அகத்தியரின் வினா

981. ஆக்குவது மழிப்பதுவு மறத்தினையு மறத்தினையு
மாக்கடரு மைந்தெனவே யறைந்தனைமுன்னறு முகவ
வாக்களவை நிலவு மெலையருள் விரியவெனக்கறிய
வாக்கமுற வனைத்துயிர்க்கு மவற்றாலும் அலல் அற ஏ.

ஆக்குவதும் அழிப்பதுவும் அறத்தினையும் மறத்தினையும்
ஆக்கள்தரும் ஐந்து எனவே அறைந்தனைமுன் அறுமுகவ
ஆக்கள் அவைநிலவும் எல்லை அருள்விரிய எனக்கு அறிய
ஆக்கம்உற அனைத்து உயிர்க்கும் அவற்றாலும் அல்லல் அற.

உரை:

ஆறுமுகனே, அறத்தை வளர்ப்பதும் பாவத்தை அறுப்பதும் பசுக்கள் தரும் பால் முதல் சாணம் ஈறாக உள்ள ஐந்து பொருள்களுமே என்று பரிகார இயலில் முன்பு உரைத்தாய்; அப்பசுக்கள் நிற்கும் இடத்தை எனக்கு விளங்குமாறு அருள்புரிக. எல்லா உயிர்களும் இப்பசுக்களின் உருவ அமைப்பை உள்ளபடி உணர்ந்து, அவற்றைக்காத்து, அவை தரும் பால், தயிர், நெய், மூத்திரம், சாணம் என்ற ஐந்து பொருள்களின் கலவையை இறைவன் திருமேனிக்கு முழுக்காட்டி,

Koviloor Digital Library

அப்புண்ணியப்பயனால் உயிர்கள் பாவங்களிலிருந்து விலகி நலம் பெறுவதற்காக என்று அறிக.

விளக்கம்:

அறம் - புண்ணியம்; மறம் - பாவம்; ஆக்கள் - பசுக்கள்; எல்லை - இடம்; ஆக்கம் - செல்வம்; அல்லல் - துன்பம். அது அலல் எனத் தொக்கு நின்றது. (1)

அறுமுகவனின் விடை

982. என்றிசைத்த முனிவரனுக் கெழிலுடைய குமரதரன்
நன்றறைவ மெனநவின்று நாதனடித் தேசுடனே
யொன்றிவிழித்துலகனைத்து முரைத்தவற்றுட் சிவபுரத்து
ணின்றிழிந்து நிலத்துறையுமெனும் கதையு நிகழ்த்திடுவாம்.

என்று இசைத்த முனிவரனுக்கு எழில்உடைய குமரதரன்
நன்று அறைவம் என நவின்று நாதன் அடித் தேசுடனே
ஒன்றி விழித்து உலகு அனைத்தும் உரைத்த அவற்றுள் சிவபுரத்துள்
நின்று இழிந்து நிலத்து உறையும் என்னும் கதையும் நிகழ்த்திடுவாம்.

உரை:

என்று சொன்ன அகத்தியருக்கு, நீ வேண்டிக் கொண்டபடியே உனக்கு அதனை நன்றாக விளக்குகிறோம் என்று இளங்குமரப் பெருமான், மோன நிலையில் ஆழ்ந்து இருந்து, விழித்து, சிவஉலகில் சிவபிரான் சந்நிதியில் இருக்கும் எருதின் இனமான காமதேனு முதலிய பசுக்கள் சிவஉலகில் இருந்து மண்ணுலகை அடைந்து நிற்கும் சொரூபத்தை உனக்கு உணர்த்துவோம் என்றார்.

விளக்கம்:

பாற்கடலில் ஐந்து வகைப் பசுக்கள் தோன்றின என்பது புராணங்கள் கூறுகின்றன. அவற்றைப் பின்பற்றித் தலபுராணங்களும் பாற்கடல், காமதேனு முதலியவை பற்றிய கதைகளைக் கூறுகின்றன. திருமுறைகளும் பாற்கடல், அதில் எழுந்த நஞ்சு, அந்த நஞ்சைச் சிவபிரான் கழுத்தில் அடக்கியது போன்ற புராணச் செய்திகளைக் கூறுகின்றன. மேலும், தயிர்க்கடல், நெய்க்கடல், கரும்புச்சாறு நிரம்பிய கடல், தேன் கடல், நன்னீர்க் கடல் ஆகியவை இருப்பதாகவும் புராணங்கள் கூறுகின்றன. குமரதரன் - குமரருள் இளையவன். தர, ஒப்பீட்டுயர்வு காட்டும் பின்னொட்டு (comparative suffix) மோனநிலைக்குயர்வு இளங்குமரன் ஆதல். (2)

Koviloor Digital Library

அணு முதலியவை

983. இன்னுழையுங் கதிரணு வெட்டெட்டிணங்கிற் கசாக்கிரகம்
சொன்னவிதனிருநான்கு மிலீகையெனத் துணிந்திடுக
இன்னவிலீகையினாய விருநான்கேயூகையென
வுன்னிடுக யூகையி னெட்டியவையென வுன்னுகவே.

இல்நுழையும் கதிர்அணு எட்டுஎட்டு இணங்கில் கசாக் கிரகம்
சொன்னவிதம் இருநான்கும் இலீகை எனத் துணிந்திடுக
இன்னவில் ஈகையின் ஆய இருநான்கேயூகை என
உன்னிடுக யூகையில் எட்டு யவை என்ன உன்னுக.

உரை:

வீட்டில் நுழையும் கதிரவன் கிரணங்களால் உண்டாகிய துகளாகிய அணு பதினாறு கொண்டது சிறு பிள்ளையின் மயிர் நுனியாகிய கசாக்கிரகம்; கசாக்கிரகம் எட்டுக் கொண்டது இலீக்கை; இலீக்கை எட்டுக் கொண்டது யூகை; யூகை எட்டுக் கொண்டது யவை.

விளக்கம்:

இப்பாடலில் குறிக்கப்படுகிற அளவைமுறை, முன்னையோருடையது. கசாக்கிரகம் - மயிரின் நுனி, சிறு அளவை; இலீகை - இலீக்கை, ஈர்; யூகை - பேன்; யவை - வாற்கோதுமை, அங்குலத்தின் எட்டில் ஒரு பகுதி. (3)

சிறுநீட்டல் அளவை

984. இன்னயவையிரு நான்கு மங்குலமென் றெண்ணிடுக
சொன்ன விதம்அறு நான்கு முழமெனவே துணிந்திடுக
பன்னுமுழமொரு நான்குந் தனுவெனவே பார்த்திடுக
மன்னுதனு விரண்டினையோர் தண்டெனவேமதிக்கவரோ.

இன்னயவை இருநான்கும் அங்குலம் என்று எண்ணிடுக
சொன்னவிதம் அறுநான்கும் முழம்எனவே துணிந்திடுக
பன்னும்முழம் ஒரு நான்கும் தனு எனவே பார்த்திடுக
மன்னும்தனு இரண்டினை ஓர் தண்டு எனவே மதிக்க அரோ.

உரை:

இந்தக் கோதுமை எட்டின் நீளம் கொண்டது ஓர் அங்குலம் என்று கருதுக; முன்னோர் சொன்னபடி இருபத்து நான்கு அங்குல நீளம் உடையது ஒருமுழம் என

Koviloor Digital Library

உறுதி கொள்க; சொல்லப்படுகிற நான்கு முழநீளம் உள்ளது ஒரு தனு; நிலை பெறுகிற தனு இருமடங்கு உடையது ஒரு தண்டு என அளவிடுக.

விளக்கம்:

இங்குக் குறிப்பிடப்பட்டவை பழங்கால அளவைமுறை. **யவை** - கோதுமை அல்லது நெல்; **அங்குலம்** - ஓர் அடியில் பன்னிரண்டில் ஒரு பகுதி. **முழம்** - பதினெட்டு அங்குலம் அல்லது ஒன்றரை நீளம். **தனு** - நான்கு முழம் அல்லது ஆறடி நீளம்; **த்ண்டு** - இரண்டு தனு அல்லது பன்னிரண்டு அடி நீளம். **அறுநான்கு** - இருபத்து நான்கு; **அரோ** - அசை. (4)

நீட்டலளவை - தொடர்ச்சி

985. தண்டமிரண்டாயிரத்தைக் குரோச மெனத் தெளிந்திடுக
கொண்ட விருகுரோசத்தைக் கெவியூதி யெனக் கொள்க
மண்டிய நாற்குரோசத்தை யோசனையா மதிக்க மணி
னண்டமொன்றிற் சதகோடி யோசனை வித்தாரமுமே.

தண்டம் இரண்டாயிரத்தைக் குரோசம் எனத் தெளிந்திடுக
கொண்ட இரு குரோசத்தைக் கெவியூதி எனக் கொள்க
மண்டியநால்குரோசத்தை யோசனையாய் மதிக்கமண்ணில்
அண்டம் ஒன்றில் சதகோடியோசனை வித்தாரமும்.

உரை:

தண்டம் இரண்டாயிரம் கொண்டது ஒரு குரோசம் என்று தெளிந்திடுக; இரண்டு குரோசம் கொண்டது ஒரு கெவியூதி என்று கொள்க; நெருங்கிய நான்கு குரோசம், ஒரு யோசனை என அளவிடுக; பூமியில் ஓர் அண்டத்தின் விரிவு நூறு கோடி யோசனை தூரம்.

விளக்கம்:

தண்டம் - பன்னிரண்டு அடி நீளமுள்ள அளவு கோல்.

குரோசம் - கூப்பிடு தூரம் (க்ரோஷ் - கூப்பிடு சமஸ்கிருதம்)

கெவியூதி - அரைக்காதம்; **யோசனை** - எட்டு மைல் தொலைவு;

தண்டம் - குரோசம், கெவியூதி, யோசனை இவை பழங்கால நீட்டலளவை. (5)

அண்டங்களின் விவரம்

986. மண்டனக் காயிரங்கோடி யண்டமுள வாரிக்கு
மெண்டொகையிற் பேதமிலை விரிவுயர்ச்சி யேறியுறு

Koviloor Digital Library

மண்டனிலும் தசகுணிதம் வாரிக்கு வாரியினு
மொண்டழற்கு முரைத்தமுறை பிரகிருதி முடிவுமுறும்.

மண்தனக்கு ஆயிரம் கோடி அண்டம் உள வாரிக்கு
எண்தொகையில் பேதம்இல்லை விரிவு உயர்ச்சி ஏறிஉறும்
மண்தன்னிலும் தச குணிதம் வாரிக்கு வாரியினும்
ஒண் தழற்கும் உரைத்தமுறை பிரகிருதி முடிவும் உறும்.

உரை:

மண் தத்துவத்திற்கு ஆயிரம் கோடி உலகுகள் உள்ளன; மண் தத்துவத்தைவிட நீர்த் தத்துவம் பத்து மடங்கு விரிவும் உயர்ச்சியும் உடையது; நீர்த்தத்துவத்தை விட, நெருப்பு முதல் இயற்கை வரையுள்ள உலகுகள் விரிவும் உயர்ச்சியுமாக அதிகப்படும்.

விளக்கம்:

இப்பாடலில் கூறப்படுகிற மண் தத்துவம், நீர்த்தத்துவம், நெருப்புத் தத்துவம் ஆகியவை சிவாகம நூல்களை ஆதாரமாகக் கொண்டவை. இத்தத்துவங்களின் பெயர்களைக் கூறும் *'தத்துவக் கட்டளை'* போன்ற நூல்கள் தமிழில் உள்ளன. ஆனால் ஒவ்வொரு தத்துவத்தின் கூறுகளையும் அவற்றின் இயல்புகளையும், பயன்களையும் விளக்கமாகக் கூறும் நூல்கள் சிவாகம வழிவந்த தமிழ்ச் சித்தாந்த சாஸ்திரங்களிலுமுண்டு. இன்றைய அறிவியலாளர்கள், மண், நீர், நெருப்பு, காற்று, விண் என்ற ஐந்தையும் *'பவுதிகம்'* என்ற தலைப்பில் ஆராய்ந்து பல நூல்களை ஆங்கிலத்திலும், பிரெஞ்சு, செர்மன் முதலிய மொழிகளில் எழுதி வெளியிடுகிறார்கள். அவற்றின் மொழி பெயர்ப்புகள் தமிழ் உள்பட எல்லா மொழிகளிலும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அவற்றை எல்லா மொழியினரும் படித்துப் பயனடைவதாக எண்ணுகிறார்கள். (6)

அண்டங்கள் - தொடர்ச்சி

987. குணித சதமராகத்திற் கூடுமுனையது தனினுங்
குணித சதம் வித்தைக்குக் கூடு முனைய ராகத்துங்
குணித சதம் நியதிக்குக் கூடுமுனை வித்தையினுங்
குணித சதங் காலத்து நியதியினும் கூடிடுமே.

குணிதசதம் அராகத்தில் கூடும் முன்னையது தன்னிலும்
குணிதசதம் வித்தைக்குக் கூடும் முன்னைய அராகத்தும்
குணிதசதம் நியதிக்குக் கூடும் முன்னை வித்தையினும்
குணிதசதம் காலத்து நியதியினும் கூடிடும்.

Koviloor Digital Library

உரை:

முன்சொன்ன பிரகிருதியை விட நூறு மடங்கு விரிவும் உயர்ச்சியும் அதிகம் உடையது அராக தத்துவம். அராக தத்துவத்தைப் பார்க்கிலும் நூறுமடங்கு விரிவும் உயர்ச்சியும் அதிகமாக உள்ளது வித்தியா தத்துவம்; வித்தியா தத்துவத்தைப் பார்க்கிலும் நூறு பங்கு விரிவும் உயர்ச்சியும் அதிகமாக உடையது நியதி தத்துவம்; நியதி தத்துவத்தைப் பார்க்கிலும் நூறுமடங்கு விரிவும் உயர்ச்சியும் அதிகம் உள்ளது கால தத்துவம்.

விளக்கம்:

அராகம், வித்தை, நியதி, காலம் ஆகிய தத்துவங்களைச் சுத்த வித்தியா தத்துவங்கள் என்று சொல்லுவர். இவற்றுள் காலம் என்பது தமிழ்ச் சொல். ஏனையவை சமஸ்கிருதச் சொற்கள். அவற்றின் பொருள் வருமாறு. அராகம் - விருப்பம்; வித்தை - அறிவு; நியதி - பிறழாத ஒழுங்கு; குணிதசதம் - சதம் குணிதம்; சதம் - நூறு; குணிதம் - மடங்கு; பிரகிருதி - இயற்கை. (7)

முன்தொடர்ச்சி தத்துவம்

988. குணிதநியு தாயுதமே கலைக்கு முனிற் கூடியிடுங்
குணிதமொரு கோடியென மாயைக்குங் கூடியிடுங்
குணிதமுறுஞ் சுத்தவித்தை கோடியுடனோரயுதங்
குணிதவித மிம்முறையிநாதாந்தங் கூடிடுமே.

குணிதநியுத அயுதமே கலைக்கும் முன்னில் கூடியிடும்
குணிதம் ஒரு கோடி என்ன மாயைக்கும் கூடியிடும்
குணிதம் உறும் சுத்தவித்தை கோடியுடன் ஓர் அயுதம்
குணிதவிதம் இம்முறையில் நாதஅந்தம் கூடிடும்.

உரை:

முன்சொன்ன கால தத்துவத்தைப் பார்க்கிலும் கலை தத்துவம் நூற்றுப் பத்தாயிரம் மடங்கு விரிவும் உயர்ச்சியும் அதிகமாகும்; கலையைப் பார்க்கிலும் மாயை தத்துவம் கோடி மடங்கு அதிகமாகும்; மாயையைப் பார்க்கிலும் சுத்தவித்தை ஒரு கோடியே பதினாயிரம் மடங்கு அதிகமாகும்; சுத்த வித்தையைப் பார்க்கிலும் ஈசுரம், நூறாயிரம் மடங்கு அதிகம்; ஈசுரத்தை விடச் சாதாக்கியம், நூறாயிரம் மடங்கு அதிகம்; சாதாக்கியத்தைவிட விந்து, நூறாயிரம் மடங்கு அதிகம். இவ்வாறே ஒன்றுக்கொன்று அதிகமாகி நாத அந்தத்தைச் சேரும்.

விளக்கம்:

குணிதம் - மடங்கு; நியுதம் - நூறாயிரம்; அயுதம் - பத்தாயிரம்; சுத்த வித்தை - தூய அறிவு; ஈசுரம் - தலைமை; சாதாக்கியம் - அருள்நிலை; விந்து - ஒலிமுதல்.

Koviloor Digital Library

குறிப்பு:

இவைகள் சைவ சித்தாந்த தத்துவங்களுக்கு அமைந்து சாஸ்திர பரிபாஷையாக உள்ளவை. சாஸ்திரங்களைப் படித்து விளக்குவோருக்கு இப்பதங்களே தேவை. வெறும் மொழி பெயர்ப்புச் சொற்கள் அவை குறிக்கும் பொருளைக் குறிக்க உதவா. சொல் ஒவ்வொன்றுக்கும் அது குறித்த பொருள் உண்டு. மொழிபெயர்ப்பில் அப்பொருள் சரியாக இடம்பெறுவதில்லை. அதற்காகவே, எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே' என்ற விதி அமைந்தது. சமஸ்கிருதச் சொல்லை அதன் தேவை நோக்கி அனுபவிப்பது தமிழுக்கிழிவென்பது தவறு. தமிழ் பேசிய இனத்தின் மொழிதான் சமஸ்கிருதமும். சென்னைப் பல்கலைக்கழகம் சமீபத்தில் வெளியிட்டுள்ள *'உயராய்வு'* என்ற நூலில் கலாநிதி குல. சபாரத்தினத்தின் கட்டுரை பார்க்க. (8)

பூமண்டலத்தின் வகை

989. மண்டனக் காயிரங் கோடி யண்டமென மதித்தவற்றோ
ரண்டமுறு மளவினையு மதனுலக மனைத்தினையுங்
கண்டிடுக முனிவரனே கழறிடுவங் கற்பார்க்கும்
பண்டை வினைப் பாவமறப் பரலோக பதமுறவே.

மண்தனக்கு ஆயிரம்கோடி அண்டம் எனமதித்து அவற்று ஓர்
அண்டம்உறும் அளவினையும் அதன் உலகம் அனைத்தினையும்
கண்டிடுக முனிவரனே கழறிடுவம் கற்பார்க்கும்
பண்டை வினைப்பாவம் அற பரலோகம் பதம் உற.

உரை:

முனிவர்களிற் சிறந்தவனே, பூமியில் ஆயிரம் கோடி உலகுகள் உண்டென்று உணர்ந்து, அவற்றுள் ஓர் உலகின் உயரம் அகலங்களின் அளவை வரையறுத்து, அதனோடு தொடர்புடைய நிலப்பரப்புகளையும் யாம் உரைக்க அறிந்து கொள்வாயாக. இதனால், இந்த உலகுகளை விவரிக்கும் சிவாகம நூலைக் கற்பவர்களின் பழைய பாவங்கள் விலகும். அதனால் மேலான சிவ உலகை அடைவர்.

விளக்கம்:

மண் - பூமி; **அண்டம்** - உலகு; உலகின் பகுதி; **கண்டிடுக** - தெரிந்து கொள்க; **கழறிடுவம்** - உரைக்கிறோம்; **கற்பார்** - சிவாகமத்தைக் கற்பவர்; **பண்டை** - பழைய; **வினை** - பாவம்; **அற** - ஒழிய; **பரலோகம்** - மேலான சிவ உலகு. (9)

Koviloor Digital Library

தொடர்ச்சி

வேறு

990. தரைக்குக்கீழ்க் கோடி தானுறு மைம்பது
தரைக்கு மேற்கோடி தானுறு மைம்பது
தரைக்குண்மேருத் தடவரைத் திக்கெலா
முரைத்த வைம்பதுறுங் கடாகத் தொடும்.

தரைக்குக்கீழ்க் கோடி தான்உறும் ஐம்பது
தரைக்கு மேல்கோடி தான்உறும் ஐம்பது
தரைக்குள் மேருத் தடவரைத் திக்கு எல்லாம்
உரைத்த ஐம்பது உறும் கடாகத்தொடும்.

உரை:

பூமியின் கீழ் அண்ட ஓடு தொடங்கிப் பூமியின் மேற்பரப்புவரையுள்ள தூரம் ஐம்பது கோடி யோசனை; பூமியின் மேற்பரப்பிலிருந்து மேலே உள்ள உலக உச்சிவரையுள்ள தூரம் ஐம்பது கோடி யோசனை; பூமியின் நடுவேயிருக்கும் பெரிய மேருமலையின் நடுவிலிருந்து கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய இந்த நான்கு திசைகளின் உலக ஓட்டின் கனம் வரை ஒவ்வொரு திசைக்கும் ஐம்பது கோடி யோசனை தூரம் பொருந்தும்.

விளக்கம்:

யோசனை எட்டு மைல் நீளம். இந்த அளவை புராண அளவைப்படி அமைந்தது. கடாகம் - அண்ட உருண்டை. (10)

தொடர்ச்சி

991. பொன்மயத்த கடாகப் புறத்திசை
தன்னிற்சாரும் புவனஞ் சதமவை
தன்னினூற்றுவர் தங்குவரீசன்மே
லுன்னிலாறுபுரமிரண் டோர்கவே.

பொன்மயத்த கடாகப் புறத்திசை
தன்னில் சாரும் புவனம்சதம் அவை
தன்னில் நூற்றுவர் தங்குவர் ஈசன்மேல்
உன்னில் ஆறுபுரம் இரண்டு ஓர்க.

Koviloor Digital Library

உரை:

தங்க வடிவமாக விளங்கும் உருண்டையான உலகுக்கு வெளியே கிழக்கு முதலாகப் பத்துப் பக்கங்களிலும் பொருந்தியுள்ள நூறு உலகுகளிலும் நூறு உருத்திரர்கள் இருப்பார்கள். இந்த நூறு உலகுகளுக்கும் மேலே காலாக்கினி முதலான ஆறு உருத்திரர்களின் உலகுகள் உள்ளன. இந்த உலகுகளுக்கு மேல் இரண்டு உலகுகள் உள்ளன என்பதை உணர்க.

விளக்கம்:

சென்னை சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தினர் வெளியிட்டுள்ள *தொகை அகராதி* (பக்கம்.52-53) நூற்று எட்டு உருத்திரர்களையும் ஐம்பத்தொரு உருத்திரிகளையும் குறிப்பிடுகிறது. **காலாக்கினி உருத்திரன்** - சங்கார கருத்தாவான உருத்திரன்; **சதம்** - நூறு; **புவனம்** - பல உலகுகளைக் கொண்ட ஓரமைப்பு; **புரம்** - நகரம். **ஓர்க** - உணர்க. (11)

அண்ட கடாகத்தின் அளவு முதலியன வேறு

992. அண்ட கடாகக் கனமுண்டொரு கோடியதனடியுட்
கண்டிடுக காலாங்கி யுருத்திரர்க்குக் கனகமனை
யுண்டதற்குன்னதங் கோடி யோசனை யீரைங்கோடி
மண்டிய மெய்த்தழற் கொழுந்தைங் கோடியுறும் வளர் புகையும்.

அண்ட கடாகக்கனம் உண்டுஒருகோடி அதன் அடியுள்
கண்டிடுக காலாங்கி உருத்திரர்க்குக் கனகமனை
உண்டு அதற்கு உன்னதம் கோடியோசனை ஈர் ஐங்கோடி
மண்டிய மெய்த்தழல் கொழுந்து ஐங்கோடி உறும்வளர் புகையும்.

உரை:

அண்ட கோளத்தின் மேல் ஓடு ஒரு கோடியோசனை உயர்ச்சி; அந்த அண்ட கோளத்தினுள் காலாக்கினி உருத்திரர்க்கு அமைந்துள்ள பொன்மயமான கோயிலின் உயர்ச்சி ஒருகோடி யோசனை; அவருடைய திருமேனியில் பொருந்திய எரியும் நெருப்பின் உயரம் பத்துக் கோடி யோசனை; அந்த நெருப்பிலிருந்து தோன்றுகிற புகையின் உயரம் ஐந்து கோடி யோசனை தூரமாகும்.

விளக்கம்:

யோசனை - எட்டு மைல் நீளமுள்ளது. **அண்ட கடாகம்** - அண்ட கோளத்தின் மேல் ஓடு. **கனகமனை** - பொன்மயமான கோயில்; **கனகம்** - பொன், தங்கம். **அங்கி** - தீ; **காலாங்கி உருத்திரர்** - காலாக்கினி உருத்திரர்; **மண்டிய** -

Koviloor Digital Library

பொருந்திய; மெய் - உடம்பு; தழல் - நெருப்பு; கொழுந்து - சுடர்; ஈர் - இரண்டு; ஐங்கோடி - ஐந்து கோடி. (12)

தொடர்ச்சி

993. யோசனையாயிரமனையு ளரியணையி னுயரந்தான்
யோசனை யீராயிரமென்றதன் விரிவை யுணர்ந்திடுக
தேசுடைய காலாங்கி யுருத்திரர்தந் திருமேனி
யோசனையு மொண்டழலாலயுதமென வுன்னுகவே.

யோசனை ஆயிரம் மனையுள் அரியணையின் உயரம்தான்
யோசனை ஈர்ஆயிரம் என்றுஅதன் விரிவை உணர்ந்திடுக
தேசுஉடைய காலாங்கி உருத்திரர்தம் திருமேனி
யோசனையும்ஒண் தழலால் அயுதம் என உன்னுக.

உரை:

காலாக்கினி உருத்திரருடைய கோயிலில் இருக்கும் சிங்காதனம், ஆயிரம் யோசனை உயரமுடையது. அச்சிங்காதனம், ஈராயிரம் யோசனை விரிவை உடையது. தீயின் வடிவமாக இருக்கிற காலாக்கினி உருத்திரரின் உயரம் பதினாயிரம் யோசனை என்று அறிவாயாக.

விளக்கம்:

மனை - இல்லம்; அரி - சிங்கம்; அரியணை - சிங்காசனம்; ஈர் - இரண்டு; தேசு - ஒளி; காலாங்கி - காலாக்கினி; ஒண்தழல் - ஒளிபொருந்திய நெருப்பு; அயுதம் - பதினாயிரம்; உன்னுக - எண்ணுக. (13)

காலாக்கினி உருத்திரர்

994. தரித்துடையர் வலக்கரத்திற் றயங்கொளி வாட்சரத் தினையும்
பரித்துடைய ரிடக்கரத்திற் பலகையினைத் தனுவினையு
முருத்திரர்களொரு பதின்ம ருறைவ ரவருழையவர்போ
லுருத்திரர்களொவ் வொருவர்க் கொருகோடி பரிச்சிதமே.

தரித்து உடையர் வலக்கரத்தில் தயங்குஒளிவாள் சரத்தினையும்
பரித்து உடையர் இடக்கரத்தில் பலகையினைத் தனு வினையும்
உருத்திரர்கள் ஒரு பதின்மர் உறைவர்அவர் உடையவர்போல்
உருத்திரர்கள் ஒவ்வொருவர்க்கு ஒரு கோடி பரிச்சிதம்.

உரை:

அந்தக் காலாக்கினி உருத்திரன் வலக்கையில் ஒளி பொருந்திய வாளும் அம்பும், இடக்கையில் கேடகமும் வில்லும் ஏந்தியிருப்பார். பத்து உருத்திரர்கள்

Koviloor Digital Library

அவர் பக்கத்தில் சூழ்ந்திருப்பர். அவர்கள் தோற்றத்தில் காலாக்கினி உருத்திரரைப் போலவேயிருப்பர். இந்த உருத்திரர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கோடி உருத்திரர்கள் பரிவாரமாக நின்று பணி செய்வர்.

விளக்கம்:

தரித்து, பரித்து - இவை வைத்திருத்தலைக் குறிக்கும். சரம் - அம்பு; பலகை - கேடகம்; தனு - வில்; உழை - பக்கம்; பரிச்சிரம் - பரிவாரம். (14)

காலாக்கினி உருத்திரர் உலகின் நரகங்கள்

995. இனைய புரிமிசை நிரயமெழு நான்கு கோடியுறு
நினையினவை யெழுநான்கு நிலைமடமேயென நிலவுந்
துனியுறுவரவை தன்னிற்றுரிசரவற்றினுக்களவு
முனிலிரு நூறாயிரமு முப்பத்து கோடியுமே.

இனையபுரிமிசை நிரயம் எழுநான்கு கோடி உறும்
நினையின் அவை எழுநான்கு நிலைமடமே எனநிலவும்
துனிஉறுவர் அவைதன்னில் துரிசர் அவற்றினுக்கு அளவும்
உன்னில் இருநூறு ஆயிரமும் முப்பது கோடியும்.

உரை:

இந்தக் காலாக்கினி உருத்திர உலகுக்கு மேலே இருபத்தெட்டுக் கோடி நரகங்கள் இருக்கும். இந்த நரகங்கள் ஒன்றின் மேல் ஒன்றாக இருபத்தெட்டுத் தளமாகக் கட்டிய வீடுகள் போல இருக்கும். அவற்றில் பலவகைப் பெரிய பாவங்களைச் செய்தவர்கள் கிடந்து துன்பப்படுவர். ஆராய்ந்தால் அந்த நரகங்கள் முப்பது கோடியே இரு நூறாயிரம் யோசனை அளவு உயரமாக இருக்கும்.

விளக்கம்:

''ஒதுவித்தவர் கூலி கொடாதவர்'' என்று தொடங்கும் *திருப்புகழி*ல் சுவாமி அருணகிரிநாதர், 'ஈனர் இத்தனை பேர்களும் ஏழ்நரகு உழல்வாரே' என்று கூறுகிறார். திருமுறைகளிலும் பொதுவாக ஏழு வகை நரகங்களே கூறப்பட்டுள்ளன. இனைய - இப்படிப்பட்ட; நிரயம் - அளறு, நரகம்; துனி - துன்பம்; துரிசர் - பாவிகள்; உன்னில் - ஆராய்ந்தால்; யோசனை - எட்டு மைல்களைக் கொண்ட அளவு. (15)

தொடர்ச்சி

996. இடையிடையிற் படிகரைக்கும் படுகுழிக்குமிடைவெளிக்கும்
படுமுயர மவற்றடங்கும் படிகரைகட் களவதிக
மிடையிடையிற் குழியாழ மிலக்கமிடை வெளிதானும்
புடைவிரியு மண்ட கடாகத்துடனே பொருந்திடுமே.

Koviloor Digital Library

இடையிடையில் படிகரைக்கும் படுகுழிக்கும் இடை வெளிக்கும்
படும்உயரம் அவற்று அடங்கும் படிகரைகட்கு அளவு அதிகம்
இடையிடையில் குழிஆழம் இலக்கம் இடைவெளி தானும்
புடை விரியும் அண்ட கடாகத்துடனே பொருந்திடும்.

உரை:

முன்சொன்ன முப்பது கோடியே இரண்டு நூறாயிரம் யோசனை உயரத்துள் இடைக்கிடை இருக்கிற இரும்பால் அமைக்கப்பட்ட புடங்களும், நரகக் குழிகளின் ஆழங்களும், அவற்றின் மேலே இருக்கிற இடைவெளிகளின் உயரமும் அடங்கும். அவற்றின் இடையில் இருக்கிற புடங்களின் அளவு அதிகமாய் இருக்கும். இடையிடையில் நரகக் குழிகள் நூறாயிரம் யோசனை ஆழம் உள்ளவை. ஒவ்வொரு நரகக் குழிக்கும் மேலேயிருக்கிற ஒவ்வொரு இடைவெளியும் நூறாயிரம் யோசனை உயரமுள்ளது. ஒவ்வொரு நரகத்தின் பக்கவிரிவும் அண்ட கோளத்தின் மேல் ஓட்டைப் பொருந்தும்.

விளக்கம்:

படுகுழி - நரகம்; புடை - பக்கம்; படிகரை - புடம்; அண்ட கடாகம் - அண்ட கோளத்தின் மேல் ஓடு. (16)

தொடர்ச்சி

997. புடமிருப்புமய மிருபத்தொன்பதுளபுட மொவ்வொன்
றடைவு மொருகோடியு நூற்றைம் பதினாயிரந்தானு
மிடமுறு மெண்ணாயிரமு மறுநூறு மிருபத்து
மடியகன்ற புடத் துயர்ச்சியதிகமிருபதாமே.

புடம் இருப்புமயம் இருபத்து தொன்பது உள்ளபுடம் ஒவ்வொன்று
அடைவும் ஒரு கோடியும் நூற்று ஐம்பதினாயிரம் தானும்
இடம்உறு எண்ணாயிரமும் அறுநூறும் இருபதும்
அடிஅகன்ற புடத்து உயர்ச்சி அதிகம் இருபது ஆமே.

உரை:

முன்கூறிய புடங்கள் இருபத்தொன்பதும் இரும்பு மயமாக இருக்கும். ஒவ்வொரு புடத்தின் உயரமும் ஒரு கோடியே நூற்று ஐம்பத்து எண்ணாயிரத்து அறுநூற்று இருபது யோசனை என அறிக. அப்புடங்களின் உயரத்தைப் பார்க்கிலும் அடியில் பொருந்திய புடத்தின் உயரம் இருபதாயிரம் யோசனை அதிகம் உள்ளது என அறிக.

விளக்கம்: –

இருப்பு - இரும்பு; அடைவு - முறை; அகன்ற - விரிவான. (17)

Koviloor Digital Library

நரகின் இடைவெளி

998. நிரயமிசை நிராலம்ப முப்பதினாயிர நிலவு
முரைசெய்த நிராலம்பத்துச்சி மிசை யோரிலக்கம்
வரையவொரு கோடியுறு மண்ணவற்றுட் கீழ்பாகங்
கரியவிரும்பிடைப்பாக மேல்பாகங் கனகமயம்.

நிரயம்மிசை நிராலம்பம் முப்பதினாயிரம் நிலவும்
உரைசெய்த நிராலம்பத்து உச்சிமிசை ஓர் இலக்கம்
வரைய ஒரு கோடி உறும் மண் அவற்றுள் கீழ்ப்பாகம்
கரிய இரும்பு இடைப்பாகம் மேல்பாகம் கனகமயம்.

உரை:

இவ்வாறு கூறிய எல்லா நரகங்களுக்கும் மேலேயுள்ள வெளி, முப்பதாயிரம் யோசனை உயரமுள்ளது. அந்த வெளிக்கு மேல் நூறாயிரம் குறைய ஒரு கோடி யோசனை உயரம் உள்ளது. அதன் கீழ்ப்பாகம் மண் ஆகவும் நடுப்பாகம் இரும்பாகவும் உச்சி பொன்மயமாகவும் பொருந்தும்.

விளக்கம்:

மிசை - மேல்; நிராலம்பம் - வெளி; நிலவும் - பொருந்தும்; இலக்கம் - நூறாயிரம்; வரைய - குறைய; கனகம் - பொன், தங்கம். (18)

கூர்மாண்டர் உலகு

999. மேலயபாற் கனகபுரி வீற்றிருப்பர் கூர்மாண்டர்
காலவழலிரவியுருக் காளமுக மழுவுங்கை
கோலமுறு வட்டவிழி கொண்டுடைய ரவர்தம்மைப்
போலு முருத்திரர்பலரும் புடையடைவர் போற்றிசைத்தே.

மேலயபால் கனகபுரி வீற்றிருப்பர் கூர்மாண்டர்
கால அழலில் இரவிஉருக் காளமுகம் மழுவும்கை
கோலம்உறுவட்ட விழிகொண்டு உடையர் அவர் தம்மைப்
போலும் உருத்திரர் பலரும் புடைஅடைவர் போற்றி இசைத்து.

உரை:

மேலேயிருக்கிற பொன் பூமியிலே நரகங்களின் தலைவராகிய கூர்மாண்டர், உலக முடிவில் தோன்றுகிற நெருப்பும் கதிரவனும் போன்ற திரு உருவமும், கறுத்த முகமும் கைக் கோடரி தாங்கிய கையும், அழகு பொருந்திய வட்ட வடிவமான விழிகளும் உடையவராக எழுந்தருளியிருப்பார். அவரைப் போன்ற

Koviloor Digital Library

தோற்றமுள்ள உருத்திரர் பலர் அவரைத் துதித்துப் பணிவிடை செய்து கொண்டிருப்பார்கள்.

விளக்கம்:

கனகபுரி - பொன் நகரம்; கால அழல் - உலக முடிவில் தோன்றும் தீ; கூர் மாண்டர் – கூசு மாண்டர்; முப்பத்திரண்டு நரகங்களுக்கும் அதிபதி. இரவிஉரு – கதிரவன் போலத் தோன்றும் ஒளிவடிவம்; காளமுகம் – கரியநிற முகம்; மழு – கைக் கோடரி; கோலம் – அழகு; புடை – பக்கம்; அடைவர் – சேர்ந்திருப்பர். (19)

கூர்மாண்டர் அல்லது கூஷ்மாண்டர்

1000. பிணைவிழியார் துணைமுலையார்
பிடிநடையார் துடியிடையார்
பணையன தோளிணை யிளையார்
பலர்பரவப் பதமொழியாற்
றிணமுறுமாகண முறையிற்
செறியவமர் கூர்மாண்டர்
எணமுடையார் கணமடையா
ரிடர்நிரயத் திறையவரே.

பிணை விழியார் துணைமுலையார்
பிடிநடையார் துடி இடையார்
பணையன்ன தோள்இணை இளையார்
பலர் பரவப் பதமொழியால்
திண்ணம் உறுமாகணம் முறையில்
செறிய அமர்கூர் மாண்டர்
எண்ணம் உடையார் கணம்
அடையார் இடர்நிரயத்து இறையவர்.

உரை:

பெண்மான் விழிபோன்ற விழிகளையும், நெருங்கிய இரு நகில்களையும், பெண்யானை நடை போன்ற நடையினையும், உடுக்கையின் இடை போன்ற சிறு இடுப்பையும், மூங்கில் போன்ற தோள்களையும் உடைய இளம் பெண்கள் பலர், இசைப் பாடல்களைப் பாடி வணங்க, திண்மையான பெரிய கணங்கள் தாம் நிற்கும் முறையிலே நெருங்கி நின்று வணங்க, அக்கூர்மாண்டர், எண்ணம் உடையவராய், துன்பம் இல்லாதவராய் அந்த நரகங்களுக்குத் தலைவராக இருப்பார்.

விளக்கம்:

பிணை – பெண்மான்; பிடி – பெண் யானை; துடி – உடுக்கை; இடை –

Koviloor Digital Library

இடுப்பு; பணை - மூங்கில்; இளையார் - இளம் பெண்கள்; பதமொழி - இசைப்பாடல்; பரவ - புகழ; கணம் - கூட்டம்; செறிய - நெருங்க; இடர்நிரயம் - துன்ப நரகம்; இறையவர் - தலைவர்; கூர்மாண்டர் - இவரைக் கூசு(ஷ்)மாண்டர் என்றும், முப்பத்திரண்டு நரகங்களுக்கும் அதிபதி என்றும் *சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி* குறிப்பிடுகிறது.

இப்பாடலின் மூலம் சிவாகம முறைப்படி நரகங்களுக்குத் தலைவர் கூர்மாண்டர் அல்லது கூசுமாண்டர். ஆகவே, எமன் நரகங்களுக்குத் தலைவனோ என்பது ஆராயத்தகும். (20)

கூர்மாண்ட உலகின் மேலேயுள்ள இடைவெளி

1001. உரைத்தபுரிமிசை வெளிதானொன்ப துநூறாயிரமாந்
தெரித்ததன் மேலாபாத பாதாள தீர்க்கத்தைத்
தரித்திடுக பத்திலக்க மெனவடிவந் தமனியமே
பரித்தவிரிவபுத மிடைவெளிதானு மதன்படித்தே.

உரைத்த புரிமிசை வெளிதான் ஒன்பது நூறு ஆயிரமாம்
தெரித்த அதன்மேல் ஆபாத பாதாள தீர்க்கத்தைத்
தரித்திடுக பத்து இலக்கம் எனவடிவம் தமனியமே
பரித்த விரிவபுதம் இடைவெளிதானும் அதன்படித்து.

உரை:

இவ்வாறு சொல்லிய கூர்மாண்ட உலகின் மேலேயுள்ள இடைவெளி, ஒன்பது நூறாயிரம் யோசனை தூரமாகும். இந்த இடைவெளியின் மேல் பொன் மயமாக இருக்கிற ஆபாத பாதாளத்தின் உயர்ச்சி, பத்து நூறாயிரம் யோசனை அளவாகும் என அறிக.

விளக்கம்:

ஆபாதம் - கானபாதாள மேழில் ஒன்றின் பெயர்; பாதாளம் - கீழ் உலகம்; தீர்க்கம் - நீட்சி, நிறைவு; தமனியம் - பொன். (21)

தொடர்ச்சி

1002. பொருந்துமது முபபாகம் பூருவத்திற் றைத்தியரே
யிருந்திடுவர் நாகேச ரிடைப் பாலிற் பச்சிமத்தில்
வரந்திகழும் வாளரக்கர் மற்றைய பாதலந்தோறும்
பரந்திடு மிப்படி பாகம் வெளியுயரம் பரப்பெல்லாம்.

Koviloor Digital Library

பொருந்தும் அது முப்பாகம் பூருவத்தில் தைத்தியரே
இருந்திடுவர் நாக ஈசர் இடைப்பாலில் பச்சிமத்தில்
வரம்திகழும் வாள் அரக்கர் மற்றைய பாதலம் தோறும்
பரந்திடும் இப்படிபாகம் வெளிஉயரம் பரப்பு எல்லாம்.

உரை:

அந்தப் பாதாளம் மூன்று பிரிவுகளாக இருக்கும். அதன் கிழக்குப் பகுதியில் திதியின் மக்களாகிய தைத்திரியர் இருப்பார்கள்; நடுப்பகுதியில் நாக அரசன் இருப்பான்; மேற்குப் பகுதியில் மேலான ஒளிபொருந்திய அரக்கர் இருப்பர்; இவ்வாறே ஏனைய பாதாளங்களிலும் விரிவும் உயரமுமாக உள்ள பகுதிகளிலும் அவற்றிற்குரிய அதிபதிகள் இருப்பார்கள்.

விளக்கம்:

தக்கனுடைய பதின்மூன்று புதல்விகளைக் காசிபன் மணந்தான். அவர்களுள் திதி என்பவள் பெற்ற பிள்ளைகளைத் தைத்தியர், அசுரர், அரக்கர், இராக்கதர் என்று கூறுகிறார்கள். அதிதி பெற்ற பிள்ளைகளைத் தேவர்கள் என்கிறார்கள். தேவரும் அசுரரும் ஒரே தந்தையின் மக்கள். ஆகவே, அவர்கள் சகோதரர்கள் ஆவர். அவர்களுள் ஒரு சாராரைத் தீயவர் என்றும், இன்னொரு சாராரை நல்லவர்கள் என்றும் சொல்வர். பூருவம் - கிழக்கு; பச்சிமம் - மேற்கு; வாள் - ஒளி; நாக ஈசன் - நாகத் தலைவன்; பாதாளம் - கீழ்உலகம். (22)

தொடர்ச்சி

1003. அதன்மீது பதுமவொளி பதுமதலமெென வறிக
வதன்மீதிந்திர நீலநிதல தலமெனவறிக
வதன்மேற்புட்பராகச் சுதல தலமெனவறிக
வதன்மீது வெள்ளிமய மாதலமென்றறிகவரோ.

அதன்மீது பதுமஒளி பதுமதலம் என அறிக
அதன்மீது இந்திர நீலநிற நிதலதலம் என அறிக
அதன்மேல் புட்பராகச் சுதலதலம் என அறிக
அதன்மீது வெள்ளிமய மாதலம் என்று அறிக.

உரை:

அந்தப் பாதாளத்துக்கு மேல் பதுமதல பாதாளம், பதும ஒளி போல் இருக்கும்; அதன் மேல் நிதலதல பாதாளம், இந்திரநீலநிறம் போல இருக்கும்; அதற்குமேல் சுதலதல பாதாளம், புட்பராக நிறம் போல இருக்கும்; அதற்கு மேல் மாதலபாதாளம், வெள்ளிமயமாக இருக்கும் என் அறிவாயாக.

Koviloor Digital Library

விளக்கம்:

பதுமம் - தாமரை; சுதலம் - கீழேயுள்ள ஏழு உலகங்களுள் ஒன்று; பாதாள உலகுகளுக்காயின. பதுமஒளி, இந்திரநீலம், புட்பராகம் இவை ஆபரணக் கற்களின் பெயர்கள்; அரோ - அசை. (23)

கூர்மாண்டர் உலகு - தொடர்ச்சி

1004. அதன்மீது ரசாதலத்தை முத்தொளியென்றறிந்திடுக
வதன்மீது பாதாள நவமணிபோலெனவறிக
வதன்முடிவுட் கன்னியர்க ளெண்ணூறாயிரவருள
ரதன் மேலே பத்திலக்க நிராலம்ப மாயிடுமே.

அதன்மீது ரசாதலத்தை முத்துஒளி என்று அறிந்திடுக
அதன்மீது பாதாளம் நவமணி போல் என அறிக
அதன்முடிவுள் கன்னியர்கள் எண்ணூறு ஆயிரவர் உள்ளார்
அதன்மேலே பத்து இலக்கம் நிராலம்பம் ஆயிடும்.

உரை:

அதற்கு மேல் ரசாதல பாதாளம், முத்தின் ஒளிபோல இருக்கும்; அதற்கு மேல் பாதாளம், ஒன்பது வகை ஆபரணக் கற்களின் ஒளி பொருந்தியதாக இருக்கும்; அந்தப் பாதாளத்தின் முடிவில் எண்ணூறு ஆயிரம் இளம் பெண்கள் இருப்பார்கள். அப்பாதாளத்தின் மேலேயிருக்கும் இடைவெளி, பத்து இலட்சம் யோசனை தூரம் உள்ளது.

விளக்கம்:

நவமணி - கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்ற ஒன்பது வகை ஆபரணக் கற்கள்.

இவற்றுள் வைரம் எல்லாவற்றிலும் சிறந்தது. கோமேதகமும், பவளமும் எல்லாவற்றிலும் தாழ்ந்தவை. மரகதமும், மாணிக்கமும், முத்தும் முதல்தர மணிகள். இந்திர நீலமும், வைடூரியமும் நடுத்தரமானவை. (24)

கூர்மாண்டர் உலகப் பெண்கள்

1005. மயிலனையார் சாயலினான்
மானனையார் விழியதனாற்
குயிலனையார் மொழியதனாற்
கொடிய னையாரிடையதனாற்
சயிலனையார் முலையதனாற்
றளவனையா ரிளநகையால்
வெயிலனையாருட லொளியாற்
பாதாள விலாசினிமார்.

Koviloor Digital Library

மயில் அனையார் சாயலினால்
மான் அனையார் விழிஅதனால்
குயில் அனையார் மொழி அதனால்
கொடி அனையார்இடை அதனால்
சயில் அனையார் முலை அதனால்
தளவு அனையார் இளம் நகையால்
வெயில் அனையார் உடலொளியால்
பாதாள விலாசினிமார்.

உரை:

நரக உலகத்துப் பெண்கள் தோற்றத்தில் மயில் போலவும், பெண்மானைப் போன்ற கண்களும், குயில் போன்ற இனிய பேச்சும், கொடி போன்று ஒல்லியான இடுப்பும், மலைபோன்ற திரண்டு பருத்த நகில்களும், முல்லையரும்பு போன்ற பற்களும், கதிரவன் ஒளியைப் போன்ற பளபளப்பான மேனியும் உடைய அழகிகள் ஆவர்.

விளக்கம்:

கவிச்சக்கரவர்த்தி கம்பர் கோசல நாட்டுப் பெண்களை வருணிப்பது போல, இந்தப் பாடலின் வருணனையும் அமைந்திருக்கிறது.

சாயல் - மாதிரி, தோற்றம்; இடை - இடுப்பு; சயில் - சயிலம் என்பது சயில் எனக் குறுகி வந்தது. சயிலம் - மலை. தள - தளவம், தளவு. இது முல்லையரும்பைக் குறிக்கும். இளம் பெண்களின் பற்களை முல்லை அரும்புகளுக்கு ஒப்பிடுவர். உடலொளி - உடல்ஒளி, உடலின் பளபளப்பு; விலாசினி - அழகி. (25)

ஆடககேசு ருத்திரர் உலகப் பெண்கள்

1006. சுரிகுழலாரரி குழலார் சுவைமொழியார் கவை மொழியார்
வரிவளையார் உருவளையார் மதர்விழியாரிதர் விழியார்
உருவுடையார் குருவுடையாரொளி நகையார் தெளி நகை யார்
அருகிடையார் பருகிடையா ராடகர் தாளலர் மதுவே.

சுரிகுழலார் அரிகுழலார் சுவைமொழியார் கவ்வை மொழியார்
வரிவளையார் உருவளையார்மதர் விழியார்இதர்விழியார்
உருஉடையார்குருஉடையார் ஒளிநகையார் தெளிநகையார்
அருகுஇடையார் பருகு இடையார் ஆடகர்தாள் அலர்மது.

உரை:

ஆடககேசுருத்திரர் உலகப் பெண்கள், சுருண்ட கூந்தலையும்

Koviloor Digital Library

புல்லாங்குழலின் ஓசை போல இனிய பேச்சும் உள்ளோரும், பழிச் சொற்களைப் பேசாதவரும், கோடுகள் உள்ள வளையல்கள் அணிந்தவர்களும், நேரான உடலமைப்பும், உள்ளோரும் மதர்த்த கண்ணினரும் ஆடகேசரைத் தவிர வேறு பொருளைப் பாராமையும், அழகிய தோற்றமும், பெருமைக் குணங்களும், உள்ளவர்களும், புன்சிரிப்பும், பணிவிடை செய்வதற்கு ஏற்றகைகளும், சிறிய இடுப்பும் உள்ளவர்களும் ஆடகர் திருவடி மலர்களாகிய தேனைப் பருகுவதற்குப் பின்வாங்காதவரும் ஆவர்.

விளக்கம்:

சுரி குழல் - சுருண்ட கூந்தல்; **அரி** - மூங்கில்; **அரிகுழல்** - புல்லாங்குழல்; **சுவைமொழி** - இனிய பேச்சு; **கவ்வை** - பழிச்சொல்; **வளை** - வளையல்; **உரு** - வடிவம்; **உருவளையார்** - நேரான உடலைப் பெற்றவர்; **மதர்** - மகிழ்ச்சி; **இதர்** - இதரம், வேறு; **விழியார்** - பாரார்; **உருஉடையார்** - அழகிய தோற்றம் உள்ளவர்; **குரு** - பெருமை; **குரு உடையார்** - பெருமையுடையவர்; **ஒளி நகை** - புன்சிரிப்பு; **தெளிநகையார்** - பணிவிடைக்கு ஏற்ற கைகள் உள்ளவர்; **அருகு இடையார்** - சுருங்கிய இடுப்பை உடையவர்; **பருகு** - பருகுவதற்கு; **இடையார்** - பின்வாங்காதவர்; **ஆடகர்** - ஆடகேசர்; **தாள்அலர்** - திருவடிமலர்; **மது** - தேன். (26)

ஆடகேசர் உலகு

1007. அதன்மேலே நவலக்க மாடக நாயகர் புரிதான்
புதுமைதிகழ்மனை பொன்னால் யோசனையாயிரம்புகலிற்
கதமுடைய தைத்தியர்கள் கட்டரவர் வெட்டரக்கர்
விதிமுறையிற் பதப்பணிய வீற்றிருப்பா ராடகரே.

அதன்மேலே நவலக்கம் ஆடகநாயகர் புரிதான்
புதுமை திகழ்மனை பொன்னால் யோசனை ஆயிரம் புகலில்
கதம் உடைய தைத்தியர்கள் கட்டரவர் வெட்டு அரக்கர்
விதிமுறையில் பதம்பணிய வீற்றிருப்பார் ஆடகர்.

உரை:

அப்பாதாளத்துக்கு மேலே ஆடகேசர் உலகு உள்ளது. அது ஒன்பது நூறாயிரம் யோசனை பரப்பளவு உடையது. அதில், ஆடகேசர்க்குப் புதுமையான தங்க மாளிகை ஒன்று உள்ளது. அது ஆயிரம் யோசனை அளவு உயரமுடையது. அதில் கோபமுள்ள அசுரர்களும் நாகர்களும் வெட்டிமையுள்ள அரக்கர்களும் முறைப்படிப் புகழ்ந்து வணங்க ஆடகேசர் சிறப்பாக அமர்ந்திருப்பார்.

விளக்கம்:

ஆடகநாயகர் - ஆடகேசர், ஆடக ஈசர் - பாதாள உலகில் உள்ள

Koviloor Digital Library

உருத்திரர்களுக்குத் தலைவர்; நவம் - ஒன்பது; லக்கம் - இலட்சம்; புரி - உலகு; மனை - மாளிகை; புதுமை - அதிசயம்; கதம் - கோபம்; தைத்தியர் - அசுரர்; அரவர் - நாகர்; பதம் - கால், திருவடி; பணிய - வணங்க; ஆடகர் - ஆடகேசர்; வெட்டிமை - விறுக்கான போக்கு. (27)

ஆடகேசர் உலகின் மேலேயுள்ள நிலம்

1008. அப்புரியின் மிசைத்தாக வவனிகன மொருகோடி
யொப்பரிய கடாககனமொரு கோடி முதலாக
விப்புவனியீறாக வேழேழொன் றெனுங்கோடி
தப்பறவே யோசனையின் றொகைமுறையிற் றரிக்கவரோ.

அப்புரியின் மிசைத்தாக அவனிகனம் ஒருகோடி
ஒப்பு அரிய கடாகம் கனம்ஒரு கோடி முதலாக
இப்புவனி ஈறாக ஏழுஏழ் ஒன்று என்னும் கோடி
தப்பு அறவே யோசனையின் தொகை முறையில் தரிக்க. (அரோ)

உரை:

அந்த ஆடகேசர் உலகின் மேலேயிருக்கிற நிலத்தின் கனம் ஒரு கோடி யோசனை அளவு உயரமுள்ளது. ஒப்பு இல்லாத அண்ட கோளத்தின் ஓடு முதல், ஆடகேசர் உலகின் மேலேயிருக்கும் பூமிவரை, தவறு நேராமல் அளவிட்டால், இவற்றிற்கு இடையே உள்ள உயரம் ஐம்பது கோடி யோசனை தூரம் ஆகும்.

விளக்கம்:

அப்புரி - அந்த ஆடகேசர் உலகு; மிசை - மேலே; அவனி - பூமி; ஒப்பு - இணை, சமம்; கடாகம் - அண்ட கோளத்தின் மேல் ஓடு; இப்புவனி - ஆடகேசர் உலகுக்கு மேலேயுள்ள பூமி; ஏழுஏழ் - நாற்பத்தொன்பது; ஒன்று - நாற்பத்தொன்பதோடு ஒன்றும் சேர்ந்தால் ஐம்பது. தப்பு அறவே - தவறு இல்லாமல்; தொகை - மொத்த எண்ணிக்கை. (28)

பாதாள அதிபதியும் குகை அளவும்

1009. பாதாளப் பிலவழிக்கும் பாதாள மேழினுக்கு
மாதார மதிபதியு மாடக நாயகர்தாமே
பாதாளப் பிலவகலம் யோசனை யாயிரம் பகரிற்
பாதாள முதனிரய விறுதியினும் படர்ந்திடுமே.

பாதாளப் பிலவழிக்கும் பாதாளம் ஏழினுக்கும்
ஆதாரம் அதிபதியும் ஆடக நாயகர்தாமே
பாதாளப் பில அகலம் யோசனை ஆயிரம் பகரில்
பாதாளம் முதல்நிரய இறுதியிலும் படர்ந்திடும்.

Koviloor Digital Library

உரை:

ஆடகேசர், நரகத்துக்கும் குகை வழிக்கும் தலைவராக எழுந்தருளி இருப்பார். அந்தக் குகை வழியின் அகலம் ஆயிரம் யோசனை அளவுடையது. அக்குகை, நரக உலகத் தொடக்கம் முதல் இறுதி நரகம் வரை செல்லும்.

விளக்கம்:

பாதாளப் பிலவழி - நரக உலகக் குகை வழி; பிலம் - குகை; ஆதாரம் - பற்றுக்கோடு; அதிபதி - தலைவர்; ஆடக நாயகர் - ஆடகேசர்; யோசனை - எட்டு மைல் தொலைவு. படர்ந்திடும் - பரவும்; நிரயம் - நரகம். (29)

பூமியின் அளவு

1010. அறைந்தாஞ் சொன்முறையுறவே பிரமாண்டத்ததோபாகஞ்
சிறந்த பெருவரையுடனுஞ் சேடித்த வுறுப்புடனு
மறைந்திடுவா மறிந்திடுக வவனிதலத் தகலமுமெண்
ணிறைந்த சதகோடி நடுமேருவுற நிலவிடுமே.

அறைந்தாம் சொல்முறை உறவேபிரம அண்டத்து அதோபாகம்
சிறந்த பெருவரையுடனும் சேடித்த உறுப்புடனும்
அறைந்திடுவாம் அறிந்திடுக அவனி தலத்து அகலமும்எண்
நிறைந்த சதகோடி நடுமேரு உற நிலவிடும்.

உரை:

பிரமாண்டத்தின் மேலேயிருக்கிற பூமிவரை, அதன் கீழ்ப்பகுதியின் அமைப்பை ஒழுங்குபட உரைத்தோம். இனி, இப்பூமியின் நடுவேயிருக்கிற பெரிய மலையையும் அதன் பகுதிகளையும் சொல்லுவோம்; அறிவாயாக. இப்பூவுலகின் அகலம் நூறு கோடி யோசனை தூரமாகும். இதன் நடுவே மேருமலை நிற்கும்.

விளக்கம்:

அறைந்தாம் - சொன்னோம்; அறைந்திடுவாம் - சொல்வோம். அவனி தலத்து அகலம் - பூமியின் அகலம்; சதம் - நூறு; சதகோடி - நூறுகோடி யோசனை தூரம்; பூமியின் அகலம் பற்றிய இக்கணக்கு புராண அளவை ஆதாரமாகக் கொண்டது. (30)

பூமியின் அளவு - தொடர்ச்சி

1011. பாதலத்தின மிசைத் தாகிப் படுகடலைப் புடையுடுத்த
பூதலத்தினடு நிலவும் பொன்னசலம் யோசனைதான்

Koviloor Digital Library

பாதலத்திற் பதினாறாயிர முறவே படிந்த முந்தி
மீதலத்து மவை குறைந்த நியுத முற விளங்கிடுமே.

பாதலத்தின் மிசைத்து ஆகிப் படுகடலைப் புடை உடுத்த
பூதலத்தின் நடு நிலவும் பொன் அசலம் யோசனைதான்
பாதலத்தில் பதினாறு ஆயிரம் உறவே படிந்து அழுந்தி
மீதலத்தும் அவை குறைந்த நியுதம் உற விளங்கிடும்.

உரை:

பொன் மயமான அம்மேருமலைமுன் சொன்ன கீழுலகத்துக்கு மேல் கடலால் சூழப்பட்ட பூமியின் நடுவே பொருந்திப் பூமிக்குக் கீழே பதினாறாயிரம் யோசனை அளவு புதைந்து, பூமிக்கு மேல் எண்பத்து நாலாயிரம் யோசனை உயரம் விளங்கித் தோன்றும், பூமியின் கீழிருந்து மேல் முகடுவரை நூறாயிரம் யோசனை உயரம் என்று அறிக.

விளக்கம்:

பாதலம் - கீழ் உலகு; மிசைத்து - மேலே உள்ளது; பூதலம் - பூமி; பொன் அசலம் - தங்கமயமான மேருமலை; அசலம் - மலை; படிந்து அழுந்தி - தரையின் கீழே புதைந்து; மீதலம் - பூமிக்கு மேல்; நியுதம் - நூறாயிரம்; மேரு - புராண மரபுப்படி பூமியின் நடுவே உள்ளதாகக் கருதப்படுகிற பொன்மலை. (31)

பூமியின் அளவு - தொடர்ச்சி - மேருமலை

1012. அடியகலம் பதினாறா யிரமாகு மவற்றிரட்டி
முடியகலம் பதுமமலர்ப் பொகுட்டினைப் போன் முற்றியுறும்
புடைபரந்த மேகலையு மிடை மூன்று பொருந்தியிடும்
முடிவிடத்து மேகலையிற் பலசிகரமுளைத்துளவே.

அடி அகலம் பதினாறு ஆயிரம் ஆகும் அவற்று இரட்டி
முடி அகலம் பதுமமலர்ப் பொகுட்டினைப் போல் முற்றி உறும்
புடைபரந்த மேகலையும் இடைமூன்று பொருந்தியிடும்
முடிவிடத்து மேகலையில் பல சிகரம் முளைத்து உள.

உரை:

அம் மேருமலையின் அடி விரிவு பதினாறாயிரம் யோசனை. அதன் உச்சியின் விரிவு முப்பத்திரண்டாயிரம் யோவனை. அது தாமரைக் காயைப் போல அடிசிறுத்து நுனி விரிந்து முடிவு பெறும். அதன் பக்கத்தில் ஒன்றுக் கொன்று விரிவு அதிகமா்ன மூன்று முகடு பொருந்தும். அவற்றுள் நுனி முகட்டில் பல சிகரங்கள் தோன்றியுள்ளன.

Koviloor Digital Library

விளக்கம்:

பதும மலர் - தாமரைப் பூ; பொகுட்டு - தாமரைக் கொட்டை; புடை - பக்கம்; பரந்த - விரிந்த; மேகலை - முகடு, உச்சி; (32)

மேருமலை - தொடர்ச்சி

1013. இந்திரனை முதலாய வெண்டிசைப் பாலரும வற்றிற்
றந்தமக்குத் தக்கதிசைக் கொடுமுடியிற் றங்கிடுவ
ரந்தவரை யெட்டினுக்கு நடுவாக வணியுறவே
முந்திமுளைத் தெழுசிகர மூன்றுளவே மூவர்க்கும்.

இந்திரனை முதலாய எண்திசைப் பாலரும் அவற்றில்
தம் தமக்குத் தக்க திசைக் கொடுமுடியில் தங்கிடுவர்
அந்தவரை எட்டினுக்கும் நடுவாக அணி உறவே
முந்திமுளைத்து எழும் சிகரம் மூன்று உளவே மூவர்க்கும்.

உரை:

இந்திரன் முதலான எட்டுத் திசைகளின் காவலர்களும் தத்தமக்கு ஏற்ற திசையின் சிகரத்தில் இருப்பார்கள். அந்த எட்டுச் சிகரங்களுக்கும் நடுவே அழகு பெறப் பிரம, விட்டுணு, ருத்திரர்கள் ஆகிய மூவரும் தங்குவதற்கு மூன்று சிகரங்கள் உள்ளன.

விளக்கம்:

இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய எண்மரும் எட்டுத் திசைகளின் காவலர்கள் ஆவர்.

பிரமன், விஷ்ணு, ருத்திரன் என்ற மூவரும் தலைவர்கள்.

இவர்கள் அனைவரும் மேரு மலையில் வாழ்வதாகப் புராணங்கள் கூறுகின்றன.

பாலகர் - காவலர்; கொடுமுடி - மலைச் சிகரம்; வரை - மலை; அணி - அழகு; (33)

மேருமலை - தொடர்ச்சி

1014. தடவரையினடு வுச்சி தனின் முளைத்த சிகரத்தின்
வடிவுடைய மனோவதிதான் மலரயன் வாழ்புரியதற்குக்
குட திசையிற் கொடுமுடியில் வைகுண்டங் கோவிந்தன்
இடம் வடபாற்குண திசையிலெ சோவதி சங்கரர் தடமே.

Koviloor Digital Library

தடவரையிண் நடு உச்சி தன்னில் முளைத்த சிகரத்தில்
வடிவு உடைய மனோவதிதான் மலர் அயன் வாழ்புரி அதற்குக்
குடதிசையில் கொடுமுடியில் வைகுண்டம் கோவிந்தன்
இடம் வடபால் குணதிசையில் எசோவதி சங்கரர் தடம்.

உரை:

மேருமலையின் நடுவே உள்ள மனோவதி என்னும் சிகரத்தில் பிரமன் எழுந்தருளியிருப்பார்; அந்த மனோவதி என்னும் சிகரத்திற்கு மேற்கேயுள்ள வைகுந்தம், விட்டுணு இருக்கும் இடமாகும்; வைகுந்தத்திற்கு வடக்கே கிழக்குத் திசையில் உள்ள எசோவதி என்னும் சிகரத்தில் சீகண்ட பரமேசுரர் எழுந்தருளியிருப்பார்.

விளக்கம்:

தடவரை - மேருமலை; வடிவு - அழகு; மலர் - தாமரைப்பூ; அயன் - பிரமன்; அயன்வாழ்புரி - மனோவதி என்னும் சிகரம்; குடதிசை - மேற்கு; குணதிசை - கிழக்கு; தடம் - இடம்; சங்கரர் தடம் - எசோவதி, சோதிகிரி. (34)

மேருமலையைச் சுற்றிலும் இருப்பவை

1015. இத்தகைய தடவரையி னடிவாரத் தெல்லை தனி
லத்திரிதான் பூருவத்தின் மந்தரமொன் றழுந்தியுறு
மத்திரி தானுயர் கந்தமாதனந் தென்றிசை யமரு
மத்திரிதான் பச்சிமத்தின் விபுலமுறு மழகுறவே.

இத்தகைய தடவரையில் அடிவாரத்து எல்லை தன்னில்
அத்திரிதான் பூருவத்தில் மந்தரம் ஒன்று அழுந்தி உறும்
அத்திரி தான் உயர்கந்தமாதனம் தென்திசை அமரும்
அத்திரிதான் பச்சிமத்தில் விபுலம் உறும் அழகு உற.

உரை:

இவ்வாறு மேருமலையின் நான்கு பக்கமும் உள்ள அடிவாரத்தில் கிழக்குத் திசையிலே மந்தர மலையும், தென் திசையில் கந்த மாதன மலையும், மேற்குத் திசையில் நீலநிறம் போன்ற விபுல மலையும் அழகு பொருந்த நிற்கும்.

விளக்கம்:

பூருவம் - கிழக்கு; பச்சிமம் - மேற்கு; விபுலம் - இமயமலை; அத்திரி - மலை. (35)

Koviloor Digital Library

மேருமலையைச் சூழ்ந்துள்ளவை

1016. உத்தரத்திற் பாருசுவவத்திரி யொன்று ற்றழுந்தும்
வைத்தவரை முறையுறவே மரமொரு நான்கமருமவை
யுத்தமத்த கதம்ப முதலுயர் நாவலொளிர் போதி
மொய்த் துறுபத்திர மொளிரு முதுமரமென் மொழிப் பொருளே

உத்தரத்தில் பாருசுவ அத்திரி ஒன்று உற்று அழுந்தும்
வைத்த வரை முறை உறவே மரம் ஒருநான்கு அமரும் அவை
உத்தமத்த கதம்பம் முதல் உயர் நாவல் ஒளிர் போதி
மொய்த்து உறுபத்திரம் ஒளிரும் முதுமரம் என் மொழிப் பொருள்.

உரை:

வடதிசையில் பாருசுவமலைச் சிகரம் ஒன்று இருக்கும். நான்கு திசைகளிலுமுள்ள அம்மலைகளில் மிக உயரமாக வளருகின்ற வெண் கடம்பு மரம், நாவல் மரம், அரச மரம், முது மரம் என்ற பெயரும் பளபளப்பான இலைகளும் உள்ள ஆலமரம் ஆகியவை வளர்ந்திருக்கும்.

விளக்கம்:

உத்தரம் - வடக்குத் திசை; உத்த மத்த - மிக உயரமாக வளரும்; கதம்பம் - வெண்கடம்பு மரம்; ஒளிர் போதி - அரச மரம்; மொய்த்து உறு - அடர்த்தியான; ஒளிரும் - பளபளக்கும்; பத்திரம் - இலை; முதுமரம் - ஆலமரம். (36)

மேருமலைப் பகுதியில் நீர் நிலைகள்

1017. குணதிசையில் அருணமெனுங் குளநிலவுந் தடவரைக்கீழ்
மணமலியு மானதமுந் தென்றிசையின் வாய்த்துளது
தணமருவுஞ் சீதோதம் பச்சிமத்திற் றங்கியுறு
முணவினிய மாமடுவும் வடதிசையினுற்றிடுமே.

குண திசையில் அருணம் என்னும் குளம் நிலவும்தடவரைக் கீழ்
மணம் மலியும் மானதமும் தென் திசையில் வாய்த்து உள்ளது
தண்ணம் மருவும் சீதோதம் பச்சிமத்தில் தங்கி உறும்
உண்ணஇனிய மாமடுவும் வடதிசையில் உற்றிடும்.

உரை:

கிழக்கில் உள்ள மந்தரமலை அடிவாரத்தில் அருணம் என்னும் குளம் இருக்கும்; தெற்கில் கந்தமாதனமலை அடிவாரத்தில் மானத சரசு என்னும் குளம் இருக்கும்; மேற்கில் விபுலமலை அடிவாரத்தில் குளிர்ச்சி பொருந்திய சீதோதம்

Koviloor Digital Library

என்னும் குளம் இருக்கும்; வடக்கில் பாருசுவமலை அடிவாரத்தில் பருகுவதற்கு இனிய மகாமடு என்னும் குளம் பொருந்தியிருக்கும்.

விளக்கம்:

குணதிசை - கிழக்கு; பச்சிமம் - மேற்கு; மானதம் - மானதசரசு; இது இன்றும் இமயமலைப் பகுதியில் உள்ளது. இதனை 'மானத வாவி' என்பர்.

தண்ணம் - குளிர்ச்சி; மடு - மலைப்பகுதியில் அமைந்துள்ள பாறைகளுக்கு இடையேயிருக்கும் நீர் நிலை.

உண்ண - அருந்த. (37)

மேருமலையைச் சுற்றிலும் உள்ள சோலைகள்

1018. சயித்திரக்காப் பூருவத்தின வடிவாரந் தனிற்ற ழைக்கும்
விசித்திர நந்தனவன முன்றென்றிசையின் விளங்கியிடும்
வசித்திடுநல் வைப்பிரச வனங்குட பான் மன்னியிடு
முதித்த திரு தாக்கியமும் வட திசையி லொடுங்கிடுமே.

சயித்திரக்கா பூருவத்தின் அடிவாரம் தன்னில் தழைக்கும்
விசித்திர நந்தனவனம் முன் தென்திசையில் விளங்கியிடும்
வசித்திடும் நல் வைப்பிரச வனம் குடபால் மன்னியிடும்
உதித்த திரு தாக்கியமும் வடதிசையில் ஒடுங்கிடும்.

உரை:

கிழக்கு மலை அடிவாரத்தில் சயித்திரக்கா என்னும் பெயருள் நந்தன வனமும், தெற்கு மலை அடிவாரத்தில் விசித்திரை என்னும் நந்தன வனமும், மேற்கு மலை அடிவாரத்தில் வசிப்பதற்கு ஏற்ற நல்ல வைப்பிரசை என்னும் பூங்காவும், வடக்கு மலை அடிவாரத்தில் திருதாக்கியம் என்னும் மலர்ப் பொழிலும் அமைந்திருக்கும்.

விளக்கம்:

பூருவத்தில் - கிழக்கில்; குடபால் - மேற்கில்; மன்னியிடும் - நிலை பெற்றிருக்கும்; தழைக்கும் - செழிக்கும். (38)

தெற்கு மலையில் வளரும் நாவல் மரம்

1019. நறவனைய கனியுதிரு நன்னாவ லெந்நாளு
முறுதியுற வுயிர்க் கெல்லாந் தென்கிரியிலோங்குதலாற்
பெறு நவகண்ட மும்பெரிய நாவலந் தீவெனும் பெயரை
மறுவறு மக்கனித் தீம்நீர் வரையதனை வலம் வருமே.

Koviloor Digital Library

நறவு அனைய கனி உதிரும் நல்நாவல் எந்நாளும்
உறுதி உற உயிர்க்கு எல்லாம் தென்கிரியில் ஓங்குதலால்
பெறும் நவகண்டமும் பெரிய நாவல் அம்தீவு என்னும் பெயரை
மறு அறும் அக்கனித் தீம்நீர் வரைஅதனை வலம் வரும்.

உரை:

தெற்கு மலையில் வளர்ந்திருக்கும் நாவல் மரம் எப்போதும் தேன் போன்ற பழங்களைச் சொரியும். அவற்றை எடுத்து உண்ட உயிர்கள் உடல் வலிமை பெறும். ஆதலால், ஒன்பது கண்டங்களுக்கும் நாவலந்தீவு என்னும் பெயர் ஏற்பட்டது. கனியின் பொன் நிறமான சாறு, மேருமலையை வலமாக வரும்.

விளக்கம்:

நவகண்டம் - கிழக்கு விதேகம், மேற்கு விதேகம், வட விதேகம், தென் விதேகம், வட விரேபதம், தென் விரேபதம், வட பரதம், தென் பரதம், மத்திமகண்டம்; இவையே நவ கண்டம்.

நறவு - தேன்; நவம் - ஒன்பது; நவகண்டம் - ஒன்பது கண்டம்; தீம் - இனிப்பு; மறு - குற்றம்; அறும் - நீங்கும்; வரை - மலை; வலம் - வலப் பக்கமாகச் சுற்றி.

நாவற்பழச்சாறு ஆற்று நீரில் கலந்து செல்வதையே, மலையை வலமாக வரும் என்று குறிப்பிடப்படுகிறது. (39)

நாவற் பழச் சாறு அருந்திய பயன்

1020. மேருவினை வலமாகி மேவியிடு மந்நீரை
யாரு மவர்கனக நிறமார ரயுதாயுளுறச்
சாரவொரு மூன்றுடனுந் தங்கியவாயிரந் தழைக்க
வூரு முயிர் மற்றையவு முண்டதனை யொளியுறுமே.

மேருவினை வலம் ஆகி மேவியிடும் அந்நீரை
ஆரும் அவர் கனகநிறம் ஆவர் அயுத ஆயுள் உறச்
சார ஒரு மூன்றுடனும் தங்கிய ஆயிரம் தழைக்க
ஊரும் உயிர் மற்றையவும் உண்டு அதனை ஒளி உறும்.

உரை:

மேருமலையை வலமாக வருகிற நாவற்பழச் சாற்றை அருந்தியவர்கள், தங்க நிற உடல்களைப் பெற்றவர்களாய்ப் பதின்மூவாயிரம் ஆண்டுகள் வரை உயிர் வாழ்வர். அப்பழச் சாற்றை அருந்திய ஊர்வன முதலான பிற உயிர்களும், இடம்பெயராத செடி கொடி முதலியவையும் பொன் நிறமாக இருக்கும்.

Koviloor Digital Library

விளக்கம்:

அயுதம் - பதினாயிரம்; சார ஒரு மூன்று - மூவாயிரம்; சார - பொருந்த; கனகம் - தங்கம்; ஊரும் - ஊர்ந்து செல்லும். (40)

எட்டுமலைகள்

1021. தடவரையின் றென்திசையிற் றங்கியிடு மொரு சயிலங்
குடகடலைக் கூடவொருதலைகூடக் குணகடலை
யிடமுடைய விதன் றென்பாலித்தகைத்தோர்வரையிசையுந்
திடமுறமுன் முறை திகழு மிமய கிரிய தன்றென்பால்.

தடவரையின் தென் திசையில் தங்கியிடும் ஒரு சயிலம்
குடகடலைக் கூட ஒரு தலைகூடக் குணகடலை
இடம் உடைய இதன் தென்பால் இத்தகைத்து ஓர்வரை இசையும்
திடம்உற முன்முறை திகழும் இமயகிரி அதன்தென்பால்.

உரை:

மேருமலையின் தெற்கில் நிடதம் என்று ஒரு மலை இருகக்கிறது. அதன் கிழக்கிலும் மேற்கிலும் கடல் உண்டு. அதற்குத் தெற்காக ஏமகூடம் என்னும் மலை இருக்கும். அம்மலைக்கு மேற்கிலும் கிழக்கிலும் கடல் பரந்திருக்கிறது. அதற்குத் தெற்கில் இமயமலை இருக்கிறது.

விளக்கம்:

சயிலம் - மலை; குடகடல் - மேற்குக் கடல்; தென்பால் - தெற்கே; குணகடல் - கிழக்கில் உள்ள கடல்; வரை, கிரி - மலை; இமய கிரி - இமயமலை; இமம் - பனி. (41)

எட்டுமலைகள் - தொடர்ச்சி

1022. வடபாகத் தொருகிரிமுன் வகுத்தபடி வதியு மதன்
வடபாலு மொருகிரிமுன் வகுத்தபடி வதியு மதன்
வடபாலு மொருகிரிமுன் வகுத்தபடி வதியு மினிக்
குடபாலிற் குணபாலி லொவ் வொன்று குறுக்குறுமே.

வடபாகத்து ஒருகிரிமுன் வகுத்தபடி வதியும் அதன்
வடபாலும் ஒருகிரிமுன் வகுத்தபடி வதியும் அதன்
வடபாலும் ஒருகிரி முன் வகுத்தபடி வதியும் இனிக்
குடபாலில் குணபாலில் ஒவ்வொன்று குறுக்கு உறும்.

Koviloor Digital Library

உரை:

மேருமலைக்கு வடக்கே நீலகிரி இருக்கும்; நீலகிரிக்கு வடக்கில் சுவேத கிரி இருக்கும்; அந்தச் சுவேதரிகிரிக்கு வடக்கே சிருங்க கிரி இருக்கும்; இனி, மேருமலைக்கு மேற்காக வடக்கில் நீலகிரியையும் தெற்கில் நிடதமலையையும் பொருந்தித் தெற்கு வடக்காகக் கந்தமாதன மலை இருக்கும்; மேருமலைக்குக் கிழக்கில் நீலகிரியையும் நிடதமலையையும் பொருந்தித் தெற்குவடக்காக மாலியவான் என்னும் மலை இருக்கும்.

விளக்கம்:

எட்டுமலைகள் - கைலை, இமயம், மந்திரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனம் ஆகியவை. கிரி - மலை; வதியும் - இருக்கும்; பால் - பக்கம். (42)

பாரத கண்டம்

1023. அட்டகுல பருப்பதங்களமர விடை நவகண்டம்
பட்டபடிபார்க்க விம கிரித்தென்பாற் பாரதத்தை
யொட்டி முதலுரைத்திடுவா மதனையொழிந்தன வெல்லாங்
கட்டமறும மருலகத் திணையெனவே கருதுகவே.

அட்ட குல பருப்பதங்கள் அமர இடை நவகண்டம்
பட்டபடிபார்க்க இமகிரித் தென்பால் பாரதத்தை
ஒட்டி முதல் உரைத்திடுவாம் அதனை ஒழிந்தன எல்லாம்
கட்டம் அறும் அமர் உலகத்து இணை எனவே கருதுக.

உரை:

எட்டுமலைகளுக்கு இடையியேயிருக்கும் தேசங்களைக் கண்டம் என அறிந்திடுக. இமயமலைக்குத் தெற்கில் இருக்கிற பாரத கண்டத்தைத் தவிர, மற்ற எட்டுத் தேசங்களும் தேவர் உலகுக்குச் சமமாகத் துன்பம் இல்லாமல் இன்பங்கள் பொருந்தியனவாய் விளங்கும்.

விளக்கம்:

பருப்பதங்கள் - மலைகள்; நவகண்டம் - ஒன்பது தேசங்கள்; பட்டபடி - உள்ளபடி; பார்க்க - உணர்க; கட்டம் - துன்பம்; அறும் - நீங்கும்; அமரர் - அமிர்தம் அருந்தி இறவாத தேவர்கள்; இணை - சமம், ஒப்பு. (43)

Koviloor Digital Library

பாரத கண்டம்

1024. பாரதமு நவதீவ பாகமுறும வற்றுள்ளுஞ்
சீரியது குமரியெனுந்தீவதனிற் சிறந்திருப்ப
ராரிய ராமந்தணரு மல்லாரு மரு மறையின்
காரியமு முறுமதனி லின்னுமுள கழறிடுவாம்.

பாரதமும் நவதீவபாகம் உறும் அவற்றுள்ளும்
சீரியது குமரி என்னும் தீவம் அதனில் சிறந்து இருப்பர்
ஆரியராம் அந்தணரும் அல்லாரும் அரு மறையின்
காரியமும் உறும் அதனில் இன்னும் உள்ள கழறிடுவாம்.

உரை:

பாரத கண்டம் ஒன்பது தீவுகளாகப் பிரியும். அந்த ஒன்பது தீவுகளிலும் குமரித் தீவு உயர்வானது. அதில் ஆரியரான பிராமணரும், ஆரியர் அல்லாதவர்களான அரசர், வைசியர், சூத்திரர்களும் மற்றவர்களும் சிறந்து விளங்குவர். அங்கு வேதியர்களின் ஓமம் வளர்த்தல் முதலான செயல்களும் நடைபெறும். இன்னும் பல நிகழ்வுகள் உள்ளன. அவற்றையும் உரைப்போம்.

விளக்கம்:

நவதீவம் - ஒன்பது தீவுகள்; சீரியது - உயர்வானது; ஆரியராம் - ஆரியரான; அந்தணர் - பிராமணர்; (44)

பாரத கண்டம் - தொடர்ச்சி

1025. கங்கை முதனதிபலவுங் காசி முதற்பதிபலவும்
பொங்கும் மகேந்திரம் பொதிய முதன் மலையும் பொருந்தியிடு
மங்கதற்கு யோசனை யோராயிரமுண் டெனவறிக
வெங்கொடிய மிலேச்சரிட மெட்டினு மெண்ணாயிரமே.

கங்கைமுதல் நதிபலவும் காசிமுதல் பதிபலவும்
பொங்கு மகேந்திரம் பொதியம் முதல் மலையும் பொருந்தியிடும்
அங்கு அதற்கு யோசனை ஓர்ஆயிரம் உண்டு என அறிக
வெம் கொடிய மிலேச்சரிடம் எட்டினும் எண்ணாயிரம்.

உரை:

கங்கை முதலான பேராறுகளும் காசிமுதலான சிவப்பதிகளும், சிறப்பான மகேந்திரம் பொதிகை முதலிய மலைகளும் பொருந்தியுள்ளன. அந்தக் குமரித்தீவின் பரப்பளவு ஆயிரம் யோசனை தூரமாகும். மற்ற இந்திர தீவு முதலாக எட்டுத் தீவுகள்

Koviloor Digital Library

உள்ளன. ஒரு தீவுக்கு ஓர் ஆயிரம் யோசனை தூரமாக, எட்டுத் தீவுகளுக்கும் எண்ணாயிரம் யோசனை தூரம் பொருந்தும். அந்த எட்டுத் தீவுகளிலும் நாகரிகம் இல்லாத மிகக் கொடிய காட்டுமிராண்டிகள் இருப்பர். (45)

நவகண்டத்தின் எட்டுத் தீவுகள்

1026. இந்திரமே சேருகமே தாமிரமே யெழிற் கெபத்தி
சந்துமலி நாகமதே சவுமியமே காந்தருவ
மந்தமலி வாருணமே யெனவெட்டு மதித்திடுக
விந்தவள வெனை நிலத்துங்கிரி விரிவீராயிரமே.

இந்திரமே சேருகமே தாமிரமே எழில் கெபத்தி
சந்துமலி நாகமதே சவுமியமே காந்தருவ
மந்தமலி வாருணமே என எட்டு மதித்திடுக
இந்த அளவு ஏனை நிலத்தும் கிரிவிரி ஈராயிரம்.

உரை:

இந்திரத் தீவு, சேருகத்தீவு, தாமிரத் தீவு, அழகுள்ள கெபத்தித்தீவு, நாகத் தீவு, சவுமியத் தீவு, காந்தருவத் தீவு, வருணத்தீவு ஆக எட்டுத் தீவுகள் என அறிக. இந்த எட்டுத் தீவுகளும் தனித் தனியே ஒன்பதாயிரம் யோசனை தூரம் பரப்பளவு கொண்டவை என அறிக. இமயமலைமுதல் சிருதங்கமலை ஈறாக ஒவ்வொரு மலையின் உயரமும் அகலமும் இரண்டாயிரம் யோசனை தூரம் உள்ளவை; கந்தமாதன மலையும் மாலியவான் மலையும் தனித்தனி ஆயிரம் யோசனை உயரமும் அகலமும் உடையவை.

விளக்கம்:

எனை – ஏனை, மற்ற; கிரிவிரிவு மலையின் அகல உயரம். (46)

குமரித் தீவின் மலைகள்

1027. உன்னதத் தென் மகேந்திர மேயுயர் மலயஞ் சையகிரி
வின்னவிலுஞ் சுத்திகமே யிருக்கு முயர் விந்தியமே
பன்னு புகழ் மிகுபாரி யாத்திரமேயெனப் பகர்ந்த
வின்னகிரியேழு முதற் குமரி தலத்திசைந்தனவே.

உன்னதத் தென் மகேந்திரமே, உயர் மலயம், சையகிரி,
வின்னவிலும் சுத்திகமே, இருக்கு, உயர் விந்தியமே.
பன்னுபுகழ் மிகு பாரியாத்திரமே, எனப் பகர்ந்த
இன்னகிரி ஏழுமுதல் குமரி தலத்து இசைந்தன.

Koviloor Digital Library

உரை:

தெற்கு முதல் வடக்கு வரை மிக உயரமான மகேந்திர மலை, உயரம் பொருந்திய பொதிய மலை, சையமலை, சுத்திகமலை, இருக்கு மலை, உயர்ந்த விந்திய மலை, புகழ் பெற்ற பாரியாத்திர மலை என்ற ஏழு மலைகளும் குமரித் தீவில் உள்ள மலைகள் ஆகும்.

விளக்கம்:

உன்னதம் - உயர்ந்தது; தென் - தெற்கு; மலயம் - பொதியமலை; சையகிரி - சையமலை; குமரிதலம் - குமரிக் கண்டம், குமரித் தீவு. (47)

குமரிக் கண்டத்தின் தேசங்கள்

1028. அங்க மெதிர் நிரனிறையாற் சமாக்கியமு மணிமலையுஞ்
சங்கமுந்தண் குமுதமுதல் வாரமெனுந் தலந்தானுந்
துங்கமலி பொதித் தென்பாற் றொடர்ந்த வடிவாரத்தி
னங்கனக விலங்கையு மேழ் வரைச் சாரலடித் தேசம்.

அங்கம் எதிர்நிரல் நிறையால் சமாக்கியமும் அணி மலையும்
சங்கமும் தண்குமுதம் முதல்வாரம் என்னும் தலம் தானும்
துங்கம் மலிபொதித் தென்பால் தொடர்ந்த அடிவாரத்தில்
அம்கனக இலங்கையும் ஏழ் வரைச் சாரல் அடித் தேசம்.

உரை:

வடக்கில் இருந்து ஒழுங்காகப் பாரியாத்திர மலையடிவாரத்தில் அங்கம் என்னும் நாடும், விந்திய மலைச் சாரலில் சமாக்கியம் என்னும் நாடும், இருக்கு மலைச் சாரலில் அணிமலை என்னும் நாடும், சுத்திகாமலைச் சாரலில் சங்கம் என்னும் நாடும், சையமலைச் சாரலில் தண்மை பொருந்திய குமுதம் என்னும் நாடும், பொதிய மலைச் சாரலில் நன்மையுடைய வராகம் என்னும் நாடும், மிக உயரமான பொதியமலையின் தெற்கில் இருக்கிற மகேந்திர மலைச்சாரலில் பொன்மயமான இலங்கை என்னும் நாடும் அமைந்திருக்கும்.

விளக்கம்:

நிரல்நிறை - ஒழுங்காக நிலைப்படுதல்; அணி - அழகு; தண் - குளிர்ச்சி; வாரம் - வராகம்; துங்கம் - உயர்வு; அம் - அழகு; கனகம் - பொன், தங்கம்; ஏழ் - ஏழு; வரைச்சாரல் - மலையடிவாரம். (48)

திருக்கயிலைச் சிறப்பு

1029. இமயகிரி வடகுணபாலிமையவர்க டொழுதேத்த
வுமையுடனே பசுபதிதானுறைவனொரு கிரிமிசையில்

Koviloor Digital Library

தமையுணர்ந்த தபோதனருந் தங்குவரச் சயிலத்திற்
கமையுடையாரதன் பெயரைக் கயிலையெனக் கழறுவரே.

இமய கிரிவடகுணபால் இமைவர்கள் தொழுது ஏத்த
உமையுடனே பசுபதிதான் உறைவன் ஒரு கிரிமிசையில்
தமை உணர்ந்த தபோதனரும் தங்குவர் அச்சயிலத்தில்
கமைஉடையார் அதன் பெயரைக்கயிலை எனக் கழறுவர்.

உரை:

இமயமலையின் வடகிழக்கில் தேவர்கள் வணங்கிப் போற்றும்படி பார்வதியுடன் சிவபெருமான் எழுந்தருளியிருப்பார். அதன் ஒரு புறத்தில் தம் உள்ளத்திலே அருள் ஒளியைக் கண்ட சிவஞானியரும் தங்கியிருப்பர். பொறுமையுடைய பெரியார்கள் சிவபெருமான் இருக்கும் மலையைக் கயிலை மலை என்று கூறுவர்.

விளக்கம்:

இமய கிரி - இமயமலை; வடகுணபால் - வடகிழக்கில்; இமையவர் - கண்களை இமைக்காத தேவர்கள்; தொழுது - வணங்கி; உமை - பார்வதி; பசுபதி - சிவபெருமான்; உறைவன் - இருப்பார்; தபோதனர் - தவத்தையே செல்வமாகப் பெற்ற துறவியர்; சயிலம் - மலை; கமை - பொறுமை; கழறுவார் - சொல்லுவார். (49)

திருக்கயிலைச் சிறப்பு

1030. ஆகமங்களனைத் தினையு மருமறைகளொரு நான்கு
மோகமற முனிவர்க்கு மொழிந்தருள வொழிந்தனவு
மாகருமோ மாலயனு மலர் தூவித் தலைவணங்க
வேகனிறைய தன் மிசையு மிருக்க விரும்பின னினிதே.

ஆகமங்கள் அனைத்தினையும் அரும்மறைகள் ஒரு நான்கு
மோகம் அறமுனிவர்க்கு மொழிந்து அருள ஒழிந்தனவும்
மாகருமோ மால் அயனும் மலர் தூவித் தலை வணங்க
ஏகன்இறை அதன் மிசையும்இருக்க விரும்பினன் இனிது.

உரை:

காமிகம் முதலான இருபத்தெட்டு ஆகமங்களையும், இருக்கு முதலான நான்கு வேதங்களையும் மயக்கம் அகலச் சனகர் முதலான முனிவர்களுக்கு உணர்த்தி, அக்கயிலைமலையில் தேவர், விட்டுணு, பிரமன் ஆகியோர் மலர் இட்டுத் தலையால் வணங்க, உலகுக்குத் தனி இறைவனாகிய சிவ பெருமான் இனிதாக எழுந்தருள விரும்பினான்.

Koviloor Digital Library

விளக்கம்:

ஆகமங்கள் - சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பிரிவுகளாக அமைந்த 28ம், *திருமந்திரம் போன்ற சைவநூல்களும்.*

மறைநான்கு - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற வேதங்கள்.

மாகர் - தேவர்; மால் - விட்டுணு; அயன் - பிரமன்; ஏகன் - இறைவன். (50)

ஒன்பது நாடுகளின் விவரம்

1031. இமகிரிக்குந் தென்கடற்கு மிடைப்பாகம் பாரதமே
யிமகிரி மற்றேம கிரியிடைப் பாகங் கிம்புருட
மமைநிலவு நிசதகிரித் தென்பாக மரி வருட
மிமைய வருமிருந்த பெரு வரைச் சாரலிளாவிரதம்.

இமகிரிக்கும் தென்கடற்கும் இடைப்பாகம் பாரதமே
இமகிரிமற்று ஏமகிரி இடைப்பாகம் கிம்புருடம்
அமை நிலவும் நிச தகிரித் தென்பாகம் அரிவருடம்
இமையவரும் இருந்த பெரும் வரைச்சாரல் இளாவிரதம்.

உரை:

தென் கடலுக்கும் இமயமலைக்கும் நடுவே பாரத கண்டம்; இமயமலைக்கு வடக்கிலும் ஏமமலைக்குத் தெற்கிலும் கிம்புருட கண்டம்; ஏமமலைக்கு வடக்கிலும் நிடத மலைக்குத் தெற்கிலும் பொறுமையாளர்களின் அரிவருட கண்டம்; மேருமலையைச் சூழ்ந்த தேவர்கள் இருக்குமிடம் இளாவிரத கண்டம் எனப்பெயர் பெறும்.

விளக்கம்:

இமகிரி - பனிமலை; இடைப் பாகம் - நடுப்பகுதி; அமை - பொறுமை; இமையவர் - தேவர்; வரைச் சாரல் - மலையடிவாரம். (51)

ஒன்பது நாடுகளின் விவரம்

1032. நீலகிரி வடதேச மிரமியமே யென நினைக
பாலனைய கிரிவடபாலிரணியமே யெனப்பார்க்க
சீலமுளார் சிருங்ககிரி வடபாலைத் தென்பாலை
யோல மிடு முததிக்குங் குரு வெனவே யுன்னுகவே.

நீலகிரி வடதேசம் இரமியமே என நினைக
பால் அனைய கிரிவடபால் இரணியமே எனப்பார்க்க

Koviloor Digital Library

சீலம் உள்ளார் சிருங்ககிரி வடபாலைத் தென்பாலை
ஓலம் இடும் உததிக்கும் குரு எனவே உன்னுக.

உரை:

மேருமலைக்கு வடக்கேயிருக்கிற நீலமலைக்கும் சுவேதமலைக்கும் நடுவே இரமிய கண்டம்; சுவேதமலைக்கு வடக்கே சிருங்க மலைக்குத் தெற்கே இரணிய கண்டம்; சிருங்க மலைக்கு வடக்கே அலைகள் ஆரவாரிக்கும் வட கடலுக்குத் தெற்கில் நற்குணமுள்ளவர்கள் இருக்கும் குரு கண்டம் என அறிக.

விளக்கம்:

நீலகிரி - நீலமலை; வடபால் - வடக்கே; வடபாலை - வடக்கு; சீலம் உள்ளார் - ஒழுக்கம் உடையோர்; தென்பாலை - தெற்குப் பக்கம்; ஓலம் - அலையோசை; உததி - கடல். (52)

ஒன்பது நாடுகளின் விவரம்

1033. குடகடற்குக் கீழ்க் கேதுமால மெனக் குறித்திடுக
மிடலுடைய வியன் கந்தமாதனத்தின் மேற்கதுதா
னிடமுடைய மாலியவா னெனுங்கிரிக்குக் கீழ்பாற்கீழ்க்
கடலினுக்கு மேல் பாகம் பத்திரமாக் கருதுகவே.

குடகடற்குக் கீழ்க் கேதுமாலம் எனக் குறித்திடுக
மிடல் உடைய வியன்கந்த மாதனத்தின் மேற்கதுதான்
இடம் உடைய மாலியவான் என்னும் கிரிக்குக் கீழ்பால் கீழ்க்
கடலினுக்கு மேல்பாகம் பத்திரமாக் கருதுக.

உரை:

மேற்குக் கடலுக்குக் கிழக்கே வலிமையுடைய கந்தமாதன மலைக்கு மேற்கில் கேதுமாலம் என்னும் கண்டமும், விரிவையுடைய மாலியவான் மலைக்குக் கீழ்க் கிழக்குக் கடலுக்கு மேற்கில் பத்திர அசுவ கண்டமும் உள்ளன எனக் கருதுக.

விளக்கம்:

குடகடல் - மேற்குக் கடல்; மிடல் - வலிமை; இடம் - விரிவு; கீழ்பால் - கிழக்கில்; பத்திரம் - பத்திராசுவ கண்டம்; மேல்பாகம் - மேற்கு. (53)

எட்டு நாட்டவரின் உணவுப் பழக்கம்

1034. உண்டிடுவர் கருங்குவளையுருவ மதிய னையரரி
கண்டமதில் கலந்திருப்பர் காலமுமோரயுதமுள

Koviloor Digital Library

கண்டகியின் கனியுணவு கருங் குவளை நிறமாயு
முண்டயுதமுயர் கேது மாலத்தினுறை வார்க்கே.

உண்டிடுவர் கருங்குவளை உருவம் மதி அனையர் அரி
கண்டம் அதில் கலந்து இருப்பர் காலமும் ஓர்அயுதம்உள
கண்டகியின் கனி உணவு கருங்குவளை நிறமாயும்
உண்டு அயுதம் உயர் கேதுமாலத்தில் உறைவார்க்கு.

உரை:

பத்திர அசுவம் என்னும் நாட்டில் வாழ்பவர்கள்; நெய்தற் பூவை உணவாக உண்டு நிலவு ஒளியைப் போல உடல் நிறம் உள்ளவர்களாய், பதினாயிரம் ஆண்டுகள் உயிர்வாழ்வர். கேதுமால நாட்டில் உள்ளவர்கள் பலாப்பழத்தை உணவாகக் கொண்டு, நீலநிற உடம்பு உடையவர்களாய்ப் பதினாயிரம் ஆண்டு வாழ்வர்.

விளக்கம்:

கருங்குவளை - நெய்தற்பூ; மதி அனையர் - நிலவு போல நிறமுள்ளவர்; அரி - அசுவம்; அயுதம் - பதினாயிரம்; கண்டகி - முள்ளுள்ளது என்ற பொருளிற் பலாப்பழத்தைக் குறிக்கும். கண்டகம் - முள். கருங்குவளை நிறம் - நீல நிறம், கருமை; உறைவார் - இருப்பவர்கள். (54)

குரு நாடு!

1035. ஆயுங்காற் குருகண்டத் தமர்வார்க டமக்கெல்லா
மாயுவுமூவாயிரமு மயுதமும் வேண்டிய கனியுண்
டேயுமுடற்பச்சை நிறஞ் சிறுவருளரிருவரவ
ராயுதரத் தொருபொழுதினாணெனப் பெண்ணென வமர்வார்.

ஆயுங்கால் குருகண்டகத்து அமர்வார்கள் தமக்கு எல்லாம்
ஆயுவும்மூவாயிரமும் அயுதமும் வேண்டிய கனி உண்டு
ஏயும்உடல் பச்சைநிறம் சிறுவர் உளர் இருவர்அவர்
ஆய்உதரத்து ஒரு பொழுதில் ஆண்எனப் பெண்என அமர்வார்.

உரை:

குருகண்டத்தில் உள்ளவர்கள் பச்சைநிற உடம்பினர்; பதின்மூவாயிரம் ஆண்டுகள் உயிர் வாழ்பவர்; பழங்களையே உணவாகக் கொள்பவர்கள். இங்குள்ள தாய் கருத்தரித்த ஒரே நாளில் ஆணும் பெண்ணுமாக இரு மக்களைப் பெறுவார். (55)

Koviloor Digital Library

சந்திர தீவினர்

1036. அத்தகைய குருகண்ட வடபாக மதுதன்னிற்
சித்தரொடு முனிவரருஞ் சாரணருஞ் செறிந்திருப்பர்
துய்ப்பதுவு மூலபலஞ் சோமனெனத் துளங்கொளியா
ருத்தமத்த சந்திர தீவெனும் பெயரும் முளததற்கே.

அத்தகைய குருகண்ட வடபாகம் அதுதன்னில்
சித்தரொடு முனிவரரும் சாரணரும் செறிந்து இருப்பர்
துய்ப்பதுவும் மூலம்பலம் சோமன் என்னத் துளங்கு ஒளியார்.
உத்தமத்த சந்திர தீவு என்னும் பெயரும் உளது அதற்கு.

உரை:

முன்சொன்ன குருகண்டத்தின் வடபாகத்தில் உயர்வான சந்திரதீவு என்னும் கண்டம் உள்ளது. அதில் சித்தர்களும் சிறந்த முனிவர்களும் சாரணர் என்ற தேவ வர்க்கத்தாரும் திரளாக வாழ்வர்; சந்திரதீவினர் நிலவின் ஒளி போன்ற நிறமுடையவர்கள்; கிழங்கு, கனிகளையே உணவாகக் கொள்பவர்கள்.

விளக்கம்:

சித்தர் - யோகசித்தி பெற்றவர்; செறிந்து - திரளாக; துய்ப்பது - உண்பது; மூலம் - கிழங்கு; பலம் - கனி; சோமன் - சந்திரன்; துளங்கு - விளங்கு; உத்தமத்த - உயரிய; சாரணர் - வானில் இசையருதியங்கி லோகநன்மைக்குதவும் ஒரு தேவப்பிரிவினர். (56)

சந்திர தீவும் பத்திராகர கண்டமும்

1037. ஆயுவயுதத்துடன் மூவாயிரமு மவர்க்குண்டு
வாயுதிசை தனிற் பத்திராகரமே வாய்த்த பெயர்
தேயமு முண்டதிற்றிகழ்வார் சித்தருநன்முனிகணமு
மாயுமியற் சாரணருங் கனிமூல மருந்துவரே.

ஆயு அயுதத்துடன் மூவாயிரமும் அவர்க்கு உண்டு
வாயுதிசை தன்னில் பத்திராகரமே வாய்த்த பெயர்
தேயமும் உண்டு அதில் திகழ்வார் சித்தரும்நல் முனிகணமும்
ஆயும்இயல் சாரணரும் கனிமூலம் அருந்துவர்.

உரை:

அந்தச் சந்திர தீவில் இருப்பவர்கள் பதின்மூவாயிரம் ஆண்டுகள் உயிர்வாழ்வர். முன்சொன்ன குரு கண்டத்தின் வடமேற்கே பத்திராகர கண்டம்

Koviloor Digital Library

இருக்கிறது. அதில் சித்தர்கள், முனிவர்களும் திகம்பரரான சாரணர்களும் இருப்பார்கள். அவர்கள் பழங்களையும் கிழங்குகளையும் உணவாகக் கொள்வர்.

விளக்கம்:

ஆயு - வயது; அயுதத்துடன் மூவாயிரம் - பதின்மூவாயிரம்; வாயுதிசை - வடமேற்கு; சாரணர் - சாரணர் பதவியற்ற திகம்பரர்.

குறிப்பு:

நாடு வேறு. கண்டம் வேறு. நாடு கண்டத்தின் ஒரு தேசம். கண்டத்தை நாடென் கையில் அதன் பொருள் பிழைபடும். (57)

இரணிய கண்டம்

1038. செங்கமல நிறமுடையர் திகழ்மூவாயிர வயுதந்
தங்கிடுவரிரணியத்திற் றங்குநர் நல்லிருசபல
நுங்கிடுவர் மதியனைய நிறமுடையவர் நுவலுங்கா
லங்கயுத மைந் நூறீராயிரமுமவர் நிலையே.

செங்கமலம் நிறம் உடையர் திகழ்மூவாயிரம் அயுதம்
தங்கிடுவர் இரணியத்தில் தங்குநர்நல் இருசபலம்
நுங்கிடுவர் மதிஅனைய நிறம் உடையர் நுவலுங்கால்
அங்குஅயுதம் ஐந்நூறு ஈர்ஆயிரமும் அவர்நிலை.

உரை:

முன் சொன்ன பத்திராகர கண்டத்தில் இருப்பவர் செந்தாமரை போன்ற நிறம் உடையவர்; பதின்மூவாயிரம் வயதையும் உடையவர்கள். இரணிய கண்டத்தில் இருப்பவர்கள் மாதுளம் பழங்களை உணவாகக் கொள்பவர்கள்; நிலவின் ஒளிபோன்ற நிறம் உள்ளவர்கள்; பன்னீராயிரத்து ஐநூறு வயது உடையவர்கள்.

விளக்கம்:

செங்கமலம் - செந்தாமரை; தங்குநர் - இருப்பவர்; இருசம் - இருசகம், எலுமிச்சம்; பலம் - பழம்; நுங்குவர் - உண்பர்; மதி - நிலவு; நுவலுங்கால் - சொல்லுங்கால்; ஈர் - இரண்டு. (58)

இரமிய கண்டம்

1039. உற்றிடுவார்க் கிரமியத்தி லொளிகரிய குவளைநிறந்
துற்றுவதாலின்கனியே தொடர்வருட மவர்க்கயுத

Koviloor Digital Library

மற்றுமிரண்டாயிரமுண்டரிவருட மருவினர்க்குப்
பற்றிய மெய்யொளி வெள்ளி பானமுந் தீங்கரும்பாமே.

உற்றிடுவார்க்கு இரமியத்தில் ஒளிகரிய குவளைநிறம்
துற்றுவது ஆலின் கனியே தொடர்வருடம் அவர்க்கு அயுதம்
மற்றும் இரண்டு ஆயிரம் உண்டு; அரிவருடம் மருவினர்க்குப்
பற்றியமெய் ஒளி வெள்ளி பானமும் தீம் கரும்புஆம்.

உரை:

இரமிய கண்டத்தில் இருப்பவர் நெய்தற்பூவைப் போலக் கரிய நிறமுடையவர்கள்; ஆலம்பழங்கள் உணவாக உண்பவர்கள்; பன்னீராயிரம் வயது உடையவர்கள். அரிவருட கண்டத்தில் வாழ்பவர்களுக்கும் வயது பன்னீராயிரம்; அவர்கள் வெள்ளியைப் போன்ற நிறமுடையவர்கள்; அவர்கள் இனிய கரும்பின் சாற்றைப் பருகுவர்.

விளக்கம்:

குவளை - நெய்தற்பூ; ஆலின்கனி - ஆலமரத்தின்பழம்; மெய் - உடம்பு; வெள்ளி ஒளி - வெள்ளிநிறம்; பானம் - பருகுவது; தீம் - இனிமை. (59)

கிம்புருடர் கண்டம்

1040. பொன்னுருவர் கிம்புருடர் புசிப்பிறலிப் புன்கனியே
மன்னுமயுதாயுவுள் மனக்கவலைதனையில்லார்
கின்னமிலர் நரைதிரையுங் கிளருடலிற் பிணியினையு
மின்னமுறை மற்றையவேழ் கண்டத்து மெண்ணுகவே.

பொன்உருவர் கிம்புருடர் புசிப்பு இறலிப் புன்கனியே
மன்னும் அயுதம் ஆயுஉளர் மனக்கவலை தனைஇல்லார்
கின்னம்இலர் நரைதிரையும் கிளர்உடலில் பிணியினையும்
இன்னமுறை மற்றைய ஏழ்கண்டத்தும் எண்ணுக.

உரை:

கிம்புருடர் கண்டத்தில் இருப்பவர்கள் தங்கநிற உடம்பை உடையவர்கள்; இத்திப் பழத்தை உணவாகக் கொள்வர்; பதினாயிரம் ஆண்டு உயிர்வாழ்வர்; அவர்கள் மனக்கவலை, துன்பம், முதுமைக்குரிய நரை திரை ஆகியவை இல்லாமல் மகிழ்ச்சியோடு இருப்பவர்கள். இவ்வாறே ஏனைய ஏழுகண்டங்களில் வாழ்பவர்களும் இருப்பார்கள்.

Koviloor Digital Library

விளக்கம்:

பொன்உருவர் - தங்கநிற உடம்பினர்; புசிப்பு - உணவு; இறலி - இத்தி; மன்னும் - நிலைபெறும்; அயுதம் - பதினாயிரம்; ஆயு - ஆயுள்; கின்னம் - துன்பம்; இன்னமுறை - இவ்வாறு; ஏழ் - ஏழு; எண்ணுக - கருதுக. (60)

வாழ்த்துரை

1041. ஈங்குரைத்த விருநான்கு கண்டத்து ளெல்லோர்க்கு
மோங்கியிடுங் கிருதயுகம போலொழிந்த யுகமெல்லா
நீங்கரிய நன்மையினை நிறுத்தியிடு நிறையறிவு
தாங்கிடுவரவருடலினுரமாதி தன்னையுமே.

ஈங்கு உரைத்த இருநான்கு கண்டத்துள் எல்லோர்க்கும்
ஓங்கியிடும் கிருதயுகம போல் ஒழிந்த யுகம் எல்லாம்
நீங்கு அரிய நன்மையினை நிறுத்தியிடும் நிறைஅறிவு
தாங்கிடுவர் அவர் உடலில் உரம் ஆதி தன்னையும்.

உரை:

இங்கு உரைத்த எட்டுக்கண்டங்களிலும் வாழுகின்ற அனைவரும் செழிப்பான முதல் ஊழியாங்கிருதயுகம் முதலான காலங்களில் வளமாக வாழ்ந்தது போல, இனிவரும் காலத்திலும் நிலையான நன்மைகள், நிறைந்த அறிவு வளர்ச்சி, உடல் வலிமை முதலான பேறுகளைப் பெறுவர்.

விளக்கம்:

ஈங்கு - இங்கு; இருநான்கு கண்டம் - எட்டுநாடுகள்; கிருதயுகம் - புராணங்கள் கூறும் முதல்யுகம், முதல்ஊழி; ஓங்கியிடும் - வளர்ச்சி பெறும்; ஒழிந்த - கடந்துபோன; நீங்கரிய - நிலையான; உரம் - வலிமை. (61)

பாரத நாட்டினர்

1042. அறிவுவலியாயு ளுருவாகார மவையெல்லாஞ்
செறியுமுகத்தினுக் கிசையப் பாரதத்துட் டிகழ்வார்கட்
குறுமுணவு புலத்துழலாலு ழுவதுமின்றியுமுண்டு
பெறுபலமுந் தைவிகமாதிய மூன்றிற் பிறழாவே.

அறிவுவலி ஆயுள் உரு ஆகாரம் அவை எல்லாம்
செறியும் உகத்தினுக்கு இசையப் பாரதத்துள் திகழ்வார் கட்கு
உறும் உணவு புலத்துஉழலால் உழுவது இன்றியும் உண்டு
பெறும்பலமும் தைவிகம் ஆதிய மூன்றில்பிறழா.

Koviloor Digital Library

உரை :

பாரத நாட்டினர் அறிவு, வலிமை, உடல், உணவு ஆகிய அனைத்தும் யுகபேதத்துக்கு ஏற்றபடி பொருந்தும். அவர்கள் உழவுத் தொழிலாக் கிடைக்கும் அரிசியையும், உழவுத் தொழில் புரியாமல் கிடைக்கும் காய்கனிகளையும் உணவாகக் கொள்வர்; தெய்வத்தால் வரும் துன்பம், ஐம்புலன்களால் நேரும் இன்பதுன்பங்கள். இயற்கையின் விளைவுகள் ஆகியவற்றையும் அனுபவிப்பர்.

விளக்கம் :

வலி - வலிமை; **உரு** - உடம்பு; **ஆகாரம்** - உணவு; **செறியும்** - பொருந்தும்; **உகம்** - ஊழி, நாள்; **புலம்** - விளைநிலம்; **பலம்** - பயன்; **தைவிகம்** - தெய்வத்தால் வருவது; **பிறழா** - விலகாது. (62)

பாரத கண்டத்தினர்

1043. **மற்றைய நற்றலமெவற்றும் வாழ்வார்கள் பாரதத்தைப்**
பற்றிவினை நலம்பயின்றார் முற்பலத்திலெனப் பார்க்க
முற்றியுற வினைபலவு முளைத்த தலமிது வதனான்
முற்றவினையனை வருமிவ்விடமதனுண் முயல்வாரே.

மற்றைய நல்தலம்எவற்றும் வாழ்வார்கள் பாரதத்தைப்
பற்றிவினை நலம்பயின்றார்முன் பலத்தில் எனப்பார்க்க
முற்றிஉற வினைபலவும் முளைத்த தலம்இது அதனால்
முற்றவினை அனைவரும் இவ்இடம் அதனுள் முயல்வார்.

உரை :

பாரத கண்டம் உழவு, தொழில், திருமணம், வாணிகம், கல்வி, சிற்பம் என்னும் செயல்கள் நிகழும் நாடு. இங்கு முன் பிறவிகளில் தேடிய நல்வினை தீவினைப் பயன்கள் நுகர்ந்து, எஞ்சியுள்ள பயனை நுகரக் கிம்புருடகண்டம் முதலான எட்டு இடங்களையும் அடைந்து அங்குள்ள இன்பங்களையும் அனுபவிப்பர். பின்னர், மீண்டும் பாரத கண்டத்தில் பிறந்து நல்வினைகளையே புரிவர்.

விளக்கம் :

மற்றைய - பிற; **நல்தலம்** - நல்லநாடு; **வினைநலம் பயின்றார்** - நல்வினைகளைச் செய்தவர்கள்; **முற்பலத்தில்** - முன் பிறவிகளில்; **முளைத்த** - தோன்றிய; **முற்றி உற** - முற்றுற வினை பலவும்; **முற்றுற** - வினைப்பயனை நுகர்ந்த பின்னர்; **தலம் இது** - பாரத நாடு; (63)

Koviloor Digital Library

நவகண்டத்தின் விரிவு

1044. தென்றிசைப்பாரதமாதி சிறந்த பெருவரை வடபாற்
குன்றமொருமூன்றினுக்குமப்பாலைக் குருவந்தத்
தொன்றியிடும் யோசனையு மொருநூறாயிரமுண்டு
நின்ற குணக்கொடு குடக்குமிவ்வளவே நிகழ்த்துங்கால்.

தென்திசைப் பாரதம் ஆதிசிறந்தபெருவரை வடபால்
குன்றம் ஒருமூன்றினுக்கும் அப்பாலைக் குரு அந்தத்து
ஒன்றியிடும் யோசனையும் ஒரு நூறு ஆயிரம் உண்டு
நின்ற குணக்கொடு குடக்கும் இவ்வளவே நிகழ்த்துங்கால்.

உரை:

பாரத கண்டத்தின் தென்பகுதிமுதல் மேருமலைக்கு வடக்கில் இருக்கிற நீலமலை முதலான மூன்று மலைகளுக்கும் அப்பால் உள்ள குருநாடு ஈறாகப் பொருந்திய அளவு நூறாயிரம் யோசனை என்று அறிக. மற்றைய கிழக்கும் மேற்கும் நூறாயிரம் யோசனை விரிவை உடையது.

விளக்கம்:

பெருவரை - மேருமலை; அப்பாலை - அப்பால்; குரு - குருநாடு; அந்தத்து - ஈறாக; ஒன்றியிடும் - பொருந்தும்; குணக்கொடு - கிழக்கும்; குடக்கும் - மேற்கும்; ஒரு யோசனை - எட்டுமைல் தூரம். (64)

ஒன்பது கண்டங்களின் பெயர்க் காரணம்

1045. மனுகுலத்துள் வருமங்கி நேத்திரனா மன்னவன்றன்
தனயர்பரதனை முதலோர் சவுரியரொன்ப தின்மருளர்
இனையவர்களாண்டமையா லெய்திய பேரென விவற்றை
நினைக பரதனுக்குரிமை பாரதமே நிகழ்த்துங்கால்.

மனு குலத்துள் வரும் அங்கி நேத்திரனாம் மன்னவன்தன்
தனயர் பரதனை முதலோர் சவுரியர் ஒன்பதின்மர் உளர்
இனையவர்கள் ஆண்டமையால் எய்தியபேர் எனஇவற்றை
நினைக பரதனுக்கு உரிமை பாரதமே நிகழ்த்துங்கால்.

உரை:

இந்த நாவலந்தீவில் மனுவமிசத்தில் தோன்றிய அரசன் அக்கினி நேத்திரன். அவனுக்குப் பரதன், கிம்புருடன், அரி, இளாவிரதன், பத்திராசுரன், கேதுமாலி, இரமியன், இரணியன், குரு என்ற வீரப் புதல்வர்கள் ஒன்பது பேர்

Koviloor Digital Library

உள்ளனர். இந்த ஒன்பது பேரும்ஆட்சி செய்த ஒன்பது நாடுகளும் அவரவர் பெயரைப் பெற்றன. அதில் பரத மன்னனுக்கு உரிமையுடையதாதல்பற்றிப் பாரத நாடு என்னும் பெயர் பெற்றது.

விளக்கம்:

மனுகுலம் - மனுபரம்பரை; தனயர் - புதல்வர்; சவுரியர் - வீரர்; ஒன்பதின்மர் - ஒன்பது பேர்; இனையவர்கள் - இவர்கள்; எய்திய - பொருந்திய; நினைக - எண்ணுக; (65)

தீவுகளின் விவரம்

(பாற்கடல்)

1046. எண்ணுக யோசனையிலக்க மென்றினைய நாவலம்தீ
வெண்ணிடுக விதன்புடை சூழுவரி விரிவிப்படியென்
றெண்ணிடுக விதற்கப்பாற் சாக மிரண்டிலக்கமெனக்
கண்ணிடுக வதற்கப்பாற் பாற்கடலு மக்கணக்கால்.

எண்ணுக யோசனைஇலக்கம் என்றுஇனைய நாவலம் தீவு
எண்ணிடுக இதன்புடை சூழ்உவரி விரிவு இப்படி என்று
எண்ணிடுக இத்ற்கு அப்பால் சாகம் இரண்டு இலக்கம் எனக்
கண்ணிடுக அதற்கு அப்பால்பால் கடலும் அக்கணக்கால்.

உரை:

இந்த நாவலம் பெருந்தீவை நூறாயிரம் யோசனை நீளம் என்று அறிக. இந்நாவலந் தீவைச் சூழ்ந்த உவர்நீர்க் கடல் நூறு ஆயிரம் யோசனை என்று எண்ணுக. இந்த உவர்நீர்க் கடலுக்கு அப்பால் இருக்கும் சாவகத் தீவின் நீளம் இரண்டு நூறாயிரம் யோசனை. அந்தச் சாவகத்தீவுக்கு அப்பால் இருக்கும் பால்கடல் இரண்டு நூறாயிரம் யோசனை தூரம் உடையது.

விளக்கம்:

பாற்கடல் பற்றிச் *சேந்தனாரின் திருப்பல்லாண்டு* கூறுகிறது; திருமுறைகளிலும் பாற்கடல் பற்றிய குறிப்புகள் உண்டு; திருப்புகழிலும் சுவாமி அருணகிரிநாதர் பாற்கடலைக் குறித்துள்ளார். ஆனால், சேந்தனாரோ, திருமுறை ஆசிரியர்களோ, சுவாமி அருணகிரிநாதரோ, அப்பாற்கடல் எங்கேயிருக்கிறது என்று கூறவில்லை. பாற்கடலில் நாராயணன் பாம்புப் படுக்கையில் துயில் கொள்ளுகிறான் என்று கூறுகின்ற வைணவர்களும் பாற்கடல் எங்கு உள்ளது என்பதைக் கூறவில்லை. ஆனால், முதன்முறையாகச் சிவதருமோத்தரத்தின் கடைசி இயலாகிய கோபுர இயலின் அறுபத்து ஆறாம் பாடலின் தான் ''சாவகத்தீவுக்கு அப்பால் உள்ள

Koviloor Digital Library

பால்கடல்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சாவகத்தீவு என்பது, இந்தோனீசியாவில் உள்ள 'ஜாவா' ஆகும். இந்த ஜாவாவில் இன்றும் சைவசமயம் நிலைத்திருக்கிறது. இங்கு சிவன் கோயில் உண்டு; சிவன் வழிபாடும் உண்டு. (66)

தயிர்க்கடல்! நெய்க்கடல்

1047. எண்ணிடுக வதற்கப்பாற் குசைத்தல நான்கிலக்கமென
வெண்ணிடுக வதற்கப்பாற்ற தியுததி முனையிலக்கத்
தெண்ணிடுக வதற்கப்பாற் கிரவுஞ்ச மெட்டிலக்க
மெண்ணிடுக வதற்கப்பா னெய்க்கடலு மெட்டெனவே.

எண்ணிடுக அதற்குஅப்பால் குசைத்தலம் நான்கு இலக்கம் என
எண்ணிடுக அதற்குஅப்பால் ததிஉததிமுன்னை இலக்கத்து
எண்ணிடுக அதற்கு அப்பால் கிரவுஞ்சம் எட்டு இலக்கம்
எண்ணிடுக அதற்கு அப்பால் நெய்க்கடலும் எட்டு என.

உரை:

முன் சொன்ன பாற்கடலுக்கு அப்பால் நான்கு நூறாயிரம் யோசனை தூரத்தில் குசைத்தீவு இருக்கிறது. அந்தக் குசைத்தீவுக்கு அப்பால் நான்கு நூறாயிரம் யோசனை தூரம் தயிர்க்கடல் பரவியிருக்கிறது! அந்தத் தயிர்க் கடலுக்கு அப்பால் எட்டு நூறாயிரம் யோசனை தூரம் கிரவுஞ்சத் தீவு விரிந்திருக்கிறது; அந்தக் கிரவுஞ்சத் தீவுக்கு அப்பால் எட்டு நூறாயிரம் யோசனை தூரம் நெய்க் கடல் பர்வியிருக்கிறது!

விளக்கம்:

குசை - தருப்பைப் புல்; கிரவுஞ்சம் - அன்றில் பறவை; ததி - தயிர்; உததி - கடல்; இலக்கம் - நூறாயிரம்; இலட்சம் ஆனால், தூலக்கண் காட்சிக்கு அப்பாலுங் காட்சிகள் உண்டு என்பது சமயம். சமய நோக்கில் அவை இல்லையெனப் படாவாம். (67)

கருப்பஞ்சாற்றுக்கடல்! தேன் கடல்!

1048. எண்ணிடுக வதற்கப்பாற் சான்மலியெண்ணிரண்டுலக்க
மெண்ணிடுக வதற்கப்பாலிக்கிரத முற்படியே
யெண்ணிடுக வதற்கப்பாற்கோமேத மெண்ணான்கென்
றெண்ணிடுக வதற்கப்பான் மதுக்கடலுமுனையெண்ணால்.

எண்ணிடுக அதற்கு அப்பால் சான்மலி எண்இரண்டு லக்கம்
எண்ணிடுக அதற்கு அப்பால் இக்கு இரதம் முன்படியே
எண்ணிடுக அதற்கு அப்பால் கோமேதம் எண்நான்கு என்று
எண்ணிடுக அதற்கு அப்பால் மதுக்கடலும் முன்னை எண்ணால்.

Koviloor Digital Library

உரை:

முன் சொன்ன நெய்க்கடலுக்கு அப்பால் இருக்கிற சான்மலித்தீவு, பதினாறு நூறாயிரம் யோசனை தூரம் பரப்பளவு உடையது. அந்தச் சான்மலித் தீவுக்கப்பால், கருப்பஞ் சாற்றுக்கடல், பதினாறு நூறாயிரம் யோசனை தூரம் பரவியிருக்கிறது! அந்தக் கருப்பஞ்சாற்றுக் கடலுக்கு அப்பால் கோமேதத் தீவு, முப்பத்து இரண்டு நூறாயிரம் யோசனை தூரம் விரிந்திருக்கிறது. அந்தக் கோமேதத்தீவுக்கு அப்பால் உள்ள தேன்கடல், முப்பத்து இரண்டுநூறாயிரம் யோசனை தூரம் பரந்திருக்கிறது.

விளக்கம்:

எண்இரண்டுலக்கம் - பதினாறு நூறாயிரம்; **எண்நான்கு லக்கம்** - முப்பத்து இரண்டு நூறாயிரம்; **இக்கு** - கரும்பு; **இரதம்** - சாறு; **மது** - தேன். (68)

நன்னீர்க்கடல்

1049. **எண்ணுக யோசனையெட்டெட்டிலக்க மெனவதற்கப்பா
லண்ணிய புட்கரணி தலத்தகலத்தையதற்கப்பா
லண்ணியசுத்தோதகத்தின கலமு முன்னறைந்தபடி
திண்ணியமால் வரையுமினி யிவற்றினுக்குத் தெரிப்பாமே.**

**எண்ணுக யோசனை எட்டு எட்டுஇலக்கம் என அதற்கு அப்பால்
அண்ணிய புட்கரணிதலத்து அகலத்தை அதற்கு அப்பால்
அண்ணிய சுத்த உதகத்தின் அகலமும் முன் அறைந்தபடி
திண்ணிய மால்வரையும் இனிஇவற்றினுக்குத் தெரிப்பாம்.**

உரை:

முன்சொன்ன தேன் கடலுக்கு அப்பால் உள்ள புட்கரணித் தீவின் பரப்பை அறுபத்து நான்கு நூறாயிரம் யோசனை தூரம் எனக்கருதுக. அந்தப் புட்கரணித் தீவுக்கு அப்பால் இருக்கும் நல்ல நீர்க்கடலின் பரப்பளவும் அறுபத்து நான்கு நூறாயிரம் யோசனை ஆகும். இனி, சாவகத்தீவில் உறுதியாகப் பருத்திருக்கிற மலைகளைப் பற்றி உரைப்போம்.

விளக்கம்:

எட்டு எட்டு இலக்கம் - அறுபத்து நான்கு நூறாயிரம்; **யோசனை** - ஒரு யோசனை என்பது, எட்டு மைல் நீளம் உடையது; **அண்ணிய** - கிட்டிய; **திண்ணிய** - உறுதியான; **மால்** - பருமை; **வரை** - மலை, நல்ல நீர்க்கிணறென்று நாட்டு வழக்கம் உண்டு. (69)

Koviloor Digital Library

சாவகத்தீவு முதலான தீவுகளின் மலை அளவு

1050. சாற்றியிடுஞ் சாகமுதலைந்தினுக்குந் தடவரையு
மூற்றமிகு மெவ்வேழுண்டொருகிரி சக்கரம் போல
மாற்றறவே புட்கரணி தலத்தை வலமாய் வதியுந்
தேற்றுததி முடிவிடத்துந் திகழுமொருவரையது போல்.

சாற்றியிடும் சாகம்முதல் ஐந்தினுக்கும் தடவரையும்
ஊற்றம்மிகும் எவ்வேழு உண்டு ஒருகிரி சக்கரம்போல
மாற்றுஅறவே புட்கரணித்தலத்தை வலமாய் வதியும்
தேற்று உததிமுடிவு இடத்தும் திகழும்ஒருவரை அதுபோல்.

உரை:

சாவகத்தீவு முதலிய ஐந்து தீவுகளிலும் ஒவ்வொன்றுக்கும் ஏழு வீதம் முப்பத்தைந்து மலைகள் உண்டு. இவைதவிர, புட்கரணித்தீவில் இருக்கும் ஒப்பற்ற மானதமலை, அதைச் சக்கரம் போல வலமாகச் சூழ்ந்திருக்கும். தவிர சக்கரவாளகிரி, நன்னீர்க்கடலைச் சூழ்ந்து இடைவெளியில்லாமல் பொருந்தி நிற்கும்.

விளக்கம்:

ஊற்றம் - ஊற்று; மாற்று அறவே - மாறாமல்; உததி - கடல்; முடிவு இடம் - எல்லை வரை; கிரி - மலை. (70)

தீவுகளில் இருப்பவர்களின் தன்மை

1051. சாகமுதலிருமூன்றிற் றங்குநர்கடமக்கெல்லாஞ்
சோகமிலை யெந்நாளுந்துய்த்திருப்பர் சுகமவர்தம்
மாகமதில் நரையுமிலைத் திரையு மயுதாயுவளர்
மோகமிலர்கலியுகத்துங் கிம்புருடர்முறை பெறுவார்.

சாகம்முதல் இருமூன்றில் தங்குநர்கள் தமக்கு எல்லாம்
சோகம் இல்லை எந்நாளும் துய்த்துஇருப்பர் சுகம்அவர்தம்
ஆகம் அதில்நரையும் இல்லைத் திரையும் அயுதஆயு உளர்
மோகம் இலர் கலியுகத்தும் கிம்புருடர் முறைபெறுவார்.

உரை:

சாவகத்தீவு முதலான ஆறுதீவுகளிலும் வாழ்கிறவர்கள், அனைவருக்கும் எக்காலத்திலும் கவலையில்லை; நலமுடன் வாழ்வர்; அவர்களுக்கு நரை திரையாகிய முதுமையில்லை; பதினாயிரம் ஆண்டுகள் வாழ்வர். இக்கலிகாலத்திலும் மயக்கம் இல்லாதவராய்க் கிம்புருட நாட்டில் வாழ்பவர்களை ஒத்திருப்பர்.

Koviloor Digital Library

விளக்கம்:

சோகம் - துக்கம்; இருமூன்று - ஆறு; தங்குநர் - வாழ்பவர்; துய்த்து - அனுபவித்து; ஆகம் - உடம்பு; நரை - வெண்மயிர்; திரை - தோல் சுருக்கம்; அயுதம் - பதினாயிரம்; ஆயு - வயது, ஆயுள்; மோசம் - மயக்கம். (71)

பூவுலகம்

1052. ஏழுதீவு மெழுகடலுமீழமயமெனு நிலனுந்
தழல்போலுமொளியிப்பாற் றமமப்பாற் றகுமலையுங்
குழுவாய பேரிருளு மதற்கப்பாற் குரைகடலு
மழகாய வண்டகடா காந்தமும் பூதலமாமே.

எழு தீவும் எழுகடலும் ஈழமயம் என்னும் நிலனும்
தழல்போலும் ஒளிஇப்பால் தமம்அப்பால் தருமலையும்
குழுஆய பேர் இருளும் அதற்கு அப்பால் குரைகடலும்
அழகு ஆய அண்ட கடாக அந்தமும் பூதலம்ஆம்.

உரை:

நாவலந்தீவு முதலான ஏழு தீவுகளும், உவர்நீர்க்கடல் முதலான ஏழு கடல்களும், பொன்மயமான தரையும், தீயைப் போன்ற ஒளி ஒருபுறமும், இருள் மறுபுறமும், தகுதிவாய்ந்த மலையும் இருள் செறிந்த நிலமும், ஒலிக்கின்ற கடலும், அழகான அண்ட கோளத்தின் மேல் ஒட்டு முடிவும் அடங்கியது பூவுலகு.

விளக்கம்:

எழு - ஏழு; ஈழம் - பொன்; ஈழமயம் - பொன்தன்மை; தழல - தீ; தமம் - இருள்; குழு - செறிந்த; குரை - ஒலிக்கின்ற; அண்டகடாகம் - உருண்டையான உலகின் மேல் ஓடு; அந்தமும் - முடிவும்; பூதலம் - பூவுலகு. (72)

சக்கரவாள மலையின் தன்மை

1053. இசைத்த விதத்திருளொருபாலொளி யொருபாலேய்ந்தகிரி
வசிப்பர் முதற்பாகத்தின் வடிவியக்க ரிராக்கதிரும்
பசுத்த விராக்கதர்தாம் பைசாசர்த் திசைப்பாலகரு
மிசைப் பயிலும் விண்ணவர் பொன்னிலத்து விளையாடுவரே.

இசைத்த விதத்து இருள் ஒருபால் ஒளிஒருபால் ஏய்ந்தகிரி
வசிப்பர் முதற்பாகத்தில் வடிவுஇயக்கர் இராக்கதிரும்
பசுத்த இராக்கதர்தாம் பைசாசர் திசைப்பாலகரும்
மிசைப்பயிலும் விண்ணவர் பொன்நிலத்து விளையாடுவர்.

Koviloor Digital Library

உரை:

இவ்வாறு சொல்லிய ஒளி ஒருபாலும் இருள் ஒரு பக்கமுமாக இருக்கிற சக்கரவாள மலையில் அழகிய இயக்கரும், நிலவின் ஒளிநிறமும் பசுமை நிறமும் கலந்த இராக்கதரும், பைசாசமொழிபேசுவோரும், இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசனானவன் ஆகிய எட்டுத் திசைகளின் காவலர்களும், மேலேயுள்ள தேவர்களும் வாழ்வர். மேலும் பொன்மயமான நிலத்தில் ஒளி உலகில் இருப்பவர்கள், அங்கிருந்து இறங்கி வந்து விளையாடிய பிறகு தங்கள் இருப்பிடத்தை அடைவர்.

விளக்கம்:

சக்கரவாளம் - உட்புறம் ஒளியும் வெளிப்புறம் இருளும் கொண்டு பூவுலகைச் சூழ்ந்துள்ளதாகக் கருதப்படும் மலை; மேருமலையின் மூன்றாவது அடிவாரம்; **வடிவு** - அழகு; **இராக்கதிர்** - நிலவு; **பசுத்த** - பசுமையான; **பைசாசர்** - பைசாச மொழி பேசும் இனத்தினர். **திசைப்பாலகர்** - திசைக்காவலர்; **மிசை** - மேலே. (73)

சக்கரவாள மலையின் இருட்பகுதி

1054. விதித்தவுரை மரணமலால் விபரீதமுறவிதிக்கு
வதைத்தவர்க டமைத்தாமே மையலுறவதிவார்கள்
புதைத்தவிருளுலகத்துட் பொருளல்லாப் புல்லியரே
கதத்து மருந்துயரத்துந் தம்முடலைக் களைவாரே.

விதித்தஉரை மரணம் அல்லால் விபரீதம் உறவிதிக்கு
வதைத்தவர்கள் தம்மைத் தாமே மையல் உறவதிவார்கள்
புதைத்த இருள் உலகத்துள் பொருள் அல்லாப்புல்லியரே
கதத்தும் அரும் துயரத்தும் தம் உடலைக் களைவார்.

உரை:

சக்கரவாள மலையின் இருட்பகுதியில் வாழ்கிறவர்கள், ஒரு பொருளிலும் சேராத கீழ்மக்கள் ஆவர். அவர்கள் இயற்கைக்கு மாறாகத் தம்மைத்தாமே அழித்துக் கொள்பவர்கள்; அவர்கள் மயக்கத்தைப் பொருந்தி, கோபத்தினாலும், அகலாத நோயாலும் தம் உயிரைப் போக்கிக் கொள்வர்; சிவத்தொண்டு, ஆசிரியத்தொண்டு, அடியார்தொண்டு போன்ற பயனுள்ள வழிகளில் தம் உடல் உழைப்பைப் பயன்படுத்தார்.

விளக்கம்:

விதித்தஉரை மரணம் - அற நூல்கள் கூறுகின்ற இயல்பான இறப்பு; **விபரீதம்** - மாறுபாடு; **வதைத்தவர்கள்** - அழித்தவர்கள்; **மையல்** - அறிவு மயக்கம்;

Koviloor Digital Library

புல்லியர் - கீழானவர்; கதத்து - கோபம் கொண்டபோது; அரும்துயரத்தும் - தீராத நோயால் வருந்திய போது; உடலைக் களைவார் - உயிரைவிடுவார். (74)

அண்டகோள மேல் ஒடுமுதல் மேருமலையின் நடுவரை

1055. அழகாயகடாகத்துக் களவுகனமொரு கோடி
யெழுநூறாயிரத் துடனேயிருபது நூறாயிரத்தைத்
தழுவியுறுமொரு கோடி சமுத்திர நாயகத் தளவு
குழுவிருளு மேழைந்து கோடியினுங் கூறிடுவாம்.

அழகுஆய கடாகத்துக்கு அளவுகனம் ஒருகோடி
எழுநூறு ஆயிரத்துடனே இருபதுநூறு ஆயிரத்தைத்
தழுவிஉறும் ஒருகோடி சமுத்திர நாயகத்து அளவு
குழுவுஇருளும் ஏழ்ஐந்து கோடியிலும் கூறிடுவாம்.

உரை:

அழகான அண்டகடாக ஒட்டின் கனம் ஒரு கோடி யோசனை தூரம். பெரிய புறக்கடலின் அகலம் ஒரு கோடியே இருபத்து ஏழு நூறாயிரம் யோசனை தூரமாகும். முன் சொன்ன இருள் நிலத்தின் அகலம், முப்பத்தைந்து கோடி யோசனை தூரம் மேலும் அதனுடைய அளவையைக் கூறுவோம்.

விளக்கம்:

சமுத்திரநாயகம் - பெரிய புறவாழிக்கடல்; அண்டம் - உலக உருண்டை; கனம் - பருமன்; குழுவு - நெருங்கிய; ஏழ் ஐந்து - முப்பத்தைந்து. (75)

சக்கரவாளமலை அளவு

1056. இருபது நூறாயிரத்தினொன்றூன மிவற்றுடனே
வருவதுதானாற் பதினாயிரமெனவே மதித்திடுக
விருளொருபா லொளியொருபாலிசைந்தபெருவரைக்கயுத
மொருபத்துக் கோடியுறுங்கனகமய வொளிநிலனே.

இருபதுநூறு ஆயிரத்தில் ஒன்று ஊனம் இவற்றுடனே
வருவது தான் நாற்பதினாயிரம் எனவே மதித்திடுக
இருள் ஒருபால் ஒளிஒருபால் இசைந்த பெருவரைக்கு அயுதம்
ஒரு பத்துக் கோடி உறும் கனகமய ஒளி நிலன்.

உரை:

முன் சொன்ன இருள் நிலத்தின் அளவு முப்பத்தைந்து கோடியுடன் பத்தொன்பது நூறாயிரத்து நாற்பதினாயிரம் யோசனை தூரம் உண்டு என அறிக.

Koviloor Digital Library

ஒருபக்கம் ஒளியாகவும் மற்றொரு பக்கம் இருளாகவும் இருக்கிற பெருமையை உடைய சக்கரவாள மலை, பதினாயிரம் யோசனை விரிவை உடையதாயிருக்கும். முன் சொன்ன பொன் நிற நிலம், பத்துக்கோடி யோசனை விரிவை உடையது.

விளக்கம்:

ஊனம் - குற்றவு; **பெருவரை** - சக்கரவாள மலை; **அயுதம்** - பதினாயிரம். (76)

ஏழு கடல்களின் விரிவு

1057. எழு நூறாயிரத்துடனே யிருபது நூறாயிரத்தைத்
தழுவியுறுமொரு கோடி சத்த சமுத்திர விரிவு
மெழுநிலமு மைம்பதினாயிரங் குறைய விவ்வளவே
குழுமியுறும் பஞ்சரசதகோடி பெருங்குன்றிறுவாய்.

எழுநூறு ஆயிரத்துடனே இருபது நூறாயிரத்தைத்
தழுவி உறும் ஒருகோடி சத்தசமுத்திர விரிவு
எழு நிலமும் ஐம்பதினாயிரம் குறைய இவ்வளவே.
குழுமிஉறும் பஞ்சரசதகோடி பெருங்குன்று இறுவாய்.

உரை:

முன்சொன்ன ஏழு கடல்களின் விரிவு ஒருகோடியே இருபத்தேழு நூறாயிரம் யோசனை. நாவலந்தீவில் மேருமலை முதலாக தெற்கே ஏழு தீவுகளும் ஒரு கோடியேயிருபத்தாறு நூறாயிரத்து ஐம்பதினாயிரம் யோசனை உண்டென அறிக. மேருமலை முதலாகக் கடாகம் ஈறாகத் தொகுத்து அறியும் இடம் ஐம்பது கோடி யோசனை விரிவைப் பொருந்தும். (77)

கருத்து வேறுபாடு உண்டு

1058. தரைத்தலத்துக் கீழ்த்தலங்கள் பேதமுறச் சாற்றியிடுந்
தரைத்தலத்து மேற்றலமுந்தவறுரையா சாத்திரமுந்
தரைத் தலத்தும் பேதமுறச் சாற்றியிடுஞ் சாற்றிடினும்
விருத்தமிலைச் சிருட்டிதொறும் பேதமுற விளைதலினால்.

தரைத் தலத்துக் கீழ்த்தலங்கள் பேதமுறச் சாற்றியிடும்
தரைத்தலத்து மேல் தலமும் தவறு உரையா சாத்திரமும்
தரைத் தலத்தும் பேதம் உறச் சாற்றியிடும் சாற்றிடினும்
விருத்தம் இல்லைச் சிருட்டிதொறும் பேதம் உற விளைதலினால்.

Koviloor Digital Library

உரை:

இந்தத் தரைக்குக் கீழேயிருக்கும் நரகங்களை ஆகமங்கள் மாறுபாடாகக் கூறும்; இத்தரைக்கு மேல் உள்ள உலகங்களையும் வேறுபடுத்திக் கூறும். சிவாகமங்களுக்கு இடையே கருத்து வேறுபாடு இருப்பினும் அவை பொய் கூறா; அவற்றிற்கிடையே முரண் இல்லை. காலந்தோறும் படைப்பு மாறுதலின் கருத்து வேறுபாடு நிகழும்.

விளக்கம்:

கீழ்த் தலங்கள் - நரகங்கள்; **பேதம்** - மாறுபாடு; **மேல் தலம்** - மேல் உலகு; **சிருட்டி** - படைப்பு, காலமாறுதல்; **விருத்தம்** - முரண்பாடு.

'இருவேறு உலகத்து இயற்கை' என்பது வள்ளுவர் வாய்மொழி. இதற்கு ஏற்பச் சமய நூல்களின் கொள்கையும் கருத்துகளும் ஒருவகையாக உள்ளன; விஞ்ஞான நூல்களின் கொள்கையும் கருத்துகளும் இன்னொரு வகையாக உள்ளன. சமயம், நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டது. விஞ்ஞானம் கண்கண்ட சான்றுகளை மட்டும் ஆதாரமாகக் கொண்டிருக்கின்றது. (78)

உலகை அளவிட முடியாது

1059. **எண்ணரிய வாருயிர்க ளண்ட முமிப்படித்தானே
எண்ணரிய வெனுமமலனியலெனின் மற்றோரியலி
னெண்ணியவனளவிடுதலென்னை யெனில்வினை விதத்தாற்
பண்ணிடுவனண்ட விதஞ்சிருட்டி தொறும் பலபடியால்.**

**எண்அரிய ஆருயிர்கள் அண்டமும் இப்படித்தானே
எண்அரிய எனும்அமலன் இயல்எனில் மற்றுஓர் இயலில்
எண்ணிஅவன் அளவிடுதல் என்னைஎனில் வினை விதத்தால்
பண்ணிடுவன் அண்டம் விதம்சிருட்டி தொறும் பலபடி.**

உரை:

உயிர்கள் அளவு அற்றவையாக உள்ளன. அவ்வாறே இந்த உலக வகைகளும் அளவற்றவை. மலம் இல்லாத சிவன் அருளிச் செய்த காமிகம் முதலான ஆகமங்களின் செய்யுள்களின் எண்ணிக்கையில் ஓர் ஆகமத்துக்கும் மற்றோர் ஆகமத்துக்கும் இடையே ஏற்றத்தாழ்வு உண்டு. அவ்வாறே, இறைவன் ஒவ்வொரு படைப்புக் காலத்திலும் உலகங்களைப் பலவகைகளாகப் படைப்பான்.

விளக்கம்:

எண்ணரிய - கணக்கிட முடியாத; **அண்டம்** - உலகு; **அமலன்** - மலம் இல்லாத சிவன்; **இயல்** - சிவாகமம்; **சிருட்டி தொறும்** - ஒவ்வொரு படைப்பிலும். (79)

Koviloor Digital Library

சிவதருமோத்தரம்

1060. ஏகனருள் சிவதருமோத்தரமெனுநூ லெண்ணுங்கோ
லாகமத்துட் சருவோத்தத்துபபேத மதனாலே
யாகமத்துட்படியித னுளருகிவருமெனவறிக
வாகமத்தின்படி மற்றையியலுள்ளு மடைந்துறுமே.

ஏகன் அருள் சிவதருமோத்தரம் என்னும் நூல் எண்ணுங்கால்
ஆகமத்துள் சருவோத்தத்து உபபேதம் அதனாலே
ஆகமத்துள் படி இதனுள் அருகிவரும் என அறிக
ஆகமத்தின்படி மற்றை இயல் உள்ளும் அடைந்து உறும்.

உரை:

ஒப்பற்ற சிவபிரான் அருளிச் செய்த *சிவதருமோத்தரம்*, ஒரு தலைமையான ஆகமமா, துணை ஆகமமா என்றால், *சருவோத்தம்* என்னும் ஆகமத்தில் பதினொரு வகையாக விரிந்துள்ளதில், எட்டாவது பிரிவாக அமைந்துள்ள இச்*சிவதருமோத்தரம்* ஒரு துணைஆகமம் ஆகும். இதில் பிற ஆகமக் கருத்துகளும் சுருக்கமாக வரும்.

விளக்கம்:

சருவோத்தம் - இது, இலிங்காதிக்கம், சுரத்தியக்கம், சங்கர தந்திரம், மகேச்சுர ராகமம், அசுங்கியா தந்திரம், அனிலாகமம், துவந்துவாகமம், சிவதருமோத்தரம், வாயுப்புரோக்தம், திவ்வியபுரோக்தம், ஈசானியம் எனப்பதினொரு உட்பிரிவுகளை உடையது. இதில் எட்டாவது உட்பிரிவாக அமைந்தது *'சிவதருமோத்தரம்''*. (80)

மேல் உலகம்

1061. தரைத்தலமு முனிவரனே தகைபெறவே தொகையாக்கி
யுரைத்தனமேற்புவலோக முதலாயவுலகினையுந்
தரித்திடுக தொகை செய்தே சாற்றிடுவாந் தவறறவே
விரித்தவுரை விளம்புமவர் வினைவிரைய வீட்டிடவே.

தரைத்தலமும் முனிவரனே தகைபெறவே தொகை ஆக்கி
உரைத்தனம்மேல் புவலோகம் முதல் ஆய உலகினையும்
தரித்திடுக தொகை செய்தே சாற்றிடுவாம் தவறு அறவே
விரித்தஉரை விளம்பும் அவர்வினை விரைய வீழ்த்திட.

Koviloor Digital Library

உரை:

முனிவரிற் சிறந்தவனே! மண்ணுலகின் வடிவை முறையாகத் தொகுத்துச் சொன்னோம். இனி, விண்ணுலகம் முதலான உலகுகளையும் தொகுத்து உரைப்போம். அதனை அறிவாயாக. இவ்வாறு தொகுத்துக் கூறுவதைக் குற்றமில்லாமல் விளக்கி உரைப்பவர்களின் வினை விரைவில் அகலுமாறு;

விளக்கம்:

தரைத்தலம் - மண்ணுலகு; தகைபெற - பொருத்தமாக; தொகை ஆக்கி - தொகுத்து; உரைத்தனம் - சொன்னோம்; புவலோகம் - விண்ணுலகம்; தரித்திடுக - அறிவாயாக; விளம்பும் அவர் - பிறருக்கு விளக்கியுரைப்பவர். (81)

வான உலகு

1062. தரைக்குமேற் புவலோக மதுதனில்
அருக்கன் சோகனெனுமிவராதிய
ரிருப்பர் தத்தம் பலத்தினையெய்தியே
பரித்த நீளம் பதினைந் திலக்கமே.

தரைக்கு மேல் புவலோகம் அது தன்னில்
அருக்கன் சோமன் என்னும் இவர் ஆதியர்
இருப்பர் தம்தம் பலத்தினை எய்தியே
பரித்த நீளம் பதினைந்து இலக்கம்.

உரை:

இந்தப் பூமிக்கு மேலே புவலோகம் என்ற உலகு இருக்கிறது. அவ்வான உலகில் சூரியன் சந்திரன் முதலியோர் தம் தம் பதவிகளில் தம் தம் உலகில் இருப்பார்கள். இவர்களைத் தாங்குகின்ற வான உலகு பதினைந்து நூறாயிரம் யோசனை உயரமுடையது.

விளக்கம்:

புவலோகம் - ஏழுலகில் இரண்டாவது; அருக்கன் - சூரியன்; சோமன் - சந்திரன்; பலம் - புண்ணிய பாவத்துக்கேற்ற பதவி; பரித்த - தாங்கிய. (82)

அருக்கன், உடுபதி, உடுக்கள், புதன் உலகுகள்

1063. ஓரிலக்க மருக்கனுலகமே
லோரிலக்கமுடுபதிலோகமே
லோரிலக்கமுடுக்களுலகமே
லீரிலக்கம் புதனுலகேயுமே.

Koviloor Digital Library

ஓர் இலக்கம் அருக்கன் உலகம் மேல்
ஓர் இலக்கம் உடுபதி உலகம் மேல்
ஓர் இலக்கம் உடுக்கள் உலகம் மேல்
ஈர் இலக்கம் புதன் உலகு ஏயும்.

உரை:

சூரியன் உலகு நூறாயிரம் யோசனை உயரம் உடையது; அதற்கு மேல் உள்ள சந்திரன் உலகு நூறாயிரம் உயரம் உள்ளது; அதற்குமேல் உள்ள நட்சத்திரங்களின் உலகும் நூறாயிரம் யோசனை உயரமாகும்; அதற்கு மேல் இருக்கும் புதன் உலகு, இரு நூறாயிரம் யோசனை உயரத்தை பொருந்தும்.

விளக்கம்:

ஓர் - ஒன்று; ஈர் - இரண்டு; அருக்கன் - சூரியன்; உடுபதி - சந்திரன்; உடுக்கள் - நட்சத்திரங்கள். (83)

சுக்கிரன், அங்காரகன், சுரர்குரு, சனி உலகுகள்

1064. ஈரிலக்கமொண் சுக்கிரனெல்லைமே
லீரிலக்கமங்காரக னெல்லைமே
லீரிலக்கஞ் சுரர் குருவெல்லைமே
லீரிலக்கஞ் சனியுல கேயுமே.

ஈர் இலக்கம் ஒண் சுக்கிரன் எல்லைமேல்
ஈர் இலக்கம் அங்காரகன் எல்லைமேல்
ஈர் இலக்கம் சுரர்குரு எல்லைமேல்
ஈர் இலக்கம் சனி உலகு ஏயும்.

உரை:

முன் சொன்ன புதன் உலகுக்கு மேல் சுக்கிரனுடைய உலகு இரு நூறாயிரம் யோசனை உயரத்தில் உள்ளது; சுக்கிரனுடைய உலகுக்கு மேலே இரு நூறாயிரம் யோசனை உயரமுள்ள செவ்வாய் உலகு இருக்கிறது; செவ்வாய் உலகுக்கு மேலே வியாழன் உலகு இரு நூறாயிரம் யோசனை உயரத்தில் உள்ளது; வியாழன் உலகுக்கு மேலே இருக்கும் சனி உலகு, இருநூறு ஆயிரம் யோசனை உயரத்தைப் பொருந்தும்.

விளக்கம்:

ஒண் – ஒளி பொருந்திய; சுக்கிரன் – வெள்ளி; அங்காரகன் – செவ்வாய்; சுரர்குரு – வியாழன்; ஏயும் – பொருந்தும். (84)

Koviloor Digital Library

மாதவர், துருவன் உலகுகள்

1065. ஓரிலக்க மேழ் மாதவரூர் மிசை
யோரிலக்கந்துருவனுல குயர்
பாரின்மீது பதினைந்து லக்கமுஞ்
சேருமே புவலோகஞ் சிறக்குமே.

ஓர் இலக்கம் ஏழ்மாதவர் ஊர்மிசை
ஓர் இலக்கம் துருவன் உலகு உயர்
பாரின்மீது பதினைந்து லக்கமும்
சேருமே புவலோகம் சிறக்கும்.

உரை:

முன் சொன்ன சனி உலகுக்கு மேல் நூறாயிரம் யோசனை உயரத்தில் சப்தரிஷி மண்டலம் ஏழு மாதவர்களின் உலகு இருக்கிறது. அந்த மாதவர் உலகுக்கு மேலே நூறாயிரம் யோசனை உயரத்தில் துருவன் உலகு இருக்கிறது. இம்மண்ணுலகுக்கு மேலே பதினைந்து நூறாயிரம் யோசனை உயரத்தில் வான உலகு இருக்கிறது என்று அறிக.

விளக்கம்:

ஏழுமாதவர் - அத்திரி, வசிட்டர், புலத்தியர், புலகர், பிருகு, அங்கிரா, மரீசி என்ற எழுவர். துருவன் - உத்தான பாத அரசனுடைய மகன். பார் - பூமி; மீது - மேலே; புவலோகம் - வானஉலகு. (85)

இந்திரன் உலகு

1066. அதற்குமே லமரேச னரும்புரி
யதற்கு நீளமசீதியு மைந்துமா
மதற்குமேன் மகலோக மதுதனில்
வதிப்பர் மாதவராதி மரீசியும்.

அதற்குமேல் அமரேசன் அரும்புரி
அதற்கு நீளம் அசீதியும் ஐந்தும் ஆம்
அதற்கு மேல் மகலோகம் அது தன்னில்
வதிப்பர் மாதவர் ஆதி மரீசியும்.

உரை:

அந்த வான உலகுக்கு மேலே எண்பத்து ஐந்து நூறாயிரம் யோசனை உயரத்தில் இந்திரன் உலகு இருக்கிறது. இந்திரன் உலகுக்கு மேலே மகலோகம் இருக்கிறது. அதில் பெரிய தவத்தினரான சித்தர்களும், மரீசியும் இருப்பார்கள்.

Koviloor Digital Library

விளக்கம்:

அமரேசன் - இந்திரன்; மரீசி - ஏழு இருடிகளில் ஒருவர்; அசீதி - எண்பது; அசீதியும் ஐந்தும் - எண்பத்து ஐந்து; வதிப்பர் - வதிவர், தங்குவர்; புரி - உலகு. (86)

பிதிர்தேவர் உலகு

1067. உயரந்தானிருகோடியுறு மதற்
குயருமெல்லை சனதல முன்னத
முயருநாலிரு கோடியென்றுன்னுக
வுயரு மாபிதிர் தேவருறைவரே.

உயரம்தான் இருகோடி உறும் அதற்கு
உயரும் எல்லை சனதலம் உன்னதம்
உயரும் நால்இரு கோடி என்று உன்னுக
உயரும் மாபிதிர் தேவர் உறைவர்.

உரை:

முன் சொன்ன மகலோகம், இரண்டு கோடியோசனை உயரம் பொருந்தும். அந்த மகலோகத்துக்கு மேலே சனலோகம், எட்டுக்கோடி யோசனை உயரம் பொருந்தும் என்று அறிக. அதில் பிதிர் தேவர் இருப்பர்.

விளக்கம்:

பிதிர் தேவர் - கவ்விய வாகனர், அனலர், சோமர், யமர், அரியமனர், அக்கினி வாக்கர், பெரக்கிஷ், ஆசியபர், சோமபா ஆகியோர். உன்னதம் - உயர்ச்சி; உன்னுக - கருதுக. (87)

தவஉலகும் அயன் உலகும்

1068. அதற்கு மேற்றவ லோகமருந்தவ
ரதற்குள் வாழ்வர் சனகனையாதிய
ரதற்குநீளமுமாறிரு கோடியா
மதற்குமேலயன் றேசமென்னாய்கறே.

அதற்குமேல் தவலோகம் அருந்தவர்
அதற்குள் வாழ்வர் சனகனை ஆதியர்
அதற்கு நீளமும் ஆறுஇரு கோடிஆம்
அதற்கு மேல் அயன்தேசம் என்று ஆய்க.

உரை:

அந்தச் சனலோகத்துக்கு மேல் தவலோகம் பன்னிரண்டு கோடி

Koviloor Digital Library

உயரத்தைப் பொருந்தும். அதில் சனகர், சனந்தனர், சநாதர், சனற்குமாரர் முதலானோர் தங்கியிருப்பர். அந்தத் தவலோகத்துக்கு மேலே பிரமன் உலகு உள்ளது என்று அறிக.

விளக்கம்:

அருந்தவர் - மேலான தவம்புரிந்தவர்; ஆறுஇரு - பன்னிரண்டு; அயன் - பிரமன்; தேசம் - உலகு; ஆய்க - ஆராய்ந்து அறிக. (88)

அயன், அரி உலகுகள்

1069. அதற்கு நீளமும் ஆறுடன் பத்துறு
மதற்கு மேலரி தேசமென்றாய்கவே
யதற்கு நீள நாற்கோடி யென்றாய்கவே
யதற்கு மேற் சிவலோகமோராறும்.

அதற்கு நீளமும் ஆறுடன் பத்து உறும்
அதற்கு மேல் அரிதேசம் என்று ஆய்கவே
அதற்கு நீளம் நால்கோடி என்று ஆய்கவே
அதற்கு மேல் சிவலோகம் ஓர் ஆறு உறும்.

உரை:

பிரமனுடைய சத்தியலோகம் பதினாறு கோடி யோசனை உயரத்தைப் பொருந்தும். அந்தப் பிரமனுடைய உலகுக்கு மேலேயிருப்பது அரியின் உலகு என்று அறிக; அது நாலுகோடி யோசனை உயரம் உடையது. அதில் மாயவனும் அவனுடைய அடியார்களும் இருப்பர். அரியின் உலகுக்கு மேலே உள்ள சிவலோகம் ஆறு கோடி யோசனை உயரத்தைப் பொருந்தும். அதில், பார்வதி தேவியாருடன் விட்டுணு, பிரமன் வணங்கச் சிவபெருமான் எழுந்தருளியிருப்பார்,

விளக்கம்:

அரி - விட்டுணு; தேசம் - உலகு; ஆய்க - ஆராய்ந்து அறிக. (89)

சிவ உலகு

1070. அதற்கு மேலுறு மண்டகடாக மொய்ம்
பதற்கனந்தனைக் கோடியென்றாய்கவே
மதிக்க வைம்பது கோடியும் வாய்த்தமை
கதித்தவண்ட மெலைக் கடாகத் தொடும்.
அதற்குமேல் உறும் அண்டகடாக மொய்ம்பு
அதன் கனம் தன்னைக் கோடி என்று ஆய்கவே

Koviloor Digital Library

மதிக்க ஐம்பது கோடியும் வாய்த்தமை
கதித்த அண்டம் எல்லைக் கடாகத் தொடும்.

உரை:

அந்தச் சிவலோகத்தின் மேல் நெருங்கிய அண்ட கோளத்தின் மேல் ஓடு, ஒரு கோடி யோசனை உயரமென்று அறிக. பூமிக்கு மேல் உயர்ந்துள்ள அண்ட கடாகத்தின் வரை, ஐம்பது கோடி யோசனை உயரம் என்று அளவிடுக.

விளக்கம்:

மொய்ம்பு - வலிமை; கதித்த - பருத்த. ஐம்பது கோடி வாய்த்தமை - வானலோகம் பதினைந்து நூறாயிரம்; சுவர்க்கலோகம் எண்பத்தைந்து நூறாயிரம்; மகலோகம் இரண்டுகோடி; சனலோகம் எட்டுக்கோடி; தவலோகம் பன்னிரண்டு கோடி; சத்திய லோகம் பதினாறு கோடி; விட்டுணு லோகம் நாலுகோடி; உருத்திர லோகம் ஆறுகோடி; அண்டகடாகம் ஒரு கோடி. ஆக ஐம்பது கோடி. (90)

கோபுரம் இருக்கும் இடம்

1071. உரைத்த விதவுலகத்து ளொப்பிலிமுப்புரத்தினையு
மெரித்த விறையெரியாகி யிருவருறு மிகலினையும்
மரித்தருள் செயமலனெலை நந்தைமுதலைந்தினையுந்
தரித்திணையைத் தரியாத தலமுடிவிற்றயங்கியதே.

உரைத்தவிதம் உலகத்துள் ஒப்பிலி முப்புரத்தினையும்
எரித்த இறை எரிஆகி இருவர்உறும் இகலினையும்
மரித்து அருள்செய் அமலன்எல்லை நந்தை முதல் ஐந்தினையும்
தரித்து இணையைத் தரியாத தலம் முடிவில் தயங்கியது (ஏ).

உரை:

இவ்வாறு உரைத்த சிவ உலகில் தனகரு ஒருவர் இணையில்லாதவனும், முப்புரத்தை எரித்த இறைவனும், தீ வடிவமாகி, பிரமனும் விட்டுணுவும் தமக்குள்ளே சண்டை செய்து இறந்து போகாமல் காத்து அவர்களுக்கு அருள்புரிந்தவனும் மலம் இல்லாதவனுமாய சிவபெருமானுடைய திருக்கோயிலின் முடிவிடத்தில் நந்தை முதலிய ஐந்து பசுக்களையும் தாங்கி ஒப்பற்ற கோபுரம் விளங்கி நிற்கின்றது,

விளக்கம்:

முப்புரம் - இரும்பு மதில், வெள்ளி மதில், பொன்மதில் இவையே முப்புரம்; நந்தை முதல் ஐந்து - நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்ற ஐந்து பசுக்கள்; எரி - தீ; இகல் - போர்; மரித்து - இறந்து; எல்லை - முடிவு;

Koviloor Digital Library

தரித்து - தாங்கி; தயங்கியது - ஒளி பொருந்தி நின்றது; அமலன் - ஆணவம் முதலான மலங்கள் இல்லாத சிவன். கோபுரம் - இது இங்கு பசுப்புரை அல்லது பசுத்தொழு. (91)

சிவ உலகின் தன்மை

1072. ஒப்பரியன் புரிவளமுமுரை விரியினடங்காது
செப்பரிய வதன் வளத்திற் சிறிதுரைப்பஞ் சிந்தை செய்க
வெப்பொருளுந்தானேயாயாவையினுந் தோயாத
வப்பொருளை யழுக்கொழிய வகத்துணர்ந்த வருந்தவனே.

ஒப்பு அரியன் புரிவளமும் உரைவிரியில் அடங்காது
செப்புஅரிய அதன் வளத்தில் சிறிது உரைப்பம் சிந்தை செய்க
எப்பொருளும் தானேஆய் யாவையினும் தோயாத
அப்பொருளை அழுக்கு ஒழிய அகத்து உணர்ந்த அரும் தவனே.

உரை:

எல்லாப் பொருள்களும் தானே ஆகியும் அவற்றில் தான் சம்பந்தமுறாதிருக்கும் அச் சிவத்தை மும்மல அழுக்கு அகல உள்ளத்தில் உணர்ந்தற்காம் அரிய தவம் புரிந்தவனே! இணை சொல்லுவதற்கு இயலாத அவனுடைய சிவ உலகின் வளப்பத்தை விரிவாக உரைத்தாலும் முடிவு பெறாது. ஆயினும், சொல்வதற்கு அருமையான அச்சிவ உலக வளங்களுள் சிறிதளவு சொல்லுவோம்; உணர்வாயாக.

விளக்கம்:

ஒப்பு அரியன் - இணையில்லாதவன்; புரிவளம் - சிவஉலகின் செழுமை; சிந்தைசெய்க - உணர்க; தோயாத - சேராத, கலக்காத; அப்பொருள் - சிவபிரான்; அழுக்கு - ஆணவம் முதலான மலங்கள்; அகத்து - உள்ளத்தில்; உணர்ந்த - அறிந்த. அருந்தவன் - இது அகத்தியரைக் குறிக்கிறது. (92)

சிவ உலகின் தன்மை

1073. இரவியை நிகர்பல விரதமு மொருபா
லெழின்மட வரலியரிய லிசையொருபாற்
பரதமு முறை முறை பயிலுந ரொருபாற்
படகமு முதலிய பறையொலி யொருபான்
மருமலர் விரவிய மரநிரை யொருபான்
மறைபயில் விரதியர் வளவன மொருபாற்

Koviloor Digital Library

புரைவரை விரவிய புரிசைகள் பலபாற்
பொருவிலி வரைவிலி மருவிய புரமே.

இரவியை நிகர்பல இரதமும் ஒருபால்
எழில் மடவரலியர் இயல்இசை ஒருபால்
பரதமும் முறைமுறை பயிலுநர் ஒருபால்
படகமும் முதலியபறை ஒலிஒருபால்
மருமலர் விரவிய மரம்நிரை ஒருபால்
மறைபயில் விரதியர் வளம்வனம் ஒருபால்
புரைவரை விரவிய புரிசைகள் பலபால்
பொருஇல்லி வரைவில்லி மருவியபுரம்.

உரை:

ஒப்பில்லாதவன், மேருமலையை வில்லாக உடையவன் எழுந்தருளிய சிவ உலகில் கதிரவன் ஒளி போன்ற பல தேர்கள் ஒருபுறமும், அழகிய இளம் பெண்கள் பாடுகின்ற இசைப்பாடல்கள் ஒருபுறமும், பரத நூல் முறைப்படி நடனமாடும் நடன நங்கையர் ஒரு புறமும் தம்பட்டம் முதலிய இசைக்கருவிகளின் ஒலி ஒருபுறமும், மனம் நிரம்பிய மலர்களையுடைய மரங்களின் வரிசை ஒரு புறமும், மறைகளை ஓதும் தவத்தினர் வாழும் செழிப்பான காடு ஒருபுறமும், மலையைப் போல உயர்ந்து பருத்து விளங்கிய மதில்கள் பல பக்கங்களிலும் விளங்கும்.

விளக்கம்:

இரதம் - தேர்; எழில் - அழகு; மடவரலியர் - இளம் பெண்கள்; பரதம் - கூத்து; படகம் - பறைவகை; மரு - மணம்; நிரை - வரிசை; விரதியர் - துறவியர்; வரை - மலை; புரிசை - மதில்; வரைவில்லி - மலையை வில்லாகக் கொண்ட சிவன்; பொரு - ஒப்பு. (93)

சிவ உலகின் தன்மை

1074. நிலையொரு பதுசத நெடுமட மொருபா
னெடியன கொடிமணி நிகழொலி யொருபால்
விலையில நவமணி விரிதிணை யொருபால்
விழைவினர் விழைவன விளைநிதியொருபா
லலைமலிபுனனதி யணியுற லொருபா
லளிமுரல்குவளைக ளலர்சுனை யொருபாற்
பொலன்முடியமரர்கள் பொதுளிய தொருபாற்
புலியுரியரையினன் மருவியபுரமே.

நிலை ஒரு பதுசதம் நெடுமடம் ஒருபால்
நெடியன கொடிமணி நிகழ்ஒலி ஒருபால்

Koviloor Digital Library

விலைஇல நவம்மணி விரிதிண்ணை ஒருபால்
விழைவினர் விழைவன விளைநிதி ஒருபால்
அலைமலி புனல்நதி அணிஉறல் ஒருபால்
அளிமுரல் குவளைகள் அலர்சுனை ஒருபால்
பொலன்முடி அமரர்கள் பொதுளியது ஒருபால்
புலிஉரி அரையினன் மருவியபுரம்.

உரை:

புலித்தோலை ஆடையாக உடுத்தவன் எழுந்தருளிய சிவ உலகில் ஆயிரக்கால் மண்டபம் ஒருபுறமும், நீண்ட கொடியில் கட்டிய மணியோசை ஒருபுறமும் விலைமதிக்க முடியாத ஒன்பது மணிகள் குவிக்கப்பட்ட மேடை ஒருபுறமும், விருப்பமுள்ளவர்கள் மெச்சுகின்ற நிதிகள் ஒரு புறமும், அலைகள் நிறைந்த ஆறுகள் ஒருபுறமும், வண்டுகள் ஒலிக்கும் நீலோற்பலம் மலர்ந்துள்ள மலையில் அமைந்த நீர்நிலை ஒருபுறமும், பொன்முடி சூடிய தேவர்கள் கூடுமிடம் ஒருபுறமும் விளங்கின.

விளக்கம்:

சதம் - நூறு; ஒருபதுசதம் - ஆயிரம்; மடம் - மண்டபம்; நெடிய - நீண்ட; விலைஇல - விலை மதிக்க முடியாத; நவம் - ஒள்; விரி - பரப்பிய; திண்ணை - முன்பக்க மேடை; அலை - திரை; நிதி - செல்வம்; விழைவு - விருப்பம்; சுனை - மலைப்பாறையில் உள்ள நீர்நிலை; பொதுளுதல் - திரளுதல்; பொலன் - பொன்; உரி - தோல். (94)

சிவ உலகின் தன்மை

1075. புதுவிரை மலர்கொடு புனைமனை யொருபாற்
பொறி மணியவைகொடு புனைமனை யொருபால்
மதியென விதிவழி வனைமனை யொருபான்
மரகத ஒளியின வனைமனை யொருபாற்
கதிரவனொளி நிகர்கடிமனை யொருபாற்
கனகநன்மயமுறுகனமனை யொருபாற்
சதிவழிநடமிடு தகைமையனிமையோர்
தலைமையனிலவிய தனைநிகர் தலமே.

புதுவிரை மலர்கொடு புனைமனை ஒருபால்
பொறிமணி அவை கொடுபுனைமனை ஒருபால்
மதி என விதிவழி வனைமனை ஒருபால்
மரகத ஒளியின வனைமனை ஒருபால்

Koviloor Digital Library

கதிரவன் ஒளிநிகர் கடிமனை ஒருபால்
கனகம்நல் மயம்உறு கனம்மனை ஒருபால்
சதிவழி நடம்இடும் தகைமையன் இமையோர்
தலைமையன் நிலவியதனை நிகர்தலம்.

உரை:

தாளவொத்தின்படி தாண்டவம் புரியும் பெருமை வாய்ந்தவனாய்த் தேவர்களின் தேவனாகிய சிவபெருமான் எழுந்தருளிய, தனக்குத் தானே ஒப்பாகிய சிவ உலகில் மனம் பொருந்திய புதிய மலர்களால் ஒப்பனை செய்யப்பட்ட மாளிகைகள் ஒருபக்கமும், தீப்பொறி போன்ற செந்நிற மணிகளால் அழகு செய்யப்பெற்ற மாளிகைகள் ஒரு பக்கமும், சிற்ப நூல் முறைப்படி கட்டிய நிலவு ஒளி போன்ற மாளிகைகள் ஒரு பக்கமும், ஒளியையுடைய பச்சை நிற மணிகளால் ஒப்பனை செய்யப்பட்ட மாளிகைகள் ஒருபக்கமும், காவலையுடைய கதிரவன் ஒளி போன்ற மாளிகைகள் ஒருபக்கமும், மாற்றுயர்ந்த தங்கமயமான மாளிகைகள் ஒரு பக்கமும் விளங்கும்.

விளக்கம்:

விரை - மணம்; பொறிமணி - தீப்பொறி போன்ற மாணிக்கக் கல்; மரகத ஒளியின - பச்சை நிறக்கல்; கடிமனை - காவலைஉடைய வீடு; கனகமயம் - தங்கநிறம்; சதி - தாளஒத்து; நடம் - சிவதாண்டவம்; தகைமையன் - பெருமை வாய்ந்தவன். (95)

சிவ உலகில் உள்ளவர்கள்

1076. ஒரு பாலரி போலுடலார் சிலரே
யொருபாலவரே புலி போலுடையா
ரொரு பாலுடையார் கரி போலுடலே
யொருபாற் பரிபோலவ ரேயுடையார்.

ஒருபால் அரிபோல் உடலார் சிலரே
ஒருபாலவரே புலிபோல் உடையார்
ஒருபால் உடையார் கரிபோல் உடலே
ஒருபால் பரிபோலவரே உடையார்.

உரை:

அச்சிவ உலகில் ஒரு புறம் சிங்கம் போன்ற உருவம் கொண்டவரும், ஒருபுறம் புலிபோன்ற வடிவம் உடையவரும், ஒருபுறம் யானை போன்ற உடம்பினரும், ஒருபுறம் குதிரை போன்ற உடலினரும் விளங்குவர்.

விளக்கம்:

அரி - சிங்கம்; கரி - யானை; பரி - குதிரை. (96)

Koviloor Digital Library

சிவ உலகில் இருப்பவர்கள்

1077. ஒருபாலுடலா னெனவே யுடையா
ரொருபாலுழை போலவரேயுடையா
ரொருபால் மயில்போலுடையார் சிலரே
யொருபாலவரே குயில் போலுடையார்.

ஒருபால் உடல் ஆன் எனவே உடையார்
ஒருபால் உழை போலவரே உடையார்
ஒருபால் மயில்போல் உடையார் சிலரே
ஒருபாலவரே குயில் போல் உடையவர்.

உரை:

அச் சிவ உலகில் ஒருபுறம் பசுவைப் போன்ற உருவத்தை உடையவரும், ஒருபுறம் மானைப் போன்ற வடிவம் உடையவரும், ஒருபுறம் மயில் போன்ற உருவினரும், ஒருபுறம் குயில் போன்ற வடிவினரும் இருப்பர்.

விளக்கம்:

ஆன் - பசு; உழை - மான். (97)

சிவ உலகில் இருப்பவர்கள்

1078. சிலரேயொருவான் முகமே செறிவார்
சிலரேபலமா முகமே செறிவார்
சிலரே யொருதாளுடனே செறிவார்
சிலரே பல தாளுடனே செறிவார்.

சிலரே ஒருவாள் முகமே செறிவார்
சிலரே பலமா முகமே செறிவார்
சிலரே ஒருதாளுடனே செறிவார்
சிலரே பல தாளுடனே செறிவார்.

உரை:

அச் சிவ உலகில் சிலர் ஒளி பொருந்திய ஒரே முகத்தோடு விளங்குவர்; சிலருக்குப் பலமுகங்கள் பொருந்தியிருக்கும்; சிலர் ஒற்றைக் காலுடன் விளங்குவர்; சிலர் பல கால்களைப் பொருந்தியிருப்பர்.

விளக்கம்:

வாள் - ஒளி; செறிவார் - பொருந்துவார்; தாள் - கால். (98)

Koviloor Digital Library

சிவ உலகில் இருப்பவர்கள்

1079. சிலரே செவியும் பெரிதே செறிவார்
சிலர்பாலஃதுமிலதே சிறிதுஞ்
சிலரே பலவாமுருவஞ் செறிவார்
சிலர்தாமியல்பாமுருவஞ் செறிவார்.

சிலரே செவியும் பெரிதே செறிவார்
சிலர்பால் அஃதும் இலதே சிறிதும்
சிலரேபலவாம் உருவம் செறிவார்
சிலர்தாம் இயல்பாம் உருவம் செறிவார்.

உரை:

சிவ உலகில் இருக்கிறவர்களில் சிலருக்குக் காதுகள் பெரியனவாக இருக்கும்; சிலருக்குக் காதுகளே இரா; சிலர் பல நிறங்கள் பொருந்திய உருவம் உடையவராக விளங்குவர்; சிலர் மட்டும் இயல்பான உடல்களைப் பெற்றவர்களாக இருப்பர்.

விளக்கம்:

செவி - காது; செறிவார் - பொருந்துவார்; இலதே - இல்லை; பலவாம் - பலவகை; இயல்பாம் - இயற்கையான. (99)

சிவ உலகில் இருப்பவர்கள்

1080. விதமே பலவே விளையாடலினா
லிதமே யிதமே யிவர்பாலிவையு
மதிமேதையரே யழியாதவரே
பதமே பணிவார் பரமேசனையே.

விதமே பலவே விளையாடலினால்
இதமே இதமே இவர்பால் இவையும்
அதிமேதையரே அழியாதவரே
பதமே பணிவார் பரமஈசனை.

உரை:

பேரறிவினராக ஒருபோதும் அழியாதவராய் மேலான இறைவனுடைய திருவடிகளை வணங்குகிறவர்கள் ஆதலால், பல வகையான அவ்வடிவங்கள் அனைத்தும் அச்சிவபிரானின் திருவிளையாட்டினால் நன்மைகளுக்கெல்லாம் மேலான நலமாகவே அச்சிவ உலகில் உள்ளாரிடம் பொருந்தும்.

Koviloor Digital Library

விளக்கம்:

விதமே பலவே - பலவகை; இதம் - நன்மை; அதிமேதையர் - பேரறிவாளர்; அழியாதவர் - இறவாதவர்; பரமாசன் - மேலான சிவபிரான்; பதமே - திருவடிகளை; பணிவார் - வணங்குவார். (100)

சிவ உலகில் உள்ள சிவகணத்தினர்

1081. திணமேயுடையார் சிவனேவியதே
யெணமேயுடையா ரிடரேது மிலார்
கணமேயிவரே கரிசேது மிலார்
கணமேன்மையை ரேநலரே நலரே.

திண்ணமே உடையார் சிவன் ஏவியதே
எண்ணமே உடையார் இடர்ஏதும் இல்லார்
கணமே இவரே கரிசு ஏதும் இல்லார்
கணம் மேன்மையரே நல்லரே நல்லர்.

உரை:

பத்திமையில் உறுதியுள்ளவர்கள்; சிவபெருமான் அருளிய பணி விடைகளைப் புரிவதில் கருத்துடையவர்கள்; துன்பம் ஏதுவும் இல்லாதவர்கள்; பிறர் சேர விரும்புகின்ற மேன்மையாளர்கள்; மிகுந்த நல்ல பண்பாளர்கள்; இவர்களே சிவ உலகில் உள்ள சிவகணங்கள் ஆவர்.

விளக்கம்:

திண்ணம் - உறுதி; எண்ணம் - கருத்து; இடர் - துன்பம்; கணம் - கூட்டம், தொகுதி; கரிசு - பாவம்; ஏதும் - எதுவும்; நல்லர் - நல்ல குணங்கள் உள்ளவர், நல்லவை செய்பவர்கள். (101)

சிவகணத் தலைவர்

1082. படிசேர்பல மேனியரே படருஞ்
சடைமாமுடியார் தகுநீறுடையார்
புடையே புயமு மொரு நாலுடையா
ரடியாரவரே கண நாயகரே.

படிசேர் பலமேனியரே படரும்
சடைமா முடியார் தகும்நீறு உடையார்
புடையே புயமும் ஒருநால் உடையார்
அடியார் அவரே கணம் நாயகர்.

Koviloor Digital Library

உரை:

நற்குணங்கள் பொருந்திய பல திருவுருவங்களை உடையவர்; பரவிய பெரிய சடைமுடியினை உடையவர்; மேன்மையான திருநீறு அணிந்தவர்; பக்கத்தில் நான்கு தோள்கள் உடையவர்; சிவபெருமானுக்கு அடிமைத்தன்மை உடையவர்; அவரே திருக்கைலாயத்தில் கணங்களின் தலைவராக விளங்குவர்.

விளக்கம்:

கணநாயகர் - கணநாதர், கணத் தலைவர்; சிவலோகம் - திருக்கைலாயம், சிவன் வாழும் மலை. பலமேனியர் - பல வடிவங்களை உடையவர்; மா - பெரிய; படர்ந்த - பரவிய; சடை - மயிர்க்கற்றை; தகு - தகுதி, மேன்மை; நீறு - திருநீறு; புடை - பக்கம்; புயம் - தோள்; ஒரு நால் - நான்கு; நாயகர் - தலைவர். (102)

கணநாயகர்

1083. உடையார் விழியுமொரு மூன்றினையு
முடையார் புலியுனுரியும் மரையி
னுடையார் மழுவு மொளிர் வேலினையு
மடியாரவரே கணநாயகரே.

உடையார் விழியும் ஒருமூன்றினையும்
உடையார் புலியின் உரியும் அரையில்
உடையார் மழுவும் ஒளிர் வேலினையும்
அடியார் அவரே கணம் நாயகர்

உரை:

மூன்றுகண்களையும், ஆடையாக இடுப்பில் புலித்தோலையும் கொண்டு, கையில் கைக் கோடரியும் ஒளிருகின்ற வேலையும் தாங்கியவரே கணங்களுக்குத் தலைவராக அத்திருக்கைலாயத்தில் விளங்குபவர்.

விளக்கம்:

புலியின் உரி - புலித்தோல்; மழு - கைக்கோடரி; ஒளிர் - பளபளக்கும்; வேல் - ஈட்டி; கணம் - சிவகணம்; நாயகர் - நாதர், தலைவர். (103)

திருவடிகளைத் தியானிப்பவர்

1084. ஆதியு மந்தமுமில னவனமரரு
மோதியும் வேதமு முணர்வரும் பெருமையன்
போதகன் வேதகன் பொருவில னிருமலன்
பாத பங்கய முனுமவர் பலம்பகர்வமே.

Koviloor Digital Library

ஆதியும் அந்தமும் இலன் அவன் அமரரும்
ஓதியும் வேதமும் உணர்வு அரும் பெருமையன்
போதகன் வேதகன் பொருவு இலன் நிருமலன்
பாத பங்கயம் உன்னும் அவர்பலம் பகர்வம்.

உரை:

ஒரு தொடக்கமும் முடிவும் இல்லாதவன்; தேவராலும், நூல்களாலும் வேதத்தாலும் அறியமுடியாத பெருமை வாய்ந்தவன்; அடியவருக்குத் தோன்றாத் துணையாக இருந்து மெய்யறிவை உணர்த்தும் ஆசிரியனாக விளங்குபவன்; அவ்வடியவர்களை ஆணவம் முதலான மலங்களிலிருந்து வேறுபடுத்துகிறவன்; தனக்கு ஒருவரும் ஒப்பு இல்லாதவன்; இயல்பாகவே மலம் இல்லாதவன் ஆகிய சிவபிரானுடைய திருவடித் தாமரைகளைச் சிந்திக்கும் சான்றோர் பெறும் பயனை இனி உரைக்கிறோம்.

விளக்கம்:

ஆதியும் அந்தமும் - முதலும் முடிவும்; **இலன்**-இல்லாதவன்; **அமரர்** - தேவ்ர்; **உணர்வு அரும்** - அறியமுடியாத; **போதகன்** - ஆசிரியன், குரு; **வேதகன்** - வேறுபடுத்துவோன்; **பொருவு** - ஒப்பு, நிகர்; **நிருமலன்** - கடவுள்; **பாதம்** - திருவடி; **பங்கயம்** - தாமரை மலர்; **உன்னும்** - கருதும்; **பலம்** - பயன்; **பகர்வம்** - சொல்வோம். (104)

சிவகணங்களின் தன்மை

1085. உருவினாலுவமையு மொருவினார் மருவினார்
திருவினா ருருவினார் தெரிவைமார் செறியவே
முரவமே முதலவா மழலையு முரலவே
யிரவியாயிரமு நேரிரதமே சரதமே.

உருவினால் உவமையும் ஒருவினார் மருவினார்
திருவினார் உருவினார் தெரிவைமார் செறியவே
முரவமே முதலவாம் மழலையும் முரலவே
இரவி ஆயிரமும் நேர்இரதமே சரதம்.

உரை:

சிவகணத்தினர் தங்களின் உருவத்தால் ஒப்பற்றவராகித் திருமகளைப் போன்ற அழகுள்ள பெண்கள் தங்களை அணுகிப் பணிவிடைகள் புரியவும், முரசு முதலான இசைக்கருவிகள் மெல்லோசையாக ஒலிக்கவும், ஆயிரம் கதிரவர் களுடைய ஒளிக்கதிர்கள் ஒரு சேரப் பொருந்திய தேரில் உண்மையாகப் பொருந்தி வாழ்வர்.

Koviloor Digital Library

விளக்கம்:

உவமை ஒருவினார் - உவமையில்லாதவர்; உரு - உடலமைப்பு; திருவினார் - திருமகளைப் போல; உருவினார் - உருவம் உள்ளவர்; தெரிவைமார் - இருபத்தைந்துக்குமேல் முப்பத்தொரு வயதுக்கு உட்பட்ட பெண்கள்; செறிய - நெருங்கி நிற்க; முரவம் முதலவாம் - முரசம் முதலான இசைக்கருவிகள்; மழலையும் முரல - மெல்லோசையாக ஒலிக்க; இரவி - கதிரவன்; நேர் - சமம்; சரதம் - உண்மை; தேர் - இரதம். (105)

சிவ உலக மகளிர் இயல்பு

1086. கொத்துலாங் குழலினார் குழலினேர் மொழியினார்
முத்துலா முறுவலார் முகையுநேர் முலையினார்
சித்தமுங் கவரவே சிலரவர் செயலுகந்
தெத்தினாற் குறைவெமக் கெனவுமங் கிசைவரே.

கொத்து உலாம் குழலினார் குழலின்நேர் மொழியினார்
முத்து உலாம் முறுவலார் முகையும் நேர் முலையினார்
சித்தமும் கவரவே சிலர் அவர் செயல் உகந்து
எத்தினால் குறைவு எமக்கு எனவும் அங்கு இசைவர்.

உரை:

கொத்தாகப் பூக்களைச் சூடிய கூந்தலை உடையவர்; புல்லாங்குழல் போல இனிமையாகப் பேசுகிறவர்; முத்துப் போல ஒளிரும் பற்கள் தெரியப் புன்னகை செய்கிறவர்; மலராத மொட்டுப் போன்ற நகில்களையுடையவர் ஆகிய பெண்களின் மனத்தைக் கவர்தலால், அச்செயலை விரும்பி, எமக்கு எதனாலும் குறைவு இல்லை என அவர்கள் சொல்லும்படி திருக்கைலாயத்தில் உள்ளவர்கள் பொருந்தியிருப்பர்.

விளக்கம்:

கொத்துஉலாம் - கொத்துகளாகவுள்ள; முத்துஉலாம் - முத்துகளை ஒத்த; முறுவல் - சிரிப்பு; குழல் - புல்லாங்குழல்; நேர் - ஒப்பு; முகை - மொட்டு; முலை - நகில்; சித்தம் - மனம்; உகந்து - விரும்பி; எத்தினால் - எதனால்; இசைவர் - பொருந்துவர். (106)

மோகத்தை வென்றவர்

1087. ஓதுவார் வேதமுஞ் சிலருரைக் குறுபய
னீதெனா வேதெனா வேகமாய் மோகமுங்
காதுவார்காதுவார் குழையினன் கழலுனும்
போதமே பூதியாய் வேறுனார் போகமே.

Koviloor Digital Library

ஓதுவார் வேதமும் சிலர் உரைக்கு உறுபயன்
ஈதுஎனா ஏதுஎனா வேகமாய் மோகமும்
காதுவார் காதுவார் குழையினன் கழல் உன்னும்
போதமே பூதியாய் வேறு உன்னார் போகம்.

உரை:

காதில் ஒளிவீசும் குண்டலம் அணிந்த சிவபெருமானுடைய திருவடிகளை எண்ணும் அறிவையே அனுபவ ஞானமாகக் கொண்டு வேறு இன்பங்களை நாடாமல் தனித்திருந்து மயக்கத்தைக் கெடுப்பவர், சிவாகமத்திலும் பொருந்துகிற பயன் எது எனக் கேட்கும் சிலருடைய வினாவுக்குப் பொருந்தும் பயன் இதுவே என்று விடை அளிப்பார்.

விளக்கம்:

வேதம் - நான்கு வேதங்கள்; உறு - பொருந்துகிற; ஈது எனா - இது என்று; ஏது எனா - எது என்று; மோகம் - மயக்கம்; காதுவார் - அழிப்பார்; காது ஆர் - காதில் ஒளிரும்; குழை - குண்டலம்; கழல் - திருவடி; உன்னும் - கருதும்; போதம் - அறிவு; பூதி - அனுபூதி, அனுபவ ஞானம்; போகம் - இன்பம்; உன்னார் - கருதார். (107)

அடியார்க்கு அரியது எதுவுமில்லை

1088. முத்தனே முதல்வனே முடையுடற் பொறையறுத்
தத்தனே சிவபுரத் தடியரைச் செறியெனத்
துத்தியஞ் சொன்ன மெய்த் தொண்டருந்துரிசறச்
சித்தமுஞ் சிவமுறச் செறிவரங் கரிதெனே.

முத்தனே முதல்வனே முடை உடல்பொறை அறுத்த
அத்தனே சிவபுரத்து அடியரைச் செறிஎனத்
துத்தியம் சொன்ன மெய்த்தொண்டரும் துரிசு அறச்
சித்தமும் சிவம் உறச் செறிவர் அங்கு அரிது என்.

உரை:

அடியவர்க்கு முத்தியைக் கொடுப்பவனே, எப்பொருளுக்கும் மூலமாக உள்ளவனே, குற்றத்தையுடைய உடற்சுமையை நீக்கிய கடவுளே, சிவ உலகில் அடியார்களைப் பொருந்தச் செய்வாய் என்று போற்றுகின்ற மெய்யடியார்களும் மலக் குற்றம் நீங்கவும், மனம் சிவத்தைப் பொருந்தவும் அச்சிவ உலகில் வாழ்வர். அவர்களுக்கு அங்கு கிடைத்தற்கு அருமையானது எதுவுமில்லை.

விளக்கம்:

முத்தன் - கடவுள்; முடை - புலால் நாற்றம்; பொறை - சுமை; அறுத்த -

Koviloor Digital Library

அகற்றிய; அத்தன் - தந்தை, கடவுள்; சிவபுரம் - சிவஉலகு; செறி - இருத்து; துத்தியம் - புகழ்ச்சி; துரிசு - குற்றம்; சித்தம் - மனம்; செறிவர் - இருப்பர்; அரிது - அருமையானது. (108)

சிவஉலகில் இருக்கும் பலநிறத்தினர்

1089. பொன்னிறமுடையரும் புயனிறமுடையரு
மின்னிற முடையரும் விரைமலர்க் கமலமு
மென்னிற முடையரு மெரிநிற முடையரும்
பன்னிறமுடையரும் பவள மேனியருமே.

பொன்நிறம் உடையரும் புயல்நிறம் உடையரும்
மின்நிறம் உடையரும் விரைமலர்க் கமலமும்
எல்நிறம் உடையரும் எரிநிறம் உடையரும்
பல்நிறம் உடையரும் பவள மேனியரும்.

உரை:

தங்கம் போன்ற நிறமுள்ளவர்களும், மழைமேகம் போன்ற நிறத்தினரும், மின்னல் போன்ற நிறமுடையவர்களும், மணம் நிரம்பிய வெண்டாமரை, செந்தாமரை மலர்களைப் போன்ற நிறம் பொருந்தியவர்களும், சூரிய ஒளி போல நிறமுடையவர்களும், தீயைப் போல நிறம் உள்ளவர்களும், பல நிறங்களை உடையவர்களும், பவள நிறம் உள்ளவர்களும் சிவஉலகில் வாழ்வர்.

விளக்கம்:

பொன் - தங்கம்; புயல் - மழைமுகில்; மின் - மின்னல்; விரை - மணம்; மலர்க்கமலம் - கமலமலர், தாமரைப்பூ; எல் - சூரியன்; எரி - தீ; பல் - பல; பவள மேனியர் - சிவந்தவர். (109)

திருக்கோயிலின் தன்மை

1090. இத்தகைய விதமுறவே யெழிலுடைய
சிவபுரிநள்ளெல்லை வட்டம்
வித்தகர்க்கு விடையேறும் வேதியர்க்கு
மந்திரந்தான் வியந்ததுங்கஞ்
சுத்தவொளிப் படிகமயஞ் சுடர்மணியாற்ற
மனியத்தாற் றோரணாதி
யெத்தகையவுறுப்பினையு மியற்றியிட
விசைந்தவெழி லியம்பலாமே.

Koviloor Digital Library

இத்தகைய விதம் உறவே எழில்உடைய
சிவபுரிநள் எல்லை வட்டம்
வித்தகர்க்கு விடைஏறும் வேதியர்க்கு
மந்திரம்தான் வியந்த துங்கம்
சுத்தஒளிப் படிகமயம் சுடர்மணியால்
தமனியத்தால் தோரண ஆதி
எத்தகைய உறுப்பினையும் இயற்றியிட
இசைந்த எழில்இயம்பல் ஆமே?

உரை:

இத்தன்மையான இயல்புகள் பொருந்தும் அழகுள்ள சிவஉலகின் நடு எல்லையில் பேரறிவே திருமேனியாக உடையவரும் எருதின் மீது அமருபவரும் சிவாகமம் அருளிய வேதியனுமாகிய சிவபெருமானுக்கு அனைவரும் அதிசயப்படும் உயரமும், தூய ஒளியுடைய பளிங்கு மயமும் விளங்க, ஒளிரும் ஒன்பது மணிகளாலும், தங்கத்தாலும், அழகிய ஒப்பனைகளைச் செய்து தோரணவாயிலும் அலங்கரித்த பிறகு அத்திருக்கோயிலின் வனப்பைச் சொல்லி முடியாது.

விளக்கம்:

நள் - நடு; வித்தகர் - பேரறிவினர்; விடை - எருது; வேதியர் - வேதம், சிவாகமம் ஆகியவற்றை அருளிய சிவன்; மந்திரம் - திருக்கோயில்; துங்கம் - உயர்ச்சி; படிகம் - பளிங்கு; சுடர்மணி - ஒளியுள்ள ஆபரணக்கல்; தமனியம் - பொன்; தோரணம் - அலங்கார வாசல்; இசைந்த - பொருந்திய; எழில் - அழகு; இயம்பல் - சொல்லுதல்; ஆமே - முடியாது. (110)

சிவஉலகின் திருக்கோயில்

1091. சுத்தவொளிப் படிகமயந் துளங்குமிளம்
பிறைவிளங்கச் சூடிச்சூடு
மத்தமலர்ச் சடைமுடியர் வரமுடையர்
திரிநயனம் வாய்த்துளார் தங்
கைத்தலங்க ளொரு நான்கிற் கனன்மழுவுந்
திரிசிகையுங் கதையும்வாளும்
வைத்துடைய கணநாதர் வரதனுக்குக் குணதிசைச்
சன்னிதியின் வாய்த்தார்.

சுத்தஒளிப் படிகமயம் துளங்கும்
இளம்பிறை விளங்கச் சூடிச்சூடும்
மத்தமலர்ச் சடைமுடியர்வரம் உடையர்
திரிநயனம் வாய்த்து உள்ளார்தம்

Koviloor Digital Library

கைத்தலங்கள் ஒருநான்கில் கனல்மழுவும்
திரிசிகையும் கதையும் வாளும்
வைத்துஉடைய கணநாதர் வரதனுக்குக் குணதிசைச்
சன்னிதியில் வாய்த்தார்.

உரை:

அச்சிவ உலகில் எழுந்தருளும் வரம் கொடுப்பவனுக்குக் கிழக்குத் திசையில் இருக்கும் சன்னிதியில், தூய ஒளியுடைய பளிங்கு மயமாக விளங்கும் இளம் பிறையைச் சூடி, ஊமத்தம்பூவை அணிந்த சடைமுடியர்; வரம்தரும் இயல்பினர்; மூன்று கண்களைப் பெற்றவர்; திருக்கைகள் நான்கிலும் தீயைப் போன்ற கைக்கோடரி, சூலம், தண்டாயுதம், வாள் ஆகியவற்றைக் கொண்டவர்களாகிய சிவகணத் தலைவர்கள் வாழ்ந்து பணிபுரிவர்.

விளக்கம்:

படிகம் - பளிங்கு; சுத்த - தூய; துளங்கும் - விளங்கும்; **மத்தமலர்** - ஊமத்தம் பூ; **திரிநயனம்** - மூன்று கண்கள்; **கைத்தலங்கள்** - கைகள்; **கனல்** - நெருப்பு; **மழு** - சிறு கோடரி; **திரிசிகை** - சூலம்; **கதை** - தண்டாயுதம்; **குணதிசை** - கிழக்கு. (111)

சிவபிரானுக்குப் பணிசெய்பவர்

1092. பரமசிவ மயமுணர்ந்த பாசுபதர்சைவர்
காபாலர் பான்மை
விரதியர் மெய்த்தவரென்னுமவர்
தாமுமேலுரைத்த மேனிமேவி
விரவுவரத்திசை தன்னில்
வியன்கமலத்தயன் றென்பால்விரவ மெய்ம்மைச்
சரசுவதி முனிவரர்க்குத் தலைமைய
வங்கிர ரிவருஞ் சார்வரங்கே.

பரமசிவ மயம் உணர்ந்த பாசுபதர்
சைவர் காபாலர் பான்மை
விரதியர் மெய்த்தவர் என்னும் அவர்
தாமும் மேல்உரைத்த மேனிமேவி
விரவுவர்அத்திசை தன்னில் வியன்கமலத்து
அயன்தென்பால் விரவ மெய்ம்மைச்
சரசுவதி முனிவரர்க்குத் தலைமைய வங்கிரர்
இவரும் சார்வர் அங்கு.

Koviloor Digital Library

உரை:

மேலான சிவபிரானுடைய தன்மையை உணர்ந்த பாசுபதர், சைவர், காபாலர், மாவிரதியர், உண்மையான தவத்தினையுடையோர் ஆகியோர் முன்சொன்ன வடிவத்தைப் பெற்று, அதே கிழக்குத் திசை வாசல் சன்னிதியிலிருந்து பணிசெய்வர்; தென் திசை வாசல் சந்நிதியில் விட்டுணுவின் தொப்பூழாகிய தாமரையில் தோன்றிய பிரமனும், உண்மையான சரசுவதியும் முனிவர் தலைவனான அங்கிராவும் பணிபுரிவார்.

விளக்கம்:

கமலத்து அயன் - விட்டுணுவின் கொப்பூழிலிருந்து தோன்றிய தாமரையில் பிரமன் பிறந்தான்.

பாசுபதர் - சைவர்களுக்குள் பாசுபத முறையை அநுசரிக்கிறவர்.

மாவிரதியர் - மகாவிரத சமயத்தைச் சார்ந்த சைவத்துறவிகள். இவர்கள் பெண்களின் நீண்ட தலைமயிரைக் கயிறாகத் திரித்துப் பூணூலாக அணிவர்; அதற்குப் 'பஞ்சவடி' என்று பெயர்.

காபாலர் - வட இந்தியச் சைவப் பிரிவினர்; நரபலி கொடுப்பவர்; தலையோட்டில் பிச்சை ஏற்று உண்பவர்.

சரசுவதி - பிரமன் மனைவி. ஆதலால் இவளைப் 'பிராமி' என்பர். (112)

சிவபிரானுக்குப் பணி செய்பவர்

1093. செப்பியவத் தென்றிசையிற் கபிலாதி
சித்தருஞ் செறிவர்யோக
தற்பரநற் சனக சனந்தர
ரெழுவா யெழுவருமெய்த்தவருஞ் சார்வார்
மெய்ப்பொருளுக் கொப்பாகி வேந்தருமாய்
மாயைக்கு வினையை வென்று
பொய்ப்பொருளை மதியாத பூதேசராதியர்
மேல்புடையிற் சார்வார்.

செப்பிய அத்தென் திசையில்கபில
ஆதி சித்தரும் செறிவர்யோக
தற்பரன்நல் சனகசனந்தரர் எழுவாய்
எழுவரும் மெய்த்தவரும் சார்வார்
மெய்ப்பொருளுக்கு ஒப்பாகி வேந்தருமாய்
மாயைக்கு வினையை வென்று
பொய்ப்பொருளை மதியாத பூதேசர்
ஆதியர்மேல் புடையில் சார்வார்.

Koviloor Digital Library

உரை:

சொல்லிய அந்தத் தென் திசையில் கபிலர் முதலான சித்தர்கள் கூடிப் பணி செய்வர். தவிர, நன்மையான சிவயோகிகளான சனகர் சனந்தரர் முதல் ஏழு இருடிகளும் உண்மையான தவம் உடையவர்களும் பணிபுரிவர். சிவனது திருஉருவம் தாமும் பெறுதலால் சிவன் போலாகி, மாயாவிநோதச் செயல்களுக்குத் தலைவராக இருவினை ஒப்புவந்து பொய்யாகிய உலகை மதியாத சிவபூதராயர் மேற்குத் திசை வாசலின் சந்நிதியை அடைந்து பணி செய்வார்.

விளக்கம்:

எழுவர் - அகத்தியன், புலத்தியன், அங்கிரசு, கௌதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டன் ஆகியோர். சனகர் முதலியோர் - சனகர், சனாதனர், சனந்தரர், சனற்குமாரர் என்னும் நால்வர். செப்பிய - சொன்ன; தற்பரன் - கடவுள்; பூதேசன் - சிவபூதராயர்; புடையில் - பக்கத்தில்; சார்வார் - அடைவார். (113)

சிவபெருமானுக்குப் பணி செய்பவர்கள்

1094. அத்திசையிற் பிராமிதனை
யாதியரேழணங்கினரு மவர்களோடே
பத்திரையைப் பார்ப்பதியை யெழுவாய
வெண்மரும் படைக்கவல்ல
சத்திதரிக்குஞ் சண்டப்
பிரசண்ட வயிரவர்கடாமேலோரு
முத்தரத்திற்றிருமாலு முருத்திரரும்
பருதியரு முள்ளாரன்றே.

அத்திசையில் பிராமிதன்னை ஆதியர்
ஏழு அணங்கினரும் அவர்களோடே
பத்திரையைப் பார்ப்பதியை எழுவாய
எண்மரும் படைக்கவல்ல
சத்தி தரிக்கும் சண்டப்பிரசண்ட
வயிரவர்கள் தாம் மேலோரும்
உத்தரத்தில் திருமாலும் உருத்திரரும்
பருதியரும் உள்ளார்.

உரை:

அந்த மேற்குத் திசையில் பிராமி முதலான ஏழு சத்திகளும், அவர்களோடு பத்திரை, பார்ப்பதி முதலான எட்டுக் கன்னியர்களும், எப்பொருளும் ஆக்க வல்ல சூலம் ஏந்தி மிகக் கடுமையானவராய்த் தோன்றும் வயிரவர்களாகிய மேலோரும் பணி செய்வர். வடதிசை வாயிற் சன்னிதியில் விட்டுணுவும் உருத்திரர்களும் சூரியர்களும் பணி செய்வர்.

Koviloor Digital Library

விளக்கம்:

ஏழு அணங்கினர் - பிராமணி, நாராயணி, மகேசுவரி, கவுமாரி, வராகி, உருத்திராணி, இந்திராணி ஆகியோர். பார்ப்பதி - பார்வதி; பிராமி - பிராமணி, பிரமன் மனைவி. எழுவாய - முதலான; உத்தரம் - வடக்கு; திருமால் - விட்டுணு; உருத்திரர் - சிவகணத்தில் ஒரு பிரிவினர்; பெருங்கோபமுடையவர். பருதியர் - பன்னிரண்டு ஆதித்தர்கள்; ஆதித்தர் - சூரியர். அன்றே - அசை. (114)

சிவ உலகில் இருப்போர்

1095. அத்திசையிலெண் வசுக்களரமகளிர்
காந்தருவரியக்க ரல்லாச்
சித்தரியல் விந்தைதரர்
சிறப்புடையகுய்ய ரழற்சேடரென்னு
மித்தொகையரே யிசைவாரின்னு
முளரிணையிலியை இறைவன்றன்னை
வித்தகனை உளத்திருத்தி விட்டாருந்
தொட்டதுயர் வேட்கை யெல்லாம்.

அத்திசையில் எண்வசுக்கள் அரமகளிர்
காந்தருவர் இயக்கர் அல்லாச்
சித்தர்இயல் வித்தைதரர் சிறப்புடைய
குய்யர் அழல்சேடர் என்னும்
இத்தொகையரே இசைவார் இன்னும் உளர்
இணைஇல்லியை இறைவன்தன்னை
வித்தகனை உளத்து இருத்தி
விட்டாரும் தொட்டதுயர் வேட்கைஎல்லாம்.

உரை:

அந்த வடக்குத் திசையில் எட்டு வசுக்களும், தெய்வ மகளிரும், கந்தருவரும், இயக்கர்களும், இவர்கள் அல்லாத சித்தர்களும், ஒழுக்கம் உள்ள வித்தியாதரர்களும், சிறப்புடைய குய்யகரும், தீயையொத்தசேடர்களும் பொருந்திப் பணி செய்வர். அவர்களைத் தவிர, இணையில்லாதவனை, கடவுளை, பேரறிவுடையவனை, தம் உள்ளத்தில் வைத்து, பண்டை நாள்முதல் தொடர்ந்து வரும் சஞ்சிதம் முதலான துன்பங்களிலிருந்து விடுபட்டவர்களும் அங்கு உள்ளனர்.

விளக்கம்:

எண் வசுக்கள் - அனலன், அனிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்திபூசன், பிரபாசன் என்ற எட்டுப் பேர்.

Koviloor Digital Library

அரமகளிர் - தெய்வப் பெண்கள்; **கந்தருவர்** - தேவசாதியில் ஒரு பிரிவினர். **இயக்கர்** - தேவசாதியில் ஒரு வகையினர்; **சித்தர்** - எட்டுச் சித்திகள் பெற்றவர். **குய்யரகர்** - குபேரன் நிதியைக் காவல் புரியும் தேவர். **சேடர்** - நாகர்.

இணை - ஒப்பு, நிகர்; **வித்தகன்** - பேரறிவுடையவன்; **வேட்கை** - ஆசை. (115)

சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இயல்பு

1096. **இத்தகையோர் தொழுதேத்த வாயிரக்கான்**
மண்டபத்து ளிணையிலீசன்
முத்தனொரு முதலாகி மூவுலகாய்த்
தழைத்தெழுந்து மூவாமூர்த்தி
யத்தனரனணி கிளருமரிபரித்த
வாதனத்தினலரின் மீதே
வித்தக வேதகியுடனும் வீற்றிருப்பன்
வினைப்பயனை விளைக்கவே தான்.

இத்தகையோர் தொழுது ஏத்த ஆயிரம்கால்
மண்டபத்துள் இணைஇல் ஈசன்
முத்தன் ஒருமுதல் ஆகி மூஉலகாய்த்
தழைத்து எழுந்தும் மூவாமூர்த்தி
அத்தன்அரன் அணிகிளரும் அரிபரித்த
ஆதனத்தில் அலரின் மீதே
வித்தக வேதகியுடனும் வீற்று இருப்பன்
வினைப்பயனை விளைக்கவேதான்.

உரை:

இந்தப் பண்பினையுடையவர்கள், வணங்கிப் புகழும்படி ஆயிரம் தூண்கள் பொருந்திய மண்டபத்தின் நடுவில், அழகிய சிங்க வடிவம் தாங்கும் இருக்கையில், தாமரை மலரின் மீது பக்குவப்பட்ட அடியவர்களுக்கு முத்தியை அளிக்கின்ற கடவுளும், எல்லாப் பொருள்களுக்கும் காரணனும், பாதாளம், பூமி, பரலோகம் என்ற மூன்று உலகங்களாக விரிந்தவனும், பரம் பொருளும், எல்லா உயிர்களுக்கும் தந்தையும், அடியவர்களின் பாவங்களை அறுப்பவனும், ஆகிய சிவபெருமான், உயிர்கள் தம் வினைப்பயன்களை நுகர்வதற்காக அறிவே வடிவாக உடைய சிவையுடன் எழுந்தருளியிருப்பான்.

விளக்கம்:

முத்தன் – கடவுள்; **முதல்** – காரணன்; **தழைத்து** – விரிந்து; **மூ** – மூன்று; **மூவுலகம்** - பாதாளம், பூமி, வானம்; **அத்தன்** – தந்தை; **மூவாமூர்த்தி** –

Koviloor Digital Library

பரம்பொருள்; **அரன்** - அடியவரின் பாவங்களை அறுப்பவன்; **அணிகிளரும்** - அழகு பொலியும்; **அரி** - சிங்கம்; **பரித்த** - தாங்கிய; **ஆதனம்** - பீடம், இருக்கை; **அலர்** - இது தாமரைப் பூவைக் குறிக்கிறது. **வித்தகம்** - பேரறிவு; **வேதகி** - வேறுபடுத்துகிறவள் ஆன்மாக்களைப் போதித்து வளர்த்தெடுப்பவர். சிவை. (116)

சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் நிலை

1097. கண்டனக்குக் காட்டாய கதிருதயமொருகோடி
கலந்த தென்ன
வெண்ட னக்குக் காட்டாய
வெழிலுருவ மிசைந்திலங்க விரைக்குநீரும்
விண்டனுக்கு விளக்காய வெண்மதியும்
விரவுசடை முடிதன்மீதே
பண்டனக்குப் பாடல்பயில் பறவையுறு
மிதழிமுதற்பரிக்க பாங்கால்.

கண்தனக்குக் காட்டுஆய கதிர்உதயம்
ஒருகோடி கலந்தது என்ன
எண் தனக்குக் காட்டு ஆய எழில்
உருவம் இசைந்து இலங்க விரைக்குநீரும்
விண்தனக்கு விளக்கு ஆயவெண்மதியும்
விரவுசடை முடிதன் மீதே
பண்தனக்குப் பாடல்பயில் பறவை உறும்
இதழிமுதல் பரிக்க பாங்கால்.

உரை:

கண்களுக்குப் பொருளாகிப் பொருள்கள் அனைத்தையும் காட்டும் ஞாயிறு ஒரு கோடி ஒன்றாகச் சேர்ந்து தோன்றியது போல எண்ணும்படி, எண்களுக்கு எடுத்துக்காட்டாக அழகிய திருவுருவம் பொருத்தமாக விளங்கவும், மணநீராகக் கங்கையும், வான விளக்காக வெள்ளை நிலவும் கலந்த சடை முடியின் மேல் பண்களுக்கு ஏற்ற இசைப்பாடலைப் பாடுகிற பறக்கும் வண்டுகள், பொருந்தும் கொன்றைப் பூக்களை ஒழுங்குடன் தரிக்கவும்.

விளக்கம்:

கதிர் - ஞாயிறு; **உதயம்** - உதிப்பது; **காட்டு** - எடுத்துக்காட்டு; **இசைந்து** - பொருந்தி; **இலங்க** - விளங்க; **விரை** - மணம்; **மதி** - நிலவு; **விரவு** - கலந்த; **பண்** - இசை; **பயில்** - பழகும்; **பறவை** - பறக்கும் சிறுவண்டு; **இதழி** - கொன்றைப்பூ; **பரித்தல்** - தரித்தல்; **பாங்கு** - ஒழுங்கு. (117)

Koviloor Digital Library

சிவபிரான் வீற்றிருக்கும் நிலை

1098. சுடர்மூன்றுங் கண்மூன்றாய்த்
தொடர்ந்திலங்கக் குழைதோடு துலங்கக்காதி
லிடர்மூன்று மழித்தருளு
மிளமுறுவன் முகமலரினிலங்கவெய்திக்
கடலுமிழும் விடமிடற்றிற் கலந்திலங்க
மறிமழுவுங் கையில் வைத்த
வடியடைவாரிடரகல வமைத்தகரம்
வரதகர மமரவாங்கே.

சுடர்மூன்றும் கண்மூன்றாய்த்
தொடர்ந்து இலங்கக் குழைதோடு துலங்கக் காதில்
இடர்மூன்றும் அழித்து அருளும் இளம்முறுவல்
முகம்மலரில் இலங்க எய்திக்
கடல் உமிழும் விடம்மிடற்றில் கலந்து
இலங்க மறிமழுவும் கையில்வைத்த
அடிஅடைவார் இடர்அகல அமைத்தகரம்
வரதகரம் அமர ஆங்கு.

உரை:

ஞாயிறு, நிலவு, தீ ஆகிய மூன்று ஒளிகளும் மூன்று கண்களாக அமைந்து விளங்கவும், திருக்காதுகளில் குண்டலமும் தோடும் விளங்கவும், சஞ்சிதம், பிரார்த்தம், ஆகாமியம் ஆகிய மூன்று வகைத் துன்பங்களைக் கெடுத்தருளும் புன்சிரிப்பு, திருமுகமலரில் விளங்கவும், கடலில் தோன்றிய நஞ்சு, திருக்கழுத்தில் பொருந்தி விளங்கவும், திருக்கைகளில் மானும்மழுவும், அடியவர்களின் பிறவித் துயர்அகல அமைந்த அடைக்கலம் அளிக்கும் கையும், வரம்தரும் கையும் பொருந்தவும்;

விளக்கம்:

மூன்று சுடர் - கதிரவன், நிலவு, நெருப்பு ஆகிய மூன்றின் ஒளிகள். குழை - குண்டலம், ஆண்களின் காது அணி, தோடு - பெண்களின் காது அணி, (ஒரு காதில் தோடும் ஒரு காதில் குழையும் அர்த்தநாரீசுவர வடிவம்.)

'தோடொருகாது ஒருகாது சேர்ந்த குழையான்'

(திருநாரையூர்)

என்று சிவபிரானைக் குறிப்பிடுவர் ஆன்றோர்.

சஞ்சிதம் - அனுபவித்தது போக எஞ்சியுள்ள கன்மம். **பிரார்த்தம்** - பழவினை; **ஆகாமியம்** - இப்பிறவியில் ஈட்டும் நல்வினை தீவினை; **இளம் முறுவல்** - புன்சிரிப்பு; **மிடறு** - கழுத்தின் முன்பாகம்; **அபயம்** - அடைக்கலம். (118)

Koviloor Digital Library

சிவபிரான் எழுந்தருளியிருக்கும் நிலை

1099. குங்குமத்தின் சந்தனத்தின் குழம்பேயோ
திருநீற்றின் கோலமல்கத்
துங்கவரையிரண்டனைய தோளகலத்தலர்
குவளைத் தொடையலேயோ
பங்கயத்திற் பயில்வானும்
பாற்கடலிற்றுயில்வானும் பழுத்தநாளின்
மங்கியிட வவரங்க மாலைகளுங்
கண்டிகையும் மலியவாய்த்தே.

குங்குமத்தின் சந்தனத்தின் குழம்பேயோ
திருநீற்றின் கோலம்மல்கத்
துங்கவரை இரண்டு அனைய தோள்
அகலத்து அலர்குவளைத் தொடையல்ஏயே
பங்கயத்தில் பயில்வானும் பால்கடலில்
துயில்வானும் பழுத்தநாளில்
மங்கிஇட அவர் அங்கமாலைகளும்
கண்டிகையும் மலிய வாய்த்து.

உரை:

குங்குமத்தாலும் சந்தனத்தாலும் செய்த குழம்புதானோ என்று சொல்லும்படி திருநீற்றுப்பூச்சின் அழகு பெருகவும், உயர்ந்த இரண்டு மலைகளுக்கு நிகரான அகன்ற தோள்களில் அணிந்த குவளைப் பூமாலையோ என்று சொல்லும்படி தாமரைப்பூவில் இருக்கும் பிரமனும், பாற்கடலில் பாம்புப் படுக்கையில் துயில் கொண்ட விட்டுணுவும் வரையறுத்த வாழ்நாளின் முடிவில் அழிந்துவிட, அவர்களின் எலும்புகளால் ஆன மாலைகளும் அக்கமணி மாலைகளும் மிகுந்து விளங்கவும்;

விளக்கம்:

கோலம் - அழகு; **மல்க** - பெருக; **துங்கவரை** - உயர்ந்த மலை; **அனைய** - ஒத்த; **அலர்குவளை** - குவளைப்பூ; **தொடையல்** - மாலை; **பங்கயத்தில்** - தாமரைப்பூவில்; **பயில்வான்** - அமரும் பிரமன்; **பால் கடலின் துயில்வான்** - பிரமனின் தந்தையான விட்டுணு; **பழுத்த நாளில்** - வாழ்நாள் முடிவில்; **மங்கியிட** - மடிய; **அங்கமாலை** - எலும்புகளாகிய மாலைகள்; **மலிய** - பெருக; **கண்டிகை** - தாழ்வடம், உருத்திராக்க மாலை. (119)

Koviloor Digital Library

சிவபிரான் எழுந்தருளியிருக்கும் நிலை

1100. திருவரையிற் புலியதளுஞ்
சிறந்திலங்கவுடைவாளுஞ் செறித்தகச்சும்
பரிபுரமு மிருவினையும் பறித்தருளென்றிரு
பதமும் பற்றியொற்றப்
பொருகழலுந் திருவடியிற் பொலிந்திலங்கப்புடை
தொழுவார் புலன்கடன்னை
பருகியவருளத்தரிய பரமபலமளித்
தொழித்துப் பாசமெல்லாம்.

திருஅரையில் புலிஅதளும் சிறந்து இலங்க
உடைவாளும் செறிந்த கச்சும்
பரிபுரமும் இருவினையும் பறித்து
அருள்என்று இருபதமும் பற்றிஒற்றப்
பொருகழலும் திருஅடியில் பொலிந்து இலங்கப்
புடைதொழுவார் புலன்கள்தன்னைப்
பருகிஅவர் உளத்து அரியபரமபலம்
அளித்து ஒழித்துப்பாசம் எல்லாம்.

உரை:

திருவரையில் புலியின் தோலும் உடைவாளும் கச்சைப் பட்டையும் சிறப்பாகப் பொருந்தி விளங்கவும், தன்னை வணங்கும் அடியவரின் ஐந்து புலன்களைத் தன்வசப்படுத்தி, அவர் உள்ளத்தில் அருமையானது என்று எண்ணும் உயர்ந்த பயனை அளித்துப் பாசங்களை அகற்றி, நல்வினை, தீவினைகளை நீக்கி அருள் செய்க என்று வேண்டுவன போல் சிலம்பும், பரல்கள் உள்ள வீரக்கழலும் இரண்டு திருவடிகளிலும் ஒலித்துக் கொண்டிருக்கவும்;

விளக்கம்:

அரை - இடுப்பு; அதள் - தோல்; இலங்க - விளங்க; பரிபுரம் - சிலம்பு; இருவினை - நல்வினை, தீவினைகள்; பறித்து - போக்கி; பதம் - திருவடி; பற்றி - பொருந்தி; ஒற்ற - பொருந்த; பொலிந்து - அழகுடன்; புடை - பக்கம்; புலன்கள் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து புலன்கள். பரம - மேலான; பலம் - பயன். (120)

பசுக்களின் தோற்றம்

1101. வீற்றிருக்கும் விமலனது சன்னிதியில்
வெள்விடையும் விளங்குமந்த
வேற்றினயனந்தை முதலிசைந்துறையு
முயிர்க்கிரக்க மெய்தியீசன்

Koviloor Digital Library

றோற்றுவிக்கப் பூதலத்திற்றோன்றியெழிற்
பாற்கடலிற் றுயரந்தன்னை
மாற்றிநிலன் வாழ்வார்க்கும் வரங்கொடுக்கும்
பரமனருள் வழியினாலே.

வீற்றிருக்கும் விமலனது சன்னிதியில்
வெள்விடையும் விளங்கும் அந்த
ஏற்றின் அயல் நந்தைமுதல் இசைந்து உறையும்
உயிர்க்கு இரக்கம் எய்தி ஈசன்
தோற்றுவிக்கப் பூதலத்தில் தோன்றிஎழில்பால்கடலில்
துயரம் தன்னை
மாற்றிநிலன் வாழ்வார்க்கும்
வரம்கொடுக்கும்பரமன் அருள்வழியினால்.

உரை:

எழுந்தருளி அமர்ந்திருக்கும் கடவுளாகிய சிவபெருமானுடைய சன்னிதியில் வெள்ளை நிற எருதும் காணப்படும். அந்த எருதின் அருகில் நந்தை முதலிய பசுக்கள் விரும்பியிருக்கும். அவற்றைச் சிவபெருமான் சிறு உயிர்களுக்கு இரங்கி நிலத்தில் பிறக்கும்படி செய்தலால், அழகிய பாற்கடலில் பிறந்து இவ்வுலகில் வாழ்வார்க்குப் பரமன் அருளியபடி துன்பங்களைப் போக்கி மேலான பலன்களைத் தரும்.

விளக்கம்:

விமலன் - சிவபெருமான்; வெள்விடை - வெள்ளைநிற எருது; ஏறு - காளை; அயல் - அருகு, பக்கம்; நந்தை முதல் - நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை ஆகிய ஐந்து. பூதலம் - தரை; நிலன் - நிலம், தரை; பரமன் - இறைவன். (121)

ஐந்துவகைப் பசுக்கள்

1102. நந்தை சுபத்திரை சுரபிநற்சுசிலை
சுமனையென நவின்றநாம
மைந்தினுக்குமறிக நிறங்காபிலமே கரியவுரு
வணிகொள் வெண்மை
சுந்தரத்த தூமிரமே தாமிரமே
யெனத்துணிந்து நாமஞ் சொல்லி
வந்தனை செய்தவற்றுதித்த இருமூன்று
மாட்டிடுக வரதற் கென்றும்.

Koviloor Digital Library

நந்தை, சுபத்திரை, சுரபிநற் சுசீலை,
சுமனை என நவின்ற நாமம்
ஐந்தினுக்கும் அறிக நிறம் கபிலமே கரியஉரு
அணிகொள் வெண்மை
சுந்தரத்த தூமிரமே தாமிரமே எனத்
துணிந்து நாமம் சொல்லி
வந்தனை செய்து அவற்று உதித்த இரு மூன்றும்
ஆட்டிடுக வரதற்கு என்றும்.

உரை:

மேற்சொன்ன ஐந்து பசுக்களுக்கும் நந்தை, சுபத்திரை, சுரபி, நல்ல சுசீலை, சுமனை எனப் பெயர்களை அறிவாயாக. அவற்றுள் நந்தை கபில நிறம்; சுபத்திரை கருமை நிறம்; சுரபி அழகிய வெள்ளை நிறம்; சுசீலை அழகிய கருஞ்சிவப்பு; சுமனை செந்நிறம் என்று தெளிந்து, ஒவ்வொன்றின் பெயரையும் கூறிப் பூசை செய்து அவைதரும் பால், தயிர், நெய், மூத்திரம், சாணம் - கோரோசனை என்ற ஆறு பொருள்களின் கலவையையும், அடியவர் வேண்டியதை வேண்டியபடியே அருள்பவனாகிய சிவபெருமானுக்குத் திருமுழுக்குச் செய்க.

விளக்கம்:

கபிலநிறம் - கருமை கலந்த பொன்மை; சுந்தரத்த - அழகான; தூமிரம் - இது தூம்பிரம் என்று இருக்க வேண்டும்; தூம்பிரம் என்பது கருஞ் சிவப்பு. தாமிரம் - செந்நிறம், சிவப்பு; நாமம் - பெயர்; இருமூன்று - ஆறு; வந்தனை - வழிபாடு, பூசனை; ஆட்டிடுக - திருமுழுக்குச் செய்க.

கோரோசனை - பசுவின் வயிற்றிலிருந்து எடுக்கப்படும் மஞ்சள் நிறம் உள்ள மணப் பொருள். இது மருந்தாகவும் பயன்படும். வரதன் - அடியவர் விரும்புவதை விரும்பியபடியே அளிக்கும் சிவன் வரம் அளிப்பவன். (122)

பசுவின் உடலில் தங்கியிருப்போர்

1103. வேதாவுங்கரியவனு மாவினது
கோட்டடியின் விளங்கிவாழ்வார்
கோதாவிமுதற்றீர்த்தங் கோட்டினு
திச்சராசரமுங் கூடிநிற்கு
மீதான சிரத்தமலன்
விமலையதனடு நெற்றிவிசாகனாசி
மீதானந் தனிலதனுண்ணா
சிதனினாகேசர் விளங்குவாரே.

Koviloor Digital Library

வேதாவும் கரியவனும் ஆவினது
கோட்டு அடியில் விளங்கி வாழ்வர்
கோதாவி முதல் தீர்த்தம் கோட்டின்நுதி
சர அசரமும் கூடிநிற்கும்
மீது ஆன சிரத்து அமலன் விமலை
அதன் நடுநெற்றி விசாகன்நாசி
மீதானம் தன்னில் அதன்உள் நாசி
தன்னில் நாகேசர் விளங்குவார்.

உரை:

பிரமனும் விட்டுணுவும் பசுவின் கொம்புகளின் அடியில் இருப்பர். கோதாவரி முதலான நதிகளும், இடம்பெயரும் உயிர்களும், இடம் பெயராதனவும் கொம்புகளின் நுனியில் கூடி நிற்கும்; தலையில் சிவனும், நெற்றி நடுவில் சிவையும், மூக்கின் நுனியில் கந்தனும், மூக்கினுள்ளே இந்திரன் முதலியோரும் விளங்குவர்.

விளக்கம்:

வேதா - பிரமன்; கரியவன் - விட்டுணு; கோட்டு - கொம்பு; கோதாவி - கோதாவரி என்ற ஆறு இது புண்ணிய தீர்த்தங்களிலொன்று. தீர்த்தம் - நீர்; கோட்டின்நுதி - கொம்பின்நுனி; சரம் - இடம் பெயரும் உயிர்கள்; அசரம் - இடம் பெயராத மரம் முதலியன; விசாகன் - கந்தன்; நாகேசர் - இந்திரன் முதலியோர். (123)

பசுவின் உடலில் தங்கியிருப்போர்

1104. ஆசகல விருகன்ன நாப்பண
சுவினி தேவரமர்ந்து வாழ்வர்
தேசுடைய பரிதிமதிநயனத்திற்றந்தத்திற்
செறியும் வாயு
வோசையுறு நாவதனில் வருணனுரை
மகளோங்கார நெஞ்சில்
நேசமுறய மனியக்கர்கண்ட
தலத்தெந்நாளும் நிலவுவாரே.

ஆசுஅகல இருகன்னம் நாப்பண்
அசுவினி தேவர் அமர்ந்து வாழ்வர்
தேசுஉடைய பரிதிமதி நயனத்தில்
தந்தத்தில் செறியும் வாயு
ஓசை உறும் நாவு அதனில் வருணன்
உரைமகள் ஓங்கார நெஞ்சில்
நேசம் உறயமன் இயக்கர்
கண்டதலத்து எந்நாளும் நிலவுவார்.

Koviloor Digital Library

உரை:

குற்றம் நீங்கும்படி இரு கன்னங்களின் நடுவில் அசுவினி தேவர்களாகிய இரண்டு மருத்துவர்கள் வாழ்வர்; ஒளியினையுடைய ஞாயிறும் நிலவும் இருகண்களிலும் வாயு பற்களிலும், வருணன் ஒலி பொருந்தும் நாவிலும் சரஸ்வதி ஓங்காரம் தங்கும் நெஞ்சிலும், யமனும் இயக்கருங் கழுத்திலும் எந்நாளும் தங்கியிருப்பர்.

விளக்கம்:

அசுவினி தேவர் - இரு தேவ மருத்துவர்; பரிதி - கதிரவன்; மதி - நிலவு, நயனம் - கண்; தந்தம் - பல்; வாயு - காற்று; வருணன் - கடல் தெய்வம்; உரைமகள் - சரசுவதி; யமன் - உயிரைக் கவருகிறவன்; இயக்கர் - தேவரில் ஒரு பிரிவினர். (124)

பசுவின் உடலில் தங்கியிருப்போர்

1105. ஒட்டத்தி லுதயாத்தமன சந்தியிவையுறையு
முறைவன் கண்டத்
தீட்டுடைய விந்திரனேயிமிலிருப்ப
ரருக்கரென வியம்புந்தேவர்
வாட்டமிலாச் சாத்தியரே
வாழ்வார்க ளுரமதனிலனிலவாயு
நீட்டிய தாளொரு நான்கின்
மருத்தென்பர் முழந்தாளி னிலவுவாரே.

ஒட்டத்தில் உதய அத்தமனசந்தி இவை
உறையும் உறைவன் கண்டத்து
ஈட்டுஉடைய இந்திரனே இமில்இருப்பர்
அருக்கர்என இயம்பும் தேவர்
வாட்டம் இல்லாச் சாத்தியரே வாழ்வார்கள்
உரம் அதனில் அனிலவாயு
நீட்டியதாள் ஒரு நான்கில் மருத்து
என்பர் முழுந்தாளில் நிலவுவார்.

உரை:

உதட்டில் உதயம் அத்தமனம் ஆகியவற்றின் சந்தி தேவதைகள் தங்கும்; வலிமையுள்ள இந்திரன் கழுத்தில் இருப்பான்; திமிலில் அருக்கனும், மார்பில் சோர்வு இல்லாத சாத்தியரும், நான்கு கால்களில் அனிலவாயுவும், முழந்தாளில் மருத்துவரும் வாழ்வர்.

விளக்கம்:

உதயம் அத்தமனம் - கதிரவன் தோற்றமும் மறைவும்; இந்திரன் -

Koviloor Digital Library

அருக்கன், சாத்தியர், மருத்துவர் இவர்கள் தேவசாதியர். அனிலம் - காற்று; இமில் - திமில். (125)

பசுவின் உடம்பில் தங்கியிருப்போர்

1106. குரத்தினுதிப் பன்னகரே குடிகொள்வர்
காந்தருவர் குரத்தினாப்ப
ணிருப்பரரமகளிர்கண மிவரெல்லா
மேற்குரத்தின் முதுகினெல்லை
யுருத்திரரேசந்து தொறு முறைவார்கள்
வசுதேவர் பிதிர்களோங்கிப்
பருத்தவரைப் பலகை தன்னிற் பகத்துறைவ
ரெழுமாதர் பரிவு கூர்ந்தே.

குரத்தில் நுதிப்பன்னகரே குடிகொள்வர்
காந்தருவர் குரத்தில் நாப்பண்
இருப்பர் அரமகளிர்கணம் இவர்எல்லாம்
மேல்குரத்தில் முதுகின் எல்லை
உருத்திரரே சந்துதொறும் உறைவார்கள்
வசுதேவர் பிதிர்கள் ஓங்கிப்
பருத்தவரைப் பலகை தன்னில்பகத்து உறைவர்
எழுமாதர்பரிவு கூர்ந்து ஏ.

உரை:

கால்குளம்புகளின் நுனியில் நாகர்களும், அக்குளம்புகளின் நடுவே கந்தருவரும், குளம்புகளின் மேற்பகுதியில் அரம்பையரும், முதுகில் உருத்திரரும், பொருத்துகள் தோறும் வசுக்களும், பருத்த உடற்பரப்பில் பிதிர்களும், யோனியில் ஏழு மாதர்களும் அன்பாக வாழ்வர்.

விளக்கம்:

குரம் - குளம்புகள்; பன்னகர் - நாகர்; நாப்பண் - நடுவே; கந்தருவர் - தேவசாதியர்; சந்து - மூட்டு; ஏழுமாதர் - அபிராமி, மகேசுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி என்போர். பகம் - யோனி. (126)

பசுவின் உடலில் தங்கியிருப்போர்

1107. திருமகளேய பானத்தினாகேசரடி வாலிற்
சிறந்து வாழ்வ
ரிரவியொளிவாலின் மயிரிலங்கியிடுஞ்
சுரநதிதானேயு நீரின்

Koviloor Digital Library

வரமுடைய யமுனைமயமது தன்னின்
மாதவர்களுரோமம் வாழ்வ
ருரமுடைய பூதேவியுதரத்திற்
பயோதரத்தினுததி யெல்லாம்.

திருமகளே அபானத்தில் நாகேசர்
அடிவாலில் சிறந்து வாழ்வர்
இரவிஒளி வாலின்மயிரில் இலங்கியிடும்
சுரநதிதான் ஏயும்நீரில்
வரம்உடைய யமுனைமயம் அதுதன்னில்
மாதவர்கள் உரோமம் வாழ்வர்
உரம்உடைய பூதேவி உதரத்தில்
பயோதரத்தில் உததி எல்லாம்.

உரை:

திருமகள் சாணம் வெளிப்படும் ஆசன வாயிலிலும், அடிவாலில் நாகர் தலைவரும், ஒளியுள்ள வாலின் மயிரில் ஆதித்தனும், மூத்திரத்தில் கங்கையும், சாணத்தில் பெருமையுடைய யமுனை ஆறும், உடம்புலுள்ள மயிர்களில் தவசிகளும், வயிற்றில் ஆற்றல் உடைய நிலமகளும், முலைக்காம்புகளில் எல்லாக் கடல்களும் பொருந்தும்.

விளக்கம்:

அபானம் - சாணம் வெளியாகும் ஆசன வாயில்; நாகேசர் - நாகர்களின் தலைவர்; இரவி - ஆதித்தன், சூரியன்; சுரநதி - கங்கையாறு; மயம் - கோமயம், சாணம்; யமுனை - பிரயாகையில் கங்கையோடு கலக்கும் நதி; மாதவர் - தவசிகள்; உரோமம் - மயிர்; உரம் - ஆற்றல்; பூதேவி - நிலமகள்; உதரம் - வயிறு; பயோதரம் - முலை; உததி - கடல். (127)

பசுவின் உடம்பில் தங்கியிருப்போர்

1108. சடரத்தினிதயத்திற் றழைத்தமுகமது
தன்னிற் றங்குமங்கி
கடனுடனே காருகபத்திய
மெழுவாயொருமூன்றுங் கடினவென்பி
னுடலுறு சுக்கிலந் தனினுமுறையு
மகவினையனைத்து முறுப்புத் தோறுந்
திடமுறு கற்புடை மடவார்
செறிந்திருப்பா ரிம்முறையைச் சிந்தைசெய்தே.

Koviloor Digital Library

சடரத்தில் இதயத்தில் தழைத்தமுகம்
அதுதன்னில் தங்கும் அங்கி
கடனுடனே காருகபத்தியம் எழுவாய் ஒரு
மூன்றும் கடின என்பில்
உடல்உறும் சுக்கிலம் தன்னிலும் உறையும்
மகம்வினை அனைத்து உறுப்புத்தோறும்
திடம்உறுகற்பு உடைமடவார் செறிந்து இருப்பார்
இம்முறையைச் சிந்தை செய்து.

உரை:

வயிற்றிலும் நெஞ்சிலும் செழிப்பான முகத்திலும் முறையே காருகபத்தியம், தக்கிணாக்கினி, ஆகவனீயம் என்ற மூன்று வகைத் தீயும் பொருந்தும். உறுதியான எலும்பிலும், உடலினுள் பொருந்திய வெண்மையான தாதுவிலும், யாகத் தொழில் முழுமையும் பொருந்தும் எல்லா உறுப்புகளிலும், இல்லற ஒழுக்கம் தவறாத பெண்கள் பொருந்தியிருப்பர் என இம்முறையைக் கருதுக.

விளக்கம்:

சடரம் - வயிறு; எழுவாய் - முதல்; கடினம் - உறுதி; அங்கி மூன்று - காருகபத்தியம், தக்கிணாக்கினி, ஆகவனீயம் ஆகியவை. ஆகவனீயம் - இது ஒருவகை யாகத்தீ; நாற்சதுர குண்டத்திலெழுவது; தக்கிணாக்கினி - இது ஒருவகை யாகத்தீ; முக்கோண குண்டத்தெழுவது; காருக பத்தியம் - இது ஒருவகை யாகத்தீ; வில்வடிவம். குண்டங்களின் வடிவே அவ்வவ்வக்கினிக்கும் வடிவாற் பெயர்; அங்கி - நெருப்பு; என்பு - எலும்பு; சுக்கிலம் - தாது; மகம் - யாகம்; திடம் - மனத் திண்மை; கற்பு - இல்லற ஒழுக்க உறுதி; மடவார் - மகளிர். (128)

பசு வளர்ப்பு

1109. ஆக்கடனை யியக்கிடினு மார்வங் கூர்ந்தே
யங்கையினிற் பலாசந்தண்டாலே மெல்ல
வோக்கியுடற் கொறுப்பறவே யொற்றியொற்றிக்
கெச்சநெறி கெச்சநெறியென்றே யோதும்
வாக்கியரே சிவபுரியின் வரத்தையுற்று
மலரிரதத் தமலனென மகிழ்ந்து வாழ்வர்
தீக்குழியைச் செறிவார்கள் கருணையின்றிச்
சினத்ததட்டியடித்தொறுக்குஞ் சிறியார்தாமே.

ஆக்கள் தன்னை இயக்கிடினும் ஆர்வம் கூர்ந்தே
அங்கையினில் பலாசம் தண்டாலே மெல்ல
ஒக்கி உடற்கு ஒறுப்பு அறவே ஒற்றி ஒற்றிக்
கெச்சநெறி கெச்சநெறி என்றேஓதும்

Koviloor Digital Library

வாக்கியரே சிவபுரியில் வரத்தை உற்று
மலர் இரதத்து அமலன்என மகிழ்ந்து வாழ்வர்
தீக்குழியைச் செறிவார்கள் கருணை இன்றிச்
சினத்து அதட்டி அடித்து ஒறுக்கும் சிறியார்தாம்.

உரை:

பசுக்களை மேய்க்கிறபோது ஆசைமிகுந்து அழகிய கையில் இருக்கும் பலாசமரத்துக் குச்சியால் மெல்லத் தொட்டுத் தொட்டு போ போ என்று மென்மையாகச் சொல்லுகிறவர்கள், சிவ உலகின் பூந்தேரில் இருக்கும் இறைவனைப் போல இன்பமாக வாழ்வர். இவ்வாறு இல்லாமல் இரக்கம் இன்றிக் கோபித்து வன்சொல்லால் அதட்டி அடித்துக் கொடுமை செய்யும் அறிவில்லாத கீழோர் நரகப்பள்ளத்தை அடைவர்.

விளக்கம்:

இயக்குதல் - மேய்த்தல்; அங்கை - அழகியகை; தண்டு - கோல்; பலாசம்- தெய்விகமான விருச்சங்களிலொன்று முருக்க மரம்; ஓக்கி -ஓச்சி, ஓங்கி; ஒறுப்பு அற - அடிக்காமல்; ஒற்றி - தொட்டு; கெச்சநெறி - போ என்று; ஓதும் - சொல்லும்; கெச்ச நெறி - வழியே போ; வாக்கியர் - சொல்லுகிறவர்; அமலன் - இறைவன்; கருணை - அருள்; சினத்து - கோபித்து; சிறியோர் - கீழோர். (129)

பசுவை வணங்குதல்

1110. அரனாதியொரு மூவரம ரேசன் மருமானு
மொருவாம லுறைவார்களுமையாதி மடவாரு
மரிதாய மறையோர்க ளுடலாவி னுடலார்வ
மொருவாது வழிபாடு புரிவார்களுயர்வாரே.

அரன்ஆதிஒரு மூவர் அமரேசன் மருமானும்
ஒருவாமல் உறைவார்கள் உமைஆதி மடவாரும்
அரிதுஆய மறையோர்கள் உடல் ஆவின் உடல் ஆர்வம்
ஒருவாது வழிபாடு புரிவார்கள் உயர்வார்.

உரை:

அரன், அரி, அயன், கந்தன், இந்திரன், உமை முதலியோரும், அரிய வேதியர்களும் பசுவின் உடலில் நீங்காமல் வாழ்வர். ஆகையால்,அப்பசுவை ஆர்வத்தோடு பூசித்து வணங்குகிறவர்கள் உயர்வு பெறுவர்.

Koviloor Digital Library

விளக்கம்:

அமரேசன் - இந்திரன்; மருமான் - மருமகன்; கந்தபுராணக் கதையின்படி கந்தன், இந்திரன் மகளான தெய்வ யானையை மணந்ததால் இந்திரனுக்கு மருமகன் ஆவான். (130)

பசுவை வணங்கியவர் பெறும்பயன்

1111. பரியாது பகையாளர் பணியாது பழியாள
ரெரிவாய நிரைவீழு மெளியார் களரியார்கள்
பரிவார்கள் பணிவார்கள் பதமீது பரமான
வரிதாய சிவலோக மெளிதாக வடைவாரே.

பரியாது பகையாளர் பணியாது பழியாளர்
எரிவாய நிரைவீழும் எளியார்கள் அரியார்கள்
பரிவார்கள் பணிவார்கள் பதம்மீது பரமான
அரிதுஆய சிவலோகம் எளிதாக அடைவார் ஏ.

உரை:

பசுக்களைப் பாதுகாக்காமலும் வணங்காமலும் இருக்கிற குற்றம் உள்ளவர்கள் எரிகின்ற நரகத்தில் விழும் அறிவில்லாதவர்கள்; அவர்கள் அந்த நரகிலிருந்து மீளுதல் அருமை. பசுக்களைக் காப்பவர்களும் அவற்றின் கால்களில் விழுந்து கும்பிடுகிறவர்களும் மேலான சிவ உலகை எளிதாகப் பெறுவர்.

விளக்கம்:

பரிதல் - காத்தல்; பணிதல் - வணங்குதல்; நிரை - நிரயம், நரகம்; பதம் - கால்; பரமான - மேலான;

(பாலுக்காகப் பசுமாடுகளை வளர்க்கும் சைவ, வைணவ சமயிகள் மாட்டுப் பொங்கல் நாளில் மாடுகளைப் பெருமைப்படுத்துவதைக் காணலாம்.) (131)

பசுக்களைப் பேணி வளர்ப்பவர் பெறும்பயன்

1112. வலஞ்செய் தாக்களை வாழ்த்தி வணங்கியே
நலஞ் செய்தார் புல்லுநாவிற் கொடுத்துடல்
விலங்கை விட்டும் விமலன் புரத்துளே
யிலங்கிச் சுற்றத் தொடு மிருப்பார்களே.

வலம்செய்து ஆக்களை வாழ்த்தி வணங்கியே
நலம் செய்தார் புல்லும் நாவில் கொடுத்து உடல்
விலங்கை விட்டும் விமலன்புரத்து உள்ளே
இலங்கிச் சுற்றத்தோடும் இருப்பார்கள்.

Koviloor Digital Library

உரை:

பசுக்களுக்குப் புல்வகைகளை நாவிலே ஊட்டி, அவற்றை வலமாக வந்து வணங்குகின்ற நல்லவர்கள், பிறவிக்குக் காரணமாகும் இருவினைகளிலிருந்து விடுபட்டுச் சுற்றத்தாரோடு சிவஉலகை அடைவர்.

விளக்கம்:

வாழ்த்தி - ஆளுடைய பிள்ளையார் தாம் அருளிய திருப்பாசுரத்தின் தொடக்கத்திலே,

''வாழ்க அந்தணர் வானவர் ஆன் இனம்''

என்று வாழ்த்தினார்.

உடல் விலங்கு - பிறவிச் சிறை.

''பிறவிச் சிறை விட்டது பாசவினை விலங்கு''

என்பது அருணகிரிநாதர் வாக்கு. (132)

பால் திருமுழுக்கிற்கு உரியது

1113. பருகினார் கபிலைத் திகழ் பாலினை
யெரிவரே யெரிவாய் நிரயத் தெழிற்
பரமனுக்கு அபிடேகமும் பண்ணினர்
விரவுவார்கள் விமலன் புரத்துளே.

பருகினார் கபிலைத் திகழ்பாலினை
எரிவரே எரிவாய் நிரயத்து எழில்
பரமனுக்கு அபிடேகமும் பண்ணினர்
விரவுவார்கள் விமலன் புறத்து உள்ளே.

உரை:

நந்தை என்னும் பெயருடைய பசுவைக் கபிலை என்பர். கபிலை என்றால் பழுப்பு நிறப்பசு. இந்தப் பழுப்பு நிறப்பசுவின் பாலைச் சிவன் திருமேனியில் திருமுழுக்குச் செய்தவர், அப்புண்ணியப் பயனால் இறைவனுடைய சிவ உலகை அடைவார். இவ்வாறு செய்யாமல், அப்பாலைத்தாமே பருகியவர், எரியும் நரகை அடைவார்.

விளக்கம்:

கபிலை - நந்தை, பழுப்பு நிறப் பசு; பரமன் - இறைவன்; விமலன் - சிவன். (133)

Koviloor Digital Library

பசுவைத் தொட்டால் பாவம் போகும்!

1114. தீண்டப் பாவங்க டேய்ந்தறு நல்வினை
யீண்டும் புற்றனையீய விரங்கியே
வேண்டுநற் பொருள் வேறிலை யானலாற்
காண்டகைப் பொருடானுங் கருதிலே.

தீண்டப் பாவங்கள் தேய்ந்து அறும் நல்வினை
ஈண்டும்புல் தன்னை ஈய இரங்கியே
வேண்டும்நல்பொருள் வேறுஇல்லை ஆன் அல்லால்
காண்தகைப் பொருள் தானும் கருதில்.

உரை:

பசுக்களைக் கையால் தொட்டதும் பாவங்கள் குறைந்து அகலும். மனம் இரங்கி அவற்றிற்குப் புல்லைக் கொடுத்தால் புண்ணியம் வந்து பொருந்தும். ஆதலால், பசுக்களைத் தவிர விரும்பத்தக்க நல்ல பொருள் வேறு எதுவுமில்லை; எண்ணிப் பார்த்தால், காண்பதற்குத் தகுதியான பெருமையுடைய பொருள்கள் அவையே ஆகும்.

விளக்கம்:

தீண்ட - தொட; தேய்ந்து - குறைந்து; அறும் - நீங்கும்; ஈண்டும் - பொருந்தும்; நல்வினை - புண்ணியம்; ஈய - கொடுக்க; ஆன் அல்லால் - பசுவைத்தவிர; கருதில் - எண்ணினால்; காண்தகை - காணத் தகுந்த. (134)

பசுவைப் பூசிப்பதன் பயன்

1115. இங்குமின் சுவையீயு மிறைஞ்சுவார்க்
கங்குமின்ப மடைகைக்குக் காரணம்
பொங்கு தண்புனலுண்டு புற்றின்றுநன்
மங்கலந்தரும் கோவெனும் வான்பொருள்.

இங்கும் இன்சுவைஈயும் இறைஞ்சுவார்க்கு
அங்கும் இன்பம் அடைகைக்குக் காரணம்
பொங்கு தண்புனல் உண்டுபுல் தின்றுநல்
மங்கலம் தரும் கோஎன்னும் வான்பொருள்.

உரை:

பொலிவும் தண்மையும் உள்ள நீரைப் பருகிப் புல்லை மேய்ந்து, நல்ல மங்களங்களைக் கொடுக்கும் பசுவாகிய பெருமையுடைய பொருளைப் பேணிப்

Koviloor Digital Library

போற்றுவோருக்கு அவை இம்மையிற் பால் முதலான சுவைப்பொருளைத் தருவதோடு, மறுமையிற் சிவஉலக இன்பம் பெறுதற்கும் காரணமாக அமைகின்றன.

விளக்கம்:

இங்கு - இவ்வுலகு; அங்கு - சிவஉலகு; இன்சுவை - இனிய பால்; இறைஞ்சுவார்க்கு - தொழுபவர்களுக்கு; பொங்கு - பொலிவுள்ள; **தண்புனல்** - குளிர்ந்த நீர்; மங்கலம் - நலம்; கோ - பசு; என்னும் - என்கிற; வான் பொருள் - உயர்ந்த பொருள். (135)

பசுக்களுக்குத் தொழுவம் அமைத்தல்

1116. இட்டிகையாதியிற் சாலையியற்றுக
விட்டுவாய்தலும் பூருவமேவவே
குட்டிகைப் புற நான்கிலுங் கோலுக
விட்ட தேவர்க்கிசைந்த விடங்களே.

இட்டிகை ஆதியில் சாலை இயற்றுக
விட்டுவாய்தலும் பூருவம் மேவவே
குட்டிகைப்புறம் நான்கிலும் கோலுக
விட்ட தேவர்க்கு இசைந்த இடங்கள்.

உரை:

கிழக்குத் திசையில் வாசல் பொருந்த இடம் விட்டுச் செங்கல் முதலியவற்றால் கோசாலை செய்க. அக்கோசாலையின் சிறிய சுவர்களுக்கு வெளியே நான்கு பக்கங்களிலும் பொருத்தமான தேவர்களுக்கு ஏற்ற இடங்களைக் கட்டுக.

விளக்கம்:

இட்டிகை - செங்கல்; சாலை - கோசாலை; பசுக் கொட்டில்; **பூருவம்** - கிழக்கு; மேவ - பொருந்த; குட்டிகை - குட்டிச்சுவர்; கோலுக - அமைக்க, செய்க; இசைந்த - ஏற்ற. (136)

பசுத் தொழுவம் அமைத்தல்

1117. கொற்றவைக்குறு கோட்டமும் பூருவஞ்
சொற்றவைந்திற்குந் தொக்கிடந் தக்கண
மொற்றைக் கொம்பனுக்குன்னத மேற்றிசை
மற்றைச் சோமற்கு நந்திக்கு மற்றிடம்.

Koviloor Digital Library

கொற்றவைக்கு உறுகோட்டமும் பூருவம்
சொற்ற ஐந்திற்கும் தொக்குஇடம் தக்கணம்
ஒற்றைக் கொம்பனுக்கு உன்னதமேல் திசை
மற்றைச் சோமற்கும் நந்திக்கும் மற்று இடம்.

உரை:

பசுக் கொட்டிலுக்குக் கிழக்கில் கொற்றவைக்குப் பொருந்திய கோயிலும், தெற்கில் முன் சொல்லிய பால், தயிர், நெய், சாணம், சிறுநீர் ஆகிய ஐந்துக்குத் தொகுப்பிடமும், மேற்கில் கணபதிக்கு உன்னதமான கோயிலும், வடக்கில் சந்திரனுக்கும் நந்திக்கும் கோயிலும் செய்க.

விளக்கம்:

கொற்றவை - துர்க்கை; கோட்டம் - கோயில்; பூருவம் - கிழக்கு; சொற்ற - சொன்ன; தொக்கு - தொகுத்த; தக்கணம் - தெற்கு; ஒற்றைக் கொம்பன் - கணபதி; உன்னதம் - உயர்வு; மேல்திசை - மேற்கு; சோமற்கு - சந்திரனுக்கு; நந்தி - சிவகணத் தலைவன்; மற்றுஇடம் - வடக்கு. (137)

பசுத் தொழுவம் - தொடர்ச்சி

1118. பூர்வ வாய்தற் புறத்திரு பாகத்து
மார்வங்கூர விருவரையாக்குக
வாரபாலகர் நந்திமாகாளரை
யேருறச் செய்கமீது வெள்ளேற்றையே.

பூர்வம் வாய்தல் புறத்து இருபாகத்தும்
ஆர்வம் கூர இருவரை ஆக்குக
வாரபாலகர் நந்திமாகாளரை
ஏர்உறச் செய்கமீது வெள் ஏற்றை.

உரை:

கோயிலுக்குப் பயன்படும்படி வளர்க்கப்படுகிற பசுக்கள் தங்குமிடத்தைப் பசுமடம் என்று சொல்லுகிற மரபும் உண்டு. அப்பசு மடத்தின் கிழக்கு வாசலை அடுத்த இருபக்கங்களிலும் வாசற்காவலர்களாகிய நந்தி தேவர், மாகாளர் ஆகிய இருவரையும் நிலைநிறுத்துக. திருமதிலின் மேலே அழகு பொருந்த வெண்மையான எருதுகளை அமைத்திடுக.

விளக்கம்:

பூர்வம் - பசுமடத்தின் கிழக்கு; வாய்தல் - வாசல்; ஆர்வம் கூர -

Koviloor Digital Library

விருப்பமுடன்; வார பாலகர் - வாசற் காவலர்; (வாசற்காவலரைத் துவார பாலகர் என்பர். துவாரம் என்பது இங்கு வழி, வாசல் என்று பொருள்படும்.) ஏர்உற - அழகு பொருந்த; வெள் - வெள்ளை; ஏறு - காளை, எருது; ஏற்றை - காளையை, எருதை; ஆக்குக - செய்க. (138)

பசுமடம் - தொடர்ச்சி

1119. உத்தமத்த நதியின் மண்ணோடை மண்
வித்தகத்தநல் வில்வத் தடியின்மண்
பொற்றைப் புற்றின் மண்போதியின் கீழ்மணென்
றித்தகைத்தநற் கவ்வியத் தேய்கவே.

உத்தமத்த நதியின்மண் ஓடைமண்
வித்தகத்த நல் வில்வத்து அடியின்மண்
பொற்றைப்புற்றின் மண் போதியின் கீழ்மண் என்று
இத்தகைத்தநல் கவ்வியத்து ஏய்க.

உரை:

மேலான ஆறு ஓடைகளின் மண், உயர்வான நல்ல வில்வ மரத்தின் அடிமண், மலையை ஒத்த புற்றின் மண், அரசமரத்தின் அடி மண் இவற்றை நல்ல கவ்வியத்தோடு பொருந்துமாறு செய்க.

விளக்கம்:

உத்தமத்த - மேலான; வித்தகத்த - உயர்வான; வில்வம் - வில்வமரம்; பொற்றை - மலை; போதி - அரசமரம்; ஏய்க - பொருந்தச் செய்க. (139)

பசுமடம் - தொடர்ச்சி

1120. குயிற்றி முன்சொன்ன கோலமனைத்தையும்
பயிற்றியங்கவர்க் கெய்த நறபால்களின்
முயற்சியோடய னாதியர் மூவர்க்கு
மயர்ச்சி தீரவுள்ளர்ச்சனை யாக்கவே.

குயிற்றிமுன் சொன்ன கோலம் அனைத்தையும்
பயிற்றி அங்கு அவர்க்கு எய்தநல்பால்களில்
முயற்சியோடு அயன் ஆதியர் மூவர்க்கும்
அயர்ச்சி தீர உள் அர்ச்சனை ஆக்க.

உரை:

முன்சொன்ன மண், கவ்வியங்களால் எல்லா அழகும் பொருந்தப்

Koviloor Digital Library

பசுமடத்தைச் செய்து விதிப்படி பிரமன், விட்டுணு, அரன் ஆகிய மூவருக்கும் அவரவருக்கு உரிய நல்ல இடங்களில் நிறுவிச் சோர்வு நீங்குமாறு வழிபாடு செய்க.

விளக்கம்:

கோலம் - அழகு; பயிற்றி - பசுமடத்தை அமைத்து; எய்த - அடைய; நல்பால்களில் - நல்ல பக்கங்களில்; அயர்ச்சி - சோர்வு; அயன் ஆதிய மூவர் - அயன் முதலான மூவர், பிரமன், விட்டுணு, அரன்; அர்ச்சனை - மலர் தூவுதல், பூசை. (140)

பசுமடம் - தொடர்ச்சி

1121. கற்றினங்களுந் தங்கிடங் கட்டுக
மற்றிடங் குழக்கன்றுகள் வைகவு
முற்றநோய்க ளொடுங்கு மிடங்களு
முற்றுமா செய்கமுற்று முயற்சியால்.

கற்று இனங்களும் தங்கு இடம் கட்டுக
மற்றுஇடம் குழக்கன்றுகள் வைகவும்
உற்ற நோய்கள் ஒடுங்கும் இடங்களும்
முற்றுமா செய்க முற்றும் முயற்சியால்.

உரை:

பசுமடத்தில் வளர்ந்த கன்றுகள் தங்குதற்குரிய இடமும், பால் குடிக்கும் இளங்கன்றுகள் தங்குவதற்கு ஏற்ற இடமும், நோய் வாய்ப்பட்ட பசுக்களைத் தனி இடத்தில் வைத்துச் சிகிச்சை செய்யும் இடமும் வேறு வேறாகக் குறைவு இல்லாமல் அமைத்திடுக.

விளக்கம்:

கற்று - கன்று; குழக்கன்று - பால் குடிக்கிற இளம் கன்று; வைக - தங்க; உற்ற நோய்கள் - நோயுற்ற பசுக்கள்; ஒடுங்கும் இடம் - ஒதுக்கமாக இருக்கும் இடம்; முற்றுமா - நிறைவு பெற; முற்றும் - முழுமையாக, சரிவர. (141)

நோய் உள்ள பசுக்கள்

1122. செய்க வேறிடஞ் சீர்மையதாகவே
வெய்ய நோய்கள் விரவிடி லாக்களைப்
பையவங்கணுறு கணைப்பாற்றுக
மையறீர மருந்து மருத்தியே.

Koviloor Digital Library

செய்க வேறுஇடம் சீர்மையது ஆகவே
வெய்ய நோய்கள் விரவிடில் ஆக்களைப்
பைய அங்கண் உறுகணைப் பாற்றுக
மையல்தீர மருந்தும் அருத்தியே.

உரை:

பசுக்களைக் கொடிய நோய்கள் தாக்கினால், அவை தங்குவதற்கு ஒழுங்காக வேறு இடத்தை அமைத்து அதில் கட்டுக, அவற்றின் மயக்க நோய்தீர மருந்தைப் புகட்டி, அவற்றின் நோய்த் துன்பத்தைப் போக்குக.

விளக்கம்:

சீர்மை - ஒழுங்கு; **வெய்ய** - கொடிய; **விரவிடில்** - பரவினால்; **ஆக்கள்** - பசுக்கள்; **பைய** - மெல்ல; **அங்கண்** - அவ்விடம்; **உறுகண்** - துன்பம்; **பாற்றுக** - நீக்குக; **மையல்தீர** - மயக்கம் நீங்க; **அருத்தி** - புகட்டி. (142)

பசுமடத் துப்புரவு

1123. கண்ணிவாய்தலு நாற்றிசை காணவே
பண்ணிக் கோமயம் பாற்றுக நீற்றினாற்
றிண்ணிதாகவுஞ் சோதனை செய்தபி
னண்ணிடாமன் மசகமு நாடொறும்.

கண்ணி வாய்தலும் நாற்றிசை காணவே
பண்ணிக் கோமயம் பாற்றுக நீற்றினால்
திண்ணிதாகவும் சோதனை செய்தபின்
நண்ணிடாமல் மசகமும் நாள்தொறும்.

உரை:

நோய் உற்ற பசுக்கள் தங்குவதற்காகக் கட்டிய பசுமடத்திற்கு விதிப்படி நான்கு பக்கங்களிலும் வாசல்களைக் கருதிச் செய்து, சாணம் முதலானவற்றை அகற்றியபின் உட்புறத் தரையைச் சுண்ணாம்புச் சாந்தால் தடவித் துப்புரவாக்கிப் பின்னர் கொசுகு, ஈ முதலியன அணுகாவண்ணம்;

விளக்கம்:

கண்ணி - கருதி; **வாய்தலும்** - வாசலும்; **நாற்றிசை** - நான்கு பக்கம்; **கோமயம்** - சாணம்; **பாற்றுக** - அகற்றுக; **நீற்றினால்** - சுண்ணாம்புச் சாந்தால்; **திண்ணிதாக** - உறுதியாக; **நண்ணிடாமல்** - நெருங்காமல்; **மசகம்** - கொசுகு. (143)

Koviloor Digital Library

பசுமடத் துப்புரவு

1124. தூபந்தன்னைத் துதைக்க துலங்கவே
தீபந்தானுஞ் சிறக்கச் செறிக்கநற்
பூவினாற் றொடை யெங்கணும் பூட்டுக
கோவினைப் புகச் செய்க குறிப்பொடே.

தூபம் தன்னைத் துதைக்க துலங்கவே
தீபம் தானும் சிறக்கச் செறிக்கநல்
பூவினால் தொடை எங்கணும் பூட்டுக
கோவினைப் புகச் செய்க குறிப்போடு.

உரை:

அப்பசுமடத்தில் அகிற்புகை எங்கும் பரவச் செய்க; விளக்குகளை எல்லாப் பக்கங்களிலும் ஏற்றி ஒளி பரப்புக; மணமுள்ள பூமாலைகளைச் சுற்றிலும் தொங்கவிடுக; பின்னர், நல்ல வேளையிற் பசுக்களைப் பசுமடத்தின் உள்ளே செல்லவிடுக.

விளக்கம்:

தூபம் - நறுமணப் புகை; தீபம் - எண்ணெய்விளக்கு; செறிக்க - பொருந்தச் செய்க; தொடை - மாலை; எங்கணும் - சுற்றிலும்; பூட்டுக - தொங்க விடுக; கோ - பசு; புகச் செய்க - உள்ளே செல்லவிடுக. (144)

பசுவைக் கொட்டிலில் செலுத்தும் முறை

1125. சொல்லி மெல்லச் சுவத்தியெனுஞ் சொலை
மெல்லமெல்லச் செலுத்துக மேவிட
வல்லிதாம் வளைப்பாயலும் வாய்க்கவே
நல்லபுல்லுங் கொடுக்க நயத்தோடே.

சொல்லிமெல்லச் சுவத்தி என்னும் சொல்லை
மெல்ல மெல்லச் செலுத்துகமேவிட
வல்லிதாம் வள்ளைப்பாயலும் வாய்க்கவே
நல்ல புல்லும் கொடுக்க நயத்தோடு.

உரை:

வலிமையுள்ள வள்ளைக் கொடிகளாற் செய்த பாய்களை விரித்திடுக. சுவத்தி என்ற சொல்லைச் சொல்லிக் கொண்டே பசு மடத்தின் உள்ளே பசுக்களைப் பையப் பையச் செலுத்துக. அன்போடு அறுகம் புல்லைப் பசுக்களுக்கு ஊட்டுக.

Koviloor Digital Library

விளக்கம்:

சுவத்தி - சுவஸ்தி, இது மங்கலத்தைக் குறிக்கும் சொல். மெல்ல - பைய; வல்லிதாம் - உறுதியான; வளை - வள்ளைக் கொடி; பாயல் - பாய்; வாய்க்க - விரித்திடுக; நல்லபுல் - அறுகம்புல்; நயத்தொடு - அன்போடு. (145)

பசுவைப் பூசிக்கும் முறை

1126. ஆட்டி மஞ்சன மட்டமிதோறும்பூச்
சூட்டியோதன மாதியுந் தோயமு
மூட்டியாக்களை யோகையுறுத்துக
காட்டித் தூபமுந் தீபமுங் காதலால்.

ஆட்டி மஞ்சனம் அட்டமி தோறும் பூச்
சூட்டி ஓதனம் ஆதியும் தோயமும்
ஊட்டி ஆக்களை ஓகை உறுத்துக
காட்டித் தூபமும் தீபமும் காதலால்.

உரை:

அன்போடு அட்டமி நாள்தோறும் பசுக்களைக் குளிப்பாட்டிப் பூமாலை அணிவித்து, நறுமணப் புகையும் தீபமும் காட்டி வாழிபடுக. பொங்கற் சோறும் நல்ல நீரும் ஊட்டி அவற்றை மகிழச் செய்க.

விளக்கம்:

மஞ்சனம் ஆட்டி - குளிப்பாட்டி; அட்டமி - எட்டாம் நாள்; ஓதனம் - பொங்கற் சோறு; ஆதியும் - பழம் முதலியவற்றையும்; தோயம் - நீர்; ஓகை - உவகை, மகிழ்ச்சி; உறுத்துக - உண்டாக்குக. (146)

பசுமடம் கட்டியவர் பெறும் பயன்

1127. சாலையானினந் தங்கச் சமைத்தவர்
காலகாலன் புரத்தைக் கலப்பர்தா
மேல வேண்டிய யாவையு மின்புறும்
வேலை வெங்கதி ரோற்கும் விதித்ததே.

சாலை ஆன் இனம் தங்கச் சமைத்தவர்
கால காலன் புரத்தைக் கலப்பர்தாம்
ஏல வேண்டிய யாவையும் இன்புறும்
வேலை வெம் கதிரோற்கும் விதித்தது

Koviloor Digital Library

உரை:

பசுக்கள் வாழ்வதற்குப் பசுமடம் அமைத்தவர், கதிரவன் உள்ள காலம்வரை, அவர் விரும்பிய எல்லா இன்பங்களையும் நுகர்வதற்குப் பிறகு எமனை உதைத்துக் கொன்ற சிவபெருமானுடைய உலகை அடைவர்.

விளக்கம்:

சாலை - கோசாலை, பசுமடம், பசுப்புரை, கொட்டில்; ஆள் - பசு; காலகாலன் - காலனுக்குக் காலன், சிவன். புரம் - சிவஉலகு; கலப்பர் - அடைவர்; ஏல - பொருந்த; வேலை - வேளை, காலம்; வெம் - வெப்பமான; கதிரோற்கு - சூரியனுக்கு; விதித்தது - வயது. (147)

பசுமடம் அமைத்தவர் பெறும் பயன்

1128. முடியநாளு முகுந்தன் புரத்தினை
யடைவர் மற்றைய ராளும் புரிகளும்
வடவரைக்கண் மருவிக் குருவெனும்
படியைப் பற்றிப்பின் பாரதம் பற்றுவார்.

முடிய நாளும் முகுந்தன் புரத்தினை
அடைவர் மற்றையா் ஆளும் புரிகளும்
வடவரைக் கண்மருவிக் குரு என்னும்
படியைப் பற்றிப் பின் பாரதம் பற்றுவார்.

உரை:

பசுமடம் அமைத்தோர் முன்வரையறுத்த நாள் முடிவில் விட்டுணு, பிரமன் முதலியோரின் உலகுகளை அடைந்து அங்குள்ள இன்பங்களை நுகர்ந்த பிறகு, மேரு மலையைச் சேர்ந்து, குரு நாட்டுக்கு வந்து, அங்குள்ள பயன்களையும் அனுபவித்த பிறகு பாரத நாட்டில் பிறப்பார்.

விளக்கம்:

நாளு முடிய - முன் வரையறுத்த நாள் முடிவில்; முகுந்தன் - விட்டுணு; மற்றையர் - பிரமன் முதலியோர்; புரி - புரம், உலகு; வடவரை - மேருமலை; மருவி - சேர்ந்து; குரு என்னும்படி - குரு கண்டம்; பாரதம் - பாரத கண்டம்; பற்றுவார் - பிறப்பார். (148)

பசுமடம் கட்டியவர் பெறும் பயன்

1129. பண்டை வாதனைப் பாங்குற வோங்கிய
மண்டபத்தை வகுப்பர் வரமுற

Koviloor Digital Library

மண்டுகாதலினா னினம் வைகவே
யண்டர் நாயகர்க் கர்ச்சனையாக்கவே.

பண்டை வாதனைப் பாங்குஉற ஓங்கிய
மண்டபத்தை வகுப்பர் வரம்உற
மண்டு காதலினால் ஆன்இனம் வைகவே
அண்டர் நாயகர்க்கு அர்ச்சனை ஆக்க.

உரை:

முன் பிறப்பின் பழைய வினைத் தொடர்பு வந்து பொருந்திய நிறைந்த அன்பால் அப்பாரத கண்டத்தில் பசுக்கள் தங்கவும் தேவர் தலைவனாகிய சிவபெருமானுக்குப் பூசனை நடைபெறவும் உயரிய மடங்களை மேன்மை பொருந்த அமைப்பர்.

விளக்கம்:

பண்டை - பழைய; வாதனை - வாசனை; முன்பிறவித் தொடர்பு; பாங்குஉற - ஒழுங்காக; ஓங்கிய - உயர்ந்த; மண்டபத்தை - மடத்தை; வகுப்பர் - செய்வர்; மண்டு - நிறைந்த; காதலினால் - அன்பால்; ஆன்இனம் - பசுக்கள்; வைக - தங்க; அண்டர் - தேவர்; நாயகன் - தலைவன், சிவபெருமான். (149)

பசுமடம் கட்டியவர் பெறும் பயன்

1130. ஆட்டிப்பான்முத லைந்து மரன்முடிக்
கூட்டிப் பாயத மன்பர்க்கு மோகையி
னோட்டி முன்னையவூன முலகினுட்
டேட்டறச் சிவமாகத் தெருள்வரே.

ஆட்டிப்பால்முதல் ஐந்தும் அரன்முடிக்கு
ஊட்டிப் பாயதம் அன்பர்க்கும் ஓகையில்
ஓட்டி முன்னைய ஊனம் உலகினுள்
தேட்டு அறச் சிவம் ஆகத் தெருள்வர்.

உரை:

சிவபெருமான் திருமுடியில் பால், தயிர், நெய், சாணம், சிறுநீர் ஆகிய ஐந்து பொருள்களின் கலவையைத் திருமுழுக்குச் செய்து, அடியவர்களுக்குப் பாயசத்தோடு கூடிய உணவு அளித்து அனுபவித்தது போக எஞ்சியுள்ள வினைகளைப் போக்கி, உலகப் பற்று நீங்கச் சிவபிரானோடு ஒன்றுவர்.

Koviloor Digital Library

விளக்கம்:

பால்முதல் ஐந்து - பசுவின் பால், தயிர், நெய், சாணம், மூத்திரம் ஐந்து பொருள்களின் கலவை. ஆட்டி - திருமுழுக்குச் செய்து; பாயதம் - பாயசம்; முன்னைய ஊனம் - பழைய வினைகள்; அற - நீங்க; உலகினுள் தேட்டு - உலகப் பற்று; தெருள்வர் - தெளிவு பெறுவர். (150)

காவலன் கடமை

1131. ஆக்கடன்னையருமறை நூன்முறை
காக்க காக்க கிலாரை யக்காசினி
காக்குங் காவலன் காய்ந்து காப்பித்திடி
னோக்கியே சிவலோகத் துறைவனே.

ஆக்கள் தன்னை அருமறை நூல்முறை
காக்க காக்க கிலாரை அக்காசினி
காக்கும் காவலன் காய்ந்து காப்பித்திடில்
நோக்கியே சிவலோகத்து உறைவன்.

உரை:

சிவாகமங்கள் கூறுகின்றபடி மக்கள் அனைவரும் பசுக்களைப் பாதுகாக்க வேண்டும். அவ்வாறு பாதுகாக்காதவரை அரசன் கோபித்துக் காக்கும்படி செய்ய வேண்டும். அவ்வாறு பசுக்களைப் பாதுகாக்கச் செய்த அரசன், சிவ உலகை அடைவான்.

விளக்கம்:

அருமறை - சிவாகமம்; காசினி காக்கும் காவலன் - அரசன்; காய்ந்து - கோபித்து. (151)

பசுவைப் பாதுகாக்காத அரசன்

1132. காக்கிலாரையுங் காக்குமவரையு
நோக்கு நாடொறு நோக்கில னாகிலுங்
காக்கிலாரைக் கடிகிலனாகிலுந்
தீக்குக் காட்ட மெனக் கனல் சேர்வரே.

காக்கிலாரையும் காக்கும் அவரையும்
நோக்கு நாள் தொறும் நோக்கு இலன் ஆகிலும்
காக்கிலாரைக் கடிகிலன் ஆகிலும்
தீக்குக் காட்டம் எனக் கனல் சேர்வர்.

Koviloor Digital Library

உரை:

பசுவைக் காவாதவரையும் அதனைக் காப்பவரையும் அரசன் நாள் தோறும் கவனித்துவர வேண்டும். அவ்வாறு கவனிக்காமலும், பசுவைக் காவாதவரைத் தண்டிக்காமலும் இருக்கின்ற அரசன், நெருப்புக்கு விறகு பொருத்தமாவது போல, எரியும் நரகத்துக்குப் பொருத்தமாக ஆவான். (152)

பசுவைக் காக்கும் திறன்

1133. தழைத்த சோலைத் தடத்தி னடத்துக
பழுத்த வேனிற் பருவத்திலாக்களை
மழைக்கு மாமலைச் சாரல் வனத்திடை
யொழிக்க வச்ச முறுத்து முழுவையே.

தழைத்த சோலைத் தடத்தில் நடத்துக
பழுத்த வேனில் பருவத்தில் ஆக்களை
மழைக்கு மாமலைச் சாரல் வனத்து இடை
ஒழிக்க அச்சம் உறுத்தும் உழுவை.

உரை:

பசுக்களை வெயிற்காலமாகிய கோடை காலத்தில் குளிர்ச்சியுள்ள மலையடிவாரங்களில் தழைத்திருக்கும் பசுமையான புல்வெளியில் மேயவிடுக. அப்போது பசுக்களுக்குப் பயத்தை உண்டாக்கும் புலி அவற்றைத் தாக்காமல் காத்திடுக.

விளக்கம்:

தழைத்த - செழிப்பான; நடத்துக - மேயவிடுக; சோலைத்தடம் - பசுமையான செடி, கொடி, புல் நிரம்பிய வெளி; பழுத்த வேனில் - வெயிற் காலமாகிய கோடைக்காலம்; மழைக்கு மாமலைச் சாரல் - குளிர்ச்சியான பெரிய மலை அடிவாரம்; ஒழிக்க - நீக்குக; உறுத்தும் - உண்டாக்கும்; உழுவை - புலி. (153)

பசுவைக் காக்கும் திறன்

1134. இமத்தில் வெய்யில் வெளியிலியக்குக
வமைக்க மற்றும் பருவத் தலலறத்
தமக்கு நல்லன தாமறிவார்கடாஞ்
சமைக்க நல்லன சாருந் தகையெலாம்.

இமத்தில் வெய்யில் வெளியில் இயக்குக
அமைக்க மற்றும் பருவத்து அல்லல் அறத்

Koviloor Digital Library

தமக்கு நல்லன தாம் அறிவார்கள் தாம்
சமைக்க நல்லன சாரும் தகை எல்லாம்.

உரை:

தமக்கு நல்லவை எவை என அறியும் அறிவாளிகள். முன்பனி, பின்பனிக் காலங்களில் பசுக்களை வெயில் ஒளி பரந்திருக்கும் புல் வெளியில் மேய விடுக; பிற மழைக் காலம் முதலிய காலங்களில் பசுக்கள் துன்பம் அடையாத இடத்தில் மேய விடுக; மேலும் பசுக்களுக்கு நலம் தரும் செயல்களையும் மேற்கொள்க.

விளக்கம்:

இமத்தில் - பனிக்காலத்தில்; **இயக்குக** - மேய்த்திடுக; **மற்றும் பருவம்** - மழைக்காலம் முதலியன; **அல்லல்** - துன்பம்; **சமைக்க நல்லன** - பசுக்களுக்கு நல்லவை செய்க. (154)

பசுவைக் காத்தவர் அடையும் பயன்

1135. ஆக்கடன்னை யலலற வன்புடன்
காக்குங் காவலர் செய்த கடுவினை
போக்கித் தேசன் புரத்தி லருந்துவர்
வாக்கினாலுரையாத மகிழ்ச்சியே.

ஆக்கள் தன்னை அல்லல் அற அன்புடன்
காக்கும் காவலர் செய்த கடுவினை
போக்கித் தேசன் புரத்தில் அருந்துவர்
வாக்கினால் உரையாத மகிழ்ச்சி.

உரை:

பசுக்களின் துன்பம் நீங்கும்படி அவற்றைப் பாதுகாப்பவர், தாம் செய்த தீவினைப் பயனை விலக்கிச் சிவ உலகை அடைந்து, பேச்சினால் விளக்கமுடியாத அளவு இன்பங்களை நுகர்ந்து மகிழ்வர்.

விளக்கம்:

காக்கும் காவலர் - பாதுகாக்கும் பாதுகாவலர்; **கடுவினை** - தீயவினை, பாவச் செயல்; **தேசு** - ஒளி; **தேசன்** - ஒளி வடிவினான சிவபிரான்; **தேசன் புரம்** - சிவ உலகு; **அருந்துவர்** - அனுபவிப்பர்; **வாக்கினால் உரையாத** - சொல்லி விளக்க முடியாத. (155)

Koviloor Digital Library

பசுவைக் காவாதவர் அடையும் தண்டனை

1136. ஆக்களல்லலற வளியார்களும்
பூக்களாற் புரியார்களும் பூசனை
காக்கிலாருங் கசிந்து கடும்பிணி
தீக்குக் காட்டமெனக் கனல் சேர்வரே.

ஆக்கள் அல்லல் அற அளியார்களும்
பூக்களால் புரியார்களும் பூசனை
காக்கிலாரும் கசிந்து கடும்பிணி
தீக்குக் காட்டம் எனக் கனல் சேர்வர்.

உரை:

பசுக்களின் மீது இரக்கம் கொண்டு அவற்றின் துயரங்களைத் தீர்க்காதவர்களும், அவற்றைப் பூக்களால் வழிபாடு செய்யாதவர்களும், அவை கொடிய நோயால் வருந்தும் போது மனம் நெகிழ்ந்து தக்க மருந்துகளைப் புகட்டி, அவற்றின் நோயைப் போக்கிப் பாதுகாக்காதவரும், நெருப்புக்கு விறகு ஏற்றதாக இருப்பது போல, எரியும் நரகத்துக்கு ஏற்றவர் ஆவர்.

விளக்கம்:

அல்லல் அற - துயரம் நீங்க; அளி - அருள், இரக்கம்; அளியார் - இரக்கம் காட்டாதவர்; பூசனை - வழிபாடு; கசிந்து - மனம் கசிந்து, மனமிரங்கி; காட்டம் - விறகு; கனல் - நெருப்பு. (156)

ஆவுரிஞ்சி அமைத்த பயன்

1137. ஆவுரிஞ்சி கன்னாட்டியவன் பினர்
கோவினைப் பரமற்குக் கொடுத்தவர்
தேவர் தேவன் புரத்திற் றிளைப்பர்க
ணாவினாலுரையாத நலத்தையே.

ஆவுரிஞ்சி கல் நாட்டிய அன்பினர்
கோவினைப் பரமற்குக் கொடுத்தவர்
தேவர் தேவன் புரத்தில் திளைப்பர்கள்
நாவினால் உரையாத நலத்தை.

உரை:

பசுக்கள் தமக்கு ஏற்பட்ட தினவை உராய்ந்து நீக்கிக் கொள்வதற்காக கல்தூண் ஆகிய ஆதீண்டு குற்றியைப் பசுத் தொழுவிலும் மேய்ச்சல் நிலங்களிலும்

Koviloor Digital Library

நீர்த்துறைகளிலும் அமைத்தவரும், பசுக்களைச் சிவன் திருக்கோயிலுக்கு நன் கொடையாக அளித்தவரும், வானவர் இறைவனாகிய சிவன் உலகை அடைந்து, சொல்லி அளவிட முடியாத இன்பங்களைப் பொருந்துவர்.

விளக்கம்:

ஆவுரிஞ்சி - பசுக்கள் தம் உடலில் உண்டாகும் அரிப்பை உராய்ந்து போக்கிக் கொள்வதற்காகப் பசு மந்தையிலும், பசு மடங்களிலும், மேய்ச்சல் நிலத்திலும் நடப்படும் கல் தூண். இதனை 'ஆதீண்டு குற்றி' என்பர்; **நாட்டிய அன்பினர்** - கல் தூணை நிறுத்திய நல்லவர்; **கோவினை** - பசுவை; **தேவர் தேவன்** - மகா தேவன்; சிவன். **திளைப்பர்** - இன்பங்களை அனுபவிப்பர்; **நலம்** - நன்மை. (157)

திருக்கோயிலுக்குப் பசுக்களைத் தரும் முறை

1138. கொடுத்துச் சங்கரற் கன்பொடு கோதன
மெடுத்து முய்யக் கொள்ளென்று முனேத்தினர்
விடுத்து முன் செய்த தீயவினை விதம்
விடைக்குப் பாகன் புரத்தினை மேவியே.

கொடுத்துச் சங்கரற்கு அன்பொடு கோதனம்
எடுத்தும் உய்யக் கொள் என்று முன் ஏத்தினர்
விடுத்து முன் செய்த தீயவினை விதம்
விடைக்குப் பாகன் புரத்தினை மேவி.

உரை:

சிவபெருமான் திருக்கோயிலுக்குப் பசுக்களாகிய செல்வங்களை நன்கொடையாக வழங்க விரும்புகிற அன்பர், சந்நிதியின் முன் நின்று, தாம் வழங்கும் பசுக்களைத் தாம் ஈடேறும் பொருட்டு ஏற்றுக் கொள்ளல் வேண்டும் என்று வேண்டியபடி தருவாராக, அவ்வாறு செய்த அடியவர், தீவினைகளை ஒழித்து, எருதில் அமர்ந்து அதனைச் செலுத்தும் சிவன் உலகைப் பொருந்துவார்.

விளக்கம்:

சங்கரன் - அடியவருக்கு நலம் புரியும் சிவன்; **விடைக்குப் பாகன்** - மணிவாசகர் 'விடைப் பாகா' என்கிறார். எருதை ஊர்தியாக உடைய சிவன் என்பது பொருள்; **உய்ய** - பாவங்களிலிருந்து விடுபட, ஈடேற. (158)

குருவுக்குப் பசுவை அளித்த பயன்

1139. ஒப்பில் போக மருந்தி யுறைவர்கள்
கற்பமும் பதினாயிரங் காணவே
யிப்பலத்தினை யெய்து வரானினைத்
தப்பில் போதகன் பாலளித்தாருமே.

Koviloor Digital Library

ஒப்புஇல் போகம் அருந்தி உறைவர்கள்
கற்பமும் பதினாயிரம் காணவே
இப்பலத்தினை எய்துவர் ஆனினைத்
தப்பு இல் போதகன்பால் அளித்தாரும்.

உரை:

குற்றம் இல்லாத தம் ஆசானுக்குப் பசுக்களைக் கொடையாக அளித்தவர், அப் புண்ணியப் பயனால் பதினாயிரம் பிரம கற்ப காலம் வரை இணையற்ற இன்பங்களைப் பெற்று வாழ்வர்.

விளக்கம்:

ஒப்பு இல் - இணை அற்ற; தப்பு இல் - குற்றம் அற்ற; கற்பம் - 432 கோடி ஆண்டு. (159)

திருக்கோயிலுக்கு எருதுகளை அளித்தவர்

1140. ஊனமற்ற வுறுப்புறு மொள்ளிய
வானலேற்றை யரனது சன்னிதித்
தானஞ் செய்க சமைத்த வணியுடன்
கானமாடி புரத்துறுங் காதலார்.

ஊனம் அற்ற உறப்பு உறும் ஒள்ளிய
ஆன்நல் ஏற்றை அரனது சன்னிதித்
தானம் செய்க சமைத்த அணியுடன்
கானம் ஆடிபுரத்து உறும் காதலார்.

உரை:

சுடலையில் தாண்டவம் புரிந்த சிவனுடைய சிவ உலகை அடைய விரும்பியவர், குற்றம் இல்லாத உறுப்புகளையுடைய எருதைச் சதங்கைகளால் அழகு செய்து, சிவபிரான் சன்னிதியில் திருக்கோயிலுக்குக்கொடையாக அளிப்பாராக.

விளக்கம்:

ஊனம் - உறுப்புக் குறைவு; **அற்ற** - இல்லாத; **ஒள்ளிய** - வெண்மையான; **ஆன்நல் ஏற்றை** - எருதை; **சமைத்த அணியுடன்** - சதங்கை அலங்காரங்களோடு; **கானம்** - காடு; இங்கு சுடுகாட்டைக் குறிக்கும். **கானம் ஆடி** - சுடலையில் தாண்டவம் ஆடிய சிவன்; **காதலார்** - விரும்பியவர். (160)

Koviloor Digital Library

எருதை அளித்தவர் பெறும் பயன்

1141. உற்ற பெற்றத்து ரோமத்தி னொன்றற்கு
மற்றைத் தேவர் வருட மோராயிரம்
பெற்ற அந்தப் புரத்திற் பெறுவர்கண்
முற்ற வேறுவா ரறு மோகமே.

உற்ற பெற்றத்து ரோமத்தில் ஒன்றற்கு
மற்றைத் தேவர் வருடம் ஓர் ஆயிரம்
பெற்ற அந்தப் புரத்தில் பெறுவார்கள்
முற்றவேறு அறுவார் அறும் மோகம்.

உரை:

திருக்கோயிலுக்குக் காளையைக் கொடையாக அளித்தவர், அந்தக் காளை மாட்டின் உடம்பிலுள்ள ஒவ்வொரு மயிருக்கும், தாம் அடைந்த சிவ உலகில் ஆயிரம் தேவ வருடம் இன்பங்களைப் பெற்று அனுபவிப்பர். அந்த இன்பங்களை நுகர்ந்த பிறகு ஆசைகளை நீத்தவராக விளங்குவார்.

விளக்கம்:

பெற்றம் - காளைமாடு, எருது; ரோமம் - மயிர்; தேவர் வருடம் - தேவர்க்குரிய வருடம்; பெற்ற அந்தப் புரம் - சிவ உலகு; மோகம் -ஆசை. (161)

பசுவும் எருதுவும் அளித்த பயன்

1142, இத்தகைத்த பலத்தினை யெய்துவர்
வித்தகத்த விடையுமோர் தேனுவு
நித்தனாக் கணிரையினிறுத்தினா
ருத்தரப் பிரசைப் பலத்தோடுமே

இத்தகைத்த பலத்தினை எய்துவர்
வித்தகத்த விடையும் ஓர் தேனுவும்
நித்தன் ஆக்கள் நிரையில் நிறுத்தினார்
உத்தரப் பிரசைப் பலத்தோடும்.

உரை:

திருக்கோயிலுக்கு உரிய மந்தைக்குப் பெருமையுள்ள காளையையும் ஒப்பற்ற பசுவையும் கொடையாக அளித்தவர் முன் சொன்ன இன்பங்களையும், மக்கட் பேற்றையும் பயனாகப் பெறுவர்.

Koviloor Digital Library

விளக்கம்:

இத்தகைத்த - இவ்வாறான; பலன் - பயன்; வித்தகத்த - பெருமையான; விடை - எருது; தேனு - பசு; நித்தன் - என்றும் உள்ள சிவன்; ஆக்கள் - பசுக்கள்; நிரை - கூட்டம், மந்தை; பிரசை - சந்ததி. (162)

பசு எருதுகளைத் துன்புறுத்தலாகாது

1143. இடபமூருந ரெய்துவர்வெய்ய தீக்
கடிக மன்னவன் காய்ந்த வரத்தினா
னடைவன் மேலையமருலகந் தனைத்
தடை செய்யா மன்னர் நீக்குழிச் சார்வனே.

இடபம் ஊருநர் எய்துவர் வெய்யதீக்
கடிக மன்னவன் காய்ந்த வரத்தினால்
அடைவன் மேலை அமர் உலகம் தன்னைத்
தடை செய்யா மன்னன் தீக்குழிச் சார்வன்

உரை:

சிவ பெருமானுடைய ஊர்தியாகிய காளை மாட்டின் மீது அமர்ந்து சவாரி செய்கிறவர் வெம்மை மிகுந்த எரியும் நரகத்தை அடைவார். எருதை வாகனமாகப் பயன்படுத்துகிறவரை அரசன் தன் ஆணையால் கோபித்துத் தண்டிக்க வேண்டும். அவ்வாறு தண்டித்த அரசன், சுவர்க்க உலகை அடைவான். அவ்வாறு தண்டித்துத் தடை செய்யாத அரசன், எரியும் நரகைச் சேருவான்.

விளக்கம்:

இடபம் - காளைமாட்டை; ஊருநர் - சவாரி செய்கிறவர்; எய்துவர் - அடைவர்; வெய்யதீ - கொடிய தீ நரகம்; கடிக - தண்டித்திடுக; காய்ந்த - கோபித்த; வரத்தினால் - தெய்வ அருளால்; அமர் உலகு - சுவர்க்கம். (163)

பாரம் சுமத்தல் ஆகாது

1144. பாவகாரிகள் வந்தைப் பசுவினைச்
சேவுயர்ந்த சிவனிட பத்தினைக்
காவு விக்கிற் கனத்தையக் காசினிக்
காவலாளனவரையுங் காய்கவே.

பாவகாரிகள் வந்தைப் பசுவினைச்
சே உயர்ந்த சிவன் இடபத்தினைக்
காவு விக்கில் கனத்தை அக் காசினிக்
காவலாளன் அவரையும் காய்க

Koviloor Digital Library

உரை:

தீவினை செய்தலையே தொழிலாக உடையவர்கள், மலட்டுப் பசுவின் மீதும், எருதின் வடிவத்தைக் கொடியாக உயர்த்திய சிவனுடைய ஊர்தியாகிய காளையின் மீதும் பாரம் சுமத்தினால், நாடாளும் அரசன் அவர்களைத் தண்டித்திடுக.

விளக்கம்:

பாவ காரிகள் - தீய செயல்களைப் புரிகிறவர்கள்; வந்தை - மலடு; சே - எருது; இடபம் - காளை, பெற்றம்; காவுதல் - சுமத்தல்; கனம் - சுமை; காவலாளன் - அரசன்; காய்க - தண்டித்திடுக. (164)

அரசருக்கு எச்சரிக்கை

1145. காய்ந்த மன்னன் கடிய வினையினைத்
தீர்ந்து சேர்வன் சிவபுரத் திண்ணமே
யோர்ந் தொறுப்பவர் தம்மை யொறாமனன்
கூர்ந்த தீ நிரயக் குழி கூடுவன்.

காய்ந்த மன்னன் கடிய வினையினைத்
தீர்ந்து சேர்வன் சிவபுரம் திண்ணமே
ஓர்ந்து ஒறுப்பவர் தம்மை ஒறா மன்னன்
கூர்ந்த தீ நிரயக் குழி கூடுவன்.

உரை:

எருது, பசுக்களுக்குக் கொடுமை செய்தவர்களைத் தண்டித்த அரசன், கடுமையான தீவினைகளிலிருந்து விடுபட்டு உறுதியாகவே சிவலோகத்தை அடைவான். அப்பசுக்களைக் கொடுமை செய்தவர்களைத் தண்டிக்காத அரசன் மிகுந்த எரியும் நரகை அடைவான். (165)

எருதின் மீது பாரம் ஏற்றிய பாவம் நீங்க

1146. பரிப்பித்தாரிட பத்திடைப் பாரத்தை
யரிக்கப் பாவமு மாறுட னைந்துற
வுரத்த வெள்விடை யீசர்க்குதவுக
விரித்த வானினங் காக்க வோர் வற்சரம்

பரிப்பித்தார் இடபத்திடைப் பாரத்தை
அரிக்கப் பாவமும் ஆறுடன் ஐந்து உற
உரத்த வெள்விடை ஈசர்க்கு உதவுக
விரித்த ஆன் இனம் காக்க ஓர் வற்சரம்.

Koviloor Digital Library

உரை:

சிவனுடைய ஊர்தியான காளை மாட்டின் மீது பாரத்தை ஏற்றிச் சுமக்கச் செய்த பாவம் தீரச் சிவபெருமான் திருக்கோயிலுக்குப் பதினொரு வலிமை வாய்ந்த வெள்ளை நிற எருதுகளைக் கொடையாக அளித்திடுக. மேலும், அக் கோயிலுக்கு உரிய பசு மந்தையை ஓர் ஆண்டுக்காலம் பாதுகாத்திடுக.

விளக்கம்:

பரிப்பித்தார் - சுமையை ஏற்றியவர்; **இடபம்** - எருது; **அரிக்க** - அறுக்க; **ஆறுடன் ஐந்து** - பதினொன்று; **உரத்த** - வலிமையான; **வெள்விடை** - வெள்ளை நிறக் காளை; **ஈசர்க்கு** - சிவன் திருக்கோயிலுக்கு; **உதவுக** - கொடை செய்க; **விரித்த ஆன் இனம்** - பசுமந்தை; **காக்க** - பரிபாலிக்க; **வற்சரம்** - ஆண்டு. (166)

திருக்கோயிலுக்குக் காளைகளை அளித்தவர்

1147. ஈடு பெற்ற வெருத்தினை யீபவர்
பாடு பெற்ற சகடை பரிக்கவு
மாடுங் கூத்தன மலன் பணிக்கவ
னாடு பெற்ற நலத்தை நவில்வரே.

ஈடு பெற்ற எருத்தினை ஈபவர்
பாடு பெற்ற சகடை பரிக்கவும்
ஆடும் கூத்தன் அமலன் பணிக்கு அவன்
நாடு பெற்ற நலத்தை நவில்வர்.

உரை:

சிதம்பரத்தில் உள்ள நடன சபையில் தாண்டவம் புரியும் சிவபெருமான் திருக்கோயிலில் பெருமைக்குரிய சகடைகளை இழுப்பதற்கு ஏற்ற வலிமை நிரம்பிய எருதுகளை நன் கொடையாக அளித்தவர், சிவனுடைய உலகை அடைந்து, அங்குள்ள இன்பங்களை நுகர்ந்து, சிவபிரான் திருப்பெயர்களைத் துதித்தபடி யிருப்பார்.

விளக்கம்:

ஈடுபெற்ற - ஆற்றல் வாய்ந்த; **எருத்தினை** - காளைகளை; **ஈபவர்** - அளிப்பவர்; பாடு - பெருமை; **சகடை** - சகடு; **பரிக்க** - இழுக்க; **ஆடும் கூத்தன்** - அம்பலவாணன்; **அமலன்** - சிவன்; **அவன்நாடு** - சிவஉலகு; **நலம்** - இன்பம்; **நவில்வார்** - துதிப்பார். (167)

Koviloor Digital Library

மெலிந்த பசுவை வளர்த்தல்

1148. இளைத்த வாவினைக் கண்டுளிரங்கியே
தளர்ச்சி தீர்க்கத் தரு கென வாங்கியே
வளர்த்தவன் சிவலோக மருவியே
யுளத்துளோகையு றைய வுறைவனே.

இளைத்த ஆவினைக் கண்டு உள் இரங்கியே
தளர்ச்சி தீர்க்கத் தருக என வாங்கியே
வளர்த்தவன் சிவலோகம் மருவியே
உள்ளத்து உள் ஓகை உறைய உறைவன்.

உரை:

முதுமையின் காரணமாக உடம்பு மெலிந்த பசுக்களைக் கண்டு மனம் இரங்கி, அவற்றிற்கு உரியவரிடமிருந்து, அவற்றின் மெலிவைப்போக்கத் தருவீராக என்று கேட்டு வாங்கி, அவற்றைக் கவனமாக வளர்த்தவர், சிவ உலகை அடைந்து அங்கு மகிழ்ச்சியோடு வாழ்வார்.

விளக்கம்:

இளைத்த - உடம்பு மெலிந்த; ஆ - பசு; உள் இரங்கி - உள்ளம் இரங்கி; தளர்ச்சி - சோர்வு; மருவி - சேர்ந்து; ஓகை - உவகை, மகிழ்வு; உறைய - பொருந்த; உறைவன் - தங்குவார். (168)

பால் கறக்கும் முறை

1149. சேர்வராதி சிவபுரங்கன்றினை
யாரமாத மிரண்டு மருத்தியே
நீரின் வாய் நுரை நீக்கிக் கறந்திறைக்
கீர நெஞ்ச மோடாட்டின ரெண்ணியே.

சேர்வர் ஆதி சிவபுரம் கன்றினை
ஆரமாதம் இரண்டும் அருத்தியே
நீரில் வாய் நுரைநீக்கிக் கறந்து இறைக்கு
ஈர நெஞ்ச மோடு ஆட்டினர் எண்ணி.

உரை:

கன்றுக்குப் பிராயம் இரண்டு மாதமாம் வரை வயிறு நிறையப் பால் குடிக்கும்படி விட்டுப் பின்பு அதன் வாய் நுரையை நீரால் கழுவி, பசுவின் பாலைக் கறந்து, அன்பான உள்ளத்தோடு அதனைச் சிவபெருமான் திருமேனியில் திருமுழுக்குச் செய்தவர், சிவ உலகை அடைவர்.

Koviloor Digital Library

விளக்கம்:

சிவபுரம் - சிவஉலகு; கன்றினை ஆர - கன்றின் வயிறு நிறைய; அருத்தி - ஊட்டி; ஈரம் - அன்பு; இறைக்கு - சிவன் திருமேனிக்கு; ஆட்டினர் - திருமுழுக்குச் செய்தவர். (169)

பால் கறக்கும் முறை

1150. ஆரக்கன்று மருந்தி முலையினைத்
தீரும் வேளை தெரிந்து கறந்தவர்
சேரு மல்லை முன் சொன்ன சிவபுரந்
தீரு மெல்லையு மண்ணிது திண்ணமே.

ஆரக்கன்றும் அருந்தி முலையினைத்
தீரும் வேளை தெரிந்து கறந்தவர்
சேரும் எல்லை முன் சொன்ன சிவபுரம்
தீரும் எல்லையும் மண் இது திண்ணம்.

உரை:

கன்று, தாய் முலைப்பாலை வயிறு நிறையப் பருகி நீங்கும் நேரம் தெரிந்து பாலைக் கறந்தவர், போய்ச் சேருமிடம் சிவபுரம். அவர் மண்ணுலகத் தொடர்பு நீங்குங் கால எல்லையும் இதுவாதல் உறுதி.

விளக்கம்:

கன்று ஆர அருந்தி - கன்று வயிறு நிறையக் குடித்து; தீரும் வேளை - நீங்கும் நேரம்; சேரும் எல்லை - சென்று சேரும் இடம்; தீரும் எல்லை - நீங்கும் கால எல்லை; மண் - நீங்கும் எல்லை இது; திண்ணம் - உறுதி, நிச்சயம். (170)

கன்றுக்கு வயிறு நிறையப் பால் ஊட்டாதவர்

1151. உற்ற வாசையிற் கன்றுக் கொறுப்புறப்
பற்றியான் முலைப் பால் கொளும் பாதகர்
முற்றித் தீயுதரத்தினு மூளவே
பற்று மின்றி நரகிற் படிவரே.

உற்ற ஆசையில் கன்றுக்கு ஒறுப்பு உறப்
பற்றி ஆன் முலைப்பால் கொள்ளும் பாதகர்
முற்றித் தீ உதரத்திலும் மூளவே
பற்றும் இன்றி நரகில் படிவர்

Koviloor Digital Library

உரை:

உள்ளத்தில் பொருந்திய ஆசையால் கன்றுக்குப் போதிய பால் ஊட்டாமல், பசுவைத் தனியே கட்டிப் பால் கறந்து கொள்ளும் பாவியர், தம் வயிற்றில் பசியாகிய தீ மிகுந்து துன்பம் செய்ய, பற்றுக்கோடு இல்லாமல் நரகில் அழுந்துவர்.

விளக்கம்:

உற்ற - பொருந்திய; ஒறுப்பு உற - வருத்தம் உண்டாகும்படி; ஆன்முலை- பசுவின் முலைக்காம்பு; பாதகர் - பாவியர்; முற்றி - மிகுந்து; உதரத்தீ - வயிற்றிலே தோன்றும் பசியாகிய தீ; பற்று - ஆதரவு, பற்றுக்கோடு; படிவர் - அழுந்துவர். (171)

கன்றுக்குப் பால் ஊட்டாதவர்

1152. தொலைந்த பின்னுந் தொடுத்த வுடலெலாங்
கலந்து நின்று கடும்பசி காயவே
யுலர்ந்து மானிட யோனியி லுற்பவித்
திலங்க டோறு மிரப்ப ரிளைப்பரே.

தொலைந்த பின்னும் தொடுத்த உடல் எல்லாம்
கலந்து நின்று கடும்பசி காயவே
உலர்ந்து மானிட யோனியில் உற்பவித்து
இல்லங்கள் தோறும் இரப்பர் இளைப்பர்

உரை:

கன்றுக்குப் பால் ஊட்டாதவர், நரகத் துன்பத்தை அனுபவித்த பிறகும் அப்பாவத்தால் பலவகை உடல்களைப் பெற்றுப் பசியால் வருந்தி, இறுதியில் மனிதப் பிறவியை அடைந்து, வீடுகள் தோறும் பிச்சை ஏற்றும் உணவு கிடைக்காமல் சோர்வு அடைவர்.

விளக்கம்:

தொலைந்த பின்னும் - நரகத் துன்பம் நீங்கிய பிறகும்; தொடுத்த -கிடைத்த; காய - வருத்த; உலர்ந்து - வாடி; மானிட யோனியில் - மனிதப் பிறப்பில்; உற்பவித்து - பிறந்து; இரப்பர் - பிச்சை ஏற்பர்; இளைப்பர் - மெலிவர். (172)

புலையர் பசுக் கொட்டிலில் நுழையலாகாது!

1153. புலையரானினச் சாலையுட் புக்கிடி
லெலையில் கால மெரி நிரயக் குழி
தொலைவிலாத் துயர் தொக்குச் சுழல்வர்க
ளிலையவர்க்குப் பரி கார மெண்ணிலே.

Koviloor Digital Library

புலையர் ஆன் இனச் சாலை உள் புக்கிடில்
எல்லை இல்காலம் எரி நிரயக் குழி
தொலைவு இல்லாத் துயர் தொக்குச் சுழல்வர்கள்
இல்லை அவர்க்குப் பரிகாரம் எண்ணில்.

உரை:

பறையர் பசுமடத்தினுள் புகுந்தால் அளவற்ற காலம் நரகில் துன்பங்களை அடைவார். கருதுங்கால் அவருக்குப் பரிகாரமே கிடையாது.

விளக்கம்:

புலையர் - புலைத் தொழில் செய்பவர். பிராணிகளைக்கொல்லல், ஊனுண்ணல், ஊன் விற்றல், எல்லாம் புலை. இவை செய்பவரின் தேக மணம் மூச்சு மணம் பேச்சு மணம் எல்லாமே புலைமணமாம். அது பசுமடத் தூய்மையைக் கெடுக்கும் என்பது கருத்து.

குறிப்பு:

எந்த ஆகமமாவது புலையர் பசுக்கொட்டிலில் நுழையலாமென விதித்ததுண்டா? எவனேனும் புலைத்தொழில் செய்பவன் பசுத்தொழுவில் நுழைதலாகாதென்பதே செய்யுட்பொருள். (173)

பசுவுக்காக உயிரை இழப்பது புண்ணியம்!

1154. ஆக்களைக் கவரின் னடையார் சென்று
காக்க காக்க வரி தெனிற்றம்முயிர்
போக்கியும் புகழாக்கிய புண்ணியர்
தேக்கு நீர்ச் சடையான் புரஞ் சேர்வரே.

ஆக்களைக் கவரின் அடையார் சென்று
காக்க காக்க அரிது என்னில் தம் உயிர்
போக்கியும் புகழ் ஆக்கிய புண்ணியர்
தேக்கு நீர்ச் சடையான் புரம் சேர்வர்.

உரை:

பகைவர் பசுக்களைத் திருடிச் செல்வதற்கு வந்தால், அவற்றைக் காத்தலைச் செய்க. காத்தல் முடியாதென்றால் பகைவரோடு சண்டையிட்டு அவர்களைத் துரத்துக. அச்சண்டையில் தம் உயிரைப் போக்கிப் புகழ்பெற்ற புண்ணியசாலிகள் கங்கையை அணிந்த சடைமுடியினையுடைய சிவ உலகை அடைவர்.

Koviloor Digital Library

விளக்கம்:

கவரின் - திருடினால்; அடையார் - பகைவர்; தேக்கு நீர் - கங்கையாறு தேங்கிய; சடையான் - சடை முடியுடைய சிவன்; புரம் - உலகு. (174)

இருவகை அறம்

1155. இருவிதந் தருமநீதி யெனவறிந்திடுக யார்க்கு
மொருவிதம் புலன்களைந்து மொடுக்கியுளரனையுன்னல்
பரிவுடன் பசுக்கடன்னைப் பசு பதிக் கன்பர் தம்மை
யுரிமையிற் புரிகபூசை யென்னுமிஃ தொழிந்த வொன்றே.

இருவிதம் தரும நீதி என அறிந்திடுக யார்க்கும்
ஒருவிதம் புலன்கள் ஐந்தும் ஒடுக்கி உள்அரனை உன்னல்
பரிவுடன் பசுக்கள் தன்னைப் பசுபதிக்கு அன்பர் தம்மை
உரிமையில் புரிக பூசை என்னும் இஃது ஒழிந்த ஒன்று.

உரை:

அறங்கள் இருவகை என்று அனைவரும் உணர்க. ஐந்து புலன்களையும் ஒடுக்கி, உள்ளத்திலே சிவபிரானைத் தியானித்தல் ஒருவகை அறம்; அன்புடன் பசுக்களையும் சிவனடியார்களையும் முறைப்படி பூசை செய்து வணங்குதல் இன்னொருவகை அறம்.

விளக்கம்:

இருவிதம் தரும நீதி - அறம் இருவகை; ஐந்து புலன்கள் - மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து; உள் - நெஞ்சில்; அரனை - சிவனை; உன்னல் - தியானித்தல்; பரிவு - அன்பு; பசுபதி - சிவன்; அன்பர் - அடியவர்; உரிமையில் - முறையாக. (175)

அடியார் - பசு

1156. ஆதலாற் பசுக்க டன்னை யரனடிக்கன்பர் தம்மைக்
காதலாற் புரிகபூசை கடுவினை களைய வெண்ணின்
மீதுல கடைய வேண்டின் மிடியரு முடலினாலு
மேதெனு மியன்ற தொன்றையியற்றுதல் கடனே யென்றும்

ஆதலால்பசுக்கள் தன்னை அரன்அடிக்கு அன்பர் தம்மைக்
காதலால் புரிகபூசை கடுவினை களைய எண்ணின்
மீது உலகு அடைய வேண்டில் மிடியரும் உட[illegible]ாலும்
ஏதேனும் இயன்றது ஒன்றை இயற்றுதல் கட[illegible]ன்றும்.

Koviloor Digital Library

உரை:

கொடிய தீவினைகளைப் போக்க எண்ணினாலும், சுவர்க்கத்தைச் சேரக் கருதினாலும், பசுக்களையும் சிவனடியார்களையும் அன்போடு வழிபாடு செய்க. பசு தர்மத்தில் வறியவர்களும் தம்மால் முடிந்த பணியை எப்பொழுதும் உடம்பினால் செய்தல் கடமையாகும்.

விளக்கம்:

பூசை புரிக - வழிபாடு செய்க; **கடுவினை** - தீவினையை; **களைய** -அகற்ற; **மீது உலகு** - மேல் உலகு, சுவர்க்கம்; **மிடியர்** - வறியவர்; **இயற்றுதல்** - செய்தல்; **கடன்** - கடமை. (176)

அடியவரை மட்டும் வணங்குக

1157. **புலையரே யெனினு மீசன் பொலன் கழலடியிற்புந்தி**
நிலையரே லவர்க்குப் பூசை நிகழ்த்துத னெறியே யென்றுந்
தலையரே யெனினு மீசன்றாமரைத் தாளினேச
மில ரெனிலியற்றும் பூசைப் பலந்தருவாரே யாரே.

புலையரே எனினும் ஈசன்பொலன் கழல் அடியில் புந்தி
நிலையரேல் அவர்க்குப்பூசை நிகழ்த்துதல்நெறியே என்றும்
தலையரே எனினும் ஈசன் தாமரைத் தாளில் நேசம்
இல்லர் எனில் இயற்றும் பூசைப் பலம் தருவார் யார்.

உரை:

பறையராக இருப்பினும் சிவபெருமானுடைய பொன்னாற் செய்த வீரக் கழலை அணிந்த திருவடிகளில் புத்தியை நிறுத்தி வழிபடும் அடியவராயின் அவரை வணங்குதல் முறைமை என்று அறிக. உயர்வான சாதியாராக இருந்தாலும், அச்சிவபிரானுடைய தாமரைப் பூப்போன்ற திருவடிகளில் அன்பு செலுத்தாதவராக இருந்தால், அவரை வணங்க வேண்டா. சிவனடியாரை வணங்கினால் சிவன் அருளாகிய பயன் உண்டு. சிவனடியார் அல்லாதவரை வணங்கினால் பலன் தருவார் யார்? யாரும் இலர்.

விளக்கம்:

புலையரே எனினும் ஈசன் பொலன் கழல் அடியில் புந்தி நிலையரேல் - பறையராக இருந்தாலும் இறைவன் திருவடிகளில் புத்தியை நிறுத்திவணங்கியவர்;

''ஆ உரித்துத் தின்று உழவும் புலையரேனும்
கங்கை வார் சடைக் கரந்தார்க்கு அன்பர் ஆகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.''

என்பது அப்பரின் அருளுரை.

Koviloor Digital Library

பொலன் - பொன்; புந்தி - புத்தி; நிலையர் - நிலைநிறுத்தியவர்; நெறி - முறைமை; தலையர் - உயர் சாதியினர்; நேசம் - அன்பு; பலம் - பயன். (177)

திருத்தலப் பயணிகளுக்கு உணவு வழங்குக

1158. திருப்பதி வணங்க வென்று சென்றுறுஞ் சிவனேசர்க்கு
மருத்தியாற் கங்கையாதியாடிட நாடினார்க்கு
மருத்துக வன்னபான மவரவர்க் குபயோகங்கள்
பொருத்துகவூனைப் போக்கிச் சிவபுரம் புகுவார் தாமே.

திருப்பதி வணங்க என்று சென்று உறும் சிவநேசர்க்கும்
அருத்தியால் கங்கை ஆதி ஆடிட நாடினார்க்கும்
அருத்துக அன்னபானம் அவரவர்க்கு உபயோகங்கள்
பொருத்துக ஊனைப் போக்கிச் சிவபுரம் புகுவார்தாம்.

உரை:

தசை பொருந்திய உடலை விட்டு நீங்கிச் சிவஉலகு அடைய விரும்பு கின்றவர், திருத்தலப் பயணிகளாகச் சிவாலயந்தோறும் சென்று வணங்கி வரும் சிவனடியார்களுக்கும், கங்கையாறு முதலான நீர் நிலைகளில் முழுகச் செல்லுவோர்க்கும் உணவு வழங்கி உபசரிப்பதோடு, அவர்களுக்குத் தேவையான பிற உதவிகளையும் செய்ய வேண்டும்.

விளக்கம்:

திருப்பதி - சிவப்பதி; அருத்தி - ஆசை; ஆடிட - நீராட; நாடினார் - விரும்பினார்; அருத்துக - உண்ணச் செய்க; அன்னபானம் - உணவும் பருகும் நீரும்; பொருத்துக - உதவுக; ஊனை - உடம்பை; புகுவார் - சேருபவர்; (178)

உணவு வழங்கிய பயன்

1159. பிரம சாரியைப் பேரற மோம்பிடுங்
கிருக சாரியை யூட்டிய கேண்மையர்
விரவியே சிவ லோகம் விரும்பிய
பரம போக மனைத்தும் பயில்வரே.

பிரம சாரியை பேரறம் ஓம்பிடும்
கிருக சாரியை ஊட்டிய கேண்மையர்
விரவியே சிவலோகம் விரும்பிய
பரம போகம் அனைத்தும் பயில்வர்.

உரை:

பிரமசரிய விரதத்தை மேற்கொண்டிருப்பவருக்கும், பெரிய அறச்

Koviloor Digital Library

செயல்களைப் புரியும் இல்லறத்தினருக்கும், உணவளித்து உபசரித்தவர், சிவ உலகை அடைந்து தாம் விரும்பிய இன்பங்கள் அனைத்தையும் பெறுவர்.

விளக்கம்:

பிரமசரிய விரதம் - திருமணம் புரியாதிருந்தே இயற்றும் சிவ நோன்பு; கிருகம் - வீடு; கிருக சாரி - மனைவி மக்களோடு வாழ்கிறவர்; **கேண்மையர்** - நட்பினர்; விரவி - சேர்ந்து; பரம - மேலான; பயில்வர் - அனுபவிப்பர். (179)

வானப் பிரத்தனுக்கு உதவிய பயன்

1160. வனத்தின் வைகிய மாதவ ரங்கையிற்
புனத்திற் காய்கனியாதி பரி வொடுந்
தினக் கொடுத்தவர் சேர்ந்து சிவபுர
மனத்தில் வேண்டும் விமானத்தில் வாழ்வரே.

வனத்தின் வைகிய மாதவர் அங்கையில்
புனத்தில் காய்கனி ஆதி பரிவொடும்
தின்னக் கொடுத்தவர் சேர்ந்து சிவபுரம்
மனத்தில் வேண்டும் விமானத்தில் வாழ்வர்.

உரை:

காட்டில் தங்கித் தவம் புரிகிற வானப் பிரத்தரின் அழகிய காட்டில் கிடைக்கும் காய், கனி, கிழங்கு முதலியவற்றை அன்பாக உண்ணக் கொடுத்தவர்கள், சிவ உலகை அடைந்து மனத்தில் அவர் விரும்பிய தேவருலகில் வாழ்வார்.

விளக்கம்:

வைதிக வாழ்க்கை நிலை பிரம சரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என நான்கு வகைப்படும். இவற்றுள் திருமணத்துக்கு முன் ஆசிரியருடன் தங்கிக் கல்வி கற்கும் மாணவநிலை பிரமசரியம் ஆகும். இல்லறம் கிருகத்தம் ஆகும். பிறகு மனைவியோடு காட்டுக்குச் சென்று தவம் செய்யும் நிலை வானப் பிரஸ்தம் அல்லது வானப் பிரத்தம் ஆகும். சந்நியாசம் என்பது இறுதிநிலை. இது, குடீசகம், பகூ தகம், ஹம்சம், பரமஹம்சம் என நான்கு வகைப்படும். இந்துக்களுக்குப் பொதுவானவை ஆதலால் சைவர்களுக்கும் பொருந்துவன; வைகிய - தங்கிய; (180)

பாசு பதர் - மாவிரதர்

1161. பரிந்து பாசுபதரையும் பண்புற
வருந்து வித்தவர் தாமு மரன்புரி

Koviloor Digital Library

பொருந்தி வாழ்வர் புரிவுடன் பிச்சையை
யருந்த மாவிரதர்க் களித்தாருமே.

பரிந்து பாசு பதரையும் பண்பு உற
அருந்து வித்தவர் தாமும் அரன்புரி
பொருந்தி வாழ்வர் புரிவுடன் பிச்சையை
அருந்த மாவிரதர்க்கு அளித்தாரும்.

உரை:

பாசுபதத்துறவியை விருப்பத்தோடு அமுது உண்ணச் செய்தவர்களும், மாவிரதத்தாருக்கு அன்புடன் உணவு அளித்து உண்ணும்படி செய்தவர்களும் சிவஉலகைப் பொருந்தி வாழ்வர்.

விளக்கம்:

பாசுபதர் - வடஇந்தியச் சிவமதத்தில் ஒரு பிரிவினர்; மாவிரதர் - மகாவிரத மதத்தைச் சார்ந்த சைவத் துறவி; பரிந்து - விரும்பி; புரிவுடன் - அன்பாக. (181)

பேரிகை அடிப்போர்

1162. திகழும் வெண்பிறைச் செஞ்சடைத் தேவர்க்குக்
கமழக்கல்ல வடமிடுவார்களை
மகிழ வூட்டிட வல்லவர் தாமுமண்
புகழவே சிவலோகம் புகுவரே.

திகழும் வெண்பிறைச் செஞ்சடைத் தேவர்க்குக்
கமழக் கல்லவடம் இடுவார்களை
மகிழ ஊட்டிட வல்லவர் தாமும் மண்
புகழவே சிவலோகம் புகுவர்.

உரை:

ஒளிவிடும் வெண்ணிலவைச் சூடிய சிவந்த சடையினையுடைய சிவபிரான் திருக்கோயிலில் எங்கும் பரவும்படி பேரிகை முழக்குவோரின் உள்ளம் மகிழ உணவளித்து உபசரிப்பவர்கள், நில உலகில் வாழும் மக்கள் போற்றிப் புகழச் சிவ உலகை அடைவர்.

விளக்கம்:

திகழும் - ஒளிரும்; செஞ்சடைத் தேவர் - சிவபெருமான்; கல்லவடம் -

Koviloor Digital Library

ஒருவகைப் பறை, முரசு, பேரிகை; கமழ - பரவ, ஒலிக்க; ஊட்டிட - உணவளிக்க; மண் - இது பூமியில் வாழும் மக்களைக் குறிக்கும் ஆகு பெயர். (182)

பொற் பாத்திரம் ஈதல்

1163. அனகரான வருந்தவர் கையுறக்
கனக பாத்திரங் காதலோடீந்தவ
ரனகலோகத் தமர்வர்கள் கற்பமுஞ்
சனகனுக் கொரு கோடி செறியவே.

அனகரான அருந்தவர் கை உறக்
கனக பாத்திரம் காதலோடு ஈந்தவர்
அனகன் லோகத்து அமர்வர்கள் கற்பமும்
சனகனுக்கு ஒரு கோடி செறிய.

உரை:

பாவச் செயல் இல்லாத நல்ல தவத்தினரின் கைகளில் தங்கத்தால் செய்த ஓர் ஏனத்தை அன்போடு அளித்தவர், தம் தந்தையோடு ஒரு கோடி கற்ப காலம் வரை சிவ உலகில் வாழ்வர்.

விளக்கம்:

அனகர் - பாவத் தொழில் புரியாதவர்; காதல் - அன்பு; அருந்தவர் - மேலான தவத்தினர்; கனகம் - தங்கம்; பாத்திரம் - ஏனம்; அனகன்லோகம் - கடவுள் உலகு, சிவஉலகு; சனகன் - தந்தை; கற்பம் - 432 கோடி வருடங்கள். (183)

பலாச இலைப் பாத்திரம்

1164. இத்தகைத்த பலத்தினை யெய்துவர்
பத்தரங்கைப் பரிக்கப் பலாசுறு
பத்திரத்திற் புடகம் பரிவுற
வைத்த வுத்தமர் தாழுமகிழவே.

இத்தகைத்த பலத்தினை எய்துவர்
பத்தர் அங்கைப் பரிக்கப் பலாசு உறு
பத்திரத்தில் புடகம் பரிவு உற
வைத்த உத்தமர் தாமும் மகிழ.

உரை:

சிவபிரானுடைய அடியவர்களின் அழகிய கைகளில் பொருந்தும்படி, பலாமரத்தின் இலைகளால் தொன்னைகள் செய்து அன்புடன் அளித்த நல்லவர்கள் முன் சொன்ன சிவன் உலகைப் பெறுவர்.

Koviloor Digital Library

விளக்கம்:

இத்தகைத்த - இவ்வாறான; பலத்தினை - பயனை; எய்துவர் - அடைவர்;பத்தர் - அடியவர்; அங்கை - அம்கை, அழகியகை; பரிக்க - தாங்க, பொருந்த; பத்திரத்தில் - இலையால்; புடகம் - தொன்னை, இலையால் செய்த ஏனம்; பரிவு உற - அன்பு பொருந்த; (184)

அடியவருக்குச் செப்புப் பாத்திரம் அளித்தவர்

1165. நாத்தழும்புற நாதனை நாடொறு
மேத்துவார் கரத்தேந்திடத்தாமிர
பாத்திரங் கொடுத்தார் முனைப்பாவமுந்
தீர்த்துச் செஞ்சடையான்புரி சேர்வரே

நாத்தழும்பு உற நாதனை நாள்தோறும்
ஏத்துவார் கரத்து ஏந்திடத் தாமிர
பாத்திரம் கொடுத்தார் முன்னைப் பாவமும்
தீர்த்துச் செஞ்சடையான்புரி சேர்வர்.

உரை:

நாள்தோறும் நாவில் தழும்பு உண்டாகும்படி சிவபிரானைப் புகழ்ந்து பாடுகிற அடியவர் கையில் இருக்குமாறு செப்பு ஏனம் அளித்தவர், முன் பிறவியில் தேடிய பாவங்களிலிருந்து விடுபட்டுச் சிவந்த சடையினையுடைய சிவ உலகைப் பொருந்துவர்.

விளக்கம்:

நாதன் - சிவபிரான்.

'நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க'

என்பது *திருவாசகம்.*

ஏத்துவார் - புகழ்ந்து பாடுகிறவர்; கரத்தில் - கைகளில்; ஏந்திட - வைத்துக் கொள்ள; பாத்திரம் - ஏனம்; தீர்த்து - போக்கி; செஞ்சடையான் புரி - சிவன் உலகு. (185)

அடியவருக்குத் தயிர்ச் சோறு அளித்தவர்

1166. தத்தியோதனம் பாத்திரஞ் சேர்த்தியே
யுத்தமத்தவர் கையினுதவினர்
வித்தகன்புரி வாழ்வர்விபுதர்க்கு
வைத்த கோடி வருடமும் வாய்க்கவே.

Koviloor Digital Library

தத்தி ஓதனம் பாத்திரம் சேர்த்தியே
உத்தமத் தவர் கையில் உதவினர்
வித்தகன் புரி வாழ்வர் விபுதர்க்கு
வைத்தகோடி வருடமும் வாய்க்க.

உரை:

தயிர்ச் சோற்றை ஓர் ஏனத்தில் இட்டு, முதன்மையான தவத்தினராகிய சிவனடியார்களின் கைகளிலே அளித்தவர்கள், வானவருக்கு விதிக்கப்பட்ட ஒரு கோடி ஆண்டுகள் வரை அறிவே வடிவான சிவ பெருமானுடைய உலகில் வாழ்வர்.

விளக்கம்:

ததி, தயிர்; **ஓதனம்** - சோறு, உணவு, **ததி ஓதனம்** - தயிர்ச் சோறு, தயிருணவு. ததி+ஓதனம்=தத்யோதனம். தமிழுக்கு மாறும் போது தத்தி யோதனம். **பாத்திரம்** - ஏனம்; **சேர்த்தியோ** - இட்டு; **உத்தம** - முதன்மையான; **தவர்** - சிவனடியார்கள். **வித்தகன்** - அறிவே வடிவாகிய சிவன்;

'சித்த மிசை குடிகொண்ட அறிவான தெய்வமே'

என்பது தாயுமானவர் திருவாக்கு.

புரி - சிவ உலகு. விபுதர் - பேரறிவாளர், வானோர்; வருடம் - ஆண்டு. (186)

பின்பாடல் தொடர்ச்சி

1167. முற்றக்காலமுறையுறப் பாரதம்
பற்றிப் பார்த்திவராய்ப் பசுபாசமு
மற்றுச் சங்கரனோட மர்வாரவர்
பெற்ற பேறது பேசப்படுவதே.

முற்றக் காலம் முறை உறப் பாரதம்
பற்றிப் பார்த்திவராய்ப் பசுபாசமும்
அற்றுச் சங்கரனோடு அமர்வார் அவர்
பெற்ற பேறு அது பேசப்படுவதே.

உரை:

முன் சொன்ன வாழ்நாள் முடிவடைந்ததும் பாரதநாட்டையாளும் அரசனாகப் பிறந்து, பல இன்பங்களை நுகர்ந்து, பசு பாசங்கள் அகன்று, சிவபிரானோடு ஒன்றாகக் கூடி அமரும் பேறு பெறுவர். அவர் பெற்ற பேற்றின் பெருமையைச் சொல் அளவில் விளக்க முடியுமா? முடியாது.

விளக்கம்:

காலம்முற்ற - வாழ்நாள் முடிவில்; **முறையுற** - சொல்லிய முறைப்படி.

Koviloor Digital Library

பாரதம் - பாரத நாடு; பார்த்திவன் - அரசன்; பசு - உயிர்; பாசம் - ஆணவம், கன்மம், மாயை ஆகியவை; பேறு - நல்ஊழ், பயன்; (187)

அடியவருக்கு நீர்க்கமண்டலம் அளித்தவர்

1168. இத்தகைத்த பலத்தினை யெய்துவர்
முத்தனைப் பசுபாச முருக்கியைச்
சித்தம் வைத்தவ ரங்கைச் செறித்தவர்
சுத்ததோய கரகந் துலங்கவே.

இத்தகைத்த பலத்தினை எய்துவர்
முத்தனைப் பசுபாசம் உருக்கியைச்
சித்தம் வைத்து அவர் அம்கைச் செறித்தவர்
சுத்த தோய கரகம் துலங்க.

உரை:

இயல்பாகவே பாசங்கள் இல்லாதவனும், முத்தி அளிப்பவனும், உயிரின் ஆணவம் முதலான பற்றுகளை நீக்குபவனுமான சிவனை, உள்ளத்திலே எண்ணிய சிவனடியாரின் அழகிய கையிலே நீர்க் கமண்டலத்தை அளித்தவர், முன் சொன்ன பேற்றைப் பெறுவார்.

விளக்கம்:

முத்தன் - முத்தியை அளிக்கும் சிவன்; பசுபாசம் உருக்கி - உயிரின் பற்றுகளை அகற்றுபவன். சித்தம் வைத்து - உள்ளத்திலே கருதி, அம் - அழகிய; சுத்த - நல்ல; தோயம் - நீர்; கரகம் - நீர்க் கமண்டலம்; துலங்க - விளங்க. (188)

நலியும் வினை ஓட்டுவர்

1169. ஊட்டினார்களுதவிய தேதெனுங்
காட்டுளாடி கழறங் கருத்தினு
ணாட்டி னாரைத்தமை நலியும் வினை
யோட்டியே சிவலோகத் துறைவரே.

ஊட்டினார்கள் உதவியது ஏதேனும்
காட்டுள் ஆடி கழல் தம் கருத்தினுள்
நாட்டினாரைத் தம்மை நலியும் வினை
ஓட்டியே சிவலோகத்து உறைவர். ஏ

உரை:

சுடலையில் இருளில் தாண்டவம் புரியும் சிவபெருமானுடைய

Koviloor Digital Library

திருவடிகளைத் தம் உள்ளத்திலே எண்ணும் அடியவருக்கு, ஏதேனும் ஓர் உணவுப் பொருளைத் தந்து உண்பித்தவர், தம்மை வருத்தும் தீய வினைகளிலிருந்து நீங்கிச் சிவ உலகை அடைந்து வாழ்வார்.

விளக்கம்:

ஊட்டினார் - உண்பித்தவர்; **காட்டுள்** - சுடுகாட்டில்; **ஆடி** - தாண்டவம் செய்யும்; **கழல்** - வீரக்கழல் அணிந்த திருவடி; **கருத்தினுள்** - உள்ளத்தில்; **நாட்டினார்** - பதித்தவர்; **நலியும்** - வருத்தும்; **ஓட்டி** - போக்கி. (189)

துறவிக்கு மரவுரி, ஆடை, மான் தோல் அளித்தவர்

1170. மாதவர்க்குற வற்கலை யீந்தவர்
சீதவாரித வாடையுஞ் சேர்த்தினர்
கோதிலா வசினாதியுங் கோல்வளை
மாதோர் பாகன் புரத்தினுள் வாழ்ந்தபின்.

மாதவர்க்கு உற வற்கலை ஈந்தவர்
சீதவாரித ஆடையும் சேர்த்தினர்
கோது இல்லா அசின ஆதியும் கோல்வளை
மாது ஓர் பாகன் புரத்தின் உள் வாழ்ந்தபின்.

உரை:

பெரிய தவத்தினையுடைய துறவிக்கு மரவுரி, குளிர்ந்த மேகம் போன்ற வெண்ணிற ஆடை, குற்றமில்லாத மான் தோல் முதலியவற்றை அளித்தவர், திரண்ட வளையல்களை அணிந்த உமையம்மையை இடப் பாகத்தில் கொண்ட சிவபிரானுடைய சிவ உலகில் வாழ்ந்த பிறகு;

விளக்கம்:

மாதவர் - பெரிய தவத்தினை உடையவர்; **வற்கலை** - மரவுரி; **வாரித ஆடை** - வெள்ளை நிற ஆடை; **கோது** - குற்றம்; **அசினம்** - மான்தோல்; **கோல்** - திரட்சி; **வளை** - வளையல்; **மாது** - உமையம்மை; **மாது ஓர் பாகன் புரம்** - சிவ உலகு. (மரவுரி, வெள்ளைநிறத் துணி, மான் தோல் ஆகியவை துறவிக்கு உரியவை.) (190)

இதுவும் அது

1171. நண்ணிப் பாரத நான் மறையாறங்க
மெண்ணிப் பாச விருளறத் தேசிகன்
கண்ணினாற் கருதற்கரிதாகிய
வுண்மை தன்னொடிரண்டற வொன்றுவார்.

Koviloor Digital Library

நண்ணிப்பாரதம் நான்மறை ஆறு அங்கம்
எண்ணிப் பாச இருள் அறத் தேசிகன்
கண்ணினால் கருதற்கு அரிது ஆகிய
உண்மை தன்னோடு இரண்டு அற ஒன்றுவார்.

உரை:

பாரத நாட்டில் பிறந்து நான்கு வேதங்களையும் ஆறு சாத்திரங்களையும் கற்ற பிறகு, ஞானாசிரியனுடைய அருள் நோக்கால், ஆணவம் முதலான பற்றுகள் ஒடுங்கி, எண்ணுவதற்கு அரிய உண்மையே வடிவான சிவத்துடன் பிரிவு இன்றி ஐக்கியமாவார். (191)

சிவ உலகைக் கூறுவோம்

1172. ஆக்க ளெல்லையறைந்தனு பாடணத்
தாக்களைந்து மமலன் றிருமுடிக்
காக்குமன்பர்க்கும் பூசையறைந்தினி
மீக்குணச் சிவலோகம் விளம்புவாம்.

ஆக்கள் எல்லை அறைந்து அனுபாடணத்து
ஆக்கள்ஐந்தும் அமலன் திருமுடிக்கு
ஆக்கும் அன்பர்க்கும் பூசை அறைந்து இனி
மீக்குணச் சிவலோகம் விளம்புவாம்.

உரை:

பசுக்கள் தங்கும் இடத்தைச் சொல்லிய பின் இனிய உரையால் பசுக்களிடமிருந்து பெறும் பால் முதலான ஐந்து பொருள்களின் கலவையைச் சிவபெருமான் திருமேனியின் முடியிலே திருமுழுக்குச் செய்யும் அடியவர்களுக்குச் செய்யும் பூசையையும் சொல்லி இனி, மேலான தன்மையுள்ள சிவ உலகைச் சொல்லுவோம்.

விளக்கம்:

எல்லை - இது தங்குமிடத்தைக் குறிக்கிறது. அனுபாடணம் - தொடர்ந்து சொல்லும் இனியஉரை; அமலன் - இறைவன்; மீ - மேலான; குணம் - தன்மை; விளம்புவாம் - உரைப்போம். (192)

எட்டு வகை அண்டங்கள்

1173. ஐந்து பூதத்து மற்றகங்காரத்தும்
புந்தி தன்னிலும் மண்டம் பொருந்திடும்

Koviloor Digital Library

முந்திச் சொன்ன முறையுறு மூலத்தும்
பந்தித் தெட்டு முறையுறும் பாங்கினால்.

ஐந்து பூதத்தும் மற்று அகங்காரத்தும்
புந்தி தன்னிலும் அண்டம் பொருந்திடும்
முந்திச் சொன்ன முறை உறும் மூலத்தும்
பந்தித்து எட்டு முறை உறும் பாங்கினால்.

உரை:

மண், நீர், தீ, காற்று, வானம் என்ற ஐந்து பொருள்களிலும் அதற்கு மேலாகிய தத்துவத்திலும் புத்தி தத்துவத்திலும் அண்டம் ஒன்றுக்கொன்றும் விரிவும் உயர்ச்சியும் பொருந்தும். தவிர, முன் சொன்ன முறையில் பிரகிருதித் தத்துவத்திலும் அண்டங்கள் பொருந்தும். ஆக இந்தப் பகுப்பில் எட்டு வகை அண்டங்களும் பொருந்தும்.

விளக்கம்:

ஐந்து பூதம் - மண், நீர், நெருப்பு, காற்று, வானம் என்ற ஐந்து மூலப் பொருள்கள்; அகங்காரம் - அகங்கார தத்துவம்; புந்தி - புத்தி; அண்டம் - உலகு; பந்தித்து - சேர்த்து; பாங்கு - ஒழுங்கு; புத்தி தத்துவம் - முப்பத்தாறு தத்துவங்களுள் ஒன்று. (193)

ஈசன் முதலியோர் அண்டங்கள்

1174. பேசுமூலப் பிரகிருதிக்குளே
மூசு மண்ட கடாக முகட்டினுள்
ஈசன் றேவியிளையனரியயன்
வாச தேசமோரைந்தும் வகுப்பமே.

பேசும் மூலப் பிர கிருதிக்கு உள்ளே
மூசும் அண்ட கடாக முகட்டினுள்
ஈசன் தேவி இளையன் அரி அயன்
வாச தேசம் ஓர் ஐந்தும் வகுப்பம்.

உரை:

முக்குணங்களும் சமநிலை அடையப் பெற்றதும் எல்லாவற்றுக்கும் மூலகாரணமும் நிலையானதுமான பிரகிருதித் தத்துவத்தில் நெருங்கியிருக்கும் அண்ட உருண்டையின்மேல் ஒட்டடையடுத்து அதனுள் ஈசன் முதலானோர் இருக்கும் உலகுகளைச் சொல்வோம்.

Koviloor Digital Library

விளக்கம்:

மூலப் பிரகிருதி - மூலப்பகுதி, எல்லாப் பொருள்களும் தோன்றுவதற்குரிய மூலப் பகுதி; மூசும் - நெருங்கிய; அண்ட கடாகம் - அண்ட உருண்டையின் மேல் ஓடு; ஈசன் - சிவன்; தேவி - உமை; இளையன் - குமரன்; அரி - விட்டுணு; அயன் - பிரமன்; வாசதேசம் - வாழும் உலகு; வகுப்பம் - உரைப்போம். (194)

குமரன் உலகு

1175. காடவண்ட கடாக முகட்டி னுட்
கூடும் வேதற்குக் கோயிலதற்கு மேல்
கூடுமாலுக்குங் கோயிலதற்கு மேற்
கூடும் வென்றிக் குமரற்குக் கோயிலே.

காட அண்ட கடாக முகட்டினுள்
கூடும் வேதற்குக் கோயில் அதற்கு மேல்
கூடும் மாலுக்கும் கோயில் அதற்கு மேல்
கூடும் வென்றிக் குமரற்குக் கோயில்.

உரை:

பிரகிருதித் தத்துவத்தில் உறுதியான உலக உருண்டையின் மேல் ஓட்டின் மேற் பிரமலோகம் இருக்கும். அங்கு பிரமன் கோயில் அதற்கு மேலே விட்டுணுவின் விட்டுணு உலகு உண்டு; அங்கு விட்டுணு மாளிகை; அதற்கும் மேலே வெற்றியையுடைய குமரனுடைய குமரபுரி இருக்கும். அங்கு குமரன் மாளிகை.

விளக்கம்:

காட - உறுதியான; வேதன் - பிரமன்; மால் - விட்டுணு; அண்டகடாக முகடு - அண்ட உருண்டையின் மேல் ஓடு; வென்றி - வெற்றி; கோயில் - மாளிகை, வாழும் உலகு. (195)

தேவி - சிவன் உலகுகள்

1176. அதற்கு மேலுமையாள் புரமற்புத
மதற்கு மேற் சிவலோக மென்றாய்கவே
யதற்குறும் வளம் வாக்கினடங்கிடா
அதற்குப் புக்கவர் மீள்பவ ரல்லரே.

அதற்கு மேல் உமையாள் புரம் அற்புதம்
அதற்கு மேல் சிவலோகம் என்று ஆய்கவே

Koviloor Digital Library

அதற்கு உறும் வளம் வாக்கில் அடங்கிடா
அதற்குப் புக்கவர் மீள்பவர் அல்லர்.

உரை:

குமரனுடைய உலகுக்கு மேலே வியப்பு உண்டாக்கும் உமையின் உலகு இருக்கிறது. அதற்கும் மேலே மிகுந்த செழுமையுள்ள சிவலோகம்பொருந்தும். அதன் செழிப்பை அளவிட்டுச் சொல்ல இயலாது. அச்சிவ உலகை ஞான யோகத்திலே அடைந்தவர்கள் மீண்டும் பூமியில் பிறவார்.

விளக்கம்:

உமையாள் புரம் - தேவி உலகு; **உறும்** - பொருந்தும்; **அற்புதம்** - வியப்பு; **வளம்** - செழுமை; செழிப்பு; **வாக்கில்** - உரையில்; **புக்கவர்** - அடைந்தவர்; **மீள்பவர் அல்லர்** - மீண்டும் பூமியில் பிறக்க மாட்டார். (196)

துறவு பூண்ட சைவத்துறவி சிவஉலகு அடைவார்

1177. விடுத்து வாழ்க்கையை மெய்யுணர்ந் தையமுங்
கொடுக்கு மிற்றொறுங் கொண்டுண்டு கோவண
முடுத்துப் பாரி லுறவு பகையிவை
கெடுத்த கேள்விய ரவ்விடங் கிட்டுவார்.

விடுத்து வாழ்க்கையை மெய் உணர்ந்து ஐயமும்
கொடுக்கும் இல் தொறும் கொண்டு உண்டு கோவணம்
உடுத்துப் பாரில் உறவு பகை இவை
கெடுத்த கேள்வியர் அவ்விடம் கிட்டுவார்.

உரை:

இல்லற வாழ்விலிருந்து நீங்கி, மெய்ப் பொருளை உணர்ந்து, வீடுதோறும் கொடுக்கும் பிச்சை உணவை ஏற்று உண்டு, கோவணத்தையே ஆடையாக உடுத்து, யாரையும் உறவினராகவோ பகைவராகவோ எண்ணாத சம நோக்கு உடைய அற நூற் கேள்வியினையுடைய சிவஞானியே சிவ உலகு புகுவார்.

விளக்கம்:

வாழ்க்கையை விடுத்து - துறவு பூண்டு; **ஐயம்** - பிச்சை; **இல்** - இல்லம்; **கொண்டு** - ஏற்று; **பாரில்** - பூமியில்; **அவ்விடம்** - சிவ உலகு; **கிட்டுவார்** - சேர்வார். (197)

Koviloor Digital Library

இதுவும் அது

1178. முற்றக் காலமு முன்னுடல் பின்னிடப்
பெற்று மேற்பதம் பெற்றது மற்றிட
வெற்றிப்பாச விருள்வலி யீடறத்
துற்றுவார்கள் சொரூப சுகோதயம்.

முற்றக் காலமும் முன் உடல் பின்னிடப்
பெற்று மேல்பதம் பெற்றதும் அற்றிட
வெற்றிப் பாச இருள்வலி ஈடு அற
துற்றுவார்கள் சொரூப சுக உதயம்.

உரை:

உலகிலுள்ள இன்பங்களை நுகர்ந்த பிறகு, அப்போதிருந்த உடலை நீக்கி அதற்கு மேல் உள்ள உலகுகளை அடைந்து, அங்குள்ள இன்பங்களை அனுபவித்த பின்னர், வெற்றியை உடைய ஆணவ முதலான பாச இருளின் ஆற்றல் ஒருங்கச் சிவபிரானுடைய திருவடிகளைப் பொருந்திச் சிவானந்த அனுபவத்தில் மகிழ்ந்து இருப்பார்கள்.

விளக்கம்:

காலம் முற்ற - வாழ வேண்டிய காலம் முடிவடைய; **பின்னிட** - நீக்கி; **மேல் பதம்** - மேல் உலகுகள்; **பாச இருள்** - அறியாமையாகிய இருள்; **ஈடு அற** - ஆற்றல் ஒடுங்க; **துற்றுவர்** - பொருந்துவர்; **சொரூப சுக உதயம்** - சிவானந்த அனுபவ வடிவம். (198)

இதுவும் அது

1179. ஈசனேவ விசைத்த வியற்பொருட்
டேசுணர்ந்தவருஞ் செறிவாரங்கவ்
வாசகத்தை முன் சொன்ன வடிவுற
வாசை முற்று மறுத்த வளவிலே.

ஈசன் ஏவ இசைத்த இயல் பொருள்
தேசு உணர்ந்தவரும் செறிவார் அங்கு அவ்
வாசகத்தும் முன் சொன்ன வடிவு உற
ஆசை முற்றும் அறுத்த அளவில்.

உரை:

எல்லா ஆசைகளையும் அறவே ஒழித்த பிறகு இவை உரியதாகும் என்று

Koviloor Digital Library

சிவபெருமான் அருளிய ஆகமப பொருளை யான் சொன்னேன். அவ்வாகமப் பொருளின் உண்மையை உணர்ந்தவரும் முன் சொன்ன சிவனை ஒத்த திரு உருவம் பெற்றுச் சிவ உலகத்தில் வாழ்வார்.

விளக்கம்:

ஈசன் ஏவ - இறைவன் அருளிச் செய்த; **இசைத்த** - சொன்ன; **இயல்** - இது இங்கு ஆகமத்தைக் குறிக்கிறது; **தேசு** - உண்மை, ஒளி; **செறிவார்** - பொருந்துவார்; **முன் சொன்ன வடிவு உற** - சிவன் ஒத்த திரு உருவம் சிவசாருப்பியம் பொருந்த; **முற்றும்** - முழுவதும்; **அறுத்த அளவில்** - ஒழித்த பிறகு; (199)

திருமுழுக்குச் செய்க

1180. சிறந்த தேசத்துச் சித்திரை மாதமுன்
பிறந்த வாரத்துட் பெற்றுச் சிரத்தையு
நிறைந்த நெய்யினை நின்மலர்க் காட்டி முன்
கறந்த பான்முதன் மற்றுங் களிப் பொடே.

சிறந்த தேசத்துச் சித்திரை மாதம் முன்
பிறந்த வாரத்துள் பெற்றுச் சிரத்தையும்
நிறைந்த நெய்யினை நின் மலர்க்கு ஆட்டிமுன்
கறந்த பால்முதல் மற்றும் களிப்போடு.

உரை:

தேவாரப் பாடல் பெற்ற சிறப்புள்ள சிவபிரான் திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் சிவன் திருமேனிக்கு சித்திரைத் திங்களில் முதற் கிழமையில் நிறைந்த அன்புடன் நெய்யையும், பால், தயிர், நெய், சாணம், பசுவின் சிறுநீர் என்ற ஐந்து பொருள்களின் கலவையையும் மகிழ்ச்சியோடு திருமுழுக்குச் செய்து;

விளக்கம்:

தேசம் - என்பது திருக்கோயிலைக் குறிக்கும். வைணவர்கள், தம் கோயிலைத் திவ்விய தேசம் என்பர்.

சிறந்த தேசம் - தேவாரப் பாடல்கள் பெற்ற சிவப்பதிகள்; **சித்திரை மாதம்** - ஆண்டின் தொடக்க மாதம்; **வாரம்** - கிழமை, நாள்; **முன் வாரம்** - முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை; தமிழர் கிழமை என்பதை ஆரிய மொழியில் மலையாளிகளும், பிராமணர்களும் 'வாரம்' என்று சொல்வர்; **சிரத்தை** - திட்பமுற்ற அன்பு; **நின்மலர்** - இறைவர்; **பால் முதல் மற்றும்** - பசுவின் பால், தயிர், நெய், சாணம், சிறுநீர் என்ற ஐந்து பொருள்களின் கலவை; **ஆட்டி** - சிவபெருமான் திருமுடியில் திருமுழுக்குச் செய்து; **களிப்பு** - மகிழ்ச்சி. (200)

Koviloor Digital Library

இதுவும் அது

1181. செய்துமற்ற வினைகளுஞ் செய்தபின்
துய்ய பாயத மாதிய சொன்றியு
முய்ய வாயிரம் பத்தரை யூட்டியுண்
மையறீர்ந்த பதின்மரும் வாய்க்கவே.

செய்து மற்ற வினைகளும் செய்தபின்
துய்ய பாயதம் ஆதிய சொன்றியும்
உய்ய ஆயிரம்பத்தரை ஊட்டி உன்
மையல் தீர்ந்த பதின்மரும் வாய்க்க.

உரை:

மற்ற உபசாரச் செயல்களும் செய்த பிறகு உள்ளத்தில் மயக்கம் இல்லாத ஆயிரத்துப்பத்து சிவனடியார்களுக்குத் தூய்மையான பாயசத்தோடு கூடிய சோறு, கறி முதலான உணவு வகைகளைப் படைத்து உண்ணச் செய்க.

விளக்கம்:

துய்ய - தூய; பாயதம் - பாயசம்; ஆகிய - முதலான; சொன்றி - சோறு; பத்தர் - சிவனடியார்; உள் - உள்ளத்து; ஊட்டி - உண்ணச் செய்து; மையல் - அறிவு மயக்கம்; வாய்க்க - பொருந்த. (201)

இதுவும் அது

1182. அற்றை வாரத் தரனுக் கோராயிரம்
பெற்றம் பாதி கருவுட் பிறங்கவே
வெற்றி வெள்விடை பத்தொடும் விட்டவர்
பற்றவாரச் சிவபுரம் பாங்கொடே.

அற்றை வாரத்து அரனுக்கு ஓர் ஆயிரம்
பெற்றம்பாதி கரு உள் பிறங்கவே
வெற்றி வெள்விடை பத்தொடும் விட்டவர்
பற்றுவார் அச் சிவபுரம் பாங்கொடு.

உரை:

அந்த கிழமையில் சிவபிரான் திருக்கோயிலுக்கு வெற்றியினையுடைய வெண்மையான பத்து எருதுகளையும், கருப்பம் பாதி வளர்ந்த ஆயிரம் சினைப் பசுக்களையும் விளங்கும்படி கொடையாக அளித்தவர்கள், உரிமையோடு சிவ உலகில் வ்ாழ்வர்.

Koviloor Digital Library

விளக்கம்:

பெற்றம் - பசுவுக்கும் எருதுக்கும் பொதுப் பெயர்.

''பெற்றம் ஊர்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான்''

எனவும்

பாதிகரு குறிக்கப்பட்டமையால் அது இங்கு பசுவைக் குறித்தது.

''பசு ஏறும் எங்கள் பெருமான்''

என்பதில் எருதையே பசு எனவும், ஆளுடைய பிள்ளையார் அருளியுள்ளமை காண்க. **அற்றைவாரம்** - முன் சொன்ன அந்தச் சித்திரை முதல்வாரம். **அரன்** - அடியவரின் பாவங்களை அறுப்பவன். **கரு உள் பிறங்க** - கர்ப்பம் வயிற்றில் தோன்ற; **வெள்விடை** - வெள்ளை நிறக் காளைகள், ஏறுகள். **பாங்கொடு** - உரிமையோடு; **பற்றுவார்** - பொருந்துவார். (202)

பசுக்களின் சிறப்பு

1183. **ஆக்கண் முத்தியடைவிக்குங்காரண**
மாக்களாதலினாற்றுணையாயின
வாக்களாக்கையினோயு மறுத்திடு
மாக்களேயிருணோய்க்கு மவுடதம்.

ஆக்கள்முத்தி அடைவிக்கும் காரணம்
ஆக்கள் ஆதலினால் துணை ஆயின
ஆக்கள் ஆக்கையின் நோயும் அறுத்திடும்
ஆக்களே இருள் நோய்க்கும் அவுடதம்.

உரை:

பசுக்களே முத்தியைச் சேரும்படி செய்யும் காரணமாகும். பசுக்களே துன்பகரமான உடல் நோயை அகற்றும். பசுக்களே அறியாமையாகிய மயக்கத்தால் உண்டாகும் நல்வினை தீவினைகளாகிய நோய்க்கும் மருந்தாகும். ஆகையால், பசுக்களே மனிதர்க்கு உற்ற துணையாக ஆயின.

விளக்கம்:

ஆக்கை - உடம்பு; **இருள்நோய்** - அறியாமையாகிய மயக்கம்; **அவுடதம்** - மருந்து; **முத்தி** - வீடுபேறு. (203)

அடியார் மறையவர் பெரும்பயன்

1184. **பத்தர் காருகபத்தியர் தாங்களு**
முத்தியெய்தும் வழியு மொழிந்தனஞ்

Koviloor Digital Library

சித்தந்தன்னைச் சிறந்த பொருடனில்
வைத்த சித்தர் பலத்தை வகுத்தபின்.

பத்தர் காருக பத்தியர் தாங்களும்
முத்தி எய்தும் வழியும் மொழிந்தனம்
சித்தம் தன்னைச் சிறந்த பொருள்தன்னில்
வைத்த சித்தர்பலத்தை வகுத்தபின்.

உரை:

சிவபிரானுடைய அடியவர்களும், வில் வடிவான குண்டத்தில் யாகத் தீயை வளர்க்கும் பிராமணர்களும், எண்ணத்தைச் சிறப்பான பரம் பொருளிடம் ஒன்ற வைத்த சித்தர்களும் பெறும் பயன்களை உரைத்த பின், வீடு பேறு பெறும் வழியும் சொன்னோம்.

விளக்கம்:

பத்தர் - பத்தி நெறியில் நின்ற சிவனடியார். **காருக பத்தியர்** - வில் வடிவமாக யாகத்தீ வளர்த்த பிராமணர். அதாவது காருகபத்யாக்கினியில் ஹோமர் செய்வோர். சித்தர் - சிவஞானயோக சித்தி பெற்றவர். **முத்தி எய்தும் வழி** - வீடுபேறு அடையும் நெறி. (204)

சிற்றின்பம் நுகர்ந்த சிவஞானி

1185. மெய்யுணர்ந்த சிவாகம வேதகர்
கையிழந்திடிற் போகக் கருத்தினா
லையமின்றியவருமடைவரங்
குய்வர் மேலையுலக மொடுங்கு நாள்.

மெய் உணர்ந்த சிவ ஆகம வேதகர்
கை இழந்திடில் போகக் கருத்தினால்
ஐயம் இன்றி அவரும் அடைவர் அங்கு
உய்வர் மேலை உலகம் ஒடுங்கும் நாள்.

உரை:

சிவ ஆகம உண்மைகளைக் கற்றுத் தேர்ந்த சிவஞானி, பெண் இன்பத்தை விரும்பி ஒழுக்கம் தவறினால், சந்தேகம் இல்லாமல் அந்த ஞானி சிற்றின்பத்தை நுகருவார்; அதன் பயன் அகன்ற பிறகு, உலகம் ஒடுங்கும் ஊழிக் காலத்தில் சிவ உலகைப் பொருந்துவார்.

Koviloor Digital Library

விளக்கம்:

சிவ ஆகம மெய் - சிவ ஆகம உண்மைகளை; **உணர்ந்த** - கற்றறிந்த; **வேதகர்** - சிவஞானி; **கை** - ஒழுக்கம், உலக ஒழுக்கம்; **போகம்** - கல வியநுபவம்; **ஐயம்** - சந்தேகம்; **உய்வர்** - ஈடேற்றம் பெறுவர், நற்கதி பெறுவர்; **மேலை** - சிவ உலகு; **உலகம் ஒடுங்கும் நாள்** - ஊழிக்காலம். (205)

மெய்ப் பொருளைத் தியானம் செய்த பயன்

1186. உன்னினாரு மொருபக லுண்மையை
யன்னையாளும் புரத்தை யடைந்ததன்
மன்னுபோக விதத்தை மருவியே
துன்னு கற்ப வயுதந் தொலையவே.

**உன்னினாரும் ஒரு பகல் உண்மையை
அன்னை ஆளும் புரத்தை அடைந்து அதன்
மன்னும் போக விதத்தை மருவியே
துன்னும் கற்பம் அயுதம் தொலைய. ஏ**

உரை:

ஒரு நாளின் பகற்பொழுது மட்டும் உண்மையே வடிவான சிவ பரம் பொருளை மன ஒருமையோடு சிந்தை செய்தவர்களும், அப்புண்ணியப் பயனால் உலக அன்னையான உமையம்மையின் உலகை அடைந்து, பதினாயிரம் கற்பகாலம் வரை அங்குள்ள இன்பங்களை அனுபவித்துத் தீர்த்த பிறகு;

விளக்கம்:

உன்னினார் - எண்ணியவர்.

உண்மை - இது சிவபெருமானுக்கு உரிய பெயர்களுள் ஒன்று.

'மெய்யே உன்பொன் அடிகள்'

என்று மணிவாசகர் கூறுகிறார்.

அன்னை ஆளும் புரம் - தேவி உலகு; **மன்னும்** - நிலையான; **போக விதம்** - பலவகை இன்பங்கள்; **துன்னும்** - பொருந்தும்; **கற்பம்** - 432 கோடி வருடங்கள்; **அயுதம்** - பதினாயிரம்; **தொலைய** - அனுபவித்து முடிந்த பிறகு. (206)

இதுவும் அது

1187. குமரன் வாழ் திருக் கோயிருடங்கியே
யமர்வர் பொன்னசலந்தத் தமர்ந்தபி
னிமயத் தென்றிசைப் பாரத மெய்துவர்
தமையுணர்ந் தமலன் பதஞ் சாரவே.

Koviloor Digital Library

குமரன் வாழ் திருக் கோயில் துடங்கியே
அமர்வர் பொன் அசல அந்தத்து அமர்ந்தபின்
இமயத் தென்திசைப் பாரதம் எய்துவர்
தம்மை உணர்ந்து அமலன்பதம் சார.

உரை:

குமரப் பெருமான் வாழும் கந்த உலகு முதல் மேருமலை வரை உள்ள ஒவ்வோர் உலகையும் அடைந்து அங்கங்கு உள்ள இன்பங்களை நுகர்ந்த பிறகு, தம் உள்ளத்திலே உள் ஒளியைக் கண்டு, மலம் இல்லாத சிவனுடைய திருவடிகளோடு பொருந்த, இமயமலைக்குத் தெற்கேயிருக்கும் பாரத நாட்டில் பிறப்பார்.

விளக்கம்:

குமரன் வாழ் திருக்கோயில் - குமரன் வாழும் கந்த உலகு, கந்தபுரி; துடங்கி - தொடங்கி; அமர்வர் - தங்குவர்; பொன் அசலம் - மேரு மலை; அந்தத்து - முடிய; இமயம் - பனிமலை. தம்மை உணர்ந்து - தம் உள்ளத்திலே உள் ஒளியைக் கண்டு; அமலன் - மலங்கள் இல்லாத சிவபெருமான், கடவுள், பதம்சார - திருவடிகளோடு பொருந்த; எய்துவர் - அடைவர். (207)

சிவதருமோத்தர நூலைப் படித்த பயன்

1188. கருமயோகத்தைக் கற்பனை நீங்கிய
பரம யோகத்தைப் பாவ விதத்தினைத்
தரும பேதத்தைப்பேற்றினைச் சாற்றுமித்
தரும வுத்தரங் கற்றவர் தாமுமே.

கரும யோகத்தைக் கற்பனை நீங்கிய
பரம யோகத்தைப் பாவ விதத்தினைத்
தரும பேதத்தைப் பேற்றினைச் சாற்றும்இத்
தரும உத்தரம் கற்றவர் தாமும்.

உரை:

கருமயோகத்தையும், புனைந்துரை இல்லாத மேலான ஞான யோகத்தையும், பாவ வகைகளையும், பல வகை அறங்களையும், அவற்றின் பயன்களையும் உரைக்கும் இந்தச் சிவதரும உத்தர நூலைப் படித்தவர்களும்;

விளக்கம்:

கருமயோகம் - செய்யும் தொழிலையே யோகமாகக் கருதிப் பலனில் பற்றின்றிச் செய்வது. பரமயோகம் - மேலான ஞானயோகம். அறிவே வடிவான சிவபரம் பொருளுடன் உயிர் ஒன்ற உதவுவது. கற்பனை - இல்லாததை இருப்பது

Koviloor Digital Library

போலக் காண்பது. பாவ விதம் - பலவகைத் தீய செயல்களைப் பற்றிய விளக்கம். தருமபேதம் - பலவகை அறங்களாகிய புண்ணியச் செயல்கள் பற்றிய விளக்கம். தரும உத்தரம் - அறச் செயல்களைப் பற்றிய வினாக்களுக்கு உரிய விடைகள். கற்றவர் தாமும் - படித்தவர்களும்; (208)

சிவ தருமோத்தர நூற்பயன்

1189. விட்டு முன்னைய தீயவினையினை
அட்டமூர்த்தியமரு மந்தப்புரத்
திட்ட போகவிதத் தொடிருப்பர்க
ளொட்டினாரு மவருடனுண்மையே.

விட்டு முன்னைய தீய வினையினை
அட்டமூர்த்தி அமரும் அந்தப்புரத்து
இட்ட போக விதத்தோடு இருப்பார்கள்
ஒட்டினாரும் அவருடன் உண்மை.

உரை:

சிவதருமோத்தர நூலைக் கற்றவர்களோடு சேர்ந்தவர்களும் முன் பிறவிகளில் தேடிய தீய வினைகளிலிருந்து விடுபட்டு, 'நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம், கதிரவன், சந்திரன், ஆன்மா' என்ற எட்டும் தனக்கு வடிவமாக நிற்கும் சிவபெருமான் எழுந்தருளும் அழகிய சிவ உலகில் அவர்கள் விரும்பிய பல வகை இன்பங்களையும் அனுபவித்த படி வாழ்வர் என்பது உண்மை.

விளக்கம்:

விட்டு - நீங்கி, முன்னைய - முன் பிறவிகளில் தேடிய; **தீயவினை** - பாவச் செயல்; அட்டமூர்த்தி - நிலம், நீர், தீ, காற்று, வானம், கதிரவன், நிலவு, உயிர் என்ற எட்டும் தன் வடிவமாகப் பொருந்தி நிற்கும் சிவபிரான். **அமரும்** - எழுந்தருளும்; அந்த - அழகிய; புரத்து - சிவ உலகில். இட்ட - விரும்பிய; போகவிதம் - பலவகை இன்பங்கள்; ஒட்டினார் - சேர்ந்தவர்கள். (209)

சிவதருமோத்தர முறையைப் பின்பற்றியவர்

1190. இந்த நூன்முறை நீதியியற்றின
ரந்தநீதி தனையறிவித்தவர்
சிந்தைகூர்தரச் செய்வித்த தெள்ளிய
ரிந்த மூவகையாரு மங்கெய்தியே.

இந்த நூல்முறை நீதி இயற்றினர்
அந்த நீதி தன்னை அறிவித்தவர்

Koviloor Digital Library

சிந்தைகூர்தரச் செய்வித்த தெள்ளியர்
இந்த மூவகையாரும் அங்கு எய்தி.

உரை:

இச் சிவதருமோத்தர நூலிற் கூறிய முறைகளைப் பின்பற்றி வாழும் நல்லோரும், இந்நூலின் நீதிகளை மக்களுக்கு உணர்த்திய அறிஞரும், இந்நூலில் நாட்டம் கொள்ளும்படி செய்த தெளிந்த அறிவுடையஆசிரியன்மாரும் ஆகிய இம்மூன்று பிரிவினரும் சிவ உலகை அடைந்து;

விளக்கம்:

நீதி இய்ற்றினர் - சிவதருமோத்தர நீதியைப் பின்பற்றியவர். **நீதி தனை அறிவித்தவர்** - சிவ தருமோத்தர நீதிகளை உணர்த்தியவர். **சிந்தை கூர்தரச் செய்தவர்** - சிவ தருமோத்தர நூலைப் பிறர் மனங்கொள்ளுமாறு புகட்டியவர். **அங்கு எய்தி** - அச்சிவ உலகை அடைந்து. (210)

இதுவும் அது

1191. அருந்தியங்குள போகமனைத்தையும்
பிரிந்திடாதுறப் பேணிய சுற்றமும்
பரிந்த பாசங்கள் பாற்றித் திளைப்பர்க
ளொருங்குநாளுலகின்பு தஞ் சத்தியுள்.

அருந்தி அங்கு உள்ள போகம் அனைத்தையும்
பிரிந்திடாது உறப் பேணிய சுற்றமும்
பரிந்த பாசங்கள் பாற்றித் திளைப்பர்கள்
ஒருங்குநாள் உலகு இன்பு தம் சத்தியுள்.

உரை:

தம்மைப் பிரியாத உறவினர்களோடு அச்சிவ உலகில் உள்ள எல்லா இன்பங்களையும் நுகர்ந்து, சுமந்த பற்றுகளை அழித்து, உலகுகள் ஒருங்கு சேரும் நாளில் சிவசத்தியில் உண்டான பரை தரிசனமாகிய இன்பத்தையும் பெறுவர்.

விளக்கம்:

போகம் அருத்தி - இன்பங்களை அனுபவித்து; **அங்கு** - சிவ உலகில்; **சுற்றம்** - உறவு; **பரிந்த** - பரித்த தாங்கிய; சுமர்ந்த; **பாசங்கள்** - பற்றுகள், **பாற்றி** - ஒழித்து; **ஒருங்கு நாள் உலகு** - உலகு ஒருங்கும் நாள். உலகுகள் ஒன்றாகும் நாளாகிய ஊழிக்காலம்; **இன்பு** - இன்பம். (211)

Koviloor Digital Library

திருக்கோயில் எல்லையில் சிவதருமோத்தர விரிவுரை செய்வித்தவர்

1192. அருத்த மீந்து மமலன் திருவெலைத்
திருக்குளத்துமொய்த் தீர்த்தத்தினாடொறுந்
தெரித்த விந்தச் சிவதரு மோத்தரம்
விரிப்பிப் பார்களு முற்பல மேவுவார்.

அருத்தம் ஈந்தும் அமலன் திரு எல்லைத்
திருக்குளத்து மொய்த் தீர்த்தத்தின் நாள்தோறும்
தெரித்த இந்தச் சிவதருமோத்தரம்
விரிப்பிப் பார்களும் முற்பலம் மேவுவார்.

உரை:

கற்றுத் தேர்ந்த புலமையும் நாவன்மையும் உள்ள சிறந்த புலவருக்குத் தேவையான அளவு பொருள் தந்து, திருக்கோயில் வளாகத்தில் இருக்கும் அகன்ற திருக்குளத்தின் கரையில் யாம் தெரிவித்த இச்சிவதருமோத்தரத்தை நாள்தோறும் விரிவுரை நிகழ்த்தும்படி செய்த செல்வர்களும் முன் சொன்ன பயனாகிய சிவ உலக இன்பங்களைப் பொருந்துவர்.

விளக்கம்:

அருத்தம் - செல்வம், நிதி; ஈந்தும் - கொடுத்தும்; **அமலன் திரு எல்லை** - சிவன் கோயில் வளாகம். மொய் - பரவிய; **விரிப்பிப்பார்** - விரிவுரையாற்றச் செய்தவர்கள். முற்பலம் - முன் சொன்ன சிவ உலக இன்பங்கள். (212)

சிவதருமோத்தரத்தைப் படித்து விரிவுரை நிகழ்த்திய பிறகு செய்ய வேண்டியன

1193. அந்தந் தன்னிலவனி தலத்துக்கு
நந்த நன்மைகணாடி நவிற்றுக
பந்தபாசம் பறிக்கும் பரமனைச்
சிந்தை செய்க துதிவிதஞ் செப்பியே.

அந்தம் தன்னில் அவனி தலத்துக்கு
நந்த நன்மைகள் நாடி நவிற்றுக
பந்தம் பாசம் பறிக்கும் பரமனைச்
சிந்தை செய்க துதி விதம் செப்பி.

Koviloor Digital Library

உரை:

சிவதருமோத்தர விரிவுரை நிறைவேறிய பின்னர், இந்நிலப்பரப்பில் வாழும் மக்களுக்கு நன்மைகள் பெருகப்பல செயல்களை அறிந்து செய்க. மேலும், பிறவி தோறும் தொடர்ந்து வரும் தொடர்பையும் பற்றுகளையும் நீக்கும் சிவபெருமானைப் பலவகையாகப் புகழ்ந்து பாடிச் சிந்தையிலே கருதுக.

விளக்கம்:

அந்தம் தன்னில் - விரிவுரை முடிவு பெற்ற பிறகு; **அவனி தலத்துக்கு** - பூமியில் வாழும் மக்களுக்கு; **நன்மைகள் நந்த நாடி** - நன்மைகள் பெருக விரும்பி. **பந்தபாசம்** - தொடர்பும் பற்றும்; **பறிக்கும்** - நீக்கும். **பரமன்** - சிவபெருமான்; **செப்பிதுதிவிதம்** - புகழ்ந்து பாடி; **சிந்தை செய்க** - எண்ணுக. (213)

விரிவுரை நிறைவேறிய பிறகு செய்ய வேண்டியன

1194. **பேசு நூலியன் முற்றுதல் பெற்றபின்**
கோசந் தன்னையு முன்சொன்ன கொள்கையிற்
பூசை சாலப் புரிக பரிவுடன்
வாச மாமலராதி மலியவே.

பேசும் நூல் இயல் முற்றுதல் பெற்றபின்
கோசம் தன்னையும் முன்சொன்ன கொள்கையில்
பூசை சாலப்புரிக பரிவுடன்
வாசம் மாமலர் ஆதி மலிய.

உரை:

சிவதருமோத்தரத்தின் பன்னிரண்டு இயல்களையும் மக்களுக்கு விரிவுரை நிகழ்த்திய பிறகு, அச்சிவதருமோத்தர நூலை, முன்பு சிவஞானதான இயலில் கூறியுள்ள முறைப்படி நறுமணம் நிரம்பிய மாலைகளால் ஒப்பனை செய்து, நறுமணப் பூக்கள் தூவிச் சிறப்பாகப் பூசை செய்க.

விளக்கம்:

பேசும் - சொல்லப்படுகிற; **நூல் இயல்** - சிவதருமோத்தர இயல்கள்; **முற்றுதல் பெற்றபின்** - விளக்க உரை நிறைவேறிய பிறகு; **கோசம்** - நூல்; **கோசம் தன்னை** - சிவதருமோத்தர நூலை; **முன் சொன்ன** - முன்பு சிவஞானதான இயலில் சொல்லிய; கொள்கையில்; **முறைப்படி** - விதிப்படி. **வாசமாமலர் ஆதி மலிய** - நிரம்ப நறுமணமாலைகள், பூக்களால்; **சாலப் பரிவுடன்** - மிக அன்புடன். **பூசை புரிக** - வழிபாடு செய்க. (214)

Koviloor Digital Library

சிவன், சிவஞானி, குரு முதலியோரையும் வழிபாடு செய்க

1195. தேசனுக்கு மெய்த் தேசிகற்குமியல்
வாசகற்கு மறையறைவாா்கட்கு
மீசனே சர்க்குங் கால்கணிலார்கட்கும்
பூசைமுன் சொன் முறையிற் புரிகவே.

தேசனுக்கும் மெய்த் தேசிகற்கும் இயல்
வாசகற்கும் மறை அறைவார்கட்கும்
ஈசன் நேசர்க்கும் கால்கண் இல்லார்கட்கும்
பூசை முன் சொல் முறையில்புரிக.

உரை:

ஒளிவடிவினரான சிவபெருமானுக்கும், சிவாகம உண்மைகளை உபதேசித்த சிவஞானியாகிய ஆசிரியருக்கும். சிவதருமோத்தர உண்மைகளை விளக்கிக் கூறும் விரிவுரையாளர்களுக்கும், வேதம் ஓதுபவர்கட்கும், சிவபிரானுடைய அடியவர்களுக்கும், கால், கண் முதலான உறுப்புக்குறை உள்ளவர்களுக்கும் முன் சொல்லிய முறைப்படியே பூசை புரிக.

விளக்கம்:

தேசன் - ஒளிவடிவினனாகிய சிவபிரான். **மெய்த் தேசிகர்** - சிவாகம உண்மையை உபதேசித்த சிவஞானி; **இயல்வாசகர்** - சிவதருமோத்தரத்தைப் படித்து, அதன் கருத்துகளை விளக்கிக் கூறும் விரிவுரையாளர். **மறை அறைவார்** - வேதம் ஓதுபவர்கள். **ஈசன் நேசர்** - சிவபெருமானுடைய அடியவர்கள். **கால் கண் இல்லார்** - உடல் உறுப்புக் குறையுடைய அன்பர்கள். (215)

பூசையின் பயன்

1196. இந்தவாறு புரியிலிடரிலை
நந்து நன்மைகணாடொறு நாடெலா
மந்தராழ்வருயர்வர்மதியுளா
ரந்தமேலுல காள்கையுமாகுமே.

இந்தவாறு புரியில் இடர் இல்லை
நந்தும் நன்மைகள் நாள்தோறும் நாடு எல்லாம்
மந்தர் ஆழ்வர் உயர்வர் மதி உள்ளார்
அந்தமேல் உலகு ஆள்கையும் ஆகும்.

Koviloor Digital Library

உரை:

இவ்வாறு சிவபிரான், சிவஞானி சிவாகம உண்மைகளை உபதேசித்த குரு, சிவாகம ஆசிரியர் முதலியோரை முறைப்படி வழிபாடு செய்து வணங்கினால், துன்பங்கள் இல்லை; நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் நலம் பெருக வாழ்வார்கள்; மந்த அறிவு உடையார் குறைந்து, கூரிய அறிவுடையார் அதிகமாவர்; மேலும், மேல் உலக ஆளுகையும் பொருந்தும்.

விளக்கம்:

புரியில் - செய்தால்; இடர் - துன்பம்; **நாடு எல்லாம்** - நாட்டு மக்கள் அனைவருக்கும். **நன்மைகள் நந்தும்** - நலங்கள் பெருகும்; **நந்தும்** - பெருகும். **மந்தர்** - அறிவுக் குறைவு உடையவர்; **ஆழ்வர்** - குறைவர். **மேல்உலகு** - சுவர்க்க உலகு; **ஆளுகை** - ஆட்சி. (216)

சிவாகமங்கள் முதலியவை

1197. **புத்தகத்தினைப் பூசை புரிகிலார்**
சித்தங் கூர்தரத் தேசிகன்றன்னையு
மத்தகைப் பல நீங்குவதன்றியுங்
கொத்தைபோ னிரயக் குழி கூடுவார்.

புத்தகத்தினைப் பூசை புரிகிலார்
சித்தம் கூர்தரத் தேசிகன் தன்னையும்
அத்தகைப் பலம் நீங்குவது அன்றியும்
கொத்தைபோல் நிரயக் குழி கூடுவார்.

உரை:

உள்ளத்திலே மிகுந்த அன்போடு சிவாகமத்தையும், அச்சிவாகம உண்மைகளை உபதேசித்த ஆசானையும் வழிபாடு செய்யாதவர்கள், முன் சொன்ன மேல் உலக இன்பங்களை இழப்பதோடு பயனற்றவர்களாக நரகத்தைச் சேருவர்.

விளக்கம்:

சித்தம் கூர்தர - உள்ளத்திலே அன்பு மிகுதிப்பட; **புத்தகம்** - சிவாகமம்; **தேசிகன்** - சிவாகம உண்மையை உபதேசம் செய்த சிவஞானியாகிய ஆசிரியர். **அத்தகைப் பலம்** - முன் சொன்ன மேல் உலக இன்பங்களாகிய பயன். **நீங்குவது அன்றியும்** - இழப்பதோடு மேலும்; **கொத்தை** - சொத்தை, பயனற்றது, குருடு. (217)

Koviloor Digital Library

சிவாகமங்கள் முதலியவை

1198. ஆதலாற் புத்தகாதிய ருச்சனை
காதலாற் செய்க காமுறுவார் பலம்
வேதனா நரகக் குழி வேண்டிலா
ரேதெனுந்தம சத்திக் கிசையவே.

ஆதலால் புத்தக ஆதிஅருச்சனை
காதலால் செய்க காமுறுவார்பலம்
வேதனா நரகக் குழி வேண்டிலர்
ஏதெனும் தம் சத்திக்கு இசைய.

உரை:

ஆகையால், மேல் உலக இன்பப் பயனை விரும்புகிறவர்களும் துன்பம் மிகுந்த நரகக் குழியை விரும்பாதவர்களும் தங்களுடைய பொருள் வருவாய்க்கு ஏற்றபடி சிவாகமத்தையும் சிவாகம ஆசிரியரையும் அன்போடு மலர்தூவி வழிபாடு செய்வார்களாக.

விளக்கம்:

அருச்சனை - மலர் தூவிச் செயும் வழிபாடு; **காதலால்** - அன்பினால்; **காமுறுவார்** - விரும்புவார்; **பலம்** - இன்பமாகிய பயன்; **வேதனா** - வேதனை; **வேண்டிலர்** - விரும்பாதவர்; **ஏதெனும்** - சிறிய அளவிலாவது; **இசைய** - ஏற்றபடி. (218)

சிவாகம நூலை எழுதுவித்தல்

1199. அக்கர மொன்றினுக்
கொன்றாடகப்பணம் வையாரியன்மு
னக்கரமொன்றினுக்கு மிடியாளன்
செம்பாங் காசொன்
றக்கர மொன்றினுக்கவிழொன்றருத்து
விக்க வாசையிலா
னிக்கணக்குத்தமம் பதத்துக்கிடைகடை
பாட்டினுக்கியற்றின்.

அக்கரம் ஒன்றினுக்கு ஒன்று
ஆடகப் பணம் வைஆரியன்முன்
அக்கரம் ஒன்றினுக்கு மிடியாளன்
செம்புஆம் காசு ஒன்று

Koviloor Digital Library

அக்கரம் ஒன்றினுக்கு அவிழ்ஒன்று
அருத்து விக்க ஆசையில்லான்
இக்கணக்கு உத்தமம் பதத்துக்கு
இடை பாட்டினுக்கு இயற்றில்.

உரை:

சிவ ஆகம ஏட்டுச் சுவடிகளை, ஒரு சுவடியிலிருந்து பெயர்த்துப் புதிதாகப் பிரதி செய்வதை அல்லது பார்த்து எழுதுவதை, 'ஏடு எழுதுதல்' என்பர். பொருள் வளமுடைய செல்வர், ஏடு எழுத வல்ல திறமையாளரை அழைத்து, ஓர் எழுத்துக்கு ஒரு பொற்காசு வீதம் வழங்கி எழுதுமாறு செய்க; வறியவர், ஓர் எழுத்துக்கு ஒரு செம்புக் காசு வழங்கி எழுதச் செய்க; பொருளிலே விருப்பம் இல்லாத ஞானிக்கு ஓர் எழுத்துக்கு ஒரு சோறு உண்ணும்படி செய்து எழுதுவிக்க, இந்தக் கணக்கின்படி செய்வது உயர்வானது. இவ்வாறு செய்யாமல், ஆகமத்தின் ஒவ்வொரு சொல்லுக்கும் இவ்விதம் கொடுத்து எழுதச் செய்தல் நடுத்தரமானது; ஒவ்வொரு பாடலுக்கும் இவ்விதம் கொடுத்து எழுதச் செய்தல் கீழ்த்தரமானது.

விளக்கம்:

பழங்காலத்திற் பொருள் உடையவர்கள் மட்டும் ஏட்டுச் சுவடியை விலை கொடுத்து வாங்க முடியும். ஏழை மக்களால் எழுத்துக் கூலி கொடுத்து ஏடு எழுதச் செய்யமுடியாது. ஆகவே, பொருள் வளம் உள்ளவர்கள், ஏட்டுச் சுவடிகளை விலை கொடுத்து வாங்கி, எழுதுவித்து பெருக்கி வசதி இல்லாத ஏழைப் பிள்ளைகள் படிப்பதற்காக வழங்குவது பெரிய புண்ணியச் செயலாகக் கருதப்பட்டது. சிவதருமோத்தர நூலும் பனையோலைச் சுவடிகளில் இருந்துதான் அச்சிடப்பட்டது. எழுதுகிறவரின் கல்வித் தகுதியைப் பொறுத்துச் சில சுவடிகள் பிழையில்லாமலும், பல சுவடிகள் பிழைகள் நிரம்பியும் இருக்கும். சிவதருமோத்தரப் பாடல்களில் பிழைகள் இருப்பதற்கு இதுவே காரணம். (219)

ஆசிரியரும் மாணாக்கரும்

1200. ஆரியனும் பலன் கருதா தறிவிக்க வாராயுங்
கூரியனு மிதற்கிது கைம்மாறென்று குறியற்க
மாரியினுக் குண்டோ கைம்மாறிந்த வையகத்து
ளாரியனுக்கடிமையலா லாடகங் கைம்மாறாமோ.

ஆரியனும் பலன் கருதாது அறவிக்க ஆராயும்
கூரியனும் இதற்கு இது கைம்மாறு என்று குறியற்க
மாரியினுக்கு உண்டோ கைம்மாறு இந்த வையகத்துள்
ஆரியனுக்கு அடிமை அல்லால் ஆடகம்கைம்மாறு ஆமோ?

Koviloor Digital Library

உரை:

ஆசிரியன் மாணவனிடமிருந்து ஒரு பயனைப் பெற வேண்டுமென்று எண்ணாமல் ஆகம நூலின் உண்மைகளை உணர்த்துவாராக; ஆராய்ந்து கற்கும் கூரிய அறிவுடைய மாணாக்கனும் ஆசிரியனிடம் கற்ற கல்விக்குத் தான் கொடுக்கும் பொருளே பதிலுதவியாகும் என்று ஒரு பொருளைக் கருதாமல் இருப்பானாக; மழைக்குப் பதிலுதவியாக மேகத்துக்கு மாந்தர் எதுவும் உதவ முடியாது. அதுபோல, ஆசிரியனுக்குத் தொண்டு செய்வதைத் தவிர, மாணாக்கன் தரும் தங்கக் காசு, ஆசிரியனிடம் பெற்ற கல்விக்குப் பதில் உதவி ஆகுமோ? ஆகாது.

விளக்கம்:

ஆரியன் - இது ஆசிரியனைக் குறிக்கிறது.

''பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும்''

என்பது மணிவாசகரின் அருள்மொழி.

ஆராயும் கூரியன் - இது மாணாக்கனைக் குறிக்கும். அறிவிக்க - கற்பிப்பாராக; குறியற்க - உதவும் போது எண்ணாதிருப்பானாக. மாரி - மழை; கைம்மாறு - பதிலுதவி; அடிமை - தொண்டு செய்க. ஆடகம் - தங்கத்தில் ஒரு வகை. இங்கு தங்கக் காசுகளைக் குறிக்கும். (220)

சிவதருமோத்தரத்தின் பொருளடக்கம்

1201. பரமதரும முபதேசம் பஞ்சமகநற்பலகசணந்
தருமங்கரிசு தற்பலங்கள் சரதமறுமை சேடவிதம்
பரமயோகம் பரிகாரம் பசுக்கணிலவும் பதமுமென
விருமூன்றிருமூன்றியலாகித் தருமோத்தர நூலிலங்கிடுமே.

பரம தருமம் உபதேசம் பஞ்சமகம் நல்பல கரணம்
தருமம் கரிசு தன்பலங்கள் சரதம் மறுமை சேடவிதம்
பரமயோகம் பரிகாரம் பசுக்கள் நிலவும் பதமும் என
இருமூன்று இருமூன்று இயல் ஆகித் தருமோத்தரம் நூல் இலங்கிடும்.

உரை:

பரம தருமாதி இயல், சிவஞானதான இயல், ஐவகையாக இயல், பல விசிட்ட காரண இயல், சிவதரும இயல், பாவ இயல், சுவர்க்க நரக இயல், சனன மரண இயல், சுவர்க்க நரக சேட இயல், சிவஞான யோக இயல், பரிகார இயல், கோபுர இயல் என்று சொல்லும் பன்னிரண்டு இயல்களுடன் பொருந்தி இச்சிவதருமோத்தரம் என்னும் நூல் விளங்கும்.

விளக்கம்:

பஞ்ச மகம் - ஐந்து யாகம்; கரிசு - பாவம்; நிலவும் - வசிக்கும்; பதம் - இடம்; இருமூன்று இரு மூன்று - பன்னிரண்டு; இயல் - பகுதி. (221)

Koviloor Digital Library

கந்தன் இசைத்தான்

1202. என்று சுரபிக்குமுறு மெல்லையு மிசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கருள் கொடுத்தான்
வென்று புலனைந்தினையும் வெய்ய வினைநைய
நின்ற முனியன்றுணர நிர்க்குணனினைந்தே.

என்று சுரபிக்கும் உறும் எல்லையும் இசைத்தான்
குன்றவர் மடக்கொடி தனக்கு அருள் கொடுத்தான்
வென்று புலன் ஐந்தினையும் வெய்ய வினை நைய
நின்ற முனி அன்று உணர நிர்க்குணன் நினைந்து.

உரை:

மலையில் வாழும் வேடுவர் தலைவன் நம்பிராசன் திருமகளான இளமையும் மென்மையான உடலமைப்பும் கொண்ட வள்ளி நாயகிக்கு அருள் செய்த கந்தப் பெருமான், கொடிய தீவினை கெடுமாறு சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து புலன்களையும் அடக்கிய அகத்தியன் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணி, பசுக்கள் தங்கும் கோபுர இயலின் தன்மைகளை விளக்கமாக உரைத்தான்.

விளக்கம்:

சுரபி - வெள்ளை நிறப்பசு; உறும் எல்லை - பசுமடம்; குன்றவர் - மலையில் வாழும் வேடுவர்; மடக்கொடி - மடம்கொடி. இளமையும் கொடி போன்று ஒல்லியான உடலமைப்பும் கொண்ட வள்ளியம்மை. வெய்ய - கொடிய; நைய - நைந்து கெட; நிர்க்குணன் - கடவுளாகிய கந்தன்; இசைத்தான் - உரைத்தான். (222)

சிவன் துதி

1203. மேலையாரிடர் போக்கிய வில்லனே
விரும்புவாருள மேவிய வில்லனே
காலனார் உயிர் போக்கிய காலனே
களைந்து காப்புலகாக்கிய காலனே
யால நீழலறஞ் சொனவாதியே
யன்றயன் சிரமொன்றறவாதியே
சூலி நீலியோடாடிய சோதியே
தொடர்ந்த வெங்கள் பிறப்பறச் சோதியே.

மேலையார் இடர் போக்கிய வில்லனே
விரும்புவார் உள்ளம் மேவிய இல்லனே
காலனார் உயிர் போக்கிய காலனே
களைந்து காப்பு உலகு ஆக்கிய காலனே

Koviloor Digital Library

ஆலநீழல் அறம் சொன்ன ஆதியே
அன்று அயன் சிரம் ஒன்று அறவாதியே
சூலி நீலியோடு ஆடிய சோதியே
தொடர்ந்த எங்கள் பிறப்பு அறச் சோதியே.

உரை:

வானவெளியில் இயங்கித் துன்பம் தந்த முப்புராதிகளை அழிக்க மேருமலையை வில்லாக ஏந்தியவனே! அடியவரின் உள்ளத்தையே இல்லமாகக் கொண்டு அதில் பொருந்தியிருந்தவனே! யமனை உதைத்துக்கொன்ற காலை உடையவனே! உயிர்களைக் காத்து, அழித்து, மீண்டும் தோற்றுவிக்கும் கால தத்துவனே! கல் ஆல மரத்தின் கீழ் தென்முகக் கடவுளாகிய குருவாக எழுந்தருளிச் சனகன் முதலான நால்வர்க்கும் அறம் உரைத்தவனே! முன் நாளில் பிரமனுடைய செருக்கு அடங்குமாறு அவன் தலைகளுள் ஒன்றைக் கிள்ளிப் பாதிப்பை உண்டாக்கியவனே! சூலம் ஏந்திய கரிய நிறக் காளியோடு தாண்டவம் ஆடிய ஒளி வடிவினனே! எங்கள் பிறவி அகலும்படி சோதிப்பாயாக! (223)

சிவன் துதி

1204. சங்கை தீர்த்திட வானவர் தம்மையே
தையனைய வருந்திய தம்மையே
யங்கியாகியளத்தற் கரியனே
யணுக்கள் செய்யுஞ் செயலிற்கரியனே
பங்கயத்தயன் பாம்பணைப் பள்ளியான்
பயிலுமெல்லைத் திருச் சிராப்பள்ளியா
னெங்கள் பாச மிருக்கும் விருப்பமே
யாங்கள் பேரின்பிலங்க விருப்பமே.

சங்கை தீர்த்திட வானவர் தம்மையே
தையல் நைய அருந்திய தம்மையே
அங்கி ஆகி அளத்தற்கு அரியனே
அணுக்கள் செய்யும் செயலில் கரியனே
பங்கயத்து அயன் பாம்பணைப் பள்ளியான்
பயிலும் எல்லைத் திருச்சிராப் பள்ளியான்
எங்கள் பாசம் இருக்கும் விருப்பமே
யாங்கள் பேரின்பு இலங்க விருப்பமே.

உரை:

தேவர்களுக்கு இருந்த அச்சத்தை அகற்றவும், உமையம்மையின் மனம் நையவும் நஞ்சு உண்டவனே! பிரம்னும் விட்டுணுவும் அளவிடமுடியாதபடி அவர்களுக்கு நடுவே தீ உருவாக நின்றவனே! மக்கள் செய்யும் செயல்களுக்குச் சான்றாக இருப்பவனே! விட்டுணுவின் தொப்பூழாகிய தாமரையில் இருக்கும்

Koviloor Digital Library

பிரமனும், கடலில் பாம்புப் படுக்கையில் துயில் கொள்ளும் நாராயணனும் பணிவிடை செய்யும் திருச்சிராப்பள்ளி என்னும் திருப்படை வீட்டை உடையவனே! எங்கள் பற்றுகளை அகற்றும் ஆர்வம் உனக்கு உள்ளமையால், நாங்கள் பேரின்ப நிலையில் பொருந்தி விளங்குவோம்!

வானவர் தம்மைச் சங்கை தீர்த்திட(வும்) தையல் நைய(வும்) அருந்தியது அம்மை (கரிய விடம்) என்க.

விளக்கம்:

கரி - சாட்சி,சான்று; பங்கயம் - தாமரை; அயன் - பிரமன்; பாம்பணை - பாம்பு அணை, பாம்புப் படுக்கை; பள்ளி - உறக்கம். (224)

சிவன் துதி

1205. எனக்குண் மாசையிரித்த வியலனே
யியலு மேயமு மானவியலனே
மனத்தினாலு மதிக்க வரியனே
மயக்க மன்பர்க் கரிக்கு மரியனே
தனக்குத் தானிணையான தமியனே
சசிதனைப் பதத்தாலே தமியனே
பனைக்கையானையுரித்த பலத்தனே
பரதஞ் செய்யுந் திருவம்பலத்தனே.

எனக்கு உள் மாசை இரித்த இயலனே
இயலும்(உவ) மேயமும் ஆன இயலனே
மனத்தினாலும் மதிக்க அரியனே
மயக்கம் அன்பர்க்கு அரிக்கும் அரியனே
தனக்குத் தான் இணையான தமியனே
சசிதன்னைப் பதத்தாலே தமியனே
பனைக்கை யானை உரித்த பலத்தனே
பரதம் செய்யும் திரு அம்பலத்தனே.

உரை:

எனக்குள் இருக்கும் மன அழுக்கைப் போக்கியவனே! உவமானமும் உவமேயமுமான பொருள் விரிவை உடையவனே! மனதாலும் அளவிட முடியாதவனே! அடியவர்களின் அறியாமை இருளை அறுக்கும் அருமையானவனே! தனக்குத் தானே நிகரான ஒருவனே! சந்திரனைக் காலால் தேய்த்தவனே! பனைமரம் போன்ற புழைக்கையை உடைய யானையின் தோலை உரித்த வலிமை வாய்ந்தவனே! திருவடிகளால் ஆனந்தத் தாண்டவம் புரிந்த திரு அம்பலத்தை உடையவனே! இயலும் மேயமும் - பிரமாணமும் பிரமேயமும் எனலுமாம்.

Koviloor Digital Library

விளக்கம்:

உள்மாசு - மன அழுக்கு; **இரித்த** - நீக்கிய; **அரித்தல்** - அறுத்தல்; **இயலன்** - தன்மையுடையவன்; **சசி** - சந்திரன்; **பரதம்** - கூத்து; **திரு அம்பலம்** - சிதம்பரம். (225)

சிவன் துதி

மாலை மாற்று

1206. காலமே கோலமே சீலமே பாலமே
மேலபா மேலசீ மேலகோ மேலகா

உரை:

மூன்று காலங்கள் என்னும் பொருளே, அழகு என்னும் பொருளே, முக்குணங்கள் என்னும் பொருளே, கைக் கோடரியைக் கையில் ஏந்தும் பொருளே, அன்பான உள்ளத்தில் வாழும் பொருளே, உபநிடதமாகிய பாலின் மீது விளங்கும் பொருளே, சிறப்புகள் அனைத்துக்கும் சிறப்பான பொருளே, எருதின் மீது எழுந்தருளும் பொருளே, என்னைக் காத்து அருள்க.

விளக்கம்:

மாலை மாற்று - நேராகப் படித்தாலும் தலைகீழாகப் படித்தாலும், சொற்றொடர் ஒரேவிதமாக அமையுமாறு பாடும் சித்திர கவி. **மூன்று காலம்** - காலை, நண்பகல், மாலை. **மூன்று குணங்கள்** - சாத்துவிகம், இராசதம், தாமதம். **கோலம்** - அழகு; **பாலம்** - மழு, கைக் கோடரி. **கா** - காத்து அருள்க; **சீலம்** - ஒழுக்கம். (226)

குமரன் துதி

1207. இருவினையாலே யிருநிதியூர்பே ரினமேயோ
மருவலர்மானோய் மரணமெனவே வருபேதம்
பரிபுர பாதாபனுவல் வேதா பரனேயோ
சரவண சாதா வறுமுகநாதா தணி நீயே.

இருவினையாலே இருநிதி ஊர்பேர் இனம் ஏயோ
மருவலர் மாநோய் மரணம் எனவே வருபேதம்
பரிபுர பாதா பனுவல் வேதா பரன் ஏயோ
சரவண சாதா அறுமுக நாதா தணிநீ.

உரை:

சிலம்பணிந்த திருவடிகளை உடையவனே, வேதங்களையுடையவனே, சரவணப் பொய்கையிற் பிறந்தவனே, ஆறு திருமுகங்களையுடைய கடவுளே,

Koviloor Digital Library

நல்வினை தீவினைகளால் பொருந்திப் பெருஞ் செல்வம், ஊர், பெயர், இனம், பகைவர், பெரிய நோய், இறப்பு என வருகின்ற வேறுபாடுகளை நீ குறைப்பாயாக.

விளக்கம்:

இருவினை - நல்வினை, தீவினை; **இருநிதி** - பெருஞ்செல்வம்; **மருவலர்** - பகைவர்; **மா** - பெரிய; **மரணம்** - இறப்பு; **பேதம்** - வேறுபாடு; **பரிபுரம்** - சிலம்பு; **பாதம்** - திருவடி; **பனுவல்** - நூல்; **வேதம்** - நான்கு வேதங்கள்; **பரன்** - பரம் பொருள்; **சரவண** - சரவணப் பொய்கையில்; **சாதா** - பிறந்தவனே; **சாதம்** - ஜாதம், பிறப்பு; **நாதன்** - கடவுள், தலைவன்; **தணி** - குறைத்திடு. (227)

அகத்தியர் துதி

1208. விதி திகழ் வேதாகம வுணர்வாயே வினைதீரக்
கதமுக மாமோகமு முகமாயா கருவேயோ
மதகரி பேழ்வாய்வலீமுகமா மரைவாழும்
பொதிமலை மீதே புரிமுனிதாளே புகழ்வாமே.

விதி திகழ் வேத ஆகம உணர்வாயே வினைதீரக்
கதமுக மாமோகமும் முகமாயா கருவேயோ
மதகரி பேழ்வாய் வலீமுகம் மாமரை வாழும்
பொதிமலைமீதே புரிமுனிதாளே புகழ்வாம்.

உரை:

மதங்கொண்ட யானை, பிளந்த வாயினையுடைய குரங்கு, பெரிய மரை ஆகிய விலங்குகள் வாழும் பொதிய மலையில் அமர்ந்து தவம் புரியும் அகத்திய முனிவரின் திருவடிகளை, வினைகள் அகலவும், கோபம் ஒழியவும், பெரிய மயக்கம், மாயை, பிறப்பு ஆகியன நீங்கவும் விதி விலக்குகள் விளங்கும் வேத சிவாகம உணர்வோடு வணங்குவோம்.

விளக்கம்:

கரி - யானை; **பேழ்** - பிளந்த; **வலீமுகம்** - குரங்கு; **மரை** - மான்; **விதிதிகழ்** - முறையான; **வேத ஆகமம்** - வேத சிவாகமம்; **மா** - பெரிய; **கதம்** - கோபம்; **மோகம்** - மயக்கம்; **கரு** - பிறப்பு. (228)

முற்றும்

Koviloor Digital Library

பாட்டு முதல்குறிப்பு அகராதி

(எண்: பாடல் எண்)

அக்கர மொன்றினுக்	965
அகச்சுத்தியுடையார்	527
அகத்தினுட் பூசை	660
அகத்திற் பண்பறுத்	334
அகத்திற்புரிவா ரருச்சனையை	171
அகற்பமவ் விரண்டு	674
அங்க மெதிர்	855
அங்கத்தெவையு	402
அங்கமுறு மேன்மை	412
அங்கிமுதற் றென்றிசை	132
அங்கிய தனிற்றங்கியிடு	515
அங்கியான் வருத்த	668
அங்கியினாகுதியு	774
அச்சமின்றியருவினைக்	334
அசேதன வாக்கை	623
அஞ்சியாசை முதலாயவல	154
அஞ்சினனேற்	733
அஞ்சுவர் புதல்வனை	549
அஞ்சுவானாசை	654
அட்டக வுடலத்தோடே	506
அட்குல	852
அட்டமாசித்தியென்ற	694
அட்டவை தன்னைச்	196
அடங்குமேல நாதிமூல	709
அடியகலம் பதினாறா	845
அடைந்திடுஞ்	696
அடைவர்தாபர பேத	481
அண்ட கடாக்	832
அண்டங்க ளனைத்துமாக்கு	66
அணியார்கனகப்	124
அணியுறவே யரிபரிக்கு	91
அணுக்களேயவர்க்கு	702
அணுவினு	695
அத்தகைய குருகண்ட	860
அத்தத்தினையுமடரக்	397
அத்திசையிலெண்	898
அத்திசையிற் பிரமிதனை	897
அத்துவித மென்ற	711
அதற்கு மேலுமையாள்	950
அதற்கு மேலுறு	880
அதற்கு நீளமும்	880
அதற்கு மேற்றவ	879
அதற்குமீதாம் பஞ்ச	132
அதற்குமே லமரேச	878
அதனடுவே யம்புயத்தை	89
அதன்கீழ் வீமமதுதானே	420
அதனகீழ்க்	419
அதன்மீது பதுமவொளி	839
அதன்மீது ரசாதலத்தை	840
அதன்மேலே	842
அதிகமா யாமந்தன்னி	697
அதிகோரமறவு	423
அதிதூர வழலிடையு	467
அதிபாகங் கிரகச	424
அதிபாதக முமதிற்	345
அதிபாதகமாதிய பாவ	725
அதிபாதகருக் கணியார்க	291
அந்தணர்	785
அந்தணர்க் கைந்தா	739
அந்தணன் றன்னைக்	582
அந்தந் தன்னிலவனி	961
அந்தமுறி னுபவசியா	101
அந்தரத்தியங்கவல்ல	690
அந்தரம் பெரி	666
அந்நிய வியலினுக்கு	261
அந்நியர் தம்	460
அநாதி யேயமலன்	625
அநாதி யேயமலன்	625
அநாதிமல முத்தனவன்	781
அநாதியே யமலன்	703
அப்பாலேழு	421
அப்பாலைக் கப்பாலைக்	36
அப்புரியின் மிசைத்தாக	843
அமரரு மசுரர்தாமு	60
அமலனுருவ மறிந்தார்கள்	157
அமலவர னருளிய	49
அமலனிறை சடச்	678
அமலனையுங்	458
அமலைக்கு வியாபகனே	834
அயனொரு	542

Koviloor Digital Library

அயிங்கிசை பொறையே 239
அயுதமியம் பாதரத் 763
அரக்கனுஞ் சானகிக் 534
அரசன் செவியிற்பிறர் 295
அரசன் றனையு 315
அரண மாதித்தன் 230
அரவினான் மற்று 649
அரனாதியொரு மூவரம 911
அரன்றி ரவியத்தை 280
அரிக சிரமுஞ் சிவதனத்தை 282
அரிது மானிட 483
அரித்திடவே யவல 782
அரிந்தரிந்தே 441
அரிந்திந்தே யவராகந் 466
அரிய ஞானத்தை 77
அரிய மானிட 483
அரியயனறிதற் கரியணை 145
அரிவையர் போகந் 247
அரைத்தொறுக்கு 428
அருகிருந்தவர் தாங் 688
அருக்கனத்த 604
அருங்கனக பாத்திரமுன் 755
அருச்சிக்க வீசானத் 801
அருத்த மீந்து 961
அருந்தி யங்குள 960
அருந்திடி 523
அருந்திய வவிழினேக 199
அருந்தினரே லக்கணமே 751
அருந்தினர்கணாவினிடை 457
அருந்தினனேல் 753
அருந்துக வமலன் 192
அருந்துக வாரழற்றோயமொரு 749
அருந்துயரடையுமே 557
அருந்துயர்க 498
அருமறை யவருற 365
அருமறை யாய்ந்த 191
அருமறையவர் 363
அருவருப்பை யாகத்தை 524
அல்லதுபுத் தகமதனை 103
அலற் பிறப்ப 617
அலைகட னஞ்ச 74
அலைபுன லதனுளாழ்ந்த 189
அவயவத்துங் காரிய 677
அவயவமனைத்துங் 585
அவனியின் மனிதர் 206
அழகாயகடாகத்துக் 872
அழகுறவே சரத்தாலு 100
அழலொழுகு 451
அழலுமிழ்வன் புழுக்குயி 386
அழியாத 402
அழியுமாக்கை கொடே 487
அழிவிலா வரமுடை 540
அழுகையுங் கோளும் 276
அழுக்கினை யறுக்க 242
அழுக்குள மேபாவத்தை 752
அழுத்திடுவர் கிருமி 450
அளறுறு நெறியிடை 386
அற்சனைக் குபயோகங்க 69
அற்பாயு நரர்க்கென்றே 56
அற்புத னமலன் கூறு 239
அற்புதனா மாரியன்ற 97
அற்றவர்கள் சிந்தனையை 416
அற்றழியவாகார 795
அற்றறிவு குருமனையை 778
அற்றை வாரத் 954
அற்றைநிசி யவ்விடத்து 101
அற்றைநிசிக் கணபலியை 99
அறக்கொடிய 428
அறவருத்தும் பூரணமே 427
அறவழிந்து வீரியத்தை 754
அறிகமுனிவ 353
அறிந்திடுக பரிகாரமவல 727
அறிந்து மனையாளவலத்தை 301
அறிந்து மொருநாளவள்கை 745
அறிவிலனாயந்தணனைய 776
அறிவென்பர் சிலர் 632
அறிவையளிக்கு மதுவன்றி 314
அறிவுவலியாயு ளுருவாகார 863
அறுத்தொறுப்ப 443
அறுமாசை கோபமவை 699
அறைந்த கருமயாக 153
அறைந்த விவர்களனைவர்க 281
அறைந்தவதி 352
அறைந்தன மமலன் 59
அறைந்தா மகாபாதக 293
அறைந்தா மமலனருண் 129

Koviloor Digital Library

அறைந்தாஞ்	844
அறைந்திடுவர்	463
அன்றற மாதியறைந்தவனே	611
அன்ன முதக	374
அன்னதான மறைந்த	367
அன்னமதனிலா	368
அன்னமதனை	373
அன்னமாக்	372
அன்னமு முதவின	361
அன்னியம்பசுபாச	820
அன்னியன் மனையாடன்னை	274
அன்னைதன் வயினிடை	543
அன்னையருந்து	512
அனகரான வருந்துவர்	943
அனகனச்சுத னரனுருத்தி	181
அனலொழுகுஞ்சுசிபல	462
ஆக்க டன்னை	329
ஆக்க ளெல்லையறைந்தனு	948
ஆக்கடனை யியக்கிடினு	910
ஆக்கடன்னை யலலற	926
ஆக்கடன்னையருமறை	924
ஆக்கண் முத்தியடை	955
ஆக்களல்லலற	927
ஆக்களனையு மார்க்கத்தி	298
ஆக்களைக் கவரின்	937
ஆக்கள் சேரிடத்தாகு	321
ஆக்கியரன் திருமுடியிற்	761
ஆக்கியினைச்	630
ஆக்குவது மழிப்பதுவு	824
ஆக்கை சடந்தனித்தியங்	631
ஆக்கை தனிலோரிட	633
ஆக்கை தானிலையா	487
ஆக்கை நோயென	85
ஆக்கைசட மாருயிரை	716
ஆக்கையா லோதனத்தாலு	140
ஆக்கையிற் பிணியை	650
ஆக்கையிற்றுயர் பெரி	524
ஆக்கையினாவி யென்ன	705
ஆக்கையினை	640
ஆக்கையினை யைந்தலைய	719
ஆக்கையு மாக்குதற்கு	679
ஆக்கையுந்	628
ஆக்கையை நிலையென	548
ஆகமங்களனைத்	856
ஆசகல விருகன்ன	906
ஆசானுக் கருநிதிய	108
ஆசிலர் தமக்குருகியன்புடனு	720
ஆசை தானிரு	526
ஆசை மாசற வாக	526
ஆசை முதலா மாசனைத்து	161
ஆசைதானு மூன்றுவித	175
ஆசையதனாற் சிவகோச	288
ஆட்டி மஞ்சன	921
ஆட்டிடுக பச்சிம	03
ஆட்டிடுக வபரபக்கத்	804
ஆட்டிப்பான்முத லைந்து	923
ஆடுக நீரினையாற்று	732
ஆடையு மொன்றலாலதிக	549
ஆதரவே பரமான	46
ஆதலா னெய்யாற்	63
ஆதலாற் செய்த	307
ஆதலாற் பசுக்க	938
ஆதலாற் புத்தகாதிய	965
ஆதலான் முனிவர்	211
ஆதனம் பதும	655
ஆதி அறைந்த	120
ஆதிதனி லோமென்னும்	49
ஆதிநடு வந்தமிலா	40
ஆதிநாத னமல	490
ஆதியமலனருளாள னனக	296
ஆதியல செம்பினுக்கு	57
ஆதியு மந்தமுமில	889
ஆதுலருற்றிடினேச	474
ஆயனும் புறகிட	539
ஆயவுஞ் சதமென	558
ஆயாம மறைபொழு	682
ஆயிரங்கரமுடைய	539
ஆயுங்காற்	859
ஆயுதவருடமு	393
ஆயுவயுதத்துடன்	860
ஆரக்கன்று மருந்தி	935
ஆரிய னேவல்	651
ஆரியனும் பலன்	966
ஆருயிரினருவினையை	805
ஆருயிர் அனைத்து மீன்ற	66
ஆருயிர்வேரென வாயவனெ	42

Koviloor Digital Library

ஆவினுக்கு மருமறையாறங்க	319
ஆவினைத் தமிப்பானு	326
ஆவுஞ்சரி	927
ஆலயத்தை யமலனுக்	332
ஆலவனத் தமலனடங்	37
ஆறாறு கூறு	494
ஆறிலொன்று கடமை	336
ஆறு சூடினன் நீறும்	349
ஆற்றிடைப்புனறா	687
ஆனிடை யைந்தினை	73
இக்கெனவே	453
இங்குமின் சுவையீயு	914
இசைத்த விதத்திரு	870
இட்டிகையாதியிற்	915
இடபமுருந ரெய்துவர்	931
இடுபலி கொண்டுணி	347
இடையிடையிற்	834
இடையினு மியங்கிடாதே	693
இணையிலிநந்தனவனத்து	457
இத்தகைத்த	943
இத்தகைத்த	946
இத்தகைத்த பலத்தினை	930
இத்தகைத்த விறைவனிருநிதி	337
இத்தகைமைய	385
இத்தகைய தடவரையி	847
இத்தகைய வாதனத்தை	92
இத்தகைய விதமுறவே	893
இத்தகைய விமானத்து	102
இத்தகையே புத்தகத்தை	110
இத்தகையே புரிந்திடிலோ	109
இத்தகையே யருந்தவர்க்கு	106
இத்தகையோர்	899
இந்த நாட்டுள்	488
இந்த நூன்முறை	959
இந்த விதியி	127
இந்த வீரைந்தினாலு	199
இந்தப் பாரத	484
இந்தமுறையி லியற்றாரு	285
இந்தவகை சிவஞான	95
இந்தவாறு	963
இந்திய விருத்தி	575
இந்திரமே சேருகமே	854
இந்திரனை முதலாய	846
இந்திரன்	534
இந்திரன் முனிமனை	532
இம்முறையமரரு மிடுக்க	554
இம்மைப் பயனைக்	549
இமத்தில் வெய்யில்	925
இமயகிரி வடகுணபாலிமை	819
இமிக்குந் தென்கடற்கு	857
இயக்கினுடலுயிர்	676
இயங்கிற் பிராண	150
இயன்றன வியற்றினாரு	240
இயன்றன வியற்றினாரு	253
இரக்க மாகரவு கூர	224
இரவி மதியுள்ளளவு	479
இரவியை நிகர்பல	882
இருட் டெலையிருந்தான்றுஞ்	706
இருபது நூறாயிரத்தி	872
இருப்பர்கள் குமரன்வாழு	257
இருப்பழற் றொடர்ப்பிணித்	431
இருவிதந் தருமநீதி	938
இருவினை யுணர்ந்த	621
இருவினையாலே	971
இருளுலகி லறவுலவு	51
இருள்புமுதி	429
இல்லமு முதவின	360
இவர் சிவபூசை	246
இளைத்த வாவினைக்	934
இறந்தே முனமே	513
இறவாதிருக்கச்செயு	318
இறைவனிணையில் வாய்	112
இன்னுழையுங் கதிரணு	826
இன்பமே யங்குத்தங்கி	241
இன்னயவையிரு	826
இனி முனிவரனே யீச	238
இனைய கடுவினையதனை	447
இனைய புரிமிசை	834
இனைய யோனி	482
ஈங்குரைத்த விருநான்கு	863
ஈசர் திருவாலயத்து	461
ஈசர்திருவாலயத்து	452
ஈசனேவ விசைத்த	952
ஈசன்றானு மிவனிடத்	86
ஈடிலார் மனையாதிய	324
ஈடு பெற்ற	933

Koviloor Digital Library

ஈடுபெற்றிளையா	493	உரைத்த புரிசை யுண்ணாலா	131
ஈட்டினர் பாவபேத	539	உரைத்த புரிமிசை	838
ஈட்டினார் தனந்தன்னை	321	உரைத்த பெயர்	425
ஈட்டுமிந்த வினைத்	343	உரைத்த முறை	799
ஈயந்தன் னையிரும்பினைச்	341	உரைத்த விதவுலகத்து	881
ஈயுமவர்க்கிடையூறுகடேற	476	உரைத்த விப்பாகபேத	203
ஈரிலக்கமொண்	877	உரைத்தவிப் புரத்தின்மீதும	254
ஈரைந்தாய திகை நடுவே	173	உரைத்தனங்கால பேதமு	231
ஈரும் வாளுயிர்க்	486	உரையாதே விரதி	741
உக்கொழியா	637	உரையிற்கொடியா	395
உச்சரிக்க வீசான	800	உலகவியல்பை யொழிஇதாரை	307
உச்சரித்தே சிவகாயத்திரி	802	உலகினிற் பாவபே	195
உச்சிமுகமீசான	808	உலகுளார் பெறாது	618
உச்சியி லணைவா	217	உள்ளூறச்	641
உடலூறு படக்	791	உளைவர்களுடல் குடை	390
உடைப்பானவனு முவகை	317	உற்பல கமலத்தோடு	64
உடையவர்கள்	389	உற்பல கமலமூலம்	62
உடையாரிடைவே னுளத்தமல	176	உற்பவ வேளைதன்னி	646
உடையார் விழியுமொரு	889	உற்பவத்து முடலாதி	680
உண்டிடுவர்	858	உற்ற உடற்பித்த	519
உண்டொரு பொருளென்	252	உற்ற நோயுடலினா	670
உண்ணவறல் மேற்செலுமாக்க	294	உற்ற பெற்றத்து	930
உண்ணவூனை	330	உற்ற வாசையிற்	935
உண்மை மொழியுரைத்திடுகை	775	உற்ற விடுக்கணொத்தவர்	473
உண்மையினான்	681	உற்றகாரியத்தூறுகடன்னையு	320
உத்தம சுரர்க்கதிப	43	உற்றசிறைச்சாலையென	719
உத்தம ரொருமைய	364	உற்றபசிநோய்க்	370
உத்தம ரோசனாந்த	60	உற்றவர் தீவினை	266
உத்தமத்த நதியின்	917	உற்றவர்கள் வெய்ய	412
உத்தமரை மதியாதேயுபான	439	உற்றான்பசியை	368
உத்தரத்திற்	848	உற்றிடி னுதரந்	669
உதகமதனை	374	உற்றிடு முயிரொவ்	689
உதவினரவுடத	362	உற்றிடுவ	440
உதிக்கும் விரல்கள்	510	உற்றிடுவ ருரைத்த	439
உமையாள்	685	உற்றிடுவரெழு	478
உயரந்தானிருகோடியுறு	879	உற்றிடுவர்	454
உயிரொளியு	635	உற்றிடுவார்க்	861
உயிர்க்குயிராகி நின்ற	204	உறவினுக் கபராதியு	326
உருஉருவென்ற	616	உறவுமாயுயிர்கட்	540
உருகிய பித்தளைத்	438	உறைந்தே யொழத்த	156
உருக்குத்னவ நீதாதி	624	உன்னுவார்	431
உருத்திரன்	531	உன்னதத் தென்	854
உருவினாலுவமையு	890	உன்னத் தக்கதலத்திலுவர்	322

Koviloor Digital Library

உன்னலன் வேள்வி 180
உன்னிடுக சதாசிவமும் 730
உன்னினாரு 957
ஊடலிருவர்க் 713
ஊட்டினார்களுதவிய 910
ஊறறிவொக்கு 475
ஊறுபடிற் றிருமேனி 723
ஊறுறவுடலிடை 392
ஊன்றியே வலப்பா 665
ஊனமற்ற வுறுப்புறு 929
எங்கள் குரவன் 550
எட்டுமிரண்டும் பிறந்த 735
எட்டெனப் பட்டசித்தி 262
எடுத்ததோராக்கை 622
எண்ணரிய வாருயிர்க் 874
எண்ணிடுக 867
எண்ணிடுக வதற்கப்பாற் 867
எண்ணியாதொருபலத்தை 377
எண்ணிரண்டேக 500
எண்ணுக 868
எண்ணுக பிரதானத்தை 643
எண்ணுக யோசனை 866
எண்வினை தன்னை 532
எத்தொகைய கறியமிர்தின் 93
எதிருத்ரமு மிசைப்பாரு 290
எய்தற்கரிய பரம்பரனை 160
எல்லையை 648
எழிலுமார் பரங்குன்றி 229
எழு நூறாயிரத்துடனே 873
எழுதாத புத்தகத்தி 93
எழுதுகொடியிடை 816
எளியரை வதைத்தவந்த 602
எற்றுபுருவத்தினனை 466
எற்றிட 456
எறிந்தருந்த 449
என்னுமித் தொகையாவரு 342
என்னுமிந் நான்குங்காயத் 276
என்று கருமாதிய 178
என்று சிவஞானவர 682
என்று சிவஞானவித 141
என்று சிவநிந்தை 346
என்று சுரபிக்குமுறு 968
என்று தருமத்தொடு 266
என்று திவிவாழ்வு 492
என்று பயன் மேன்மை 233
என்று பரமான 72
என்று பரிகார 820
என்று பிறவித் 530
என்று மிறையைத்தம் 491
என்று முனி சண்முகனை 42
என்று முனி வினவுதலு 45
என்றுவினையொன்று 610
என்றுமியற்றி யிடடாக 125
என்றழல் 477
என்றனைநீ 786
என்றிசைத்த முனிவரனுக் 825
என்றியமனோது முரை 417
என்றினிய வாய்மைக 42
என்றினைய வாசகமவர்க் 413
என்றென் றெண்ணி 514
எனக்குண் மாசையிரித்த 970
எனத்துதி யியம்பும்பத்தர்க 67
எனவே யிசைத்தவித் 319
ஏகதேச வுடலுற்றவர்க் 527
ஏகமன் 710
ஏகனருள் சிவதருமோத்தர 875
ஏந்திழைக்குப் பதியே 737
ஏந்திளந்தடங் கொங்கையை 338
ஏவலருளெங்கள் பெருமா 410
ஏவல்பெற்று 378
ஏழுதீவு 870
ஏற்க விரண்டு முழத்தாலு 118
ஐந்து பூதத்து 948
ஐயமற விபரீத 52
ஐவகைய தூபங்களாவனதான் 94
ஐவகையாகத் 548
ஒங்கிய வதனைச் செய்த 186
ஒடுங்கமன மமலனடி 735
ஒட்டகமுறு நெறியுடல் 391
ஒட்டத்தி லுதயாத்தமன 907
ஒதநமனுற்ற மகசண்ட 415
ஒதன மொளித்துக் 554
ஒது வார்க்கிடை 82
ஒது விப்பவ 84
ஒதுவார் வேதமுஞ் 891
ஒப்பரிய வரனமல 87

Koviloor Digital Library

ஒப்பரியன்	882	கடுவெயிற்றரவ	670
ஒப்பி லாவொரு	80	கண்டகமுறுநெறி	386
ஒப்பிலமலன் றனையுணர்ந்து	152	கண்டகரோடு	471
ஒப்பிலி	622	கண்டத் துறவேகயிறுஞ்	398
ஒப்பிலி யனாதிமுத்த	72	கண்டனுக்குக் காட்டாய	900
ஒப்பிலி யனாதிமுத்த	278	கண்டனி னோயுமாவன்	593
ஒப்பிலியநாதி	619	கண்டி விசிட்டிங்	149
ஒப்பிலியனாதி முத்த	279	கண்டையுடன் சாமரையுங்	91
ஒப்பில் போக	928	கண்ணிலாக் கிருமியாவன்	551
ஒமெனும் பதமதனில்	50	கண்ணிவாய்தலு	919
ஒரயுதஞ் சூத்திரனை	789	கதலியெழுவாய் கரும்	299
ஒரிலக்க மேழ்	878	கந்தமறல் பந்தமறல்	717
ஒரு குடிப்பிறந்தாள்	548	கம்பை கவினா	113
ஒரு பாலரி	885	கயக்கவே தக்கவூனுங்	244
ஒரு பாலுடலா	886	கயலா ரிணைவிழி	269
ஒருநிரயத்துயர்	468	கரந்தரியக் கேயாகக்	657
ஒருபஃதே பலம்	520	கரமதனிற் பதமதனிற்	461
ஒருமையயுணர்வின	544	கரிசு சிறிதுங்கருதாத	305
ஒருவருடல்	734	கரிபரி முதலவுங்	550
ஒருவனிரண்டற	615	கரியவுருவெரிய சடை	810
ஒருவனே மூவரென்று	249	கருக்கியநிறத்தினர்கள்	409
ஒவ்வொன்றே திருமுகமு	813	கருத்துடனேவல்	542
ஒழிவற வுறைந்து	204	கருப்பாசயமே	515
ஒழுக்கிடுவரழற்காரமுடன்	459	கருப்பையுளுணர்வினைக்	543
ஒழுக்குடையா	476	கருமமும் பலத்தினைக்	556
ஒழுக்குவார்கள்	433	கருமமென்றா தவமென்றா	146
ஒளிய பதுமராகங்	166	கருமயோகத்தைக்	958
ஒற்றியூர் திருவோத்தூர்	227	கருமிகட்கீகை	187
ஒரவழக்கினை	473	கருவினு ளழிவன்	546
ஒளித்து நின்று	325	கருவினுளுயிரு	380
ஒளிமணி யுதவினர்	363	கழலென நாகமுங்	267
ஒளியினை யவருற	360	கழிந்து விடுங்	807
கங்கை செஞ்சடைத்	684	களத்தினிற் கண்டமாலி	599
கங்கை நதிப்	780	களைகண்ணிலரைக்	396
கங்கை முதனதிபலவுங்	853	கற்புளார் செயலை	600
கங்கைதன்னைச் சடையிற்	143	கற்றினங்களுந்	918
கட்டிடுவர் பீசத்துங்	465	கன்றவெம தூதர்	414
கட்டியைக் கனலிற்	216	கன்றிய காலனுங்	536
கட்டுவையதனையு	358	கன்றிய காலனைக்	346
கடகரி தொடர்வழியமு	391	கன்னத்துளையிற்	401
கடல்விடங்கொலல்லுங்	708	கன்னிகையை விற்பார்கள்	751
கடுகிய பசியுற	393	கனக மதனாற்	124
கடுகிய வனிலனு	392	கனகமார் முகலிரை	228

Koviloor Digital Library

கனகமொரு கழஞ்சளவு	778
கனலனைய	462
காக்கிலாரையுங்	924
காட்சியிற்	620
காட்டு முள்ளொளியைக்	208
காடவண்ட கடாக	950
காணார் மலத்தாற்	162
காதலித்தீவார் வானைக்	321
காந்தனிருதுமதி	507
காமனுந் திருவுருக்	535
காமரங் கற்றாரல்லர்	245
காமுறுவாரையுங்	178
காய்ந்த மன்னன்	932
காய சுத்தி பண்ணாது	287
காரகன்றனையுங்	642
காலமுமிது வெனவறியுநர்	383
காலமே கோலமே	971
காலனையுருளக் கால்கொடு	144
காலையு மலத்தினாற்	548
காழி முல்லையாறு	229
கிட்டியே நின்ற	481
கிருமிகள்	499
குங்குமத்தின் சந்தனத்தின்	902
குசை நுதிநீரை	684
குட்டவுடற்	528
குடகடற்குக் கீழ்க்	858
குணதிசையில்	848
குணித சதமராகத்திற்	828
குணிதநியு தாயுதமே	829
குதமுந் தோன்றுங்	511
குமரன் வாழ் திருக்	957
குயிற்றி முன்சொன்ன	917
குய்யத்திடையே	399
குரத்தினுதிப் பன்னகரே	908
குரவன பணிபுரி	362
குரவனையு நிந்தனைகள்	453
குரவன்றனக்கு நிதிமுதலுங்	134
குழவி பயந்தவள்	526
குற்றமுடையான் வினை	313
கூட்டிடுவ	450
கூட்டியேயவலர்	607
கூடியமுனிவர்	779
கூடியெடுத்தனுபவித்தான்	770
கூடுதலேக தேசியெனுமிரு	707
கூர்த்த தீபனங்	333
கூர்மவுருக் கருங்காகங்	426
கூரிதாய வாயவாயதாதி	434
கூரிருணெறி செறி	388
கேட்டுளார் மகிழச்	59
கைத்தலத் தாலேசா	683
கொடு மராதியைப்	325
கொடுக்குஞ் செய்கையர்	225
கொடுத்துச் சங்கரற்	928
கொடுத்துத் தனத்தை	314
கொத்துலாங் குழலினார்	891
கொழுநன்றனையே தெய்வ	304
கொற்றவைக்குறு	915
கொன்றான் மறையோன்	292
கோட்டந் தண்டுலத்	798
கோதனங்கள் குவிந்த	230
கோபத்தானாகத்திற்	787
கோமயமதனில் வில்வங்	61
கோரமதுதான்	419
கோவினைத்துக்கஞ்	598
கோவினையுதவினர்	361
சங்கமாதி சலத்திற்சனித்தவு	341
சங்கரனைச்	806
சங்கை தீர்த்திட	969
சடரத்தினிதயத்திற்	909
சத்தியைத் திரிசூலத்தைத்	255
சத்திரந் தனைப்	340
சந்த பேதமும்	83
சந்தன முதலாயுள்ள	62
சந்திரமுதவினர்	355
சமர்தனிலமரா லசுரர்	555
சயித்திரக்காப்	849
சரநிகர்சகலமுமுறு	387
சராசரத்	662
சலமெனும் வாதியாவன்	601
சாகமுதலிருமூன்றிற்	869
சாந்திபெறு தோயத்தைச்	107
சாலியின் விசிட்டராச	201
சாலையானினந் தங்கச்	921
சாற்றிடுக தவறிடினோர்	760
சாற்றியிடுஞ்	869
சிங்கமுமுறு	389

Koviloor Digital Library

சித்தத் துருகாதவரைத் 396
சித்தமுந் திகைக்கவே 432
சித்திரகுத்தன் சீவன் 381
சித்திரநல்குத்தனெதிருற் 411
சிந்தை செய்க 78
சிரத்தறைவர் 464
சிரமே கனமே 509
சிலரே செவியும் 887
சிலரேண யோகர் 698
சிலரேயொருவான் 886
சிலரைக் கரமுஞ் 398
சிலரைத் தொடரிற் 394
சிலையினீரிற் சிகையிற் 322
சிவலிங்கம் விற்பார்கள் 767
சிவனற்புரியைச் சென் 136
சிவனை யிகழுஞ் 283
சிவனைப்பூசை செய்விப்பார் 139
சிவன்றனைக் 700
சிறக்கச் செய்க திருவெல்லை 130
சிறந்த தேசத்து 953
சிறந்த தேசமுங் 232
சிறந்தநற் றேசந் 184
சிறந்தபரம சிவனுருவந் 168
சிறந்து செறிவர் 137
சிறப்புறவே திருமடத்தை 793
சிற்றுயிர் படுத்துயிர் 541
சின்மயனைச் சிவனைமல 35
சினத்தனாற் சிவந்த 243
சீதளநீரு மாட்டித் 64
சீரியஞ் சீரியரையல்லாரைத் 39
சுக்கிலமதிக 505
சுடர்மூன்றுங் கண்மூன்றாய் 901
சுத்தவொளிப் படிகமயந் 894
சுரப்பிலா நைமிசாரணியங் 227
சுரிகுழலாரரி குழலார் 841
சுற்றத்தவரைத் துடைப் 308
சூக்க வுருவைத் 516
செக்கிடைத் திலத்தினுக்கு 435
செங்கமல நிறமுடையர் 861
செந்தமிழினின்ப 682
செந்தழலினபாயத்தாற் 762
செப்பிய வொப்பிலாத 71
செப்பியவத் தென்றிசையிற் 896
செப்பியவிதற்குமீது சிவபுர 250
செம்பினிற் களிம்பு 625
செம்மைபெறுமாலையது 408
செய்க வேறிடஞ் 918
செய்த செய்த 429
செய்தார் சிறக்கச் 135
செய்துசிறக்கச் சிவபூசை 147
செய்துமற்ற வினைகளுஞ் 954
செறித்து வடந்தற் 148
செறிந்து தாவென்று 222
சேர்ந்திடுக சதாசிவ 815
சேர்வராதி 934
சொக்கிடுந் தொழில் 327
சொல்லி மெல்லச் 885
சொலலுறு மென்று 597
சொற்ற விப்பலன் 594
சோகிக்கு முச்வாச 424
சோரனுக்குத் துணை 338
சோரன் றன்னைத்துயக்க 337
தக்கசிவ தன்ம நெறி 43
தக்கனு மிழந்தனன் 536
தக்கனுஞ் சுரத்தினை 535
தக்கார் 402
தடவரையினடு வுச்சி 846
தடவரையின் 851
தடுத்த தண்ணியன்பாற் 87
தண்டமிரண்டாயிரத்தைக் 827
தண்டரள நிரைவிரவி 90
தண்டுமிளிர் வாளொளி 409
தத்தியோதனம் 944
தத்துறு பரியினையுதவிய 357
தந்தத்தினிடை தோறு 459
தந்தை பாற்றாய் 606
தபதி காருகன் 335
தமக்கபராத பேதஞ் 70
தமலமற்றிட நேசார் 533
தமலமோகமுந் தரவிவே 182
தம்மனையடைந்த யோகர் 195
தரப் பிறர்கைத் 794
தரித்துடையர் 833
தரைகனை யிலக்க 265
தரைக்குக்கீழ்க் கோடி 831
தரைக்குமேற் புவலோக 876

Koviloor Digital Library

தரைத்தலத்துக் 873
தரைத்தலமு முனிவரனே 875
தருக்கடனையுந் தனக்குன்னித 309
தருநிழ 711
தரும மணமே பிரமாதி 306
தருமநீதியர்க 375
தவிசினை உதவினர் 356
தலத்துழல் கூலிவேலை 197
தழைத்த சோலைத் 925
தன்னது சத்தி 618
தன்னாற் சமைத்த 311
தன்னிற் றண்ணிய 333
தன்னின் மிக்கநற் 83
தன்னுடலத் 522
தனத்தினை மனைதனைத் 560
தனமிகுதிதரித் 463
தனித்திருந் துனுந் 328
தாக்கிடினே தன்னது 772
தாங்கின னேற்றனத்தை 792
தாரகன் றன்னைச் 271
தாருகன் காளியாற் 537
தானிய விதத்தானாகுந் 501
திகழும் வெண்பிறைச் 942
திணமேயுடையார் 888
திதியினாதாரஞ் 645
திரனுறுஞ் செழுகை 521
திருந்திய வேதகாயத் 248
திருப்பதி வணங்க 940
திருமகளேய 908
திருமாலும் போதினனுந் 34
திருவரையிற் புலியதளுஞ் 903
திருவெலை யெழுவாயான 188
திருவுருந் தெளி 809
திருவுருவந்தெளி பளிங்கு 772
திருவுருவமிருதழிர்க்குத் 812
திருவுருவுக்குரைத்த 766
திலத்திணை 546
தினகர ருதயகோடி 251
தினமோரைந் 508
தீக்கையிலாவந்தண 765
தீண்டப் பாவங்க 914
தீதுக நினைபவருஞ் 613
தீர்த்தமார் சிவகாசி 226
துக்கம் பிரியச் 310
துடியிடைத்தட 545
துண்டப் புடையிற் 400
துயக்கம் துடைக் 165
தூபந்தன்னைத் 920
தூலமே சூக்கந்தானே 272
தெண்ணீராற் 759
தெரிப்பருந் தேவதேவன் 251
தெளிபளிங்கனையை மேனி 259
தென்றிசைப்பாரதமாதி 865
தேக்குநீர் விளையாடுஞ் 323
தேசனுக்கு மெய்த் 963
தேசிகின்ற னிழல் 764
தேசுறு சிவாதிபூசைக் 198
தேச்கர்க்குந் 449
தேமொழியாளுமையென்னத் 811
தேவர்கண் முதலியர் 359
தேவர்முனிவர் 369
தேவனது திருவிழவஞ் 750
தேறலருந்துந் தேமொழியைத் 312
தேன்வடித்துச் 758
தொகையாலிருபத் 421
தொகையினாலிருபத் 418
தொலைந்த பின்னுந் 936
தொழிலினைச் 655
தோழன்றனக்குத் துயரத்தைத் 297
தோற்றிடுமுளை 504
நசையுடனிதயப் 686
நச்சிலெவருஞ் சிவஞான 174
நடலை வாழ்வெனை 821
நண்ணிப்பாரத 947
நந்தை சுபத்திரை 904
நரை திரை வருதலி 557
நளனது பாரியை 533
நறவனைய கனியுதிரு 849
நாசியினந்தஞ் 658
நாடரிய ஞானதர 44
நாடியளவு 518
நாண்மூண்றிம் முறை 747
நாத்தழும்புற நாதனை 944
நாயினுக்கும் பேயினுக்கு 529
நாவிற்றுளையா 399
நிசிவேளையந்திய யாமத்தி 738

Koviloor Digital Library

நித்தை நிகரின்	286	பரமசிவன்	635
நிரட்டுதரா்	384	பரமசிவன் றிருமுன்னே	106
நிரயமிசை நிராலம்ப	836	பரமதரும முபதேசம்	967
நிலையொரு பதுசத	883	பரமா் திருவாய்	116
நிறுத்திட வலானமலனு	681	பரமா் திருவாலய மதனிற்	272
நிறுத்திடுவருச்	443	பரமனாங் கருத்தாவே	552
நிறைந்துறை நேயத்தோடு	65	பரமனை யொருமை	692
நின்னதடி கண்டிடினு	41	பரமன் மொழியை எழுதச்	122
நினைத்த நன்பல	75	பரமன்றிருமுன் னழன்	284
நினைவாா் வினை	235	பரமன்றிருவாய்	115
நீக்குவானு மலசல	323	பராபரனை முதற்பூசை	88
நீக்குவான் றிரண்ட	653	பரிகாரங் கிருகபதிக்கும்	728
நீங்கின ரிந்தவுண்மை	659	பரிகாரந்தீவினைக்குப்	818
நீடிய மனைவியல்லான்	602	பரிகாரவியலிதனைப்	819
நீடும் பொருளொன் றுண்	168	பரிந்து பாசுபதரையும்	941
நீந்து முன்னைய வேத	328	பரிப்பித்தாரிட	932
நீலகிரி வடதேச	857	பரிமிசைக் கனியுறப்	554
நுண்ணியனே சிவன்	638	பரியகம்பளந் தன்னையும்	340
நேசற்றவரே	395	பரியகலீ நுண்கல்லீ	427
நோக்கினுட்	502	பரியாது பகையாளா்	912
நோக்குமோ தூல்வாக்கை	704	பரிவுடைய பரதாரி	445
பக்குவாசயத்தினன்ன	501	பலதுயரமிகு துயரம்	428
பகா்ந்தன முனிவ	212	பலமிரண்டாயிர	773
பசியுறப் பகையுறப்	552	பலமொன்று நீா்	797
பஞ்ச பாதக	472	பலியதனைத் திசை	104
பஞ்சவித	456	பருகினாா் கபிலைத்	913
படிசோ்பல மேனியரே	888	பருவ மறுங் காலத்தின்	105
படைபிடித்துத்	787	பருவ முற்றவா்	81
பட்டினையுதவினா்	356	பருவ முற்றிய	79
பண்டை வாதனைப்	922	பழகிப் பழுது பல	126
பண்ணான் பரமசிவஞானி	159	பழுதறு பாயதாதி பலவித	202
பண்ணினா்	609	பழுதறுவித்தேயேனு	214
பண்ணினா் மற்றைய	609	பழுதேபகா்வாா்	397
பண்ணினனே லறிவிலனாய்	777	பற்றிப்பரமன் றிருவுருவைப்	151
பணிவாா் பரவிப்	138	பறைந்தவ னாயினோடும்	545
பதத்தறைவா்	444	பனியினும் பனிப்பரே	547
பதவிதாய்ச்சிறிய	651	பவுதிகனே மோகத்தாற்	743
பதிகா் தாமன்ன	489	பன்முறையாமதிபாதகரே	608
பத்தா் காருகபத்தியா்	955	பன்னிரு பேதமென்னப்	503
பரதாரந்தனை வேசிதனை	740	பாங்குளான் கொடுத்த	629
பரம மெய்ஞ்ஞான	608	பாண்டத்திற் பதமனைப்	757
பரமசிவ மயமுணா்ந்த	895	பாத்திரமதனுண் மிக்க	219
பரமசிவனாலயத்திற்	769	பாத்திரமல்லாா் செய்கை	218

Koviloor Digital Library

பாத்திரமாக்கிக் கட்டி	215
பாத்திரமாவான் பாவப்	188
பாத்திரா பாத்திரத்தைப்	217
பாதமுறப் பகலதனிற்	479
பாதலக் குழியினாழும்	488
பாதலத்தின் மிசைத்	894
பாதாளப் பிலவழிக்கும்	843
பாதுகையுதவினர்	354
பாம்பழல் வாயினாற்	521
பாம்பெனு	544
பாம்பென நகுடனும்	538
பாரதமு நவதீவ	853
பாரியரும் பயிலாத	172
பாரியைப்பரர்கண் பார்வைப்	701
பார்த்தவ	644
பார்த்தவன் மூத்திர	731
பார்த்திபனுங் காமத்திற்	55
பார்த்திபனுமேவல் வினை	712
பார்த்திவரு மற்றையரு	771
பாலை நெய்யைப்	339
பாவ பேதம்	480
பாவகாரிகள்	931
பாவஞ்செய்யப் பயமில்	332
பாவமெனும் பதத்தி	190
பாவம்செய்	404
பானமு முதவினர்	366
பிணக்கந் தன்	344
பிணி மூப்புச்	796
பிணைவிழியார்	837
பிரம சாரியைப்	940
பிரிந்திடவே	446
பிறப்பிலி பேதமில்லி	183
பிறர் பொருட் கடுகிற்	342
பின்னுமவர்	442
பின்னும் வரெரிவாய	448
புடமிருப்புமய	835
புண்ணிய பாவத்தாலே	498
புண்ணியப் பலங்கடன்னைப்	379
புண்ணியர் விண்ணவர்	537
புதுவிரை மலர்கொடு	884
புத்தகத்தினைப்பூசை	964
புத்தகத்தைப் புரந்தாருந்	110
புத்தகாங்க மேதேனும்	114
புரிக சிவதத்துவ	799
புரிகபரம சிவஞான	119
புரிந்தவர்க	530
புரிந்தனனேற் போகத்தை	742
புரிந்தார் பரமஞானிதனைப்	155
புரிந்துளார் பாவமுன்னும்	272
புருதியை யல்லா	264
புலிமுனிபூசை புரிந்தவனே	234
புலையரானினச்	936
புலையரே யெனினு	939
புலையனேயாவன்	596
புன்புலைச்சிமனை புகுந்தாற	744
பூசனைக் குபயோகங்கள்	205
பூசிடுக நீற்றிணையுந்	783
பூசித்துப் பரமசிவன்	96
பூணார்	316
பூதலத்து	89
பூதி பூடாணன்	348
பூபதிய நூன்	54
பூமலி பொழிலினை	359
பூமியை யுதவிய	365
பூர்வவாய்தற்	916
பெரு நோயே	639
பெற்று மந்தணராய	484
பெற்றமையா	665
பெற்றார்	177
பெற்றிடுஞ்	553
பெற்றிடும்	504
பெறுதற்குரிய	300
பேசிய தூலபேதந்	273
பேசு நூலியன்	962
பேசுமுலப்	949
பேதமுமுறவே	418
பேதமே	708
பொத்தையுடலூனுமற	714
பொதிமலைக்	823
பொய்யினைப்	435
பொரித்த நற்கறிவும்	200
பொருணசையாற்	768
பொருதவன்	603
பொருந்துமது	838
பொருந்துவர்	111
பொருவில்	284

Koviloor Digital Library

பொருவில் குரவ	289	மனத்தையும்	685
பொருளரிதாகிற்	223	மனநிலை	658
பொருளென	693	மனமுருக	455
பொல்லாத	521	மாணாவுளத்த	303
பொழிலினை	358	மாதவனகத்தியன்	41
பொற்கடத்துண்	523	மாதவர்க்குற	947
பொன்னுருவர்	862	மாலயன்	613
பொன்மயத்த	831	மாறா மலானை	495
பொன்னிறமுடையரும்	893	மானதமந்த	688
பொன்னை	371	மானினங்	551
போக முடிவிற்	128	மிக்க சாதியுட்	331
போக முடிவின்	123	மிருதியின்	607
போதகனு	58	மிருத்தியு	558
மகவினையா	47	முகவாயுறவே	400
மங்கல	661	முடிய நாளு	922
மங்கையர்க	414	முத்தத்துறவே	400
மண்டலத்தவரு	702	முத்தனே	892
மண்டனக்	827	முதற்பக்க மூனவந்து	748
மண்டனக்	830	முந்திய	664
மண்டனின்	380	முருகனே	822
மண்ணாளு	784	முளைத்தகருவு	353
மண்புனவனல்	263	முற்று முடலின்	517
மணியின் பேத	121	முற்றும் வினைதை	729
மயிலனையார்	840	முற்றுவந்தாலே	68
மரித்தழுநாளுணலொழிக	736	முற்றக்	952
மலத்தினு	647	முற்றக்கால	490
மலத்தை	74	முற்றக்காலமுறையுறப்	945
மலினராய்	207	முனிவரதரும	271
மருந்தைச்	158	முனிவரதருமபேத	242
மற்றுமுள்ள	118	முனிவரனே	48
மற்றுள	366	மூத்திரத்தை	529
மற்றவனு	446	மெய்யனை	213
மற்றவரு	415	மெய்யினை	220
மற்றைமுறை	98	மெய்யுணர்ந்த	956
மற்றைய	211	மேலயபாற	836
மற்றைய	559	மேருதிக	407
மற்றைய	864	மேருவினை	850
மற்றொருவன்	455	மேலைய	260
மறுத்தரும்	430	மேலையாரிடர்	968
மறையோர்க்	302	மைத்திகழ்	382
மனகுலத்துள்	865	மைந்தர்	343
மனத்தினால்	210	மையலறுக்கும்	117
மனத்துமய	525	மையனைய	404

Koviloor Digital Library

மோசகனுயிர்க்கிருறனாத	715
யாதனையுண்டு	470
யோகத்தை	653
யோசனையாயிரமனையு	833
வகைத்தவனே	789
வகைத்தவனே நாய்	790
வஞ்ச மனத்தராயும்	540
வடபாகத்	851
வடவரைவில்லெய	492
வத்திரத்தனிருதுவினை	746
வந்திடுக மண்ணுலகமாண்ட	413
வருந்திடு தாபரவுருவ	553
வருந்து மேபதம்	330
வலஞ்செய் தாக்களை	912
வலஞ்செய்து தண்டதனை	95
வனத்தின் வைகிய	941
வாக்கதனைக்	465
வாக்கினுமதிக மூல	697
வாக்கிறை நோயினை	612
வாக்குரையாலறிவரியன்	814
வாடா வனமுலை	268
வாயு வாயாமந்தானுந்	667
வாயுவினாயா	673
வாயுவை செயித்த	672
வாழ்க்கையினை மகிழ்	817
வானமதனை நீங்காது	163
வானவர் நாடருமாதவனே	233
வானவரும் பூசுரரு	38
விகரானம் பிரகம்பம்	423
விசையுறு பரிகளாக	675
விட்டிடாவிய	605
விட்டிடும் வேளையின்	560
விட்டு முன்னையை	959
விட்டுநின்ற	482
விட்டைமிக்க	433
விடக்கினை விரும்பியே	545
விடமமு முறு	387
விடுத்து வாழ்க்கையை	951
விடுத்துல கமலன்றன்னை	194
விடைத்துத் தவரை	303
விடையின் பீசத்தை	329
விண்டனுபவத்தெழுவிருத்த	714
விண்டவர்கண் மூலமலம்	718
விண்டவர்கள் வேதநெறி	405
விண்ணுளார் நரர்மற்றை	344
விதமே பலவே	887
விதவெ னப்படுந்	79
விதி திகழ் வேதாகம	972
விதித்தவுரை மரணமலால்	871
விதித்திறத்தை	437
விதிநூன் முறையே	133
வித்தகனற்றுணையென்று	469
வியங்கமும் வருந்திடும்	551
விரித்த முகின்மேனிய	408
விருத்தர் கிருபணர்	98
விருந்தினையருத்தா	553
விலக்கிய காலங்களிலும்	740
விழைவாமிரு வினையாயின	202
விழைவினராகிப் போக	248
விளக்கினுக் கில்லைத்	627
விற்றவன் சோமந்	598
விறலிடபமுட் பன்றி	425
வினைகளு மஞ்சும்	691
வீரமுமுளர்	383
வீரியமு மாழாக்கு	520
வீற்றிருக்கும் விமலனது	868
வெண்பொடியாற்றண்	756
வெந்தழலையன்ன சிலைமீது	416
வெந்துயர் செய்ரௌரவ	422
வெய்ய வினை	411
வெருளவிருட் கூபத்தும்	447
வெறுத்தவரைநல்வினையை	410
வெறுப்பான் மிகுத	293
வெள்ளி பட்டாடை	595
வேதக னோதிய	537
வேதத்தினாகமத்தின்	469
வேதநிந்தகனே புன்மை	605
வேதநீதி விளங்குமிவ்	485
வேதநீதியை விட்டவர்	489
வேதமாதிதனி	376
வேதமாதிநூலினுள்	436
வேதாவுங்கரியவனு	905
வேதிக்குஞ் சங்கடமே	427
வேரறப் பணையுமற்று	528
வேளை தோறும் வினை	335
வைத்தவரழுக்கினில்	531

Koviloor Digital Library

பொருள் அட்டவணை
(எண்: பக்க எண்)

அகத்தியர்
- துதி 236, 269, 349, 495, 574, 613,725, 823, 972
- வினா 41, 824
-அருளால் அழுக்குகள்
அகற்றுவோம் 182
அகத்தியனை விளித்துக் கூறுதல் 238
அகப் பூசை - உயர்வு 660
- உரிய திருமேனி 661
அச்சம்
- இல்லவர் எவர்?
- அரசரும் 549
அசற்பாத்திரம்
- அளிக்கும் கொடையின் பயன் இன்மை 213, 214
அஞ்ஞானி மெய்ஞ்ஞானி
- ஏற்கும் தன்மையில் வேறுபாடு 220
அடியவர் - துறவியர்
- அரன் அடியவர் நரகு புகார் 490
- உணவு இட்டார் வினை ஒட்டுவர் 946
- தயிர்ச் சோறு அளிக்க 944
- நீர் கமண்டலம் அளிக்க 946
- பசு - அன்போடு வழிபடுக 939
- வணங்குக 939
- யார் 218
- பெறு பயன் 955
- மர உரி, ஆடை, மான்தோல் அளிக்க 947
அடியார்
- அரியது எதுவும் இல்லை 892
அண்டகோளம்
- மேல் ஓடு - மேரு மலை 832
அண்டங்கள்
- ஈசன் முதலியோர்க்கு உரிய 948
- எண் வகைய 948
அண்டம்
- கடாக அளவு 832
- தத்துவம் 829
- விவரம் 827, 828
அணு 826
அநாதி மல முத்தன் 620
அபக்குவர்
- உண்மை உணர்த்தல் ஆகாது 719
அமரர், அசுரர் 555
அமைதி - மனம்
- இல்லா வாழ்க்கை 553
அருச்சனை
- பூக்கள் தூவி பூசித்தல் 101
அருள்
- பெறு முறை 816
- வேறுபாடு கிடையாது 217
அலகிடல் முதல் ஐந்து 197
அவை அடக்கம் 39
அழுக்கு
- உடல் உறுப்புகளில் சேர்வ 502
- மன அழுக்கு - பாவ காரணி 752
அளவை - சிறு நீட்டல் 826, 827
அறங்கள்
- பத்து வகை 239
- பயன் 240
- பல 239
- இரவலர்க்குத் தங்க இடம் அமைத்தல் 360
- சோலை அமைத்தல் 358
- திருக்கோயில் நந்தவனம் அமைத்தல் 359
- நோயாளர்க்கு மருந்து நல்கல் 362
அறம் - இருவகை 938
- ஈகை
- பலன் நிலைக்கும் கால வரையறை 187
- செய் உத்தமர் பெறும் பேறு 186
- பயன் 184
- மேலான அறம் 70
அறிவுரை - மனக்கு 75
அறுமுகவன் - விடை 825

Koviloor Digital Library

அன்பு
- இலார் அமைதி இலார் 606
ஆகமம் - சைவ ஆகமம்
- அளிக்க, பெற சிறப்பு விதி 106
- எழுத உதவுவோர் பெறு பயன் 112
- எழுதும் கருவி 113
- கல்விக் கொடையால் பெறு பயன் 109
- கற்பிக்கும் இடம்
- தூ நீர் தெளித்தல் 107
- கற்பிக்கும் குருவுக்குச் செய்யும் மரியாதை 108
- சிறப்பிக்கும் முறை 103
- நூல் அமைக்க வேண்டுவன 114
- நூல் அளிக்க சிறப்பு விதி 106
- பொருள் அறியார் பயன் பெறார் 56
ஆசாரியர் - சிறப்பு 771
ஆசான் - பக்குவிகட்கே உட தேசிக்க 719
- மதிக்கத் தக்கவர் 581
- மனைவி வல்லிதின் புணரின் ஒறுப்பு 786
- பாவம் விலக 787
ஆசிரியர் - ஆசான்
- அனுமதி பெறல் 96
- இறைவனுக்கு நிகர் 80
- தக்கவர்க்கு உபதேசம் செய்க 85
- தரம் அறிந்து போதனை செய்க 84
- பூசனை 88
- மாணாக்கன் 966
- விடை கூறல் 679
ஆசை
- இருவகை; விளைவு 566
ஆரியர் நம்பிக்கை 588
ஆன்மா - ஆன்ம சக்தி 701
ஆன்மார்த்த லிங்கம்
- தீக்கை இலார் தீண்டலாகாது 765
இயல்பு
- பதி முதலியவற்றின் இயல்பு 57
இரப்பு - ஏற்றல்
-தக்கவரிடத்து ஏற்பின் ஏற்பார்க்கும் பயன் 224
இருக்கை - கலைமகள் 100
இல்லறத்தார் 604
இல்வாழ்வார்
-தொழிலால் பாவம் வருதல்; அது தீர் முறை 195
இல்லாள்
- வாழ்வரசி
- ஒழுக்கம் 737
- கூட்டம் 738
இளமைக்காலம் - துன்பம்
இறப்பு - இருவகை 558
- பிரமற்கும் உண்டு 542
இறைவன்
- உயிர்தொறும் பரந்துளான் 662, 705
-துதி 616
இன்ப துன்பம் - காரணங்கள் 310
இன்றி அமையாக் கடமை
- ஆசிரியர்க்குப் பணிவிடை 362
- சிவாசாரியார்
- பாதம் நீராட்டல் 363
- சிவாசாரியார்க்கு
- உண்ண உணவு பருக நீர் அளித்தல் 366
- தேர் (ஊர்தி) வழங்கல் 365
- நிலம் வழங்கல் 365
- விலை உயர்ந்த பொருள் கொடுத்தல் 363
ஈகை
- இரக்கும் வறியவர்க்கு மறாது வழங்குதல் 222
- அடியவர்க்கு செப்புக் கலம் ஈதல் 944
- தவத்தோர்க்குத் தங்கக் கலம்

Koviloor Digital Library

ஈதல் 943
- பலாச இலைப் பாத்திரம் 943
ஈசன்
- உயிர்க்கு உடல் அளிப்பவன்
- பலன் தருபவன் 556
ஈதல் - சிறந்த காலம் 230
உடம்பு - உடம்புகள் - உடல்கள் 498
- இருவகைய 698
- உயிரே இறைவன் 631
- பிற உடல்கள் 498
- மனித உடல் 498
உடல் - உடம்பு
- அருவருப்பானது 522
- அறிவாளிகள் பொருட்படுத்தார் 521
- உடம்பின் மீது வெறுப்பு 523
- உயிர் பொருந்தும் முறை 507, 562
- உறுப்புகள் எண்ணிக்கை 517
உடல் - உடம்பு
- உறுப்புகள் தோன்றும் முறை 504
- தன்மை 519
- தூய்மை இல்லாதது 523
- நாடி எண்ணிக்கை வேறுபடல் 518
- புரி அட்டக உடல் 506
உண்கை
- அயலார் வீடாயின் (மந்திர செபம்) 754
- இடமறிந்து உண்க 751
உண்பித்த பலன்
- சிவ விரதிகளாயின் 202
- சிவ யோகிகள்ஆயின் 203
உண்மை காணாதவர் 633
உணல்
- தானே தமியன் உணல் 'அறிவிலிசெயல்' 318
உணவு - இடல் - உணவு வழங்கல்
- பயன் 940
- எல்லோர்க்கும் இடுக 98
- பாசுபதர், - மாவிரதியர்க்கு இடுக 941
- வானப் பிரத்தனுக்கு வழங்குக (பயன்) 940
உணவு
- உணவும் நீரும் 374 'சோறொடு நீரே'
- அரிசியால் அமைவது 501
- அளிப்பவர் பெறு பயன் 371
- இன்றி உயிர் வாழ்தல் அரிது 368
- ஈந்தவன் உயிரை ஈந்தவன் 370
- ஒப்பானது வேறு இன்று 372
- சத்து பிரியும் முறை 503
- சீரணமாகும் முறை 501
- பசி நோய் மருந்து 368
- முத்தொழிற்கும் காரணம் 373
உதவுகை - உதார குணம் - உபசாரம்
- ஈதற்கு இ(ல்)லை எனினும் உபசரிப்பின் பேறு உண்டு 223
- உதாரதையர் யாவர் 218
- நாடி வந்தவர்க்கு உதவி உபசரிக்க 221
உயிர்க்கொலை
- நாற்பாலில் முதல் மூவர் 750
உயிர்கள் - ஆன்மாக்கள்
- இன்பம் துய்க்கும் முறை
- எண்ணில 718
- கடவுளர் ஆகா 623
உயிர்த் துணை - புண்ணியம் 561
உருத்திரர் - உருத்திரன்
- ஆடகேசு உருத்திரர் 841
- உயர்ந்தவன் (ர்) 642
- உலக நரகுகள் 834
- உலகப் பெண்கள்
- உலகின் மேல் உள்ள நிலம் 842
- உலகு 901
- காலாக்கினி 834
உலகங்கள்

Koviloor Digital Library

- சிவ உலகிற்கு மேல் மூன்று உலகங்கள் 254

உலகு
- குமரன் உலகு 950
- சிவன், தேவி உலகு 950
- அங்காரகன் உலகு 878
- அயன் உலகு 881
- அரி உலகு 881
- அருக்கன், உடுபதி, உடுக்கள் 876
- அளவிடமுடியாதது 873
- இந்திரன் உலகு 879
- சனி உலகு 877
- சிவன் உலகு 880
- சுக்கிரன் உலகு 877
- சுரர் குரு உலகு 877
- தவ உலகு 879
- துருவன் உலகு 877

உலகு - பிதிர் தேவர் 879
- புதன் உலகு 876
- பூ உலகு 870
- மாதவர் உலகு 878
- மேல் உலகம் 875
- வான உலகம் 876

உழவு முதல் ஐந்து 197

எண் (வகை) சித்தி - 'அஷ்டமா சித்தி' - விவரம் 695
- (பரிமேலழகர் உரை ஒப்பிடுக)
- ஒன்றுக்கு ஒன்று அதிகம் 262
- பைசாம் முதலன 261

எண் தீவுகள் 854
- குமரித் தீவு - மலைகள் 854
- சந்திரத் தீவினர் 859
- விவரம் 866

எண் நாட்டவர்
- உணவு பழக்கம் 858

எரி - ஓம்புமுறை 774

எருது
- மிகுபாரம் ஏற்றிய பாவம் நீங்க 897

எமன் பணியாளர் - தூதர்
- பாவியரிடம் உரைப்பன 469
- பாவியர் துயருறுவர் 477
- பாவியாரைத் தண்டிக்கும் முறை 430

எமன் - சமன் - நமன் - யமன் நடுவன்
- சீற்றம் 410: தோற்றம் 406

எமன் - தர்மராசன்
- சிறப்பு செய்முறை 375
- செயல் 385
- தூதர் இயல்பு 403
- தூதர் உரை 404
- தோற்றம் 384
- பணியாளர்கள் 382
- பாவியர்களைக் கொண்டு செல் முறை 394

ஏழுகடல் - சப்த சாகரம் 873

ஐவகை யாகம்
- ஒன்றை விட ஒன்று சிறந்தது 153
- செப மாலை தாரதம்மியம் 149
- ஞான யாகம் - விளக்கம் 152
- ஞான யாகம் - கர்ம யாகத்தை விடச் சிறந்தது 166
- தியான யாகம் - செய்முறை 151
- தியான மந்திர உரு ஏற்றல் 148
- (செப யாகம்)
- முதல் மூன்றன் விரிவு 147

ஒளி - இருள் ஒரே இடத்த 635

கடல் - எழுவகை 866 - 868
- கருப்பஞ்சாறு 867;தயிர் 867 தேன் 867;நன்னிர் 868; நெய் 867 பால் ; உவர் நீர்

கணபதி துதி 615

கந்தன்,கந்த பெருமான்
- அகத்தியனுக்கு இசைத்தன 968
- உரைத்தன 233, 266, 492 541
- சிவகாம நூல் அகத்திற்கு உரைத்தல்141,178,183

Koviloor Digital Library

-துதி 573, 610, 722
- நிர் குணன் - உரைத்தல் 178
கர்வ பங்கம் அடைந்தவர் 538
கரு
- குழந்தை வளர்ச்சி நிலை 512
- பிள்ளையின் மன நிலை 513
- வளர் குழந்தை 511
- வளர்ச்சி அடைதல் 509
கருமம் - கரும யோகம் 647
- கரும யோகம் புரியத் தக்கார் 651
- கரும யோகம் புரியத் தகாதவர் 651
- கரும யோகியர் உண்ணத் தகாத பொருள் 653
- பயன் அடையத் தக்கவர் 655
காமம்
- காம இச்சை துயர் தரும் 534
- இன்னல் அடைவிக்கும் 534
- காமத்தால் அழிந்த வேடுவர் 533
காமுகர் இடர்ப்படுவர் 545
காவலன் (அரசன்)
- கடமை 924
- பசுக்களைக் காக்கக் கடவன் 932
குமர குருபரன்
- வாக்கின் பெருமை 74
- உரைத்தன 271
- உலகு அடைதல் 257
- துதி 235,495,571, 613, 724, 822, 971
- புகழ் 255,268
குரு - குரவர்
- குரவர் தப்பிய கொடுமை 773
- கொடுமை - பரிகராம் 775
- செய்யத் தக்க மரியாதை 108
- பூசை - அருச்சித்தல் 95
- பூசை - பந்தர் அமைத்தல் 95
குரு மரபு - சந்தான குரவர் 170
- சனகர் உள்ளிட்ட நால்வர்
- திருநந்தி தேவர்
- தென்முகக் கடவுள்
- மெய்கண்ட தேவர்
குரு மரபு - சமய குரவர் 170
- அடியார்
- திருஞான சம்பந்தர்
- திருநாவுக்கரசர்
- திருவாத ஊரர்
- நம்பி ஆரூரர்
கூஷ்மாண்டர் - கூர் மாண்டர் 837
- உலக பெண்கள் 840
- உலகின் மேல் உள்ள இடை வெளி 838
- உலகு 840
கொடை
- ஆகம நூல் கொடை - பயன் 110
- ஏற்ற இடம் 89
- சிவ ஆகமக் கொடை - பயன் 123
- பலன் 110
- பெறு பயன் 109
கோபம் - கொடிது 787
சதாசிவ மூர்த்தி 809
- தியானித்தல் 808
சமற்கிருதம்
- இலக்கண மரபு 689
சமாதி
- இலக்கணம் 693
- சித்தி பெற உரிய முறை 693
- சித்தி பெற்றவர் அடை பயன் 694
- சிவயோக சமாதியாளர் பெருமை 696
- சிரத்தை இன்னது எனல் 231
சிவ ஆகமங்கள் - சைவாகமங்கள் (28)
- ஆசிரியர் சிறப்பு 118
- ஆராய்வார்க்கு உதவுவார் பெறும் பயன் 117
- கற்பிக்கும் முறை 79

Koviloor Digital Library

- சிறந்தவை 72
- நூல் சிறப்பிக்கும் முறை 103
- நூலின் பயன் 120
- பாதுகாப்பவர் பெறும் பயன் 110
- வழிபாடு செய்பவர் பெறும் பயன்
- சிறப்பு விதி 111
- பயில்க 288
- பயிற்று ஆசிரியரைப் பணிக 290

சிவ ஆகமங்கள்
- ஆலயம் அமைப்பார் பெறு பயன் 127
- ஆலய பூசை செய்வார் பெறு பயன் 127
- எழுது கருவிகள் உதவுவார் பெறும் பயன் 122
- கற்பிக்கும் ஆசிரியர் இறைவனுக்கு நிகர் 125
- சுவடிகள் பழுது படின்...126
- வைப்பதற்கு ஏற்ற இடம் 124

சிவ உலகம் 948
- அடைதல் 259
- சார்ந்தாரைத் துன்பம் தொடராது 241
- சிறப்பு 251

சிவ உலகு
- இருக்கும் பல நிறத்தினர் 893
- இருப்பவர் 898
- திருக்கோயில்
- துறவு பூண்ட சைவத் துறவியர் அடைவர் 951
- மகளிர் இயல்பு 891

சிவ உலகு
- உள்ளவர் 885 - 887

சிவ உலகு
- கண நாயகர் 889
- கோபுரம் உள்ள இடம் 881
- சிவ கணத் தலைவர் 888
- சிவ கணத்தவர் 887
- தன்மை 882

சிவகணம் - தன்மை 884

சிவ சக்தி
- அருள மலம் நீங்கும்

சிவ சமயம் - சைவ சமயம்
- சிறப்பு 622
- பிற மதத்தினர் சார்வகை 621

சிவஞானம் - பெற விரும்புதலின் பயன் 174

சிவ ஞானம்
- உபதேசிக்கும் முறை 87
- சிறப்பு 78
- நூல் - உரிய இடம், பீடம் 91
- நூல் உரிய ஆதனம், திருமுறை 92
- நூல் பூசனை - பூசிக்கும் முறை 93
- காட்டத்தக்க ஐவகைத் தூபப் பொருள் 94
- வணங்கும் முறை 95

சிவஞான யோகம் 617

சிவஞான யோகி 618

சிவஞானி
- அதி உயர் மேன்மையர் 168
- இகழ்ந்தார் பெறு துயர் 208
- உலகியலில் படினும் அதில் அழுந்தார் 157
- எந்நிலையிலும் கடவுளைப் பிரியார் 163
- சிவஞானிக்கு ஈயும் முறை 219
- சிவன் காட்சி தரும் முறை 165
- சிவன், குரு, வழிபடுக 963
- சிற்றின்பம் நாடின் 956
- தங்கும் இடச் சிறப்பு 168
- பாவம் சாராது 491
- பிறவி இல்லை 161
- புண்ணிய, பாவம் பொருந்தா 158
- பெறுவகை, மாற்றுவார் இலர் 159
- மோன நிலை அறின் 160

Koviloor Digital Library

- வணங்குக 211
- வணங்குதலின் பலன் 155,156
- வெளிக் கோலம் பாராதே 207,210

சிவஞானியர் - கற்பிக்கும் ஆசிரியர்
- உபசரித்து, உணவு அளிப்பவர் பெறும் பலன் 116

சிவதர்ம சீலர்
- அரன் உலகு அடைவர்

சிவதர்மம் - சிறப்பு 71

சிவதருமோத்தரம் 875
- திருக்கோயில் எல்லையில் விரிவுரை செய்வித்தவர் 961
- நூல் படித்தல் 958
- நூற் பயன் 958
- பொருளடக்கம் 966
- முறை பின்பற்றியவர் 959
- விரிவுரை நிகழ்ந்த பின் செய்தகுவ 961

சிவபிரான் - சிவ பெருமான் - சிவன்
- எழுந்தருளும் இடங்கள் 225
- எழுந்தருளி இருக்கும் இயல்பு 899
- எழுந்தருளும் நிலை 902, 903
- துதி 233,234,492
- நிலை 940
- புகழ் 142,178,180,266
- வழிபாட்டிடம் - சிவபுரம் 135
- விரும்பும் புண்ணியத் தலங்கள் 226
- வீற்றிருக்கும் நிலை 901

சிவ புண்ணியம்
- சிவ யோகிக்கு உணவு அளிப்பது 191

சிவபுரம்
- அமைத்த சிற்பி,பிறர் பெறுபயன் 136
- செய்தவர் பெறு பயன் 135
- பெருமை 137
- வணங்குவார் பெறும் பயன் 138

சிவபெருமான்
- அழுக்கு அகற்ற வல்லான் 626
- காரணன் 624
- திருவடிச் சார்பே முத்தி
- துதி 242,347,348

சிவமும் சக்தியும் 700

சிவ யோக தியானம் - பலன்

சிவயோகி
- உண்பது - சிவன் உண்பது ஒக்கும் 192
- உண்ட உணவின் சிறப்பு 195
- உண்பித்து பின் எஞ்சியது உண்க 196
- வருகை உவகை தரும் 204

சிவயோகிக்கு செய்த பூசை மகிமை 204

சிவயோகிக்கு பணிவிடை செய் அடியார் பெறு பலன் 699

சிவயோகி பூசைக்கு உதவியார் பெறும் பலன் 205

சிவலோகம்
- எய்தி இருக்கும் கால வரையறை 199 - 200

சிவ வழிபாடு
- செய்வாரே வாழ்வார் எனப்படுவார் 487
- பயன் - பூசை (ஒன்பது நாள்)

செயின் நாராயண லோக பதவி 249
- பயன் 242,245
- ஒரு நாள் பூசை - பைசாச லோக பதவி 242
- இரு நாள் பூசை - இயக்க லோக பதவி 243
- மூன்று நாள் பூசை - இயக்க லோக பதவி 244
- நான்கு நாள் பூசை - கந்தர்வ லோக பதவி 245
- ஐந்து நாள் பூசை - சுவர்க்க லோக பதவி 246
- ஆறு நாள் பூசை - சோம லோக பதவி 247

Koviloor Digital Library

- ஏழு நாள் பூசை - பிரசாபதி லோக பதவி 248
- எட்டு நாள் பூசை - பிரமலோக பதவி 248

சிவ விரதங்கள்
- செய்யும் பூசை 250

சிவன் - சிவை
- அருள பாசங்கள் நீங்கும் 703
- அருளால் ஆணவ வலி ஒடுங்கும் 631
- ஆக்கல், காத்தல், அழித்தல் செய்பவன் 640
- ஆணவமலம் அகற்று பண்டிதன் 639
- ஆணவ நோய் மருந்துவன் 639
- உயிர் ஐக்கியம் 710
- உயிர்கள் நோக்கும் 704
- உயிர்களின் பெற்றோர் 702
- உயிர், சிவம் வேறுபாடின்றி இருக்கும் 708
- உருவத் திருமேனி - காரணம் 776
- சினத்தால் தண்டனை பெற்றவர் 535,536
- திருமேனி. திரு முழுக்கு செய்க 953
- துதி 571,572,611,612, 723, 724,820, 821, 968
- துயர் அறுப்பான் 564
- படையல் - பெற்றது படைக்க 756
- வினை முதல்வன் 677
- வேண்டுவ ஈயும் வள்ளல் 692

சிவனடியார் பெருமை 745

சிவனை நிந்திப்பவர் 283

சிவகாமங்கள் 964
- எழுதுவித்தல் 965
- பெருமை 619
- நெறி கை விட்டார் துயர் அடைவர் 489

சிற்றின்பம் - நிலையானது அன்று 528
- காலம் சிறிது 529
- அளவோடு துய்க்க சிறப்பு
- ஓங்காரத்தின் சிறப்பு 50
- சிவ வாக்கியத்தின் சிறப்பு 48

செயல் - ஏற்ப பயன் 602

ஸ்மார்த்தப் பிராமணர்
- கவனிக்கத் தக்கன 739

ஞான ஆலயம் - பூசைப் பயன் 127

ஞான யோகி

ஞானி - ஆகாமியம் இல்லை 525
- இகழ்பவர் நீசர் 285

தக்கவர் இடத்து ஏற்பவர் பெறு பலன் 224

தன்டனை ஈயார் அடைவது 585

தத்துவங்கள்
- இருபத்தேழும் இறைவனே 643

தருப்பை - உயர்வு 684
- பவித்திரம் - மந்திர செபம் 761

தவசிகள் - தவவேடந்தர்
- உதவு உபகாரிகள் பெறு பயன் 136
- சிவன் எனக் கருதுக 206

தவத்தினர்
- நல்ல சூழ்நிலையில் உதவுதலின் மேம்பாடு 232

தற்கொலை தடுக்க முயல்க 786

தாரணை 686

தானம் அளித்தல் - வேதியர்க்கு
- ஆடை 356
- உணவிடல் 361
- கட்டில் 358
- குடை 355
- குதிரை 357
- தவிசு 356
- பசு 361
- பாதுகை 354

தானம்
- ஏற்கும் பாத்திரம் - பொருள் விளக்கம் 190

Koviloor Digital Library

- ஏற்பவர் ஞானியர் ஆகின் பலன் அதிகம் - பிறவி அறும் 189
- காரண, சூழ் நிலைகள் பொருந்தச் செய்க - பலன் அதிகம் 188
- தகுதி உடையவர்க்கு அளிக்க(சிவப்பேறு தருவது அதுவே) 188

தியானம் - 687
- மெய்ப்பொருள் குறித்துச் செய்க 957

திரு ஐந்தெழுத்து
- ஓத சிறப்பு 697

திருக்கயிலை - சிறப்பு 855

திருக்கோயில் - தன்மை 893
- உரிய பொருள் 769
- எருதுகள் நிபந்தம் விட்டவர் 929
- எருதுகள் அளித்தவர் பெறுபயன் 930
- பசு எருது அளித்த பயன் 931
- நிபந்தமாகக் காளை அளித்தவர் 933

திருடர் - தங்கம் திருடல் 778 (பரிகாரம்)

திருத்தலப் பயணிகள் - தேசாந்தரி - உணவு ஈக 940

திருமடம் அமைத்தல் 793

திருவடிகள் தியானிப்பவர் 889

திருவருள்
- பெற்றவர் மேலோர்

தீட்டு
- திருவிழாக்காலத்து 750
- வண்ணாத்தி மனை நுழைதல் 746 (பரிகார மந்திர செபம்)

தீட்டு
- உண்மை, இன்மை விதிகள் 735
- குடும்பத் தீட்டு 736
-தீக்கை பெற்றவர் அடைவ 735

தீவுகள் - சாவகம் முதல 869
- இருப்பவர் தன்மை 869

துறவி - இன்பமுடன் இருப்பவர் 563

துன்பம் - இரப்பும்,கரப்பும் 563
- உயிர் பிரியும்போது உண்டாவன 560
- நரை திரை 557
- முதுமை 558

துன்பம் - உலக இயற்கை 548
- நோயால் வருவன 557
- பழங்கால தமிழர் வாழ்க்கைத் துன்பம் 548
- பறவைகள் உறுவன 551
- பாம்புகள் பெறுவன 552

துன்பம்
- மரங்கள் (நாசம் உறல்) 553
- மிகுந்த வாழ்வு 548

தூய்மை
- உடல் உள்ளம் 527
- உணவின் தூய்மை 757
- செய்முறை 758
- பாண்டத் தூய்மை 755
- வழிபாட்டுப் பொருள்கள் 758
- வேண்டத் தகுவது 287

தெய்வ நிந்தனை 583

தென்முகக் கடவுள்
- நிறுவு(நிலை பெறச்செய்)தல் 133
- நிறுவுவித்த ஆசானுக்கு உதவுதல் 134

நட்சத்திர பதம் 252

நரகத் துயர் - அளவில்லாதது 468

நரகம் - பாவம் விளைப்பது
- அரச நரகங்கள் 429
- அடைவார் இவர் இவர் எனல் 530
- அறம் செய்யாத செல்வர் பெறும் தண்டனை 465
- திருக்கோயில் மாசு படுத்துவர் அடைவர் 461
- பசித்தவரை உண்பியார் பெறும் தண்டனை 467

Koviloor Digital Library

- பிறர்பொருள் திருடினார் அடைவர் 460
- பிறர்க்கு வழங்காத செல்வர் பெறுவர் 463

நரகம் - நிரயம்
- செல்வழி -பெறுதுயர் 386
- தொகை நகரங்கள் (28)
- நாயக நரக வகை 421
- பெயர் முறை 418
- வழிச் செலவு - துயர் 387

நரகம் - ஏழுநிலம்
- அதிகோரம் 419,423,
- எழுநிலம் ஐங்கோணம் 420
- எண்நிலம் காளராத்திரி 420
- காளம் 420 குலிசம் 420
- கோர தரம் 448 கோரம் 419
- கோர ரூபம் கோரோதகோரம்
- சண்ட கோலாகலம் 420
- சண்ட தரம் 420 சண்டம் 420
- சரோருகம் 420 சலசவதி 420
- தரளதரம் தீர்க்க ஒளி
- தீர்க்கதரம் 420- பயாநகம்
- பயோற்கடம் - பரிவர்த்தம்
- பரிவர்த்துலம் மகா சண்டம்
- முக்கோணம் 420 - விகாளம்
- வீமம் 420 வீமவீடணம் 420
- மாயை ...

நரக வேதனை - தண்டனை
- குருவை மதியாதவர் அடைவன 456
- சிவ நிந்தனை செய்தார் பெறுவன 458,459
- பிறன் மனைவியை ஆசையுடன் பார்த்தார் பெறுவன 455
- பூசைக்கு உரிய மலர் மோந்தார் பெறுவன 457

நரக வேதனைகள் 420- 441
- தண்டனைகள்

நரக வேதனை
- ஆலயம் முதலாயின மாசுபடுத்தியவர் பெறுவன 452
- குரவர் பணி செயாதவர் பெறுவன 449
- குரு நிந்தனை கேட்டவர் பெறுவன
- பரிவு இல்லவர் தந்த ஊண் உண்டவர் பெறுவன 451
- பிறன் மனை நயந்தவர் படுவன 445

நரகு - இடைவெளி 836

நவகண்டம் 854
- தேசங்கள் 851
- பெயர்க் காரணம் 865
- விரிவு 864

நவ கண்டம் -9-பெயர்காரணம் 865; 854
- தேசங்கள் 851
- இரணிய கண்டம் 861; இரமிய கண்டம் 861
- கிம்புருடர் கண்டம் 862
- குமரிக் கண்டம் 865
- பத்திராகாரகண்டம் 860
- விரிவு 864

நன்னெறியாளர் - நற்கதி 489

நாடுகள் - ஒன்பது - விவரம் 857
- குரு நாடு 859

நாவல் மரம்
- தெற்கு மலை 849
- பழச்சாறு - பயன் 850

நித்திய கண்டம் 731, 732
- ஆடை துவைப்பு, காலைக்கடன்
- நீராட்டு நிந்தனை
- ஆசிரிய நிந்தனை 279
-சிவ நிந்தனை 278

நிலைபேறு -முத்தி நிலை 487

நினைவு ஒருமை 658
- பொருந்திய செய்க 659

நீர், நெருப்பு 668

நீராடல்

Koviloor Digital Library

- இயலா நோயாளியர் 733
-ஏற்ற இடம் 732
நுண்மை பருமை 638
நோய் - போக்குவழி 670
- கண் நோயால் வருந்துபவர் 593
- கன்ன நோயால் வருந்துபவர் 592
- கால் நோயால் வருந்துபவர் 593
- குட்ட நோயால் வருந்துபவர் 595
- தொழுநோய்க் காரணம் 585
- தொழுநோயால் வருந்துபவர்
- நெஞ்சு நோயால் வருந்துபவர் 592
- வயிற்று நோயால் வருந்துபவர் 595
- நோயால் வருந்திய முன்னோர் 535
பக்குவர் - ஆன்மா
- பரமனைக் காண்பர் 162
பக்குவம் - பக்குவப் பட்டவர்
- பெற்ற ஆசிரியர், மாணக்கர் 720
- வீடு பேறு அறியத் தக்கார் 721
பக்குவம் பெற்றார்
- அருள் பெறுவார் 646
பசிப் பிணிக்கு மருந்து 500
பசு - பசுக்கள் - ஆ
- ஆ உரிஞ்சு தறி அமைப்பதன் பயன் 927
- ஆப்பயன் திருமுழுக்கு ஏற்ற காலம் 804
- ஆப்பயன் முறையாகத் திருமுழுக்கு செய்தல் 803
- ஆப்பயன் பெறும் பாத்திரம் 799
- ஆப்பயனில் நீர் முதலியன கலத்தல் 801
- காக்கும் முயற்சியில் உயிர் இழப்பதும் புண்ணியமே 937
- குருவுக்கு அளித்த பயன் 928
- சிறுநீர் கொள் முறை 797
- திருக்கோயிலுக்குத் தருமுறை 928
- பயனுக்கு உரிய ஏனம் 798
- பால் முதலியன மந்திரித்தல் 800
- மூலம் பெறும் பொருள்கள் 60
- வகை அறிதல் 796
பசு - பசுக்கள் - எருது
- உடலில் தங்கி இருப்போர் 905-908
- ஐவகை 904
-கபில நிறத்தது - பூசிக்கும் முறை 805
- காக்கும் திறன் 925
- காத்தவர் அடை பயன் 926
- காவாதார் அடையும் தண்டனை 927
பசு - பசுக்கள் - எருது
- கொட்டிலில் செலுத்தும் முறை 920
- சிறப்பு 955
- துன்புறுத்தல் ஆகாது 930
- தொட்டால் பாவம் போம் 914
- தொழுவம் அமைத்தல் 915
- நோய் உள்ளவை 903
- பாதுகாவா அரசன் 924
- பாரம் சுமத்தல் தகாது 931
- பூசிக்கும் முறை 921
- பூசிப்பதன் பயன் 915
- பேணி வளர்ப்பார் பெறு பயன் 912
- மடம் - கோசாலை 916, 918
- மெலிந்தவை வளர்த்தல் 933
- வணக்கம் 911
- வணங்குவார் பெறு பயன் 912
- வளர்ப்பு 909
பசுக் கொட்டில்
- புலையர் புகல் ஆகாது 936
பசு மடம்
- அமைந்தவர் பெறு பயன் 921
- கட்டியவர் பெறு பயன் 921,

Koviloor Digital Library

922
படைப்புகள்
- மேலான தலைமை எய்தா 680
பணிவிடை
- திருக்கோயிற் பணி சந்நிதி விளக்கிடல் 360
- பெரியயோர்க்குப் பணிவிடை செய்தல் 364
பந்தி - அமர்ந்து உண்ணலால் நேரும் குற்றம் 795
பரமசிவன் - உருவிலி 681
- தியானம் செய்யப் பலன் 644
பரிகாரம் - செய் தக்கார் 728, தகார் 819
- தானம் பெறல் 792
- மேலானது 791
பலி - தருமுறை 99
பற்று
- உடற்பற்று 545
- உடையார் இருவகை இந்பமும் இழப்பர் 544
பாசங்கள் - நீங்கும் முறை 625
பாசம்
- பக்குவம் முதிர நீங்கும் 635
- நீங்கு முறை 625
- நீங்கியார் இன்புறுவர் 531
பாத்திரம் - தக்கார்
- அசற் பாத்திரம் - தகார் இவர் எனல் 212
பாதகர் - மகா பாதகர் - பாதகங்கள்
- ஐம்பெரும் பாவியர் 292
- துணைப் பாதகங்கள் 302
பாதாளம்
-அதிபதி - குகை அளவு 843
பால்
- கறக்கும் முறை 934
- கன்று வயிறு நிறைய ஊட்டாதார் 935
- திருமுழுக்கிற்கு உரியது 913
பாவம்
- அகலும் வழி 198
- அதி பாதகம் முதலன 276
- உடலால் வருவன 769
- எண்ணம், பேச்சால் வருவன 768
- எது? 301
- எல்லாம் செய்தவர் 280
- செய்தவர் 272
- சொல்லால் உண்டாவன 276
- தூல கன்மம் 272
- தூல, சூக்கும,சூக்கும தரம் 273
- பயன் 380
- பிராம்மணக் கொலை 295- பிரம்மஹத்தி
- மனத்தால் உண்டாவன 274
- முப் பிரிவு - நந்நான்கு வகை 273
- வகைகள் 293
- வேறு பல வகைகள் 319
பாவம் புரிநர்
- அக்கமாலை அணிக 782
- அடியாரோடு தொடர்பு கொள்க 783
- சிவஞானிகளை வழிபடுக 781
- பாவம் தொலை வழி 780
- பெரும்பாவப் பரிகாரம் 780
பாவிகள் கரை ஏறும் முறை 421
பாவியர் - அரசன் ஆசான் பழிப்பவர் 579
- துயர் உறுவர் 477
- துயர்க்கு உரிய கால அளவு 478
- தொடர்ந்து பாவங்கள் செய்பவர் 609
- பெறு துயர் 579
- மீட்டும் பிறப்பர் 480
பிரத்தியாகாரம்
- நினைவு ஒருமை 685
பிரமன்
- அம்மை வசை மொழி அடைதல் 531
பிராணாயாமம்
- அகற்பப் பிராணாயாமம் 674

Koviloor Digital Library

- இருவகை வளி நிலை 673
- உயிர் இருவகைப் பயன் அடைதல் 675
- கால அளவு 683
- சகற்பம் 673
- செய்முறை 665

பிராணாயாமம்
- நேரும் நன்மை, தீமை 666
- பெயர் விளக்கம் 665
- மேன்மை 675
- வளி நிலை 658
- விதி நிலை 682

பிராமணன் - பிராமணர்
- ஸ்மிருதி வழி வாழ்க 607
- கொலை - பரிகாரம் 737
- கொலை - பாவம் அன்று எப்போது 749
- மது நுகர்வார் எனின் 777

பிற சமயம்
- நிந்தனைகளைத் தடுக்க 721
- மறுப்பு 716

பிறப்பு - பிறவி
- அலி ஆகப் பிறப்பவர் 591
- ஆண் பேடி ஆகப் பிறப்பவர் 594
- இழி பிறவி அடைபவர் 584
- உயிர் உறு துயர் 515
- ஒரக் கண்ணராய்ப் பிறப்பவர் 600
- குருடர் செவிடர் ஆகப் பிறப்பவர் 589
- கொடிய நோயாளி 605
- கோணல் வாயராய்ப் பிறப்பவர் 600
- சிறு உயிர்கள் 499
- செயற்கு ஏற்ப அமையும் 596 - 599

பிறப்பு - பிறவி
- தீவினையாளர் அடை முறை 576
- நல்வினையாளர் அடை முறை 576
- நாயாகப் பிறப்பவர் 587
- பன்றியாகப் பிறப்பவர் 586
- பிராமணப் பிறவி 577
- பிறந்த உயிர் இயல்பு 516
- புலையன் ஆகப் பிறப்பவர் 588
- மக்கள் பிறப்பு வகை 505
- மறு பிறவி - தீயவர் அடைவர் 582
- வாத நோயாளி 607

பிற மதங்கள் - மத நூல்கள்
- கொள்கைகள் 630
- தன்மை 622

பிறவி - இல்லாதவர் 260

மகளிர் முயக்கம்
- மந்திர சபம் 742
- விதிகள் 749

மண்டலம் - பூமண்டலம்
- வகை 830

மண்ணுலகு
- பிறந்த பயன் 128

மந்திரம் - ஆறு எழுத்து - ஒதும் முறை 150
- உரு ஏற்றும் முறை 688
- விதி முறை உச்சரிப்பு 690

மலை - சக்கரவாளம் - எண்மலைகள் 851
- அளவு 872
- இருட்பகுதி 871
- தன்மை 869
- குல மலைகள் 851

மனித்தப் பிறவி
- அரியது எனல் 483
- உயர்ந்தது எனல் 483
- பாரத நாட்டில் அமையின் சிறப்பு எனல் 484

மாண்டவர்
- கண்ணன் 539
- சராசந்தன் 539
- போரிடை 537

Koviloor Digital Library

மாணவர்
- தகுதி இல்லவர் இயல்பு 82
மாணாக்கன்
- ஐயம் தெளிதல் 678
மாணி ஆக இருந்து
- மணம் புரிந்தவர் 743
மாயாவாதம் 712
- கொள்கை மறுப்பு 711
மானிடர் இயல்பு
- முக்குணம் 641
- முத்தேவர் 641
முட்டைகள் - அண்டஜம்
- தோன்று உயிரிகள் 789,790
முத்தன் - பற்று அறுத்தவன் 568
- இயல்பு 570
முக்தர்
- இடம் உள்ள மும்மலம் 708
முற்றும் உணர்வார் 567
மூர்த்தி
- அக்கிரமூர்த்தி 813
- இருதய மூர்த்தி 812
- ஈசான மூர்த்தி 809
- சத்தியோசாத மூர்த்தி 811
- சதாசிவ மூர்த்தி 811
- தற்புருட மூர்த்தி 809
- நேத்திர தேவ மூர்த்தி 813
- வாம தேவ மூர்த்தி 811
மெய் உணர்வு இல்லவர் 632
மேரு மலை 845
- சுற்றிலும் உள்ள சோலைகள் 849
- சூழ இருப்பவை 847,848
- நீர் நிலைகள் 848
மோகம் வென்றவர் 891
யமபுரி - தலைவர் சிவபுரியை அடைவர்
யோக சாதனை
- ஆறு உறுப்பினது 663
- ஏற்ற இடம் 649
- புரியத் தகாதவர் 650
யோக சித்தி - அறிகுறி 810
யோகாசனம் 655
யோகி - சிற்றின்பம் நாடான் - போலி யோகிருக்கு ஈவது வீண் 216
யோகியர் - பரம யோகியர் நிலை 154
வஞ்சகர் 601
வணக்கம்
- கணபதி வணக்கம் 1
- கந்தனை வணங்குவோம் 181
- சத்தி வணக்கம் 36
- சிவநெறி முதல்வர்களுக்கு 37
- சிவபெருமான் வணக்கம் 34
வரலாறு - நூலின் வரலாறு 40
வலிது - ஒன்றை விட ஒன்று 540
வழிபாடு
- சிவலிங்கம் 762
- சிவன் முதலிய நால்வர்க்குச் செய்க 199
- செபமாலை 766
- நித்தியம் 760
- வைகறையில் செய்க 730
வாத நோய் - போக்குவழி 667
வாழ்க்கை நிலை
- பழந்தமிழர் 549
வாழ்த்து - கடவுள் 1
வாழ்த்துரை 38
வாழ்நாள்
- உயிர் ஈர் வாள் 486
விலை மகளிர்
- தொடர்பால் துன்பம் 602
விரதம்
- சாந்திராயணம் 748
வியாபக முறை 634
வினை - வகை 877
- பயன் 488
வீடுபேறு
- தகுதி உடையார் சிறப்பு 817